உ

கணபதி துணை

எட்டுத்தொகையுள் இரண்டாவதாகிய

குறுந்தொகை

இது

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ந்து எழுதிய

பதவுரை, விசேடவுரை, ஆராய்ச்சிக் குறிப்புக்கள் முதலியவற்றுடன்

அவர்கள் குமாரர்

S. கலியாணசுந்தரையரால்

சென்னை :

கபீர் அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு

ஸர்வஜித்ஞு கார்த்திகைமீ

Copyright Registered] 1947 [விலை ரூ. 12-0-0

ஒ

இப்புத்தகத்தில் அடங்கியவை

1. நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி... ங
2. இரண்டாம் பதிப்பின் முகவுரை ... ஞ
3. முதற்பதிப்பின் முகவுரை ... அ
4. இந்நூலால் அறிந்து கொள்ளக்கூடிய முக்கியமான செய்திகள் ... உச
5. பாடினோர் வரலாறு ... ஞo
6. பிழையும் திருத்தமும் ... ககக
7. குறுந்தொகை மூலமும் உரையும் ... 1–784
8. செய்யுள் முதற்குறிப்பகராதி ... 785–789
9. அரும்பத முதலியவற்றின் அகராதி ... 790–879
10. இப்பதிப்பில் எடுத்தாண்ட நூல்கள் ... 880

Printed at KABEER PRINTING WORKS, Triplicane, Madras MS 524
and Published by S. Kalyanasundara Iyer, P. I.C, No. Ms. 376-1000 copies

நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி

அகநா - அகநானூறு
அடியார் - அடியார்க்கு நல்லார்,
அடியார்க்கு நல்லருரை
அறநெறிச் - அறநெறிச்சாரம்
இ. கொ - இலக்கணக்கொத்து
இ. வி - இலக்கண விளக்கம்
இளம் - இளம்பூரணருரை
இறை - இறையனாரகப்பொருள்
இன்ன - இன்ன நாற்பது
இனிய - இனியது நாற்பது
உத்தர - உத்தரகாண்டம்
என - என்பது
ஐங், ஐங்குறு - ஐங்குறுநூறு
ஐந், எழு - ஐந்திணை எழுபது
ஐந். ஐம் - ஐந்திணை ஐம்பது
ஒப்பு - ஒப்புமைப்பகுதி
கடவுள் - கடவுள் வாழ்த்து
கம்ப - கம்பராமாயணம்
கல் - கல்லாடம், கல்லாடர் உரை
கலி - கலித்தொகை
களவழி - களவழி நாற்பது
களவியற் - களவியற் காரிகை
கார் - கார்நாற்பது
குமரகுருபர - குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு
குறிஞ்சிப் - குறிஞ்சிப்பாட்டு
குறுந் - குறுந்தொகை
கூர்ம - கூர்ம புராணம்
கைலைபாதி - கைலைபாதி காளத்திபாதியந்தாதி
சங்கர - சங்கரநமச்சிவாயருரை
சிலப் - சிலப்பதிகாரம்
சிறுபாண் - சிறுபாணாற்றுப்படை
சீகாளத்தி - சீகாளத்திப் புராணம்
சீவக - சீவகசிந்தாமணி
சுந்தர - சுந்தரகாண்டம்
சூ - சூத்திரம்
சூடாமணி - சூடாமணி நிகண்டு
சூளா - சூளாமணி
சே - சேஞவரையம்
சொக்க - மதுரைச் சொக்கநாதருலா
தக்க - தக்கயாகப்பரணி
தஞ்சை - தஞ்சைவாணன்கோவை
தண்டி - தண்டியலங்காரம்
தணிகை - திருத்தணிகைப் புராணம்
தமிழ்நெறி - தமிழ்நெறி விளக்கம்
தமிழ்விடு - தமிழ்விடுதூது
தினைமா, தினைமாலை - தினைமாலை நூற்றைம்பது
தினைமொழி - தினைமொழி ஐம்பது
திரி - திரிகடுகம்
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்
திருஞா - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
திருநா - திருநாவுக்கரசு நாயனார்
திருவரங்கக் - திருவரங்கக் கலம்பகம்
திருவள்ளுவ - திருவள்ளுவமாலை
திருவா - திருவாசகம்
திருவாரூர் நான்மணி - திருவாரூர் நான்மணி மாலை
திருவாரூர் மும்மணிக் - திருவாரூர் மும்மணிக் கோவை
திருவால - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிளை - திருவிளையாடற் புராணம் [எழுபது
திருவீங்கோய் - திருவீங்கோய்மலை
திவ் - திவ்யப் பிரபந்தம்
தெய்வச் - தெய்வச் சிலையார்
தே - தேவாரம்
தொல் - தொல்காப்பியம்
நச் - நச்சினார்க்கினியருரை
நம்பி - நம்பியகப்பொருள்
நள - நளவெண்பா
நற் - நற்றிணை
நன் - நன்னூல்
நாலடி - நாலடியார்
நான்மணி - நான்மணிக்கடிகை
நீதிநெறி - நீதிநெறி விளக்கம்
நீல - நீலகேசி
நெடுநல் - நெடுநல் வாடை
நேமி - நேமிநாதம்
பட் - பட்டினப் பாலை
பதிற் - பதிற்றுப்பத்து [முறை
பதினோரா - பதினோராம் திரு
பரி - பரிபாடல்

பரிமேல் - பரிமேலழகருரை
ப-ரை - பதவுரை
பழ - பழமொழி
பாண்டிக் - பாண்டிக் கோவை
பி-ம் - பிரதிபேதம்
பிரபு - பிரபுலிங்கலீலை [மாலை
பு. வெ - புறப்பொருள் வெண்பா
புறநா - புறநானூறு
பெரிய - பெரிய புராணம்
பெரிய திரு - பெரிய திருமொழி
பெரியாழ்வார் - பெரியாழ்வார் திருமொழி
பெருங் - பெருங்கதை [படை
பெரும்பாண் - பெரும்பாணாற்றுப்
பெருமாள் - பெருமாள் திருமொழி
பேர் - பேராசிரியருரை
பொருந - பொருநராற்றுப்படை
மணி - மணிமேகலை
மதுரைக் - மதுரைக் காஞ்சி
மயிலேறும் - மயிலேறும் பெருமாள் பிள்ளையுரை
மயிலை - மயிலை நாதருரை
மலைபடு - மலைபடு கடாம்
மாறன் - மாறனலங்காரம்
மு - முற்றும்
முத் - முத்தொள்ளாயிரம்
முதற்றிரு - முதற்றிரு வந்தாதி
முரு - திருமுருகாற்றுப்படை
முல்லை - முல்லைப் பாட்டு
மேற் - மேற்கோள்
யா. கா - யாப்பருங் கலக்காரிகை
யா. வி - யாப்பருங் கலவிருத்தி
வி - விருத்தியுரை
வி. பா - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்
வி-ரை - விசேடவுரை
வீர - வீர சோழியம்

இரண்டாம் பதிப்பின் முகவுரை

*" முருகா வகில முதலே திருச்செந்தின் முன்னவவென்
முருகாப் பணிந்து வழுத்தா தவனென் றெருவவிடேல்
குருகார் கரவள்ளி நாதா வருட்கட லேகுளிர்பொன்
தருகா விரித்துறை யேரகம் வாழெங்கள் சண்முகனே."

எட்டுத்தொகையுள் இரண்டாவதாக விளங்கும் நல்ல குறுந்தொகை யென்னும் இந்நூலின் முதற்பதிப்பை என் தந்தையா ரவர்கள் 1937 - ஆம் வருஷத்திற் சென்னைச் சருவகலாசாலையாருடைய பேருதவியால் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

இந்நூலைப் பற்றிய விரிவான செய்திகளெல்லாம் முதற் பதிப்பின் முகவுரையால் நன்கு விளங்கும்.

பிரதிபேதங்கள் அப்பதிப்பில் அந்த அந்தப் பக்கங்களில் அடிக்குறிப்பாக அமைக்கப்பெற்றிருந்ததோடு மூலமும் உரையும் அச்சிட்டு வருங்கால் வேறு ஆராய்ச்சியாற் கிடைத்த பிரதிபேதங் களெல்லாம் தனியே தொகுத்து, 'பிரதிபேதங்கள்' என்னும் தலைப்புடன் 8 பக்கங்களில் அச்சிடப் பெற்றிருந்தன.

மூலத்துக்கும், ஆசிரியர்கள் பெயருக்கும் கருத்துக்கும் பிரதி பேதங்கள் உள்ளன. இப்பதிப்பில் மூலத்தின் பிரதிபேதங்கள் ஆசிரியர்கள் பெயருக்கு அடுத்தாற்போலும், கருத்தின் பிரதி பேதமும் ஆசிரியர் பெயரின் பிரதிபேதமும் உரிய பகுதிக்குப் பக்கத்தில் ( ) இம்மாதிரி நகவலவுக்குள்ளும் அமைக்கப் பெற்றுள்ளன.

முதற்பதிப்பில் நூலாராய்ச்சி யென்னும் பகுதியில் பல செய்திகள் மிக விரிவாக உள்ளன. இப்போது இந்நூலால் அறிந்துகொள்ளக் கூடிய முக்கியமான செய்திகள் மட்டும் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளன.

மற்ற நூல்களில் இருப்பதுபோலவே இந்நூலிலும் பாடினோர் வரலாற்றை எழுதிச் சேர்க்க வேண்டுமென்று மதுரையிலுள்ள சங்கைக்குரிய S. ராஜமாணிக்கம் பாதிரியார் முதலிய தமிழன்

* இச் செய்யுள் என் தந்தையாரவர்கள் இளமையிற் பாடியது.

பர்கள் எனக்கு எழுதினர்கள். அவ்வாறே பிற தொகை நூல்கள், பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, செந்தமிழ்ப் பத்திரிகை, எந்தையாரவர்களுடைய குறிப்புக்கள் இவற்றின் உதவியால் ஒருவாறு பாடினோர் வரலாறு எழுதி இதிற் சேர்க்கப் பெற்றுள்ளது. என் தகப்பனாரவர்கள் முகவுரையில் தெரிவித் திருந்தபடி அவர்களே எழுதியிருந்தால் எவ்வளவோ அருமையான செய்திகள் வெளிவந்திருக்கும்.

குறுந்தொகைச் செய்யுட்களைப் பாடியவர்கள் இருநூற் றைவர். இவர்களுள் வேறு நூற் செய்யுட்களையும் பாடினோர் பலர். இவர்களுடைய வரலாறு கூடியவரையில் விரிவாக உள்ளது. குறுந்தொகையில் மட்டும் பாடியவர் நூற்றிருபத்து மூவர். இவர்களுடைய வரலாற்றை விரிவாக எழுதுவதற்கு இப்போது தகுந்த சாதனங்கள் கிடையாமையால், அவரவர்கள் பாடிய செய்யுட்களைக் கொண்டும் அவரவர்களுக்கு அமைந்த பெயர்களைக் கொண்டும் தெரிந்த செய்திகள் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளன. சாதனங்கள் கிடைத்தால் அடுத்த பதிப்பில் விரிவான வரலாறு எழுதப்பெறும்.

பத்துச் செய்யுட்களுக்குப் பாடினோர்கள் பெயர் தெரியவில்லை. அவையாவன : 191, 201, 256, 313, 321, 326, 375, 379, 381, 395.

சில பெயர்கள் ஒரே புலவர்க்குரியனவாகக் கருத இடமிருப் பினும் துணிந்து சொல்லக் கூடவில்லை.

சில காரணம் பற்றிச் சில புலவர்கள் இயற் பெயரோடு சிறப்புப் பெயர்களையும் பெற்றிருக்கின்றனர். சில செய்யுட்களி லுள்ள தொடர்மொழிகளே பாடினோர்களுடைய பெயருக்குக் காரணமாக உள்ளன.

புலவர்களுள் பெண்பாலர்களும் உளர். சிலர் தெய்வப் பெயர்களைப் பெற்றிருக்கிறார்கள்

பாடினோர்களுடைய ஊர், சாதி, தொழில், பெருமை, உறுப் புக்குறை முதலிய சிலவற்றை அவர்களுடைய பெயர்களே தெரிவிக்கின்றன.

சில புலவர்களுடைய பெயர்க் காரணத்தை இதிலுள்ள விசேட உரையிற் காணலாம்.

அரசர்களும், அரசியலில் துணை புரியும் படைத்தலைவர் முதலியவர்களும், பல சாதியினரும், பல தொழிலினரும் தமிழை

ஆராய்ந்து புலமையுற்று விளங்கியதை இந்நூலால் அறியலாம். அவர்கள் சிறிதும் வேற்றுமை பாராட்டாமல் மனங்கலந்து பழகினர்களென்று தெரிகிறது.

என் தந்தையாரவர்களுடைய சில குறிப்புக்களின் உதவியால் இப்பதிப்பில் சில திருத்தங்கள் அங்கங்கே அமைக்கப் பெற்றன.

பாடினோர் வரலாறு சம்பந்தமாக அவரவர்களுடைய செய்யுட்களைக் கவனிக்கையில் சில திருத்தங்கள் செய்யவேண்டு மென்று தோற்றியது. அவை 'பிழையும் திருத்தமும்' என்ற தலைப்பில் சேர்க்கப்பெற்றுள்ளன.

திருப்பனந்தாட் காசிமடத்துத் தலைவர்களாக இப்போது இருபதாம் பட்டத்தில் எழுந்தருளி யிருக்கும் அருங்கலை விநோதர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான்சுவாமிகளவர்கள் 1944 - ஆட்ஆண்டு முதல் தமிழ்க் கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக் காகவும், பொதுஜன நன்மைக்காகவும் அவ்வப்போது மனமுவந்து அமைத்துவரும் பேரறக் கட்டளைகளை யாவரும் நன்கறிவர். யான் ஆற்றிவரும் தமிழ்த்தொண்டு விஷயத்தில் அவர்கள் முக்கியமான சமயங்களில் பேருதவி புரிந்து ஊக்கமளித்து வருவதை மிக்க நன்றியறிவுடன் என் மனமாரப் பாராட்டுகிறேன்.

அடையாற்றில் என் தந்தையாரவர்கள் நூல் நிலையத்தில் நூற் பரிசோதகராக இருக்கும் ம. ரா. ரா. ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர் B. O. L. அவர்கள் பாடினோர் வரலாறு எழுதும்விஷயமாக நன்கு ஆராய்ந்து வேண்டிய உதவி செய்தார்கள். அவர்களுக்கும் இப்பதிப்பு அச்சாகி வருகையில் ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளைச் செய்த சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழாசிரியர் ம. ரா. ரா. ஸ்ரீ வி. மு சுப்பிரமணிய ஐயர் B. O. L. அவர்களுக்கும், திருவல்லிக்கேணி, தேசியப் பெண்கள் உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியர் ம. ரா. ரா. ஸ்ரீ வித்துவான் அ. வைத்தியநாதையரவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்பதிப்பிற் காணும் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளும் படி அறிஞர்களை வேண்டுகிறேன்.

இங்ஙனம்

S. கலியாண சுந்தரையர்

15 - 12 - 47.

முதற் பதிப்பின் முகவுரை

திருச்சிற்றம்பலம்

மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்
விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனுய்ச் சங்க மேறி
நற்கனகக் கிழிதருமிக் கருளி னேன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரில்
திருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

(திருநாவுக்கரசர் தேவாரம்)

திருச்சிற்றம்பலம்

கடைச்சங்க நூல்கள்

கடைச்சங்க காலத்து நூல்களில் இப்பொழுது கிடைக்கும் இலக்கியங்கள் பாட்டு, தொகை, கீழ்க்கணக்கென மூன்றுவகைப் படும். பாட்டென்பது திருமுருகாற்றுப்படை முதல் மலைபடு கடாம் இறுதியாகவுள்ள பத்துப்பாட்டும், தொகையென்பது பல செய்யுட்களைத் தொகுத்தமைத்தனவாகிய நற்றிணைமுதற் புற நானூறு இறுதியாகவுள்ள எட்டு நூல்களும், கீழ்க்கணக் கென்பது நாலடியார் முதற் கைந்நிலை இறுதியாகவுள்ள பதினெட்டு நூல்களும் ஆகும்.

இவற்றுள், தமிழின் பொருள்வகைகளாகிய அகத்தையும் புறத்தையும் பற்றிய இலக்கணங்களுக்கு ஏனையவற்றினும் மிகச் சிறந்த இலக்கியங்களாக விளங்குவன எட்டுத்தொகை நூல்களே யாம். அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு

என்பன ; பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள்பற்றியும், கலித்தொகையும் பரிபாடலும் யாப்புப்பற்றியும் தொகுக்கப் பட்டன. ஐங்குறுநூறு அகனைந்திணையுள் ஒவ்வொன்றுக்கும் நூறுநூறு செய்யுட்கள் அமைய ஓரம்போகியார் முதலிய ஐந்து கல்லிசைப் புலவர்களாற் பாடப் பெற்றது; ஏனைய மூன்றும் அகப்பொருள் பற்றிப் பலபுலவர்கள் பாடிய செய் யுட்கள் அடியளவு நோக்கித் தொகுக்கப்பட்டன. குறுந்தொகை நாலடிச் சிற்றெல்லையையும் எட்டடிப் பேரெல்லையையுமுடைய அகவற் பாக்களையும், நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையையும் பன்னிரண்டடிப் பேரெல்லையையுமுடைய பாக்களையும், அக நானூறு பதின்மூன்றடிச் சிற்றெல்லையையும் முப்பத்தோரடிப் பேரெல்லையையுமுடைய செய்யுட்களையும் கொண்டன. இவை மூன்றும் இவ்வடியளவையன்றிப் பிறதிறங்களில் ஒரினமாவன. இவ்வமைப்பை நோக்குகையில் பல புலவர்கள் தனித்தனியே இயற்றிய அகப்பொருட் செய்யுட்களைத் தொகுத்து அவற்றை அடியளவால் வகைப்படுத்தியபின் அவற்றைத் தொகுத்தவர்கள் ஒவ்வொன்றிலும் நானூறு பாக்கள் இருக்கும்படி தம் காலத்துப் புலவர்கள் இயற்றியவற்றையும் சேர்த்து அமைத்தார்களென்று கருத இடமுண்டாகின்றது.

தொல்காப்பியமென்னும் பழந்தமிழிலக்கண நூலிற் கண்ட இலக்கணங்களை ஆராயும்போது அதற்குமுன் பலவகையான இலக்கியங்கள் தமிழில் மலிந்து விளங்கினவென்பது பெறப்படும். புலனெறி வழக்கத்தை ஓர் ஒழுங்கான அமைப்பினுல் வரையறுத் துரைக்கும் அந்நூலுக்கும் எட்டுத்தொகை நூல்களுக்கும் இடையே பல ஆண்டுகள் சென்றன. தொல்காப்பியத்திற் கண்ட பலவகை இலக்கணங்களுக்கு இலக்கியங்கள் கடைச்சங்க மருவிய நூல்களிற் கிடைத்தில சங்க நூல்களிற் காணப்படும் பல செய்திகளுக்குரிய இலக்கணங்கள் தொல்காப்பியத்திற் காணப்படவில்லை. இவை தொல்காப்பிய காலத்திற்குப் பிறகும் அளவிறந்த நூல்கள் உண்டாயினவென்றும் நாளடைவிற் புதிய மரபுகள் அமைந்தனவென்றும் நினைக்கக் காரணமாகின்றன.

இவ்வாறு உண்டான பலவகை நூல்களும் செய்யுட்களும் காலநிலையினுல் தமிழ்நாட்டாராற் புறக்கணிக்கப்பட்டோ வேறு வகையில் மறைந்தோ அருகினபோலும். பிறகு கி. பி. இரண் டாம் நூற்றாண்டில் இருந்த புலவர்களும் அரசர்களும் தமிழா ராய்ச்சியில் ஊக்கங்கொண்டு பழந்தமிழ்ச் செய்யுட்களைத்

தொகுக்கத் தொடங்கினர். அங்ஙனம் தொகுத்தனவே மூற் கூறிய மூன்றுவகை நூற்றொருதிகளாதல் வேண்டும். தொல் காப்பிய கால முதல் அவற்றையன்றிப் பிறசெய்யுட்கள் இயற்றப் பட்டில வென்றுரைத்தல் ஏற்புடையதன்று. இராமாயணம், பாரதம், தகடூர்யாத்திரை, ஆசிரியமாலை, சிற்றட்டகம் முதலிய பலநூல்கள் அக்காலத்தில் இருந்தனவென்று தெரிகின்றது. மூற்கூறிய மூன்றுவகை நூல்களிற் பத்துப்பாட்டும் பதினெண் கீழ்க்கணக்கும் தனித்தனியே ஒவ்வோராசிரியரால் இயற்றப் பெற்ற நூற்றொருதிகள். எட்டுத்தொகை நூல்களோ பலர் இயற்றிய செய்யுட்களின் தொகுதிகள்.

பண்டைக்காலத்தில் மக்கள் மனனப் பயிற்சி மிகவுடையராக இருந்ததனால் இவ்வளவு செய்யுட்களையும் அவற்றை இயற்றிய ஆசிரியர் பெயர்களையும் நினைவில் வைத்திருந்தனர். அவை அங்கங்கே பலராற் சொல்லப்பட்டு வழங்கிவந்தன. சில செய்யுட்களின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அதனால் அவ்வச் செய்யுட்களிற் காணப்படும் அரிய சொற்றொடராலேயே அப் புலவர் பெயரைக் குறித்துக் கொண்டனர். சிறுபான்மை ஆசிரியர் இயற்பெயர் தெரிந்தும் அவர் பெயரை அமைக்காமல் சிறப்புப் பெயரையே அமைத்தனர்.

குறுந்தொகை

இங்ஙனம் அமைந்துள்ள புலவர் பெயர்களைக்கொண்டு ஆராய்ந்தால் எட்டுத் தொகையில் முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகை யென்பது தெரியவரும். காக்கை பாடினியார் நச்செள்ளையாரென்பது ஒருபுலவர் பெயர். அவருடைய இயற் பெயர் நச்செள்ளையாரென்பது. விருந்துவரக் கரைந்த காக்கை யைப் பாராட்டினமையின் காக்கைபாடினியாரென்ற சிறப்புப் பெயர் அவருக்கு உளதாயிற்று. குறுந்தொகையை முதலில் தொகுக்கையில் நச்செள்ளையாரென்பவர் காக்கை பாடினியார் நச் செள்ளையாரெனக் குறிக்கப்பட்டார். அப்பால் தொகுக்கப்பட்ட நூல்களில் அவ்வாறே வழங்கப்பட்டார். கயமனாரென்பது ஒரு புலவர் பெயர். அப்பெயரை அவரது சிறப்புப் பெயராகவே கருத இடமுண்டு; அவரது இயற்பெயர் தெரியவில்லை. குறுந் தொகையில், கழியில் உள்ள நெய்தல் மலருக்குக் கயத்தில் மூழ்கும் மகளிர்கண்ணை அவர் உவமிக்கின்றனர். கயத்தில் நிகழும் நிகழ்ச்சியைக் கூறுதலின் அப்பெயர் பெற்றாரென்று

கொள்ளல் தகும். அவர் இயற்றிய பாடல்கள் பிறதொகை நூல்களிலும் காணப்படுகின்றன. அவ்விடங்களிலும் கயமனரென்ற சிறப்புப் பெயரே குறிக்கப் பெற்றிருக்கிறது. அவருடைய இயற்பெயர் தெரிந்த காலத்தும் குறுந்தொகையிலமைத்த பெயரையே பின்தொகுத்த நூல்களிலும் அமைத்தனரென்றே தெரிய வருகின்றது. ஓரேருழவரென்னும் புலவர் இயற்றிய குறுந்தொகைப் பாட்டிலுள்ள, "ஓரே ருழவன் போல" என்னும் தொடர் அவரது பெயர்க் காரணத்தைக் குறிப்பிக்கின்றது. புறநானூற்றிலும் அவர் செய்யுளொன்று காணப்படுகின்றது. இவ்விரு புலவர்களும் குறுந்தொகைச் செய்யுட்பகுதி காரணமாகப் பெற்ற பெயராலேயே பின்தொகுத்த புறநானூற்றிலும் குறிக்கப்பட்டனரென்றல் ஏற்புடையதேயன்றே ?

இவ்வாறு குறுந்தொகையிலுள்ள சொற்றொடர் காரணமாகப் பெயர் பெற்ற புலவர்கள் அப்பெயராலேயே பிற நூல்களில் வழங்கப் பெறுவது போல அந்நூல்களிலுள்ள செய்யுட்பகுதி காரணமாகப் பெயர் பெற்றூரது பெயர் ஒன்றேனும் குறுந்தொகையில் வரவில்லை. இதனாலும் முதலிற் குறுந்தொகை தொகுக்கப்பட்ட தென்பது தெளிவாகும்.

எட்டுத்தொகை நூல்கள் ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடலென்னும் முத்திற யாப்புக்களாலானவை. இவற்றின் முறையே செய்யுட்களைத் தொகுக்கத் தொடங்கினவர்கள் முதலில் ஆசிரியப்பாக்களில் தனியாகவுள்ள அகப்பாட்டுக்களைத் தொகுத்து அடியளவால் மூன்று பிரிவாக்கிக் குறைந்த அளவையுடைய குறுந்தொகையை முதலிற் செப்பஞ் செய்தார்களென்று கொள்வது ஒருவகையில் இயைபுடையதாகவே தோற்றுகின்றது. குறிய அளவையுடைய செய்யுட்களாலாயினமையின் இது குறுந்தொகை யெனப்பட்டது. நெடிய செய்யுட்களாலான அகநானூறு நெடுந்தொகை யெனப்பட்டது.

குறுந்தொகை யென்னும் இத்தொகைநூல் அகப்பொருள் பற்றிய ஆசிரியப்பாக்கள் சமக-ஐயும் கடவுள் வாழ்த்துச் செய்யுளொன்றையும் உடையது.

> இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகைபாடிய
> கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லையா
> கவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது '

என்பன இந்நூலெழுதியுள்ள சுவடிகளிற் காணப்படுகின்றன. இத் தொகையைத் தொகுப்பித்தார் இன்னரென்று தெரியவில்லை.

இந்நூற் செய்யுட்களைப் பாடிய புலவர் இருநூற்றைவரென்று காணப்படினும் பத்துச் செய்யுட்களைப் பாடிய ஆசிரியர் பெயர் ஏடுகளில் இல்லை. இப்பொழுது கிடைத்த அளவிற் பாரதம் பாடிய பெருந்தேவனார் முதல் அம்மூவன் இறுதியாக 206 பெயர்கள் காணப்படுகின்றன. பத்துச் செய்யுட்களின் ஆசிரியர் பெயர் தெரியாதகாலத்தும் ஒருவர் பெயர் மிகுதியாகக் காணப்படுகின்றது எழுதுவோருடைய பிழையால் ஒரே வகையான பெயர்கள் சில வேறு வேறுகத் தோற்றும்படி சில வேறு பாட்டோடு அமைந்திருத்தலாலும் ஓராசிரியருக்குரிய சிறப்புப் பெயர்மட்டும் ஒரு செய்யுளிலும் இயற்பெயர்மட்டும் மற்றொரு செய்யுளிலும் எழுதப்பட்டிருத்தலாலும் வேறு சில காரணங்களாலும் இத்தொகை வேறுபாடு உண்டாகியிருத்தல் கூடும். சங்க காலத்துப் புலவர் பெயர்களில் இங்ஙனம் உள்ள பிறழ்ச்சி ஆராய்ச்சியாளர்க்கு மிக்க துன்பத்தை விளைவிக்கின்றது

அடியளவு

இந்நூற் செய்யுட்கள் நான்கடிச்சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையுமுடையனவென்று மேற்காட்டிய குறிப்பு அறிவிப் பினும் நாலை, நாகுக-ஆம் செய்யுட்கள் ஒன்பதடியையுடையன வாகக் காணப்படுகின்றன. இவ்விரண்டினுள்ளும் நாகுக-ஆம் செய்யுள் சில பிரதிகளில் எட்டடியுடையதாகச் சில பாட பேதங் களுடன் எழுதப்பட்டுள்ளது. அதனை எட்டடிச் செய்யுளாகவே கொள்ளினும் மற்றொன்றாகிய நாலை-ஆம் செய்யுள் ஒன்பதடிகளை யுடையதாகவே எல்லாப் பிரதிகளிலும் இருக்கின்றது. அடி யளவின்படி தொகுத்த குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு என்பவற்றுள் பின் இரண்டும் கடவுள் வாழ்த்தொழிய நானூறு செய்யுட்களையே உடையன. அவ்வினத்திற் சேர்ந்த குறுந் தொகையும் ஈஅஅ செய்யுட்களுடையதாகவே கோடல் பொருத்த மாகும். 9 அடிகளையுடைய நாலை-ஆம் செய்யுளைக் குறுந் தொகையிற் சேராததென்று விலக்கின் இந்நூல் மேலே குறித்த வரையறைக்குள் அடங்கிய ஈஅஅ செய்யுட்களை யுடைய தாகின்றது.

பழைய கருத்து

இவற்றிற்குரிய பழைய கருத்துக்கள் தொகுத்த வராலேனும் பிற்காலத்தவராலேனும் அமைக்கப்பட்டிருத்தல்

வேண்டும். ஒரு செய்யுளுக்கே சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. பிற்காலத்தில் உரையாசிரியர்கள் இச்செய்யுட்களை மேற்கோளாகக் காட்டுமிடங்களிற் சிலவற்றிற்குப் பழைய கருத்தைக் கூறுமல் வேறு கருத்தை யமைக்கின்றனர். தொகை நூல்களுள் ஒன்றாகிய புறநானூற்றுக்கு அமைக்கப்பெற்ற துறைகள் இங்ஙனமே பிற்காலத்தாராற் சேர்க்கப்பெற்றன வென்பதை,

> 'தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறைகூறினு மேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறைகூற வேண்டு மென்றறிக' (தொல். புறத். 35, உரை)

என்னும் நச்சினார்க்கினியர் எழுத்து வெளியிடுகின்றது.

மூன்று நிகழ்ந்த சில வரலாறுகளோடு தொடர்புடைய பாட்டுக்களும் இக்குறுந்தொகையிற் சேர்க்கப்பெற்றுத் துறை வகுக்கப்பட்டுள்ளன. இறையனார் தருமியின் பொருட்டு எழுதியளித்த "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் செய்யுளும், வெள்ளி வீதியார் தம் காதலனைப் பிரிந்த காலத்திற் பாடியனவாகிய "கன்று முண்ணாது", "நிலந்தொட்டுப் புகாஅர்" என்பனவும், காதலனை இழந்த ஆதிமந்தியார் பாடிய "மள்ளர் குழீஇய" என்பதும் இவ்வகையினவாகும். நூலிற்கண்ட துறைகள் சிலவற்றில் இரண்டாவதாக அமைந்ததும், சிலவற்றிற்கு உரையாசிரியர்கள் எழுதுவதும் பிறவற்றைவிடப் பொருத்தமுள்ளனவாகத் தோற்றுகின்றன.

மேற்கோளாட்சி

தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களின் உரைகளிலும் சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களின் உரைகளிலும் இளம்பூரணராதிய உரையாசிரியர்கள் எட்டுத்தொகை நூல்களிலிருந்தும் பல செய்யுட்களையும் செய்யுட் பகுதிகளையும் மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றனர். அங்ஙனம் காட்டும் நூல்களுள் ஏனைய தொகை நூல்களைக் காட்டிலும் குறுந்தொகையே மிகுதியாக எடுத்தாளப்படுகின்றது. இதனால் இத்தொகை நூற் செய்யுட்களில் உரையாசிரியர்கள் கருத்துக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தன வென்று தெரிகின்றது. இந்நூலுள் இப்பொழுது தெரிந்தவரையில் 165 செய்யுட்களே பிற நூலுரைகளில் மேற்

கோளாகக் காட்டப்பெறுதலை. இந்நூலை மேற்கோளாக எடுத்தாண்ட உரையாசிரியர்கள் :—அகப்பொருள் விளக்க வுரையாசிரியர், அடியார்க்கு நல்லார், அழகிய மணவாளதாசர், இளம்பூரணர், இறையனாரகப் பொருளுரையாசிரியர், கல்லாடர், களவியற் காரிகை உரையாசிரியர், காரிரத்ந கவிராயர், குணசாகரர், சங்கர நமச்சிவாயர், சாமிநாத தேசிகர், சிவஞான முனிவர், சேனாவரையர், சொக்கப்ப நாவலர், தக்கயாகப்பரணி உரையாசிரியர், தண்டியலங்கார வுரையாசிரியர், தமிழ்நெறி விளக்க வுரையாசிரியர், திருமயிலையமகவந்தாதி யுரையாசிரியர், திவ்யப்பிரபந்த ஈட்டுவியாக்கியானக்காரராகிய நம்பிள்ளை, தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், புறநானூற்றுரையாசிரியர், பெருமாதேவனார், பேராசிரியர், மயிலேறும் பெருமாள் பிள்ளை, மயிலைநாதர், யாப்பருங்கல விருத்தி யுரையாசிரியர், வைத்தியநாததேசிகர் என்பவர்கள்.

எட்டுத்தொகை நூல்களின் பெயர்களைத் தொகுத்துக்கூறும் வெண்பாவாகிய,

> ''கற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் ஏத்துங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை''

என்பதில் இந்நூல் 'நல்ல குறுந்தொகை' என்று பாராட்டப் பெறுகின்றது.

பழைய உரை

> ''நல்லறி வுடைய தொல்பே ராசான்
> கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
> பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
> கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
> இதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்தும்''

என்பது நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப்பாயிரச் செய்யுளொன்றன் பகுதி. இதன்கண், பேராசிரியர் தம்முடைய கல்வித் திறனும் அறிவு வன்மையும் உலகினர் அறியும்படி குறுந்தொகைக்குப் பொருளெழுதினரென்பதும், இருபது செய்யுட்களுக்கு மட்டும் எழுதவில்லை யென்பதும், அவ்விருபது செய்யுட்

களுக்கும் நச்சினார்க்கினியர் உரையிட்டனரென்பதும் கூறப்படுகின்றன. நச்சினார்க்கினியர் உரை வகுத்த நூல்களைத் தொகுத்துரைக்குப் செய்யுளாகிய,

"பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்
ஆரக் குறுந்தொகையு நானூறும்—சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்தினச்சி னார்க்கினிய மே"

என்பதிலும் நச்சினார்க்கினியர் 'குறுந்தொகையுள் ஐஞ்ஞான்' கிற்கு உரைகண்ட செய்தி காணப்படுகின்றது.

தொல்காப்பியம் அகத்திணையியலில்,

"உள்ளுறை யுவம மேனை யுவமமெனத்
தள்ளா தாகுந் திணையுணர் வகையே" (46)

என்னும் சூத்திரத்தின் உரையில் நச்சினார்க்கினியர் ஏனையுவமம் வந்த செய்யுளுக்கு இந்நூலிலுள்ள, "யானே யீண்டை யேனே" (நிசை) என்பதைக் காட்டி

'பேராசிரியரும் இப்பாட்டில் மீனெறிதூண்டி லென்றதனை
ஏனையுவம மென்றார்'

என்று எழுதியுள்ளார். இதனாலும் பேராசிரியர் குறுந்தொகைக்கு உரை யெழுதியிருத்தல் வலியுறுகின்றது; அவர் அங்கங்கே இலக்கணக் குறிப்புக்கள் எழுதியிருக்க வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது. அவர் உரையெழுதாது விடுத்த இருபது செய்யுட்கள் பின் இருபது செய்யுட்களாக இருத்தல் கூடும்; இடையிடையே பொருள் தோற்றுமல் விட்ட செய்யுட்களென்று கொள்ளுதல், 'நல்லறிவுடைய தொல்பேராசா'னுகிய அவரது பெருமைக்கு இழுக்காகும். அவர் தம் முதுமையில் குறுந் தொகைக்கு உரையெழுதத் தொடங்கி 380-செய்யுட்களுக்கு எழுதி முடித்தபின்னர் நோய் வாய்ப் பட்டதாலோ பிறகாரணத் தாலோ மேல் எழுத இயலாத நிலையை யடைந்தனரென்றே கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் அவ்வரிய உரையைப் பின்பற்றி அதற்கேற்ப எஞ்சிய செய்யுட் களுக்கு உரை எழுதியிருத்தல் கூடும்.

இங்ஙனம் மிகச் சிறந்த இரண்டு உரையாசிரியர்களாலும் எழுதப்பட்ட பழையவுரை இப்பொழுது கிடைக்கவில்லை. இது தமிழர்களுக்கு நேர்ந்ததொரு பெரிய நஷ்டமேயாகும்.

ஆராய்ந்தமுறை

சீவகசிந்தாமணியை நான் முதன்முறை பதிப்பிக்கும் பொருட்டு ஆராய்ந்து வருகையில் அந்நூலுரையில் மேற்கோளாக வந்துள்ள செய்யுட்களும் செய்யுட்பகுதிகளும் இன்ன இன்ன நூல்களைச் சார்ந்தவையென்று முதலில் எனக்கு விளங்கவில்லை. பத்துப் பாட்டு இன்னவை, எட்டுத் தொகை இன்னவையென்று விளக்கமாக அறிந்துகொள்ள முடியாத காலம் அது. சீவகசிந்தாமணியில் உள்ள மேற்கோள்களுக்குரிய ஆகரங்கள் பெரும்பாலனவற்றைக் கண்டு பிடித்து அப்பதிப்பில் அமைத்தேன். அக்காலத்தில் நான் படித்து அறிந்த நூல்களுள் இக்குறுந்தொகையும் ஒன்று.

திருவாவடுதுறைப் புத்தகசாலையிலிருந்து எட்டுத்தொகையில் கலித்தொகை, பரிபாடல் என்னும் இரண்டொழிய ஏனைய ஆறு நூல்களும் எழுதப்பெற்ற ஏடொன்று கிடைத்தது. அக்காலத்தில் அவற்றின் உட்பொருளை அறிந்து இன்புறுவார் அரியராக இருந்தனர். இடையே பலகாலமாகச் சங்கநூல்களைப் படித்தலும் பாடஞ் சொல்லுதலும் அருகிப் போயினமையின் அந்நூல்களைப் பற்றிய உண்மையே தெரியாமல் இருந்தது. ஆதலின் அவ்வேட்டுச் சுவடியில் எழுதுவோர் பொருளறியாக் குறையால் நேர்ந்த பிழைகள் இருந்தன. அதனைப் பிரதி செய்விக்கையில் பிரதி செய்வோர்களால் நேர்ந்த பிழையால் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள் செய்யப்பெற்றன. அப்பால் நான் ஏட்டுச் சுவடிகள் தேடிய இடங்களில் அடியிற் காட்டியபடி வேறு ஒன்பது பிரதிகள் கிடைத்தன. அவற்றிற் சில பூர்த்தியாக இருந்தன ; சில குறையாக இருந்தன.

1. திருநெல்வேலி ஸ்ரீ அம்பலவாண கவிராயரவர்கள் ஏட்டுப்பிரதி
2. மந்தித் தோப்புமடத்திற் கிடைத்த ஏட்டுப் பிரதி
3. செங்கோல் மடத்திற் கண்ட குறையான ஏட்டுப் பிரதி
4. திருமயிலை வித்துவான் ஸ்ரீ சண்முகம் பிள்ளையவர்கள் கடிதப் பிரதி
5. சோடசாவதானம் ஸ்ரீ சுப்பராய செட்டியாரவர்கள் ஏட்டுப் பிரதி
6. தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியாரவர்கள் ஏட்டுப் பிரதி
7. சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலை ஏட்டுப் பிரதி

8. புதுக்கோட்டை ஸ்ரீ ராதாகிருஷ்ணையரவர்கள் கடிதப் பிரதி
9. திருக்கோணமலை ஸ்ரீ ந. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் கடிதப் பிரதி.

இவற்றிற் சிலவற்றைப் பார்த்துக்கொண்டு உரியவர்களிடம் கொடுத்துவிட்டேன். இவற்றையன்றிப் பிரயாணங்களிற் கண்ட சில பிரதிகளோடு ஒப்பு நோக்கிப் பிரதிபேதங்கள் குறித்துக் கொண்டதும் உண்டு. மேலே குறித்த பிரதிகளுள் 4, 9 என்னும் எண்ணுள்ள கடிதப் பிரதிகள் இரண்டையும் மீண்டும் ஒருமுறை பார்க்கவிரும்பிய காலத்தில், அவற்றை வருவித்து வைத்திருந்த சென்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சிக் கழகத்தலைவர் ஸ்ரீமான் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல். அன்போடு உதவினர்கள். இப்பிரதிகள் யாவும் பெரும்பாலும் ஒரே மூலச்சுவடியின் பிரதிகளாகவே தோற்றின. எழுதுவோரால் நேர்ந்த பிழைகளும் மாற்றங்களும் ஒவ்வொன்றிலும் காணப்படுகின்றன. குறுந் தொகையின் பழைய உரை எங்கேனும் கிடைக்குமோ வென்று அலைந்து தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. அதன்மேல், கிடைத்த லரிதென்ற கருத்து உண்டாயினமையின் அம்முயற்சியை விட்டு விட்டேன்.

குறுந்தொகைப் பிரதிகளை ஒப்பு நோக்கிய பிறகு தொல்காப் பியஉரை முதலியவற்றைப் படித்து அங்கங்கே மேற்கோளாக ஆளப்பட்ட இந்நூற் செய்யுட்களையும் செய்யுட்பகுதிகளையும் தொகுத்து அவற்றிற் கண்ட பாடபேதங்களையும் குறித்துக் கொண்டேன். இம் முயற்சியால் பல அருமையான திருத்தங்கள் கிடைத்தன; பல ஐயங்கள் நீங்கின.

அப்பால் குறுந்தொகையின் மூலத்திற் காணப்படும் அரும் பதங்கள், சொற்றொடர்கள், உவமைகள், செய்திகள் முதலிய வற்றிற்கு ஓரகராதியும் புலவர் பெயர்களுக்கு ஓரகராதியும் எழுதி வைத்துக்கொண்டேன். ஒரே புலவர் பாடிய செய்யுட்களைத் தொகைநூல்களிற் படித்தறிந்த காலத்தில் அவற்றினுட் காணப் படும் ஒப்புமையாலும் சொல்லாட்சியாலும் இந்நூற்பகுதிகள் சில விளங்கின.

இங்ஙனம் பலவகையான குறிப்புக்களும் அகராதிகளும் எழுதி வைத்துக்கொண்டு பொருள்வரையறை செய்யத் தொடங் கினேன். நாளடைவில் பெரும்பாலான செய்யுட்களின் பொருள்கள் விளங்கின; 'இனி இதனை அச்சிட்டு வெளிப் படுத்தலாம்' என்று எண்ணியிருந்தேன். இடையே, வாணியம்பாடி

ஹைஸ்கூலில் தமிழ்ப்பண்டிதராக இருந்த தி. செள. அரங்கசாமி ஐயங்காரென்பவர் குறுந்தொகைக்கு உரையெழுதி 1915-ஆம்வரு பதிப்பித்து வெளியிட்டனர். அப்பால் குறுந்தொகை ஆராய்ச் சியில் எனக்கிருந்த ஊக்கம் சிறிது தளர்ந்தது. பிற நூலாராய்ச் சியிற் கருத்தைச் செலுத்தலானேன். பின்பும் சிலர் சில பத்திரிகை களில் இந்நூலை வெளியிடுவதாகக் கேள்வியுற்றேன். 1933-ஆம்வரு புரசபாக்கம் ஸர் எம். ஸி. டி. ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராக வுள்ள ஸ்ரீமான் வித்வான் சோ. அருணசல நேசிகரவர்கள் குறுந்தொகை மூலத்தைமட்டும் பதிப்பித்து வெளியிட்டார்கள். பழைய உரை இல்லாமையால் புதிய உரை எழுதி இந்நூலை நான் வெளியிட வேண்டுமென்ற கருத்து, சில தமிழன்பர்களுக்கு இருந்ததை உணர்ந்தேன். பல அன்பர்கள் அடிக்கடி தூண்டிவந்தார்கள். மூற்கூறிய ஐயங்காரவர்கள் உரைப்பிரதி இப்பொழுது எங்கும் கிடைக்கவில்லை. பல வருஷங்களாக உழைத்துத் தொகுத்த குறிப் புக்கள் வீணுகாமல் இருக்கும் பொருட்டு இந்நூலை வெளியிட வேண்டுமென்ற எண்ணம் எனக்கு மீண்டும் உண்டாயிற்று. அதனல் இந்நூலாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்திவரலானேன். குறிப்புக்களும் ஒப்புமைப்பகுதிகளும் உரைப்பகுதிகளும் எழுதித் தொகுக்கப்பட்டன. அவ்வப்போது என்னேடு இருந்து பழகு பவர்கள் பலர் இவ்வாராய்ச்சிக்கு உதவியாக இருந்தனர்.

பேராசிரியரும் நச்சினர்க்கினியரும் உரை யெழுதிய இந் நூலுக்கு உரையெழுதும் தகுதி என்பாற் சிறிதுமில்லை யென்பதை யும் என் முதுமையாலும் பல வேறுவகையான முட்டுப்பாடு களாலும் எனக்குண்டாகியுள்ள தளர்ச்சியையும் நன்குணர்ந் திருப்பினும் இளமை தொடங்கி இவ்வுலகில் யாதினும் சிறந்ததாக எண்ணி வாழ்ந்து வருதற்குக் காரணமாகிய தமிழிடத்துள்ள அன்பும், எங்ஙனமேனும் இறைவன் இம் முயற்சியை நிறைவேற்றி யருளுவானென்ற துணிவும் இப்பதிப்பில் என்னை ஈடுபடச் செய்தன.

சர்வகலாசாலையார் உதவி

என்கருத்தை அன்பர்கள் சிலரால் அறிந்த ஸ்ரீமான் டி. சிவராம சேதுப்பிள்ளையவர்கள் 1934-ஆம் வருஷம், தாம் தலைவராகவிருந்த தமிழ்ப்பாட புத்தகசபையின் மூலம் இப்பதிப்புக்குரிய உதவி சென்னைச் சர்வகலாசாலையாரால் கிடைக்கும்படி செய்வித்தார்கள்.

அவர்களுடைய நன்முயற்சியையும் தமிழ்ப்பாஷாபிமானத்தையும் மிகவும் பாராட்டுகின்றேன். சர்வகலாசாலையார் ஆயிரத்தைந்நூறு ரூபாய் பொருளுதவி செய்வதாகத் தீர்மானித்து ஐந்நூறு ரூபாய் முதலில் கொடுத்துதவினார்கள். அவர்களுடைய ஆதரவின்றேல் இப்பதிப்பு இப்பொழுது வெளிவந்திராது. இவ்வளவு வருஷங்களாக நான் வெளியிட்டுவரும் நூற்பதிப்புக்களுக்கு இதைப் போன்ற பேருதவி கிடைத்ததில்லை யென்பதைத் தமிழ் நாட்டினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பதிப்பு

சூறுந்தொகைச் செய்யுட்களுக்கு உரையெழுதுகையில் பிறசங்கநூற் செய்யுட் போக்கையும் இலக்கண இலக்கியங்களில் உரையாசிரியர்கள் புலப்படுத்திச் செல்லும் மரபுகளையும் இயன்ற வரையில் உணர்ந்து எழுதலானேன். உரைகளில் உரையாசிரியர்கள் இந்நூலிலிருந்து மேற்கோள் காட்டும் செய்யுட்களுக்குச் சில இடங்களில் உரையெழுதி யிருக்கிறார்கள். அவை எனக்குப் பெருந்துணையாக இருந்தன.

இப்பதிப்பில் நான் மேற்கொண்ட சில முறைகளை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்:

1. கூற்று:—ஒவ்வொரு செய்யுளும் இன்னாருடைய கூற்றென்பதைத் தலைப்பில் அமைத்திருக்கிறேன். திணைப்பெயரைத் தலைப்பிலிடுதல் அகநானூற்றிற் கண்டதாயினும் பொருளிற் கருத்துச் செல்வதற்கு இம்முறை தக்கதென்று தோற்றியது. அன்றியும், தொல்காப்பியத்திற் கூற்று வகையாகச் சூத்திரங்கள் வகுக்கப்பட்டிருத்தலும் இங்ஙனம் அமைக்கும் கருத்தை உண்டாக்கியது. சில செய்யுட்களில் இரண்டு பழைய கருத்துக்கள் இருக்கின்றன. அவற்றில் முதற் கருத்தின்படியே கூற்று அமைக்கப்பட்டது.

2. கூற்று விளக்கம்:—இது பழைய கருத்தையும் செய்யுட் பொருளையும் இணைத்துச் சுருக்கமாக வரையப்பட்டது. இரண்டு கருத்துள்ள இடங்களில் முதற்கருத்துக்கே இவ்விளக்கம் எழுதப்பட்டது.

3 மூலம்:—ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து பொருட் சிறப்புடைய பாடங்களையே கொடுத்திருக்கிறேன்.

4. பிரதி பேதம்:—ஏட்டுச் சுவடிகளாலும், உரையாசிரியர்கள் உரைகளிற் காட்டிய மேற்கோட் பகுதிகளாலும் தெரிந்த பாடங்க

ளுள் முக்கியமானவை அடிக்குறிப்பிற் காட்டப்பெற்றன. ஏனை யவை தனியே தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றிற் பல மிகவும் பிழையுள்ளனவாக இருப்பினும் பழைய நூல்களில் நம் நாட்டவர்களுக்கு இடைக்காலத்தே இருந்த புறக்கணிப்பை நன்கு வெளிப்படுத்தும். பொருள் வரையறை செய்யாமல் உள்ளதை உள்ளபடியே பிரதி செய்து வந்தவர்கள் ஒரெழுத்தை மற்றோ ரெழுத்தாகக் கொண்டு எழுதி விட்டதனாலும் தெரியாத இடங் களில் தாமே ஊகித்துப் புதியனவாக எழுதிச் சேர்த்து விட்டமை யாலும் உண்டான மாறுபாடுகள் அளவில. பழம்பிரதிகளில் ஈகார ஏகாரங்களின் பின்னர் யகரவொற்று எழுதப்பட்டிருந்தது. ஆய்தவெழுத்தை எழுதவேண்டிய விடத்தில் குகரம் எழுதப் பட்டிருந்தது; சில விடங்களில் இவ்விரண்டுமே காணப்படும்; மகர ழகரங்கள், ழகரளகரங்கள், ககர சகர தகரங்கள், தந்நகர றன்னகரங்கள், லகர வகரங்கள், ரகர றகரங்கள் என்பவை ஒன்றனுக்கொன்று மாறுக எழுதப்பட்டிருக்கும். டு, ரு, கு, என் பனவும் அ, கு, சு என்ற மூன்றும் தமக்குள் வேற்றுமை தெரியாத படி இருந்தன. 'ற்ற' என வருமிடங்களில் 'த்த' என்ற பாடம் காணப்பட்டது. ஓரிடத்தில் காசினை யென்பதில் காவென்னு மெழுத்து, தூவென மாறி அதன்பின் ஒரு சகர வொற்றுத் தோன்றித் தூச்சினை யென்றெழுதப்பட்டிருந்தது. இங்ஙனம் பல பிரதிகளிலும் காணப்பட்ட பாடங்களையும் அவற்றின் மாறு பாட்டின் வரலாற்றையும் விரிக்கின் மிகப் பெருகும்.

5. பழைய கருத்து :—கருத்திற் பொருத்தமில்லாத சொற்கள் ஈகவலவுக்குள் அமைக்கப்பட்டன. இதிலுள்ள சில கடினமான சொற்களுக்குப் பொருள் இருதலைப் பகரத்துள் அமைக்கப்பட் டிருக்கின்றது. சில செய்யுட்களுக்கு இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன.

6. ஆசிரியர் பெயர்கள் :—சுவடிகளில் இருந்தவாறே இப்பெயர் கள் அமைக்கப்பெற்றன.

7. பதவுரை :—அன்வயப்படுத்திப் பொருள் விளங்குதற்குரிய சொற்களைப் பெய்து பதவுரை எழுதப்பட்டுள்ளது; பல விடங் களில் விளி முன்னத்தால் வருவித் தெழுதப்பட்டது. சில செய் யுட்களுக்கு ஒருவாறு உரை யெழுதினும் முடிபு முதலியன தெளி வாக இன்மையின் என் மனத்திற்குத் திருப்தி உண்டாகவில்லை.

8. முடிபு :—வினை முடிபு இத்தலைப்பிற் காட்டப்பட்டது.

9. கருத்து :—செய்யுளின் கருத்துச் சுருக்கமாக எழுதப்பட்டது.

10. விசேடவுரை :—பதசாரங்களும், இலக்கணச் செய்திகளும் பொருள் விளக்கங்களும், வரலாறுகளும் இப்பகுதியில் எழுதப் பட்டுள்ளன. உள்ளுறையுவமம், இறைச்சி யென்னும் இரண்டும் குறிப்பெனவே குறிக்கப்பட்டுள்ளன.

11. மேற்கோளாட்சி :—இலக்கண இலக்கியங்களின் உரை களில் உரையாசிரியர்கள் இந்நூற் செய்யுட்களையும் பகுதி களையும் காட்டிய இடங்கள் அடிவரிசைப்படி வகுத்துக் காட்டப் பட்டுள்ளன. இவை தெரிந்தவரையில் உரையாசிரியர்களின் காலமுறையில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் உரையாசிரியர்களுடைய கருத்துக்கள் அடிக்குறிப்பில் விளக்கப் பட்டன.

12. ஒப்புமைப் பகுதி :—இந்நூற் செய்யுட்களின் சொற்பொரு ளோடு ஒப்புமையையுடைய பிறநூற் செய்யுட்களும் செய்யுட் பகுதிகளும் ஒப்புமைப் பகுதியென்னும் தலைப்பிற் காட்டப் பட்டன. இதிற் பெரும்பாலும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங் கதை, சிந்தாமணி யென்னும் நூல்களின் பகுதிகளே காணப்படும். கருத்தை நன்கு விளக்குவனவாகிய பிற்காலத்து நூற்பகுதிகள் சிறுபான்மையாகவே இருக்கும். இவ்வொப்புமைப்பகுதி சங்க நூற்பொருள்களை ஆராய்வாருக்குப் பெரிதும் பயன்படும். பாடங்களை நிச்சயம் செய்வதற்கு இவ்வொப்புமைப் பகுதிகள் சிலவிடங்களில் உதவின. இதிற் காட்டப்பட்ட செய்யுட்பகுதி குறுந்தொகைச் செய்யுளை இயற்றிய புலவராற் பாடப்பெற்றதாக இருப்பின் அங்கே உடுக்குறியிட்டுக் கீழ்க்குறிப்பில் இன்னூர் பாட்டென்று காட்டப்பட்டுள்ளது.

நூலின் மூலமும் உரையும் அடங்கிய பகுதிகள் மேலே கண்ட முறையில் வகைப்படுத்திப் பதிப்பிக்கப்பட்டன. நூலிற்கு அங்கமாகச் செய்யுள் முதற்குறிப்பகராதியும், அரும்பத முதலிய வற்றின் அகராதியும் நூலின்பின்னே சேர்க்கப்பட்டன.

* * * *

இந்நூற் செய்யுட்களைப் பாடிய புலவர்களின் சரித்திரத்தைப் புறநானூறு முதலிய பதிப்புக்களில் எழுதி யிருப்பது போலவே எழுத எண்ணி யிருந்தேன். அப் பதிப்புக்களில் எழுதிய பிறகு

நான் செய்துவந்த ஆராய்ச்சியினுல் தெரிந்த செய்திகள் பல. அவற்றையும் அமைத்துப் புலவர் சரித்திரங்களைத் தனியே வெளியிட எண்ணி யிருத்தலின் இந்நூலில் ஆசிரியர் வரலாறுகளை எழுதாமல் அவர்கள் பெயர்களையும் அவர்கள் இயற்றிய செய்யுட்களின் எண்களையும் காட்டியிருக்கிறேன்.

முதலில் நான் கருதியபடி யல்லாமற் பல புதிய விஷயங்களைச் சேர்க்க நேர்ந்தமையின் எதிர் பார்த்ததைவிட அதிககாலம் இப் பதிப்புக்கு ஆயிற்று.

உதவிய அன்பர்கள்

இந்நூலை ஆராய்ந்து வந்த காலங்களிலும் பதிப்பித்தகாலத்திலும் பல அன்பர்களுடைய உதவியைப் பெற்றிருக்கிறேன். அவர்களுள் முக்கியமானவர்கள் என்னுடைய இளைய சகோதரர் சிரஞ்சீவி வே. சுந்தரேசையரும், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாதையரும் ஆவர்.

முன்பு குறிப்பிட்ட என் பிராய முதிர்ச்சியாலும் சரீரத் தளர்ச்சி முதலியவற்றுலும் முன்போல எந்தக் காரியத்தையும் நான் கருதியபடியே தனியே இருந்து நிறைவேற்ற இயலவில்லை. ஆயினும் தமிழ்நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தலில் உள்ள ஆவல் இன்னும் தணியவில்லை. தமிழ்த்தெய்வமே அவ்வப்பொழுது என் கவலையை நீக்கிவருவதாக எண்ணுகிறேன். கலாநிலையமாகிய சென்னைச் சர்வகலாசாலையாருடைய பேராதரவால் வெளிவரும் இந்நூற் பதிப்பு, தமிழன்பர்கள் எதிர்பார்க்கிறபடி திருப்திகரமாக அமைய வேண்டுமேயென்ற கவலை எனக்கு உண்டு. இச் சமயத்தில் மேற்கூறிய வித்துவான் சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாதையர் இந்நூலுக்கு நான் பல வருஷங்களாக எழுதியும் தொகுத்தும் வைத்துள்ள பலவகையான ஆராய்ச்சிக் குறிப்புகளையெல்லாம் என்கருத்துக் கிணங்க முறைப்படுத்தி நல்லவடிவத்தில் அழகு பெற அமைப்பதிற் பெரிதும் துணை புரிந்தார். அவருடைய பேராற்றலையும் எழுதும் வன்மையையும் தமிழன்பையும் என் மனமாரப் பாராட்டுகின்றேன். அவருக்கு எல்லா நன்மைகளையும் அளித்தருளும்வண்ணம் தோன்றுத்துணையாக நிற்கும் முழுமுதற் கடவுளை இறைஞ்சுகின்றேன்.

பல வருஷங்களாக முயன்று படித்துப் பலருடைய உதவியைப் பெற்று ஆராய்ந்து ஆராய்ந்து சுவைத்துப்பார்த்த இந்நூல் இப் பொழுது இந்த உருவத்தில் வெளிவருவதைப் பார்க்கையில் எனக்கு உண்டாகும் இன்பம் எழுதி உணர்த்துதற்கரியது. தமி முன்னியின் திருவடித்துணைகளில் இப்பதிப்பும் ஒரு மணமற்ற சிறுமலராகவேனும் கிடந்து நிலவுமென்பது எனது கருத்து.

எனக்குள்ள பலவகையான குறைகளால் இப்பதிப்பிற் பல பிழைகள் நேர்ந்திருத்தல் கூடும். அவற்றை அன்பர்கள் பொறுத்துக் கொள்வார்களென்று எண்ணுகிறேன். இம் முயற்சியை நிறைவேற்றி வைத்த திருவருளை வழுத்தி வாழ்த்து கின்றேன்.

"தியாகராஜ விலாசம்"
திருவேட்டீசுவரன் பேட்டை
12—8—1937

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்

இந்நூலிலிருந்து அறிந்து கொள்ளக்கூடிய முக்கியமான செய்திகள்

முன்னுரை

சங்கமருவிய நூல்களின் சொற்பொருட் போக்குக்கும் பிற்கால நூல்களின் போக்குக்கும் பலவகையில் வேற்றுமை உண்டு. பழைய காலத்தில் நல்லிசைப்புலவர்கள் அமைத்த புலனெறிவழக்கத்திற் பலவகை மரபுகள் பிற்காலத்தில் வழக்கொழிந்தன. பிற்காலத்தாருடைய நூல்களிற் பல புதிய அமைப்புக்கள் காணப்படுகின்றன. நாளடைவில் உலகத்தில் மக்களின் நடையுடை பாவனைகள் வேறுபடுவது போலவே நூல்களின் நடை முதலியனவும் வேறுபடுதல் இயல்பேயாகும்.

சங்கச் செய்யுட்களிலே சில வரையறைகள் உண்டு. இன்ன பொருளை இன்னவாறு அமைக்கவேண்டுமென்ற மரபு பிறழாமற் புலவர்கள் செய்யுட்களை இயற்றினர். அங்ஙனம் அச்செய்யுட்கள் வரையறைக்குள் அடங்கினும் அவர்களுடைய மனோபாவமும் அதனை வெளியிடும் முறையும் சொற்பொருட் செறிவும் தனிச் சிறப்போடு விரிந்து விளங்குகின்றன. இயற்கையோடு பழகி இயற்கையழகில் ஈடுபட்டு அவ்வியற்கையின் பலவகைக் கோலங்களைச் சொற்சித்திரங்களால் உருப்படுத்திக் காட்டும் அவர்களுடைய பேரறிவின் திறம் யாவரும் வியத்தற்குரியது.

புறத்தே தோன்றும் காட்சிகளைச் செய்யுட்களிற் புனைந்து காட்டும் ஆற்றலினும் அகத்தே தோன்றும் கருத்துக்களை உணர்ச்சியும் மெய்ப்பாடும் புலப்பட உரைக்கும் ஆற்றல் மிகவும் சிறந்தது. இவ்வகையாற்றலையுடைய கவிஞர்களே அறிஞர்களுடைய பெருமதிப்பை அடைகிறார்கள்.

பொருள்கள்

உலகிலுள்ள பொருள்களைக் *காட்சிப்பொருள் கருத்துப் பொருளென இருபெரும் பிரிவாகப் பிரித்துக் கூறுவர். காட்சிப் பொருளாவன ஐம்பொறி யுணர்வுக்கு உட்பட்டவை. கருத்துப் பொருளாவன மனவுணர்வால் அறியப்படுவன. தம் செய்யுட்

---

* தொல். அகத். 1, நச். காட்சியென்பது கலைமைபற்றி ஐம்பொறி யுணர்வையும் குறித்து நின்றது.

களைப் படிப்பவர்களுடைய அகக்கண்ணின்முன் இவ்விருவகைப் பொருள்களையும் தோற்றச்செய்யும் ஆற்றல் சங்ககாலத்துப் பெருங்கவிஞர்கள்பால் குறைவற நிரம்பியிருந்தது. இயற்கைப் பொருள்களின் இயல்புகளை அவர்கள் செய்யுளிற் பரக்கக் காணலாம்; அன்பு, வீரம் முதலிய பண்புகளை வெளிப்படுத்தும் செய்யுட்கள் பல. கருத்துப் பொருளாகிய அன்பின்வழி நிகழும் பலவகை நிகழ்ச்சிகளைக் கூறும் அகப் பொருள், அவர்களுடைய கவி மலரும் சோலை. இப்பொழுது நமக்குக் கிடைக்கும் சங்க நூல்களுள் அகப்பொருள் பற்றியனவே அதிகமானவை.

ஒத்த அன்பால் ஒரு தலைவனும் ஒரு தலைவியும் ஊழ்வினை வழியுய்க்கப்பட்டு அளவளாவியகாலத்துப் பிறந்த இன்பம் அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனுக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதொரு பொருளாதலின் அதனை அகமென்றனர். இப்பொருள்பற்றிய புலனெறி வழக்கத்தின் இலக்கணத்தைத் தொல்காப்பியப் பொருளதிகாரமும், இறையனாரகப்பொருள் முதலிய நூல்களும் உணர்த்துகின்றன.

இங்ஙனம் உணர்த்தப்படும் அகப்பொருள் ஐந்து திணையாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொன்றும் முதல், கரு, உரியென்னும் மூவகையாலும் செய்யுளில் விரிக்கப்படும். முதலென்பன நிலமும் காலமும்; கருவென்பன தெய்வம் முதலிய; உரியென்பன திணைக்குரிய ஒழுக்கங்கள். இவ்வரையறைகள் புலவர்களால் இயற்றப்பெறும் கவியமைப்புக்கு உரியனவேயன்றி உலகியலுக்கு உரியனவல்ல. ஆனால் இவற்றிற் சில மட்டும் உலகியலுக்கு ஏற்புடையனவாகும்.

> "நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (தொல். அகத். 56)

என்னும் சூத்திர உரையில் இளம்பூரணர்,

'நாடக வழக்காவது சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்து வந்தன வாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும் குலத்தானும் ஒழுக்கத்தானும் அன்பினுனும் ஒத்தார் இருவராய்த்தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரும் அடுப்போரும் இன்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தா ரெனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினரெனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபட வருவன வெல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறல். உலகியல் வழக்காவது உலகத்தார் ஒழுகலாற்றோடு ஒத்து வருவது' என வரைவனவற்றுள், கவியின் சுவை காரணமாக

இத்தகைய வரையறைகள் கொள்ளப்பட்டன வென்பதும், சில நிகழ்ச்சிகள் உலகியலோடு ஒத்து வருமென்பதுமீ அறியப்படும். பெரும்பான்மையும் நாடக வழக்கே அமைதலின் அதனைத் தொல் காப்பியர் முன்னர்க் கூறினர் போலும். நாடக வழக்கு, கவிஞர்க ளுடைய உள்ளத்தால் கற்பனை செய்யப்பட்டுப் படிப்போருக்கு இனிமை பயப்பது. இறையனாரகப்பொருளின் உரையாசிரியர் இவ்வொழுக லாற்றை,

'இல்லது, இனியது, நல்லதென்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாதலின் இதனை உலகவழக்கினோடு இயையானென்பது' (சூ. 1, உரை) என்று கூறுவதும் காண்க.

எனவே, கவிகள் தம்முடைய கற்பனை ஆற்றலாற் பலவகைச் சுவைபொருந்தக் காட்சிப் பொருளையும் கருத்துப்பொருளையும் புனைந்துரைத்துச் சிறுபான்மை உலகியலோடும் பொருந்த நல்ல பொருளை யமைத்துக்காட்டிய செய்யுட்களே இவ்வகப்பொருட் செய்யுட்களாமென்பது தெரியவரும். இவற்றிற் கூறியபடியே உலகியல் நிகழ வேண்டுமென்பது வரையறையன்று; இவை யனைத்தும் உலகியலுக்குப் புறம்பானவையென்று கொள்ளுதலும் தக்கதன்று.

இச்செய்யுட்களிற் காணப்படுவனவாகிய தலைவன் தலைவிய ரிடையே வளரும் அன்புநிலை, அவர் இல்லறம் நடத்தும் முறை முதலியன உலகியலைச் செம்மைப்படுத்தும் தன்மையின. இளம் பூரணர் எடுத்துக்காட்டியனவாகிய தலைவன் தலைவியருடைய ஒப்பு முதலியன செய்யுளுக்காக அமைத்துக்கொண்டவை. இங் ஙனமே சிறந்த தகுதி வாய்ந்தாரையே காப்பியத்துக்குத் தலை வராக அமைக்க வேண்டுமென்று பிற்காலத்திற் காப்பிய இலக் கணம் கூறுவது கவிஞனுடைய சிறந்த மனோபாவங்கள் வெளிப் பட்டு இன்சுவையை உண்டாக்குமென்னும் காரணம் பற்றியே யாகும்.

முதல், கரு, உரியென்னும் மூவகைப் பொருள் வரையறையும் கவிச்சுவையை மிகுதிப்படுத்தவே போந்ததென்று தோற்று கின்றது. உலகத்திற் குறிஞ்சி நிலத்துள்ளாரே அளவளாவுவது, பாலை நிலத்துள்ளாரே பிரிவது, முல்லை நிலத்துப் பெண்டிரே தலைவரைப் பிரிந்து ஆற்றியிருப்பது, மருத நிலத்தினரே ஊடுவது, நெய்தனிலத்தினரே இரங்குவது என்ற வரையறையில்லை; ஆனால் கவிஞன் அமைக்கும் உலகத்திலோ இவ்வரையறைகள் காணப் படுகின்றன. இது நாடக வழக்காகும். நாடகத்தில் அரங்கில்

நிகழும் நிகழ்ச்சிக்கு ஏற்ற களனொன்றை நாடகப் புலவன் அமைத்துக் கொள்வதும், ஓவியப் புலவன் தான் எழுதப்புகும் ஓவியத்திற்கு ஏற்ற நிலைக்களனே எழுதிக் கொள்வதும் போன்றது இது. பிரிவைப் புனையும் ஆசிரியன் துன்ப உணர்ச்சியை மிகுதிப்படுத்தவேண்டி நீரில்லாத வறுஞ்சுரத்தையும், ஓய்ந்த யானையையும் தான் கூறும் நிகழ்ச்சியோடு இயைபு படுத்துகின்றான். இன்ப உணர்ச்சியை மிகுதிப் படுத்தவேண்டித் தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் காணும் நிகழ்ச்சியை, 'சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பரவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து பொரிப்புன்கும் புன்னகமும் முருக்கொடுமுகை சிறந்து, வண்டறைந்து தேனுர்ந்து வரிக்குயில்கள் இசைபாடத் தண்டென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழிலது நடுவண்' (இறை 2 உரை) அமைத்துக் காட்டுகின்றான்.

இவ்வாறே மற்ற நிலங்களுக்கும் அவ்வந் நிலத்தில் நிகழும் ஒழுக்கத்திற்கும் இயைபிருத்தலை அறியலாகும். நிலத்தைப் போலவே கால வரையறையும் கவிச்சுவையைப் பெருக்குதற்கு அமைந்தது. அவ்வத்திணையின் ஒழுக்கத்திற்கு இலக்கணத்தில் வரையறுக்கப்பட்ட காலங்கள் ஏற்புடையனவாதலை நச்சினார்க் கினியர் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் (அகத. 6,8, 9) விளக்கிச்செல்கின்றார்.

கருப்பொருள்கள் ஒவ்வொருவகை நிலத்தின் இயல்பையும் அறிந்து அமைக்கப்பட்டன. அவை உலகியல்போடு ஒத்தன. நல்லிசைப் புலவர்கள் மரம், விலங்கு, பறவை முதலியவற்றின் இயல்புகளை நன்றாக உணர்ந்து வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

உரிப்பொருளாவது புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் ஆகிய இவ்வைந்தும் இவற்றின் நிமித்தங்களும் ஆகும். இப்பொருளே முதல் கருவென்னும் இரண்டைக் காட்டிலும் சிறந்தது. பிறபொருள்கள் தம்முள் மயங்கினும் உரிப்பொருள் மயங்குதல் தகாதென்பது இலக்கணம்.

முதல், கரு என்னும் இரண்டும் உரிப்பொருளாகிய நாடக நிகழ்ச்சிக்கு நிலைக்களனாக உதவுகின்றன. அவ்விரண்டும் பெரும் பாலும் காட்சிப்பொருள் வகையைச் சார்ந்தன. அவற்றை நல்

விசைப் புலவர்கள் அமைத்துச் செய்யுள் புனைகையில் நாம் அக் காட்சிகளில் ஒன்றிவிடுகின்றோம். உரிப்பொருளை அமைக்கும் போது கவியினுடைய இணையற்ற பாவிகத்தை யறிந்து மகிழ் கின்றோம்.

சங்ககாலத்துப் புலவர் பெருமக்களின் கவியாற்றலை அறிந்து கொள்வதற்கு இக் குறுந்தொகை ஒரு கருவியாகும். இதன்கண் அகநானூற்றைப்போல முதல் கருப்பொருள்களைப் பற்றிய செய்தி கள் விரிவாகக் காணப்படவில்லை; திருக்குறளைப்போல அறவே நீக்கப்படவுமில்லை. இலக்கண அமைதி நன்குடையதாகி விரிவும் சுருக்கமும் இன்றி இயற்கைக் காட்சிகளின் எழில் நலங்களையும். அகனைந்திணை யொழுக்கங்களையும், பண்டைக்கால நாகரிகச் சிறப்பையும், வேறு பல அரிய பொருள்களையும் விளக்குவது இக் குறுந்தொகை.

பெரும்பொழுதுகள்: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இள வேனில், முதுவேனில் என்பன. ஆவணி முதல் ஈரிரண்டு மாதங் களை ஒவ்வொரு பெரும்பொழுதுக்கும் முறையே உரிய காலமாகக் கொள்வர்.

சிறுபொழுதுகள்: சிறு பொழுதுகள் ஐந்தென்றும் ஆறென்றும் இருவகைக் கொள்கைகள் உண்டு.

> "காலையும் பகலுங் கையறு மாலையும்
> ஊர்துஞ்சி யாமமும் விடியலு மென்றிப்
> பொழுது" (குறுந். கூ)

என்னும் பாட்டில் ஐவகைச் சிறு பொழுதுகள் சொல்லப் படுகின்றன. காலை - பொழுது புலர்ந்தபின்னுள்ள காலமென்றும், பகல் - நண்பகலை உள்ளிட்ட காலமென்றும், மாலை - சூரியன் மறைந்தது தொடங்கிய இரவின் முதல்யாமமென்றும், யாமம் - இடையிரவென்றும், விடியல் - இரவின் கடையாமமென்றும் கொள்ள வேண்டும். இவற்றின் இடையே எற்பாடென்னும் பொழுதொன்றையும் கூட்டி ஆறுக உரைப்பர் வேறு சிலர்.

தாவரங்கள்: அகில், அசோகு, அடும்பு, அத்திமரம், அரசு (அலரி)ச் செடி, அவரை, அறுகு, ஆம்பற் கொடி, ஆலமரம், ஆவிரை, இருப்பை, இற்றி (அச்சி, இத்தி), ஈங்கை, உகாய், உழுந்து (உளுந்து), எருக்கு, எள், ஐயவி, ஐவனம், ஓமை மரம், கரும்பு, கருவிளை, கவலைக் கிழங்கு, கள்ளி, காஞ்சி, காந்தள், காயா மரம், குரவம், குருந்தமரம், குவளை, குளவி, குறிஞ்சி, குன்றி,

கூதளி, கொறுக்காந்தட்டை, கொன்றை, கோங்கு, சந்தனமரம், சிலைமரம், சேம்பு, ஞாழல், ஞெமை, தடா, தாமரை, தாழை, தாளி, தினை, நரந்தம், நெய்தல், நெருஞ்சி, நெல், நெல்லி, நொச்சி, பகன்றை, பஞ்சாய், பயறு, பருத்தி, பலா, பலாசு, பவழம், பனை, பாதிரி, பிடா, பித்திகம், பிரம்பு, பீர்க்கு, புன்கு, புன்னை, மரல் (மருள்), மராம், மருதமரம், மாணைக் கொடி, மாமரம், முளகு கொடி, முல்லை, முள்முருங்கை, முள்ளிச் செடி, மூங்கில், யாமரம், வரகு, வழை, வள்ளி, வாகை, வாழை, வெட்சி, வேங்கை மரம், வேம்பு.

பிராணிகள் : அணில், அன்றில், அன்னம், ஆடு, ஆமான், ஆமை, ஆனேறு, எருமை, எலி, எழால், எறும்பு, ஓந்தி, கடமா, கணந்துள், காக்கை, கிளி, குதிரை, குயில், குரங்கு, குருவி, குறும்பூழ், கூகை, கொக்கு, கோழி, செந்நாய், தவளை, நண்டு, நாய், நாரை, நீர்நாய், நுளம்பு, பசு, பருந்து, பல்லி, பாம்பு, புலி, புறா, மகன்றில், மயில், மரையினம், மான், மீன், முதலை, யானை, யானையங்குருகு, வங்கா, வண்டு, வருடை, வரையா, வெருகு, வெளவால்.

அன்பைப்பற்றியன

இங்ஙனம் விரிவாக வகுத்துக் காட்டப்பட்ட பொருள்களின் இயல்புகளால் புலவர்கள் இயற்கையின் உண்மைகளை நன்குணர்ந்து பாடியுள்ளார்களென்பது தெரியவரும். ஐந்திணை ஒழுக்கங்களாகிய உரிப்பொருளை அவர்கள் வெளிப்படுத்தும் முறை மிக இனியது. தலைவனும் தலைவியும் அன்புற்று இன்பம் நுகர்ந்து வாழும் வாழ்க்கையின் பல திறப்பட்ட நிகழ்ச்சிகளை அவர்கள் நாடகவழக்கும் உலகியல்வழக்கும் இயையக் கூறிச் செல்கின்றனர். தலைவிக்கும் தலைவனுக்குமிடையே உள்ள அன்பைப்பற்றிய செய்திகள் மிக உயர்ந்த நிலையை யுடையன. இவ்வன்பு காமம், கேண்மை தொடர்பு, நட்பு, நயம் என்னும் பெயர்களால் வழங்கும்.

இவ்வன்பு பிறவிதோறும் தொடர்ந்து வருமென்பது சான்றோர் கொள்கை. ஆதலின், "பயிலியது கெழீஇய நட்பு" (உ) என்று இத்தூய காதலைக் கூறுவர். பிறவிதோறும் கணவனும் மனைவியுமாக இருப்பதே இவ்வன்பின் பயன்; இதனை,

"கடனறிந் திருவே மாகிய வுலகம்" (ருஎ)

என்பதில் தலைவி குறிக்கின்றாள்; "இப்பிறவி நீங்கி மறுபிறவியடையினும் நீயே என் கணவனாகுக; நானே நின் நெஞ்சுபொருந்

திய டிணவியாகுக" (சக) என்று வேண்டுகின்றாள். தலைவனே தலைவியைப் பெறுத துயர மிகுதியால் துன்புற்ற நெஞ்சை நோக்கி, "இந்தப் பிறவியோடு இந்நட்பு அற்றுவிடுமென்ப தொன்று இல்லை; இது மறு பிறவியிலும் மன்னுதல் பெறும்; ஆதலின் நாம் பெறும் பேறு ஒன்று உண்டு; நீ வருந்தற்க" (ககூசு) என்று ஆற்றுவிக்கின்றாள்.

இவ்வாறு பிறவிதோறும் தொடர்ந்துவரும் அன்பு நல்லூழினுல் தலைவனையும் தலைவியையும் ஒன்றுபடுத்தற்குக் காரணமாகின்றது. அவ்வன்பின் தொடர்ச்சியை அறுமல் இயையச் செய்வது ஊழ். அதனைப் பாலென்றும் தெய்வமென்றும் கூறுவர்;

"பால்வரைந் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ" (ககூசு)

என்று தோழி தலைவனைப் பற்றிக் கூறுகின்றாள்; 'தலைவனது குணச் சிறப்பை அளந்தறிவதற்குரிய தகுதி நமக்கு ஏது? இது நல்லூழினுல் அமைக்கப்பட்ட தொடர்பு' என்று பொருள்படும் இக்கூற்றினுல் புறத்தோற்றத்திற் காணப்படும் தகுதியினுல் தொடர்பு உண்டாவதன்றென்பதும் பால் வகுத்தமைப்பதனுலேயே அது நேர்கின்றதென்பதும் பெறப்படும்.

இளம்பருவந் தொடங்கித் தலைவனும் தலைவியும் நட்புப் பூண்டு ஒழுகவேண்டு மென்பது இல்லை. நொதுமலர்களாக இருப்பினும் ஊழின் வலியால் பிறவிதோறும் தொடர்ந்த அன்பு மீண்டும் இணைக்கப்படுகின்றது. ஒரு தலைவன் முன் அறியாத தலைவி ஒருத்தியைக்கண்டு அவளிடம் வயப்பட்டு அன்பு பூணுகின்றான். நெடுங்காலம் பழகினரிடையும் அன்பு உண்டாதலரிதாகிய இவ்வுலகத்தில் முன் பழக்கமில்லாத தம் இருவருடைய மனமும் ஒன்றியதை நினைந்து அவன் வியக்கின்றான்: "என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் என்ன உறவினர்? ஒருறவும் உடையரல்லரே! என் தந்தையும் உன் தந்தையும் எந்த முறையில் உறவுடையர்? அவர்களுக்கும் கேண்மையில்லையே! யானும் நீயும் எப்படி அறிவோம்? இதுகாறும் அறிந்தோமில்லையே! இங்ஙனம் இருப்பவும், செம்மையாகிய முல்லைநிலத்திற் பெய்த மழைநீர் அந்நிலத்தோடு இயைவது போல நம இருவருடைய அன்புடை நெஞ்சமும் தாமே கலந்தனவே! என்ன வியப்பு!" (சம) என்பது அவன் கூற்று. நொதுமலர்களாகத் தோற்றிய அவ்விருவரிடையே ஒளித்திருந்த அன்பு தக்க காலத்தில் வெளிப்பட்டு ஒன்றுகின்றது.

இதைவிட வியத்தற்குரியதாகிய அன்பின் செய்தியொன்று வேறொரு செய்யுளிற் கூறப்படுகின்றது; பகைஞர்களாகத் தோற்றிய இருவரிடம் பழைய அன்பு ஒன்றிவிடுகின்றது: தலைவனும் தலைவியும் பாலைநிலத்துவழியே செல்கின்றனர். அவ்விருவரையும் இளமைக் காலத்திற் பகைஞர்களாகக் கண்டவர்கள் சிலர் பாலையின் வெம்மையையும் கொடுமையையும் மறந்து அவர்கள் அப்பொழுது இணைந்து செல்வதைப் பார்க்கின்றனர். அவர்களுக்கு உண்டாகும் வியப்பும் ஊழின் வலியினிடத்தே தோன்றிய மதிப்பும் அளவற்றன; "என்ன வியப்பு! சிறு பிராயத்தில் இவன் இவளுடைய தலைமயிரைப் பிடித்து இழுப்பான்; இவளும் இவனுடைய மயிரைப் பிடித்திழுத்து ஓடுவாள்; செவிலியர் தடுத்தாலும் நில்லாமல் காரணமில்லாத சண்டையைச் செய்துகொண்டிருப்பார்கள். இப்பொழுதோ மெல்லிய இரட்டை மாலை சேர்ந்தாற்போல இவர்கள் மணம் புரிந்து மகிழ்தற்குரியவராஞர்கள். இப்படிச்செய்த ஊழ்வினையே! நீ மிக நல்லை!" (உஉசு) என்று ஊழ்வினையை அவர்கள் வாழ்த்துகின்றார்கள்.

தலைவனிடமும் தலைவியினிடமும் இவ்வன்பு மறைந்து நிற்கின்றது. நல்லூழின் திறத்தினால் தக்க செவ்வி உண்டாகும்போது அது சூரியனைக்கண்ட தாமரைபோல மலர்கின்றது. 'காமமென்பது ஒரு நோயன்று; துயரமுமன்று அது மக்களிடத்தே மறைந்து நிற்கும் ஒரு குணம். அது மிகுதலும் குணிதலும் இல்லை. தழையுணவைத் தின்ற யானைக்கு மதம் உண்டாவதுபோலப் பால்வயத்தாற் கூட்டப்பட்டாரைக் காணும்போது அது வெளிப்படும்' (கருசு) என்று அவ்வன்பின் இயல்பை ஒரு புலவர் உணர்த்துகின்றார் அங்ஙனம் காணும் காலத்து வெளிப்படுவதாதலின் அதனை, "கண்டர வந்த காம வெள்ளெரி" (நஅடு) என்று ஒரு நல்லிசைப் புலவர் நவில்கின்றார். அது பிறவிதோறும் தொடர்ந்த பழமையதாயினும் தோற்றும்போதெல்லாம் புதிய இன்பத்தை உடையது; இக்கருத்து, "விருந்தே காமம் பெருந்தோ ளோயே" (உஅச) என்பதில் வெளிப்படுகின்றது. கண்டமாத்திரத்தே நெஞ்சங் கலந்த காதல் பண்டை உறுதியைப் பெற்றுவிடுகின்றது. நிலத்தினும் பெரிதாகவும் வானினும் உயர்ந்ததாகவும் நீரினும் ஆழமுடையதாகவும் வளர்கின்றது (ந); உயிர் அக்காதலாகிய பெரும் பழத்தைத் தாங்கி நிற்கும் காமரைப் போல நிற்கின்றது (கஅ); காம்பைக் காட்டிலும் பழத்திற்குத்தானே மதிப்பு? அதுபோல உயிரினும் அவ்வன்பு சிறந்து விளங்குகின்றது. கடல்சூழ் மண்டிலத்தைப் பெற்றாலும் அந்நட்பு விடுதற்கரியதாகின்றது (நஅஅ.)

அது நாணத்தால் வெளிப்படாமல் தலைவியின் உள்ளே கிடந்து தாயில்லாத முட்டைபோல மெலிவடைகின்றது. யாமைப் பார்ப்புத் தாயின் முகம் நோக்கி வளர்வதுபோலத் தலைவனது காட்சியால் தளிர்ப்பதாகிய அது புறத்தேயுள்ள இடையூறுகளால் சில கால் பொலிவிழக்கின்றது. அப்பொழுது அதனை உள்ளடக்கிவைக்கும் ஆற்றலில்லாத தலைவி அதனை நோயாக நினைக்கின்றாள். தலைவனும் அங்ஙனமே தலைவியைக் காணப் பெருனையின் அன்பு தடைப்பட்டு வருந்துகின்றான்; உள்ளந் தாங்கா வெள்ளத்தில் நீந்துகின்றான்; 'இந்நோய் பரந்தது; பொறுத்தற்கரிது' என்று நண்பனிடம் கூறுகின்றான்.

தலைவியோ, 'பொறையரு நோய்' கொண்டு என்பு உருக நலிந்து வாடுகின்றாள். அன்பைப் பகையாகக் காண்கின்றாள்; "இகலுந் தோழிநங் காமத்துப் பகையே" (உருள), "சேர்ப்பனொடு செய்தன மன்றவோர் பகைதரு நட்பே" (நஎச), "பகையாகின்றவர் நகைவிளை யாட்டே" (நகூச) என்று கதறுகின்றாள்.

பிரிவின்றி வாழ்தலே அன்பு வளர்தற்கு வழி யென்பதைத் தலைவனும் தலைவியும் உணர்கின்றனர். "பிரிவின் றுயி னன்று மற்றில்ல... நாடனொடு கலந்த நட்பே" (கநச), "தணப்பருங் காமம்" (களள) என்னும் கூற்றுக்களில் இக்கருத்தைக் காணலாம். தலைவனோ, "பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்" என்றும், "வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (நஉ) என்றும் கூறுகின்றான். பிரிவரிதாகிய தண்டாக் காமம் பிரிவினால் இடையூறு உறுவதினும் உயிர் போதல் சிறந்ததென்பதே அன்புடையார் துணிபு (ருள) என்பது தலைவி கூற்று. தலைவன் பிரிவினால்

> "விரிநீர்ச் சேர்ப்ப னீப்பி னெருநம்
> இன்னுயி ரல்லது பிறிதொன்
> றெவனோ தோழி நாமிழப் பதுவே" (நகச)

என்பது தலைவி கூற்று. தலைவன் பிரிவினால் உயிரிழத்தலை அவள் பாராட்டவில்லை. மறுமை யுலகத்தும் மன்னுதல் பெறுமென்ற துணிவினால் அவளுக்குக் காதலிழத்தலினும் சாதலே சிறந்ததாகத் தோற்றுகின்றது. "யாம் எம்முடைய காதலரைக் காணேமாயின் கரையிலுள்ள கற்களோடு உராய்ந்து செல்லும் நுரையைப்போல மெல்ல மெல்ல உயிர் தேய்ந்து இல்லையாவோம்" என்று ஒரு தலைவி இயம்புகின்றாள்.

எவ்வகை இடையூறு உற்றாலும் அன்பு அழியாதென்னும் துணிவு காதலர்மாட்டே இருத்தலின் அவர்கள் உலகியலோடு

பொருந்தி வாழ்கின்றார்கள். அடிக்கடி கண்டு அளவளாவவிடினும் மனமொன்றிய அன்பு தேயாதென்பதை,

"காமம் மொழிவ தாயினும்...எம்
தொடர்புந்தேயுமோ நின்வயி னானே" (சஉ)

என்பதிற் கபிலர் உணர்த்துகின்றார். இங்கே காமமென்றது மெய்யுறு புணர்ச்சியை; தொடர்பென்றது அன்பினை. "யார் எவ்வாறு பழித்தாலும் எம் அன்பு அழியாதென்பதை நான் நன்றாக அறிந்தேன்" (கஎ0) என்று ஒரு தலைவி கூறுகின்றாள். "தலைவனோடு நாம் கொண்ட காதல் நன்றாகக் கட்டப்பெற்றது; நன்றாக முடிந்தமைந்தது; அவிழ்த்தற்கரியது" (ஈகஈ) என்று ஒருத்தி சொல்கின்றாள்.

அன்பின் வயப்பட்டார் தமக்கு அன்புடையாரால் தீங்குசேர்ந்தாலும் அதனைத் தீங்காகக் கருதாமல் ஒழுகுவர். "தலைவனோடு நாம் அளவளாவாவிடினும் அவனைத் தலைவனைப் பெற்றோம், அவனோடு நட்புச் செய்தோமென்ற அளவிலே எமக்கு இன்பம் உண்டாகின்றது" (சுக), "தலைவனது நட்பு என் தோளை மெலிவித்தும் அமைதியைத் தந்தது" (கூ0), "தலைவன் கொண்ட கேண்மை நாம் பசந்தாலும் தான் பசப்பை யுறாது" (உசுச) என வரும் கூற்றுக்களில் அன்பானது குறைவையும் நிறைவாகக் கொள்ளுமென்ற உண்மை விளங்குகின்றதல்லவா? தலைவனுல் என்ன துயருற்றாலும் அவனை, "அன்றையன்ன நட்பினன்" (ஈஅடு) ஆகவும், "அக் குன்ற நாடன் கேண்மை என்றும் நன்று" (ஈஅ) ஆகவும் மறுவில் நட்பாகவும் (உசஎ) தலைவி காண்கின்றாள். இவ்வன்புடைக் காமத்தின் விளைவைப் பற்றிப் புலவர்கள் கூறுவனவற்றை ஆராய்கையில் அதன் மென்மையையும் நுண்மையையும் வியக்கத்தக்க ஆற்றலையும் அறிந்து இன்புறுகின்றோம். "ஐதே காமம்" என்று நம்மைப் போலவே பாங்கியும் வியப்படைகின்றாள்.

உபகாரிகள்

சில உபகாரிகளைப்பற்றிய செய்திகள் வருமாறு:—

அருகை: இவன் வீரர்களோடு வீரபானம் செய்து மகிழ்ந்து வாழ்பவன். தன்பாற் பாடிவரும் அகவல் மகளிருக்குப் பிடியைப் பரிசில் தருபவன்.

அஞ்சி: குறைவின்றி ஈபவன்; யானை தேர் முதலிய படைகளையுடையவன். போர் செய்தலிற் சிறந்தவன்.

அதிகன் : பசும்பூட் பாண்டியனது படைக்குத் தலைவன் ; நடு நிலைமையோடு போர் செய்தவன்; கொங்கரோடு வாகைப் பறந்தலையிற் போர் செய்து பட்டவன்.

அருமன் : " ஆதியருமன் " என்று கூறப்படுகின்றான். மூதூரென்னும் ஊரில் வாழ்ந்தவன்.

அழிசி : சேந்தனென்பவனுடைய தந்தை. வீரபானத்தைச் செய்து விலங்கினங்களை வேட்டையாடும் தன்மையையுடைய வாள்வீரர் பலருக்குத் தலைவன். யானைப்படைகளை உடையவன். ஆர்க்காடென்னும் ஊரையுடையவன்.

ஆய் : பொதியில் மலைக்குத் தலைவன் ; கழலுந்தொடியை அணிந்திருப்பவன்.

எவ்வி : இசைவல்லார்களைப் பாதுகாக்கும் இயல்புடையவன் ; வேளிர்களுள் ஒருவன் : பாணர்களுக்குப் பொற்பூவைப் பரிசிலாக வழங்கியவன். இவனது பிரிவினால் பாணர் மிக்க வருத்தத்தையடைந்தனர்.

எழினி : கடையெழு வள்ளல்களில் ஒருவன். பகைவர்கொண்டு சென்ற தன் பசுநிரையை மீட்டவன்.

ஓரி : வள்ளல்களுள் ஒருவன். பல இலக்குகளை ஒரே சமயத்தில் ஊடுருவித் துளைக்கும் வல்வில்லையும் திண்ணிய தேரையும் உடையவன். இவனுக்குரியனவாக ஒரு கானமும் கொல்லிமலையும் கூறப்படுகின்றன.

கட்டி : வல்வேற் கட்டியென்று பாராட்டப் படுகின்றான். இவன் ஒரு நாட்டுக்குத் தலைவன்

குட்டுவன் : மேல்கடற்கரையிலிருந்த மரந்தையென்னும் நகரத்திற்குரிய சிற்றரசன்.

கொங்கர் : பசும்பூட் பாண்டியனுக்குப் பகைவர் ; வாகைப் பறந்தலையில் அதிகனை வென்றவர்.

கோசர் : நாலூர்க்கோசரென்று வழங்கப்படுவர். இவர் பழையதோர் ஆலமரத்தடியிற் சபைகூடிப் பல அரசியற் காரியங்களை ஆராய்ந்தனர். இவர் வன்கட் சூழ்ச்சியையும் பொய்யாத வாய்மொழியையும் உடையவர். நன்னனென்னும் அரசன்பாற் பகையுடையார்.

சேந்தன் : அழிசியென்பவனுடைய மைந்தன் ; " ஏந்துகோட்டியானைச் சேந்தன் " என்று பரணராற் சிறப்பிக்கப் பெறுகின்றான்.

தொண்டையர்: தொண்டை நாட்டுக்குரியர். கல்லாடனாரென் னும் புலவர் இவரைப் பாராட்டுகின்றார். தேர்ப்படையையும் யானைப்படையையும் உடையவர்.

நள்ளி: காக்கைபாடினியார் நச்செள்ளையாரென்னும் பெண் புலவராற் பாராட்டப்படுகின்றான்; திண்ணிய தேரை யுடை யவன். இவனுக்குரிய காடொன்றிற் பல பசுக்களை யுடைய தாகிய இடையர் வாழ்ந்திருந்தனர்.

நன்னன்: இவனுக்குரிய காவல் மரமாகிய மாவைக் கோச ரென்பார் வெட்டிவிட்டு இவனது நாட்டிற் புக்கனர். தன் காவல் மரத்துக் கனியைத் தின்றதற்காக ஒரு பெண்ணைக் கொலை செய்த மையாற் பரணரால் இகழப்படுகின்றான்.

பசும்பூட்பாண்டியன்: அதிகமானைத் தன் படைத்தலைவனைப் பெற்றவன்; கொங்கருக்குப் பகைவன்.

பாரி: ஏழு வள்ளல்களில் ஒருவன்; இவன் மலை பறம் பென்பது.

பூழியர்: பூழி நாட்டினர்; வெள்ளாட்டுத் தொகுதிகளை யுடையவர்.

பொறையன்: பரணராற் பாடப் பெறுபவன். கொல்லிமலை சில காலம் இவனதாக இருந்தது. குடகடற் கரையிலுள்ள தொண்டி யென்னும் பட்டினத்துக்குரியவன்

மலையன்: மலையமான் திருமுடிக்காரியென்னும் வள்ளல். கபில ராற் பாராட்டப்பெறுபவன். போரில் வெற்றிபெறும் ஆற்றலையும் வேல் விளங்கும் தடக்கையையும் உடையவன். அரசர்களுக்குப் போரில் துணையாகச் செல்பவன் முள்ளூர்க் கானத்துக்குத் தலைவன்.

வடுகர்: ஒரு சாதியினர்; கஞ்சங்குல்லையைத் தொடுத்துக் கண்ணியாக அணிபவர். இவர்களுடைய நாடு கட்டியின் நாட்டின் எல்லையிலுள்ளது.

விச்சிக்கோ: விச்சியரென்னும் குலத்திற் பிறந்தவன்; வில் கெழு தானையை யுடையவன். இவன் வேந்தரொடு குறும்பூரிற் பொருத செய்தி பரணராற் சொல்லப்படுகின்றது.

வேளிர்: கீழ்கடற்கரையதாகிய குன்றாரென்னும் ஊரிற் பண்டைக்காலந் தொடங்கி வாழ்ந்து வரும் ஒருவகை வேளிர் கூறப்படுகின்றனர்.

இடங்கள்

ஆறுகள் : காவிரி, சோணை.

ஊர்கள் : அஞ்சில், அரிசில், அள்ளூர், ஆர்க்காடு, ஆலங்குடி, ஆலத்தூர், இடைக்காடு, இருந்தை, உகாய்க்குடி, உரோடகம், உறையூர், ஐயூர், ஒக்கூர், கச்சிப்பேடு, கடம்பனூர், கடியலூர், கயத்தூர், கரவீரம், கருவூர், கழார், கள்ளில், காவிரிப் பூம்பட்டினம், கிடங்கில், கிள்ளிமங்கலம், குடவாயில், குறும்பூர், குன்றூர், கூடலூர், கோவூர், கோழி, சிறைக்குடி, செல்லூர், தண்கால், தொண்டி, பெருங்குன்றூர், பொன்மணி, மதுரை, மரந்தை, மாங்குடி, மாடலூர், முள்ளூர், மோசி, வாகைப் பறந்தலை, வெண்மணி, வெள்ளூர், வேம்பற்றூர் (வேம்பத்தூர்)

காடுகள் : முள்ளூர்க்கானம், வல்விலோரிக்குரிய கானம்.

மலைகள் : அரலை, இமயம், எழில், கொல்லி, பறம்பு, பொதியில்.

மக்கள் வாழ்க்கை நிலை

இந்நூற் செய்யுட்களிற் புலவர்கள் சார்த்துவகையாலும் உரிப்பொருளுக்கு உபகாரப்படும் வகையாலும் உணர்த்துகின்ற பல செய்திகள் அக்காலத்துத் தமிழ் மக்களுக்குரிய வழக்கங்கள், வாழ்க்கை நிலை, நாகரிகம், அரசியல், முதலியவற்றை ஒருவாறு அறிந்து கொள்வதற்குக் கருவியாக இருக்கின்றன.

அரசியல்

அரசன் செங்கோல் செலுத்தும் இயல்பினனாக இருந்தான். நிலப்பரப்பு நாடு, ஊர், சேரி, குடியென்னும் பிரிவுகளை யுடையதாக இருந்தது. மொழியின் வரையறையினால் தேசங்கள் பிரிக்கப் பட்டிருந்தன. தமிழ் வழங்காத பிறநாட்டை மொழிபெயர்தேயமென்று குறிக்கின்றனர். வடுகர் முதன்மையதாகிய ஆந்திரர் நாடு அந்நாளமே இந்நூலிற் குறிக்கப்படுகின்றது. அரசனது நீதி நெறியை முறை யென்பர். இளையனாகிய அரசன் பகைவர் சூழ்ச்சியால் இடுக்கணுற்றுப் பின் நட்பாளருடைய உதவியால் அரசுரிமையைப் பெறுவதும் அங்ஙனம் பெற்ற காலத்தில் தன் நட்பாளர் செய்த நன்றியை மறவாதிருத்தலும் பழைய வழக்கு. இதனைக் கபிலர் ஒரு பாட்டில் மறைமுகத்தாற் குறிக்கின்றார் (உஉடு.)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் குடிமக்கள் குறை களைக் கேட்டு அறிம் வழங்கினன். அங்ஙனம் வழங்கும்பொருட்டு அவனுக்கு உதவிபுரிய அறங்கூறவையமென்னும் நியாய சபை இருந்தது. அது பலசான்றோர்களைத் தன்பாற் கொண்டது. வழக் குடையார் அங்கே வந்து வெளிப்படையாகத் தமக்கு உண்டாகிய துன்பத்தைக் கூறுவர். தன்பாற் காதலுடைய தலைவியைப் பெறுத தலைவன் அறங்கூறவையத்தே தன் உரிமையை நிலை நாட்டுதல் வழக்கம்.

குற்றஞ் செய்தாரை அரசன் ஒறுத்தான். குற்றம் செய்தார் தம் நிறையளவு பொன்னைச் செலுத்தலும் யானைகளைத் தருதலும் தண்ட வகைகளிற் சில. கொலைத்தண்டனையும் சிறுபான்மை அக் காலத்தில் இருந்தது. ஆராயாது கொலைத்தண்டனை புரியும் அரசன் நரகில் வீழ்வானென்பது அக்காலத்தினர் கொள்கை. அவனைப் புலவர் வெளிப்படப் பழித்துரைப்பர்.

அரசர்கள் தம்முடைய நகரத்தில் காவல் மரமாக ஒன்றை வைத்து வளர்த்துப் பாதுகாப்பர்; அது கடிமரமெனப்படும். ஒவ் வோர் அரசருக்கும் அது வேறு வேறாக இருந்தது. நன்னனென்னும் ஓரரசனுடைய காவன்மரம் மா. ஓரரசனது நாட்டின்மேற் படை யெடுக்கும் மற்றோரரசன் முதலில் அவனது காவன்மரத்தை வெட்டி விட்டு நாட்டுட் புகுவான்.

தேர், யானை, குதிரை, வீரர் என்னும் நால்வகைப் படைகளை அரசர்கள் வைத்திருந்தனர். வீரர்களில் வாட்படை யுடையார், வேற்படை யுடையார், விற்படை யுடையார் முதலிய பிரிவு உண்டு. கேடகத்தையுடைய படையும் இருந்தது படைக்குத் தலைவன் ஏனாதி யெனப்படுவான்; சேனாபதியென்பதன் திரிபேஅது. பாண்டி யனுக்கு ஏனாதியாக இருந்த ஒருவர் இயற்றிய செய்யுள் ஒன்று (கருசு) இருக்கிறது. அரசர் பகையரசரோடு போர்புரியும் போது வேறு சிற்றரசர்களையும் துணையாகக்கொண்டு போர்புரிவர். வேந்தருடைய அதிகாரிகளே படையை நடத்திச்சென்று போர் புரிந்து வருதலும் வழக்கம். யானைப்படையைக் கொன்று வெற்றி பெறுதல் சிறந்த வீரமாகக் கருதப்பட்டது. அங்ஙனம் யானையைக் கொன்றபின் வீரன் இறந்தாலும் அதனாற் குறைவொன்றில்லை. அதிகன் அங்ஙனம் பட்டவனென்று சொல்லப்படுகின்றான்.

பகையரசருடைய நாட்டுப் பசுக்களை ஓட்டி வருதலும் அதனை மீட்டற்பொருட்டுப் பகையரசர் வருதலும் போருக்கு முன் நிகழும் நிகழ்ச்சிகள். போரில் அரசரும் வீரரும் அறநெறி பிறழாது நடுநிலை

மையில் நின்று பொருவர்; வஞ்சியாமல் எதிர் நின்று கொல்வர்; நுகம்படக் கடத்தலென்று புலவர் இயம்புவர்.

போரில் வெற்றிபெற்ற வீரர் அக்களிப்பினால் ஆரவாரம் செய்வர்; வெற்றி முரசு முழக்கப்படும் (கூஅம) அவ்வீரர் கள்ளை வீரபானமாக உண்பது வழக்கம்.

ஊரமைப்பு

ஊர்களிற் பலவகைத் தெருக்கள் இருந்தன அந்தணர் முதலிய பல்வேறு சாதியினரும் கைத்தொழிலாளரும் இனிது வாழ்ந்துவந்த வீதிகள் இருந்தன. அந்தணர் தெரு தூய்மையையுடையதாகவும் நாயில்லா வாயில்களையுடையதாகவும் இருக்கும் அதனை, "ஆகெறரு" என்று ஒரு புலவர் குறிக்கின்றார். பலர் கூடிக் கடவுளை வணங்கியும் பல செய்திகளைப் பேசியும் தங்குதற்குரிய மன்றங்கள் ஊரின்கண் இருந்தன. ஊரார் நீருண்ணுதற்கும் ஆடுதற்கும் ஆறில்லாத விடங்களில் ஊருக்கு அணிமையில் பொய்கைகள் இருந்தன. சில விடங்களில் கேணிகள் இருந்தன. ஊருக்கு அணித்தாகப் பொய்கையும் அதற்கு அப்பாற் சிறிது தூரத்தே கான்யாறும் இருப்பதாக ஒரு செய்யுள் கூறும். "யாம் எம் மயிருக்கு மண் தடவி நீராடற்கு அக்கான்யாற்றுக்கு வருவேம்" என்று ஒருத்தி கூறுகின்றாள். இதனால் ஊராரால் உண்ணப்படும் நீர் பொய்கையில் இருத்தலின் அதன்கண் நீராடல் பிழையென்று அவர்கள் எண்ணியிருந்தமை புலப்படும்.

அறம்

எல்லாச் சாதியினரும் விருந்தோம்புதலையே சிறந்த கடப்பாடாகக் கொண்டிருந்தனர். அந்தணருக்கு மேலாடு பொன் சொரியும் வழக்கம் இருந்தது வருபவர்களுக்கு வரையறையின்றி உணவிடுதல் குடிமக்கள் இயல்பு. இராக்காலத்தில், "புறத்தே யாரேனும் உள்ளீரோ?" என்று வினவி யாவரையும் அழைத்து உண்பிப்பர். ஈதலாகிய பேரறத்தை அக்கால மக்கள் பெரிய கடைப்பிடியாக மேற்கொண்டனர். இரவலர் வாரா நாளைப் பயனற்ற நாளாகக் கருதினர். ஒருவன் சபதம் செய்கையில், "இரவலர் வாரா நாட்கள் பல எனக்கு உண்டாகுக!" என்கின்றான்.

பொருள்

பொருளே அறத்தின்பொருட்டுத் தேடுதலே பண்டைப்பெரி யோர் கருத்து. தம் மூன்னோர்கள் ஈட்டி வைத்த செல்வத்தைச் செலவிடல் பிழையென்ற கொள்கையும், அந்தச் செல் வத்தை யுடையவனைச் செல்வனாகக் கொள்ளல் கூடாதென்ற கொள்கையும் "உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்" என்ற அடியால் விளங்குகின்றன. பொருளீட்டும் முயற்சியைச் செய்யாமல் வறியனாக இருத்தல் யாசகம் செய்தலினும் இழிவாகக் கருதப்பட்டது. தான் அரிதின் முயன்று ஈட்டிய பொருளால், தான் இன்புறுவதோடமையாமல் தன்பால்வந்த இரவலருக்கும் ஈந்து உபகரித்து வந்தான் இல்வாழ்வான். தம்மில்லில் இருந்து தம்மால் ஈட்டப்பட்ட பொருளால் அறத்தைச் செய்து இன்பத்தை நுகரும் அவ் வாழ்க்கையின் இனிமை மிகவும் பெரிதென்பது மூன்னோர் கொள்கை.

உணவு உடையாதியவற்றில் மிக எளிய அமைப்பையுடைய இல்லறத்தானுக்குப் பெருநிதி வேண்டுவதில்லை. 'ஈதலுந் துய்த் தலும் இல்லோர்க்கு இல்'லையாதலால் அவ்விரண்டுக்கும் ஓரளவு பொருள் வேண்டும்; அதனை எத்தகைய இடருற்றாலும் அவன் பொருட்படுத்தாமல் நாடியையிட்டும் காடியையிட்டும் சென்று தேடிவந்தான். மனிதனுடைய ஆசைக்கு அளவில்லையாதலின் தன் ஆசைக்கேற்பப் பொருளை நிரப்புதல் இயலாதென்பதை யுணர்ந்து (குகூ) வேண்டிய பொருளை அறத்தின் வழியே ஈட்டினான். அவனுடைய மனமறிந்து மனைவாழ்க்கை நடத்தும் மனைவியும் பொருளிற் கருத்துடையவளானாள். "இவள் வந்தபின் மூன் வறிய நிலையிலிருந்த இவ்வீடு விழாவையுடைதாயிற்று" என்று போற்றும் நிலைமையைத் தலைவி யடைந்தாளென்று ஒரு பாட்டுக் கூறுகின்றது. அவளது நல்லூழின் ஆற்றலால் அந்நிலை அமைந்ததென்பது ஓரளவு உண்மை. ஆயினும் ஒரு குடும்பம் விழாவுடையதாதல் வேண்டுமெனின் நிறைபொருளும் உவகை யுள்ளமும் வேண்டும். நிறைபொருள் உண்டாகச் செலவிற் சுருக்கமும் வரவுப் பெருக்கமும் இன்றியமையாதன. தற்கொண் டானது வளத்தக்காளாகிய மனைவி செலவு வகைகளை மட்டுப் படுத்தியும், தான் பிரிவால் துன்புறினும் தலைவனை அறங்கருதிப் பொருளீட்டும் முயற்சியில் ஊக்குவித்துப் பெருநிதி பெற்றுவரச் செய்தும் பொருள்பெருகுதற்குக் காரணமாயினள். யாவரிடத்தும் அன்பு பூண்டொழுகுதலினால் குடியிலுள்ளார் அனைவரும் மனங்

கலந்து பழகி அவளுடைய நல்லியல்பிற் கட்டுண்டு உவகை யுள்ளம் கொண்டனர். இவ்விரண்டு வகைபற்றியும் அவளால் விழா வுண்டாதல் புலப்படும்

ஆடவனும் சோம்பியிராது வினைமுயற்சியில் ஊக்கமுடைய வனாக இருந்தான்.

"வினையே யாடவர்க் குயிரே" (கஉரு)

என்பது அவன் கருத்து. அவனது நெஞ்சம் பொருளின்கண்ணே பிணிக்கப்படுதலின் பிரிவரிய தன் மனைவியையும் பிரியத் துணிந்தான். தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுதற்குப் பொருள் கருவியென்பதையும் அதனை யீட்டுதல் உலகத்துப்பண்பு (கூக) என்பதையும் உணர்ந்து மொழி வேறுபட்ட தேயத்துக்கும் அவன் சென்றான்; இங்ஙனம் வேறு பல இடங்களுக்கும் சென்று தன் முயற்சியில் நலமடைந்தான். பொருளீட்டி மீண்டு வருகையில் அவன் உள்ளம் நிறைவடைந்தது. "செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு" அப்பொருளைக்கொண்டு வாழ்ந்தான். அதனை வறிதே செலவிடாமல் தக்கபடி போற்றிவந்தமையின் அது, "கேடில் விழுப்பொருள்" (உகசு) ஆகியது. பொருளீட்டுதலிலும் அதனால் அறத்தைச் செய்தலிலும் இன்பத்தை அடைதலிலும் அப்பொருளைப் போற்றுதலிலும் அவன் சிறப்பெய்தினான்.

அக்காலத்தில் ஏழைமக்கள் ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை விலையாக ஈந்து பண்டமாற்றை மேற்கொண்டனர் செல்வர்கள் பொற்காசுகளைப் பெட்டிகளிற் சேமித்து வைத்தனர். அக்காசு வேப்பம்பழத்தைப்போல உருண்டை வடிவினதாக இருந்தது.

பசுக்களைப் பாதுகாத்து அவற்றிற் பெறும் பால் நெய் முதலிய வற்றை விற்று அவ்வூதியத்தினால் வாழும் மக்கள் பலர் இருந்தனர். அவர்களுடைய செல்வநிலை 'இத்தனை பசுவையுடைய குடி' என்று குறிப்பிடப்பட்டது. ஒரு வறிய குடியினருடைய வாழ்க்கை, "ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை" என்று சொல்லப் படுகின்றது. பசுக்களைக் கோதனமென்று வழங்குதல் இங்கே நினைத்தற்குரியது.

இங்ஙனமே நிலங்கள் பலவுடையாரை இத்தனை ஏருடையா ரென்பது வழக்கு. ஒருவனை, "ஓரேருழவன்" என்று ஒரு புலவர் குறிக்கின்றார்.

உழவும் வாணிகமும் கைத்தொழிலும் அக்காலத்தில் வாழ்க் கைக்குப் போதியனவாகவும் இன்பத்திற்கு உறுதுணையாகவும்

இருந்தன. பல சாதியினரும் மனமொன்றி ஒருவருக்கொருவர் துணைபுரிந்து வாழ்ந்து வந்தனர்.

சாதிகள்

அந்தணர் எழுதாக் கற்பாகிய வேதமோதலைச் செய்துவந்தனர். அவருள் பிரமசாரிகள் பலாசமரத்தின் கோலையும் கமண்டலத்தையும் விரதவுணவையும் உடையவராக இருந்தனர். அரசர் நெறிதிறம்பாமல் அரசுபுரிந்தனர். வாணிகருள் உப்பு வாணிகரும் வளைவிற்பாரும் சொல்லப்படுகின்றனர். இடையர், வலைஞரென் பாரைப் பற்றிய செய்திகள் பல. கொல்லரது உலைக்கல்லும் பொற்கொல்லர் பொன்னை உரைக்கும் கட்டளைக்கல்லும் மிதிதோலும், கரிக்குறடும், பொற்காசிற் கம்பியைக் கோக்கும் செயலும் புலவர்களாற் சொல்லப்படுகின்றன. சிறு பிள்ளைகளுக்குச் சிறு வண்டிகளைத் தச்சர் செய்து தந்தனர். வண்ணத்தி ஆடையைக் கஞ்சியில் தோய்த்து நீர்த்துறையில் துவைத்தாள். கூத்தர் முழவை ஒலித்தனர். ஆரியக்கூத்தரென்னும் வகையினர் கயிற்றின்மீது ஏறிப் பறைகொட்டி யாடினர்

பாணர் யாழ்வாசித்து உபகாரிகளிடம் பொற்பூவைப் பரிசிலாகப் பெற்றனர் சிலர் ஒருகண்மாக்கிணையை முழக்கினர். மன்றங்களிலும் போர்க்களத்திலும் அவர் காணப்பட்டனர். மீன் பிடித்துத் தமக்குரிய மண்டையென்னும் பாத்திரத்திற் சொரிந்து வைத்தனர். தலைவனிடமிருந்து தலைவிபால் தூதாகச் சென்றனர்.

ஆடவர்

ஆடவர் முயற்சியும், மனவலியும், உடலுரமும் பொருந்தி விளங்கினர். வீரர்கள் கழலையணிந்தனர்; சந்தனத்தையும், மலர் மாலைகளையும் அணிந்து உலவந்தனர். விழாக்களில் மகளிர் ஆடும் குரவையில் மள்ளர் தலைக்கை தந்தனர்.

மகளிர்

இவர்களுள், பேதை மகளிர் பந்தாடுகின்றனர், பாவையொடு விளையாடுகின்றனர். கன்னி மகளிர் பிறையைத் தொழுகின்றனர். நீராடுதலிலும், பொழில் விளையாடுதலிலும், அலவனாட்டுதலிலும் கிளிவளர்த்தலிலும் மகளிர்க்கு விருப்பம் மிகுதியாக உள்ளது.

மரங்களிலிருந்து பூவைக் கொய்தும், கொய்த பூவைச் செப்புக் களிற் சேமித்துவைத்தும், தாமே முல்லைக்கொடியை வளர்த்தும் மலரின்பாலுள்ள தம் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றனர்.

நீராடும்பொழுது சிலர் எண்ணெய்போகக் களிமண்ணை யிட்டுப் பிசைந்தும், நீராடியபின் அகிற்புகையாலும் சந்தனப் புகையாலும் கூந்தலை உலர்த்தியும், எண்ணெய் தடவி வாரிப் பூவணிந்தும் தம் கூந்தலை அலங்கரிக்கின்றனர்.

மணம் புரிந்த மகளிர் சிலம்புகழி நோன்பு இயற்றுவர். தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் விரைவில் வரும்பொருட்டுத் துர்க்கையை வணங்குவர்; அவர் கூறிச்சென்ற நாட் கணக் கைச் சுவரிற் கோடிட்டுப் பார்த்து அறிவர்.

கருப்ப முதிர்ந்த மகளிர் புளிச்சுவையை மிகுதியாக விரும்பு கின்றனர். பன்னிரண்டு மாதம் கருப்பம் முதிர்தலை ஒரு புலவர் சொல்லுகின்றார்.

விழாவில் மகளிர் துணங்கைக்கூத்தாடிக் களிப்பர். உரலில் தானியங்களை இடிக்கும்போது வள்ளைப் பாட்டைப் பாடுவர்.

அவர்கள் இனிய உணவுகளை அடுவதில் திறமையையும் தலைவர் மனங்கோணுவாறு ஒழுகும் இயல்பையும், இணையற்ற அன்பையும், தெய்வக் கற்பையும் உடையராகி வீட்டிற்கும் நாட்டிற்கும் புகழை உண்டாக்குவர்.

நிமித்தங்கள்

அக்காலத்தார் பார்க்கும் நிமித்த வகைகளிற் சிலவற்றை இதிற் காணலாம். பாலை நிலத்திற் செல்வார் ஓந்தியை நிமித்தப் பொருளாகக் கொள்வர். நிமித்தம் புள்ளெனக் கூறப்படுகின்றது. முதலிற் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் வழக்கம் உண்டாயின மையின் அப்பறவையைக் குறிக்கும் புள்ளென்னும் பெயரால் அது வழங்கப் பெற்று, அப்பால் வேறு பலவகை நிமித்தங்களுக்கும் அதுவே பெயராக வழங்கலாயிற்றென்று தோற்றுகின்றது;

> “ .....ஓதி முதுபோத்
> தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்” (கசo)

என்பதில் இவ்வோந்தி நிமித்தத்தையும் புள்ளென்றே வழங்குதல் காண்க; பறவைகளால் நிமித்தம் பார்த்தலை,

> “குருகு மிருவிசும் பிவரும்” (உசo)

என்னும் செய்யுட்பகுதி அறிவிக்கும். காக்கை கரைந்தால் விருந் தினர் வருவரென்பது நம் நாட்டினர் கொள்கை. ஒரு பெண்

புலவர் அங்ஙனம் விருந்துவரக் கரைந்த காக்கையை நன்றியறி வோடு பாராட்டி யிருக்கின்றார். மகளிருக்குத் தோள்வளை செறிதல் ஒரு நன்னிமித்தம். புள், விரிச்சியென இரண்டும் ஒரு பாட்டிற் கூறப்படுகின்றது. விரிச்சியென்றது நற்சொல். அதனை இக்காலத்திலும் 'அசரீரி வாக்கு' என்று வழங்குவர்.

வழக்கங்கள்

பொதுவாக நாட்டு மக்களிடத்தே காணப்படும் சில வழக்கங்களை இந்நூலால் அறிய இயலும் அவற்றிற் சில இக் காலத்திற் காணப்படாதன; சில காணப்படுவன. பறையும் சங்கும் ஆர்ப்ப மணம்புரியும் ஒரு வழக்கம் சொல்லப்படுகின்றது. சுடலையைக் கண்டு அகன்று செல்லுதல், கலத்திற் பால் கறத்தல், முன்றிலில் தானியத்தை உலர்த்துதல், முதியோர் சென்று மணம் பேசுதல், உயர்ந்த இடத்திலேறிப் பார்த்தல், பிறையைத் தொழுதல் முதலியன சில வழக்கங்கள் ஒருவருடைய அச்சத்தைப் போக்கும்பொருட்டு அவரது நுதலை வீவுதல் பழைய வழக்கம்.

துன்புற்றவர்கள் அத்துன்பவுணர்ச்சி தாங்கமாட்டாமல் முட்டிக்கொள்ளுதலும், ஏதேதனும் ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு ஓவெனப் புலம்புதலும், இன்புற்றவர்கள் உவகையினாற் கண்ணீர் விடுதலுமாகிய குணத்தன்மைகளைப் புலவர்கள் புலப்படுத்தி யிருக்கின்றனர்.

துயரத்தினால் உண்டாகும் கண்ணீர் வெம்மையையுடைய தாகு மென்பதும், உத்தம ஆடவர் மேனி முல்லையின் நறு மணத்தை யுடையதாக இருக்குமென்பதும் அரிய செய்திகள்.

கருவிகள்

நாகரிக வாழ்வையும் கைத்தொழிற் சிறப்பையும் புலப் படுத்தும் பலவகைக் கருவிகளும் பொருள்களும் இடையிடையே சொல்லப்படுகின்றன வீரர்களுக்குரிய படைக்கலங்களும் அவ்வச்சாதியினர்க்குரிய கருவிகளும் முன்னர்ச் சொல்லப் பட்டன. உடைவகைகளில் கலிங்கமென்பது ஒன்று குறிஞ்சி நிலமகளிர் உடுக்கும் தழையுடையொன்று. முருகக்கடவுளுக்குரிய செங்நிற உடுக்கை கடவுள் வாழ்த்திற் சொல்லப்படுகின்றது.

அரசனுக்குரிய சிங்காதனத்தைக் கட்டிலென்பர். மகளிர் விளையாடுதற்குப் பந்தும் பாவையும் பயன்பட்டன. பாவைகள் பூந்தாதினாலும் பஞ்சாய்க் கோரையாலும் செய்யப்பட்டன. செல்வர் வீடுகளில் இளமகளிர் பொற்கலத்தே பாலை உண்டனர். மக்கள் கண்ணுடிக் குப்பிகளில் கள்ளை வைத்தனர். குளிர்காலத்தில் உண்ணும் பொருட்டு வெந்தீரை ஆறுமற் பாதுகாத்து வைத்தற்குரிய செப்பொன்றிருந்தது. அது சேமச்செப்பு என்று சொல்லப்படுகின்றது. குறிய கால்களையுடைய கட்டிலும், அதன் மேல் நூலால் தொடுக்கப்பட்ட பூமாலைகள் மலர்கள் அணைகளென்பவை செறிந்த படுக்கையும் செல்வர் வீடுகளில் அமைந்திருந்தன.

ஊர்திகள்

வாகனங்களுள் உப்பு வாணிகருடைய மூடா வண்டிகள் ஒரு சார் காணப்படுகின்றன. வீரரும் பிறரும் ஊரும் தேர்கள் ஒரு பால் உள்ளன. வெள்ளிய தந்தத்தாற் செய்யப்பட்ட தேர்கள் சிறந்த குதிரைகள் பூட்டப்பெற்று நிற்கின்றன. தேரின் பக்கங்களில் பொன்னுற்செய்த தகடுகள் தைக்கப்பட்டும், முன்னே தாமரை மொட்டுப் போன்ற வடிவமுள்ள கொடுஞ்சி அமைக்கப்பட்டும் உள்ளன. வேறு பல வகையான அலங்காரங்களையும் இழைகளையும் அத்தேரிற் காண்கிறோம் அதன் சக்கரங்களிற் கூடப் பொன்னாலாகிய கூட்டு இருக்கின்றது. தேர் வரும்போது அதிற் கட்டப்பட்ட மணிகள் ஒலிக்கின்றன.

நீரில் விளையாடுதற்குரிய புணைகளும், கடலிற் செல்லுதற்குரிய திமிலும், கலமும் (கப்பலும்) சொல்லப்படுகின்றன. ஒருமலை மாலைப் பொழுதில் இருளில் மறைவதற்கு உவமையாகக் கப்பல் கடலில் ஆழ்வதை ஒரு புலவர் கூறுதலின் கப்பல் பெரியதாக இருக்கவேண்டு மென்று தெரியவருகின்றது.

உணவு வகை

தேவர்களுடைய உணவாகிய அமிழ்தமே யாவற்றினும் சிறந்ததென்ற நினைவு அக்காலத்தும் இருந்தது. அதனை அரும்பெறலமிழ்தம் என்று குறிக்கின்றனர். வயிறுரச் சுவைத்துண்ணும் உணவை ஆர்பதமென்றும், வைத்திருந்து விலங்குகள் உண்ணும் உணவை அல்கிரை யெனவும், காக்கைக்கிடுவதைப் பலியெனவும்,

கடவுளுக்கு நிவேதிப்பதை மடையெனவும் கூறுவர். பாலும் நெய்யும் கலந்த உணவுகள் பல சொல்லப்படுகின்றன. கதிரிலுள்ள பச்சை நெல்லைக்கொண்டு இடிக்கும் பாசவலும், நெற்பொரியும், வெல்லக்கட்டியும் சிலவகை உணவுகள். தயிரைப் பிசைந்து தாளித்துச் செய்யும் ஒருவகைக் குழம்பை, "தீம்புளிப்பாகர்" என்று குறிக்கின்றனர். பொரியோடு கலந்து பாலை இளைஞர் உண்டல் வழக்கம் (நருகூ.) உண்பாரது தகுதிக்கேற்ற உணவுகள் புலவர்களாற் கூறப்படுகின்றன. காக்கைக்கு வெண்ணெற்சோறும் நெய்யும் இடுவதும், அறிவருக்குச் செந்நெற்சோறும் நெய்யும் இடுவதும் இதனை வெளிப்படுத்தும்; பாணனுக்குரிய உணவாக நெய்யிற் பொரித்த குறும்பூழ்ப் பறவையாகிய வியஞ்சனம் சொல்லப்படுதலும் காண்க.

உணவுக்குரிய பொருள்களாகிய நெல், வரகு, தினை, மொச்சை, கள் என்பனவற்றைப் பற்றிய செய்திகள் பல. கள் ளென்பதை மயக்கத்தைத் தரும் தென்னங்கள்ளென்றே கொள்ளுதல் தக்கதன்று. அரசர்களும் வேறு சிறந்த வாழ்க்கைநிலையை யுடைய மக்களும் இதனை நுகர்வாரென்பதை ஆராய்கையில் அவர்களுக்கு மனவெழுச்சியைக் கொடுக்கும் பானவகையென்றே கொள்ளுதல் வேண்டும்.

கள்ளில் நெல்லாற் செய்த கள்ளும், பனங்கள்ளும், இனிமை யும் வெப்பமுமுடைய கள்ளும், தேனாலாகிய ஒருவகைக் கள்ளும் மக்களுக்கு உணவாகச் சொல்லப்படுகின்றன. அதனைக் கண்ணுடிக் குப்பிகளிற் சேமித்து வைப்பர்; அவற்றின் வாய் குறுகியும் ஏனைப்பகுதி அகன்றும் இருக்கும்;

> "மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
> இட்டுவாய்ச் சுனைய"

என்னும் அடிகள் இச்செய்திகளை அறிதற்குக் கருவியாக உள்ளன.

உரை

பொய்ம்மொழி புகலுதல் அறவே ஒழிக்கத் தக்கதென்பது மக்களுடைய முதற் கொள்கை. ஒருவர்பாலுள்ள விருப்பத் தால் உள்ளதை மறைத்துக் கூறுதலை அவர்கள் வெறுத்தனர். அறிந்த செய்தியைப் பொய்த்துக் கூறுதல் ஆன்றோர்கள்பால்

இல்லை. அங்ஙனம் தீதுமொழிந்தார் தக்காராகார். உண்மையைப் போலத் தோற்றும்படி பொய்யைச் சொல்லுதலும் பிழை;

"வாய்போற் பொய்ம்மொழி கூறலஃ தெவனே" (உருக)

என்பது காண்க. நன்மையைத் தருவதாகிய உண்மையைக் கூறுதற்குச் சிறிதும் அஞ்சார்;

"நன்மொழிக் கச்ச மில்லை" (கூகூ)

என்பதே அவர்கள் கருத்து. பயனுடைய மொழியை நல்லுரையாகவும் பயனற்ற மொழியைப் புல்லுரையாகவும் கருதினர். இனிமையோடு பேசுதலையே அவர்கள் விரும்பினர். இன்னகிளவியை அகற்றினர். பிறரைப் பழித்தலையும் வெறுத்தனர்.

பேசும்பொழுது ஆராய்ந்து பேசுதலே சிறந்தது; "தெரிதிங்கிளவி" என்னுந் தொடர் இதனைக் குறிக்கின்றது. நெஞ்சில் நன்மையையே நினைத்துப் பேசவேண்டும்; "தீதி னெஞ்சத்துக்கிளவி" என்பது இக்கருத்தைத் தோற்றுவிக்கின்றது. அழகிய சொற்களால் இனிமை தோன்றப் பேசவேண்டும்; "அந்தீங்கிளவி" யென்னும் தொடர் இதனைத் தெரிவிக்கின்றது. மெல்லென இனிமைபெறக் கேட்போர் விரும்பும்வண்ணம் பேசும் உரைகளை "மெல்லிய வினிய மேவரு தகுர" என ஒரு புலவர் குறிக்கின்றனர் இவற்றால் வஞ்சகமில்லா நெஞ்சத்தோடு எண்ணி ஆராய்ந்து அழகிய சொற்களால் இனிமையும் நன்மையும் உண்டாகும்வண்ணம் உண்மையும் பயனும் உடைய சொற்களைப் பிறர் விரும்பிக் கேட்கும் முறையிற் பேசும் மொழிகளை சிறந்தவையென்று பழம்புலவர்கள் எண்ணிய எண்ணம் புலப்படுகின்றது.

இசையைப்பற்றியும், இசை இசைக்கருவிகளைப் பற்றியும் சில செய்திகள் இந்நூலில் உள்ளன.

தோற்கருவிகளில் தண்ணுமை, தொண்டகம், பதலை, முரசு, முழவென்பன இதில் வந்துள்ளன. இவற்றுள் கொண்டகப்பறை குறிஞ்சிநிலத்தாருக்குரியது (கூஎடு) துளைக்கருவியுள் குழலின் இசை வங்காவென்னும் பறவையின் ஒலிக்கு உவமையாகின்றது. பண்களுள் படுமலைப்பாலையின் உச்ச விசையும் நெய்தற்குரிய விளரிப் பண்ணும் உவமைகளாக ஆளப்படுகின்றன. பாட்டுக்களுள் குன்றம் பாடும் பாட்டும் உலக்கைப்பாட்டாகிய வள்ளையும் மகளிராற் பாடப் படுவனவாகும்.

நீதிகள்

அறம் பொருள் இன்பம் வீடு பற்றிய நீதிகள் அங்கங்கே அமைந்து விளங்குகின்றன. பெரிய உபகாரம் செய்தால் அவரை யாவரும் விரும்புவரென்பது,

"பெருநன் முற்றிற் பேணரு முளரே" (ககரு) என்பதனாலும் அறத்தாற் புகழ்பெற விரும்புவார் பொருளைச் சேமித்து வையா மல் ஈவாரென்னும் கருத்து,

"நல்விசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்று" (கசஉ) என்பதனாலும்,

சான்றோர் அறநெறியே செல்வரென்பது,

"திறவோர் செய்வினை யறவ தாரும்" (உசள) என்பதனாலும் சான்றோர் தம்மைப் புகழ்ந்தால் நாணமடைவாரென்பதும் பழியைப் பொருரென்பதும்,

"சான்றோர், புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ" (உருஉ) என்பதாலும்

வறியவருக்கு ஈந்து அன்புடையராயிருத்தலே நன்றென்பதும் அங்ஙனம் இராமை நன்றன்றென்பதும்,

"நல்கின் வாழு நல்கூர்ந் தோர்வயின்
நயனில ராகுத னன்றென வுணர்ந்த
குன்ற நாடன் றன்னினு நன்று" (கூஉள) என்பதாலும்

ஒருவருக்கு வழங்கிய பொருளை மீட்டும் பெறுதல் இழிவென்ற நீதி,

"இடுக்க ணஞ்சி யிரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவென் சொல்லினும்
இன்ன தோரம் மின்னுயி ரிழப்பே" (கசகூ) என்பதாலும்

கடமையை யுணர்ந்தவர்கள் சான்றோரைக் கண்டால் இடங் கொடுத்து வரவேற்பரென்னும் செய்தி,

"தாமறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடனறி மாக்கள் போல விடன்விட்டு" (உசூரு) என்பதாலும்

வெளியாகின்றன. இவை அறம் பற்றிய நீதிகள்.

"இல்லோ னின்பங் காமுற் றுங்கு" (கஉ0)
"இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவு" (உஅக)

என்பன வறுமையின் இழிவைப் புலப்படுத்துவன.

"உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்" (உஅக),
"வினையே யாடவர்க் குயிரே" (கஉரு)

என்பவை முயற்சியின் இன்றியமையாமையை அறிவுறுத்து கின்றன.

" .....இனத்தி னியன்ற
இன்ஞ மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ணூடே " (உஅஅ),
" மருவி னினியவு முளவோ " (கூஉ)

என்பவை நட்பின் பெருமையை எடுத்துரைக்கின்றன.

" நில்லா மையே நிலையிற்று " (கசஎ)

என்பது நிலையாமையைக் கூறுகின்றது

இலக்கணச் செய்திகள்

நால்வகைச் சொற்கள்

சில முறைப் பெயர்கள் இடத்திற்கேற்ற மரபையுடையன; யாயென்பது தன்மையிடத்துக்கும் ஞாயென்பது முன்னிலைக்கும் தொடர்புடைய முறைப்பெயர்களென்று தெரியவருகின்றது (சஅ)

வினையெச்ச உருவங்களில் செய்யிய, செய்யியரென்னும் வாய்பாடுடைய சொற்கள் பல அளபெடையோடு காணப்படுகின்றன செய்பு, செய்ம்மாரென்னும் வாய்பாட் டெச்சங்களும் வந்துள்ளன. குடியென்னும் வினையடியாகப் பிறந்த செய்யியவென்னும் வாய்பாட்டெச்சம் குடீஇயவென விருத்தல் முறை; இந்நூலில் குடிக்கியவென (கூருசு) வந்துள்ளது. அதற்குக் குடித்தியவென ஓரபாடம் காணப்படுகின்றது

இனை, சின் என்னும் இரண்டு இடைச்சொற்கள் பல விடங்களில் ஆளப்படுகின்றன. அவற்றுள, இசினென்பது "வழிபடல் சூழ்ந்திசின்" (கக) என்பதுபோலத் தன்மையிலும், சின்னென்பது "உரைத்திசின்" (சூஉ) என்பதுபோல முன்னிலையிலும் பல விடங்களில் அமைந்துள்ளன. அழேனேவென்னும் பொருளில் "அழாற்கோ" (ககூஉ) என ஓர் அரும்பதம் இந்நூலில் மட்டும் காணப்படுகின்றது

வடசொற்கள்

வடசொற்கிளவிகள் வடவெழுத் தொருவித் தமிழெழுத்தைப் பெற்றும் தமிழுக்கு ஏற்ற விகாரங்களை யடைந்தும் வேறு பலவகையில் திரிந்தும் வழங்குகின்றன அவை வருமாறு.— அகில், அச்சிரம், அமயம், அமிழ்தம், அரசன், அவை, ஆரியர், இமயம், உலகம், ஏமம், கடிகை, கமண்டலம், கலாவம், காமம், காலம், குணன், சுவனை, சகடம். சூலி, சேமம், சேரி, தண்டு, தாது, தூது, தெய்வம், நகர், நீலம், நேமி, பக்கம், பணிலம், பருவம்,

பலி, பவழம், பிச்சை, மண்டிலம், மணி, மதம், மதி, மாலை, முகம், முத்து, முரசு, யாமம், வாசம் முதலியன. இவற்றிற் சில வற்றைத் தமிழேனவே கொள்வாரும் உளர்.

உவமை

வினை பயன் மெய் உருவென்னும் நால்வகை யுவமைகளும் பல விடங்களில் உள்ளன. உவமையின் நயம் சங்க நூல்களிற் போலப் பிற்கால நூல்களிற் காணல் இயலாது.

உவமையும் பொருளும் ஒரே இடத்திலுள்ளனவாகச் சில உவமங்கள் கூறப்படுகின்றன; பாலை நிலத்திலுள்ள பல்லியின் ஒலிக்கு அந்நிலத்திலுள்ள மறவர் அம்பை உகிர் நுதியிற் புரட்டும் ஓசையை உவமை கூறுதலும் (கசு), அகவன் மகளுடைய நரைமயிருக்கு அவளணிந்த மனவுக் கோப்பையே உவமையாக்கு தலும் (உஙு), மலைமேலுள்ள இற்றியின் வேருக்கு அங்குள்ள அருவியை உவமையாக அமைத்தலும் (கஂசு), ஒரு குறமகளின் கண்ணுக்கு அவளுடைய தமர் எய்த அம்பை உவமித்தலும் (உஎஉ) இவ்வகையைச் சார்ந்தவை.

கூற்றுடையார் தாம் அறிந்த உவமையைக் கூறுதல் இயல்பு; மலையில் வாழும் தோழி தலைவியின் காமத்துக்குப் பலாப்பழத் தையும் (கஅ), குறிஞ்சி நிலத்தலைவி தான் ஆற்றியிருத்தலுக்குக் கிளியுண்ட கூழைத்தினை தழைத்தலையும் (கஙஙு) உவமையாக இயம்புதல் இத்தகையதே யாகும்.

கேட்பார் தெளிவதற்கேற்ற உவமையைக் கூறுதல் ஒருவகை. பரத்தையிற் பிரிந்துவந்த மருத நிலத்தலைவனுக்குத் தம் நிலையைப் புலப்படுத்த வந்த தோழி,

> "கைவினை மாக்கடஞ் செய்வினை முடிமார்
> சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்பட
> நீடின வரம்பின் வாடிய விடினும்
> கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்னுதை
> பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கும்
> நின்னூர் நெய்த லினையேம் பெரும" (கூஙு)

என்று கூறுதல் இதற்கேற்ற உதாரணமாதல் காண்க. அன்ன, அனைய, ஆங்கு, இன், இன்ன, ஏய்க்கும், ஒத்து, கடுப்ப, புரையும், போல், மருள், மானும் முதலிய உவம உருபுகள் செய்யுட்களில் வந்துள்ளன.

பாடினோர் வரலாறு

(கு - பு) பாடினோர் பெயருக்கு அடுத்தாற்போல் ( ) இந்த நகவலவுக்குள் இருக்கும் எண் அவர் இயற்றிய குறுந்தொகைச் செய்யுளைக் குறிக்கும்.

அஞ்சிலாந்தையார் (294) :—அஞ்சில் என்பது ஓர் ஊர். ஆதன் தந்தையாரென்னும் தொடர்மொழி ஆந்தையாரென்று மருவிற்று. அஞ்சில் என்னும் ஊரினராதலின் இவர் அஞ்சிலாந்தையாரென்னும் பெயர் பெற்றார். இவர் குறிஞ்சி, நெய்தல் வளங்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைவன் கனவில் தலைவியோடு கடலாடுதலும், தலைவி ஆயத்தோடிருக்கையில் அவளுடன் குரவையாடுதலும் அதன் காரணமாக அலரெழுதலும் இவர் வாக்கிற் காணப்படும் செய்திகள். இவர் மகளார் நாகையாரென்பாரும் இவரை யொப்ப நல்ல புலமை வாய்ந்தவர் இவர் பெயர் சில பிரதிகளில் அஞ்சியாந்தையா ரென்றும் காணப்படுகிறது. இவர் பாடிய வேறு செய்யுள் நற்றிணை, 233 வேறு அடை மொழிகள் கொண்ட ஆந்தையார் பலர் உளர்.

அண்டர் மகன் குறுவழுதியார்(345) :—தொகை நூல்களுள் குறுவழுதியார் என்று ஒரு பெயர் வருகிறது. இவ்விரு பெயரினரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. வழுதி யென்ற பெயரால் இவர் பாண்டிய மரபினரென்பது போதரும். மேலே குறித்த குறுந்தொகைச் செய்யுளையன்றி, இவர் புறநானூற்றில் 346 - ஆம் செய்யுள் இயற்றியதாகவும், குறுவழுதியார் என்பவர் அகநானூற்றில், 150, 228-ஆம் செய்யுட்கள் இயற்றியனவாகவும் உள்ளன. இவர் வாக்கில் வந்துள்ள "கல்வி யென்னும் வல்லாண் சிறு அன்" (புறநா 346) என்பது பாராட்டற்பாலது.

அணிலாடு முன்றிலார் (41) :—இவரது இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. மக்களின் நடமாட்டமில்லாத முற்றத்தில் அணில் ஓடிக்கொண்டிருக்கும். தலைவன் பிரிந்தபோது பொலிவிழந்த தலைவிக்கு மக்கள் போகிய அணிலாடு முன்றிலையுடைய இல்லத்தை உவமை கூறினமையின் இவர்

பெயர் இங்ஙனம் அமைந்தது. எட்டுத் தொகையுள் இக் குறுந்தொகைச் செய்யுளே யன்றி வேறொன்றையும் இவர் இயற்றியதாகத் தெரியவில்லை.

அம் மூவன், அம் மூவனார்:—(49, 125, 163, 303, 306, 318, 327, 340, 351, 397, 401) இந்த இருவரும் ஒருவரே. நற்றிணை, 18-ஆம் செய்யுளிலும், புறநானூறு 209-ஆம் செய்யுளின் பின்னுள்ள வாக்கியத்திலும் மூவனென்று ஓர் உபகாரியின் பெயர் வந்திருத்தலால் மூவனென்ற பெயரொன்று பண்டைக் காலத்தில் வழங்கி வந்ததென்று தெரிகிறது. இவர் நெய்தற் றிணையில் மிகப் பயின்றவர். அதன் வளங்களை விளங்கப் பாடுதலில் மிக்க ஆற்றலையுடையவர். சேரன், பாண்டியன் என்னும் முடியுடை வேந்தர் இருவராலும் திருக்கோவலூரை ஆண்ட காரி யென்னும் வள்ளலாலும் ஆதரிக்கப் பெற்றவர். சேர நாட்டுக் கடற்கரைப்பட்டினமாகிய தொண்டியும் அந் நாட்டின் கண்ணதாகிய மரந்தையும் பாண்டி நாட்டுக் கடற் கரைப்பட்டினமாகிய கொற்கையும், நடு நாட்டின் கண்ண தாகிய கோவலூரும் இவராற் பாராட்டப் பெற்றிருத்தலின் இவர் அந்நகரங்களில் இருந்தவரென்றும் இவர் காலத்தில் அவைகள் மிக்க விளக்க முற்றிருந்தன வென்றும் கொள்ள லாம். அகநானூற்றிற் பெண்ணை யாற்றை இவர் சிறப்பித்திருக் கிறார். 'கடலினும் நட்பு பெரியது' (ஐங். 184), 'எப்பொழுதும் மொழியத் தக்க சொற்கள் மெல்லிய வினிய மேவருதகுந', 'நல்கூர்ந்தார் வயின் நயனில ராகுதல் தகாது' என்பன இவர் எடுத்துக் காட்டும் சில நீதிகளாகும். ஐங்குறு நூறு, கிழவற்குரைத்த 13-ஆம் பத்தில் தலைவி மிக்க இளமையுடை யாள் என்றதற்கேற்ப அவளுடைய பேதைப் பருவ வினை யாட்டுக்களை அழகாக உரைத்திருத்தல் படித்து இன்புறற் பாலது. தலைவன் தன் நாட்டையும் கொடுத்துத் தலைவியை மணக்கத் துணிந்தனன் என்று தலைவியின் பெறற்கருமையை இவர் பாராட்டியிருக்கிறார்; ஐங்குறு. 147. எட்டுத் தொகையில் இவர் இயற்றிய வேறு செய்யுட்கள் - 116 (நற்றிணை-10; ஐங்குறுநூறு, நெய்தல்-100; அகநானூறு-6.)

அரிசில்கிழார் (193):— கொள்ளிடத்தின் வடபால் அரியிலூர் அல்லது அரியில் என்று வழங்கும் ஓரூரின் பெயர் அரிசில் என்பதன் மரூஉவாகக் கருதப்படுகின்றது; "அரிசிற்கரை" என்று மைஸூர் ஸம்ஸ்தானத்திலும் ஓர் ஊர் உள்ளது.

கிழார் - உரியவர். கிழாரென்பது வேளாளர்க்கேயுரிய சிறப்புப்பெயராக இருந்ததென்று தெரிதலின், இவர் வேளாண் மரபினராக இருத்தல் கூடும். இஃது, "ஊரும் பேரும்" (தொல். மரபு. 74) என்னும் சூத்திரத்தின் உரையிற் காட்டிய பெயர்களாலும், திருத்தொண்டர்புராண வரலாற்றின் 2-ஆம் செய்யுளில் எடுத்துக்காட்டிய பெயர்களாலும் அறியலாகும். கடையெழுவள்ளல்களுள் ஒருவனாகிய பேகனைப் பாடியிருத்தலின் இவர் அவன் காலத்தினராக நினைக்கப்படுகின்றார்; அவனால் துறக்கப்பட்ட கண்ணகி யென்பவளை அவனோடு சேர்த்தல் வேண்டி அவனைப் பாடினர்; இந்தக் கண்ணகி சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட கண்ணகியல்லள். அதியமான் தகடூர்பொருது வீழ்ந்த எழினியின் பிரிவாற்றாது வருந்தி இவர் புலம்பினர்; பதிற்றுப்பத்தில் எட்டாம்பத்தைப் பாடித் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையிடம் ஒன்பது நூறாயிரங் காணம் பரிசில்பெற்று அவன்பால் அமைச்சுத் தொழில் பூண்டு விளங்கியவர். தகடூர்யாத்திரை யென்னும் நூலில் இவராற் பாடப்பட்ட பாடல்களும் சில உள்ளன வென்பது தொல்காப்பியப் புறத்திணையியலில் 8, 12 - ஆம் சூத்திரமுதலியவற்றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் விளங்குகின்றது. திருவள்ளுவமாலையிலுள்ள, "பரந்த பொருளெல்லாம்" என்னும் 13 - ஆம் செய்யுள் இவரியற்றியதாகக் கூறப்பட்டிருத்தலின், திருவள்ளுவர் காலத்தினராகிய கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராக இவரைச் சொல்லுதற்கு இடமுண்டு. இவர்பெயர் அரியில்கிழாரென்றும் வழங்கும். புறநானூற்றில் இவராற் பாடப்பெற்ற குதிரைமறம், தானை மறம், பேய்க்காஞ்சி, மகட்பாற்காஞ்சி என்னும் துறைகள் அறிந்து இன்புறற்பாலன. பதிற்றுப்பத்து, 8 - ஆம் பத்தின் இறுதியில் அமைந்திருக்கும் "பாடிப்பெற்ற பரிசில்: தானும் கோயிலாளும் புறம்போந்து நின்று கோயிலிலுள்ள வெல்லாம் கொண்மினென்று காணம் ஒன்பது நூறாயிரத்தொடு அரசு கட்டிற் கொடுப்ப அவர் யான் இரப்ப இதனை ஆள்க வென்று அமைச்சுப்பூண்டார்" என்னும் வாக்கியத்தால் இவருடைய குணவிசேடங்களும் மேம்பாடும் விளங்கும்; (கோயிலாள் - பட்டத்தேவி; காணம் - ஒருவகைப் பொற்காசு; அரசு கட்டில் - சிங்காதனம்; அமைச்சு - மந்திரி வேலை.) மேற்கூறிய சேரவரசனும் உக்கிரப்பெருவழுதியும் பேகனென்னும் வள்ளலும் அதியமான் தகடூர்பொருதுவீழ்ந்த எழினியும்

இவர்காலத்தவர். இவருடனிருந்த புலவர்: கபிலர், பரணர், பெருங் குன்றூர்கிழார், பொன்முடியார் முதலியோர். எட்டுத் தொகையில் இவர் இயற்றியுள்ள வேறு செய்யுட்கள் 17 (பதிற்றுப்பத்து - 10, புறநானூறு - 7.)

அழிசி நச்சாத்தனர் (271):—அழிசி என்ற சிற்றரசனொருவன் ஆர்க்காடு என்ற ஊரையுடையவன் என்பது இந்நூல் 258, நற்றிணை, 190 - ஆம் செய்யுட்களால் தெரியவருகிறது. 'ந', என்பது சிறப்புப்பற்றி வந்தது. "ஒருநாள் நட்புப் பூண்டேன்; அது பலநாள் எனக்குத் துன்பம் தருவதாயிற்று" என்று தலைவி தலைவனது பரத்தைமையைக் குறிப்பித்தலாக அமைத்திருப்பது பாராட்டற் குரியது. அழிசி யென்பது அழுசி எனவும் வழங்கும்.

அள்ளூர் நன்முல்லையார் (32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237):— அள்ளூரென்பது பாண்டிநாட்டில் சிவகங்கைக் கண்ணதோர் ஊர்; இது, "கொற்றச் செழியன், பிண்ட நெல்லி னள்ளூ ரன்னவென், ஒண்டொடி" (அகநா. சசு) என்னும் இவர் பாடலால் விளங்குகின்றது; "கிள்ளை, வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம், புதுநா ணுழைப் பானுதிமாண் வள்ளுகிர்ப், பொலங்கல வொருகா சேய்க்கும்" என்னும் உவமையும், "அரும்பனி யச்சிரந் தீர்க்கும், மருந்து பிறி தில்லையவர் மணந்த மார்பே", "அவர் நமக், கன்னெய் மத்தனு மல்லரோ" (குறுந். சுஎ, சுஅ, கூஉ) என்பனவும் இவருடைய நுண்மாண் புலமை முதலியவற்றை விளக்கும். இவர் பெயர் அள்ளூர் நன்முல்லை யெனவும் வழங்கும். எட்டுத் தொகையில் இவரியற்றிய வேறு செய்யுட்கள் - 2 (அகநா. 1; புறநா. 1.)

அறிவுடைநம்பி (230):—இவரும் பாண்டியன் அறிவுடைநம்பி என்பாரும் ஒருவரென்றே தெரிகிறது. "அறிவுடையரசன் இறைகொள்ளும் நெறியை அறிந்து கொள்ளின் அவன் நாடு கோடி பொருளை ஈட்டிக் கொடுத்துத் தானும் மிகவும் தழைக்கும்" என்று பிசிராந்தையார் இவருக்குச் செவியறி வுறுத்துவதனால் (புறநா. 184) இவர் ஒரு காலத்தில் குடிக ளிடத்தில் அன்பு கெடப் பொருள் வவ்வினரோ வென்று கருத இடமுண்டு. புதல்வரில்லார்க்கு இருமைப் பயனுமில்லை யென்று இவர் பாடியுள்ளார்; புறநா. 188 நெய்தலையும் குறிஞ்சியையும் இவர் புனைந்து பாடியிருக்கின்றனர். எட்டுத்

தொகையுள் இவர் பாடியனவாக உள்ளவேறு பாடல்கள் : 3 (நற் ; 1, அகநா. 1 ; புறநா - 1.)

ஆசிரியன் பெருங் கண்ணனார் (239) :—ஆசிரியன் என்ற அடை மொழி வேறு சில புலவருக்கும் உண்டு. "கிழவோற்குத் தொடி ஞெகிழ்ந்தன ; தோள் சாயின ; இனி விடப்படும் நாண் உண்டோ?" என்று தலைவி கூறுவதாக இவர் பாடியுள்ளார்.

ஆதிமந்தியார். (31) :— நல்லிசைப் புலமை வாய்ந்த மெல்லியலார் களுள் இவர் ஒருவர். இவர் பெயர் மந்தியெனவும் வழங்கும். வஞ்சிக் கோனுகிய ஆட்டனத்தி என்பானே இவர் மணந்தவர். அவன்பெயர் அத்தி யெனவும் வழங்கும். ஒரு சமயம் ஒரு சீர் விழாவிற் கழாரென்னும் ஊரைச் சார்ந்த காவிரித் துறையில் கணவனுடன் இவர் நீராடுகையில், கணவனைக் காவிரி வெள்ளத்திற் கவர்ந்து கொண்டது என்பதும் அதனல் மந்தியார் தம் கணவனைக் காணுது கவன்று பலவிடத்தும் தேடித் தேடிச் சென்று முடிவிற் கடற்கரையில் அரற்றி நின்ருரென்பதும் அப்போது இவரது கற்பின் பெருமையால் கடல், கரைக்கணித்தாக அவனைக் கொணர்ந்து நிறுத்தக் கண்டு இவர் மகிழ்ந்து தழுவிச் சேர்ந்தனரென்பதும் அகநா. 45, 76, 222, 236, 276, 396-ஆம் பாடல்களாலும், "இது (குறுந் 3.) காதலற் கெடுத்த ஆதிமந்தியார் பாட்டு" என்ற நச்சினர்க்கினியர் உரையினுலும் (தொல் அகத். 54), சிலப். 21 : 11-5-ஆம் அடிகளாலும் உணரப்படும். **வெள்ளி வீதியார்** என்ற பெண்பாற்புலவர், பரணர் முதலியோர் இவரைப் பாராட்டியுள்ளார். அகநா. 147-ஆம் பாடலால் ஔவை யாருக்குக் காலத்தால் முந்தியவர் வெள்ளி வீதியார் என்பதும், அகநா. 45-ஆம் பாடலால் வெள்ளி வீதியார்க்குக் காலத்தால் முந்தியவர் ஆதிமந்தியாரென்பதும் விளங்குகின்றன.

ஆரிய வரசன் யாழ்ப்பிரமதத்தனர் (184.):—ஆரிய வரசர் பலர் தமிழின் பால் ஆர்வங்கொண்டு அதனைக் கற்றமை விளங்கும். கபிலர் ஆரிய வரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழறிவுறுத் தற்குக் குறிஞ்சிப்பாட்டை இயற்றினர் என்பர். "அறிகரி பொய்த்தல் ஆன்ருர்க்கில்லை" என்று கூறி ஆன்ருரின் பெருமையை இவர் புலப்படுத்தியுள்ளார். சிலப்பதிகாரத்தில் ஆரிய மன்னரென்னும் ஒரு வகையார் கூறப்படுகின்றனர். இவர் அவர்களுள் ஒருவரோ வேறோ தெரியவில்லை.

ஆலங்குடி வங்கனார் (8, 45):—ஆலங்குடி யென்னும் பெயருள்ள ஊர்கள் பல இருத்தலின் இவர் ஊர் இன்ன ஆலங்குடி யென்று நிச்சயிக்கக் கூடவில்லை, வேறு தொகை நூல்களில் ஐந்தும் (நற். 3, அகநா. 1, புறநா. 1), திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளும் இவர் செய்தனவாக இப்பொழுது காணப்படுகின்றன. புறத்திணைப் பாடலொழிய மற்ற எட்டுத் தொகைப் பாடல்கள் யாவும் மருதத்திணையைச் சார்ந்தன. காமக் கிழத்தியர் தலைவனை ஆடிப் பாவை போன்றுன் என்று இகழ்தலும் (குறுந். 8), உயர்குடிப் பிறந்த கற்புடை மகளிர் தம் தலைவர் கொடுமை புரியினும் அதனை மறந்து அன்பு பாராட்டுதலும் (குறுந் 45) கூறும் முகத்தால் இவர் இருவேறு மகளிருக்கும் உள்ள வேற்றுமையை நன்கு புலப்படுத்துகின்றார். இவர் பாடிய நற். 330-ஆம் பாடலும் இவ்வேற்றுமையையே காட்டும். "தலைவி தன் வயிற்றை அலைத்துக் கோடற் பொருட்டாகச் செறிந்த நம் தொடி ஓலிப்ப வீசி அவள் உறையும் சேரிக்கண் சிறிது பொழுது சூழ் வருவோம் வா, தோழீ" என்று பரத்தை தலைமகள் புறங் கூறினளாகக் கேட்டு மொழிந்தாளென்று (அகநா. 106) இவர் கூறியிருப்பதும் பரத்தையின் கொடுமையையே காட்டுகிறது.

ஆலத்தூர் கிழார் (112, 350):—ஆலத்தூரிற் பிறந்தவர் இவர். ஆலத்தூர் என்ற பெயருள்ள ஊர்கள் தமிழ்நாட்டில் பல உள்ளன. இதனை இன்ன ஆலத்தூரென்று சொல்லமுடியவில்லை. இவர் வேளாளர். "கணந்துட் பறவை ஆறலை கள்வர் வருவதையறிந்து ஒலிக்கும் இயல்புடையது" (குறுந் 350) என்பதை இவர் குறித்துள்ளார். "பிறர் கூறும் பழிமொழியை அஞ்சினுல் காமம் மெலிவடையும்; பிறர் பழித்தல் அறும்படி அக்காமத்தை விட்டு விடின் எனது பெண்மை நலனும் கற்பும் அழிந்து விடும்" என்று தலைவி கூறுவதாகக் காமம் கவ்வை இவை இரண்டாலும் வரும் துன்பங்களை அழகாகக் குறித்துள்ளார்; குறுந். 112. நன்றியறிவும், அரசர்களை இடித்துக் கூறும் மனவலியும் உபகாரிகளின் இயல்பை வெளிப்படுத்தும் அன்புடைமையும் போர் செய்யும் முறையை விளக்கும் இயல்பும் பொருள்களின் இயற்கை நலனைப் புலப்படுத்தும் நுண்ணறிவும் உடையவர் இவர். இவர் செய்தனவாகப் புறநானூற்றில் 5 செய்யுட்கள் காணப்படுகின்றன. இவராற் பாடப்பட்டோர் சோழன் குள

முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும் சோழன் நலங் கிள்ளியுமாவர்.

இடைக்காடனார் (251) :—இடைக்காடென்னும் ஊரினராதல் பற்றி இவர் இப்பெயர் பெற்றார். இடைக்காடென்பது பட்டுக்கோட்டை தாலூகாவில் உள்ளது. இவர் சாதியில் இடையர். "இவர் கபிலருடைய தோழர்; மற்றப் புலவர்களிடத்தும் அன்புடையவர்; பெரும் பொருளைச் சிறு கவியுள் அடக்கும் இயல்பினர்; கவி செய்யும் ஆற்றல் மிக்கார்" என்பது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தால் அறியலாகும். இவர் கூறும் உவமைகள் மதிக்கற்பாலன. இவருடைய செய்யுட்களை உற்று நோக்குமிடத்துப் பெரும் பான்மையாக முல்லைத்திணை, மழை, இடைச்சாதி என்பவற்றின் இயல்புகளும் சிறு பான்மையாக மருதத்திணை வளமும் அமைந்திருப்பது விளங்கும். சில பாடல்கள் இடைக்காடர் ஊசி முறி என்று பழைய உரைகளிற் காணப்படுகின்றன. இதனால் ஊசி முறி என்ற நூலொன்று இவரால் இயற்றப்பட்டதென்று தெரிகிறது. ஊசி - எழுத்தாணி. இவராற் பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன். வேறு தொகை நூல்களில் இவர் பாடியவை - 6 (நற். 3; அகநா. 6; புறநா. 17.) அன்றியும் இவர் பாடிய செய்யுளொன்று திருவள்ளுவ மாலையில் உள்ளது.

இருந்தையூர்க் கொற்றன் புலவனார் (335) :—திருக்கோவலூர் தாலூகாவில் இருந்தையென்று ஓர் ஊர் உள்ளது. இருந்தையூர் என்பது அதுவாக இருக்கலாமென்று தோற்றுகிறது. இந்த ஊரிலேயே கருங்கோழி மோசியார் என்ற வேறோர் இடைச்சங்கப் புலவர் இருந்தனரென்று தெரியவருகிறது; சிலப். உரைப். அடியார்.

இளங் கீரந்தையார் (148) :—கீரன் தந்தையார் என்ற தொடர் கீரந்தையார் என்று மருவியது. கீரந்தையார் என்று இடைச்சங்கப் புலவருள் ஒருவர் இருந்தார் என்பது (சிலப். அடியார்.) தெரியவருகிறது. பரிபாடலில் ஒரு பாட்டை எழுதியவரும் திருவள்ளுவ மாலையில் 'தப்பா முதற்பாவாற்' என்னும் செய்யுளை இயற்றியவரும் கீரந்தையார் என்று தெரிகிறது. அவருக்கும் இவ்விளங் கீரந்தையாருக்கும் தொடர்புண்டோ இல்லையோ தெரியவில்லை. கீரந்தையாரினும் இவர் இளைஞராயிருத்தல் பற்றி அவரினும் வேறுபடுத்த

இவர் பெயர் இளங்கீரந்தையாரென்று வழங்கியிருத்தல் கூடுமோவென்று தோற்றுகிறது.

இளங்கீரனார் (116):—இவரும் எயினந்தை மகனார் இளங்கீரனா ரென்பவரும் ஒருவரேயென்று சிலர் கூறுவர். அங்ஙனமாயின் இவர் வேடர் மரபினர். இவர் பாலைத்திணையைப் பலவாறு பாடியுள்ளார். தலைவியின் இனிமைக்கு விளைமுடித்தலால் வரும் இனிமையையும், மூங்கிலில் காற்றடித்தலால் உண்டாகும் ஓசைக்கு யானையின் நெட்டுயிர்ப்பையும், தலைவன் நெஞ்சம் தலைவியுடன் ஒன்றுபட்டுக் கரைவதற்கு ஈரம் காயாத பசிய மட்கலம் பெருமழையிற் கரைவதும் இவர்காட்டும் அரிய உவமைகளாகும்; நற். 3, 62, 308 வழக்கமாக மகளிர் பிறை தொழுதலையும் சுவரிற் குறியமைத்து நாளெண்ணுதலையும் (அகநா, 239, 289) இவர் குறித்துள்ளார். 'சோழன் உறந்தை', 'உதியன் மண்டிய ஞாட்பு', 'பொறையன் கொல்லி' என்ற தொடர்களால் இவர் சோழனையும் சேரரையும் பெயர் கூறுமற் குறித்திருக்கிறார். பொருந்தில் என்னும் ஊரினராகிய இளங்கீரனரென்னும் புலவரொருவர் புறநானூற்றில் ஒரு செய்யுளையும் அகநானூற்றில் இரண்டு செய்யுட்களையும் பாடியுள்ளார். அவருக்கும் இவருக்கும் ஏதேனும் தொடர்பிருக்குமோ இல்லையோ என்பது தெரியவில்லை. எட்டுத் தொகையில் இவரியற்றியுள்ள செய்யுட்கள் 14 (நற். 6; அகநா. 8.)

இளம்பூதனார் (334):—'அலைகளின் நீர்த்துளிகள் தம் ஈரமாகிய புறத்தை நனைப்ப அக்குளிரை வெறுத்துக் காக்கைகள் கடற்கரைச் சோலையில் தங்கும்' என்று இவர் அவற்றின் இயல்பை அறிந்து கூறுவது பாராட்டத்தக்கது.

இறையனார் (2):—மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுள் இறையனரென்ற பெயரால் வழங்கப் பெறுவர் என்பர். இவரது வரலாறு இந்நூலில் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் இரண்டாம் செய்யுளின் இறுதியில் விரிவாக உள்ளது.

சமுத்துப் பூதன் தேவனார் (343):—இவர் வேறு; 189, 360-ஆம் செய்யுட்களைப் பாடிய மதுரை சமுத்துப் பூதன்தேவனார் வேறு. இவர் குறிஞ்சித் திணையைக் குறித்துப் பாடியுள்ளார். யானையைத் தாக்கிய மிகுவலி யிரும்புலியேற்றை அந்த

யானையின் முயற்சியின்றி அதன் கொம்பினாற் குத்தப்பட்டு இறந்து கிடத்தலை அழகுபட இவர் கூறியுள்ளார்.

உகாய்க்குடி கிழார் (63) :—உகாய்க்குடி யென்னும் ஊரிற் பிறந்தவர் இவர். "ஈதலும் துய்த்தலும் இல்லோர்க் கில்லென" என்று இவர் கூறும் பொருட்சிறப்பு அருமையாக வுள்ளது. இங்கே ஈதலைத் துய்த்தலுக்குமுன் இவர் அமைத்துள்ள நயம் படித்து இன்புறற்பாலது.

உருத்திரனார் (274) :—இவருக்கு அமைந்திருப்பது தெய்வப் பெயர். பாலை வழியின் இன்னுமையையும் தலைவியை உள்ளிச் செல்லின் அது கடத்தற்கு இனியதாக இருத்தலையும் நன்றாக இவர் கூறியுள்ளார்.

உரோடகத்துக் கந்தரத்தனார் (155) :—இப் பெயர், 'உரோடகத்துக் காரத்தனார்', 'ஊரோடகத்துக் கந்தரத்தனார்', 'ஓரோடகத்துக் கந்தரத்தனார்' என்று பலவாறு பிரதிகளில் உள்ளது. 'உரைகடம்' என்னும் பெயர் உள்ள மூன்று ஊர்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் இருக்கின்றன. 'உரோடகம்' என்பது அவற்றுள் ஒன்றன் திரிபாக இருக்கலாமென்று தோற்றுகிறது. உழவர் காலையில் விதைக்க எடுத்துச் சென்ற வட்டிகளை மாலையில் வறியனவாக அல்லாமற் போதொடு கொணர்வர் என்று கூறுகிறார். தலைவிக்குப் பொருளின் உயர்வைப் புலப்படுத்தத் தலைவன் முல்லை படர்ந்த நொச்சியினது கிளையின் உயர்வைக் காட்டுவதாக இவர் குறித்துள்ளார். அலர் தூற்றும் பெண்டிரை நரகம் புகுதற்கு உரியவரென்று தலைவியின் கூற்றில் அமைத்திருக்கிறார். எட்டுத்தொகையில் இவரியற்றிய வேறு செய்யுட்கள் 4 (நற். 1; அகநா. 3.)

உலோச்சனார் (175, 177, 205, 248) :—இவர் நெய்தற்றிணையையே மிகுதியாகச் சிறப்பித்துள்ளார். இதனாலும் தலைவியின் கூற்றாக, 'கழிசூழ்படப்பைக் காண்டகவாயில்.....எம் அழுங்கலூரே' (நற். 38) என்று கூறுவதனாலும் இவர் நெய்தனிலத்தைச்சார்ந்தவர் என்று ஊகிக்கலாம். கடலில் உப்பெடுத்தலை 'வானம் வேண்டா உழவு' (நற் 254) என்கின்றார். பொறையாறு என்ற ஊரினனை பெரியன் என்பானையும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியையும் இவர் குறித்துள்ளார். வியப்பைப் புலப்படுத்தப் பெண்டிர்தம் மூக்கினுச்சியிற் சுட்டுவிரலைச் சேர்த்தலையும், சிறுமியர்

வண்டல் மண்ணுலே பாவை செய்து விளையாடுதலையும் (நற். 149, 191) வழக்கங்களாகக் கூறியுள்ளார். உலோச் சென்பது சைனர்கள் செய்து கொள்ளும் ஒரு கிரியை. அதனல் இவர் சைனரென்று கொள்ளுதற்கு இடமுண்டு. இவர் வாக்கில் ஏருமை மறம் என்னுந் துறை விளங்கக் கூறப் பெற்றுள்ளது; புறநா 273. எட்டுத் தொகையில் இவரியற்றிய வேறு செய்யுட்கள் 31 (நற். 20; அகநா 8; புறநா. 3.)

உழுந்தினம் புலவன் (333):— ஒரு காரியம் செய்கையில் அது நிறைவேறுமற்போனல் உண்டாகும் வருத்தத்தை இவர் 'பணிக்குறைவருத்தம்' என்று கூறியுள்ளார்.

உறையனர் (207):— சுரஞ்செல் மாக்கட்கு ஒரு துணையுமின் றென்பதைக் குறிக்க இவர், "இனந்தீர் பருந்தின் புலம்பு கொடைள்விளி..... உயவுத்துணையாகும்" என்கிறார்.

உறையூர்ச் சல்லியன் குமாரனர் (309):—உறையூரைச் சார்ந்த புலவர் பலர் உளர். ஒரு காலத்தில் அது கல்வியிற் சிறந் திருந்த தென்பது இதனற் புலனுகும். பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்கு வாயில் நேர்ந்தமைக்குத் தோழி உழவர் தம் தொழிலை முடிப்பாராகி வரப்பில் வாடும்படி களைந் தெறிந்த நெய்தல் மீட்டும் தம்மை நீக்கிய வயலினிடத்து மலர்கின்றதை உவமையாகக் காட்டியுள்ளது பாராட்டற் பாலது. களையைக் களைந்த இடத்திலேயே போடக்கூடா தென்பதை இவர் அறிந்துள்ளாரென்று தெரிகிறது.

உறையூர்ச் சிறுகந்தனர் (257):—தலைவன் பிரிந்த வழிக் காமமாகிய பகை தலைவியை இகலும் என்கிறார். பலாமரம் நிரம்பக் காய்த்துள்ளமையை அழகுபட வருணித்துள்ளார்.

உறையூர்ப் பல்காயனர் (374):—யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்பவற்றின் உரைகளால் பல்காயனர் என்ற ஒருவர் யாப்பிலக்கணஞ் செய்துள்ளமை தெரியவருகிறது. அவரும் இவரும் ஒருவரோ வேறோ என்பது தெரியவில்லை. ஊர் மயக்க மடைந்துள்ளமைக்குத் தூக்கணங் குருவி பனை மேற் றொடுத்த கூட்டின் மயக்கத்தை உவமை கூறுகிறார். சில பிரதிகளில் இவர் பெயர் 'பராயனர்' என்று காணப் படுகிறது.

உறையூர் முதுகண்ணன் சாத்தனர் (133):—'முதுகண்' என்பது பிராயத்தாலும் அறிவாலும் முதிர்ந்து, அரசர்க்கும் பட்டத்

தேவிகளுக்கும் உசாத்துணையாகவிருந்து நீதிகளைச் செவியறி வுறுத்தும் ஆண்பாலார் பெண்பாலார்களுக்குரிய பெயராகச் சிலாசாசன முதலியவற்றிற் காணப்படுகின்றது; "மூற்றிழை மகளிர்க்கு முதுக ணெமன" (பெரும். க. 36 : 198) என்று வருதலும் காண்க; இவர், உறையூர் அரசர்பால் அத் தொழிலை உடையவராக இருந்தார் போலும்; இவராற் பாடப்பட்டோன் சோழன் நலங்கிள்ளி; இவர் காலத்துப் புலவர் அவனைப் பாடிய ஆலத்தூர் கிழாரும் கோவூர் கிழாருமாவர்; இவர் சிறந்த குடியிற் பிறந்தவருக்குத் தாமரைப்பூக்களையும், வளர்தல் முதலியவற்றை யடைந்த பொருள் குறைதல் முதலியவற்றையடையுமென்பதற்குத் திங்களையும் உவமை கூறி யிருத்தலும், அருளுங்கொடையும் வெற்றிக்கும், அவையின்மை தோல்விக்கும் காரண மென்பது புலப்பட, "அருள வல்லை யாகுமதி யருளிலர், கொடாமை வல்லராகுக, கெடாத துப்பினின் பகையெதிர்ந் தோரே" (உள) என்று விளக்கி யிருத்தலும் நன்கு மதிக்கற்பாலன; எட்டுத் தொகையுள் குறுந்தொகைச் செய்யுளையன்றி இவர் செய்தனவாகப் புறநானூற்றில் 5 செய்யுட்கள் உள்ளன.

உறையூர் முதுகூத்தனர் (முதுகூற்றனர்) (353, 371):—"வென் றெறி முரசின் விறற்போர்ச் சோழர், இன்கடுங் கள்ளி னுறந்தை" என்று இவரே கூறியிருத்தலால் தம்முடைய ஊரில் இவர் அன்புடையவரென்பதும், அவ்வூர் அரசராகிய சோழரால் நன்கு மதிக்கப் பெற்றவரென்பதும் வெளியா கின்றன; "உள்ளது, நவச்சிறி தாயினு மிகப்பல ரென்னுள் ளீணெடும் பந்த ரூண்முறை யூட்டும், இற்பொலி மகடூஉ", (புறநா. 331) என்று கற்புடை மங்கையி னியல்பையும், "தேவிற் சிறந்த திருவள்ளுவர் குறள்வெண், பாவிற் சிறந்திடுமப் பால்பகரார் - நாவிற், குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ், செயலில்லை யென்னுந் திரு" (திரு வள்ளுவமாலை) என்று திருக்குறளின் சிறப்பையும் பாராட்டி யிருத்தல் மதிக்கற்பாலது; இவர் வாக்கிற் பெரும்பாலுங் காணப்படுவது பாலைநிலத்தி னியல்பு; இவர் செய்தன வாகத் தெரிகின்ற வேறு பாடல்கள் 5 (அகநா. 3; புறநா. 1; திருவள்ளுவ. 1.)

உறையூர் முதுகொற்றனர் (221, 390): இடையர் கறந்த பாலை வீட்டிற் கொடுத்துவிட்டு இனிரை இருக்குமிடத்துக்குக்

கூழொடு பெயர்தலையும் ஆறலைகள்வர் வணிகர் கூட்டத்தை வழிப்பறிக்க முயல்வதையும் இவர் குறிப்பித்துள்ளார்.

ஊண்பித்தையார் (232) :—இப்பெயர் ஊன்பித்தை யென்றும் பிரதிகளில் உள்ளது. இவர் பெண்பாலார். இவர் பாடிய செய்யுளின் பழைய கருத்து, பிரிவிடைத் தோழி வற்புறுத்தியதாக உள்ளது. இச் செய்யுள் தலைவியின் கூற்றே என்று ஐயுறும் வண்ணம் அமைந்திருக்கிறது.

எயிற்றியனார் (286) : தலைவன் தோழியிடத்துத் தலைவியை "உள்ளிக் காண்பென் போல்வன்" என்று கூறுங்கால் அவளை உள்ளுதற்குரிய நலன்களைக் கூறுவதாகச் செய்யுள் செய்திருப்பது பாராட்டற்குரியது. இவர் பெயர் காரணப் பெயராக இருக்கலாமென்று தோற்றுகிறது.

ஐயூர் முடவனார் (123, 266, 322): இவருக்கு முடவனென்னும் பெயர் சிறுமையால் வந்தது போலும்; ஐயூரென்பது சோழ நாட்டகத்ததோர் ஊர். இவர் நடந்து செல்லுதற்கு இயலாத முடவராதலின், தாமான் தோன்றிக்கோனை அடைந்து வண்டியிழுத்தற்குப் பகடுவேண்டுமென்று பாடி, அவன் பகடுகளும் பல பசு நிரைகளும் ஊர்தியுங் கொடுக்கப் பெற்று வாழ்ந்தவர்; இறந்தோருடம்பைத் தாழியாற் கவித்தல் உண்டென்பதும் வீரச் சிறப்பும் கொடைச் சிறப்பும் இவர் பாடல்களிற் காணப்படுகின்றன. இவராற் பாடப் பட்டோர் ஆதனெழினி, தாமான் தோன்றிக்கோன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி யாவர். "அறவ ரறவன் மறவர் மறவன், மள்ளர் மள்ளன் மெல்லோர் மருகன், இசையிற் கொண்டான்" (புறநா. 399) என்பது இவர் தாமான் தோன்றிக் கோனைப் பாராட்டிய பகுதி. இவர் செய்தனவாகத் தொகை நூல்களிற் காணப்படும் வேறு செய்யுட்கள் 7. (நற். 2; அகநா; 1. புறநா - 4.)

ஒக்கூர் மாசாத்தியார் (126, 139, 186, 220, 275) :—முல்லைக்கொடி மலர்ந்திருத்தலை அது நகுதல் போலும் என்றும், காட்டுப் பூனையை அஞ்சிப் பெட்டைக்கோழி தன்குஞ்சுகளை ஒருங்கு சேர்க்கும் பொருட்டு அழைத்துக்கூவும் என்றும் கூறுகிறார். புறநானூற்றில் ஒருமறக்குடி மகளின் வீரச் செயல் இவரால் விசேடித்துப் பாராட்டப் பெற்றுள்ளது. இவர் பெண்பாலார். இவர் பாடல்கள் முல்லைத் திணையைப் பற்றி

வருவன. ஒக்கூர் என்பது பாண்டி நாட்டில் திருக்கோஷ்டியூர்ப் புறத்தேயுள்ள ஓர் ஊர். இவர் பாடிய வேறு செய்யுட்கள் - 3 (அகநா. 2; புறநா. 1.)

ஒருசிறைப்பெரியனார் (272) :—இவர் தலைவியினுடைய கண்களுக்கு அவளது தன்னையர் கலையில்மேல் எய்த குருதி தோய்ந்த அம்பை உவமை கூறியுள்ளமையும், தேர்ப்பாகன் தலைவனை ஆற்றுவிப்பதாகக் கூறியுள்ளமையும் சிறந்த செய்திகளாகும். நாஞ்சில் வள்ளுவனைப்பாடிப் பரிசில் பெற்றவர். நாஞ்சில் மலையின் வளத்தையும் அதன் தலைவனது இயல்பையும் இவர் பாராட்டியிருக்கின்றார். இவர் பாடல்கள் முல்லையையும் குறிஞ்சியையும் பற்றியவை. இவரியற்றிய வேறு பாடல்கள் - 2 (நற் 1; புறநா. 1.)

ஒதஞானி (227) :—ஒதஞானி - பரந்தஞானி; வடசொற்சிதடர். தலைவன் சிறைப்புறத்தானாக அவன் கேட்கும்படி தோழி தலைவியின் இற்செறிப்பை இதழ் குறைந்த கூழை நெய்தல் மலர் மேல் ஏற்றி இவர் குறிப்பித்திருப்பது ஒரு நயமாகும்.

ஒதலாந்தையார் (12, 21, 229) :—ஆதன் தந்தை யென்பது ஆந்தை யென்று மருவியது. பாலைத் திணையின் இயல்பைப் பாடுதலில் மிக ஆற்றலுடையவர். பாலைத்திணையில் பிரிதல் நிமித்தமே பயின்றுவரினும் 'தலைவி தலைவனை மணந்து அவனுடன் இனியளாய் இன்று வரும்' எனக் கேட்ட செவிலி அதனை நற்றாய்க்குக் கூறும் செய்யுளை ஈற்றில் அமைத்து இத்திணைக்கு மங்கல முடிபு காட்டியிருத்தல் மிக அழகாயுள்ளது. தாம் அன்பு வைத்திருப்பவருடைய அரிய பண்புகளை நினைக்குந்தோறும் ஒருவர்க்குற்ற வழிநடைத்துன்பம் முதலியன நீங்கு மென்பதை இவர் தெரிவிக்கிறார். ஒரு காதலி தான் கருதியவனையே கணவனாகக் கோடல் வேண்டுமென்று நினைப்பாளென்றும் அவள் விரும்பும் தலைவனுக்கு மணஞ் செய்து கொடுக்க விருப்ப மற்ற தாயை அறனில் தாயென்றும் தீ வினையை 'அறனில் பால்' என்றும் அந்தணர்க்குரிய கொள்கையைக் கூறுமிடத்து, 'அறம்புரி பெருமறை நவின்ற நாவிற், றிறம்புரி கொள்கை' என்றும் அறத்தைச் செய்வோர் அன்பைக் கருதுவது தகாது என்பதை, 'அன்பில் அறனும்' என்றும் இவர் கூறுகிறார். இவர் செய்யுட்களில் சொல் நயம் பொருள் நயங்களை அதிகமாகக் காணலாம். குறுந்

தொகைச் செய்யுட்களேயன்றி இவர் ஐங்குறுநூற்றில் நான்காம் நூறுகிய பாலைத்திணையைப் பாடியவர்.

ஒரம் போகியார் (10, 70, 122, 127, 384):—இவர் ஐங்குறு நூற்றில் மருதத்தைப் பொருளாகவுடைய முதல் நூறு செய்யுட்களே இயற்றியவர். மருதத்திணையில் மிகவும் பயின்றவர். தமிழ் நாட்டு வேந்தர் மூவராலும் பிற உபகாரிகளாலும் நன்கு மதிக்கப் பெற்றவர். இவருடைய பாடல்களில் 106 மருதத் திணையின் வளத்தையே புலப்படுத்துவன. இவராற் பாடப்பட்டோர் சேரமான் ஆதனவினி, சோழன் கடுமான் கிள்ளி, மத்தி, விரான் என்னும் இவர்கள். இவர் பாடலில் வந்துள்ள ஊர்கள்: ஆமூர், இருப்பை, கழார், தேனூர் என்பன; நதிகள்: காவிரி, வையை என்பன; விழா: இந்திரவிழா; நோன்பு: தைந்நீராடல். எட்டுத் தொகையில் இவர் இயற்றிய வேறு செய்யுட்கள்-5 (நற் 2; அகநா. 2; புறநா. 1)

ஓரிற்பிச்சையார் (277):—அறிவர் பெறும் உணவை 'ஓரிற் பிச்சை' என்று குறித்தலின் இப்புலவர் இப்பெயருடையவர் ஆனார். ஓரிற் பிச்சையின் சிறப்பு மிகவும் பாராட்டற்பாலது. பெரியோர்கள் ஓரில்லத் தாண்டிப் பிச்சை எடுப்பதில்லை.

ஓரேருழவனார் (131):—விண்ணை முற்றி மீளும் தலைமகன் தலைமகளைக் காண்டற்கு விரையும் தன் நெஞ்சிற்கு ஈரச்செவ்வியில் விதை விதைத்தற்பொருட்டுக் கொல்லையை அடைதற்கு விரையும் ஓரேருழவனை உவமை கூறிய சிறப்பால் இவர் இப்பெயர் பெற்றனர்; இவருடைய இயற்பெயர் தெரியவில்லை. தம் முடைய செய்யுளில் இல்லறத்தை வெறுத்துக் கூறுதலின் இவர் துறவறத்தில் பற்றுடையவரென்று கருத இடமுண்டு. இவர் இயற்றிய வேறு செய்யுள் புறநா. 193. இந்த 131-ம் செய்யுளின் ஆசிரியர் பெயருக்கு 'நக்கீரர்' என்னும் பிரதிபேதம் காணப்படுகிறது.

ஔவையார் (15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388):—இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் அமுதமயமாகிய நெல்லிக்கனி பெற்று அவனைப் புகழ்ந்தார். இது புறநானூறு, 91-ஆம் செய்யுளாலும், திருக்குறள், 100-ஆம் செய்யுளுக்குப் பரிமேலழகர் எழுதிய விசேடவுரையாலும், "பூங்கமல வாவிசூழ் புல்வேளூர்ப் பூதனியும், ஆங்குவரும் பாற்பெண்ணை யாற்றினியும்-ஈங்கே, மறப்

பித்தாய் வாழுதிகா வன்கூற்றி னுவை, அறுப்பித்தா யாமலகந் தந்து" என்னும் வெண்பாவாலும் வெளி யாகின்றது. இவராற் பாடப்பட்டோர்: அதியமான் நெடு மானஞ்சி, தொண்டைமான், அதியமான்மகன் பொகுட் டெழினி, நாஞ்சில் வள்ளுவன், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி யென்பார். இவரியற்றிய பாடல்கள் புறநானூற்றிலன்றி நற்றிணை யிலும், அகநானூற்றிலும், தொல்காப்பிய உரையிலும், யாப்பருங்கல விருத்தியுரை முதலியவற்றிலும் காணப் படுகின்றன. ஆத்திகுடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை முதலியன இவரியற்றிய நூல்க ளென்பர். இவர் அவ்வச்சமயத்துச் செய்தனவாகவுள்ள தனிப்பாடல்கள் மிகப்பல. பகைவரை நோக்கிக் கூறுவார் போல, அதியமான் நெடுமானஞ்சியின் குணங்களை இவர் பாராட்டிக் கூறியிருக்கும் பகுதிகளும் அவனுல் தூதனுப்பப் பட்டுச் சென்றபொழுது தன் மேம்பாட்டைப் புலப்படுத்தற் பொருட்டுத் தொண்டைமான் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டக் கண்டு அப்படைக்கலங்களைப் புகழ்வார்போல அதியமானது போர்த்திறத்தை வெளிப்படுத்தியிருக்கும் பகுதியும் மிக்க விம்மிதத்தை விளைவிக்கும். அதியமான் கோவலூரெறிந்ததனைப் பரணர் பாடியதையும் (புறநா. கூசு), மூவேந்தரும் சேனைகளுடன் பாரியை வெல்லக் கருதி அவன் நகரைச் சூழ்ந்து புகல்போக்கின்றித் தடுத்தபோது பறவை களால் நெற்கதிரைப் புறத்திருந்து வருவித்து உள்நகரத் தாரைப் பசியால் வருந்தாதபடி பாதுகாத்தளித்த கபிலர் செய்தியையும் (அகநா 303), தம் கணவரது பிரிவாற்றாது வருந் திய வெள்ளி வீதியார் என்னும் புலமைவாய்ந்த பெண்பாலாரு டைய துன்பமிகுதியையும் (அகநா. கசஎ) புலப்படுத்தியிருத் தல் புலவரிடத்து இவருக்குள்ள பேரன்பை விளக்குகின்றது; பழையனூர்க் காரிக்காகச் சென்று ஆடொன்று கேட்ட போது சேரன் இவருடைய மேம்பாட்டை நினைந்து, பொன்னுல் ஓர் ஆடு செய்வித்து அளிக்க, இவர் அதனைப் பெற்று மனமகிழ்ந்து, "சேரா! உன்னாடு பொன்னாடு (உன் நாடு பொன் நாடு)" என்று கூறினரென்றும் அதனுல் மலை நாடு இதுகாறும் சிறப்புற்று விளங்குகின்றதென்றும் ஒரு செய்தி வழங்குகிறது. தம்முடைய கூற்றுகவன்றிப் பாடி

யிரத்தற்குரிய விறலி முதலியவர்களின் கூற்றுக்களாகவும் இவர் பாடிய பாடல்கள் புறநானூற்றிலும் பிறநூல்களிலும் காணப்படும். ஆராய்வோர் அதனைக்கொண்டு இவரை விறலி முதலியவர்களாக நினைந்து விரைந்து முடிவுசெய்து விடுதல் மரபன்று; அங்ஙனம் பாடுதல் கவிமதமெனக் கொள்ளுதல் முறை; பிற புலவர்கள் பாடல்களிலும் இம்முறை காணப்படும். தொகைநூல்களில் இவர் பெயர் ஔவை யெனவும் வழங்கும்.

கங்குல் வெள்ளத்தார் (387):—இரவினைக் கண்டு தலைவி அஞ்சி, "கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே" என்று கூறியதாக அமைத்திருத்தலின் இவர் இவ்விசேடப் பெயரை யடைந்தார்

கச்சிப் பேட்டுக் காஞ்சிக் கொற்றனார் (213, 216):—கச்சிப் பேடென்பது காஞ்சீபுரத்தைச் சார்ந்த ஓர் ஊர். தலைவன் தலைவியின் பால் விருப்ப முடையவனேனும் தன்னலம் பேணுது இல்லறம் புரியுங் கடமையை நினைந்து அதற்குரிய பொருள்தேடச் செல்லுதலைத் தோழி கூற்றாகவும் தலைவி கூற்றாகவும் கூறியுள்ளார். செல்வத்தை இவர், "கேடில் விழுப்பொருள்" என்று குறித்துள்ளார். நன்னாகையார், இளந்தச்சனார், பெருந்தச்சனார் முதலிய புலவர்களும் கச்சிப் பேட்டினர் என்று தெரிகிறது.

கச்சிப் பேட்டு நன்னாகையார் (30, 172, 180, 192, 197, 287):—இவர் பெண்பாற்புலவர். உண்மை போலத் தோன்றிப் பொய்யாக முடியும் கனவை, "வாய்த்தகைப் பொய்க்கனா" என்கிறார் இவர். யானையடியின் நகத்துக்குப் பேயின் பல்லை உவமை கூறுகிறார். களிற்றின் கூட்டத்துக்கு ஒரு யானை தலைமை பெற்று நிற்றல் என்பது, "இருங்களிற்றின நிரையேந்தல்" என்று இவர் குறித்திருப்பதனால் தெரிகிறது. மாதர் பன்னிரண்டு திங்கள் கருப்பம் தாங்குதலையும் கணவர் அகலச் சென்றிருக்கும் காலங்களில் மகளிர் கூந்தலில் மலரை அணியாமையையும் கூதிர்ப்பருவம் மகளிர்க்குக் கூற்றாதலையும் இவர் வாக்கால் அறியலாகும்.

கடம்பனூர்ச் சாண்டிலியனார் (307):—இப்பெயர் இவருக்கு ஊரினால் வந்த பெயர். சாண்டிலியர் என்பது ஒரு முனிவரின் பெயர். பெரியோர்களின் பெயரையிடுவது பழைய காலத்

திலும் வழக்கமா யிருந்ததென்று தெரிகிறது. உடைந்த வளையை இவர் பிறைக்கு உவமை கூறியுள்ளார்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் (352):—கடியலூர் என்பது பாண்டி நாட்டிலுள்ள தோரூர்; திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது. இவர் அந்தணர். பத்துப் பாட்டுள் பெரும்பாணாற்றுப் படையும் பட்டினப் பாலையும் இவரால் இயற்றப் பெற்றன. தொண்டைமான் இளந்திரையனும் சோழன் கரிகாற் பெருவளத்தானும் இவரை ஆதரித்தவர்கள். பட்டினப் பாலையைக் கேட்டு மகிழ்ந்து சோழன் கரிகாற் பெருவளத்தான் இவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தானென்று தெரிகிறது. இவர் திருமாலிடம் அன்புடையவர். பல சாதியார்களுடைய ஒழுக்கங்களையும் அவர்கள் இருக்கும் குடியிருப்பினையும் சுவை படத் தெரிவிக்கும் ஆற்றலுடையவர். பழையகாலத்து வியாபார முறையைப் பற்றிய பல செய்திகளை இவர் வாக்கிற் காணலாம். பாழ்பட்ட நாடுகளைப்பற்றி இவர் கூறும் பகுதி படிப்போர்க்குக் கழிபேரிரக்கத்தை உண்டாக்கும். பலாமரத்தைப் பறவைத் தொகுதிகள் விரும்பும் செய்தி குறுந்தொகையில் உள்ளது. எட்டுத் தொகையில் இவர் இயற்றியுள்ள வேறு செய்யுள் அகநானூற்றில் ஒன்று. இவருடைய வரலாற்றின் விரிவைப் பத்துப்பாட்டிலுள்ள பாடினோர் வரலாற்றிற் காணலாம்.

கடுகு பெருந்தேவனார் (255):—தலைவன் தன்னுடைய கடமையை நிறைவேற்றும்பொருட்டுப் பொருள்முயற்சிக் கண் உள்ள பிணிப்பினால் இடங்கள் தோறும் செல்லுதலை இவர் வாக்கினால் அறியலாகும். கடுகு என்ற அடைமொழியின் காரணம் புலப்படவில்லை. கடுகுசந்தை யென்னும் ஓர் ஊர் பாண்டி நாட்டில் உள்ளது.

கடுந்தோட்கர வீரனார் (69):—கரவீரம் என்பது சோழநாட்டின் கண் திருவாரூருக்கு அருகிலுள்ள ஒரு சிவஸ்தலம். கரவீரன் - அலரிமாலையை யணிந்தவன் ஆண் குரங்கு இறந்ததாகப் பெண் குரங்கு கைம்மைத் துன்பத்துக்கு ஆற்றாமல், மரமேறுதல் முதலிய தொழிலறியாத சிறுகுட்டியைச் சுற்றத்தினிடத்துச் சேர்த்தி ஓங்கிய மலைப் பக்கத்தில் தாவி உயிரை மாய்த்துக் கொள்வதாக இவர் கூறியுள்ளது படித்து இன்புறற்பாலது.

கடுவன் மள்ளனார் (82):—கடுவன்குடி என்ற பெயருள்ள ஊர்கள் சோழ நாட்டிற் பல உண்டு. கடுவன் என்பது அவற்றுள் ஒன்றன் திரிபாக இருக்கலாம். இவர் கடுவன் என்ற ஊரினரென்று கொள்ள இடமுண்டு. இவர் தந்தையார் புறநானூறு, 334-ஆம் செய்யுளை இயற்றிய மதுரைத் தமிழக் கூத்தனார் என்று தெரிகிறது. 'மள்ளனார்' என்ற பெயரை நோக்கும் போது இவர் அரசியலில் துணைபுரியும் படைத்தலைவராக இருக்கலாமென்று ஊகிக்க இட முண்டு. நற்றிணையில் 150-ஆம் செய்யுள் இவர் பாடியது.

கண்ணனார் (244):—தலைவனுக்குக் களிற்றையும், தலைவனை எதிர்ப்படப்பெறுத தலைவிக்கு வலையிற்பட்ட மயிலையும் உவமையாக இவர் கூறியுள்ளார்.

கணக்காயன் தத்தனார் (304):—தமிழ் அரிச்சுவடிக்குத் தமிழ்க் கணக்கென்றும் நெடுங்கணக்கென்றும் பெயருண்டு. ஆயம் - கூட்டம். பிள்ளைகளைக் கூட்டமாகச் சேர்த்துத் தமிழ்க் கணக்கைக் கற்பிக்கும் உபாத்தியாயர் கணக்காய ரெனப் படுவார். இவர் ஆசிரியத் தொழிலுடைய தத்தனாராவர். சுருதவேட்டையை இவர் நன்கு கூறியுள்ளார்.

கந்தக்கண்ணனார் (94):—பித்திகத்தின் அரும்பு உரிய பருவத்தின் முன்னும் சிவந்ததென்றும் அதனால் வருந்தேனென்றும் தலைவி கூறுவதாக இவர் வாக்கில் உள்ளது வியக்கத்தக்கது.

கபிலர் (13, 18, 25, 38, 42, 87, 95, 100, 106, 115, 121, 142, 153, 187, 198, 208, 225, 241, 246, 249, 264, 288, 291, 312, 355, 357, 361, 385):—இவர் வேறு, தொல்கபிலர் என்பவர் வேறு. இவர் அந்தணர். வேள்பாரியின் நண்பர். அவன் இறந்த பின்பு அவன் மகளிரை அழைத்துச் சென்று மணம்செய்து கொள்ளும்படி விச்சிக்கோன், இருங்கோவேள் என்பவர் களை வேண்டி அவர்கள் மறுத்தமையால் வெறுத்துப் பின்பு அம்மகளிரைப் பார்ப்பார்ப் படுத்துத் தம் கடமைக்கழித்தனர். இவர் ஐங்குறுநூற்றில் குறிஞ்சியைப் பொருளாகவுடைய மூன்றும் நூறையியற்றினர்; பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தைப் பாடிச் சேரமான் செல்வக் கடுங்கோவாழியாதனிடம் நூறு யிரம் காணமும் அவன் ஒரு மலைமீதேறிக் கண்டு கொடுத்த நாடு ஒன்றும் பரிசிலாகப் பெற்றனர். எட்டுத் தொகையுள் நற்றிணையில் 20 பாட்டும், கலித்தொகையில் 29 பாட்டும், புறநானூற்றில் மூப்பதும் இவர் இயற்றின. அன்றியும் தமிழ்

நாவலர் சரிதையிற்கண்ட, "நெட்டிலையிருப்பை" என்னும் பாட்டும், பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டும், திருவள்ளுவமாலையில் ஒரு செய்யுளும், இன்னுநாற்பதும் இவராற் பாடப்பட்டனவே. பன்னிரு பாட்டியலில் இவர் பெயரோடு சில சூத்திரங்கள் காணப்படுகின்றன. இவருடைய வாக்கில் விநாயகர், முருகக்கடவுள், சிவபெருமான், பலதேவர், திருமால் இவர்களுடைய துதிகள் வந்துள்ளன. பெருங்குன்றூர்கிழாரும், பொருந்திலிளங்கீரனாரும், மாறோக்கத்து நப்பசலையாரும் இவரைப் பலவாறு பாராட்டியுள்ளனர். இவராற் பாடப்பெற்றோர்:—அகுதை, இருங்கோவேள், ஓரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், சேரமான் மாந்தரஞ்சேரலிரும் பொறை, நள்ளி, மலையமான் திருமுடிக்காரி, மலையன், விச்சிக்கோன், வேள்பாரி, வையாவிக் கோப்பெரும்பேகன் என்பவர்கள். கொல்லிமலை, பறம்புநாடு, பறம்புமலை, மூள்ளூர்க்கானம், மூள்ளூர்மலை என்பவை இவர்காலத்தில் விளக்கமுற்றிருந்தன. இவர் குறிஞ்சியைப் பாடுவதில் மிக்க திறமை வாய்ந்தவர். நட்பு, வண்மை, நன்றி மறவாமை என்னும் இயல்புகளை இவர் செய்யுட்களிற் காணலாம். பரணருக்கும் இடைக்காடருக்கும் இவர் சிறந்த நட்பினர். இவருடைய விரிவான வரலாற்றைப் பத்துப் பாட்டினுள்ள பாடினோர் வரலாற்றிற் காணலாம்.

கயத்தூர் கிழார் (354):—கயத்தூர் என்பது சோழநாட்டின்கண் உள்ளதோர் ஊர். இவர் வேளாண் மரபினர். தோழி தலைவனிடம், "யாம் உனக்கு இனியமாக இருந்தும் நெடுங்காலம் பழகினமையினால் நின்னால் வெறுத்தற்குரியே மாயினேம்" என்னும் நினைவுபற்றி, "நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும், ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்" என்று கூறுவதாக இவர் ஒரு செய்யுள் செய்திருக்கிறார். "நீ எம்மைப் பிரிவையாயின் எம்முடைய தந்தையின் வீட்டுக்கு அழைத்துச் செல்வாயாக" என்று தோழி தலைவியை உளப்படுத்தித் தலைவனிடம் கூறியது உலக வழக்கை ஒட்டிய கூற்றாகும்.

கயமனார் (9, 356, 378, 396):—பசிய இலையினின்றும் மேலெழுந்த நெய்தற்பூ கழியில் வெள்ளம் மிகும்போதெல்லாம் கயத்தின் கண்ணே மூழ்கும் மகளிருடைய கண்ணை யொக்குமென்று இவர் ஒரு செய்யுளிலே (9) பாடுகின்றார். இதுபற்றி இவர் கயமனார் என்ற சிறப்புப் பெயர் பெற்றாரென்று ஊகிக்கப்படுகின்றது போரில் இறந்த மகனுடைய பிரிவாற்றாது வருந்தும்

நற்றூயின் இயல்பை இவர் புலப்படுத்தியுள்ளார் (புறநா. 254.) அகநானூற்றிலும் புறநானூற்றிலும் இவர் பாடல்களில் புலம்பல் மிகுதியாகத் தோற்றுகிறது. அன்னியென்பான் குறுக்கைப் பறந்தலையில் திதியன் என்பானை வெற்றி கொண்டு அவனது காவல் மரமாகிய புன்னையை வெட்டினான் என்ற செய்தி (அகநா. 145) இவராற் கூறப்பட்டுள்ளது. சோழநாட்டிற் காவிரியின் வடகரையில் இப்பொழுது பாண்டூர் எனவழங்கும் திருவன்னியூர் என்பதும் அதனருகிலுள்ள திருக்குறுக்கை வீரட்டம் என்பதும் மேலே கூறிய செய்திக்குத் தொடர்புடையனவென்று கருத இடமுண்டு. இவரியற்றிய வேறு செய்யுட்கள்: 19 (நற். 6; அகநா. 12; புறநா. 1.)

கருவூர்க் கதப்பிள்ளை (64, 265, 380):—இவர் பெயர் கருவூர்க் கந்தப்பிள்ளை என்றும் காணப்படுகிறது. கருவூர்க் கதப் பிள்ளை சாத்தனர் என்ற புலவர் இவருடைய மகனர் என்று கருத இடமுண்டு. இவர்கள் இருவருடைய பாடல்களும் தொகைநூல்களிற் காணப்படுகின்றன. இவராற் பாடப் பட்டோன் பாண்டியனுடைய வீரனும் கந்தன் என்னும் பெயரினனுமாகிய நாஞ்சில் வள்ளுவன் என்பான். இவர் பாடிய வேறு செய்யுள்: புறநா. 1.

கருவூர்கிழார் (170):—தலைவனது நட்பில் தனக்குள்ள உறுதியைத் தலைவி கூறுவதாக உள்ள செய்யுள் ஒன்றே இவர் பெயரால் வழங்குகின்றது. யானைக்குக் கொறுக்காந்தட்டையினிடத்துள்ள விருப்பத்தை இவர் பாடல் புலப்படுத்துகிறது.

கருவூர்ச் சேரமான் சாத்தனர் (268):—இவர் கருவூரார்; சேரர் மரபினர்; தோழி தலைவியைநோக்கி, "வந்து அடைந்தவர்பால் செல்கின்றீரோ வென்று செப்பலும் ஆற்றும்; மீண்டும் வருவீரோ வென்று வினவலும் ஆற்றும்; யாங்குச் செய்வாம்?" என்று கூறும் முகத்தால் வரைந்து கோடலே தக்க தென்று புலப்படுத்தியதாக இவர் ஒரு செய்யுள் பாடியுள்ளார்.

கருவூர்ப் பவுத்திரனர் (162):—பவித்திரன் என்ற சொல் பவுத்திரன் என்று திரிந்தது போலும்; பவித்திரன் - தூய்மையுள்ளவன். பூதனர் என்ற சொல்லும் இப்பொருளிலேயே வருமென்று அறிஞர் கூறுவர்.

கருஞூரோத ஞானி (71) :—ஓதஞானி - பரந்த ஞானி ; வடசொற் றொடர். தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கிய தாக இவர் கூறும் ஒரு பாடலே இவர் புலமையை நன்கு தெரிவிக்கின்றது. 227-ஆம் செய்யுளை இயற்றிய ஓதஞானி வேறு ; இவர் வேறு.

கல்பொரு சிறு நுரையார் (290) :—தலைவனைப் பிரிந்திருக்க மாட்டாத தலைவி அப்பிரிவினால் உண்டாகும் துன்பமிகுதியைப் புலப்படுத்தி, 'யாமெங் காதலர்க் காணே மாயிற், செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க், கல்பொரு சிறுநுரை போல, மெல்ல மெல்ல வில்லா குதுமே' என்று கூறுவதாகப் பாடின மையின் இவர் இப்பெயர் பெற்றார்.

கல்லாடனார் (260, 269) :—கல்லாடமென்னும் ஊரினராதலின் இவர் இப்பெயர் பெற்றார்போலும் ; "கல்லாடத்துக் கலந்தினி தருளி "(திருவா. கீர்த்தி.) என்பதை நோக்குக. தொல் காப்பியத்திற்கு உரை செய்தவர்களுள் கல்லாடர் என்பவர் ஒருவர் ; "ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்திற், குரை யிடையிட்ட விரகர்கல் லாடர்" என்னும் ஆன்றோர் வாக்கா லுணர்க. அவர் வேறு, இவர் வேறு. இவருடைய பாடல்களில் பகைவருடைய நீர்நிலையைக் கெடுத்தல், கடிமரந்தடிதல், அவர் முரசைக் கைக்கொள்ளல் முதலிய தலைவர்களின் வீரச்செயல் களும், பகைவர் இறந்தபின் அவருடைய மனைவிமார் கைம் மைநோன்பு நோற்றிருத்தலும் கூறப்பெற்றுள்ளன. இவர் கிணைப்பொருநனுக்குத் தம்மைக் காட்டி அவன் செயல்களை முறையே சொல்லிச் செல்லும் மறக்களவழி, ஏர்க்களவழுவக மென்னும் துறைகள் நயப்பாடுடையன பகைவரைக் கொன்ற விடத்து அவருடைய பெண்டிர் தம் இளம்புதல்வரைப் பாது காக்கும் நிமித்தம் இறந்து படாமல் இலைகளைத் தின்று உயிர்வாழ்தலைப் புலப்படுத்தி இவர் கூறியிருக்கும் செய்யுள் யாருடைய மனத்தையும் கனியச்செய்யும். பதினோராம் திரு முறையிலுள்ள திருக்கண்ணப்பதேவர் மறம் என்னும் நூலொன்று இவர் செய்ததாகக் கூறுவர். பன்னிரு பாட் டியலில் இவர் செய்தனவாகச் சிலசூத்திரங்கள் உள்ளன. இலக்கணவுரைகளில் கல்லாடமாமூலர் என்று ஒரு தொடர் மொழி இருத்தலால் மாமூலரோடு இவர் நட்புடையவரென்று சொல்லலாம். எட்டுத்தொகையுள் இவர் இயற்றிய வேறு பாடல்கள் 12 (அகநா. 7 ; புறநா. 5.) திருவள்ளுவமாலையில்

இவர் இயற்றிய செய்யுளொன்று உள்ளது. இவராற் பாடப் பெற்றோர்: அம்பர் கிழானருவந்தை, பாண்டியன் தலையாலங் கானத்துச்செரு வென்ற நெடுஞ்செழியன், புல்லி, பொறையாற்றுக் கிழானென்பர்.

கவைமகனார் (324):—இரட்டைப் பிள்ளைகளைக் கவை மகவெனக் கூறி அவர்கள் நஞ்சுண்டதை உவமையாக எடுத்தாண்டமையின் இவர் இப் பெயர் பெற்றார்.

கழார்க்கீரனெயிற்றியார் (35, 261, 330):— கீரனென்பவருக்கு உறவினர் போலும். இவர் பெண்பாற் புலவர். கழார் என்பது மாயூரத்திற்கு அருகிலிருக்கும் ஓர் ஊர். இப்புலவரே அதனை, 'வெல்போர்ச் சோழர் கழாஅர்' (நற். 281) என்பர். இவர் பனிக் காலத்தையே மிகுதியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார் (அகநா. 163, 217, 235, 294.) கரும்பின் அரும்புக்குப் பசும்பாம்பின் சூல் உவமை யாதலும், மழை மிகுதியினல் எள்ளுக்காய் உள்ளீடில்லாமற் போதலும் (35, 261) இவராற் காட்டப் பெற்றுள்ளன. வண்ணத்தியின் செயலை இவர் அழகாகவும் சுருக்கமாகவும் உவமையாகக் காட்டியிருப்பது (330) பாராட்டற் குரியதாகும். எட்டுத் தொகையில் இவர் இயற்றிய வேறு செய்யுட்கள் 7 (நற் 2; அகநா. 5)

கள்ளிலாத்திரையனார் (293):—கள்ளில் என்பது தொண்டை நாட்டின்கண் ஸ்ரீ ஞானசம்பந்தர் தேவாரம் பெற்ற ஒரு சிவஸ்தலம். ஆத்திரையனார் அத்திரி குலத்திற் பிறந்த ஓர் அந்தணர். ஆத்திரேய கோத்திரத்துப் புலவர் பிறரும் உண்டு; நற். 386.நன்றியறிவு முதலிய உத்தமகுணத்தினர். இவராற் பாடப்பட்டோர் வேங்கடமலைக்குத் தலைவனாகிய ஆதனுங்கனும், ஆதியருமனும், உதியனும் ஆவர். இவர் செய்த வேறு பாடல்கள்: 2 (புறநா, 175, 389.)

காக்கைபாடினியார் நச்செள்ளையார் (210): இவர் பெண்பாலார். ஆடுகோட் பாட்டுச் சேரலாதனென்னும் அரசன் மீது பதிற்றுப்பத்துள் ஆரும் பத்தைப் பாடி, அணிகலனுக்கென்று ஒன்பது துலாம் பொன்னும், நாருயிரம் பொற்காசும் பரிசு பெற்றவர்; நச்செள்ளையாரென்பது இவரது இயற்பெயரென்பதும், குறுந்தொகையில், "திண்டேர் நள்ளி கானத்தண்டார், பல்லா பயந்த நெய்யிற் றிரண்டி, முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ, றெழுகலத் தேந்தினுஞ்

சிறிதென் றேழி, பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு, விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" என்னும் பாட்டில் காக்கை கரைந்தமையைப் பாராட்டிக் கூறிய அருமைபற்றிக் காக்கைபாடினியார் என்ற சிறப்புப்பெயரைப் பிற்காலத்தில் ஆன்றோரால் இவர் பெற்றனரென்பதும் தெரிகின்றன ; பாடினி - பாடுபவள். செள்ளை யென்பது பெண் பாலார்க்கு இயற்பெயராகப் பண்டைக்காலத்து வழங்கி வந்தது போலும்; பதிற். 9-ஆம் பத்தின் பதிகத்தில் மையூர் கிழானுடைய மனைவியின் பெயர் அந்துவஞ்செள்ளை யென்று வந்திருத்தல் காண்க. மறக்குடி மங்கையின் இயல்பை விளக்கி இவர் பாடிய' "படுமகன் கிடக்கை காணூஉ, ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே" (உஎஅ) என்னும் புறப் பாட்டும் அப்பாடல் ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண் பாலாருடைய பாக்களின் வரிசையிற் சேர்க்கப்பெற்றிருத் தலும் இவர் பெண்பாலாராதலை வலியுறுத்தும் ; 'கல னணிக' என்று அரசன் பொற்காசு முதலியன கொடுத்தா னென்றது ஈண்டு அறியற்பாலது. 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோரிடைச்சொல்.

காமஞ்சேர் குளத்தார் (4) :—துக்கக் கண்ணீர் வெம்மையுடைய தாதல் பற்றி அதனை 'இமை தீய்ப்பன்ன கண்ணீர்' என்றும், பொறுத்தற்கரியது அஃது என்பது தோன்ற, தாங்கி' என்றும் இவர் குறித்த நயம் இன்புறத் தக்கது.

காலெறி கடிகையார் (267) : தலைவியின் எயிற்று நீரின் இனி மைக்குக் கரும்பின் காலெறி கடிகையின் சுவையை உவமைய்ாக்கிச் சிறப்பித்தலின் இவர் இங்ஙனம் குறிக்கப் பெற்றார். "மூடிகையினுற்றெடு மோட்டுமுவர் முன்கைத் தருக்கைக் கரும்பின் கட்டிக், கடிகையினுலெறி காட்டுப் பள்ளி" (தே. திருஞா. கீழைத்திருக்காட்டுப் பள்ளி) என் பதிலும் இது வந்துள்ளது.

காவன் முல்லைப்பூதனார் (104, 211): இவரது இயற்பெயர் பூதனார். காவன் முல்லை என்பது புறத்திணைத் துறை களுள் ஒன்று. இவர் அத்துறையைப் பாடும் வல்லமை யுடையார் போலும். பாலைத்திணையை மிகுதியாகக் கூறுகிறார். நல்கூர்ந்தோரின் நிலையும், மிகு பொருள் விரும்பு வாருக்கு அருளில்லாமற் போதலும் இவராற் கூறப்படுகின் றன (அகநா. 151) பல்லி சோதிடங் கூறும் என்று கொண்டு,

எட்டுத் தொகையில், 'கணிவாய்ப் பல்லி' என்கிறார். காட்டில் 'உதிரும் நெல்லிக்காயை வட்டக்கழங்காகக் கொண்டு செம்முக மந்தி ஆடுமென்றும் அதிரற்பூ வெருகின் எயிறு போலுமென்றும் கூறியுள்ளார். இவர் பாடிய வேறு செய்யுட்கள் : 6 (நற். 1; அகநா. 5.)

காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரத்தனார் (342) : கந்தரத்தனார் என்ற பெயர் வேறு புலவர்க்கும் உண்டு. உரோடகத்துக் கந்தரத்தனார் என்ற புலவரின் பெயர் முன்வந்துள்ளது. அடையின்றிக் கந்தரத்தனார் என்ற பெயருடைய புலவர் செய்தனவாக நற்றிணையில் மூன்று பாடல்கள் (116, 146, 238) காணப்படுகின்றன. பலாமரத்தில் உள்ள பழங்களைக் குரங்குகள் கவரா வண்ணம் வலைகளை மாட்டும் வழக்கம் இவர் பாடலால் தெரிகிறது.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (297) :—இப்பெயர் காரிக்கண்ணனெனவும் வழங்கும்; இவருக்கு இப்பெயர் உறுப்பான் வந்தது போலும்; காரி - கரிக்குருவி; இவர் வணிகர்; இதனை, "ஊரும்பேரும்" (தொல். மரபு. சூ. 74, பேர்.) என்பதன் விசேடவுரையால் உணர்க; இவர் வாக்கிற் காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்துறை கூறப்பெற்றுள்ளது (அகநா. கஉக) பாண்டியனுக்குத் திருமாலையும் அப் பாண்டியனும் சோழனும் ஒருங்கிருந்தபொழுது அவர்களுக்குக் கண்ணபிரான் பலதேவிருவரையும் உவமை கூறியிருத்தலின், இவர் திருமாலடியவராகக் கருதப்படுகின்றனர். ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்று மேற்கூறிய அரசருக்கு இவர் கூறும் பகுதியும் பிறவும் இன்பத்தைத் தருவன. அயனே திருவள்ளுவராக வந்து திருக்குறளைத் தந்தானென்றதனால், அந்நூலின்பால் இவருக்குள்ள நன்மதிப்பு வெளியாகும். இவராற் பாடப்பட்டோர் : சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, பிட்டங்கொற்றனென்பார். இவரியற்றிய பாடல்கள் - 8 (அகநா. 2; திருவள்ளுவ. 1; புறநா. 5.)

காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங்கண்ணனார் (347) :—இவரூர் காவிரிப் பூம்பட்டினமாகும். இவர் இள வாகையைக் 'குமரி வாகை' என்கிறார்.

கிடங்கிற் குலபதி நக்கண்ணனர் (252):—கிடங்கில் என்பது ஓர் ஊர். இவ்வூரிற் புலவர் பலர் சங்க காலத்தே இருந்தனர். இவரது இயற்பெயர் கண்ணன். 'ந' என்பது சிறப்புப் பற்றி வந்தது. ஆயிரம் மாணவர்களை ஆதரித்துக் கல்வி புகட்டுவோர் குலபதியாவர். இப்பட்டத்தை உடையவராதல் பற்றி இவர் சிறந்த ஆசிரியர் என்று தெரிகிறது. 'சான்றோர் புகழு மூன்னர் நாணுப; பழி யாங்கு ஒல்ப; அதனல் தோழி, மடவை நீ யெனக் கடவுபு துனியல்' என்று தலைவி கூறுவதாக அமைந்த இந்தச் செய்யுள் ஒன்றே இவரியற் றியதாகத் தெரிகிறது.

கிள்ளி மங்கலங் கிழார் (76, 110, 152, 181):—இவர் பெயர் கிள்ளி கிழார் என்றும் சில பிரதிகளிற் காணப்படுகிறது. இவர் வேளாண்மரபினர் கிள்ளி மங்கலங் கிழார் மகனர் சோகோவனர் என்பவர் ஒருவர் (நற். 365) ஆம் செய்யுளைப் பாடி யிருக்கிறார் அவரை இவருடைய மகனர் என்று கொள்ளக்கூடும். தலைவரைப் பலகாற் காண்டலால் வளருந் தன்மையையுடைய காமத்துக்குத் தாய்முகம் நோக்கி வளருந் தன்மையையுடைய ஆமையின் பார்ப்பை உவமை கூறுகின் றார் (152); திருமனைப் பல கடம் பூண்ட பெருமுது பெண்டிர் தலைவனைக் குறை கூறலாகாது (181) என்பதனை இவர் தலைவியின் கூற்றாக அமைத்துள்ளார்

குட்டுவன் கண்ணனர் (179):—குட்டுவன் - குட்ட நாட்டில் உள் ளவன். கண்ணன் என்பது இவரது இயற் பெயர். சேரருக்கே குட்டுவன் என்ற பெயருண்டு; ஆதலால் இவர் சேரர் மர பினரோ என்று கருதுவாருமுளர். தலைவன் நாய்களோடு வருதலும், யானை மூங்கிலை விரும்பியுண்ணுமென்பதும் இவர் பாடலிற் காணப்படுகின்றன.

குடவாயிற்கீரத்தனர் (281, 369):—குடவாயிலென்பது சோழ நாட்டிலுள்ளதும் சோழர்களின் தலைநகராகவிருந்ததும் தேவாரம்பெற்ற சிவஸ்தலமுமான ஊர்; "தண்குட வாயி லன்னெஞ்", "கொற்றச் சோழர் குடந்தை வைத்த, நாடுதரு நிதியினுஞ் செறிய, வருங்கடிப் படுக்குவள்" (அகநா. சச, கூ०), "தேர்வண் சோழர் குடந்தை வாயில்" (நற். 379) என்ப வற்றால் அவ்வூரின் பெருமையை இவர் புலப்படுத்தியிருக் கின்றனர்; புலவர்கள் தம்மூர்ப்பெயர் முதலியவற்றை ஒரு வகையாகத் தம்முடைய பாடல்களில் தெரிவித்தல் மரபு;

ஓல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன் இறந்த பின்பு அவனுடைய வண்மையைப் பாராட்டியும் இரவலர் வருந்துதலை ஒருவகையாகப் புலப்படுத்தியும் இவர்பாடிய செய்யுள் படிப்பவர் உள்ளத்தை உருகச்செய்யும்; இன்னும் சேரனுடைய தொண்டி, பாண்டியரின் கூடல் நகர், கொற்கைத் துறை, சோழரின் உறையூரென்பவை இவர் பாடலிற் பாராட்டப் பெற்றிருத்தலின், மேற்கூறிய பெருஞ்சாத்தனன்றிச் சேரர் முதலிய முடிமன்னர் மூவராலும் நன்னனாலும் இவர் ஆதரிக்கப்பெற்றவரென்று தெரிகின்றது; பெரும்பாலும் இவர் பாடல்களில் வந்துள்ளது பாலைத்திணை; எட்டுத்தொகையில் இவரியற்றிய வேறு பாடல்கள் - 15 (அகநா. 10; நற். 4; புறநா. 1.)

குடவாயிற் கீரனக்கனார் (79):—யானை ஒமை மரத்தின் தோலை யுண்ணுமென்பதும், பாலை நிலத்திலுள்ள புரு தன் பெடையைப் பயிர்வதும் இவர் பாவிற் காணப்படும் செய்திகள்.

குப்பைக் கோழியார் (305):—தலைமகள் தன் நோயைத் தீர்ப்பார் ஒருவருமின்றித் தான் வருந்துவதைப் பிறரால் ஏவப் படாமலும் இடையே விலக்கப்படாமலும் குப்பைக் கோழிகள் இரண்டு தம்மிற் பொருது அழிவதற்கு உவமையாகக் கூறியதனால் இவர் இப்பெயர் பெற்றார்.

குழற்றத்தனார் (242):—தத்தன் என்பது இவர் இயற்பெயர். குழல் என்பது புல்லாங் குழலைக் குறிக்குஞ் சொல்லாக இருத்தல் கூடுமோ என்று தோற்றுகிறது. தலைவன் தலைவியுடன் இல்லறம் புரிதலைச் செவிலியின் கூற்றில் இவர் அமைத்திருப்பது படித்து இன்புறற் பாலது.

குறியிறையார் (394):—குறியிறைப் புதல்வர் என்ற ஒரு தொடரைத் தம் செய்யுளில் அமைத்துப் பாடிய காரணத்தால் இவர் இப்பெயர் பெற்றார்.

குறுங்கீரனார் (382):—உடலின் குறுமை பற்றி, குறு முனி, குறு வழுதி என்பவற்றைப் போல இவர் இப்பெயர் பெற்றார் போலும். காலமல்லாத காலத்திற் பெய்யும் மழைக்கு முல்லையும் தளவும் மலர்ந்தன வென்று தோழி கூறுவதாக இவர் செய்யுளில் அமைத்துள்ளார்.

குறுங்குடிமருதனார் (344):—மருதனார் என்பது இவரது இயற்பெயர். குறுங்குடியாகிய பாண்டிநாட்டு விஷ்ணுஸ்தலம்

இவருடைய ஊர். அகநா 4 இவர் செய்தது. இவ்விரு பாடல்களிலும் முல்லையையே வருணிக்கிறார். "தாதுண் பறவை பேதுற லஞ்சி, மணிநா வார்த்த மாண்விளிம்பின் தேரன்" (அகநா. 4) என்று தலைவனது அருமை இவர் குறிப்பிக்கிறார். மாலையில் வீடு திரும்பும் தாய்ப்பசுவின் வருணனை படித்து இன்புறற்பாலது.

குன்றியனார் (50, 51, 117, 238, 301, 336):—வரைவு மலிவுக்கு இவர் கூறும் காரணங்கள் சிறந்தனவாக உள்ளன; 51. தலைவனது மணிகள் கட்டிய தேர் வாராதாயினும் வருவது போலத் தன்செவிகளில் இசைக்குமென்று தலைவி கூறுவதாக இவர் குறிப்பிடுகிறார் (301.) இவர் கூறும் மாலை வருணனை (நற். 117) சுவைபட அமைந்துள்ளது. இவர் மேலைக் கடற்கரை நகரமாகிய தொண்டி என்ற ஊரை வருணிக்கிறார்; 238. களவு, கற்பாகிய இருவகை ஒழுக்கங்களையும் நெய்தற்றிணையால் அமைத்துப் பலவாறு பாராட்டியுள்ளார். எட்டுத்தொகையில் இவரியற்றியுள்ள வேறு செய்யுட்கள்: 4 (நற். 2; அகநா 2)

கூடலூர்கிழார்:—(166, 167, 214):—இவர் மலைநாட்டின்கண்ணதாகிய கூடலூரை இருப்பிடமாக உடையவர்; வேளாண் மரபினர்; இவருடைய பாடல்கள் இன்சுவையைத் தருபவை; ஒரு விண்மீன் வீழ்ச்சியைக் கண்டு கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சேரலிரும்பொறை என்னும் அரசன் இன்னாளில் இறப்பானென்று முதலில் நிச்சயித்திருந்து அவ்வாறே அவன் இறந்ததுகண்டு ஒருவாற்றானும் பிரிவாற்றாது வருந்தினரென்று, "ஆடியலமற்குட்டத்து" (புறநா. உஉசு) என்னும் பாடலாலும் அதன்பின்னுள்ள வாக்கியங்களாலும் தெரிதலால், இவர் கணிதத்திலும் வல்லவராகக் கருதப்படுகிறார்; இவர் மேற்கூறிய அரசனால் மிகவும் ஆதரிக்கப் பெற்றவர்; அவன் வேண்டுகோளால் ஐங்குறுநூறென்னும் தொகைநூலைத் தொகுத்தவர் இவரே; ஐங்குறுநூற்றின் இறுதி வாக்கியத்தில் 'புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்' என்று ஆன்றோராற் சிறப்பித்துக் கூறப் பெற்றிருத்தலின், இவருடைய பெரும்புலமை நன்கு வெளியாகின்றது; இவர் காலத்துப்புலவர்கள் குறுங்கோழியூர்கிழார், பொருந்தில் இளங்கீரனார் என்பவர்கள். இவரியற்றிய வேறு பாடல் புறநானூற்றில் ஒன்றுள்ளது.

கூவன் மைந்தனார் (224):—இராக்காலத்தில் இணற்றில் விழுந்து விட்ட பசுவின் துயரைக் கண்டு அதனைப் பிறருக்குச் சொல்லும் வல்லமையில்லாத ஊமனைத் தன் துயரைப் பிறருக்குச் சொல்லும் வலியின்றி வருந்தும் கிழத்திக்கு உவமை கூறியுள்ளார். இங்கே, "கூவற் குராலான் படுதுயர்" என்ற தொடரினால் இவர் கூவன் மைந்தன் என்று பெயர் பெற்றார் என்பர்

கொல்லன் அழிசி (27, 138, 145, 240):—கொல்லன் என்பது சாதி பற்றிய பெயர். இவரது இயற்பெயர் அழிசி என்பது. மதுரைக் கொல்லன் புல்லன், மதுரைப் பெருங் கொல்லன் என்று இவ்வகுப்பாரில் வேறு புலவரும் இத் தொகை நூலிற் பாடியுள்ளார்கள். இவர் சார்த்துவகையால் நன்னனது ஏழிற் குன்றத்தைக் கூறியிருப்பதனால் (138) அவன் காலத்தவராகக் கருதப் படுகிறார். ஏழிற் குன்றத்தில் மயில்கள் உள்ளனவென்று இவர் கூறியவாறே 'நன்ன னேழி னெடு வரைப் பாழிச் சிலம்பிற் களிமயில்' (அகநா. 152) என்று பிறரும் கூறியுள்ளார். இருளில் மலை மறைவதற்குக் கடலில் கலம் ஆழ்வதை இவர் உவமை கூறியிருத்தல் (145) பாராட்டற்பாலது. அழிசி என்னும் பெயர் அழுசி யென்றும் வழங்குகிறது.

கொல்லிக் கண்ணனார் (34):—கொல்லிமலையைச் சார்ந்தவர் இவர். குட்டுவன் சேரனுடைய மரந்தை நகரை இவர் கூறுவதனால் அவன் காலத்தவராகக் கருதப்படுகிறார். 'இரங்கு நீர்ப் பரப்பின் மரந்தையோர் பெரும' (பதிற் 90: 28) என்ற அடியை நோக்கும்போது மரந்தை என்பதே ஏற்புடைத் தாகத் தோற்றுகின்றது.

கொற்றனார் (218, 358):—இவர் நக்கீரருடைய புதல்வர். கீரங் கொற்றன் எனவும் வழங்கப்படுவர். இறையனாரகப் பொருளுக்கு முதலில் நல்லுரை கண்டு அதனை நக்கீரர் தம் புதல் வராகிய இவருக்குக் கூறினரென்று இறையனாரகப் பொருளுரை கூறும். இவர் நற்றிணையில் ஒரு செய்யுளை இயற்றியுள்ளார்.

கோக்குள முற்றனார் (98):—கோக்குளம் என்பது ஓர் ஊர்; வெண் காடு. கோக்குளமுற்றம் என்ற சொல்லே ஓர் ஊரின் பெயர் என்றும் கொள்ளுதல் கூடும். இந்நூலிலொன்றும் நற்றிணையிலொன்று மாக (96) இவர் இரண்டு பாடல்களைச் செய்தவர். இவ்விரண்டிலும் தலைவன் பிரிவினால் தலைவி

மின் மேனி பசலை பாய்ந்து அழகழிந்தமையைக் கூறியுள்ளார். இவர் பாடல்களில் நெய்தலும் முல்லையும் சிறப்பிக்கப் பெற்றுள்ளன.

கோப்பெருஞ்சோழர் (20, 53, 129, 147):—பிசிராந்தையாரின் நண்பராகக் கருதப்பட்டவர் இவரே. புலவர்பால் மிக்க அன்பு பூண்டவர். தலைவன் பாங்கனை விளிப்பதாக இவர் கூறும் பகுதியில், "எலுவ சிறு அரேமுறு நண்ப, புலவர் தோழ" (129) என்று புலவர்களுக்குத் தோழனை இருத்தலின் பெருமையைப் புலப்படுத்தியுள்ளார். அரசர்களுக்கு இன்றியமையாத அருளும் அன்புப் * தலைவனுக்கு இன்றியமையாதவை என்று கூறுவதனால் (20) இவரது செங்கோன்மை புலனாகும். புறநானூற்றில் இவர் பாடியனவாக மூன்று செய்யுட்கள் காணப்படுகின்றன (214 - 16.) அவை இவருடைய உயரிய மனப்பான்மையை விளக்குவனவாகும். அங்கே இவர் கூறும் நீதிகள் பலகால் படித்தின்புறற்பாலன.

கோவதத்தர் (66, 194):—வம்பமாரியைக் காரென மதித்துக் கொன்றை மலர்ந்ததனால் அவை அறிவற்றவை என்று தோழி கூற்றில் இவர் கூறியுள்ளார். மயில் அகவுதல் காம உத்தீபனம் என்பது இவர் வாக்கால் தெரிகிறது.

கோவூர்கிழார் (65):—இவர் வேளாண்மரபினர்; கோவூரென்னும் ஊரினர்; சோழ பரம்பரையோரால் ஆதரிக்கப் பெற்றவர்; நன்றியறிவுள்ளவர்; பிறருடைய சீற்றத்தைத் தணித்தலிற் கண்ணுங் கருத்துமாகவிருந்து வாழ்ந்தவர்; யாரும் மன ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்பது இவரது கொள்கை. கணநூல், சோதிடநூல், இசைநூல் என்பவற்றில் வல்லுநர்; உவமை கூறுதலினும் உபகாரிகளின் குணங்களைப் பாராட்டுதலிலும் வீரச் செயல்களை விளக்குதலிலும் மிக்க ஆற்றல் வாய்ந்தவர்; அஞ்சாத நெஞ்சினர். இவை இவருடைய பாடற்பகுதிகளால் விளங்கும். சோழர்களுள், நலங்கிள்ளி யென்பவன் ஒரு காலத்தில் ஆவூரையும் ஒருகாலத்தில் உறையூரையும் முற்றியிருந்தபொழுது அவ்வக்காலங்களில் அடைத்துக்கொண்டு அந்நகரங்களுக்குள்ளே அஞ்சியிருந்த நெடுங்கிள்ளியை நோக்கி, 'வெளியேவந்து போர்செய்தல், ஒற்றுமையுடன்

* 'அருளு மன்பு நீக்கி நீங்கா, நிரயங்கொள் பவரோடொன் றுது காவல், குழவிகொள் பவரி னேம்பு மதி" (புறநா. 5.)

வாழ்தல் இந்த இரண்டனுள் ஒன்றைச்செய்து கொள்க' என்று இடித்துக்கூறிய பகுதியும் (புறநா. சச - ரு), நலங் கிள்ளியிடமிருந்து உறையூருக்கு வந்த இளந்தத்தனென்னும் புலவனை ஒற்றுவந்தானென்று நெடுங்கிள்ளி கொல்லத் தொடங்கியபோது அப் புலவனை உய்வித்தற்பொருட்டுப் பொதுவாகப் புலவர்களின் இயல்பை விதந்து கூறிய பகுதியும் (புறநா. சள), மலையமான் மக்களைக் கிள்ளிவளவன் யானைக்கு இடத்துணிந்தபொழுது அவர்களை உய்விக்கவும் அவனுடைய மனத்தைக் கனிவிக்கவும் எண்ணிச் சிறுவர்களின் இயல்பை எடுத்துக் கூறிய பகுதியும் (புறநா. சசு) இவருடைய ஆற்றலை யும் அருமைக் குணங்களையும் புலப்படுத்தும். "சிறப்புடை மரபிற் பொருளுமின்பமும், அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல, இருகுடை பின்பட வோங்கிய வொருகுடை", "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்", "ஊன்சோற் றமலை பாண்கடும் பருத்தும், செம்மற் றம்மனின் வெம்முனை யிருக்கை", "காலனுங் காலம் பார்க்கும் பாராது, வேலீண்டு தானை விழுமியோர் தொலைய, வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே", "மையல் கொண்ட வேமமி லிருக்கையர், புதல்வர் பூங்கண் முத்தி மனையோட், கெவ்வங் கரக்கும் பைதன் மாக்களொடு, பெருங்கலக் குற்றன்ரூற் ருனே காற்ரே, டெரிநிகழ்ந் தன்ன செலவிற், செருமிகு வளவனிற் சினை இ யோர் நாடே", "உடும்புரித் தன்ன வெண்பெழு மருங்கிற், கடும்பின் கடும்பசி களையுநர்க் காணது, சில்செவித் தாகிய கேள்வி நொந்து நொந்து", "மென்மையின் மகளிர்க்கு வணங்கி வன்மையின், ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை, புனிறுதீர் குழவிக் கிலிற்று முலை போலச், சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர், மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்", "யானை, நெடுநகர் வரைப்பிற் படுமுழா வோர்க்கும், உறந்தை யோனே குருசில், பிறன்கடை மறப்ப நல்குவன் செலினே", "தைஇத் திங்கட் டண்கயம் போலக், கொளக்கொளக் குறைபடாக் கூழடை வியனகர், அடுதீ யல்லது சுடுதீ யறியா, திருமருந்து விளைக்கு நன்னாட்டுப் பொருநன்", "நிறனுற்ற வராப்போலும் வறன்", "வெய் துண்ட வயர்ப்பல்லது, செய்தொழிலான் வியர்ப்பறியாமை, ஈத்தோ னெந்தை" என்பவை இவருடைய பாடல்களுட் சிறந்த பகுதிகள். இவராற் பாடப்பட்டோரும் இவர் காலத்த வரும் சோழன் நலங்கிள்ளி, சோழன் குளமுற்றத்துத்

துஞ்சிய கிள்ளிவளவன், காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி, சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், சிறுகுடி கிழான் பண்ணனென்போரும் அவர்களைப்பாடிய புலவர்களும் ஆவர். இவர் இயற்றிய வேறு பாடல்கள் - 17 (திருவள்ளுவ. 1; நற் 1; புறநா. 15)

கோவேங்கைப் பெருங்கதழ்வர் (134):—வேங்கை மரத்தைக் கதழ்வீழ் அருவி தாக்குவதாகக் கூறியிருத்தலின் இவர் இப் பெயர் பெற்றனர்.

கோழிக் கொற்றனர் (276):—இவர் கோழி என்ற பெயரை யுடைய உறையூரைச் சார்ந்தவர்; உறையூர் பல புலவர்களுக் கிடமாக இருந்தமை வெளிப்படை இவரது இயற்பெயர் கொற்றன் என்பது. தலைவன் அறங்கூறவையத்துச் சான்றோரிடம் தலைவியைப் பற்றிக் கூறி அவளைப்பெற விரும்பிக் கேட்டல் இவர் பாடலிற் காணப்படுகிறது.

சத்திநாதனர் (119):—தலைவனை ஓர் இளைய மகள் வருத்திய தற்குச் சிறிய பரம்புக் குட்டி காட்டிலுள்ள பெரிய யானையை வருத்துவதை இவர் உவமை காட்டியுள்ளார்.

சாத்தனர் (349):—சாத்தன் என்ற பெயரிய புலவர் பலராவர். இரந்தோர் வேண்டியவற்றைக் கொடுத்து மீட்டும் அவைதா வென்று சொல்லுவதினும் இன்னுயிர் இழப்பு இனியதாகும் என்ற நீதியைத் தலைவியின் கூற்றில் இவர் அமைத் துள்ளது சிறந்த பகுதியாகும்.

சிறைக்குடி ஆந்தையார் (56, 57, 62, 132, 168, 222, 273, 300):—சிறைக்குடி என்பது ஓர் ஊர். அவ்வூரினர் இவர். "புணரிற் புணராது பொருளே பொருள்வயிற், பிரியிற் புணராது புணர்வே" என்றும், "பொருளே, வாடாப் பூவின் பொய்கை நாப்பண், ஓடுமீன் வழியிற் கெடுவ" (நற். 16) என்றும் பொருளைப் பற்றி இவர் கூறியுள்ளார். பிரிவி னும் புணர்ப்பின் மிகுதியையே தம் பாடல்களில் இவர் பலபடப் பாராட்டியுள்ளார். தலைவி, "இருவேமாகிய உலகத், தொருவேமாகிய புன்மை நாமுயற்கு உடனுயிர் போகுக" (57) என்பதும், "கடல் சூழ் மண்டிலம் பெறினும் விடல் சூழலன்" (300) என்று தலைவன் தலைவிக்கு உறுதி கூறுவதும் தலைவன் தலைவியரில் ஒருவர்பால் மற்றொருவர் வைத்துள்ள அன்பைப் புலப்படுத்துவனவாகும். தலைவி

தோழியின் வழி ஒழுகுவாள் என்பதை, "தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும், கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும் புணைகை விட்டுப் புனலோ டொழுகின், ஆண்டும் வருகுவள் போலும்" (உஉஉ) என்பதனால் இவர் புலப்படுத்தியிருக்கும் நயம் படித்தின்புறற் பாலதாகும். இந்நூலிலன்றி நற்றிணையில் ஒரு செய்யுள் இவர் செய்தது.

செம்புலப் பெயனீரார் (40):—நொது மலராக இருந்த தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டு உள்ளப்புணர்ச்சியுற்றதை, "செம் புலப் பெயனீர் போல, அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே" என்று உவமை வாயிலாக வெளியிட்ட சிறப்புப் பற்றி இவர் இப்பெயர் பெற்றார்.

செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தனார் (228):—அரசாங்கத்துச் செய்தியைத் தெரிவிக்கும் கருமத்தலைவர்கள் வள்ளுவர் எனப் படுவர். இக்காலத்தில் சோதிடம் கூறுவோர் வள்ளுவர் எனப்பெறுவர். தாழைமலர் குருகுகள் கோதுகின்ற சிறகைப்போல மடல் விரியும் என்று ஒரேநிலப் பொருளாதல் பற்றித் தாழைக்குக் குருகினை இவர் உவமை கூறியது அழகாக அமைந்துள்ளது.

செல்லூர்க் கொற்றனார் (363):—இவர் செல்லூரென்னும் ஊரினர். குறிஞ்சியும் முல்லையும் மயங்கிய பாலைத்திணையைப் பற்றிய ஒரு செய்யுளே இவர் பாடியது.

சேந்தம் பூதனார் (247):—சேந்தனுடைய மகனார் சேந்தம் பூதனார் எனப்படுவர். சேந்தங் கண்ணனார், சேந்தன் கீரனார், சேந்தன் கூத்தனார், சேந்தங் கொற்றனார் என்ற பெயர்களை யுடைய வேறு சங்கப் புலவரும் உண்டு. "திறவோர் செய்வினை அறவதாகும்" என்பதனால், பெரியோரிடத்து இவருக்குள்ள நல்லெண்ணம் புலனாகின்றது. மலைப் பாம்பு யானையைப் புரட்டுவதாக (நற். 261) நெறியின் தன்மையை இவர் ஓரிடத்திற் புலப்படுத்தி யுள்ளார். இவர் பெரும் பாலும் குறிஞ்சியையும், நெய்தலையும், முல்லையையும் பாடியுள்ளார்.

சேந்தன் கீரனார் (311):—சேந்தனாகிய கீரனார் என்பது இத்தொட ரின் பொருள். தலைவியின் கூற்றாக இவர், "கடுந்தேர் யான் கண்டனனே விலனே,.....ஆய மெல்லாமுடன்கண் டன்றே"

என்று கூறியிருப்பது பெண்கள் வழக்கமாகக் கூறும் கூற்றாக அமைந்துள்ளது.

சேரமானெந்தை (22):—உத்தம மகளிருடைய நுதல் இயற்கை மணமுடைய தென்று கொண்டு இவர் "தேமூரொண் ணுதல்" என்பர். தோழி தலைவியை ஆற்றுவிக்க வேண்டி, "தலைவன் செலவு நின்னெடும் ஆகும்" என்று கூறுவது இலக்கியங்களில் அருமையாகக் காணப் படுவதொன்றும். அகநா. 41 - ஆம் பாடலும் இவரியற்றிய தென்பது பல சுவடி களால் தெரியவருகிறது.

தங்கால் முடக்கொல்லனார் (217):—தங்கால் - தண்கால்; இது பாண்டி நாட்டிலுள்ளது; திருத்தண்காலென இக்காலத்து வழங்கும்; திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. செவிலித் தாய்க்குத் தோழி அறத்தொடு நிற்றலைக் கூறும்பாட்டு (அகநா, 48) அழகமைந்த தொன்றாகும். இவரியற்றிய வேறு செய்யுட்கள் 5 (அகநா. 3; நற். 1; புறநா. 1.)

தாமோதரனார் (92):—இவர் தெய்வப் பெயரையுடையவர். மாலைக் காலத்திற் பறவைகள் தம் குஞ்சுகளுக்கு இரை எடுத்துச் செல்வதைக் கண்ட தலைவி தான் மட்டும் தனித்திருத்தலை நினைந்து தான் இரங்கத் தக்கவள் என்று கூறுவதற்குப் பதிலாக மதிமயங்கி, "அளிய தாமே கொடுஞ் சிறைப் பறவை" என்று கூறுவதாக இவர் பாடியுள்ள ஒரு பாடலே இவர் பெயரால் வழங்குகிறது.

தாயங் கண்ணனார் (319):—எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் என்னும் ஒரு புலவர் பெயர் காணப்படுகிறது. இவரும் அவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. இவருடைய பாட்டில் மயானத்தின் இயல்பும் அதன் தொன்மையும் விளங்கக் கூறப்பெற்றுள்ளன. இந்நூலில் இவர் மாலைக் காலத்தை நன்கு வருணித்துள்ளார்.

தீப்புத் தேளார் (1):—உறுப்பாற் பெயர் பெற்றவர் இவர். இப்பெயர் தீப்புத்தேளார் என்றும் காணப்படுகிறது. முருகக் கடவுளைச் சார்த்து வகையாகக் கூறும் இவர் பாடலை இத் தொகை நூலின் முதற்பாட்டாக வைத் திருத்தல் இவரது பெருமையை விளக்குவதாகும். செம்மை என்ற சொல்லும் பொருளும் ஐந்துமுறை பயின்று வருமாறு

நான்கடிகளில் இவர் பாடியுள்ள செய்யுள் பலகால் படித்து இன்புறற்பாலது.

தீன்மிதி நாகனார் (111) :—இவர்பெயர் தீன்மதி நாகனார் என்றும் தீமிதி நாகனார் என்றும் காணப்படுகிறது. "தலைவியின் வேறுபாட்டுக்குள்ள காரணத்தை அன்னை இயல்பாக அறிதல் கூடும்; அங்ஙனம் அறிந்துகொள்ளாது வேலன் கூற்றை நம்புவாளாயின் இல்லவரின் பெருநகையைக் காணத் தலைவன் இங்கே வருக" என்ற கருத்தைத் தோழி கூறுவதாக இவர் பாடல் அமைந்துள்ளது.

தும்பிசேர் கீரனார் (61, 316, 320, 392) :—கீரனார் என்பது இவரது இயற்பெயர். "கொடியை வாழிதும்பி.....மெய்யே கருமை யன்றியுஞ் செவ்வன், அறிவுங்காதோ வறனிலோய் நினக்கே.....பசலை யூதாய் .....அன்பிலர் வெம்மலை யருஞ் சுரமிரந்தோர்க் கென்னிலையுரையாய் சென்றவன் வரவே" (நற். 277) என்றும், "அம்ம வாழியோ வணிச்சிறைத் தும்பி,.....யவர்நாட், டண்ண னெடுவரைச் சேறியாயிற்..... கனைஞர்தங்கை தமரிற்றீரா ளென்மோ.....கிழவோர்க்கே" (குறுந். 392) என்றும் வண்டினைநோக்கி இரண்டிடங்களில் தலைவி தோழிகளின் கூற்றாக இவர் கூறியிருத்தலினால் 'தும்பி சேர்' என்ற அடைமொழி பெற்றார் போலும். கணவன் இறந்துபட மனைவி கைம்மையடைந்து வருந்திய நிலையைக் கண்டார் நிலையாமை கூறி இரங்கியதாக இவர் பாடிய பாட்டு (புறநா., 249) இவர்தம் புலமைக்கு ஒரு சான்றாகும். சிறுகுழந்தைகள் தச்சன் செய்த சிறிய வண்டிகளை ஈர்த்து இன்புறும் வழக்கம் இவராற் கூறப்பட்டுள்ளது (குறுந். 61.) இவர் பாடிய வேறு செய்யுட்கள்: நற். 277; புறநா. 249.

தூங்கலோரியார் (151, 295) :—அகநானூற்றில், "வருநர் வரையாப் பெருநாளிருக்கைத், தூங்கல் பாடிய வோங்குபெரு நலலிசைப் பிடிமிதி வழுதுணைப் பெரும் பெயர்த் தழும்பன்" (227) என்று நக்கீரனார் கூறியிருக்கும் பகுதியிற் காணப்படும் தூங்கல் என்ற சொல் இப்புலவரையே குறிக்கும் என்பர். அங்ஙனமாயின் இவர் ஊணூருக்குத்தலைவனாகிய தழும்பன் என்ற உபகாரியைப் பாடியிருத்தல் கூடுமென்று தெரிகிறது. அப்பாட்டு இப்பொழுது கிடைத்திலது. செல்வக் குறை பாடுள்ள ஒருவனது வாழ்க்கையை இவர், "ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை" என்று குறித்துள்ளார் (295.) ஒரு பசுவினால்

வரும் ஊதியத்தைக் கொண்டு வாழும் வாழ்க்கை செல்வச் சிறப்பில்லாத தென்பது இதன் கருத்து. இச்செய்யுளி லேயே தலைவனது நல்குரவு பற்றி இவர் தலைவியைச் சிறப்பித் திருப்பது அழகாக அமைந்துள்ளது. "மறப்பருங் காதலி யொழிய, இறப்ப லென்பதீண் டிளமைக்கு முடிவே" என்று புணர்ப்பிலேயே இளமைக்கு இன்பம் உண்டாதலை இவர் குறிக்கின்றார் (151.) நற் 60 - ஆம்பாடலும் இவர்பாடியதே.

தேரதரனார் (195) :—இவர் பெயர் தாமோதரன் என்றும் காணப் படுகிறது. பிரிவிடைப் பருவ வரவின்கட் கிழத்தி மெலிந்து கூறுவதாக இவர் கூறும் செய்யுளில் வாடையை, "தைவர லசைவளி" என்று குறிப்பித்து அது மெய்பாய்ந்துறு தரத் தலைவியின் மெய்பிறிதாவதாகக் கூறிய நயம் கூர்ந்து நோக்கத் தக்கது.

தேவகுலத்தார் (3) :—தேவகுலம்—தேவாலயம்; தேவாலயத் தினர் என்பது இத்தொடரின் பொருள். "நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று, நீரினு மாரளவின்றே..... நாடனெஞ் நட்பே" என்று தலைவி கிழவோன் மாட்டுத்தனக் கமைந்துள்ள பெருமையிற்றிரியாத அன்பைப் புலப்படுத் துவதாக இவர் பாடிய செய்யுள் பலமுறை படித்தின்புறற் பாலதாகும்.

தொல் கபிலர் (14) :—குறிஞ்சிப் பாட்டைப் பாடிய கபிலரினும் இவர் வேறு பட்டவர். குறிஞ்சித் திணையைப் பலபடியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பல உள்ளுறையுவமங்களை அடுக்கி யுள்ளார். இவரியற்றிய வேறு பாடல்கள் : நற். 114, 276, 328, 399 ; அகநா. 12, 282.

நக்கீரனார் (78, 105, 143, 161, 266, 280, 368) : —இவரூர் மதுரை; மதுரைக் கணக்காயனாரென்பது இவர் தந்தையார் பெயர். இவர் அந்தணர். இவரது இயற்பெயர் கீரனார். 'ந' என்பது சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச் சொல். கடைச் சங்க காலத்திற் சங்கப்பலகையில் முதலிடத்தை முதலில் ஏற்றவர் இவரே ; கீரங் கொற்றனாருடைய தந்தையார் ; பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறனுக்குச் சிவபிரான், பலதேவர், மாயோன், முருகவேளென்பவர் களை உவமையாக்கி இவர் பாடிய பூவைநிலையும் (புறநா. நுசு), பொதுவாகப் பாடிய பொருண்மொழிக் காஞ்சியும் (புறநா. கஅக) மிக்க அழகு வாய்ந்தவை. திருமுருகாற்றுப்படையும்,

நெடுநல் வாடையும் இவர் இயற்றிய நூல்கள். நக்கீரர் நாலடிநேற்ப தென்னும் நூலொன்று இவர் இயற்றியதாக யாப்பருங்கல விருத்தி முதலியவற்றுல் தெரிகின்றது. இறையனுகப் பொருளுக்கு முதலுரை கண்டவர் இவரே. இவர் செய்தனவாகச் சில தனிப்பாடல்கள் வழங்குகின்றன. இவர் இயற்றியதாகத் திருக்காளத்தி ஞானப்பூங்கோதை ஸகஸ்ரநாமம் ஒன்று தஞ்சாவூர் அரண்மனைப் புத்தகசாலையிலுள்ளதென்பர். அதனுல், இவர் வடமொழியிலும் பயிற்சியுள்ளவரென்று தெரிகின்றது. இவருடைய மாணுக்கர் இவர் புதல்வரான கொற்றனுரென்பவரே. இன்னும் கக-ஆம் திருமுறையிற் காணப்படும் கைலாபாதி காளத்திபாதியந்தாதி முதலிய 10 - பிரபந்தங்களின் ஆசிரியர் இவரே யென்பாரும் உளர். மதுரைப் பட்டிமண்டபம் (வித்தியா மண்டபம்) புகுந்து வடமொழியே சிறப்புடையதென்றும் தென்மொழி இழிந்ததென்றும் கூறிய குயக்கொண்டானென்பவனை இறக்கப்பாடி, சிலர் வேண்ட அவன் பிழைக்கவும் பாடிய ஆற்றல் வாய்ந்தவர். இவருடைய வரலாறு இவரியற்றிய பிரபந்தங்களாலும், தனிப்பாடல்களாலும், திருப்புகழாலும், கல்லாடம் முதலியவற்றுலும், தொல்காப்பியவுரைகளாலும், இறையனுரகப் பொருளுரையாலும், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருவிளையாடல், திருப்பரங்கிரிப் புராணம், சிகாளத்திப் புராணம் முதலியவற்றுலும் நன்குவிளங்கும். இவருடைய திருவுருவம் திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ முத்துக் குமாரக்கடவுளின் பக்கத்தே எழுந்தருளியிருக்கின்றது; திருவிழாக்காலத்தில் அதற்குப் புறப்பாடு உண்டு. மதுரை மேலை மாசிவீதியின் மேல்சிறகில் நக்கீரர்கோயிலென்று ஒரு கோயில் பெரிதாகவுள்ளது; அது சங்கத்தார் கோயிலெனவும் வழங்கும். ஈங்கோய் மலையென்னும் சிவஸ்தலத்தில் பண்டைக்காலத்தில் ஓரரசர் நக்கீரர் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து சிவந் தங்கள் அமைத்தனரென்று அத்தலத்திலுள்ள ஒரு சாஸனம் தெரிவிக்கிறது. நக்கீரராற் பிரதிஷ்டை செய்யப் பெற்ற தாகக் கருதப்படும் ஒரு சிவலிங்கப்பெருமான் நக்கீரநாதர் அல்லது நக்கீரலிங்கம் என்னும் திருநாமத்தோடு திருக் காளத்தியில் எழுந்தருளியிருக்கின்றனர். குறுந்தொகைச் செய்யுட்களையன்றி எட்டுத் தொகையில் இவர் இயற்றி யுள்ள செய்யுட்கள் - 26 (நற் - 7; அகநா. 17; புறநா - 2.) திருவள்ளுவ மாலையில் இவர் செய்யுள் ஒன்று உள்ளது.

இவரது விரிவான வரலாற்றைப் பத்துப் பாட்டின் பாடினோர் வரலாற்றிற் காணலாம்.

தம்பி குட்டுவர் (109,243):—இவர் சேரர் பரம்பரையினர் என்பது குட்டுவன் என்ற சொல்லால் விளங்கும். நம்பி என்ற சிறப்புப்பெயர் 'நம்பி நெடுஞ்செழியன்'(புறநா. 239) என்பது போல அடைமொழியாக வந்தது. தலைவனது மலையிற்பட்டு வரும் காற்றுத் தன் மீது படுவதனால் தன் காமவெப்பம் தணியுமென்று தலைவி கூறுவதாக (நற், 236) இவர் பாடியுள்ளார். சேதாம்பல் சிறிது நெகிழ்வதற்குச் சிறு வெண் காக்கை வாய் திறப்பதை உவமை கூறியுள்ளார் (நற். 345.) தலைவனை உள்ளுவதனால் கண் துயிலாமையைத் தலைவி, "சேர்ப்பனை, உள்ளேன் ரோழி பலவிய ரென் கண்ணே" (243) என்று வேறுவிதமாகக் கூறுவதாக இவர் பாடியிருத்தல் நோக்கத் தக்கது. இவர் பாடியனவாக இப்பொழுது கிடைத்துள்ள வேறு செய்யுட்கள்: நற்றிணையில் மூன்று.

நரி வெரூஉத்தலையார் (5, 236) :—இவர் யாது காரணத்தாலோ தம் உடம்பு வேறு பட்டிருந்து சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ் சேரலிரும் பொறையைக் கண்ட நாளில் அவ்வேறுபாடு நீங்கித் தம் உடம்பு பெற்றனர். இது "புதுமை பெருமை" (தொல். மெய்ப் சூ. 7, பேர்) என்பதன் விசேடவுரையால் விளங்கும் இவராற் பாடப்பட்டோன் மேற்கூறிய கோப் பெருஞ் சேரலிரும் பொறை. இவர் இயற்றிய வேறு பாடல்கள்- 3 (புறநா. 2, திருவள்ளுவமாலை - 1.)

நன்னுகையார் (118, 325) :—இவர் ஒரு பெண்பாற் புலவர். மாலையிற் கதவடைப்போர், "வருவீர் உளீரோ" என்று கூப்பிடுதல் வழக்கமென்பது இவர் பாட்டால் தெரிகிறது (118.) பெண்பாலாராகிய இப்புலவர் தலைவி கூற்றாகவே இந்த இரண்டு செய்யுட்களையும் அமைத்துள்ளார்.

நாகம் போத்தனார் (282):—நாகனுடைய மகன் போத்தன் என்பது இத்தொடரின் பொருள்; நாகன் என்பதன் ஈற்றிலுள்ள அன் கெட்டு அம் முச் சாரியை வந்தது (தொல். எழுத்து. சூ. 350.) போத்தன் என்ற பெயர் மக்களுக்கு உண்டு என்பது, 'போத்தனார்' என்ற பெயர் வழக்கா லறியலாகும். வரகு செம்மண்ணையுடைய முல்லை நிலத்திற் கார் காலத்தில் வளம் பெறுவ தென்று இவர் குறித்துள்ளார்.

நாமலார் மகன் இளங்கண்ணர் (250):—மாலைக் காலத்தில் கலைமான் தன் பிணையோடு பள்ளங்களிலே தங்கிய நீரை மாந்தித் துள்ளி விளையாடும் என்று இவர் தம் செய்யுளிற் கூறியுள்ளார்.

நெடும்பல்லியத்தனார் (203):—பல்லியம் என்பது பல வாத்தியங்களைக் குறிக்கும். நெடிய பல வாத்தியங்களை உடைமையின் இவருக்கு இப்பெயர் வந்தது. இப் பெயருக் கேற்ப இவர், "நல்யா ழாகுளி பதலையொடு சுருக்கிச் சொல்லா மோதில் சில்வளை விறலி" என்று கூறியிருப்பது நோக்கத் தகுந்தது (புறநா. 64) தலைவனது தூய தன்மையினால் பரத்தைமையுடைய தலைவன் நீங்கி ஒழுகுவதற்கு முனிவரது தூய்மையைக் கண்டு தூய்மையில்லாதார் அஞ்சி விலகியொழுகுவதை இவர் உவமையாகக் கூறியுள்ளார். இவர் பாடிய வேறு செய்யுள்: புறநா. 64.

நெடும்பல்லியத்தை (178):—இவர் ஒரு பெண்பாற் புலவர். இவர் நெடும்பல்லியத்தனாரின் உடன் பிறந்தாரோ வென்று ஊகிக்கப்படுகிறார். தலைவி தலைவனுக்குக் களவுக் காலத்தில் அரியளா யிருத்தற்கு, மூன்றும் பிறை, கண்டு தொழுவோர்க்கு அரிதாயிருத்தலை உவமை கூறியுள்ளார்.

நெடுவெண்ணிலவினார் (47):—களவுக் காலத்தில் இரவுக் குறிக்கண் வரும் தலைவனுக்கு இடையூறாக இருக்கும் நிலவை, "நெடுவெண்ணிலவே" என்று விளித்துத் தோழி வெறுப்புக் குறிப்புப்படக் கூறுவதாகச் செய்யுள் பாடியதால் இவர் இப்பெயரைப் பெற்றார்.

நெய்தற் கார்க்கியர் (55, 212):—கார்க்கிய ரென்பது ஒரு முனிவர் பெயர்; அதுவே இவரது இயற்பெயராகும். நெய்தற் றிணையைப் பாடும் ஆற்றல் வாய்ந்தமையின் இவர் நெய்தற் கார்க்கிய ரென்ற பெயரைப் பெற்றார். நெய்தல் நிலத்தில் கழியிலுள்ள நீலப்பூக்கள் கூம்புவதும், கடற் றிவலை வீச ஊதைக் காற்றுத் துன்பத்தை உண்டாக்குவதும், தலைவன் மணியொலிக்கத் தேரிலேறிக் கடற்கரை வழியாக வருவதும் இவர் பாடல்கள் இரண்டிலும் சொல்லப்படுகின்றன.

படுமரத்து மோசிகீரனார் (33, 75, 383):—படுமரத்து மோசி கொற்றனாரும் இவரும் சகோதரர்களாக இருக்கலா மென்று தோற்றுகிறது. படுமரம் என்ற சொல் இந்நூற் பிரதிகளிற்

சில விடங்களில் 'படுமாற்றூர்' என்றும் காணப்படுகிறது. இவரும், 'மோசி கீரனார்' என்று இந்நூலுள் (59, 84) வந்துள்ள பெயருக்குரியாரும் ஒருவரே என்று கருத இடமுண்டு. மாணூக்கர் மன்றத்தில் இருப்பவர் என்றும் அவர்கள் இரந் தூண் வாழ்க்கையர் என்றும் இவர் கூறுகிறார் (33.) மௌரியரின் தலைநகராகிய பாடலீ புரத்தின் செல்வ மிகுதியையும் அங்கே யிருந்த யானை களின் பெருக்கையும் இவர் குறித்துள்ளார்.

படுமரத்து மோசிகொற்றனார் (376) :—இவர் பாடியுள்ள 376-ஆம் கவியை அடுத்துள்ள பாடல் மோசி கொற்றனார் பாடியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இரண்டு கவிகளும் சேர்ந்தாற்போல் இருத்தலினல் இந்த இரண்டு பெயர்களும் ஒருவரையே குறித்தல் கூடுமோ வென்று நினைக்க இடமுண்டு.

பதடி வைகலார் (323): தலைவியோடு பழகாத நாளைப் பதடி வைகல் என்று சொல்லுதலின் இவர் இப்பெயர் பெற்றார். (பதடி - பதர்.)

பதுமனார் (6): தலைவன் பிரிந்த விடத்து இரவில் துயில் கொள்ளாத தலைவி தோழியின் துயிலையும் கெடுத்து அவள் தூங்குவதை, "நனந்தலை யுலகமும் துஞ்சும்" என்று இவர் கூறுவது நயம்பட அமைந்துள்ளது. பதுமனார் என்ற பெயர் சைனரைக் குறிக்கு மென்பாருமுளர். இவர் வேறு; பெரும் பதுமனார் வேறு.

பரணர் (19, 24, 36, 60, 73. 89. 120, 128, 165, 199, 258, 259, 292, 298, 328, 393, 399.):—இவர் கபிலர்பால் மிக்க நேயமுடையவர். இது கபிலபரணர் என்னும் தொடரால் விளங்கும். இவர் பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்துப் பாடிக் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனிடம் உம்பற்காட்டு வாரியையும், அவன்மகன் குட்டுவன் சேரலையும் பரிசி லாகப் பெற்றனர்; இதனை மேற்கூறிய பகுதியின் இறுதிக்கட் டுரையால் உணரலாம்.. இவரைப் பாடப்பட்டோர் : சோழன் உருவப்பஃறே ரிளஞ்சேட்சென்னி, சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற் கிள்ளி, வையாவிக்கோப்பெரும்பேகன், சேரமான் கட லோட்டிய வேல்கெழு குட்டுவனென்பார். "அமரர்ப் பேணி யும்" என்னும் ஔவையாருடைய பாட்டினுல், அதியமான்

நெடுமானஞ்சியை இவர் புகழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது. திருவள்ளுவமாலையிலுள்ள 'மாலுங் குறளாய்' என்னும் அரிய வெண்பா இவர் பெயரால் உள்ளது. இன்னும் இவரியற்றிய பாடல்கள் நற்றிணையிலும், புறநானூற்றிலு முண்டு; கக - ஆம் திருமுறையில் உள்ளதான சிவபெருமான் திருவந்தாதி யென்னும் பிரபந்தத்தின் ஆசிரியராகிய பரணதேவ நாயனரென்பவர் இவரென்று சொல்லுவர். இவர் வேறு வன்பரணர் வேறு. இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும் இவர் புகழப்பட்டிருக்கின்றார். பதிற்றுப்பத்திலும் இந்நூலிலுமன்றி இவர் எட்டுத்தொகையில் இயற்றியனவாக உள்ள செய்யுட்கள் 57 (நற். 12; அகநா. 32; புறநா. 13.) வையாவிக்கோப்பெரும் பேகனால் நீக்கப்பட்ட கண்ணகியை மீட்டும் அவன் அழைத்துக் கொள்ளும்படி பாடினர். குட்டுவனையும் அவனது முசிறியையும் புகழ்ந்து பாடியுள்ளார். வல்விலோரி யென்னும் வள்ளல் இவராற் பாராட்டப்பெற்றுள்ளான். நன்னனென்னும் சிற்றரசனுடைய செய்திகள் பல இவரால் உரைக்கப்பெற்றுள்ளன. தொண்டி, உறையூர், காவிரி, ஆர்க்காடு, விச்சியர்கோன் போர், கழார் என்பன இவராற் கூறப்பெற்றுள்ளன. ஆதிமந்தியாரைப் பற்றியும், திதியனைப்பற்றியும், கண்ணி யென்பவனைப் பற்றியும் அகநானூற்றில் இவர் கூறியுள்ளார். இவர் பாடிய பாடல் ஒவ்வொன்றிலும் யாரையேனும் புகழாமலும் அக்காலத்து நிகழ்ந்த கதை எதையேனும் அமையாமலும் இரார்.

பரூஉ மோவாய்ப் பதுமர் (101):—பருத்த மோவாயையுடைய பதுமர் என்பது இப்பெயரின் பொருள். தலைவியின் தோளோடு சேர்ந்திருக்கும் நாளுக்கு வையமும் வானகமும் சீர்சாலா என்று இவர் குறித்துள்ளார். தேவருலகை, "அரிதுபெறு சிறப்பிற்புத்தேளுடு" என்று இவர் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

பனம்பாரனார் (52): அகத்தியனார் மாணவருள் பனம்பாரம் என்ற இலக்கணநூலை இயற்றியவரும், தொல்காப்பியத்துக்குப் பாயிரஞ் செய்தவருமான பனம்பாரனாரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. பெற்றோர் தலைவனுக்குத்தன்னைக் கொடாமலிருந்து விடுவாரோ என்ற அச்சத்தால் தலைவி மலைப்பக்கத்தில் வாழும் தெய்வத்தால் அலைக்கப் பட்டாற் போல் நடுங்கினள் என்று இவர் கூறுகிறார்.

பாண்டியன் பன்னாடு தந்தார் (270):—பல நாடுகளைத் தந்த பாண்டியன் ஒருவனைப் பற்றிய செய்தி "மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வவ்வலின், மெலிவின்றி மேற் சென்று மேவார்நா டிடம்படப், புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை, வலியினுன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்" (கலி. 104), "வடிவே லெறிந்த வான்பகை பொருது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள, வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு, தென்றிசை யாண்ட தென்னவன்" (சிலப். கக: 18 - 22) என்ற அடிகளாற் றெரிகிறது. பாண்டியன் பன்னாடு தந்தான் என்று குறிக்கப் படுபவன் இவனே வேறே என்பது தெரியவில்லை வினைமுற்றிப் புகுந்த தலைமகன் செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு தலைவியினிடம் இருத்தலைக் கூறி மேகத்தை, "இனிநீ முரசின் முழங்கி இடித்திடித்துப் பெய்துவாழி" என்று கூறுவதாக ஒரு பாடல் இவராற் பாடப்பட்டுள்ளது.

பாண்டியனேஞ்சி நெடுங் கண்ணர் (156):— ஏஞ்சி என்பது வேந்தனுற் கொடுக்கப்படும் பட்டப் பெயர்களுள் ஒன்று. சேஞ்சிபதிகட்கு வழங்கும் பட்டம் இது. பாண்டியனுடைய சேனைத் தலைவருள் இவர் ஒருவர் ஆவர். சேனைத் தலைவர் என்பதற்கு ஏற்பப் போரின் காரணமாக அழிந்துபட்ட மன்றமும் பொதியிலும் இவர் வாக்கில் கூறப்படுகின்றன. தன்னைப் பிரிந்து தலைவி உறக்கங் கொள்ளாமல் தவிப் பாளோ என்று நினைக்கும் தலைவன் கூற்றில், "வென்வேல், அண்ணல் யானை யடுபோர் வேந்தர், ஒருங்ககப் படுத்த முரவுவாய் ஞாயில், ஓரெயின் மன்னன் போலத், துயிறுறந் தனள்கொ லளிய டானே" (அகநா. 373) என்பதை அமைத் துள்ளமையும் நோக்கத் தக்கது. பார்ப்பனப் பாங்கன் தண் டினையும் கமண்டலத்தையும் வைத்திருப்பான் என்றும் வேதம் பயின்றவன் என்றும் இவர் வாக்கினுல் (156) தெரி கிறது. இவ்விரண்டு செய்யுட்களே இவர் பாடியவை.

பார காபரர் (254):—இலைகளில்லாத கிளைகளில் கோங்கு மலர் தலையும், தலைவன் தன் வருகையைக் குறித்து முன்னதாகத் தூது விடுதலையும் இவர் பாடல் குறிக்கின்றது.

பாரதம் பாடிய பெருந்தேவனர்:—இவர் தொண்டை நாட்டினர்; தமிழில் பாரத கதையை உரையிடையிட்ட பாட்டுடைச்

செய்யுளாகஇயற்றிய ஆசிரியர். அந்நூற் செய்யுட்கள் தொல் காப்பியப் பொருளதிகாரம் நச்சினார்க்கினியத்திலும் யாப் பருங்கல விருத்தி முதலியவற்றிலும் மேற்கோளாகக் காணப் படும். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவருடைய கடவுள் வாழ்த்துக்கள் ஐங்குறுநூறு, அகநானூறு, புறநா னூறு, நற்றிணை, குறுந்தொகை என்னும் ஐந்து தொகை நூல் களில் உள்ளன. முதல் மூன்றிலும் உள்ளவை சிவ பெருமான் துதிகளாகவும், நற்றிணையிலுள்ளது திருமால் துதியாகவும், குறுந்தொகையில் உள்ளது முருகக் கடவுள் துதியாகவும் உள்ளன. நற்றிணை முதலிய தொகை நூல் களில் இவருடைய கடவுள் வாழ்த்துக்கள் முதலில் வைக்கப் பெற்றிருத்தலும் ஐந்தாம் மறையாகிய பாரதத்தை இவர் இயற்றியிருத்தலும் இவருடைய முதன்மையையும் கல்விப் பெருமையையும் விளக்கும். மேற்கூறிய கடவுள் வாழ்த்துச் செய்யுட்களையும் பாரதத்தையுமன்றி இவர் இயற்றியன வாகத் திருவள்ளுவ மாலையில் ஒரு செய்யுளும், அகநா னூற்றில் ஒன்றும், நற்றிணையில் ஒன்றும் உள்ளன.

பாலை பாடிய பெருங்கடுங்கோ (16, 37, 124, 135, 137, 209, 231, 262, 283, 398): இவர் சேரவரச பரம்பரையினருள் ஒருவர். பாலைத்திணையைப் பலபடப் பலதொகை நூல்களிற் சிறப்பித்து இவர் பாடியிருத்தலினால், 'பாலைபாடிய' என்ற அடைமொழியைப் பெற்றார் இவருடைய பாடல்களின் சொல் நயம் பொருள் நயங்கள் படிப்பாரைப் பிணிப்பனவாய் அமைந்துள்ளன. இடையிடையே நீதிகளை அழகாக அமைத் துள்ளார் இவர் "பாலைநிலம் இன்னுதாயின் தலைவர் பிரிந்த மனை மகளிர்க்கு இனிதாகுமோ?" (124) என்று தோழி கூறியது, "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்ற சீதையின் கூற்றை நினைப்பூட்டுகின்றது. "நீ தனிமையால் வருந்த யான் நின்னைப் பிரிந்து சென்ற இடத்தே மனம் பொருந்தி யிருப்பேனையின், இரவலர் என்னைத் துறந்து வாராத நாட்கள் பலவாகுக" என்று தலைவன் வஞ்சினம் கூறுவதாக (137) இவர் கூறியுள்ளார். இக்கருத்தையே இவர் பின்னும், "இரந்தோர்க் கொன்றீயாமை யிளிவு" (கலி. 14) என்று கூறுகிறார். இவர் பாடல்களில் செல்வத்தைப் பற்றிய பலசெய்திகள் அழகாகக் கூறப்படுகின்றன. 'தம் முடைய முன்னோரால் ஈட்டிவைத்த பொருளைச் செலவிட்டு வாழ்வோர் செல்வரெனப்படார்; அஃது இரந்து வாழ்வதினும்

இழிவுடையது' (283), "செம்மையி னிகந்தொரீஇப் பொருள் செய்வார்க் கப்பொருள், இம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ" (கலி. 14), "கிழவ ரின்னுரென்னுதுப் பொருடான், பழவிறை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்" (கலி. 21), "அறன்கடைப் படாஅ வாழ்க்கையு மென்றும், பிறன்கடைச் செலாஅச் செல்வமு மிரண்டும், பொருளினுகும்" (அகநா. 155) என்பன பொருளைப்பற்றி இவர் கூறுவனவற்றுள் ஒரு சிலவாம். ஆறலைப்போரின் கொடுமையை, "கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர், துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வெளவலின்" (கலி. 4) என்று குறித் திருக்கிறார். பாலைநிலத்தில் மரம் வெம்பி வாடுதலை, "வறியவ னிளமைபோல் வாடிய சிறியவாய்ச், சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி, யார்கண்ணு மிகந்து செய் திசைகெட்டா னிறுதிபோல், வேரொடு மரம் வெம்ப" (கலி. 10) என்று கூறும் முகத்தால் பலநீதிகளை அமைக்கிறார். நீதிகளை இவர் உவமை வாயிலாக விளக்குவதற்கு, "சிறப்புச் செய் துழையராய்ப் புகழ்போற்றி மற்றவர், புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்பு போல்", "செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவர், ஒல்கிடத் துலப்பிலா வுணர் விலார் தொடர்புபோல்", "பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை, பிரிந்தக்காற் பிறர்க்குரைக்கும் பீடிலார் தொடர்புபோல்" (கலி. 25) என்பன உதாரண மாகும். புறநானூற்றில் ஒரு வீரனது ஆற்றலை இவர் பாடி யிருக்கும் விதம் படித்தின்புறற்பாலது (282.) இவரைப் பாடியவர் பேய்மகள் இளவெயினி என்பார் (புறநா. 11) இவரியற்றிய வேறு பாடல்கள்: நற். 10; பாலைக்கலி; அகநா 12; புறநா. 1.

பூங்கண்ணர் (253):—சுரத்திற் செல்வோர் இரவில் புலிதனக் குரிய இரையை வைத்திருந்த புலால் நாற்றம் வீசும் கற்குகையினிடத்துத் தங்குவர் என்று இவர் கூறியுள்ளார்.

பூங்கணுத் திரையார் (48, 171):—இவர் பெண்பாலார். உத்திரை யார் என்பது இவருடைய இயற்பெயர். "மீன்வலையில் மாப்பட்டாற்போல்" என்ற வழக்கு மொழி இவராற் கூறப் பட்டுள்ளது (171) தன் சிறுவன் களிறெறிந்து பட்டான் என்ற உவகை ஒருதாய்க்குஞ் றஞான்றினும் பெரிது என்றும், அவள் கண்ணீர்த் துளிகள் மூங்கிலில் வான்பெயத் தூங்கிய சிதரினும் பல என்றும் கூறியுள்ளார் (புறநா, 277.) இவர்

பாடியனவாக இப்பொழுது நாம் அறிபவை இந்த மூன்று செய்யுட்களே.

பூதத்தேவர் (285) :—நற்றிணையில் பூதன் றேவனென்று ஒரு பெயர் காணப்படுகிறது. ஈழத்துப் பூதன் றேவன் இவரில் வேருனவர் என்று தோற்றுகிறது. விடியலிற் சிறுவர் கறப் பதற்காக எருமைகளைக் கன்றுகளோடு ஓட்டிச் செல்வர் என்றும், தலைவனது நோய்க்குத் தலைவியல்லது மருந்து பிறி தில்லை என்றும் (நற். 80) இவர் கூறுவர். "வைகல் வைகல் வைகவும் வாரார், எல்லா வெல்லை யெல்லையுந் தோன்றூர்" (285) என்று தலைவி கூற்றில் இவர் அமைத்திருக்கும் அடிகள் சொல்நயம் பொருந்தியனவாக உள்ளன. இவரியற்றியவை இந்த இரண்டு செய்யுட்களே.

பூதம் புல்லர் (190) :—'பூதம் புலவர்' என்று பிரதி பேதம் இருத்தலால் இவர் பெயரை 'பூதம் புலவர்' என்றே கொள்ளலாம். பல பசுக்கள் உள்ள தொழுவத்தில் ஒரு நல்லேறு இருக்கு மென்பது இவர் பாடலாற் றெரிகிறது. பசுக்களைப் பாதுகாப்போர் பொலிகாளை ஒன்றைவைத்துக் கொள்ளல் நலம் என்ற கொள்கை இக்காலத்திலும் நிலவி வருகிறது.

பெருங்கண்ணர் (289, 310) :—காமநோயின் வளர்ச்சிக்கு வளர் பிறையை இவர் உவமை காட்டியுள்ளார். பகல் கழிந்ததனல் வானம் புல்லென்றிருத்தல் தலைவன் பிரிந்ததனுல் தலைவி பொலிவழிந்திருத்தல் போன்றது என்று கூறியுள்ளார். நற். 137 - ஆம் செய்யுளும் இவர் பாடியது.

பெருங்குன்றூர் கிழார் (338) :—இவர் வேளாண் மரபினர். இவர் பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்தைப்பாடிச் சேரமான் குடக்கோ இளஞ் சேரலிரும் பொறையிடம் மூப்பத் தீராயிரம் காணம் முதலிய பரிசில் பெற்றனர். வையாவிக் கோப்பெரும்பேகனுல் துறக்கப்பட்ட கண்ணகியை அவ னுடன் சேர்த்தற்கு அவனைப்பாடி அதனையே பரிசிலாகக் கூறினர். அகப்பொருளில் குறிஞ்சித் திணையை மிகுதியாகப் பாடியுள்ளார். தலைவி பருவங்கண்டு அழிந்தமையையே புலவர்கள் பெரும்பாலும் கூற, இவர், "தலைவன் வரவை அறிந்து மின்னி இடித்துவந்த மழைக்கு விருந்து என் செய்கோ" என்று தலைவி தோழியிடம் கூறுவதாக (நற். 112)ப் பாடியுள்ளார். தலைவன் பிரிவினுல் தலைவி நலமழிந்து வாடு

தற்கு நீரின்மையால் வருந்தும் வேனிற் றவுளையை உவமை காட்டியுள்ளார். மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கிய புலவருள் இவரும் ஒருவராவர். இவர் பாடியனவாக நாம் இப்பொழுது அறிபவை: நற். 4; பதிற். ஒன்பதாம் பத்து; அகநா. 1; புறநா. 4. பன்னிருபாட்டியலில் இவர் பாடியனவாகச் சில சூத்திரங்கள் உள்ளன. சிறு மேதாவியார், சேந்தம் பூதனர், நல்லந்துவனர், மருதனிள நாகனர், நக்கீரர், பரணர் முதலியோர் இவர் காலத்தவர்.

பெருஞ்சாத்தனர் (263):—ஓல்லையூர் கிழார்மகன் பெருஞ்சாத்தன் என்ற உபகாரி ஒருவரைப் பற்றிய செய்தி புறநானூற்றில் (242) வருகின்றது. மகளிர் தலைவனையே தெய்வமாகக் கொள்ளும் கற்புடையர் என்பதைக்காட்ட இவர் தோழி கூற்றில் வெறியெடுத்தலை 'வேற்றுப் பெருந்தெய்வம் பல வுடன் வாழ்த்தி' என்று கூறுகிறார். இவர் இச்செய்யுளை யன்றி வேறொன்றும் பாடியதாகத் தெரியவில்லை.

பெருந்தோட் குறுஞ்சாத்தனர் (308):—சினை, வடிவுகளால் இவருக்கு இப் பெயர் வந்த தென்பர். வாழையால் யானை மதன் அழியும் என்பதும் யானையின் மத்தகம் தெய்வத்தன்மை பொருந்திய தென்பதும் இவர் பாட்டால் தெரியவருகின்றன.

பெரும்பதுமனர் (7):—உயர்ந்த கருத்தமைந்த செய்யுள் செய்தலில் இவர் வல்லவர். ஆரியக் கூத்தர் கழையிற் கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடுவதும், அப்பொழுது பறை கொட்டுவதும் இவராற் கூறப்பட்டுள்ளன. மணமகளது காலிற் பெற்றோர்களால் அணியப்பட்ட சிலம்பை நீக்குவதற்கு ஒரு சடங்கு செய்யும் வழக்கம் இவராற் குறிக்கப் படுகின்றது. இவர் தலைவனது உள்ளத்துக்குத் தலைவி இடியை உவமை கூறுவதாக (நற். 2) அமைத்துள்ளார். "ஆலமரத்தின் பழங்களை நேற்று உண்டோமே என்று நினையாமல் புள்ளினங்கள் மீட்டும் அம்மரத்தின் பாற் செல்லுதலைத் தவிரா; இரவலரும் அத்தன்மையரே; தம்மை ஆதரிப்போர் செல்வமே இவர் செல்வம்; அவர் வறுமையே இவர் வறுமை" என்பது இவர் கூறும் உயர்ந்த கருத்தாகும் (புறநா. 199.) இவர் செய்த வேறு பாடல்கள்: 3 (நற். 1; புறநா. 2.)

பெரும்பாக்கனர் (296): பெரும்பாக்கம் என்பது ஓர் ஊர். நாரைகள் கழியிலுள்ள சிறுமீன்களை வெறுத்து வயலின்

கண்ணுள்ள நெய்தல் மலர்களையும் நெற்கதிர்களையும் விரும்பும் என்று இவர் கூறியுள்ளார்.

பேயனார் (233, 359, 400) :—முல்லைத்திணை வளங்களை விளங்கப் பாடுதலில் இவர் மிக்க ஆற்றலுடையவர். ஐங்குறு நூற்றின் ஐந்தா நூறுகிய முல்லைத்திணையைப் பாடியவர் இவரே; குறுந் தொகைச் செய்யுட்கள் மூன்றும் முல்லைத்திணையைப் பற்றி யனவே. அகநா. 234 இவர் செய்தது.

பேயார் (339) யாப்பருங்கல விருத்தியுரையில், "கறைப்பற் பெருமோட்டு" என்னும் வெண்பா மேற்கோளாக எடுத்துக் காட்ட பெற்று, 'இது பூதத்தாரும் காரைக்காற் பேயாரும் பாடியது' என்று எழுதி யிருத்தலாற் காரைக்காற் பேயார் என்னும் பெயருடைய ஒரு புலவர் இருந்ததாகத் தெரிகிறது; அவரும் இவரும் ஒருவரோ வேறோ யாதும் விளங்கவில்லை, அகிற்புகைக்கு மழைபெய்துவிட்ட வெண்மேகத்தை இவர் உவமை கூறியுள்ளார்.

பேரிசாத்தனார் (81, 159, 278, 314, 366):—வடமவண்ணக்கன் பேரி சாத்தனார் என்பவரும் இவரும் ஒருவர் போலும். "தென்கடல், முழங்குதிரை முழவின் பாணியிற் பைபயப் பழம்புண் ணுறுநரிற் பரவையினலும்" (நற். 378) என்று கடலலையின் ஒலிக்கு முழவின் ஒலியை உவமை கூறிய சிறப் பால் இவர் பெயர்க்கு முன் 'பேரி' என்னும் அடை கொடுக்கப்பட்டது போலும்; பேரி-முழவு. அலையின் பிறழ்ச்சி யால் வெண்மையாகத் தோற்றும் கடலுக்கு நிலவையும் செறி வால் இருண்டு தோன்றும் கானலுக்கு இருளையும் உவமை கூறியுள்ளார்; 81. "நீயும் நின்புதல்வரும் அவர் பெறும் புதல்வரும் நீடு வாழ்க" என்று இவர் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாற னென்பானைக் கூறும் பகுதி (புறநா. 198) மிக்க நயமுடையது. "விதியே தலைவியைத் தலைவனோடு கூட்டுவித்ததன்றித் தலைவனுடைய சால்பை அளந்தறிதற்கு நாம் யார்!" என்ற கருத்தமைந்த பாட லொன்று (366) இவர் இயற்றியுள்ளார். இவரியற்றிய வேறு பாடல்கள் : நற். 8 ; புறநா. 1.

பேரெயின் முறுவலார் (17) :—புன்முறுவலால் திரிபுர மெரித்த கண்ணுதற் பெருமானின் பெயரையுடையவர் இவர்; எயில் - மூப்புரங்கள். சோழநாட்டிற் காவிரியின் தென்கரையில் பேரெயில் என்று தேவாரம் பெற்ற ஒரு ஸ்தலம் உண்டு. இவர் அவ்வூரினரோ என்றும் கருதலாம். நம்பி நெடுஞ்

செழியன் என்பான் இம்மையில் தான் அடைதற்குரிய இன்பங்களே யெல்லாம் அடைந்தான் என்றும் செய்ய வேண்டிய நற்காரியங்களே எல்லாம் வழுவின்றிச் செய்தான் என்றும் இவர் அவனைப் பாடியிருக்கும் பகுதிகள் அறியற் பாலன. இவர் இயற்றிய வேறு செய்யுள் புறநா. 239.

பொதுக் கயத்துக் கீரந்தையார் (337):—கீரந்தையார் என்ற புலவர் சிலர் உண்டு. பொதுக்கயம் என்பது ஓர் ஊர். அவ் வூரினர் இவர். பருவம் வாய்த்த மகளிர்க்குரிய இயல்புகளே இவர் பாடல் தெரிவிக்கின்றது.

பொன்மணியார் (391):—கார்காலத்தில் மயில்கள் கூவுவது தலை விக்கு வருத்தத்தைத் தரும் என்று இவர் குறித்துள்ளார். இவர் ஒரு பெண்பாற் புலவர்.

பொன்னாகனார் (114):—தலைவியைத் தலைவனோடு கூட்டவேண்டி அவளின் நீங்கித் தலைவனுக்கு 'இன்னுழி எதிர்ப்படுதி' என்று தோழி கூறுவதாக உள்ள ஒரு செய்யுள் இவர் செய்தது. தலைவன் தலைவியிடம் விரைந்து செல்லவேண்டும் என்பதைக் குறிக்க, "செலவியங் கொண்மோ வல்கலும், ஆர லருந்த வயிற்ற, நாரை மிதிக்கு மென்மகணுதலே" என்று அமைத்திருப்பது நயம்பட உள்ளது.

மடல் பாடிய மாதங்கீரனார் (182):—மடலேற்றத்தைப் பற்றிய செய்தியைத் தம் செய்யுளிற் சொல்லுதலின் மடல் பாடிய என்னும் அடைமொழி இவரது பெயரின் முன் வைக்கப்பட்டுள்ளது. "தெருவில் மடலேறி வருவதே அவள்பால் நாம் விடற்கமைந்த தூது" என்பது தலைவன் கூற்று. நற் 377-ஆம் செய்யுளும் இவர் பாடியதே. தலைவன் மடலேறுவதாகத் தன் நெஞ்சுக்குக் கூறுவதாகவே அச்செய்யுளும் அமைந்துள்ளது.

மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகனார் (223):—தலைவியும் தோழியும் பெரிய ஊரின்கண் நிகழ்ந்த விழாவுக்குச் சென்று தலைவனை எதிர்ப்பட்டு அளவளாவிய நிகழ்ச்சியைத் தலைவி நினைவுறுத்தியதாக இவர் செய்யுள் அமைந்துள்ளது.

மதுரைக் கண்டரதத்தன் (317):—பனிக்காலத்தில் வாடைக்கு அழிந்த மேகம் தென்றிசை நோக்கிச் செல்லும் இயற்கையை இவர் அறிந்து கூறியுள்ளார்.

மதுரைக் கண்ணனார் (107):—பொருள் முற்றி வந்த தலைமகனை யுடைய கிழத்தி காமமிக்க கழிபடர் கிளவியால், "எம்மைத்

துயிலினின்றும் எழுப்பிய சேவலே, நீ இறந்துபடு வாயாக" என்று கூறுவதாக இவர் பாடியுள்ள செய்யுள் நயம் வாய்ந்த தொன்றும்.

மதுரைக் கதக்கண்ணனார் (88):—கோபமிக்க கண்களையுடையவர் என்பது கதக்கண்ணனார் என்பதன் பொருள்; "செல்வப் போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி" (யா. கா மேற்) என்ற அடியை நோக்குக. "அரியவழியை அஞ்சாது தலைவன் நள்ளிரவில் வருதலும் வருவான்; அவன் அங்ஙனம் வருதலினால் உண்டாகும் பழிக்கு நாம் நாணேம்" என்று தோழி கூறுவதாக இவர் பாடியுள்ளார்.

மதுரைக்காஞ்சிப் புலவர், மாங்குடி கிழார், மாங்குடி மருதனார் (164,173, 302):-இந்த மூன்று பெயர்களும் ஒருவரையேகுறிப் பனபோலும். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் மீது மதுரைக் காஞ்சி என்னும் நூலைப் பாடிய காரணமாக மாங்குடி மருதனார் என்பார் இப்பெயர் பெற்றார். பெயர் கூறாது இங்ஙனம் கூறுவது சிறப்புப்பற்றி என்க. அகநா. 89 ஆம் செய்யுள் அடியிலும் இவர் பெயர் இங்ஙனமே காணப்படுகின்றது. மாங்குடி கிழார் என்னும் நல்லிசைப் புலவரொருவர் இயற்றிய செய்யுட்கள் கருத்திலும் சொல் லமைதியிலும் இவருடையனவற்றை ஒத்திருப்பதால் அவரும் இவரும் ஒருவரெனவே கருதப்படுகின்றார். கிழாரென்னும் மரபுப் பெயரால் இவர் வேளாண் மரபினரென்பது பெறப் படும். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு இவர்பால் இருந்த நன்மதிப்பு, "ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன் றலைவனுக,உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற், புலவர் பாடாது வரைகவென் நிலவரை" (புறநா. 72) என்று அவன் கூறிய வஞ்சினத்தால் விளங்கும். வாட்டாற்று எழினியாதன் என்பானை இவர் பாடியுள்ளார். இவர் பாடி யனவாகவுள்ள வேறு செய்யுட்கள் 11: மதுரைக். 1; நற் 2; அகநா. 1; புறநா. 6; திருவள்ளுவ. 1. இவற்றுள் நற்றிணை, 123-ஆம் செய்யுள் காஞ்சிப் புலவன் என்னும் பெயரோடும், குறுந்தொகை, 173-ஆம் செய்யுளும், அகநா. 89 - ஆம் செய்யுளும் மதுரைக் காஞ்சிப் புலவன் என்னும் பெயரோடும், குறுந் தொகை, 302-ஆம் செய்யுளும், புறநா. 24, 26, 313, 335, 372, 396-ஆம் செய்யுட்களும் மாங்குடி கிழார் என்ற பெயரோடும் வழங்குகின்றன. இவர் பாடிய அகத்திணைச் செய்யுட்களில்

இல்லறம் நடத்தும் மகளொருத்தி விருந்தினரை உண்பிக்கும் பொருட்டு உணவு சமைக்கும் இயல்பும், மடன்மாவின் இலக்கணங்களும், வேடர்கள் தாம் கொள்ளையிட்டுப் பெற்ற பொருள்களைப் பாறையின்மேல் வைத்துப் பங்கிட்டுக் கொள்ளும் செயலும் நயம்படக் கூறப்பெற்றுள்ளன.

மதுரைக் கொல்லன் புல்லர் (373):—கொல்லர் மரபிற் பல புலவர்கள் மதுரையில் இருந்தனர். "நிலம் புடை பெயரினும் நீர் திப்பிறழினும், இலங்குதிரைப் பெருங் கடற் கெல்லை தோன்றினும் மலை காடெனை அமைந்த தொடர்பு கெடுதல் எவ்வாறு உடையதாகும்" என்று தோழி கூற்றில் கற்புடைய மகளது உள்ளத் தன்மையை இவர் விளக்கியுள்ளார். புல்லர்: இது புலவரென்பதன் திரிபாக இருக்கலாமென்று சிலர் கருதுகின்றனர்.

மதுரைச் சீத்தலைச் சாத்தனார் (154):— இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவரது இயற் பெயர் சாத்தனு ரென்பது; வணிக மரபினர். இவர் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின் வரலாற்றையும் அவள் மேம்பாட்டையும் சேரன் செங்குட்டுவனுக்கு அறிவுறுத்தி அவனைக்கொண்டு அவளுக்கு ஒரு கோயில் கட்டுவித்து நித்திய பூசை முதலியன நடக்குமாறு செய்தனர். கண்ணகியின் வரலாற்றை அவனுடன் கேட்டவரும் அவன் சகோதரரும் துறவு பூண்ட வருமாகிய இளங்கோவடிகள் அவளுடைய சரிதத்தைப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகச் செய்தற்கு வேட்கை யடையும் வண்ணம் செய்தவர் இவரே. அதுவே சிலப்பதி காரம். அதைக் கேட்டவரும் இவரே. மணிமேகலையின் ஆசிரியர் இவர். குறுந்தொகைச் செய்யுளையன்றி எட்டுத் தொகையில் இவர் செய்தனவாக உள்ள செய்யுட்கள் - 9 (நற். 3; அகநா 5; புறநா. 1) திருவள்ளுவமாலையிலும் இவர் செய்யுள் ஒன்று உண்டு. மருத்துவன் தாமோதரனாரும் இவரும் நெருங்கிய நட்பினர். சேரன் செங்குட்டுவன்பாலும் இளங்கோவடிகள்பாலும் இவர் மிக்க அன்புடையவர். காஞ்சி, வஞ்சி, காவிரிப்பூம்பட்டினம் இவற்றைப்பற்றி இவர் விரிவாகக் கூறியுள்ளார்.

மதுரை நல்வெள்ளியார் (365):—இவர் பெண்பாற் புலவர். வெள்ளியார் எனனும் சுக்கிரனுக்குரிய பெயர் இவருக் காயிற்றுப்போலும். இவர் அருவியின் ஒலிக்கு முரசின்

ஓலியை உவமை கூறியுள்ளார் (365.) "தலைவன் புரவலனைப் போலத் தோன்றி இரவலனைப் போலப் பணி மொழிகளைப் பயிற்றினான்" என்று தோழியின் கூற்றில் இவர் அமைத்த பாடலொன்று அகநானூற்றில் (32) காணப்படுகிறது.

மதுரைப் பெருங் கொல்லனார் (141):—இவருக்கு இப்பெயர் தொழிலால் அமைந்தது. இரவுக்குறி நிகழ்ந்த பின்னரும் தலைவற்குப் பகற்குறி நிகழுமென்பது இவர் வாக்கால் தெரிகிறது. பழைய கருத்து இரவுக்குறியையே யன்றிப் பகற்குறியையும் தலைமகள் மறுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

மதுரை மருதங் கிழார் மகன் இளம் போத்தனார் (332):—மருதங் கிழாரின் மக்கள் இளம் போத்தனார், பெருங் கண்ணனார், சோகுத்தனார் என்பவர்களின் பாடல்கள் தொகைநூல்களில் வந்துள்ளன. அவர்களுள் இளம் போத்தன் என்பவர் மூவரில் இளையவர் போலும். குறுந்தொகையில் மட்டும் இவர் பாடல் உள்ளது. வாடைக் காலத்தே சில் பெயல் இருக்குமென்றும் அக்காலத்தின் கடைநாளில் காம நோயை நீந்துதற் கரிதென்றும் இவர் புலப்படுத்தி யுள்ளார்.

மதுரை யளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார். (188, 215):—அளக்கர் ஞாழல் என்பது ஒரூர், மள்ளர் என்பது வீரரைக் குறிக்கும் சொல். பாண்டிய அரசரால் முதலில் இவர் பாதுகாக்கப் பெற்றவர். சுக்கிரன் வானத்தில் தென்பாற் காணப்படின் மழை குறையுமென்று இவர் அறிந்திருந்தனர் (புறநா, 388 : 1-2, 15-6.) இவராற் பாடப்பட்டோன் சிறுகுடி கிழான் பண்ணன் என்பவன். இவர் சேஎத் தலைவர் என்பதற்கியையத் தம் பாடல்கள் சிலவற்றிற் போர்க் களத்திற் பெறும் வெற்றியைச் செல்வம் என்று குறித்திருக் கிறார் (அகநா. 144, 174); வினை முடித்து மீளும் தலைமகன் பாகனொடு கூறும் கூற்றே இவர் கவிகளில் மிகுதியாகக் காணப்படுகிறது. புலியின் உபத்திரவத்திலிருந்து பிடியைக் களிறு காப்பது இவராற் கூறப்பட்டுள்ளது (215.) இவர் பாடிய வேறு பாடல்கள் 10 (நற். 2 ; அகநா 7 ; புறநா, 1.)

மதுரையறுவை வாணிகன் இளவேட்டனார் (185) :— இவர் ஆடை விற்கும் வணிகர் ; அறுவை - ஆடை. கீழ்காற்றால் வீழ்த்தப்பட்ட காந்தள்மலர் பாறையின் மேல் கவிந்து கிடப்பது பாம்பு படம் ஒடுங்கிக் கிடப்பது போலும் (185)

என்றும் செவிலியர் பாராட்டப் பொலஞ்செய் கிண்கிணி நலம் பெறுசேவடி மணல்மலி முற்றத்து நிலம் வடுக் கொளாமல் விளையாடு ஆயத்துச் சிறுரைத் தலைவி காணுந் தோறும் தன்னை நினைந்து வருந்துவள் என்று வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறுவதாக (அகநா, 254) இவர் பாடியுள்ளார். மேலும் தலைவன் தன் மின்னெளிர் எஃகமே செல்நெறி விளக்க நல்லிரவில் வருவான் என்றும் (அகநா. 272) தினைப்பயிர் கரும்பு போலக் கவினித் தோன்றும் (அகநா. 302) என்றும் பாராட்டியுள்ளார். வேட்டனுர் என்ற பெயர்க் காரணம் புலப்படவில்லை. இவர் செய்தவைாக நற்றிணையில் 1ம் அகநானூற்றில் 6-ம், புறநானூற்றில் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றுமாக 9 செய்யுட்கள் காணப்படுகின்றன.

மதுரை யாசிரியர் கோடங் கொற்றனுர் (144):— ஆசிரியர் என்றதனுல் இவர் கணக்காயர் போலும். மகட் போக்கிய செவிலித்தாயின் கூற்ருக இவர் பாடிய செய்யுள் நயமுள்ள தாகும்.

மதுரை யீழத்துப் பூதன்றேவனுர் (189, 360):—ஈழநாட்டி லிருந்து வந்து மதுரையில் தங்கியவர் இவர். பூதன் என்பது இவருடைய தந்தையின் பெயர். தந்தத்தினுற் செய்த தேரின் நேமி போகும்போது மண்ணிற் புதைந்த பகுதி போக எஞ்சிய பகுதியே வெளியில் தெரியுமாதலால் அப் பகுதிக்குப் பிறையையும், பயிரைத் துமிக்கும் நேமிக்கு விண்வீழ் கொள்ளியையும் (189) உவமை கூறியுள்ளார். தூக்கணங் குருவிக் கூடுகள் தொங்கும் மூங்கில் கிளை வாடைக்காற்று அலைத்தலை (நற். 366) யும் காட் டுப் பன்றி தினையை உண்பதற்குப் பருவாய்ப் பல்லியின் பாடோர்த்துக் குறுகுதலையும் (அகநா. 88) இவர் வாக்கில் காணலாகும். சுரத்தில் 'பெருங்கை எண்கினம் ஈசலைத் தேடும் புற்றுக்களையுடைய சுவர்களோடு கூடிய புதல்கள் இவர்ந்த அழிந்துபட்ட பொதியிலில் கடவுள் நீங்கிய வலிய தூணினிடம் சேவற் புரு உடனுறை பழமையிற் றுறத்தல் செல்லாது பெடையுடன் வசிக்கும்' என்று (அகநா, 307) இவர் கூறுவதும் பிறவும் இவருடைய கவிநயம் ஆராய்ச்சி முதலிய வற்றைப் புலப்படுத்துகின்றன. இவர் பாடிய வேறு செய்யுட்கள் 4 (நற் 1; அகநா. 3.)

மதுரை யெழுத்தாளன் சேந்தம் பூதனுர் (90, 226):—சேந்தன் என்பவர் இவருடைய தந்தையார். அரசரிடும் கட்டளைகளை

எழுதும் தொழிலியுடையவர் இவர். அகநா. 207-இல் மகட் போக்கிய தாயின் கூற்றாக இவர் கூறும் செய்திகள் சிறந்த நயமுடையனவாக அமைந்துள்ளன. குறுந். 90-இல் இவர் காட்டும் உள்ளுறையுவமை இனிமை பயப்பதொன்றும். இம் மூன்று பாடல்களே இவர் செய்தவை.

மதுரை வேளா தத்தர் (315):—இவருடைய இயற்பெயர் தத்தன் என்பது. மதியத்தின் உதயம் கடலினிடத்தே நீளத் தோன்றுமாறு போல் கரிய மலையினிடத்தே அருவி தோன்று மென்றும் தலைவன் சூரியனுக்கு ஒப்பாக அச் சூரியனுடன் திரிதரு நெருஞ்சி மலரைப் போன்றவள் தலைவியென்றும் நான்கு அடிகளில் சுருங்கக் கூறி விளங்க வைத்த இவர் புலமைத்திறன் பாராட்டற் பாலது.

மள்ளனார் (72):—சில அடைமொழிகளைப் பெற்றுள்ள மள்ளனார் என்னும் இருவர் குறுந்தொகைச் செய்யுட்களை இயற்றிய வராக உளர். இவர் அவர்களினும் வேறாக இருக்கலாமென்று தோற்றுகிறது. தலைவியின் பூவொத் தலமருங் கண் ஏவொத்து நோய் செய்தனவென்று தலைவன் பாங்கற்குக் கூறியதாக இவர் செய்த இவ்வொரு பாடலே இப்பொழுது கிடைத்துளது.

மாடலூர் கிழார் (150):—இவர் வேளாண் மரபினர். இவர் ஊர் மாடலூர். மரத்தின் உச்சியிற் பரணின் மீது குறவர் இரவில் வாசனையுள்ள மரங்களை எரித்து விளக்கஞ்செய்யும் வழக்கம் இவராற் கூறப்பட்டுள்ளது.

மதுரை மருதனிள நாகனார் (77, 160, 279, 367):—மருதக்கலியைப் பாடிய மருதனிள நாகனார் வேறு; இவர் வேறு. ஒரு பாண்டியனுடைய வெற்றியை இவர் குறிப்பிடுகிறார்: நற். 39; அகநா. 312. இவராற் கூறப்படும் உபகாரிகள் பாட்டன், கோசர், வாணன், மாவண் கழுவுள் (அகநா. 90, 220, 269, 365) என்பவராவர். பரங்குன்றம் செல்லூர், ஊணூர், முனைப் பாக்கம், காமூர், (அகநா, 59, 90, 220, 245, 365) முதலியவை இவராற் குறிக்கப்படுகின்றன. "ஏதிலாளன் கவலை கவற்ற ஒரு முலையறுத்த" ஒருபெண்ணின் செய்தி (நற் 216) இவராற்கூறப் படுகிறது. தொழுநையாற்றங்கரையில் மாயவன் கோவியர் புடைவைகளை ஒளித்து வைத்தமையையும் (அகநா. 59) பரசுராமர் யாகம் செய்தமையையும் (அகநா. 220) இவர் கூறி

புள்ளார். உண்மைக்குச் சூரியனே உவமங்கூறி, "முந்நீர் மீமிசைப் பலர்தொழத் தோன்றி, ஏமுற விளங்கிய சுடரினும் வாய்மை சான்ற நின் சொல்" (நற். 283) என்கிறார். "அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை" என்று நல்லந்துவனார் என்ற புலவர் பரிபாடற் செய்யுளியற்றியதைச் சிறப்பித்துள்ளார்; அகநா 59. பரத்தைமையை விரும்பிய ஒரு தலைமகனைப் பல மலர்களை நாடிச் செல்லும் வண்டிற்கு உவமையாக்கி, "நெடுநீர்ப் பொய்கை நடுநா ளெய்தித், தண்கமழ் புதுமல ரூதும், வண் டென மொழிப மகனென் னூரே" (நற். 290) என்கிறார். கரந்தை வீரர்களது "பெயரும் பீடும் எழுதி யதர்தொறும், பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகநா. 131) இவராற் சிறப்பிக்கப்பட்டுள்ளது. நடுகல்லைப் பற்றிய வேறு செய்திகள் இவரியற்றிய அகநா. 297, 343, 365, 387-ஆம் செய்யுட்களிலும் காணப் படுகின்றன. ஒரு மனிவிக்குச் சிறப்பு அவளது சிறந்த கற்பினாலும் நற் புதல்வரைப் பெறுதலினாலுமே என்பது, "கடவுட் கற்பொடு குடிவிளக் காகிய, புதல்வர்ப் பயந்த புகழ்மிகு சிறப்பின், நன்னராட்டி" (அகநா, 184) என்று இவர் கூறியிருப்பதனாற் றெரிகிறது. கொங்கு நாட்டில் மக்கள் இடையில் மணிகளைக் கட்டிக்கொண்டு தெருக்களில் ஆடும் உள்ளிவிழா என்பதொன்று (அகநா, 368) இவராற்குறிக்கப்படுகிறது. இவருடைய பாடல்கள் பொருள் நயம் வாய்ந்து விளங்குகின்றன. இறையனா ரகப்பொருளுக்கு இவரும் உரைசெய்தனரென்பது அந்நூல் வரலாற்றாற் றெரிகிறது. நிலங்களைப் பற்றிய கற்பனைகளும், உள்ளுறைகளும், வெளிப் படையவுமங்களும், படிப்போர் மனத்தைக் கவர்வன. நிலங்களின் இயல்புகளை நன்கறிந்து பாடியவர். இவர் பாடிய வேறு செய்யுட்கள்: 33 (நற் 10; அகநா, 21; புறநா. 2.)

மாதிரத்தர் (113):—இப்பெயர் மாதீர்த்தன் என்றும் மாதிரத்தன் என்றும் சில பிரதிகளிற் காணப்படுகிறது. பெண்கள் கூந்தலின் எண்ணெயைப் போக்கிக் கொள்ள மண்ணை அப்பித் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் இவராற் கூறப்பட்டிருக்கிறது.

மாமலாடனார் (46):— இப்பெயர் மாமிலாடன் என்றும் பிரதிகளிற் காணப்படுகிறது. மலாடு என்பது கொடுந்தமிழ் நாடுகள் பன்னிரண்டில் ஒன்று. அதனைச் சேர்ந்தவர் இவர். வாடிய

ஆம்பல் மலருக்குக் கூம்பிய சிறகுகளையுடைய மீனையறை குருவியை இவர் உவமை கூறியிருக்கிறார்.

மாமூலனார் (11):—இவர் அந்தணர்; இவரை யோகி என்றும் கொள்ளுதல் பொருந்தும். இது தொல். பொருள். 75 - ஆம் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர், "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமு முணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன் றேயத்து அணங்கிலை வகையோராவர்" என்று பார்ப்பன வாகையை விளக்குவதனால் விளங்குகிறது. மாமரத்தடியில் இருக்கும் ஏகாம்பரநாதன் பெயரே மாமூலர் என்று வழங்கியது போலும். இவர், "பல் புகழ் நிறைந்த வெல் போர் நந்தர், சீர்மிகு பாடலி" என்று நந்த மன்னரையும் (அகநா. 255), மோரியரையும் (அகநா. 251, 281) பாராட்டியிருப்பதனால் அவர்கள் காலத்தவராகக் கருதப் பெறுகிறார். அவர்கள் காலம் கி. மு. 260 ஆண்டுகளுக்கு முன் என்பர். பாலைத்திணையையே இவர் மிகுதியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அங்கங்கே இவர் உபகாரிகளாகிய புல்லியையும் அவனது வேங்கட மலையையும் (அகநா. 61, 265, 295, 311, 359, 393) நெடு வேளாவியையும் (அகநா. 1, 61), நன்னனையும் அவன் ஏழ் குன்றத்தையும் (அகநா. 15, 349), நன்னன் வேண்மான் என்பவனுடைய வியலூரையும் (அகநா. 97), மற்றும் வடுகத் தலைவராகிய கட்டி, எருமை என்பவர்களையும் அஞ்சி, கண்ண னெழினி, பாணன் என்ற வடநாட்டுத் தலைவன் முதலியவர் களையும் தம் பாடல்களிற் குறிப்பிட்டிருக்கிறார். இவர் பாடல்களிலிருந்து தெரியும் சரித்திரச் செய்திகள் பல: கரிகால் வளவனெடு வெண்ணிப் பறந்தலையிற்பொருது தோற்றுப் புறப்புண் நாணி வடக்கிருந்த சேரலாதனெடு சில சான்றோரும் வடக்கிருந்து மாண்டனர் என்பதும் (அகநா. 55) சேரலாதன் கடலில் நாவாயைச் செலுத்தி ஓரரசனுடைய கடம்பை அறுத்து அதனைக் கொண்டு செய்வித்த முரசினெடு இமயங்காறும் சென்று அம்மலையின்மீது விற்பொறித்து வந்து பகைவர் தந்த திறை அனைத்தையும் தன் வாயில் முன் குவித்துப் பிறர் முகந்துபோகச் செய்தனன் (அகநா. 127) என்பதும், மத்தி என்பவன் எழினியின் மேற் படையெடுத்துச் சென்று அவனை வென்று அவன் தன் பற்களைக் கொணர்ந்து தன் வாயிற் கதவில் அழுத்தினன் (அகநா 211) என்பதும் உதியஞ்சேரல் (பாரதப்படை வீரருக்குப்) பெருஞ்சோற்றை வழங்கிய போது கூளிச்சுற்றம் எஞ்சிய சோற்றை உண்ண

அங்கு வந்து குழுமியிருந்தன (அகநா. 233) என்பதும் எவ்வி என்ற உபகாரி செருவில் இறந்துபட வீருத்தம் பொருத பாணர் அவ்விடத்தே தம் யாழை முறித்துப் போட்டு அன்று காறும் அவ்வியாழ் தமக்கு வயிற்றுப் பிழைப்புக்குக் காரண மாக இருந்தமையின் அதனைத் தொழுது அவலித்தார்கள் (அகநா. 115) என்பதும் இவர் காட்டும் கதைகளில் ஒரு சிலவாம். இவர் கவிகளில் இங்ஙனம் வரலாறுகளே பெரிதும் காணப்படுகின்றன. இவர் இயற்றியனவாக இப்பொழுது கிடைத்துள்ள பாடல்கள் : 30 (நற், 2 ; குறுந 1 ; அகம், 26 ; திருவள்ளுவ மாலை, 1.) இவர் இலக்கண நூல் ஒன்று செய்துள்ள தாக இலக்கண விளக்கம் முதலியவற்றால் தெரியவருகிறது.

மாயெண்டனார் (235) :—இவர் பாம்பின் உரியை அருவிக்கு உவமை கூறுகிறார். தலைவியைப் பாதுகாக்குமாறு தலைவன் வாடையை வேண்டுவதாக இவர் செய்யுள் அமைந்துள்ளது.

மாலை மாறனார் (245) :—வாள் போன்ற வாயையுடைய மடல்கள் செறிந்த தாழை வேல்நாட்டும் வேலியைப் போலப் பயன்தரும் கடற்கரை என்று இவர் கூறுவதிலிருந்து வேல்களை வேலி யாக நடும் வழக்கம் உண்டென்று தெரிகிறது. மாறன் என்ற பெயர் இவர் பாண்டிய மன்னனாக இருக்கலாமோ என்று கருத இடந்தருகிறது.

மாவளத்தனார் (348):—இவர் தலைவியின் வாட்டத்துக்கு யானையின் கொம்பினால் முறிந்து கிடக்கும் முல்லைக் கொடியை உவமை கூறியுள்ளார். சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தன் என்ற பெயருடைய ஒருவன் புறநா. 43-ஆம் செய்யுளிற் கூறப்படுகிறான்.

மிளைக்கந்தனார் (196) :—மிளை என்பது ஓர் ஊர். மிளைப் பெருங் கந்தனார் என்ற பெரிய புலவர் ஒருவர் பாடிய கவிகள் இத் தொகை நூலில் வந்துள்ளன. அவர் வேறு, இவர் வேறு. "ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது வானேரமுதம் புரையுமாலெனக்கு" என்று தலைவன் தலைவியைப் பாராட்டு வான் என்ற இலக்கணத்துக்கு இவர் பாடல் உதாரணமாக விளங்குகின்றது. பாரிவள்ளலின் பறம்பு நாட்டிலுள்ள சுனை நீரின் இனிமை இவரால் புகழப்பட்டுள்ளது அதனால் அவ்வுபகாரியால் ஆதரிக்கப் பெற்றாருள் இவரும் ஒருவ ரென்று கொள்ளக் கூடும். கந்தனரென்பது இவருக்கு இடப்பட்ட தெய்வப் பெயர்.

மிளை கிழான் நல்வேட்டனார் (341):—இவர் வேளாண் மரபினர். நல் வேட்டனார் என்று வேறு அடையின்றியும் இவர் பெயர் காணப்படுகின்றது. "பெரியோர் கண்ணிய ஆண்மை கடவ தன்று" (341), "நெடிய மொழிதலும் கடிய வூர்தலும், செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே, சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர், புன்கண் ணஞ்சும் பண்பின், மென்கட் செல்வம் செல்வமென்பதுவே" (நற். 210) என்பன இவர் கூறும் நீதிகளாகும். கான்யாற்றுப் புது வெள்ளத்தில் தலைவி நீராடுதல் (நற். 53) இவரால் காட்டப்படுகிறது. மதியுடம் பாட்டின்கண் தலைவன் தோழியைப் பின்பற்றி ஒழுகு வதற்குப் போரிற்பட்ட வீரர் உயிர் போமளவும் அருகிருந்து பேய் வழிபாடு செய்தலை (பேய்க்காஞ்சியை) உவமை கூறி யுள்ளார். (நற். 349.) நற்றிணையில் 4 செய்யுட்கள் இவர் பாடியவை.

மிளைப் பெருங் கந்தனார் (136, 204, 234):—காமத்தின் இயல்பை இவர் வருணிக்கும் முறை அழகாக அமைந்துள்ளது(136,204.) "செவ்வானம் படர்ந்துஒளி மழுங்கிய பொழுதில் முல்லை மலர் கின்ற காலத்தையே மாலைக்காலம் என்பர்; துணைபிரிந்தவர் களுக்கு விடியலும் பகற்காலமும்கூட மாலையாகும்" என்று தலைவிகூற்றில் (234) இவர் அமைத்திருக்கும் செய்யுள் அழகமைந்ததொன்றும்.

மிளை வேள் தித்தனார் (284):—இவர் உழுவித்துண்ணும் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். பாறையின் மீது செங்காந்தள் படர்ந்து மலர்ந்திருப்பது போரில் புண்பெற்ற யானையின் முகத்தைப் போன்றதாக இவர் கூறியுள்ளார்.

மீனெறி தூண்டிலார்(54):—இவர், யானை இழுத்துவிட்ட மூங்கி லுக்கு, மீன் பிடிப்பவர் மேலே இழுத்த தூண்டிலை உவமை கூறியதனால் இப்பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை.

மோசி கீரனார் (59, 84):—மோசி என்பது ஓர் ஊர். மோசி கொற்றனார் இவ்வூரினரே. படுமரத்து மோசி கீரனார் என்னும் புலவர் ஒருவர் இத்தொகை நூலிற் பாடியுள்ளார். அவரும் இவரும் ஒருவரோ வேறோ தெரியவில்லை. ஒருகால் இவர் தெய்வத்தன்மையுள்ள முரசு கட்டிலில் அறியாது துயின்று சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறையாற் கவரி வீசப்பெற்ற பெருமை வாய்ந்தவர். இவர் அம்மன்னவனையும் கொண்கானங் கிழான் என்பானையும்

பாடியுள்ளார். "நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே, மன்ன னுயிர்த்தே மலர்தலையுலகம்" என்று அரசரின் இன்றியமை யாமையை இவர் புலப்படுத்தியுள்ளார் (புறநா. 186.) "தலைவன் நின்னைப் பிரியான்; பிரியின், வேற்று வேந்தன் தானையோடு மதிற்புறத்தே வந்திறுப்பப் புறக்கொடை வாராமல் அகமதிலிற் கிடந்த நன்னன் போல யான் ஆகுவன்" என்று தோழி தலைவிக்குக் குறை நயப்பிக்குங்கால் கூறுவது அழகாக உள்ளது (அகநா. 392.) ஆய் அண்டிரனுடைய பொதியில், ஓர் உபகாரியின் அரசிலக்குன்றம் இவைகளையும் இவர் பாராட்டி யுள்ளார். (59, 84.) குறுந்தொகையிலன்றி இவரியற்றியன வாக இப்போது தெரிந்துள்ள வேறு செய்யுட்கள்: 7 (நற். 1; அகநா 1; புறநா 4; திருவள்ளுவமாலை, 1.)

மோசி கொற்றனார் (377):—தலைவனது நல்லியல்பறிந்து ஆற்றி யிருக்கும் தலைவி தோழியைப் பார்த்து, "நீ ஆற்றலையே" என்று கூறுவதாக இவர் பாடிய செய்யுள் அமைந்துள்ளது.

மோதாசனார் (229):—மனம் ஒத்துச் செல்கின்ற தலைவன் தலைவி யர்க்கு இணைமலர்ப்பிணையலை இவர் உவமை காட்டி யுள்ளார். சிறுவயதில் ஓரில்லிலிருந்து கலாம் விளைத்தாரைத் தலைவன் தலைவியாகச் செய்த விதியை இடைச் சுரத்துக் கண்டோர் வியந்து பாராட்டியதாக இவர் செய்யுள் அமைந் துள்ளது.

வடமவண்ணக்கன் தாமோதரனார் (85):—இவர் பெயர் வடமன் றாமோதரனார் என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது. வண்ணக்கன் - நாணய பரிசோதகன், நோட்டக்காரன். இப் பொருள் நீலகேசியுரையிற் கண்டது. இவர் வடதிசையி லிருந்து வந்தவராக எண்ணப்படுகிறார். புறநானூற்றில் (172) பிட்டங் கொற்றனை இவர் பாடுங்கால், "பிட்டன் வேலும், அவன்மாறுகொள் மன்னரும் வாழ்க" என்று கூறுகிறார். பகைமன்னரை அங்கு வாழ்த்தியது இவன் வென்று திறை கொள்ளல் அவருளராயின் என்பதனால். "தலைவன் பாணன் வாயில் யாரினும் இனியன் பேரன்பினன்" என்று தோழி தலைவனது அன்பின்மையைப் புலப்படுத்துவதாக இந்நூலுள் இவர் செய்யுள் அமைந்துள்ளது இவர் இயற்றிய வேறு செய்யுள் புறநா. 172.

வடமவண்ணக்கன் பேரி சாத்தனார்:—பேரிசாத்தனார் என்ற புல வரும்இவரும் ஒருவரே என்றுகொள்ளல் அமையும். பேரிசாத் தனார் என்ற பெயரைப் பார்க்க.

வருமுலை யாரித்தி (176) :—இவர் பெண்பாலார். நெஞ்சத்தின் கலக்கத்துக்கு மழை நீரின் கலக்கத்தை இவர் உவமை கூறியுள்ளார். தலைவனுக்குத் தேனிருலை இவர் உவமை கூறியிருப்பது பாராட்டற்பாலது.

வாடாப் பிரபந்தர் (331) :—தலைவன் பொருள் தேடிச் செல்வதற்காகப் பிரிய எண்ணியதை நினைந்து வருந்திய தலைவியை நோக்கிய அவர் அங்ஙனம் செல்லாரென்று ஆற்றுவித்ததாக அமைந்துள்ளது இவர் செய்யுள்.

வாயிலான் தேவனார் (103, 108) :—வாயில் என்பது ஒரூர். வாயிலிளங் கண்ணனாரும் இவ்வூரினரே. இந்த இரண்டு செய்யுட்களும் பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறும் கூற்றாக அமைந்துள்ளன.

வாயிலிளங் கண்ணனார் (346) :—"தலைவன் காலையில் வந்து தலைவிக்குக் குவளைமாலையைத் தந்தும், பகலில் தினையில் படுகிளி ஓப்பியும், மாலைப் பொழுதில் தன்நெஞ்சில் ஒன்றைக் கருதி வருந்தி அக்கருத்தைச் சொல்லவும் எழுச்சி பெறுமல் குறைவுற்றான்" என்று தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியதாக இவர் பாடல் அமைந்துள்ளது.

விட்ட குதிரையார் (74) :—யானையாற் பற்றி விடப்பட்ட மூங்கில் செருவிற் செலுத்தி விட்ட குதிரையைப் போல மேலே எழும்பும் என்று உவமையை அமைத்தமையின் இச்சிறப்புப் பெயரால் இவர் வழங்கப்பட்டார்.

வில்லக விரலினார் (370) :—பரத்தையும் தலைவனும் ஒன்றுபட்டதற்கு வில்லைப் பிடித்த விரல்களை உவமையாக்கி, "வில்லக விரலிற் பொருந்தி" என்று பாடுதலின் இவர் இப்பெயர் பெற்றார்.

விற்றூற்று மூதெயினனார் (372) :—இப்பெயர் முத்தூற்று மூதெயினனார் என்றும் பிரதிகளிற் காணப்படுகின்றது. விற்றூறு அல்லது முத்தூறு என்பது ஓர் ஊரின் பெயர். விற்றூற்று வண்ணக்கன் தத்தன் என்ற ஒருவரது பாட்டு நற்றிணையிற் காணப்படுகின்றது. இவர் வேடர் மரபினரென்பதும் முதுமையினாற் கௌரவம் பெற்றவரென்பதும் மூதெயினனார் என்ற தொடரால் தெரியவருகிறது. தமிழருடைய திருமண முறை இவரால் மிக அழகாக வருணிக்கப் பெற்றுள்ளது (அகநா 136) திங்களை உரோகிணி சேர்ந்த நாள் எல்லாக்குற்றமும் நீங்கிய நன்னாளென்று இவர் கூறுவர். மண நாளன்று வாகையிலையையும் அறுகங் கிழங்கையும்

நூலிற் சேர்த்துக் கட்டி அதனை மணமகளுக்குச் சூட்டும் வழக்கமும் அற்றையிரவிலேயே மணமகனையும் மகளையும் பள்ளியறைப் படுத்தலும் இவர் வாக்கால் தெரியவருகின்றன. போர்த்தியுள்ள போர்வை கழித்ததும் வெளிப்படும் தலைவியின் தோற்றத்துக்கு இவர் உறை நீக்கிய வாளின் தோற்றத்தை உவமை கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இவர் இயற்றியனவாக அகநானூற்றில் மூன்று செய்யுட்கள் காணப்படுகின்றன.

வெண்கொற்றனார் (87) :—தன்னை வருத்தும் ஈயின் குரலோசையைக் கேட்ட அளவிலேயே பசுவானது நடுங்க அதன் கழுத்திலுள்ள மணி ஒலிக்கும் என்று இவர் ஈயின்பால் பசுவுக்குள்ள அச்சத்தைப் புலப்படுத்தி அம்மணியோசை தலைவிக்குக் காமவேதனையை மிகுப்பதை இந்த ஒரு பாட்டிற் காட்டியுள்ளார்.

வெண்பூதனார் (83) :—பலாப்பழத்தின் சுவைக்கு இவர் தமது வீட்டின்கண் இருந்து தமது முயற்சியால் ஈட்டிய பொருளில் தம் கூற்றை உண்போர் பெறும் சுவையை உவமை காட்டியுள்ளார். தலைவனை மணமகனாக ஏற்றுக் கொள்ள இயைந்த செவிலியைத் தோழி, "அரும்பெறலமிழ்த மார்பத மாகப், பெரும்பெய ருலகம் பெறீஇயரோ" என்று வாழ்த்துவதாக இவர் செய்யுள் அமைந்துள்ளது.

வெண்பூதியார் (97, 174, 219) :—வெள்ளூர்கிழார் மகனார் வெண்பூதியார் என்பாரும் இவரும் ஒருவரே. பெயரளவில் பெண்பாலாக இருக்கலாமென்று தோற்றினாலும் வெள்ளூர் கிழார் மகனார் என்றிருப்பதால் ஆண்பாலென்றே கொள்ள வேண்டும். இவர் வேளாண் மரபினர்; சைவ சமயத்தார்; பூதி - விபூதி; திருநீறு. இவருடைய செய்யுட்கள் மூன்றும் தலைவியின் கூற்றாகவே அமைந்துள்ளன. "யான் ஈண்டையேன், என் நலன் கானலிடத்தது, தலைவன் தன் ஊரினன், எம்மிருவருக்குமிடை நின்ற மறை அலராகி அம்பலமாயிற்று" (97) என்று தலைவி தன் வருத்தத்தைத் தெரிவிக்கும் செய்யுள் சுருங்கச் சொல்லல் முதலிய பல அழகுகளைத் தன் பாற் பெற்ற தொன்றாம். இஃது ஒரு வகையில் 219-ஆம் செய்யுளோடு ஒத்திருக்கின்றது. "தலைவன் பொருள் வேட்கையனாகித் தன்னைப் பிரிய நினைப்பானேயானால் இவ்வுலகில் செல்வமே உறுதிப் பொருளாகும், அருளோ தன்னை எவரும் ஏற்றுக் கொள்ளாததாகும்" என்று தலைவி

கூறுவதாக இவர் அமைத்துள்ள பாட்டும் (174) அழகமைந்த தொன்றும்.

வெண்மணிப் பூதி (299) :—இவர் ஒரு பெண்பாற் புலவர். வெண்மணியென்றி ஓர் ஊர் அரியலூர்ப் பக்கத்தில் உள்ளது. இவர் அவ்வூரினர் போலும். "தலைவனைக் கண்ட கண்ணும் அவன் சொல்லைக் கேட்ட செவியும் வாளா விருக்கத் தோள்கள் மட்டும் அவன் பிரிந்தகாலத் தன் மெலிவைப் புறத்தார் அறியும்படி நெகிழ்ந்தன" என்று தலைவி கூறுவதாக இவர் செய்யுள் அமைந்துள்ளது.

வெள்ளி வீதியார் (26, 44, 58, 130, 146, 149, 169, 386) :—இவர் பெண்பாலார். இவர் பாடிய பாடல்கள் பல தம் அனுபவங்களே யாகும் என்பதும், இங்ஙனமே தம் அனுபவங்களைக் கூறும் ஆதிமந்தியார் என்ற பெண்புலவரும் இவரும் ஒரு காலத்தவர் என்பதும் தொல். அகத். சூ 54-க்கு நச்சினார்க்கினியர் எழுதிய விசேட உரையால் தெரிகின்றன. "கன்று முண்ணுது கலத்தினும் படாது கவினே.... இது (குறுந். 27) வெள்ளி வீதியார் பாட்டு; 'மள்ளர் குழீஇய விழவி னானும் .....மகனே' (குறுந். 31); இது காதலற் கெடுத்த ஆதிமந்தி பாட்டு. இவை தத்தம் பெயர் கூறிற் புறமாம் என்றஞ்சி வாளாது கூறினர். ஆதிமந்தி தன்பெயராலும் காதலனுகிய ஆட்டனத்தி பெயராலும் கூறிற் காஞ்சிப் பாற்படும்; 'ஆதிமந்திபோல, ஏதஞ்சொல்லிப் பேது பெரி துறலே' (அகநா. 236) எனவும், 'வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவயர்ந் திசினுல் யானே' (அகநா. 147) எனவும் அகத்திணைக்கட் சார்த்து வகையான் வந்தன அன்றித் தலைமை வகையாக வந்தில என்பது" அது. வெள்ளி வீதியார் தம் கணவனைத்தேடி அலைந்தமை இவர் வாக்கானும், ஔவையார் "நெறிபடு கவலை நிரம்பா நீளிடை, வெள்ளி வீதியைப் போல நன்றுஞ், செலவயர்ந் திசினுல் யானே" (அகநா, 147) என்று கூறியிருப்பதனுலும் தெரியவரும். இவர் பாடிய "தூதுவிட்டுத் தலைவரைத் தேடித் தருவேன்" என்ற தோழி கூற்று, "நிலந் தொட்டுப் புகாஅர் வான மேறார், விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார், நாட்டி னூட்டி னூரி னூரிற், குடிமுறை குடிமுறை தேரிற், கெடுநரு முளரோ நங் காதலோரே" (130) என்று அழகுபட அமைந்துள்ளது. நச்சினார்க்கினியர் இச் செய்யுளை "செவிலி இடைச் சுரத்துச் சென்று தலைவியையும் தலைவனையும் தேடத்

துணிந்து கூறினது" என்பர் (தொல். அகத். சூ, 37.) "காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந் தனவே!.....பிறரே" (குறுந். 44) என்பதும் செவிலியின் கூற்றே. இச்செய்யுள் மிகுந்த நயம் வாய்ந்தது. தன் காம நோய் பரவுதலேத் தலேவன் பாங்களுக்குச் கழற்றெதிர்மறை யில், "ஞாயிறுகாயும் வெவ்வறை மருங்கிற், கையிலாமன் கண்ணிற் காக்கும், வெண்ணெ யுணங்கல் போலப், பரந் தன்றிந் நோய்" (58) என்று கூறும் பகுதியுள் அந்நோயைத் தடுக்கத் தன் செயலின்மை குறிக்கப்படும் முறை அழகிது. முன்காலத்தில் மணம் பேசப் பெரியோரை விடுத்தலும் தலேயில் பாகையை அணிந்து மங்களகரமான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதும் தமிழ் நாட்டின் மரபு இம்மரபு 146-ஆம் செய்யுளில் இவராற் கூறப்படுகிறது. அன்னி என்பான் குறுக்கைப் பறந்தலேயில் திதியனுடைய காவல் மரமாகிய புன்னேயைக் குறைத்த செய்தி இவராற் குறிக்கப் பட்டுள்ளது (அகநா. 45.) நற்றிணையில் மூன்றும் அகத்தில் இரண்டும் திருவள்ளுவ மாலேயில் ஒன்றும் இவர் பாடிய வேறு செய்யுட்களாகும்.

வேட்டக் கண்ணனர் (389): இவர் சாதியில் வேடர் என்று தெரிகிறது; வேட்டம் - வேட்டை. இவர் தாம் வேடர் என்பதற்கியையத் தோழிகூற்றில் "தலேமகனுடைய குற் றேவல் மகன், "நெய்கனி குறும்பூழ் காயமாக, ஆர்பதம் பெறுக" என்று நெய்யிற் பொரித்த காடை இறைச்சியைக் கூறியுள்ளார். வேட்டக் கண்ணனர் என்பது கண்ணப்ப நாயனரை நினேவுறுத்துகின்றது.

வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனர் (362): வேம்பற்றூர் என்பது மதுரைக்கு வடகிழக்கில் இரண்டு காதத்தில் வையை நதிக்கு வடக்கே உள்ளது. பண்டைக்காலந் தொட்டுத்தமிழ் அறிஞர் வாழும் இடம் இது. இப்போது வேம்பத்தூர் என்று வழங்குகிறது. வேம்பற்றூர்க் குமரனர் என்பவரின் பாடல்கள் அகத்திலும், புறத்திலும் உள்ளன. இவர் கூத்தாடுந் தொழிலேயுடையவர். "வேல, நீ கொடுக்கும்பலி யைச் சிலம்பன் ஒண்டாரகலமும் உண்ணுமோ" என்று தோழி கூற்றில் இவர் அமைத்துள்ள கருத்தைப் பிற் காலத்தவர் அங்ஙனமே எடுத்தாண்டனர் (தமிழ்நெறி. மேற். 104; பாண்டிக் கோவை; கிளவித் தெளிவு.)

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
9	29	காபஞ்...மொழிமோ	காமஞ்...கண்டனமொழிமோ
24	34	காமக் கிழத்தியரிர்	காமக் கிழத்தியர்
30	24	கோடிரிலங்கு	கோடூரிலங்கு
44	12	செற்காற்	செங்காற்
47	22	கொளிள்	கொளின்
83	16-7	பகலென, கவகைகைச்	பகலெனக், கைவகைகச்
88	28	மொழியாளாரால்	மொழியாளரால்
98	16	இன்புறுத்தற்குரிய	இன்புறுதற்குரிய
120	10	செவ்வுறு பாவை	செய்வுறு பாவை
125	3	அகத்தமிழனது	அகத்தமிழினது
127	9	விரும்ப...யாகி	விரும்பப்பெற்றூஉப் போன்றவ
136	6	என்	எம் [ளாகி
140	4	கொளர்	கொளற்
144	3	பாணர்	பரணர்
145	25	தொழி	தோழி
146	29	புணர்ச்கி	புணர்ச்சி
,,	33	உற்றின்றே	உற்றின் புறே
147	16	னனிசால்	னணிசால்
148	25	செல்விக்	செவ்விக்
150	15	முயற்ச்சி	முயற்சி
150	27	ளாகளின்	ளாகலின்
155	4	துகன	துகள ,,
156	5	கோவத்தன்	கோவதத்தன்
167	25	நோகயற்	நோக்கயற்
170	30	வொடித்	வோடித் [பேரிசாத்தன்
185	13	வடம வண்ணக்கன்	வடம வண்ணக்கன்
186	29	னிலத்தாதலின்	னிலத்ததாதலின்
193	16	முற்றுச் சொல்	முற்றுச் சொல்
,,	18	என்றுங் [...சொல்	என்னுங்
217	28	பாங்கிற்கு	பாங்கற்கு
255	14	பாவை	பாவையென்றது தலைவியை
260	19	செல்லுற்கு	செல்லுதற்கு
261	24	(ஓப்பு)	இதன்முன் 'தலைமகள் உவமை கூறிய வழி நின்ற பெண்டிர் தடுப்பக் கயிறரி யெருது போலப் போந்தனை யெனத் துனியுறு கிளவி வந்தது' என் பதைச் சேர்த்துக் கொள்க.
262	22	வாரர்	வாரார்
275	17	கீடித்த	கீட்டித்த
282	20	விவரித்து	விரித்து
294	8	பெருங்கதவன்	பெருங்கதழ்வன்
303	11	நீல மேனி	நீல மணி
304	29	கஞ்ச	கஞ்சு

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
311	33	அத்தீங்கிளவி	அந்தீங்கிளவி
331	18	கிளிமங்கலங்கிழார்	கிள்ளிமங்கலங்கிழார்
337	1	உரோடகத்துக் காரத்தன்	உரோடகத்துக் கந்தரத்தன்
350	36	மாரியாணை	மாரியாணை
364	7	மாறுப்பட்டது	மாறுபட்டது
382	23	கல்ன்	கல்லென்
386	17	கிளிமங்கலங்	கிள்ளிமங்கலங்
401	26	துமிப்பக்	துமியக்
413	37	செய்யுளுக்கு	செய்யுளுக்கு
415	7	வலியுறுத்தியது	வலியுறுத்தியது; இது காமத்தை மிகுவிப்பது; குறுந். 391.
416	33	றெனலுமாம்	றெனலுமாம்; என் பதனுல் கூதிர்ப் பருவம் குறிக்கப்
421	8	கரிக்குரற்ட்	கரிக்குறட் [பட்டது.
465	33	அ, 2	அ, உ
479	5	குருகுளரிடத்தின்	குருகுளரிறகின்
500	27	ஆற்ரே	ஆற்றே
504	3	காலக்து	காலத்து
508	15	உணர்த்தினன்	உணர்த்தினள்
510	11	தலைவி கூற்று	'இரவுக்குறி வந்த...' என்பதற்கு முன் இதனை அமைத்துக்
527	15	கூந்தலீன்றுயின்	கூந்தலின்றுயின் [கொள்க.
531	2	ழுறுக்கு	முறுக்கு
569	4	கூழிக் கொற்றன்	கோழிக் கொற்றன்
595	2	எள்ருள்	என்ருள்
602	27	கள்ளுண்...போலும்	இவ்வாக்கியத்தை நீக்கி விடுக
603	27	அஞ்சியாந்தை	அஞ்சிலாந்தை
633	23	கண்டனனே	கண்டனனே இலனே
,,	24	கண்டனனே இலனே	கண்டேனே
634	34	நம்மிமாரன்னள்	னம்மோ ரன்னள்
637	32	நீருங்கழி	நிருங்கழி
638	23	என்று கெடாத	என்றும் கெடாத
641	9	அருவிக்கு...உவமை கள்	மதியத்தின் நிழல் கார்க்கடலில் நீண்டு தோன்றுதல் அருவி
643	17	வருவேனென்னும்	வருவேனென்றும் [யைப்போலும்
668	5	கிரனெயிற்றியன்	கீரனெயிற்றி
670	9	வாடப்பிரமந்தன்	வாடாப்பிரபந்தன்
694	31	ஊராருக்கு	ஊராரலருக்கு
720	33	விம்மலல	விம்மலள்
724	13	யைப்போன்றுவனைந்த	யை அணிந்த
732	19	நிலையிலிருந்து	நிலையிலிருந்து
743	9	மோசிக் கொற்றன	மோசி கொற்றன்
752	22	குறனின்	குறினின்

உ

கணபதி துணை

குறுந்தொகை

மூலமும் உரையும்

கடவுள் வாழ்த்து

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்று லுலகே.

என்பது கடவுள் வாழ்த்து.

பாரதம் பாடிய பெருந்தேவனார்.

(பிரதி பேதம்.) 4 'வெஞ்சுடர்', 'செஞ்சுடர்' 6. 'ஏமம்வைகல்'

(பதவுரை.) தாமரை புரையும் காமர் சேவடி - தாமரைமலரைப்போன்ற அழகிய செம்மையாகிய திருவடியையும், பவழத்து அன்ன மேனி - பவழத்தை யொத்த சிவந்த நிறத்தையும், திகழ் ஒளி - விளங்காநின்ற ஒளியையும், குன்றி ஏய்க்கும் உடுக்கை - குன்றிமணியை ஒக்கும் சிவந்த ஆடையையும், குன்றின் நெஞ்சு பக எறிந்த அம் சுடர் நெடு வேல் - கிரவுஞ்சமலையினது நடுவிடம் பிளக்கும்படி வீசிய அழகிய ஒளியையுடைய நெடிய வேற்படையையும், சேவல் அம் கொடியோன் - கோழிச்சேவலை வரைந்த கொடியையுமுடைய முருகக்கடவுள், காப்ப - பாதுகாத்தருளுதலால், உலகு ஏமம் வைகல் எய்தின்று - உலகத்திலுள்ள உயிர்கள் இன்பமயமாகிய நாட்களை அடையாநின்றன; ஆதலின் உலகுக்கு இடையூறில்லை யென்றவாறு.

(முடிபு.) அடியையும் மேனியையும் ஒளியையும் உடுக்கையையும் வேலையும் சேவற்கொடியையுமுடைய முருகவேள் காப்ப உலகு ஏமவைகலை எய்தியது.

(கருத்து) முருகக்கடவுளின் இத்திருவுருவைத் தியானம் பண்ணுக ; பண்ணின் எல்லா நலமும் எய்தலாம்.

(விசேடவுரை) மங்கலமொழியாதலின் தாமரை முற்கூறப்பட்டது. காமர் - காமம் மருவு என்பதன் விகாரமெனக் கொண்டு விருப்பம் மருவிய எனலுமாம் ; " காமரு சுடர்மலர் " (முருகு. 75) என்பதன் உரையையும் அதன் அடிக்குறிப்பையும் பார்க்க. மேனி: ஆகுபெயர் ; ' மேனியென்றூர் ஆகுபெயரால் நிறத்தை ' (சிலப். 5: 172, அடியார்.) குன்றென்றது சூரபன்மாவுக்கு அரணாகி அவனை உள்ளிட்டுக்கொண்டு ஓடிவந்த மலையெனலும் ஆம் ; " ஒருதோகை மிசையேறி யுழல்சூரு மலைமார்பு முடனூடறப், பொருதோகை சுரராச புரமேற விடுகாளை புகழ்பாடுவாம் " (தக்க. 5) என்பதையும், ' தனக்குப் பகைவனான சூரபன்மாவுக்கு மறைவாய் ஓடிவரலான மலையினுடைய மார்பும் சூரபன்மாத்தானும் ஒக்க ஒரே காலத்திலே ஊடுருவும்படி வேலேறுபடப் பொருதருளி ' என்னும் அதன் உரைப் பகுதியையும், " கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியும், தொளைபட் டுருவத் தொடுவே லவனே " (கந்தரனுபூதி) என்பதையும் பார்க்க. நெஞ்சு - நடுவிடம். சேவல் - மயிற்சேவலுமாம் ; ஆண்மயிலுக்குச் சேவலென்னும் பெயர் வழங்குதல் மரபன்றுயினும், முருகவேளுடைய மயிலை அங்ஙனம் கூறுதல் பொருந்தும் ; " சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும், மாயிருந் தூவி மயிலலங் கடையே " (தொல். மரபு. 48) என்பதன் விசேடவுரையிலுள்ள, ' செவ்வேளூர்ந்த மயிலுக்காயின் அதுவும் நேரப்படும் ' என்னும் பேராசிரியர் கூற்றால் இது விளங்கும். முருகவேளுக்கு மயிற்கொடியும் உண்டென்பது, " பல்பொறி மஞ்ஞை வெல்கொடியகவ " (முருகு. 122) என்பதனாலும் அதன் அடிக்குறிப்பாலும் அறியப்படும். சேவலங் கொடியோனென்பது முருகனென்னும் துணையாய் நின்றது. சேவலங்கொடியை உடம்படுபுணர்த்தினர், " பழமுதிர் சோலை மலைகிழ வோனே " (முருகு. 317) என்றாற் போல. ஏமவைகல் - பிறவித்துன்பம் சாராத நாட்களெனினுமாம் (பரி. 17 : 53, பரிமேல்.) உலகு : ஆகுபெயர். எய்தின்று : காலவழுவமைதி.

இஃது உலகுக்குப் பயன்பட வாழ்த்தியது.

இது வாழ்த்து முதலிய மூன்றனுள் வருபொருளுரைத்தலென்பதன்பாற்படும்.

இச்செய்யுள் அகப்பொருட்டுறைச் செய்யுட்டொகையாகிய இந்நூலுக்குப் புறத்துறுப்பாய்ப் புறப்பொருட் பாடாண்டிணையைச் சார்ந்த கடவுள்வாழ்த்தென்னும் துறையின்பாற்படும்.

* மேற்கோளாட்சி. அடி, 1. 'தாமரை.....சேவடியென்றவழி, சிவப்புடையன பலவற்றினும் தாமரை உயர்ந்ததாகலின் அஃது உவமையாகக் கூறப்பட்டது' (தொல். உவம. 3, இளம்.); 'தாமரை.....சேவடியென்பது சிறினைக்குச் சிறினை உவமமாயிற்று' (தொல். உவம. 6, இளம், பேர்.); 'தாமரை.....சேவடி யென்றவழி நான்கு சொல்லாகி ஓசை பெற்று நின்றவாறு கொள்க; அவை ஈரசை யென்னு கொள்க' (தொல். செய் 11, இளம்.). 'தாமரை.....சேவடியென்பது பதினெழுத்தான் வந்தது' (தொல்; செய். 49, இளம்.); 'தாமரை யென்பது தாமரைப்பூ வென்றவாறு; இது முதலிற் கூறும் சிறினையறி கிளவி; தாமரை.....சேவடி யென்றும் போல வெனக்கொள்க' (யா. வி. சிறப்.); 'தாமரை.....சேவடி என அதன் சிறினையை உணர்த்தின் ஆகுபெயராம்' (நன். 289, மயிலை; 290, சங்.); 'தாமரை.....சேவடி.....என்றும்போல்வன முதற்பொருளை உணர்த்தும் பொருட்பெயரான் அவற்றின் ஒருவழியுறுப்பாகிய சிறினைப்பொருளைக் கூறின' (இ. வி. 192.)

3. "குன்றி யேய்க்கு முடுக்கையென் றும்கரி, தென்று மோசிவப் பென்றுமோ வவ்விரண்டு, டொன்றி நின்றவென் றேதுது மோவெனின், நின்ற தோர்வ லாற்றெடு நிற்குமே" (யா. வி. 95, உரை, மேற்.)

3-4. 'குன்றின்.....வேலென்புழிப்போல நெஞ்சென்றது ஈண்டும் † அகப்பொருட்டாய் நின்றது' (குறள், 1250, பரிமேல்.); 'குன்றின்..... வேலனென்பது போலக் கல்லுக்கு நெஞ்சு கூறினரெனவுணர்க' (தஞ்சை. 331, சொக்க.); 'குன்றின்.....வேலென்றும்போல உரமென்றது ஈண்டு இடப்பொருட்டாய் நின்றது' (திருமயிலையமக அந்தாதி, 11.)

5. 'சொல்லுவான்குறிப்பு முருகவேளை நோக்குதலின் சேவல் கோழியாயிற்று' (தொல். கிளவி. 53, தெய்வச்.)

5 - 6. 'ஈற்றடியிரண்டும் மகர வகராங்கள் எதுகையாய் வந்தன (யா. வி. 53.)

முற்றும்: 'இதனுட் குறித்தபொருள்: முருகவேள் காப்ப உலகம் காவற்பட்டதென்னும் பொருள். இதனை முடித்தற்பொருட்டு ‡ எழுத்து முதலாகி வந்து ஈண்டிய அடிகளெல்லாவற்றினும் நாட்டியவாறு கண்டு கொள்க' (தொல். செய். 74, இளம்.); 'என்பது ஆறடியான் வந்தது' (தொல். செய். 158, பேர்.); 'என்பது ¶ முன்னமின்றி வந்தது' (தொல். செய்.

---

* இந்நூற் செய்யுட்களும் செய்யுட்பகுதிகளும் பழைய உரைகளில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட இடங்கள்.

† அகம் - இடம். தொடை முதலியன ஈண்டிய அடி. ‡ எழுத்து அசை சீர்

¶ முன்னம்; தொல். செய். 207, பேர் பார்க்க.

211; பேர், ந.); 'இதனுட் பொழிப்பெதுகையும் ஒரூஉவெதுகையும் ஒரூஉ மோனையும் பிறிதும் வந்தனவாயினும் முதல் வந்ததனாலே பெயர் கொடுத்துப் பொழிப்பெதுகைச் செய்யுளென வழங்கப்படும்' (யா. வி. 53); 'இஃது எல்லாக் குற்றமுந்தீர்ந்த செய்யுள்' (யா. கா. ஒழிபு. 9.)

ஒப்புமைப் பகுதி. 1. "மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி" (நன் 155, மயிலை. மேற்.)

2. **பவழத்தன்ன மேனி**: "செய்யன்" (முருகு. 206); "உருவு முருவத்தீ யொத்தி" (பரி. 19 : 99.) **நிகழொளி**: "ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" (முருகு. 3.)

3. "சிவந்த ஆடையன்" (முருகு. 206); "உடையு மொலியலுஞ் செய்யை" (பரி. 19 ; 97.) 3 - 4. **குன்றின் நெஞ்சு பக எறிந்தது**: "குன்றங் கொன்ற குன்றுக் கொற்றத்து" (முருகு. 266); "தெவ்வுக் குன்றத்துத் திருந்துவேலழுத்தி, அவ்வரை யுடைத்தோய்" (பரி. 19 : 102-3); "வரை வயிறு கிழித்த சுடரிலை நெடுவேற், றிகழ்பூண் முருகன்" (தொல். களவு. 23, ந. மேற் : 'பையுண் மாலை'); "கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு பிளந்தாங், கவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல், நெடுவேள்" (சிலப். 23 : 189-90); "அருவரை பிளந்த வஞ்சுவரு நெடுவேல்" (பெருங். 2. 5 : 147.) **குன்றின் நெஞ்சு**: "விஞ்சையம் பெருமலை நெஞ்சகம் பிளந்து" (பெருங். 1. 51 : 8.)

4. (பி - ம்.) **செஞ்சுடர் நெடுவேல்**: "செவ்வேற் சேவய்" (முருகு. 61); "செவ்வா யெஃகம்" (பதிற். 11 : 7); "அமையா வென்றி யரத்தநெடு வேலோய்" (கல். கடவுள். 2 : 15.)

5. **சேவலங் கொடியோன்**: "கோழி யோங்கிய வென்றடு விறற் கொடி", "புகரில் சேவலங், கொடியன்" (முருகு. 38, 210-11.)

6. **எய்தின்று**: குறள், 1240.

தோழி கூற்று

[பாங்கியிற்கூட்டத்தை விரும்பிய தலைமகன் செங்காந்தட் பூவைக் கையுறையாகக் கொடுத்துத் தோழியின்பால் தன்குறை கூறியவழி அவள், "இஃது எமது மலையிடத்தும் உள்ளதாதலின் இதனை வேண்டேம்" என்று மறுத்துக் கூறியது.]

கூ. செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டி யானைக்
கழலுடிச் சேவய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.

எ - து. தோழி கையுறை மறுத்தது.

[கையுறை - கையின்கண்ணே சேர்ப்பது.]

தீப்புத் தோளார் (பி - ம். தீப்புத்தேளார்.)

(பி - ம்.) 3 'கழருடி இ'

(ப - ரை.) வெற்ப, செங்களம் பட - போர்க்களம் இரத்தத்தாற் செந்நிறத்தையுடைய களமாகும்படி, அவுணர் கொன்று தேய்த்த - அசுரர்களைக்கொன்று இல்லையாக்கிய, செ கோல் அம்பின் - இரத்தத்தாற் சிவந்த நிரண்ட அம்பையும், செ கோடு யானை - சிவந்த கொம்பையுடைய யானையையும், கழல் தொடி - உழல இட்ட வீரவளையையுமுடைய, சேஎய் குன்றம் - முருகக் கடவுளுக்குரிய இம்மலையானது, குருதி பூவின் குலை காந்தட்டு - சிவப்பாகிய பூங்கொத்துள்ள காந்தளை உடையது.

(முடிபு) சேயினது குன்றம் காந்தட்டு.

(கருத்து) காந்தட் பூவாற் குறைவிலேமாதலின் நின்கையுறையை ஏலேமென்றபடி.

(வி - ரை.) வெற்பவென்னும் விளி முன்னத்தால் வருவிக்கப்பட்டது (தொல். செய். 207.) கொன்று - வருத்தியெனவுமாம்; "கரும்புபோற், கொல்லப் பயன்படுங் கீழ்" (குறள், 1078.) தேய்த்த - இல்லையாக்கின (முருகு. 69, ந.) கொன்று தேய்த்த வென்க; தேய்த்த சேயென்க. செங்கோலம்பு: செம்மை வலிவின் மையுமாம்; 'அம்பு வடிவாற் செவ்விதாயினும்' (குறள், 279, பரிமேல்.) முருகக்கடவுளுக்கு அம்பு உண்மை, "பொறிவரிச் சாபமும்" (பரி. 5: 65) என்பதனாற் பெறப்படும். செங்கோடு - பகைவரைக் குத்திச் சிவந்த கொம்பு.

முருகக்கடவுளின் ஊர்திகளுள் யானை ஒன்றென்பதும், அதன் பெயர் பிணிமுகமென்பதும், அருள் செய்வதற்கும் போர்செய்வதற்கும் எழுந்தருள்கையில் அதனை அவர் ஊர்ந்து செல்வாரென்பதும் "வேழமேல் கொண்டு", 'அங்குசங் கடாவ வொருகை", "ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" (முருகு. 82, 110, 247), "கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு" (பதிற். 11: 6), "சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கி" (பரி. 5: 2) என்பவற்றாலும் அவற்றின் உரைகளாலும் அறியலாகும்.

கழருடியென்றுள், "கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை" (முருகு. 114) என்று கூறுதலின், கழருடி - உழலுந்தொடி (சிறுபாண், 95, ந.) சேஎயென்றது அளபெடுத்த வழியும் விளியன்றி நின்றது. "செவ்வேற் சேஎய், சேவடி" (முருகு. 61 - 2) என்புழிப்போல. குருதிப்பூவின் குலைக்காந்தளென்றது முதற்கேற்ற அடையடுத்து நின்றது, "குவிமுகி ழெருக்கங்

கண்ணி" (குறுந். 17: 2), "உளைப்பூ மருதி ஞெள்ளிணர்'. (முருகு. 28), "நறுமலர்க் குரிஞ்சி நாண்மலர்" (சிலப். 14: 89) என்ற இடங்களிற்போல. குருதி - சிவப்பு. வெண்காந்தளுமுண்மையின் குருதிப்பூவென்றுள்; குருதிப் பூ - இரத்தம் போன்ற நிறத்தையுடைய பூவெனினும் ஆம். கொத்தாகவே பூத்தலின் குலைக்காந்தளென்றுள்.

(மேற்) 3 - 4. 'குன்றம்.....காந்தட்டு: என்புழி யாம் காந்தட் பூவாற் குறைவிலமெனப் பின்னும் கூற்று, சொல்லெச்சமாய் நிற்கு மாறு உணர்க' (தொல். எச்ச. 45, ந.)

மு. 'செங்களங்.....காந்தட்டே: இது தோழி தலைவியை இடத்துய்த்து நீங்கியது' (தொல். களவு. 23, ந); 'இதனுட் பலவடியும் வந்தவாறு காண்க', 'இதனுள் எழுத்து அளவு மிகாமற் குறையாமல் உச்சரிக்க அவ்வழிகின்ற ஓசையால் ஆசிரியம் வந்தவாறு காண்க' (தொல். செய். 50, 76, இளம்.), 'செங்களம்.....காந்தட்டே: எனச் செய்யுள் முடிந்த வழியும் இவற்றுல் யாம் குறையுடையேமல்லேமென்று தலைமகற்குச் சொன்னுளேல் அது கூற்றெச்சமாம்; என்னை? அவ்வாறு கூறவும் சிதைந்தது இன்மையின். தலைமகட்குச் சொன்னுளேல் அது குறிப்பெச்சம்; என்னை? அது காண்பாயாகிற் காணெனத் தலைமகளை இடத்துய்த்து நீங்கிய குறிப்பினளாகி அது தான்கூருளாதலின் என்பது' (தொல். செய். 206, பேர்.); 'இக்காந்தளால் யாம் குறையுடையமல்லமெனத் தலைவற்குக் கூறிற் கூற்றெச்சமாம், அக்கூற்றும் செய்யுட்குச் சிதைவின்மையின்; அது காண்பாயாகிற் காணெனத் தலைவியை நோக்கி இடத்துய்த்துக்கூறிற் குறிப்பெச்சமாம், அவனைக் கூடுகவெனத் தான் கூருளாகலின்' (தொல். செய். 206, ந; இ. வி. 581); † 'தலைமகனது வரவுணர்ந்து தோழி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சென்று, யான் செங்காந்தட்பூக் கொய்துகொடு வருவல்; அவ்விடம் தெய்வமுடைத்து; நின்னல் வரப்படாது; நீ அவ்வளவும் இப்பொழிலிடத்தே நில்: என்று நீறீஇ நீங்குவதற்குச் செய்யுள்' (இறை. 18; நம்பி. 149); 'தோழி தலைமகளைக் குறியயின் நிறுத்திப் பெயர்ந்தது' (தமிழ் நெறி விளக்கம், 17); 'இஃது அளவடியானும் அகவலோசையானும் வந்த நேரிசை

---

* பலவடி யென்றது ஐந்துவகைக் கட்டளையடிகளை.

† இக்கருத்துக் குரியனவாக, "அஞ்சிறை வண்டறை காந்தளம் போது சென் றியான்றருவேன், பஞ்சுறை தேரல்கு லாய்வரற் பாற்றன்று பாழி யொன்னர், நெஞ்சுறை யாச்செற்ற வேன்மன்ன னேரி நெடுவரைவாய், மஞ்சுறை சோலை வளாய்த்தெய்வ மேவும் வரையகமே", "நீவிரி கோதை யிங் கேநின்னின் ஞல்வரற் பாலதன்று, நீவிரி காந்தள்சென் றியான்றரு வேன்றெய்வ மங்குடைத்தாற், பூவிரி வார்பொழிற் பூலந்தை வானவன் பூவழித்த, மாவிரி தானையெங் கோன்கொல்லி சூழ்ந்த வரையகமே" (பாண்டிக்கோவை) என்னும் செய்யுட்களும் இறையனரகப் பொருளுரையிற் காட்டப்பெற்றுள்ளன.

யாசிரியப்பா' (யா. கா. செய். 2); 'இந்தப்பாட்டில் கூற்றெச்சமும் குறிப்பெச்சமும் வந்தன' (கல். 'வானவர்க்கிறைவன்' மயிலேறும்.)

(ஒப்பு.) 1. **செங்களம்**: "செங்களம் வேட்டு" (பதிற். 4-ஆம் பத்துப் பதிகம், 11); "செங்களந் துழவுவோள்" (புறநா. 278 : 7); "தேன்மிடைந்த தாரினன் செங்களஞ் சிறந்ததே" (சீவக. 279); "செங்களத்து மறங்கருதி", "செங்களத்துச் செழுஞ்செல்வம்" (பு. வெ. 127, 207.)

அவுணர்த் தேய்த்தல்; "செறுநர்த் தேய்த்த", "பொருநர்த்தேய்த்த", "செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கி" (முருகு. 5, 69, 99.)

2. **செங்கோலம்பு**: "செங்கோ லம்பினர்" (அகநா. 337 : 13.) **செங்கோட்டியானை**: "புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின், தலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவந்த", "தொன்றுறை துப்பொடு முரண்மிகச் சினைஇக், கொன்ற யானைக் கோடுகண் டன்ன, செம்புடைக் கொழுமுகை யவிழ்ந்த காந்தள்" (நற். 39 : 5-6, 294 : 5-7); "பொருதிகல் புலி போழ்ந்த பூநுத லெழிலியானைக், குருதிக்கோட் டழிகறை தெளிபெறக் கழீஇயின்று" (பரி. 20 : 4-5); "மறமிகு வேழந்தன் மாறுகொண் மைந்தினற், புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல, உயர்முகை நறுங் காந்த ணூடோறும் புகிதீன" (கலி. 53 : 3 - 5.)

3. **கழறொடி**: "கழறொடி யாஅய்" (குறுந். 84 : 3; புறநா. 128 : 5); "கழறொடித் தடக்கை" (புறநா. 91 : 2.) **தொடிச்சேய்**: "தொடியணி தோளன்" (முருகு. 211.)

4. **காந்தளின் குருதிப்பூ**: "தோடார் தோன்றி குருதி பூப்ப" (முல்லை. 96); "காந்தட் குருதி யொண்பூ", "குருதி யொப்பின் கமழ்பூங் காந்தள்" (நற். 34 : 2-3, 399 : 2); "குருதி மலர்த்தோன்றி" (கைந்நிலை, 26.) **குலைக் காந்தள்**: "சிலம்புடன் கமழு மலங்குகுலைக் காந்தள்" (குறுந். 239 : 3); "அகலிலைக் காந்த ளலங்குகுலைப் பாய்ந்து", "காந்தட், கமழ்குலை யவிழ்ந்த நயவருஞ் சாரல்", "அலங்குகுலைக் காந்தள்" (நற். 185 : 8, 313 : 6-7, 359 .2); "எடுத்த நறவின் குலையலங் காந்தள்" (கலி. 40 : 12); "பஃறுடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்தள்" (அகநா. 108 : 15; "பூந்தண் சாரற் பொங்குகுலை யெடுத்த, காந்தட் கொழுமுகை" (பெருங். 2. 12 : 67-8.) (க)

தலைவன் கூற்று

[இயற்கைப்புணர்ச்சிக்கண் தலைவியின்கூந்தல் இயற்கை மணம் உடையதென்பதைத் தலைவன் வண்டை விளவுதல் வாயி லாகப் புலப்படுத்தி நலம் பாராட்டியது.]

உ. கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ

பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
5. *நறியவு முளவோ நீ யறியும் பூவே.*

எ - து. இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டுநின்ற (பி - ம். இயற்கைப் புணர்ச்சி புணர்ந்தவழித் தலைமகன் தலைமகளை, இயற்கைப் புணர்ச்சிக்கண் இடையீடு பட்டு நின்ற) தலை மகன் தலை மகளை நாணின் நீக்குதற் பொருட்டு மெய்தொட்டுப்பயிறல் முத லாயின அவண்மாட்டு நிகழ்த்திக்கூடித் தனது (பி - ம். நிகழ்த்திப் பாடுமாற்றால் கூடிய தலைமகன் தனது) அன்பு தோற்ற நலம் பாராட்டியது.

[இயற்கைப் புணர்ச்சி - ஊழ்வினையால் நேர்ந்த புணர்ச்சி. மெய் தொட்டுப்பயிறல் முதலாயின : மெய்தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல், இடம்பெற்றுத் தழாஅல், இடையூறு கிளத் தல், நீடு நினைந்திரங்கல், கூடுதல் உறுதல், சொல்லிய நுகர்ச்சி வல்லே பெறுதல், தீராத் தேற்றம் என்பன ; தொல். களவு. 11.]

இறையனார்.

(பி - ம்) 2 'கண்டன'

(ப - ரை.) கொங்கு தேர் வாழ்க்கை - பூந்தாதை ஆராய்ந்து உண்ணுகின்ற வாழ்க்கையினையும், அகம் சிறை தும்பி - உள்ளி டத்தே சிறையையும் உடைய வண்டே, காமம் செப்பாது - என் நிலத்து வண்டாதலின் யான் விரும்பியதையே கூறுமல், கண்டது மொழிமோ - நீ கண்கூடாக அறிந்ததையே சொல்வாயாக : நீ அறியும் பூ - நீ அறியும் மலர்களுள், பயிலியது கெழீஇய நட்பின்- எழுமையும் என்னோடு பயிலுதல் பொருந்திய நட்பையும், மயில் இயல் - மயில் போன்ற மென்மையையும், செறி எயிறு - நெருங் கிய பற்களையும் உடைய, அரிவை கூந்தலின் - இவ்வரிவையின் கூந்தலைப்போல, நறியவும் - நறுமணமுடைய பூக்களும், உளவோ- உள்ளனவோ ?

(முடிபு.) தும்பி, நீ அறியும் பூக்களுள் அரிவையின் கூந்தலைப் போல நறியனவும் உளவோ ? மொழிவாயாக.

(கருத்து) தலைவியின் கூந்தல் இயற்கைமணம் உடையது.

(வி - ரை.) தும்பி சொல்லும் ஆற்றல் இலதாயினும் உள்ளது போல, "சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கியும்" (தொல். பொருள். 2) என்ற விதிப்படி

உவகைபற்றிக் கூறியது. கொங்கு - தேனுமாம்; "முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது, கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்" (சிறுபாண். 184 - 5, ந.) அம் சிறை - அழகிய சிறையு மாம்; "அம்ம வாழிவோ வணிச்சிறைத் தும்பி" (குறுந். 392 : 1.) தும்பி - உயர்ந்தசாதி வண்டு. மணத்தைப்பற்றிக் கூறுதலின் நன்மணத்திற் செல்லுந் தும்பியை நோக்கிக் கூறினன் (சீவக. 892, ந.) செப்பென்பதைத் திசைச்சொலென்பர் நச்சினார்க்கினியர். கண் டது - அறிந்தது. மோ : முன்னிலையசை. பயிலாத பொருட்கண் அருவருப்புத் தோன்றுதற்கு ஏதுவாகிய பயிர்ப்பென்னும் குண முடையளாதலின், பயிலியது கெழீஇய நட்பென்றான். மயிலியல், செறியெயிறு என்னும் அடைகளும் உடம்படுபுணர்த்தும் வாயி லாக இரண்டு இயல்புகளை விளக்கின; "முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம், வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு" (குறள், 1113) என்பதையும், 'பெயரடையானும் ஓரியல்பு கூறப்பட்டது' (பரி மேல்.) என்னும் அதன் உரையையும் பார்க்க. அறிவையென்றது பருவங் குறித்ததன்று. ஓகாரம் வினாவோடு எதிர்மறைப் பொரு ளது. பூ - பூக்களுள்; ஏழனுருபு இறுதிக்கண் தொக்கது. ஏகா ரம் ஈற்றசை.

(மேற்.) 1. 'கொங்கு...வாழ்க்கை யென்பது இளவேனி லாயிற்று, தும்பி கொங்குதேரும் காலம் அதுவாதலின்' (தொல். அகத். 16, ந.); அஞ் சிறை : அகமென்பதன்முன் சிறையென்பது வரின் இடையெழுத்துக் கெடும் (நன். 222, சங்.)

2. மோவென்பது முன்னிலையசை (தொல். இடை. 26, இளம், சே, தெய்வச், ந, கல்; நன். 439, மயிலை, 440; சங்.; இ. வி. 276); செப் பென்பது சொல்லென்பதை உணர்த்தல் (நன். 457, மயிலை; 458, சங்.); 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ வென்றது என்நிலத்து வண்டா தலின் எனக்காகக் கூறுதே கொள்ளென்றலிற் குறிஞ்சிநிலம் ஒன்றுயிற்று' (தொல். களவு. 2, ந.) 1 - 2. 'கொங்கு...தும்பியென்பது ஒன்பதெழுத் தான் வந்தது; காமஞ்...மொழிமோ வென்பது பத்தெழுத்தான் வந்தது' (தொல். செய். 49, இளம்.)

மு. 'இதனுள் தும்பியென்றது முன்னிலையாக்கல்; கண்டது மொழி மோ வென்றது சொல்வழிப்படுத்தல்; கூந்தலின் நறியவு முளவோ வென் றது நன்னயமுரைத்தல்; காமஞ் செப்பாதென்றது என்னிலத்து வண்டா தலின் எனக்காகக் கூறுது மெய்கூறெனத் தன் இடம் அதுவாகக் கூறலின் இடமணித்தென்றது; பயிலியது கெழீஇய நட்பென்றது தம் நிலையுரைத்தல்' (தொல். களவு. 10, ந.); சொல்லாமரபின சொல்லுவனவாக உவகைபற்றிக் கூறியது (தொல். பொருள். 2, ந.); 'கொங்குதேர் வாழ்க்கை யென்னும் பாட்டு இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள்' (தொல். செய். 187,

பேர்.); தலைமகளைப் புகழ்ந்து நயப்புணர்த்தியது (இறை. 2); பெருநயப் புரைத்தலென்னுந் துறை (நம்பி. 129; இ. வி. 497); நயப்புணர்த்தியது (தமிழ்நெறி விளக்கம், 15); 'இவ்வாசிரியத்துள் இயற்சீரும் உரிச்சீரும் விரவி வந்தன' (யா. வி. 15); நயப்புணர்த்தல் (களவியற் காரிகை, 25.)

வரலாறு

இச்செய்யுளை, 'ஆலவாய் இறையனார் தருமியென்னும் பிரமசாரிக்குப் பொற்கிழிவாங்கிக் கொடுத்த சிந்தாசமுத்தி யகவல்' என்று **தமிழ் நாவலர் சரிதை** கூறும்.

இது, பாண்டியனுற் சங்கமண்டபத்தின் முன் கட்டப்பட்ட பொற் கிழியைத் தருமியென்னும் பிரமசாரியொருவன் பெறும்பொருட்டு ஸ்ரீ சோமசுந்தரக்கடவுள் இயற்றி அவனுக்கு அளித்ததென்று கூறப்படும்; "பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக், கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப், பொற்குவை தருமிக் கற்புட னுதவி, என்னுளங் குடி கொண் டிரும்பய னளிக்கும், கள்ளவிழ் குழல்சேர் கருணெய்ம் பெரு மான்" (கல். க); "வழுத்திய மறையோன் றன்மை கண்டவன் மனத்தி னுளை, ஒழித்திடு வான்வி ரும்பி யுபகமா ணிக்கச் செம்பொற், குழைக்கியை காத னங்கட் கொங்குதேர் வாழ்க்கை யென்றோர், கிழிக்கிசை கவிதை பாடிக் கொடுத்தனன் கீர்த்தி வேட்டு" (திருவால. 16 : 10); "திருந்துசிவ முனி தருமி தளர்ந்தேன் மன்றல் செய்வான்வண் பொருளிலையென் றேத்த விங்குப், பொருந்துமடந் தையரொடுயர் தலத்து லாவும் புகழ்மா றனிணந்த மணங் கண்டீ தென்கொல், அருந்தமிழா லிதுபொருந்தப் பாடு வாரே லளிப்பலென்றோர் பொற்கிழிதற் சபையுட் நீக்க, மருந்தனையான் கொங் கென்றோர் கவிதை பாடிக் கிழியறுப்பான் வழங்கியொப்பித் தனன்கீழ் நின்றே" (கடம்பவன புராணம், 10 : 17); "தென்ன வன்குல தெய்வ மாகிய, மன்னர் கொங்குதேர் வாழ்க்கை யின்றமிழ், சொன்ன லம்பெறச் சொல்லி நல்கினர், இன்ன நீர்ந்தவ னிறைஞ்சி வாங்கினன்" (திருவிளை. தரு மிக்கு. 88); "அங்கதை யிப்பா வேந்தர்க் கறைந்தனை பெறுதி யென்று, கொங்குதேர் வாழ்க்கை யென்னுங் கோதிறாக் கீந்து விட்டான், பொங்கிய களிப்பி னனும் போய்த்தொடர் பழுதந் தன்னைத், திங்கள்வெண் குடையி னன்றன் செவிப்புலத் தூற்றி னனல்" (சீகாளத்தி. நக்கீர. 61); "அப்பா லோர் வண்டை யனுப்பி னவர்காமம், செப்பாதே யென்றுற் றிகைக்குமே", "தருமிக்கே, ஓர்வாழ்க்கை வேண்டி யுயர்கிழிகொள் வான்கொங்கு, தேர் வாழ்க்கை யென்றெடுத்த செய்தியும்" (தமிழ் விடுதூது, 108, 114-5); "கொங்கய வன்மீ னவர்க்கு வகுத்துச் சொல் பவள—கொங்குதேர் வாழ்க்கையென்னும் கவிதையைக் கனவட்ட மென்னும் குதிரையையுடைய வலிய பாண்டியனுக்கு, கூந்தற்கு இயற்கை மணமுண்டென்பதனை விளக் கத் திருவுளம் பற்றும் பவளம் போலும் சிவந்த வாயினை யுடையாய்" (திருமயிலையமக அந்தாதி, 53, உரை.)

(ஒப்பு.) 1. **தும்பிகொங்கு தேர்தல்** : "தாதுண் டும்பி" (மதுரை. 655); "தாதுண் பறவை" (அகநா. 4 : 11); "கொங்குண் வண்டே கரியாக" பெரியதிருமொழி, 9. 3 : 4.) **அஞ்சிறைத்தும்பி** : "அஞ்சிறை வண்டி னரிக் கணம்" (முருகு. 76); "அறுசில் கால வஞ்சிறைத் தும்பி", "அஞ்சிறை வண்டி னரியினம்" (ஐங். 20, 489); "அஞ்சிறை மணிநிறத் தும்பி" (கலி. 46 : 2.)

2. **காமஞ்செப்பல்** : "தாமிள மகளிரைக் காமஞ் செப்பி" (பெருங். 1. 41 : 101.) **கண்டதுமொழிதல்** : "கண்டது மொழிவல்" (குறுங். 273 : 4.)

3. **பிறவிதோறுந் தொடர்ந்த நட்பு** : "உடுத்துவழி வந்த வுழுவ லன்பு", "பிறப்பிடைக் கொண்டுஞ் சிறப்பொடு பெருகி, நெஞ்சிற் பின்னி நீங்கல் செல்லா, அன்பு", "தொன்முறை வந்த, பிறப்பிடைக் கேண்மைப் பெரு மலைக் கிழத்தி", "பிறப்புவழிக் கேண்மை" (பெருங். 2. 11 : 39, 16 : 39 - 41, 18 : 115 - 6, 3. 6 : 64.)

4. **செறியெயிற்றரிவை** : "செறியெயிற் றரிவையை யருவாய்" (நீல கேசி, 58.) 4 - 5. **கூந்தலின் இயற்கை மணம்** : "கூந்தல் ..... நறுந்தண் ணியவே", "கைவள் ளோரி கானந் தீண்டி, எறிவளி கமழு நெறிப்படு கூந் தல்", "நறுமென் கூந்தல்", "நாறிருங் கூந்தல்", "நறுங் கதுப்பு" (குறுங். 116: 1 - 4, 199 : 3 - 4, 270 : 8, 272 : 8, 312 : 6); "நாறு மயிர்க் கொடிச்சி", "தண்ணிய கமழுந் தாழிருங் கூந்தல்", "நாறிருங் கதுப்பு", "வண்டுபடு நாற்றத், திருள்புரை கூந்தல்" (நற். 95 : 8, 137 : 1, 143: 10, 250 : 8, 270 : 2 - 3); "மணநாறு கதுப்பினை" (கலி. 43 : 23); "நாறிருங் கூந்தல்" (புறநா. 113 : 9.)

மு. "வண்டுக ளோவம்மி னீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ
உண்டு களித்துழல் வீர்க்கொன் றுரைக்கிய மேனமொன்றுய்
மண்டுக ளாடிவை குந்தமன் னுள்குழல் வாய்விரைபோல்
விண்டுகள் வாரு மலருள வோதும் வியலிடத்தே"
(திவ். திருவிருத்தம், 55);

"தூவுண்டை வண்டினங் காள்வம்மின் சொல்லுமின் றுன்னிநில்லாக்
கோவுண்டை கோட்டாற் றழிவித்த கோன்கொங்க நாட்டசெங்கேழ்
மாவுண்டை வாட்டிய நோக்கிதன் வார்குழல் போற்கமழும்
பூவுண்டை தாமுள வோநுங்கள் கானம் பொழிலிடத்தே",

"இருங்கழல் வானவ னற்றுக் குடியிகல் சாய்ந்தழியப்
பொருங்கழல் வீக்கிய பூழியன் மாறன்றென் பூம்பொதியில்
மருங்குழ லுங்களி வண்டினங் காளுரை யீர்மடந்தை
கருங்குழ னுறுமென் போதுள வோநுங் கடிபொழிலே",

"விண்டே யெதிர்ந்ததெவ் வேந்தர் படவிழி ஞத்துவென்ற
ஒண்டே ருசிதனெங் கோன்கொல்லிச் சார லொளிமலர்த்தா
துண்டே யுழல்வா யறிதியன் றேயுள வேலுரையாய்
வண்டே மடந்தை குழல்போற் கமழு மதுமலரே",

" பொருங்கழல் வானவற் காயன்று பூலந்தைப் போர்மலைந்தார்
ஒருங்கழ லேறவென் ருன்கொல்லிச் சாரலொண் போதுகடம்
மருங்குழல் வாய்நீ யறிதிவண் டேசொல் லெனக்குமங்கை
கருங்குழல் போலுள வோவிரை நாறுங் கடிமலரே ",

" தேற்றமில் லாததெவ் வேந்தரைச் சேவூர்ச் செருவழித்துக்
கூற்ற மவர்க்காய வன்கொல்லிச் சாரற்கொங் குண்டுழல்வாய்
மாற்ற முரைநீ யெனக்குவண் டேமங்கை வார்குழல்போல்
காற்ற முடைய வுளவோ வறியு நறுமலரே " (பாண்டிக்கோவை.) (உ)

தலைவி கூற்று

[வரையாது ஒழுகும் தலைவன் வேலிப்புறத்தே நின்றதை யறிந்த தோழி அவன் வரைந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணமுடையளாகி அவன் செவியிற்படும்படி அவனது நட்பைப் பழித்துக் கூறியபோது, தலைவி அந்நட்பு மிகச் சிறப்புடைய தென்று உணர்த்தியது.]

ங. நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனெடு நட்பே.

எ - து. தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.

[சிறைப்புறம் - வேலிக்குப் புறம்பு. இயற்பழித்தல் இயல்பை இழித்துக்கூறல்.]

தேவகுலத்தார்.

(பி - ம்.) 3 'கருங்காற்', 'குறுஞ்சிப்

(ப - ரை.) சாரல் - மலைப்பக்கத்திலுள்ள, கரு கோல் குறிஞ்சிப் பூ கொண்டு - கரிய கொம்புகளையுடைய குறிஞ்சிமரத்தின் மலர்களைக் கொண்டு, பெரு தேன் இழைக்கும் - பெரிய தேனை வண்டுகள் செய்தற்கு இடமாகிய, நாடனெடு நட்பு - நாட்டையுடைய தலைவனெடு யான்செய்த நட்பானது, நிலத்தினும் பெரிது - பூமியைக்காட்டிலும் அகலமுடையது; வானினும் உயர்ந்தன்று - ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது; நீரினும் அருமை அளவின்று - கடலைக் காட்டிலும் அளத்தற்கரிய ஆழமுடையது.

(முடிபு) நாடனொடு செய்த நட்பு பெரிது; உயர்ந்தது; அள வினது என்க

(கருத்து) தலைவனொடு செய்த நட்பு மிகச் சிறந்தது.

(வி - ரை.) அளவின்று - அளவினையுடையது; "இருபாற் பட்ட வொருசிறப் பின்றே" (தொல். புறத். 16); "பெரும்புலம் பின்று" (நற். 54: 5.) கருங்கோல்: கருமை - வன்மையுமாம். குறிஞ்சி: இது பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை மலரு மென்றும், அம்மலரிலிருந்து ஈக்களால் எடுக்கப்படும் தேன் மிக்க சுவையை உடையதென்றும், நீலகிரியிலுள்ள தொதுவரென்னும் ஒருவகைச் சாதியார் இது மலருங்காலத்தைக் கொண்டே தம் முடைய பிராயத்தைக் கணக்கிடுவரென்றும் சொல்வர். பெருந் தேன் - அளவிற் பெரிதாகிய மலைத்தேன்; "நெடுவரைப் பெருந் தேன்", "பெருந்தேன் கண்படுவரை" (குறுந். 60 : 1 - 2, 273 : 5); "கயிலை யுகுபெருந்தேன்" (திருச்சிற். 16); "இம்மலைப் பெருந்தேன்" (பெரிய. 11 : 101.) தேன் - தேனடையுமாம். நாடன் - குறிஞ்சி நிலத்தலைவன்; 'குறிஞ்சி நிலமுடைமையால் நாடனென்றுசொல்லு வேனே' (புறநா. 49 : 1, உரை); "கணங்கொ ளருவிக் கான்கெழு நாடன்" (ஐங். 183 : 1)

(மேற்.) 3. 'முதற்பொருள் முதலிய மூன்றுங்கொண்டே இவ்வைம் திணை ஆமென மேற்கூறுபவாகலின் இவற்றிற்கு இப்பெயரும் முறையும் முறையானே கருப்பொருள் பற்றியும் உரிப்பொருள் பற்றியும் ஆயின போலுமென்பது; அற்றேல் கருப்பொருள் பலவன்றே? அவற்றுள் குறிஞ்சி முதலாயினவற்றுப் பெயர்பெற்றவாறு என்னையெனின், கருங் கோற் குறிஞ்சியெனவும்.....சான்றோரான் எடுத்துக் கூறப்படுதலின் அவற்றுள் அவை சிறத்தலானென்க' (இ. வி. 379.)

3 - 4. 'மூல்லை குறிஞ்சி யென்பன இடுகுறியோ காரணக்குறியோ வெனின் ஏகதேச காரணம்பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறியென்று கொள்ளப்படும்; என்னை காரணமெனின்.....கருங்கோற்.....நட்பே: என்றவழி மைவரையுலகிற்குக் குறிஞ்சிப் பூச் சிறந்ததாகலானும்.....இந் நிலங்களை இவ்வாறு குறிபிட்டாரென்று கொள்ளப்படும்' (தொல். அகத். 5, இளம்.)

2 - 4. 'சாரற்.....நட்பே: இதில் நாட்டிற்கு அடையாகிவந்த குறிஞ்சிப்பூவும் தேனும் இறைச்சிப்பொருளென்று கொள்க' (தொல். பொருளியல், 33, இளம்; இ. வி. 588.)

மு. 'நிலத்தினும்.....நட்பே என்பது பெருமை வியப்பு; கருங் கோற குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழி முறை முறையாற் பெருகற்பாலதாகிய நட்பு மற்றுஅவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தினது அகலம்போலவும் விசும்பினேக்கம்போலவும் கடலின் ஆழம்

போலவும் ஒருகாலே பெருகிற்றென்றமையின்; இது தன்கட்டோன்றிய பெருமைவியப்பு; இது தலைமகன் கருத்தினுள்ள நட்பிற்குக் கொளலுங் கால் பிறன்கட்டோன்றிய பெருமைவியப்பாமென்பது கொள்க' (தொல். மெய்ப். 7, பேர்; இ. வி. 578); 'தலைவிக்கு உரிமையைக் கொடுத்த கிழவோன்மாட்டுப் பெருமையிற்றிரியாத அன்பின்கண்ணும் தலைவிக்குக் கூற்று நிகழும்; நிலத்தினும்.....நட்பே: எனவரும்' (தொல் கற்பு. 6, இளம்); 'இது நிறுத்தற்கட் கூறியது' (தொல். கற்பு. 6. ந.) 'இஃது ஈற்றயலடி முச்சீர்த்தாயிற்று' (தொல். செய் 68, ந.); 'இஃது ஈற்றயலடி முச்சீரான் வந்தமையின் நேரிசை யாசிரியப்பா' (வீர. யாப்புப். 9; யா. வி. 71; யா. கா. செய். 7, இ. வி. 747); 'ஆசிரியப்பா அளவடியான் வந்தது' (யா. வி. 27.)

(ஒப்பு.) 1. "நிலத்தினும் பெரிதே நேர்ந்தவர் நட்பே" (தொல். களவு. 20, ந. மேற்.)

2. "கடலினும் பெரிதெமக் கவருடை நட்பே" (ஐங். 184: 4.)

1 - 2. **நிலம் வான் கடல் என்ற மூன்றும் பெருமைக்கு எல்லையாகக் கூறப்படுதல்:** "காலத்தி னுற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது", "பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின், நன்மை கடலிற் பெரிது", "வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சம், தானறி குற்றப் படின்" (குறள், 102, 103, 272); "மண்ணினும் வானினு மற்றை மூன்றினும், எண்ணினும் பெரியதோரிடர்" (கம்ப. அயோமுகி. 99.)

3. **கருங்கோற் குறிஞ்சி:** "கருங்கோற் குறிஞ்சியும் முறைவினூர்க்கே" (அகநா. 308: 16); "கருங்கோற் குறிஞ்சி யடுக்கம்" (புறநா. 374: 8); "கருங்கோற் குறிஞ்சியுங் கடிநாள் வேங்கையும்" (பெரும். 1. 50: 26.)

4. **நாடனது நட்பு:** "மலைநாடன் கேண்மை" (திணைமா. 18.)

3 - 4. **குறிஞ்சித்தேன்:** "குறிஞ்சிப் பெருந்தே னிருல்" (கல். 'வேற்றுப்பிடி')

(கூ)

தலைமகள் கூற்று

[பிரிவாற்றுமல் வருந்துகின்றாளென்று கவலையுற்ற தோழிக்கு, தலைவன் முன்பு எனக்குச் செய்த தண்ணளியை நினைந்து ஆற்றினேன்' என்பது புலப்படக் கூறியது.]

நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத லேமென் னெஞ்சே.

பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

காமஞ்சேர் குளத்தார் (பி. ம். காமஞ்சொகினத்தார்.)

(பி - ம்.) 1. 'நோமே நெஞ்சே'

(ப - ரை.) என் நெஞ்சு நோம் என் நெஞ்சு நோம் - எனது நெஞ்சம் வருந்தாநிற்கும், எனது நெஞ்சம் வருந்தாநிற்கும்; இமை தீப்பு அன்ன - இமைகளைத் தீயச்செய்யுங் கருவியைப்போன்ற வெம்மையையுடைய, கண்ணீர் தாங்கி - எனது கண்ணீரைத் தாம் துடைத்து, அமைதற்கு அமைந்த நம் காதலர் - அளவளாவுதற்கு அமைந்த நம் தலைவர், அமைவு இலர் ஆகுதல் - இப்பொழுது மனம் பொருந்தாராய்ப் பிரிந்திருத்தலால், என் நெஞ்சு நோம் - எனது நெஞ்சம் வருந்தா நிற்கும்.

(முடிபு) காதலர் அமைவிலராகுதலால் நெஞ்சு நோவா நிற்கும்.

(கருத்து) தலைவர் இப்பொழுது உடனிராமையால் என் நெஞ்சு வருந்தும்.

(வி - ரை.) நோம் - நோகும். நெஞ்சே: ஏ அசைநிலை. கண்ணீர் தாங்கி - கண்ணீரைத் தடுத்து; என்றது துடைத்தலை; "அழாஅ லென்றுநம் மழுதகண் டுடைப்பார்" (குறுந். 82: 2); கண்ணீர் தாங்கியவராதலின் மீண்டும் அருள்வாரென்று நினைந்து ஆற்றுவேனென்பது குறிப்பு. தாங்கி நோமென இயைத்துப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. அமைதற்கு - நாம் ஆற்றியிருத்தற்கெனலுமாம். பிரிவாற்றுமையால் வரும் கண்ணீராதலின் வெம்மையை யுடையதாயிற்று. ஆகுதலால் என் நெஞ்சு நோமென இயைக்க. மூன்றுமுறை அடுக்கியது ஆற்றுமை மிகுதி பற்றி.

(மேற்.) மு. 'முனிவுமெய்ந் நிறுத்தலென்னும் மெய்ப்பாட்டிற்குச் செய்யுள்' (தொல். களவு. 20, இளம்.) முனிவுமெய்ந் நிறுத்தல் - களவொழுக்கத்தான் வந்த துன்பத்தைப் பிறர்க்குப் புலனாகாமை மெய்யின் கண்ணே நிறுத்தல் என்பர் **இளம்பூரணர்**; **பேராசிரியர்** வேறு கூறுவர்.

(ஒப்பு.) 1. **என் நெஞ்சு**; குறுந். 11: 4, 306: 4. **நோம் என் நெஞ்சு**: (குறுந். 202: 1, 5); "நொதும லாட்டிக்கு நோமென் னெஞ்சே" (நற். 118: 11, 312: 1); "இவட்குமருந் தன்மை நோமென் னெஞ்சே" (ஐங். 59: 4.)

2. **பிரிவாற்றுமையால் வரும் கண்ணீர் வெப்பமுடையதாதல்**: "நறவின், சேயித ழீனிய வாகிக் குவளை, மாயிதழ் புரையு மலிர்கொ ளீரிமை, உள்ளகங் கனல வுள்ளுதொ றுலறிப், பழங்கண் கொண்ட கலிழ்ந்துவீ முகிரறல், வெய்ய வுகுதர" (அகநா. 19: 9 - 14); "இமை நீர் வெம்பனி" (பெருங். 1. 40: 192, அடிக்.) "கண்கள் வெம்பனி யுகுத்த வன்றே" (சீவக. 2508); "கண்ணுகும் வெய்யநீர் வெள்ளத்து" (கம்ப. தைலமாட்டு. 2.)

3. **அமைதற்கமைந்த** : "அமைந்தாங் கமைக" (குறுங். 175 : 7); "நம்மறந் தமைகுவ னுயி னுமறந், துள்ளா தமைதலு மமைகுவ மன்னே" (ஐங். 36 : 2 - 3.) (சு)

தலைவி கூற்று

[பிரிவாற்றுமையால் தலைவி வருந்துதலையறிந்து கவலையுற்ற தோழிக்கு அவள், தன்கண்கள் துயிலாமையை உணர்த்தும் வாயிலாகக் காமநோயின் கொடுமையைக் கூறியது.]

9. அதுகொ ரேழி காம நோயே
வதிகுரு குறங்கு மின்னிழற் புன்னை
உடைதிரைத் திவலை யரும்புந் தீநீர்
மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
5. பல்லித ழுண்கண் பாடொல் லாவே.

எ - து. பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

நரிவெரூஉத்தலையார்.

(பி - ம்.) 2 'மின்னிலைப்புன்னை', 'மென்னிழற் புன்னை' 3 'துவலை'

(ப - ரை.) தோழி—, வதி குருகு உறங்கும் - தன்னிடத்தில் தங்கியிருக்கும் குருகுகள் உறங்குதற்குக் காரணமாகிய, இன்னிழல் புன்னை - இனிய நிழலையுடைய புன்னை மரமானது, உடைதிரை திவலை அரும்பும் - கரையைச் சாரச்சார உடைகின்ற அலைகளால் வீசப்படும் துளியால் அரும்புகின்ற, தீ நீர் - கண்ணுக்கு இனிதாகிய நீர்ப்பரப்பையுடைய, மெல்லம் புலம்பன் - மெல்லிய கடற்கரையையுடைய தலைவன், பிரிந்தென - பிரிந்தானாக, பல் இதழ் உண் கண் - பல இதழ்களையுடைய தாமரைமலரைப் போன்ற என் கண்கள், பாடு ஒல்லா - இமைபொருந்துதலைச் செய்யாவாயின; காம நோய் அது கொல் - காம நோயென்பது அத்தன்மைத்தோ?

(முடிபு) தோழி, புலம்பன் பிரிந்தெனக் கண்பாடொல்லா; காமநோய் அதுகொல்.

(கருத்து) தலைவன் பிரிவினுல் யான் துயிலொழிந்தேன்.

(வி - ரை.) அதுவென்றது கண் உறங்காமையைச் சுட்டி நின்றது; செய்யுளாதலின் சுட்டுப்பெயர் முன் வந்தது (தொல்.

கிளவி. 39.) தோழி : விளி. காமநோயே : ஏ அசை. குருகு பகலிலும் இரவிலும் தங்குதற்குரியதாகலின், 'வதி குருகுறங் கும் புன்னை' என்றாள். இயல்பாகவே தங்குவதற்குரியதாயினும் அதன் நிழல் உறக்கத்தையும் உண்டுபண்ணுவதாதலின, 'இன் னிழற்புன்னை' என்றாள். உடைதிரை - மூரிகின்ற திரை; "உடைதிரை முத்தஞ் சிந்த" (சீவக. 2652.) தீநீர்ப் புலம்பு, மெல்லம்புலம்பு என்க; தீமை - இனிமை; புலம்பு - கடற்கரை. மருதமும் நெய்தலும் மென்புலமெனப்படுமாதலின், 'மெல்லம் புலம்பு' என்றாள். பிரிந்தென - பிரிந்தாளாக; "தண்கடற் சேர்ப்பன் பிரிந்தென" (ஐங். 183 : 3.) பல்லிதழ் - பல இதழ்களை யுடைய தாமரைப்பூ; சினையிற் கூறும் முதலறிகிளவி. உண் : உவமவுருபு; உண்கண் - மையுண்ட கண்களுமாம்.

தன் நாட்டில் குருகு உறக்கத்தைப் பெறும் புலம்பன் எனக்கு உறக்கம் நீங்குதற்குக் காரணனாயினனென்பது குறிப்பு.

(மேற்.) 1. 'குறியது (குற்றெழுத்து) பிற்கூறிய முறையன்றிக் கூற் றினால்.....அதுகொரோழி எனவும்.....தொடர் மொழி யீற்று நின்ற ஒற்றுக்கெடுதலுங் கொள்க' (தொல். தொகை. 18, ந.); இடைச்சொல் அதுகொரோழி காமநோயே எனப் பெயரைச் சார்ந்து நின்று அதன் பொருளை விளக்கிற்று (தொல். இடை. 1, ந.); இடைச்சொற் பகாப்பதம் பிறிதோடு வந்தது (நன். 150, மயிலை.); 'அதுகொ.....நோயே : என்றற் றொடக்கத்தன தொகாநிலைத் தொடர் மொழிகள்' (நன். 259, 373, மயிலை; நன். 374, சங்.) 'அதுகொல் : தொடர் மொழி' (நன். 260, சங்.)

4. மெல்லம் புலம்பு : 'தெள்ளம்புனல், மெல்லம் புலம்பு போல்வதோர் பண்புத்தொகை' (திருச்சிற். 372, பேர்.)

மு. 'பிரிந்தவழிக் கலங்கியது : அதுகொ.....நோயே எனவரும்' (தொல். களவு. 20, இளம்.); 'இது வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கூறியது; அதுகொ ரோழி காமநோயே : என்னும் பாட்டும் அது' (தொல். களவு. 21, ந.)

(ஒப்பு.) 2. குருகு - நாரை (குறுந் 236 : 4 - 5, 296 : 1 - 2); அன்னப் பறவை யெனினுமாம்; "கன்னியம் புன்னைமே லன்னங்காள்" (யா. வி. 60, மேற்.) குருகுறங்கும் புன்னை : "புன்னைத் தடவுநிலை மாச்சினை, புள்ளிறை கூரும்" (அகநா. 10 : 3 - 4.) இன்னிழற் புன்னை; "புன்னையம் புகர்நிழல்" (குறுந். 303 : 6); "எக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇ" (யா. வி. 37, மேற்.) (பி - ம்.) இன்னிலைப் புன்னை : "முடவுமுதிர் புன்னைத் தடவுநிலை மாச் சினை" (அகநா. 10 : 3.) (பி - ம்.) மின்னிலைப் புன்னை : "மின்னிலைப் பொலிந்த விளங்கிணர் புன்னைப் பொற், றண்ணறும் பைந்தா துறைக்கும், புன்னையங் கானல்" (அகநா. 30 : 11 - 3.)

2 - 3. **புன்னை திரைத்திவலையால் அரும்பல்** : "வான்கடற் பரப்பிற் றூவற் கெதிரிய, மீன்கண் டன்ன மெல்லரும் பூழ்த்த, முடவுமுதிர் புன்னை" (அகநா. 10 : 1 - 3) ; "தூவற் கலித்த தேம்பாய் புன்னை" (புறநா. 24 : 7.)

4. **மெல்லம் புலம்பன்** : குறுந். 245 : 5 ; நற். 195 : 4 ; ஐங். 120 : 4, 190 : 3 ; அகநா. 10 : 4. மு. ஐங். 133 : 2.

5. **பல்லித மூண்கண்** : (குறுந். 259 : 4) ; "பல்லித மூண்கணும் பரந்த வாற் பனியே", "பல்லித மூண்கண் கலுழ" (நற். 155 : 10, 241 : 11), "பல்லித மூண்கண் பசத்தன்மற் றெவனே", "பல்லித மூண்கண் ணழப் பிரிந் தோரே", "பல்லித மூண்கண் மடந்தை", "பல்லித மூண்கண் பனி யலைக் கலங்க" (ஐங். 170 : 4, 190 : 4, 334 : 5, 351 : 4, 461 : 2) ; "பல் லிதழ் மலருண்கண்", "பல்லித மூண்கண்ணுந் தோளும்" (கலி. 46 : 11, 100 : 10, 112 : 9) ; "பல்லித மூண்கண் பரந்தன பனியே" (அகநா. 141 : 14.) **கண்பாடொல்லா** : (குறுந். 11 : 2, 357 : 1, 365 : 2 - 6); "கண்பட லொல்லா" (கலி. 10 . 13.)

4 - 5. **தலைவன் பிரிவாற் கண்துயிலாமை** : "நாடற்குத், துயிறுறந் தன வாற் றோழியென் கண்ணே" (குறுந். 186 : 3 - 4) ; "தமிழ்நர்பெருமாற் கென், கண்படா வாறே யுரை" (முத். 75.) (சு)

தலைவி கூற்று

[பரிசப்பொருளே ஈட்டும்பொருட்டுத் தலைவன் பிரிந்தவிடத்து ஆற்றுளாகிய தலைவி, நள்ளிரவில் யாவரும் துயிலவும் நான் துயின்றிலேனென்று தோழி துயின்றமையைப் புலப்படுத்தி அவளுக்குக் கூறியது.]

சு. நள்ளென் றன்றே யாமஞ் சொல்லவிந்
தினிதடங் கினரே மாக்கண் முனிவின்று
நனந்தலை யுலகமுந் துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே.

எ - து. வரைவிடை வைத்துப் பிரிந்தவழி ஆற்றுளாகிய தலைமகள் தோழியை நெருங்கிச் (பி - ம். நோக்கிச்) சொல்லியது.

[வரைவிடை வைத்துப் பிரிதல் - மணம்செய்துகொள்ளுதற்கு இடையே பொருளீட்டுதற்குத் தலைவன் பிரிதல் ; வைத்து : சொன்னடை. இடைவைத்து - இடையீடாக நீக்கிவைத்தென்பர் நச்சினார்க்கினியர் ; தொல் களவு. 21, உரை.]

பதுமனார்.

(பி - ம்) 2 'முனிவின்றி' 4 'ஓவுயான்' 'ஓரியான்'

(ப - ரை.) யாமம் நள்ளென்றன்று - இடையிரவு செறிந்த இருளை உடையதாக இராநின்றது ; மாக்கள் சொல் அவிந்து

இனிது அடங்கினர் - மனிதர் பேசுதலை ஒழித்து இனிமையாகத் துயின்றனர்; நன தலை உலகமும் முனிவின்று துஞ்சும் - அகன்ற இடத்தையுடைய உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் வெறுப் பின்றித் துயிலா நிற்கும்; ஓர் யான் மன்ற துஞ்சாதேன் - யான் ஒருத்தியே நிச்சயமாகத் துயிலேனுயினேன்.

(முடிபு) யாமம் நள்ளென்றன்று; மாக்கள் அடங்கினர்; உல கமும் துஞ்சும்; யான் ஒருத்தியே துஞ்சாதேன்.

(கருத்து) யாவரும் துயிலும் நள்ளிரவிலும் யான் துயின்றி லேன்.

(வி - ரை.) நள்: நளியென்னும் உரிச்சொல் ஈறுதிரிபு; செறி வின்கண் வந்ததென்பா அடியார்க்கு நல்லார் (சிலப். பதி. 41); நள் ளென்னும் ஓசையையுடையதாயிற்றெனலுமாம் (நெடுநல். 186, ந; புறநா 149; 1 - 2, உரை); நள் - நடுவுமாம்; நண்பகல் என்புழிப் போல. ஏகாரம்: அசை. யாமம் - பதினேந்தாம் நாழிகையை இறு தியாகவுடைய இடையிரவு; நள்ளென்றன்றே என்ற குறிப்பினுல் இஃது இடையாமம் ஆயிற்று. மாக்கள் - ஐயறிவுடையோர்; என் றது தாய் முதலியவர்களை; தன்துயரை அறியாதிருத்தல்பற்றி இங் ஙனம் கூறினுள். நனந்தலை: நன அகலத்தை உணர்த்தும் அகர வீற்று உரிச்சொல் (தொல். உரி. 78) உலகமென்றது எல்லா உயிர் களையும் (முருகு. 1, ந.) உலகமும்: உம்மை இறந்ததுதழீஇய எச் சவும்மை. ஓர்யானென்றது உடனிருந்து ஆற்றுவிக்கக் கடவளா கிய தோழியும் துயின்றமையைப் புலப்படுத்தியது. மன்ற: தேற் றப்பொருளில் வந்தது (தொல். இடை. 17.)

(மேற்.) 3. 'நனந்தலையுலகு: என்றக்கால் அகன்றலையுலகு என்ப தாம்' (தொல். உரி. 79, இளம்.); நனவென்பது அகலமாகிய குறிப்புணர்த் யது (தொல். உரி. 80, சே.)

மு. தலைவன்வயிற் பரத்தைமை உண்மைக்கு மேற்கோள் (தொல். களவு. 20, இளம்.); தலைவன் வரும் தொழிற்கு அருமை வாயில் கூறின் தலைவிக்குக் கூற்று நிகழும்; 'இதனுள் பொழுது சென்றதில்லை யென்றும் மாக்கள இன்னும் துயின்றிலரென்றும் அருமையை வாயில் கூறியவழித் தலைவி யாமமும் நள்ளென்றும் மாக்களும் துயின்றும் வந்திலரென வருந் திக் கூறியவாறு காண்க' (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு) 1. **நள்ளென்றன்றே யாமம்**: "நளெனை வந்த நாரின் மாலை", "நள்ளென்யாமம்", "நள்ளென் கங்குல்", "பல்லோர் துஞ்சு நள்ளென் யாமம்", "நள்ளென் யாமத் தைபெனக் கரையும்", "நள்ளென் கங்குல்" (குறுந். 118 :2, 160: 4, 163 : 2, 244 : 1, 241 : 4, 312 : 4)

2. **மாக்கள்**: "ஏதின் மாக்கள்", "கவலை மாக்கட்டிப் பேதை யூரே" (குறுந். 89 ; 2, 159 : 7.) 1 - 2. "துஞ்சா தூறைநரொ சொவாத, துயிற்

கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்தே" (குறுங். 145 : 4 - 5); "ஒலிய விந் தடங்கி யாம நள்ளெனக், கலிகெழு பாக்கந் துயின்மடிந் தன்றே" (நற். 303 : 1 - 2.) 1 - 3. "பல்லோர் துஞ்சு நள்ளென் யாமம்" (குறுங். 344 : 1, ஒப்பு.); "ஊரெலாந் துஞ்சி யுலகெலா நள்ளென்று, பாரெலாம் பாடவிந்த பாயிருட்கண்" (11-ஆம். திருவாரூர்மும் மணிக். 26.)

4. தலைவி துஞ்சாமை: (குறுங். 6, 11, 27, 137, 146, 176, 143, 261, 301, 329, 357, 365, 381); "நள்ளென் யாமத்துங் கண்படை பெறேஎன்" (நற். 178 : 8); "ஆரிருட் கங்கு லஃணையொடு பொருந்தி, ஓர்யா வுகுவ தெவன்கொல்" (அகநா. 82 :16 - 7.)

3 - 4. "கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே" (குறுங். 138 : 1.)

மு. "மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா, என்னல்ல தில்லை துணை" (குறள், 1168.) (சு)

கண்டோர் கூற்று

[தலைவனும் தலைவியும் தமரின் நீங்கி உடன்போன காலத்தில் எதிரே வந்தவர்கள், தலைவி காலில் அணிந்திருந்த சிலம்பினுல் அவ் விருவருக்கும் மணம் நடைபெறவில்லை யென்பதை உணர்ந்து இரங்கிக் கூறியது.]

எ. வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றுவிக்கும்
வேய்ப்பயி லழுவ மூன்னி யோரே.

எ - து. செலவின்கண் இடைச்சுரத்துக் கண்டோர் கூறியது (பி - ம். கண்டோர் செவிலிக்குச் சொல்லியது.)

[செலவு - உடன்போக்கு. இடைச்சுரத்து - பாலைநிலத்து வழி யினிடையே.]

பெரும்பதமனர்.

(பி - ம்.) 2 'மேலன', 'மேவுந' 4 'கயிறுள் பறையிற்' 6 'வேய்ப்பயில் பழுவம்'

(ப - ரை.) ஆரியர் கயிறு ஆடு பறையின் - ஆரியக்கூத்தர் கழையிற்கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடும்பொழுது கொட்டப் படும் பறையைப்போல, கால் பொர கலங்கி - மேல்காற்றனது

தாக்குதலால் நிலைகலங்கி, வாகை வெள் நெற்று ஒலிக்கும் - வாகை மரத்தினது வெள்ளிய நெற்றுக்கள் ஒலித்தற்கு இடமாகிய, வேய் பயில் அழுவம் - மூங்கில் செறிந்த பாலைநிலப்பரப்பில், முன்னியோர் - கடந்து செல்ல நினைந்து வருபவர்களுள், வில்லோன் காலன கழல் - வில்லையுடையவனுகிய இவ்வாடவனது காலில் உள்ளன வீரக்கழல்கள் ; தொடியோள் மெல் அடி மேலவும் சிலம்பு - தோள்வளையை அணிந்த இம்மகளினுடைய மெல்லிய அடியின்மேலுள்ளனவும் சிலம்புகள் ; நல்லோர் யார்கொல் - இந்நல்லோர் யாவரோ? அளியர் - இவர் அளிக்கத்தக்கார் !

(முடிபு) அழுவம் முன்னியோர் யார் கொல்? அளியர் !

(கருத்து) மணம்புரிந்து கொள்ளாத இவர்திறம் இரங்கத்தக்கது.

(வி - ரை.) உடன்போக்கின்கண் நேரும் இடையூறுகளை நீக்கற் பொருட்டு வில்லுடையனுதலின் தலைவனை வில்லோனென்றார்; உதயணன் வாசவதத்தையைக் கொண்டு செல்லுகையில் வராகனென்பவனது கையிலிருந்த வில்முதலியவற்றைப் பெற்றுச் சென்றனென்றும், பின் தன்னை வளைத்த சவரர் புளிஞரை அவற்றால் வென்றனென்றும் பெருங்கதையிற் காணப்படும் செய்தி இங்கே அறியற்பாலது. கழல் வீரத்திற்கும் வென்றிக்கும் தனித்தனியே கட்டப்பட்டனவாதலின் காலனவென்று பன்மையாற் கூறினர்; போர்தோறும் வென்று கட்டினவென்பதுமாம்; "காலன புனை கழல்" (புறநா. 100 : 1, விசேடவுரை); "கெழுதகை யம்பர் கிழவோன் சேந்தனில், விழைவுறு தியாகத்து வீரத்து வீக்கிய, கழலே யாடவர் கான்மிசை யணிவடம்" என்பது திவாகரமாதலின், கொடையின்பொருட்டும் வீரத்தின்பொருட்டும் புனைந்த கழல்களென்றலுமாம்.

தலைவனுல் தலைவி வரைந்து கொள்ளப்படாமையைப் புலப்படுத்துவார், 'மெல்லடி மேலவும் சிலம்பே' என்றார்; மணம் புரிவதற்குமுன், மணமகளது காலில் பெற்றோர்களால் அணியப்பட்ட சிலம்பை நீக்குதற்கு ஒரு சடங்கு செய்யப்படும்; அது 'சிலம்பு கழி நோன்பு' எனப்படும்; "நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும், எம்மனை வதுவை நன்மணங் கழிகெனச், சொல்லி னெவனே..... பொய்வல் காளையை யின்ற தாய்க்கே" (ஐங். 311) என்பதனுல் அந் நோன்பு மணத்துக்கு முன்பு செய்யப்படுமென்று தெரிகின்றது. மெல்லடியென்றது இப்பாலையில் நடக்கலாற்றுளென்னும் இரக்கக் குறிப்பைப் புலப்படுத்தியது. தூய்மை, அன்பு, உவகை

முதலிய அகத்தியல்பை முகத்தால் அறிந்தமையின், 'நல்லோர்' என்றார்.

ஆரியர் - ஆரிய நாட்டிலுள்ள ஒருவகைக்கூத்தர்; அவர் இயற்றுங் கூத்து ஆரியக்கூத்தெனப்படும்; 'ஆரியக் கூத்தாடினலும் காரியத்திலே கண்' என்ற பழமொழி அக்கூத்தின் அருமையைப் புலப்படுத்தும்; விலக்குறுப்பின் வகையாகிய பதினென்கனுள் ஒன்றாகிய சேதமென்பது இருவகைத்தென்பதும் அவ்விரண்டினுள் ஆரியக்கூத்து ஒன்றென்பதும் சிலப்பதிகார உரையால் அறிந்த செய்திகள்; "ஆரியந் தமிழெனுஞ் சீர்நட மிரண்டினும்" (சிலப். 3 : 12 - 25, அடியார். மேற்.) அக்கூத்தர் கழையை நட்டுக் கயிறுகட்டி அக்கயிற்றின் மேல் ஆடுவர். "ஆடியற் பாணிக் கொக்கு மாரிய வமிழ்தப் பாடற், கோடியர்" (கம்ப. கார்காலப். 33) என்று கம்பரும் இக்கூத்தரைப்பற்றிக் கூறியுள்ளார்.

பசுமையற முதிர்ந்ததாதலின் வெண்ணெற்றென்றார்.

ஏகாரங்களும் தாமென்பதும் அசை. மேலவும்: உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

(மேற்.) 1 - 2. செவிலிக்குக் கண்டோர் கூறியது (தொல். செய். 163, பேர்.); செய்யுளுள் பெயரின் ஈற்றயல் ஆகாரம் ஓகாரமானது (தொல். பெயர். 41, கல்.) 1 - 3. செய்யுளுள் பெயரின் ஈற்றயலாகாரம் ஓகாரமாயிற்று (தொல். பெயர். 41, இளம், தெய்வச், ந; நன். 352, மயிலை; 353, சங்.)

மு. பெயரிடத்து ன ள ர ஈற்றயலாகாரம் செய்யுளில் ஓகாரமாக வந்தது (தொல். பெயர். 41, சே; இ. வி. 326); வில்லோனும் தொடி போளுமென்பன பொருளெனப்படும்; வேய்பயிலழுவம் முன்னியோரென்பது அப்பொருள் நிகழ்ச்சியான் இறந்தகாலமெனப்படும்; அப்பாட்டிற்குச் சிறந்தார் அவராகலின் அவரே பொருளாயினரென்பது (தொல். செய். 203, பேர், 202, ந; இ. வி. 575); சுரத்திடைச் செல்லும் தலைமகனையும் தலைமகளையும் கண்டு எதிர்வருகின்றார், யார்கொல் இவ்வாறு போந்தாரெனச் சொல்லியது (இறை. 23); இடைச்சுரத்துக் கண்டோர் கூற்று (தொல். அகத். 43, இளம், 40, ந.); 'சுரத்து எதிர்ப்பட்டார் சொல்லியது' (தமிழ்நெறி. 23); கண்டோர் அயிர்த்தல் (நம்பி. 182.)

(ஒப்பு.) 1. கழல்: "ஆய்கழற், சேயிலை வெள்வேல் விடலை" (குறுந். 15 : 4 - 5.) 2. மெல்லடி: "நல்லோண் மெல்லடி நடையு மாற்றுள்" (தொல். அகத். 40, ந. மேற்.) தலைவி சிலம்புடையாளாதல்: "பெயர்ந்து போகுதி பெருமூ தாட்டி, சிலம்புகெழு சீறடி சிவப்ப, இலங்குவேற் காளையொ டிறந்தனள் சுரனே" (தொல். அகத். 40, ந. மேற்.) சிலம்புகழி நோன்பு: "சிலம்பு கழீஇய செல்வம்" (நற். 289 : 10); "அருங்கடி வியனகர்ச் சிலம்புங் கழியாள்.....கூர்வேல் விடலை பொய்ப்பப்போகி"

"சிலம்புகழீஇ, அறியாத் தேஎத்த ளாகுதல் கொடிதே" (அகநா. 315 : 8 - 14, 385 : 17 - 18.)

4 - 5. **காரீருள் வாகையின் நெற்று ஒலித்தல்:** "வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென, நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கும்", "அத்த வாகை யமலை வானெற், றரியார் சிலம்பி னரிசி யார்ப்பக், கோடை தூக்குங் கானம்" (குறுந். 39 : 1 - 2, 369 : 1 - 3); "காய்த்த வாகை நெற் றெலிப்ப" (திவ். பெரியதிரு. 1. 7 : 8.) **வாகை நெற்றின் ஒலிக்குப் பறையின் ஒலி உவமை:** "வாட லுழிஞ்சில் விளைநெற் றந்துணர், ஆடுகளப் பறையி னரிப்பன வொலிப்பக், கோடை நீடிய வகன்பெருங் குன்றம்", "உறு வளி யெறிதொறும்.....குறுங்காலுழிஞ்சிற், றூறுசிதை விளைந்த நெற்ற மாடுமகள், அரிக்கோற் பறையி னெனவெ வொலிக்கும்" (அகநா. 45 : 1 - 3, 151 : 6 - 10.)

மு. "வில்லான் விறலடி மேலன பொற்கழல் வெண்முத்தன்ன
பல்லா ளிணையடி மேலன பாடகம் பஞ்சவற்கு
நெல்லார் கழனி நெடுங்களத் தன்று நிகர்மலைந்த
புல்லா தவரென யார்கொல் லருஞ்சுரம் போந்தவரே"
(பாண்டிக்கோவை.) (எ)

காதற்பரத்தை கூற்று

[தலைவி தன்னை இகழ்ந்து கூறினளென்று அறிந்த காதற் பரத்தை அத்தலைவியின் பக்கத்திலுள்ளார் கேட்கும்படி, "தலை வன் எமக்கு வயப்பட்டான்போல இங்கே இருந்துவிட்டு, தலைவி பாற் சென்று அவளுக்கு அடங்கி அவள் மனமபோல் ஒழுகினன்; தருக்குற்று என்னை அவள் இகழ்ந்ததற்குக் காரணம் அது போலும்!" என்று கூறியது.]

அ. கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதூஉ மூரன்
எம்மிற் பெருமொழி கூறித் தம்மிற்
கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
5. ஆடிப் பாவை போல
மேவன செய்யுந்தன் புதல்வன் ரூய்க்கே.

எ - து. கிழத்தி, தன்னைப் புறனுரைத்தாளெனக் கேட்ட காதற் பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

[பாங்காயினர் - பக்கத்திலுள்ள தோழி முதலியோர்.]

ஆலங்குடி வங்கனர்.

(பி - ம்.) 1 'கழனி மரத்து', 'கழனிமாஅத்து' 5 'ஆடியிற்' ஆடியுட்' 6 'மேவின', 'ஏவின'

(ப - ரை.) கழனி மாத்து - வயலருகிலுள்ள மாமரத்தினது, விளைந்து உகு தீ பழம் - கனிந்து வீழ்கின்ற இனிய பழத்தை, பழன வாளை - பொய்கையிலுள்ள வாளைமீன்கள், கதூஉம் ஊரன் - கவ்வி உண்ணுதற்கு இடமாகிய ஊரையுடைய தலைவன், எம் இல் பெருமொழி கூறி - எம்முடைய வீட்டில் எம்மை வய மாக்குதற்குரிய பெருமொழிகளைக் கூறிச்சென்று, தம் இல் - தம் முடைய வீட்டில், கையும் காலும் தூக்க - முன்னின்றூர் தம் கையையும் காலையும் தூக்க, தூக்கும் - தானும் தூக்குகின்ற, ஆடி பாவை போல - கண்ணாடியுள் தோன்றுகின்ற பாவையைப் போல, தன் புதல்வன் தாய்க்கு - தன்னுடைய மனைவிக்கு, மேவன செய்யும் - அவள் விரும்பியவற்றைச் செய்வான்.

(முடிபு) ஊரன், எம்மிற் பெருமொழி கூறிப் புதல்வன் தாய்க்குத் தம்மில் மேவன செய்வான்.

(கருத்து.) தலைவன் தன் மனைவியை அஞ்சி ஒழுகினான்.

(வி - ரை.) கழனி - வயல். தீம்பழம்: தீமை - இனிமை; "தீ நீர்" (பரி. 10 : 111, 12 : 7, உரை.) கதூஉம் - கதுவும். ஊரன் - மருத நிலத்தலைவன். ஆடி - கண்ணாடி; முதற்குறை (நன். 268, மயிலை.) பாவை - கண்ணாடியிற்றோற்றும் உருவம். பரத்தை, தலைவியைத் தலைவனுக்கு மனைவியென்று கூறப் பொருளாதலின் புதல்வன்றாயென்றாள்; தலைவியின் முதுமையை இகழ்ந்ததுமாம். பெருமொழி யென்றது "உன்னைப் பிரியேன்" என்றது முதலியவற்றை; சபதமுமாம். தன் மனைவி மேவன செய்யுமென்றது, அங்ஙனம் அவன் செய்தமையே அவள் என்னைப் புறங்கூறும் தருக்குக்குக் காரணமாயிற்றென்னும் நினைவிற்று.

(மேற்.) 1 - 2. பலவகை யின்பமும் வருந்தாது பெறுவரென்பதனைப் புலப்படுத்தி நிற்றலின் இனிதுறு இளவிபற்றி உள்ளுறை யுவமம் தோன்றியது (தொல். உவம. 28, பேர்.)

5-6. ஆடி : முதற்குறையையுடைய சொல் குறிப்பினைற் பொருளறி வித்தது (நன். 268, மயிலை.) 4-6. கண்ணாடிப் பாவை தன்னைச்சேர்ந்தவர் செயலாயே இருக்கும் (சீவக. 2327, ந.)

மு. காமக்கிழத்தியார் தலைவனை இகழ்ந்தது (தொல். கற்பு. 10, இளம்.) இல்லிடத்திருந்து தலைவனும் தலைவியும் ஊடியும் உணர்த்தியும் செய்த தொழிலைக் கேட்டுக் காமக்கிழத்தி இகழ்ந்தது (தொல். கற்பு. 10, ந.); 'இது குறுந்தொகை. புறன் உரைத்தானெனக் கேட்ட பரத்தை தலைவனை

நெருங்கித் தலைவன் பாங்காயினர் கேட்ப உரைத்தது ; இது (மருதத்திற்கு) முதுவேனில் வந்தது ' (தொல். அகத். 8. ந.)

(ஒப்பு.) 1. **கழனி மா** ; " கொக்கார் வளவய லூர " (பழ. 18) ; "கொக்கார் வளவய லூரன் " (கைந்நிலை, 48.) **மாத்துத் தீம்பழம்** : " தேக் கொக்கு ", " பால்கலப் பன்ன தேக்கொக்கு " (குறுந். 26 : 6, 201 : 2); " கொக்கினுக் கொழிந்த தீம்பழம் " (நற். 280 :1.) **மாம்பழம் விளைந்து உகுதல்**: " நறுவடி மாஅத்து விளைந்துகு தீம்பழம் " (ஐங். 61 : 1) ; " மாவின் பழம்விழும் படப்பை யெல்லாம் " (தே. திருநா. திருவலம்புரம்.)

2. கதூஉம் : " கெண்டை கதூஉம் " (குறுந். 91 ; 2.) ; " நீர்த்தாழ்ந்த குறுங்காஞ்சிப், பூக்கதூஉ மினவாளை " (புறநா. 18 : 7 -8) **1-2. மாம் பழத்தை வாளை உண்ணல்** : " கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு, துணர்த்தேக் கொக்கின் றீம்பழங் கதூஉம் " (குறுந். 164 : 1 - 2); " வன மாவி னிருங்கனி யுண்டுமதர்த், தினவாளை யிறைத்தெழு கின்றனகாண் " (சூளா. சீயவதைச். 231) ; " வண்டுறை மருங்கினுங்கோர் மாங்கனி வீழ்தல் கண்டே.....வென்றெரு வாளை தன்வாய்க், கொண்டுறை வலிமை நோக்கி " (வி. பா. திரௌபதி மாலை. 13)

4-5. ஆடிப்பாவையின் இயல்பு : " ஆடியுட் பாவை போனீ யணங்கிய தணங்க வென்றான் " (சீவக. 957) ; " கண்ணடி யனைய நீர்மைப், பண்ணுடைச் சொல்லியர் தம்பா லோனே " (திருவாரூர்மும்மணிக். 19 : 17-8); " மாற்றிரி, ஆடிப் பாவையோ டலர்நிழற் பாவை, கைகான் மெய்பிறி தெவையும் பையப, தூக்கிப் றூங்கி மேக்குயர் புயர்தல்"(ஞானமிர்தம், 6 : 20-23) ; " ஆடிவந்த நற்பாவை போலடியார், கூடவிளை யாடிவந்த கோ மானே " (தமிழ்விடு. 252.) **6. மேவன செய்தல்** : குறள், 1073. **புதல்வன் தாய்** : குறுந். 359 ; 6 ; ஐங். 90 : 4, 405 : 4, 442 : 5 ; அகநா. 6 : 13. **கருத்து ஒப்பு** : அகநா. 166, கருத்து. (அ)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்து மீண்ட தலைமகன் வாயில் வேண்டிப் புக்க விடத்துத் தோழி, "தலைவனது பரத்தைமையாகிய கொடுமை யால் துன்புறுபவளாயினும் தலைவி அவன் செய்த குற்றத்திற்குத் தான் நாணி எமக்கும் அறிவியாமல் மறைத்துக் கற்பொழுக்கத்திற் சிறப்புற்றிருக்கின்றாள் ; ஆதலின் சினந்திலள் " என்று கூறு முகத்தால் தலைவியைக்கண்டு மகிழ்தல் இயலுமென்பதைத் தலைவ னுக்குப் புலப்படுத்தியது.]

கூ. யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய

மாம்பழம் முதிர்ந்து உதிர்வது கூறப்படுதலின் அதற்குரிய கால மாகிய முதுவேனிலென்றார்.

பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொ றும்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணிக் கரப்பா டும்மே.

எ-து. தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

கயமனார்.

(பி-ம்) 1 'யாயாகியளோ' 2 'றமியள்' 3 'மெய்சாயுநளே' 4 'நம்மு ணிக் கரப்பா டுதுமே'

(ப-ரை.) மாஅயோள் - இயல்பாகவே மாமை நிறத்தையுடைய வளாகிய தலைவி, மடைமாண் செப்பில் - இப்பொழுது மூட்டு வாயால் மாட்சிமைப்பட்ட செப்பினுள். தமிய வைகிய - இட்டு அடைப்பத் தனித்தனவாகி வைகிய, பெய்யா பூவின் - சூடப்படாத பூக்களைப்போல, மெய் சாயினள் - உடல் மெலிந்தாள்; பசு அடை நிவந்த - பசுமையாகிய இலைக்குமேலே உயர்ந்து தோன்றும், கணை கால் நெய்தல் - திரட்சியையுடைய காம்பையுடைய நெய்தற்பூவா னது, இனம் மீன் இரு கழி - கூட்டமாகிய மீன்களையுடைய கரிய கழியின் கண், ஓதம் மல்குதொறும் - வெள்ளம் அதிகரிக்குந்தோறும் கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும் - ஆழமான குளத்தில் முழு கும் மகளிரது கண்ணை ஒத்தற்கு இடமாகிய, தண்ணந்துறைவன் கொடுமை - தண்ணிய துறையையுடைய தலைவனது கொடுமையை, நம் முன் நாணி - நம் முன்னே சொல்லுதற்கு நாணமுற்று, கரப்பு ஆடும் - மறைத்தலையுடைய சொற்களைச் சொல்லுகின்றாள்; ஆதலின், யாய் ஆகியள் - கற்புக்கடம் பூண்டவளானாள்.

(முடிபு.) மாயோள் மெய் சாயினள்; துறைவன் கொடுமை நாணிக் கரப்பாடும்; ஆதலின் அவள் யாயாகியள்.

(கருத்து) தலைவனது கொடுமையைத் தலைவி மறந்து அவனை ஏற்றுக்கொள்வாள்.

(வி - ரை) தலைவியை யாயென்றது, புலத்தற்குக் காரண மான பரத்தைமை தலைவன்பால் உளதாகவும் அதை மனங்கொள் ளாத கற்பின் சிறப்பை நோக்கி (ஐங். க, உரை.) மாயோள் - மாமை நிறத்தையுடையவள்; மாமை நிறமென்பது மாந்தளிர் போன்ற அழகிய நிறம்; அஃது இலாவணியம் எனப்படும். தமிய

வைகிய பூ, பெய்யாப் பூவென்க. நெய்தற்பூவுக்குப் பலகால் மூழ்கி யெழும் மகளிர் கண் உவமை. இவள் ஈணி மறைத்தாலும் அவன் கொடுமையால் இவன் துன்புறுதலை இவளது உடல் மெலிவால் யாமறிந்தேமென்பதைப் புலப்படுத்துவாள், 'மெய்சாயினள் என்றாள். கரப்பாடும்மே; செய்யுளோசை நோக்கி மகரவொற்று விரிந்தது.

சிறப்பில்லாத நெய்தற்பூக்கள் சிறப்புடைய மகளிர் கண்களை மானுமென்றமையால், சிறப்பில்லாத பரத்தையர் தலைவனுக்குச் சிறப்புடைய தலைவியை ஒத்தனரென்னும் குறிப்புப் பெறப்படும்: (ஐங். 2, உரை.)

(மேற்) 4. கருப்பொருள்களுள் நெய்தற்பூச் சிறத்தலால் கடலைச்சார்ந்த நிலம் நெய்தலென்னும் பெயர்பெற்றது (இ. வி. 379.)

6. இன் என்னும் ஐந்தாம் வேற்றுமையுருபு உவம உருபோடு வந்தது (தொல். உவம. 11, பேர்.); மான என்பது விரிஞயுவமத்தின்கண் வந்தது (தொல். உவம. 12, பேர்.) 4-6. நெய்தல்நிலம் நெய்தற்பூச் சிறத்தலாற் பெற்ற பெயர் (தொல். அகத். 5, இளம்.); 'பொருட்கு அடுத்த அடையும் உவம அடைக்கு ஏற்றது, உணரப்படாதன களையப்படுமென்பது; பாசடை நிவந்த கணைக்காலென நெய்தலாகிய பொருட்குவந்த அடையிரண்டும் உவமத்திற்கு ஏற்ப வாராமையான் அவை தெளிமருங்கில என்று களைந்து கொள்க' (தொல். உவம. 20, பேர்.)

7. தண்ணந்துறைவன்: விரிக்கும்வழி விரித்தலென்னும் செய்யுள் விகாரம் (தொல். எச்ச. 7, ந.) 7-8. தலைவியைச் சுட்டி ஒருவர் ஒருவருக்கு உரைப்பார் போல வாயில்கள் தம்முட் கூறவும் பெறும்; அவையும் தலைவி கேட்பன; இது பாடினி பாணற்கு உரைத்தது (தொல். செய். 201, பேர்; 199, ந.)

மு. தலைமகனைப் பேணுத ஒழுக்கத்திலுல் தலைமகள் நாணிய பொருண்மைக்கண்ணும் தோழிக்குக் கூற்று நிகழும் (தொல். கற்பு. 7, இளம்.) 8, ந.); தலைவியின் தன்மைகளை அகம் புகல் மரபின் வாயில்கள் தலைவற்கு உணர்த்துதல் (தொல். கற்பு. 11, இளம்.); பாங்கி தலைவியைப் புகழ்தல் (நம்பி. 207, உரை.)

(ஒப்பு) 1. **மாஅயோள்**: குறுந். 132; 6, 199: 5; அகநா. 62: 16.

3. **பெய்யாப் பூவைப்போல மெலிதல்**: "பெய்யாது வைகிய கோதை போல, மெய்சா யினை" (நற். 11: 1-2); "பெய்யா மலரிற் பிறிதாயினளே" (சிவக. 1960.) 2-3. **செப்பிலே பூவை வைத்தல்**: "புடையமை பொலிந்த வகையமை செப்பிற்.....கமழ்நறும்பூ" (மதுரைக். 421-3); "முதிரா வேனி லெதிரிய வதிரல், பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர், நறுமோ ரோடமொ டுடனெறிந் தடைச்சிய, செப்பு" (நற். 337: 3-6); "செப்புவா யவிழ்ந்த தேம்பொதி நறுவிரை, நறுமலர்" (சிலப். 22: 121-2);

"பிதிர்கைக் கோதை செப்புவாய் மலரவும்", "பூத்தகைச் செப்பும்" (பெருங். 1. 33 : 76, 3. 5 : 78) ; "காமவி லேகையுங் கற்பக மாலையும், சேம மணிநகைச் செப்பினு ளேந்துபு" (சூளா. மந்திர. 56.) **செப்பிற் பூவைப் போல மெலிதல்** : "வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்" (கலி. 68 : 15) ; "வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போற், றகைநலம் வாடி." (மணி. 4 : 65-6.)

4. **நிவந்த நெய்தல்** : "நீணறு நெய்தல்" (குறிஞ்சிப். 79.) **கணைக்கால் நெய்தல்** : பெரும்பாண். 213 ; நற். 138 : 6; அகநா. 360 : 4. 4-5. **கழிநெய்தல்** : குறுந், 336 : 5 ; நற். 117 : 2-3, 382 : 1 - 2 ; ஐங். 183 : 5. 4-6. **நெய்தற் பூவிற்குக் கண் உவமை** : "கண்போ னெய்தல்" "கழிசேர் மருங்கிற் கணைக்கா னீடிக், கண்போற் பூத்தமை கண்டு நுண்பல, சிறுபா சடைய நெய்தல்", "ஒண்ணுதன் மகளி ரோங்குகழிக் குற்ற, கண்ணே ரொப்பிற் கமழ்நறு நெய்தல்" (நற். 8 : 8, 27 : 9-11, 283 : 1-2); "கண்போ னெய்தல்" (ஐங். 151 : 4); "இருங்கழி மலர்ந்த கண்போ னெய்தல்" (அகநா. 170 : 4); "கண்ணவிழ் நெய்தலும்" (சிலப். 14 : 77.)

7. **தலைவனது கொடுமை** : குறுந். 145 : 2, 224 : 2, 245: 5 ; ஐங். 11 : 2, 12 : 2 ; இறை. 45. 7-8. **தலைவி தலைவனது கொடுமையை மறைத்தல்** : "தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை, என்னையு மறைத்தாளென் றோழியது கேட்டு, நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றுணிஞ்; கூரு நோய் சிறப்பவு நீசெய்த வருளின்மை, சேரியு மறைத்தாளென் றோழியது கேட்டாங், கோருநீ நிலையலை யெனக்கூற றுணிஞ்; நோயட வருந்தியு நீ செய்த வருளின்மை, ஆயமு மறைத்தாளென் றோழி யதுகேட்டு, மாயநின் பண்பின்மை பிறர்கூற றுணிஞ்", "இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலின், நின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்" (கலி. 44 : 8-16, 124 : 13-4.)

மு. (குறுந். 10); "வேயாது செப்பி னடைத்துத் தமிவைகும் வியி னன்ன, நீயாடி சிற்றம் பலமீன யாடில்லை யூரனுக்கின், றேயாப் பழியென நாணியென் கண்ணிங்ங னேமறைத்தாள், யாயா மியல்பிவள் கற்புநற் பால வியல்புகளே" (திருச்சிற். 374.) (கூ)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்த தலைவன் மீண்டுவந்து வாயில் வேண்டிய விடத்துத் தோழி, "ஏற்றுக்கோடற்குத் தகாத கொடுமையை யுடையனுயினும் அதனை மனங்கொள்ளாமல், கற்பொழுக்கத்தின் சிறப்பினுல் தலைவன் கொடுமையை மறைத்து அவன் நாணும்படி தலைவி தானே அவனை ஏற்றுக்கொள்ள வருகின்றுள்' என்று கூறியது]

கo. யாயா கியளே விழவுமுத லாட்டி
பயறுபோ லிணர பைந்தாது படஇயர்

உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி யூரன் கொடுமை
கரந்தன ளாகலி னணிய வருமே.

எ - து. தலைமகற்குத் தோழிவாயில் நேர்ந்தது.

ஓரம்போகியார்(பி - ம். ஓரம்போகியார்.)

(பி - ம்.) 2. 'படீஇய', 'பரீஇயர்'

(ப - ரை.) யாயாகியள் - தலைவியாயவள், விழவுமுதலாட்டி. தலைவன் செல்வம் பெற்று மகிழ்ந்து குலாவுவதற்குக் காரணமாக உள்ளாள்; பயறு போல் இணர பைந்தாது - பயற்றின் கொத்தைப்போன்ற பூங்கொத்திலுள்ளனவாகிய பசிய பூந்தாதுக்கள், படீஇயர் - தங்கள் மேலே படும்படி, உழவர் வாங்கிய - உழவர்கள் வளைத்த, கமழ் பூமென் சினை - கமழ்கின்ற பூக்களையுடைய மெல்லிய கிளைகளைக்கொண்ட, காஞ்சி ஊரன் - காஞ்சி மரத்தையுடைய ஊரனது, கொடுமை கரந்தனள் ஆகலின் - கொடுமையை நாம் தெரிந்து கொள்ளாதபடி மறைத்தாளாதலின், நாணிய வரும் - அவன் நாணும்படி எதிர்கொள்ள வருகின்றாள்.

(முடிபு) விழவு முதலாட்டி, தலைவனது கொடுமையை வெளியிடாமல் மறைத்தாளாதலால் அவன் நாணும்படி வாராநின்றாள்.

(கருத்து) தலைவி தலைவனது கொடுமையை மறைத்து அவனை ஏற்றுக்கொள்வாளாயினள்.

(வி - ரை.) யாயாகியள் : 9-ஆம் செய்யுளின் விசேடவுரையைப் பார்க்க. விழவுமுதலாட்டி யென்றது தலைவி இல்லறம் நிகழ்த்தவந்த பின்பே தலைவனுக்குச் செல்வம் உண்டாயிற்றென்பதைத் தெரிவிக்கின்றது; இந்நூல் 295 - ஆம் செய்யுளாலும் இது விளங்கும். முதல் - காரணம் (தொல். வேற்றுமை. 10.) காஞ்சித்தாது முதலியன இளைய மகளிரால் விரும்பப்படுவனவாதலால், அவர்பொருட்டு உழவர் வளைத்தனர்; அதனை மகளிர் விரும்புவதை, "தைந்த காஞ்சி" (பதிற். 23 : 19) என்பதற்கு 'விளையாட்டு மகளிர் பலரும் தளிரும் முறியும் தாதும் பூவும் கோடலாற் சிதைவுபட்டுக் கிடக்கின்ற காஞ்சி' என்றெழுதப்பட்டுள்ள உரையினால் அறியலாகும். உழவர் காஞ்சிச் சினையை வளைத்தமையைத் தாதாகிய அடையாளம் புலப்படுத்துதல் போலத் தலைவனுடைய பரத்தைமையை அவன் உடம்பின்பாற் காணப்படும் சந்தனமுதலியன புலப்படுத்துமென்பது குறிப்பு; கலி. 72, 78 - ஆம் பாடல்களாலும் இது விளங்கும். கொடுமை

யென்றது தலைவனது பரத்தைமையை. தான் கொடுமை செய்த காலத்தும் அதனைப் பொருட்படுத்தாமல் எதிரேற்றுக் கொள்ளும் தலைவியின் செயல் தலைவனுக்கு நாணத்தை உண்டாக்கும்; "இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண, நன்னயஞ் செய்து விடல்" (குறள். 314.) நாணிய - யாம் நாண வென்றுமாம்; இப்பொருளுக்கு, தலைவியைப் பின்பற்றி யொழுகும் யாம் பன்முறையும் அவன் கொடுமையைச் சுட்டி அவனுக்கு வாயில் நேர்தல் முறையன்றென்று கூறி நிற்ப, அவன்கொடுமையை அறிந்து வருந்திய தலைவி அதனை மறந்து தன் கற்பொழுக்கத்தினுல் எம்மை நாணச் செய்தாளென்பது கருத்தாகக் கொள்க.

(ஒப்பு) 1. யாயாகியள்: குறுந். 9 : 1.

2 - 4. காஞ்சிப் பூந்தாது: "கோதை யிணர குறுங்காற் காஞ்சிப், போதவிழ் நறுந்தா ணிந்த கூந்தல்", "குறுங்காற் காஞ்சிக் கோதை மெல்விணர்ப், பொற்றகை நுண்டா துறைப்ப" (அகநா. 296 : 1-2, 341 : 9-10.) இணர காஞ்சி: "வீழிணர்க், காஞ்சி" (அகநா. 336 : 8-9.)

4. தலைவன் கொடுமை: குறுந். 9 : 7, ஒப்பு. மு. குறுந். 9. (கo)

தலைவி கூற்று

[தலைமகனைப் பிரிந்திருக்கும் தலைவி, "நெஞ்சே, தலைவர் வாராமையின் உடம்பு மெலிந்தது; துயிலையும் ஒழிந்தேன்; துயர் மிகுதியால் அழுவேன்; இங்ஙனம் இங்கிருந்து துயருறுதலைக் காட்டிலும் அவர் இருக்குமிடத்திற்குச் செல்லுதல் நலம்" என்று தோழி கேட்கும்படி நெஞ்சைநோக்கிக் கூறுவாளாய்த் தனது துயரமிகுதியைப் புலப்படுத்தியது.]

கக. கோடி நிலங்குவளை நெகிழ நாடொறும்
பாடில கலிழுங் கண்ணெடு புலம்பி
ஈங்கிவ ணுறைதலு முய்குவ மாங்கே
எழுவினி வாழியென் னெஞ்சே முனைது
5. குல்லைக் கண்ணி வடுகர் முனையது
பல்வேற் கட்டி நன்னுட் டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்
வழிபடல் சூழ்ந்திசி னவருடை நாட்டே.

எ - து. தலைமகள், தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்த்தோழி கேட்பச் சொல்லியது.

மாமூலனர்.

(பி - ம்.) 1. 'நெகிழ நாளும்' 2 'பாடில கலுழுமங் கண்ணெடு' 3 'முயங்குவம்' 4 'எழுகினிவாழி நெஞ்சே', 'வாழிய நெஞ்சே', 'முனஅது', 'முனையது' 6 'வல்வேற்' 7 'தேத்தாராயினும்' 8 'வழி விடல்', 'நட்பே'

(ப - ரை.) என் நெஞ்சே வாழி - எனது நெஞ்சே நீ வாழ்வாயாக! கோடு ஈர் இலங்கு வளை நெகிழ - சங்கினை அறுத்துச் செய்யப்பட்டு விளங்கும் கைவளை உடல்மெலிவினால் நெகிழா நிற்ப, நாள் தொறும் பாடு இல கலிழும் கண்ணெடு - நாள்தோறும் இமைபொருந்துதல் இல்லாதனவாகிக் கலங்கியழும் கண்ணெடு, புலம்பி - தனித்து வருந்தி, ஈங்கு இவண் உறைதல் உய்குவம் - இப்படி இங்கே தங்குதலினின்றும் தப்புவேமாக; ஆங்கு - தலைவர் இருக்கும் இடத்திற்கு, இனி எழு - செல்ல இப்பொழுது எழுவாயாக; முனைது - முன்னேயுள்ளதாகிய, குல்லை கண்ணி - கஞ்சங் குல்லையாலாகிய கண்ணியை அணிந்த, வடுகர் முனையது - வடுகருக்குரிய இடத்தினதாகிய, பல் வேல் கட்டி நல் நாட்டு உம்பர் - பலவேலையுடைய கட்டியென்பவனுடைய நல்ல நாட்டுக்கு அப்புறத்தில் உள்ள, மொழிபெயர் தேஎத்தர் ஆயினும் - மொழி வேறுபட்ட நாட்டில் உள்ளவரேனும், அவருடை நாட்டு - அவருடைய நாட்டினிடத்து, வழிபடல் சூழ்ந்திசின் - செல்லுதலை எண்ணினேன்.

(முடிபு) நெஞ்சே, உய்குவம்; எழு; நாட்டு வழிபடல் சூழ்ந்திசின்.

(கருத்து) தலைவரைப் பிரிந்து தனித்திருத்தலை இனி ஆற்றேன்.

(வி - ரை.) வளை நெகிழ்தலும் கண் பொருந்தாமையும் தலைவனைப் பிரிந்த துன்பத்தால் விளைந்தவை. உறைதலும்: உம்மை அசைநிலை (புறநா. 26 : 3, விசேடவுரை); சாரியையுமாம் (தொல். குற்றியலுகரப். 76.) இனி - இப்பொழுது (குறள், 1083, பரிமேல்.)

வடுகர்: இவர் வேங்கடத்தின் வடக்கே யிருந்த ஒரு சாதியார்; மிக்க வீரமும் வன்மையும் உடையவராகச் சொல்லப்படுகின்றனர்; இவருள் ஒரு சாரார் வேட்டையாடும் தொழிலுடையார்; அதன் பொருட்டு நாய்களையும் உடன்கொண்டுவருவர்; இவரை 'வம்பவடுகர்' என்றும் நூல்கள் கூறும். (அகம் 44

கட்டி: இவன் சேரனுடைய படைத்தலைவர்களுள் ஒருவன்; கங்க நாட்டுக்குத் தலைவனாகச் சொல்லப்படுகின்றான். மொழி பெயர் தேஎம் - மொழி வேறுபட்ட நாடு. இதனால், கட்டியினுடைய நாடும் வடுகரது நாடும் வேற்றுமொழியை யுடையன வென்பது பெறப்படும்.

மொழி வேறுபட்ட நாட்டிற்சென்று உறைதல் அருமையாத லின் ஆயினும் என்று சிறப்பும்மை கொடுக்கப்பட்டது. வழிப்பட லென்பது எதுகை நோக்கி இயல்பாயிற்று. வழிபடல் - தலைவன் இருக்குமிடத்துச் செல்லுதல் (தொல். களவு. 22); வழிபாடு செய்தலுமாம்.

(மேற்.) 1 - 4. *தலைவி நெஞ்சொடு உசாவித் தலைவனைச் சேர்ந்தது* (தொல். பொருளியல், 9, இளம்.)

மு. *தலைவி தலைவன் உள்ள இடத்திற்குச் செல்லுதலும் பொருளாக வருதல்* (தொல். களவு. 22, இளம்.); *தலைவன் நாட்டிற்குச் செல்வா மென்று தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியது* (தொல். களவு. 22, ந.)

(ஒப்பு.) 1. **கோடரிலங்குவனை** : குறுந். 31 : 5, 365 : 1. **சங்கை அறுத்து வனைசெய்தல்** : "கடற்கோடு செறிந்த வலைவார் முன்கை", "கடற்கோ டறுத்த வரம்போ லுவ்வளை", "கோடு ரெல்வளை" (ஐங். 191 : 1, 194 : 1, 196 : 1.) **வளை நெகிழ்தல்** : குறுந். 31 : 5, 50 : 4, 125 : 1, 211 : 1, 216 : 3, 289 : 2, 316 : 1, 365 : 1, 371 : 1; நற். 26 : 1, 56 : 4 ; ஐங். 27 : 3, 54 : 3, 136 : 2, 140 : 3 ; கலி. 3 : 3 ; குறள், 1157 ; கைந்நிலை, 55.

2. **கண் துயிலாமை** ; குறுந். 6 : 4, ஒப்பு. **துஞ்சாமையும் கலுழ்தலும்** : (குறுந். 357 : 1-2, 365 : 2); "பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க" (கலி. 16 : 1.)

3. **உய்தல்** : "ஒருவே மாகிய புன்மைநா முயற்கே", "தெருமர லுயவே" (குறுந். 57 : 6, 250 ; 6); "அன்னை சொல்லு முய்கம்" (அகநா. 65 : 2.) 3 - 4. "எழுவினி நெஞ்சஞ் செல்கம்" (புறநா. 207 : 1); "உய்ய வேண்டினெழு போத நெஞ்சே" (தே. திருஞா. திருப்புகலூர்); "நீயிருந்திங் கென்போது நெஞ்சமே" (திருவாரூர் மும்மணிக். 23); "உருகி நெஞ்சே நினைந்திங் கிருந்தென் றெழுதும்மெழு" (திவ். பெரியதிரு. 9. 3 : 2.)

5. **வடுகர் முனை** : "கல்லா நீண்மொழிக் கதநாய் வடுகர், வல்லா ணரு முனை" (அகநா. 107 : 11-2.)

6. **பல் வேல்** : "பல்வே லெழினி" (குறுந். 80 : 5); "பல்வேற்றிரை யற் படர்குவி ராயின்" (பெரும்பாண். 37); "பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரின்" (குறிஞ்சிப். 129.) **கட்டி** : "துன்னருங் கடுங்கிறற் கங்கன் கட்டி", "போரடு தானைக்கட்டி" (அகநா. 44 : 8, 226 : 16.)

7. **மொழி பெயர் தேஎம்** : ஐங். 321 : 4; அகநா. 67 : 12, 211 : 8. 5-7. **வடுகர் முனையதாகிய நாடு** : "கடுங்குரற் பம்பைக் கதநாய் வடுகர், நெடும் பெருங் குன்றம்" (நற். 212 : 5-6); "வேங்கடத் தும்பர்.....இகன் முனைத் தழீஇய வேறுடைப் பெருநிரை, நினைமுகிர் நறவி னுட்பலி கொடுக்கும், வானிணப் புகவின் வடுகர் தேஎத்து", "புடையலங் கழற்காற் புல்லி குன் றத்து, நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத், தொடையமை பகழித்

துவன்றுநிலே வடுகர், பிழியார் மகிழ்ர் கலிசிறந் தார்க்கும், மொழிடெப்ர் தேளம்" (அகநா. 213 : 3-8, 295 : 13 - 7.)

மு. "நாஞ்செலி னெவனே தோழி.....குன்றுவிலங் கியவினவர் சென்ற நாட்டே" (அகநா. 309 : 12 - 7.) (கக)

தலைவி கூற்று

['தலைவி தலைவனது பிரிவை ஆற்றும் வன்மையிலளாயினுள்' என்று கவலையுற்ற தோழி கேட்குமாறு, "தலைவர் சென்ற வழியின் கொடுமையை நினைந்தே யான் வருந்துகின்றேனென்பதை உணராமல் இவ்வூர், பிரிவை ஆற்றேனுயினேனென்று வேறொன்றைக் கூறுகின்றது; இஃது என்ன பேதைமை!" என்று தலைவி சொல்லியது.]

கஉ. எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்
கவலைத் தென்பவவர் சென்ற வாறே
5. அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ் வழுங்க லூரே.

எ - து. ஆற்றுளெனைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது. ஒதலாந்தையார்.

(பி - ம்.) 2 'உலைக்கனலன்ன' 4 'கவலைத்தவர் தேர் சென்ற', 'தேர் சென்ற' 6 'நொதுமலர்க்கழறும்', 'நொதுமற்கலுழும்'

(ப - ரை.) அவர் சென்ற ஆறு - தலைவர்போன வழியானது, எறும்பி அளையின் - எறும்பின் வளைகளைப்போல, குறு பல் சுனைய - குறுமையையுடைய பலவாகிய சுனையை உடைய, உலை கல் அன்ன - கொல்லனது உலைக்களத்துள்ள பட்டடைக் கல்லைப் போன்ற வெம்மையையுடைய, பாறை ஏறி - பாறையின்மேல் ஏறி, கொடு வில் எயினர் - வளைந்த வில்லையுடைய எயினச் சாதியினர், பகழி மாய்க்கும் - தம் அம்புகளைத் தீட்டுதற்கு இடமாகிய, கவலைத்து - கவர்த்த வழிகளை உடையது, என்ப - என்று கண்டோர் கூறுவர். இ அழுங்கல் ஊர் - இந்த ஆரவாரத்தையுடைய ஊரானது, அது அவலம் கொள்ளாது - அவ்வழியின் கொடுமையைப்பற்றித் துயரத்தை உட்கொள்ளாமல், நொதுமல் கழறும் - அயற்றன்மையையுடைய சொற்களைச் சாறி இடித்துரைக்கும்.

(முடிபு) அவர் சென்ற ஆறு கவலைத்து என்ப; ஊர் அவலங் கொள்ளாது கழறும்.

(கருத்து) தலைவர் சென்ற வழி மிக்க கொடுமையையுடையது; அதனைத் தோழி நினைந்திலள்.

(வி - ரை.) எறும்பி-எறும்பு; எறும்பை எறும்பியென வழங்கும் மரபு திருவெறும்பியூரென்னும் சிவதலத்தின் பெயராலும் அறியப்படும்; "எறும்பி யூர்மலை யானெங்க ளீசனே" (தேவா. திருநா.) அளை - வளை; எறும்பின் வளையை இங்ஙனம் கூறும் வழக்கு, "நுண்பல் லெறும்பு கொண்டளைச் செறித்த, வித்தா வல்சி" (அகநா. 377 : 3 - 4) என்பதனாலும் பெறப்படும். சுனைகள் குறுமையும் பன்மையும் உடையன வென்பதை, "மீன்க ணற்ற தன் சுனையே" (புறநா. 109 : 10) என்பதற்கு, 'மீன்களென்றது சுனையினது பன்மையும் .....சிறுமையும்' என்றெழுதப்பட்டுள்ள விசேடவுரையும் வலியுறுத்தும். குறும்பல் சுனை - ஒன்றற் கொன்று அண்ணிதாய்ப் பலவாகிய சுனை யென்றலுமாம் (பட். 38, ந) சுனைய பாறை, அன்னபாறையென இயைக்க. உலக்கல்லை உவமை கூறியது வெம்மைக்கு; "ஞாயிறு காயும் வெவ்வறை" (குறுந். 58 : 3) என்பது பாறையின் வெம்மையைப் புலப்படுத்தல் காண்க கொடு வில் எயினர் - வழிப்போவாரைக் கொல்லுதற்குக் காரணமாகிய கொடுமையையுடைய வில்லையுடைய எயினர் எனலுமாம்; 'கொடுவில் எயினர் - கொடிய வில்லையுடைய வேடர்' (பட். 266, ந.) மாய்த்தல் - தீட்டுதல்; "மாய்த்த போல" (அகநா. 5 : 12) என்பதன் உரையைப்பார்க்க. மற்று: அசை. நொதுமற்கழறலென்றது வழியின் கொடுமையை அறிந்து வருந்து தலை உணராமல், பிரிவினால் ஆற்றுகிருந்தாளென்று தோழி சொல்வதை; நொதுமல் - அயல் அழுங்கல் - தடைசெய்தலுமாம். ஊரென்றது தோழியை; தோழியை ஊரென்றல் மரபு; "யானென வன் செய்கோ பொய்க்குமிவ் வூரே" (ஐங். 154) என்பதன் உரையில், 'பொய்க்குமிவ் வூரென்றது, தலைமகன் குணங்கூறுகின்ற தோழியை நோக்கியெனக் கொள்க' என்றுள்ள பகுதியினாலும், "இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே, ஏதில ரென்னுமிவ் வூர்" (குறள், 1129) என்பதன் விசேடவுரையில், 'தன் கருத்தறியாமைபற்றிப் புலந்து சொல்லுகின்றாளாதலின் தோழியை வேறுபடுத்து இவ்வூரென்றாள்' (பரிமேல்) என்றுள்ள பகுதியினாலும் இதனையறியலாம். வழியினது வெம்மையும் ஆறலைகள்வரால் வரும் அச்சமும் வழியினது மயக்கமும் அவலத்துக்கு ஏதுவாயின.

(மேற்.) 1-2. இயற்சீர்வெள்ளடி ஆசிரியம் தொடுக்குங்கால் பா ஓன் ருகத் தொடுக்கப்படும் (தொல். செய். 162, பேர்.); இயற்சீர் வெள்ளடி ஆசிரியத்தில் விரவிவரும் (தொல். செப்.. 112, இளம், 62, பேர், ஈ; இ. வி. 745)

மு. தலைவன் பிரிந்துழி வழியருமை பிறர் கூறக்கேட்டுத் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ஈ); தலைவி கொடுஞ்சொற் சொல்லியது (ரம்பி. 170); இயற்சீர்வெள்ளடி ஆசிரியத்தில் விரவி வரும் (யா. வி. 29; யா. கா. ஒழிபு. 4.)

(ஒப்பு.) 1. சுனையின் குறுமை: "மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன, இட்டுவாய்ச் சுனைய" (குறுந். 193: 1 - 2)

1 - 2. சுனையை யுடைய பாறை: "பிடிதுஞ்சு வன்ன வறைமேல நுங் ஙின், தடிகண் புரையுங் குறுஞ்சுனை" (கலி. 108: 40 - 41); "பாறை நெடுஞ்சுனை" (அகநா. 2: 4.)

3. கொடுவில் எயினர்: "மாரி வளம்பெரு வில்லே குழவர், கூற்றுறழ் முன்பொடு கொடுவி லேந்கி" (சிலப். 11: 210 - 11.)

4. ஆறு கவலைத்து: "கவலை யாத்த வவல நீளிடை" (குறுந். 224: 1.)

6. அழுங்கலூர்: குறுந். 140: 5, 289: 8.

மு. "மண்டுந் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு வன்புலியும்
செண்டுங் கொடுத்தகல் செம்பியர் போலன்பர் சென்றுழிமுள்
இண்டுங் கழையும் பயிலும்வெங் கானியல் கேட்டுமிந்நோய்
கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற் கழறனன்றே" (தஞ்சை. [266.) (கஉ)

தலைவி கூற்று

[பாங்கியிற் கூட்டத்தின்பின் பிரிவாற்றுமல் வருந்திய தன் வேறுபாடுகளை உணர்ந்து கவன்ற தோழியை நோக்கி, "தலைவரது பிரிவினால் எனது உள்ளம் நோய் கொண்டது; கண்களும் அழ கிழந்து பசலையை அடைந்தன" என்று தலைவி கூறி ஆற்றுமைக் குக் காரணத்தைப் புலப்படுத்தியது.]

கங. மாசறக் கழீஇய யானை போலப்
பெரும்பெய லுழந்த விரும்பிணர்த் துறுகல்
பைத லொருதலைச் சேக்கு நாடன்
நோய்தந் தனனே தோழி
5. பசலை யார்ந்தன குவளையங் கண்ணே.

எ - து. தலைவன் தோழியிற் கூட்டங்கூடி (பி - ம். கூட்டி) ஆற்றும் வகையான் ஆற்றுவித்துப் பிரிய, வேறுபட்ட கிழத்தி தோழிக்கு உரைத்தது.

[தோழியிற் கூட்டம் - தோழியை முன்னிட்டுக்கொண்டு தலை வியைக் கூடியது. ஆற்றும் வகையான் ஆற்றுவித்தல்: பெருநயப் புரைத்தும், பிரியேனென்றும், பிரிந்து மீள்வேனென்றும், இட மணித் தென்றும் கூறி ஆற்றுவித்தல்.]

கபிலர்.

(பி - ம்.) 1 'கெழீஇய' 3 'லொருத்தலைச்', 'லொருதலைசேக்கு', 5 'யார்ந்தகங்குவளை', 'யான்றனங்குவளை'

(ப - ரை.) தோழி—, மாசு அற கழீஇய - மேலேயுள்ள புழுதி முற்ற நீங்கும்படி பாகனற் கழுவப்பட்ட, யானை போல - யானை யைப் போல, பெரு பெயல்உழந்த - பெரிய மழையை ஏற்றுத் தாய்மையுற்ற, இரு பிணர் துறுகல் - பெரிய சருச்சரையையுடைய துறு கல்லானது, பைதல் ஒரு தலை - பசுமையையுடைய ஓரிடத்தில், சேக்கும் நாடன் - தங்குகின்ற மலைநாட்டையுடைய தலைவன், நோய் தந்தனன் - காம நோயைத் தந்தான்; அதனால், குவளை அம் கண் - முன்பு குவளைமலரைப் போன்றிருந்த என்னுடைய அழ கிய கண்கள், பசலை ஆர்ந்தன - இப்பொழுது பசலை நிறம் நிரம் பப் பெற்றன.

(முடிபு) தோழி, நாடன் நோய் தந்தனன்; அதனால் என் கண்கள் பசலையார்ந்தன.

(கருத்து.) தலைவன் பிரிவினால் வேறுபாடுகள் உண்டாயின.

(வி - ரை) மாசு என்றது புழுதியை; யானை தன் தலையி லும் உடம்பிலும் தானே புழுதியை வாரி வீசிக்கொள்ளும் இயல் பினதென்பது இங்கே அறிதற்குரியது; "நீருடிய களிறு" (பட். 49) தன்பாலுள்ள புழுதி முற்றும் நீங்கும்படி கழுவப்பட்ட யானையைப் போலத் துறுகல்லிலுள்ள பல மாசுகளும் அறக்கழுவ வேண்டுதலின் பெரும்பெயல் என்றாள்; இங்கே கூறப்பட்ட இவ்வுவமை இந்நூலின் 279-ஆம் செய்யுளில், "மழைகெழு மறந்த மாயிருந் துறுகல், துகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்" என்று எதிர்மறை முகத்தால் ஆளப் பட்டிருத்தல் காண்க. இருமை - கருமையுமாம். பிணர் - நால்வகை ஊறுகளுள் ஒன்று; இதனை ஜர்ஜ்ஜரா வென்பர் வடமொழியாளர்; அது தமிழில் சருச்சரையென வழங்கும்; இக்காலத்தில் சுரசுரப்பென்பதும் அது. துறுகல் - உருண்டைக்கல்; பொற்றையென வழங்கும்; நெருங்கிய மலையென்பர் நச்சினார்க்கினியர். பைதல் - ஈரமுமாம். நாடன் - குறிஞ்சிநிலத்தலைவன்; குறுந். 3 : 4, வி - ரை. நோயென்றது பிரிவாற்றுமையால் மிக்க காமநோயை (கலி.

17 : 9, ந.) அஃது உடம்பின் மெலிவுக்குக் காரணமாவது (சிலப். 16: 79, அரும்பத.) பிரிவாற்றுத மகளிருக்குக் கண் பசத்தல் இயல்பு குவளையங்கண் என்றது பசலையார்வதற்கு முன் இருந்த நிலையைப் புலப்படுத்தியபடி; கழிந்ததற் கிரங்குதலால் தற்புகழ்ச்சியாகாது.

துறுகல் தன் இயல்பினை மறைக்கும் மாசு நீங்கப் பெற்ற நாடன் அவ்வியல்பிற்கு மாறுக என் கண்களின் இயல்பை மறைக்கும் பசலையை வளரச் செய்தனனென்பது குறிப்பு.

(மேற்.) மு. பாங்கி தலைவனை இயற்பழித்தது (தொல். களவு. 23, இளம், ந)

(ஒப்பு.) 2. **மழை துறுகல்லைக் கழுவுதல்**: "வான்கண் கழீஇய வகலை" (குறிஞ்சிப். 98)

1 - 2. **துறுகல்லிற்கு யானை உவமை**: குறுந். 279: 5-6; "கூழை யிரும்பிடிக் கைகரந்தன்ன, கேழிருந் துறுகல்", "பொருத யானைப் புகர் முகங் கடுப்ப, மன்றத்துறுகன் மீமிசைப் பலவுடன், ஒண்செங் காந்தளவிழு நாடன்" (குறுந். 111: 4-5, 284: 1-3); "யானை.....தூறிவர் துறுகற் போலப் போர் வேட்டு, வேறுபல் பூளையோ டுழிஞை சூடி" (பட். 231 - 5); "காழ்மண் டெஃகங் களிற்றுமுகம் பாய்ந்தென, ஊழ்மல சொழிமுகை யுயர் முகந் தோபத், துறுகல்சுற்றிய சோலை வாழை", "களிறுமலைக் தன்ன கண்கூடு துறுகல்" (மலைபடு. 129 - 31, 384): "குறுங்கா லிற்றிப் புன்றலை செடுவீழ், இரும்பிணர்த் துறுகற் றீண்டி வளிபொரப், பெருங்கை யானை நிவப்பிற் றூங்கும்" (அகநா. 57: 6 - 8.)

4 **தலைவியின் நோய்**: (குறுந். 224: 3, 400: 7); "ஆற்றனே யடவிவ ணணிவாட", "நோய்மலி நெஞ்சமொ டினைய ரேழி", "நோயட வருந்தியும்" (கலி. 17: 9, 27: 22, 44: 14.)

தலைவன் நோய் தருதல்: "உள்ளுருஞ் சிந்தைநோ யெனக்கே தந்து" (திவ். திருநெடுந்தாண்டகம், 23.)

5. **கண் பசலையார்தல்**: "காமங் கொல்லிவள் கண்பசந் ததுவே", "நெய்த லுண்கண் பைதல் கூர", "கண்ணுந் தோளுந் தண்ணறுங் கதுப்பும், பழநல மிழந்து பசலை பாய" (நற். 35: 12, 113: 7, 219: 1 - 2); "பூப்போ லுண்கண் பொன்போர்த் தனவே", "உண்கண் பசப்ப தெவன்கொ லன்னாய்", "ஏதி லாளர்க்குப் பசந்தவென் கண்ணே", "கய லெனக் கருதிய வுண்கண், பயலைக் கொலகா வாகுதல் பெறினே", "நயந் தோ ருண்கண் பயந்துபனி மல்க", "பசப்பணிந் தனவான் மகிழ்நவென் கண்ணே", "என்செயப் பசக்குந் தோழியென் கண்ணே", "பல்லித ழுண்கண் பசத்தன்மற் றெவனே", "பயந்தன மாதோ நயந்தோள் கண்ணே", "பனிமலர் நெடுங்கண் பசலை பாய", 'கொன்றைப் பூவிற் பசந்த வுண்கண்" (ஐங். 16: 4, 21: 4, 34: 4, 36: 4-5. 37: 2, 45;

4, 169 : 5, 170 : 4, 264 : 4, 477 : 1, 500 : 1); "பலவிதழ் மலருண் கண் பசப்ப", "பொன்னெனப் பசந்தகண் போதெழி னலஞ்செல" (கலி. 45 : 11, 77 : 12); "கண்பசந்து" (அகநா. 146 : 11); "முயக்கி டைத்தண்வளி போழப் பயப்புற்ற, பேதை பெருமழைக் கண்", "கண் ணின் பசப்போ" (குறள், 1239 - 40); சீவக. 231.

4 - 5. **தலைவனுல் நோயும் பசலையும் உண்டாதல்:** "ஆய்மல ருண்கண் பசப்பச், சேய்மலை நாடன் செய்த நோயே" (ஐங். 242 : 4-5); "அரிமத ருண்கண் பசப்பநோய் செய்யும, பெருமான்" (கலி. 82 : 20 - 21); "சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு, நோயும் பசலையுந் தந்து" (குறள், 1183); "பயப்பூரச், சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தாளே" (தே. திருஞா. திருச்செங்காட்டங்குடி.) (கஉ)

தலைவன் கூற்று

[பாங்கியினுற் குறைமறுக்கப்பட்ட தலைவன், "என்னைத் துன்புறுத்தியவள் இன்னுளென்பதை யாவரும் அறிந்து கூறும் படி மடன்மாவூர்ந்து மறுகிற் செல்வேன்" என்று அப்பாங்கி கேட்பக் கூறியது.]

கச. அமிழ்துபொதி செந்நா வஞ்ச வந்த
வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழி
[யரிவையைப்
பெறுகதில் லம்ம யானே பெற்றுங்
கறிகதில் லம்மவிவ் வூரே மறுகில்
5. நல்லோள் கணவ னிவனெனப்
பல்லோர் கூறயா நாணுகஞ் சிறிதே.

எ - து. "மடன்மா கூறு மிடனுமா ருண்டே" (தொல். களவு. 11) என்பதனுல் தோழி குறைமறுத்துழித் தலைமகன், மடலேறுவலென் பதுபடச் சொல்லியது.

[குறை - காரியம்; தலைவனைத் தலைவி ஏற்றுக் கொள்ளச் செய்தல். பட - குறிப்பினுற் புலப்பட.]

தொல்கபிலர்.

(பி - ம்.) 1 'அமிர்துபொதி,' 'வஞ்சி' 4-5 'மறுகு நல்லோர்' 6 'கூறுகயாஅ நாணுகஞ்', 'கூறயாநண்ணுகஞ்'

(ப - ரை.) அமிழ்து பொதி - அமுதத்தின் இனிமை நிரம்பிய, செ நா - செவ்விய நாவானது, அஞ்ச - அஞ்சும்படி, வந்த - மூளைத்த, வார்ந்து இலங்கு - நேராகி விளங்குகின்ற, வை எயிறு -

கூர்மையாகிய பற்களையும், சின்மொழி - சிலவாகிய சொற்களையும் உடைய, அரிவையை - தலைவியை, யான் பெறுகதில் - நான் மடன்மா ஏறுதலாற் பெறுவேனாக; பெற்றுங்கு - பெற்றபின்பு, இ ஊர் - இந்த ஊரிலுள்ளார், அறிகதில் - அறிவாராக; பல்லோர் - பலர், மறுகில் - வீதியில், நல்லோள் கணவன் இவன் என கூற - இந்நல்லாளுடைய தலைவன் இவனென்று சொல்லாநிற்க, யாம் சிறிது நாணுகம் - நாம் சிறிது நாணுவேம்!

(முடிபு) யான் பெறுக; ஊர் அறிக; பல்லோர் கூற யாம் நாணுகம்!

(கருத்து) யான் மடலேறுவேன்.

(வி - ரை.) அமிழ்தென்றது எயிற்றில் ஊறிய நீரை. அமிழ்து பொதி எயிறு, வந்த எயிறு எனக்கூட்டுக. பற்கள் கூரியனவாதலின் நா அஞ்சியது; அஞ்சினமையின் அது சிலமொழி கூறியது. அரிவையென்றது பருவங்குறியாமற் பெண்ணென்னுந் துணையாய் நின்றது, "செறியெயிற் றரிவை" (குறுந். 2 : 4) என்புழிப்போல. தில் விழைவுப்பொருளில் வந்தது. சின்மொழி - சிலவாகியமொழி (கலி. 29 : 10, ந.); மென்மொழி (பழ. 226, உரை) என்றும், மெத்தென்றமொழி (புறநா. 166 : 16, உரை) என்றும் கூறுவார் உளர். யாமென்றது தலைவியையும் உளப்படுத்தி மடலேறத் தொடங்குங்போது நாணத்தை முற்ற நீத்தவனதலின், 'சிறிது நாணுகம்' என்றான்.

தலைவன் தன்னுடைய உருவத்தையும் தலைவியினது உருவத்தையும் எழுதியமைத்த படத்தைக் கையிலேந்தி மடன்மாவிலேறி மறுகிற் செல்வானதலின், அந்நிலை, இன்னாள் கணவன் இவனென்று ஊரினர் அறிதற்கு ஏதுவாயிற்று

(மேற்.) 2. வார்தலென்னும் உரிச்சொல் நேர்தலென்னும் பொருளில் வந்தது (தொல். உரி. 23, தெய்வச். 19, ந; இ. வி. 284.)

3. விழைவின் தில் தன்மைபிடத்திற்குரியது (தொல். இடை. 12, இளம்.); ககர உயிர்மெய், வியங்கோள் விகுதி முற்று விகுதியாகவரும் (நன். 337, மயிலை, 338, சங்.; இ. வி. 239.) 2 - 3. தில்லென்னும் இடைச்சொல் விழைவின்கண் வந்தது (தொல். இடை. 5, இளம், சே, கல், தெய்வச், ந; நன். 430, மயிலை, 431, சங்.)

3 - 4. தில்லென்னும் இடைச்சொல் காலம் பற்றி வந்தது (தொல். இடை. 5, இளம், சே, கல்; நன். 430, மயிலை, 431, சங்.; இ. வி. 264.) 2 - 4. தில் விழைவின்கண் வந்தது (இ. வி. 264.)

(ஒப்பு.) 2. **வார்ந்திலங்கு வையெயிறு**: "வையெயிற்று, வார்ந்த வாயர்" (மதுரைக். 413 - 4); "வாஅர்ந் திலங்கு வாலெயிற்று" (நற். 198 : 7.)

வையெயிறு : நற். 26 : 7; அகநா. 325 : 11. **சின்மொழி** : "சிலமெல் லியவே கிளவி" (குறுந். 70 : 4); "சின்மொழித் துவர்வாய்" (நற். 190 : 9); "சின்மொழி" (கலி. 29 : 10, 125 : 16, 132 : 13); "முள்ளெயிற் றுச், சின்மொழி யரிவை" (அகநா. 361 : 13 - 4); "சிலசொல்லிற் பல கூந்தனின், நிலைக்கொத்தநின் றுணைத்துணைவியர்" (புறநா. 166 : 16 - 7); "சின்மொழியார்" (நாலடி. 362); "முள்ளெயி றிலங்கச் செவ்வாய் திறந்து, சில்லென் கிளவி மெல்லென மிழற்றி" (பெரும். 4. 5 : 16 - 7); "சிற்றம் பலமன்ன சின்மொழியை" (திருச்சிற். 343); "திறமலி சின் மொழிச் செந்துவர் வாயினே" (திருவாரூர் மும்மணிக். 24); "சின்மொழி" (திவ். திருவிருத்தம், 19 - 20.)

1 - 2. **அழிந்து பொதி யெயிறு** : "முள்ளெயிற், றமிழ்த மூறுஞ் செவ்வாய்" (குறுந். 286 : 1-2); "முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநிரை", "ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்" (கலி. 4 : 13, 20 : 11); "கூரெயிற், றமிழ்த மூறுஞ் செவ்வாய்" (அகநா. 335 : 24 - 5); "முத்துக்கூர்த் தன்ன முள்ளெயிற் றமுதம்" (மணி. 18 : 72); "அமர ராக்கிய வமிழ் தெனக் கினையோள், தன்முளை யெயிற்றுநீர் தானென வயின்றும்" (பெருங். 3. 14 : 162 - 3); "முள்வா யெயிற்றூறமுதம்" (சீவக. 491.) **நா எயிற்றை அஞ்சுதலும் சில மொழிதலும்** : "நல்கி னைவஞ்சு முள்ளெயிற்று மகளிர்" (புறநா. 361 : 16); "கூரெயிறு நாப்போழ்த லஞ்சியஞ்சி, உழன்மாலைத் தீங்கிளவி யொன்றிரண்டு தான்மிழற்று மொருநாட் காறும்" (சீவக. 1353.)

3. **பெறுகதில்லம்ம** : "பெறுகதில் லம்மவிவ் வூருமோர் பெற்றி" (சிலப். 24 : பாட்டுமடை.)

4 - 5. **மறுகில் மடலேறுதல்** : குறுந். 17 : 1 - 3, ஒப்பு.

4 - 6. **மடலேறும்போது தலைவனுக்குரிய தலைமையை ஊரினர் அறிதல்** : "இன்னள் செய்த திதுவென முன்னின், றவள்பழி நுவலு மிவ்வூர்" (குறுந். 173 : 5 - 6.) (கச)

செவிலித்தாய் கூற்று

[தலைவி தமரைப் பிரிந்து தலைவனுடன் சென்றதைத் தோழி யால் அறிந்த செவிலி, "நம் மகளும் அவள் அன்பனும் பாலையைக் கடந்து சென்று இதற்குள் மணம் புரிந்து கொண்டிருப்பர்; அதனால் அவர்களுடைய நட்பு உலகறிய உறுதிபெற்றதாகும்" என்று நற்றாய்க்குக் கூறியது.]

கடு. பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்

5. சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.

எ - து. உடன்போயின பின்றைத் தோழி செவிலிக்கு அறத் தொடு நின்றாள்; நிற்பச் செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.

[உடன் போயின பின்றை - தலைவி தன் தமரைப்பிரிந்து தலை வனுடன் போனபின்பு. அறத்தொடு நிற்றல் - தலைவி இன்ன தலை வனுடன் நட்புப் பூண்டு சென்றாளென்ற உண்மையைக் கூறி அத்தலைவியின் கற்புக்குச் சார்பாக நிற்றல். நற்றாய் - தலைவியை ஈன்ற தாய்.]

ஔவையார்.

(பி - ம்.) 3 'நல்லூர்க்' 6 'தொடுவளை முன்கை நம்

(ப - ரை.) தோழி—, ஆய்கழல் - அழகிய வீரக்கழலையும், செ இலை - செம்மையாகிய இலையையுடைய, வெள் வேல் - வெள் ளிய வேலையும் கொண்ட, விடலையொடு - தலைவனோடு, தொகு வளை முன் கை - பலவாகத்தொக்க வளைகளைப்பூண்ட முன் கை களையுடைய, மடந்தை நட்பு - நின்மகள் செய்த நட்பானது, தொல் முது ஆலத்து பொதியில் - மிகப்பழைய ஆலமரத்தடியின் கண் உள்ள பொதுவிடத்தில், இறைகொள்பு தோன்றிய - தங்கு தலைக்கொண்டு தோன்றிய, நாலூர் கோசர் நன் மொழி போல - நான்கு ஊரிலுள்ள கோசரது நன்மையையுடைய மொழி உண் மையாவதைப் போல, பறை பட - முரசு முழங்கவும், பணிலம் ஆர்ப்ப - சங்கு ஒலிக்கவும், மணம் செய்தலால், வாய் ஆகின்று - உண்மை ஆகியது.

(முடிபு) விடலையொடு மடந்தை நட்பு வாயாகின்று.

(கருத்து) தலைவி தன் தலைவனுடன் சென்றனள்.

(வி - ரை.) பறையும் சங்கும் மங்கலநாளில் முழங்குவன: "மத்தளங் கொட்ட வரிசங்க நின்றூத, முத்துடைத் தாம நிரை தாழ்ந்த பந்தற்கீழ், மைத்துண னம்பி மதுசூதன் வந்தென்னைக், கைத்தலம் பற்றக் கனைக்கண்டேன் ரோழிநான்" (திவ். நாச்சியார். 6: 6) என்பதிலும் மணத்தில் இவ்விரண்டும் கூறப்படுதல் காண்க; பறையென்றது இங்கே தோற்கருவிகளைக் குறித்து நின்றது; "பல்லாரறியப் பறையறைந்து நாட்கேட்டுக், கல் யாணஞ் செய்து" (நாலடி. 86) என்புழிப்போல. பொதியில்= பொது இல் - அம்பலம் (முருகு. 226, ந.) பலர் கூடியிருத்தற்

கேறற கிளைப்பரப்பும் நிழலுமுடைமையின் ஆலமரத்தின் அடியிலே அவைகூடுதல் பண்டை வழக்கமென்று தெரிகின்றது. "வெல்போ ரிராம னருமறைக் கவித்த, பல்வீ ழாலம் போல" (அகநா. 70 : 15 - 6) என்பதனாலும் அதன் உரையாலும் இதனை அறியலாகும். கோசர் : மோகூர்ப் பழையனுடைய நியாய சபையில் இருந்த ஒருவகை வீரர்; இவர் நான்கு பிரிவினர்களென்று தெரிகின்றது (மதுரைக். 508-9, ந.); நாலூர்-ஒரு நாமம். விடலை - பாலைத்திணைக் குரிய தலைவன் பெயர்.

கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்வதுண்டாதலின், உடன் போக்கின்பின் இருவரும் மணம்புரிந்துகொள்வதனால் மடந்தையினது நட்பானது உலகறிய உண்மையாகுமென்றாள் செவிலி.

(மேற்.) மு. தலைவி தலைவனுடன் சென்றமையறிந்து தோழியோடு பொருந்திக் கற்பின் ஆக்கத்து நிற்றற்கண் செவிலிக்குக் கூற்று நிகழும் (தொல். களவு. 25, இளம்.); 'இதனுள விடலையொடு மடந்தை நட்பு, பறை படப் பணில மார்ப்ப இறைகொண்டு நாலூர்க் கோசர் நன்மொழி போல வாயாயிற்றெனச் செவிலி கற்றுய்க்குக் கூறினமையானும், விடலையெனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறினமையானும் கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்ந்தவாறு' (தொல் கற்பு. 2, இளம், ந; இ. வி. 528); உடன்போயினபின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடுகின்றது (தொல். களவு. 24. ந.); செவிலி நற்றாய்க்கு அறத்தொடுகின்றது (நம்பி. 185.)

(ஒப்பு.) 3. **கோசர்** : குறுந. 73 : 4; புறநா. 169 : 9, அடிக். 2-3. **ஆலம் பொதியிற் கோசர்** : "தூணெகா லன்ன புனைதேர்க் கோசர், தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்" (அகநா. 251 : 7-8); "வலம்புரி, கோச ரவைக்களத் தானும்" (புறநா. 283 : 6.)

4. **ஆகின்று** : குறுந். 166 : 4, 248 : 3, 258 : 2, 271 : 5, 394 : 7. 3-4. **கோசர்மொழி உண்மையாதல்** : "வாய்மொழி நிலேஇய சேண்விளங்கு கல்லிசை, வளங்கெழு கோசர்" (அகநா. 205 : 8-9.)

5. **சேயிலை வெள்வேல்** : "சேயிலை வெள்வேல், மதியுடம் பட்ட மையணற் காளை" (அகநா. 221 : 5-6.) **இலைவேல்** : "திருந்திலை நெடுவேல்" (புறநா. 180 : 13.) 4-5. **கழல்விடலை** : "வில்லோன் காலன கழலே" (குறுந். 7 : 1.) 6. **தொகுவளை** : "தொக்க வளையுமுடைத்தொன்மைக், கோலம்" (திருவா. கோத்தும்பி.) **வளைமுன்கை** : குறுந். 56 : 3. 4-6. **விடலையொடு நட்பு வாயாதல்** : குறுந். 3. (கடு)

தோழி கூற்று

[பொருளீட்டும்பொருட்டுத் தலைவன் பிரிந்த காலத்தில், 'அவர் நம்மை நினைப்பாரோ, நினையாரோ' என்று கருதிக் கவலையுற்ற தலைவியை நோக்கி, "அவர் சென்ற பாலைநிலத்தில் ஆண்பல்லி

பெண்பல்லியை அழைத்தலைக் கேட்டு நின்னை நினைந்து மீண்டு வருவர்" என்று கூறி ஆற்றுவித்தது.]

கூ. உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டு மோசை போலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
5. அங்காற் கள்ளியங் காடிறந் தோரே.

எ – து. பொருள்வயிற் பிரிந்தவிடத்துத் தலைமகள் ஆற்றுமை கண்டு தோழி கூறியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(பி – ம்.) 1 'கானவர்', 'கணவர்தம்' 2 'காண்மார்'

(ப – ரை.) தோழி—, கள்வர் – ஆறலை கள்வர், செப்பம் கொண்மார் – செப்பஞ் செய்யும்பொருட்டு, தம பொன் புனை பகழி – இரும்பினுற் செய்யப்பட்ட தம் அம்பை, உகிர் நுதி – நகநுனியிலே, புரட்டும் ஓசைபோல – புரட்டுதலால் உண்டாகிய ஒலியைப்போல, செ கால் பல்லி – செம்மையாகிய காலையுடைய ஆண்பல்லியானது, தன் துணைபயிரும் – தன் துணையாகிய பெண் பல்லியை அழைத்தற்கு இடமாகிய, அம் கால் – அழகிய அடியையுடைய, கள்ளியங்காடு இறந்தோர்–கள்ளிகளையுடைய பாலையைக் கடந்து பொருள்வயிற் சென்ற தலைவர், உள்ளார்கொல் – நம்மை நினையாரோ?

(முடிபு) தோழி, காடிறந்தோர் உள்ளார்கொல்?

(கருத்து.) தலைவர் விரைவில் வந்துவிடுவர்.

(வி – ரை.) பொன்னென்றது இரும்பை; "பொன்னியற் புனை தோட்டியான்", "விளங்குபொன் னெறிந்த நலங்கிளர் பலகை" (புறநா. 14 : 3, 15 : 12) என்பவற்றையும் அவற்றின் உரைகளையும், "மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு மொன்றுகிப், பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே" (தொல். புறத். 35, ந. மேற்.) என்பதையும் பார்க்க. செப்பமென்றது இங்கே கூர்மையை. பலகாலும் வழிப்போவாரை எய்து மழுங்கியதாதலின் அம்பு செப்பங் கொள்ளவேண்டுவதாயிற்று; "கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்" (குறுந். 12 : 3) என்று முன்னும் கூறப்பட்டது. பயிர்தல் – அழைத்தல்; "புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும், அத்தம்" (குறுந். 79 : 4-5.) அங்காற்கள்ளி யென்றுள், அகில் உண்டா

தலின் ; " அகில்படு கள்ளியங் காடிறந் தோரே " (ஐங். அதிகப் பாட்டு.) பாலைநிலத்திலுள்ள கள்ளியிற் பல்லி இருந்து ஒலிக்கும் செய்தி :

" கள்ளி முள்ளரைப் பொருந்திச் செல்லுமர்க்
குறுவது கூறுஞ் சிறுசெந் நாவின்
மணியோர்த் தன்ன தெண்குரற்
கணிவாய்ப் பல்லிய காடிறந் தோரே " (அகநா. 151 : 12-5)

பல்லி தன் துணையை அழைக்கும் பாலைநிலத்திற் செல்பவர் அது கேட்டு நின்னை நினைந்து மீண்டு வருவர் ; ஆதலின் நீ ஆற்றியிருப்பாயாக வென்பது குறிப்பு.

(ஒப்பு.) 1. உள்ளார்கொல்லோ தோழி : குறுந் 67 : 1, 232 : 1 ; நற். 241 : 1 ; ஐங். 456 : 1, அதிகப்பாடல், : 1-4 ; அகநா. 235 : 2. 4. செற்காற் பல்லி : கலி : 11 : 21 ; சீவக. 1909. (கசு)

தலைவன் கூற்று

[தன்குறையை நிறைவேற்ற உடன்படாத தோழியை நோக்கித்தலைவன், " காமம் மிக்கவர்கள் மடலேறுவார்கள் ; வரைபாய்தல் முதலியவற்றையும் செய்யத் துணிவார்கள் " என்று தான் மடலேற எண்ணியிருத்தலை உலகின்மேல் வைத்துக் கூறியது.]

கஎ. மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே.

எ - து. தோழியிற் கூட்டம் வேண்டிப் பின்னின்ற தலைமகன் தோழி குறைமருமற் கூறியது.

பேரெயின் முறுவலார்.

(பி - ம்.) 4 ' காழ்கொளினே

(ப - ரை.) காமம் காழ்க்கொளின் - காமநோயானது முதிர்வுற்றால், மடலும் - பனை மடலையும், மா என - குதிரையெனக் கொண்டு, ஊர்ப - ஆடவர் அதனை ஊர்வர் ; குவி முகிழ் எருக்கங் கண்ணியும் - குவிந்த அரும்பையுடைய எருக்கம் பூமாலையையும், பூ என - அடையாள மாலையைப்போல, சூடுப - தலையில் அணிந்து கொள்வர் ; மறுகின் ஆர்க்கவும் படுப - வீதியில் பிறர் தம்மைக் கண்டு ஆரவாரிக்கவும் படுவர் ; பிறிதும் ஆகுப - தம் கருத்து

முற்றுதாயின் சாதலுக்குரிய வரைபாய்தல் முதலிய வேறு செய்கை யுடையரும் ஆவர்.

(முடிபு.) காமம் காழ்க்கொளின் மடலும் ஊர்ப ; கண்ணியுஞ் சூடுப ; ஆர்க்கவும் படுப் ; பிறிதும் ஆகுப.

(கருத்து.) நான் மடலூர எண்ணியுள்ளேன்.

(வி - ரை.) தனது உட்கோளை உலகின்மேல் வைத்து, காமம் முற்றப்பெற்றூர் இவை செய்வரென்றமையால் 'யானும் அது செய்வேன்' என்பது குறிப்பாற் புலப்படும்.

காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப்போல ஓர் உருவம் அமைத்து அதன் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டி, தன் உருவத்தையும் தலைவியின் உருவத்தையும் ஒரு படத் தில் எழுதிக் கையிலேந்தி அதன்மேல் யாவரும் அறிய ஊர்ந்துவரு தலை மடலேறுதலென்பர் ; அங்ஙனம் அவன் வருவதைக் கண்ட ஊரினர் படமுதலியவற்றூல், 'இன்னவளுக்கும் இவனுக்கும் நட்பு உண்டு' என்பதை அறிந்து அதனை வெளிப்படக் கூறிப் பழிப்பர்; அது கேட்டுத் தமர் மணம்புரிவிப்பர் (கலி. 141.) மடலேறும் தலைவன் நீறு, எருக்கமாலை, ஆவிரம்பூமாலை முதலியவற்றை அணிந்து வருதல் வழக்கமென்று தெரிகின்றது. மடலேற்றைக் குறித்த வேறு பல செய்திகளைத் திவ்யப் பிரபந்தத்திலுள்ள பெரிய திருமடல், சிறிய திருமடலென்பவற்றின் வியாக்கியானங்களால் உணரலாம்.

மா - குதிரை. மடல் - பனைமடல். மடலும் : உம்மை இழிவு சிறப்பு. 'குவிமுகிழ்' என்றது முதலுக்கேற்ற அடை. கண்ணி தலையிற் புனைவதாதலின் சூடுபவென்றூன். கண்ணியும் : உம்மை இழிவு சிறப்பு. மறுகின்கண் யாவரும் அறியவருதலின், 'மறுகின் ஆர்க்கவும் படுப' என்றூன். ஆர்ப்பவர் : மடலேறிய கோலத்தைக் கண்ட ஊரினர். 'இவன் மடலேறும்படி செய்தவள் இத்தலைவி' என்றும் பிறவாறும் பலர்கூறுதலை ஆர்த்தலென்றூன் ; இதனை,

> "பொன்னே ராவிரைப் புதுமலர் மிடைந்த
> பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப்
> பூண்மணி கறங்க வேறி நாணட்
> டழிபட ருண்ணெய் வழிவழி சிறப்ப
> இன்னள் செய்த திதுவென முன்னின்
> றவள்பழி நுவலு மிவ்வூர்" (குறுந். 173)

என்பதிற் காண்க. ஆர்க்கவும் : உம்மை இறந்தது தழீஇயது. பிறிதும் என்றது காமம் முற்றியவர் செய்வனவற்றுள் மடலேறு

தற்கு இனமாகிய வேறு செயல்களையுடைய நிலையை. அவை வரைபாய்தல் முதலியன ;

"ஆராக் காம மடூஉங்கின் றலைப்ப
இறுவரை வீழ்நர்" (அகநா. 322 : 3 - 4),

"விரையூர் குழலியர் தந்தகிங் தாகுல வெள்ளநிறைக்
கரையூர் பொழுகிளங் காஞையர் தாங்கிழி கைப்பிடித்துத்
தரையூர் தொறும்பெண்ணை மாமட லூர்வர் தவிர்ந்துபின்னும்
வரையூர்வர் தஞ்சையர் கோன்வாணன் மாறையில் வாணுதலே"
(தஞ்சை. 102)

என்பவற்றால் இதனை அறியலாகும்.

காமம் காழ்க்கொளினென்பதற்குக் காமமாகிய கனி பரலை யுடையதாலென்று கொண்டு, பரலென்பதற்குப் பரல்போன்ற தடையென்று உருவக ஆற்றாற் பொருள்செய்து காமம் நிறை வேறுமல் தடைப்படுமாயின் என்று உரைகோடலும் ஒன்று ; "காமத்துக் காழில் கனி" (குறள், 1191) என்றவிடத்துப் பரிமேலழகர் எழுதிய, 'காம நுகர்ச்சியென்னும், பரலில்லாத கனியை' என்ற பதவுரையையும், 'தடையின்றி நுகரப்படுதலின் காழில் கனி யென்று கூறினாள்' என்ற விசேடவுரையையும் காண்க.

(மேற்.) 1. மடலென்பது புறக்காழுடையனவாகிய தாவரங்களுக்கு வரும் (தொல். மரபு. 86, பேர்.)

4. 'பிறிதுமாகுப காமங்காழ்க் கொளினேயென்புழி யானும் அது செய்வேனெனப் பொருள் கொள்ளுதல் குறிப்பு' (இ. கொ. 89.)

மு. பாங்கிக்குத் தலைவன் மடலேறுதலை உலகின்மேல் வைத்து உரைத்தது (இறை. 9 ; நம்பி. 145 ; இ. வி. 509) ; தலைவன் மடலேறுதல் (தொல். களவு. 11, இளம், ந.) ; 'கலக்கமென்பது சொல்லத்தகாதன சொல்லுதல். இன்னும் இதனானே, தலைமகற்காயின் அதனினுங்கு வருவதோர் கலக்கமும் உளதாம் என்றது : அவை மடலூர்தலே, வரைபாய்தலே யென்றற்றொடக்கத்தன.....இதனுள் சாதல் எல்லையாகக் கூறியவாறு கண்டுகொள்க' (தொல். மெய்ப். 22, பேர்.) ; 'மடலேறுவே னென்றது' (தமிழ்நெறி. 17) ; மடற்றிறங்கூறல் (களவியற். 34) ; குறிப்பெச்சம் வந்தது (நன். 359, மயிலை.)

(ஒப்பு.) 1. மடல் மா : "மடன்மா கூறு மிடனுமா ருண்டே" (தொல். களவு. 11) ; "மாவென மதித்து மடலூர்ந் தாங்கு" (நற். 342 : 1) ; "படரும் பணியீன்ற மாவுஞ் சுடரிழை, நல்கியா ணல்கி யவை", "மா மேலே னென்று மடல்புணையா நீந்துவேன்", "மாவென் றுணர்மின் மட லன்று", "மடன்மாமேல், மன்றம் படர்வித் தவள்" (கலி. 138 : 12-3, 139 : 15, 140 : 3, 141 : 9-10.)

2. **குவிமுகிழ் எருக்கு** : "குவியிணை பெருக்கின் றதர்பூங் கண்ணி" (அகநா. 301 : 11) ; "குவியிணர்ப், புல்லிலை யெருக்கம்" (புறநா. 106 : 1-2) ; "குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்" (மணி. 3 : 105) ; "குனிகா யெருக்கின் குவிமுகிழ் விண்டலொடு" (குணநாற்பது.)

1-2. மடலேறுவார் எருக்கங்கண்ணியை அணிதல் : "மடலே காமந் தந்த தலரே, மிடைபூ வெருக்கி னலர்தந் தன்றே" (நற். 152 : 1-2) ; "எருக்கின், பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப, ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்து" (கலி. 139 : 8-10); "ஈசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப், பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே" (திருச்சிற். 74); "எருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை, இடப்பான் மடந்தை நொடிப்போழ்து தணப் பினும், மடலூர் குறிப்புத்தோன்ற" (திருவாரூர் நான்மணி. 24 : 12-4.)

1-3. மடலேறுவார் எருக்கங்கண்ணி சூடி மறுகில் வருதல் : "எருக்கொடு பிணித்தியாத்து, மல்லலூர் மறுகின்க ணிவட்பாடு மிஃதொத்தன்" (கலி. 138 : 9-10) ; "மங்கையர்தங் கண்ணன் மயங்கிரர் வெள்ளெலும்பும், துங்க வெருக்குந் தொடித்தணிந் - தங்கமெலாம், வெந்தேறு சாம்பன் மிக வணிந்து வீதிதொறும், வந்தேறி யூர்வர் மடல்" (இளவித்தெளிவு.)

மடலேறி மறுகில் வருதல் : (குறுந். 14 : 4-6, 173 : 2-6, 182 : 1-5); "பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி, மல்லலூ ராங்கட் படுமே", "வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாட" (கலி. 61 : 22-3, 141 : 22) ; "மடன்மாமேல் நின்றேன் மறுகிடையே நோக்கு" (திணைமா. 16.)

4. **பிறிது** : குறுந். 298 : 8. **காமம் காழ்க்கொளல்** : "நிறையு மூண்டோ காமங் காழ்க்கொளின்" (மணி. 5 : 20) ; "காமத் தியற்கை காழ்ப்பட லுணர்ந்து" (பெருங். 1. 36 : 7) ; "காமங் காழ்கொளீஇ" (சீவக. 1941.) 1-4. **காமநோய் மிகுவதனால் மடலூர்தல்** : "மற்றிந்நோய், பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய், மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி, நிறுக்குவென் போல்வல்யா னீபடு பழியே", "ஓங் கிரும் பெண்ணை மடலூர்ந்தென் னெவ்வநோய், தாங்குத றேற்ரு விடும்பைக் குயிர்ப்பாக, வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது, பாடுவேன் பாய்மா நிறுத்து" (கலி. 58 : 20-23, 139 : 10-13) ; "காம முழந்து வருந்தினர்க் கேம, மடலல்ல தில்லை வலி", "காமுற்ரு ரேறு மடல்" (குறள், 1131, 1133.)

பின் வருவன இச்செய்யுளை அடியொற்றி வந்தவை :—

"மாவென் றுரைத்து மடலேறுப மன்று தோறும்
பூவென் றெருக்கி னிணர்சூடுப புன்மை கொண்டே
பேயென் றெழுந்து பிறரார்ப்பவு நிற்ப காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்க்கொள்வ தாயி னக்கால்"

(வளையாபதி),

"படலே றியமதின் மூன்றுடைப் பஞ்சவன் பாழிவென்ற
அடலே றயின்மன்னன் றெம்மூனே போன்மெலிந் தாடவர்கள்
கடலே றியகழி காமம் பெருகிற் கரும்பனையின்
மடலே றுவர்மற்றுஞ் செய்யா தனவில்லே மாநிலத்தே"

(பாண்டிக்கோவை),

"பொருநெடுந் தானைப்புல் லார்தம்மைப் பூலங்தைப் போர்தொலை
செருநெடுஞ் செஞ்சுடர் வேனெடு மாறன்றென் னுடனேயாய்[த்த
அருநெடுங் காமம் பெருகுவ தாய்விடி னுடவர்கள்
கருநெடும் பெண்ணேச்செங் கேழ்மட லூரக் கருதுவரே" (ஷை.)
(கள)

தோழி கூற்று

[இரவில் வந்து மீளும் தலைவனுக்குத் தோழி, 'தலைவியினது காமம் அவளால் தாங்கற்கு அரியதாதலின் விரைவில் வரைந்து கொள்ளவேண்டும்' என்பதைப் புலப்படுத்தியது.]

கஅ. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார லுட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னேரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
5. உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே.

எ - து. இரவுக்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி எதிர்ப் பட்டு வரைவுகடாயது.

கபிலர்.

(பி - ம்.) 1 'வேலிக் கோடல்பலவின்'

(ப - ரை.) வேரல் வேலி - சிறுமூங்கிலாகிய வாழ்வேலியை யுடைய, வேர் கோள் பலவின் சாரல் நாட - வேரிலே பழக்குலை களையுடைய பலாமரங்கள் செறிந்த பக்கத்தையுடைய மலை நாடனே, சாரல் - பக்கமலையில், சிறு கோடு - பலாமரத்தின் சிறிய கொம்பில், பெரு பழம் தூங்கியாங்கு - பெரிய பழம் தொங்கியது போல, இவள் - இத்தலைவியினது, உயிர் தவ சிறிது - உயிரானது மிகச் சிறுமையையுடையது; காமம் தவ பெரிது - காமநோய் மிகப் பெரிது; அஃது - அந்நிலையை, அறிந்திசினேர் யார் - அறிந்தவர் யார்? ஒருவருமில்லை; செவ்வியை ஆகுமதி - அவளை வரைந்துகொள்ளும் பருவத்தை உடையை யாகுக

(முடிபு) நாட, இவள் உயிர் தவச் சிறிது ; காமம் தவப் பெரிது ; அஃது அறிந்திசினோர் யார்? செவ்வியை ஆகுமதி.

(கருத்து) தலைவியை நீ விரைவில் மணம்புரிந்து கொள்ள வேண்டும்.

(வி - ரை.) வேரல் - சிறுமூங்கில் (குறிஞ்சிப். 71, ந.) மலைச்சாரலில் இயல்பாக வளர்ந்த மூங்கிலே பலாமரத்திற்கு வேலியாயிற்று ; இத்தகைய வேலியை வாழ்வேலி யென்பர் (பெரும்பாண். 126, ந) வேர்க்கோட் பலவு - வேர்ப்பலா ; இது பலாமரத்துள் ஒருசாதி. செவ்வி - தலைவியை வரைந்துகொள்ளும் நிலை. தலைமகனுக்கு உவப்பில்லாத வரைவைப்பற்றிக் கூறப்புகுகின்றாளாதலின் அதற்குப் பாதுகாப்பாக முதலில், 'நீ செவ்விய நலத்தை உடையையாகுக' என்று வாழ்த்தியதுமாம். தன்னினும் மிக்கார்க்கு இன்னுதனவற்றைக் கூறுதற்கு முன் வாழ்த்துதல் மரபு; இதனை, கண்ணகி வழக்குரைக்க வந்து நின்ற நிலையை வாயில்காவலன் பாண்டியனுக்கு அறிவிப்பதற்குமுன், "வாழியெங் கொற்கை வேந்தே வாழி" (சிலப். 20 : 30) என்பது முதலியவற்றால் வாழ்த்திப் பின்கூறும் பகுதியும், சச்சந்தனுக்குக் கட்டியங்காரனது வஞ்சச்செயலைக் கூறப் புக்க வாயில்காவலன், "நீணில மன்ன போற்றி நெடுமுடிக் குருசில் போற்றி, பூணணி மார்ப போற்றி புண்ணிய வேந்தே போற்றி" (சீவக. 264) என்று கூறிய பகுதியும், அப்பகுதிக்கு 'வெய்ய சொல்லைக் கூறுதலையுடைய வாயிலோன், போற்றியென்று கூறி இறைஞ்சி.....கூறினனென்க' (ந) என்றுள்ள உரையும் புலப்படுத்தும். ஆகுமதி : மதி முன்னிலையசைச்சொல். அஃது : செய்யுளாதலின் சுட்டுப்பெயர் முன்வந்தது. 'சாரற் சிறுகோட்டுப் பெரும்பழம்' என்றவிடத்துள்ள சாரல் தலைவிக்குரிய மலையிடத்தது. தாம் அறிந்த பொருள்களை உவமை கூறுதல் உலகத்தார் இயல்பாதலின் இங்கே தோழி, தான் அறிந்த தன்மலைப் பலவின்பழத்தை உவமை கூறினாள் ; "தோழிக் காயினிலம்பெயர்ந் துரையாது" (தொல். உவம. 26) தவ வென் பதனைப் பெரிது என்பதனோடும் கூட்டுக.

இயல்பாகவே பாதுகாப்புடையதாகியும் வேரிற் பழுத்தலின் கீழ் உகும் நிலையிலதாகியும் உள்ள பலாப்பழத்தையே நின்மலையிற் கண்டாயாதலின், நீ சிறுகோட்டிற் பெரும்பழந்தூங்கும் நிலையை உணராயாயினும், அதனை உணர்கவென்று தோழி அறிவுறுத்தினளாயிற்று.

பாதுகாப்பு இலதாகித் தன்னைத் தாங்குதற்குரிய கொம்பும் சிறியதாகித் தானும் பெரியதாகி இருக்கும் பழம் கனிந்து கொம்

பினின்றும் உகும்; அன்றிப் பிறராற் கொள்ளவும்படும்; அது போலத் தன்னை வேற்றுவரைவினின்றும் பாதுகாப்பார் இலளாகி உயிரும் சிறியளாகிய இவளிடத்துக் காமம் பின்னும் கனியின் இவள் உயிர் விடுதலும் நேரும்; அன்றிப் பிறர் வரைந்துகொள்ளவும் முயல்வரென்று உவமையை விரித்துக்கொள்க. பழம் மிகக் கனிந்து உகுவதன்முன் உரிய காலத்தே உரியார் கொள்வதைப் போல இவள் உயிர் நீப்பதற்குள் உரிய பருவத்தே இவளுக் குரியையாகிய நீ வரைந்து கொள்வாயாக என்பது குறிப்பு.

உயிர் சிறுமையையுடையதென்பது அணுவென்று கூறப்படுதலாலும், சிற்றுயிரென்னப்படுதலாலும் பெறப்படும்.

(மேற்.) 3. சின், படர்க்கைக்கண் வரும்; பால் காட்டும் எழுத்தோடு அடுத்து வரும் (தொல். இடை. 27, இளம், சே, தெய்வச், ந.) 4. செய்யுட் கண் இனமுள்ள அடைமொழி வந்தது (நன். 400, மயிலை, 401, சங்; இ. வி. 312.) மு. தோழி தலைவியின் காமம் (காதல்) மிகவுரைத்தல் (தொல். களவு. 23, இளம், ஈ; நம்பி. 166; இ. வி. 523); நிலைமண்டில ஆசிரியப்பா (தொல். செய். 112, இளம்; யா. கா. செய். 8; இ. வி. 734); ஆசிரியப்பா ஐந்தடியான் வந்தது (தொல். செய். 158, பேர்.); 'ஆற்றுளென்பதுபடக் கூறியது' (தமிழ்நெறி. 18); 'இதனுள் அடியெதுகையும் கூழைமோனையும் ஒருஉவெதுகைபும் இணைமுரணும் கடையிணையெதுகையும் பின்முரணும் வந்தனவாயினும், முதல்வந்ததனாற் பெயர்கொடுத்து, அடியெதுகைச் செய்யுளென்று வழங்கப்படும்', 'வேரல்வேலி வேர்க்கோட் பலவினென்னும் பாட்டினுள், சிறுகோட்டுப் பெரும்பழமென்னும் அடியினுள் இணைமுரணும் கடையிணையெதுகையும் வந்தன வாயினும், யாதானுமொன்றினாற் பெயர்கொடுத்து இணைமுரணென்றனும், கடையிணையெதுகையென்றனும் வழங்கப்படும்; ஏனையடி ஒருஉத்தொடையாகிய வரனடையில்லாமையால் அதனை மயக்கமெனினும் இழுக்காது' (யா. வி. 53); எல்லா அடியும் ஒத்துச் சிறப்புடை நேர்த்தளையான் வந்த நிலைமண்டில ஆசிரியப்பா (யா. வி. 74.)

(ஒப்பு.) 1. **வேரல்வேலி:** "முந்தூழ் வேலிய மலைகிழ வோற்கே" (குறுந். 236 : 6); "வேரல் வேலி மால்வரைக் கவான்" (சூளா. சீயவதை. 227.) **வேர்க்கோட் பலா:** "வேரு முதலுங் கோடு மொராங்குத், தொடுத்த போலத் தூங்குபு தொடரிக், கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின், ஆர்கலி வெற்பன்" (குறுந். 257 : 1-4); "செவ்வோர்ச், சினைதொறுந் தூங்கும் பயங்கெழு பலவின்" (நற். 77 : 4-5); "செவ்வோர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகநா. 209 : 15.) **வேரல்வேலிப் பலவு:** "யானை.....வேரல் வேலிச் சிறுகுடி யலறச், செங்காற் பலவின் றீம்பழ மிசையும், மாமலை நாட" (நற். 232 : 1-6.) 5. **காமம் பெரிது:** (குறுந். 102 : 3, 371 : 4); "காதலுனுங் கடலினும் பெரிதே", "காமம் பெரிதே கலீஞரோ விலரே" (நற். 166 : 10, 335 : 11.) **காமமும் உயிரும்:** (குறுந். 290); "பெரிதே காமமென் னுயிர்தவச் சிறிதே" (கலி. 137 : 2.) **(கஅ)**

தலைவன் கூற்று

[தலைவி ஊடியபோது அவ்வூடலைத் தான் தெளியச்செய்யவும் தெளியாளாகிப் பின்னும் ஊடிய காலத்தில் தலைவன், "இவள் தன் பழைய தன்மை மாறி நம்மோடு உறவில்லாள்போல் இருக்கின்றாள்" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.]

கக. எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினமதி வாழிய நெஞ்சே மனமரத்
தெல்லுறு மெளவ னுறும்
5. பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே.

எ - து. உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

[உணர்ப்பு - ஊடலைத் தெளியச்செய்தல்.]

பரணர்.

(பி - ம்.) 1. 'வறுமையர்பாணர்' 3 'வாழியோ' 5 'யாருளர் நமக்கே', 'யாரே னினக்கே'

(ப - ரை) நெஞ்சே—, மனை மரத்து - மனைப்படப்பையிலுள்ள மரத்தின்மீது படர்ந்த, எல் உறு மெளவல் - ஒளியையுடைய முல்லைமலர்கள், நாறும் - மணம் வீசுதற்கிடமாகிய, பல் இரு கூந்தல் - பலவாகிய கரிய கூந்தலையுடைய இவள், இனி, நமக்கு - நம் திறத்தில், யாரளோ - எத்தகைய உறவினை உடையவளோ! ஏதிலள்போலும்; ஆதலான், எவ்வி இழந்த - எவ்வியென்னும் உபகாரியை இழத்தலால் உண்டாகிய, வறுமை யாழ்ப் பாணர் - வறுமையையுடைய யாழ்ப்பாணரது, பூ இல் வறு தலை போல - பொற்பூ இல்லாத வறிய தலையானது பொலிவிழந்திருத்தல்போல, புல்லென்று - பொலிவிழந்து, இனமதி - வருந்துவாயாக.

(முடிபு) நெஞ்சே, கூந்தல் நமக்கு யாரளோ! ஆதலின் பாணர் தலைபோலப் புல்லென்று இனமதி.

(கருத்து) இவள் இப்பொழுது வேறுபாடுடையளானாள்

(வி - ரை.) எவ்வி: இவன் வேளாளருள் உழுவித்துண்போர் வகையினன்; மிழலைக்கூற்றத்துத் தலைவன்; கடற்கரைக்கண் உள்ள நீழலென்னுமூர் இவனுடையது (அகநா. 366); இவன் வேள் எவ்வியென்றும் கூறப்படுவான்; பாணர்க்குப் பொற்பூ

அளித்து ஆதரித்து வந்தவன். இவன் பாணரைப் பாதுகாக்கும் தன்மையை யுடையவனென்பதும் பகைவராற் போரில் இறந்தானென்பதும் வெள்ளெருக்கிலையார் பாடிய கையறுநிலைச்செய்யுளிலுள்ள, "இரும்பாணெக்கற் றலைவன் பெருமபூட், போரடு தானையெவ்வி மார்பின், எஃகுறு விழுப்புண் பலவென, வைகுறு விடியலியம்பிய குரலே" (புறநா. 233 : 5-8) என்னும் பகுதியால் உணரலாகும். இவ்வுபகாரி இறந்ததனால் பாணர் மிக வருந்தினரென்பதும் அவருடைய இசை பயனிலதாயிற்றுதலின் தம் யாழை முறித்தெறிந்தனரென்பதுமாகிய செய்தி, "எவ்வி வீழ்ந்த செருவிற் பாணர், கைதொழு மரபின் முறித்திடுஉப் பழிச்சிய, வள்ளுயர் வணர்மருப்பு" (அகநா. 115 : 8-10) என்பதனால் வெளியாகிறது. பாணர் உபகாரிகளிடமிருந்து பொற்பூவைப் பெறுதல் மரபு; பூவின்மையால் அவர்கள் தலை வறுந்தலையாயிற்று. புல்லென்றல் - பொலிவுகலுதல் (கலி. 3 : 4, ந.) இனமஞி : மதி முன்னிலையசை. வாழிய : அசை. நெஞ்சு கேட்டற் குரியதன்றுயினும், "உறுப்புடையதுபோ லுணர்வுடை யதுபோன், மறுத்துரைப் பதுபோனெஞ்சொடு புணர்த்துக்" (தொல். பொருளியல், 2) கூறப்படும் வழுவமைதியின் பாற்பட்டு அமைந்தது. மணமரமென்றது வீட்டைச் சார்ந்த தோட்டத்திலுள்ள நொச்சிமர முதலியவற்றை மரத்திலே படர்ந்த மௌவலென்க

மகளிர் மூல்லையை வளர்த்தல் இயல்பு; 'தேவி மூல்லை வளர்த்தற்குக் காரணம் கற்புடைமையென வுணர்க' (தக்க. 75, உரை.) மௌவல் நாறும் கூந்தலென்றது, மூல்லையை அணிந்தமையால் அமைந்த மணத்தையுடையதென்றபடி. கற்புக்கு அறிகுறியாக மகளிர் மூல்லை மலரைச் சூடுதல் மரபு; 'கற்பின் மிகுதிதோன்ற மூல்லை சூடுதல் இயல்பு' (சிறு பாண். 28-30, ந.) எல் - ஒளி (தொல். 753); இரவுமாம். பனிச்சை முதலிய ஐந்து பகுதிகளையுடையதாதலின் பல் கூந்தலென்றுன். யாரளோ வென்றது பண்டையளல்ல லென்றபடி; இச்சொல் யாரென்றது அள்விகுதி யேற்று இடம் குறித்து நின்றது, யாரையென்பது போல.

(மேற்.) 1. அகத்திணையிற் புறத்திணைக்கருப்பொருள் உவமமாக வந்தது (தொல். அகத். 55, ந.) 2 - 3. நெஞ்சை உணர்வுடையதுபோல வெகுளி பற்றிக் கூறியது (தொல். பொருளியல், 2, ந.) மு. உணர்ப்புவகையின் வாராஊடற்கண் தலைவன் புலத்தல் (தொல். கற்பு. 15, இளம், ந.); துன்பத்துப் புலம்பலென்னும் மெய்ப்பாடு தலைவனுக்கும் உரியது (தொல்.மெய்ப். 22. பேர்; இ.வி. 580); 'தலைவி தான் உணர்த்தவும் உணராமல் தன்னைக் கைவிட்டுப்பிரியின், தான் அவளை நீங்குதற்கு அஞ்சிய அச்சத்தின் கண்ணும் தலை

வற்குக் கூற்று நிகழும்; அஃது உணர்ப்புவபின்வாரா ஊடலாம்' (தொல். கற்பு. 5, ந); தலைவிகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல் (நம்பி. 206.)

(ஒப்பு.) 1 எவ்வி: புறநா. 233: 6, அடிக். 2: புல்லென்றல்: குறுந். 41: 5, 277: 2, 310: 4.; கலி 3, 4 1 2. பாணர் பொற்பூச் சூடுதல்: (பொருந. 159-60, அடிக்.); "பூப்புனையும், நற்குலத்துட் டோன்றிய நல்லிசையாழ்த் தொல்புல வீர்" (பு. வெ. 31.) 3. வாழிய நெஞ்சே: குறுந். 199: 2. இனிமதி வாழிய நெஞ்சே. "உடைமதி வாழிய நெஞ்சே" (அகநா. 123: 8.); பட். 230. மனமரம்: "மனமரத்தான்" (மதுரைக். 268); "மனமர மொசிய வொற்றி" (அகநா. 58: 13.)

4. எல்லுறு மௌவல்: "அரும்பவிழ் முல்லை. நிகர்மலர்" (சிலப். 9: 1-2) 3-4 மனமரத்தில் உள்ள மௌவல்: "மயிலடி யிலைய மாக்குர னெச்சி, மனைநடு மௌவலோ டேழ்முகை யவிழ" (நற். 115: 5-6); "மனையின மொச்சி மௌவல் வான்முகை", "மனைய, தாழ்வி னெச்சி சூழ்வன மலரும், மௌவன் மாச்சினை" (அகநா. 21: 1, 23: 10-12); "இல்வளர் முல்லை யொடு மல்லிகை", "மனைவளர் முல்லை" (சிலப். 4: 27, 13: 120); "இல்லெழு முல்லையொடு மல்லிகை மலங்கி", "மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய, பைந்தார் முல்லை வெண்போது நெகிழ" (பெருங். 1. 33: 73, 3. 7: 13-4.) 5. பல்லிருங் கூந்தல்: நெடுநல். 54; ஐங். 308: 1, 429: 1; கலி. 101: 41-2; அகநா. 43: 11; மணி. 22: 130; சீவக. 164, 989. (கக)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவை உணர்த்திய தோழியை நோக்கி, "என் பாலுள்ள அருளையும் அன்பையும் நீக்கிப் பிரிவது அறிவுடை யோருக்கு அழகன்று" என்று தலைவி உணர்த்தியது.]

20. அருளு மன்பு நீக்கித் துணைதுறந்து
பொருள்வயிற் பிரிவோ ருரவோ ராயின்
உரவோ ருரவோ ராக
மடவ மாக மடந்தை நாமே.

எ - து. செலவுணர்த்திய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[செலவு - தலைவன் பொருள்வயிற் பிரிதல்.]

கோப்பெருஞ் சோழன்.

(ப - ரை.) மடந்தை - தோழியே, அருளும் அன்பும் நீக்கி - அருளையும் அன்பையும் துறந்து, துணை துறந்து - தம் துணைவியை விட்டு, பொருள்வயின் - பொருள் தேடும் முயற்சியின் பொருட்டு, பிரிவோர் - பிரியும் செயலையுடைய தலைவர், உரவோராயின் - அறிவுடையவராயின், உரவோர் உரவோர் ஆக - அவ்வாற்றலை

யுடையோர் அறிவுடையவரே யாகுக! நாம் - அவரைப் பிரிந்திருத்தற்குரிய ஆற்றலில்லாத நாம், மடவம் ஆக - அறிவிலேம் ஆகுக!

(முடிபு.) மடந்தையே, பிரிவோர் உரவோராகுக! நாம் மடவமாக!

(கருத்து) என்னைப் பிரிந்து செல்லுதல் அறிவுடைய தலைவர்க்கு அழகன்று.

(வி - ரை.) அருள் - தம்மோடு ஒரு தொடர்பும் இல்லாதார் மாட்டும் அவர் துயரங் கண்டால் உண்டாகும் இரக்கம்; அன்பு - தொடர்புடையாரிடத்தும், தன்னைப் புரக்கப்படுவார் மேலும் உளதாகிய காதல் (புறநா. 5 : 5, உரை.) அன்பினின்றும் அருள் உண்டாதல் தோற்றும் முறை; அருளின்பின் அன்பு நீங்குதல் நீங்கும் முறை. பெண்ணென்னும் பொதுமைபற்றி என்பால் அருளேனும், துணைவியென்னும் சிறப்புப் பற்றி அன்பேனும் உளராயின் நீங்காரென்பது குறிப்பு. துணைவியைத் துறந்து போவார் அருளும் அன்பும் உடையராதல் இல்லையென்பது பெறப்பட்டது. உரவோர் - அறிவுடையோர், வன்மையையுடையோர்; உரம் - அறிவு; "உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்" (குறள், 24.) மடவம் - அறிவில்லேம்; 'மடவர் - அறிவில்லாதார்' (புறநா. 106 : 4, உரை.) உரவோராக வென்றது உரவோரல்ல ரென்னும் நினைவிற்று.

(மேற்.) 4. ககரவுயிர்மெய் வியங்கோள் விகுதியாக வந்தது (நன். 337, மயிலை.); ககரவுயிர்மெய்யீற்று வியங்கோள் வாழ்த்துதற் பொருண்மைக்கண் வந்தது (இ. வி. 238.) மு. பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைவி கூறியது (தொல். அகத். 45, இளம்.); செலவுணர்த்திய தோழிக்குத் தலைவி செலவழுங்கக் கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1. அருளும் அன்பும் நீக்கல்: "அருளு மன்பு நீக்கி நீங்கா, நிரயங் கொள்பவர்" (புறநா. 5 : 5-6.) அருளும் அன்பும்: குறள், 757.

1-2. துணைதுறந்து பொருள்வயிற் பிரிவோர் உரவோர்: "நறு நுதனீத்துப் பொருள்வயிற் செல்வோய், உரனுடை யுள்ளத்தை" (கலி. 12 : 9-10.) 1-2. அன்பையும் அருளையும் நீக்கிப் பிரிதல்: "அவரே, அன்பின் மையினருள்பொரு ளென்னர், வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே" (குறுந். 395 : 1-3.) பொருள்வயிற் பிரிதல் அன்பின்மை: "பொருள்வயி னகறல், அன்பன்று" (கலி. 2 : 24-5.) பொருள்வயிற் பிரிவோர் அருளிலராதல்: "அருளி லாளர் பொருள்வயி னகல" (அகநா. 305 : 9.) 1-3. அருளும் அன்பும் நீக்கிப் பொருள் செய்தல் அறிவுடைமை யன்று: "அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரள விடல்" (குறள், 755.) 3-4. உரவோர், மடவம்; "உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்" (பதிற். 73 : 1.) (உ0)

தலைவி கூற்று

[தன் வரவுக்குரிய காலமாகத் தலைவன் குறித்துச் சென்ற கார்ப்பருவத்தைக் கண்டு தலைவி வருந்துவாளென்று எண்ணிய தோழியைநோக்கித் தலைவி, "தலைவர் மெய்ம்மையையுடையரா தலின், அவர் கூறிய பருவம் இஃதன்று" என்று கூறித்தான் ஆற்றியிருத்தலைப் புலப்படுத்தியது.]

உக. வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடையிடுபு
பொன்செய் புனையிழை கட்டிய மகளிர்
கதுப்பிற் றோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானங் காரெனக் கூறினும்
5 யானே தேறேனவர் பொய்வழங் கலரே.

எ - து. பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, 'அவர் வரக்குறித்த பருவ வரவின்கண் இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு!' என்று தன்னுள்ளே கவன்றுட்கு, அவளது குறிப்பறிந்த தலைமகள், "கானம், அவர் வருங்காலத்தை (பி. ம். வருங்கார் காலத்தை)க் காட்டிற்றுயினும் யான் இது கார் காலமென்று தேறேன், (பி. ம். தேறனென்றறிக) அவர் பொய் கூறாகலின்" எனத் தான் (பி. ம். தலைமகள்) ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

ஓதலாந்தையார்.

(பி - ம்.) 3 - 4 'கொன்றை கானம்'

(ப - ரை) தோழி - வண்டுபட - வண்டுகள் தேன் உண்ணுதற்கு வந்து வீழும்படி, ததைந்த - செறிந்து மலர்ந்த, கொடி இணர் - நீட்சியையுடைய பூங்கொத்துக்களை, இடை இடுபு - தழைகளின் இடையே மேற்கொண்டு, பொன் செய் புனை இழை - பொன்னாற் செய்த அணிந்து கொள்ளுதற்குரிய தலையணிகளை, கட்டிய - கோத்துக்கட்டிய, மகளிர் கதுப்பின் - மகளிருடைய கூந்தலைப்போல, தோன்றும் - கண்ணுக்குத் தோன்றுகின்ற, புது பூ கொன்றை - புதிய பூக்களையுடைய கொன்றை மரங்களையுடைய கானம் - காடானது, கார் என - இது கார்ப்பருவமென்று, கூறினும் - அம் மலர்களால் தெரிவிப்பினும், யான் தேறேன் - நான் தெளியேன்; ஏனெனின், அவர் பொய் வழங்கலர் - தலைவர் பொய்ம்மொழியைக் கூறார்.

(முடிபு.) கானம் காரெனக் கூறினும் அவர் பொய் வழங்கலராதலின் யான் தேறேன்.

(கருத்து.) இது கார்ப்பருவம் அன்று.

(வி - ரை.) *தகைந்த* - மலர்ந்த (அகநா. 1 : 1, உரை.) *கொடி* - ஓழுங்கு (கலி. 41 : 6, ந.) இழையென்றது பொன்னரிமாலை முதலிய வற்றை. இடையிடுபு தோன்றும் என்க. புதுப்பூ வென்றமையால் பருவம் தொடங்கிய அணிமை பெறப்படும். கொன்றைமரத் திற்கு மகளிரும், தழைக்கு அவர் கூந்தலும், பூங்கொத்துக்குப் பொன்னிழையும் உவமம். கொன்றை மீண்ட கொத்தாகக் கார் காலத்தில் மலர்வது. கானங் கூறல் என்றது மரபு வழுவமைதி; "என்னு மரபின வெனக் கூறுதலும்" (தொல். எச்ச. 26.) *யானை*: ஓ பிரிநிலை. அவரென்றது நெஞ்சறிசுட்டு. பொய்வழங்கல ரென்றது கார்ப்பருவத்தில் மீண்டு வருவேனென்று தலைவன் கூறிச்சென்றதைக் குறிப்பித்தது. ஏகாரம்: அசை.

கொன்றை மகளிரைப் போலத் தோற்றினும் மகளிரல்ல வென்று தெளிவதுபோல, இது கார்ப்பருவமென்று தோற்றினும் அன்றென்று தெளிந்தேனென்றபடி.

(மேற்.) 5. பிரிநிலை ஓகாரத்தின்பின் வருமொழி இயல்பானது (தொல். உயிர்மயங். 88, இளம், ந.); பிரிநிலை ஓகாரம் வந்தது (தொல். இடை. 8, சே, ந.) 5-6. பிரிநிலை ஓகாரம் (தொல். இடை. 8, தெய்வச்.)

மு. இது பருவங்கண்டுழியும், பொய்கூறுரென்று தலைவி ஆற்றியிருந் தது (தொல். அகத். 14, ந.); 'கானங் காரெனக் கூறவும் வாராரென்றவழி, அது கூறினும் யானை தேறேனெனப் பிரிநிலை ஓகாரத்தாற் பிரிந்தது' (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1. **வண்டுபடத் தகைந்தபூ**: "வண்டுபடத் தகைந்த கண்ணி", "அருவிடர்த் தகைந்த, சாரற் பல்பூ வண்டுபடச் சூடி" (அகநா. 1 : 1, 22 : 12-3.)

3. **கூந்தலுக்குக் கொன்றைத்தழை**: "குழலுஞ் சுணங்குங் கொன்றை காட்ட" (திருவாரூர் மும்மணிக். 1 : 8.) 2-3. **கொன்றைப் பூவிற்குப் பொன்**: (குறுந். 233: 1-3); "பொன்வீக் கொன்றை" (நற். 246: 8); "கனமலர் கொன்றை" (தே. திருஞா. வாள்கொளிபுத்தூர்.); திருச்சிற். 108.

1-3. **கொன்றைக்கு இழையணிந்த மகளிர்**: "இழையணி மகளிரின் விழைதகப் பூத்த, நீடுசுரி யிணர சுடர்வீக் கொன்றைக், காடுகவின் பூத்த" (நற். 302: 1-3.) **கொடியினர்க் கொன்றை**: "கொன்றை.....கொடியிண சூழ்த்த" (குறுந். 66: 1-4); "தூங்கிணர்க் கொன்றை" (குறிஞ்சிப். 86.) 3-4. **கொன்றை கார்காலத்தில் மலர்தல்**: (குறுந். 66: 1-5, 148: 3-5, 233: 1-4); "கார்நறுங்கொன்றை" (புறநா, 1: 1, அடிக்.); "கார்விரி கொன்றை கலந்த கண்ணுதலான்", "காராரார்பூங் கொன்றையினான்" (தே. திருஞா.); "மழைக்கரும் பும்மலர்க் கொன்றையினானே" (தே. சுந்தர.) 2-4

கொன்றை கார்காலத்தில் மலர்தலும் பொன்னை ஒத்திருத்தலும் : "கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்" (அகநா. கடவுள். 1.) மு. குறுங். 66. (உக)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்து செல்வானென்பதைக் குறிப்பால் அறிந்து வருந்திய தலைவியை நோக்கி, "தலைவர் நின்னை அழைத்துக் கொண்டே செல்வார்" என்று தோழி கூறி ஆற்றுவித்தது.]

உஉ. நீர்வார் கண்ணை நீயிவ ணெழிய
யாரோ பிரிகிற் பவரே சாரற்
சிலம்பணி கொண்ட வலஞ்சுரி மராஅத்து
வேனி லஞ்சினை கமழும்
5 தேமூ ரொண்ணுத னின்னெடுஞ் செலவே.

எ - து. செலவுக் குறிப்பறிந்து ஆற்றுளாகிய கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது (பி - ம். வற்புறுத்தது.)

[செலவுக் குறிப்பறிந்தது, தலைவன் பண்டையினும் சிறந்த தலையளி செய்தமை முதலியவற்றுல்.]

சேரமானெந்தை.

(பி - ம்.) 3 'வலஞ்சுழி' 5 'தேனூரொண்ணுத

(ப - ரை.) சிலம்பு அணிகொண்ட - மலைப்பக்கமானது தனக்கு அழகாகக்கொண்ட, வலம் சுரி மராஅத்து - வலமாகச் சுரித்த வெண்கடப்பமலரையுடைய, வேனில் அஞ்சினை - வேனிற் காலத்தில் மலர்ந்த அழகிய கிளையினிடத்தில், கமழும் - மணக்கின்ற, தேம் ஊர் ஒள்நுதல் - நன்மணம் பரவிய விளக்கத்தையுடைய நெற்றியையுடையாய், நீர் வார் கண்ணை - துயரத்தினுல் நீர்சொரியும் கண்ணை உடையாயாகி, நீ இவண் ஒழிய - நீ இங்கே தனியாகத் தங்க, பிரிகிற்பவர் - நின்னைப் பிரிந்து செல்லும் ஆற்றலுடையவர், யார் - யாவர்? செலவு - தலைவர் செல்லுதல், நின்னெடும் - நின்னேடே ஆகும்.

(முடிபு) ஒண்ணுதல், நீ ஒழியப் பிரிகிற்பவர் யார்? செலவு நின்னெடும் ஆகும்.

(கருத்து) தலைவர் நின்னைப் பிரிந்து செல்லார்.

(வி - ரை) தலைவன் பிரிந்தால் தலைவி துயரமிகுதியினுல் அழுதுகொண்டேயிருத்தல் இயல்பாதலின், 'நீர்வார் கண்ணை நீயிவ ணெழிய' என்ருள்; "அழப்பிரிந் தோரே" (குறுந். 307:

9.) யாரோ என்பது ஒருவருமிலரென்னும் பொருளில் வந்தது. பிரிகிற்பவர் - பிரியச் சம்மதிப்போரெனலுமாம்; பிற்றல் - சம்மதித்தல் (தக்க. 57, உரை.) வலஞ்சுரியென்றது பூவிற்கு அடை; மராம்: ஆகுபெயர்; "நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினை பற்றி, வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற" (ஐங். 383: 2-3.) வேனில் - இங்கே இளவேனில்; மராம் இளவேனிலில் மலரு மென்பது, ஐங்குறுநூற்றில் இளவேனிற்பத்தில் உள்ள, "அவரோ வாரார் தான்வந் தன்றே, வலஞ்சுரி மராஅம் வேய்ந்துநம், மணங் கமழ் தண்பொழின் மலரும் பொழுதே" (348) என்பதனாற் பெறப்படும் மலர்ந்த கிளையாதலின் அஞ்சினையென்றாள்.

தேமூர் ஒண்ணுதலென்றது நுதலின் மணத்தையும் விளக்கத் தையும் புலப்படுத்தியவாறு. உத்தமமகளிருடைய நுதல் இயற் கைமணமுடையதென்பதை 'நறுநுதல்' என்னும் வழக்கினால் அறியலாகும்; திலகமுதலியவற்றால் மணம் பொருந்திய நுத லென்றலும் பொருந்தும்; "திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்" (முருகு. 24.) தேமூசு ஒண்ணுதலென்னும் பாடத்திற்குத் தன் பாலுள்ள வாசனையை விரும்பிய வண்டுகள் மொய்க்கும் ஒள்ளிய நெற்றியையுடையாயென்று பொருள் கொள்க; தேம் - வண்டு. செலவு என்பதன்பின் ஆகுமென ஒருசொல் அவாய்நிலையால் வருவித்து முடிக்க.

ஆற்றுமை மிக்க தலைவி, 'யாரோ பிரிகிற்பவரே' என்று தோழி கூறிய மாத்திரத்தில் துயர் நீங்கித் தலையெடுத்து நிமிர்ந்து நோக்கினளாக, நெற்றியின் விளக்கங்கண்ட தோழி, 'தேமூ ரொண்ணுதல்' என்று விளித்தாள்.

(மேற்) 1. முன்னிலை யொருமை வினைக்குறிப்பு முற்று வினையெச்சக் குறிப்பாகியது (நன். 350, மயிலை, 351, சங்; இ. வி. 250.)

மு. ஆற்றுளாய தலைமகட்குத் தோழி பிரிவு நயப்பச் சொல்லியது (தமிழ்நெறி. 24.)

(ஒப்பு.) 1. **நீர்வார் கண்ணை**: "நீர்வார் கண்ணேன் கலுழும்" (நற். 143: 4); "நீர்வார் கண்ணேங் தொழுது" (புறநா. 113: 6); "நீர்வார் கண்ணை யெம்முன் வந்தோய்" (சிலப். 20: 48.) 1 - 2. "யாரோ பிரிகிற் பவரே குவளை, நீர்வார் நிகர்மல ரன்னநின், பேரமர் மழைக்கண் டெண் பனி கொளவே" (நற். 391: 8 - 10.) **தலைவன் பிரிவதால் தலைவி அழுதல்**: குறுந். 11: 2, ஒப்பு.

3. **வலஞ்சுரி மராம்**: "வலஞ்சுரி மராஅத்துச் சுரங்கமழ் புதுவீ" (அகநா. 83; 1); "பொரியரை மராஅத்து வாலிணர்ச் சுரிமலர்" (யா. வி. 44, மேற்: 'பரியல்.'); ஐங். 348: 2; கலி. 26: 1.

3 - 4. **மராம் வேளிலில் மலர்தல்** : (குறுங். 211 : 4 - 5); "வேனற் பூத்த மராங்கேழை" (தே. திருஞா. நாகைக்காரோணம்.)

5. **நுதலுக்கு மணம் உண்மை** (குறுங். 59 : 3, 205 : 7, 259 : 2 - 3, 273 : 3, 323 : 4 - 5); "நறுநுத லரிவை", "தேங்கமழ் திருநுதல்" (நற். 50 : 10, 62: 6); முருகு. 24; "நன்னுதல் னறு முல்லை மலர" (ஐங். 492 ; 2); "நறு நுதல்" (கலி. 14 : 4, 21 : 6. 53 : 14, 59 : 22); "மையிருங் கான நாறு நறுநுதல்", "தேங்கமழ் புதுமலர் நாறுமிவ ணுதலே", "நாறு நறுநுதல்", "தேங்கமழ் திருநுதல்" (அகநா. 43 : 10, 78 : 24, 93 : 10, 238 : 18, 389 : 3.)(பி - ம்.) **தேமுசொண்ணுதல்** : "சுரும்பிமிர் சுடர்நுதல்" (நற். 245 : 11); "நுதலும், நுண்ணியர் பொறித்து வண்டார்க் கும்மே" (சிற்றட்டகம்.) (உ உ)

தோழி கூற்று

[தலைவியது வேறுபாட்டின் காரணத்தைச் செவிலித்தாய் முதலியோர் நெற்குறி பார்ப்பவரைக்கொண்டு ஆராய்ந்த காலத்தில் தோழி, "தலைவனுக்குரிய மலையை நீ பாடுவாயாக" என்று கூறும் வாயிலாக அத் தலைவியின் வேறுபாடு ஓர் ஆடவனால் உண்டாயிற்றென்பதைப் புலப்படுத்தியது.]

உடு. அகவன் மகளே யகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே, அவர்
5. நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.

எ - து. கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்றது.

[கட்டு - மூறத்தில் நெல்லிலைவைத்துத் தெய்வங்களைப் பாடி எண்ணிப் பார்த்துக் கட்டுவிச்சி காணும் குறி.]

ஔவையார்.

(ப - ரை.) அகவல் மகளே - தெய்வங்களை அழைத்துப் பாடுதலைச்செய்யும் கட்டுவிச்சியே, அகவல் மகளே—, மனவு கோப்பு அன்ன - சங்குமணியினாலாகிய கோவையைப்போன்ற வெண்மையாகிய, நல்நெடு கூந்தல் - நல்ல நீண்ட கூந்தலையுடைய, அகவல் மகளே—, பாட்டு பாடுக - பாட்டுக்களைப் பாடுவாயாக ; இன்னும் பாட்டுப் பாடுக—, அவர் நல் நெடு குன்றம் பாடிய பாட்டு - நீ பாடிய பாட்டுக்களுள் அவருடைய நல்ல நெடிய குன்றத்தைப்

புகழ்ந்து பாடிய பாட்டை, இன்னும் பாடுக - மீண்டும் பாடுவாயாக.

(முடிபு) அகவன் மகளே, பாடுக ; இன்னும் பாடுக ; குன்றம் பாடிய பாட்டை இன்னும் பாடுக.

(கருத்து) இவள்பால் அன்புபூண்ட தலைவருடைய குன்றத்தைப் பாடின் இவளது வேறுபாடு நீங்கும்.

(வி - ரை.) அகவல் மகள் - கட்டுவிச்சி ; அகவல் - அழைத்தல்; 'அதனை வழக்கினுள்ளார் அழைத்தலென்றுஞ் சொல்லுப ; அவை .....கட்டுங் கழங்குமிட்டுரைப்பார்கண்ணும்.....கேட்கப் படும்' (தொல். செய். 81, பேர்) ; 'அகவிக் கூறலின் அகவலாயிற்று ; ... .அதனை வழக்கினுள் அழைத்தலென்ப' (தொல். செய். 81, ந); தெய்வங்களை அழைத்துக் கூறும் இயல்புடையாளாதலின் இப் பெயர் பெற்றாள் ; 'அகவரென்றார், குலத்தோரெல்லாரையும் அழைத்துப் புகழ்வரென்பதுபற்றி' (மதுரைக். 223, ந.)

தலைவியினுடைய காமநோயை யறியமாட்டாத தாயர் அவள் வேறுபாட்டின் காரணத்தை ஆராயும்பொருட்டு அகவன்மகளாகிய கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்பார்ப்பது வழக்கம். கட்டுவிச்சி முறத்தில் நெல்லியிட்டு அதனை எண்ணி அதனாற்போந்த சில நிமித்தங்களை அறிந்து, "இவள் முருகனால் அணங்கப்பட்டாள்" என்று கூறுவாள். அதுகேட்ட தாயர் வேலனையழைத்து வெறியாட்டெடுப்பர்.

இவ்வகவன்மகள் தெய்வமேறிக் குறிகூறுதலும் உண்டு. இவளைப் பிற்காலத்தார் குறத்தியென்று கூறுவர். "கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரும், ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்" (தொல். களவு. 24) என்பதன் உரையில், 'கட்டுவிச்சியும் வேலனும் தாம் பார்த்த கட்டினானும் கழங்கினானும் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யாக்கால் இம்மையல் தீராதென்று கூறுதலின் அவ்விருவரும் தம்மின் ஒத்த திறம்பற்றியதனையே செய்யும் செய்தியிடத்தும்' (ந.) என்றுள்ள பகுதி தாயர் கட்டுப்பார்ப்பதற்குரிய விதியைப் புலப்படுத்துகின்றது ;

> "குன்ற நாடன் பிரிவிற் சென்று
> நன்னுதற் பரந்த பசலைகண் டன்னை
> செம்முது பெண்டிரொடு நென்முன் னிறீஇக்
> கட்டிற் கேட்கு மாயின்" (நற். 288 : 4 - 7),

" பனிவரை நிவந்த பயங்கெழு கவாஅற்
றுனிபில் கொள்கையொ டவர்நமக் குவந்த
இனியவுள்ள மின்ன வாக
முனிதக நிறுத்த நல்க லெவ்வம்
சூருறை வெற்பன் மார்புறத் தணிதல்
அறிந்தன ளல்ல ளன்னை வார்கோற்
செறிந்திலங் கெல்வளை நெகிழ்ந்தமை நோக்கிக்
கையறு நெஞ்சினள் வினவலின் முதுவாய்ப்
பொய்வல் பெண்டிர் பிரப்புளர் பிழி
முருக ரூணங் கென்றலி னதுசெத்து " (அகநா. 98 : 1 - 10)

என்பன இவ்வழக்கத்தை விளக்கும். இதனையன்றி, 'அகலு ளாங்க ணறியுநர் வினாய் - அகன்ற இடத்தையுடைய ஊரிடத் துக் கட்டினாலும் கழங்கினாலும் எண்ணியறிவாரை வினவி அவர் தெய்வத்தான் வந்த வருத்தமென்றலின்' (குறிஞ்சிப். 7, ந.), "சேரி யாயத்துச் செம்முதிர் பெண்டிரொடு, கட்டறி மகடூஉக் கடிமுறத் திட்ட, வட்ட நெல்லு மாண்பில பெரிதென" (பெருங். க. 37 : 235 - 7), "கட்டுவிச்சி கட்டேறிச், சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா, வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவாப், பேரா யிரமுடை யானென்ருள்" (திவ். சிறியதிருமடல், 20-22), "இது காண்மி னன்னை மீர்க்கட்டுவிச்சி சொற்கொண்டுநீர், எதுவானுஞ் செய்தங்கோர் கள்ளு மிறைச்சியுந் தூவேன்மின்" (திவ். திருவாய் 4 6 : 3) என் பவற்றாலும், திருக்கோவையாரிலுள்ள கட்டுவைப்பித்தல், கலக்க முற்று நிற்றல், கட்டுவித்தி கூறல் (283 - 5) என்னும் துறைகளுக்குரிய செய் யுட்களாலும், அவற்றின் உரையாலும்,

" முன்னாழி முச்சிறங்கை நெல்லளந்து கொடுவா
முறத்திலொரு படிநெல்லியென் முன்னேவை யம்மே
இன்னாழி நெல்லியுமுக் கூறுசெய்தோர் கூற்றை
இரட்டைபட வெண்ணினபோ தொற்றைபட்ட தம்மே
உன்னுமுன் வேள்விமலிப் பிள்ளாயார்வந் துதித்தார்
உனக்கினியெண் ணினகரும மிமைப்பினிற்கை கூடும்
என்னணை யெங்கள்குலக் கன்னிமா ரறிய
எக்குறிதப் பினுந்தப்பா திக்குறிகா ணம்மே "

(மீனாட்சியம்மைகுறம், 26)

என்பதனாலும் இக்கட்டுவிச்சியைப் பற்றிய செய்திகள் சில வற்றை உணரலாகும்; பிற்காலத்துக் கலம்பகத்துள்ள குறமென் னும் உறுப்பாலும் குறவஞ்சியென்னும் பிரபந்தம் முதலியவற்றா லும் சில செய்திகள் புலப்படும்

மூன்முறை அகவன்மகளே விளித்தது தான் கூறும் கூற்றின் உண்மையைக் கூர்ந்து அறியும் பொருட்டு. மனவுக்கோப்பன்ன என்றது அவள் அணிந்த அணியையே அவள் கூந்தலுக்கு உவமை கூறியவாறு. இவ்வுவமையால் கட்டுவிச்சி நுரைமுதாட்டியென்பது பெறப்படும். நன்னெடுங் கூந்தலென்றது இகழ்ச்சிக் குறிப்பு, "பயனின் மூப்பிற் பல்சான் றீரே" (புறநா. 195 : 3) என்புழிப் பல்சான்றீரென்பதையும், "எழில்செய் கூகை" (சிவக 102) என்பதையும் போல. அவர் : நெஞ்சறிசுட்டு. பாடுதற்குரிய சிறப்புடையதென்பாள், 'நன்னெடுங் குன்றம்' என்றாள். மலைவாழ்சாதியினளாகிய அகவன்மகள் தான்கண்ட மலைகளின் வளத்தைப் பாடுவது இயல்பாதலின் அவள் பல மலைவளங்களைப் பாடினாள்; அவற்றுள் தலைவனது மலைவளத்தைக் கேட்பதில் தலைவிக்குப் பெருவிருப்பம் உளதாமாதலின் தோழி அதனை மீண்டும் பாடென்றாள். 'இன்னும் பாடுக' என்றதனைப் பின்னுங் கூட்டுக.

'அவர் நன்னெடுங் குன்றம்பாடிய பாட்டு' என்று கூறின், 'அவர் யார்?' என்னும் ஆராய்ச்சி தாயரிடையே பிறந்து உண்மையறிதற்கு ஏதுவாமாகலின் இஃது அறத்தொடு நிற்றலாயிற்று.

(மேற்.) 1. முறைமை சுட்டா மகளென்னும் ளகரவீற்று உயர்திணைப் பெயர் பிறிதுவந் தடைநிலாகிய ஏகாரம் பெற்று விளியேற்றது (தொல் விளி. 12, ந; இ. வி. 207); உயர்திணைப்பெயர் ஏகாரம்பெற்று விளியாயிற்று (நன். 304, மயிலை.) மு. 'கட்டுக்காணிய நின்றவிடத்துத் தோழி அறத்தொடு நின்றது; அதுவும் வெறியாட்டின்கண் அடங்கும்' (தொல். பொருளியல், 12, ந.)

(ஒப்பு.) 1. அகவன் மகள்: "வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்" (குறுந் 298 : 6.) 5. தலைவனது குன்றத்தைப் பாடுதல்: சிறுபாண். 128; கற். 156 : 4, 373 : 3; ஐங். 244 : 2-4; பரி. 17 : 51; கலி. 40, 41, 43. அகநா. 208 : 2; புறநா. 131 : 3, 143 : 12, 151 : 12; சிலப். 24 : 3-5. அகவன்மகள் மலைவளம் பாடுதலைக் குறவஞ்சி நூல்களிற் பரக்கக் காணலாகும். (உக)

தலைவி கூற்று

[பிரிந்த தலைவன் மீண்டுவருவேனென்று சொல்லிய இளவேனிற் பருவத்தைக்கண்ட தலைவி, "தலைவர் பிரிவினால் எனக்கு உண்டாகிய வேறுபாடுகளைக் கண்டு ஊரார் பழி கூறுகின்றனர். அது நீர அவர் இன்னும் வந்திலர்" என வருந்திக் கூறியது.]

உசு. கருங்கால் வேம்பி ணெண்பூ யாணர்
என்னை யின்றியுங் கழிவது கொல்லோ

ஆற்றய லெழுந்த வெண்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த வொருபழம் போலக்
5. குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே.

எ - து. பருவங்கண்டு ஆற்றாளாகிய சிழத்தி உரைத்தது.

[பருவம் - தலைவன் வருவேனென்று கூறிச் சென்ற காலம்; ஈண்டு இளவேனில்.]

பரணர்.

(பி - ம்) 4 'தெழுகளிறு' 5 'குழையகக்கோட்டியோ, 'கோட்டியோர்' 6 'காதலர்க்கல்லென்றவ்வே', காதலர்க்கவ்வென்றவ்வே', 'நாம் வெங்காதலர்க்கல்லென்றவ்வே'

(ப - ரை.) கரு கால் வேம்பின் ஒள் பூ யாணர் - கரிய தாளையுடைய வேப்பமரத்தின் ஒள்ளிய பூவின் புதுவருவாயானது, என்னை இன்றியும் - என்னுடைய தலைவன் இல்லாமலும், கழிவது கொல் - செல்வதுவோ? கொடியோர் நா - அயலாராகிய கொடிய மகளிருடைய நாக்கள், காதலர் அகல - என்காதலர் என்னை நீங்கிச் செல்ல, ஆற்று அயல் எழுந்த - ஆற்றங்கரையில் முளைத்து வளர்ந்த, வெள் கோடு அதவத்து - வெள்ளிய கொம்புகளையுடைய அத்திமரத்தினது, எழு குளிறு மிதித்த - உண்ண விரும்பிய ஏழு நண்டுகளால் மிதிக்கப்பட்ட, ஒரு பழம்போல - ஒற்றைப்பழமானது குழைவதுபோல, குழைய - நான் வருந்தும்படி, கல்லென்ற - அலர்கூறிக் கல்லென்று முழங்கின.

(முடிபு) ஒண்பூ யாணர் கழிவது கொல்லோ? காதலர் அகலுதலால் குழையக் கொடியோர்களின் நா கல்லென்றன.

(கருத்து) தலைவர் வாராமையின் ஊரினர் பழி கூறுதல் அடங்கவில்லை.

(வி - ரை.) வேம்பு இளவேனிலில் மலர்வது (ஐங். 350.) தலைவனைத் தலைவி என்னையென்று கூறுதற்குரிய விதி, "அன்னையென்னை யென்றலு மூளவே, தொன்னெறி முறைமை சொல்லினு மெழுத்தினும், தோன்ற மரபின வென்மனார் புலவர்" (தொல். பொருளியல், 52) என்பது; இந்நூலுட் பலவிடங்களில் தலைவனைத் தலைவி என்னையென்றலுங் காண்க. கொல்: இரக்கக் குறிப்பு; இளவேனிலில் உடனிருக்கவேண்டிய தலைவன் சென்றனென்று இரங்கியவாறு. அதவத்து: அதவென்னும் அகரவீற்றுப் பெயர் அத்துச் சாரியை பெற்று அச்சாரியையின் அகரம் கெடாமல் வந்

தது. (தொல் புணர். 31.) அத்திப்பழம் மென்மையுடையதாதலின் நண்டுகள் மிதித்தலாற் குழைவதாயிற்று ; இங்ஙனம் குழைகின்ற பொருளுக்கு அத்திப்பழத்தை உவமை கூறுதல், "அதம்பழத் துருவுசெய்தா ரவளிவ ணல்லூ ராரே" (தே. திருநா.) என்பத னாலும் விளங்கும். ஒன்றுக்கு ஏழு கூறுவது மரபு. இங்கே ஏழென்பது பலவென்பதைக் குறிக்கின்றதொரு வாய்பாடு ; 'ஏழென்பது அதற்கு மேலாய மிக்க பன்மை குறித்து நின்றது, ஒருவர் கூறை யெழுவ ருடுத்தென்ருற்போல' (குறள், 1269, பரி மேல்.) ; இவ்வாய்பாடுகளை அநந்தவாசி யென்று கூறுவர் தக்கயாகப் பரணி யுரையாசிரியர். கொடியோ ரென்பது உயர்திணை யிருபாற் பொதுப்பெயரேனும் தொழிலால் ஆண்மையித்து நின்றது ; "ஊர வர் கௌவை யெருவாக" (குறள், 1147) என்பதனுரையில் 'ஊரவரென்பது தொழிலான் ஆண்மையித்து நின்றது' என்றெழுதி யமை இங்கே அறியற்பாலது. கல்லென்றல் : தலைவன் பிரிவினால் தலைவி வேறுபட்டிருத்தலை எடுத்துக்கூறிப் பழித்தல் ; இஃது ஒலிக்குறிப்பு கல்லென்றவ்வே : விரிக்கும்வழி விரித்தல்.

ஓகாரமும் ஏகாரங்களும் அசைநிலைகள்.

(ஒப்பு.) 1. **கருங்கால் வேம்பு** : பொருந. 143-4 ; புறநா. 45 : 2, 338 : 5-6. **என்னை** : குறுந். 27 : 3, 203 : 5, 223 : 7.

4. **ஒன்றுக்கு ஏழு** : "ஏழூர்ப் பொதுவினைக் கோசர் யாத்த, உலைவாக்கு மிதிதோல்" (குறுந். 172 : 5-6) ; "ஒருநா ணம்மில் வந்ததற் கெழுநாள், அழுப வென்ப" (ஐங். 32 : 2-3) ; "ஒருநா ளெழுநாள்போற் செல்லும்" (குறள், 1269) ; "ஓவா தெழுமடங் குட்குவரத் தோன்றி" (பெருங். 1. 43 : 122) ; "பூசுசாந் தொருவர் பூசிற் றெழுவர்தம் மகலம் பூசி" (சீவக. 116.) 3-4. **அதவத்துப் பழம்** : "அதவத் தீங்கனி யன்ன செம்முகத், துய்த் தலை மந்தி" (கற். 95 : 3-4) **நண்டுகள் பழத்தை விரும்பல்** : "அகலிலை நாவ லுண்டுறை யுதிர்த்த, கனிகவின் சிதைய வாங்கிக் கொண்டுதன், தாழை வேரலை வீழ்துணைக் கிடுஉம், அலவன்" (அகநா. 380 : 4-7) ; "அலவன் றன் சிர்ப்பெடையின், வாய்வண் டூனையதொர் நாவற் கனிநனி நல்க" (திருச்சிற். 84.)

6. **கல்லென்றல்** : குறுந் 179 : 1, 262 : 1 ; மலைபடு 549 ; நற். 111 : 9, 163 : 3-4 ; புறநா. 184 : 8. (உ-ச)

தலைவி கூற்று

[தலைவன் நெடுங்காலம் மணஞ்செய்துகொள்ளாமலிருத்தல் பற்றி வருந்திய தலைவி, "தலைவர் அருள் பூண்டு என்னை வரைந்து கொண்டாலன்றி எனக்கு உதவி செய்யத் தக்க சான்று பகர்வார் வேறு ஒருவரும் இலர்" என்று கூறியது.]

உடு. யாரு மில்லைத் தானே கள்வன்
தானதுப் பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
5. குருகு முண்டுதான் மணந்த ஞான்றே.

எ - து. வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

[வரைவு - மணம் செய்தல்.]

கபிலர்.

(பி - ம்.) 2 'தானவன்' 3 'காஅல' 5 'முண்டுதாம்'

(ப - ரை.) தோழி, தான் மணந்த ஞான்று - தலைவன் என்னைக் களவில் மணந்த காலத்தில், யாரும் இல்லை - சான்றுவார் வேறு ஒருவரும் இலர்; தானே கள்வன் - தலைவனாகிய கள்வன் ஒருவன்றான் இருந்தனன்; தான் அது பொய்ப்பின் - அங்ஙனம் இருந்த தலைவன் அப்பொழுது கூறிய சூளுறவினின்றும் தப்பினால், யான் எவன் செய்கு - நான் யாது செய்யவல்லேன்! ஒழுகு நீர் ஆரல் பார்க்கும் - ஓடுகின்ற நீரில் ஆரல் மீனின் வரவை உண்ணும் பொருட்டுப் பார்த்துநிற்கும், தினை தாள் அன்ன - தினையின் அடியைப்போன்ற, சிறு பசு கால - சிறிய பசிய கால்களையுடைய, குருகும் உண்டு - நாரையும் இருந்தது.

(முடிபு) தலைவன் மணந்த ஞான்று யாரும் இல்லை; தானே; தான் அது பொய்ப்பின் எவன் செய்வேன்! குருகும் உண்டு.

(கருத்து) தலைவன் தான் கூறியபடி இன்னும் வரைந்து கொண்டானல்லன்.

(வி - ரை.) யாருமென்றது அறிவுடையோரை. தானே: ஏகாரம் பிரிநிலை. பிறரறியாவாறு வந்து தன் நலத்தைக் கவர்ந்து கொண்டு சென்றவனுதலின் கள்வன் என்றாள். 'அது' என்றது, 'நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன்' என்றும், 'நின்னை விரைவில் மணந்துகொள்வேன்' என்றும் கூறிய சூளுறவை (குறிஞ்சிப். 208-10, உரை); அது: நெஞ்சறி சுட்டு. பார்க்கும் - உண்ணும் பொருட்டுக் கூர்ந்து பார்த்துக்கொண்டே நிற்கும். குருகும் உண்டு: உம்மை இழிவு சிறப்பு; அஃது இருந்தும் சான்றுகும் தகுதி பெற்றதன்றென்னும் நினைவிற்று.

செய்கோ: ஓகாரம் அசைநிலை. ஞான்றே: ஏகாரம் அசைநிலை.

என் நலத்தைப் பிறரறியாவாறு கவர்ந்த கள்வன் தன் வாய் மொழியின்படி செய்திலன்; 'நீ இங்ஙனம் கூறினையன்றே; அதனை நிறைவேற்றுதது என்?' என்று தொடுத்து வினவுதற்கு ஏற்ற சான்றும் இல்லை; அங்கே இருந்தது கரிபோதற்குத் தகாத நாரையொன்றே; அஃதும் ஆரன் மீனை நோக்கிய கருத்தின தாதலின் அவன் சூளுறவைக் கேட்டிராது. இதற்கு என் செய்வேனென்பது தலைவியின் கருத்தாகக் கொள்க.

ஆரல் பார்க்கும் நாரை உண்டென்றமையின் இக்களவுக் கூட்டம் நீர்த்துறைக்கண் நிகழ்ந்ததென்பது பெறப்படும்.

தோழியென்ற விளி முன்னத்தாற் போந்தது.

'தாம் மணந்த ஞான்றே' என்ற பாடத்திற்கு, அவன் மணந்த நிகழ்ச்சியை எண்ணிப் பெருமிதங்கொண்ட தலைவி தாமென்று பன்மையாற் கூறி, கள்வனுதலைக் கூறுகையில் உண்டான செறல் பற்றித் தானென்று ஒருமையாற் கூறியதாகக் கொள்க; "எனைத் துணைய ராயினு மென்னுந் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல்" (குறள், 144) என்புழிப்போல.

(மேற்.) 3-5. பன்மை ஒருமை வழுவமைதி (தொல். எச்ச. 66, இளம்.); பன்மை ஒருமை மயக்கம் (திருச்சிற். 108, 123, பேர்.); பன்மை ஒருமைப் பால் வழுவமைப்பாகக் கொள்ளுதற் கியலாது (நன். 338, மயிலை.); கால வென்பது பெயரெச்ச வினைக்குறிப்புச் சொல்; உண்டென்பது குறிப் புணர்த்தி நிற்றலின் ஒருமைச்சொல் (தொல். முதற் சூத்திரவிருத்தி.)

'இன்னும் இதனானே பன்மை சுட்டிய பெயர்ச்சொல், ஒருமையோடு இயைபின்றி இயைதலின் வழுவாயமைவதூஉங்கொள்க. குருகென்பது இயற்பெயராதலின் அதன்கட் பன்மையோடு காலவென்பது இயைந்து காலனவாகிய குருகுகள் என நிற்பின், அஃது உண்டென்னும் ஒருமைக்கு ஏலாமையின், குருகென்பது ஒருமையாயே நின்றதாதலின் வழுவேயாம்; கள்வன் தானொருவனுமே, வேறு சிலர் ஆண்டில்லையென்று கூறுகின்றுள், இரை தேரும் மனக்குறிப்புடைமையிற் கேளாது, சிறிது கேட்டதாயினும் கொலைசூழ் குருகாதலின் கூறுவதுஞ் செய்யாது, இத் தன்மைத்தாய குருகும் உண்டென்று கூறுதலின் உண்டென்று ஒருமை வாசகத்தாற் கூறினர்' (தொல். எச்ச. 65, ந.)

மு. அவன் புணர்வு மறுத்தலென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். களவு. 21, இளம்.); 'இதனுள், யானெவன் செய்கோவெனத் தோழி வினவாக் காலத்து அவன் தவற்றை வரைவிடை வைத்தலின் ஆற்றுமைக் குத் தலைவி தானே அறிவித்தாள்' (தொல். களவு. 21, ந.); தலைமகன் இகந்தமை தலைமகள் பாங்கிக்கு இயம்பியது (நம்பி. 176; இ. வி. 533); உண்டென்பது ஐம்பால் மூவிடத்திற்கும் வரும் (நன். 339, சங்.); உண்

டென்பது யாண்டும் அஃறிணை யொருமையையே உணர்த்திநிற்குமெனக் கூறவேண்டுவதில்லை (இ. வி. 240.)

(ஒப்பு) 1. **தலைவனைக் கள்வனென்றல்:** (குறுந். 318 : 8); (நற். 28 : 4); "இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது, நெஞ்ச நிறையழித்த கள்வன்" (முத். 102); "காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங்கவர் கள்வன்" (தே. திருஞா.)

2. **பொய்த்தல்: குறள், 293. தலைவன் பொய்த்தல்:** "பொய்வ லாளன்" (குறுந். 30 : 2); "இவன், பொய்பொதி கொடுஞ்சொல்" (நற். 200 : 10-11); "தானுற்ற, சூள்பேணான் பொய்த்தான் மலை" (கலி 41 : 19-20); "நும்மோ ரன்னோர் மாட்டு மின்ன, பொய்யொடு மிடைந் தவை தோன்றின், மெய்யாண் டுளதோவிவ் வுலகத் தானே" (அகநா. 286 : 15-7.)

1-2. **தலைவன் தூறுறவு செய்தலும் அதனைப் பொய்த்தலும்:** "பணை யெழின் மென்றோ ளணைஇய வன்கூட், பிழையா வஞ்சினஞ் செய்த, கள் வனுங் கடவனும் புணைவனுந் தானே" (குறுந். 318 : 6-8.)

5. **குருகுமுண்டு : குறுந். 26 : 8 ; அகநா. 320 : 13-4 ; தீவ். பெரிய திரு. 9. 3 : 4. 4-5. களவுக்காலத்துப் பயிலும் இடத்தில் நாரை இருத்தல்:** "இரைதேர் வெண்குரு கல்லதி யாவதும், துன்னல்போ கின்றுற் பொழிலே" (குறுந். 113 : 3-4.) **ஆரல் பார்க்கும் குருகு:** (குறுந். 103 : 3, 114 : 4-5); "இரைதேர் நாரை", "இரைதேருந் தடந்தா ணுரை" (நற். 35: 6, 91 : 4); "நாரைக ளாரல் வார" (தே. திருநா. திருநனிபள்ளி.)

3-5. **நாரையின் காலுக்குத் தினைத்தாள்:** "தினைத்தா ளன்ன செங்கா ணுரை சேரும் திருவாரூர்" (தே. சுந்தர.) (உரு)

தோழி கூற்று

[தலைவியின் வேறுபாட்டுக்குக் காரணம் பிறிதோர்தெய்வ மென்று கட்டுவிச்சியால் அறிந்த தாயர் முதலியோருக்குத் தோழி, "இவள் ஒரு தலைவனொடு நட்புப் பூண்டாள் ; அவனை ஓர் ஆண் குரங்கும் அறியும்" என்று உண்மையைக் கூறியது.]

உசு. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றுணர்ந்து நாடன்
தகாஅன் போலத் தான்றீ துமொழியினும்

5 தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே
தேக்கொக் கருந்து முள்ளெயிற் றுத் துவர் வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னேயே.

எ - து. நற்றாயுஞ் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு, இஃது எற்றினையிற்றென்று (பி - ம். வேறுபாடு கண்டார் எதனையிற்றென்று) கட்டுவிச்சியை வினவிக் கட்டுக் காண்கின்ற காலத்துத் தலைமகளது வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வ மென்று கூறக்கேட்டுத் தோழி அறத்தொடு நின்றது.

[எற்றினன் - என்ன காரணத்தால். கட்டுவிச்சி - கட்டுப் பார்ப்பவள் ; இந்நூல் 23-ஆம் பாட்டின் கருத்தையும் உரையையும் பார்க்க.]

வெள்ளி வீதியார்.

(பி - ம்.) 2 'மேக்கெழும் பெருஞ்சினை' 6 'முத்துநிறை யொத்த முள்ளெயிற்று', 'முள்ளெயிற்றுவர்வாய்' 7 - 8 'தந்தை கடுவனும்.

(ப - ரை.) அரும்பு அற மலர்ந்த - அரும்புத்தன்மை இல்லாமல் மலர்ந்த, கரு கால் வேங்கை - கரிய அடியையுடைய வேங்கை மரத்தின், மேக்கு எழு பெரு சினை - மேலே வளர்ந்த பெரிய கிளையில், இருந்த தோகை - இருந்த மயிலானது, பூ கொய் மகளிரின் - அதன் மலரைக் கொய்யும் மகளிரைப்போல, தோன்றும் நாடன் - தோன்றுதற்கு இடமாகிய நாட்டையுடைய தலைவன், தகாஅன் போல - இவளுக்கு உரியனாகுந் தகுதியிலானென்பதுபோல, தான் - கட்டுவிச்சி, தீது மொழியினும் - தெய்வத்தால் வந்ததென்று தீங்கானதைக் கூறினும், தேன் கொக்கு - தேமாவின் கனியை, அருந்தும் - உண்ணுகின்ற, முள் எயிறு துவர் வாய் - முள்போன்ற கூரிய பற்களையும் செவ்விய வாயையுமுடைய, வரை ஆடு - மலைகளில் விளையாடும், வன் பறழ் தந்தை - வலிய குட்டியின் தந்தையாகிய, கடுவனும் - ஆண்குரங்கும், அ கொடியோனே - அந்தக் கொடியவனாகிய தலைவனே, அறியும்—; ஆதலின் அது, தன்கண் கண்டது - தன்கண்ணாற் கண்ட நிகழ்ச்சியை, பொய்க்குவது அன்று - காணேனென்று பொய் சொல்லாதது.

(முடிபு) நாடன் தகான்போலத் தான் தீதுமொழியினும் அக் கொடியோனைக் கடுவனும் அறியும்; ஆதலின் கண்டது பொய்க்குவ தன்று.

(கருத்து) இத்தலைவியின் நோய்க்குக் காரணம் ஒரு தலைவ னேடு செய்த நட்பேயாகும்.

(வி - ரை.) அரும்பு முழுவதும் மலர்ந்தவென்றலுமாம்; அற - முழுவதும்; "நின்னையறப்பெறு கிற்கிலேன்" (அறநெறிச். 191.) கருங்கால் - பெரிய அடியுமாம். மகளிர் வேங்கைமலரைக் கொய்து அணிந்துகொள்ளல் இயல்பு. நாடன் - குறிஞ்சிநிலத் தலைவன் (குறுந். 3 : 4, வி - ரை.) தகாஅன் போலவென்றது தகுதியுடைய னைக இருக்கவும் தகானென்று சொல்லிப் புறக்கணித்தலைப்போல வென்றபடி. தலைவியின் கற்புக்கு இழுக்காதலின் 'பிறிதோர் தெய் வத்தாலாயிற்று' என்ற கட்டுவிச்சி கூற்றைத் தீது மொழிதலென் றுள். அதுகாறும் தலைவன் வரையாமல் நீட்டித்ததை நினைந்த வளாதலின் கொடியோனென்றுள்.

கடுவனும்: உம்மை இழிவுசிறப்பு; இத்தகைய கடுவனும் அவனை அறிந்திருப்பக் கட்டுவிச்சியால் அழைக்கப்பட்ட தெய்வம் அறியாதது என்ன மடமை யென்பது தோழியின் குறிப்பு.

தேமாமரங்கள் செறிந்த சோலையின்கண் குட்டியும் ஆண் குரங்கும் அம்மரங்களிலுள்ள பழங்களைத் தின்று விளையாடும் பொழுதில் தலைவனொருவன் தலைவிக்கு நண்பனனென்ற செய்தி யைத் தோழி இதனால் தெரிவித்தாளாயிற்று.

வேங்கைமேலிருந்த தோகை பூக்கொய் மகளிரிற் றோன்றும் நாடனென்றது, வேங்கையின் பூவைக்கொய்து அதன் அழகைக் கெடுக்கும் மகளிரைப்போல மயில் தோற்றினும் உண்மையில் அம்மரத்திற்கு மேலும் அழகைத்தந்து அமைவதுபோல, தலைவன் இப்பொழுது இவளது நலமழியச் செய்தவனைத் தோற்றினும் வரைந்துகொள்வானேல் இவள் நலம் வளரச்செய்வானென்னும் குறிப்பினது.

(மேற்.) 2. சினை மரத்தோடு அடுத்து வந்தது (தொல். மரபு. 87, பேர்.)

7. பறழென்பது குரங்கின் இளமைப் பெயர் (தொல். மரபு. 14, பேர்.); நிரைநேர்பு ஒன்றுமையின் இயற்சீர் வெண்டளையானது (தொல். செய். 56, ந.)

8. ஆண்குரங்கினைக் கடுவனென்றல் தொன்றுதொட்ட வழக்கு (தொல். மரபு. 68, பேர்.)

மு. தலைவனைத் துறந்தான்போலவும் மறந்தான்போலவும் கருதித் தான் தீது மொழியினுமென, தோழி வினவாக்காலத்து அவன் தவற்றைத்

தலைவி வரைவிடை வைத்தலின் ஆற்றுமையை அறிவித்தது (தொல். களவு. 21, ந.)

(கு-பு.) இக்கருத்துக்கு, 'தகான்போலத் தான்தீது மொழியினும் - தகுதி யற்றான் கரிபொய்த்தலைப் போல என்னைப் புறக்கணிக்கும் சொற்களைத் தலைவன் சொல்லினும்' என்று பொருள் கொள்ளவேண்டுமென்று தோற்று கின்றது.

(ஒப்பு) 1. மு. நற். 112 : 2 ; புறநா. 202 : 18.

அரும்பற மலர்தல் : "அரும்பற மலர்ந்த வாய்பூ மராஅத்து" (அகநா. 257 : 6) ; "அரும்பற, வள்ளித ழவிழ்ந்த தாமரை" (புறநா. 246 : 13 - 4.)

கருங்கால் வேங்கை : குறுந். 47 : 1, 343 : 5 ; நற். 151 : 8 - 9, 168 : 1, 257 : 5 ; ஐங். 219 : 1 ; திணைமா. 26.

1 - 2. **வேங்கைமரத்தின்மேல் தோகை இருத்தல்** : "பூத்த வேங்கை வியன்சினை யேறி, மயிலின மகவு நாடன்" (தமிழ்நெறி. மேற்.)

1-3. **வேங்கை மரத்தின்மேலுள்ள மயிலுக்குப் பூக்கொய்யும் மகளிர்** : "விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத் தோகை, பூக்கொய் மகளிரிற் றேன்று நாடன்" (ஐங். 297 : 1-2.) 5. **கண்கண்டது பொய்க்குவதன்று** : குறுந். 184 : 1. 6. **தேக்கொக்கு** : குறுந். 164 : 2, 201 : 2. ; அகநா. 341 : 3, 348 : 2. **மாம்பழம் இனியது** : குறுந். 8 : 1, ஒப்பு. 8. **கடுவனும் அறியும்** : குறுந். 25 : 5.

தலைவனைக் கொடியனென்றல் : குறுந். 252 : 2, 278 : 4, 367 : 1 ; நற். 28 : 4 ; அகநா. 163 : 12, 369 : 10. ; தஞ்சை. 212. (உசு)

தலைவி கூற்று

[தலைவன்பிரிவினை இவள் ஆற்றுளாயினுளென்று கவலையுற்ற தோழியை நோக்கித் தலைவி, "நான் ஆற்றியிருப்பவும் என் மாமை யழகு வீணுகும்படி அதனைப் பசலை உண்டது" என்று கூறியது.]

உஎ. கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇயர் வேண்டும்
5 திதலை யல்குலென் மாமைக் கவினே.

எ - து. பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கொல்லன் அழிசி.

(பி - ம்.) 4 'யுண்ணிய,' 'யுண்ணியர்,' 'யுணீஇய' 5 'யல்குலெம்'

(ப - ரை.) நல் ஆன் தீ பால் - நல்ல பசுவின் இனிய பாலானது, கன்றும் உண்ணாது - அப்பசுவின் கன்றிஞலும் உண்ணப்படாமல், கலத்தினும் படாது - கறக்கும் பாத்திரத்திலும் விழாமல், நிலத்து உக்காங்கு - தரையிற் சிந்தி வீணானதுபோல, திதலை அல்குல்—, என் மாமை கவின் - எனது மாமையாகிய பேரழகை, எனக்கும் ஆகாது - எனக்கு அழகு பயந்து நிற்பதாகாமலும், என்னைக்கும் உதவாது - என் தலைவனுக்கு இன்பம் பயவாமலும், பசலை உணீஇ யர்வேண்டும் - பசலையானது தான் உண்ண விரும்பாநிற்கும்.

(முடிபு) பால் நிலத்து உக்காங்குப் பசலை மாமைக்கவினை உணீஇயர் வேண்டும்.

(கருத்து) தலைவனது பிரிவினால் மாமைக்கவின் அழியப் பசலை பரந்தது.

(வி - ரை.) கலம் - பால்கறக்கும் பாத்திரம்; "கறவைகன் முற்றிக் கலநிறை பொழியும்" (மணி. 12 : 93.) மாமை தலைவிக்கு அழகு பயந்து சிறப்புத்தருதலின், 'எனக்கு மாகாது' என்றாள்; "தனக்கமைந் தன்றிவண் மாமைக் கவினே" (ஐங். 103 : 3 - 4.) என்னை : குறுந். 24 : 2, வி - ரை. மாமை தலைவனுக்குப் பயன் படுதலாவது, அம் மாமைக் கவினை நோக்கி நோக்கி அவன் மகிழ்ச்சிபெறுதல்; "துறைவற், கினிய மன்றவென் மாமைக் கவினே" (ஐங். 146 : 2-3); "நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தம், கண்ணெடு தொடுத்தென நோக்கியும்" (கலி. 4 : 17-8) பசலை - பிரிவாற்றுமையால் உண்டாகும் வேறுபாடான பொன் நிறம். 'பசலை உணீஇயர்' என்றது, "உண்டற் குரிய வல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலு மரபே" (தொல். பொருளி யல், 19) என்னும் மரபு வழுவமைதியின்பாற்படும். திதலை - தேமல். மாமைக் கவின் : இது மகளிநக்குப் பேரழகு பயப்பது; இதன் நிறம் மாந்தளிர் (குறுந். 331), ஆம்பலின் நாருரித்தமெல்லிய தண்டு (நற். 6: 1-2,ஐங். 35), ஈங்கையென்னும் கொடியின் தளிர் (அகநா. 75 : 17-8), அசோகந்தளிர் (கலி. 15 : 12) என்பவற்றின் நிறத்தைப் போன்றதென்று கூறுவர். பசலை படர்ந்தால் இந்நிறம் அழிந்துவிடும்.

கன்று உண்டபின் கலத்திலும் நிறையும் பாலைப்போல் மாமைக் கவின் தலைவிக்குப் பயன்பட்டுத் தலைவனுக்கும் நிறைந்த இன்பத்தைத் தருவதற்குரியதென்பது உவமையாற் பெறப்படும்.

எனக்கும், என்னைக்கும் : உம்மை யிரண்டனுள் முன்னது எதிரது தழீஇயது; பின்னது இறந்தது தழீஇயது.

இது பசலை பாய்தலென்னும் மெய்ப்பாடு.

(மேற்.) 3. *தலைவி தலைவனை என்னையென்றது* (தொல். பொருளியல், 52, ந.)

4. *செய்யியரென்னும் வாய்பாட்டு வினையெச்சம் வினைமுதல் வினையைக் கொண்டு முடிந்தது* (நன். 343, மயிலை, 344, சங்.)

மு. *பசலைபாய்தலென்னும் மெய்ப்பாடு* (தொல். மெய்ப். 22, பேர்; இ. வி. 580); *காதல் கைம்மிகல் என்னும் மெய்ப்பாடு* (தொல். களவு. 21, இளம்.) ' *இது வெள்ளி வீதியார் பாட்டு; இது தம் பெயர் கூறின், புறமாமென்று அஞ்சி வாளாது கூறினர்* ' (தொல். அகத். 54, ந.)

(ஒப்பு.) 3. **என்னை**: குறுந். 14 : 2, ஒப்பு. 5. **நிதலையல்குல்**: குறுந். 294 : 5 ; நற். 133 : 3-4 ; ஐங். 29 : 4, 72 : 2 ; அகநா. 54 : 21, 183 : 2, 189 : 9. 4 - 5. **தலைவன் பிரிவினும் மாலை அழிதல்**: (குறுந். 368 : 2); "நீயே, குவளை யுண்க ணிவளீண் டொழிய, ஆள்வினைக் ககறி யாயி னின்றொடு, போயின்று கொல்லோ தானே படப்பைக், கொடுமூ ளீங்கை நெடுமா வந்த ளிர், நீர்மலி கதழ்பெய றலைஇய, ஆய்நிறம் புரையுமிவண் மாமைக் கவினே" (நற். 205 : 5-11); "கான நாடன் பிரிந்தெனத், தானும் பிரிந் தன்றென் மாமைக் கவினே" (தொல். களவு. 21, ந, மேற் : ' அம்மவாழி '); "களியாரனைத் தென்ன னிளங்கோவென் றெள்ளிப், பணியாரே தம்பா ரிழக்க - அணியாகம், கைதொழு தேனு மிழக்கோ நறுமாவின், கொய்தளி ரன்ன நிறம்" (முத். 83); "மற்கொண்ட நிண்டோண் மறவே னெடுந்தகை, தற்கண்டு மாமைத் தகையிழந்த - எற்காண" (பு. வெ. 307.) **பசலையினும் மாலை அழிதல்**: (குறுந். 331 : 7); "வண்ணம் பசந்து புலம்புறு காலை" (தொல். பொருளியல், 8); "நன்மலை நாடன்,.....பிரியின் மணிமிடை பொன்னின் மாலை சாயவென், அணிநலஞ் சிதைக்குமார் பசலை" (நற். 304 : 4-7); "இனிப்பசந் தன்றென் மாமைக் கவினே", "நன்மா மேனி பசப்ப" (ஐங். 35 : 4, 144 : 3, 221 : 3): "செயலையந் தளிரேய்க்கு மெழினல மந்நலம், பயலையா லுணப்பட்டு", "பன்னலும் படரடப் பசலையா லுணப்பட்டாள், பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ" (கலி. 15 : 12-3, 48 : 16-7); "வாமான்றேர்க் கோதையை மான்றேர்மேற் கண்டவர், மாமையே யன்றே விழப்பது - மாமையிற், பன்னூறு கோடி பழுதோவென் மேனியிற், பொன்னூறி யன்ன பசப்பு" (முத். 53); "பேர் கின் றதுமணி மாலை பிறங்கியள் ளற்பயலை, ஊர்கின்றது" (திவ். திருவி ருத்தம், 12); "மாலை பொன்னிறம் பசப்ப" (பு. வெ. 199.) (உள)

---

* குறுந்தொகை, 26-ஆம் செய்யுளை இயற்றிய ஆசிரியர்பெயர் வெள்ளி வீதியார என்றும், இப்பாட்டின் ஆசிரியர் பெயர் கொல்லனழிசி என்றும் பிரதிகளில் உள்ளன ; நச்சினார்க்கினியர் கூற்றால் இவ்விரண்டும் மாறி எழுதப்பட்டதாகக் கொள்ளவேண்டுமென்று தோற்றுகின்றது.

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருளுக்காகப் பிரிந்த காலத்தில், அவன் விரைந்து வாராமைபற்றிக் கவலையுற்ற தோழியை நோக்கி, "என் துன்பத்தை அறியாமல் துயில்கின்ற இவ்வூரின்றிறத்து யான் யாது செய்வேன்?" என்று தலைவி சினந்து கூறியது.]

உஅ. முட்டு வேன்கொ ருக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்
டாஅ வொல்லெனக் கூவு வேன்கொல்
அலமர லசைவளி யலைப்பவென்
5. உயவுநோ யறியாது துஞ்சு மூர்க்கே.

எ - து. வரைவிடை யாற்றுளாய்க் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஔவையார்.

(பி - ம்.) 1. 'மூட்டுவேன்கொல்' 2. 'ஓரே யானும்'

(ப - ரை) அலமரல் - சுழலுதலையுடைய, அசை வளி - அசைந்து வருகின்ற தென்றற் காற்று, அலைப்ப - வருத்தா நிற்க, என் உயவு நோய் அறியாது - எனது வருந்துதலையுடைய காம நோயை உணர்ந்துகொள்ளாமல், துஞ்சும் ஊர்க்கு - கவலையின்றித் தூங்கும் ஊரிலுள்ளாரை, யான், முட்டுவேன்கொல் - முட்டுவேனே? தாக்குவேன் கொல் - தாக்குவேனே? ஓர் பெற்றி மேலிட்டு - ஒருதலைக்கீட்டை மேற்கொண்டு, ஆஅ ஒல்லென - ஆவென்றும் ஒல்லென்றும் ஒலி உண்டாக, கூவுவேன் கொல் - கூப்பிடுவேனே? ஓரேன் - இன்னது செய்வதென்பதை அறியேன்.

(முடிபு) ஊரை முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்? கூவுவேன் கொல்? ஓரேன்.

(கருத்து) என்னுடைய நோயைத் தாயர் முதலியோர் அறியாமையின் யான் ஆற்றேனுயினேன்.

(வி - ரை.) முட்டுதல் உடம்பாற்றீண்டுதலென்றும், தாக்குதல் கோல் முதலிய கருவிகளால் தீண்டுதலென்றும் கொள்க; முட்டுதல் - எதிர்த்தலுமாம் (தொல். களவு. 21.) ஓர் பெற்றி மேலிட்டுக் கூவுதலாவது, 'பாம்பு பாம்பு' என்றேனும், 'திருடன் திருடன்' என்றேனும் பிறவாறேனும் கூவுதல். இங்ஙனம் கூவுதலால் ஊரார் எழுந்து அலர் தூற்றுவர்; அவ்வலர் தலைவன்

தன்னை வரைந்து கொள்வதை விரைவிற் கூட்டும் உபாயமாதலின் தலைவிக்கு இன்பம் பயக்கும்; "அலரெழ வாழியர் நிற்கும்" (குறள், 1141.) உயவு: உயாவென்பதன் திரிபு; "உயாவே யுயங் கல்" (தொல். உரி. 71.) உயவுநோய்: வருத்தத்தையுடைய காம நோய் (கலி. 35: 22, ந.) நோய் அறியாது துஞ்சுமென்றமையால் தலைவி துஞ்சாமை பெறப்படும். ஊர்க்கு - ஊரை; உருபுமயக்கம்; "உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்" (சிலப். பதி. 56.)

ஊர்க்கு - ஊரினர்பொருட்டு, முட்டுவேன்கொல் - சுவர்முத லியவற்றில் முட்டிக்கொள்வேனே? தாக்குவேன்கொல் - தாக்கிக் கொள்வேனே வென்று பொருள் கூறலும் ஆம்.

(ஒப்பு.) 3. ஆஅ: "ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பிலெடு" (பழம் பாடல்); "ஆவம்மா வம்மாவென் னம்மா வகன்றனையே" (சீவக. 1804.)

அசைவளி: குறுந். 273: 2; கலி. 126: 12.

4. அசைவளி அலைத்தல்: "தைவர லசைவளி மெய்பாய்ந் துறுதரச், செய்வுறு பாவை யன்னவென், மெய்பிறி தாகுதல்" (குறுந். 195: 5-7.)

5. உயவு நோய்: கலி. 35: 22, 58: 7; 113: 3. துஞ்சும் ஊர்: குறுந். 302: 7. தலைவி துஞ்சாமை: குறுந். 6: 4, ஒப்பு. (உ)

தலைவன் கூற்று

[தலைவன் இரவுக்குறியை விரும்ப, அதனைத் தோழி மறுத்து, வரைந்து கொள்ள வேண்டுமென்று குறிப்பித்தாள்; பின்னும் அவனது நெஞ்சம் இரவுக்குறியை விரும்ப, "நின் குறையை யறிந்து நிறைவேற்றுவார் அரியராகவும், நீ வருந்துதலினைற் பயன் யாது?" என்று அவன் அதனை நோக்கி இரங்கிக் கூறியது.]

உக. நல்லுரை யிகந்து புல்லுரை சாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
5. பெரிதா லம்மநின் பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

எ - து. இரவுக்குறி மறுக்கப்பட்ட தலைமகன், இவர் எம்மை மறுத்தாரென்று வரைந்துகொள்ள நினையாது பின்னுங் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது (பி - ம். நோக்கிக் கூறுகின்றான்.)

[இவர் - தோழியும் தலைவியும்.]

ஔவையார்.

(பி - ம்.) 1 'புல்லுரைத்தாஅய்' 2. 'பெயனீர்க்கேற்றன' 4 'அரிதயர்வுற்றனை', 'என்றும்'

(ப - ரை.) நெஞ்சே—, நல் உரை இகந்து - நல்ல உரைகள் நீங்கி, புல் உரை தாஅய் - பயனற்ற உரைகள் பரவப்பெற்று, பெயல் நீர்க்கு ஏற்ற - பெய்தலையுடைய மழையின் நீரை ஏற்றுக் கொண்ட, பசு கலம்போல - சுடப்படாத பசுமண்ணாலாகிய பாண்டத்தைப்போல, உள்ளம் தாங்கா - உள்ளத்தினாற் பொறுக்கமுடியாத, வெள்ளம் நீந்தி - ஆசைவெள்ளத்தில் நீந்தாநின்று, அரிது - பெறுதற்கரியதை, அவாவுற்றனை - பெறவிரும்பினை; உயர் கோடு - உயர்ந்த மரக்கொம்பிலுள்ள, மக உடை மந்திபோல - குட்டியையுடைய பெண் குரங்கு தன் குட்டியால் தழுவப்பெற்று அமைவதுபோல, அகன் உற - மனம் பொருந்த, தழீஇ - நின் கருத்தைத் தழுவிக்கொண்டு, கேட்குநர் - நின் குறையைக் கேட்டு நிறைவேற்றுவாரை, பெறின் - பெறுவாயாயின், நின் பூசல் - உனது போராட்டம், நன்றும் பெரிது - மிகவும் பெருமையுடையது.

(முடிபு) நெஞ்சே, நின் பூசல் கேட்குநர்ப் பெறின் பெரிது.

(கருத்து) இனித் தலைவியை இரவிற் காண்டல் அரிது.

(வி - ரை.) நல்லுரையென்றது தன் விருப்பத்திற்கு இணங்கி இரவுக்குறி நேரும் உரையை. புல்லுரையென்றது இரவுக்குறி மறுத்து வரைவுகடாயதை. பசுங்கலம் நீரைத் தாங்காமை உள்ளம் ஆசைவெள்ளத்தைத் தாங்காமைக்கு உவமை. நீர்க் கேற்ற - நீரையேற்ற; உருபுமயக்கம் (குறுந். 28 : 5.) நீந்துதல் - உட்டுளைதல்; ஆசைவெள்ளத்தில் நிலையின்றித் தடுமாறுதல். அரிது - இரவுக்குறி; தோழி அதனை மறுத்தமை அரிதென்பதனாற் பெறப்பட்டது. நெஞ்சுக்கு உள்ளம் கூறுதல் மரபு. நெஞ்சை இங்கே விளித்துக் கூறியது, "நோயு மின்பமு மிருவகை நிலையிற், காமங் கண்ணிய மரபிடை தெரிய, எட்டன் பகுதியும் விளங்க வொட்டிய, உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோல், மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" (தொல். பொருளியல், 2) என்னும் இலக்கணம்பற்றி. நன்றுமென்பது மிகுதியைப் புலப்படுத்தி நின்றது; "நன்றும், சேய வம்ம விருவர்தம் மிடையே" (குறுந். 237 : 3-4.) கேட்குநரென்றது கேட்டுக் குறை தீர்ப்பவர்களை; "வழிபடு வோரை வல்லறி தியே" (புறநா. 10 : 1) என்பதையும், 'வழிபடுவோரை வல்லறிதியென்றது, அறிந்து

அவர்களுக்கு அருள் செய்வை யென்பதாம்' என்னும் அதன் விசேடவுரையையும் காண்க. கேட்குநர்ப் பெறினேயென்றது கேட்பார் அரியராயினமையை உணர்த்தியது (குறள், 334, பரி மேல்.)

(மேற்.) 5-6. மகவென்பது குரங்கின் இளமைப் பெயர் (தொல். மரபு. 14, பேர்.) மு. தோழியால் வரைவுகடாவப்பட்ட பின்னரும் தலைவன் கள வொழுக்கம் வேண்டிக் கூறியது (தொல். களவு. 17, இளம்.) தோழி இவ் விடத்துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்பட நிறுத்தலில் தனக்கு உண் டாகிய வருத்தத்தால் தலைவனுக்குக் கூற்று நிகழும் (தொல். களவு. 11, ந.)

(ஒப்பு.) 2. **நீரையேற்ற பசுங்கலம்** : "ஈர்மட் செய்கை நீர்படு பசுங் கலம், பெருமழைப் பெயற்கேற் றுங்கு" (நற். 308 : 9-10); "பசுமட், கலத்துணீர் பெய்கிரீஇ யற்று" (குறள், 660); "எழிலியாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பி னின்றுளி படநீனந் திருகி" (திருவிசைப்பா, கருவூர்த். திருவிடைமருதூர், 7.)

3. **ஆசைவெள்ளம்** : "இருவே நீந்தும் பருவரல் வெள்ளம்" (நற். 339 : 4.)

4. அரிது : குறுந். 298 : 2. நன்றும் பெரிது : குறுந். 237 : 3. 3-4. **நெஞ்சுக்கு உள்ளம் கூறும் மரபு** : "வருந்தினை வாழியென் னெஞ்சே.....செல்லினிச் சிறக்கநின் னுள்ளம்" (அகநா. 19 : 2-8.)

6. **மகவுடை மந்தி** : "பார்ப்புடை மந்திய மலை", "பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்" (குறுந். 278 : 7, 335 : 4); "மலையார் சாரன் மகவுடன் வந்த மடமந்தி" (தே. திருஞா. திருக்குற்றாலம்.) 6-7. **மந்தி மகவைத் தழுவுதல்** : "குன்றி வாழையின் கொழுங்கனி நுகர்ந்துதன் குருளையைத் தழுவிப்போய், மந்தி மாம்பணை மேல்வைகு நாங்கூர் வண்புரு டோத்தமமே" (திவ். பெரியதிரு. 4. 2 : 9.)

மு. பின்னிலை, வேட்டல் பெரிதினி தேபின்னர் மாறிநின்று
தன்னிலை தேய்ந்து தணியா நுயிரைத் தழீஇக்கொடொன்று
முன்னிலை யீச னருள்போற் றழுவி முனிதுயர்கூர்
என்னிலை நோக்கி யிரங்கவல் லார்ப்பெறி னேழைநெஞ்சே"
(தணிகைப். களவுப். 259.) (உக)

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருளின்பொருட்டுப் பிரிந்த காலத்தில் தலைவியது ஆற்றுமைக் காரணத்தைத் தோழி வினவத் தலைவி, "இயல்பாக ஆற்றியிருக்கும் யான், தலைவனை மருவியதாகக் கண்ட பொய்க்கனவினால் வருத்தமுறுவேனையினேன்" என்று கூறியது.]

நம. கேட்டிசின் வாழி தோழி யல்கற்
பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனை மருட்ட
வேற்றெழுந்
தமளி தைவந் தனனே குவளை
5. வண்டுபடு மலரிற் சா அய்த்
தமியேன் மன்ற வளியேன் யானே.

எ - து. "அவர் நின்னை வரைந்து (பி - ம். அவர் வரைந்து) கோடல் காரணத்தாற் பிரியவும், நீ ஆற்றுயாகின்றதென்?" (பி. ம். ஆற்றியிராதாற்றுதாகின்றதென்) என வினைய தோழிக்குத் தலைமகள், (பி. ம். தோழிக்குயான்) "யான் ஆற்றியுளேனெனவும் கனவு வந்து என்னை இங்ஙன் நலிந்தது' எனக் கூறியது. (பி. ம். நலிந்ததெனக் கூறுகின்றாள்.)

கச்சிப் பேட்டு நன்னாகையார்.

(பேட்டு: இது 'பட்டு' வன வழங்குகின்றது.)

(பி - ம்.) 1 'யகலநற்' 2 'மெய்யுறமரீஇ' 3 'வாய்த்தரு' 'வரத் தகைகனமுன் மருட்ட' 6 'வளியன்'

(ப - ரை.) தோழி—, கேட்டிசின் - கேட்பாயாக: அல்கல் - இராக்காலத்தில், பொய்வலாளன் - பொய் கூறுதலில் வன்மை யுடைய தலைவன், மெய் உறல் மரீஇய - என் உடம்புடன் அணை தலைப் பொருந்திய, வாய் தகை - மெய்போலுந் தன்மையையுடைய, பொய்கனை - பொய்யாகிய கனவு, மருட்ட - மயக்கத்தை உண் டாக்க, ஏற்று எழுந்து - துயிலுணர்ந்து எழுந்து, அமளி தைவந்த னன் - தலைவனென எண்ணிப் படுக்கையைத் தடவினேன்; வண்டு படு குவளை மலரின் - வண்டுகள் வீழ்ந்து உழக்கிய குவளைமல ரைப் போல, சா அய் - மெலிந்து, மன்ற - நிச்சயமாக, தமியேன் - தனித்தவளாயினேன்; யான் - அத்தகைய யான், அளியேன் - அளிக்கத்தக்கேன்!

(முடிபு) தோழி, கேட்டிசின்; பொய்வலாளன் மரீஇய பொய்க் கனை மருட்ட எழுந்து அமளி தைவந்தனன்; தமியேன்; அளியேன்!

(கருத்து) யான் தலைவனோடு அளவளாவியதாகக் கனக்கண் டேன்.

(வி - ரை.) கேட்டிசின்: சின் முன்னிலையசைச்சொல் (தொல். இடை. 27.); நற். 103: 1. வாழி: அசைநிலை. அல்கல் - இரவு (கலி.

65 : 2.) *பொய்வலாளனென்றது தான் கூறிய நாளில் வந்து வரையாமையைப் புலப்படுத்தியது. வாய்த்தகைப் பொய்க்கனவு - உண்மையைப் போலத் தோன்றிப் பொய்யாக முடியும் கனவு; இது கனவென்னும் மெய்ப்பாடு. ஏற்றெழுதல் - துயிலுணர்ந்தெழுதல் (மலைபடு. 257, ந.) தமியேனென்றுள் நனவில் தனியளானமை பற்றி.*

(மேற்.) மு. *காமம் இடையீடுபட்டுழித் தலைவி கனக்காண்டலும் உரித்து* (தொல். பொருளியல், 3, இளம், இ. வி. 571) ; *வரைதற்குப் பிரிய, வருந்துகின்றது என்னென்ற தோழிக்குத் தலைவி கனவுநலிவுரைத்தல்* (தொல். களவு. 21, ந.) ; *தலைமகள் கனவுநலிவுரைத்தல்* (நம்பி. 164 ; இ. வி. 521.)

(ஒப்பு.) 2. **பொய்வலாளன்** : குறுந். 25 : 2, ஒப்பு.

3. **தலைவி கனக்காண்டல்** : குறள், 1211-20. **வாய்த்தகைப் பொய்க்கனவு** : *" வறுங்கை காட்டிய வாயல் கனவின், ஏற்றேக் கற்ற வுலமரல் "* (அகநா. 39 : 23-4.) **ஏற்றெழுதல்** : மலைபடு. 257 ; கலி. 12 : 8, 37 : 20 ; பெரும். 2. 11 : 66. **பொய்க்கனக்கண்டு எழுதல்** : குறுந். 147 : 3-4.

1-3. **அல்கற்கனவு** : *" அல்கற், கனவுகொ னீகண்டது "* (கலி. 90 : 21.)

5. **வண்டுபடு மலரைப்போல மெலிதல்** : *" காமருதேன், சுரும்புண் டெழுநன் மலரிற் றெலைநலம் "* (அம்பிகாபதிகோவை, 16) : *" வண்டுபோ கட்ட மலர்போன் மருண்மாலை, உண்டுபோ கட்ட வுயிர்க்கு "* (நள. சுயம் வர. 119.)

மு. *" களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை*
அளியா னளிப்பானே போன்றுன்—தெளியாதே
செங்காந்தண் மெல்விரலாற் சேக்கை தடவந்தேன்
என்காண்பெ னென்னலால் யான் " (முத். 63.) (கo)

தலைவி கூற்று

[*அயலார் தலைவியை மணம் செய்யும்பொருட்டு முயன்ற காலத்தில் அதுகாறும் தலைவனைப் பற்றிய செய்தியை வெளியிடாத தலைவி, " நான் ஆடுகளத்தில் துணங்கையாடும் இயல்புடையேன் ; என்னோடு நட்புச்செய்து பிரிந்தமையால் என் கைவளைகளை நெகிழச்செய்த தலைவன் அத்துணங்கைக்குத் தலைக்கை தந்தான். அவன் இப்பொழுது எங்கே உள்ளானோ ? பல இடங்களில் தேடியும் கண்டேனில்லை " என்று உண்மையைத் தோழிக்கு வெளிப்படுத்தியது.*]

ங. மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
5. கோடு ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே.

எ - து. நொதுமலர் வரைவுழித் தோழிக்குத் தலைமகள் அறத் தொடு நின்றது.

[நொதுமலர் - தலைவனல்லாத அயலார். வரைவுழி - மணத் திற்கு உரிய பரிசத்தோடு வந்தபொழுது.]

ஆதிமந்தியார். (கு - பு.) ஆதிமருதியாரென்று படித்தற்குமிட முண்டு.

(பி - ம்.) 3 'ஆண்டுங்' 5 'ஞெகிழ்த்த' 6 'குரிசிலுமாடுகள'

(ப - ரை.) மாண் தக்கோனை - மாட்சிமை பொருந்திய தகு தியை யுடையோனை, மள்ளர் குழீஇய விழவினானும் - வீரர் கூடி யுள்ள சேரிவிழாவின் கண்ணும், மகளிர் தழீஇய துணங்கையா னும் - மகளிர் தம்முள் தழுவி ஆடுகின்ற துணங்கைக்கூத்தின் கண்ணும், யாண்டும் - ஆகிய எவ்விடத்தும், காணேன் - கண்டே னில்லை; யானும் ஓர் ஆடுகளம் மகளே - யானும் ஆடுகின்ற களத் திற்குரிய ஒரு மகளே; என் கை - என் கையிலுள்ள, கோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த - சங்கை அறுத்துச் செய்த விளங்கு கின்ற வளையல்களை நெகிழச் செய்த, பீடு கெழு - பெருமை பொருந்திய, குரிசிலும் - தலைவனும், ஓர் ஆடுகளம் மகனே - ஆடு கின்ற களத்திலுள்ள ஒருவனே.

(முடிபு) மாண் தக்கோனைக் காணேன்; யானும் ஓர் ஆடுகள மகள்; குரிசிலும் ஓர் ஆடுகளமகன்.

(கருத்து) என்னோடு துணங்கையாடிய தலைவன் ஒருவன் உளன்.

(வி - ரை.) மள்ளர் - வீரர் (குறுந். 34: 5.) திருவிழாக் காலங்களில் வீரர்கள் தத்தம் சேரிகளில் விளையாட்டுப்போர் நிகழ்த்துவர்; "மாயோன் மேய வோண நன்னாள்.....மறங் கொள் சேரி மாறுபொரு செருவில், மாரு துற்ற வடுப்படு நெற் றிச், சுரும்பார் கண்ணிப் பெருப் புகன் மறவர்" (மதுரைக். 591-6) என்பதையும், 'அத்திருநாளிற் பொரும் சேரிப்போர் கூறினர்,

(ந.) என்னும் அதன் உரையையும், "கூர்தரு வேல்வல்லார் கொற் றங் கொள் சேரிதனிற், கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான், ஆர்திரைநாள் காணுதே போதியோ பூம்பாவாய்" (தே. திருஞா.) என்பதையும் பார்க்க. துணங்கை - ஒருவகைக்கூத்து; இதனைச் சிங்கிக் கூத்தென்பர் (முருகு. 56, வேறுரை); "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத், துடக்கிய நடையது துணங்கை யாகும்" (முருகு. 56, ந. மேற்.) என்பது இதன் இலக்கணம்.

மகளிர் விழாக்காலத்தே துணங்கையாடுதலும் ஆடவர் அவர் கட்கு முதற்கை கொடுத்தலும் பண்டை வழக்கங்கள்; "முழ விமிழ் துணங்கை தூங்கும் விழவின்" (அகநா. 336 : 16) என்பது விழாவில் துணங்கைக்கூத்து நடத்தலையும், "நிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக், கரையிடைக் கிழிந்தநின் காழகம் வந் துரையாக்கால்" (கலி. 73 : 16 - 7), "மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர், எல்வளை மகளிர் தலைக்கை தருஉந்து" (புறநா. 24 : 8 - 9) என்பவை ஆடவர் முதற்கை தருதலையும் விளக்கும். விழவினனும், துணங்கையானும் என்ற இடங்களில் மூன்றன் உருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன (குறள், 1196, 1213, பரிமேல்.) விழவின்கண்ணும் துணங்கையின்கண்ணும் காணே னென்றது தலைவன் வீரனென்பதையும் ஆடுகளமகனென்பதை யும் புலப்படுத்தியது. யாண்டும் - வேறு எவ்விடத்துமென்றலு மாம். மாண்டக்கோனென்றது தனக்கு ஏற்றவனென்றவாறு. யானும் ஓராடுகள மகளே யென்றது தான் துணங்கையாடியதை யும் குரிசிலும் ஓராடுகள மகனே யென்றது அவன் அத்துணங் கைக்குத் தலைக்கை கொடுத்தானென்பதையும் புலப்படுத்தி அறத் தொடு நின்றதாயிற்று. வளைநெகிழ்த்த என்றது தன்பால் உண் டான வேறுபாட்டிற்குக் காரணம் தலைவனது பிரிவென்னும் நினைவிற்று. பீடுகெழுகுரிசிலென்பது தலைவனது உயர்வை வெளிப் படுத்தியவாறு.

இத்தகைய தலைவனொருவன் என்னோடு நட்புச்செய்திருப்ப தொதுமலர் வரைதல் அறனன்று. ஆதலின் நீ அதனை மாற்ற முயல்வாயாகவென்பது குறிப்பு.

(மேற்.) 1-3. 'நாயகியானவள் நாயகனை ஸர்வேச்வரனைப் புறம்பே திரளிடையாகிலுங் காண ஆசைப்பட்டுப் புலம்பின பாசுரம்.....இந்தக் கிளவி, மள்ளர்.....கோனையென்று அகத்தமிழிலும் சொல்லப்பட்டது' (திவ். திருவிருத்தம், 84, அழகிய மணவாளஜீயர் ஸ்வாபதேசம்.)

3 - 4. இருவகைக் கட்டளையடியும் தொடுத்த அடிமோனை வந்தது (தொல். செய். 92, ந.)

மு. 'இது காதலற்கெடுத்த ஆகிமந்திபாட்டு; இவை தத்தம் பெயர் கூறிற் புறமாமென்று அஞ்சி வாளாது கூறினர். ஆகிமந்தி தம் பெயராலும் தம் காதலனாகிய ஆட்டனத்தி பெயராலும் கூறிற் காஞ்சிப்பாற்படும்; ஆகிமந்திபோல, ஏதஞ் சொல்லிப் பேதுபிறி தறலே யெனவும், வெள்ளி வீதியைப் போல நன்றும், செலவயர்ந் திசினால் யானே யெனவும் அகத்தி ணைக்கண் சார்த்து வகையான் வந்தனவன்றித் தலைமைவகையான் வந்தில வென்பது' (தொல். அகத். 54, ந.); 'நொதுமலர் வரைவின்கண் தலைவி தன்குடிப்பிறப்பும் கற்பும் முதலிய உயர்ச்சிக்கேற்ப அதனை மறுத்துத் தலைவன் வரையுமாறு நீ கூறெனத் தோழிக்குக் கூறும்' (தொல். களவு. 16, ந); காமக் கிழவனுள்வழிப்படினு மென்பதற்கு மேற்கோள்; 'ஆண்டுங் காணேனென அவனுள்வழிப்பட்டுக் கூறினமையின் கற்பின்பாலதாய்த் தோழியும் தலைவனும் பெண்டன்மையிற் றிரியக் கருதாது நன்கு மதித்த வாறு காண்க' (தொல். களவு. 22, ந.); 'மள்ளர் குழீஇய விழவினனும் .....என்பனவற்றுள் தலைவி தேடிச் சென்றதும் செல்வாமென்றதும் சிறைப்புறமாக வரைவுகடாய பொருட்பயன் தருதலின், அறக்கழிவுடைய வேனும் அமைந்தன' (தொல். பொருளியல், 24, ந.)

(ஒப்பு.) 2. **மகளிர் துணங்கை**: "வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர், துணங்கை நாளும் வந்தன" (குறுந். 364: 5-6); "இலங்குவளை மடமங்கையர், துணங்கையஞ்சீர்த் தழூஉ" (மதுரைக். 159 - 60); "கலிகெழு துணங்கை யாடிய மருங்கின்", "முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப்புணை யாகச், சிலைப்புவல் லேற்றிற் றலைக்கை தந்துநீ, நளிந்தனை வருதல்" (பதிற். 13: 5, 52: 14-6); "தணந்ததன் றலையுநீ தளரிய லவரொடு, துணங்கையா யெனவந்த கவ்வை", "நினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின், தமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே" (கலி. 66: 17-8, 70: 13-4.) வீரர்கள் ஆடும் துணங்கையும், பேய்களாடும் துணங்கையும் உண்டு.

1-2. **விழாவும் துணங்கையும்**: "முழவுமிழ் மகலாங்கண், விழவு நின்ற வியன்மறுகிற், றுணங்கையந் தழூஉவின் மணங்கமழ் சேரி", "தழூஉப் பிணையூஉ, மன்றுதொறு நின்ற குரவை சேரிதொறும், உரையும் பாட்டு மாட்டும் விரைஇ, வேறுவேறு கம்பலை வெறிகொள்பு மயங்கிப், பேரிசை நன்னன் பெறும்பெயர் நன்னாள், சேரி விழவி னர்ப்பெழுந் தாங்கு" (மதுரைக். 327-9, 614-9); "விழவயர் துணங்கை" (நற். 50: 3); "துணங்கையர் குரவையர்" (சிலப். 5: 70.) 4. **ஆடுகளமகன்**: அகநா. 370: 15. 5. **கோடரிலங்குவினை, சங்கை அறுத்து வினைசெய்தல், வினைநெகிழ்தல்**: குறுந். 11: 1, ஒப்பு.

மு. "வில்லார் விழவினும் வேலாழி சூழுலகில்
நல்லார் விழவகத்து நாங்காணேம்—நல்லாய்
உவர்க்கத் தொரோவுதவிச் சேர்ப்பனைப் பாரைச்
சுவர்க்கத் துளராயிற் சூழ்" (கிணைமா. 62)

" தையனல் லார்கள் குழாங்கள் குழிய குழுவினுள்ளும்
ஐயநல் லார்கள் குழிய வீழ்வினு மங்கங்கெல்லாம்
கையபொன் னிழிவெண் சங்கொடுங் காண்பா னவாவுவனுன்
மையவண் ணுமணி யேமுத்த மேயென்றன் மாணிக்கமே "
(திவ். திருவிருத்தம், 84.) (கக)

தலைவன் கூற்று

[தோழியினிடம் தன் குறைகூறி அவள் உடம்படாமையை அறிந்த தலைவன், " யான் தலைவியின்பிரிவை ஆற்றேன்; அவளை அடையும் பொருட்டு மடலேறினால் அவளுக்குப் பழி உண்டாகும்; வாளாவிருப்பின் வாழ்தலும் பழி; ஆதலின் இவை நேரா வண்ணம் நீ குறை நேர்வாயாக " என்று அவளுக்குக் கூறியது.]

நஉ. காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்
மாவென மடலொடு மறுகிற் ரோன்றித்
5. தெற்றெனத் தூற்றலும் பழியே
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

எ - து. பின்னின்ரோன் கூறியது (பி - ம். கூறுகின்றது.)

[பின் நின்ரோன் - தோழி தன் குறையை ஏற்றுக்கொள்ளாத காலத்தில் அவளுடைய உதவியை விரும்பி அவளை இரந்து நின்ற தலைவன்; " இரந்து பின்னிற்றல் " (நம்பி 143.)]

அள்ளூர் நன்முல்லையார்

(பி - ம்.) 2 'விடியலுமின்றிப்' 5 'தோற்றெனத்'

(ப - ரை) காலையும் - காலைப்பொழுதும், பகலும் - உச்சிப் பொழுதும், கை அறு மாலையும் - பிரிந்தோர் செயலறுதற்குக் காரணமாகிய மாலைப்பொழுதும், ஊர் துஞ்சு யாமமும் - ஊரினர் துயில்கின்ற இடையிரவும், விடியலும் - விடியற்காலமும், என்ற இ பொழுது இடை தெரியின் - என்ற இச்சிறு பொழுதுகள் இடையே தோற்றுமாயின், காமம் பொய் - அத்தகையோருடைய காமம் உண்மையன்று; பிரிவு தலைவரின் - பிரிவு வருமாயின், அப்போது, மா என - குதிரையெனக்கொண்டு, மடலொடு - பனை மடலாற் செய்த குதிரையின் உருவத்தை யூர்ந்து, மறுகில் தோன்றி - தெருவில் வெளிப்பட்டு, தெற்றென - யாவரும் இன்

ளால் இவன் இச்செயல் செய்தானென்று தெளியும்படி, தூற்ற லும் - தலைவி செய்த துயரைப் பலர் அறியச் செய்தலும், பழி - பழிக்குக் காரணமாகும்; வாழ்தலும் பழி - அது செய்யாது உயி ரோடு வாழ்ந்திருத்தலும் பழிக்குக் காரணமாகும்.

(முடிபு.) பொழுது இடைதெரியின், காமம் பொய்; பிரிவு தலைவரின் தூற்றலும் பழியே; வாழ்தலும் பழியே.

(கருத்து) தலைவியைப் பிரியின் உயிர் வாழேன்.

(வி - ரை.) "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" (குறள், 1227) என்பவாகலின். பிரிந்தார் காம நோய் மிக்குச் செயலறுதற்கு ஏதுவாகும் மாலையை, 'கையறு மாலை' என்றான். இரவின் முதல்யாமத்தை யொழித்து இடை யாமத்தைக் கருதி, 'ஊர்துஞ்சியாமமும்' என்றான்; ஊரினர் துஞ்சும் யாமம் அதுவாதலின். இடை - வேறுபாடுமாம். பொய்யே: ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது.

சிறுபொழுது ஐந்தென்பது ஒரு சாரார் கொள்கை; "மாலை யாமம் வைகறை யெற்படு, காலை வெங்கதிர் காயுநண் பகலென, கவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்" (நம்பி. 12); "சிறு பொழு தைந்தினும்" (பிரபு. 11 : 4); சிவஞானமுனிவர் கொள்கை யும் இதுவே. என்றிப்பொழுது; அகரம் தொகுத்தல். காமம் - இங்கே மெய்யுறுபுணர்ச்சி.

தெற்றென - தெளிய; 'தெற்றெனக் கேண்மின்' (கலி.144: 11, உரை.) தெற்றெனத் தூற்றலாவது, 'தலைவி என்னைத் துன்புறுத்தினள்; அவள் என் குறையறிந்து நிறைவேற்றுமை யின் இம்மலர்மாமேல் ஏறிவருவேனையினேன். நீங்கள் தலைவியை எனக்கு மணம்புரிவித்து இத்துன்பத்தினின்றும் என்னைப் பாதுகாக்க வேண்டும்' என்று ஊரிலுள்ள சான்றோரை விளித் துக் கூறுதல்; இதனைக் கலித்தொகை, 138 - 141 ஆம் செய்யுட்களால் உணர்க.

பழியே, வரினே : ஏகாரங்கள் அசைநிலை.

'நான் தலைவியைப் பிரிந்திருக்க ஆற்றேன். நீ என் குறையை மறுத்தாயாயின் மடலேறித் தலைவியைப் பெறலாகும்; ஆயினும் அது தலைவிக்குப் பழி தருவதாதலின் அது செய்யத் துணிந்தேனல் லன்; அது செய்யாது உயிர் வைத்துக்கொண்டு வாழ்தலும் எனக்கு அரிது; ஆதலின் உயிர் நீத்தலே நன்று' என்று தலைவன் தோழிக்கு இரக்கம் உண்டாகும்படி கூறினன்.

களவொழுக்கத்தின் இலக்கணங்களுள் இறுதியாகிய சாக்காடு என்பது இதனுள் வந்தது (தொல். களவு. 9.)

(மேற்.) 1 - 3. சிறுபொழுது ஐந்து (தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி.)

(ஒப்பு.) 1. **கையறுமாலை**: குறுந். 387 : 2; ஐங். 183 : 4. **மாலையில் தனித்தோர் செயலறுதல்**: "ஐயறி வகற்றுங் கையறு படரோ, டகலிரு வான மம்மஞ் சீனப், பகலாற்றுப் படுத்த பழங்கண் மாலை" (அகநா. 71 : 7 - 9); குறள், 1221-1230, பார்க்க. 2. **ஊர்துஞ்சியாமம்**: "தஞ்சூர் யாமத் தானும்" (குறுந். 302 : 7); "உறைமையக் குற்ற வூர்துஞ் சியாமத்து" (நற். 262 :3); "தஞ்சூர் யாமத்துந் துயிலறி யலரே" (ஐங். 13 : 4.) 3. **காமத்தாற் பொழுது இடைதெரியாமை**: "போழ்கிடைப் படாமன் முயங்கியு மமையார்", "பொழுகிடைப் படாஅப்பின் வாழ்வாளோ" (கலி. 4 : 10, 24); "நாளிடைப் படினென் றேழி வாழாள்", "எல்லீயு மிரவு மென்னது கல்லெனக், கொண்டல் வான்மழை பொழிந்த வைகறைத், தண்பனி யற்சிரந் தமியோர்க் கரிதெனக், கனவினும் பிரிவறி யலனே" (அகநா. 112 : 9, 178 : 17-20); "போகப் பெருநுகம் பூட்டிய காலை, மாக விசும்பின் மதியமு ஞாயிறும், எழுதலும் படுதலு மறியா வின்பமொடு", "மட்டுவிரி கோதையொடு மகிழ்ந்துவிளை யாடிச், செங்கதிர்ச் செல்வ னெழுச்சியும் பாடும், திங்களு நாளுந் தெளிதல் செல்லான்" (பெருங். 2 9: 182-5, 4. 2 : 86-8); "தூம மேகம மூழ்துகிற் சேக்கைமேற், காம மேறுகர் வார்தம காதலால், யாம மும்பக லும்மறி யாமையாற், பூமி மாநகர் பொன்னுல கொத்ததே" (சீவக. 135); கங்குலும் பகலும் பிரிவில ராகிக் காதல்வெள் ளத்திடை யழுந்திப், பங்கமில் போக நுகருநாள் வந்து புகுந்தது பங்குனித் திங்கள்" (உத்தர. சீதை வனம். 11.)

4. **மடல்மா**: குறுந். 17 : 1, ஒப்பு. **மடலேறி மறுகில் தோன்றல்**: குறுந். 17 : 1-3, ஒப்பு.

5. **தெற்றென**: பொருந. 174; அகநா. 48 : 4; குறள், 581.

6. **பிரிவினுல் வாழாமை**: (குறுந். 57 : 3-4, 168 : 7); "பிரியின் வாழா தென்போ தெய்ய" (பழம்பாடல்.) (கூ)

தலைவி கூற்று

[தலைவனுக்குத் தூதாக வந்த பாணனை ஏற்றுக்கொண்ட தலைவி, "இவன் நன்றுகப் பேசுகின்றான்; இங்கே விருந்து பெறுவான்" என்று உணர்த்தியது.]

கூ. அன்ன யிவனே ரிளமா ணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனி யொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.

எ - து. வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது.

[வாயில் - தூது; வாயில் நேர்வாள் - தூதிற்கு உடம்படுவாளாகி.]

படுமரத்து மோசிகீரன். (பி - ம். படிமத்து மோசிகீரன், படுமத்து மோசிகீரன்.)

(பி - ம்) 1 'ரினமாணைக்கன்' 2 'தென்ன கொல்லோ'

(ப - ரை) அன்னாய் - தோழியே, இவன் ஓர் இள மாணைக்கன் - இப்பாணன் ஓர் இளைய மாணைக்கன்; தன் ஊர் மன்றத்து - தனது ஊரிலுள்ள பொதுவிடத்து, என்னன்கொல் - எத்தகையவனோ? இரந்தூண் நிரம்பா மேனியொடு - இரந்து பெறும் உணவினால் முற்ற வளராத மேனியோடு, விருந்தின் ஊரும் - புதிதாகப் பெறும் விருந்தின் பொருட்டுச் செல்லும், பெரு செம்மலன் - பெரிய தலைமையையுடையவன்.

(முடிபு) அன்னாய், இவன் இளமாணைக்கன்; என்னன் கொல்லோ? செம்மலன்.

(கருத்து) இவன் இங்கும் விருந்தைப் பெறுவான்.

(வி - ரை.) தோழியைத் தலைவி அன்னையென்றல் மரபு (தொல். பொருளியல், 52.) பாணன் வாயிலாகப் புக்குத் தலைவன் பெருமையைச் சொல்வன்மை புலப்படப் பாராட்டினனுதலால் அவன் கல்வியைச் சிறப்பிக்க எண்ணி, 'இளமாணைக்கன்' என்றாள். அவனைப் புகழ்ந்தமையால் அவன்பாலும் அவனை வாயிலாக விடுத்த தலைவன்பாலும் உள்ள ஆதரவு புலப்பட்டது. மன்றம் - பொதுவிடம்; ஊர்மன்றத்தே பாணர் தங்குவது பண்டை வழக்கம்.

'அயலதாகிய இவ்விடத்திலே இங்ஙனம் சொல்வன்மையுறப் பேசுவோன் தன் ஊரில் தான் தங்கும் மன்றத்தில் இன்னும் சிறந்த சொல்வன்மையுடையவன் போலும்!' என்னும் கருத்தால், 'என்னன் கொல்லோ' என்றாள்.

இரந்தூண் - இரந்து பெற்று உண்ணும் உணவு; 'அட்டுண்டுழனி' என்றதைப் போன்றது இத்தொடர். மாணைக்கர் இரந்து உண்ணுதல் மரபு. நிரம்பாமை - பொலிவு பெறுமை. விருந்தின் ஊர்தலாவது விருந்து பெறுதற்குரிய இடங்களுக்கெல்லாம் செல்லுதல்; ஊர்தல் - செல்லுதல்; 'ஊர்தல் ஈண்டுப் போதன் மேற்று' (சீவக. 286, ந.)

விருந்தினரும் செம்மலனென்றது, அதனை ஈண்டும் பெறுவானென்னும் நினைவிற்று. தலைவனை ஏற்றுக்கொள்ளும் எண்ணமுடையாளாதலின் அவன் வருங்கால் விருந்தயர்தலும் அப்பொழுது அவனுக்கு வாயிலாக வந்த பாணனும் விருந்துணவு பெறுதலும் நேரும். தலைவர் வருங்கால் மகளிர் விருந்தயர்தல், "அரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு" (குறுந். 398: 6) என்பதனுல் விளங்கும்.

கொல்: ஐயம். ஓவும் ஏயும் அசைநிலை.

தோழியை நோக்கி இங்ஙனம் தலைவி கூறியவற்றுல் அவளது உடம்பாட்டுக்குறிப்பை யறிந்த பாணன் அதனைத் தலைவன்பாற் சென்று உணர்த்த அவன் வந்து தலைவியோடு அளவளாவுதல் இதற்குப் பயன்.

(மேற்.) 1. தோழியைத் தலைவி அன்னையென்றது (தொல். பொருளியல், 50, இளம், 52, ந.); ஐகாரவீற்றுப் பொதுப்பெயர் விளிவேற்றுமையில் ஆயென்று வந்தது (நன். 305, மயிலை, 306, சங்.) 2. ஊர்மன்று: வழக்கின்கண் இனமில்லாத அடைமொழி வந்தது (நன். 400, மயிலை.) மு. பாணன் வாயிலாகவந்துழித் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, இளம்.); பாணன் சொல்வன்மைக்குத் தோற்று வாயில் நேர்ந்த தலைவி தோழிக்கு உரைத்தது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1 தோழியை அன்னையென்றது: குறுந். 150: 5.

2. **பாணர் மன்றத்திருத்தல்**: "மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்" (மலைபடு. 492); "மன்றம் போந்து மறுகுசிறை பாடும், வயிரிய மாக்கள்", "வயிரிய மாக்கள் பண்ணமைத் தெழீஇ, மன்ற நண்ணி மறுகுசிறை பாடும்", "மன்றம் படர்ந்து மறுகுசிறைப் புக்குக், கண்டி நுண்கோல் கொண்டுகளம் வாழ்த்தும், அகவலன்" (பதிற். 23: 5 - 6, 29: 8 - 9, 43: 26 - 8); "மன்றுபடு பரிசிலர்" (புறநா. 135: 11.) 2 - 3. **மன்றத்துப் பாணர் இருத்தலும் ஊண் பெறுதலும்**: "இரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக், கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி, அமலைக் கொழுஞ்சோ றுர்ந்த பாணர்க்கு" (புறநா. 34: 12 - 4.)

4. **பாணர் விருந்தை நோக்கிச் செல்லல்**: "அருஅ யாண ரகன்றலைப் பேரூர்ச், சாறுகழி வழிநாட் சோறுநசை யுருது, வேறுபுல முன்னிய விரகறி பொருந" (பொருந. 1 - 3.) (கூ)

தோழி கூற்று

[தலைவியை வரைந்துகொள்ள வந்துள்ளவனே அவளால் விரும்பப்பட்டவனுதலின், இனி அவன் வரைவானென்னும் செய்தியைக் கேட்டு இதுகாறும் உண்டான பலவகைத் துன்பங்களுமின்றி இவ்வூரினர் மகிழ்வாராகவென்று தோழி தலைவன் வரைவொடுவந்தமையைத் தலைவிக்கு உணர்த்தியது.]

ங்சு. ஒறுப்ப வோவலர் மறுப்பத் தேறலர்
தமிய ருறங்குங் கௌவை யின்றுய்
இனியது கேட்டிஞ் புறுகவிவ் வூரே [தோ
முஞ்அ, தியானேயங் குருகின் கானலம் பெருந்
5. டட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மரந்தை யன்னவெம்
குழல்விளங் காய்நுதற் கிழவனு மவனே.

எ - து. வரைவுமலிந்தமை ஊர்மேல் வைத்துத் தோழி கிழத்தீக்குச் (டி - ம். தோழிக்குக் கிழத்தி) சொல்லியது.

கொல்லிக் கண்ணன்.

(டி - ம்.) 1. 'ஒறுப்ப வொல்லார்' 4 'முஞ்அது, யாணை', 'யாணையுண் குருகின்' 4 - 5. 'பெருந்தொட்ட மள்ளர்' 6 'மாந்தை யன்னவென்' 7 'குழை விளங்'

(ப - ரை.) முஞ்அது - முன்னிடத்திலுள்ளதாகிய, கானல் - கடற்கரையிலுள்ள, யாணையங்குருகின் பெரு தோடு - வண்டாழ்ங் குருகின் பெரிய தொகுதியானது, அட்ட மள்ளர் - பகைவரைக் கொன்ற வீரரது, ஆர்ப்பு இசை வெரூஉம் - வென்று முழங்கும் முழக்கத்தினை அஞ்சுதற்கு இடமாகிய, குட்டுவன் மரந்தை அன்ன - குட்டுவனுக்குரிய மரந்தையென்னும் நகரைப் போன்ற, எம் - எமது, குழல் விளங்கு - பனிச்சை விளங்குகின்ற, ஆய் நுதல் கிழவனும் - அழகிய நெற்றிக்கு உரிமையுடையோனும், அவனே - வரைவொடு வரும் அத்தலைவனே யாவான்; ஆதலின், ஒறுப்ப - தமர் ஒறுக்கவும், ஓவலர் - வருத்தத்தினின்றும் நீங்காராகி, மறுப்ப - தோழியர் பல காரணங்கள் கூறி இங்ஙனம் வருந்துதல் தகாதென்று மறுத்துக் கூறவும், தேறலர் - தெளியாராகி, தமியர் - தலைவரைப் பிரிந்து தனியராய், உறங்கும் கௌவை இன்றுய் - உறங்குகின்ற வருத்தம் இல்லாதவராகி, இ ஊர் - இவ்வூரிலுள்ளார், இனியது கேட்டு இன்பு உறுக - அவன் வரைந்து கொள்வானென்ற இனிய செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியை யடைக.

(முடிபு) நுதற்கிழவனும் அவனே; கௌவை இன்றுய் இவ் வூர் இனியது கேட்டு இன்புறுக.

(கருத்து) தலைவன் இனி விரைவில் மணந்துகொள்வான்.

(வி - ரை.) ஒறுத்தல்: 'நீ ஏன் இத்தகைய வேறுபாடு உடையையாயினை?' என்றும், 'நீ புறத்தே செல்லற்க' என்றும் கூறிச்

செவிலி முதலியோர் அலைத்தல். மறுத்தல் - தலைவன் விரைவில் வந்து மணம் புரிவானென்று காரணங் காட்டி, அவன் வாரானே வென்று ஐயுற்ற தலைவியின் கருத்தை மறுத்துரைத்தல். தமியர் - தலைவரைப் பிரிந்த தனிமையையுடையர். உறங்கும் கௌவை - உறங்குவதனாலுண்டாகும் வருத்தம்; என்றது துயில் வாராவிடினும் பிறர் தம் நோய் அறியாவாறு உறங்குவதுபோலப் படுத்துக் கிடக்கும் வருத்தம்; உறங்குதல் காரணமாக எழுந்த பழிமொழி யெனலுமாம். தலைவிக்கும் பிறர்க்கும் இன்பம் பயப்பதாதலின் தலைவன் மணம்புரியுஞ் செய்தியை இனியதென்றாள்; "நன்றுபுரி கொள்கை" (374) என்று பின்னும் வந்துள்ளது; "இனிதுசெய் தனையா னுந்தை வாழியர், நன்மனை வதுவை யயரவிவள், பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே" (ஐங். 294: 3 - 5.) இவ்வூரென்று ஊரார்மேல் வைத்துக் கூறினளாயினும் அது தலைவியைக் கருதிய தென்று கொள்க. ஊரே : ஏ அசைநிலை.

யானையங்குருகு : இதனை வண்டாழ்ங்குருகென்பர் நச்சினார்க் கினியர் (மதுரைக். 674, உரை); திருவோண நட்சத்திரத்திற்குரிய புள்ளாகச் சோதிடநூலார் கூறுவர்; "குஞ்சரக் குரல குருகு" என ஒரு பறவை அகநானூற்றில் (145 : 15) கூறப்படுகிறது. அக் குருகே யானையங்குருகாயின் யானையைப்போன்ற குரலுடைமை பற்றி இப்பெயர் பெற்றதென்று கொள்வதற்கு இடமுண்டு. ஆனைச்சாத்தனென்னும் பறவை (திருப்பாவை) இதுபோலும்.

கானலம்பெருந்தோடு : அம் சாரியை. பறவைக்கூட்டத்தைத் தோடென்னும் வழக்கு இந்நூலுள், "இருந்தோட்டுப் புள்ளினம்", "அன்னத்து, வெண்டோடு", "காக்கைச் செவ்வாய்ப் பைந்தோடு" (191: 2, 304: 5-6, 334: 1) என்று பின்னும் காணப்படும்.

வீரர்கள் பகைவரைக் கொன்று அவ்வெற்றிக் களிப்பினால் நகைத்து ஆரவாரித்தல் இயல்பு; இது வீராட்டஹாசமென்று வட மொழியாளாரால் வழங்கப்படும்

போர் நெய்தல் நிலத்தில் நடைபெறுதலின் வீரர்களது ஆர்ப் பிசைக்குக் கடற்கரையிலுள்ள பறவைகள் அஞ்சின; "தும்பை தானே நெய்தலது புறனே" (தொல். புறத். 12) என்பதன் உரையில், 'இருபெருவேந்தரும் ஒருகளத்துப் பொருதலின், அதற்கு இடம் காடும் மலையும் கழனியும் ஆகாமையானும், களரும் மணலும் பரந்த வெளிநிலத்துப் பொருதல் வேண்டுதலானும், அந்நிலம் கடல் சார்ந்த வழியல்லது இன்மையானும்' என்று இளம்பூரணர் எழுதிய பகுதியைக் காண்க.

குட்டுவன் - குட்டநாட்டையுடையோன் (மதுரைக். 105, உ.); இந்நாடு மலைநாட்டின் ஒருபகுதி. குட்டுவனென்னும் பெயர் சேரர்களுக்கு உரியதாக வழங்குகின்றது; செங்குட்டுவன், பல்யானைச்செல்கெழு குட்டுவனென்னும் சேரவரசர்கள் பெயரமைப்பு இதனைத் தெளிவுறுத்தும்.

மரந்தை: இது மேலைக்கடற்கரைக்கண் உள்ளதொரு நகர் (குறுந். 166.)

எம் நுதற்கிழவனென்று தோழி கூறினளேனும் அவள் கருதியது தலைவியின் நுதலையேயென்று கொள்க. தலைவியின் உறுப்புக்களோத் தோழி தன்னுடையனவாகக்கூறுவது புலனெறிவழக்கு; இது,

> "தாயத்தி னடையா வீயச் செல்லா
> வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
> எம்மென வருஉங் கிழமைத் தோற்றம்
> அல்லா வாயினும் புல்லுவ வுளவே"
>
> (தொல். பொருளியல், 27)

என்பதனாலும் அதன் உரையாலும் உணரப்படும்.

குழல் விளங்கு ஆய்நுதலென்றது, மகளிர் குழலை வகுக்கும் ஐந்து வகைகளில் ஒன்றாகிய பனிச்சையைத் தன்மேலேபெற்று விளங்கும் நெற்றியென்றவாறு. அது முன்னுச்சியிலே அமைக்கப்படுவது; அளகமென்பதும் அது; "ஓதி யொண்ணுதல்" (ஐங். 67: 5); "அளக வாணுதல்" (கம்ப. மந்தரை. 86), "நுதலளக பாரம்" (தக்க. 25)என்று அது நுதலோடு சார்த்தி வழங்கப்படுதல் காண்க. குழலை நுதலுக்கு அடையாக்கினமையின், குழலுக்கும் கிழவரென்பது கொள்க. இங்ஙனமே தலைவியின் உறுப்புக்களுக்கு உரிமையுடையனாகத் தலைவனைக் கூறும் வழக்கு, "தோட்கிழவன்" (கலி. 41 : 42) என்பது முதலியவற்றால் அறியப்படுகின்றது. முன்பு வரைபொருளுக்குத் தலைவன் பிரிந்த காலத்தில் குழலையும் நுதலையும் நீவிச் சென்றானதலின் அவ்வுரிமையை நினைந்து, 'குழல் விளங் காய்நுதற் கிழவன்' என்றாள் (கலி. 4 : 19.) அவனே: ஏகாரம் தேற்றம்.

(மேற்.) மு. தலைவனுக்குத் தலைவியின் தமர் வரைவுடம்பட்டதனைத் தலைவி விரும்பியது; 'தமரான் ஒறுக்கப்பட்டு ஓவாமாய்த் துயருழத்தல் ஆகாதென ஆற்றுவிக்குஞ் சொற்களால் மறுத்துரைப்பவும் தேறாமாய்த் தனித் திருப்பார் உறக்கங்காரணமாக எழுந்த கௌவையைக் கேளாது வரைந் தெய்திய மாற்றத்தைக் கேட்டு இவ்வூரும் இன்புறுக வென்பதாம்' (தொல். களவு. 16, உ.)

(ஒப்பு.) 1. "ஒறுப்ப வோவலே நிறுப்ப நில்லலே" (அகநா. 342 : 1.)

5. அட்ட மன்னர் ஆர்த்தல் : (குறுந். 328 : 5 - 8, 393 : 4 - 6); "ஒன்னுத் தெவ்வ ருலவிடத் தார்த்து" (பெரும்பாண். 419; மலைபடு. 386); "வென்றிகொள் வீர ரார்ப்பு", "நேரா வெழுவ ரடிப்படக் கடந்த, ஆலங் கானத் தார்ப்பு", "பதினெரு வேளிரொடு வேந்தர் சாய, மொய்வலி யறுத்த ஞான்றைத், தொய்யா வழுந்தூ ராரப்பு" (அகநா. 36 : 23, 209 : 5 - 6, 246 : 12 - 4); "வம்ப மள்ளரை..... அழுந்தப் பற்றி யகல்விசும் பார்ப்பெழக், கவிழ்ந்துநிலஞ் சேர வட்டதை" (புறநா. 77 : 9 - 12.)
6. குட்டுவன் : நற். 105 : 7; அகநா. 212 : 16. மரந்தை : நற். 35 : 7; பதிற். 90 : 28; அகநா. 127 : 6, 376 : 18; முத். 82, 105. (கசு)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்தமையால் மெலிவுற்ற தலைவி அழுதாளாக, "நீ அழுதது என் ?" என்று வினவிய தோழிக்கு, "தலைவர் பிரிந்த காலத்தில் அழாமல் உடம்பட்ட என்கண்கள் இப்பொழுது நாண மின்றி அழுதன" என்று தன் வருத்தத்தைக் கண்ணின்மே லேற்றித் தலைவி உரைத்தது.]

நெடு. நாணில மன்றவெங் கண்ணே நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
5. தண்வரல் வாடையும் பிரிந்திசினோர்க் கழலே.

எ - து. பிரிவிடை மெலிந்த கிழத்தி, தோழிக்குச் சொல்லியது. கழார் (பி - ம். கிழார்)க் கீரனெயிற்றி.

(பி - ம்.) 2. 'சூன் முதிர்பன்ன' 5 'வாடையும் நம்பிரிந்திசினோர்க்'

(ப - ரை.) தோழி—, நாள் நேர்பு - தலைவர் பிரிந்த நாளில் உடம்பட்டு, சினை பசு பாம்பின் - கருப்பத்தையுடைய பச்சைப் பாம்பினது, சூல் முதிர்ப்பு அன்ன - கருவின் முதிர்ச்சியைப் போன்ற, கனைத்த கரும்பின் கூம்பு பொதி - திரண்ட கரும்பினது குவிந்த அரும்பு, அவிழ - மலரும்படி, நுண் உறை அழி துளி தலைஇய - நுண்ணிய மழை பொழிந்து அழிந்ததுளி பொருந்திய, தண் வரல் வாடையும் - தண்ணிய வருதலையுடைய வாடைக்காற்றை யுடைய கூதிர்க் காலததும், பிரிந்திசினோர்க்கு - பிரிந்துறையும்

தலைவர் பொருட்டு, அழல் - அழுதலால், எம் கண் - எம்முடைய கண்கள், மன்ற - நிச்சயமாக, நாண் இல - நாணம் இல்லாதன.

(முடிபு) நாள் நேர்பு, பிரிந்திசினோர்க்கு அழுதலால் எம் கண்கள் நாணில.

(கருத்து) அவர் பிரியும்பொழுது கண்கள் அழுது தடை செய்யாதது தவறு.

(வி - ரை.) "வண்ணம் பசந்து புலம்புறு காலை, உணர்ந்த போல வுறுப்பினைக் கிழவி, புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே" (தொல் பொருளியல், 8) என்பது இலக்கணமாதலின், கண்களை நாணில்லாதன போலக் கூறினள். கண் நேர்தலாவது தலைவன் பிரிந்த காலத்தில் அழாமல் உடம்பட்டிருந்தமை; தடுத்தலைச் செய்யாமையே உடம்பாடாயிற்று; தலைவன் பிரியுங்காலத்திற் கண்கள் அழுது அவன் செல்லுதலைத் தடுத்தலுமுண்டென்பதை இந்நூல் 256-ஆம் செய்யுளால் உணரலாகும்.

தோகையால் மூடப்பட்டுப் பசுமையாக இருத்தலின் கரும்பின் அரும்புக்குப் பச்சைப்பாம்பை உவமை கூறினள். கார்காலத்து மழை பெய்தபின் மேகத்தில் எஞ்சியிருக்கும் துளிகள் கூதிர்க் காலத்து வீழ்தலின், 'நுண்ணுறை யழிதுளி தலைஇய வாடை' என்றனள். தலைஇய - பெய்தவென்னலுமாம். வாடை யும்: உம் இழிவு சிறப்பு; வாடையையுடைய கூதிர்க்காலம் தலைவனும் தலைவியும் இன்புறுவதற்கு ஏற்ற காலம் (தொல் அகத். 6, ந); ஆதலின் உடனிருப்பதற்குரிய காலத்திற் பிரிந்துறைகின்றனென்று தலைவி வருந்தினள் பிரிந்திசினோர்: இசின் படர்க்கைக் கண் வந்ததோர் இடைச்சொல் (புறநா 11, உரை.)

(மேற்.) 1. மேனி பசந்து தனிப்படருறுங்காலத்துத் தலைவி தன்னுடைய உறுப்பினை அறிந்ததுபோலப் பொருந்தின கூற்றுற் சொல்லவும் பெறும் (தொல். பொருளியல், 8, ந.)

5. 'தண்வரல்...அழலேயென ஆனுருபு இறுதிக்கண் தொக்கதாலெனின் அது வினைச்சொற் காரணப்பொருட்டாய் நின்றது' (தொல். வேற்றுமைமயங்கு. 22, ந.); 'இடையிலே தொகுமென்றது என்னை? கடந்தானிலம், இருந்தான் குன்றத்து, தண்வரல்.....அழலே.....என்பன நிலத்தை, குன்றத்தின்கண், அழலான்.....என்று வேற்றுமை யுருபுகள் ஈற்றினும் தொகுமாலோ வெனின், அவை ஒருபெயராயினவாய் உருபு முதலியன ஏலாமையின், தொகைவிதியால் தொக்கனவாகா; செய்யுள் விகாரவகையாற் றொகுக்கப்பட்டனவென்க' (நன். 362, மயிலை.)

(ஒப்பு.) 2-3. **பசும்பாம்பின் தூல்**: "சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல், மெல்லவே கருவிருந் தின்று" (சீவக. 53.)

5. **தண்வரல் வாடை :** குறுந். 76 : 5, 110 : 5 -6, 160 : 5. **4-5. உறை அழிதுளி வாடை :** "கடைப் பெயல் வாடை", "வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்", "அழிதுளி கழிப்பிய வழிபெயற் கடைநாள்.....வாடை", "எல்லாந் தந்ததன் றலையும் பையென, வடந்தை துவலை தூவ", "தண் ணென, ஆடிய விளமழைப் பின்றை, வாடை" (நற். 89 : 4 - 7, 152 : 5-6, 229 : 9-11.)

3-5. **வாடையாற் கரும்பின் பொதி அவிழ்தல் :** "புலம்பொடு வந்த பொழுதுகொள் வாடை, இலங்குசூழ் கரும்பி னேர்கழை யிருந்த, வெண் குருகு நல வீசும், நுண்பஃ றுவலைய", "பெய்துபுலந் திறந்த பொங்கல் வெண்மழை, எஃகுறு பஞ்சித் துய்ப்பட் டன்ன, துவலை தூவல் கழிய வகல்வயல், நீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்பூக், கோடைப் பூவி யின் வாடையொடு துயல்வர", "இலைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ,.....குரங்க,.....பனிகடி கொண்ட பண்பில் வாடை" (அகநா. 13 : 21 - 4, 217 : 1-5, 235 : 12-5.) (கூடு)

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருளின் பொருட்டுப் பிரிந்த காலத்தில் அப்பிரிவைத் தலைவி ஆற்றுளெனக் கவலையுற்ற தோழியை நோக் கித் தலைவி, "தலைவர் முன்பு பிரியேனென்று சூளுறவுசெய்து இப்பொழுது பிரிந்துறைய அதனால் உண்டான வருத்தத்தைப் பொறுத்துக்கொண்டு யான் இருப்பவும் நீ வருந்துதல் முறை யன்று" என்று உணர்த்தியது.]

நக்கீ. துறுக லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சுகள லுக நீயலென் யானென
நற்றேண் மணந்த ஞான்றை மற்றவன்
5. தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே.

எ - து. வரைவிடை வைத்துப் பிரிய, ஆற்றுளெனக் கவன்று வேறுபட்ட தோழியைத் தலைமகள் ஆற்றுவித்தது.

[பிரிய - தலைவன் பிரிய.]

பரணர்.

(பி - ம்) 'மாண' 3 'நீயலேன்,' 'நீயலன்' 5 தவா அ'

(ப - ரை) தோழி—, துறுகல் அயலது - உருண்டைக் கல் லின் அயலில் உள்ளதாகிய, மாணை மா கொடி - மாணையென்னும்

பெரிய கொடியானது, துஞ்சு களிறு இவரும் குன்றம் நாடன் - தூங்குகின்ற களிற்றின்மேற் படரும் குன்றங்களையுடைய நாட்டுக்குத் தலைவன், யான் —, நெஞ்சு களனுக - நின் நெஞ்சு இடமாக இருந்து, யேலென் என - பிரியேனென்று, நல் தோள் மணந்த ஞான்றை - எனது நல்ல தோளை அணைந்த பொழுது, அவன் - அத் தலைவன், தாவா வஞ்சினம் உரைத்தது - கெடாத உறுதிமொழியைக் கூறியது, நின்வயினான் - நின்திறத்தில் நோயோ - வருத்தத்துக்குக் காரணமாகுமோ? ஆகாதன்றே

(முடிபு) தோழி நாடன் மணந்த ஞான்றை அவன் வஞ்சினம் உரைத்தது நின்வயின் நோயோ?

(கருத்து) தோழி, தலைவன் வஞ்சினத்தை யுரைத்து மறந் திருத்தல் எனக்குத் துன்பந் தருவது; அதனை நானே பொறுத்து ஆற்றியிருப்ப உனக்கு வருத்தமுண்டாதற்குக் காரணமில்லை.

(வி - ரை.) களிறு துறுகல்லைப்போன்று தோற்றுதலின் அக் கல்லில் ஏறும் மாணிக்கொடி களிற்றின்மேலும் படர்ந்தது. துறு கல் யானையைப்போலத் தோற்றுமென்பதை இந்நூல் 13-ஆம் செய்யுளாலும், அதன்மேற் கொடிகள் படருமென்பதை, "முல்லை யூர்ந்தகல்" (குறுந் 275 : 1) என்பதனாலும் உணர்க. நெஞ்சு களனுக வென்பது யேலெனென்பதன் முதனிலையோடு முடிந்தது, நெஞ்சிடமாக இருந்து புறத்தே உடனிராமற் பிரிதலைச் செய்யே னென்றபடி. தோள் மணத்தல்: அவையல் கிளவி. நற்றேரென் றது பழைய நிலையையுணர்த்தியபடி; இப்பொழுது மெலிந்ததென் னும் நினைவிற்று; பட்டாங்கு கிளந்ததுமாம். ஞான்றை: ஐ சாரியை. தாவா வஞ்சினமென்றது அது கூறியகாலத்துத் தலைவி யின் நினைவு; இப்பொழுது அது தவறியதென்பது குறிப்பு. நின்வயின் நோயோவென்றது, என் திறத்தன்றே நோயாகும் நினக்கு நோயாதற்குக் காரணமில்லை யென்றபடி; ஓகாரம் எதிர் மறைப் பொருளது.

மாணிமாக்கொடி, துஞ்சுகின்ற அளவும் துறுகலென்று தோற்றும் யானையின்மேற் படர்ந்து, துயில் நீங்கி அது சென்ற விடத்துப் பற்றுக்கோடின்றி யிருத்தலைப்போல, தலைவன் தோண் மணந்து உடனிருந்த அளவும் கெடாததாக இருந்த வஞ்சினத்தை மெய்யாகக்கருதி மகிழ்ந்த யான், அவன் பிரிய, வருந்துவேனையினே னென்பது குறிப்பு.

நெஞ்சுகளனுக வஞ்சின முரைத்ததென்று கூட்டி, நெஞ்சம் இடமாகப் பிறந்த சூளுறவை யுரைத்ததென்று பொருள் கூறலும் ஆம்.

(மேற்.) மு. தோழியைத் தலைவி ஆற்றுவித்தது (தொல். களவு. 22, ந.)

(ஒப்பு.) 1. **மாணைக்கொடி** : "வாங்கு வேய்ங்கழீஇ துணித்தனன் மாணையின் கொடியால், ஓங்கு தெப்பமொன் றமைத்து" (கம்ப. வனம்புகு. 36.)

3. **தலைவன் தலைவியின் நெஞ்சில் இருத்தல்** : குறுந். 228: 6, 340: 7 ; குறுங், 1128, 1130, 1204, 1205, 1218. 4. **தோள் மணத்தல்** : குறுந். 101 : 6.

5. **தலைவன் வஞ்சின முரைத்தல்** : (குறுந். 53 : 6-7); "ஏமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி" (குறிஞ்சிப். 210); "எஞ்சா வஞ்சின நெஞ்சுணக் கூறி" (நற். 214 : 6); "நெஞ்சுண, அரிய வஞ்சினஞ் சொல்வியும்" (அகநா. 175 : 6-7.) 4-5. **தலைவன் தலைவியின் தோளை மணந்த காலத்து வஞ்சின முரைத்தல்** : "பணையெழின் மென்றோ ளணைஇய வந்நாட், பிழையா வஞ்சினஞ் செய்த, கள்வன்" (குறுந். 318 : 6-8); "தோள்புதி துண்ட ஞான்றைச், சூள்" (அகநா. 320 : 13-4.) 3-5. **நீங்கேனென்று தலைவன் வஞ் சினமுரைத்தது** : "நல்ல சொல்லி மணந்தினி, நீயே னென்ற தெவன்கொ லன் னாய்" (ஐங். 22 : 3-4); "நீங்கா வஞ்சினஞ் செய்துநத் துறந்தோர்" (அகநா. 378 : 18.)

மு. **தலைவி ஆற்றுளென்று தோழி வருந்துதல்** : "நெஞ்சுநெகிழ் தகுந கூறி யன்புகலந், தருஅ வஞ்சினஞ் செய்தோர் வினைபுரிந்து, நிறம்வே ருக லெற் றென் றொற்றி, இனைத லாள்றிசி னீயே" (அகநா. 267 : 1-4) (கசு)

தோழி கூற்று

[தலைவனது பிரிவை ஆற்றாத தலைவியை நோக்கி, "தலைவர் மிக்க அன்புடையர் ; அவர் சென்ற பாலைநிலத்தில் களிறு தன் பிடியை அன்போடு பாதுகாத்து நிற்கும் காட்சியைக்கண்டு நின் னைப் பாதுகாக்கும் தம் கடமையையெண்ணி விரைவில் மீள்வர்" என்று கூறித் தோழி ஆற்றுவித்தது]

கஎ. நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.

எ - து. தோழி, கடிதுவருவாரென்று ஆற்றுவித்தது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(பி - ம்.) 1 'நல்கினு' 3 'பிளக்கும்', 'பிளிக்கும்'

(ப - ரை.) தோழி—, நசை பெரிது உடையர் - தலைவர் நின் பால் விருப்பம் மிக உடையவர் ; நல்கலும் நல்குவர் - நல்குதலையும்

செய்வர்; அவர் சென்ற ஆறு - அவர் போனவழிகள், பிடி பசி - பெண்யானையினது பசியை, களைஇய - நீக்கும்பொருட்டு, பெருகைவேழம் - பெரிய துதிக்கையையுடைய ஆண்யானை, மெல் சினையாஅம் பொளிக்கும் - மெல்லிய கிளைகளை உடைய யாமரத்தின் பட்டையை உரித்து அதன் நீரை அப்பிடி பருகச்செய்யும், அன்பின - அன்பைப் புலப்படுத்தற்கு இடமாக உள்ளன.

(முடிபு) கசை பெரிதுடையர்; கல்குவர்; அவர் சென்ற ஆறு அன்பின.

(கருத்து) தலைவர் விரைவில் மீண்டு வருவர்.

(வி - ரை.) கல்கல் - தலையளிசெய்தல் (குறள், 1156, பரிமேல்.) கல்கலும் கல்குவர் - கல்குதலையுஞ் செய்வரென்னும் பொருளினது; கல்குவரென்பது காரியவாசகமாக நின்றது (தொல். வேற்றுமை மயங். 29, ந.); இங்ஙனம் வரும் தொடர்கள் பல இடங்களிற் காணப்படுகின்றன; "அணியலு மணிந்தன்று" (புறநா. 1: 5) என்பதற்கு, 'அழகுசெய்தலும் செய்தது' என்றும், "இயங்கலு மியங்கு மயங்கலு மயங்கும்" (சிலப். 22: 154) என்பதற்கு, 'இயங்குதலையுஞ் செய்யும்; மயங்குதலையுஞ் செய்யும்' என்றும் உரையாசிரியர்கள் எழுதியிருத்தலைக் காண்க. யாமரத்தைப் பொளிப்பதற்கேற்ற கருவியுடைமையைப் புலப்படுத்த, 'பெருங்கை வேழம்' என்றுள். யாஅம்: இது பாலை நிலத்திலுள்ளதொரு மரம்; யாவெனவும் வழங்கும்; அவ்வழக்கு விளா விளாம், மரா மராமெனச் சில மரப் பெயர்கள் வழங்கிவரும் முறையைப் போன்றதென்று தோற்றுகின்றது. இம் மரத்தின் பட்டை நீர்ப்பசை மிக்கதென்று தெரிகின்றது. பொளித்தல் - உரித்தல்; "பெரும்பொளி வெண்ணுர்" (அகநா. 83: 6.)

இயல்பாகவே நின்பால் விருப்பமும் தலையளி செய்தலும் உடையராதலாலும், தாம் செல்லும் வழியில் நிகழும் நிகழ்ச்சி ஆண்பாலார் தமக்குரிய மனைவியரிடத்தில் அன்பு வைத்துப் பாதுகாக்கும் கடமையை நினைப்பூட்டும் இயல்புடையதாயினமையாலும் அவர் விரைந்து வந்துவிடுவரென்பது குறிப்பு.

தலைவனது பிரிவாற்றுமை வருந்தும் தலைவிக்குத் தோழி, கருப்பொருள்களுள் தலைவன் அன்பு செய்தற்குத் தகுவனவற்றைக் கருதிக் கூறுதல் வற்புறுத்தலாகுமாதலின் (தொல். பொருளியல், 37) இங்ஙனம் கூறினள்.

(மேற்.) மு. "இதனுள் முன்பே நெஞ்சகத்து அன்புடையார் அதன் மேலேகளிறு தன்பிடியின் பெரும்பசி கஃதற்கு மென்றோலியுடைய * ஆச்சாவைப் பிளந்து அந் நாரைப் பொளித்து ஊட்டும் அன்பினையுடைய, அவர் சென்ற ஆறு, அதனைக் காண்பர்காணென்று அன்புறு தகுந கூறிப் பிரிவாற்றுதலின் வற்புறுத்தவாறு காண்க. நம்மேல் இயற்கையாக அன் பிலனென்று ஆற்றுளாவளென்று கருதாது இவளை ஆற்றுவித்தற் பொருட்டு இவ்வாறு கூறலின் வழுவாயமைந்தது" (தொல். பொருளியல், 37, ந.); வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தல் (கம்பி. 170.)

(ஒப்பு.) 1. **நசை பெரிதுடையார்:** "யாரினு மினியன் பேரன் பினனே", "நசைநன் குடையர்" (குறுந். 85 : 1, 213 : 1.) **தலைவர் நல் குதல்:** "நல்கார் நயவா ராயினும்", "துறைவன், நல்கிய நாடவச் சிலவே" (குறுந். 60 : 5, 328 : 3-4); "நல்குவன் போலக் கூறி, நல்கா னாயினும்" (ஐங். 167 : 3-4); "நல்குவ லென்னு நசை" (குறள், 1156.) **நல்கலும் நல் குவர்:** குறுந். 218 : 4, 251 : 3, 268 : 2; நற். 106 : 1, 147 : 7, 318 : 1; ஐங். 36 : 3; கலி. 23 : 7, 54 : 8, 14, 55 : 19; அகநா. 8: 18; புறநா. 1: 5, அடிக்.

3. **யாமரம்:** தொல். உயிர்மயங்கு. 27. 3-4. **யானை யாமரத்தைப் பொளித்தல்:** (குறுந். 232 : 4-5); "உம்ப லகைத்த வொண்முறி யாவும்" (மலைபடு. 429); "பெருங்களி றுரிஞ்சிய மண்ணரை யாஅத், தருஞ்சுரக் கவலைய வதர்படு மருங்கின்" (அகநா. 17 : 16-7.)

2-4. **யானை யாலைப் பொளித்துப் பிடிக்கு ஊட்டுதல்:** (குறுந். 255 : 1-5, 307 : 4 - 7); "யானைதன், கொன்மருப் பொடியக் குத்திச் சினஞ்சிறந், தின்னு வேனி லின்னுணை யாஅ, முளிசினை யாஅத்துப் பொளிபிளந் தூட்டப், புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்" (அகநா. 335: 4-8.) **பாலை நிலத்தில் யானை பிடியைப் பாதுகாத்தல்:** நற். 137 : 6-7 ; கலி. 11 : 9.

மு. "புன்றலை மடப்பிடி யுணீஇ யிப ரங்குழை
நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞிமிறு கடியுங் களிறே.....
.....
பிரிந்துசே ணுறைநர் சென்ற வாறே" (அகநா. 59 : 7-18.) (க ள)

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருளுக்குப் பிரிந்து நெடுங்காலமாக வாரா திருப்ப, வருந்திய தலைவியை நோக்கித் தோழி, "நின்னை வரைந்து கொள்ளும் பொருட்டன்றே அவர் பொருளீட்டச்சென்றார்; அங்ஙனமிருப்ப நீ அதனை நன்றென்று கருதாமல் வருந்துவது யாதுகாரணம் பற்றி?" என்று வினவியபோது, "அவர் பிரிவை ஆற்றும் வன்மை என்பால் இல்லை" என்று தலைவி உணர்த்தியது.]

இவ்வுரையினால், யாஅமென்பதை ஆவென்று நச்சினார்க்கினியர் கொண்டனரென்று தோற்றுகின்றது.

நஅ.(கான மஞ்ஞை யறையின் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருஉ யுருட்டும்
குன்ற)நாடன் கேண்மை யென்றும்
நன்றுமன் வாழி தோழி யுண்கண்
5. நீரொ டொராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே.

எ - து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தனது ஆற்றுமை தோன்றத் தோழிக்குக் கூறியது.

கபிலர்.

(பி - ம்.) 1 'யறையின்' 6 'தகற்றல்', 'தகறல்'

(ப - ரை.) தோழி—, கானம் மஞ்ஞை - காட்டிலுள்ள மயிலானது, அறை ஈன் முட்டை - பாறையில் ஈன்ற முட்டைகளை, வெயில் ஆடும் முசுவின் குருஉ உருட்டும் - வெயிலில் விளையாடும் முசுவின்குட்டி உருட்டுதற்கு இடமாகிய, குன்றம் நாடன் கேண்மை - மலைநாட்டை யுடையவனுடைய தலைவனது நட்பு, தணப்ப - அவன் பிரிய, உண் கண் நீரொடு - மைதீட்டப்பெற்ற கண்ணினின்று பெருகும் நீரோடு, ஓராங்கு - ஒருபடியாக, உள்ளாது - அப்பிரிவை நினைத்து வருந்தாமல், ஆற்றல் வல்லு வோர்க்கே - பொறுத்துக்கொள்ளுதலில் வன்மையுடையோர்க்கு மாத்திரம், என்றும் நன்று மன் - எக்காலத்தும் மிக நல்லதாகும்.

(முடிபு) குன்றநாடன்கேண்மை ஆற்றல் வல்லுவோர்க்கு என்றும் நன்று.

(கருத்து) தலைவனது பிரிவை ஆற்றும் வன்மையிலேனுயி னேன்.

(வி - ரை.) முசு - முகங்கரியதாகிய ஒருவகைக்குரங்கு. வல்லு வோர்க்கு என்றும் நன்றென்றமையின் தனக்குச் சிலகாலம் நன் றாகவும், சிலகாலம் நன்றன்றாகவு மிருப்பதென்பது கொள்ளப் படும்; தலைவன் கேண்மை, அவன் தன்னோடு இருக்கும் காலத்தில் நன்றாகவும் பிரிந்தகாலத்தில் துன்பத்தைத் தருவதாகவும் தலை விக்கு அமைந்தது; இது, "சாரனுடன் கேண்மை, சாரச் சாரச் சார்ந்து, தீரத் தீரத் தீர்பொல் லாதே" (பழம்பாடல்) என்பதனால் விளங்கும். கண்ணீரோடு ஆற்றுதல் அரிதாதலின், 'அங்ஙனம் செய்வார் மனவலியுடையர் போலும்!' என்ற நினைவினால் வல்லு

வோர் என்ருள். ஓராங்கு - ஒரு பெற்றிப்பட (புறநா. 238 : 15, உரை); தலைவன் உடனுறைந்த காலத்தும் பிரிந்த காலத்தும் ஒருபடித்தாக வென்றவாறு. நீரோடு தணப்ப என்று கூட்டியான் அழுதுகொண்டிருப்பவும் அதனைக் கருதாமற் பிரிய என்று கொள்ளலுமாம்.

வாழி : அசைநிலை. வல்லுவோர்க்கே . ஏகாரம் பிரிநிலை; தனக்கு நன்றன்றென்னும் கருத்துப் பெறப்படும். ஏகாரத்தை அசை நிலையாக்கி, மன் ஒழியிசைப்பொருளில் வந்ததாகக்கொண்டு, 'யான் அவ்வன்மை பெற்றிலேன்' என்று பொருள்கொள்ளலும் ஒன்று. ஆற்றல் வல்லுவோர்க்கு நன்று என்றமையின் தன்பால் ஆற்றுதற்குரிய வன்மையில்லாமையைப் புலப்படுத்தினளாயிற்று. நன்று - பெரிதுமாம் (தொல். உரி. 45.)

மயில் அடைகாத்தற்குரிய அதன் முட்டை அங்ஙனம் செய்யப்படாது பாறையின்மேல் தனித்துக் கிடப்பதையன்றி அதனைக் குரங்கின் குட்டி விளையாட்டாக உருட்டுவதுபோல, தலைவன் உடனிருந்து இன்புறுத்தற்குரிய தலைவி அவன்பிரிவினால் துன்புறுதலையன்றி, தமக்கு நகை விளைவதொன்றே பயனுக ஊரார் அலர் கூறும் துன்பத்தையும் பெற்றுளென்பது குறிப்பு.

(மேற்.) 2. குருளையென்பது குரங்கிற்கு இலேசினால் அமைத்துக் கொள்ளப்படும் (தொல். மரபு. 14, பேர்.); நிரைநேர்பு கணவிரிபோல நின்று முசு என்பதனோடு நிரையொன்ருகிரியத் தளையாயிற்று (தொல். செய். 56, ந.)

2-3. 'நாடினர் கொளினேயென்ற இலேசினாற் குருளையென்பது முசுவிற்கும் கொள்ளப்படும்' (தொல். மரபு. 9, பேர்.)

(ஒப்பு.) 3. நாடன் கேண்மை : குறுந். 3 : 4.

4. நன்றுமன் : குறுந். 58 : 2, 134 : 2, 226 : 4.

5. ஓராங்கு : குறுந். 257 : 1, 316 : 5. 4-5. தலைவன் பிரிவினால் தலைவி கண்ணீர் விடுதல் : குறுந். 11 : 2, 22 : 1-2, 35 : 5 ; அகநா. 5 : 21. 5 - 6. பிரிவை ஆற்ற வல்லவர் : "அரிதாற்றி யல்லனேய் நீக்கிப் பிரிவாற்றிப், பின்னிருந்து வாழ்வார் பலர்" (குறள், 1160.)

மு. "வந்தாய் பவரையில் லாமயின் முட்டை யிளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்பண் போவினிதே [போற்
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்றென் றில்லை தொழார்குழுப்
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி நையுந் திருவினர்க்கே" (திருச்சிற். 276.) (கஅ)

தலைவி கூற்று

தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றுதிருந்த தலைவியை, "நீ ஆற்றல்வேண்டும்" என்று வற்புறுத்திய தோழிக்கு, "தலைவர் சென்ற வழியானது கடத்தற்கரிய கொடுமையை யுடையதென்று அறிந்தார் கூறுவர்; அதனைக் கேட்ட யான் ஆற்றுவது எங்ஙனம்?" என்று தான் ஆற்றுமையின் காரணத்தைத் தலைவி தெரிவித்தது.]

வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றுவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கும்
மலையுடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

எ - து. "பிரிவிடை ஆற்றல் வேண்டும்" என்ற தோழிக்கு, "யாங்ஙனம் ஆற்றுவேன்!" எனத் தனது ஆற்றுமைமிகுதி தோன்றத் தலைமகள் கூறியது.

(பி - ம். தலைமகள கூறுகின்றுள், "நம் முலையிடைத் துயின் முனிந்து போயினர் சென்றவழி இப்படிப்பட்ட கொடுமைத்தால்; யான் எங்ஙனம் ஆற்றியுளேனுவேன்; யான் ஆற்றுகின்றிலேனென நீ ஆற்றுயாகின்றதென்?" எனத் தோழிக்குத் தலைமகள கூறியது.)

ஔவையார் (பி - ம். அவ்வையார்.)

(பி - ம்.) 1 'வெந்தெறற்', 'பொங்கர் போந்தென', 3 'மலை யிடை'

(ப - ரை.) தோழி—, நம் முலையிடைமுனிநர் - நம் நகிலினிடத்துத் துயிலுதலை வெறுத்தவர், சென்ற ஆறு - பிரிந்து சென்ற வழியானது, வெ திறல் கடு வளி - வெம்மையான வலியையுடைய விரைவான காற்றுனது, பொங்கர் - மரக்கிளையிலே, போந்தென - வீசுதலால், உழிஞ்சில் - வாகை மரத்தினது, நெற்று விளை வற்றல் - நெற்றினது முற்றிய வற்றலானது, ஆர்க்கும் - ஒலித்தற்கு இடமாகிய, மலை உடை அரு சுரம் - மலைகளையுடைய கடத்தற்கரிய சுரமாகும், என்ப - என்று கூறுவர்.

(முடிபு) முனிநர் சென்ற ஆறு அருஞ்சுரமென்பர்.

(கருத்து) தலைவர் சென்ற வழியின் கொடுமையை நினைந்து நான் ஆற்றேனுயினேன்.

(வி - ரை.) பாலை நிலத்ததாதலின் காற்று வெம்மையுடைய தாயிற்று. திறல் - வலி; காற்று மிக்க வலியுடையதென்பது "விசும்பு தைவரு வளியும்.....போல.....வலியும்".

"வளிமிகின் வலியு மில்லை" (புறநா. 2: 3-8, 51: 3) என்பவற்றாலும் அறியப்படும். கடுவளி-பெருங்காற்றெனலுமாம் (புறநா. 55 : 20, உரை.) பொங்கர்-மரக்கொம்பு; "உயர்ந்த பொங்கரு யர்மர மேறி" (கலி. 75 : 6) என்பதன் உரையைப் பார்க்க. உழிஞ்சில் - வாகை (சிலப். 11 : 76, அடியார்.) வற்றல் - பசுமையற வற்றிய காய். "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப், பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப். 11 : 64-6) என்பவாதலின் குறிஞ்சி திரிந்த பாலையென்பாள், 'மலையுடை யருஞ்சுரம்' என்றாள்; "வரைபிளந் தியங்குநர், ஆறு கெட விலங்கிய வழலவி ராரிடை" (கலி. 2: 7-8) என்பவாகலின் மலைகள் உடைந்த அருஞ்சுரமெனினும் ஆம். தான் சென்றறியாத தாதலின் 'என்ப' என்றாள். 'முல்லையிடை முனிநர்' என்றது இன் பந்துய்த்து ஈண்டு இராதே கொடுமையையுடைய பாலையிற் சென்று துன்ப முழப்பவராயினரென்று இரங்கிய நினைவிற்று (கலி. 2: 11-22.)

'அவர் சென்றது கடத்தற்கரிய சுரமென்பர்; அது கருதியே யான் ஆற்றேறனையினேன்' என்று தலைவி உணர்த்தினாள்.

ஆறே : ஏ அசைநிலை.

(மேற்.) மு. வழியருமை கேட்டவழித் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1. **கடுவளி** : குறுந். 372 : 2; அகநா. 1 : 17; புறநா. 55 : 20. **வெம்மையையுடைய கடுவளி** : "விலங்குவெங் கடுவளி யெடுப்ப", "காய்சினக் கடுவளி" (அகநா. 71 : 17, 223 : 6.) 1-2. **காற்றால் உழிஞ்சில்வற்றல் ஒலித்தல்** : குறுந். 7 : 4-5, ஒப்பு. 3. **மலையுடைய யருஞ்சுரம்** : "பன்மலை யருஞ்சுரம்", "பன்மலை, வெவ்வறை மருங்கின் வியன்சுரம்" (அகநா. 203 : 11, 361 : 14-5.)

4. **நகிலிடைத் துயிலுதல்** : "இடைமுலைக் கிடந்து" (குறுந். 178 : 4); "துயிலி னிளமுலையார்" (கைந்நிலை, 38); "அவர்நம, தேந்துமுலை யாகத்துச் சார்ந்துகண் படுப்பவும்" (தொல். கற்பு. 6, ந. மேற் : 'நாமவர்'); "நப்பின்னை கொங்கைமேல், வைத்துக் கிடந்த மலர் மார்பா" (திவ். திருப்பாவை, 19.) 4. "நம், இன்றுயின் முனிநர் சென்ற வாறே" (குறுந். 213 : 6-7.) (கக)

தலைவன் கூற்று

[தெய்வத்தாலாகிய கூட்டத்தின்பின்பு தலைவி, தலைவன் பிரிவானெனவென ஐயுற்றவிடத்து அதனைக் குறிப்பாலறிந்த தலைவன், ஒருதொடர்பு மில்லாத நாம் ஊழின் வன்மையால் ஒன்று

பட்டோ மாதலின் இனி நம்மிடையே பிரிவு உண்டாகாது என்று உணர்த்தியது.]

50. யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
5. அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

எ - து. இயற்கைப்புணர்ச்சி புணர்ந்தபின்னர், பிரிவரெனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்புவேறுபாடு கண்டு தலைமகன் கூறியது (பி - ம். கூறுகின்றது.)

[குறிப்பு வேறுபாடு - எண்ணத்தின் வேறுபாடு; என்றது இவர் பிரிவர்போலுமென்று கருதிக் கவலையுறுதல்.]

செம்புலப் பெயனீரார் (பி - ம். செம்புலப் பெய்நீரார்.)

(பி - ம்) 1 "யாயுமராகியரோ"? 'நானு நீயும்' 4. 'பெய்நீர்'

(ப - ரை) யாயும் - என்னுடைய தாயும், ஞாயும் - நின் தாயும், யார் ஆகியர் - ஒருவருக்கொருவர் எத்தகைய உறவின் முறையின ராவர்? எந்தையும் - என் தந்தையும், நுந்தையும் - நின் தந்தையும், எ முறைகேளிர் - எந்த முறையில் உறவினர்? யானும் நீயும் - இப் பொழுது பிரிவின்றியிருக்கும் யானும் நீயும் ஒருவரையொருவர், எ வழி அறிதும் - எவ்வாறு முன்பு அறிந்தோம்? இம்மூன்றும் இல்லையாகவும், செ புலம் பெயல் நீர்போல - செம்மண் நிலத்தின் கண்ணே பெய்த மழைநீர் அம்மண்ணோடு கலந்து அதன் தன் மையை யடைதல் போல, அன்பு உடை நெஞ்சம் - அன்புடைய நம் நெஞ்சம், தாம் கலந்தன - தாமாகவே ஒன்றுபட்டன.

(முடிபு) யாயும் ஞாயும் யாராகியர்? எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்? யானும் நீயும் எவ்வழி அறிதும்? நெஞ்சம் கலந்தன

(கருத்து) இனிப் பிரிவரிது.

(வி - ரை.) யாய் - என்தாய்; இச்சொல் தன்மையோடு தொடர்புடையதென்பது, 'யாயென்பது தன்மையோடு ஒட்டு தலின் முறைப்பெயரெனினும் உயர்திணையாம்' (தொல். பெயர். 26) என நச்சினார்க்கினியரும், 'யாயென்பதோவெனின் தன்மையோட டுத்தமையின் முறைப்பெயரேனும் உயர்திணையெனப்படும்' எனக் கல்லாடரும் எழுதிய உரைப்பகுதிகளால் தெளிவாகும். யாய், ஞாய்

தாய் என்னும் மூன்றும் முறையே என்தாய், நின்தாய், அவர் தாயென மூவிடத்தோடும் ஒட்டி வருவன; 'இம்மூன்றிடத்தும் ஒட்டுப்பட்ட பெயர்கள் ஆரும் வேற்றுமை முறையைக் குறித்து மேற்சொல்லியவாற்றுன் தந்தை, நுந்தை, எந்தை எனவும்; தாய், ஞாய், யாய் எனவும்; தம்முன், நும்முன், எம்முன் எனவும்; தம்பி, நும்பி, எம்பி எனவும் முதல்வனையும், ஈன்றோயும், முன்பிறந் தானையும், பின் பிறந்தானையும் உணர்த்தும் பன்மைச் சொற்கள்' (தொல். எச்ச. 14) என்று தெய்வச்சிலையார் எழுதியுள்ள அரிய உரைப்பகுதியால் இது புலப்படும்.

அறிதுமென்றது எதிர்காலம் இறந்தகாலப் பொருளில் வந்தது.

செம்மண்ணிலத்துப் பெய்த நீரானது அம்மண்ணோடு கலந்து அதன் நிறத்தையும் சுவையையும் பெற்று ஒன்றுபடுவது போல நம் நெஞ்சம் ஒன்றோடொன்று கலந்து தன்மைகள் ஒன்றுபட்டன வென்று உவமையை விரித்துக்கொள்க. நெஞ்சுகலந்தமைக்குச் செம்புலப் பெயனீரை உவமைகூறிய சிறப்பால் இச் செய்யுளின் ஆசிரியர் 'செம்புலப் பெயனீரார்' என்னும் சிறப்புப்பெயர் பெற்றார். நெஞ்சங் கலந்தனவென்பது உள்ளப் புணர்ச்சியைக் குறித்தபடி; "உள்ளப் புணர்ச்சியு மெய்யுறு புணர்ச்சியும், கள்ளப் புணர்ச்சி யுட் காதலர்க் குரிய" (நம்பி. 34)

'நம்மைப் பெற்றோரிடையேனும் நம்மிடையேனும் இதற்கு முன் ஒரு தொடர்பும் இல்லை; அங்ஙனம் இருப்பவும் நம் ஊழ் வினையின் வன்மையினால் இப்பொழுது ஒன்றுபட்டோம்; ஆதலின் இனிப் பிரிவு நேராது' என்று தலைவன் புலப்படுத்தித் தலைவியின் அச்சத்தை நீக்கினான்.

ஓகாரமும் ஏகாரமும் அசைநிலை.

(மேற்.) மு. களவுக்காலத்து வருந்திய வருத்தந்தீரத் தனது காதல் மிகுதி தோன்றச் சொல்லுதற்கண் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5, இளம்.); பிரிவரெனக் கருதிய தலைவியின் குறிப்புணர்ந்து தலைவன் கூறியது (தொல். களவு. 10, ந,11, இளம்.); நம்மானன்றி நெஞ்சம் தம்மிற் றாம் கலத்தலின் தெய்வத்தானையிற்றெனத் தலைவன் தலைவியைத் தெருட்டியது (தொல். கற்பு. 5, ந.); தெளித்தல் (தமிழ்நெறி. 15); தலைவன் பிரியே னென்றது (நம்பி. 129.)

(ஒப்பு.) 1. ஞாய்: கலி. 81 : 12, 85 : 28, 36, 107 : 25. யாராகியர்: குறுந். 110 : 2. செம்புலப் பெயனீரின் தன்மை: "நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகு மறிவு", "நிலத்தொடு, நீரியைந் தன்ன" (குறள், 452, 1323); "அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கந்

நிலத்தியல்பாற், றப்பின்றி யேகுண வேற்றுமை தான்பல சார்தலினுல்" (திருவேகம்பமாலை); "செந்நில முதுநீர் போலச் செல்வமான் மயமே யாகி" (பிரபு. 5: 17.) (சுo)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்தகாலத்தில் தலைவியின் மேனியிற் பொலி வழிந்த வேறுபாடு கண்டு கவலையுற்ற தோழியை நோக்கி, "தலைவர் உடனிருப்பின் நான் மகிழ்வுற்று விளங்குவேன்; பிரியின் பொலி வழிந்தவளாவேன்" என்று கூறியது.]

சக. காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற
அத்த நண்ணிய வங்குடிச் சிறார்
மக்கள் போகிய வணிலாடு முன்றிற்
5. புலப்பில் போலப் புல்லென்
றலப்பென் ரோழியவ ரகன்ற ஞான்றே.

எ – து. பிரிவிடை வேறுபாடு கண்டு கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

அணிலாடு முன்றிலார்.

(பி – ம்) 5. 'புலம்பில்'

(ப – ரை) தோழி—, காதலர் உழையர் ஆக – தலைவர் பக்கத்தவ ராக இருப்ப, பெரிது உவந்து – மிக மகிழ்ச்சியுற்று, சாறுகொள் ஊரின் – விழாக்கொண்ட ஊரினர் மகிழ்வதைப்போல, மன்ற – நிச் சயமாக, புகல்வேன் – விரும்பி மகிழ்வேன்; அவர் அகன்ற ஞான்று – அவர் என்னைப் பிரிந்துசென்ற காலத்தில், அத்தம் நண் ணிய – பாலைநிலத்திற் பொருந்திய, அம் குடி சிறு ஊர் – அழகிய குடியையுடைய சிறிய ஊரில், மக்கள் போகிய – மனிதர் நீங்கிச் சென்ற, அணில் ஆடு முன்றில் – அணில் விளையாடுகின்ற முற்றத்தையுடைய, புலம்பு இல் போல – தனிமையுள்ள வீட்டைப் போல, புல்லென்று – பொலிவழிந்து, அலப்பென் – வருந்துவேன்.

(முடிபு) தோழி, காதலர் உழையராகப் புகல்வேன்; அவர் அகன்ற ஞான்று அலப்பென்.

(கருத்து) தலைவர் பிரிந்தமையின் வருத்தமுடையேனுயினேன்.

(வி – ரை.) உழையர் – பக்கத்தில் உள்ளவர்; உழை–பக்கம்;என்

றது நெருங்கிப்பழகும் நிலையினென்றவாறு; "தழையினு முழையிற் போகான்" (குறுந். 294: 7) சாறுகொள் ஊரிற் புகல்வே னென்றது, இயல்பாகவுள்ளவற்றோடு மிகுதியான சிறப்பை விழாக்காலத்தே ஓரூர் கொண்டிருப்பதுபோல எனது இயற்கை நலங்களோடு சிறப்பான விளக்கம் பெற்று இருப்பேனென்றபடி. பாலை நிலத்து வெம்மையின் கொடுமைக்கும் ஆறலைகள்வரால் வரும் ஏதத்திற்கும் அஞ்சி ஊரினர் வேறிடம் செல்வாராதலின், அத்தம் நண்ணிய சீறூரின் இல்லைக் கூறினள். போகிய - ஒழிந்த (புறநா. 10, உரை) அணிலாடு முன்றில் - மக்கள் பயிலாமையின் அணிலசையும் முற்றம்; மக்களுள்ள வழி அணில் வாராதென்பது, "வரிப்புற வணிலொடு கருப்பை யாடாது" (பெரும்பாண். 85) என்பதனுற் பெறப்படும். மக்கள் போகிய வீட்டு முற்றத்தை அணிலாடு முன்றிலென்று சிறப்பித்த இதனால் இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் அணிலாடு முன்றிலார் என்னும் பெயர் பெற்றனர்.

புலம்பு - தனிமை. அலத்தல் - துன்புறல் (முருகு 271, ந.) ஞான்றே: ஏகாரம் அசைநிலை. மக்கள் போகிய புலப்பில்போலப் புல்லென்று அலப்பெனென்ற உவமையினால் அழகு நீங்கிய உடம் பினளாவேனென்பது பெறப்படும்.

இப்பொழுது என் வேறுபாட்டிற்குக் காரணம் தலைவரதுபிரி வென்பதை இதன்வாயிலாகத் தலைவி தோழிக்குக் குறிப்பித்தாள்.

(மேற்.) மு. பிரிவிடை ஆற்றுளெனைக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லென்பதுபடக் கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 2. விழாக்கொண்ட ஊரைப்போல மகிழ்தல்: "விழவுமேம் பட்ட வென் னலனே" (குறுந். 125: 4.)

3. மு. அகநா. 9: 10.

5. புல்லென்றல்: குறுந். 19: 2, ஒப்பு.

5-6. தலைவன் பிரிதலால் தலைவி பொலிவழிதல்: "உழையிற் பிரிபிற் பிரியும், இழையணி யல்குலென் றேழியது கவினே" (கலி. 50: 23-4.)

3-6. "உண்ட ளளித்தெ னுடம்பே விறற்போர், வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி, வாழ்வோர் போகிய பேரூர்ப், பாழ்காத் திருந்த தனி மகன் போன்றே" (நற். 153: 7 - 10); "கல்லெனக் கவின்பெற்ற விழ வாற்றுப் படுத்தபிற், புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமை வாளோ", "நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோர், அல்குநர் போகிய வூரோ ரன்னர்" (கலி. 5: 10 11, 23: 10-11.) (ஈக)

தோழி கூற்று

[இரவில் வீந்து தலைவியோடு பழகவேண்டுமென்று விரும்பிய தலைவனை நோக்கி, "நெருங்கிப் பழகாவிடினும் நும் நட்பு அழியாது" என்று குறிப்பால் தோழி மறுத்தது.]

காம மொழிவ தாயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென வருவி
விடரகத் தியம்பு நாடவெம்
தொடர்புந் தேயுமோ நின்வயி னானே.

எ - து. இரவுக்குறி வேண்டிய கிழவற்குத் தோழி நேர்ந்த வாய் பாட்டான் மறுத்தது.

[நேர்ந்த வாய்பாட்டான் மறுத்தலாவது உடன்பட்டாள் போன்ற சொல்லமைதியும் மறுத்தமையைக் குறிப்பாற் புலப்படுத் தும் பொருளமைதியும் பொருந்தக் கூறுதல்.]

கபிலர்.

(ப - ரை) யாமத்து - நடு இரவின்கண், கருவி மா மழை - தொகுதியையுடைய பெரிய மழை, வீழ்ந்தென - பெய்தலால், அருவி விடரகத்து இயம்பும் - நீர் பெருகி அதனால் அருவியானது பின்னாளிலும் மலைமுழைஞ்சுகளில் ஒலிக்கும், நாட - குறிஞ்சி நிலத்தை யுடையவனே, காமம் ஒழிவது ஆயினும் - காமமானது நீங்குவதாக இருப்பினும், நின்வயினான் - நின்னிடத்தில், எம் தொடர்பும் தேயுமோ - எமக்குள்ள நட்பும் அழியுமோ ? அழியாது.

(முடிபு) நாட, காமம் ஒழிவதாயினும் நின்வயினான் எம் தொடர்பும் தேயுமோ ?

(கருத்து) நீ இரவில் வாராவிடினும் தலைவிக்கும் நினக்கும் உள்ள நட்பு அழியாது.

(வி - ரை.) காமம் - இங்கே, மெய்யுறு புணர்ச்சி (குறள், 1092, பரிமேல்.) கருவி மா மழை - மின் இடி முதலாகிய தொகுதியை யுடைய பெரிய மழை (புறநா. 159 : 19, உரை.) விடரகம் - மலை யிடத்துள்ள வெடிப்புக்களும் குகைகளும் ; முழைஞ்சென்பர் நச்சினார்க்கினியர் (மலைபடு. 366, உரை.) எம்மென்றது தலைவிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமைபற்றி. தொடர்பும் : உம்மை இறந்தது தழீஇயது. ஓகாரம் எதிர்மறைப் பொருளது. நின்வயினான் : ஆன் என்பது ஏழன்பொருளில் வந்தது. ஏகாரம் அசைநிலை.

தொடர்புந் தேயுமோ வென்றமையால் தேயாதென்பது பெறப்பட்டமையின் தலைவன் முதலில் இரவுக்குறி நேர்ந்ததாகக் கருதினன். காமம் ஒழிவதாயினுமென்றது மெய்யுறு புணர்ச்சி நீங்கற்கு மிடமுண்டென்பதைக் குறிப்பால் அறிவித்து இரவுக் குறி மறுத்தமையை வெளிப்படுத்தியது.

முதல்நாள் இடையாமத்தில் மழைபெய்து ஒழியினும் அதனால் உண்டான அருவி பிற்றைநாளும் அறாது ஒழுகுதல்போல, முன்னர்ப் பயின்ற பயிற்சியால் பெற்றதொடர்பு பின்னர் அப் பயிற்சி ஒழியினும் அறாதென்பது குறிப்பு.

(ஒப்பு) 1. காமமென்பது மெய்யுறுபுணர்ச்சியைக் குறித்தல்: குறுந். 32: 3; இறை. 2, உரை. 2. கருவி மாமழை: குறுந். 94: 7, 197: 2, 205: 1; பெரும்பாண். 24; நற். 329: 11; அகநா. 4: 6; புறநா. 159: 19, 204: 13. 1-2. யாமத்து மழைபெய்தல்: "நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே" (கற். 22: 11.) 3 விடரகத்தியம்பும்: குறுந். 241: 6; மலைபடு. 366. 2-3. அருவி ஒலித்தல்: குறுந். 78: 1-2, 353: 3, 365: 3-4.

அருவி விடரில் ஒலித்தல்: "மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி, கன் முகைத் ததும்பும்" (குறுந். 95: 1-2); "கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை" (மலைபடு. 324); மலைபடு. 583 - 4.

1-3. முன்நாள் மழைபெய்தமையால் அருவி உண்டாதல்: (குறுந். 90: 2-5, 259: 1-2, 367: 4-5); "கருவி வானங் கான்ற புயலின், அருவி யாற்று மலை", "கருவி மாமழை கணைபெயல் பொழிந்தென வழிநாள், அருவி" (சீவக. 725, 2752.)

மு. குறுந். 61: 4-6. (சா)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில், "அவர் பிரிவாரென்று சிறிதும் கருதாமையின் நான் சோர்ந்திருந்தேன்; அக்காலத்து அவர் தம் பிரிவைக் கூறின் யான் ஆற்றேனென எண்ணிச் சொல்லாமற் போயினர். இதனை நினைந்து என் நெஞ்சம் வருந்தும்" என்று இரங்கித் தலைவி கூறியது.]

செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தன்னே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
ஆயிடை, இருபேராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
5. அல்ல னெஞ்ச மலமலக் குறுமே.

எ-து. பிரிவிடை மெலிந்த கிழத்தி சொல்லியது (பி - ம். உரைத்தது.)

ஔவையார் (பி - ம். அவ்வையார்.)

(பி - ம்.) 1. 'செல்லா'. 'னிகந்தனனே'. 2. 'வீவாள்', 'விடுவாள்' 'றவரிகந் தனரே' 3. 'இருபெய ராண்மை' 5. 'மலமறுக்குமே'

(ப - ரை.) தோழி, யான்—, செல்வார் அல்லர் என்று - தலைவர் நம்மைப் பிரிந்து செல்லாரென்று எண்ணி, இகழ்ந்தனன் - அவர் செலவை விலக்காமற் சோர்ந்திருந்தேன்; அவர்—, ஒல்வாள் அல்லள் என்று - நம் பிரிவை இவளுக்கு அறிவித்தால் அதற்கு இவள் உடம்படாளென்று எண்ணி, இகழ்ந்தனர் - என்னிடம் சொல்லுதலினின்றும் சோர்ந்தனர்; அ இடை - அக்காலத்தே, இருபெரு ஆண்மை செய்த பூசல் - இருவரிடத்துமுள்ள இரண்டு பெரிய ஆண்மைகள் செய்த போரினால், என் அல்லல் நெஞ்சம் - எனது துன்பத்தையுடைய நெஞ்சு, நல் அரா - நல்லபாம்பு, கதுவியாங்கு - கவ்விக்கடித்ததனால் வருத்தப்படுவதைப்போல, அலமலக்கு உறும் - இப்பொழுது மிக்க கலக்கத்தை யடையா நின்றது.

(முடிபு) செல்வா ரல்லரென்று யான் இகழ்ந்தேன்; ஒல்வா ளல்லளென்று அவர் இகழ்ந்தனர்; ஆயிடைச் செய்த பூசலால் என் நெஞ்சம் அலமலக்குறும்.

(கருத்து) தலைவர் என்னிடம் சொல்லாமற் பிரிந்தமையின் நான் கலங்குவேனையினேன்.

(வி - ரை.) தன்பால் மிக்க அன்புவைத்து ஒழுகிவந்தவனதலின், 'இவர் பிரிவார்' என்னும் எண்ணம் உண்டாதற்கு இடமில்லை யாக, 'செல்லார்' என்று தலைவி சோர்ந்திருந்தாள். இகழ்தல் - செய்வது செய்யாது சோர்ந்திருத்தல் (குறள், 539, பரிமேல்.) 'யான் இகழ்ந்தனன்' என்பது அங்ஙனம் இகழாது, செல்லுதலுங் கூடுமெனக் கருதியிருப்பின் அப்பொழுது செலவை விலக்கியிருப்பே னென்னும் நினைவிற்று. தன் பிரிவைக் கூறின் அதற்குத் தலைவி உடம்படாளென்று தலைவன் கூறுமலே சென்றான்; இங்ஙனம் தலைவன் சொல்லாது பிரிதலும் மரபென்பதை, 'துன்புறு பொழுதினும் - உணர்த்தாது பிரிந்து தலைவி துன்பம் மிக்க பொழுதினும்' (தொல். கற்பு. 43, ந) என்பதனாலும், இந்நூலுள் வந்துள்ள, "யாந்தமக், கொல்லே மென்ற தப்பற்குச், சொல்லா தகறல் வல்லு வோரே" (79: 7-8) என்னும் செய்யுட் பகுதியினாலும் உணரலாகும். அங்ஙனம் சொல்லாது பிரியினும் ஒருவாற்றானுணர்ந்து பின்னும் தலைவி ஆற்றுளாவளெனின், வெளிப்படச் சொல்லாவிடி

னும் தலையளி செய்தல் முதலியவற்றாலும் ஆயுதங்களைத் துடைத்துப் புதுப்பித்தலாலும் தலைவன் தன் பிரிவைக் குறிப்பால் தெளிவுறுத்திப் பிரிவானுதலின் அவன் செய்த தலையளியை நினைந்து ஆற்றியிருப்பா ளென்று கொள்க (நற். 177; கலி. 7 : 5-16.); 'சொல்லாது பிரியுங்கால் போழ்திடைப் படாமன் முயங்கியும் (கலி. 4: 10) அதன்றலைத் தாழ்கதுப்பு அணிந்தும் முள்ளுறழ் முளையெயிற்று அமிழ்தூறுந் தீநீரைக் கள்ளினும் மகிழ் செய்யுமென வுரைத்தும் இவை முதலிய தலையளி செய்து தெருட்டிப் பிரிய அவை பற்றுக் கோடாக ஆற்றுதலின்' (தொல். கற்பு. 43, ந.)

ஒல்வாள் அல்லள் - ஆற்றுளெனலுமாம். 'இவர் நம்மைப் பிரியார்' என்னும் ஊக்கத்தையும், 'இவளுக்குச் சொல்லாமலே போவேம்' என்னும் துணிவையும் முறையே இருவர்பாலு முண்டான ஆண்மை யென்றுள். ஆண்மை யென்பது இருபாலார்க்கும் உரியதென்பது, தலைவன் தலைவியரிடையே உள்ள ஒப்பினது வகையைக் கூறவந்த தொல்காப்பியர், "பிறப்பே குடிமை யாண்மை" என்று கூறுவதாலும், அதன் உரையிற் பேராசிரியர், 'ஆண்மை புருடர்க்காம், அஃது ஆள்வினை யெனப்படும், இது தலைமகட் கொப்பதன்றாலெனின் குடிமை யாண்மை (தொல். கிளவி. 56,) யென்புழி ஆண்மையென்பது இருபாற்கும் ஒக்குமாதலின் அமையு மென்பது' என்றெழுதிய பகுதியாலும் தெளியப்படும்.

பாம்பினாற் பற்றப்பட்டாருக்கு அதன் நஞ்சு உயிர்போமள வும் துன்புறுத்துதலைப்போல இஃது என் உயிர் போமளவும் துயர் செய்யுமென்று உவமையை விரித்துப் பொருள்கொள்க ; அகநா. 95 : 3-5.

நல்லரா : நல்லபாம்பென்பது வழக்கு. அல்லல் நெஞ்சமென்று வைத்துப் பின்னும் அலமலக்குறுமென்றது, அவர் பிரிவினால் துன்புறுவதோடு எம் இருவரது இகழ்ச்சியையும் நினைந்து பின்னும் கலங்குவதாயிற்று என்றவாறு. அலமலக்குறுதல் - சுழலுதல் இது 'கலமலக்குறுதல்' எனவும் வரும்; "மனங்களைக் கலமலக்குறுக்கும்" (நீல. 28.)

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) 1-2. என்னென்பது சொல்லுதலென்னும் தொழில் குறித்து வினைக்குரிய விகுதியுடன் வந்தது (நன். 420, மயிலை.)

3. சுட்டுநீண்டு வகரவொற்று வேறுபட முடிந்தது (தொல். குற்றியலு கரப். 78, ந.) ; ஆண்மை யென்பது ஆளுந்தன்மை யென்னும் பொருளில் இருபாலிலும் உணர்த்திநின்றது (தொல். கிளவி. 57, ந.)

மு. அறியாமைப் பிரிந்த தலைமகனையுடைய கிழத்தி சொல்லியது (இறை. 52); பழங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தத் தலைவி இரங்கல் (கம்பி. 170.)

(ஒப்பு.) 3. ஆயிடை : குறுந். 340 : 3. 4. நல்லார் : நற். 125 : 3; அகநா. 72 : 14. 4-5. பாம்பு கதுவியது போன்ற துன்பம் : "பூம்பொறிப் பொலிந்த வழலுமி முகன்பைப், பாம்புயி ரணங்கி யாங்கு மீங்கிது, தகாஅது .....உடையுமென் னுள்ளம்" (நற். 75 : 2-5); "அரவுறுதுயர மெய்துப" (ஐங். 173 : 2); சிறுபாண். 237.

மு. "செல்லா ரவரென யானிகழ்ந் தேனே
ஒல்லா ளிவளென வொழிந்தனர்
நல்லெழி லுண்க ணலியுமென் னெஞ்சே" (தமிழ்நெறி. மேற்.)

"பிரியா ரெனவிகழ்ந் தேன்முன்னம் யான்பின்னு யெற்பிரியிற்
றரியா ளெனவிகழ்ந் தார்மன்னர் தாந்தக்கன் வேள்விமிக்க
எரியா ரெழிலழிக் கும்மெழி லம்பலத் தோனெவர்க்கும்
அரியா னருளிலர் போலன்ன வென்னு யழிவித்தவே" (திருச்சிற். 340)

"செல்லா ரவரென் றியானிகழ்ந் தேன்சுரஞ் செல்லத்தன்கண்
ஒல்லா ளவளென் றவரிகழ்ந் தார்மற் றுவையிரண்டும்
கொல்லா ரயிற்படைக் கோனெடு மாறன் குளந்தைவென்ற
வில்லான் பகைபோ லெனதுள்ளந் தன்னு மெலிவிக்குமே"

(பாண்டிக்கோவை.) (சுரு)

செவிலித்தாய் கூற்று

[தலைவி தலைவனுடன் போனபின்பு அவர்களைப் பாலை நிலத்திற்றேடிச்சென்ற செவிலி அவர்களைக் காணுமல் வருந்திக் கூறியது]

சசு. காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே.

எ - து. இடைச்சுரத்துச் செவிலித்தாய் கையற்றுச் சொல்லியது.

[இடைச்சுரத்து - பாலைநிலத்தின் இடையில்.]

வெள்ளி வீதியார்.

(பி - ம்.) 1 'வென்கண்ணே'

(ப - ரை.) கால் பரி தப்பின - என் கால்கள் நடந்து நடந்து கடை ஓய்ந்தன; நோக்கி நோக்கி கண் வாள் இழந்தன - இணைந்து எதிர் வருவாரைப் பார்த்துப்பார்த்து என்கண்கள் ஒளியை இழந்தன; மன்ற - நிச்சயமாக, இ உலகத்து - இந்த உலகத்தில், பிறர் - நம்மகளும் அவள் தலைவனும் அல்லாத பிறர், அகல் இரு விசும்பின் மீனினும் பலர் - அகன்ற பெரிய வானத்திலுள்ள மீன்களைக்காட்டிலும் பலராவர்.

(முடிபு) கால் பரிதப்பின; கண் வாள் இழந்தன; பிறர் பலர்.

(கருத்து) தலைவியையும் தலைவனையும் நான் கண்டேனில்லை.

(வி - ரை.) நோக்கி நோக்கி யென்றதற்கேற்ப நடந்துநடந் தென்பது வருவித்துரைக்கப்பட்டது. முதுமையை யுடையா ளாதலினாலும் பாலைநிலம் நடத்தற்கு அரியதாதலினாலும் நடந்து நடந்து செவிலிக்குக் கால் ஓய்ந்தன. பரி - நடை (மதுரைக். 689, ந.) பொருள்களை நெடுநேரம் வெயிலில் கூர்ந்துநோக்கின் கண் ஒளி மழுங்குதல் இயல்பு. பாலையில் நெடுந்தூரத்தில் ஆணும் பெண்ணு மாக இணைந்துடன் வருவாரை நோக்கி, 'இவர் நம் மகளும் அவள் தலைவனும் போலும்' என்று எண்ணி அவரையே கூர்ந்துநோக்கி அணிமையில் வர, அவரல்லரென்பதை அறிந்து பின்னும் இங்ஙனம் வருவாரை இப்படியே நோக்கி நோக்கிச் செவிலி மனம் வெறுத்தாள். அகலிரு விசும்பு - தன்னை யொழிந்த நான்கு பூத மும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக்காரணமாகிய பெரிய ஆகாயம் (பெரும்பாண். 1, ந.)

பன்மைக்கு விசும்பின்மீனைக் கூறுதல் மரபு. பிறர் - தான் கருதி நோக்குவாராகிய தலைவியும் தலைவனுமல்லாத பிறர்.

பலரே: ஏகாரம் தேற்றப்பொருளில் வந்தது; ஏனை ஏகா ரங்கள் அசைநிலை.

(மேற்.) 1-2. வாளென்னும் உரிச்சொல் ஒளியாகிய பண்பு உணர்த்தி கின்றது (தொல். உரி. 70, இளம், 69, ந.)

மு. சுரத்திடை விலையது நிகழ்ந்தபின்னர்ச் செவிலி கூறியது (தொல். அகத். 40, இளம்.); செவிலி கடத்திடைத் தன்நெஞ்சிற்குக் கூறியது (தொல். அகத். 42, ந.); செவிலி புதல்வியைக் காணுது கவலை கூர்தல் (நம்பி. 188.)

(ஒப்பு.) 1. செவிலி நடை ஓய்தல்: "அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர், பரிமெலிந் தொழிய" (நற். 110 : 6-7.)

1-2. கூர்ந்துபார்த்தலாற் கண் ஒளிஇழத்தல்: "நீளிடை யத்த நோக்கி வாளற்றுக், கண்ணுங் காட்சி தௌவின" (நற். 397 : 2-3); "வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கி" (புறநா. 177 : 2); 'வாளற்றுப் புற்கென்ற

கண்ணும் - அவர் வரும் வழி பார்த்து என் கண்களும் ஒளி யிழந்து புல்லிய வாயின்' (குறள், 1261, பரிமேல்.); *''கண்ணும் வாளற்ற''* (சீவக. 998); மலைபடு. 369 ; நற். 133 : 2.

3. அகலிருவிசும்பு : பெரும்பாண். 1, 292; மதுரைக். 50, 182, 267; நெடுநல். 20; குறிஞ்சிப். 48; மலைபடு. 100; கலி. 102: 1; பதிற். 68: 4; புறநா. 2: 2-7, 8: 9, 77: 11; மணி. 19 : 91; பெருங். 1. 38: 16, 3. 12: 2.

3 - 4. வான்மீனைப் பன்மைக்குக் கூறுதல் : *''வானத்து மீன்கணற்றதன் சுனையே''*, *''வானத்து, வயங்கித் தோன்று மீனினும்.....பொலிகநுங் காளே''*, *''வானத்து, வயங்குபன் மீனினும் வாழியர் பலவென''* (புறநா. 109: 9-10, 367: 15-8, 371: 24-5); *''வானத்து, மேலாடு மீனிற் பலராவர்''* (நாலடி. 113) (சசி)

தோழி கூற்று

[பரத்தையர்பாற் சென்ற தலைவன் விட்ட தூதுவர் தலைவியி னது உடம்பாட்டை வேண்டியபொழுது, தலைவி உடம்பட்டா ளென்பதை யறிந்து தோழி, *''தலைவன் கொடுமை தன்னைத் துன் புறுத்தவும் அதனைப் பாராட்டாமல் உடம்படுதற்குரிய இக் குடியிற் பிறத்தல் கொடிது''* என்று கூறிக் குறிப்பினல் தலை வியின் உடம்பாட்டைத் தெரிவித்தது.]

நடு. காலை யெழுந்து கடுந்தேர் பண்ணி
வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்ல நூர மெல்லினன் பெரிதென
மறுவருஞ் சிறுவன் றாயே
5. தெறுவ தம்மவித் திணைப்பிறத் தல்லே.

எ - து. தலைமகற்குப் பாங்காயினர் வாயில் வேண்டியவழித் தோழி வாயில் நேர்ந்தது.

[பாங்காயினர் - பாணர் முதலியோர்.]

ஆலங்குடி வங்கனர் (பி - ம். வங்கன்.)

(பி - ம்.) 2 *'தழீஇய'*, *'மழீஇய'*, *'மகளிர் மழீஇச் சென்ற'*, *'மகளிர்க் காணிய சென்ற'* 4 *'சிறுவர் தாயே'*

(ப - ரை.) காலை எழுந்து - காலையிற் புறப்பட்டு, கடு தேர் பண்ணி - விரைந்து செல்லும் தேரை ஏறுதற்கேற்ப அமைத்து, வால் இழை மகளிர் - தூய அணிகலன்களை அணிந்த பரத்தை யரை, தழீஇய சென்ற - தழுவும் பொருட்டுச் சென்ற, மல்லல்

ஊரன் - வளப்பம் பொருந்திய ஊரையுடைய தலைவன், பெரிது எல்லினன் என—மிக்க விளக்கத்தை யுடையவனென்றெண்ணி, சிறுவன் தாய் - ஆண்மகப் பெற்ற தலைவி, மறுவரும் - அவனை ஏற்றுக் கொள்வாளாயினும் மனம் சுழலுவாள்; இது திணை பிறத்தல் - மனம் சுழலுதற்குரிய செயலைத் தலைவன் செய்யினும் அதனை மறந்து வாயில் நேர்தற்குரிய இக்குடியிற் பிறத்தல், தெறுவது - துன்புறுத்துவதாகும்.

(முடிபு) சிறுவன் தாய் ஊரன் எல்லினனென மறுவரும்; இத் திணைப் பிறத்தல் தெறுவது.

(கருத்து) தலைவி கற்பொழுக்கமுடைய குடியிற் பிறந்தாளாதலின் தலைவனை ஏற்றுக்கொள்வாள்.

(வி - ரை.) எழுந்து - துயிலெழுந்தெனலுமாம். பண்ணல் - ஏறுதற்கேற்ப அமைத்தல் (புறநா. 12 : 2, உரை); அலங்கரித்தலுமாம். வாலிழைமகளிரென்றது தலைவன் தந்த செல்வத்தால் இழையுடையராயினரென்னும் நினைவிற்று. தரீஇய வெனனும் பாடத்திற்கு, 'நம் இல்லிற் கொணர்ந்து வைத்தற்கு' என்று பொருள் கொள்க; "நேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின், தேர்பூண்ட நெடுநன்மான் றெண்மணிவந் தெடுப்புமே" (கலி. 70 : 17-8); "ஊரன், தேர்தர வந்த தெரியிழை" (அகநா. 316 : 7-8); ஊரன் - மருதநிலத் தலைவன். எல் - விளக்கம். தலைவன் பரத்தையரோடு இன்புற்றதனால் விளக்கமுடையனாயினன்; "எல்லினை வருஇ" (கலி. 75 : 14) என்பதையும், 'வதுவை அயர்ந்த பின்பு விளக்கத்தினை யுடையையாய் வாரா நின்றாய்' (ந) என்னும் அதனுரையையும்காண்க. மறுவருதல் - சுழலுதல் (அகநா. 22 : 4, உரை) சிறுவன் தாயென்றமையால் தலைவி ஆண்மகப்பெற்றமை விளங்கியது.

பரத்தையிற்பிரிந்த தலைமகன் தன் தலைவி ஆண்மகப் பெற்றதை யறிந்து அம்மகவைக் காணவருதலும் அப்பொழுது தலைவி தன் கற்பொழுக்கத்தின் சிறப்பால் அவன் தீங்கைமறந்து ஏற்றுக் கொள்ளுதலும் மரபு. 'தெறுவதம்ம' என்று தோழி கூறியதனால் அவனை ஏற்றுக்கோடல் தகாதென்பது அவள் கருத்தாதல் விளங்கும்.

உயர்குடிப்பிறந்த கற்புடைமகளிர் தம் தலைவர் கொடுமை புரியினும் அதனை மறந்து அன்பு பாராட்டுதல் அக்குடிப்பிறப்பிற் குரிய இயல்பென்பது இந்நூல் 9, 10 - ஆம் செய்யுட்களாலும், ஐங்குறுநூறு முதற்பாட்டின் உரையினாலும்,

" சேச்கை யினியார்பாற் செல்வான் மனையானாற்
காக்கை கூடிங்தொழுகல் கூடுமோ கூடா
தகவுடை மங்கையர் சான்ருண்மை சான்ருர்
இகழினுங் கேள்வரை பேத்கி யிறைஞ்சுவார் " (பரி. 20 : 86-9),
" மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் ரேழி கடனமக் கெனவே " (கலி. 75 : 32-3),
" அன்புடைக் கணவ ரழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை "
(பெருங். 4. 14 : 98-9)

என்பவற்ருலும் விளங்கும்.

பிறத்தல்லே : லகரவொற்று செய்யுளோசை நோக்கி விரிக்கும் வழி விரித்தது. அம்மவும் ஏகாரங்களும் அசைகிலே.

(மேற்) 1. மருதத்திற்குக் காலையென்னும் சிறுபொழுது வந்தது (தொல். அகத். 8, ந.)

மு. புறப்பட்ட வீரியாட்டினைத் தலைவன் பொருந்திய புகர்ச்சிக்கண் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 9, இளம்.); குடிப்பிறத்தலை வெறுத்தலாகிய மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 12, இளம்.); உறுதகை யில்லாப் புலவியுள் மூழ்கிய இழுவோள்பால் நின்று கெடுத்தற்கண் தோழி கூறியது (தொல். கற்பு. 9, ந.); தோழி தலைவியை உயர்த்துக் கூறியது (தொல். பொருளியல், 46,ந.)

(ஒப்பு.) 1. **தேர்பண்ணல்** : " நெடுந்தோ பண்ணி " (நற். 207: 4.)

மு. தஞ்சை. 261. 2. **வாலிழை** : குறுந். 188 : 3. 1-2. **தலைவன் தேரிற் பரத்தையர்பாற் செல்லல்** : 'தண்டுறை பூரன் றேரெம், முன்கடை நிற்க - அவன்றேர் பிறமகளிர் முன்கடை நிற்ற லொழிந்து எம்முன் கடை நிற்க' (ஐங். 5, உரை); " நிரைதார் மார்ப னெருங லொருதனியொடு, வதுவை யயர்தல் வேண்டிப் புதுவதின், இயன்ற வணிய னித்தெரு விறப் போன், மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து, காண்டல் விருப் பொடு தளர்புதளர் போடும், பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர், தாங்குமதி வலவவென் றிழிந்தனன் " (அகநா. 66 : 7 -12.) ; 316 : 7-8

4. **மறுவருதல்** : " மறுவந்துகள ", " மறுவந் தோடி " (குறுந். 65: 2, 394: 3); " பெறுவென் கொல்லென மறுவந்து மயங்கி " (பெருங். 1. 33: 127.) (சரு)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி ஆற்றமாட்டாளென்று கவலையுற்ற தோழியை நோக்கி, " என்னைத் துன்புறுத்தும் மாலைக் காலமும் தனிமையும் தலைவர் சென்ற நாட்டிலும் உளவாதலின் அவருக்கும் அவற்றல் துன்பம் உண்டாகும் ; அதனல் அவர் விரை

வில் வருவாரென்று எண்ணி யான் ஆற்றுகிறேன்" என்று தலைவி கூறியது.]

சசு. ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றி லுணங்கன் மாந்தி மன்றத்
தெருவி னுண்டா துகுடைவன வாடி
5. இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு [வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ ரோழியவர் சென்ற நாட்டே.

எ-து. பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

மாமலாடன் (டி-ம். மாமிலாடன்.)

(பி-ம்.) 3-4 'மன்றதெருவின்' 4 'தெருவை நுண்டாது'

(ப-ரை.) தோழி—, ஆம்பல் பூவின் சாம்பல் அன்ன - ஆம்பல் மலரின் வாடலையொத்த, கூம்பிய சிறகர் - குவிந்த சிறகுகளை யுடைய, மனை உறை குரீஇ - வீட்டின்கண் தங்கும் குருவிகள், முன்றில் உணங்கல் மாந்தி - முற்றத்தில் உலருந் தானியங்களைத் தின்று, மன்றத்து - பொதுவிடத்தின்கணுள்ள, எருவின் நுண் தாது குடைவன ஆடி - எருவினது நுண்ணிய பொடியைக் குடைந்து விளையாடி, இல் இறை பள்ளி - வீட்டிறப்பிலுள்ள இடத்தே, தம் பிள்ளையொடு வதியும் - தம்முடைய குஞ்சுகளோடு தங்கியிருக்கும், புன்கண் மாலையும் - பிரிந்தார்க்குத் துன்பத்தைத் தரும் மாலைக்காலமும், புலம்பும் - தனிமையும், அவர் சென்ற நாட்டு - அத்தலைவர் பிரிந்து சென்ற தேயத்தில், இன்றுகொல் - இல்லையோ?

(முடிபு) தோழி, அவர் சென்ற நாட்டு, மாலையும் புலம்பும் இன்று கொல்?

(கருத்து) என்னுடைய பிரிவினல் தலைவரும் துன்புறு வராதலின் விரைந்துவருவர்.

(வி-ரை.) சாம்பல் - பூவின் வாடல் (சிவக. 2349, ந.) எரு - உலர்ந்த சாணம். பறவைகளின் குஞ்சுகளைப் பிள்ளை யென்றல் மரபு (தொல். மரபு. 4.) புன்கண் மாலை - ஒளியிழந்த மாலையென்

பதும் ஆம் (குறள், 1222, பரிமேல்.) மாலையும் இன்று கொல், புலம்பும் இன்று கொலெனத் தனிததனியே கூட்டுக. அவர்: நெஞ்சறி கூட்டு ஏகாரம்: அசைநிலை.

தலைவர் சென்ற நாட்டிலும் துன்பந்தரும் மாலையும் தனிமையும் உளவாதலின் அவற்றால் உண்டாகும் துயரத்தையறிந்து அவர் என்னை நினைத்து மீண்டு வருவார்; அது நினைந்து யான் ஆற்றுவேனையினேனென்பது தலைவியின் கருத்து.

தமக்குரிய இடத்தில் தம் பிள்ளையோடு குருவிகள் வதியும் மாலையில் அவை கண்ட தலைவர் நாமும் நம் மகவோடும் தலைவியோடும் சேர்ந்துறைதல் வேண்டுமென்னும் கருத்தினராவா ரென்பது குறிப்பு.

(மேற்.) 4. பலவின்பால் வினைமுற்று வினையெச்சமானது (நன். 350, மயிலை, 351, சங்.)

5. பிள்ளையென்பது பறவையின் இளமைப்பெயர் (தொல். மரபு. 4, பேர்.)

மு. தலைவி தலைவன் சென்ற நாட்டு இவை இன்று கொலென்றது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 2. மனையுறை குரீஇ: "மனையுறை குரீஇக் கறையணற் சேவல்" (புறநா. 318: 4); "மனையுறை குருவி வளைவாய்ச் சேவல்" (திருவாரூர் மும்மணிக். 19: 1.)3. உணங்கல் - உலரும் தானியம்; திருச்சிற். 235.

4. எருவின் தாது: நற். 271: 2. 3 - 4. மன்றத்து எருவின் தாது: "தாதெருத் ததைந்த முற்றம்" (மலைபடு. 531); "தாதெரு மறுகு" (நற். 343: 3); (புறநா. 33: 11, 215: 2, 311: 3); "தாதெரு மன்றத் தயர்வர் தழூஉ", "காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்து" (கலி. 103: 62, 108: 60); "தாதெரு மறுகின் மூதூர் ராங்கண்" (அகநா. 165: 4); "தாதெரு மன்றந் தாணுடன் கழிந்து", "தாதெருமன் றத்தாடுங் குரவை", "தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து" (சிலப். 16: 102, 17: 'மாயவன்றன்', 27: 74.)

2-4. "மனையுறை புறவின் செங்காற் சேவல், இன்புறு பெடையொடு மன்றுதேர்ந் துண்ணுது, இரவும் பகலு மயங்கிக் கையற்று, மதலைப் பள்ளி மாறுவன விருப்ப" (நெடுநல். 45-8.)

5. பறவைகளின் குஞ்சைப் பிரியா யென்றல்: குறுந். 92: 4, 139: 4.

2-5. குருவி வீட்டின் இறப்பில் தங்குதல்: "முடங்க லிறைய தூங்கணங் குரீஇ" (குறுந். 374: 5.) 6. புன்கண் மாலை: "பையுண் மாலை" (குறுந். 195: 2.) மாலை துன்பத்தைத் தருதல்: குறள், 1221-30. 5-6. மு. குறுந். 330: 6-7.

(அசு)

தோழி கூற்று

[தலைவன் இரவில் தலைவியிடம் வந்து பழந்தங்காலத்தில் அவனை விரைந்து மணம் செய்துகொள்ளும்படி தூண்டஎண்ணிய தோழி, "நிலவே, நீ இரவில் வந்தொழுகுந் தலைவரதுகளவொழுக்கத்திற்கு நன்மை செய்வாயல்லை" என்று கூறி இரவுக்குறியை மறுத்தது.]

சஎ. கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் ரோன்றுங் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.

எ - து. இராவந்தொழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாகத் தோழி உரைத்தது.

[முன்னிலைப் புறமொழி - கூறப்படும் செய்தியைக் கேட்டறிதற்குரியவர் முன்னே இருப்பவரும் அவரை விளித்துக் கூறுமல், வேறொருவரையேனும் பிறிதொரு பொருளையேனும் விளித்துக் கூறுவது (தொல். கற்பு. 26, ந.)]

நெடுவெண்ணிலவினை.

(ப - ரை.) நெடு வெண் நிலவே - நீட்டித்தலையுடைய வெண்ணிலாவே, கரு கால் வேங்கை - கரிய அடியையுடைய வேங்கை மரத்தின், வீ உகு துறுகல் - மலர்கள் உகிர்ந்த குண்டுக்கல், இரு புலிக் குருளையின் தோன்றும - பெரிய புலிக்குட்டியைப் போலக் காணப்படும், காட்டிடை - காட்டினிடத்து, எல்லி வருநர் களவிற்கு - இரவின்கண் வரும் தலைவரது களவொழுக்கத்திற்கு, நல்லை அல்லை - நன்மை தருவாய் அல்லை.

(முடிபு) நெடுவெண்ணிலவே, காட்டிடை எல்லி வருநர் களவிற்கு நல்லை அல்லை.

(கருத்து) இனி இரவில் வருதல் தகாதாதலின தலைவர் தலைவியை விரைவில் மணந்துகொள்ளல் வேண்டும்.

(வி - ரை.) வேங்கை, கருந்தோலிற் செம்பொறி யமைந்த உடலினதாகலின் கரிய பாறையும் அதன்மேல் உதிர்ந்த வேங்கை மலர்த்தொகுதியும் புலிக் குருளையின் தோற்றத்தைச் செய்தன; "புலிப்பொறி வேங்கைப் பொன்னிணர்" (ஐங் 396) காட்டில் வருங்கால் நிலாவொளியில வேங்கைமலர் பரவிய துறுகல்லைப்

புலியென்றெண்ணித் தலைவன் அஞ்சுதலுங் கூடுமென்பது குறிப்பு ; "வான்கண் விரிந்த பகன்மருணிலவிற், குரன் மிஞைய சாரலாராற், றேங்கன் மிசைஇய வேங்கை யொள்வீ, புலிப்பொறி கடுப்பத் தோன்றலின்" (அகநா. 228 : 8-11.) எல்லி - இரவு ; "எல்லியம் போது வழங்காமை முன்னினிதே" (இனியது. 34.) காட்டிடை வரும்போது வழியிலுள்ள வேங்கைமலர் உக்க பாறையை வேங்கைக் குருளையென்று அஞ்சச் செய்வதாலும், ஊரின்கண் உள்ளார் கண்டுகொள்வதற்கு ஏதுவாதலாலும் நிலவை, 'நல்லை யல்லை' யென்றுள். நெடு வெணணிலவு - நெடு நேரம் எறிக்கும் வெண்ணிலவு ; இயல்பாகத் தனக்கமைந்த பொழுதின்மாத்திரம் எறிக்கும் நிலவாயினும், விரைவில் மறைய வேண்டுமென்னும் விருப்பினளாதலின் அவளுக்கு நெடுமை யுடையதாகத் தோன்றியது ; தம்மால் விரும்பப்படாத நிலவை, 'நெடு வெண்ணிலவு' என்று கூறுவதாக அமைத்த சிறப்பால் இச்செய்யுளை இயற்றிய நல்லிசைப்புலவர் 'நெடுவெண்ணிலவினார்' என்னும் பெயர் பெற்றார்.

நிலவை நோக்கிக் கூறுவாளாய்த் தோழி, இங்ஙனம் ஒழுகுதல் ஏதம் தருமென்று தலைவனுக்கு அறிவுறுத்தி வரைவு கடாயினளாயிற்று.

(மேற்.) 2. குருளை புலியின் இளமைப் பெயர் (தொல். மர. 8, பேர்.)

1 - 2. 'ஓமைக்கிளவியும் இரட்டைவழித்தாகி வருவன கொள்க ; இரும்புலிக் குருளை யென்றதனையே தழுகல்லோடும் வேங்கைவீயோடும் ஒப்பித்தமையின் இப்பெயர்த்தாயிற்று' (தொல். உவம. 22, பேர்) ; ஓமைக்கிளவி இரட்டை வழித்தாய் வந்த உவமை (மாறன். 103.)

மு. 'இராவந்து ஒழுகுங்காலை முன்னிலைப் புறமொழியாக நிலாவிற்கு உரைப்பாளாய் உரைத்தது. இக்குறுந்தொகையுட் குறிஞ்சியுள் * வேனில் வந்தது' (தொல். அகத். 12, ந) ; 'தலைவி நிலவு வெளிப்பட வருந்தியது' (தொல். களவு. 16. ந.) ; நிலவு வெளிப்படுதல் (நம்பி. 161 ; இ. வி. 519) ; பண்பு வமை வந்தது (தண்டி. பொருளணி. 12) ; பாலைக்குரிய வேனில் குறிஞ்சிக் கண் வந்தது (இ. வி. 394) ; வேறுபட வந்த உவமம் (இ. வி. 645.)

(ஒப்பு) 1. **கருங்கால் வேங்கை** : குறுந். 26 : 1, ஒப்பு ; 343: 4; மதுரைக் 296 ; நற் 217 : 4, 222 : 1, 313 : 1, 351 :5 - 6, 368 : 2, 383 : 1 ; அகநா : 345 : 8, 349 : 10 ; புறநா. 137 : 9. **வேங்கைப்பூ தழுகல்லின்மேல் உகுதல்** : "அரும்புவா யவிழ்ந்த கருங்கால வேங்கைப், பொன்மரு ணறுவீ கன்மிசைத் தாஅம்" (நற். 257 : 5 - 6) ; "கருங்கால் வேங்கை மாத்தகட்

---

* வேங்கை பூத்து உகுங்காலம் வேனிலாதலின் இங்ஙனம் உரைத்தார்.

டொள்வீ, இருங்கல் வியலறை வரிப்பத் தாஅம்" (ஐங். 219 : 1 - 2); "மன்ற வேங்கை மணநாட் பூத்த, மணியே ரரும்பின் பொன்வீ தாஅய், வியலறை வரிக்கு முன்றில்" (அகநா. 232 : 7-9.)

1 - 2. **வேங்கைமலர் உதிர்ந்த துறுகல்லிற்கு வேங்கை :** "மெல்லிணர் வேங்கை வியலறைத் தாயின, அழுகை மகளிர்க் குழுவை செப்ப" (பரி. 14 : 11 - 2); "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை, மாத்தகட் டொள்வீ தாய துறுகல், இரும்புலி வரிப்புறங் கடுக்கும், பெருங்கல் வைப்பு" (புறநா. 202 : 18-21); "கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மேல், இருங்கால் வயவேங்கை யேய்க்கும்" (கிணமா. 26); "நறமலி வேங்கையின் பூப் பயில் பாறையை நாகநண்ணி, மறமலி வேங்கை யெனநனி யஞ்சும்" (திருச்சிற். 96) **வேங்கைமலர்த்தொகுதிக்குப் புலி :** நற். 383 : 1 - 2; அகநா. 12 : 9 - 11, 205 : 19 - 20.

5. **நெடுவெண்ணிலவு :** குறுந். 193 : 4; அகநா 2 : 17; பெரும். 1. 35 : 235. (சள)

தோழி கூற்று

[தலைவன் பகற்பொழுதில் வந்து தலைவியுடன் பழகும் காலத்தில் அவனைக் காணுது நெடுநேரம் கழிவதனல் துயருற்ற தலைவியினது மேனியிற் பசலை முதலிய வேறுபாடுகள் உண்டானமை கண்டு வருந்தி, "தலைவர் இவளை வரைந்து கொள்வோமென்று சொல்லாரோ!" என்று தோழி கூறியது,]

சஅ. தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்துங் கையா ரேம்பென
ஓரை யாயங் கூறக் கேட்டும்
இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
5. நன்னுதல் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பி னெருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே.

எ - து. பகற்குறிக்கட் காணும் பொழுதினும் காணப்பொழுது பெரிதாகலின், (தொல். களவு. 16, வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது.

['இவ்வகை பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும் பொழுதிற் காணப்பொழுது பெரிதாகலான் ஆற்றுளாய் நெஞ்சு மிக்கது வாய்சோர்ந்து கடலிற்காணும் கானலிற்காணும்.....வறிதே

குழவி அழுதாற்போல யாதானும் ஒருசொற் சொல்லும்' (18)என் பது இறையனாகப்பொருள் உரை]

பூங்கணுத்திரையார் (பி - ம். பூங்கணுத்தரையார்.)

(பி - ம்.) 5 'நன்னுதற் பசலை' 6 'நசையாடு'

(ப - ரை.) தாதின் செய்த - பூந்தாது முதலிய பொடிகளாற் செய்யப்பட்ட, தண் பனி பாவை - மிக்க குளிர்ச்சியையுடைய வினையாட்டுப்பாவையானது, காலை வருந்தும் - காலைப்பொழுதில் வருந்துதலாற் பிறந்த, கையாறு ஓம்பு என - செயலறுதலை ஒழிப் பாயாகவென்று, ஓரை ஆயம் - விளையாட்டையுடைய மகளிர் திரள், கூற கேட்டும் - சொல்லக் கேட்டபின்பும், இன்ன பண் பின் - இத்தகைய தன்மையையுடைய, இனி பெரிது உழக்கும் - வருத்தத்தை மிக அடையும், நன் நுதல் - நல்ல நெற்றியையுடைய தலைவியினது, பசலை நீங்க - பசலை நீங்கும்படி, காதலர் தமக்கு - தலைவர் மாட்டு, நசை ஆகு பண்பின் - இவளுக்கு விருப்பமாகும் தன்மையையுடைய, அன்ன ஒரு சொல் - அத்தகைய ஒரு சொல் லானது, இசையாது கொல் - இயலாதோ?

(முடிபு) ஆயம் கூறக்கேட்டும் உழக்கும் நன்னுதலின் பசலை நீங்க ஒரு சொல் காதலர்தமக்கு இசையாது கொல்?

(கருத்து) தலைவன் இத்தலைவியை வரைந்துகொண்டால் இவள் தன் துன்பத்தினின்றும் நீங்குவாள்.

(வி - ரை.) தாது - பலவகைப் பொடி. தலைவி பாவையினி டத்து மிக்க விருப்பினளாதலின் (பெருங். 2. 15 : 112), 'பாவை யின் கையாற்றைப் பாதுகாப்பாயாக' என்றல் அவள் அதனை உடனே செய்வாளென்று மகளிர் நினைந்தனர். கேட்டும் : உம்மை உயர்வு சிறப்பு. இன்ன பண்பு என்றது தலைவனைக் காணுப் பொழுது பெரிதானமையின் அவன் பிரிவினால் துன்புற்றுப் பச லையும் படரும் கொண்டிருந்த இயல்பை. இனி - வருத்தம் (கலி. 11 : 19, ந.) பசலை : தலைவனது பிரிவினால் உண்டாவது; இந்நூல் 27-ஆம் செய்யுளின் விசேடவுரையைப் பார்க்க. நன்னுதலென்று வைத்து அந்நுதலை யுடையாளது பசலையென்றமையின் நுதலும் பசலை கொண்டதெனக் கொள்க (குறுந். 87 : 4) அன்ன ஒரு சொலென்றது வரைவேனென்று சொல்வதை. எப்பொழுதும் உட னுறையும் நிலையைத் தலைவி விரும்பினளாக, அதற்கு ஏற்றது வரைந்துகொண்டு இல்லறம் நடத்துதலேயாதலின் அக்கருத்தை வெளியிடும் சொல்லை, 'நசையாகு பண்பின் ஒரு சொல்' என்றாள். தலைவன் வரைந்து கொள்வேனென்று கூறும் வழக்கத்தை, ஐங்குறு நூறு, 92 - ஆம் செய்யுளும் அதன் உரையும் விளக்கும். ஒரு சொல் -

ஒப்பற்ற சொல்; 'ஒரு சொல் இசையாது கொல்லோ' என்ற சொற்கிடக்கை, 'பல சொல்லி நயப்புணர்த்திப் பாராட்டும் தன்மையினருக்கு இவ்வொருசொல் அரிதன்றே' என்னும் குறிப்பையும் புலப்படுத்தியது.

அன்னம் என்று பிரித்து, அன்னமானது காதலருக்கு ஒரு சொல்லை இசையாதுகொலென்பதும் ஒருவாறு பொருந்தும்; ஆயினும் சிறப்புடையதன்று. அன்னம் தூது செல்லல் : திருச்சிற். 191.

ஓகாரமும் ஏகாரமும் அசைநிலை.

(ஒப்பு.) 1. தாதிற் செய்த பாவை: "தாதுசெய் பாவை" (அகநா. 392 : 6.) செய்த பாவை: "செவ்வுறு பாவை" (குறுந் : 195: 6.) தலைவியின் பாவை: குறுந். 114 : 1, 276 : 1, 278 : 3. 3. ஒரை ஆயம் : குறுந். 316 : 5, 401 : 3; நற். 68 : 1, 143 : 3; புறநா. 176 : 1. (சுஅ)

தலைவி கூற்று

[தலைமகன் பரத்தையிற் பிரிந்து மீண்டுவந்த காலத்து முன்னிருந்த ஆற்றுமை நீங்கி, அவனோடு அளவளாவி, "நாம் பிறவி தோறும் அன்புடைய கணவனும் மனைவியுமென இருப்போமாக!" என்று தலைவி கூறியது]

சஉ. அணிற்பல் லன்ன கொங்குமுதிர் முண்ட
மணிக்கே ழன்ன மாநீர்ச் சேர்ப்ப [கத்து
இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
5. யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே.

எ - து. தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவனைக் கண்டவழி அவ்வாற்றுமை நீங்குமன்றே; நீங்கியவழிப் பள்ளி (பி - ம். நீங்கிய வழியப்பள்ளி) யிடத்தானிய தலைமகற்குச் சொல்லியது.

[தலைவனைக் கண்டால் தலைவியினது ஆற்றுமை நீங்குமென்பது, "எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன், பழிகாணேன் கண்ட விடத்து", "காணுங்காற் காணேன் றவறுய காணுக்காற், காணேன் றவறல் லவை" (குறள், 1285-6) என்பவற்றுல் உணரப்படும். பள்ளி - படுக்கை.]

அம்மூவனர்.

(வி - ம்.) 2' மாணீர்ச் ' 4 ' கியரெங் ' 5 ' னெஞ்சினேர்'

(ப - ரை.) அணில் பல் அன்ன - அணிலின் பல்லை ஒத்த முள்ளை யுடைய, கொங்கு முதிர் முண்டகத்து - தாது முதிர்ந்த முள்ளிச் செடியையும், மணி கேழ் அன்ன மா நீர் - நீலமணியினது நிறத்தை ஒத்த கரிய நீரையுமுடைய, சேர்ப்ப-கடற்கரையையுடைய தலைவ, இன்மை மாறி - இப்பிறப்பு நீங்கப்பெற்று, மறுமை ஆயினும் - நமக்கு வேறு பிறப்பு உண்டாயினும், என் கணவன் - என்னு டைய தலைவன், நீ ஆகியர் - இப்பொழுது என்பால் அன்பு செய் தொழுகும் நீயே ஆகுக! நின் நெஞ்சு நேர்பவன் - நின்னுடைய மனத்திற்கு ஒத்த காதலி, யான் ஆகியர் - இப்பொழுது நின் நெஞ்சு கலந்தொழுகும் யானே ஆகுக!

(முடிபு) சேர்ப்ப, மறுமையாயினும் நீ என் கணவன் ஆகியர்! நின் நெஞ்சு நேர்பவள் யான் ஆகுக!

(கருத்து) நம்முடைய அன்பு பிறவிதோறும் தொடரும் இயல் பினதாகுக!

(வி - ரை.) அணிற்பல் முண்டகத்தின் முள்ளுக்கு உவமை. முண்டகம் - கழிமுள்ளிச்செடி. மறுமையென்றது வரும் பிறவி கள் எல்லாவற்றையும். கணவனை: ஐ சாரியை. நீயாகியரெங் கணவனை யென்றதற் கேற்ப யானுகியர் நின் மனைவியென்னது நெஞ்சு நேர்பவளென்றது, கணவனென்றமையாலேயே மனைவி யென்பது பெறப்பட்டமையாலும், மனைவியாக இருப்பினும் நெஞ்சு நேர்பவளாகும் பேறு பரத்தைக்காவதுமுண்டாதலின் வாளா மனைவியென வாழாமல் நெஞ்சு பொருந்தியவளுமாதல் வேண்டு மென்பது நினைவாதலாலும் என்க. நெஞ்சு நேர்தல்: "அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே" (குறுந். 40 :5) என்று முன்னும் வந்தது. நேர்தல் - கொடுத்தலுமாம; தலைவன் தன் நெஞ்சைத் தலைவிக்குக் கொடுத்தலாவது எப்பொழுதும் அவளை நினைத்து அன்பு பாராட்டல். ஏகாரம்: அசைநிலை

முள்ளிச்செடி புறத்தே முட்களையுடையதாயினும் மலர்களும் அம்மலர்களில் மணமுடைய பூந்தாதும் குறைவறப் பெற்றிருத் தலைப் போலத் தலைவன் புறத்தொழுக்க முடையனுயினும் தன் மாட்டு அன்புடையனுகவே இருக்கின்றனென்பது தலைவியின் குறிப்பு.

(மேற்) மு. தலைமகன் நலம்பாராட்டியவழித் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, இளம்); தலைவிக்குச் சாக்காடென்னும மெய்ப்பாடு வந்தது (தொல். களவு. 9, ந.); காமக்கிழத்தியர் நலம்பாராட்டிய தீமையின் முடிக்கும் பொருளின்கண் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு) 1. முண்டகத்தின் முள்: குறுந். 51 : 1. 5. நெஞ்சு நேர்பவள்: ஐங் 151 : 5.

3 - 5. மறுமையிலும் கணவனும் மனைவியுமாதல்: (குறுங். 199 : 5 - 8); 'தன் துணையாக - இம்மை மறுமைக்குத் துணையாக' (கலி. 69 : 4, ந); "ஏமர்தர வாரா தாயினு மிவணேற், றவனுறை யுலகத் தழித்தப்பிறந தாயினும், எய்துதல் வலித்தனென்" (பெருங். 1. 36 : 113 - 5); "மறப்பா னடுப்பதொர் தீவினை வருதிடிற் சென்றுசென்று, பிறப்பா னடுப்பினும் பின்னுந்துன் னத்தகும் பெற்றியரே" (திருச்சிற். 205.) (சக)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்த தலைவனுல் விடப்பட்ட தூதுவரை நோக்கி, "அவர் விளையாடும் துறை அழகு பெற்றது; அவர் மணந்த தோள் மெலிவுற்றது" என்று தலைவி கூறியது.]

நெ. ஐயவி யன்ன சிறுவீ ஞாழல்
செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்
துறையணிந் தன்றவ ரூரே யிறையிறந்
திலங்குவளை நெகிழச் சாஅய்ப்
5 புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே.

எ - து. கிழவற்குப் பாங்காயின வாயில்கட்குக் கிழத்தி சொல்லியது

குன்றியனார் (பி - ம். குன்றியான், குன்றியாள்.)

(பி - ம்.) 2 'செவ்வி'

(ப - ரை.) ஐயவி அன்ன சிறு வீ ஞாழல் - வெண்சிறு கடுகைப்போன்ற சிறிய பூக்களையுடைய ஞாழல் மரத்தின்பூ, செவீ மருதின் செம்மலோடு - செம்மையாகிய மலர்களையுடைய மருத மரத்தின் பழம்பூவோடு, தாஅய் - பரந்து, அவர் ஊர் - தலைவருடைய ஊரினிடத்தில், துறை - நீர்த்துறையை, அணிந்தன்று - அழகு செய்தது; அவர் மணந்த தோள் - அவர் மூன்பு அளவளாவிய என் தோள், இலங்குவளை - விளங்கும் வளையல்கள், இறை இறந்து நெகிழ - மூட்டுவாய்ச் சந்தைக் கடந்து நெகிழும்படி, சாஅய் - மெலிந்து, புலம்பு அணிந்தன்று - தனிமையையே அழகாகப்பெற்றது.

(முடிபு) ஞாழல் தாஅய் அவர் ஊரில் துறையை அணிந்தன்று; அவர் மணந்ததோள் புலம்பணிந்தன்று.

(கருத்து) அவர் என்னைப் புறக்கணித்தமையால் நான் மெலிந் தேன்.

(வி - ரை.) சிறுவீயென்பதும் செவ்வீயென்பதும் முதற்கேற்ற அடைகள். ஞாழலின்பூச் சிறியதென்பது, "நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ" (397 : 1) என்னும் இந்நூற் செய்யுளாலும் பெறப்படும். இறை - இங்கே தோட்சந்து; "வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்", "தொடிவிளங் கிறைய தோள்" (குறுந். 364 ; 5, 367 : 2.) புலம்பு - தலைவர் சாராத தனிமையும், வளையில்லாத தனிமையும். துறை அணிந்தன்று - துறையை அழகு செய்தது (புறநா. 1 : 5, உரை); தோள் அணிந்தன்று - தோள் அணிந்தது. புலம்பு அணிந்தன்று என்பது குறிப்புமொழி.

தானும் அவனும் ஒன்றுபட்டு வாழும் கற்புக்காலத்தில் அவ னூரே தனதூராகவும், 'அவனூரே' என்று பிரித்துச் சொன்னது அவன்பாலுள்ள புலவிபற்றி. அவர் சாரும் பொருள்களுள் துறை, பொலிவு பெற்றிருப்பத் தோள்மட்டும் பொலிவிழந்ததே யென் பது தலைவியின் நினைவு.

'அவர் ஊரிலுள்ள துறையை அணிந்தன்று' என்றது அவர் பரத்தையரோடு அத்துறைக்கண் விளையாடினனென்று அறிந் தமையைக் குறிப்பித்தது.

(ஒப்பு.) 1. சிறுவீ ஞாழல் : குறுந். 310. 6, 318 : 2 ; நற். 191 : 1. 2. மருதினது செவ்வீ: முருகு. 33-4, ந. மருதந்துறை: குறுந். 258 : 3 - 4, ஐங். 7, 31 ; அகநா. 36 : 9 - 10 ; கலி. 26 : 13 ; புறநா. 243. 5. தோள்மணத்தல் : குறுந் 36 : 4, ஒப்பு ; 100 : 7, 272 : 1 - 8. 4 - 5 தோள்வளை நெகிழ்தல் : குறுந். 185 : 2, 252 : 1. (ரு o)

தோழி கூற்று

[தலைவன் வரைந்துகொள்ளுதற்குரிய முயற்சிகளைச் செய்த காலத்து, அவன் விரைந்து வந்து மணந்தானல்லனென்று கவலை யுற்ற தலைவிக்கு, "நானும் தாயும் தந்தையும் நின்னை அத்தலைவ ருக்கே மணம் செய்து கொடுக்க விரும்பியுள்ளோம். இந்த ஊரி னரும் அம்பல் கூறும்வாயிலாக உங்கள் இருவரையும் சேர்த்துச் சொல்கின்றார்கள்" என்று தோழி கூறியது.]

நக. கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர்
நாலறு முத்திற் காலொடு பாறித்
துறைதொறும் பரக்குந் தூமணற் சேர்ப்பனை
யானுங் காதலென் யாயுநனி வெய்யள்

5. எந்தையுங் கொடுஇயர் வேண்டும்
அம்ப லூரு மவனெடு மொழிமே.

எ - து. வரைவு நீட்டித்தவிடத்து ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி வரைவுமலிவு கூறியது.

[வரைவுமலிவு - மணம் செய்து கொள்ளுதற்குரிய முயற்சிகளின் மிகுதி]

குன்றியனார் (பி - ம். குன்றியன்.)

(பி - ம்.) 1 'கூர் முண் முண்டகக் கூனிமாமலர்' 3 'பரிக்குந்', வரிக்குந்' 6 'மொழிமோ'

(ப - ரை.) கூன் முள் முண்டகம் - வளைவாகிய முள்ளையுடைய கழிமுள்ளியினது, கூர்பணி மாமலர் - மிக்க குளிர்ச்சியையுடைய கரிய மலர், நூல் அறு முத்தின் - நூலற்று உதிர்ந்த முத்துக்களைப் போல, காலொடு பாறி - காற்றுற் சிதறி, துறை தொறும் பரக்கும் - நீர்த்துறைகளுள்ள இடங்கள்தோறும் பரவுதற்கு இடமாகிய, தூமணல் சோப்பினை - தூய மணலையுடைய கடற்கரைக்குத் தலைவனே, யானும காதலென் - யானும் விரும்புதலையுடையேன்; யாயும் ஞனி வெய்யள் - நம் தாயும் அவன்பால் மிக்க விருப்பத்தையுடையளாயிரா நின்றாள்; எந்தையும் கொடுஇயர் வேண்டும் - நம் தந்தையும் அவனுக்கே நின்னை மணஞ் செய்து கொடுக்க விரும்புவான்; அம்பல் ஊரும் - பழிமொழியைச் சிலரறிய உரைக்கும் ஊரிலுள்ளாரும், அவனெடு மொழிமே - அவனெடு நின்னைச் சேர்த்தே சொல்லுவர்.

(முடிபு) சேர்ப்பினை யானும் காதலென்; யாயும் வெய்யள்; எந்தையும் கொடுஇயர்வேண்டும்; அம்பலூரும் அவனெடுமொழியும்.

(கருத்து) நின்மணத்திற்குரிய முயற்சிகள் நடைபெறுகின்றன; நீ கவலற்க.

(வி - ரை.) முள்ளியின் மலர் கரியநிறமுடையதென்பது, "மணிப்பூ முண்டகம்" (மதுரைக். 96) என்பதனால் விளங்கும். நூலறுமுத்தைப்போலவென்றது விளையுவமம்; ஒன்றோடு ஒன்று சேராமல் தனித்தனியே மலர்கள் சிதறினவென்று கொள்க. காலொடு பாறி - காலாற் சிதறி (அகநா. 9: 7, உரை.) வரிக்கு மென்னும் பாடத்திற்குக் கோலஞ் செய்தாற்போலக் கிடக்கு மென்று பொருள் கொள்க. 'இவளுடைய நலத்திற்கேற்ற நலத்தையுடைய தலைமகனைக் கண்டு இன்புறும் தோழி; என்னை? கள

வொழுக்கத்தில் எழில் நலமுடையாள் ஒருவனைக்கண்டு இன்புறக் கூடவேளா வெனின் அதற்குக் காரணம் எழினலமேயன்று ; பின் அறத்தொடு நிலைநின்று கூட்டுகை அகத்தமிழனது இலக்கணமாதலால் தன்குரவர் வினவத் தான் அறத்தொடு நிற்குமிடத்துக் குரவர் தாமேசென்று மகட்கொடுக்கும் குடிப்பிறப்பினுல் உயர்ச்சியையுடையனுதலால்' (திருச்சிற். 66, பேர்.) தோழி யானும் காதலென் என்றுள். தலைவி அறத்தொடு நிற்பத் தோழியுப், அவள் அறத்தொடு நிற்பச் செவிலியும் நற்றாயும், நற்றாய் வாயிலாகத் தந்தையும் தலைவி ஒரு தலைவன்பால் அன்பு பூண்டாளென்பதை அறிவார்களாதலின் அம்முறையே தோழி, தன்னையும் யாயையும் பின் தந்தையையும் கூறினுள். பிறர் விரும்பினுலும் தலைவியைத் தலைவனுக்குக் கொடுக்கும் உரிமை தந்தைக்கே உண்டாதலின், 'எந்தையுங் கொடுஇயர் வேண்டும்' என்றுள்.

அம்பல் - சிலரறிந்து கூறும் பழிமொழி ; 'சொல் நிகழாதே முகிழ் முகிழ்த்துச் சொல்லுவது' (இறை. 22, உரை) என்றும், 'பரவாத களவு' (திருச்சிற் 180, பேர்) என்றும் கூறப்படும். அம்பலூர் அவனுடு மொழிதலாவது, அங்கங்கே சிலர்சிலர் கூடி நின்று பழி கூறுவாராகி, 'இன்னுள் இன்னுனுடு நட்புடையாள் போலும்' என்று உரைத்தல்.

இங்ஙனம் யாவரும் தலைவன் வரைவுக்கு உடம்பட்டாராக இருப்ப, அவர் நீட்டித்தாரென்று ஆற்றுதற்குக் காரணம் இல்லையென்று தோழி உணர்த்தினளாயிற்று.

முட்செடியாகிய முள்ளினிடத்துள்ள மலர் கைவருந்திப் பறித்துக் கொள்ளும்படி அமையாமல் காற்றினுற் கவரப்பட்டு எளிதிற் கொள்ளும்படி மணலிற் பரந்து கிடப்பதுபோல, அரிதின் முயன்று உடம்பாடுபெற்று நிறைவுறுத்தும் வரைவு தலைவனுடைய முயற்சியினுல் மலிந்து எல்லாருடைய உடம்பாட்டையும் பெற்றதென்பது குறிப்பு.

மே : முன்னிலையசை : குறுந். 273 : 8.

(மேற்.) 6. செய்யுமென்னு முற்று ஈற்றுயிர்மெய் கெட்டுவந்தது (தொல். விளை. 39, இளம், 41, சே, ந, தெய்வச் ; 40, கல் ; நன். 340, மயிலை, 341, சங். இ. வி. 244.)

மு. தமர் வரைவுடன்பட்ட தன்மையினுல் தலைவியை வற்புறுத்தற் கண் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 24, இளம்.) ; தோழி வரைவுகடாயவழி அவ் வரைந்து கோடல் மெய்யாயினமையின் வதுவை முடியுமளவும் ஆற்றும்படி தோழி வற்புறுத்திக் கூறியது (தொல்.களவு. 24, ந.) ; பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை தலைமகட்கு உணர்த்தியது (இ. வி. 531.)

(ஒப்பு.) 1. கூன்முண் முண்டகம் : அகநா. 26 : 1 - 2.

2. நூலறு முத்தின் சிதறல் : குறுந். 104 : 2.

4 - 5. தோழியும் தந்தையும் உடன்படுதல் : "யாமே, மலர்ந்த பொய்கை மூகைந்த தாமரைத், தண்டுறை பூரன் வரைக, எந்தையுங் கொடுக்க வென வேட் டேமே" (ஐங். 6 : 3 - 6.)

6. ஊரார் தலைவனோடு சேர்த்துத் தலைவியைக் கூறுதல் : குறுங். 273 : 8; "துறைவற், கூறா பெண்டென மொழிய வென்னை" (ஐங். 113: 2 - 3.)

மு. "வேங்கைக் கண்ணிய னிழிதரு நாடற்
கின்றீம் பலவி னோர்கெழு செல்வத்
தெந்தையு மெதிர்ந்தனன் கொடையே யலர்வாய்
அம்ப லூரு மவனெடு மொழியும்
சாயிறைத் திரண்ட தோள்பா ராட்டி
யாயு மவனே யென்னும் யாமும்
வல்லே வருக வரைந்த நாளென
நல்லிறை மெல்விரல் கூப்பி
இல்லுறை கடவுட் கோக்குதும் பலியே"
(அகநா. 282 : 10 - 18.) (குக)

தோழி கூற்று

[தலைவன் வரைந்துகொள்ளுதற்குரிய முயற்சிகளைச் செய்வதையும் அதனைத் தமர் ஏற்றுக்கொண்டதையும் அறிந்து மகிழ்ந்த தலைவியை நோக்கி, "நீ வருந்துவதை யறிந்த யான் உண்மையைத் தாயர்க்கு அறிவித்தேன்; அதனால் இஃது உண்டாயிற்று" என்று தோழி உணர்த்தியது.]

ஆர்களிறு மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
சூர்நசைந் தனையையாய் நடுங்கல் கண்டே
நரந்த நாறுங் குவையிருங் கூந்தல்
நிரந்திலங்கு வெண்பன் மடந்தை
5. பரிந்தனெ னல்லனே யிறையிறை யானே.

எ - து. வரைவுமலிவு கேட்ட தலைமகட்குத் தோழி, 'முன்னின் அறத்தொடு (பி - ம். முன்னளில் தான் அறத்தொடு) நின்றமை காரணத்தான் இது விளைந்தது' என்பது படக்கூறியது.

பனம்பாரனார்.

(பி - ம்.) 1 'ஆர்கலி மிகுத்த' 'ஆர்களி' 2 'கூரசைத்தனையையாய்', 'சூரசைந்தனையையாய்' 4 'விரிந்திலங்கு' 5 'பரந்தனனெ'

(ப - ரை) நரந்தம் நாறும் - நரந்தப்பூவின்மணம் கமழ்கின்ற, குவை இரு கூந்தல் - தொகுதியாகிய கரிய கூந்தலையும், நிரந்து இலங்கு வெள பல் - வரிசையுற்று விளங்கும் வெள்ளிய பல்லையு முடைய, மடந்தை - மடந்தையே, ஆர் களிறு மிதித்த நீர் - தன் பால் பொருந்திய யானைகள் மிதித்தமையால் உண்டாகிய பள்ளத் தில் தங்கிய நீர், திகழ் சிலம்பில் - விளங்கும் மலைப்பக்கத்திலுள்ள சூர்நசைந் தனையையாய் - தெய்வத்தால் விரும்பப்பெற்ற தன்மை யையுடையையாகி, நடுங்கல் கண்டு - நீ நம் கற்புக்கு ஏதம் வரு மோவென்று அஞ்சி நடுங்குதலையறிந்து, யான் - நின் வருத்தத் தைப் பொறுத யான, இறை இறை - சிறிது சிறிதாக, பரிந்தனென் அல்லனே - அப்பொழுதப்பொழுது இரங்கி வருந்தினேனல்லனே?

(முடிபு) மடந்தையே, நீ நடுங்கல் கண்டு யான் பரிந்தனென் அல்லனே ?

(கருத்து) நின் துயர்கண்டு ஆற்றுமல் யான் அறத்தொடு நின் றேன.

(வி - ரை.) களிறு மிதித்த இடம் பள்ளமாதலும் அங்கே நீர் தங்குதலும், "விலங்குமலைக் கவாஅற், கரும்புநடு பாத்தி யன்ன, பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே" (குறுந், 262 : 6 - 8) என்ப தனலும் உணரப்படும். சிலம்பிற் சூரென்றது மலைப்பக்கத்தில் வாழுந் தெய்வங்களை; அவர் வரையரமகளிரெனப்படுவர்; "சூரர மகளிர ராரணங் கினரே.....நீவர லாறே" (பழம்பாடல்), "சூப்புடை முதுபதி தாக்கணங் குடைய" (அகநா. 7 : 4) என்ப வற்றைக் காண்க; சிலம்பிற்சூர் - முருகனுமாம் காப்பு மிதுதியி னலும் தாயர் வெறியாட்டெடுக்க விரும்பியதனலும் தலைவி நடுங் கினள். நரந்தம்: இதனை நாரத்தம்பூவென்பர் நச்சினார்க்கினியர் (குறிஞ்சிப். 94, உரை) ஐவகையாகப் பகுக்கப்படுவதாதலின், 'குவையிருங் கூந்தல்' என்றுள்; 'குவையிருங் கூந்தல் - குவிந்த கரிய கூந்தல் (புறநா. 25 : 14, உரை.) குவையிருங் கூந்தலும் நிரந்திலங்குவெண்பல்லும் உடைமை, தலைவி பேதைப்பருவம் நீங்கிப் பெதும்பைப்பருவம் முதிர்ந்து மணம் செய்தற்குரிய நிலை யினளென்பதை யறிவிக்கும்; குறுந். 337.

பரிதல் - இரங்கி அறத்தொடு நிற்றல். இறை இறையென் றது பலமுறை வருந்தினமையைக் குறித்தது.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) 1. மிதித்த: செய்தவென்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் காரண காரியப் பொருளில் வந்தது (தொல். வினை. 37, ந.); இவ் எச்சம் செயப்படுபொருள் விகற்பமாகும் (தொல். வினை. 36, கல்) மு. தோழி கூறியசொற்கேட்டு வரைவுடம்படுதற்கண் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 17, இளம்.)

(ஒப்பு.) 2. தெய்வமேறினர் நடுங்குதல்: (குறுந். 105: 3 - 5); "சூருறு மஞ்ஞை யினடுங்க" (குறிஞ்சிப். 169); "சூரமை நுடக்கம்" (ஐங். 71: 1); "சூருறு மஞ்ஞைபின்.....அதிர்வனர் நடுங்கி" (பெருங். 1. 44: 22 - 4.); திருச்சிற். 84, "நீ கண்டனை"; தஞ்சை. 40, 44

3. குவையிருங் கூந்தல்: குறுந். 300: 1. நரந்தம் நாறும் கூந்தல்: "நரந்தநா றிருங்கூந்தல்" (கலி. 54: 5); "விளங்கிழை மகளிர் கூந்தற கொண்ட, நரந்தப் பல்காழ்க் கோதை" (புறநா. 302: 3 - 4); குறுந். 272: 8

3, மு. அகநா. 266: 4. (கு உ)

தோழி கூற்று

[தலைவன் வரைவேனென்று உறுதி மொழி கூறிய பின்பும் நெடுங்காலம் கழிந்தது கண்டு தலைவி வருந்துதலை யறிந்த தோழி தலைவனை நோக்கி, "நீ கூறிய உறுதிமொழிகள் எம்மை வருத்தின; அவை பிறழாமல் நீ இனி விரைவில் மணந்து கொள்ள வேண்டும்" என்று கூறியது.]

நெ. எம்மணங் கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
5. எக்கர் நண்ணிய வெம்மூர் வியன்றுறை
நேரிறை முன்கை பற்றிச்
சூரர் மகளிரொ டுற்ற சூளே.

எ - து. வரைவு நீட்டித்தவழித் தோழி தலைமகற்கு உரைத்தது.

கோப்பெருஞ்சோழன்.

(பி - ம்) 1 'மகிழ் நனைநறிய' 2 'நனைமுது' 4 'வெண்பொரி 6 'நேரிழை'

(ப - ரை.) மகிழ்ந - தலைவனே, முன்றில் - முன்னிடத்தி லுள்ள, நனைமுதிர் புன்கின் பூ - அரும்பு முதிர்ந்த புன்கமரத்தின்

மலர்கள், தாழ் - உதிர்ந்து பரந்து தங்கிய, வெண்மணல் - வெள்ளிய மணற்பரப்பினது, வேலன் புனைந்த - வேலனால் அமைக்கப்பட்ட, வெறி அயர் களந்தொறும் - வெறியாட்டெடுக்கும் இடந்தோறும், செ செல் வான் பொரி - செந்நெல்லினது வெள்ளிய பொரி, சிதறி அன்ன - சிதறினாற் போன்ற தோற்றத்தைத் தரும், எக்கர் நண்ணிய - மேடுகள் பொருந்திய, எம் ஊர் வியல் துறை - எம்மூடைய ஊரிலுள்ள அகன்ற நீர்த்துறையில், நேர் இறை முன்கை பற்றி - நுண்ணிய மூட்டுவாயையுடைய முன்கையைப் பிடித்து, சூரரமகளிரொடு உற்ற - தெய்வமகளிரைச் சுட்டிக் கூறிய, சூள் - சத்தியம், எம் அணங்கின - எம்மைத் துன்புறுத்தின

(முடிபு) மகிழ்க, எம்மூர் வியன்றுறையில் நீ உற்ற சூள் எம்மை அணங்கின.

(கருத்து) நீ நின் உறுதிமொழிக்கேற்ப விரைவில் மணம் செய்துகொள்ள வேண்டும்.

(வி - ரை.) சூள் பலமுறை செய்யப்பட்டனவாதலின் அணங்கினவென்று பன்மையாற் கூறினாள். வெண்மணலென்றது எக்கரின் ஒரு பகுதி. வேலன்-வெறியாட்டெடுப்பவன்; இவன் படிமத்தானென்றும் கூறப்படுவான்; முருகனைப் பூசைபண்ணும் தொழிலினன்; தன் கையில் வேலையுடைமையின் இப்பெயர் பெற்றான். வெறியயர்தல் - மறியறுத்துக் குரவையாடி முருகனை வழிபடுதல். அங்ஙனம் வெறியயருங் களத்திற் பொரி சிதறுதல் உண்டென்பது "செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி" (முருகு 231) என்பதனாலும் அறியப்படும். மணலையுடைய எக்கர். சூளாவது, "நின்னை விரைவில் மணம் செய்துகொள்வேன்" என்றது; "நேரிறை முன்கை பற்றி நுமர்தர, நாடறி நன்மண மயர்கஞ் சின்னாள், கலங்க லோம்புமின்" (குறிஞ்சிப். 231 - 3) என்பதைப் பார்க்க.

சூள் அணங்குதலாவது அதை நினைந்து, 'இன்னும் வரைந்திலரே!' என்று வருந்துதற்கு ஏதுவாதல். சூள் செய்தாரையே அச்சூளாற் குறிக்கப்படும் தெய்வம் வருத்துவது மரபு (பரி. 8: 65 - 6); அஃது எம்மையும் அணங்கிற்று என்றது, அதனால் உண்டான வருத்தமிகுதியையும் அதனை நிறைவேற்றுவதற்கண் விரைந்து மேற்கொள்ளவேண்டும் முயற்சியையும் அறிவுறுத்தியவாறு.

பார்வைக்கும் பயிலுதற்கும் இனிமை தருதற்குரியதாகிய புன்கமலர் பரந்த மணற்பரப்பு, அஞ்சுதற்கேதுவாகிய தோற்றத்தைத் தரும் துறை யென்றமையால், விரைந்து மணம் செய்வா

யென்னும் தெளிவைத் தந்து இனிமை பயப்பதற்குரியனவாகிய நின்சுவர் இப்பொழுது வருத்தத்தைத் தருவனவாயினவென்னும் குறிப்புப் புலப்பட்டது.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) 7. குறிஞ்சிக்கருப்பொருளில் ஒன்றாகிய தெய்வத்தின் வகை சூரமகளிர் (தொல். அகத். 5, உ.)

மு. தலைமகன் சூளுற்ற சூளுறவிற் சோர்வு கண்டு அழிந்து தோழி கூறியது (தொல். கற்பு. 9, இளம்.); தீராத் தேற்றத்தைப் பின்னொரு கால் தலைவி தேர்ந்து தெளிவொழித்துக் கூறியது (தொல். களவு. 10, ஈ, 11, இளம்.)

(ஒப்பு.) 1. எம் அணங்கின: குறுந். 119 : 4.

3. **வேலன் வெறியயர் களம்:** "வேலன் றைஇய வெறியயர் களனும்" (முருகு. 222); "வேலன், வெறியயர் வியன்களம்" (அகநா. 98 : 18 - 9); "வெறியயர் வெங்களத்து வேன்மகன்" (நாலடி. 16); "வேலரர் வந்து வெறியாடும் வெங்களத்து" (சிலப். குன்றக்.) வெறிக்களம்: மலைபடு. 150; குறிஞ்சிப்: 175. 2 - 3. **பலமலர்கள் நிறைந்த இடம் வெறிக்களம் போலத் தோன்றுதல்:** குறுந். 318 : 1 - 3. 2 - 4. **புன்கின் மலருக்குப் பொரி:** "பொரிப்பூம் புன்கு" (குறுந். 341 : 2; நற். 9 : 5; ஐங். 347 : 3, 368 : 2); "பொரியுரு வுறழப் புன்குபூ வுகிர" (கலி. 33 : 11); "பொரியெனப், புன்கவி முகன்றுமை" (அகநா. 116 : 5 - 6); "புன்கு பொரிமலரும் பூந்தண் பொழிலெல்லாம்" (திணைமொழி. 14); "பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கு" (சிலப். 12 : 'செம்பொன்'); "பேரிற் செந்தலைய வெண்கறைய புன்கம் பொரியணிந்தனவே" (சீவக. 1649); "பொரியணிந்து புன்குதிர்ந்து பூநாறுங் துறையெல்லாம்", "பொரிவிரிவன புதுமலரன புன்குதிர்வன புறனே" (சூளா. 4 : 56, 6 : 1); "மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட மணஞ்செய்யு மிழலே யாமே", "பொரியேர் புன்கு சொரிபூஞ்சோலைப் புத்தூரே" (தே. திருஞா.)

4. வெண்பொரி சிதறி: முருகு. 231,

5. **எக்கர் நண்ணிய துறை:** குறுந். 349 : 2-3. 6. **நேரிறை முன்கை:** ஐங். 493 : 4; குறிஞ்சிப். 231; கலி. 51 - 10; மணி. 18 : 130 - 33 7. **தலைவன் களவுக்காலத்திற் சூளுறுதல்:** குறுந். 36 : 5: ஒப்பு, 137 : மு. 6 - 7. **முன்கைபற்றிச் சூளுறுதல்:** "அரிய வஞ்சினஞ் சொல்லியும் பன்மாண், தெரிவரை முன்கை பற்றியும்" (அகநா. 175 : 7 - 8.) 5-7. **துறையிற் சூளுறுதல்:** ஐங். 53 : 1 - 4. சூள்: 238, 384 : 4; ஐங். 31; கலி. 75 : 21. (ருக)

தலைவி கூற்று

[தலைவன் வரையாமல் நெடுங்காலம் வந்து பழகுங் காலத்தில் அங்ஙனம் பழகுதலினால் உண்டாகும் ஏதத்தையறிந்து வருந்திய

தலைமகள் தோழியை நோக்கி, "தலைவன் என் பெண்மைநலத்தைக் கொண்டான். இனி அவன் வரைந்து கொண்டாலன்றி அதனைப் பெறேன்" என்றது.]

நசை. யானே யீண்டை யேனே யென்னலனே
ஏனல் காவலர் கவணெலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
5. கானக நாடனெ டாண்டொழிந் தன்றே.

எ - து. வரைவு நீட்டித்தவழி ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மீனெறி தூண்டிலார்.

(பி - ம். 1 'யென்னலன்' 2 'வெரீஇய')

(ப - ரை.) தோழி, யான்—, ஈண்டையேன் - இவ்விடத்திலுள்ளேன்; என் நலன் - என்னெடு முன்பு ஒன்றியிருந்த எனது பெண்மைநலன், ஏனல் காவலர் கவண் ஒலி - தினைப்புனங் காப்பார் விடும் கவண்கல்லின் ஒலிக்கு, வெரீஇ - அஞ்சி, கானம் யானை - காட்டு யானை, கை விடு பசு கழை - கைவிட்ட பசிய மூங்கிலானது, மீன் எறி தூண்டிலின் நிவக்கும் - மீனைக் கவர்ந்துகொண்ட தூண்டிலைப்போல மேலே செல்லுதற்கு இடமாகிய, கானக நாடனெடு - காட்டையுடைய தலைவனெடு, ஆண்டு - நாங்கள் பழகிய அவ்விடத்தே, ஒழிந்தன்று - நீங்கியது.

(முடிபு) யான் ஈண்டையேன்; என் நலன் நாடனெடு ஆண்டு ஒழிந்தன்று.

(கருத்து) தலைவன் பிரிவினால் யான் பெண்மைநலனிழந்தேன்.

(வி - ரை.) யானே: ஏகாரம் பிரிநிலை. ஈண்டையேனே: ஏகாரம் அசைநிலை. நலனே: ஏகாரம் பிரிநிலை. தான் உண்ண விரும்பி வளைத்த மூங்கிலைக் கவணெலிகேட்டு அஞ்சி யானை கைவிட்டது; அங்ஙனம் விட்ட மூங்கில், மீன் அகப்பட்ட காலத்தில் மீன் பிடிப்பவன் மேலே விரைவாக எடுக்கும்போது தூண்டில் நிமிர் தலைப் போல விரைந்து சென்றது. கானக நாடன் - காட்டிற்கு உள்ளாகிய நாட்டையுடையான் (புறநா. 5: 3, உரை.) ஆண்டென்றது களவுக் கூட்டம் நிகழ்ந்த இடத்தை. கானக நாடனெடு ஒழிந்தன்று என்றமையால் அவன் மீண்டுவந்தால் என்பால் ஒன்றுமென்பது தெளியப்படும்;

" நீங்குங்கா னிறஞ்சாய்ந்து புணருங்காற் புகழ்பூத்து
நாங்கொண்ட குறிப்பிவ ணலமென்னுந் தகையோதான் ",
" சுடர்நோக்கி மலர்ந்தாங்கே படிற்கூம்பு மலர்போலென்
தொடர்நீப்பிற் றெருமிவ ணலமென்னுந் தகையோதான் "
(கலி. 78 : 11-2, 15-6.)

ஒழிந்தன்றே : ஏகாரம் அசைநிலை.

யானை வலைக்குங் காலத்தில் வலைந்து அது கைவிடத் தூண்டிலைப் போல மூங்கில் நிமிரும் நாடனென்றது தன் நெஞ்சத்து அன்புளதாகிய காலத்து நம்பால் மருவிப் பணிந்து ஒழுகி அன்பற்ற காலத்துப் பணிவின்றித் தலைமைசெய்து நம் நலங்கொண்ட தன் கொடுமை தோன்ற ஒழுகுகின்றானென்பதாம் (ஐங். 278, உரை.)

யானையால் கைவிடப்பட்டு நிமிரும் மூங்கிலுக்கு மீனெறி தூண்டிலை உவமை கூறிய சிறப்பினால் இச்செய்யுள் செய்த நல்விசைச் சான்றோர் மீனெறி தூண்டிலார் என்னும் பெயர் பெற்றனர்.

(மேற்.) 3-5. தொழிலும் பண்பும்பற்றி வந்த உவமை (தண்டி. 4.)

மு. அணுகி மாட்டின்றி வந்த செய்யுள் (தொல். செய். 212, பேர், 211, க.) ; 'பேராசிரியரும் இப்பாட்டின் மீனெறி தூண்டிலென்றதனை ஏனையுவமமென்றார்' (தொல். அகத். 46, க.)

(ஒப்பு.) 2-3. யானை கவணெலிக்கு வெருவுதல் : " புனஞ்சூழ் குறவர், உயர்நிலை யிதண மேறிக் கைபுடையூஉ, அகன்மலை யிறும்பிற் றுவன்றிய யானைப், பகனிலை தளர்க்குங் கவணுமிழ் கடுங்கல் " (மலைபடு. 203-6) ; " இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புநர், புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கும் ", " பிடியொடு மேயுஞ் செய்புன் யானை, அடியொதுங் கியக்கங் கேட்ட கானவன், நெடுவரை யாசினிப் பணைவை யேறிக், கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின் " (கலி. 23 : 1-2, 41 : 7-10) ; " இரவின் மேயன் மருஉம் யானைக், கால்வ லியக்க மொற்றி கடுநாள், வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன், கடுவிசைக் கவணி னெறிந்த சிறுகல் ", " தினைமே யானை யினனிரிந் தோடக், கல்லுயர் கழுதிற் சேணெ னெறிந்த, வல்வாய்க் கவணின் கடுவெடி யொல்லென " (அகநா. 292 : 8-11, 392 : 13-5) ; " இடுதினைதின் வேழங் கடியக் குறவர், வெடிபடு வெங்கவண்க ளூன்ற " (ஈங்கோய்மலை யெழுபது, 7.)

4. மீனெறி தூண்டில் : சீவக. 800. 3-4. யானை மூங்கிலை வளைத்து விடுதல் : " தாளமர் வேய்தலை பற்றித் தாழ்கரி விட்ட விசைபோய்க், காளம தார்முகில் கீறுங் கற்குடி மாமலை யாரே " (தே. திருஞா.) 1-5. நலன் ஆண்டு ஒழிந்தது : குறுந். 97 : 1-2, 125 : 4-7.

நலன் தலைவழேடு ஒழிந்தது : " தம்மொடு, தானே சென்ற நலனும் " (அகநா. 103 : 13-4) ; " பைந்தொடி யோவியப் பாவை போன்றனள், சிந்தையு நிறையுமெய்ந் நலனும் பின்செல, மைந்தனு முனியொடு மறையப் போயினன் " (கம்ப. மிதிலைக் காட்சி. 39.)

மூ. "சிலம்பின் வெகிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென விலஞ்சி
மீனெறி தூண்டிலி னிவக்கு நாடன்
உற்றோர் மறவா நோய்தந்து
கண்டோர் தண்டா நலங்கொண் டனனே" (ஐங். 278.) (மூசை)

தோழி கூற்று

[தலைவன் வேலிப்புறத்திலே கேட்கும் அணிமையில் நின்ற காலத்தில், அவன் விரைந்து வரைந்துகொள்ளவேண்டுமென்பதை அறிவுறுத்துவாளாய், "இவ்வூர் சிலநாளே வாழ்வதற்குரியதாகவும், இன்னுமையையுடையதாகவும் இருக்கின்றது" என்று கூறி, வரையாவிடின் தலைவி உயிர்நீர்ப்பாளென்று தோழி புலப்படுத்தியது.]

மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் துவலையொடு மங்குன்றி இக்
கையற வந்த தைவர லூதையொ
டின்னு வுறையுட் டாகும்
சின்னட் டம்மவிச் சிறுநல் லூரே.

எ - து. வரைவொடு புகுதானேல் (பி. - ம். நீ வரைவொடு புகுதாயேல்) இவள் இறந்துபடும் எனத் தோழி, தலைமகன் சிறைப்புறத்தானுகச் சொல்லியது.

[சிறைப்புறம் - வேலிப்புறம்.]

நெய்தற் கார்க்கியர் (பி - ம். கார்க்கியன், கார்க்கியார்.)

(பி - ம்.) 2 'பொங்கு பிதிர்த்திவலை', 'தைஇய'

(ப - ரை.) இ சிறு நல் ஊர் - இந்தச் சிறிய நல்ல ஊரானது, மா கழி மணி பூ கூம்ப - கரிய கழியினிடத்திலேயுள்ள நீலமணி போன்ற பூக்கள் குவியும்படி, தூ திரை பொங்கு பிதிர் துவலையொடு - தூய அலையிடத்துப் பொங்கிய பிசிராகிய துளியோடு, மங்குல் தை இ - மேகத்தைப் பொருந்தி, கை அற - பிரிந்தோர் செயலறும்படி, வந்த—, தைவரல் ஊதையொடு - தடவுதலையுடைய வாடைக் காற்றோடு, இன்னு உறையுட்டு ஆகும் - துன்பத்தைத்தரும் தங்கு மிடத்தையுடையதாகின்ற, சில நாட்டு - சில நாட்களையுடையது.

(முடிபு) இச் சிறுநல்லூர் சின்னட்டு.

(கருத்து) தலைவன் வாராவிடின் தலைவி இன்னும் சில நாட்களே உயிர் வாழ்வாளாதலின் அவன் விரைவில் வரைந்து கொள்ள வேண்டும்.

(வி - ரை) மணிப்பூ என்றமையால் நீலமணி போன்ற மூள்ளி (சிறுபாண். 148), நெய்தல் (மதுரைக். 282) முதலியவற்றைக் கொள்க. இவை கூம்பவென்றமையின் மாலைப் பொழுதைக் கொள்க.

'இன்னுவுறையுட்டாகுஞ் சின்னுட்டம்ம இவ்வூர்' என்று ஊரின் மேல் வைத்துச் சொன்னலும் தோழி நினைந்தது, 'தலைவி இன்னும் சின்னாளே இவ்வூரில் உயிர் வாழ்வாள்; அச்சின்னாளும் இன்னுமை தரும் இயல்புடையன' என்பதாகக் கொள்க; இதனால் தலைவனுக்கு விரைந்து வரைந்துகொள்வதன் இன்றியமையாமையைக் குறிப்பித்தாள்.

இன்னுவுறையுட்டாதலும் சின்னுட்டாதலும் ஊரின் பாலுள்ள குறையினலல்லவென்பதைப் புலப்படுத்தி, 'சிறு நல்லூர்' என்று சிறப்பித்தாள்.

அம்மவும் ஏகாரமும் அசைநிலை.

நெய்தனிலத்துக் கருப்பொருள்களை இதன்கண் அமைத்துப் பாடிய சிறப்பினல் இவ்வாசிரியர் தம் இயற்பெயராகிய கார்க்கியரென்பதனோடு நெய்தலென்னும் அடையையும் சேர்த்து வழங்கப் பெற்றார் போலும்.

(ஒப்பு.) 3. கையற வந்த ஊதை : குறுந். 197 : 3-4.

2-3. ஊதையும் துவலையும் : குறுந். 86 : 3-4.

3-4. "இன்னு வுறையுட் டாயினு மின்பம், ஒருநா ளுறைந்திசி னோர்க்கும் வழிநாள், தம்பதி மறக்கும் பண்பி னெம்பதி" (அகநா. 200 : 4-6.) (நடு)

தலைவன் கூற்று

[தலைவியையும் உடன் அழைத்துச் செல்லவேண்டுமென்று விரும்பிய தோழிக்கு உடம்படானகித் தனியே பிரிந்து சென்ற தலைமகன் பாலைநிலத்தின் தீமையைக் கண்டு, "இத்தகைய பொல்லாங்கையுடைய இடத்தில் தலைவி வருவாளாயின் மிக இரங்கத் தக்காள்!" என்று கூறியது.]

3. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிற்
குளவி மொய்த்த வழுகற் சின்னீர்

வளையுடைக் கைய ளெம்மா டுணீ இயர்
வருகதில் லம்ம தானே
5. *அளியளோ வளியளெந் நெஞ்சமர்ந் தோளே.*

எ - து. தலைமகன் கொண்டுதலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்றவழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

[*கொண்டுதலைப் பிரிதல் - தலைவியை உடன்கொண்டு அவள் தமரினின்றும் பிரிதல் (தொல். அகத். 15.) பொல்லாங்கு - தீமை.*]

சிறைக்குடியாந்தையார். (பி - ம். சிறைக்குடியாந்தை)

(பி - ம்) 1 'வேட்டைச்' 2 'குழவி' 3 'டுணீ இய' 5 'வளிய ளென்'

(ப - ரை.) *வேட்டம் செ நாய் - வேட்டையை மேற்தொண்ட செந்நாய், இளைத்தூண் மிச்சில் - தோண்டி உண்டு எஞ்சியதாகிய, குளவி மொய்த்த - காட்டுமல்லிகைப்பூ மூடிய, அழுகல் சில் நீர் - அழுகல் நாற்றத்தையுடைய சிலவாகிய நீரை, வளையுடை கையள் - வளையையுடைய கையளாய், எம்மொடு உணீயர் - எம்மோடு சேர்ந்து உண்ணுதற்கு, தான் - தலைவி, வருகதில் - வருக; வந் தால், எம் நெஞ்சு அமர்ந்தோன் - எம் நெஞ்சின்கண் விரும்பிப் பொருந்திய அத்தலைவி, அளியளோ அளியள் - மிக இரங்கத் தக்காள்!*

(முடிபு.) *தான் எம்மொடு நீரை உணீஇயர் வருகதில்லம்ம; எம் நெஞ்சமர்ந்தோள் அளியள்!*

(கருத்து.) *பொல்லாங்கையுடைய இவ்விடத்தில் தலைவி வரு தற்குரியளல்லள்.*

(வி - ரை.) *வேட்டம்-தனக்குரிய இரையைத் தேடி வேட்டை யாடுதல். பாலைநிலத்தில் நீரற்ற சுனையில் தோண்டி அங்குள்ள சிறிதளவாகிய நீரை விலங்கினமும் மக்களும் உண்டல் வழக்கம்; "ஆறுசெல் வம்பலர் சேறுகிளைத் துண்ட, சிறுபல் கேணி" (அகநா. 137 : 1-2.) குளவி - காட்டுமல்லிகை (குறிஞ்சிப். 76, ந.) அருகிலுள்ள மரங்களிலிருந்து உதிர்ந்த குளவிமலர்கள் மிக விழுந்து மூடி நெடுநாளிருத்தலின் அவை அழுகி நீரில் தீய நாற் றத்தை உண்டாக்கின. சின்னீர் - சிறிதளவாகிய நீர்; 'குடத் துள்ளும் பிறகலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிதென்னுது சில வென்றலும்.....போல்வன வழக்காம்' (தொல். கிளவி. 17, ந.) வருகதில் லம்மவென்றது, வந்தால் இன்னுமையையுடையளாவ*

ளென்னும் பொருள் தந்து ஒழியிசையாய் நின்றது. பிரிந்திருப்பின் பிரிவையாற்றுளாதலாலும், உடன் வந்தாற் பாலைநிலத்துப் பொல்லாங்கை ஆற்றுளாதலாலும் 'அளியள்' என்றாள். அளியளோ வளியளென்றது மிக அளியளென்றவாறு (புறநா. 51 : 8, உரை.) தலைவியைப் பிரிந்து வந்தேனுயினும் அவளை எப்பொழுதும் நினைக்கும் நிலையினேனென்பான், 'என் நெஞ்சமர்ந்தோள்' என்றான்.

அம்ம, ஏ : அசைநிலைகள்.

(மேற்) மு. * தமர் வரைவுடன் படாதவழித் தலைமகளைச் சுரத்தின்கண் உடன்கொண்டு போகத் தலைவன் துணிந்தது (தொல். அகத். 44, இளம்.) ; 'நீ களவில் தேற்றிய தெளிவகப்படுத்தலும் தீராத் தேறறமும் பொய்யாம் ; அவை பொய்யாகாதபடி, செய்கைகளோடே இவளை உடன்கொண்டு செல்க' எனத் தன் அறியாமை தோன்றக் கூறி வந்த தோழி கேட்பத் தலைவன் கூறியது (தொல். கற்பு. 5, ந.)

(ஒப்பு.) 1. வேட்டச் செந்நாய் : "பைங்கட் செந்நாய்" (குறுந். 4 : 8); "பசியட மூடங்கிய பைங்கட் செந்நாய், மாயா வேட்டம் போகிய கணவன்" (நற். 103 : 6-7.); வேட்டச் செந்நாய் உண்ட மிச்சில் : நற். 43 : 3-4 ; பெரும். 1. 52 : 75-6. குறுந். 141 : 6 ; மலைபடு. 338 ; கலி. 83 : 1.

2. குளவி : குறுந் : 59, 100 ; நற். 346 : 9 ; மலைபடு 334 ; பதிற். 71. அழுகல் : புறநா. 325. நீரை மலர் மூடியிருத்தல் : குறுந். 317 : 3-4, ஒப்பு. சின்னீர் : பெரும்பாண். 340 ; கலி. 11 : 8, 34 : 3 ; புறநா. 327 : 3 : மணி. 23 : 142. 1-3. தலைவி மிச்சில்நீரை உண்ணுதல் : "இனிய.....உவலைக் கூவற் கீழ,. மானுண் டெஞ்சிய கலுழி நீரே" (ஐங். 203 : 2-4.)

4. வருகதில்லம்ம : அகநா. 141 : 11, 276 : 7 ; புறநா. 284.

5. அளியளோ அளியள் ; "அளியரோ வளியர்" (நற். 12 : 8 ; அகநா. 43 : 13.) தலைவன் நெஞ்சில் தலைவி இருத்தல் : "நெஞ்சமர் தகுவி" (அகநா. 259 : 12) ; "யாமு முளேங்கொ லவர்நெஞ்சத்து" (குறள், 1204.) (ருசு)

தலைவி கூற்று

[தாய் முதலியவர்களாற் காக்கப்படும் தலைவி, தலைவனைப் பிரிந்திருத்தற்கு ஆற்றுளாகித் தோழியை நோக்கி, "தலைவரும் யானும் தனித்திருப்பினும் ஒன்றுக இருந்து ஒருங்கே உயிர்விடுதல் நன்று" என்று கூறியது.]

* இக்கருத்து, இச்செய்யுளுக்கு இயல்பாக உள்ள கருத்தைக்காட்டிலும் சிறப்புடையதாகத் தோற்றுகின்றது.

நெ. பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
5. திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே.

எ - து. காப்புமிகுதிக்கண் ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

[காப்பு மிகுதி - தலைவியைப் புறத்தே செல்லவிடாமல் தாய் முதலியவர்கள் பாதுகாத்தலின் மிகுதி; 'தாய்துஞ்சாமை நாய் துஞ்சாமை ஊர்துஞ்சாமை காவலர் கடுகுதல் நிலவு வெளிப்படுதல் கூகை குழறல் கோழிகுரற் காட்டலென இவை' என்பர் (இறை. 29, உரை.)

சிறைக்குடியாந்தையார்.

(பி - ம்) 'படினுமியாண்டு' 4 'போகதில்ல'

(ப - ரை.) தோழி - கடன் அறிந்து - செயக்கடவனவாகிய முறையை அறிந்து, இருவேம் ஆகிய - பிறவிதோறும் தலைவனும் தலைவியுமாகிய இருவேமாகப் பயின்று வந்த, உலகத்து - இவ் வுலகத்தில், ஒருவேம் ஆகிய புன்மை - பிரிவினால் ஒருவராகிய துன்பத்தினின்றும், நாம் உயற்கு - நாம் நீங்கித் தப்புதற்கு, பூ இடை படினும் - பூவானது தம் இடையிலே பட்டாலும், யாண்டு கழிந்தன்ன - அக்காலம் பல யாண்டுகள் கடந்தாற் போன்ற துன்பத்தை உண்டாக்கும் தன்மையையுடைய, நீர் உறை மகன் றில் புணர்ச்சிபோல - நீரின்கண் உறைகின்ற மகன்றிற்பறவை களின் புணர்ச்சியைப்போல, பிரிவு அரிதாகிய தண்டா காம மொடு - பிரிதல் அருமையாகிய நீங்காத காமத்தோடு, உடன் உயிர் போகுகதில்ல - ஒருங்கே எம் உயிர் போவனவாகுக; இஃது எனது விருப்பம்.

(முடிபு) ஒருவேமாகிய புன்மையினின்றும் நாம் உயற்கு உடன் உயிர் போகுகதில்ல.

(கருத்து) தலைவரைப் பிரிந்திருத்தலினும் உயிர்நீத்தல் சிறப்புடையது.

(வி - ரை.) மகன்றில்: இது நீர்வாழ் பறவைகளுள் ஒன்று; இப்பறவைகள் ஆணும் பெண்ணும் பிரிவின்றி இணைந்து வாழும்

தன்மையுடையன; இவை மருதத்திணைக்குரியவையென்று தெரிகின்றது (நம்பி. 23); இவை மலர்களிற் பயில்வனவாதலின் உடனுறையுங் காலத்தில் அப்பூ இடைப்படுதலும் கூடுமாதலால், 'பூவிடைப் படினும்' என்றாள்; 'பூவின்கண் திரியும் மகன்றில்' (பரி. 8: 44, பரிமேல்.) என்பதைப் பார்க்க. காமம் - மெய்யுறு புணர்ச்சி (குறுந். 42: 1.)

கடனென்றது கற்புக்காலத்துக் கணவனும் மனைவியும் நடத்தும் இல்லறத்துக்குரிய முறைகளை. இருவேமாகிய உலகமென்றது பல பிறப்பின்கண்ணும் தொடர்ந்து வந்த நட்பைக் குறிக்கொண்டது. நெஞ்சும் உயிரும் ஒன்றுபட்டனவேனும் நம் கடமையை யறிந்து ஒழுகுதற்காக இரண்டு மெய்யுடையேமாயினேமென்பது தலைவியின் கருத்து. ஒருவரால் ஒருவர் இன்பந் துய்க்கும் முறையறிந்து அதற்காக இருவேமாயினேம் என்பதும் ஒன்று; 'வேறுபாடு இல்லையாயினும், புணர்ச்சியான் வரும் இன்பமதுபத்தற்பொருட்டாக இன்று யானென்றும் இவளென்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை யாரறிவார்!' (திருச்சிற். 8, பேர்.) என்பதையறிக.

காப்புமிகுதிக்கண் தலைவனைப் பிரிந்திருப்பவளாதலின், 'இங்ஙனம் தனித்து இருத்தலினும் அவனோடு சேர்ந்துள்ள காலத்திலேயே அவனுயிரும் என்னுயிரும் ஒருங்கே நீங்கின் மீண்டும் நட்புடையவராகப் பிறப்போம்' என்று கூறினளாயிற்று. இறக்குப்பொழுது உள்ள நினைவின்மிகுதியே மறுபிறப்பிற்குக் காரணமாகுமென்னும் கருத்தினால் இது வேண்டினள்; 'உயிர் உடம்பு நீங்கிப் போங்காலத்து அடுத்த வினையும் அது காட்டுங் கதிநிமித்தங்களும் அக்கதிக்கண் அவாவும் உயிரின்கண் முறையே வந்துதிப்ப.....அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட்கொண்டு செல்லுமாதலான்' (குறள், 361, பரிமேல்.)

தலைவனைப் பிரிந்து தான் ஒருத்தியாதலையும், தன்னைப் பிரிந்து அவன் ஒருவனுதலையும் 'ஒருவேம்' என்பதனாற் புலப்படுத்தினள்.

படினும்: உம்மை இழிவு சிறப்புமை. ஏகாரம் அசைநிலை.

4. (மேற்.) தில்ல: இடைச்சொல், ஈறு திரிந்து வந்தது (தொல். இடை. 3 ந.)

மு. 'முற்பிறப்பில் இருவோமாய்க் கூடிப் போந்தனம்; இல்வுலகிலே இப்புணர்ச்சிக்கு முன்னர் யாம் வெவ்வேறுப் உற்ற துன்பத்து இன்று நாமே நீங்குதற்கெய்திய பிரிவரிதாகிய காமத்துடனே இருவர்க்கும் உயிர் போவதாக, இஃதெனக்கு விருப்பமென்றுனென்பதனால் தங்கிலை யுரைத்தலும் பிரிவச்சமும் கூறிற்று' (தொல். களவு. 10, ந.)

(கு - பு.) இதனால் நச்சினார்க்கினியர் இச் செய்யுளைத் தலைவன் கூற்றாகக் கொண்டாரென்று தெரிகின்றது; இக்கருத்தே சிறப்புடையது, தலைவி தலைவன் உயிர் போதலைக் கூறுதல் சிறப்பின்றுதலால்.

(ஒப்பு) 1-2. நீரூறைமகன்றில்: சிவக, 302, 250; நம்பி. 23. மகன்றிற் புணர்ச்சி: "குறுங்கான் மகன்றி லன்ன, உடன்புணர் கொள்கைக் காத லோரே" (ஐங். 381: 4-5); "அலர்ஞெமன், மகன்றி னன்னாப் புணர்ச்சி" (பரி. 8: 44.)

3. பிரிவரிதாகிய காமம்: (குறுந். 177: 7); "அரிதே காதலர்ப்பிரிதல்" (நற். 5: 7): "நூலிடை விலங்கினும், கவவுப்புலந் துறையுங் கழிபெருங் காமம்" (அகநா. 361: 5-6.) 3-4 பிரிதலைக் காட்டிலும் உயிர் செல்லுதல் நலம்: குறுந். 32: 6, ஓப்பு; நற். 129: 1-2, 203: 7-8; ஐங். 111: 3-4; கலி. 2: 13, 3: 6, 4: 24, 5: 18-9, 10; 21, 21: 12-3; அகநா. 305: 8, 339: 11-4. 6. இருவேம்: கலி 43: 4. 6. உய்தல்: குறுந். 11: 3, ஓப்பு.

மு. "மணிநீர்க் கயத்து மலரிடை தட்பினும் வார்கழுத்துப்
பிணிநீர் மையிற்சற்று நீங்கினு மூழி பெயர்ந்தனைய
துணிநீர் மகன்றிலிற் றண்டாது காமத் துறைபடியும்
அணிநீர் மையினுயி ரோரா ங்கலக்கி லம்புவிக்கே"

(தணிகைப். களவுப். 72.) (ரூ)

தலைவன் கூற்று

[தன்னை இடித்துக்கூறிய பாங்கனை நோக்கி, "எனது காம நோய் பொறுத்தற்கரியதாயிற்று; இதனை நீங்கச் செய்யின் நன்றுகும்" என்று தலைவன் கூறியது.]

ரூஅ. இடிக்குங் கேளிர் நுங்துறை யாக
நிறுக்க லாற்றினே நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
5. வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.

எ - து கழற்றெதிர்மறை.

[கழறுதல் - தலைவனைப் பாங்கன் இடித்துரைத்தல். எதிர்மறை - தலைவன் எதிர்மறுத் துரைததல்.]

வெள்ளிவீதியார்.

(பி - ம்.) 2 'நிறுத்தலாற்றினே' 3 'வெயில்பயின் மருங்கின்' 6 'நொண்டு கொளர்' 'மொண்டு கொளற்'

(ப - ரை.) இடிக்கும் கேளிர் - இடித்துரைக்கும் நண்பரே, நும் குறையாக - நுமது காரியமாக, நிறுக்கல் ஆற்றின் - என் காமநோயை நிறுத்தலைச் செய்தால், நன்று மன் தில்ல - மிக நன்று; எனது விருப்பம் அது: ஞாயிறு காயும் - சூரியன் வெயில் எறிக்கும், வெ அறை மருங்கில் - வெம்மையையுடைய பாறையினிடத்தே, கை இல் ஊமன் கண்ணின் காக்கும் - கையில்லாத ஊமையன் தன் கண்ணினுலே பாதுகாக்க முயலுகின்ற, வெண்ணெய் உணங்கல் போல - உருகிய வெண்ணெயைப்போல, இ நோய் - என்பாலுண்டான இக்காமநோய், பரந்தன்று - பரவியது; நோன்று கொளற்கு அரிது - பொறுத்துக்கொண்டு நீக்குதற்கு அரிதாயிருக்கின்றது.

(முடிபு) கேளிர், நிறுக்கலாற்றின் நன்றுமன்; இந்நோய் பரந்தன்று; நோன்றுகொளற்கரிது.

(கருத்து) காமநோய் பொறுத்தற்கரிதாயிற்று.

(வி - ரை.) இடித்தல் - குற்றங்கண்டால் நெருங்கிக் கண்டித்து அறிவுறுத்தல். கேளிரென்றும் நும்மென்றும் பன்மையினுற் கூறியது செறல்பற்றி. ஆற்றினென்றது அங்ஙனம் செய்தலரிதென்னும் நினைவிற்று. ஆற்றினே: ஓகாரம் அசைநிலை. தில்: விழைவின்கண் வந்தது.

வெண்ணெய் ஞாயிற்றின் வெப்பத்தால் உருகிப் பரந்தது போலக் காமநோய் பரந்தது; அவ்வெண்ணெய் உருகாமற் காக்கும் பொருட்டு இருப்பவும் ஊமன் தன்னுடைய கைக்குறையால் அதனை எடுத்துப் பிறிதோரிடத்தில் வைத்துப் பாதுகாக்கவும், ஊமைத்தன்மையால் பிறரைக்கூவிப் பாதுகாக்கச்செய்யவும் இயலாததுபோல, இந்நோயை அடக்கிப் பாதுகாத்தற்குரிய நிறுக்கும் ஆற்றலையும் பிறரிடம் வெளியிடற்குரிய நிலையையும் பெற்றிலனுதலின் இதனைக்காக்க இயலேனுயினேன் என்று உவமையை விரித்துக்கொள்க; "சொல்லருங் கடுநோய்க், காமக் கனலெரி" (பெருங். க. 33: 202-3)

அரிதே: ஏகாரம் அசைநிலை.

(மேற்) மு. தலைவன் நிகழ்பவை உரைத்தது (தொல். களவு. 11, இளம்.); பாங்கற் கூட்டத்துக்கண் வந்தது (தொல். செய். 186, பேர்.); பார்ப்பான் கேட்போனைத் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். செய். 196, பேர், 196, ந.); பாங்கன் கழறியவற்றை மறுத்துத் தன் நெஞ்சில்

நிகழும் வருத்தங்களை அவற்குக் கூறுதற்கண் தலைவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 11, ந.); தலைமகன் கழற்றெதிர்மறை (இறை. 3 ; களவியற். 26); பாங்கனை நின்குறையாக இது முடிக்க வேண்டுமென்று தலைவன் கூறியது (இ. வி. 505.)

(கு. - பு.) இனிப் பாங்கனைக் குறிதலைப்பெய்தலுமென்று ஒருமைபடச் சூத்திரஞ் செய்யாது, பாங்கனேரினென்று பன்மைபடக்கூறிய தெற்றிற்கு? அவன் ஒருவனுலோவெனின், பாங்கன் பார்ப்பாருகலிற் பன்மைவாசகத் தாற்சொன்னுரென்பது' (இறை. 3, உரை) என்பவாகலின் இப்பாட்டில் கேளிர் எனப் பன்மையாகக் கூறியிருப்பது கருதி இங்ஙனம் கூறினர்.

(ஒப்பு) 1. இடிக்கும் கேளிர் : கலி. 3 : 21 ; குறள்: 447, 784; கம்ப. நிந்தனைப். 59.

2. நன்றுமன் : குறுந். 38 : 4, ஒப்பு. நன்றுமற்றில்ல : குறுந் : 134 : 2, 269 : 2 ; நற். 255 : 7. ஞாயிறு : குறுந். 92 : 1, 315 : 3,378 : 1. 3.வெவ்வறை: குறுந். 12 : 2.

4. ஊமன் : குறுந். 22 : 5.

3 - 6. "வெந்து முருங்கிய, வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்கு மால்" (கம்ப. சூர்ப்பநகைப். 78.) (ரு அ)

தோழி கூற்று

[தலைவன் பொருள்தேடச் சென்ற காலத்தில் அவனது பிரிவை ஆற்ருமல் வருந்திய தலைவியை நோக்கி, "தலைவர் நின்னை மறவார் ; தமக்கு வேண்டிய பொருளைப் பெற்று விரைவில் மீளுவர்" என்று தோழி கூறியது.]

நஉ. பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்
அரலைக் குன்றத் தகல்வாய்க் குண்டுசுனைக்
குவளையொடு பொதிந்த குளவி நாறுநின்
நறுநுதன் மறப்பரோ மற்றை முயலவும்
5. சுரம்பல விலங்கிய வரும்பொருள்
நிரம்பா வாகலி னீடலோ வின்றே.

எ - து. பிரிவிடை யழிந்த கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

[அழிந்த - மனம் வருந்திய, வற்புறுத்தியது - ஆற்றியிருத்தல் வேண்டுமென்று துணிவு கூறியது.]

மோசிகீரனர் (பி - ம். மோசிகேரன்.)

(பி - ம்) 1 'பரதவர்' 2 'அறலைக்' 'அதலைக்' 4 'நறுநுதரு வெனின்' 'தாவென மறப்பரோ மற்றெனை'

(வ - ரை.) பதலை பாணி - ஒருகண்மாக்கிணையை இயக்கும் தாளத்தையுடைய, பரிசிலர் கோமான் - பாணர் முதலிய இரவலரைப் பாதுகாப்பவனது, அரலை குன்றம் - அரலையென்னும் குன்றத்தின்கண் உள்ள, அகல்வாய் - அகன்ற வாயையுடைய, குண்டு சுனை குவளையொடு - ஆழமுள்ள சுனையின்கண் அலர்ந்த குவளை மலர்களோடு, பொதிந்த குளவி நாறும் - சேர்த்துக் கட்டிய காட்டு மல்லிகையின் மணம் வீசும், நின் நறு நுதல் - நினது நல்ல நெற்றியை, மறப்பரோ - தலைவர் மறப்பாரோ? முயலவும் - பலநாள் நின்று முயற்சிகளைச் செய்தாலும், சுரம் பல விலங்கிய அருபொருள் - பாலைநிலம் பல குறுக்கிட்ட கிடைத்தற்கரிய பொருள், நிரம்பாவாகலின் - முற்றக் கைகூடாவாதலின், நீடல் இன்று - முற்றும் பெற்றே மீள்வேமென்று கருதித் தலைவர் காலம் நீட்டித்துத் தங்குதல் இலதாகும்; ஆதலின் நீ வருந்துதலை ஒழிவாயாக.

(முடிபு.) நறுநுதல் மறப்பரோ? பொருள் நிரம்பா ஆகலின் நீடல் இன்று.

(கருத்து.) தலைவர் விரைவில் மீளுவர்.

(வி - ரை.) பதலை - ஒருகண் மாக்கிணையென்னும் பறை. பரிசிலர் கோமானென்றது பரிசிலருக்குப் பரிசில் தந்து பாதுகாக்கும் தலைவனென்றபடி. அரலைக்குன்றமென்பது ஒரு குன்றத்தின் பெயரென்று தோற்றுகின்றது; ஆயினும் அதன் தலைவன் இன்னனென்பதும் அதன் இருப்பிடமும் இப்பொழுது விளங்கவில்லை; அரலை - பரலுமாம். குளவியொடு பொதிந்த குவளைக்கண்ணியை நெற்றி மாலையாக அணிந்தமையால் நெற்றி அம்மலர்களின் மணம் கமழ்ந்தது; இயற்கை மணத்தைக் கூறினும் பொருந்தும். குளவி நாறுமென்றமையின் நறுமை நன்மையாயிற்று; "பொலநறுந் தெரியல்" (புறநா. 29 : 3) என்பதன் உரையில், "பொன்னுனியன்ற நல்ல மாலை' என்றும், 'நறுமை பொன்னிற்கு இன்றெனினும் தெரியற்கு அடையாய் நின்றது; நன்மையுமாம்' என்றும் உள்ள பகுதிகளைப் பார்க்க. மற்று, ஏ : அசைநிலை.

'நின் நறுநுதலை நீவிப்பிரிந்த அவர் அந்நுதலின் அழகையும், தம் பிரிவு நீட்டிக்குமெனின் அழகு குறையுமென்பதையும் மறவாதவராதலின் அங்கே நெடுநாள் தங்கார்; தாம் பெறவெண்ணிய பொருளனைத்தும் பெற்றே மீள்வரென்பையேல், பொருளை முற்றப்பெறுதல் அரிதாதலின் அங்ஙனம் எண்ணுமல் வேண்டியதுமட்டும் பெற்று மீள்வர்' என்று தோழி காரணங்காட்டி வற்புறுத்தினள்.

சுரம்பலவற்றைக் கடந்து சென்று பொருள் தேடவேண்டு

மாதலின், 'சுரம்பல விலங்கிய வரும்பொருள்' என்றுள். "சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது" (கலி. 18 : 5) என்பதும், 'நீ நன்குமதித்த பொருளும், சென்றவர்கள் தத்தம் நிலைமைக் கேற்பக் காலம் நீட்டிப்ப நின்று தேடுவதன்றி இப்பொழுதே முகந்துகொள்ள ஓரிடத்தே கிடவாது' என்னும் அதன் உரையும் அன்புடையார் காலம் நீட்டிப்பப் பொருள்தேடிநில்லாரென் பதைப் புலப்படுத்தல் காண்க. நீடலோ : ஓகாரம் அசைநிலை.

(ஒப்பு.) 1. பதலைப் பாணி : "கொடிதரு பாணிய பதலை" (மலைபடு. 11.) பாணி : குறுந். 136 : 5. கலி 12; புறநா. 209: 1, 7 ; அகநா. 50 : 4; 134: 7 360 : 11; குறிஞ்சிப். 152.

2. பரிசிலர் கோமான் : "இல்லோ ரொக்கற் றலைவன்" (புறநா. 95 : 8) ; "இல்லோர் செம்மல்" (சிலப். 15 : 90.)

3. குளவிமலர் மணமுடையது : "குளவிக், கடிபதங் கமழுங் கூந்தல்" (நற். 346 : 9-10): "நாறிதழ்க் குளவி" (புறநா. 380 : 7.) தலைவி நுதலுக்கு மணம் உண்மை: குறுந். 22 : 5, ஒப்பு. குளவியும் குவளையும் : நற். 376 : 5-6. 2 - 3. சுணைக்குவளை : "பைஞ்சுணைக், குவளை" (குறுக். 342 : 4-5); "குவளை யம் பைஞ்சுணை" (மலைபடு. 251); "கடவுட் கற்சுணை யடையிறந் தவிழ்ந்த, பறியாக் குவளை மலர்" (நற். 34 : 1-2); "மல்ல லறைய மலிர்சுணைக் குவளை" (அகநா. 308 : 11); "குவளைப் பைஞ்சுணை" (புறநா. 132 : 5.) குண்டுசுணைக் குவளை : "குண்டுநீர்ப் பைஞ்சுணை பூத்த குவளை" (குறுந். 291 : 6); "தீநீர்ப் பெருங்குண்டு சுணைப்பூத்த குவளை" (புறநா. 116 : 1.) 5-6. "பொருள்வயி னீடலோ விலர்நின், இருளைங் கூந்த லின்றுயின் மறந்தே" (அகநா. 233 : 14-5.) (ருகூ)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவையாற்றுத தலைவி தோழியை நோக்கி, "தலைவர் என்னோடு அளவளாவாம லிருப்பினும் அவரைக் காணு மாத்திரத்தில் எனக்கு இன்பம் பிறக்கும் ; அஃதும் இப்பொழுது இலதாயிற்று" என்று கூறியது.]

கூ0. குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட விருக்கை முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
5. நல்கார் நயவா ராயினும்
பல்காற் காண்டலு முள்ளத்துக் கினிதே.

எ - து. பிரிவிடை யாற்றுமையிற் றலைமகள் தோழிக்குரைத்தது.

பாணர்.

(பி - ம்.) 1. "கூதளிராடிய', 'கூதாளி'; 'பருவரை' 2 'இருகை', 'இருங்கை' 3 'உட்குழி சிறுகுடை', 4 'நீட்டுபுகக்கி', 'உருட்டுபுகக்கி' 3-4 'கீழிருந்தூட்டுபு'

(ப - ரை) தோழி, குறு தாள் கூதளி - குறிய அடியையுடைய கூதளஞ்செடி, ஆடிய நெடு வரை - அசைந்த உயர்ந்த மலையிலுள்ள, பெரு தேன் கண்ட - பெரிய தேனடையைக் கண்ட, இருக்கை முடவன் - காலின்மையின் எழுந்து நிற்றற்கு இயலாமல் இருத்தலையுடைய முடவன், உள் கை சிறுகுடை - உள்ளங்கையாகிய சிறிய குவிந்த பாத்திரத்தை, கோலி - குழித்து, கீழ் இருந்து - அம்மலையின் கீழே இருந்தபடியே, சுட்டுபு - அத்தேனிருலைப் பல முறை சுட்டி, நக்கியாங்கு - உள்ளங்கையை நக்கி இன்புற்றதைப் போல. காதலர் - தலைவர், நல்கார் நயவார் ஆயினும் - தண்ணளி செய்யாராயினும் விரும்பாராயினும், பல்கால் காண்டலும் - பல முறை பார்த்தலும், உள்ளத்துக்கு இனிது - எனது நெஞ்சிற்கு இனிமை தருவது.

(முடிபு) காதலர் நல்கார் நயவாராயினும் பல்காற் காண்டலும் இனிது.

(கருத்து) தலைவரைக் காணுதிருத்தல் துன்பத்தைத் தருவதாயிற்று.

(வி - ரை.) தோழியென்னும் விளி வருவித்துரைக்கப்பட்டது. கூதளி: இது கூதாளியெனவும் கூதளம், கூதாளமெனவும் வரும்; கூதாளியென்பதே புணர்ச்சிக்கண் அம்முப்பெற்றும் குறுகியும் வருமென்பர் நச்சினர்க்கினியர் (தொல். உயிர்மயங்கு. 44); இதன் மலர் வெண்ணிற முடையது (முருகு. 192); கூதிர்ப் பருவத்தில் அலர்வது (நற், 244 : 2.)

பெருந்தேன் : குறுந். 3 : 4, வி - ரை. காலுடையாரும் ஏறுதற்கரிதென்பாள் நெடுவரை யென்றாள். குடை - பனை யோலையாற் செய்யப்பட்டு நீர் எடுத்தற்கும் பருகுதற்கும் உணவுப்பொருள் வைத்தற்குமுரிய ஒரு கருவி (கலி. 23 : 9; அகநா. 121 : 12; புறநா 177 : 16) இங்கே அதனைப் போன்ற மையின் உட்கைச்சிறுகுடை யென்றாள். 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைபட்டாற்போல' என்னும் பழமொழியொன்று இங்கே நினைத்தற்குரியது. 'முடவன் தேனிருலிலுள்ள

தேன் தன்கையில் வீழப்பெற்றுச் சுவைத்து இன்புறுஞையினும் அதனைக் கண்டவளவிலே ஓரின்பம் பெற்றதுபோலத் தலைவ ருடைய தண்ணளியையும் நயப்பையும் பெறேஞயினும் அவரைக் காண்டலே ஓரின்பம் தருவதென்று உவமையை விரித் துக்கொள்க. காண்டலும் : உம்மை இழிவுசிறப்பு பல்காற் காண்டலும் என்றதற்கேற்பப் பல்கால் என்பது உவமைக்கும கூட்டப்பட்டது இனிதே : ஏகாரம் அசைநிலை.

1. கூதளி - ஒரு மரம் ; கூதளம். கூதாளம், கூதாளி : குறுந். 282 : 6 ; புறநா. 168, 380, தொல், 246. ந.

(ஒப்பு.) 2. இருக்கை முடவன் : 'தமக்கு உற்றது உரைக்கலாத மூத் தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவரும்' (இறை. 35, உரை)

3. குடை, 168 : 2, நாலடி. 289.

1 - 3. தேனைக் கண்ட முடவன் அதனை விரும்பல் : 'கொடுங்குன்றி னீள் குடுமி, மேற்றேன் விருப்பு முடவனைப் போல" (திருச்சிற். 151.)

5. தலைவன் நல்குதல் : குறுந். 37 : 1, ஒப்பு.

5-6. தலைவனைக் காணுதலால் இன்பம் உண்டாதல் : "துனிதீர் கூட்ட மொடு தன்ஞ ராயினும். இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல்" (நற். 216: 1-2) ; "பேணுது பெட்பவே செய்யினுங் கொண்கனைக், காணு தமை யல கண்" (குறள், 1283.) (கூ0)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்குத் தூதாக வந்த பாணர் மூதலியோரை நோக்கி, "தலைவன் இங்கேவந்து தலைவியோடு இன் புறுஞையினும், அவனது நட்பை மனத்தால் நினைந்து அமைதியுற் றுத் தலைவி இருத்தலின் அவள்வளைகள் செறிந்தன ; ஆதலின் அவன் வந்து செய்யும் குறையொன்றிலம்" என்று கூறித் தோழி வாயில் மறுத்தது.]

கூக. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறுஅ ராயினுங் கையின்
ஈர்த்தின் புறாஉ மிளையோர் போல
உற்றின் புறைள மாயினு நற்றோர்ப்
5. பொய்கை யூரன் கேண்மை
செய்தின் புற்றனெஞ் செறிந்தன வளையே.

எ - து. தோழி, தலைமகன்வாயில்கட்கு உரைத்தது.

தும்பிசேர்கீரன். (தி - ம்.) 6 'புற்றனஞ்'

(ப - ரை) தச்சன் செய்த - தச்சனாற் செய்யப்பட்ட, சிறு மா வையம் - சிறிய குதிரை பூட்டப்பெற்ற சிறு வண்டியை, ஊர்ந்து இன்புறூர் ஆயினும் - ஏறிச் செலுத்தி இன்பமடையாராயினும், கையின் ஈர்த்து இன்புறூஉம் இளையோர் போல - கையால் இழுத்து இன்பமடையும் சிறுவரைப்போல, உற்று இன்புறேம் ஆயினும் - மெய்யுற்று இன்பமடையேமாயினும். நல் தேர் - நல்ல தேர்களையும், பொய்கை - பொய்கையையுமுடைய, ஊரன் கேண்மை - ஊர்க்குத் தலைவனது நட்பை, செய்து இன்புற்றனெம் - மேன்மேலும் பெருகச் செய்து இன்பமடைந்தோம்: வளை செறிந் தன - அதனால் வளைகள் கழலாமல் இறுகியமைந்தன.

(முடிபு) உற்று இன்புறேமாயினும் ஊரன்கேண்மையைச் செய்து இன்புற்றனெம்; வளை செறிந்தன.

(கருத்து) தலைவர் எம்மை மறந்தாலும் யாம் அவரை மறவே மாயினேம்

(வி - ரை.) தச்சன் செய்தவை மாவும் வையமுமாகிய இரண் டும். சிறுமா, சிறுவையமென்க. நற்றேரையுடைய ஊரனைப் பற்றிச் சொல்லப்புகுவாள் அத்தேரோடு தொடர்புடைய உவமை யையே கூறினள்.

'இளையோர், பெரியோர் ஊரும் பெரியதேரை ஊர்ந்து இன் புறுவிடினும் அத்தேரை நீனைந்து பண்ணிய சிறுதேரை ஈர்த்து, அப்பெரியோர் அடையும் இன்பத்தைப் பெறுவதுபோல, பரத்தை யர் பெறும் மெய்யுறுபுணர்ச்சியைப் பெற்று இன்புறேமாயினும், தலைவனை நினைந்து உள்ளத்தே நட்பைப் பெருக்குதலினால். அவர் பெற்ற இன்பத்தையே யாம் பெற்றேம்' என்று உவமையை விரித் துக்கொள்க.

நற்றேர்ப் பொய்கையூரனென்றது, தலைவன் தன் தேரிலேறிப் பரத்தையருடன் பொய்கைநீராடுவானென்றறிந்ததைக் குறித் தது. கேண்மை - நெஞ்சிற் பயின்ற நட்பு; "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான், நட்பாங் கிழமை தரும்" (குறள், 785) என்பவாகலின், உணர்ச்சியே புணர்ச்சிக்குரிய பயனாகிய வளை செறிதலை உண்டாக்கியது. தோழி தனக்கும் தலைவிக்குமுள்ள ஒற்றுமைபற்றி உற்றின்றேமாயினுமென்று தன்மைப்பன்மையாற் கூறினள்.

வளையே: ஏகாரம் அசைநிலை.

---

* இதனைத் தும்பிசொகிரனென்று படித்தற்கும் இடமுண்டு.

இதனால், 'அவன் ஈண்டு வாராதிருப்பவும் வந்தாற்போன்ற இன்பத்தைப் பெற்றேம்; ஆதலின் ஈண்டு வந்து செய்வதொன்றிலன்' என்று தோழி வாயில் மறுத்தாளாயிற்று

விளையாட்டுத்தேரை ஈர்த்து இன்புறும் பருவம் கடந்து மெய்த்தேரை யூர்ந்து இன்புறுவார்போலக் களவுக்காலங் கடந்து மெய்யுறு புணர்ச்சியை இடையீடில்லாமற் பெறுவதற்குரிய கற்புக் காலத்தினேமாகிய யாம் சிறுரைப் போலக் களவுக்குரிய உள்ளப் புணர்ச்சியையே உடையேமாயினேம் என்னும் குறிப்பும் பெறப்படும்.

(மேற்) 1. அதனின் இயறல் என்னும் பொருளில் மூன்றும் வேற்றுமை வந்தது (தொல். வேற்றுமை. 11, இளம், கல்.)

(ஒப்பு.) 1 - 3. **சிறுதேரை இயோர் ஊராமல் ஈர்த்தல்**: "தச்சச் சிறுஅர் நச்சப் புனைந்த, ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்" (பெரும்பாண். 248 - 9.) **இயோர் சிறுதேரை இழுத்தல்**: "பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும், முக்காற் சிறுதேர்" (பட். 24-5); "கால்வறேர்கையி னியக்கி நடைபயிற்ரு, ஆலமர் செல்வ னனிசால் பெருவிறல், போல வருமென் னுயிர்" (கலி. 81 : 8 - 10); "விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி, யமளித் துஞ்சும்.....புதல்வர்" (மணி. 7 : 55 - 7); "தொழிலுடைச் சிறுபறை பூண்டு தேரீர்த்து" (திருவாரூர் மும்மணிக். 22 : 2); ஆண்பாற் பிள்ளைத்தமிழ்களிலுள்ள சிறுதேர்ப் பருவத்தைப் பார்க்க.

4. **உற்றின்புறுதல்**: "ஐதெமக் கம்ம மெய்தோய் நட்பே" (குறுந்) 401 : 6.) 5. **ஊரன் கேண்மை**: குறுந். 264 : 4, 308 : 6. 4 - 6. ஒருவாறு ஒப்பு: குறுந். 42. 6. **வளை செறிதல்**: குறுந். 260 : 3. (சுக)

தலைவன் கூற்று

[இயற்கைப்புணர்ச்சிக்கண் தலைவியோடு அளவளாவிய தலைவன் பிற்றைநாளில் முதல்நாட் கண்ட இடத்தில் அவளைத் தலைப்பட்டு இன்புற எண்ணித் தன் நெஞ்சை நோக்கி, "அவள் நறுமையும் மென்மையும் நன்னிறமும் உடையள்; இன்றும் அவளைப் பெறுவேம்" என்று கூறியது.]

கோடு லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோண் மேனி
5. முறியினும் வாய்வது முயங்கற்கு மினிதே.

எ - து. தலைமகன் இடந்தலைப்பாட்டின்கட் கூடலுறு நெஞ்சு சிற்குச் சொல்லியது.

[இடந்தலைப்பாடு - இயற்கைப்புணர்ச்சிக்குப் பின் மீண்டும் தலைவியை முன்னுட் கண்ட இடத்திலே சென்று தலைப்படுதல்.]

சிறைக்குடி யாந்தையார்.

(பி - ம்) 2 'நாறிணர்க்' 'டிடைபட' 'டிடையிடுபு', 4 'நறி யணல்லோள்' 5 'வாயது', 'முயங்குக வின்னே', 'முயங்குவமி னியே', முயங்குக மினியே'

(ப - ரை.) நெஞ்சே, கோடல் - காந்தள்மலரையும். எதிர் முகை பசுவீ முல்லை - தோற்றிய அரும்பிலிருந்து உண்டாகிய செவ்வி மலர்களாகிய முல்லைப் பூக்களையும், நாறு இதழ் குவளை யொடு - மணக்கின்ற இதழ்களையுடைய குவளைமலர்களோடு, இடைப்பட விரைஇ - இடையிடையே பொருந்தும்படி கலந்து ஐது தொடைமாண்ட - அழகிதாகத் தொடுத்தல் மாட்சிமைப்பட்ட, கோதைபோல - மாலையைப்போல, நறிய நல்லோள் மேனி - நறு நாற்றத்தையுடைய தலைவியது மேனியானது, முறியினும் வாய் வது - தளிரைக் காட்டிலும் மென்மையும் நிறமும் பொருந்தியது; முயங்கற்தும் இனிது - தழுவுதற்கும் இனியது.

(முடிபு) நெஞ்சே, நல்லோளது நறிய மேனி முறியினும் வாய் வது; முயங்கற்தும் இனிது.

(கருத்து) தலைவியை முன்பு தழுவி இன்புற்றதுபோல இப் பொழுதும் இன்புறுவேன்.

(வி - ரை.) எதிர்தல் - தோன்றுதல் (கலி 117 : 3, ந.); பரு வத்தை நேர்தல் (ஐந். ஐம். 31, உரை,) பசுவீ - செல்விப் பூ; பசுமை நிறத்தின்கண் செல்வதன்று; 'பைங்காந்தள் - செல்விக் காந்தட்பூ' (திருச்சிற் 1. பேர்.) என்பதைப் பார்க்க. மேனியின் இயலைக் கூறினன், இயற்கைப் புணர்ச்சிக்கட் பழகியவனுதலின். இனிதே : ஏகாரம் அசைநிலை.

(மேற்.) மு. தலைவன் பிரிந்துழிப் பெருகிய சிறப்பின்கண் அவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5, இளம.); * புணர்ந்துழி மகிழ்ந்து கூறியது (தொல். அகத். 14, களவு. 6, ந.); இயற்கைப்புணர்ச்சிக்கண் வந்தது (தொல். செய். 186, ந); முயங்குதலுறுதல் (நமபி. 127); மெய் யுறு புணர்ச்சி (இ. வி. 405.)

(ஒப்பு.) 1. எதிர்முகை : "எதிர்மலர்" (நான்மணி. காப்பு); நற். 52 : 2. பசுவீ முல்லை : குறுந். 221 : 5.

---

* இக் கருத்து, சிறப்புடையதாகத் தோற்றுகின்றது.

1-4. தலைவியின் மேனி மலர்களின் மணத்தையுடைமை : (குறுந். 84 : 4-5, 168 : 1-4) ; " பொய்கைப் பூவினு நறுந்தண் ணியளே " (ஐங். 97 : 4.) தலைவியின் மேனிக்கு மலர்மாலை உவமை : (குறுந். 84 : 4-5, 168 : 1-4, 229 : 6) ; " திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக், குருவளர் பூங் குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்குதெய்வ, மருவளர் மாலையொர் வல்லியி னெல்கி யனநடைவாய்ச், தருவளர் காமன்றன் வென்றிக் கொடி போன் றெளிர்கின்றதே " (திருச்சிற். 1) ; " பேதையைப் பெண்ணியலைப் பெய்வளையை யென்மார்பிற. கோதையை " (பு. வெ. 255.)

4-5. தலைவிமேனிக்கு முறி உவமை : (குறுந். 222 : 7) ; " முறிமேனி... வேய்த்தோ ளவட்கு " (குறள, 1113.) 5. தலைவி மேனியின் நறுமை, மென்மை, இனிமை : குறுந் : 70 : 2-5. (கூஉ)

தலைவன் கூற்று

[பொருள் தேடவேண்டுமென்று துணிந்த நெஞ்சை நோக்கி, " பொருள் தேடச் செல்லின் தலைவியைப் பிரியவேண்டும் ; அவளைப் பிரிவது அரிது " என்று உணர்த்தித் தலைவன் செலவு தவிர்ந்தது.]

கூடு. ஈதலுந் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி; யவ்வினைக்
கம்மா வரிவையும் வருமோ? எம்மை
யுய்த்தியோ, வுரைத்திசி னெஞ்சே.

எ - து. பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லியது.

[கடைக் கூட்டுதல் - முடிவு போக்குதல் (பொருந. 175, ந.) ; துணிதல்.]

(கு-பு.) பொருள் கடைக்கூட்டிய நெஞ்சு : குறுந். 71, கருத்து; அகநா. 335, கருத்து.

உகாய்க்குடிகிழார். (பி - ம். உகாய்க்குடிக்கிழார்.)

(ப - ரை.) நெஞ்சே—, ஈதலும் - இரவலர்க்குக் கொடுத்தலும், துய்த்தலும் - இன்பங்களை அனுபவித்தலும், இல்லோர்க்கு - பொருளில்லாத வறியவர்க்கு, இல் என - இல்லையென்று கருதி, செய்வினை - பொருள் செய்தற்குரிய செயல்களை, கைம்மிக எண்ணுதி - மிக எண்ணுகின்றாய் ; அ வினைக்கு - அச்செயல் செய்தற்குத் துணையாக, அ மா அரிவையும் - அழகிய மாமை நிறத்தையுடைய தலைவியும், வருமோ - வருவாளோ ? எம்மை உய்த்தியோ - எம்மை மட்டும் செலுத்துகின்றாயோ ? உரைத்திசின் - சொல்லுவாயாக.

(முடிபு) நெஞ்சே, செய்வினை எண்ணுதி ; அரிவையும் வருமோ ? எம்மை உய்த்தியோ ? உரைத்திசின்.

(கருத்து) இவளைப் பிரிந்து செல்லுதல் இயலாதது.

(வி - ரை.) ஈந்து எஞ்சியவற்றையே துய்த்தல் இல்வாழ்வான் கடப்பாடாதலின் ஈதலை முன்னர்க் கூறினன் ; " விருந்தோம்பி, மிச்சின் மிசைவான் " (குறள், 85) என்பதை ஓர்க. ஈதலாகிய அறமும் துய்த்தலாகிய இன்பமும் பொருளால் ஆகுமாதலின் அம் முறை பற்றிக் கூறினனெனலுமாம் ; " வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையு மெய்தும் " (நாலடி, 114) ; " ஆராயிற் றானே யறம்பொரு ளின்பமென், றாரா ரிவற்றி னிடையதனை யெய்துவார், சீரா ரிருதலையு மெய்துவர் " (திவ். சிறியதிருமடல், 3-4) இல்லோர் - பொருளில்லாதவர் (குறுந். 120 : 1) ; பொருளின்மையையே இன்மையென்றும், பொருளில்லோரையே இல்லோரென்றும் வழங்குதல் மரபு. இல்லோர்க்கென்பதற்கு வேற்றுநாட்டுக்குச் சென்று பொருண்முயற்சி செய்யாமல் இல்லிலே தங்கியிருப்பாருக்கெனலுமாம் ; " செறுவோர் செம்மல் வாட்டலுஞ் சேர்ந்தோர்க், குறுமிடத் துய்க்கு முதவி யாண்மையும், இல்லிருந் தமைவோர்க் கில்லென் றெண்ணி " (அகநா. 231 ; 1-3) என்பதைக் காண்க. இல்லோர்க்கு இல்லென என்ற குறிப்பால் செய்வினை யென்பது பொருள் செய்வினையைச் சுட்டியது. உரைத்திசின் : சின், முன்னிலையசை ; " உரைத்திசிற் றோழி " (குறுந். 302 : 1) ; இதன் இலக்கணம், " பியாயிக மோமதி இகுஞ்சி னென்னும், ஆவயி னுறும் முன்னிலை யசைச்சொல் " (தொல். இடை. 26) என்பது.

' நெஞ்சே, நீ பொருள்செய்யும்பொருட்டு வேற்றுநாட்டுக்குப் போக எண்ணுகின்றாய் ; அங்கே இத்தலைவி வருவாளோ ? வாராளாகளின் நான் மட்டும் போகவேண்டும் ; இவளைப் பிரிந்து நான் செல்ல ஆற்றேனன்றே ' என்று கூறித் தலைவன் செலவழுங்கினன். இங்ஙனம் அழுங்கியது செல்லாமலே இருத்தற்கன்று ; தன் மனத்திலுள்ள பேரன்பைப் புலப்படுத்தி ஒருவகையால் அவளை ஆற்றுவித்துப் பின்பு பிரிவதே அவன் கருத்து ; இதுவே புலனெறி வழக்கமென்பது, " செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும் " (தொல். கற்பு. 44) என்பதனால் அறியலாகும்.

(மேற்.) மு. இன்மையது இளிவைத் தலைவன் நெஞ்சிற்குக் கூறியது ; இது (பொருள் வயிற்பிரிவு) வணிகர்க்கே யுரியது (தொல். அகத். 41, ந.) ; தலைவியை வருகின்றுளன்றேயெனக்கூறித் தலைவன் செலவழுங்கியது

(தொல். கற்பு. 5) ; மறுத்துரைப்பதுபோல நெஞ்சினை இளிவரல்பற்றிக் கூறியது (தொல். பொருளியல், 2, ந.)

(ஒப்பு.) 1. இல்லோர்க்கு ஈதல் இல்லை : "இருள்படு நெஞ்சத் திடும்பை தீர்க்கும், அருணன் குடைய ராயினு மீதல், பொருளில்.லோர்க்கஃ தியையா தாகுதல், யானு மறிவென் மன்னே" (அகநா. 335 :1-4.); அகநா. 231 : 1-3. 1-5 இல்லோர்க்குத் துய்த்தல் இல்லை: (குறுந். 120 : 1) ; "வறியாரிருமை யறியார்" (திருச்சிற். 333) இல்லோர்க்கு ஈதலும் துய்த்தலும் இல்லை : "இசையு மின்பமு மீதலு மூன்றும், அசைவுட னிருந்தோர்க் கருமபுணர் வின்மென" (நற். 214 : 1-2)

2. கைம்மிகல் : நற். 39 : 3 ; கலி. 46 : 23, 58 : 7, 107 : 24.

1-2. "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும், பெரிதாய பகைவென்று பேணுரைத் தெறுதலும், புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப், பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்" (கலி. 11 : 1-4.) 2-3 : குறுந். 347 : 4-6. 3. அம்மாவரிவை : புறநா. 349 : 5 ; குறள், 1107. 4. உரைத்திசினெஞ்சே : நற். 103 : 1. (கூக)

தலைவி கூற்று

[தலைவன் பிரிவை ஆற்றுமலிருந்த தலைவியை நோக்கி, "அவர் நின் துன்பத்தையறிவர் ; ஆதலின் விரைவில் மீள்வர்" என்று தோழி கூற, "அவர் அறிந்தவராயிருந்தும் இன்னும் வந்திலர்" என்று தலைவி கூறியது,]

கூச. பல்லா நெடுநெறிக் ககன்று வந்தெனப்
புன்றலை மன்ற நோக்கி மாலை
மடக்கட் குழவி யணைவந் தன்ன
நோயே மாகுத லறிந்தும்
5. சேயர் தோழி சேய்நாட் டோரே.

எ - து. பிரிவிடை யாற்றுமை கண்டு, வருவரெனச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[வருவர் - தலைவர் வருவர்.]

கருவூர்க் கதப்பிள்ளை. (பி - ம். கருவூர்க் கந்தப்பிள்ளை, கருவூர்க் கந்தப்பிளைச் சாத்தனார்.)

(பி - ம்.) 1 'கன்று வருந்தெனப்' 3 'மக்கட்குழவி' 'யலம்வந் தன்ன' 'யவண் வந்தன்ன' 'யென வந்தனரே' 4 'நோவே'

(ப - ரை) தோழி—, பல் ஆ - பல பசுக்கள், நெடு நெறிக்கு அகன்று வந்தென - நெடிய வழியின்கண் நீங்கிச் சென்றனவாக,

புன்தலை மன்றம் நோக்கி - அவை தங்கியிருத்தற்குரிய புல்லிய இடத்தையுடைய மன்றத்தைப் பார்த்து, மாலை - மாலைக்காலத்தில், மடம் கண்குழவி - மடப்பம் பொருந்திய கண்ணையுடைய கன்றுகள், அணவந்தன்ன நோயேம் ஆகுதல் அறிந்தும் - தலை யெடுத்துப் பார்த்து வருந்தினுற் போன்ற தம் வரவு நோக்கிய துன்பத்தை யுடையே மாதலை அறிந்திருந்தும், சேய்நாட்டோர் - நெடுந்தூரத்தேயுள்ள நாட்டுக்குச் சென்ற தலைவர், சேயர் - இன்னும் நெடுந்தூரத்திலேயுள்ளார்.

(முடிபு.) தோழி, சேய்நாட்டோர் நோயேமாகுதல் அறிந்தும் சேயர்.

(கருத்து) தலைவர் நாம் துன்புறுவோமென்பதை அறிந்தவரா யிருந்தும் இன்னும் வந்திலர்.

(வி - ரை.) படர்க்கையிலும் வந்தென்பது செல்லுத லென்னும்பொருளில் வந்தது; தொல். கிளவி. 29, உரை. பசுக்கள் சென்றது மேய்தற்கு. புன்தலை - பொலிவழிந்த இடம்; பசுக்கள் இன்மையின் பொலிவழிந்ததாயிற்று. மன்றம் - பசுக்கள் தங்கியிருக்கும் இடம்; "ஆன்கணம், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர" (குறிஞ்சிப். 217-8); இதனை யுடையரா யிருத்தல்பற்றி இடையர்கள் மன்றுடிகள் (திருவால - 52 : 5, 11) என்னும் பெயருடையராயினர்; இப்பெயர் சிலாசாஸனங்களிற் காணப்படுகின்றது. மடக்கண் - மென்மைபொருந்திய கண்; கன்றுதலின் மடக்கண் உடையதாயிற்று.

மேயச் சென்ற பசுக்கள் மாலைக்காலத்தில் ஊர்க்கு மீண்டு வந்து மன்று புகுவது வழக்கம்; அதனால் மாலையில் கன்றுகள் தம் தாய்ப்பசுக்களை எதிர்நோக்கியிருந்தன; "கறவை கன்றுவயிற் படர" (குறுந் 108 : 2.) அணவருதல் - தலையெடுத்துப் பார்த்து வருந்துதல்; "அணந்த யானை" (குறிஞ்சிப். 35) என்பதற்கு, 'மேனேக்கி வருந்தின யானை' என்று நச்சினார்க்கினியர் உரை யெழுதுதல்காண்க. அலம் வந்தன்னவென்ற பாடத்திற்கு மனஞ் சுழன்றுற்போன்ற வென்று பொருள்கொள்க.

பிரிந்து சென்ற பசுக்கள் மாலைக்காலத்தில் மீண்டு வருதலை அவற்றின் கன்றுகள் எதிர்நோக்கி நிற்றலைப்போல, பிரிந்து சென்ற தலைவனது வரவை உரிய பருவத்தில் எதிர்நோக்கி யிருப்பேனென்று உவமையை விரித்துக்கொள்க. புன்தலையென்று உவமைக்குக் கூறியதற்கேற்ப அவரில்லாமையாற் பொலிவிழந்த இவ்விடத்தைப்பார்த்து யான் வருந்தினேனென்பதும் கொள்க.

"அவர் நின் துன்பத்தை அறியாதிரார்" என்று தோழி ஆற்றுவித்தாளாதலின், "அறிந்தும் இன்னும் சேயராயினர்" என்று வருந்தினள்.

தாய்ப்பசுவிற்கும் கன்றுக்கும் உள்ள அன்பு மிகச் சிறந்த தாதலின் அது தாய்க்கும் பிள்ளைக்குமுள்ள அன்புக்கு உவமை கூறப்படுவதோடு, தலைவன் தலைவியருக்கு இடையிலுள்ள அன்பு, இறைவன் அடியார்க்கு இடையிலுள்ள அன்பு முதலியவற்றிற்கும் கூறப்படுதல் மரபு; "கன்றுபிரி காராவின் றுயருடைய கொடி" (கம்ப. குகப்) என்று தாயன்புக்கும், "தமியர் தாமே, செல்ப வெனப.....பண்பில் கோவலர் தாய்பிரித தியாத்த, நெஞ்சமர் குழவி போல நொந்துநொந், தின்னு மொழிது மென்ப" (அகநா. 293 : 9-13) என்று தலைவியின் அன்புக்கும், "கற்றுவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே" (திருவா) என்று அடியாரது அன்புக்கும் உவமையாக வருதல்காண்க.

அறிந்தும் : உம்மை உயர்வு சிறப்பு. நாட்டோரே : ஏகாரம் அசைநிலை

(ஒப்பு.) 1. பசுவின் கன்று தாயைநோகஇ அழைத்தல்: அகநா . 14 : 9-11.
3. அணவரல் : குறுந். 128 : 3 ; பரி. 1 : 2.
1-4. தலைவன் வரவை எதிர்பார்க்கும் தலைவிக்குத் தாய்ப்பசுவை எதிர்பார்க்கும் கன்று : குறுந். 132 : 4-6. (சுச)

தலைவி கூற்று

[கார்ப்பருவம் வந்ததையறிந்த தலைவி, தலைவன் வாராமையால் வருந்தி. "இன்னும் நீங்கள் உயிரோடு இருக்கின்றீர்களோ வென்று கேட்பதுபோலக் கார்ப்பருவம் வந்தபின்பும் தலைவர் வந்திலர் ; இனி என்செய்வேன்!" என்று தோழியிடம் வருந்திக் கூறியது.]

கூடு. வன்பரற் றெள்ளறல் பருகிய விரலுதன்
இன்புறு துணையொடு மறுவந் துகளத்
தான்வந் தன்றே தளிதரு தண்கார்
வாரா துறையுநர் வரனசை இ
5. வருந்தினொந் துறைய விருநதிரோ வெனவே.

எ - து. பருவங்கண்டு அழிந்த (பி - ம். ஒழிநத) தலைமகள் தோழிக்கு உரைதத்து.

கோவூர் கிழார்.

(பி - ம்) 1 'வன்பாற்' 2 'பருவந்து' 3. 'களிதரு' 4-5 'வருந்தி, நோதொந்துறைய விருந்தினரோ' 5 'விருந்திரோ, இருந்தன்ரு லெனவே' 'விருந்தனிரோ'

(ப - ரை.) தோழி, வல் பரல் தெள் அறல் பருகிய - வலிய பருக்கைக்கற்களினிடத்தேயுள்ள தெளிந்த நீரைக் குடித்த, இரலை - ஆண்மான், தன் இன்புறு துணையொடு - இன்பத்தை நுகர்தற்குரிய தன்னுடைய பெண்மானோடு, மறுவந்து உகள - களிப்பினாற் சுழன்று துள்ளி விளையாடாநிற்கவும், வாராது உறையுநர் - இங்கே வாராமல் சென்ற இடத்தே தங்கிய தலைவர், வரல் நசைஇ - மீண்டு வருதலைவிரும்பி, வருந்தி நொந்து உறைய - மிகவருந்தித் தங்கும்பொருட்டு, இருந்திரோ என - உயிர் வைத்துக் கொண்டிருந்தீரோ வென்று கேட்பதற்கு, தளி தரு தண் கார் - மழைத்துளியைத் தருகின்ற தண்ணிய கார்ப்பருவம், வந்தன்று - வந்தது.

(முடிபு.) உறையுநர் வரல் நசைஇ இருந்திரோ எனக் கார் வந்தன்று.

(கருத்து) கார்ப்பருவம் வந்தபின்பும் தலைவர் வந்திலர்.

(வி - ரை) மான் தன் துணையோடு உகளும்படி கார்ப்பருவம் வரவும், தலைவர் தப் துணையோடு மகிழும்படி வந்து சேர்ந்தில ரென்னும் குறிப்புத் தோன்றுகின்றது. 'கார்ப்பருவம் வந்த பின்பும் நாம் உயிரோடு இருத்தல் பிழை' என்னும் நினைவின ளாதலின் அக்கருத்தை அப்பருவம கேட்பதாக அமைத்தாள். இனி அவர் விரைவில் வாராவிடின் உயிர்வாழ்தலருமை என்பதும் புலப்பட்டது.

தான், ஏகாரங்கள் : அசைநிலைகள்.

(ஒப்பு.) 1. பரலிலுள்ள நீர் : "பரலவற்பருகுநீர்" (குறுந் 250 : 1) அகநா. 4 : 4 ; மலைபடு. 198 ; "பரலவ ஓறற் சிறுகீர்" (நற் 333 : 3.) பரலும் இரலையும் : "பரலவ லடைய விரலை தெறிப்ப" (அகநா. 4 : 4)

2 மறுவருதல் : குறுந். 45 : 4, ஒப்பு. அகநா. 22 : 4.

1-2. பரல்களிலுள்ள நீரைப் பருகி இரலைமான் பெண்மானோடு உகளுதல் : குறுந் 250 : 1-2. இரலையும் துணையும் உகளல் : (குறுந். 338 : 1-2); "அறுகோட் டிரலையொடு மான்பிணை யுகளவும்" (பட். 245); "பிணை யெருத் தெழிலேற்றின் பின்னர்ப், பிணையுங் காணீரோ பிரியுமோ வவையே" (கலி. 20 : 22-3) ; "மடப்பிணை தழீஇத், கிரிமருப் பிரலை புல்லருந் துகள" (அகநா. 14 : 5-6); "மறியுடன் றழீஇய மடமா னமபிணை, துள்ளுநடை யிரலையொடு வெள்ளிடைக் குழுமம" (பெருங். 1. 54 : 38-9)

1-3. **கார்ப்பருவத்தில் இரலையும் துணையும் இணைந்திருத்தல்:** "திரிமருப் பிரலையொடு மடமா னுகள, எதிர்செல் வெண்மழை பொழியுங் கிங்களின்" (முல்லை. 99-100); "அரக்கத்தன்ன.....மடப்பிணை தழீஇத் திரிமருப் பிரலை புல்லருந் துகன "மண்கண் குளிர்ப்ப வீசித் தண்பெயல், பாடுலந் தன்றே பறைக்குர லெழிலி.....அண்ண லிரலை யமர்பிணை தழீஇத், தண்ணறல் பருகித் தாழ்ந்துபட் டனவே", "இருகிரி மருப்பி னண்ண லிரலை, செறிபிலைப் பதவின்...மடப்பிணை யருத்தித், தெள்ளற றழீஇய வார்மண லடைகரை, மெல்கிடு கவுள துஞ்சுபுறங் காக்கும்", "கார்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள்.....தண்ணறும் படுநீர் மாந்திப் பதவருந்து, வெண்புறக் குடைய திரிமருப் பிரலை, வார்மண லொருசிறைப் பிடவவிழ் கொழுநிழற், காமர் துணையொ டேமுற வதிய", "படுமழை பொழிந்த பயமிகு புறவின்.....திரிமருப் பிரலை தெள்ளறல் பருகிக், காமர் துணையொ டேமுற வதிய", "இருவிசும் பிவர்ந்த கருவி மாமழை, நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோற், சூர்பனிப் பன்ன தண்வர லாலியொடு, பருஉப்பெய லழிதுளி தலைஇ வானவின்று, குருஉத்துளி பொழிந்த பெரும்புலர் வைகறை, செய்துவிட் டன்ன செந்நில மருங்கிற், செறித்துநிறுத் தன்ன தெள்ளறல் பருகிச், சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை, வலந்திரி மருப்பி னண்ண லிரலையொ, டலங்குசினைக் குருந்தி னல்குநிழல் வதிய", "மறியுடை மடப்பிணை தழீஇப் புறவிற், றிரிமருப் பிரலை பைம்பயி ருகள, வார்பெய லுதவிய கார்செய் காலை" (அகநா. 14 : 1-6, 23 : 1-9, 34 : 4-8, 139 : 5-12, 154 : 1-9, 304 : 1-10, 314 : 5-7); "கருவியல் கார்மழை கால் கலந் தேந்த, உருகு மடமான் பிணையோ டுகளும்" (கிணைமொழி. 25); "கார்வளம் பழுனிக் கவினிய கானத்து.....சிறுபிணை தழீஇய திரிமருப் பிரலை" (பெரும். 1. 49 : 101-14.)

5. **வருந்தி நொந்துறைதல்:** குறுந். 192 : 2, 400 : 7. (சூடு)

தோழி கூற்று

[கார்காலம் வந்தபின்பும் தலைவன் வாராமையால் வருந்திய தலைவியை நோக்கி, "இப்போது பெய்யும் மழை பருவமல்லாத காலத்துப் பெய்வது; இதைக் கார்காலத்துக்குரியதென்று மயங்கிக் கொன்றைமரங்கள் மலர்ந்தன. ஆதலின் இது கார்ப்பருவமென்று நீ வருந்தற்க" என்று தோழி கூறியது]

கூகூ. மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா வளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணை சூழ்த்த
5. வம்ப மாரியைக் காரென மதித்தே.

எ - து. பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி பருவமன் றென்று வற்புறீஇயது.

[பருவம்-இங்கே கார்காலம். வற்புறீஇயது - வற்புறுத்தியது.]

கோவத்தன் (பி - ம். கோவதத்தன்.)

(பி - ம்.) 1 'மடவை' 4 'கொடியிணர் பூத்த' 5 'வம்பு'

(ப - ரை.) கல் பிறங்கு அத்தம் சென்றோர்-கற்கள் விளங்கும் பாலைநிலத்து அருவழியைக் கடந்து சென்ற தலைவர், கூறிய - மீண்டு வருவேனென்று சுட்டிக் கூறிய, பருவம் - கார்ப் பருவம், வாரா அளவை - வாராத காலத்திலே, வம்ப மாரியை - பருவமல்லாத காலத்துப் பெய்யும் மழையை, கார் என - கார் காலத்து மழையென்று, மதித்து - கருதி, நெரிதர - நெருங்கும்படி, கொப்புசேர் கொடி இணர்ஊழ்த்த - சிறு கொம்புகளிற் சேர்ந்த ஒழுங்காகிய பூங்கொத்துகளைப் புறப்பட விட்டன; ஆதலின், தடவு நிலை கொன்றை - பரந்த அடியையுடைய கொன்றை மரங் கள், மன்ற - நிச்சயமாக, மடவ - பேதைமையையுடையன.

(முடிபு.) பருவம் வாரா அளவை வம்பமாரியைக் காரென மதித்து இணர் ஊழ்த்த; அதனற் கொன்றை மடவ

(கருத்து.) இது கார்ப்பருவம் அன்று; ஆதலின் நீ வருந்தற்க.

(வி - ரை.) தலைவி, "கார்ப்பருவம் வந்துவிட்டது; மழை பெய்கின்றது; கொன்றையும் பூத்தன; இன்னும் அவர் வந்திலர்" என்று கூறி இரங்கினளாதலின், 'இது கார்காலமன்று' எனறு வற்புறுத்துந் தோழி தலைவிகூற்றை மறுப்பாளாய், "இம்மழை வம்ப மாரி; இதைக்கண்டு அறியாமையால் கொன்றைகள் பூத் தன" என்றாள். இங்ஙனம் பருவத்தைத் தெரிவிக்கும் பொருள் களின் மேல் அறியாமையை ஏற்றிக் கூறும் மரபு, "பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகந், தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே", "மடவ வாழி மஞ்ஞை" (குறுந். 94: 1 - 2, 251: 1) என்று பின் னும் வந்துள்ள செய்யுட்பகுதிகளால் உணரப்படும். கல் - மலை யுமாம். கொன்றையின் மலர்கள் நீண்ட கொத்தாக இருத்தலின், 'கொடியிணர்' என்றாள். கொன்றை கார்காலத்தில் மலர்வது. ஊழ்த்த - செவ்வியழிந்த: 110: 4; கலி. 27; அகநா. 10: 2

மதித்தே: ஏகாரம், அசைநிலை.

(மேற்.) 5. வம்பு என்னும் உரிச்சொல் நிலையின்மைப் பொருள் குறித்து வந்தது (தொல். உரி. 31, சே, தெய்வச், 59, ஈ; இ. வி. 290.)

மு. தலைவிக்குத் தோழி பருவம் அன்றென்றது (தொல். அகத். 42, இளம்.); பருவமன்றென்று வற்புறுத்தலின் இச்செய்யுள் இருத்தல் நிமித்

சமானது (தொல். உவம. 14, ந.); பருவமன்றெனத் தோழி படைத்து மொழிந்தது (தொல். கற்பு. 9, ந.)

(ஒப்பு.) 3. தடவுநிலை: குறுந். 219 : 6.

2. கலிபிறங்கத்தம்: அகநா. 7 : 14. 79 : 16; சிலப். 16 : 57; மணி. 13 : 39.; குறுந். 174 : 4.

1 - 4. கொன்றையின் கொடியினர்: "புழற்காய்க் கொன்றைக் கோடணி கொடியினர்" (கந். 266 : 4); "கொன்றை கொடியினை சூழ்ப்ப" (பரி. 8 : 24.)

5. வம்பமாரி: "வம்பப் பெரும்புயல்" (புறநா. 325 : 2); "வம்பார் குன்றம்" (தே. திருஞா. திருக்குற்றாலம.) 1 - 5. கொன்றை கார்காலத்தில் மலர்தல்: குறுந். 21 : 3 - 4, ஒப்பு.

மு. "நீரற வறந்த நிரம்பா நீளிடைத்
துகில்விரித் தன்ன வெயிலவி ருருப்பின்
அஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுர மிறந்தோர்
தாம்வரத் தெளித்த பருவங் காண்வர
இதுவோ வென்றிகின் மடந்தை மதிபின்று
மறந்துகடன் முகந்த கமஞ்சூன் மாமழை
பொறுத்தல் செல்லா கிறுத்த வண்பெயல்
காரென் றயர்ந்த வுள்ளமொடு தேர்வில
பிடவுங் கொன்றையுங் கோடலும்
மடவ வாகலின் மலர்ந்தன பலவே" (கந். 99.) (கூகூ)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவை ஆற்றுத தலைவி தோழியை நோக்கி, "பிரிந்து சென்ற தலைவர் நம்மை நினையாரோ? நினைப்பின் வந்திருப்பாரன்றே" என்று கூறியது.]

கூஎ. உள்ளார் கொல்லோ (தோழி கிள்ளை
வளைவாய்க் கொண்ட வேப்ப வொண்பழம்
புதுநா ணுழைப்பா னுதிமாண் வள்ளுகிர்ப்
பொலங்கல வொருகா சேய்க்கும்
5. நிலங்கரி கள்ளியங் (காடிறந் தோரே.

எ - து. பிரிவிடை யாற்றாது (பி - ம். ஆற்றுத.) தலைமகள் தோழிக்கு உரைத்தது.

அள்ளூர் நன்முல்லை.

(பி - ம்.) 3. 'புதுநா னுழைப்பான்'

(ப - ரை.) தோழி—, கிள்ளை - கிளி, வளை வாய் கொண்ட - வளைந்த அலகினிடத்திலே கொண்ட, வேப்ப ஒள் பழம் - வேம்பினது ஒள்ளிய பழமானது, புது நாண் நுழைப்பான்-புதியபொற் கம்பியை ஊடுசெலுத்தும் பொற்கொல்லனது, நுதி மாண் வள் உகிர் - முனை மாட்சிமைப்பட்ட கூரிய கைங்கத்திற் கொண்ட, பொலம் கலம் ஒரு காசு ஏய்க்கும் - பொன்னுபரணத்திற்குரிய ஒரு காசை ஒக்கும், நிலம் கரி - நிலம் கரிந்துள்ள, கள்ளியங்காடு - கள்ளியையுடைய பாலை நிலத்தை, இறந்தோர் - கடந்து சென்ற தலைவர், உள்ளார் கொல் - என்னை நினையாரோ?

(முடிபு.) தோழி, காடிறந்தோர் உள்ளார்கொல்?

(கருத்து.) தலைவர் என்னை மறந்தனர் போலும்!

(வி - ரை.) கிளியின் அலகுக்குக் கைவிரல் நகங்களும், வேப்பம் பழத்திற்கு உருண்டையான பொற்காசும் உவமைகள். காசைப் பற்றுதற்குரிய தகுதியுடையதைப் புலப்படுத்தி, 'நுதிமாண் வள்ளுகிர்' என்றாள். ஒருவகைப் பொற்காசு உருண்டை வடிவமாகவும் இருந்ததென்பது,

"காசி னன்ன போதீன் கொன்றை"

"..... புன்கா லுகாஅய்க்
காசினை யன்ன நளிகனி" (குறுந். 148 : 4, 274 : 1 - 2),

"பொன்செய் காசி னெண்பழந் தாஅம்
குமிழ்" (நற். 274 : 4 - 5)

என்பவற்றாலும் அறியப்படும். பொன்னென்பது செய்யுளிற் பொலமென்றாயிற்று. பொலங்கல மென்றது இங்கே காசுமாலையை. வெம்மையால் நிலங் கரிந்தது.

வேம்பும் கள்ளியும் பாலைநிலக் கருப்பொருள்கள்.

கள்ளியங்காடு: அம், சாரியை. ஓகாரமும் ஏகாரமும் அசைநிலை.

உள்ளார் கொல்லென்றது நினைத்தல் வந்திருப்பரென்னும் நினைவிற்று.

(ஒப்பு.) 1. உள்ளார் கொல்லோ தோழி: குறுந். 16 : 1, ஒப்பு. 1 - 2. கிளியின் வளைந்த வாய்: "வளைவாய்ச் சிறுகிளி" (குறுந். 141 : 1); "கிளிவா யொப்பின்" (குறுந். 240 : 2); "வளைவாய்க் கிள்ளை" (பெரும்பாண். 300.)

3 - 4. காசை நாணிற் கோத்தல்: 'நாண்வழிக் காசு போலவும்' (இறை. 2, உரை.) அகநா. 1 : 9

1 - 5. கள்ளியங் காடிறந்தோர் உள்ளார் கொல்: குறுந். 16 : 1 - 6.

(கூ எ)

தலைவி கூற்று

[தலைவன்பிரிவினால் வருந்திய தலைவி முன்பனிப்பருவத்தும் அவன் வாராமையால் துன்புற்று, "இப்பனியின் துன்பத்தைத் தீர்ப்பது தலைவருடைய மார்பே யாகும்; ஆதலின் அவர் வாரா விடின் இதனை ஆற்றுதல் அரிது" என்றது.]

கூ. பூழ்க்கா லன்ன செங்கா லுழுந்தின்
ஊழ்ப்படு முதுகா யுழையினங் கவரும்
அரும்பனி யச்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவர் மணந்த மார்பே.

எ - து. பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது.

அள்ளூர் நன்முல்லை.

(பி - ம்.) 3. 'அரும்பனியற்சிரம்'

(ப - ரை) பூழ் கால் அன்ன - குறும்பூழ்ப்பறவையின் காலைப் போன்ற, செ கால் உழுந்தின் - செவ்விய காலையுடைய உழுந்தினது, ஊழ்ப்படு முதுகாய்-மிக முதிர்ந்த காய்களை, உழை இனம் கவரும் - மான்கூட்டங்கள் தின்னும்பொருட்டுக் கொள்ளும், அரு பனி - பொறுத்தற்கரிய பனியையுடைய, அச்சிரம் தீர்க்கும் -முன் பனிக் காலத்தால் உண்டாகும் துன்பத்தைப் போக்கும், மருந்து - பரிகாரம், அவர் மணந்த மார்பே - என்னை மணந்த அவருடைய மார்பேயாகும்; பிறிது இல்லை - வேறு இல்லை.

(முடிபு) அச்சிரந் தீர்க்கும் மருந்து அவர் மணந்த மார்பே; பிறிதில்லை.

(கருத்து) அவர் உடன் இராமையால் இம்முன்பனிப் பருவம் எனக்குத் துன்பம் தருவதாயிற்று.

(வி - ரை.) உழுந்தின் வேர் சிறிது மேலே தெரிந்த அடிக்குப் பூழ்க்கால் உவமை. அச்சிரம் - முன்பனிக்காலம் (பரி. 18. 38; சிலப். 14: 105); இஃது அற்சிரமெனவும் வழங்கும். உழுந்து பயறு முதலியன முன்பனிப் பருவத்தில் முதிர்வன; "இரும்பனிப் பருவத்த மயிர்க்கா யுழுந்து" (நற். 89: 5); "பற்றுவிடு விரலிற் பயறுகா யூழ்ப்ப, அற்சிர நின்றன்ரூற் பொழுதே" (அகநா. 339: 4-5.) அச்சிரம்: ஆகுபெயர். மருந்து - பரிகாரம்; "மருந்தில் கூற்றம்" (புறநா. 3: 12, உரை.) அவர் - தலைவர்; நெஞ்சறி சுட்டு. அம்மார்பு மருந்தாதலை முன்னர் அறிந்தேனென்பாள் 'மணந்த மார்பு' என்றாள். மார்பே: ஏகாரம் பிரிநிலை.

(ஒப்பு.) 1. நற். 89 : 5.

3. **அரும்பனி யச்சிரம்** : (குறுங். 76 : 6, 82 : 6, 277 : 4, 338 : 5); "கடும்பனியற்சிரம்" (நற். 86 : 4); "அரும்பனி யஃனை யவற்சிரக் காலே" (ஐங். 470 : 2.)

தலைவரைப் பிரிந்திருப்போர் அச்சிரத்தால் துன்புறல் : (குறுங். 76 : 6); "காதலர்ப் பிரிந்தோர் கையற நலியும, தண்பனி வடந்தை யச்சிரம்" (ஐங். 223 : 3-4); "வாடை தூக்கும் வருபனி யற்சிரம், நம்மில் புலம்பிற் றம் மூர்த் தமியர், என்னு குவர்கொ லளியர்", "தண்பனி யற்சிரந் தமியோர்க் கரிதென", "அற்சிரத் தூதை தூற்றப், பனியலைக் கலங்கிய நெஞ்சமொடு, வருந்துவ மல்லமோ பிரிந்திசினோர் திறத்தே", "அகன்றுறை மகளி ரணி துறந்து நடுங்க, அற்சிரம் வந்தன்று" (அகநா. 78 : 10-12, 178 : 19, 183 : 13-5. 217 : 12-3.)

4. **மருந்து பிறிதில்லை** : நற். 80 : 9, 140 : 11, 247 : 9; கலி. 60 : 21; அகநா. 147 : 14.

தலைவன்மார்பு தலைவிக்கு இன்பம் பயத்தல் : (குறுங். 73 : 1, 80 : 7, 247 : 6-7, 248 : 1-2, 339 : 3-5); "மகிழ்நன் மார்பிற்றுஞ்சி", "மார்புறப் படுதல்" (நற். 20 : 2, 171 : 11); "கழனி யூரன் மார்பு, பழன மாகற்க", "ஊரன் மார்பே, பனித்துயில் செய்யு மின்சா யற்றே" (ஐங். 4 : 5-6, 14 : 3-4.) (கூஅ)

தோழி கூற்று

[இரவுக்குறியை விரும்பிய தலைவனை நோக்கி, "நீ இரவில் வருவையாயின் நினக்குத் தீங்குண்டாகுமோ வென்றெண்ணி யாம் வருந்துவோம்; ஆதலின் நீ வாரற்க" என்று தோழி மறுத்துக் கூறியது.]

கூகூ. கருங்கட னாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்
5. சார லடை நடுநாள் [கும்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே.

எ - து. தோழி, இரவுக்குறி மறுத்தது.

* கடுந்தோட் கரவீரன்.

(பி - ம்.) 2. 'கைமை' 4 'ஓங்குவரை நடுநாட்' 6 'வருந்துகம்'

* இதனைக் 'கடுநதோட்காவீரன்' என்று படித்தற்கும் இடம் உண்டு.

(ப - ரை.) கரு கண் தா கலை - கரிய கண்ணையும் தாவுதலை யும் உடைய ஆண்குரங்கு, பெரும்பிறிது உற்றென - இறந்து பாட்டை அடைந்ததாக, கைம்மை உய்யா - கைம்மைத் துன்பத் தைப் போக்கமாட்டாத, காமர் மந்தி - விருப்பத்தையுடைய பெண் குரங்கானது, கல்லா வன்பறழ் - மரமேறுதல் முதலிய தம் தொழிலைக் கல்லாத வலிய குட்டியை, கிளைமுதல் - சுற்றத்தி னிடத்து, சேர்த்தி - கையடையாக ஒப்பித்து, ஓங்குவரை அடுக் கத்து - ஓங்கிய மலைப் பக்கத்தில், பாய்ந்து உயிர் செகுக்கும் - தாவி உயிரை மாய்த்துக் கொள்ளும், சாரல் நாட - சாரலையுடைய நாட்டுக்குத் தலைவனே, நடுநாள் - நள்ளிரவில், வாரல் - வாரற்க; யாம் வருந்துதும் - அங்ஙனம் நீவிரின் நினக்குத் தீங்குண்டா மென்றெண்ணி நாம் வருந்துவோம், வாழி - நீ தீங்கின்றி வாழ்வா யாக!

(முடிபு) நாட, நடுநாள் வாரல்; யாம் வருந்துதும்; வாழி!

(கருத்து) நீ இரவில் வருதலை யொழி.

(வி - ரை.) தா - தாவுதல் (தொல். உரி. 46, ந.); வலியுமாம்; 'தாப்புலி - வலிய புலி' (பு. வெ. 31, உரை) பெரும்பிறிது - இறந்து பாடு (புறநா. 152: 2, உரை.) கைம்மை யுய்யா - கைம்மைத் துன்பத்தைப் போக்க முடியாத; 'உறைமலி யுய்யா நோய் - மருந் தாற் போக்கமுடியாத நோய்' (சிலப். 7: 8, அரும்பத.); கைம்மை விர தத்தை நெடுகச் செலுத்தமாட்டாத வெனலுமாம். கல்லா தன் தொழிலைக் கல்லாத (மலைபடு. 312, ந.) பறழ் மரமேறுதல் முதலிய வற்றைக் கற்கவில்லை யென்னும் குறையையும் ஓராமல் மந்தி உயிர் நீத்தமை அதன் தலைக்கற்பை உணர்த்துகின்றது; தம் குட்டிகளுக்காக உயிர்வைத்து வாழும் பெண் விலங்குகளும்உண்டு;

> "அறுமருப் பெழிற்கலை புலிப்பாற் பட்டெனச்
> சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை
> பூளை கீடிய வெருவரு பறந்தலை
> வேளை வெண்பூக் கறிக்கும்
> ஆளி லத்த மாகிய காடே" (புறநா. உக : 18-22.)

பாய்ந்த மாத்திரத்தில் உயிர் போதற்குரிய உயரத்தையுடைய தென்பாள் 'ஓங்குவரை யடுக்கம்' என்றாள். நடுநாள் -நள்ளிரவு; "வியலிரு ணடுநாள்" (அகநா. 218: 6.) தலைவனுக்கு ஏதம் வாரா மல் இருத்தலை விரும்புவாளாதலின் 'வாழியோ' என்றாள்.

வாழியோ: ஓகாரம் அசைநிலை. யாமே: ஏகாரம், அசைநிலை.

கலை இறந்ததாக மந்தியும் உயிர்செகுக்கும் நாட என்றது, பெண் விலங்கினங்களும் தம் துணைக்குத் துன்பம் நேர்ந்தகாலத்தில்

உயிர் தரியாமையை நின்னுட்டில் அறிந்தனையாதலின், நினக்கு ஏதம் வருமேல் இவள் உயிர் வாழ்தலின்மையையும் அறிதியென்று உணர்த்தியவாறு.

(மேற்.) 1. தாவென்னும் உரிச்சொல் வருத்தமென்னும் பொருளில் வந்தது (தொல். உரி. 48, இளம், சே, தெய்வச் ; இ. வி. 282); தாவுதலென்னும் பொருளில் வந்தது (தொல். உரி. 46, ந.); கலையென்னும் பெயர் குரங்கின் ஆணிற்கும் சிறுபான்மை வந்தது (தொல். மரபு. 46, பேர்.)

2. குரங்கின்பெண்பால் மந்தியென்று கூறப்பட்டது (தொல். மரபு. 67, பேர்.) 2-3. பறழென்னும் இளமைப்பெயர் குரங்கிற்கு வந்தது (தொல். மரபு. 7, பேர்.)

5-6. அசைநிலை யோகாரம் வந்தது (நன். 422, மயிலை.)

மு. காப்பு வரையிறந்தது (தொல். களவு. 24, இளம்.)

(ஒப்பு.) 1. பெரும்பிறிது : குறுந். 302 : 3; நற். 219 : 3; மணி. 23 : 28.

3. கல்லா வன்பறழ் : குறுந் 278 : 1, 335 : 4 ; "கருவிரன் மந்திக் கல்லா வன்பறழ்", "கருவிரன் மந்திக் கல்லா வன்பார்ப்பு" (ஐங். 272 : 1, 280 : 1.) கலி : 40 : 15 ; மலைபடு 312.

5. நடுநாள் : அகநா. 72 : 2, 162 : 6, 238 : 3, 292 : 9 ; புறநா. 189 : 3.

6. வாரல்வாழியோ : "வாரல் வாழியரைய" (அகநா. 92 : 5.) 5-6. "நடுநாள் வருதி நோகோ யானே" (நற். 257 : 10.) (கூ)

தலைவன் கூற்று

[தலைவியோடு இன்புற்று நீங்கும் தலைவன், "இவள் ஐம்புலனுக்கும் இன்பத்தைத் தருபவளாயினள் ; இவளைப் புகழுமாறறியேன்" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறி மகிழ்ந்தது.]

எ௦. ஒடுங்கீ ரோதி யொண்ணுதற் குறுமகள்
நறுந்தண் ணீர ளாரணங் கினளே
இனைய ளென்றவட் புனையள வறியேன்
சிலமெல் லியலே கிளவி
5. அணைமெல் லியள்யான் முயங்குங் காலே.

எ - து. புணர்ந்து நீங்குந் தலைமகன், தன்நெஞ்சிற்குச் சொல்லியது.

ஓரம்போகியார் (பி - ம். ஓரம் போதியார்.)

(பி - ம்.) 5. 'அணைமெல்லியல்', 'அணைமெல்லியள்யா முயங்குங்காலே'

(ப - ரை.) நெஞ்சே, ஒடுங்கு ஈர் ஓதி - ஒடுங்கிய நெய்ப்பை யுடைய கூந்தலையும், ஒள் நுதல் - ஒள்ளிய நுதலையும் உடைய, குறுமகள் - தலைவி, நறு தண் நீரள் - மணத்தையும் தண்மையையும் உடைய தன்மையினள் ; ஆயினும், அரு அணங்கினள் - பிரிந் தகாலத்துப் பொறுத்தற்கரிய வருத்தத்தைத் தருபவள் ; அவள் - அவளை, இனையள் என்று - இத்தகையினளென்று, புனை அளவு அறியேன் - புனைந்துரைக்கும் எல்லையை அறியேன் ; கிளவி சில மெல்லிய - அவளுடைய சொற்கள் சின்மையை யுடையன ; மென் மையை உடையன ; யான் முயங்குங்கால் - யான் அவளை அணை யும்பொழுது, அணை மெல்லியள் - பஞ்சணையைப்போன்ற மென் மையை உடையள்.

(முடிபு) குறுமகள் நறுந்தண்ணீரள் ; அணங்கினள் ; புனை யளவு அறியேன் ; கிளவி சில மெல்லிய ; அணையுங்கால் அணை மெல்லியள்.

(கருத்து) இவள் ஐம்புலனுக்கும் இன்பந்தருபவள்.

(வி - ரை.) ஒடுங்கீரோதி யென்றது, ஐவகைக் கூந்தற்பகுப்பில் ஒன்றாகிய சுருளை (பதிற். 14 : 15, உரை.) புனையப்புனைய மேலும் புனையத் தோன்றுவதன்றி இவ்வளவே என வரையறுத்து நிறுத்த லாகாமையின், புனையளவறியேனென்றான்.

ஓதி, ஒண்ணுதற் குறுமகளென்றமையின் காட்சியின்பமும், சில மெல்லியவே கிளவி யென்பதனாற் கேள்வியின்பமும், தண்ணீ ரள் அணை மெல்லியளென்றமையால் ஊற்றின்பமும், நறுநீர ளென்றமையின் உயிர்ப்பின்பமும், யான் முயங்குங்காலென்பத னாற் குறிப்பாகச் சுவை இன்பமும் ஒருங்கே பெறுதலை உணர்த்தி னான்.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) மு. புணர்ச்சியால் தலைவன் மகிழ்ந்தது (தொல். களவு. 11, இளம்.); இடந்தலைப்பாட்டின்கண் தலைவன் புணர்ச்சியின் மகிழ்ந்தது (தொல். களவு. 11, ந.)

(ஒப்பு.) தலைவியின் மேனி நறுமை : குறுந். 62 : 1-4, ஒப்பு. நறுந்தண்ணீரள் : குறுந். 84 : 4-5, 168 : 4 ; ஐங். 97 : 4. 4. சில கிளவி : குறுந். 14 : 2, ஒப்பு ; அகநா. 343 : 18 ; சிவக. 2027.

5. மெல்லியள் : குறுந். 137 : 1. அணைபோன்ற மென்மை : "அணைமென் றோள்" (கலி. 1 : 9, 30 : 9, 66 : 9, 91 : 6, 124 : 12) ; "அணைமரு ளின் றுயி லம்பணைத் தடமென்றோள்", "அணையென,...அமைந்தின் றடமென் றோள்", "அணைத்தோளாய்" (கலி. 14 : 1, 56 : 19-20, 87 : 9) ;

"அணிபுரை மென்மை யமைபடு பணைத்தோள்" (பெருங். 2. 15 : 72);
"செம்பஞ்சி யணையனைய வாடமைத்தோள்" (சீவக. 170.) (எ.)

மு. குறள், 1101.

தலைவன் கூற்று

[பொருளை ஈட்டுதற்பொருட்டுத் தலைவியைப் பிரிய எண்ணிய நெஞ்சை நோக்கி, "இத்தலைவி நம் காமநோய்க்கு மருந்தும், இன்பம் பெறுதற்குச் செல்வமும் ஆதலின் இவளைப் பிரிதல் இயலாது" என்று தலைவன் கூறியது.]

கூ. மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்
அரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப் [பே
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே.

எ - து. பொருள்கடைக் கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

[கடைக் கூட்டுதல் - துணிதல். செலவு அழுங்கியது-செல்லுதலைத் தவிர்ந்தது.]

கருவூர் ஓதஞானி.

(பி - ம்.) 4 'கானவனல்குறூஉமகளே', 'நல்குவாமகளே'

(ப - ரை) நெஞ்சே, அரும்பிய சுணங்கின் - தோற்றிய தேமலையுடைய, அம் பகடு இள முலை - அழகிய பெருமையையுடைய இளைய நகிலையும், பெரு தோள் - பெரிய தோளையும், நுணுகிய நுசுப்பின் - நுண்ணிதாகிய இடையையும் உடைய, கல்கெழு கானவர் - கற்கள் பொருந்திய காட்டையுடையவர், நல்குறு மகள் - பெற்ற மகள், மருந்து எனின் மருந்து - காமநோய்க்குப் பரிகாரம் வேண்டுமென்று கருதுங்கால் எனக்குப் பரிகாரமாவாள்; வைப்பு எனின் வைப்பு - போகம் நுகரச் செல்வம் வேண்டுமென்று கருதின் எனக்குச் செல்வமுமாவாள்.

(முடிபு) மகள், மருந்தெனின் மருந்து; வைப்பெனின் வைப்பு.

(கருத்து) இவளைப் பிரிந்து பெறும் செல்வம் வேறொன்று இல்லை.

(வி - ரை.) இவளைப் பிரியின் காமநோய்க்கு மருந்தில்லையென்பதும், அம்மருந்தும் யான் இன்பம் பெறும்பொருட்டுத் தேடிச் செல்ல எண்ணிய செல்வமும் இவளேயாதலின் செல்லுதல் தவிர்

வேனென்பதும் புலப்படுகின்றன, மருந்து - அமிழ்தமும் ஆம். வைப்பு - சேம நிதி. மருந்தே, வைப்பே : ஏகாரங்கள் அசைநிலை; தேற்றேகாரங்களுமாம்.

பகடு - பெருமை (புறநா. 68 : 5, உரை.) தோள்பெருத்தலும் இடை சிறுத்தலும் மகளிர்க்கு அழகு; "தோள்...எனப்பெருகி, நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகி" (கலி. 108 : 2-3.) கல் - மலையு மாம் கல்கெழு கானவர் நல்குறு மகளென்பது அனைத்தும் ஒரு பெயராய் நின்று முலைமுதலியவற்றோடு இயைந்தது. மகளே: ஏகாரம் அசைநிலை.

தலைவியின் உறுப்புநலங் கூறினுன், இத்துணை நலனுடை யாளைப் பிரிதல் அரிதென்று நினைந்து.

(மேற்.) 4. கல்லுக்கேழீ இனவென இரண்டனுருபு விரிந்தது (தொல். குற்றியலுகரப். 75, இளம், 76, ந.)

மு. தலைவன் தன் நெஞ்சிறகுச் சொல்லிச் செலவழுங்கியது (இறை. 51; தமிழ்நெறி. 24); இனிதுறு கிளவிபற்றி ஏனை உவமம் வந்தது (தொல். உவம. 28, பேர்.); நிகழ்காலமென்னும் உறுப்புவந்தது (தொல். செய்யுள். 202, பேர், ந; இ. வி. 575); பொருளென்னும் உறுப்பின்றிவந்தது (தொல். செய்யுள். 211, பேர், ந); எமக்கென்னும் சொல் பின்னும் முன்னும் எஞ்சிநின்றது (தொல். எச்ச. 45, சே, ந; இ. வி. 351); இயற்சீரான் வந்த ஆசிரியப்பா (யா. வி, 15)

(ஒப்பு.) 1. மருந்து : நற். 384 : 10-11. 2. சுணங்கையுடைய நகில் : சிறுபாண். 24-6; அகநா. 319 : 9; புறநா. 337 : 21-2, 352 : 13-4. அரும்பிய சுணங்கு : அகநா. 253 : 22. 3. பெருந்தோள் : "பெருந்தோட் குறுமகள்" (குறுந். 95 : 3); "பெருந்தோண் மடந்தை" (சிலப். 3 : 6.) நுணுகிய நுசுப்பு: "நுழைசிறு நுசுப்பு" (குறுந். 159 : 2.) பெருந்தோளும் நுணுகிய நுசுப்பும்: "பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற், றிருந்திழை யிரவை" (அகநா. 374 : 17-8); "பெருந்தோட் சிறுமருங்குற் பேரமர்க்கட் பேதை" (நன். 402, மயிலை. மேற்.) (எக)

தலைவன் கூற்று

[தலைவியோடு அளவளாவி வந்த தலைமகன்பாற் காணப்பட்ட வேறுபாடுகளை நோக்கி, "இவை நினக்கு எதனுல் வந்தன?" என வினவிய பாங்கனுக்கு, "மலைச்சாரலிலுள்ள தொரு தினைப்புனத் திற் குருவியோட்டுவாளொரு மகளது அழகு கண்டு மயங்கி யான் இக்காம நோயுற்றேன்" என்று கூறியது.]

எஉ. பூவொத் தலமருந் தகைய வேவொத்
தெல்லாரு மறிய நோய்செய் தனவே

தேமொழித் திரண்ட மென்றோண் மாமலைப்
பரீஇ வித்திய வேனற்
5. குரீஇ யோப்புவாள் பெருமழைக் கண்ணே.

எ - து. தலைமகன், தன் வேறுபாடு கண்டு வினைய பாங்கற்கு உரைத்தது.

மள்ளனார்.

(பி - ம்.) 1. 'தலம்வருந்'

(ப - ரை.) தேமொழி - இனிய மொழியினையும், திரண்ட மெல் தோள் - பருத்த மெல்லிய தோளினையும் உடைய, பரீஇ வித்திய ஏனல் - பருத்தியை இடையிலே விதைத்த தினைமுதிர்ந்த புனத் தின்கண், குரீஇ ஓப்புவாள் - அத்தினையை உண்ணவரும் குருவி யினங்களை ஓட்டுகின்றவளது, பெரு மழை கண் - பெரிய குளிர்ச் சியையுடைய கண்கள், பூ ஒத்து அலமரும் தகைய - பூவினை அழகில் ஒத்துச் சுழலுந் தன்மையை யுடையன; ஏ ஒத்து - ஆயினும் கொடிய தொழிலால் அம்பினை ஒத்து, எல்லாரும் அறியு-மின்னைப் போன்ற யாவரும் என்னுடைய வேறுபாட்டை அறியும் படி, நோய் செய்தன - எனக்குத் துன்பத்தை உண்டாக்கின.

(முடிபு) குரீஇ ஓப்புவாள்கண் நோய் செய்தன.

(கருத்து) நான் ஒரு மலைவாணர் மகள்பால் நட்புப்பூண்டு காம நோய் உற்றேன்.

(வி - ரை.) பூ - தாமரைப் பூ; குவளையுமாம். கண்கள் பூவைப் போலக் காண்டற்கு இனிமைதந்து தாம் வெருண்டன போலச் சுழலுமாயினும் என்பால் அம்புபோற் கொடியனவாகி அவ்வம் பாலுண்டாகி யாவரும் அறியும் புண்போன்ற காமநோயைத் தந்தனவென்று பொருளை விரித்துக் கொள்க. அலமருந்தகைய வென்றான், தான் வரும்திசையறியாது சுற்றெங்கும் நோக்கியதை முன்பு அறிந்தமையின்; 'வடிக்கண் பரப்பியென்றான், இன்ன திசையால் வருமென்றறியாது சுற்றெங்கும் நோக்குதலின்' (திருச் சிற். 34, பேர்.)எல்லாருமென்றானேனும் கருதியது பாங்கனையென்க; நீ அறிந்தமையின் இங்ஙனமே யாவரும் அறிவரெனலும் ஒன்று. நோய் - காமநோய். தேமொழித் திரண்ட மென்றோளென்ற அடைகளும் உடம்படுபுணர்த்தும் வாயிலாக அவையும் நோய்க்குக் காரணமாயின வென்பதைப் புலப்படுத்தின. முன்னர்க் குருவி யோப்புங் குரலினிமையை அறிந்தவனதலின் தேமொழி யென்றும், பின்னர்ப் பழகித் தோள் இயல்பறிந்தவனதலின் திரண்ட மென்

றேளென்றும் அம்முறையே வைத்துக் கூறினுன். தினை வளர்ந்த இடத்திற் பருத்தியை விதைத்து அத்தினை முதிர்ந்து கொய்யப் பட்ட பின்னர்ப் பருத்தி விளைய அதனைக் கொள்ளுதல் மலை வாணர் வழக்கம். பருத்திக்குரிய பெயராகிய பருவியென்பது பரீஇயென்றும், குருவியென்பது குரீஇயென்றும் வந்தன. இங் ஙனமே மருவி - மரீஇ, உருவி - உரீஇ என வினைச்சொற்களும் வருதல் காண்க.

'மாமலைப் பரீஇ வித்திய வேனற் குரீஇ யோப்புவாள் என்பது தலைவியென்னும் துணையாக நின்றது பெருமழைக் கண் ணென்றுன், கண் பெரிதாதல் மகளிர்க்கு இலக்கணமாதலின் கலி. 108 : 2-3, பார்க்க.

(மேற்.) மு. 'இக்குறுந் தொகையுள் குரீஇ யோப்புவாள் கண்ணென வழிநிலைக் காட்சியைப் பாங்கற்குக் கூறினமையின் அத் தினைக்கதிர் முற்று தற்குரிய இளவேனிலும் பகற்பொழுதும் காட்சிக்கண் வந்தன' (தொல். அகத். 16, ந.)

(ஒப்பு.) 4. தினைப்புனத்திற் பருத்தியை விதைத்தல்: "பருவி வித்திய பைந்தாட் புன்" (பெருங். 1. 50 : 16.) 4-5. பருத்தியை விதைத்த புனத் திற் குருவியை ஓட்டுதல்: "பருவி விச்சி மலைச்சாரற் பட்டை கொண்டு பகடாடிக், குருவி யோப்பிக் கிளிகடிவார்" (தே. சுந்தர. திருவையாறு.)

ஏனலிற் குருவி யோட்டுதல்: "உளைக்குரற் சிறுதினை கவர்தலிற் கிளை யமல், பெருவரை யடுக்கத்துக் குரீஇ யோப்பி" (அகநா. 388 : 4-5.)

2-5. கண் நோய் செய்தல்: "தேம்பாய வலிழ்நீலத் தலர்வென்ற வமருண்கண்...நிறம்பாய்ந்த, கணைபினு நோய்செய்தல் கடப்பன்றே கனங் குழாய்", "நீரலர் நீல மெனவவர்க் கஞ்ஞான்று, பேரஞர் செய்தவென் கண்" (கலி. 57: 9-15, 143: 50-51); "நிறைமதி வாண்முகத்து நோக்கயற் கண் செய்த, உறைமலி யுப்பா நோய்" (சிலப். 7: 8); "கருநெடுங் கண் டருங் காம நோயே" (பழம்பாடல்); "சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல், கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல், தோற்றந் தொழில்வடிவு தம்மூட் டடுமாற்றம், வேற்றுமை யின்றியே யொத்தன மாவேடர், ஆற்றுக்கா லாட்டியர் கண்" (யா. வி. 62, மேற்) 1-5. கண்ணிற் குப் பூ : குறுந். 101 : 4; ஐங், 16 : 4; கலி. 28 : 18, 33 : 9, 39 : 51, 75 : 31. 142 : 11. கண் அமருதல்: "அலமர லுண்கண்ணுர்", "அலமர லமருண்க ணங்கல்லாய்" (கலி. 73: 12, 113: 2.) (எஉ)

தோழி கூற்று

[தலைவன் பகலில் வருவதை மறுத்துரைத்து இரவில் வரச் செய்து பின்னர் அதனையும் மறுத்த தோழி, வரைந்து கொள்ளும் பொருட்டு அங்ஙனம் செய்வதன் இன்றியமையாமையைத் தலைவிக் குக் கூறியது.]

எங. மகிழ்நன் மார்பே வெய்யை யாஅனீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்டிற் போகிய
ஒன்றுமொழிக் கோசர் போல
5 வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே.

எ - து. பகற்குறி மறுத்து, இரவுக்குறி நேர்ந்து, அதுவும் (பி - ம். 'இரவுக்குறி நோக்கு துமவும்') மறுத்தமைபடத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

பரணர்.

(பி - ம்) 'வேயையவர்நீ', 'வெய்யையேநீ' 3 'ஞாட்பிற்', 'போக்கிய' 5 'வேண்டுமால்'

(ப - ரை) தோழி—, மகிழ்நன் மார்பே - தலைவனது மார்பையே, நீ வெய்யை - நீ விருப்புதலுடையை; நன்னன் நறுமா கொன்று - நன்னனது காவன்மரமாகிய நறிய மாமரத்தை வெட்டி, நாட்டில் போகிய - அவனது நாட்டினுட்புக்க, ஒன்று மொழி கோசர் போல - வஞ்சினதையுடைய கோசரைப் போல, சிறிது - சிறிதளவு, வன்கண் சூழ்ச்சியும் - வன்கண்மையை யுடைய ஆராய்ச்சியும், வேண்டும்—; அழியல் - அதன்பொருட்டு வருந்தற்க.

(முடிபு) தோழி, நீ மகிழ்நன்மார்பே வெய்யை; சிறிது சூழ்ச்சியும் வேண்டும; அழியல்.

(கருத்து) பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்தால் தலைவன் விரைவில் மணந்து கொளவான.

(வி - ரை.) மார்பே: ஏகாரம் பிரிநிலை. "வெம்மை வேண்டல்' (தொல். உரி. 36) என்பது சூத்திரமாகலின் வெய்யையென்பது விரும்பினையென்னும் பொருள் தந்தது நன்னன்: கொங்கு நாட்டுக கருகில், மலைநாட்டிலிருந்தவன் போலும். மா: அவனது காவன்மரம். நறுமை மாம்பழத்திற்கு அடை பகையரசர்களது காவன்மரத்தை வெட்டுதல் மரபு; புறநானூறு, 23: 8-9-ஆம் அடிகளையும அவற்றின் அடிகுறிப்பையும் பார்க்க. ஒன்று மொழி - வஞ்சினம் (மதுரைக். 143, ந); என்றது, இன்னது செய்யேனுயின் இன்னனுவேனென்று சபதஞ் செய்தல்; தொல் புறத. 24, பார்க்க. ஒன்றுமொழி - இரண்டுரையாமல் ஒன்றையே மொழிதல்; இது பற்றியே வஞ்சினத்திற்கு இப்பெயர் வந்ததென்று தோற்றுகின்றது; "இரண்டா காதவன் கூறிய தெனவே" (புறநா. 304:

11) என்பதைப் பார்க்க. ஒன்று மொழி - ஒன்றையே கூறும் வாய்மை யெனினும் ஆம்; கோசரது வாய்மை இந்நூல் 15-ஆம் பாட்டாலும் தெளியப்படும். கோசர் - ஒருவகை வீரர். அவர் செய்த சூழ்ச்சி இன்னதென்று தெரியவில்லை. வன்கண் - அருளில்லாக் கொடுமை. சூழ்ச்சி - யோசித்துச் செய்யும் தந்திரம். வன்கட் சூழ்ச்சி யென்றது இரவுக்குறி நேர்ந்து அதனையும் மறுத்தலைப் புலப்படுத்தியபடி. சூழ்ச்சி பெரிதாயின் தலைவன் மனமுடைவானுதலின் சிறிதே வேண்டுமென்றாள்.

ஆல், வாழி, ஏ : அசைநிலைகள்.

"தலைவன் ஒழுகுமாறெல்லாம் நாமும் உடம்பட்டு ஒழுகினேமாயின் களவொழுக்கம் குறைவின்றி நடைபெறுமென்னும் துணிவினால் அவன் இதனையே கடைப்பிடித்து வரைதற்குரிய முயற்சியை மேற் கொள்ளான் பகற்குறியை மறுத்தால், இரவுக்குறி வேண்டுவான்; அதற்கு நேர்ந்து பின்பு அதனையும் மறுப்போமாயின் அதனால் இடையூறுற்று அவன் இனி இத்தகைய தடைகள் நேராமைக்கு உபாயம் வரைந்து கொள்ளுதலேயென்று அறிந்து அதற்கு ஆவனசெய்வான். இரவுக்குறி மறுத்தலால் நம்மிடத்தில் தறுகண்மை உளதுபோலத் தோற்றினும் அதனால் விளையும் இன்பம் பெரிதாதலால் இச் சூழ்ச்சி இப்பொழுது ஒரளவு வேண்டுவதாயிற்று" என்று தோழி கூறினாள்.

(மேற்.) 1. மு. தோழி வன்புறை (தொல். களவு. 24, இளம், 23, ந.); தலைவியைப் பாங்கி கழறியது (நம்பி. 154.)

(ஒப்பு) 1. வெய்யை : கலி. 75 : 10. தலைவி தலைவனது மார்பை விரும்புதல்: (குறுந். 68: 4, ஒப்பு.); "ஆர்கலி வெற்பன் மாபுநயந் துறையும், யானே" (நற். 104: 7 - 8); "நின்மார்பு நயந்த நன்னுதலிவை", "நின், மல்ர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே", "மலர்ந்த மார்பிற் பாயற், றுஞ்சிய வெய்யள" (ஐங். 46: 2, 51: 3-4, 205: 4-5.)

4. கோசர்: குறுந். 15 : 3, ஒப்பு. ஒன்றுமொழிக் கோசர்: அகநா. 196 : 10, 205 : 8-9, 262 : 5-12. 2-4. நன்னன், கோசர்: அகநா. 15 : 2-10.

மு. ஒருவாறு ஒப்பு: அகநா. 28. (எங)

தோழி கூற்று

[தலைவன் தோழிபால் குறியிடத்தெதிர்ப்படுதலை விரும்பினமை, தலைவியிடம், "நம்மால் விரும்பப்படும் தலைவன் நம்மை விரும்பி மெலிகின்றான்" என்று அவள் கூறியது]

எ. விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் ரூனும்
வேனி லானேறு போலச்
5. சாயின னென்பநம் மாணல நயந்தே.

எ - து. தோழி தலைமகன் குறை மருதவாற்றூற் கூறியது.

[குறை - குறியிடத்தெதிர்ப்படுதலை வேண்டல். கூறியது தலைவிக்குக் கூறியது.]

விட்டகுதிரையார்.

(பி - ம்.) 'விசையினன்ன', 'வியப்பினன்ன'

(ப - ரை) விட்ட குதிரை விசைப்பின் அன்ன - அவிழ்த்து விடப்பட்ட குதிரை துள்ளியெழும் எழுச்சியைப் போன்ற, விசம்பு தோய் பசு கழை - வளைத்துப் பின் விட்டமையால் வானத்தைத் தோய்ந்த பசிய மூங்கிலையுடைய, குன்றம் நாடன் - குன்றத்தையுடைய நாட்டுக்குத் தலைவன், யாம் தன் படர்ந்தமை அறியான் - யாம் தன்னை நினைந்து மெலிதலை அறியானாகி, தானும்—, வேனில் ஆன் ஏறு போல - வேனிலின் வெம்மையை ஆற்றுத இடபத்தைப்போல, நம் மாண் நலம் நயந்து - நமது மாட்சிமைப்பட்ட நலத்தை விரும்பி, சாயினன் - மெலிந்தான்.

(முடிபு) நாடன் யாம் தற்படர்ந்தமையை அறியானாகி நம் நலம் நயந்து சாயினன்.

(கருத்து) தலைவன் கருத்துக்கு உடம்பட வேண்டும்.

(வி - ரை.) விட்டவென்ற உவமையடையைப் பொருளுக்கும் கூட்டி வளைத்துவிட்ட கழையென்று கொள்க. யானை மூங்கிலை உண்ணும்பொருட்டு வளைத்தலும் எதற்கேனும் அஞ்சி விடுதலும் குறிஞ்சி நிலத்து நிகழ்ச்சி; இந்நூல், 54-ஆம் செய்யுளைப் பார்க்க. விட்ட-செலுத்தியவென்னுமாம். விசைத்தல்-துள்ளுதல் (புறநா. 120 : 14, உரை.) இங்கே உள்ள உவமையையும் பொருளையும் மாறிக் கூறினாரும் உளர்; "வெடிவேய் கொள்வது போல வோடித், தாவு புகளு மாவே" (புறநா. 302 : 1-2.) யாமென்றதும் நம்மென்றதும் தலைவிக்கும் தனக்குமுள்ள ஒற்றுமைபற்றி.

வேனிலின் வெம்மையால் துன்புற்ற ஆனேறு, காமநோயால் துன்புற்ற தலைவனுக்கு உவமை. சாயினன் - மெலிந்தனன்; சாய்தல் - மெலிதல் (தொல். உரி. 32) மாணலமென்றது பட்டாங்கு

கூறியது. தானும்: உம்மை, இறந்தது தழீஇயது. என்ப, ஏ: அசை நிலைகள்.

தலைவன் தலைவியை மருவுதற்குரிய செல்வியை விரும்பினனாக, "நாமும் அவனை விரும்பி நிற்கின்றோம். அவனும் இரந்து நிற்கின்றான். நாம் விரும்புவது, தானே வலிய வந்ததாதலின் மறுது உடம்படல் வேண்டும்" என்று தோழி தலைவிக்குக் கூறினாள்.

வளைக்குங்கால் வளைந்ததேனும் இயல்பில் விசும்புதோயும் உயர்வையுடைய மூங்கிலைப்போல, தலைவன் நம் மாணலம் நயந்து நம்மிடைப் பணிந்து ஒழுகினானெனினும், இயல்பாகத் தலைமையை உடையனென்பது குறிப்பு.

மூங்கில் விசைத்தெழுதலுக்கு விட்ட குதிரையின் விசைப்பை உவமை கூறிய சிறப்பினால் இச்செய்யுளை இயற்றிய நல்லிசைப் புலவர் விட்டகுதிரையார் என்னும் பெயர் பெற்றனர்.

(மேற்.) மு. தலைவி பாங்கியை முனிந்தது (நம்பி. 148.)

(ஒப்பு.) 4. தலைவனுக்கு ஆனேறு உவமை: "ஆகாண் விடையி னணி பெற வந்து", "தணைபுண ரேற்றி னெம்மொடு வந்து" (குறிஞ்சிப். 136, 235); 'ஏறு நாகுடனே தம்மிற் கூடி நின்றன; அவைபோல நாமுங் கூடிச் சேரப்போதற்குக் கூட்டத்திற்கு உடம்படுவாயாக வென்றான்' (கலி. 113: 28-9, உ,); பரி. 20: 62; சீவக. 751, 1523.

5. குறைவேண்டிய தலைவன் மெலிதல்: குறுந். 298: 3-4. மாணலம்: குறுந். 258: 8, 299: 7, 377: 1; தொல். கற்பு. 9. 4-5. வெளிலால் விலங்குகள் வாடுதல்: கலி. 7: 1; அகநா. 29: 15-9. (எச)

தலைவி கூற்று

[தலைவனது வரவைப் பாணனால் அறிந்த தலைவி, "நீ பாடலி புத்திர நகரைப் பெறுவாயாக" என்று வாழ்த்தியது]

நீகண் டனையோ கண்டார்க்கேட் டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ
வெண்கோட் டியானை சேனை படியும்
பொன்மலி பாடலி பெறீஇ யிர்
5. யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே.

எ - து. தலைமகன் வரவுணர்த்திய பாணற்குத் தலைமகள் கூறியது.

படுமரத்து மோசிகீரனார். (பி - ம். படிமத்து மோசிகீரனார்.)

(பி - ம்.) 3 'சோணை', 'பூஞ்சுணை' 4 'பொன்வலி', 'பாடிலி' 'பாடினி'

(ப - ரை) பாண, காதலர் வரவு - தலைவரது வரவை, நீ கண்டனையோ - நீயே நின்கண்ணாற் கண்டாயோ? கண்டார் கேட்டனையோ - அன்றித் தலைவனைக் கண்டாரைக் கேட்டறிந்தாயோ? யார்வாய் கேட்டனை - அங்ஙனம் பிறர்பால் கேட்டனையாயின், யார் வாயிலாகக் கேட்டாய்? ஒன்று தெளிய நசையினம்-உண்மையாகிய ஒன்றை அறிய விரும்பினேம்; ஆகலின, மொழிமோ - சொல்வாயாக; சொன்னுல், வெண் கோடு யாணை - வெள்ளிய கொம்பையுடைய யானைகள், சோணை படியும் - சோணையாற்றில் துளைந்து விளையாடும், பொன்மலி பாடலி - பொன் மிக்க பாடலி புத்திர நகரத்தை. பெறீஇயர் - பெறுவாயாக.

(முடிபு) காதலர் வரவை நீ கண்டனையோ? கேட்டனையோ? யார்வாய்க் கேட்டனை? நசையினம்; மொழிமோ; பாடலி பெறீஇயர்!

(கருத்து) தலைவர் வரவை உரைத்த நினக்குச் செல்வம் பெருகுவதாகுக.

(வி - ரை) தலைவனுடைய வரவைப் பலகால் எதிர்பார்த்தும் வாராமையாற் சலிப்புற்றனளாதலின் பாணன் மொழியை ஐயுற்று, நீ கணடனையோ வென்றும் கேட்டனையோ வென்றும் யார் வாய்க் கேட்டனை யென்றும் வினவினுள். இங்ஙனம் அடுத்துப் பல முறை கேட்டது தலைவன் வரவினிடத்து அவளுக்குள்ள ஆதரவைப் புலப்படுத்தியது.

தான் ஆற்றியிருத்தற் பொருட்டுப் பலகாலும், வருவர் வருவரெனத் தோழி முதலியோர் கூறியதைக் கேட்டுக்கேட்டு அவர்கள் மொழிகளில் உறுதிபெறுதவளாதலின் அவர் கூறினரோவென்னும ஐயுறவினுல் 'யார்வாய்க் கேட்டனை?' என்றுள். ஓகாரங்கள் வினு

தலைவன் பாசறையிலிருக்கும் காலத்தில் பாணனைத் தலைவி தூது விடுதலும் (ஐங். 478-9), அங்ஙனமே தலைவன் அவனைத் தூது விடுதலும் (ஐங். 477) மரபு அங்ஙனம் தூது சென்ற பாணன் தலைவன் வரவை உணர்த்தினுனெனத் தலைவி மகிழ்ந்து அவனை வாழ்த்தியது இது.

மொழிமோ : மோ முன்னிலையசை.

சோணை - ஒரு நதி (சிலப் 5 : 99-100, அடியார்.) இதன் வட கரையிலுள்ளது பாடலிபுத்திரமென்னும் நகரம்; பழைய காலத்தில் மகதநாட்டின் தலைநகரமாக இருந்தது. இது பாடலியென வழங்குதலும் பொன்னாற் சிறப்புடையதென்பதும்,

" பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியம் கொல்லோ " (அகநா. 265 : 4-6),
" பாடலிப் பிறந்த பசும்பொன் விளைஞரும் " (பெருங். 1. 58: 42),

என்பவற்றால் அறியப்படும்.

'பாடலிபெறீஇயர்' என்று கூறினாளேனும் அவள் கருதியது செல்வம்பெற்று வாழ்வாயாக என்பதாகக் கொள்க.

வரவே : ஏகாரம் அசைநிலை.

(மேற்.) 3. செய்யுளில் இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர் வந்தது (தொல். கிளவி. 18, இளம், கல்.)

மு. தலைவன் வருகின்றானென்ற உழையர்க்குத் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, இளம்.); தலைவன் வரவைத் தலைவி விரும்பிக் கூறியது (தொல். கற்பு. 6, ந)

(ஒப்பு.) 4. பெறீஇயர் : குறுந். 83 : 2, 277 : 5 ; நற். 111. 3 - 4. தலைவன் வரவைக் கூறியவரைத் தலைவி வாழ்த்தல் : குறுந். 201. (எடு)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவைத் தலைவியிடம் உணர்த்தச் சென்ற தோழியை நோக்கி, "நான் அச்சிரக் காலத்தில் துன்புறும்படி தலைவர் பிரிவாரென்று முன்பே அறிந்தேன்; நீ சொல்வது பிழை" என்று கூறித் தலைவி புலந்தது.]

எசு. காந்தள் வேலி யோங்குமலை நன்னாட்டுச்
செல்ப வென்பவோ கல்வரை மார்பர்
சிலம்பிற் சேம்பி னிலங்கல் வள்ளிலை
பெருங்களிற் றுச் செவியின் மானத் தைஇத்
5 தண்வரல் வாடை தூக்கும்
கடும்பனி யச்சிர நடுங்கஞ் ருறவே.

எ - து. பிரிவுணர்த்தச் சென்ற தோழிக்கு அவர் பிரிவு முன்னர் உணர்ந்த தலைமகள் சொல்லியது.

கிள்ளிமங்கலங்கிழார்.

(பி - ம்.) 2 'செல்வ னென்ப வோங்கல்வரை மார்பன், செல்வ வென் பவே', 'என்பநங்கல்வரை, என்பவோங்கல் வெற்பர்' 4 'தைஇய' 5 'தூங்கும்' 6 'யற்சிரம்'

(ப - ரை.) தோழி, சிலம்பில் சேம்பின் அலங்கல் வள் இலை - மலைப்பக்கத்திலுள்ள சேம்பினது அசைதலையுடைய வளவிய இலையை, பெரு களிறு செவியின் மான - பெரிய களிற்றினது செவியை ஒப்பத் தோன்றும்படி. தைஇ - தடவி, தண்வரல் வாடை - தண்ணிய வரவையுடைய வாடைக்காற்று, தூக்கும் - அசைத்தற்குரிய, கடு பனி அச்சிரம் - மிக்க பனியையுடைய அச்சிரக்காலத்தில், நடுங்கு அஞர் உற - நடுங்குதற்குக் காரண மாகிய துன்பத்தை நான் அடையும்படி, கல் வரை மார்பர் - கற்களையுடைய மலையைப் போன்ற மார்பையுடைய தலைவர், காந்தள் வேலி ஓங்கு மலை நல்நாட்டு - காந்தளை வேலியாகவுடைய உயர்ந்த மலை பொருந்திய நல்ல நாட்டிடத்து, செல்ப என்ப - என்னைப் பிரிந்து போவாரென்று கூறுகின்றனர்.

(முடிபு) அச்சிரக் காலத்தில் அஞருறக் கல்வரை மார்பர் செல்ப வென்ப.

(கருத்து) தலைவர் பிரிவை முன்னரே உணர்ந்தேன்; அவர் பிரியின் நான் துன்புறுவேன்.

(வி - ரை.) இயல்பாக வளர்ந்த காந்தளை வேலியாக உடைய மலைநாடு. என்ப வென்றமையால் தான் முன்னரே அறிந்தமையை விளக்கினாள். சிலம்பிற் சேம்பு: மலைச்சேம்பென்று ஒருவகைச் சேம்பு உண்டு. தூக்கும் - அசைக்கும் (கலி. 84: 1, உரை.) கடும்பனி - புதுப்பனியுமாம். அச்சிரம் - முன்பனி.

'தலைவர் செல்வதைத் தடுப்பது நின் கடமையாக இருப்ப, அதைச் செய்யாமல் அயலாரைப்போல அவர் பிரிவை உணர்த்த வந்தது தகுதியன்று' என்பது தலைவியின் கருத்து; 'அழுங்கு வித்து வந்து கூறற்பாலையாய நீயும் இவ்வளைகள் செய்தனவே செய்தாயெனப் புலந்து கூறியவாறு' (குறள், 1157, பரிமேல்.) என்பது இக்கருத்தை வலியுறுத்தும். என்பவோ: ஓகாரம் இரக்கக குறிப்பு; அசைநிலையுமாம். செவியின்மான: உவம வுருபு ஐந்தனுருபோடு வந்தது (குறுந். 9: 6.) உறவே: ஏ அசைநிலை.

(ஒப்பு.) 1. காந்தள்வேலி மலைநாடு: குறுந். 245: 3-4; "கைம்மலர்க் காந்தள் வேலிக் கணமலை" (சீவக. 208.)

3. சிலம்பிற் சேம்பு : அகநா. 178 : 4. 3-4. பெரிய இலைக்குக் களிற்றுச் செவியை உவமை கூறுதல் மரபு : குறுந். 246 : 2 ; நற். 310 : 2

5. தண்வரல் வாடை : குறுந். 35 : 5, ஒப்பு.

6. கடும்பனி யச்சிரம் : குறுந். 68 : 3, ஒப்பு, 82 : 6 ; நற். 86 : 4 ; சிலப். 14 : 102-5. 5-6. வாடையும் பனியும் : "தண்பனி வடந்தை யச்சிரம்" (ஐங். 223 : 4); "பனிகடி கொண்ட பண்பில் வாடை", "வடந்தை தூக்கும் வருபனி யச்சிரம்" (அகநா. 235 : 15, 378 : 13.) 2-6. தலைவன் பிரிவினால் அச்சிரக் காலத்தில் தலைவி துன்புறல் : குறுந். 68 : 3, ஒப்பு. (எசு)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவை ஆற்றுளாகிய தலைவி தோழியை நோக்கி, "வழிப்போவார் இறத்தற்குக் காரணமாகிய வெம்மையையுடைய பாலைநிலத்தின் ஏதத்தை நினைந்து என்தோள்கள் தலைவர் திறத்து மெலிந்தன" என்று கூறியது.]

எ. அம்ம வாழி தோழி யாவதும்
தவறெனிற் றவறே விலவே வெஞ்சுரத்
துலந்த வம்பல ருவலிடு பதுக்கை
நெடுநல் யானைக் கிடுநிழ லாகும்
5. அரிய கானஞ் சென்றோர்க்
கெளிய வாகிய தடமென் றோளே.

எ - து. பிரிவின்கண் ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

மதுரை மருதன் இளநாகனார்.

(பி - ம்.) 4 'கிடுநீராகும்'

(ப - ரை.) தோழி—, அம்ம - ஒன்று சொல்வேன்; கேட்பாயாக: வெ சுரத்து - வெவ்விய அருவழியில், உலந்த வம்பலர் - இறந்த வழிப்போக்கர்களுடைய உடலைமறைத்த, உவல் இடு பதுக்கை - தழையைச் செயற்கையாக இட்ட குவியலானது, நெடு நல் யானைக்கு - உயர்ந்த நல்ல யானைக்கு, இடு நிழல் ஆகும் - இட்ட நிழலைத் தருதற்குரிய பொருளாகப் பயன்படும், அரிய கானம் - கடத்தற்கரிய பாலைநிலத்தில், சென்றோர்க்கு - என்னைப் பிரிந்து சென்ற தலைவர்திறத்து, எளிய ஆகிய - மெலிந்தனவாகிய, தடமெல் தோள் - பரந்த மெல்லிய என்தோள்கள், தவறு எனின் - தவறுடையனவென்று கூறின், யாவதும் - சிறிதும், தவறு இல - தவறு இல்லாதன.

(முடிபு) தோழி, கானம் சென்றோர்க்கு எளியவாகிய தோள்கள் தவறு இல.

(கருத்து) தலைவர் சென்ற பாலையினது ஏதத்தைக் கருதி என் தோள்கள் மெலிந்தன.

(வி - ரை.) வாழி : அசைநிலை, தவறே : ஓகாரம் அசைநிலை. பாலைநிலத்திற் செல்வாரை அந் நிலத்துள்ள ஆறலைகள்வர் கொன்று அவருடலைத் தழைக்குழியலால் மூடிவிடுதல் வழக்கம்; கற்குவியலால் மூடுதலும் உண்டு (புறநா 3: 20-21, உரை) வம்பலர் - வழிப்போவார் (குறுந். 331 : 2; புறநா. 230 : 2, உரை) உவல் - தழை; 'உவல் இட்ட - தழையாலே வேயப்பட்ட' (புறநா, 262 : 2. உரை); உவல் உவலையெனவும் வழங்குப் (மூல்லை. 29; பு. வெ. 169.) பதுக்கை - குவியல்; பதுங்கியிருத்தற்கு உரியதாகலின் இப்பெயர் பெற்றதுபோலும்; இது பதுக்கெனவும் வழங்கும்; "உயர்பதுக் கிவர்ந்த ததர்கொடி யதிரல்" (அகநா 289 : 2.) பதுக்கை நெடுநல் யானைக்கு இடுநிழலாகு மென்றது அதன் உயரத்தையும் வேறு நிழலின்மையையும் புலப்படுத்தியவாறு. அரிய கானம் - இயல்பாக உள்ள வெம்மையினாலும் ஆறலைகள்வரால் உண்டாகும் ஏதத்தினாலும் செல்லுதற்கரிய பாலை நிலம்.

ஏகாரங்கள் அசைநிலைகள்.

'நான் ஆற்றியிருப்பவும் அவர் மணந்த தோள் அத்தொடர்பினால் அவர் சென்ற வழியிலுள்ள ஏதத்தை நினைந்து மெலிந்தன: தம்மோடு தொடர்புடையாரது (அகநா 32 : 18) துன்பத்துக்கு மெலிதல் தவறன்றே!' என்று தலைவி கூறினளாயிற்று.

> "வண்ணம் பசந்து புலம்புறு காலை
> உணர்ந்த போல வுறுப்பினைக் கிழவி
> புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே"
>
> (தொல். பொருளியல், 8)

என்னும் விதிபற்றித் தோழி உணர்வுடையதுபோலக் கூறினள்; தலைவியின் துயர்மிகுதியையே அத்தோள்கள் புலப்படுத்தினவாதலின் பாலைநிலத்தின் ஏதம் நினைந்து அவள் வருந்தினளென்பதைத் தோழி இதனால் அறிவாள். இங்ஙனம் தலைவி தன்னையும் தோளையும் வேறுபடுத்திக் கூறும் வழக்கு உண்மையை,

"தான்குறி வாராத் தப்பற்குக், தாம்பசந் தனவென் றடமென்றோளே" (குறுந். 121 : 5-6), "துறைகே ழூரன் கொடுமை நாணி, நல்லனென்றும் யாமே, அல்ல னென்னுமென் றடமென் றோளே" (ஐங். 11 : 2 - 4),

"வாளே ரெல்வளை நெகிழ்ந்த, தோளே தோழி தவறுடை யவ்வே" (அகநா. 267 : 16-7) என்று வந்துள்ளவற்றிலும் உணரலாகும்.

(மேற்.) 1. அம்மவென்னுஞ் இடைச்சொல் கேடபித்தற்பொருளில் வந்தது (தொல். இடை. 28, இளம், சே, 27, தெய்வச், 28, ந ; நன். 437, மயிலை ; இ. வி. 274.)

(ஒப்பு.) 1. அம்மவாழி தோழி : குறுந். 104 : 1, 134 : 1, 146 : 1, 230 : 1, 287 : 1, 296 : 1, 350 : 1, 361 : 1. 375 : 1 ; ஐங். 111 - 120.

3. உவலிடு பதுக்கை : குறுந். 297 : 4 ; கலி. 1 - 3 ; அகநா. 67 : 14. உலந்த வம்பலர் உவலிடு பதுக்கை : (குறுந். 372: 5; 'கொலைத் தொழிலையுடைய வேடர் வில்லாலே கொல்லப்பட்டவருடைய உடலம் மறைய இட்ட இலைக் குவை' (கலி 12 : 1-2, ந). 120 : 1-3 ; 38; "வெண்ணுனை யம்பின் விசையிட வீழ்ந்தோ, ணண்ணுவ பறியா வுவலிடு பதுக்கைச், சுரம்" (அகநா. 109 : 7-9.) நற் 352 : 1-9 ; தஞ்சை. 363.

வம்பலர் உடல்களை மூடிய பதுக்கை : அகநா. 175 : 4-5, 215 : 10-11, 231 : 5-6, 289 : 1-2 ; புறநா. 3 : 18-20 ; ஐந். எழு. 30.

2-3. சுரத்துப்பதுக்கை : அகநா. 35 : 6-7, 91 : 10, 151 : 11. சுரத்து வம்பலர் : "சுரஞ்செல் வம்பலர்" (பெருங். 1. 55 : 50.) வெஞ்சுரத்து வம்பலர் இறத்தல் : நற் 164 : 6-8, 298 : 1-2, 352 : 1-3 ; கலி. 4 : 1-5 ; அகநா. 113 : 18, 161 : 2-4, 175 : 1-6, 313 : 12-3.

3-4. பதுக்கை நிழல் தருதல் : "பதுக்கை நீழ லொதுக்கிடம்" (சுற். 352 : 8.) பதுக்கையும் யானையும் : "செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணடவர், வில்லிட வீழ்நதோர் பதுக்கைக் கோங்கின், எல்லி மலாந்த பைங்கொடி யதிரல், பெருமபுலர் வைகறை யரும்பொடு வாங்கிக், கான யானை கவளங் கொள்ளும்" (அகநா. 157 : 4-8.)

5. அரிய கானம் : குறுந். 154 : 7, 329 : 4 ; பட். 300.

6. தடமென்றோள் : குறுந். 121 : 6 ; நெடுநல். 149 ; பட். 301 ; ஐங். 11 : 4, 143 : 3, 455 : 5 ; கலி. 2 : 22, 14 : 1, 26 : 10, 40 : 8, 49 : 25, 56 : 20, 93 : 5, 112 : 24, 113 : 1, 131 : 13 ; அகநா. 21 : 4, 110 : 10, 181 : 24. (எ)

பாங்கன் கூற்று

[தலைவனது வேறுபாட்டுக்குக் காரணம் அவன் ஒருத்திபாற் கொண்ட காமமே யென்பதனை உணர்ந்து, "காமம் தகுதியில்லாரிடத்தும் செல்வதாதலின் அது மேற்கொள்ளத் தக்கதன்று" என்று பாங்கன் இடித்துரைத்தது]

எஅ. பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பிச்

சிலம்பி னிழிதரு மிலங்குமலை வெற்ப
நோதக் கன்றே காமம் யாவதும்
நன்றென வுணரார் மாட்டும்
சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே.

எ - து. பாங்கன் தலைமகற்குச் சொல்லியது.

நக்கீரனார் (பி - ம் நக்கீரர்.)

(பி - ம்.) 6 'பெரும் பேதைத்தே'

(ப - ரை.) பெரு வரை மிசையது - பெரிய மலையின் உச்சியி லுள்ளதாகிய, நெடு வெள் அருவி - நெடிய வெள்ளிய அருவி யானது, முது வாய் கோடியர் - அறிவு வாய்த்தலையுடைய கூத்தரது, முழவின் ததும்பி - முழவைப்போல ஒலித்து, சிலம்பின் இழிதரும் - பக்கமலையின்கண் வீழும், இலங்கு மலைவெற்ப - விளங்குகின்ற மலையையுடைய தலைவ, காமம் - காமமானது, யாவதும் - சிறிதும், நன்றென உணரார் மாட்டும் - இது நன்மை யென உணரும் அறிவில்லாதாரிடத்தும், சென்று நிற்கும் - சென்று தங்குகின்ற, பெரு பேதைமைத்து - பெரிய அறிவின்மையை யுடையது ; ஆதலின் அது, நோதக்கன்று - வெறுக்கத்தக்கது.

(முடிபு) வெற்ப, காமம் பெரும்பேதைமைத்து ; நோதக்கன்று.

(கருத்து) நீ ஒருத்திபாற் கொண்ட காமத்தை ஒழிவாயாக.

(வி - ரை.) பெருவரை - அளக்கலாகா அளவும் பெருமையும் வறப்பினும் வளந்தரும் வண்மையு முடைய மலை. மிக உயர்ந்த மலையாதலின் அருவியும் நெடியதாயிற்று. முதுவாய்க் கோடியர் - அறிவு வாய்த்தலையுடைய கூத்தர் (பட். 253, ந); அறிவுமுதிர்ந்த வாய்மையையுடைய கூத்தரெனலும் (முருகு. 284, ந ; புறநா. 48 : 7) ஆம்.

ததும்புதல் - ஒலித்தல் (கலி. 70 : 10, ந.); பெரும் 1.46 : 246; தே. 2554. வெற்பனென்பது குறிஞ்சிநிலத்தலைவனென்னும் பொருளைத் தந்து இடுகுறிமாத்திரையாய் நின்றது (திருச்சிற். 128, பேர்.) காமம் - தலைவியின்பாலுள்ள பெருவிருப்பம். உணரா ரென்றது, காமநுகர்ச்சிக்குப் பொருளாகியவரை ; இங்கே தலைவியைச் சுட்டியது.

" சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு " (குறள், 422.)

ஆதலின் நன்மையறியாதார் மாட்டுச் செல்லும் காமத்தை அறிவற்ற தென்றான்.

காமத்துக்குக் கண்ணில்லை யென்பது ஒரு பழமொழி.

யான் ஒரு மலைவாணர் மகள்பால் விருப்புற்றேனென்ற தலைவனை நோக்கி, "நீ கொண்ட காமம், இது நன்று, இது தீதென அறியாத ஒருத்திபாற் சென்றதாதலின் அது வெறுக்கத்தக்கது" என்று பாங்கன் கூறினன். தலைவனை, "நீ பேதை" என்று கூறும் நினைவினனாகி அங்ஙனம் கூறுதல் தன் பணிவுக்கு மாறுபாடாதலின் 'நின்காமம் பேதைமையுடையது' என்று குறிப்பாற் பெறவைத்தான்.

ஏகாரங்கள்: அசைநிலைகள். மாட்டும்: உம்மை இழிவு சிறப்பு.

மிக உயர்ந்த மலையின் உச்சியிலுள்ள அருவி மிகத்தாழ்ந்த தாழ்வரையில் வீழ்ந்ததுபோல, மிக்க பெருமையை யுடைய நீ நின் பெருமையும் உரனும் நீங்கிக் காமங்கொண்டாயென்பது குறிப்பு.

(மேற்.) 1. அஃறிணை ஒன்றன்பாற்கண் வந்த பெயரெச்சப் படர்க்கை வினைக்குறிப்பு முற்று (தொல். எச்ச. 61, ந.); ஒன்றன்பால் வினைக்குறிப்புமுற்றுப் பெயரெச்சக்குறிப்பானது (நன். 350, மயிலை, 351, சங்.)

4-5. யாவதென்னும் ஒன்றறி சொல்லும் நிலைமொழியாய் நின்று புணர்தலும் மருவின் பாத்தியது (தொல். தொகை. 30, இளம், ந.)

5-6. 'காமநோயுரு தார் மானமுடையார் நன்றென வுணரார் மாட்டுஞ் சென்றே நிற்கும்; யானறிவ தொன்றன் றென்பதாம்' (குறள், 1255, பரிமேல்.)

மு. தோழி தலைவனிடம் படைத்து மொழிந்தது (தமிழ்நெறி. 17); பாங்கன் தலைவனைக் கழறியது (நம்பி. 137.)

(ஒப்பு.) 1. "பெருவரை யிழிதரு நெடுவெள் ளருவி"

(அகநா. 358 : 12.)

2. முதுவாய்க் கோடியர் முழவு: பட். 253; அகநா. 22 : 7, 98 : 8-10, 328 : 1-2; கோடியர் : தே. 7493, 7837.

முதுவாய் : முருகு. 284. 1-2. அருவியோசைக்கு முழவு:(குறுந். 365 : 3-4); "ஒருகிறம், மண்ணுர் முழவி னிசையெழ, ஒருகிறம், அண்ண னெடுவரை யருவிநீர் ததும்ப", "பாணி முழவிசை யருவிநீர் ததும்ப" (பரி. 17 : 13 - 4, 21 : 36); "பாடின் னருவிப் பனிநீ ரின்னிசைத், தோடமை முழவின் றுதைகுர லாக" (அகநா. 82 : 3 - 4); அகநா. 318 : 5-6; கற். 34 : 4-5; "யாழுங் குழலு முழவு மியைந்தென, வீழு மருவி விறன்மலை நன்னாடு" (திணைமொழி. 7); "அருவி யரற்றிசை யணிமுழ வாக" (பெருங். 2. 16 : 81); "முழவின்னிசை மூரி முழங்கருவி", "அருவி, தாழ்ந்து வீழ்ந்தவை முழவிற்றதும்பின", "படுகண் முழவி னிமிழருவி வரையும்"

(சீவக. 1193, 1560, 2172); "அருவித்திரண் மழலும் முழவதிரும், அண்ணமலை" (தே. திருஞா.) "மலையிலங் கருவிகண் மணமுழ வதிர" (தே. திருநா.)

4. நோதக்கன்று: குறுந். 263 : 6; கலி. 26 : 8; அகநா. 364; 12.

6. பெரும்பேதைமை: குறுந். 391 : 9; நற். 6 : 11. (எ அ)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவினால் வருந்திய தலைவி தோழியை நோக்கி, "என்பாற் சொல்லின் நான் உடம்படமாட்டேனென்னும் கருத்தால், சொல்லாமற் பிரிந்து சென்ற தலைவர் தாம் சென்ற ஊரிலேயே தங்கிவிட்டாரோ?" என்று கூறி வருந்தியது.]

எஉ. கான யானை தோனயந் துண்ட
பொரிதா ளோமை வளிபொரு நெடுஞ்சினை
அலங்க லுலவை யேறி யொய்யெனப்
புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்
5. அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்ச்
சேந்தனர் கொல்லோ தாமே யாந்தமக்
கொல்லே மென்ற தப்பற்
சொல்லா தகறல் வல்லு வோரே.

எ - து. பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

குடவாயிற் கீரனக்கன் (பி - ம். கீரத்தனர்.)

(பி - ம்.) 6 'சேர்ந்தனர்' 7 'கொல்லோமென்ற' 8 'சொல்லாதேகல்'

(ப - ரை.) தோழி, யாம் தமக்கு ஒல்லேம் என்ற தப்பல் - யாம் தாம்பிரிவதற்குப் பொருந்தேமென்ற தவற்றினால், சொல்லாது அகறல் வல்லுவோர் - சொல்லாமற் செல்லுதலில் வன்மையுடையோராகிய தலைவர், கானம் யானை - காட்டுயானையால், தோல் நயந்து உண்ட - பட்டை விரும்பி உண்ணப்பட்ட, பொரி தாள் ஓமை - பொரிந்த அடியையுடைய ஓமைமரத்தினது, வளி பொரு நெடு சினை அலங்கல் உலவை - காற்று அடிக்கும் நெடிய கிளையினது அசைதலையுடைய வற்றற்கொம்பில், ஏறி—, ஒய் என - ஒய்யென்று, புலம்புதரு குரல - தனிமையையும் வருத்தத்தையும் வெளிப்படுத்தும் குரலையுடையனவாகி, புறவு பெடை பயிரும் -

ஆண்புறுக்கள் பெண்புறுக்களை அழைக்கும், அத்தம் நண்ணிய - பாலைநிலத்திற் பொருந்திய, அம் குடி சிறு ஊர் - அழகிய குடிகளை யுடைய சிற்றூரில், சேந்தனர் கொல் - தங்கினரோ ?

(முடிபு) சொல்லாதகறல் வல்லுவோர் சேந்தனர்கொல் ?

(கருத்து) தலைவர் இனி மீளாரோ ?

(வி - ரை.) பாலைநிலத்தின் வெம்மையால் யானை ஓமைமரத் தின் தோலை உண்டது, புலம்பு - தனிமையும் வருத்தமும்.

ஓ, தாம், ஏ : அசைநிலைகள்.

பாலைநிலத்துள்ள ஆண்புறவு தன் பெடையை விரும்பி அழைக்கும் இடத்தில் தங்கினீரா வென்றது, பறவையினங்களும் தம் துணையின்பால் அன்பு வைத்து ஒழுகும் அவ்விடத்தில் தங்கினு ரேல், ஆண்டுள்ள நிகழ்ச்சியும் என்பால் வந்து ஒன்றுதலாகிய தம் கடமையை அறிவுறுத்துமன்றே யென்ற குறிப்பினது (ஐங். 333.) ஒல்லேம் - உடம்படேம் நாம் உடம்டாமையைத் தவருக நினைத்து அதுபற்றிச் சினந்து அங்கே தங்கி விட்டனரோ வென்பது தலை வியின் ஐயம்.

தலைவர் சொல்லாது அகலுதலுண்டென்பதை இந்நூல் 43 - ஆம் செய்யுளாலும் அதன் உரை முதலியவற்றாலும உணரலா கும். வல்லுவோரென்றது அங்ஙனம் பிரிந்து செல்லுதல் நெஞ் சில் வன்மை யிருபபினன்றி இயலாதென்னும் குறிப்பினது.

(மேற்.) 6-8. தலைவன் சொல்லாது பிரிந்தது (தொல். கற்பு. 43, ந.)

மு. 'புணர்ந்துடன் போகிய கிழவோண் மனையிருந், தினைச்சுரத் திறைச்சியும் வினையுஞ் சுட்டி, அன்புறு தக்க கிளத்த றனே, கிழவோன் செய்வினைக் கச்ச மாகும்' ஆதலின், 'புலம்புதரு குரலவாய்ப் புறவினைப் பெடை அழைக்கும் வருத்தங்கண்டு வினைமுடியாமல் வருவரோவென அஞ்சியவாறு காண்க' (தொல். கற்பு. 7, இளம். ந.)

(ஒப்பு.) 2. ஓமை : "புன்ற லோமைய சுரனிறந் தோரே" (குறுந். 260 : 8) ; "புல்லரை யோமை" (ஐங். 316 : 4.) 1-2. யானை ஓமைத்தோலை உண்ணல் ; "முளிசினை, ஓமைக் குத்திய வுயர்கோட் டொருத்தல்" (குறுந். 396 : 3-4) ; "கயந்தலை மடப்பிடி யுயங்குபசி களைஇயர், பெருங்களிறு தொலைத்த முடத்தா ளோமை", "டசிப்பிடி யுதைத்த வோமைச் செவ்வரை", "பணைத்தா ளோமைப்படுசினை.....ஒடித்துமிசை கொண்ட வோங்குமருப் பியானை" (நற். 137 : 6-7, 279 : 7, 318 : 2-5.)

3. அலங்கல் உலவை : அகநா. 199 : 6. ஒய்யென : கலி. 37 : 18.

4. புறவு, பெடையைப் பயிர்த்தல் : குறுந். 285 : 5.

5. மு. குறுந். 41 : 3, ஒப்பு. அங்குடிச் சீறூர் : நற், 343 : 2 ; புறநா. 324 : 8. 2-4. ஓமையின்மேற் பறவையிகுத்தல் : குறுந். 207 : 2-3; ஐங். 321 : 1-2.

4-5. புறவுள்ள பாலைநிலச் சிறார் : "புறவுசேர்ந் திருந்த, புன்புலச் சிறார்" (புறநா. 328 : 1-2.)

7. தப்பல் : குறுந். 121 - 3, 292 : 2 ; நற். 203 : 10 ; அகநா. 196 : 9.

8. சொல்லாதேகல் : திருச்சிற். 270. (எஃ)

பரத்தை கூற்று

[தலைவி தன்னைப் புறங்கூறினளென்று கேட்ட பரத்தை அத் தலைவிக்குப் பாங்காயினர் கேட்ப, "நானும் தலைவனும் புதுப்புன லாடப் புகுகின்றேம் ; அவள் வலியுடையளாயின் தலைவனை வாரா மற் காப்பாளாக !" என்று தன் வன்மைமிகுதி தோன்றத் தன்னை வியந்து கூறியது.]

அ0. கூந்த லாம்பன் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறுந் தானஃ
தஞ்சுவ துடைய ளாயின் வெம்போர்,
5. நுகம்படக் கடக்கும் பல்வே லெழினி
முனையான் பெருநிரை போலக்
கினையொடுங் காக்கதன் கொழுநன் மார்பே.

எ - து. தலைமகட்குப் பாங்காயினர் (பி - ம். பாங்காயினள்) கேட்பப் பரத்தை சொல்லியது.

ஔவையார் (பி - ம் அவ்வையார்.)

(பி - ம்) 2. 'விருத்திவிரும்பி' 'விருந்திறை' 'விருந்தின்றி' விருந்தினர்' 3 'தானமஃது' 5 'லெழுநி' 6 'முனையான்' 7 கினையொடு நுகர்கதன்'

(ப - ரை.) யாம்—, கூந்தல் - எம் கூந்தற்கண், ஆம்பல் முழு நெறி அடைச்சி - ஆம்பலினது புறவிதழொடித்த முழுப்பூவைச் செருகி, பெரு புனல் வந்த - வெள்ளம் வரப்பெற்ற, இரு துறை விரும்பி - பெரிய நீர்த்துறையை விரும்பி, அஃது அயர்கம் - அப் புனல்விளையாட்டைச் செய்வேமாகி, சேறும் - செல்வேம் ; தான் - தலைவி, அஃது - அங்ஙனம் யாம் தலைவனுடன் விளையாடுதலுக்கு, அஞ்சுவது உடையள் ஆயின் - அஞ்சுவாளானால், வெ போர் - வெவ்விய போரில், நுகம் பட கடக்கும் - பகைவரை நடுநிலை யுண் டாகும்படி வஞ்சியாது எதிர்நின்று கொல்லும், பல் வேல் எழினி - பல வேற்படையையுடைய எழினியென்னும் உபகாரியினது,

முனை ஆன் பெருநிரை போல - போர்முனையிடத்தேயுள்ள பசுக்களின் பெரிய கூட்டத்தைப் போல, தன் கொழுநன் மார்பு - தன் கணவனது மார்பை, கிளையொடும் காக்க - பாங்காயினோரோடும் பாதுகாப்பாளாக.

(முடிபு) யாம் துறை விரும்பிச் சேறும்; தான் அஞ்சுவ துடையளாயின் கொழுநன் மார்பைக் காக்க.

(கருத்து) தலைவன் என்னுடைய விருப்பப்படியே ஒழுகுவானேயன்றித் தலைவி விரும்பியவாறு ஒழுகான்.

(வி - ரை.) முழு நெறி - புறவிதழ் ஒடித்த முழுப்பூ (புறநா. 116 : 2, உரை); இதழொடியாத பூவெனினுமாம் (சிலப். 2 : 34, அடியார்.) அடைச்சுதல் - செருகுதல் (சிலப். 14 : 77, அடியார்) பெரும்புனல் - வெள்ளம். தலைவன் பரத்தையரொடு நீர் விளையாடுதல்.

> "யாறுங் குளனுங் காவு மாடிப்
> பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப" (தொல். கற்பு. 50)

என்பதனாலும் அதன் உரையாலும் உணரப்படும்.

வெம் போர் - தான் விரும்பும் போரெனினுமாம்; வீரர் போரை விரும்பி யிருத்தல், "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" (புறநா. 31 : 9) என்பதனாற் பெறப்படும். நுகம் - நுகத்தின் தன்மை; நடவு நிலை; இங்கே ஆகுபெயர். நுகம்பட - வலியுண்டாக வென்பர் நச்சினார்க்கினியர் (மலைபடு. 87.) எழினி - அதியமான் அஞ்சி. தன் நாட்டுப் பசுக்களைப் பகைவர் கொண்டு சென்றுராக அவரொடு பொருது அப்பசுக்களை எழினி மீட்டுக் காத்தான்; * இவ்வரலாறு,

> "சில்பரிக் குதிரைப் பல்வே லெழினி
> கெடலருந் துப்பின் விடுதொழின் முடிமார்
> கனையெரி நடந்த கல்காய் கானத்து
> வினைவ லம்பின் விழுத்தொடை மறவர்
> தேம்பிழி நறுங்கண் மகிழின் முனைகடந்து
> வீங்குமென் சுரைய வேற்றினந் தருஉம்"
> "நெடுநெறிக் குதிரைக் கூர்வே லஞ்சி
> கடுமுனை யலைத்த கொடுவி லாடவர்
> ஆகொள் பூசலின்" (அகநா. 105 : 10-15, 372 : 9-11)

என்பவற்றாலும் உணரப்படும்.

---

* இச்செய்தி இப்பொழுது கிடைக்கும் தகடூர் யாத்திரைச் செய்யுட்களாலும் வலியுறப் பெறுகின்றது.

எழினி தனக்குரிய நிரையைக் கைக்கொண்ட பகைவரிடத்திலிருந்து அதனை மீட்டுக் காத்தாற்போல, தலைவி தனக்குரிய தலைவன் மார்பைக் கைக்கொண்ட எம்மிடத்திலிருந்து அதனைப் பெற்றுக் காப்பாளாக வென்று உவமையை விரித்துக் கொள்க.

தலைவி தன்னைக் குறைகூறினளென்று கேட்டவளாதலின் பரத்தை சினங்கொண்டு, "யாம் நீர்விளையாடச் செல்வேம்; தலைவன் தானே எம் வயப்பட்டு வருவான். அவனை வாராமற் காக்கும் வன்மை தலைவிபால் உளதாயின் அவள் காப்பாளாக" என்று எள்ளல் தோன்றக் கூறினள். தலைவி அங்ஙனம் காக்கும் வலியிலளென்பது அவள் நினைவு. தலைவிக்குப் பாங்காயினர் கேட்பக் கூறுபவளாதலின் அவர் நெஞ்சிற் படவும் கூறுவாளாகி, 'கிளையொடும் காக்க' என்றாள்; 'கிழத்தியைச் சுட்டாவெனவே, பாங்காயினர் கேட்பச் சொல்லினும் அமையுமென்பதாயிற்று' (தொல். செய். 199, பேர்.) ஏகாரம் அசைநிலை.

(மேற்.) மு. புனல்விளையாட்டின்கண் காமக்கிழத்தியர் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு 10, இளம், ந.)

(ஒப்பு.) 1. மு. ஆம்பல் முழுநெறி: அகநா. 156 : 9; நற். 113; சிலப். 2 : 14, 14 : 75-7. 1-2. புனல் விளையாட்டும் பூவை அடைச்சுதலும்: "புனலாட்டமர்ந்து, தண்ணறு முல்லையுந் தாழ்நீர்க் குவளையும், கண்ணவிழ் நெய்தலுங் கதுப்புற வடைச்சி" (சிலப். 14 : 75-7.)

5. நுகம்படக்கடக்கும்: மலைபடு. 87. பல்வேல்; குறுந். 11 : 6, ஒப்பு. பல்வேல் எழினி: அகநா. 105 : 10. வேல் எழினி; புறநா. 158 : 8-9, அடிக்.

6. முனையான் பெருநிரை:. "முனைபூர்ப், பல்லா நெடுநிரை" (நற். 100: 7-8); "முனையா" (அகநா. 35 : 5); "அடையார் முனையலற வையிலை வேற் காளை, விடையாயங் கொள்கென்றன் வேந்து" (பு. வெ. 1.) 6-7. நிரைகாத்தல்: "ஆதந் தோம்பல்" (தொல். புறத். 2.)

7. கொழுநன் மார்பைக்காத்தல்: "மார்புநனி விலக்க ரொடங்கி யோளே" (ஐங். 42 : 4.) கிளையொடுங் காத்தல்: "நின் கிளையொடு போகென்று தத்தம், கொழுநரைப் போகாமற் காத்து" (கலி. 109 : 25-6.)

மு. "அரியார் மதர்விழி யாயமுந் தானு மகன்றுறைவாய்
விரியார் கருங்கழன் மன்புறங் காப்பினு மென்புறமே
புரியா தொழுகுவ னேலழி யாத புகழ்படையாக்
கரியார் திருவிற் றரியா துடைகவென் கைச்சங்கமே"

(அம்பிகாபதிகோவை, 476.) (அ0)

தோழி கூற்று

[பாங்கியின்வாயிலாகத் தலைவியோடு அளவளாவப்பெற்ற தலைவன் பிரியும் காலத்தில் அவனை நோக்கி, "நின்னுடைய

குறையை நான் முடித்து வைத்தேன்; தலைவி நின்னோடு ஒன்றினள்; இனி நீ அதோ தெரியும் எம் ஊர்க்கண்ணும் வந்து பழகுவாயாக" என்று தோழி கூறியது.]

அக. இவளே, நின்சொற் கொண்ட வென்சொற் [றேறிப்
பசுநனை ஞாழற் பல்சினை யொருசிறைப்
புதுநல னிழந்த புலம்புமா ருடையள்
உதுக்காண் (345) வுள்ளல் வேண்டும்
5. நிலவு மிருளும் போலப் புலவுத்திரைக்
கடலுங் கானலுந் தோன்றும்
மடமுழ் பெண்ணையெஞ் சிறுநல் லூரே.

எ - து. தோழியிற் கூட்டங் கூடிப் பிரியும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

வடமவண்ணக்கன் (பி - ம். வடமவண்ணக்கர், வடமவண்ணக்கன் பேரிசாத்தன்.)

(பி-ம்.) 2 'பல்கிலை' 3 'னிழந்து' 5 ''புலவுதிரைக்' 7 'மடல்சூழ்' பெண்ணையஞ்'

(ப - ரை) வெற்ப, இவள் - இத்தலைவியானவள், நின் சொல் கொண்ட என் சொல் - குறையுறும் நின்சொற்களை ஏற்றுக் கொண்டு தன்னிடத்துக் கூறிய என்சொற்களை, தேறி - தெளிந்து, பசு நனை ஞாழல் பல் சினை ஒரு சிறை - பசிய அரும்புகளையுடைய ஞாழல் மரத்தினது பல கிளைகள் அடர்ந்த ஒரு பக்கத்து, புது நலன் இழந்த - இதுகாறும் புதியதாக இருந்த தன் பெண்மை நலத்தை இழந்ததனாலுண்டான, புலம்பு உடையள் - தனிமையை யுடையள்; நிலவும் இருளும் போல - நிலவையும் அதனோடு நின்ற இருளையும் போல, புலவுதிரை கடலும் கானலும் தோன்றும் - புலால்நாற்றம் வீசும் அலைகளையுடைய கடலும் அதன் கரையி லுள்ள சோலையும் கண்ணுக்குத் தோன்றுகின்ற, மடல் தாழ் பெண்ணை - மடல்கள் தாழ்ந்த பனைமரங்களையுடைய, எம் சிறு நல் ஊர் - எமது சிறிய நல்ல ஊர், உதுகாண் - அதோபார்; உள்ளல் வேண்டும் - இனி எம்மை மறவாது நினைக்கவேண்டும்.

(முடிபு) இவள் நலன் இழந்த புலம்புடையள்; எம் சிறு நல் லூர் உதுக்காண்; உள்ளல் வேண்டும்.

(கருத்து) இனி எம்மை மறவாது எம்மூருக்கு வந்து பழக வேண்டும்.

(வி - ரை.) இவளே : ஏகாரம் அசைநிலை. நின்சொற் கொண்ட என்சொல் லென்றது, தோழி தலைவனது குறையையேற்றுத் தலைவி நயக்கச் செய்த சொற்களை. பசு நலன - இள அரும்பு. ஞாழல் - நெய்தற்குரியதொரு மரம். தோழியிற் கூட்டம் கூடிய தலைவன் தலைவியோடு கடற்கரையிலுள்ள ஞாழன்மரத்தின் நிழலில் அளவளாவினு ஞதலின், 'ஞாழற் பல்சினை யொருசிறைப், புதுநலனிழந்த புலம்புடையள்' என்றுள். புலம்பு - நலனிழந்த மையால் உண்டான தனிமை. மார் : அசைநிலை ; இடைச்சொல். ஐங். 152 : 5. உதுக்காண் : சுட்டின்மூன் வல்லெழுத்து இயல்பா காது மிக்கதை நச்சினார்க்கினியர்,

"சுட்டுமுத லிறுதி யுருபிய னிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை"

(தொல். உயிர்மயங்கு. 61)

என்னும் சூத்திரத்திலுள்ள 'வல்லெழுத்தியற்கை' என்ற விதப் பினாற் கொண்டார். தெய்ய : அசைநிலை (தொல். இடை. 48, இளம்.); "சொல்லேன் றெய்ய நின்னுளும் பெயர்த்தே"; இது தெய்யோ வெனவும் வரும். உள்ளல் வேண்டுமென்பது நினைந்து வரவேண்டு மென்னும் குறிப்பினது ; அதன் பொருட்டே தம் ஊரைக் காட்டினாள். இது தோழி களஞ்சுட்டிக் கூறியது ; இதற்கு விதி, "தோழியின் முடியு மிடனுமா ருண்டே" (தொல். களவு. 30) என்பது.

அலையின் பிறழ்ச்சியால் வெண்மையாகத் தோற்றும் கட லுக்கு நிலவும், அடர்த்தியால் இருண்டு தோன்றும் கானலுக்கு இருளும் உவமை ; நிரனிறை. எதிர் நிரனிறையாகக் கொண்டு கருநீர்க் கடலுக்கு இருளையும், பரந்த கடற்கரை மணற்பரப்புக்கு நிலவையும் (குறுந். 123 : 2) உவமை கொள்ளுதலும் ஆம். நெய்த னிலத்தாதலின் ஊர் பனைமரங்களை யுடையதாயிற்று. நெடுந் தூரத்தில் வரும்போது தோன்றும் அடையாளங்களாகிய கடலை யும் கானலையும் முன்பும், அணுகிய பின்னர்த் தோன்றுவதாகிய பெண்ணையைப் பின்பும் கூறினாள். சிறியதாயினும் சிறப்புடைய தாதலின் சிறுநல்லூரென்றுள் ; நீ வருவதற்குரியதென்னும் குறிப் பினது. ஊரே : ஏகாரம் அசைநிலை.

"தலைவி தாளை விரும்பி இதனைச் செய்திலள் ; நான் கூறி னமையின் இது செய்தாள். நானும் நீ குறைவேண்டி இரந்தமை யின் அவளை நயக்கச் செய்தேன். ஆதலின் அவள் நலனிழந்த

மைக்கு நின் முயற்சியே காரணமாவது. இனி நீ அவள் துயருறு வாறு அவ்வூரினிடத்தும் வந்து அளவளாவுக" என்று தோழி கூறினாள்.

(மேற்.) மு. இவ்வொழுக்கம் புறத்தார்க்குப் புலனாகுமென்று அறி வுறுத்தவழிப் பின்னும் புணர்ச்சி வேண்டிய தலைவற்குத் தோழி இட முணர்த்தியது (தொல். களவு. 24, இளம்.); பாங்கிபிற் கூட்டத்தின்பின் முற்காலத்தும் பணிந்து பின்னின்றேனைத் தோழி தானே பணிந்தொழுகு மிடத்து அவளுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 23, ந.); தோழிக் குத் தலைவி தனது வேட்கையை எதிர்நின்று கூறியது (தொல். களவு. 27, ந.)

(ஒப்பு.) 1. ஞாழல்: குறுந். 183 : 5, 296 : 2.

3. தலைவி புதுநலம் இழத்தல்: "பூவி னன்ன நலம்புதி துண்டு" (நற். 15 : 4); "பொன்மாலை மார்பனென் புதுநலமுண் டிகழ்வானே" (தே. திருவா. திருப்பழனம்.) மார்: ஐங். 44 : 4. 2-3. கடற்கரையில் தலைவனும் தலைவியும் அளவளாவுதல்: (குறுந். 97 : 1 - 2); "கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளே", "ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளே" "நிகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளே" (கலி. 135 : 6, 9, 12.)

4. உதுக்காண்: குறுந். 191 : 1, 358 : 4. தொல். உரிச். 61, ந. ஐங். 101 : 1. தெய்ய : அசை, ஐங். 64 : 5.

5-6. கானற் சோலைக்கு இருள்: "இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழு நிழல்" (குறுந். 123 : 1); "பொழிலே, இரவோ ரன்ன விருளிற் றுகியும்" (யா. வி. 69, மேற்.) கடலுக்கும் கானலுக்கும் நிலவும் இருளும்: "நிலவு மிரு ளும் போல நெடுங்கடற், கழியுங் கானலு மணந்தன்று" (தொல். களவு. 23, ந. மேற்.) நிலவும் இருளும்: குறுந். 123 : 1-2; கிணைமா. 29.

7. சிறு நல்லூர்: குறுந். 55 : 5; அகநா. 394 : 16. 4-7. உதுக்காண்... சிறுநல்லூரே: "ஈகாண் டோன்றுமெஞ் சிறுநல் லூரே" (நற். 264 : 9); "உவக்காண் டோன்றுமெஞ் சிறுநல் லூ ரே" (அகநா. 350 : 15.)

மடல்தாழ் பெண்ணை: ஐங். 114. (அக)

தலைவி கூற்று

[தலைவன் தான் வருவதாகக் கூறிச் சென்ற முன்பனிப் பருவம் வரவும் அவன் வாராமையினால் வருத்தமுற்ற தலைவியை நோக்கி, "நீ வருந்தற்க; அவர் தலையளி செய்து பிரிந்த அன்புடையவராத லின் விரைவில் வருவர்" என்ற தோழியை நோக்கி, "அவர் முன்பு அன்புடையராயினும் இப்பொழுது வந்திலராதலின் அவர் தன்மை மாறியது போலும்!" என்று தலைவி கூறியது.]

அ௨. வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்
புழாஅ லென்றுநம் மழுதகண் டுடைப்பார்
யாரா குவர்கொ ரோழி சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்
5. கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யச்சிரம் வாரா தோரே.

எ - து. பருவங் கண்டு அழிந்த தலைமகள், வருவரென்று வற் புறுத்துந் (பி - ம் வற்புறுத்தித்) தோழிக்குச் சொல்லியது.

கடுவன் மள்ளன்.

(பி - ம்.) 3 'தோழிகாழகிற் ' 6 'யற்சிரம்'

(ப - ரை.) தோழி—. சாரல் - மலைப்பக்கத்திலுள்ள, பெரு புனம் குறவன் - பெரிய தினைப்புனத்திலுள்ள குறவனது, சிறு தினை மறு கால் - சிறிய தினையரிந்த மறுகாலிடத்தில், கொழு கொடி அவரை பூக்கும் - கொழுவிய அவரைக்கொடி மலர்கின்ற, அரு பனி அச்சிரம் - பொறுத்தற்கரிய பனியையுடைய அச்சிரக் காலத்திலும், வாராதோர்-வாராத தலைவர்,வார் உறு வணர் கதுப்பு உளரி - நீட்சியையுடைய வளைந்த கூந்தலை வகிர்ந்து, புறம் சேர்பு - முதுகைச் சார்ந்து, அழாஅல் என்று - அழுதலை யொழியென்று கூறி, நம் அழுத கண் துடைப்பார் - நம் அழுத கண்ணீரை முன்பு துடைப்பார் ; இப்பொழுது, யார் ஆகுவர் - எத்தன்மையை உடை யராவரோ ?

(முடிபு) தோழி, வாராதோர், முன்பு துடைப்பார் ; இப்பொ ழுது யாராகுவர்கொல் ?

(கருத்து) தலைவர் முனபு அன்புடையராயினும் இப்பொழுது அன்பின்றி என்னை மறந்தனர் போலும்!

(வி - ரை.) தான் பிரியுங்கால் தலைவி வருந்துதலை அறிந்த தலை வன் அவள் கூந்தலை உளரியும் கண்ணீரைத் துடைத்தும் தலையளி செய்து பிரிந்தானுதலின் அச்செயல்களை நினைந்து, "அங்ஙனம் செய்த தலையளியை யுடையார் இன்னும் வாராமல் அயற்றன்மை யுடையராயினர்!" என்று வருந்தினள். தோழி, தலைவன் பிரியுங் கால் செய்த தலையளியை நினைவுறுத்தி வற்புறுத்தினளாக, "அங்ஙனம் செய்யினும் இப்பொழுது வாராமையால் அவர் தன்மை வேறுபட்டது போலும்!" என்னும் கருத்துப்படக் கூறி னள்.

யாரென்றது நம்மோடு தொடர்பிலரென்னும் நினைவிற்று. குறவனுக்குரிய சிறுதினை, தினைக்கதிரை அரிந்தபின் அதன் அடியில் மீட்டும் கிளைத்துக் கதிர் உண்டாகும்; அதனை மறுகாலென்பர். அம்மறுகாலில் விதைத்த அவரை வளர்ந்தது. அவரை யென்றது இங்கே மொச்சையை.

கொல், ஏ : அசைநிலைகள்.

அச்சிரம் அவர் வாராமையின் பொறுத்தற்கரியதாயிற்று. அவர்வரின் அரியதாகாது; இந்நூல் 68 - ஆம் செய்யுளைப் பார்க்க.

குறவன், ஒருமுறை யறுத்த கதிராற் பயன் பெற்றதன்றிப் பின்னும் மறுகாலிற் கிளைக்கும் கதிராலும் அதனோடு அவரையினாலும் பயனைப் பெறுதற்குரிய அச்சிரமென்றது, தலைவன் முன் இன்புற்றதன்றி மீண்டும் இப்பொழுது வந்து என்பாற் பெறும் இன்பத்தையும் செய்வினை முடித்த இன்பத்தையும் பெறுதற்குரியனென்னுங் குறிப்பினது.

(ஒப்பு.) 1. தலைவன் தலைவியின் கூந்தலை அழகுபடுத்தல் : நற். 214 : 4 : 5. வாருறு வணர்ஞ்துப்பு : "வாருறு வணரைம்பால்" (கலி 58 : 1.) வணர்கதுப்பு: "வணர்சுரி யைம்பாலோய்" (சிலப். 7 : 31.) கதுப்பு உளர்தல் : "ஒலியல் வார்மயி ருளரினள் கொடிச்சி" (அகநா. 102 : 5.) கதுப்பு - பெண்பால் மயிர் : குறுந். 190 : 1 ; 246 : 6 ; 312 : 6, குறள், 1105, உரை. தலைவன் தலைவியின் கூந்தலை உளர்தல் : "நெரிகுரற், சாந்தார் கூந்த லுளரி.....மனைவயி னிருப்பவர்" (அகநா. 389 : 1 - 10.) தலைவன் தலைவியின் புறஞ்சேர்தல் : "தாழிருங் கூந்தலென்றோழியைக் கைகவிபாச், சாயலின் மார்பன் சிறுபுறஞ் சார்தர" (கலி. 42 : 29-30); "நங் காதலி, உயங்குசாய் சிறுபுற முயங்கிய பின்னே","சிறுபுறங் கவையின ளுக" (அகநா. 19 : 18-9, 26 : 23, 32 : 9.)

2. அழாஅல் : குறுந். 135 : 4. தலைவன் தலைவியினது கண்ணீரைத் துடைத்தல் : (குறுந். 4 : 2) ; "பன்னுளை, அழுதகண் ணீர்துடைத்த கை" (தண்டி. 114, மேற்.) தலைவனது பிரிவால் தலைவி அழுதல் : குறுந். 11 : 2, 22 : 1, 307 : 9, 357 : 1-2, 365 : 2 ; ஐங். 18 : 3-4, 334 : 5 ; கலி. 70 : 11. 4-5. சிறுதினை மறுகாலில் அவரை படர்தல் : "கொய்பத முற்றன குலவுக்குர லேனல், விளைதயிர்ப் பிதிர்வின் வீயுக் கிருவிதொறும், குளிர்புரை கொடுங்காய் கொண்டன வவரை" (மலைபடு. 108-10) ; "சிறுதினை கொய்த விருவி வெண்காற், காய்த்த வவரை" (ஐங். 286: 1-2); "அவரை பொருந்திய பைங்குர லேனல்"(ஐங். எழு. 1-2) அவரை மறுகாலில் விளைதல்: ஐங். 286 : 1-2, கலி. : 139. 6. அரும்பனி யச்சிரம் : குறுந். 68 : 3, ஒப்பு. 5-6. அச்சிரக்காலத்தில் அவரை பூத்தல் : "அவரைப் பைம்பூப் பயில...சிதர்சினை தூங்கு மற்சிர வரைநாள்" (அகநா. 294 : 9-11.) (அ உ)

தோழி கூற்று

[வரைவுக்குரிய முயற்சிகளோடு வந்த தலைவனைச் செவிலி ஏற்றுக் கொண்டமையைத் தோழி அச்செவிலியை வாழ்த்தும் வாயிலாகத் தலைவிக்கு உணர்த்தியது]

அ. அரும்பெற லமிழ்த மார்பத் துமாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ வன்னை
தம்மிற் றமதுண் டன்ன சிறைதொறும்
தீம்பழந் தூங்கும் பலவின்
5. ஓங்குமலை நாடனை வருமென் றிரூளே.

எ - து. தலைமகன் வரைந்தெய்துதல் உணர்த்திச் (வி - ம் உணர்த்திய) செவிலியைத் தோழி வாழ்த்தியது.

வெண்பூதன் (வி - ம். வெண்பூதன்.)

(பி - ம்.) 1 'லமிர்தம்' 3 'கிளை'

(ப - ரை.) தம் இல் - தமது வீட்டின்கண் இருந்து, தமது உண்டன்ன - தமது முயற்சியால் ஈட்டிய பொருளில் தம் கூற்றை உண்டாற் போன்ற இன்சுவையைத் தருவனவாகி, சிறை தொறும் - கொம்பு தோறும், தீ பழம் - இனிய பழங்கள், தூங்கும் பலவின் - தொங்குகின்ற பலாமரங்களை யுடைய, ஓங்கு மலைநாடனை - உயர்ந்த மலைகளுள்ள நாட்டுக்குத் தலைவனை, வரும் என்றிரூள் - வரைதற் குரிய பொருளோடு வருவானென்று கூறியவளாகிய, அன்னை —, அருபெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆக - பெறுதற்கரிய அமிழ்தமே உண்ணும் உணவாக, பெரு பெயர் உலகம் - பெரும்புகழுடைய சுவர்க்கத்தை, பெறீஇயர் - பெறுவாளாக.

(முடிபு) நாடனை வருமென்றிரூளாகிய அன்னை, பெரும் பெய ருலகம் பெறீஇயர்.

(கருத்து) தலைவர் வருவாரென்று உணர்த்திய செவிலி வாழ் வாளாக.

(வி - ரை.) பெரும்புண்ணியம் செய்தார்க்கே அமுதவுணவு பெறற்குரியதாகலின் 'அரும்பெற லமிழ்தம்' என்றிரூள். ஆர்பதம் - உணவு. பெரும்பெயர் உலகம் - பெரிய புகழையுடைய உலகம்; என்றது சுவர்க்கத்தை; பெயர் - பொருளுமாம். தமது என்றது தம் முயற்சியால் ஈட்டிய பொருளில் தமக்கென ஆன்றிரூரால் வரையறுத்த ஆறிலொரு கூற்றை. உண்டன்ன தீம்பழமென்று

கூட்டுக. "தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றூல், அம்மா வரிவை மூயக்கு" (குறள், 1107) என்ற விடத்து இன்பத்துக்குத் தம துண்ட இன்பத்தை உவமை கூறுதல் காண்க.

வருமென்றேள் - வருவாளென்று கூறினுள்; அங்ஙனம் கூறி யது தம்மில் தமதுண் டன்னதென்று உரைத்தலும் ஆம்; அன்ன: அன்னதென்பதன் விகாரம்.

இதனுல் தோழி தலைவிக்கு, "தலைவன் வரைதற்குரிய முயற்சி களைச் செய்வானுயினுன்; அவற்றிற்கு அன்னை முதலியோர் உடம் பட்டனர்" என்று உணர்த்தினுள்.

ஓ, ஏ : அசைநிலைகள்.

(ஒப்பு.) 1. நலஞ்செய்தவர்கள் அமிழ்தம் பெறுகவென்று வாழ்த்தல்: குறுந். 201 : 1. ஆர்பதம்: குறுந். 389 : 2 ; நற். 102 : 2 ; பதிற். 55 : 11, 66: 9. 2. பெயர் - பொருள் : பதிற் : 21 : 1 ; 90 : 23 ; முருகு. 269, ஈ; பெருங் 1. 35 : 113 ; 3. 10 : 18. 1-2. சுவர்க்கம் பெறும்படி வாழ்த்துதல்: குறுந். 361: 1-2.

5. குறுந். 201 : 7. 4-5. சினைதொறுந் தீம்பழம் தூங்கும் பலவு: (குறுந். 257 : 1-3); "கீழ மேலுங் கார்வாய்த் தெதிரிச், சுரஞ்செல் கோடியர் முழ விற்றூங்கி, முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே" (மலைபடு. 142-4.)

மு. ஒருவாறு ஒப்பு : குறுந். 361. (அக)

செவிலித்தாய் கூற்று

[தலைவி தமரைப் பிரிந்து தலைவனுடன் சென்றுளாக, அதனை யறிந்த செவிலி, "யான் நேற்று வழக்கம்போல் தழுவவும் அதனை என் மகள் வெறுத்தாள்; அதன் காரணத்தை அப்பொழுதே அறிந்திலேன்; இப்பொழுது அறிந்தேன்" என்று கூறி இரங்கியது.]

அ. பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனை
[னென்றனள்
இனியறிந் தேனது துனியா குதலே
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
5. ஆம்பன் மலரினுந் தான்றண் ணியளே.

எ - து. மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

[மகள் - தலைவி. போக்கிய - தலைவனோடு செல்வதற்குக் காரணமாகிய.]

மோசிகீரன்.

(ப - ரை.) கழல் தொடி ஆய் - உழல இட்ட தோள்வளையையுடைய ஆயென்னும் வள்ளலது, மழை தவழ் பொதியில் - மேகங்கள் தவழும் பொதியின் மலையில் உண்டான, வேங்கையும் காந்தளும் நாறி - வேங்கை மலரினது மணத்தையும் காந்தள் மலரினது மணத்தையும் வீசி, ஆம்பல் மலரினும் - ஆம்பல் மலரைக்காட்டிலும், தண்ணியள் - குளிர்ச்சியையுடையளாகிய என்மகள், பெயர்த்தனென் முயங்க - யான் ஒருமுறை தழுவியதோடமையாமல் மீட்டும் தழுவும் காலத்து, யான் வியர்த்தனென் என்றனள் - நான் வியர்வையை யடைந்தேன் என்று கூறினள்; அது துனி ஆகுதல் - அங்ஙனம் யான் தழுவியது அவளுக்கு வெறுப்புண்டாக்குதற்குக் காரணமாதலை, இனி அறிந்தேன் - அவளை கூறிய அக்காலத்தே அறிந்திலேனாயினும் இப்பொழுது அறிந்தேன்.

(முடிபு) தண்ணியள், யான் முயங்க வியர்த்தனென் என்றனள்; அது துனியாகுதலை இனி அறிந்தேன்.

(கருத்து) தலைவி எம்பால் வெறுப்புற்று ஒரு தலைவன்பால் விருப்புற்றுச் சென்றனள்; இதனை முன்னரே அறிந்திலன்.

(வி - ரை.) பெயர்த்தனென் என்றமையால் முன் ஒருமுறை தழுவினளென்றது பெறப்பட்டது. அங்ஙனம் தழுவிய பழக்கத்தால் செவிலி மீட்டும் தழுவினள். தலைவியை அருகில் துயிலச் செய்தல் செவிலியர் வழக்கம் வியர்த்தனெனென்றது, வியர்த்தனைதலின் நீ முயங்கற்கவென்ற குறிப்பினது.

செவிலி அறிந்தது, "ஒருதலைவனது முயக்கத்தையே இன்பமாகக் கருதியவளாதலின் பிறர் முயக்கம் வெறுப்புறச் செய்தது" என்பதனை. "முன்பு விருப்பாயிருந்த என் முயக்கம் இப்பொழுது அவளுக்கு வெறுப்பாயிற்று" என்பது குறிப்பு;

> "குறுக வந்து குவவுநுத னீவி
> மெல்லெனத் தழீஇயினே னாக வென்மகள்
> நன்ன ராகத் திடைமுலை வியர்ப்பப்
> பல்கான் முயங்கினண் மன்னே" (அகநா. 49 : 6-9)

என்பதில் இக்கருத்து விரிவுற அமைந்திருத்தல் காண்க.

இனி - இப்பொழுது (கலி. 1 : 4, ந.) இனி யறிந்தேனென்றமையின் அப்பொழுது அறிந்திலேனென்பதும், அறிந்திருப்பின் அவள் நெஞ்சுவிரும்பியது ஆற்றியிருப்பேனென்பதும் போந்தன. ஆகுதலே : ஏகாரம் அசைநிலை. கழல் தொடி : இந்நூல் மூதற் செய்யுளின் மூன்றாமடியையும் அதன் உரை முதலியவற்றையும் பார்க்க.

ஆய் : ஏழுவளளல்களுள் ஒருவன். இவனுக்குரியது பொதியின்மலை. மழைதவழ் பொதியிலென்றது, காந்தளும் வேங்கையும் வளம்பெற வளர்தற்குரிய மழையுண்டென்பதைக் குறித்தது. தான் வாழும் குறிஞ்சிநிலத்திற்குரிய வேங்கையின் மணத்தையும் காந்தளின மணத்தையும் அறிந்தவளாதலின், தலைவியின மேனி மணத்துக்கு அவற்றை உவமை கூறினாள். தலைவியின் மேனி இயற்கை மணம் உடையதென்றபடி, ஆம்பலமலர் போலாதலின் தண்மைக்கு உவமையாயிற்று; "பொய்கைப் பூவினு நறுந்தண்ணியளே" (ஐங் 97 : 4) தான நள தோற்றும முயங்கித் துயின்ற பழக்கத்தினால் தலைவ மேனியின் நறுமையையுந் தண்மையையும கூறினாள்.

தான் : அசைநிலை தண்ணியளே : ஏகாரம் இரக்கக்குறிப்பு; இத்தகைய தன்மையுடையவள் வெப்பமிக்க பாலையிற் செலல நேர்ந்ததேயென்னும நினைவற்று.

(மேற்.) 1. செயகென்கிளவி அவ்வியல திரியாதெனவே.....ஏனை முற்றுச்சொலவினை முறைசொல வினைகொளலுங்கால அவ்வியல திரியும (தொல். வினை. 7, சே.)

'பெயராதனென் முயங்க' என்றும தொடக்கத்தன இறந்த கால முணர்த்தலிற செயதெனெச்சமாதற கேறபுடைமையான் அவற்றைத் திரிபென்றார், வினையெச்சத தன்மைதெரிநிலைமுறறு (தொல். எச்ச. 61 ந.); தன்மை வினைமுறறு வினையெச்சமாபிறறு (நன். 350, மயிலை, 351, சங். இ. வி. 237, 250.)

4-5. குறிப்புவினைமுறறு, சிறுபான்மை ஆகுபெயரின் வருதது (தொல். எச்ச. 36, சே, ந; நன். 346, மயிலை; இ. வி. 249.)

மு. பிறனை ஞான்று தலைமகளது போகுணர்ந்து செவிலி மயங்கிப் பெரியதோர் கவலையளாய நெருநலை இவை செய்தது இது கருதிப் போலும் என்று கூறியது (இலம். 23); உடன் போக்கிய செவிலி கவன்றுரைததது (தொல். அகத. 39, இளம); உடன் போக்கிற்கு மகள நெஞ்சு துணிந்த காலதது தன்மேல அன்பு நீங்கியதுணாநது செவிலி கூறியது (தொல். களவு. 24, ந.); செவிலி கூற்று (தொல். செய். 190, பேர்; இ. வி. 562.)

(ஒப்பு.) 2. இனி : குறுந். 11 :4, 153 : 3, 205: 5; குறள், 1083, கலி. கட. 4; தஞ்சை. 20-4. மு. கலி. 14 : 9. செவிலி முயக்கம் தலைவிக்கு வெறுப்பைத் தருதல்; குறுந், 353 : 6-7.

3. கழறெடி : குறுந். 1 : 3, ஒப்பு. கழறெடியாய் : புறநா. 374 : 16. மு. புறநா. 128 : 5.

4. வேங்கைமணம் நாறுதல் : குறுந். 355 : 6, ஒப்பு. 3.4. பொதியில் வேங்கை : "வகையமை தண்டாரான் கோடியா பொருப்பின்மேற, பகை யிணை நிளவேங்கை மலர" (கலி. 57 : 16-7.) (பொருப்பு - பொதியின் மலை) 4-5 தலைவியின்மேலி மலர்களின் மணம் உடைமை : குறுந். 62 : 1-4, ஒப்பு. தலைவிமேனியின் நறுமையும் தண்மையும் : குறுந். 70 : 2, ஒப்பு, (அசை)

தோழி கூற்று

[தலைவனுக்குத் தூதாக வந்த பாணன், "தலைவன் மிக்க அன்புடையன்" என்று பாராட்டியபொழுது தோழி, "இவன் சொல்லத்தான் அவரதன்பு புலப்படுகின்றது. மற்று அவர் செயலால் அறிந்திலம்" என்று கூறி வாயில் மறுத்தது.]

அடு. யாரினு மினியன் பேரன் பினனே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
5. நாரு வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

எ - து. வாயில் வேண்டிச் சென்ற பாணற்குத் தோழி சொல்லி வாயின் மறுத்தது (பி - ம். தோழி வாயின் மறுத்தது.)

வடமன் (பி - ம். வடமவண்ணக்கன்.) தாமோதரன்.

(பி - ம்.) 3 'விழையர்'

(ப - ரை.) உள் ஊர் குரீஇ - ஊரினுள் இருக்கும் குருவியின், துள்ளு நடை சேவல் - துள்ளிய நடையையுடைய ஆண்பறவையானது, சூல் முதிர் பேடைக்கு - கருப்பம் முதிர்ந்த பெண்குருவிக்கு, ஈன் இல் - பொறை யுயிர்த்தற்குரிய இடத்தை, இழைஇயர் - அமைக்கும் பொருட்டு, தேம் பொதி கொண்ட - தேன் பொதிதலைக் கொண்ட, தீ கழை கரும்பின் - இனிய கோலையுடைய கரும்பினது, நாரு வெண் பூ - மணம் வீசாத வெள்ளிய பூவை, கொழுதும் - கோதி யெடுக்கும், யாணர் ஊரன் - புதுவருவாயையுடைய ஊருக்குத் தலைவன், பாணன் வாயே - பாணனது சொல்லின் அளவில், யாரினும் இனியன் - எல்லாரினும் இனிமையையுடையான்; பெரு அனபினன் - தலைவியின்பாற் பெரிய அன்பினை உடையான்; உண்மையில் அங்ஙனம் இலன்.

(முடிபு) ஊரன், பாணன் வாயே இனியன்; பேரன்பினன்.

(கருத்து) பாணன் தலைவனைப் புகழினும் தலைவன் அன்பிலன்.

(வி - ரை.) அன்பினனே: ஏகாரம் அசைநிலை. உள்ளூர் - ஊருள்; முன்பின் மாறியது. குரீஇ - குருவி; இந்நூல் 72-ஆம் செய்யுள் 5-ஆம் அடியின் விசேடவுரையைப் பார்க்க. துள்ளு நடைச் சேவலென்றது அதன் ஊக்கத்தைப் புலப்படுத்தியது;

சேவலுக்குத் துள்ளுநடை கூறினமையின் சுன்முதிர் பேடை ஓய்ந்த நடையினதென்பதும் பெறப்படும். ஈன் இல் - முட்டையை ஈனும் இடம். அது மெத்தென விருத்தல் வேண்டுமாதலின் கரும் பின் பூவைச் சேவல் கொழுதியது

தேம் பொதி - தேனடையுமாம்; தேம் - தேன்போலும் இனிய சாறு எனலுமாம். தீங்கழை - சுவையினிமையையுடைய கோல். நாருமை கரும்பின் பூவிற்கு இயல்பு. வேரொன்றிற் செல்லவொட்டாமல் தடுத்துத் தன்னையே உண்ணச் செய்யும் தேம்பொதியை உடையதேனும் அதன்பாற் செல்லாது தன் கரு மமே கண்ணுங்கிப் பூக்கொழுது மென்றது அச்சேவலின் பேரன் பைப் புலப்படுத்திப் பறவையினங்களும் அன்பு பாராட்டும் ஊரையுடையான் தான் அவ்வியல்பு பெற்றிலனென்னும் நினைவை வெளிப்படுத்தியது.

வாயே: ஏகாரம் பிரிநிலை; வாயே - வாயில் மட்டும்; "நின் வாய், மெய்கொண்ட வன்பின ரென்பதென்" (திருச்சிற். 386) என்பதன் உரையிலுள்ள, 'நின்வாயில் அவர் விள்ளா அருள் பெரிய ரன்றே வென்றுரைப்பினும் அமையும்' என்னும பகுதியைக் காண்க. வாய்: ஆகுபெயர்.

பாணன், "தலைவன் யாரினும் இனியன்; பேரன்பினன்" எனக் கூறக் கேட்ட தோழி அவனது சொல்லால் மட்டும் தலைவன் அங்ஙனம் இருத்தலையன்றிச் செயலில் இலனென்னும கருத்துப் படக் கூறினள். இங்ஙனம் தலைவனது அன்பின்மையைக் குறிப் பாற் கூறினமையின் வாயின் மறுத்தாளாயிற்று.

இனிய தேனடையும் தீங்கழையும் உளவாகவும், மணமும் நன்னிறமும் இல்லாத கரும்பின் பூவைக் குருவி கொழுதும் ஊர னென்றது, அறத்தோடு பொருந்திய இன்பத்தைத்தரும் தலைவி உளளாகவும் அவள்பா லன்பின்றி, அன்பும் கற்பு மில்லாத பரத்தையரைத் தலைவன் விரும்பினனென்னும் குறிப்பினது; "பூத்த கரும்பிற் காய்த்த நெல்லிற், கழனி யூரன்" (ஐங். 4) என்பதன் உரையில் அதன் உரையாசிரியர், 'பூத்துப் பயன்படாக் கரும்பினையும் காய்த்துப் பயன்படும் நெல்லினையுமுடைய ஊர னென்றது, ஈன்று பயன்படாப் பொது மகளிரையும் மகப்பயந்து பயன்படுங் குலமகளிரையும் ஒப்ப நினைப்பான் என்றவாறு' என்றெழுதிய பகுதி இங்கே கருதற்குரியது.

பாணன் பொய் கூறினனுதலின் அவன்பால் வெகுட்சியுற்ற தோழி அவனை முன்னிலைப்படுத்திக் கூறுதலையும் விரும்பாளாகிப் படர்க்கையில் உணர்த்தினள்.

(மேற்.) 2. பறவையின் ஆண்பாற்கெல்லாம சேவலென்னும் பெயர் உரியது (தொல். மரபு. 48, போ.)

(ஒப்பு) 1. பேரன்பினன்: குறுந். 37: 1, ஒப்பு. 4. தீங்கரைக் கரும்பு: மலைபடு. 119. கரும்பில் தேனடை இருத்தல்: "கருமபிற் றெடுத்த பெருந்தேன்" (சிலப். 10: 82); "அறையுறு கருமபி னணிமடற் றெடுத்த, நிறையுறு தீந்தேன்" (பெருங். 1. 48: 146-7); "தீங்கரும் பெருத்திற் றூங்கி யீபின்றி யிருந்த தீந்தேன்", "கரும்பின்மேற றெடுத்ததேன்" (சீவக. 712, 1936.) 3-4. குருவிச் சேவல் இல் இழைத்தல்: "மனையுறை குரீஇக் கறையணற சேவல், பாணர் நரம்பின் சுகிரொடு வயமான், குரறசெய் பீலியி னிழைத்த குடம்பை" (புறநா. 318: 4 6) 5. பூக் கொழுதுதல்: குறுந். 243: 2. 4-5. கரும்பின் நாருப்பூ: 'நாற்றங் கொள்ளப்படாத கரும்பின் பூ' (ஐங். 91, உரை); "தீங்கரும் பின்ற திரள்கா லுளையலரி, தேங்கமழ் நாற்ற மிழுக தாஅங்கு" (நாலடி. 199.)

கரும்பின் வெண்பூ: நற். 366: 7-8; புறநா. 35: 10. 2-5. குருவிச் சேவல் கருப்பம்பூவார் பேடைக்கு ஈனில் இழைத்தல்: "கரும்பின், வேல்போல் வெண்முகை பிரியத் தீண்டி, முதுக்குறை குரீஇ முயன்றுசெய் குடம்பை" (நற். 366: 7-9); "சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக் கிற்றுணைச் சேவல் செய்வான், தேன்முதிர் வேழத்தின் வெண்பூக் குதாசெம்ம லோரன்" (திருச்சிற். 369); "மனையுறை குருவி வளைவாய்ச் சேவல், சினைமுதிர் பேடைச் செவ்வி நோக்கி, ஈனி லிழைக்க வேண்டி யானு, அன்புபொறை கூர மேன்மேன் முயங்கிக், கண்ணுடைக் கரும்பி னுண்டோடு கவரும், பெருவளந் தழீஇய பீடுசால் கிடக்கை, வருபுன லோரன்" (பதிற்றுப். திருவாரூர் மும்மணிக். 19.)

பறவைகள் பூவார் கூடு கட்டுதல்: சீவக. 65. (அரு)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவைத் தலைவி ஆற்றுளெனக் கவலையுற்ற தோழியை நோக்கி, "தலைவர் என்னோடு இருந்து இன்புறுதற் குரிய பொழுதாகிய இக்கூதிர்யாமத்திலே தனிமைத்துன்பத்தை மிகுதிப்படுத்தும் ஆன்மணிக்குரலைக் கேட்பார் வேறு யாருளர்? நான் ஒருத்தியேயன்றே?" என்று தலைவி கூறியது.]

அசு. சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொ லுறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
5 தாஅளம் புலம்புதொ றுளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

எ - து. ஆற்றுளனைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

வெண்கொற்றன்.

(பி - ம்.) 5 'புழம்பு தொறுலமபும்'

(ப - ரை) தோழி, உறை சிறந்து - மழைத்துளி மிக்கு, ஊதை தூற்றும் - வாடைக்காற்று வீசுதலால், கூதிர்யாமத்து - கூதிர்ப்பருவத்தின் கள்ளிரவில், ஆன் - எருதானது, நுளமபு உலம்புதொறு உளம்பும் - ஈ ஒலிக்குந்தோறும் அலைகின்ற, நாகவில் கொடுமணி - நாவினுல் மூழங்குகின்ற கொடிய மணியின, நல்கூர் குரல் - மெல்லிய ஓசையை, சிறை பனி உடைந்த - தடுக்கப்பட்ட நீர் உடைந்து துளித்துளியாக விழுகின்ற, செ அரி மழை கண் - செம்மையான அரிகளையும் குளிர்ச்சியையுமுடைய கண்ணேடும், பொறை அரு நோயொடு - பொறுத்தற்கரிய காம நோயோடும், புலமபு அலைக் கலங்கி - தனிமை வருத்துதலாற் கலங்கி, கேட்குநர் - கேட்டு வருந்துவார், பிறரும் உளர்கொல் - என்னையன்றிப் பிறமகளிரும் உள்ளாரோ?

(முடிபு) கூதிர்யாமத்து ஆன் உளம்பும் மணியின் குரலைக் கேட்குநர் பிறரும் உளர்கொல்?

(கருத்து) தலைவர் உடனிருத்தற்குரிய இப்பருவத்தில் யானொருத்தியே தனிமைத் துன்பத்தை உடையேனுயினேன்.

(வி - ரை) நோயென்பது பிரிவாற்றுமையால் உளதாகுந் துன்பத்தை. புலம்பு அலைக்கலங்கி - புலம்பு அலைத்தலினுற் கலங்கி; 'நீரலைக் கலாவ - நீரலைத்தலாலே கலக்க மெய்த' (நெடுநல். 6, ந.) ஒடுவைக் கண்ணுக்குங் கூட்டுக. பிறரும்: உம்மை இறந்தது தழீஇயது. கூதிர்யாமத்தின்கண் தலைவிக்குப் பிரிவின் துன்பம் மிக்குக் காமம் பெருகுமாதலின் அவள் வருந்தினுள்; "யாமங் கொளவரிற் காமங், கடலினு முரைஇக்கரைபொழி புமமே" (அகநா. 128: 3-4) தலைவனேடு இருந்து இன்புறுதற் குரியவை கூதிராகிய பெரும்பொழுதும் யாமமாகிய சிறு பொழுதும்; இவை குறிஞ்சி யொழுக்கத்துக்குரியன. அக்காலத் திலும தலைவர் வாராராயினரென்று தலைவி கவன்றுள். நுளம்பு - ஈ; இங்கே மாட்டு ஈ; "கின்னருள், ஆணை வைப்பிற் காணைணை வணுவும், வானுற நிமிர்ந்து காட்டுங், கானிலா னுளம்புங் கருடனை தலினே" (கோயிலன் மணிமாலை, 4: 23-6) தன்னைத் துன்புறுத்தும் அவ்வீயின் குரலைக் கேட்ட மாதரித்தில் அதனல் முன்னர்த் துன்புற்றறிந்த ஆன் அதனை யோட்டும்பொருட்டுத் தலைமை

அசைக்க அப்பொழுது அவ்வானின் கழுத்திலுள்ள மணி யசைந்து ஒலித்தது. உளம்புதல் - அலைத்தல் (கலி. 23 : 1, ந.) தான் கேட்பதற் கின்னுமையின் கொடுமணி யென்றுள். யாவரும் துயிலும் யாம மாதலின் அம்மணியின் மெல்லிய குரலும் இவளுக்குக் கேட்டது. அவ்வொலி, யாமத்தையும் தன் தனிமையையும் மிகுதியாகக் காட்டித் தலைவியைத் துன்புறுத்தியது. குரலே : ஏ அசைநிலை.

தலைவர் இருத்தற்குரிய கூதிர் யாமத்தில் அவரைப் பிரிந் திருப்பதெவ்வாறென்று தலைவி இரங்கினள்.

(மேற்.) 1 சிறை யென்பது தடுத்துக் காத்தலை யுணர்த்தும் (சீவக. 2890, ந.) மு. தனித்துழிஇறைவி தனித்தழுதிரங்கல் (நம்பி. 205.)

(ஒப்பு.) 1. சேயரிக்கண் : ஐந். ஐம். 15. தலைவன் பிரிவினால் தலைவி அழுதல் : குறுந். 38 : 4 - 5, ஒப்பு.

2. பொறையருநோய் : "பொறைகில்லா நோயோடு" (கலி. 3 : 4.) புலம்பலைக்கலங்கி : "நோயலைக் கலங்கிய" (நற். 94 : 1.); நற். 44 : 2; ஐங். 77 : 2, 471 : 2. 3. பிறர் : குறுந். 246 : 5. தலைவி என்னைப்போலப் பிறரும் உளரோவென்றல் : நற். 104 : 8 - 12; அகநா. 202 : 9 - 15.

4. ஊதை தூற்றும் யாமம் : "ஊதைகூட் டுண்ணு முருபனி யாமத்து" (கன். 349, சங். மேற்.) 3 4. உறையும் ஊதையும் : குறுந். 55 : 2-3, ஒப்பு

5-6. ஆன்மணி : மலைபடு. 573. 4-6. தலைவி யாமத்தில் ஆன்மணியோசை கேட்டுத் துன்புறுதல் : குறுந். 190 : 5-7, 279 : 1-4. (அசு)

தலைவி கூற்று

[தலைவன் தெய்வங் காட்டிச் சூளுற்றுப் பின் பிரிந்து நீட்டித் தானாக, அத்தெய்வம் ஒறுக்குமோவென்று அஞ்சிய தலைமகள், "என்பால் உண்டான வேறுபாடுகளுக்குக் காரணம் தலைவர் கொடுமையன்று ; என் மனநிலையேயாகும்" என்று கூறியது.]

அ. மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉ மென்ப யாவதும்
கொடிய ரல்லரெங் குன்றுகெழு நாடர்
பசைஇப் பசந்தன்று நுதலே
5 ளெகிழ ளெகிழ்ந்தன்று தடமென் றோளே.

எ - து. தலைமகள் தெய்வத்திற்குப் பராயது.

[பராயது - வேண்டிக்கொண்டது ; திருச்சிற். 235, கொளூ உரை.]

கபிலர்.

(பி - ம்.) 5 ' ஞெகிழிய '

(ப - ரை) மன்றம் மராத்த - பொதுவிடத்திலுள்ள மராத்தின் கண் தங்கும், பேஎம் முதிர் கடவுள் - பிறர்க்கு அச்சம் செய்தல் முதிர்ந்த தெய்வம், கொடியோர் - கொடுமையுடையாரை, தெறூஉம் என்ப-வருத்தும் என்று அறிந்தோர் கூறுவர்; எம் குன்று கெழு நாடர் - குன்றுகள் பொருந்திய நாட்டையுடைய எம் தலைவர், யாவதும் கொடியர் அல்லர் - சிறிதும் அத்தெய்வத்தால் ஒறுத்தற்குரிய கொடுமையையுடையரல்லர்; நுதல் பசைஇ பசந்தன்று - என்நெற்றி நான் அவரை விரும்பியதனால் பசலை பெற்றது; ஞெகிழ - என்மனம் அவர் திறத்து ஞெகிழ்ந்தமையால், தட மெல் தோள் - பரந்த மெல்லிய என் தோள், ஞெகிழ்ந்தன்று - மெலிவுற்றது.

(முடிபு) கடவுள் கொடியோரைத் தெறூஉம் என்ப; எம் நாடர் கொடியர் அல்லர்; என்நுதல் பசைஇப் பசந்தன்று; ஞெகிழத் தோள் ஞெகிழ்ந்தன்று.

(கருத்து) என்பால் உண்டான வேறுபாடுகளுக்குத் தலைவர் காரணரல்லர்.

(வி - ரை.) மன்றமென்பது பலர் கூடியிருக்கும் மரத்தினடி. மராம் - செங்கடம்பு. இதன்கண் தெய்வம் இருத்தல், "நல்லரை மராஅத்த, கடவுள்" (மலைபடு. 395-6) என்பதனாலும் பெறப்படும். கொடியோரை வருத்துவதாதலின் 'பேஎமுதிர் கடவுள்' என்றுள். பேஎம் - அச்சம்; குறுந். 89 : 4.

தலைவன் தலைவியோடு அளவளாவியபொழுது கடம்பமரத்திலுறையும் கடவுள்மேல் ஆணையிட்டு, "நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன்" என்று தெளித்தான்; பின்னர் அவன் பிரிந்து நீட்டித்தானாக அப்பிரிவினால் தலைவி வேறுபாடு உற்றாள். தன்னுடைய வேறுபாடுகளுக்குக் காரணம் தலைவன் பிரிந்துறையும் கொடுமையே ஆதலின், அக் கொடுமை கருதி அவனைச் சூளுறப் பட்ட கடவுள் அவனை ஒறுக்குமென்று அவள் கவன்றனள். ஆதலின் தலைவன் கொடுமையுடையவனல்லனென்று கூறி அவன் துன்புறுமாறு செய்யவேண்டுமென்று தெய்வதத்தைப் பரவினாள்.

குன்றுகெழுநாடரென்றது தலைவரென்னும் துணையாய் நின்றது. பசைதல் - விரும்புதல்; "பசைஇய கேள்வனை" (பெரும். 5. 1 : 229) தலைவன் பிரிவினால் நுதல் பசந்தது

நுதற்பசலையும் தோள்ஞெகிழ்வும் தலைவன் கொடுமையினால் உண்டானவையல்ல; என்னுடைய மனநிலையினாலேயே அவை

உண்டாயினவென்று தலைவி கூறினளாயிற்று. அவர்பாற் குற்றமில்லையாதலின் அத்தெய்வம் அவரைப் பாதுகாக்கவேண்டு மென்பதும் குறிப்பு.

நுதலே, தோளே : ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்) 1. பேமென்னும் உரிச்சொல் அச்சமாகிய குறிப்புணர்த்தி நின்றது (தொல். உரி, 68, இளம், 69, சே, தெய்வச், 67, ந.); மன்றமரா அத்த பேஎமுதிர் கடவுளென்பது மரா அத்துக் கடவுளென நிற்கும் (தொல. எச்ச. 65, ந.); மரா அத்த கடவுளென்பது பகுதிப்பொருள் விகுதிபெற்று நின்றது (இ. வி. 300.) மு. தலைவன் செய்த சூளுறவு பொய்த்தற்காகத் தெய்வம் அவனை வருத்துமென்று தலைவி அஞ்சியபொழுதும் தானில் நன்மொழி கூறும பொழுதும் தலைவிக்குக் கூற்று நிகழும் (தொல. களவு. 21, 23, இளம்.); தலைவன் தெய்வத்தை நோக்கிச் சூளுறவுப் பொய்த்தானை, தெய்வம் அச்சூளுறவினாது அவனை வருத்துமென்று அச்சம் நீட்டிப்பின் தலைவிக்குக் கூற்று நிகழும் (தொல். களவு. 20, ந)

(ஒப்பு.) 1. மன்றமராஅம் : தஞ்சை. 307. மராமரத்திலுள்ள கடவுள் : கலி. 101 : 14-5 ; தஞ்சை. 132. 1-2. கடவுள் கொடியோரைத் தெறுதல் : பரி. 8: 65-8 சிலப். 5 : 128-34.

4. நுதல் பசத்தல் : குறுந் : 48 : 5, 205 : 7 ; நற் 73 : 10, 108 : 8, 133 : 3, 167 : 11, 247 : 7-8, 288 : 5, 322 : 9, 368 : 7, 388 : 1-2 ; ஐங். 55 : 4. 67 : 5. 105 : 4, 107 : 2, 219 : 4, 222 : 4 ; கலி. 28 : 15 ; அகநா. 102 : 19, 235 : 17, 376 : 13.

5. தோள் நெகிழ்தல் : குறுந். 77 : 6, 90 : 7, 111 : 1, 210 : 5, 239: 1, 357 : 2, 377 : 2, 381 : 1 ; நற். 130 : 7, 131 : 9, 237 : 1 ; ஐங். 39 : 3, 133 : 3 ; அகநா 1 : 8, 41 : 1-2, 169 : 13, 270 : 4. 4-5. நுதல் பசத்தலும் தோள் நெகிழ்தலும் : குறுந். 185 : 1-2 ; நற். 151 : 1, 197 : 1-2 ; அகநா. 85 : 1, 171 : 1-3, 307 : 1. (அ)

தோழி கூற்று

["தலைவன் இரவுக்குறியை விரும்புகின்றான் ; இனி இரவிலே வருவான் " என்று தோழி தலைவிக்குக் கூறியது.]

அஅ.(ஒலிவெள் ளருவி யோங்குமலை நாடன்
சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்
தொன்முரண் சோருந் துன்னருஞ் சாரல்
நடுநாள் வருதலும் வருஉம்
5. வடுநா ணலமே தோழி நாமே.

எ - து. இரவுக்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி தலைமகட்குச் சொல்லியது.

மதுரைக் கதக்கண்ணன்.

(பி - ம்.) 3 'கொல்லுந்' 'சொல்லுந்', 'துன்னருஞ் சோலை'

(ப - ரை.) தோழி—, ஒலி வெள் அருவி - ஒலிக்கும் வெள்ளிய அருவியையுடைய, ஓங்கு மலைநாடன் - உயர்ந்தமலைகளுள்ள நாட்டையுடைய தலைவன், சிறு கண் பெரு களிறு - சிறியகண்ணையுடைய பெரிய களிறு, வய புலி தாக்கி - வலியையுடைய புலியை எதிர்த்துப் பொருது, தொல் முரண சோரும் - தனது பழைய வலி சோர்தற்கிடமாகிய, துன் அரு சோலை - மக்கள் அடைதற்கரிய சாரலின் வழியே, நடுநாள் வருதலும் வரூஉம் - இடையிரவில் வருதலையும் செய்வான்; நாம் வடு நாணலம் - அங்ஙனம் அவன் வருதலினால் நமக்கு உண்டாகும் பழிக்கு நாம் நாணேம்.

(முடிபு) தோழி, மலைநாடன் வருதலும் வரூஉம்; நாம் வடு நாணலம்.

(கருத்து) தலைவர் இனி இரவில் வந்து அளவளாவுவர்.

(வி - ரை) களிறும் புலியும் எதிர்த்துப் போர்செய்யும் சாரலாதலின் துன்னுதற்கு அரியதாயிற்று. வயப்புலி - சிங்கமுமாம்; ஈங்கோய். 4. நடுநாள் - இடையாமம். வருதலும் வரூஉம்: "நல்கினு நல்குவர்" (குறுந். 37 : 1) என்பதன் விசேடவுரையைப் பார்க்க. 'நடுநாள் வருதலும் வரூஉம்' என்பது இரவுக்குறி நேர்ந்ததைப் புலப்படுத்தியவாறு.

வடுவென்றது தலைவன் வருதலைப் பிறர் குறிப்பால் அறிந்து பழிகூறுதலை; வடு - குற்றம்; பரி. 2 : 24.

வழியின் ஏதத்துக்கு அஞ்சாமல் அவனே வரும்பொழுது அவனை ஏற்றுக்கொள்ளாமல் வடுவை நாணி மறுத்தல் அழகன்றென்பது தோழியின் நினைவு.

அருவியானது ஓங்கிய மலையிலிருந்து கீழிழிந்து நிலப்பரப்பிலுள்ளாருக்குப் பயன்படுவதுபோலத் தலைவன் நெடுந்தூரம் கடந்து வந்து நமக்குப் பயன்படுவானென்பது குறிப்பு.

(மேற்.) மு. பகற்குறி நேர்ந்த இடத்துத் தோழி தலைவிக்குக் கூறியது (தொல். களவு. 24, இளம்.); இரவுக்குறி மறுத்தது (தமிழ்நெறி. 18); பாங்கி தலைமகட்குத் தலைமகன் குறையறிவுறுத்தல (நம்பி. 158.)

(கு - பு.) இரவுக்குறி மறுத்தலென்னும் கருத்துச் சிறப்புடையது.

3. (பி - ம்) சொல்லும் - நீக்குமே; அகநா. 8 : 10; சீவக. 1146.

(ஒப்பு.) 2-3. களிறு புலியைத் தாக்குதல் : குறுந். 141 : 4 - 5, 343 : 1-3; மலைபடு. 307-9; நற். 34 : 1-3, 36 : 4-6, 104 : 1-2, 151 : 2-3, 202 :

1-4, 217 : 2-5, 247 : 1-2, 353 : 9-10 ; கலி. 38 : 6-7, 42 : 1-2, 48 : 1-7, 49 : 1-2, 52 : 1-4 ; அகநா. 332 : 2-9.

4. தலைவன் நள்ளிருளில் வருதல் : குறுந். 268 : 5. வருதலும் வருஉம் : குறுந். 37 : 1, ஒப்பு. (அ)

தோழி கூற்று

[தலைவி தலைவன்பெயரை வள்ளைப்பாட்டில் அமைத்துப் பாடினளாக, அதனைக் கேட்ட ஊரினர் அலர் தூற்றுதலைத் தோழி தலைவன் சிறைப்புறத்திலிருக்கும்பொழுது புலப்படுத்தி, விரைவில் வரைதல் நலமென்பதை உணர்த்தியது.]

அஉ. பாவடி யுரல பகுவாய் வள்ளை
ஏதின் மாக்க ணுவறலு நுவல்ப
அழிவ தெவன்கொலிப் பேதை யூர்க்கே
பெரும்பூட் பொறையன் பேஎ முதிர் கொல்லிக்
5. கருங்கட் டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை யன்னவிம்
மெல்லியற் குறுமகள் பாடினள் குறினே.

எ - து. (1) தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தன்னுள்ளே சொல்லுவாளாய்ச் சொல்லியது.

[தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழி வள்ளைப் பாட்டைப் பற்றிக் கூறுதல் : கலி. 40 - 42.]

(2) தலைமகற்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லி வாயின்மறுத்ததுமாம்.

பரணர்.

(பி - ம்.) 1 'பாவடிபுழல' 2 'நுவறல்' 6 'யன்னவென்' 7 'பாடிநன் குறினே'

(ப - ரை.) பெரு பூண் பொறையன் - பெரிய அணிகலத்தையுடைய சேரனுக்குரிய, பேஎம் முதிர் கொல்லி கரு கண் தெய்வம் - அச்சந்தருதல் மிக்க கொல்லிமலையிலுள்ள கரிய கண்களையுடைய தெய்வம், குடவரை எழுதிய - அம்மலையின் மேற்குப் பக்கத்தில் எழுதிய, நல் இயல் பாவை அன்ன - நல்ல இயலையுடைய பாவையை ஒத்த, இ மெல் இயல் குறுமகள் - இந்த மெல்லிய இயல்பையுடைய தலைவி, பாடினள் குறின் - தலைவனுடைய பெயரைப் பாடி இடிப்பாளாயின், பா அடி உரல பகுவாய்

வள்ளை - அங்ஙனம் அவள் பரந்த அடியினையுடைய உரலினது பகுவாயிடத்துத் தானியம் இடிக்கும்பொழுது பாடும் வள்ளைப் பாட்டைக் குறித்து, ஏதில் மாக்கள் - அயலார்கள், நுவறலும் நுவல்ப - குறை கூறுதலையும் செய்வார்கள் ; இ பேதை ஊர்க்கு - இத்தகைய அறிவின்மையையுடைய ஊரினர் கூறும் சொற்களின் பொருட்டு, அழிவது எவன் - வருந்துதலாற் பயன் யாது ?

(முடிபு) குறுமகள் பாடினள் குறின், மாக்கள் நுவல்ப ; இப் பேதையூர்க்கு அழிவது எவன்கொல் ?

(கருத்து) ஊரினர், தலைவி ஒரு தலைவன்பால் நட்புடைய ளென்பதை அறிந்துகொண்டனர்.

(வி - ரை.) பா அடி - பரந்தஅடி (புறநா. 233 : 2.) பகுவாய் வள்ளை - மகளிரது பகுவாயிலிருந்து வெளிப்படும் வள்ளைப் பாட்டுமாம்.

வள்ளை - உரற்பாட்டு (தொல். புறத்திணை. 8, ந.) மகளிர் உரலில் நெல் முதலியவற்றை இடிக்கும்போது அதனால் உண்டா கும் அயர்வு தோற்றாதிருக்கும்பொருட்டுப் பாட்டுப்பாடுதல் இயல்பு ; இங்ஙனம் பாடும் பாட்டு வள்ளைப் பாட்டெனப்படும். இவ்வகைப் பாட்டையும் செயலையும் பல்வரிக் கூத்துள் அடக்கு வர் " உந்தி யவலிடி யூராளி யோகினிச்சி " (சிலப். 3 : 13, அடியார். மேற்.) அவலிடி யென்றும், அம்மனை வள்ளையென்றும், உலக்கைப் பாட்டென்றும் இது கூறப்படும்.

இப்பாட்டு, இடிப்பவர்களுடைய அன்புக்குரியாரைத் தலைவர் களாகப் பெற்றிருத்தல் மரபு ; மகளிர், தெய்வத்தையும் (திருவா. திருப்பொற்சுண்ணம்), அரசர்களையும் (சிலப் 29), தமையன்மாரை யும் (பெருங். 2. 14 : 50-52), தலைவனையும் (கலி. 40-42) வள்ளைப் பாட்டிற் பாடுவர்.

பேய்கள் போர்க்களத்தில் ஒரு தலைவன் வெற்றி பெற்ற காலத்திற் கூழ் சமைப்பதற்குமுன் அங்குள்ள பொருள்களை உரலிலிட்டு இடிக்கும்போது தலைவனை வாழ்த்துதல் மரபென்று பரணி நூல்களால் தெரியவருகின்றது. 'சும்மேலோ சும்மூலக்காய்' என்னும் ஈற்றையுடைய செய்யுட்கள் வள்ளைப்பாட்டுக்களாக அந் நூல்களிற் காணப்படுகின்றன ; அஞ்ஞவதைப்பரணி, மோகவதைப்பரணி, பாசவதைப்பரணி யென்பவற்றைப் பார்க்க.

ஏதின்மாக்கள் - அயற்றன்மையையுடையார் ; மாக்களென் றுள், தலைவியின் நிலையை அறிந்து இரங்கும் தன்மை இன்மை யின். நுவறலும் நுவல்ப : " நல்கலும் நல்குவர் " (குறுந். 37 : 1) என்பதன் விசேடவுரையைப் பார்க்க.

பெரும்பூண் - பேரணிகலம்; இது மார்பில் அணியப்படுவது.

பொறையன் கொல்லி: கொல்லிமலை வல்வில் ஓரிக்குரியது; அவ்வோரியைப் பொருது வென்ற காரி அம்மலையைச் சேரனுக்கு ஈந்தானுதலின் அஃது அச்சேரனுக்குரியதாயிற்று (அகநா. 209)

கொல்லிப்பாவை: இது கொல்லிமலையின் மேல்புறத்திலே தெய்வத்தால் அமைக்கப்பட்டது; இது கண்டோர் நெஞ்சங் கலங்கி மயங்கி வீழ்ந்து உயிர்விடச் செய்வது. தலைவிக்கு உவமையாக இப்பாவை இந்நூல் 100-ஆம் செய்யுளிலும் கூறப் பட்டுள்ளது இது நகைத்துத் தன் முன் வந்தாரைக் கொல்லு மென்பர் (சித்திர மடல்.)

தலைவன் வரையாமல் வந்து ஒழுகினானாக, அதனை ஆற்றாது வருந்திய தலைவி ஏனையோருடன் உரலில் தானியத்தை இடிப்பா ளாய்க தலைவனைப் பாடி ஆற்றினாள்; அங்ஙனம் அவள் பாடியதையறிந்து உடனிருந்த மகளிர், தலைவி ஒரு தலைவன்பாற் காதலுடையா ளென்றுணர்ந்து அலர் கூறினர். தலைவன் வேலிப் புறத்தில் இருக்கும்போது தோழி இச்செய்தியைத் தன்னுள்ளே கூறுவாள்போன்று சொல்லித் தலைவியின் நிலையைப்புலப்படுத்தி விரைவில் வரைந்து கொள்ள வேண்டுமென்னும் குறிப்பைத் தலைவனுக்கு உணர்த்தினாள். இங்ஙனம் உணர்த்தியதனால் அவன் ஆராய்ந்து விரைவில் மணத்திற்குரியன செய்தல் பயன. இவை கலித்தொகை 43 - ஆம் செய்யுளாலும், அதன் கருத்தாகிய,

> 'இது வரைவு நீட ஆற்றாளாயினவிடத்துத் தோழி தானும் தலைவியும் வள்ளைப்பாடலும் முருகனைப் பாடுவார்போல இரு வர்க்கும் ஏற்பத் தலைவனைப் பாடத் தலைவி ஆற்றினமை தோழி தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகக் கூறியது'

என்பதனாலும், அச்செய்யுளின் விசேடவுரையில் நச்சினார்க்கினியர்,

> 'எனத் தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புற மாகக் கூறினாள், அவன் கடிதாக வரைதற்கு. இதனால், தலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது'

என்றெழுதியவற்றாலும் விளங்கும்.

தலைமகள் தன் நெஞ்சுமிக்கது வாய்சோர்ந்து தலைவனைப் பாடினாள்;

> "பொன்னை மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்
> உன்னேனென் றூழுலக்கை பற்றினேற்—கன்னே
> மனமெனி வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
> புனலுடன் பேரே வரும்" (யா - கா. 9, மேற்.)

என்பதனைக் காண்க.

'அழிவ தெவன்கொல்' என்றது, இப்பேதையூரினர் நுவலுத லால் நன்மையே யுண்டாமாதலின் இதற்கு வருந்தல் வேண்டா வென்னும் குறிப்பினது.

கொல், ஏகாரங்கள் : அசைநிலைகள்.

இம்மெல்லியற் குறுமகளென்றபையின் தலைவியும அருகி லிருந்தமை பெறப்படும.

'வள்ளைப் பாட்டைத் தலைவனோடு தொடர்பில்லா அயலார் களும் பாடுகின்றார்கள் ; அங்ஙனம் இருப்ப இவள் பாடியதால் வரும் ஏதம் யாது?' என்று கினறவாறே பொருள் செய்தலும் ஒன்று தலைவி தன் நலன் இழந்தமையால் வள்ளைப் பாட்டை பாடினள் ; அதைப்பற்றி ஊரவர் பழிமொழி கூறுகின்றனர். அவ்வாறு கூறுவதற்கு அவர்க்கு வந்த கேடு யாதெனப் பொருள் கூறலும் ஒன்று ; " கல்லக வெற்பன் சொல்லிற் றேறி. யாமெந் நலனிழந் தனமே யாமத், தலர்வாய்ப் பெண்டி ரம்பலொ டொன்றிப், புரையி றீமொழி பயிற்றிய வுரையெடுத், தாணுக் கெளவைத் தாகத், தானென் னிழந்தி வ்வழுங்க லூரே " (நற். 36 : 4-9.)

இரண்டாவது கருத்துக்கு இயைபு வருமாறு : பாடினள் - தலைவனது கொடுமையைப் பாடினளாய் ; ஏதின் மாக்கள் · தலைவியோடு உற வில்லாத பரத்தையர். தலைவி, தலைவன் பரத்தையர்பால் அமைந் திருக்கும் கொடுமையையும், பரத்தையர் அவனை விடாது பற்றி யிருக்கும் தன்மையையும் பாடிக் குற்றினளாக, அது கேட்டுப் பரத்தையர் தலைவியை இழித்துரைத்தனளென்று கேட்ட தோழி, " தலைவி பாடிக் குற்றினல் பரத்தையர் குறை கூறுதல் என்? அவர்கள் கூறுவது கூறுக. யாம் அஞ்சேம் " என்று வாயில்கள் கேட்குப்படி கூறி வாயில் மறுத்தாள்.

இக்கருத்து முன்னையதினும் சிறப்புடையதன்று.

(மேற்.) மு. தலைவன் ஒழுகலாறு புறத்தார்க்குப் புலனாகி அலர் தூற்றப் பட்ட இடத்துத் தோழியைச் செவிலி வினவியது (தொல். களவு. 25, இளம்.); செவிலி தானே கூறியது (தொல். உவம. 25, ந.)

(ஒப்பு.) 1. பாவடி: குறுந். 180 : 1 ; புறநா. 233. வள்ளைப்பாட்டு : "கிணை குறு மகளிரிசைபடு வள்ளையும்" (மலைபடு. 342); "கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாகாம், வள்ளை யகவுவம் வா" (கலி. 42 : 7-8); "அறையுர னிறைய வைவனப் பாசவல், இசையொடு தன் னைய ரியல்புபுகழ்ந் திடிக்கும், அம்மனை வள்ளை " (பெருங். 2. 14 : 50-52); " பைம்பொன் னறைமேற் பவழ மூரலாக, வம்ப மணிபெய்து வான்கேழ் மருப்போச்சி, அம்பொன் மலிசிலம்ப வம்மனை வள்ளையுடன், கம்பஞ்செய் யானைக் கரியவனைப்

பாடினர்" (சூளா. சுயம்வரச். 106); "மனையளகு, வள்ளைக் குறங்கும் வளநாட" (திருவள்ளுவ. 5); "வள்ளை வெள்ளை நகையார்" (திருச்சிற். 221.); மலைபடு. 360; கலி. 42.

2. மாக்கள்: குறுந். 6: 2, ஒப்பு. ஏதின் மாக்கள்: புறநா. 58: 27. நுவறலு நுவல்ப: குறுந். 37: 1, ஒப்பு.

3. பேதையூர்: குறுந். 159: 7, 276: 7-8.

4 - 6. கொல்லிமலையில் தெய்வம் எழுதிய பாவை: "பொறையன், உரைசா, லுயர்வரைக் கொல்லிக் குடவயின், ...நெடுவரைத் தெய்வ மெழுதிய, வினைமாண் பாவை யன்னேள்", "பயங்கெழு பலவின் கொல்லிக் குடவரைப், பூதம் புணர்த்த புகிழியல் பாவை, விரிகதி ரிளவெயிற் ரோன்றி யன்னநின்" (நற். 185: 6-11, 192: 8-10); "பொறையன் கொல்லி, ஒளிறுநீ ரடுக்கத்து வியலகம் பொற்பக், கடவு ளெழுதிய பாவையின், மடவது மாண்ட மாஅ யோளே", "கொல்லி, நிலைபெறு கடவு ளாக்கிய, பலர்புகழ் பாவை யன்னநின் னலனே" (அகநா. 62: 13-6, 209: 15-7); 'தெய்வப்பாவை - தெய்வத்தாற் செய்த கொல்லிப் பாவை' (சீவக. 657, ந.) கொல்லிப்பாவை: நற். 201: 5-11; கலி. 56: 7, நூ. சிலப். 6: 61, அடியார். சீவக 197, 667, ந.

7. மெல்லியல்: குறுந். 70: 5, 137: 1. தலைவியைக் குறுமகள் என்றல்: குறுந். 70: 1, 95: 3, 101: 5, 189: 6, 267: 5, 275: 1, 280: 3, 265: 5. (அக)

தோழி கூற்று

[தலைவன் வரையாமல் நெடுங்காலம் தலைவியோடு பழகிய போது ஒருநாள் அவன் வேலிப்புறத்திலே வந்துநிற்ப அவன் கேட்கும்படி தலைவியை நோக்கிக் கூறுவளாகி, "தலைவனது கேண்மையினுல் நின்மேனிக்கு வாட்டம் நேர்ந்ததேனும் நீ அன்பிற் குறைந்தாயல்லை" என்று தலைவியின் நிலையைத் தோழி புலப் படுத்தியது.]

கூ0. எற்றோ வாழி தோழி முற்றுபு
கறிவள ரடுக்கத் திரவின் முழங்கிய
மங்குன் மாமழை வீழ்ந்தெனப் பொங்குமயிர்க்
கலைதொட விழுக்கிய பூநாறு பலவுக்கனி
5. வரையிழி யருவி யுண்டுறைத் தருஉம்
குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பீன் றன்றே.

எ - து. வரைவு நீட்டித்தவழி ஆற்ருளாகிய தலைமகட்குத் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்.

(பி - ம்) 3 'மருங்குன்' 4 'பலவுக்கனியினை வரை' 5 'யுண்டுறை' சால்பின் றன்றே'

(ப - ரை.) தோழி—, முற்றுபு - சூல் முற்றி, கறி வளர் அடுக்கத்து - மிளகு கொடி வளர்கின்ற மலைப்பக்கத்தில், இரவில் முழங்கிய - இராக்காலத்தில் முழக்கத்தைச் செய்த, மங்குல் மா மழை - மேகத்தினது பெரிய மழைக்கால், வீழ்ந்தென - வீழ்ந்தன வாக, பொங்கு மயிர் கலை - மிக்க மயிரையுடைய ஆண் குரங்கு, தொட - தீண்டியதனல், இழுக்கிய - நழுவிய, பூ நாறு பலவு கனி - மலர்மணத்தை வீசும் பலாப்பழத்தை, வரை இழி அருவி - மலைப் பக்கத்தில் வீழும் அருவியானது, உண் துறை தரூஉம் - நீருண்ணுந் துறையின்கண் கொணடு வருகின்ற, குன்றம் நாடன் கேண்மை - குன்றுகளுள்ள நாட்டையுடைய தலைவனது நட்பு, மெல் தோள் சாய்த்தும் - நின் மெல்லிய தோள்களை மெலியச் செய்தும், சால்பு ஈன்றன்று - அமைதியைத் தந்தது, இஃது, எற்று - எத்தகையது!

(முடிபு) தோழி, குன்றநாடன் கேண்மை தோள் சாய்த்தும் சால்பு ஈன்றன்று; இஃது எற்றே!

(கருத்து) நீ மெலிந்தாயாயினும் இயல்பு வேறுபட்டாயல்லை.

(வி - ரை.) எற்று - எத்தகையது; என்ன வியப்பைத் தருவ தென்பது நினைவு; மெலிவைத் தருவதற்கும் அமைதியைத் தருவ தற்கும் ஒருங்கே காரணமாயிருப்பது வியப்பாதலின் 'எற்றே' என்ருள். முற்றுபு - சூழ்ந்தெனலுமாம். அடுக்கம் - பக்கமலை (முருகு. 42, ந.) இரவில் முழங்கிப் பெய்த மழையினல் அருவி உண்டாகி அது காலையில் பலாப்பழத்தை உண்டுறையினிடத்தே தந்தது. பூ நாறு - பூவைப் போன்ற மணத்தை வீசும்; மலர்களே மணம் வீசுதலிற் சிறப்புடையவை; பலவின் பழம் நெடுந்தூரத்தி லுள்ளாரும் அறிதற்குரிய மணத்தை வீசுதலால் பூ நாறு பலவுக் கனி யென்ருர்.

உண்துறை - ஊரினர் நீர் உண்ணுகின்ற துறை. இயல் பாகவே மென்மையையுடைய தோள் மெலிந்ததென்பாள் மென் ருள் சாய்த்து மென்ருள். சால்பாவது, தலைவன் வரைந்து கொள்வானென்னும் உறுதியோடு அமைதல்.

ஓ, வாழி, ஏ அசைநிலைகள்.

இதனல் தலைவியின் மெலிவையும் அவளது அன்பின் உறு

தியையும் தோழி தலைவனுக்கு அறிவித்து விரைவில் மணம் புரிந்துகொள்ள வேண்டியதன் இன்றியமையாமையைப் புலப் படுத்தினளாயிற்று.

மலையுச்சியிலே கலையால் விரும்பப்பட்ட பழத்தை அதன் கைப்படாதபடி அருவியானது பலரும் அறியத் தான் பயன்படும் துறையின்கண் சேர்த்து அப்பழத்தையும் பயன்பட வைத்தது போல, பிறரால் வரைந்து கோடற்கு உரிய நிலையிலுள்ள தலைவியை அவர் பெருமற்செய்து தான்மணந்து தான் பிறர்க் குதவிசெய்து வாழும் தனது இல்லத்தின்கண் அவளையும் விருந் தோம்பல் முதலிய அறம்புரியச் செய்வித்தற்குரியனென்பது குறிப்பு.

(மேற்.) மு. 'கேண்மை தோன்ற மெலிவித்ததாயினும் எனக்கு அமைதி யைத் தந்தது; யான் ஆற்றவும், தான் மெலிதல் பொருந்தாதது எத்தன் மைத்தெனத் தலைவி தோழிக்குக் கூறியவாறு காண்க; கலிதீண்ட வழுக்கி வீழ்ந்த பழத்தை அருவி பின்னும் பயன்படுத்தும் நாடன் என்றதனானே அவரால் நம் சுற்றத்திற் பிரிந்தேமாயினும் அவன் நம்மை வரைந்து கொண்டு இல்லறம் செய்வித்துப் பயன்படுத்துவனென்பதாம்' (தொல். பொருள். 9, ந.)

(கு - பு.) இதனால் நச்சினார்க்கினியர் இச்செய்யுளைத் தலைவி கூற்றாகக் கொண்டாரென்று தெரிகிறது; அது சிறப்புடையது.

(ஒப்பு.) 2. கறிவளர் அடுக்கம்: குறுந். 288: 1; நற். 151: 7; கலி. 52: 17.

4. மழைவிற்றல்: பெரும்பாண். 363; அகநா. 182: 9-10, 323: 13, 364: 1-2.

கலைதொட்ட பலவுக்கனி: குறுந். 342: 1, 373: 4-6.

4-5. அருவி பலாப்பழத்தைக் கொணர்தல்: "ஆசினி முதுசுளைகலாவ... இழுமென விழிதரு மருவி" (முருகு. 301-16); "அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்" (மலைபடு. 174.)

2-5. இரவில் மழைபெய்தலால் அருவி உண்டாதல்: குறுந். 42: 1-3, ஒப்பு.

7. தோள் மெலிதல்: குறுந். 87: 5, ஒப்பு.

6-7. தலைவன் கேண்மை மெலிவித்தும் சால்புடையதாதல்: குறுந். 264: 4-5; நற். 136: 7-9. (கூ)

தலைவி கூற்று

[பரத்தையரிடம் சென்று மீண்டுவந்த தலைவன் தலைவியினது உடம்பாட்டை வேண்டி நின்றவிடத்து அவன்பால் ஊடலை யுடையவளாயினும் தன் நெஞ்சம் அவன்பாற் செல்வதையறிந்த

தலைவி, "நீ அவன்பால் அன்புடையையாகி இருப்பின் பலநாள் துஞ்சா துறையும் துன்பத்தையடைவாய்" என்று கூறியது.]

கூக. அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
5. ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சி
கொன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

எ - து. (1) பரத்தையர் மாட்டுப் பிரிந்த தலைமகன், வாயில் வேண்டிப் புக்கவழித் தன் வரைத்தன்றி அவன் வரைத்தாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழித் தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.

[நெஞ்சு தலைவன் வரைத்தாதல்: கலி. 67: 21, 77: 21-4, 90: 28-9, 91: 22-4; அகநா. 26: 26; குறள், 1259, 1260, 1284, 1291.]

(2) பரத்தையிற் பிரிந்து வந்தவழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி * கூறியதூஉமாம்.

ஔவையார்.

(பி-ம்) 1 'அரிப்பவர்ப் பரம்பின்' 2 'ரிலஞ்சி'

(ப - ரை.) நெஞ்சே, அரில் - ஒன்றோடொன்று பிணங்குதலையுடைய, பவர் பிரம்பின் - பிரப்பங்கொடியின், வரி புற விளைகனி - புறத்தே வரிகளையுடைய விளைந்த பழத்தை, குண்டு நீர் இலஞ்சி கெண்டை - ஆழமாகிய நீரையுடைய குளத்திலுள்ள கெண்டைமீன், கதூஉம் - கவ்வுதற்கிடமாகிய, தண் துறை ஊரன் - தண்ணிய நீர்த் துறைகளையுடைய ஊர்த் தலைவனுக்குரிய, பெண்டினை ஆயின் - மனைவியாக நீ இருப்பின், நின் நெஞ்சில் படர் பல ஆகுக - நின் உள்ளத்தில் துன்பம் பலவாக ஆகுக! ஓவாது ஈயும் - காலமும் இடமும் பெறுவார் தகுதியும் நோக்கி யொழியாமல் எப்பொழுதும் கொடுக்கும், மாரி வண்கை - மேகம்போன்று கைம்மாறு கருதாத வண்மையையுடைய கையினையும், கடு பகடு யானை - விரைந்தசெலவையுடைய ஆண்

* கழறியதென்பது சிறப்புடையது.

யானைகளையும், நெடு தேர் - உயர்ந்த தேர்களையும் உடைய, அஞ்சி-அதியமான் அஞ்சியென்னும் உபகாரியினது, கொன் முனை - அச்சத்தைச் செய்யும் போர்க்களத்தில் உள்ள, இரவு ஊர் போல - இரவையுடைய ஊரிலுள்ளார் போல, நீ துஞ்சும் நாள் - நீ துயிலும் நாட்கள், சில ஆகுக - சிலவே ஆகுக!

(முடிபு) நெஞ்சே, ஊரன் பெண்டினையாயின், நின் நெஞ்சிற் படர் பலவாகுக; நீ துஞ்சும் நாள் சில ஆகுக!

(கருத்து) தலைவன்பால் இரங்கி இப்பொழுது உடம்பட்டாலும் பின்னும் தன் ஒழுக்கத்தினின்றும் அவன் மாறுபடான்.

(வி - ரை.) நெஞ்சே என்னும் விளி முன்னத்தால் வருவிக்கப் பட்டது. அரில் - கொடிப்பிணக்கு (மலைபடு. 379, ந.) நெஞ்சினை உணர்வுடையதுபோலக் கூறியது இது (தொல். பொருள். 2.)

'தலைவனுக்கு உடம்பட்டு அளவளாவுவையேல் மீண்டும் அவன் பிரிய அதனால் உண்டாகும் துன்பம் பலவாகும்; அதனால் நீ துயில்கின்ற நாட்களோ சிலவாகும்' என்றாள். பெண்டினையாயினென்றது கற்புக்கடம் நோக்கித் தலைவன் கொடுமையை மறந்து உடம்பட்டு ஒழுகும் தன்மையை யுடையையாயினென்ற வாறு. நெஞ்சிற்கு நெஞ்சுகூறுதல் மரபு.

அஞ்சி: அதியமான் நெடுமான் அஞ்சி; இவன் ஏழு வள்ளல்களுள் ஒருவன்; இவனுக்குரியது தகடூர்.

"யானையுடைய படை" (இனியது. 5) என்று படைப்பெருமைக்கு யானையைக் கூறுபவாதலின், அதனை முன்னர்க் கூறினாள். கொன்: அச்சப்பொருளைத் தரும் இடைச்சொல்; கொல்முனை - பகைவர்களைக் கொல்லுகின்ற போர்முனை யெனலுமாம்.

போர்க்களமுள்ள ஊரினர் அச்சத்தால் இரவில் தூங்காராதலின் அவரை உவமை கூறினாள்.

பிரம்பினிடத்தே காய்த்துப் பழுத்து முதிர்ந்த கனியை எளிதிற் கெண்டை பெறும் ஊரனென்றது, தன்னுடைய சிறப்பால் அன்பும் செல்வமும் முதிர்ந்த தலைவனைப் பரத்தையர் எளிதிற் கவர்ந்து கொள்வரென்னும் குறிப்பினது.

ஏகாரங்கள் அசைநிலை.

இரண்டாவது கருத்து: தலைவன் பரத்தையிற் பிரிந்துவந்து வாயில் வேண்டியவழித் தலைமகள் அவனை எதிர்கொள்ளும் குறிப்பினளாதலை அறிந்த தோழி, "அவன் இத்துணைக் கொடுமையுடையவனாக இருந்தும் அதனை மறந்து நின் கற்பொழுக்கத்துக்கியைய ஒழுகுவாயாயின், மீண்டும் அவன் கொடுமைக்கு ஆளாகித் துன்புறுவாய்" என்று கூறியது. இந்தக்கருத்து

மூன்னேயதினும் சிறப்புடையதாகத் தோற்றுகின்றது. வேறு பட்ட - ஊடலினின்றும் வேறுபட்ட ; "காணுங்காற் காணேன் றவருரு காணுக்காற், காணேன் றவறல் லவை" (குறள், 1286.)

(மேற்.) 7. கொன்னென்னும் இடைச்சொல் மூன்னையை விசேடித்து நின்றது (தொல். எச்ச. 60, உ.)

7-8. கொன்னென்னும் இடைச்சொல் அச்சப்பொருளில் வந்தது (தொல். இடை. 6, இளம், சே, தெய்வச், கல், உ; இ. வி. 265.)

மு. தான் மனேயாளை ஒத்தலால் தன்போல்வார் தலேவனுக்கு மிகை யெனக் குறித்த கோளின்கண் காமக்கிழத்தி கூறியது (தொல். கற்பு. 10, இளம்.) ; அகப்பாட்டினுள் பாட்டுடைத் தலேவன் பெயரும் (அஞ்சி யென் பதும்), கிளவித் தலேவன் பெயரும் (ஊரன் என்பதும்) வந்தன (நம்பி. 249.)

(ஒப்பு.) 1. அரிற்பவர்ப் பிரம்பு : குறுந். 364 : 1; அகநா. 6 : 19.

2. கதூஉம் : குறுந். 8 : 2, ஒப்பு.

1-2. பிரம்பும் கெண்டையும் : பெரும்பாண். 287-8; அகநா. 156 : 6.

3. ஊரன்பெண்டு . "நின், பெண்டெனப் பிறர் கூறும்" (கலி. 77 : 10 - 11.)

5. மாரி வண்கை : "பெயன்மழைத் தடக்கை" (சிறுபாண். 124) ; "வான வண்கை" (மதுரைக். 442) ; "வான நாண வரையாது சென் றோர்க், கானு நீயுங் கவிகை வண்மை" (புறநா. 54 : 6 - 7) ; "மழை யொன்று வண்டடக்கை" (தொல். உவம. 11, பேர். மேற்.); "எழிலி வான மெள்ளினன் றரூஉங், கவிகை வண்கை", "மழைவிழை தடக்கை" (தொல். உவம. 14, பேர். மேற்.) ; "மழை தழீஇய கையாய்" (சீவக. 2779.)

6. நெடுந்தேரஞ்சி : "கடும்பரிப் புரவி நெடுந்தே ரஞ்சி" (அகநா. 352 : 12.)

7-8. கொன்முனே இரவூர் துஞ்சாமை : "பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே" (குறுந். 292 : 8) ; "துஞ்சாக் கண்ண வடபுலத் தரசே" (புறநா. 31 : 17.); "மறங்கால்வே லண்ணல் வரும்வருமென் றேங்கி, உறங்கா வடவேந்த ரூர்" (சிலாசாஸனப் பாடல்.) (சுக)

தலேவி கூற்று

[மாலேப்பொழுது வந்ததுகண்டு தலேவி, "பறவைகள் தம் பார்ப்புக்களுக்குரிய இரையை வாய்க்கொண்டு தம் கூடுகளே நோக்கிச் செல்கின்றன" என்று கூறி, "இனி ஆற்றேன்" என் பதுணர்த்தியது.]

உஉ. ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

இறையுற வோங்கிய நெறியயன் மரா அத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
5. *இரைகொண் டமையின் விரையுமாற் செலவே.*

எ - து. காமமிக்க கழிபடர் கிளவியாற் பொழுது கண்டு சொல்லியது.

[கழிபடர் கிளவி - மிக்க துன்பத்தைப் புலப்படுத்துஞ் சொல்.]

தாமோதரன்.

(பி - ம்.) 3 'மரத்த', 'மாத்த', 'மராத்த' 5 'இரை கொண்டவையும்'

(ப - ரை.) ஞாயிறு பட்ட - கதிரவன் மறைந்த, அகல் வாய் வானத்து - அகன்ற இடம் பொருந்திய ஆகாயத்தில், கொடு சிறை பறவை - வளைந்த சிறகுகளையுடைய பறவைகள், இறை உற ஓங்கிய - தாம் தங்கும்படி உயர்ந்த, நெறி அயல் மராஅத்த - வழியின் அயலில் வளர்ந்த கடம்பின்கண் உள்ள கூட்டிலிருக்கும், பிள்ளை - குஞ்சுகளின், உள் வாய் செரீஇய - வாயினுள்ளே செருகும் பொருட்டு, இரை கொண்டமையின் - இரையைத் தம் அலகில் எடுத்துக் கொண்டமையால், செலவு விரையும் - விரைந்து செல்லும்; அளிய - அவை இரங்கத்தக்கன.

(முடிபு) பறவை செலவு விரையும்; அளிய.

(கருத்து) மாலைக்காலம் வந்தது; இனிக் காமநோயை ஆற்றேன்.

(வி - ரை.) படுதல் - மறைதல்; "படுசுடரமையம்" (அகநா. 48 : 23) என்பது காண்க.

மாலைக்காலத்திற் பறவைகள் தம் கூட்டிற்கு வந்து அடங்கும்; "குரீஇ...இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும், புன்கண் மாலை" (குறுந். 46), "விலங்கும் பறவையும் வீழ்துணைப் படர" (பெருங். 1. மாலைப்புலம்பல், 43.) இறையுறல் - தங்குதல்; "புன்னைத் தடவுநிலை மாச்சினைப், புள்ளிறை கூரும்" (அகநா. 10 : 3-4) என்பதையும், 'இறை கூரும் - தங்குதல் மிகும்' என்னும் அதன் உரைக்குறிப்பையும் பார்க்க. "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" (தொல். மரபு. 4) என்பது விதியாகலின், பறவைக் குஞ்சைப் பிள்ளையென்றுள். செரீஇய - செருகும்பொருட்டு; செருகியென்பது செரீஇயென்று வந்தது (குறுந். 295 : 1); இங்ஙனமே பருகியென்பது பரீஇயென (நாலடி. 220) வருதல் காண்க.

தாம், ஆல், ஏ : அசைநிலைகள்.

இதனுல் தலேவி மாலேப்பொழுது வந்ததை யறிந்து காமநோய் மிகப்பெற்று ஆற்ருளாயினளென்பது பெறப்படும்.

(மேற்.) மு. இரங்கல் நிமித்தமென்னும் உரிப்பொருள் வந்தது (தொல். அகத். 14, ந.); தலேவிக்குக் காமம் சிறந்து தோன்றினமையின் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. அகல்வாய் வானம்: குறுந். 44 : 3, ஒப்பு.

2. கொடுஞ்சிறைப் பறவை: "கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை" (குறுந். 352 : 2.)

3. நெறியயன் மராம்: அகநா. 121 : 8.

4. பிள்ளே: குறுந். 46 : 5, 139 : 4.

2-4. பறவை இரையைப் பிள்ளேயின் வாயிற் செருகுதல்: "இரை தேருந் தடந்தா ணுரை, ஐய சிறுகட் செங்கடைச் சிறுமீன், மேக்குயர் சினேயின் மீமிசைக் குடம்பைத், தாய்ப்பயிர் பிள்ளே வாய்ப்படச் சொரியும்" (நற். 91 : 4 - 7); "கழனி யாரல் கவுளகத் தடக்கிப், பழன மருகிற் பார்ப்பு வாய்ச் சொரிந்து, கருங்கா ணுரை நரன்றுவந் திறுப்ப", "பல்சிறைப் புறவம் பரிந்துட ணுடி, அவ்வாய்க் கொண்ட வாரிரை யமிழ்தம், செவ் வாய்ப் பார்ப்பிற்குச் சேர்ந்தவண் சொரிதலின்" (பெரும். 3. 7 : 29-31, 5. 1 : 68-70.) (கூஉ)

தலேவி கூற்று

[பரத்தையிற் பிரிந்துவந்த தலேமகனுக்குத் தூதாகவந்து, "நீ சினவற்க; அவர் அன்புடையார்" என்ற தோழிக்கு, "அவர் நம் மால் உபசரித்து வழிபடற்குரியவரே யன்றி அளவளாவி மகிழ் தற்குரியரல்லர்" என்று தலேவி கூறியது.]

கூடு. நன்னலந் தொலேய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினு முரைய லவர்நமக்
கன்னேயு மத்தனு மல்லரோ தோழி
புலவியஃ தெவனே வன்பிலங் கடையே.

எ - து. வாயிலாகப் புக்க தோழிக்கு வாயில் மறுத்தது. அள்ளூர் நன்முல்லேயார்.

(பி - ம்) 1 "தொலேந்து' 3 'மல்லரோ, புலவி'

(ப - ரை.) தோழி—, நல் நலம் தொலேய - நல்ல பெண்மை நலம் கெடவும், நலம் மிக சாஅய் - மேனியழகு மிக மெலியவும், இன் உயிர் கழியினும் - எல்லாவற்றிலும் இனிய உயிர் நீங்கினுலும், உரையல் - அவர்பாற் பரிவு கூர்ந்த சொற்

கனைச் சொல்லற்க ; அவர் - தலைவர், நமக்கு—, அன்னையும் அத்தனும் அல்லரோ - தாயும் தந்தையும் அல்லரோ ? அன்பிலங்கடை - தலைவன் தலைவியர்பாலுள்ள அன்பு இல்லாவிடத்து; புலவி எவன் - ஊடல் உண்டாவது எதன்பொருட்டு ?

(முடிபு) தோழி, உரையல் ; அவர் நமக்கு அன்னையும் அத்தனும் அல்லரோ ? அன்பிலங்கடை, புலவி எவன் ?

(கருத்து) தலைவன் என்பால் மனைவியென்னும் கருத்துடன் அன்பு புரிந்தானல்லன்.

(வி - ரை.) நலம் இரண்டனுள் முன்னது பெண்மை நலம் ; இரண்டாவது அழகு.

" நீ அவர்மாட்டுப் புலத்தல் தகாது ; அவரை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் " என்று தோழி கூறினளாக, " என்னுடைய நலமும் உயிரும் தொலையுமேனும் பொறுத்துக்கொண்டு அவரை ஏற்றுக் கொள்ளல் என் கடன் ; அவர் அன்னையையும் அத்தனையும் போல உபசரிக்கத்தக்கவர் ; ஆயினும் தலைவராகக் கருதி அளவளாவுதற்குரிய அன்பு அவர்பால் இல்லை ; அவ்வன்பில்லார்மாட்டுப் புலவியும் அது தீர்தலும் என்ன பயனை உடையன ? நான் புலந்தேனல்லன் " என்று அயன்மை தோன்றத் தலைவி கூறினள். இவ்வயன்மைக்குறிப்பினுல் வாயில் மறுத்தாளாயிற்று.

அன்னையென்றுள் பிரிதற்கரிய தொடர்புடைமைபற்றி ; அத்தனென்றுள் அவன் ஆணைக்கடங்கி ஒழுகுதல்பற்றி. "ஊடுதல் காமத்துக் கின்ப மதற்கின்பம், கூடி முயங்கப் பெறின் " (குறள், 1330) என்பனவாகலின் காமமுள்ளார்க்கே புலவியும் அதனுற் பெறப்படும்பயனும் உளவாகும் ; அன்னையும் அத்தனும் போன்ற அவருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு பெற்றோர்க்கும் பிள்ளைக்கும் உள்ள தொடர்பேயாதலின் காமமில்லை ; ஆதலின் புலவி உண்டாவதற்கு ஏதுவில்லை யென்றபடி. அன்பிலங்கடை புலவியாற் பயனில்லை யென்றமையின், அன்புள்ள விடத்துப் புலவி பயன்பெறுமென்பதாயிற்று.

எவனே : ஓகாரம் அசைநிலை ; கடையே : ஏ அசைநிலை. அஃது : பகுதிப்பொருள் விகுதி.

(மேற்.) 2 - 4. செறலின்கட் பால் மயங்கியது (நன். 378, மயிலை.)

மு. தலைவனைத் தலைவி காய்தற்கண் வந்தது (தொல். கற்பு. 6 இளம், ந.) ; [1] தோழி, தலைவனை அன்பிலை கொடியையெனக் கேட்ட தலைவன் முனிந்த உள்ளத்தனுங் கொல்லோவென ஐயுற்று அவனது குறிப்பை அறிதல் வேண்டியும், தனது நெஞ்சில் நிறைந்து நின்ற ஊடல்

[1] இக்கருத்து சிறப்புடையது.

கையிகந்து தனியாகிய வழி இஃது அவற்கு எவனுங் கொல்லென அஞ்சிய வழியும் தலைவி தலைவனோடு அயன்மையுடைய சொல்லித் தோற்றுவிக்கவும் பெறும்; 'நன்னலம்...கடையே: என்பதனுள், அவரை அன்பிலை கொடியை யென்னுதி, அன்பில்வழி நின்புலவி அவரை என்செய்யும்? அவர் நமக்கு இன்றியமையாத எமரல்லரோ வென இருவகையானும் அயன்மை கூறியவாறு காண்க' (தொல். கற்பு. 18, ந.)

(ஒப்பு.) 4. "நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியும்
காதல ரில்லா வழி",
"நீரு நிழல தின்றே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது" (குறள், 1308-9.) (கூக)

தலைவி கூற்று

[தலைவன் மீள்வதாகக் கூறிச்சென்ற கார்ப்பருவம் வந்ததை யறிந்த தோழி 'தலைவி இதுகண்டு ஆற்றுள்' என வருந்தினளாக அதனையறிந்த தலைவி, "இன்னும் கார்ப்பருவம் வரவில்லை; ஆயினும் மேகம் முழங்குகின்றது; நான் ஆற்றுவேன்; தலைவர் இது கேட்டு விரைமுடியாமல் மீள்வரோவென்றே அஞ்சினேன்" என்று கூறியது.]

கூசு. பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே
யானே மருள்வேன் றோழி பானாள்
இன்னுந் தமியர் கேட்பிற் பெயர்த்தும்
5. என்னை குவர்கொல் பிரிந்திசி னோரே
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதருங் குரலே.

எ - து. பருவங்கண்டு ஆற்றுளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவலென்பதுபடத் தலைமகள் சொல்லியது.

கந்தக் கண்ணன் (பி - ம். கதக் கண்ணன்.)

(பி - ம்.) 4 'கேட்டிற்' 6 'மலைத்தக்க'

(ப - ரை.) தோழி—, பெரு தண் மாரி - பெரிய தண்மையையுடைய மழைக்காலத்துக்குரிய, பேதை பித்திகத்து அரும்பு - அறிவின்மையையுடைய பிச்சியின் அரும்புகள், முன்னும் மிக சிவந்தன - தாம் சிவக்க வேண்டிய காலத்திற்கு முன்பே மிகச்சிவந்தன; யானே மருள்வேன - அவற்றைக் கண்டு இது கார்ப்பருவமென்று

நானு மயங்குவேன்? மயங்கேன்; ஆயினும், பிரிந்திசினோர் - என்னைப் பிரிந்திருப்பவராகிய, இன்னும் தமியர் - இன்னும் என் பால் வந்து சேராமல் தனித்து இருக்கும் தலைவர், அருவி மாமலை தத்த - அருவியானது பெரிய மலையிலே தத்தி வீழும்படி, கருவி மா மழை - தொகுதியாகிய பெரிய மேகத்தினது, சிலைதரும் குரல் - முழங்கும் ஓசையை, பானள் - நடு இரவில், கேட்பின் - கேட்டால், பெயர்த்தும் என் ஆகுவர் - தாம் முன்னரே பிரிவினால் வருந்துவதன்றிமீட்டும் எந்த நிலையை உடையவராவரோ!

(முடிபு) தோழி, பித்திகத் தரும்பு மிகச் சிவந்தன; யானே மருள்வேன்? பிரிந்திசினோர், இன்னுந் தமியர் மழைக்குரலைக் கேட்பின் என்னாகுவர்!

(கருத்து) தலைவர் இம்மேகமுழக்கத்தைக் கேட்டு வினைக் குறை முடியாமல் மீள்வாரோ?

(வி - ரை.) பெருந்தண் மாரிக்காலத்தில் சிவக்கவேண்டியவை மேகம் முழங்கிய மாத்திரத்தில் சிவந்தனவாதலின் இவை பேதை மையுடையனவென்னும் நினைவால் 'பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத் தரும்பு' என்றாள். பித்திகம் - பிச்சி; இது மழைக் காலத்து அரும்பிமலருமென்பது, "மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை" (குறுந், 168: 1, 222: 5) என்பதனால் விளங்கும். பருவத்தைத் தெரிவிக்கும் பொருள்களின்மேல் அறியாமையை ஏற்றிக் கூறும் மரபு இந்நூல் 66-ஆம் செய்யுளின் விசேடவுரையால் விளங்கும். பானள் = பால் + நாள்; பால் - பகுதி; என்றது நடுவைக் குறித்தது; பானள் - நடுயாமம் (கலி. 30: 9, ந.); நடு நாளென வருதலையுங் காண்க (குறுந். 69: 5.) யானே: ஏகாரம் எதிர்மறைப்பொருளது.

தலைவன் தன்னை நினைந்து வினையை முடிவுபோக்காது மீள் வனென்று தலைவி கூறுதல் மரபாதலை, "புணர்ந்துடன் போகிய" (தொல். கற்பு. 7, ந) என்பதன் உரையினால் உணரலாகும்.

பிரிந்திசினோர் - தலைவரைப் பிரிந்தோராகிய பிறமகளிரென்றலும் ஒன்று; பிறர் ஆற்றற்காரியரென்றெண்ணி வருந்து வேனையினேனென்றதாகக் கொள்க.

இசின் படர்க்கைக்கண் வந்தது. என்னாகுவர் கொலென்றது மீண்டு வருவாரோ வென்னும் நினைவிற்று. மழை பெய்தலினால் மலையில் அருவி உண்டாதலின், 'அருவிமாமலைத் தத்த' என்றாள்; இந்நூல் 42-ஆம் செய்யுளைப்பார்க்க. சிலைதரும்: ஒரு சொல்.

யானே என்பதிலுள்ளதையன்றி ஏனைய ஏகாரங்களும், கொல்லும் அசைநிலைகள்.

யானே மருள்வேனென்றமையின் ஆற்றுவலென்பது படவும், என்னுகுவர் கொல் பிரிந்திசினோரே யென்றமையின் தான் கவன்றமைக்குக் காரணந் தோன்றவும் தலைவி கூறினளாயிற்று.

(ஒப்பு.) 1. மாரிப் பித்திகம் : குறுந். 168 : 1 ; நற். 314 : 3 ; அகநா. 295 : 19.

1 - 2. பித்திகத்தின் அரும்பு சிவந்திருத்தல் : (குறுந். 222 : 5 - 6) ; "செவ்வரி யரும்பின் பைங்காற் பித்திகம்" (நெடுநல். 40, பா - ம்.)

பித்திகத்தின் அரும்பு மாரிக்காலத்துக்கு உரித்தாதலும் சிவந்திருத்தலும் : "மலி பெயற் கலித்த மாரிப் பித்திகத்துக், கொயலரு நிலைய பெயலேர் மண முகைச், செவ்வெரிந்" (அகநா. 42 : 1-3.)

3. பானள் : குறுந். 142 : 3, 145 : 3, 301 : 4, 311 : 4, 355 : 4, 375 : 5 ; கலி 30 : 9

6. அருவி தத்தல் : "தத்துற்று...இழுமென விழிதரு மருவி" (முருகு. 305 - 16.) தத்த - தாவ ; தஞ்சை. 26.

கருவி மாமழை : குறுந். 42 : 2, ஒப்பு ; நைடதம், நாட்டு. 1.

மழைக் குரல் : "மழைமுழங்கு கடுங்குரல்" (குறுந். 396 : 6.) (கூசை)

தலைவன் கூற்று

[தனது வேறுபாடு கண்டு வினவிய பாங்கனுக்கு, "ஒரு குறமகள்பாற் கொண்ட காமத்தால் என்கண் இஃது உண்டாயிற்று" என்று தலைவன் கூறியது.]

கூடு. மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகைத் ததும்பும் பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
5. நீயோ ரன்னவென் னுரனவித் தன்றே.

எ - து. தலைமகன் பாங்கிற்கு உரைத்தது.

கபிலர்.

(பி - ம்.) 2 'கண்முகைத்' 3 'குறமகள்'

(ப - ரை.) தோழ, மால் வரை இழிதரும் - பெரியமலையினிடத்து வீழும், அருவி—, கல் முகை ததும்பும் - பாறைகளின் வெடிப்புக்களில் ஒலிக்கும், பல் மலர் சாரல் - பலமலரையுடைய சாரலில் உள்ள, சிறு குடி குறவன் - சிற்றூரிலுள்ள குறவனுடைய, பெரு தோள் குறுமகள் - பெரிய தோளையுடைய சிறிய

மகளினது, நீர் ஓரன்ன சாயல் - நீரைப்போன்ற மென்மை, தீ ஓரன்ன என் உரன் அவித்தன்று - தீயை ஒத்த என் வலியைக் கெடச் செய்தது.

(முடிபு) குறுமகளது சாயல் என் உரனை அவித்தன்று.

(கருத்து) நான் ஒரு மலைவாணர் மகளைக் காமுற்றேன்.

(வி - ரை.) தோழிவென்னும் விளி முன்னத்தாற் பெறப்பட்டது. கல்முகை - மலைமுழைஞ்சுமாம். ததும்புதல் - ஒலித்தல். பன்மலர்ச் சாரலென்றுன், இயற்கைப் புணர்ச்சிபெற்றவிடம் அது வாதலால். பெருந்தோள் : மகளிருக்குத் தோள்பெருத்தல் அழகு ; குறுந். 71, வி - ரை. ஓரன்ன - ஒரு தன்மையையுடைய (தொல். நூன். 2, இளம்.); ஒத்த (கலி. 23 : 9.) தீயை வலிக்கு உவமை கூறும் மரபு, " தீயெழுந் தன்ன திறலினர் " (முருகு. 171) என்பதனாலும் புலப்படும். எதிர்ப்பட்ட பொருளை அழிக்கும் தன்மையதாகலின் தீயை எதிர்ப்படு பகையை அழிக்கும் வலிக்கு உவமை கூறுவர் ;

" வளித்தலைஇய தீயும்.....போல...தெறலும்.....உடையோய் "

(புறநா. 2 : 4-8) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

பகையையழிக்கும் தீயன்ன என் வலியைத் தீயை யழிக்கும் நீரன்ன குறமகளது மென்மை அழித்ததென்றுன் ;

" ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணரு முட்குமென் பீடு " (குறள், 1088)

என்பதில் இக்கருத்து விளங்குதல் காண்க.

பெருந்தோட்குறுமகளென்றது, குறிப்பால் என் உரன் அவிதற்கு அத்தோளும் காரணமாயதென்பதை உணர்த்தியது. குறுமகளென்றுன், பெருந்தலைமையையுடைய என் உரனவியச் செய்தாளென்னும் வியப்புத்தோன்ற.

தலைவன்பாற் சோர்வுகண்ட பாங்கன், " நினக்கு இவ்வாட்டம் எற்றினனையிற்று ?" என்று வினையினனுக, தலைவன், " குறுமகள் சாயலினையிற்று " என்றுன்.

ஏகாரம் அசைநிலை.

(மேற்.) 4-5. பொருளும் பொருளும் முரணின (தொல். செய். 95, ந, பேர்.); கட்டளையடியும் சிர்வகையடியும் முரணின (தொல். செய். 95, ந.)

(ஒப்பு.) 1-2. அருவி கன்முகையில் ஒலித்தல் : (குறுந். 42 : 2-3, ஒப்பு); " கன்முகை யருவி " (புறநா. 147 : 1, பி-ம்.)

3. குறவன் மகன் : ஐங். 255-60.

பெருந்தோள் : குறுந். 71 : 3, ஒப்பு.

குறுமகள் : குறுந். 89 : 7, ஒப்பு.

4. நீரை ஒத்த சாயல் : "புதுநிறை வந்த புனலஞ் சாயல்" (மலைபடு. 61); "வானி நீரினும், தீந்தண் சாயலன்" (பதிற். 86 : 12-3); "நீரினுஞ் சாயலுடையன்" "வேனிற் புனலன்ன நுங்கை", "நீரு ணிழற்போ னுடங்கிய மென்சாயல்" (கலி. 42 : 20, 84 : 38, 94 : 2); "நீரினு மினிய சாயற், பாரிவேள்" (புறநா. 105 : 7-8.) (கூடு)

தலைவி கூற்று

[தலைமகன் வரையாதுவந்து ஒழுகிய காலத்தில் அவனைத் தோழி இயற்பழித்தாளாக, அது கேட்ட தலைவி தோழியைச் சினந்து கூறியது.]

கூசு. அருவி வேங்கைப் பெருமலை நாடற்
கியானெவன் செய்கோ வென்றி;யானது
நகையென வுணரே னையின்
என்னை குவைகொ னன்னுத னீயே

எ - து. தலைமகனை இயற்பழித்துத் தெருட்டுந் தோழிக்குத் தலைமகள் இயற்படச் சொல்லியது.

[இயற்பழித்தல் - இயல்பைப் பழித்துக் கூறல். தெருடுதல் - தலைவியைத் தேற்றுதல்]

அள்ளூர் நன்முல்லை.

(ப - ரை.) நல் நுதல் - நல்ல நெற்றியை உடையாய், அருவி வேங்கை - அருவியினதருகில் வளர்ந்த வேங்கைமரங்களையுடைய, பெரு மலை நாடற்கு - பெரிய மலையையுடைய நாட்டுக்குரிய தலைவன் திறத்து, யான் எவன் செய்கு - நான் என்ன செய்வேன், என்றி - என்று கூறி அவனை இயற்பழித்தாய்; யான் அது நகை என உணரேன் ஆயின் - நீ அங்ஙனம் கூறியதை நான் விளையாட்டு மொழியென்று உட்கொண்டிரேனாயின், நீ என் ஆகுவை - நீ என்ன பாடு படுவாய்? மிகவும் துன்புறுவாயன்றே.

(முடிபு) நன்னுதல், நாடற்கு யான் எவன் செய்கோ என்றி; யான் அது நகையென உணரேனாயின், நீ என்னாகுவை?

(கருத்து) நீ தலைவனை இயற்பழித்தல் தகாது.

(வி - ரை.) தலைவன் விரைவில் வரையாமல் ஒழுகினானாக அவன் வரைதல் வேண்டிய தோழி, "தலைவன் நம் நிலையை அறியானாயினன்; அவன் திறத்து என்செய்வேன்!" என்று இயற்பழித்தாளாக, அவரை நீ அறியாது பழித்தாய். நீ கூறியதை

ஈகைப்பொருட்டுச் சொல்லியதாக உட்கொண்டேன்; இல்லையெனின் உன்னைத் தண்டம் செய்வேன்; அப்பொழுது நீ எங்கிலையினையாவாய்!" என்று தலைவி கூறினள்.

அருவி - அருவீ என்பதன் விகாரமெனலும் ஒன்று; "அருவியாம்பல்" (பதிற். 63: 19) என்பதன் உரையைப் பார்க்க. யானெனவன் செய்கோ வென்னுந் தொடர் விளைவுதல் கருதாது வெறுப்புக் குறிப்புடையது (ஐங். 154: 4, உரை.)

அருவி வேங்கைப் பெருமலை நாடனென்றது, அருவியானது தன்னைச் சார்ந்த வேங்கையைக் குறைவின்றிப் பாதுகாத்தலைப் போலத் தலைவனும் தன்னைச் சார்ந்த என்னைப் பாதுகாப்பானென்னும் குறிப்பை உணர்த்தியது; இக்குறிப்பினாலே தலைவி இயற்படச் சொன்னளாயிற்று.

ஓ, கொல், ஏ: அசைநிலைகள்.

(மேற்.) மு. தலைவன் வரைதலை விரும்பி இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழிந்தது (தொல். களவு, 16, ந.)

(ஒப்பு.) 1. அருவி வேங்கை: (குறுந். 134: 3-5); "அகிரிசை யருவிதன் னஞ்சிணை மிசைவீழ, முகிரிணா வீழ்கொண்ட முழுவுத்தா ளெரிவேங்கை" (கலி. 44: 3-4); "கறங்குவெள் ளருவி பிறங்குமலைக் கவாஅற, றேங்கம ழிணர வேங்கை" (அகநா. 118: 1-5.)

2. யானெவன் செய்கோ: குறுந். 25: 2; ஐங். 154: 4. (கசு)

தலைவி கூற்று

[தலைவன் வரையாமல் நெடுநாள் இருப்ப வருந்திய தலைவி, "எம்முடைய நட்பினை யாவரும் அறிந்தனர்; இன்னும் தலைவர் வரையும் முயற்சியை மேற்கொண்டாரல்லர்" என்று கூறியது.]

கூ யானை யீண்டை யேனை யென்னலனே
ஆனை நோயொடு கான லஃதே
துறைவன் றம்மூ ரானை
முறையல ராகி மன்றத் தஃதே.

எ - து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

வெண்பூதி.

(பி - ம்.) 1 'யென்னலன்'

(ப - ரை.) தோழி, யான் ஈண்டையேன் - நான் இவ்விடத்தில் தனியே உள்ளேன்; என் நலன் ஆனை நோயொடு கானலஃது -

எனது பெண்மைநலம் என்னின் நீங்கி அமையாத வருத்தத்தோடு கடற்கரைச் சோலையினிடத்தது; துறைவன் தம் ஊரான்-தலைவன் தனது ஊரினிடத்துள்ளான்; மறை - எம்மிடையே உள்ள மந்தணமாகிய நட்பைப்பற்றிய செய்தியானது, அலர் ஆகி - பலர் அறியும் பழிமொழியாகி, மன்றத்தஃது - பொதுவிடத்தின்கண் பரவியுள்ளது.

(முடிபு.) யான் ஈண்டையேன்; என் நலன் கானலஃது; துறைவன் தம்மூரான்; மறை மன்றத்தஃது.

(கருத்து) என் நலனுண்ட தலைவர் இன்னும் வரைதற்குரிய முயற்சியைச் செய்தாரல்லர்.

(வி-ரை.) யானென்றது தலைவனுல் வரைந்து கொள்ளப்பட்டு அவனுடன் இருத்தற்குரிய யானென்றும், என் நலனென்றது என்னேடு உடனிருந்து சிறப்புத் தருதற்குரியதென்றும் கொள்ளக் கிடந்தன. நலன் கானலஃதென்றது, நெய்தற்கண் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியைச் சுட்டியபடி. துறைவன் - நெய்தனிலத் தலைவன். தலைவனும் அவன் சுற்றத்தாரும் வாழுமிடமாதலின் அவரையு முளப்படுத்தித் தம்மூரானென்றுள். மறை - வெளிப்படாதிருந்த நட்பைப் பற்றிய செய்தி; 'தோழிநம் மறையே" (குறுந். 333 : 6) என்று பின்பும் வருதல் காண்க; "உட்கரந் துறையு முய்யா வரும்படர், செப்பல் வன்மையின்" (குறிஞ்சிப். 11 - 2) என்று கூறுவராதலின் மறையென்றுள். மன்று - பொதுவிடம்; இங்கே தந்தையையும் தன்னையரையும் குறித்தது (குறள், 1138, பரிமேல்.)

என்நலன் என்பாலும் யான் தலைவன்பாலும் இருக்கப்பெற்று இன்புற வேண்டியிருப்ப அங்ஙிலை பெற்றிலேனென்று இரங்கினுள். மறை வெளிப்பட்டுத் தமர் தலைவனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இருந்தும் தலைவன் வந்திலனென்பது கருத்து. மறை மன்றத்தஃது என்பதனுல் இனி, களவொழுக்கம் இயைபுடையதன்றென்பது பெறப்படும்.

ஏகாரங்கள் அசைநிலைகள். கானலஃது, மன்றத்தஃது: ஆய்தங்கள் விரிக்கும்வழி விரித்தல்.

(மேற்.) 2. ஆய்தம் பின் தோற்றிக்கொண்ட புள்ளி (தொல். செய். 18, பேர்.)

மு. சேணிடையின்றி இட்டிதாகப் பிரிந்துழித் தலைவி இரங்கிக் கூறியது (தொல். களவு. 20, ந.); மாட்டின்றி வந்த செய்யுள் (தொல். செய். 211, பேர், ந.) ஒருஉவண்ணம் வந்தது (தொல். செய். 227, பேர், ந.)

(ஒப்பு.) 1. மு. குறுந். 54 : 1.

1-2. தலைவி தன்நலனைக் கானலில் இழத்தல் : குறுந். 81 : 2-3, ஒப்பு.

தலைவி நலனிழத்தல் : குறுந். 54 : 1- 5, 125 : 4- 7.

4. அலர் மன்றற் பரவுதல் : " அலரு மன்றுபட் டன்றே " (அகநா. 201 : 10) : " காமம், மறையிறந்து மன்று படும் ", " என்காமம், மறையிறந்து மன்று படும் " (குறள், 1138, 1254.) (கூ)

தலைவி கூற்று

[தலைவன் தான் கூறிச்சென்ற பருவத்தே வாராமையால் வருந்திய தலைவி, " யான் பசலையுற்ற நிலையையும் பருவம் வந்தமையையும் யாரேனும் தலைவரிடம் சென்று அறிவுறுத்தினால் நலமாகும் " என்று தோழிக்குக் கூறியது.]

அ. இன்ன ளாயின ணன்னுத லென்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழிநம் படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
5. மாரிப் பீரத் தலர்சில கொண்டே.

எ - து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கோக்குளமுற்றன்.

(பி - ம்.) 2 ' துன்னர்ச் சென்று ' ' ' துன்னச் சென்று '.

(ப - ரை.) தோழி—, நம் படப்பை - நம்தோட்டத்திலுள்ள, நீர் வார் பைம்புதல் கலித்த - நீர் ஒழுகுகின்ற பசிய புதலினிடத்தே தழைத்துப் படர்ந்த, மாரி பீரத்து அலர் சில - மழைக்காலத்தில் மலரும் பீர்க்கின் மலர்கள் சிலவற்றை, கொண்டு - கைக்கொண்டு, அவர் துன்ன சென்று - தலைவரை நெருங்கச் சென்று, நல் நுதல் இன்னள் ஆயினள் - நல்ல நெற்றியையுடையதலைவி இவ்வலரைப் போன்ற பசலையை அடைந்தாள்,என்று செப்புநர் பெறின்-என்று அவர்பாற் சொல்லுவாரைப் பெற்றால், நன்று மன் - மிக்க உதவியாக இருக்கும்.

(முடிபு.) தோழி, பீரத்தலர் சிலகொண்டு அவர்த் துன்னச் சென்று இன்னளாயினளென்று செப்புநர்ப்பெறின் நன்றுமன்.

(கருத்து) நான் பசலை நோயட நிற்றலைத் தலைவர் அறிந்திலர்; அறியின் வரைவர்போலும்!

(வி - ரை.) நன்னுதலென்றது நீ கண்டபொழுது நன்னுதலா

யிருந்தாள், இப்போது பசலையுற்றாளென்னும் கருத்துடையது. நன்னுதல் இன்னளாயினளென்றமையின் அந்நுதல் பசலையுற்ற தென்றுணர்க; இந்நூல் 87 : 4-ஆம் அடியின் ஒப்புமைப் பகுதி யைப் பார்க்க. அவர் : நெஞ்சறிசுட்டு. பிறரறியத்தகாத மறை யாதலின் அவரை அணுகச்சென்று கூற வேண்டுமென்றாள். செப்புநர்ப்பெறினென்றது செப்புவாரைப் பெறுதல் அரியதாயிற் றென்றவாறு. மன் : மிகுதியை உணர்த்தியது; அது பெற்றிலே னெனலுமாம். வாழி : அசைநிலை; அங்ஙனம் செப்புவார் உள ரேல் அவர் வாழ்வாராக எனலும் பொருந்தும். படப்பை - தோட் டம்; இங்கே மணக்கருகிலுள்ள தோட்டம்; "படப்பை வேங்கை" (குறுந். 266 : 3) எனப் பின்னும் வருதல் காண்க.

மாரிக்காலமாதலின் நீர்வார் பைம்புதலாயிற்று. புதல்-செடி கள் அடர்ந்து வளர்ந்த செறிவு; இஃது இப்பொழுது புதரென வழங்கும். பீர்க்கு, கொடியாதலின் புதலிற்படர்ந்து தழைத்தது. மழைக்காலத்திலுள்ள நீர்நலத்தாற் புதலும் தழைத்துப் பசுமை பெற்றது; பீர்க்கும் தழைத்துப் பூப்பெற்றது. பீரம் - பீர்க்கு; அது மழைக்காலத்தில் மலர்வது.

பீரத்து அலரைக் காட்டுதல் தலைவியின் பசலையையும், மழைப் பருவம் வந்தமையையும் ஒருங்கே நினைவுறுத்தற்கு; இது குறிப்பு நுட்ப மென்னும் அணி.

தலைவன் வரைபொருட்குப் பிரிந்தானாக, அவன் கூறிச்சென்ற கார்ப்பருவம் வந்தகாலத்தில் அவன் வாராமையால் வருந்திய தலைவி "தலைவரது பிரிவினால் நான் பசலைபெற்றேன்; என் மேனி அழகு கழிந்தது. அவர் என் நிலையை அறியார் போலும்! யாரேனும் அவர் உள்ள இடத்திற்குச் சென்று 'நின் பிரிவினால் தலைவி நலனி ழந்து பசலையுற்றாள்; நீ கூறிய பருவமும் வந்தது' என்று நினை வுறுத்தினால் அவர் விரைந்துவந்து வரைந்துகொள்வர்" என்று கூறினாள்.

ஏகாரங்கள் அசைநிலைகள்.

இதில் பசலைபாய்தல், தூதுமுனிவின்மை யென்னும் மெய்ப் பாடுகள் வந்தன.

(மேற்.) 5. பீர் என்னும் சொல் அத்துச்சாரியை பெற்று வந்தது (தொல். புள்ளிமயங்கு. 68, ந; இ. வி. 133.)

மு. இயற்கைப்புணர்ச்சிப்பின் நிகழ்ந்தனவற்றைத் தலைவி தோழிக்கு நாணத்தால் உரையாளாயின் நோயட வருந்துவாள் (தொல். களவு. 21, இளம்.); 'மாரிப்பீரத்தலர் சில கொண்டே காட்டி இன்னளாயினள் நன்னு தல் என்றவழி, குறித்தபருவங் கழிந்ததென்னும் பொருண்மை விளங்கிற்று;

உருவுவமம் இவ்வாறு பொருளுணர்த்துதற் பகுதிநோக்கி உவமப்பகுதி யென்ரு னென்பது' (தொல். உவம. 1, பேர்.); தன்னைத் தலைவன் காணு வகை நாணல் மறைந்தொழுகினும், தன் பொலிவழிவினைத் தலைவனுக்குக் காட்டல் வேண்டுதற்கண்ணும் தலைவிக்குக் கூற்று நிகழும்: 'இன்னளாயி னளென்றது, தற்காட்டுறுதல்; செப்புநர்ப்பெறினே யென்றதனாற் களவா யிற்று, கற்பிறகு வாயில்கள் செப்புவார் உளராதலின்' (தொல். களவு. 20, ந.); தலைவி தன் துயர் தலைவனுக்கு உரைத்தல் வேண்டுமென்றது (இ. வி. 521.)

(ஒப்பு.) 1-3. தலைவி தன் வேறுபாட்டைத் தலைவனுக்கு அறிவிக்க விரும்புதல்: குறுந். 185 : 1-8, 310 : 5-7, 332. மு. நற். 3 : 7.

4. நீர்வார் பைம்புதல்: குறுந். 240 : 1, 242 : 3.

5. பிர்க்கு மழைக்காலத்தில் மலர்தல்: நற். 227 : 7; புறநா. 116: 6; "மாரிப் பீரத்தலர்" (சிலப். 7 : 38.)

4-5. புதற்கலித்த பிரம்: "பொன்போற் பீரமொடு புதற்புதன் மலர" (நெடுநல். 14); "இவர்கொடிப் பீர மிரும்புதன் மலரும்" (ஐங். 464 : 2); "புதலிவர் பீரி னெதிர்மலர்" (அகநா. 135 : 2.)

1-5. பசலைக்குப் பிர்க்கின் மலர்: நற். 197 : 1-2, 277 : 6-8, 326 : 6-7; கலி. 31 : 4, 53 : 14-5, 124 : 8, 143 : 49; அகநா. 45 : 7-8, 57 : 12-3, 135: 2-3; ஐந்திணை ஐம்பது, 2; திணைமாலை நூற். 100, 116; சிலப். 7 : 38.

கார்ப்பருவத்தில் தலைவன் வராமையால் தலைவி பிர்க்க மலரைப்போன்ற பசலை அடைதல்: "வறந்த ஞாலந் தெளிர்ப்ப வீசிக், கறங்குரல் வெழிலி கார்செய் தன்றே, பகைவெங் காதலர் திறைதரு முயற்சி, மென்றோ ளாய்கவின் மறையப், பொன்புனை பீரத் தலர்செய் தன்றே" (ஐங். 452.) (கூ அ)

தலைவன் கூற்று

[பொருள்வயிற் பிரிந்த தலைவன் பொருளீட்டி மீண்டு வந்த காலத்து, "நீர் பிரிந்தவிடத்து எம்மை நினைத்தீரோ?" என்று வினவிய தோழிக்கு, "நான் எப்பொழுதும் நினைத்திருந்தேன்" என்று அவன் கூறியது.]

கூஉ. உள்ளினெ னல்லலே யானே யுள்ளி
நினைத்தனெ னல்லலே பெரிதே நினைத்து
மருண்டனெ னல்லலே வுலகத்துப் பண்பே
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
5 இறைத்துணைச் சென்றற் ருஅங்
கனைப்பெருங் காம மீண்டுகடைக் கொளவே.

எ - து. பொருள் முற்றிப் புகுந்த தலைமகன், 'எம்மை நினைத்தும் அறிதிரோ?' (பி - ம். 'நினைத்துமறியிரோ') என்ற தோழிக்குச் சொல்லியது.

[முற்றி - நிறையப்பெற்று புகுந்த - மீண்டுவந்த.]

ஔவையார்.

(பி - ம்.) 1, 2, 3 'னல்லனே' 2 'நினைந்தனை' 'நினைந்து' 4 'மாத்த', 'மராஅத்த' 'மராத்தொடுதோய்', 'கோடுகொய்' 'மலிர்சிறை', 'மலிர்சிமை' 5 'இறைத்துணைச்' 6 'கொளலே'

(ப - ரை.) நீடிய மரத்த - உயர்ந்த மரத்தினது, கோடுதோய் மலிர்நிறை - கிளையைத் தொட்டுப்பெருகும் மிக்கவெள்ளம், இறைத்து உண சென்று அற்றுங்கு - பிறகு கையால் இறைத்துண்ணும் அளவு சிறுகிச் சென்று அற்றதுபோல, அனை பெரு காமம் - வெள்ளத்தைப் போன்ற அவ்வளவு பெரிய காமநோய், ஈண்டு கலடக்கொள - இங்கே யான் வருதலால் முடிவடையுப்படியான்—, உள்ளினென் அல்லெனே - ஆழ்ந்து எண்ணினேனல்லேனே? உள்ளி - அங்ஙனம் எண்ணி, பெரிது நினைத்தனென் அல்லெனே - மீட்டும் மீட்டும் மிகநினைவு கூர்ந்தேனல்லேனே? நினைத்து - அங்ஙனம் நினைவுகூர்ந்து, உலகத்து பண்பு மருண்டனென் அல்லெனே - என் நினைவு நிறைவேறுதற்கு மாறுக இருக்கும் உலகத்தியல்பை எண்ணி மயங்கினேன் அல்லேனே?

(முடிபு) காமம் கடைக்கொள யான் உள்ளினென் அல்லெனே? நினைத்தனென் அல்லெனே? மருண்டனென் அல்லெனே?

(கருத்து) யான் எப்பொழுதும் உங்களை நினைத்திருந்தேன்.

(வி - ரை) உள்ளுதல் - உள்ளத்துள் எண்ணுதல். நினைத்தல் - மீட்டும் மீட்டும் எண்ணுதல். அல்லெனேவெனவரும் மூன்றும் வினைவெதிர் வினைவும் விடைகளாக அமைந்து முறையே உள்ளினென், நினைத்தனென், மருண்டனெனென்னும் பொருளைப் பயந்தன.

உலகத்துப் பண்பென்றது இல்லறம் நடத்துபவன் அதற்குக் கருவியாம் பொருளுக்குப் பிரிந்தால் அப்பொருள் பெற்றே மீண்டு வரவேண்டுமென்னும் மரபை; "எள்ள னேனைப் பொருடரல் விருப்பொடு, நாணுத்தலை யாக வைகி" (அகநா. 29: 20-21) என்பது இதனைப் புலப்படுத்தும்.

மரத்தின் கிளையைத் தொட்டுச் சென்ற வெள்ளம் நெடுந்தூரம் வந்து, இறைத்துண்ணும்படி சிறுகிப் பின்பு அற்றது

போல, காம வெள்ளமானது மிகப் பெரிதாயிருந்து, நான் இங்கு மீண்டுவரும்போது வரவரக் குறைந்து, தலைவியோடு அளவளாவியவுடன் அறுமென்று உவமையை விரித்துக்கொள்க.

தோழி, "நீவிர் இவ்வளவுகாலம் பாணித்தீர்; ஆண்டுள்ளபோது எம்மை நினைத்திலீர் போலும்!" என்றூட்கு, "நான் எப்பொழுதும் இங்கு மீண்டுவருதலை நினைத்திருந்தேனுயினும் உலக இயல்பை அஞ்சி இத்துணை நாள் நின்றேன்" என்று கூறினன். "இயல்பாகப் பொருள்தேடுதலில் ஊக்கம் பெற்றிருப்பின் இன்னும் நெடுநாள் கழியும்; நும்பாலுள்ள நினைவு என்னை விரைவில் மீளச் செய்தது" என்பது அவன் கூற்றினைப் புலப்பட்டது.

ஓகாரங்கள் வினு; ஏகாரங்கள் அசைநிலைகள்.

(மேற்.) மு. இளமையும் காமமும் நோக்காது பெயர்ந்தீரென்று கூறி இதற்குக் காரணம் என்னையெனத் தலைவன் வந்துழிக் கேளிர் நிகழ்த்தும் நிகழ்ச்சிக்கண் தலைவற்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5, இளம்.); மீண்டுவந்த தலைவனை இடைச்சுரத்து மறந்தீரோவெனத் தலைவி வினைய வழி அவனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5, ந.)

(ஒப்பு.) 1. உள்ளினெனல்லெனே யானே: நற். 3: 7.
4. மலிர்நிறை: ஐங். 15: 1, 42: 3, 72: 4.
கோடுதோய் மலிர்நிறை: அகநா. 166: 15, 341: 4.
கோடு - பக்கம்; அகநா. 39: 21.
மு. அகநா. 29. (கக)

தலைவன் கூற்று

[தலைவன் பாங்கனுக்கு, "யான் ஒரு மலைவாணர் மகளைக் காமுற்றேன்; அவள் பெறுதற்கரியள்" என்று கூறியது.]

கஂ0. அருவிப் பரப்பி னிலவனுழ் வித்திப்
பருவிலைக் குளவியொடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்
கடுங்கண் வேழத்துக் கோடுநொடுத் துண்ணும்

5. வல்வில் லோரி கொல்லிக் குடவரைப்
பாவையின் மடவந் தனளே
மணத்தற் கரிய பணைப்பெருந் தோளே.

எ - து. (1) பாங்கற்கு உரைத்தது.

(2) அல்லகுறிப்பட்டு மீள்கின்றுன், தன் நெஞ்சிற்குச் சொல்லி யது.

[அல்ல குறிப்படுதல் - குறியல்லதனைக் குறியாகக் கருதிச் செல்லுதல்; தொல். களவு. 42; இறை. 17.]

கபிலர்.

(பி - ம்.) 2 'கடுக்கும்' 3 'காந்தளஞ் சிலம்பிற் சிறுகுடி', 'பசித் தெனக்' 4 'கடுங்கண் யானைக்'

(ப - ரை.) தோழ, அருவி பரப்பின் - அருவி பாயும் பரந்த நிலத்தில், ஐவனம் வித்தி - மலைநெல்லை விதைத்து, பரு இலை குளவியொடு - இடையிலே களையாக முளைத்த பருத்த இலையை யுடைய மலை மல்லிகையோடு, பசுமரல் - பசியமரலை, கட்கும் - களைந்தெறியும், காந்தள் வேலி - காந்தளையே இயற்கை வேலியாக வுடைய, சிறுகுடி - சிற்றூரிலுள்ளார், பசிப்பின் - உணவின்றிப் பசித்தாராயின், கடு கண் வேழத்து கோடு - தறுகண்மையை யுடைய யானையினது கொம்பை, நொடுத்து உண்ணும் - விற்று அவ்விலையால் வரும் உணவை உண்ணுதற்கிடமாகிய, வல்வில் ஓரி - வலியவில்லையுடைய ஓரியினது, கொல்லி குடவரை - கொல்லிமலையின் மேல்பக்கத்திலுள்ள, பாவையின் - பாவையைப் போல, மடவந்தனள் - நான் கண்டு காமுற்ற மகள் மடப்பம் வரப்பெற்றுள்; ஆயினும், பணை பெரு தோள் - அவளுடைய மூங்கிலைப்போன்ற பெரிய தோள்கள், மணத்தற்கு அரிய - தழுவுதற்கு அரியனவாகும்.

(முடிபு.) நான் கண்டு காமுற்ற மகள் மடவந்தனள்; அவள் தோள் மணத்தற்கரிய.

(கருத்து) என்மனங்கவர்ந்த தலைவி பெறுதற்கரியள்.

(வி - ரை.) தோழவென்பது முன்னத்தாற் கொள்ளப்பட்டது. ஐவனம் - மலைநெல் (மலைபடு. 115.) பரு இலை: "நெடுவிடை" (கைந்நிலை, 13) என்பதுபோல கின்றது; பரீஇயிலை, பரியவிலை யென்று நிற்றலே பெருவழக்கு. குளவி: இதனைக் கொடியென்பர் (ஐந். எழு. 3, உரை.) மரல் மருளென்று வழங்கும்; இதனை ஒரு வகைக் கற்றுழை யென்பர். கடுங்கண் வேழமென்றது அவ்வேழத் தின் கோடு பெறுதற்கரியதென்பது கருதிற்று. நன்மணமுடைய மலரையுடைய குளவியையும் மரலையும் ஒருங்கே களைந்து விடுதலும், தம்பாலுள்ள ஐவனமுழுதையும் வித்தி உணவின்றிப் பசித்தலும், அங்ஙனம் பசிக்குங்காலத்து அரிதிற்பெறும் யானைக்

கொம்பை எளிய விலைக்குக் கொடுத்தலும் மலைவாணர் அறியாமையைக் காட்டின.

வல் வில் ஓரி: இவன் ஏழுவள்ளல்களுள் ஒருவன். வல்வில்: ஒரேகாலத்திற் பலபொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை எய்யும் வில்; இதனையுடைய வீரனை வல்வில்லியென்பது வழக்கு. ஓரியின் வல்வில் வீரத்தைப்பற்றி வன்பரணர் என்னும் புலவர்,

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்"

(புறநா. 152: 1-6)

என்று பாராட்டுதல் காண்க.

கொல்லிப்பாவை: இந்நூல் 89-ஆம் செய்யுள் உரை முதலியவற்றைப் பார்க்க. மடவந்தனள் - அறியாமையை உடையளாயினள். யான் அவளைக்கண்டு படுந்துன்பத்தை அறியாளாயினளென்பது கருத்து. கொல்லிப்பாவை தோற்றத்திற் பாவைபோல இருப்பினும் பெறுதற்கரியதுபோல, தோற்றத்தில் மடவந்தாள் போலிருப்பினும் பெறுதற்கரியாளென்றபடி. மடவந்தனள் - வெருவினளென்றலுமொன்று (குறள், 1089, பரிமேல்.) கொல்லிப் பாவையைப் போல மடவந்தனளென்று இங்கே உள்ளவாறே பிறரும், "கொல்லி... கடவு ளெழுதிய பாவையின், மடவது மாண்ட மாஅ யோளே" (அகநா. 62: 13-6) என்று கூறுதல் காண்க. பெருந்தோள்: 95-ஆம் செய்யுள் உரையைப் பார்க்க.

ஏகாரங்கள்: அசைநிலைகள்.

தலைவன் ஒரு தலைவிபாற் காமுற்று வந்ததை அவன்வாயிலாய் அறிந்த பாங்கன், "அவள் எவ்வியல்பினள்?" என்றனுக்குத் தலைவன் கூறியது இது.

இரண்டாவது கருத்து: தலைவன் இரவில் தலைவியின் மனைப்பக்கத்தே வந்து தான்வந்ததைச் சிலகுறிப்பினற் புலப்படுத்தினன்; தலைவி அவன் வருதற்குமுன் இயற்கையாக உண்டான சில ஒலிகளைத் தலைவன் செய்த குறியாக எண்ணிவந்து பார்த்து அவன் வாராமையின் வறிதே மீண்டவளாதலின், பின்பு உண்மையிலே அவன்வந்து குறிசெய்ததையும் முன்னதைப் போன்றதென்றே எண்ணி வாளா விருந்தாள்; அதனல் தலைவியைக் காணுத தலை

மகன், "என் மனத்தைக் கவர்ந்து துன்புறுத்திவிட்டுத் தான் ஒன்றும் அறியாள் போல இருக்கும் தலைவியை இனிப் பெறுதல் அரிதுபோலும்!" என்று தன் நெஞ்சை நோக்கி வருந்திக் கூறியது. இக்கருத்து முன்னையதினும் சிறப்புடையதன்று.

(மேற்.) 3-4. செய்தென வென்னும் வாய்பாட்டெச்சம் தன் வினை முதல் வினையைக் கொண்டு முடிந்தது (நன். 343, மயிலை, 344, சங்.; இ. வி. 247.) (கு-பு.) பகித்தென என்பது இவ்வுரையாசிரியர்கள் கொண்ட பாடம்.

(ஒப்பு.) 1. ஐவனம்: மதுரைக். 288; ஐந். எழு. 12.

அருவிப்பரப்பில் ஐவனம் வித்தல்: "மைபடு சிலம்பி னைவனம் வித்தி, அருவியின் விளைக்கு நாடன்" (குறுந். 371: 2-3); "ஐவனங்கள், அணிபா ரருவி கவர்கிளி போப்புமின் சாரல்" (11-ஆம். திருவேகம்ப. அந். 57.)

2. மரல்: குறுந்: 232: 3.

3. காந்தள் வேலி: குறுந். 76: 1, ஒப்பு.

2-3. குளவியும் காந்தளும்: "உடைவலை கடுப்ப மலர்ந்த காந்தள், அடைமல்கு குளவியொடு கமழுஞ் சாரல்" (புறநா. 90: 1-2); "இலையடர் தண்குளவி யேய்ந்த பொதும்பிற், குலைபுடைக் காந்தள்" (ஐந். எழு. 3.)

3 - 4. குரவர் யானைக்கொம்பை விற்றல்: "மகிழ்நொடை பெரு அ ராகி நனைகவுட், கான யானை வெண்கோடு சுட்டி" (அகநா. 245: 10-11.)

5. வில்லில்: "வல்லில் விடலை", "வல்லிற் காளை" (ஐங். 373: 5, 390: 3); "கைபுனை வல்லில்", "வல்லி லிவர்" (கலி. 7: 6, 104: 58); "வல்லில் லிளையர்", "வான்போழ் வல்லில்" (அகநா. 120: 12, 152: 15, 281: 5); "வல்லில் வேட்டுவன" (புறநா. 150: 7); "வல்லி லிராமன்" (திவ். பெரியதிரு. 5. 1: 4); "வல்லில் லிளையன்", "வல்லில் வயவர்", "வல்லிற் குமரர்", "வல்லி லிளையர்" (பெருங். 1. 47: 32, 56: 45, 264; 3. 17: 217); "சுற்றுர் வல்லில்", "மராமர மேழு மெய்த வாங்குவிற் மடக்கை வல்லில், இராமன்" (சீவக. 1057, 1643.)

வில்லின் தன்மை: கம்ப. குலமுறை. 26, மராமரப். 138-9.

வில்லில் ஓரி: நற். 6: 9; அகநா. 209: 13-4; புறநா. 158: 5.

கொல்லிமலை ஓரிக்குரியது: "ஓரி கொல்லி" (நற். 265: 7); "ஓரி, பல்பழப் பலவின் பயங்கெழு கொலலி" (அகநா. 208: 21-2); "ஓங்கிருங் கொல்லிப் பொருநன்", "கொல்லி யாண்ட வல்வி லோரி" (புறநா. 152: 31, 158: 5.)

5-6. கொல்லிப்பாவை: குறுந். 89: 4-6, ஒப்பு.

7. தோள் மணத்தல்: குறுந். 50: 5, ஒப்பு.

தோள்அரிய: குறுந். 272: 1-8. (கஙo)

தலைவன் கூற்று

[தலைவியோடு இன்புற்று இல்லறம் நடத்தும் தலைவன் அத்

தலைவியினுல் வரும் இன்பம் எப்பொருளினும் சிறப்புடையதென்று பாங்காயினர் கேட்பக் கூறியது.]

கo8. விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமும்
அரிதுபெறு சிறப்பிற் புத்தே ணுடும்
இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போ லுண்கட் பொன்போன் மேனி
5. மாண்வரி யல்குற் குறுமகள்
தோண்மாறு படுஉம் வைகலொ டெமக்கே.

எ - து. (1) தலைமகட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

[பாங்காயினர் - தோழி முதலியோர்.]

(2) வலித்த நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியதூஉமாம்.

[வலித்தநெஞ்சு - பொருளீட்டும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லத்துணிந்த நெஞ்சு. செலவு அழுங்கியது - செல்லுதலைத் தவிர்ந்தது.]

பரூஉமோவாய் (பி - ம். பருவ மோவாய்)ப் பதுமன்.

(ப - ரை.) விரி திரை பெரு கடல் - விரிந்த அலையையுடைய பெரியகடல், வளைஇய உலகமும் - வளைந்த பூவுலக இன்பமும், அரிது பெறு சிறப்பின் புத்தேள் நாடும் - பெறுதற்கரிய தலைமையையுடைய தேவருலக இன்பமும், இரண்டும் - ஆகிய இரண்டும், பூ போல் உண்கண் - தாமரைப்பூவைப்போன்ற மையுண்ட கண்களையும், பொன் போல் மேனி - பொன்னைப் போன்ற நிறத்தையும், மாண் வரி அல்குல் - மாட்சிமைப்பட்ட வரிகளையுடைய அல்குலையும் உடைய, குறுமகள் - தலைவியினது, தோள் மாறு படுஉம் - தோளோடு தோள் மாறுபடத்தழுவும், வைகலொடு - நாளிற்பெறும் இன்பத்தோடு, தூக்கின் - ஒருங்குவைத்து ஆராய்ந்தாலும், எமக்கு—, சீர் சாலா - அவ்வைகலின்பத்தின் கனத்திற்கு ஒவ்வா.

(முடிபு.) எமக்கு, குறுமகள் தோள் மாறுபடுஉம் வைகலொடு, கடல் வளைஇய உலகமும் புத்தேணுடும் ஆகிய இரண்டும் தூக்கிற் சீர் சாலா.

(கருத்து.) தலைவி பெறுதற்கரிய சிறப்பினள்.

(வி - ரை.) விரிதிரைப் பெருங்கடல் வளைஇய வுலகமென்று சிறப்பித்தது நிலப்பரப்பின் பெருமையைக் கூறும் வாயிலாக அதன் உயர்வை உணர்த்தியபடி. தானம் தவம் முதலியன செய்தே

அடைய வேண்டுதலின் அரிது பெறு சிறப்பிற் புத்தேணு டென்ருன். உலகம், நாடு: ஆகுபெயர் (குறள், 247, பரிமேல்.) சீர் - கனம்; 'சீர் தூக்கும் கோல் - பாரத்தை வரையறுக்கும் கோல்' (குறள், 118, பரிமேல்.) 'பூப்போலுண்கண் குறுமகள்' எனத் தலைவியின் உறுப்புக்களை அடைகளாற் சிறப்பித்துக் கூறியது அவள்பாற் பெற்ற இன்பத்தின் பயனுகத் தலைவன் உணர்ந்த இயல்புகளைப் புலப்படுத்தியபடி. தோள் மாறு படுத லாவது ஒருவர் இடத்தோள் மற்றவர் வலத்தோளிலும் ஒருவர் வலத்தோள் மற்றவர் இடத்தோளிலும் பொருந்தத் தழுவுதல். எமக்கென்றது தலைவியையும் உளப்படுத்தியபடி.

தூக்கினு மென்ற வும்மை விகாரத்தால் தொக்கது. ஏகாரங் கள் அசை நிலை.

இரண்டாவது கருத்து: பொருள் தேடும் பொருட்டுத் துணிந்த நெஞ்சை நோக்கி, "இவளைப் பிரிந்து பொருள் தேடலாற் பெறும் பயன் யாது? பொருளால் இல்லறமாகிய இம்மைப் பயனும் அவ்வறத்தான் வரும் சுவர்க்க இன்பமாகிய மறுமைப் பயனும் உண்டாமாதலின் அதனைத் தேடுதல் இன்றியமையாததெனின் இவளால் வரும் இன்பம் அவ்விருவகை இன்பத்தினும் உயர்வுடை யது" என்று கூறித் தலைவன் செலவு தவிர்ந்தது. இக்கருத்து முன்னையதினும் சிறப்புடையதாகத் தோற்றுகின்றது.

(மேற்.) 1. பகுதியெழுத்தான் வந்த கட்டளையடி (தொல். செய். 50, இளம்.)

மு. பொருளினும் காமம் வலியுடைத்தென உட்கொண்ட வழித் தலை வனுக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5, இளம்.); காரணத்தின் அமைந்து முடிந்தகாலை நெஞ்சு தளையவிழ்ந்த புணர்ச்சிக்கண் இல்லொழுக்க மும் புணர்ச்சியும் முதலியவற்றுல் தலைவன் மகிழ்ந்தது (தொல். கற்பு. 5, செய். 187, க.)

(ஒப்பு.) 2. புத்தேணுடு அரிதிற் பெறப்படுதல்: "அரிதிற்பெறு துறக்கம்" (பரி. 15 : 17), 'தவத்தானும் தானத்தானு மன்றிப் புகலாகாச் சுவர்க்கம்' (இறை. 2, உரை.)

1 - 3. ஒன்றன் பெருமைக்குப் பூவுலகத்தையும் வானத்தையும் ஒப்பிடுதல்: "செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும், வானகமு மாற்ற லரிது" (குறள், 101)

4. பூப்போலுண்கண்: முல்லை. 23; நற். 20 : 6, 325 : 7; ஐங். 16 : 4, 101 : 4.

பூவைப்போன்ற உண்கண்: குறுந். 5 : 5, 377 : 1.
கண்ணிற்குப் பூ: குறுந். 72 : 1 - 5, ஒப்பு.

பொன் போல் மேனி : குறுந். 319 : 6 ; நற். 10 : 2 ; ஐங். 230 : 4 ; அகநா. 212 : 1 - 2.

5. மாண்வரி யல்குல் : குறுந். 180 : 5 - 6.

தலைவியைக் குறுமகளென்றல் : குறுந். 89 : 7, ஒப்பு.

மு. ஒருவகைஒப்பு : குறுந். 267 ; பட். 218 - 20 ; குறள், 1103 ; திருச்சிற். 46. (கஅக)

தலைவி கூற்று

[தலைவன்பிரிந்து நெடுங்காலம் நீட்டித்தானாக அதனை உணர்ந்து அவனது பிரிவைத் தலைவி ஆற்றுளெனத் தோழி கவன்றதையறிந்து அத்தலைவி 'அவரை நினைந்துநினைந்து காமநோய் மிக்கு வருந்துகின்றேன் ; அவர் தம் சொற்படி இன்னும் வந்திலர்' என்று கூறியது.]

கஅஉ. உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மளவைத் தன்றே வருத்தி
வான்றோய் வற்றே காமம்
சான்றோ ரல்லர்யா மீ இ யோரே.

எ - து. ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, 'யான் யாங்ஙனம் ஆற்றுவேன் ?' என்றது (பி-ம். என்கின்றது, எனக் கூறுகின்றது.)

ஔவையார் (பி - ம். அவ்வையார்.)

(பி - ம்.) 2 'வருத்தின்' 'வருந்தின்'

(ப - ரை) உள்ளின் உள்ளம் வேம் - தலைவரை நினைந்தால் எம் உள்ளம் வேவாநிற்கும் ; உள்ளாது இருப்பின் - நினையாமல் இருப்பேமாயின், எம் அளவைத்து அன்று - அங்ஙனம் இருத்தல் எமது ஆற்றலளவிற்கு உட்பட்டதன்று ; காமம் - காமநோயோ, வருத்தி - எம்மை வருந்தச்செய்து, வான்தோய்வற்று - வானத்தைத் தோய்வதுபோன்ற பெருக்கத்தையுடையது ; யாம் மீ இயோர் - எம்மால் மருவப்பட்ட தலைவர், சான்றோர் அல்லர் - சால்புடையா ரல்லர்.

(முடிபு) உள்ளின் உள்ளம் வேம் ; உள்ளாதிருப்பின் எம் அளவைத்தன்று ; காமம் வான்தோய்வற்று ; மீ இயோர் சான் றோரல்லர்.

(கருத்து) தலைவர் தம் சொற்படி மீண்டு வாராமையின் ஆற்றேனாயினேன்.

(வி - ரை.) தலைவனை நினைந்த காலத்தில் அவனது பிரிவுத்துன் பம் தோற்றுதலின் உள்ளின் உள்ளம் வேமென்றாள். உள்ளம் வேதலாவது புறத்தே துன்பம் தோற்றுவாறு உள்ளத்துள்ளே துயரத்தை அடக்கி நிற்றல்.

என் துயரத்தை அறியாராயினமையின் அன்பின்மையையும், தமதுபிரிவு நீட்டித்தலால் எனக்கு உண்டாகிய வேறுபாடுகளை யறிந்த ஊரார் தம்மைத் தூற்றுதலைக் கருதாது இன்னும் ஆண்டே உறைதலின் நாணமின்மையையும், இல்லறம் நிகழ்த்துவார் உரிய காலத்தே தலைவியருடன் இருந்து இன்புறும் உலகியலை மறந்தமை யால் ஒப்புரவின்மையையும், மெல்லியலாகிய என்துயர் நீங்க வாராமையின் கண்ணோட்டமின்மையையும், தாம் கூறிய காலத் தில் மீளாமையின் வாய்மையின்மையையும் உடையரென்னும் கருத்தை உள்ளிட்டுச் சான்றோரல்லர் எனக்கூறினள் ; "அன்புநா ணெப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ, டைந்துசால் பூன்றிய தூண் " (குறள், 983) என்பதை அறிக.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) 1. கிழக்கதுவா யெதுகை வந்தது (தொல். செய். 93, ந.) ; காதல் கைம்மிகலென்னும் மெய்ப்பாடு வந்தது (சீவக. 996, ந.)

2 - 3. தொழில் நிகழ்த்தற்குரிய அல்லாப் பொருளை நிகழ்த்தின போலக் கூறியது (தொல். பொருள். 19, ந.)

மு. காதல் கைம்மிகலென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 23, பேர்.; இ. வி. 580) ; வருத்தமிகுதியால் தலைவனை வழிபடுதலை மறுத்துத் தலைவி கூறியது (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. உள்ளின் உள்ளம் வேம் : (குறுந். 150 : 4) ; "உள்ளி னுள்ளம் வேமே " (நற். 184 : 6) ; "உள்ளினு முள்ளஞ் சுடும் " (குறள், 1207) ; "கருதின்வே முள்ளமும் " (கம்ப. தாடகை. 5.)

3. காமத்தின் பெருக்கம் : குறுந். 18 : 5.

காமம் வான்நோய்வற்று : குறுந். 99 : 4 - 6.

4. தலைவன் சான்றோனல்லனெனப்படுதல் : நற். 233 : 8 - 9, 365 : 8 - 9. (502)

தலைவி கூற்று

[கூதிர்ப்பருவம் வந்தபின்பும் தலைவன் வாராமையினால் துன் புற்ற தலைவி தோழியை நோக்கி, "இவ்வாடைக் காலத்திலும் மீண்டு வாராராயினர் ; இனி யான் பிரிவாற்றது உயிர் நீங்கு வேன் " என்று கூறியது.]

கoங. கடும்புன ரெருத்த நடுங்கஞ ரள்ளற்
,கவிரிதழ் மன்ன தூவிச் செவ்வாய்
இரைதேர் நாரைக் கெவ்வ மாகத்
தூஉந் துவலைத் துயர்கூர் வாடையும்
5. வாரார் போல்வர் நங் காதலர்
வாழேன் போல்வ ரெழி யானே.

எ - து. பருவங் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

வாயிலான் தேவன்.

(பி - ம்.) 1 ' ரெருடுத்த

(ப - ரை.) தோழி—, கடு புனல் தொகுத்த—மிக்க புனலால் தொகுக்கப்பட்ட, நடுங்கு அஞர் அள்ளல் - நடுங்குதற்கு ஏதுவாகிய துன்பத்தைத்தரும் சேற்றினிடத்து, இரை தேர் - மீனுகிய உணவைத் தேர்கின்ற, கவிர் இதழ் அன்ன - முள்ளு முருங்கை மலரின் இதழைப்போன்ற, தூவி - மெல்லிய இறகையும், செவாய் - செம்மையாகிய அலகையும் உடைய, நாரைக்கு—, எவ்வம் ஆக - துன்பம் உண்டாகும்படி, தூஉம் துவலை - தூவுகின்ற நீர்த் துளிகளையுடைய, துயர்கூர்வாடையும் - பிரிந்தார் துயர்கூர்தற்குக் காரணமாகிய வாடைக்காற்றையுடைய கூதிர்க்காலத்திலும், நம் காதலர் - பிரிந்து சென்ற நம்முடைய தலைவர், வாரார் - வருவாரல்லர் ; யான்—, வாழேன் - வாழ்வேனல்லேன்.

(முடிபு) தோழி, நம் காதலர் வாடைக்காலத்தும் வாரார் ; யான் வாழேன்.

(கருத்து) தலைவர் இன்னும் வாராமையின் துன்பம் மிகப் பெற்றேன்.

(வி - ரை) தன்பாற் சென்ருரை ஆழ்த்திவிடும் இயல்பினதாதலின் நடுங்கஞரள்ளலென்ருள். இரைதேரும் முயற்சியையுடைய நாரைகளும் துன்புற்று அம்முயற்சி யொழிதற்கு ஏதுவாக இருக்கும் இவ்வாடைக் காலத்தில் தலைவர் மட்டும் தம்முயற்சியை ஒழிந்து ஈண்டுப் போந்திலரென்பது குறிப்பு.

வாடையும் : உம்மை இழிவு சிறப்பு. போல்வர், போல்வல் : உரையசைகள் (தொல். இடை. 29.) ஏகாரம் அசை.

நம் காதலரென்ருள், தனக்கும் தோழிக்குமுள்ள ஒற்றுமை பற்றி.

"என்னுடன் தாம் சேர்ந்திருத்தற்குரிய இவ்வாடைக் காலத்திலும் தலைவர் மீண்டிலர்; இவ்வாடையின் துயர் பொறுத்தற்கு அரிதாயிற்று; அவருடைய பிரிவை இக் காலம் மிகுதியாகப் புலப்படுத்தி விட்டதாதலின் இனி உயிரைவைத்துக்கொண்டு ஆற்றும் ஆற்றல் இல்லேன்" என்று தலைவி கூறி வருந்தினள்.

(மேற்.) 1. கடியென்னும் உரிச்சொல் மிகுதிப்பொருளில் வந்தது (தொல். உரி. 86, இளம்.); உரிச்சொல் ஈறுதிரிந்து வந்தது (தொல். உரி. 98, இளம்.)

(ஒப்பு.) 2. நாரையின் தூவி செந்நிறமுடையது: "மடநடை நாரை, பதைப்ப வொழிந்த செம்மறுத் தூவி" (ஐங். 156: 2 - 3); 'பெரிய நாரை சிறகு சிவந்திருத்தலானும்' (கலி. 126: 1 - 5, ந.); "சிறுமீன் கவுட் கொண்ட செந்தூவி நாராய்" (ஐங். எழு. 68.)

2. இரைதேர் நாரை: "இரைதேர் நாரை", "இரைதேருந் தடந்தாணரை" (கற். 35: 6, 91: 4.)

4. துயர்கூர் வாடை: குறுந். 110: 6, 240: 4, 277: 6, 317: 5 - 6, 332: 1 - 2. (கஅக)

தலைவி கூற்று

[தலைவன் நெடுங்காலம் பிரிந்துறைந்தானாக அப்பிரிவை ஆற்றுதத தலைவி, "பின்பனிப் பருவத்திற் பிரிந்த தலைவர் பலநாள் செல்லவும் மீண்டு வந்திலர்; நான் எங்ஙனம் ஆற்றுவேன்!" என்று கூறியது.]

கஅச. அம்ம வாழி தோழி காதலர்
நூலறு முத்திற் றண்சித ருறைப்பத்
தாளித் தண்பவர் நாளா மேயும்
பனிபடு நாளே பிரிந்தனர்
5. பிரியு நாளும் பலவா குவவே.

எ - து. (1) பிரிவின்கண் ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்குக் கூறியது.

(2) சிறிய வள்ளிப் பெரிய மறக்க வேண்டாவோ வென்று தோழிக்குக் கிழத்தி கூறியதூஉமாம்.

[சிறிய நன்மைகளை நினைந்து பெரியனவாகிய கொடுமைகளை மறக்க வேண்டாவோ; "கொன்றன்ன வின்ஞ செயினு மவர் செய்த, ஒன்றுநன் றுள்ளக் கெடும்" (குறள், 109.)]

காவன்முல்லைப் பூதனார்.

(பி - ம்.) 2 'றன்சிதர் மறைப்பத்' 5 'பலவாகவ்வே' 'பல வாகுகவே', 'பலவாகுபவே'

(ப - ரை.) தோழி—, அம்ம - ஒன்று கூறுவன்; கேட்பாயாக: காதலர் - நம் தலைவர், நூல் அறு முத்தின் - நூலற்ற முத்து வடத்தினின்றும் தனித்து உகிர்கின்ற முத்துக்களைப்போல, தண் சிதர் உறைப்ப - குளிர்ந்த பனித்துளிகள் துளிக்க, தாளி தண்பவுர் - குளிர்ந்த தாளியறுகின் கொடியை, நாள் ஆ மேயும் - விடியற்காலத்தில் பசுக்கள் மேயும், பனி படு நாளே - பனி வீழ்கின்ற காலத்திலே, பிரிந்தனர் - என்னைத் தலைவர் பிரிந்து சென்றார்; பிரியும் நாளும் - அங்ஙனம் பிரிந்து சென்று உறையும் நாட்களும், பல ஆகுவ - பலவாகின்றன; நான் எங்ஙனம் ஆற்று வேன்!

(முடிபு) தோழி, காதலர் பனிபடு நாளே பிரிந்தனர்; பிரியும் நாளும் பல ஆகுவ.

(கருத்து) தலைவர் காலமல்லாத காலத்திற் பிரிந்ததோடன்றிப் பல நாட்களாகியும் மீண்டாரிலர்.

(வி - ரை.) வாழி: அசை. பனித்துளி ஒன்றோடொன்று தொடர்பின்றித் தனித்தனியே வீழுமாதலின் நூலறுமுத்தை உவமை கூறினள். தாளி - ஒருவகை யறுகு; "தாளி யறுகின் ஞராய் போற்றி" (திருவா. போற்றி. 201); ஒருவகைக் கொடியு மாம். நாட்காலையில் பசு மேயும்பொழுது அறுகின் நுனியிலுள்ள பனித்துளிகள் துளிக்கும். பனிபடுநாளே பிரிந்தனரென்பது பிரி தற்குரிய காலமன்றென்னுங் கருத்தினது.

தலைவர் பிரிந்த நாள் உண்மையிலே சிலவாயினும் அவை தலை விக்குப் பலவாகத் தோற்றுதல் இயலபு; நெடுநல்வாடை யென்ற பெயர்க் காரணம் கூறவந்த நச்சினார்க்கினியர், 'தலைவனைப் பிரிந் திருந்து வருந்துந் தலைவிக்கு ஒருபொழுது ஒருழிபோல் நெடிதாகிய வாடையாய்' என்றதைக் கருதுக.

"என்னெஞ்சு உடனிருத்தற்குரிய பருவத்திற் பிரிந்தனர்; அது துன்பத்திற்குக் காரணமாயிற்று; அங்ஙனம் பிரிந்தவர் சில நாளில் மீண்டு வந்திருப்பின் அத்துன்பத்தை ஆற்றியிருப்பேன்; அவ்வாறின்றிப் பல நாட்களாகவும் இன்னும் வந்திலர்; யான் என் செய்கேன்!" என்று தலைவி கூறி அரங்கினள்.

நாளே: ஏகாரம் பிரிநிலை; ஆகுவவே: ஏகாரம் அசை.

இரண்டாவது கருத்து: தலைவன் தான் கூறிய பருவத்தே

வாராது தாழ்த்தானாக அவன் கொடுமையை நினைந்து வருந்திய தலைவியை நோக்கி "அவன் நின்மாட்டுச் செய்த தலையளியை நினைந்து இக்கொடுமையை மறப்பாயாக" என்ற தோழிக்குத் தலைவி, "அவர் பிரிந்த காலமும் ஏற்றதன்று; வருங்காலமும் கடந்தது; பன்னாளாயின; இனி எங்ஙனம் மறப்பது?" என்று கூறியது. இது முன்னையதினும் சிறப்புடையதன்று.

(மேற்.) 1. அம்மவென்னும் இடைச்சொல் கேளென்னும் முன்னிலையேவற்பொருட்கண் வந்தது (நன். 437, மயிலை.)

மு. பாலைக்குப் பின்பனிப்பருவம் வந்தது; தலைவி தோழிக்கு உரைத்தது (தொல். அகத். 10, ந.)

(ஒப்பு.) 1. அம்மவாழி தோழி: குறுந். 77: 1, ஒப்பு.

2. நாறு முத்து: குறுந். 51: 2.

தண்சிதர் உறைத்தல்: குறுந். 242: 2.

2 - 3. அறுகின் நுனியிலுள்ள பனித்துளிக்கு முத்து: "ஊசி யறுகை யுறுமுத்தங் கோப்பனபோல், மாசி யுகுபனிநீர் வந்துறைப்ப" (நக்கீரர் வாக்கு.) (கoச)

தலைவி கூற்று

[தலைவன் நெடுங்காலம் வரையாமல் பிரிந்திருந்தானாக, "தலைவன்கேண்மை வரைவினுல் உண்மையாகாமல் என் நினைவளவில் நின்று துன்புறுத்துகின்றது" என்று கூறித் தலைவி வருந்தியது.]

கoரு. புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
5. சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணெடு நினைப்பா கின்றே.

எ - து. வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

நக்கீரர்.

(பி - ம்.) 1 'றொடவைப்' 2 'கடியொண்', 'சில்குரல்' 4 'வேர்த்துற்று' 6 'நினைப்பாகும்மே'

(ப - ரை.) தோழி, புனவன் துடவை - குறவனுக்குரிய தோட்டத்தில் விளைந்த, பொன்போல் சிறுதினை - பொன்னைப்போன்ற

சிறு தினையில், கடி உண் கடவுட்கு இட்ட செழு குரல் - புதியதை உண்ணும் தெய்வத்துக்குப் பலியாக இட்ட வளவிய கதிரை, அறியாது உண்ட மஞ்ஞை - தெரியாமல் உண்ட மயில், ஆடுமகள் வெறி உறு வனப்பின் - தேவராட்டி வெறியாடுகின்ற அழகைப் போல, வெய்துற்று - வெம்மையுற்று, நடுங்கும் - நடுங்குதற்கு இடமாகிய, சூர்மலிநாடன் - தெய்வங்கள் உறையும் மலைநாட்டை யுடைய தலைவனது, கேண்மை - நட்பு, நீர் மலி கண்ணெடு - நீர் மிக்க கண்களோடு, நினைப்பு ஆகின்று - நாம் நினைந்து துன்புறு தற்குக் காரணமாகியது.

(முடிபு.) மலைநாடன் கேண்மை நினைப்பாகின்றது.

(கருத்து) தலைவன் வரையாமையின் அவனை நினைந்து துன் புறுகின்றேன்.

(வி - ரை.) புனவன் - புனத்தையுடைய குறவன். மலைவாணர் தினையை வித்தி விளைத்து அதில் தோற்றும் முதற்கதிரைத் தெய் வத்துக்குப் பலியாக இடுதல் மரபு.

ஆடுமகள்-வெறியாடுபவள்; இவள் கணிக்காரிகை யெனவும் கூறப்படுவாள். சூர் - அச்சமுமாம்.

தெய்வத்துக்கிட்ட பலியை உண்டற்கினியதென்றெண்ணி அறியாதுண்ட மஞ்ஞை பின்பு நடுங்குதலைச் செய்யும் மலைநாட னென்றது, என் தகுதிக்கு மேற்பட்டதாகிய தனது கேண்மையை இனியதென்றெண்ணி அறியாமற் பெற்றமையால், இப்பொழுது நடுங்கச் செய்தானென்னும் குறிப்பினது; திருச்சிற். 193, பேர்.

தலைவனுடைய கேண்மை கண்ணீர் மல்கச் செய்யும் துன்பத் தைத் தந்து நினைவளவிலே நின்றதேயன்றி இன்பத்தைத் தந்து வரையுஞ் செயலளவில் முற்றவில்லையென்பது தலைவியின் உட் கோள்.

(மேற்.) 2. கடியென்னும் உரிச்சொல் புதுமையென்னும் பொருளில் வந்தது (தொல். உரி. 87, தெய்வச்.; நன். 456, மயிலை. 457, சங்.; இ. வி. 282.)

மு. வரைவிடை வைத்த காலத்து வருத்தமுற்றவழித் தலைவி தானே கூறியது (தொல். களவு. 21, இளம்.)

(ஒப்பு.) 1. மு. குறுந். 133 : 1.

சிறுதினை : குறுந். 375 : 3.

3-4. வெறியாடுமகள்; குறிஞ்சி. 175; பட். 154-5.

மஞ்ஞை நடுங்குதல் : குறிஞ்சி. 169.

4. வெறியறு வனப்பு : "வெறிகொள் பாவையிற் பொலிந்த" (அகநா. 370 : 14.)

வெறியுற்றோர் நடுங்குதல் : குறுந். 52 : 2, ஒப்பு.
9. ஆகின்று : குறுந். 166 : 4. (கஅடு)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்த தலைவன் தான் குறைவில்லா அன்புடையனென்று கூறித் தூது விடுப்ப, அதனையறிந்த தலைவி, "தலைவர் உள்ளத்தாற் பொய்யாது அன்புடையராயின் யாமும் பழைய அன்புடையேமென்பதை அவருக்குக் கூறி விடுப்போம்" என்று தோழிக்குக் கூறும் வாயிலாகத் தான் வாயில்நேர்ந்ததைப் புலப்படுத்தியது.]

கஅசு. புல்வீ ழிற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் ரோன்று நாடன்
தீதி னெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி தோழி நாமும்
5. நெய்பெய் தீயி னெதிர்கொண்டு — உ —
தான்மணந் தனையமென விடுகந் தூதே.

எ - து. தலைமகன் தூதுகண்டு கிழத்தி தோழிக்குக் கூறியது. கபிலர்.

(பி - ம்.) 1 'வீழாற்றிக்' 'வீழித்திக்' 3 'தீதின்னெஞ்சத்துக்' 4 'நயந்தனறு' 6 'தாமளந்தனைய,' 'தாம்வரைந்தனைய'

(ப - ரை.) தோழி—, புல் வீழ் இற்றி - புல்லிய விழுதையுடைய இற்றிமரத்தினது, கல் இவர் வெள் வேர் - மலையிலுள்ள கற்களிற் படர்கின்ற வெள்ளிய வேர், வரை இழி அருவியின் தோன்றும் - மலைப்பக்கத்தில் வீழ்கின்ற அருவியைப்போலத் தோன்றும், நாடன் - நாட்டையுடைய தலைவன், தீது இல் நெஞ்சத்து கிளவி - குற்றமற்ற நெஞ்சினால் நினைந்து கூறிய சொற்களை உரைக்கும் தூது, நம்வயின் வந்தன்று - நம்மிடத்து வந்தது; நாமும்—, நெய் பெய் தீயின் - நெய்யைப் பெய்த தீயைப்போல, எதிர்கொண்டு-அத்தூதை ஏற்றுக்கொண்டு, தான மணந்தனையம் என - அவன் எம்மை மணந்தகாலத்தில் இருந்த அன்புடைய நிலையினேம் என்று கூறி, தூதுவிடுகம் - தூது விடுவேம்.

(முடிபு) தோழி, நாடன் தீதில் நெஞ்சத்துக்கிளவி வந்தன்று; நாமும் எதிர்கொண்டு தூதுவிடுகம்.

(கருத்து) தலைவனை நாம் ஏற்றுக் கொள்வேமாக.

(வி - ரை.) தலைவன் பரத்தையிற் பிரிந்தானாக அவன் அன்பில னென்றெண்ணிய தலைவியின்பால் அவன் விடுத்த தூது, "தலை வன் தலைநாளன்ன அன்பினன்; அவனை ஏற்றருள வேண்டும்" என்று கூறியது கேட்ட அவள், "அவன் அத்தகையனாயின் நாமும் மணநாளின்கண் வைத்திருந்த அன்பிற்குறைவின்றியுள்ளே மென்று தூது விடுவேம்" என்று தோழிக்குக் கூறியது இது.

தீதில் நெஞ்சத்துக்கிளவியென்றது தலைவன் நெஞ்சாற் பிழைப்பிலனென்று தலைவி உணர்ந்தமையைப் புலப்படுத்தியது. நாமும்: உம்மை இறந்தது தழீஇயது. தலைவன் மணந்த காலத் தில் நிறைந்த அன்போடிருந்தவாறே இப்பொழுதும் குறைவின்றி யிருப்பேமென்றமையின் அவனை ஏற்றுக்கோடற்குறிப்புப் பெறப் பட்டது. மணந்த காலத்தை நினைவு கூர்ந்த தலைவிக்கு அந் நினைவின் மிகுதியே நெய்பெய் தீயை உவமை கூறச் செய்தது.

ஏகாரம் அசைநிலை.

(மேற்.) மு. தூதுமுனிவின்மை வந்தது (தொல். களவு. 21, இளம்); அது கற்பிற் கல்லது ஏலாது; என்னை? களவினுள் நெய்பெய் தீயின் எதிர் கொள்ளலாகாமையின்' (தொல் மெய்ப். 23, பேர்.); தூதுகண்டு தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1. புலவிழிற்றி: "குறுங்கா லிற்றிப் புன்றலை நெடுவீழ்" (அகநா. 57: 6.)

இற்றியின் வீழ்: "ஒல்குநிலை யிற்றி யொருதனி நெடுவீழ்" (அகநா. 345: 19.)

5. நெய்பெய் தீ: "நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉம், எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்" (நாலடி. 124.) (கo சு)

தலைவி கூற்று

[பொருள்வயிற் பிரிந்த தலைவன் மீண்டு வரப்பெற்று அவ னோடு இன்புற்ற தலைவி பொழுது புலர்ந்தமையால் துயருற்று, "எம்மைத் துயிலினின்றும் எழுப்பிய சேவலே! நீ இறந்துபடுவா யாக" என்று கூறித் தன் காமமிகுதியைப் புலப்படுத்தியது.]

கo எ. குவியிணர்த் தோன்றி யொண்பூ வன்ன
தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்
நள்ளிருள் யாமத் தில்லெலி பார்க்கும்
பிள்ளை வெருகிற் கல்கிரை யாகிக்

5. *கடுநவைப் படுஇயரோ நீயே நெடுநீர்*
யாணர் ஊரன் றன்னெடு வதிந்த
ஏம வின்றுயி லெடுப்பி யோயே.

எ - து. பொருள் முற்றி (பி - ம். பொருள் முடித்து) வந்த தலை மகனையுடைய கிழத்தி காம மிக்க கழிபடர் கிளவியாற் கூறியது.

[முற்றி - நிறையப் பெற்று. காமமிக்க கழிபடர்கிளவி-காமம் மிக்கதனாலுண்டாகிய பெருந்துன்பங் காரணமாகக் கேட்டலும் விடை கூறுதலும் இல்லாத புள் முதலியவற்றை நோக்கிக் கூறுதல்.]

மதுரைக் கண்ணனார்.

(பி - ம்) 1 'ஒண்பூவென்னத்' 3 'நல்லிருள்' 6 'ஊரனெடு வதிந்த' 7 'எம்மின்றுயில்'

(ப - ரை) குவி இணர் தோன்றி - குவிந்த கொத்துக்களையுடைய செங்காந்தளினது, ஒள் பூ அன்ன - ஒள்ளிய பூவைப் போன்ற, தொகு செ நெற்றி - தொக்க சிவந்த கொண்டையையுடைய, கணம் கொள் சேவல் - கூட்டங் கொண்ட சேவலே, நெடு நீர் - ஆழமாகிய நீரினுல் உண்டாகும், யாணர் - புது வருவாயையுடைய, ஊரன் தன்னெடு வதிந்த - ஊரையுடைய தலைவனெடு தங்கிய, ஏமம் இன் துயில் - இன்பத்தைத்தரும் இனிய துயிலினின்றும், எடுப்பியோய் - எம்மை எழுப்பினை; நீ —, நள் இருள் யாமத்து - செறிந்த இருளையுடைய இடையிரவின்கண், இல் எலி பார்க்கும்-வீட்டிலுள்ள எலிகளை உண்ணும் பொருட்டு ஆராயும், பிள்ளை வெருகிற்கு - காட்டுப் பூனையின் குட்டிக்கு, அல்கு இரையாகி - சில நாள் இட்டு வைத்துண்ணும் உணவாகி, கடுநவை படுஇயர் - மிக்க துன்பத்தை அடைக.

(முடிபு) சேவல், துயில் எடுப்பியோய்; நீ கடுநவைப் படுஇயர்.

(கருத்து) பொழுது புலர்ந்தமையால் நான் துன்புறுவேனையினேன்.

(வி - ரை.) குவியிணரென்றது முதலுக்கேற்ற அடை. 'பிள்ளை வெருகிற்கு எலியே உணவாகச் சாலும்; அதற்கு நீ அகப்படின் பல நாள் கவலையின்றி உண்ணுதற்கு உதவும்; நானும் நின்குரல்கேளாது இன்புறுவேன்' என்பது தலைவியின் உள்ளக்கிடக்கை. கடுநவை யென்றது இறந்துபாட்டை. கடுநவைப்பட்டு இரையாகுக வென மாறிக்கூட்டுக. படுஇயரோ: ஓ அசைநிலை.

எடுப்புதல் - எழுப்புதல் (கலி. 70 : 21, ந.) ஏகாரங்கள் அசைநிலை.

தலைவன் பொருள்தேடும் பொருட்டுப் பிரிந்துசென்று மீண்டானாக, அவனை நெடுநாட் பிரிந்த துயரறக் கூடியிருக்க எண்ணிய தலைவிக்கு ஓரிரவு மனநிறைவை உண்டாக்கவில்லை; ஏம இன்றுயிலைத்தரும் அவ்விரவு விரைவிற் புலர்ந்ததுகண்டு அவள் துயருற்றாள்; காம மயக்கத்தால், புலர்ந்ததென உணர்த்திய சேவலின் பாற் குறையுளதாகக் கருதி இது கூறினாள்; ஆதலின் இது காமமிக்க கழிபடர் கிளவியாயிற்று.

(மேற்.) 2. கோழியின் ஆணிற்குச் சேவலென்னும் பெயர் உரித்து (தொல். மரபு. 48, பேர்.)

4. பிள்ளையென்னும் பெயர் நடப்பவற்றிற்கு வந்தது (தொல். மரபு. 5, பேர்.; மரபு. 26, இளம்.)

மு. 'இதனுள், தொகுசெந்நெற்றிக் கணங்கொள் சேவலென்பதனையும், கடுநவைப் படீஇயரோ நீயே யென்பதனையும், இன்றுயிலெடுப்பியோ யென்பதனையும் கூட்டிப் பொருள் கொண்டமையான் கொண்டுகூட்டுப் பொருள்கோளாயிற்று' (யா. வி. 95.)

(ஒப்பு.) 1-2. **சேவலின் கொண்டைக்குத் தோன்றிப்பூ**: "கொய்ம்மலர் தோன்றிபோற், சூட்டுடைய சேவலும்", "பூத்தலை வாரணப்போர்" (சீவக. 73, 120.)

3. **நள்ளிருள் யாமம்**: குறுந். 6 : 1, ஒப்பு.

4. **பிள்ளை வெருகு**: புறநா. 117 : 8.

அல்கிரை; "கொடுவாய்ப் பேடைக் கல்கிரை தீஇய" (அகநா. 3 : 4.)

(கு - பு.) அல்கிரை யென்பதற்கு மிக்க இரையென்று **அகநானூற்று** அரும்பதவுரை யாசிரிய ரெழுதினர்.

5. **கடுநவைப் படீஇயரோ**: "கடுநவைப் படீஇயர் மாதோ" (அகநா. 145 : 14.); படீஇயர் - படுக; குறுந். 243 : 5, 395 : 5; ஐங். 142 : 3.

1-5. சேவல் வெருகிற்கு உணவாதல்: "குவியடி வெருகின் பைங்கணேற்றை, ஊனசைப் பிணவி னுயங்குபசி களீஇயர், தளிர்புரை கொடிற்றிற் செறிமயி ரெருத்திற், கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன, நெற்றிச் சேவ லற்றம் பார்க்கும்" (அகநா. 367 : 8-12.)

7. **ஏமவின்றுயில்**: "இருண்மென் கூந்த லேமுறு துயிலே" (அகநா. 92 : 13.) (கஏ)

தலைவி கூற்று

[கார்ப்பருவம் வந்தது கண்ட தலைவி, "இன்னும் தலைவர் வந்திலர்; யான் உய்யேன்" என்று வருந்திக் கூறியது.]

கூஅ மழைவிளை யாடுங் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயிற் படரப் புறவிற்
பாசிலை முல்லை யாசில் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்
5?றுய்யேன் போல்வ ரூழி யானே.

எ - து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

வாயிலான்றேவன்.

(பி - ம்.) 4'செவ்வறன்' 5 'றுய்வன்'

(ப - ரை.) தோழி—, மழைவிளையாடும் - மேகங்கள் விளையாடுதற்கிடமாகிய, குன்றுசேர் சிறுகுடி - மலையைச் சேர்ந்த சிற்றூரினிடத்து, கறவை - மேயும்பொருட்டு அகன்றிருந்த பசுக்கள், கன்று வயின் படர - தம் கன்றுகளினிடத்தே நினைந்துசெல்ல, புறவில் - முல்லைநிலத்தில், பசு இலை முல்லை - பசிய இலைகளையுடைய முல்லையினது, ஆசு இல் வான் பூ - குற்றமில்லாத சிறந்த மலர்ப்பரப்பு, செ வான் செவ்வி கொண்டன்று - செக்கர் வானத்தின் அழகைக் கொண்டது; யான் உய்யேன் - இக் கார்ப்பருவத்து மாலையில் தலைவர் வாராமையின் யான் உயிர்வாழேன்

(முடிபு) தோழி, முல்லை வான்பூச் செவ்வான் செவ்வி கொண்டன்று; யான் உய்யேன்.

(கருத்து) கார்ப்பருவம் வந்துவிட்டது; தலைவர்பிரிவை இனிப் பொறுத்திரேன்.

(வி - ரை.) கறவை - பாற்பசு மாலைக்காலத்திற் பசுக்கள் கன்றை நினைந்து வீடுசெல்லுதல் மரபு. முல்லைநிலம் செந்நிறமாயிருத்தலின் அதற்குச் செவ்வானமும் அதன்கட்பூத்த முல்லைமலர்களுக்கு உடுக்களும் உவமை; சிவக. 726. மழைவிளையாடுதல் கார்காலத்தை யறிவிப்பது. கறவை படர்தலும் முல்லைபூத்தலும் மாலையில் நிகழ்வன. போல்வல்: அசை. ஏகாரம்: அசைநிலை.

(மேற்.) 2. படரென்னும் உரிச்சொல் செலவாகிய குறிப்புணர்த்தியது (தொல். உரி. 44, சே. 42, ந. 44, தெய்வச். இ. வி. 282.)

(ஒப்பு.) 1. மழைவிளையாடுங் குன்று: "மால்வரை, மழைவிளை யாடு காடனே" (குறுந். 263 : 6-7); "வெண்மழை, வான்றே யுயர்வரைபாடும் வைகறை" (அகநா. 139 : 6-7.)

2. மாலையில் கறவை கன்றுவயிற் படர்தல்: (குறுந். 64 : 1-3); "ஆன்கணப், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதர" (குறிஞ்சிப்.

217-8); "கறவைதம் பதிவயிற், கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர" (கலி. 119 : 9-10); "பதவுமேய லருந்து மதவுநடை நல்லான், வீங்குமாண் செருத்த நீம்பால் மிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு, மாலை", "கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும், ஆபூண் டெண்மணி யையியம் பின்னிசை, புலம்புகொண் மாலை கேட்டொறும்" (அகநா. 14 : 9-12, 64 : 14-6); "குவளை மேய்ந்த குடக்கட் சேதா, முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக், கன்றுநினை குரல மன்றுவழிப் படர" (மணி. 5 ; 130-32.)

5. உய்யேன் போல்வல் : குறுந். 103 : 5-6.

4-5. மாலையில் முல்லை மலர்தல் : குறுந். 162 : 2-3, 234 : 2-3, 387 : 1-2 (கo அ)

தோழி கூற்று

[தலைவன் கேட்கும் அண்மையனாக இருக்கையில் தலைவிக்குக் கூறுபவளாய், "தலைவர் நாடோறும் வந்து பயின்று செல்லும் இக் காலத்தில் நின் நுதற்கவின் மாறியது என்?" என்று தோழி, அவனுக்கு வரைய வேண்டியதன் இன்றியமையாமையைப் புலப் படுத்தியது.]

கoக. முடக்கா லிறவின் முடங்குபுறப் பெருங்கிளை
புணரி யிகுதிரை தருஉந் துறைவன்
புணரிய விருந்த ஞான்றும்
இன்னது மன்னே நன்னுதற் கவினே.

எ - து. சிறைப்புறம். தம் வேறுபாடு கண்ட புறத்தார் அலர் கூறுகின்றமை தோன்றத் தோழி தலைமகட்குக் கூறுவாளாய்க் கூறியது.

நம்பி குட்டுவன்.

(பி - ம்.) 1 'முட்கால்' 2 'யிஃதிரை' 'மிகுதிரை' 'யுணரி யிகுதிரை' 3 'புணரியவிந்த'

(ப - ரை.) முடம் கால் - வளைவையுடைய காலையுடைய, இற வின் - இருமீனின், முடங்குபுறம் பெரு கிளை - வளைந்த முதுகை யுடைய பெரிய இனத்தை, புணரி இகு திரை - கடலில் தாழும் அலையானது, தரூஉம் - கொண்டு வந்து தருதற்கு இடமாகிய, துறைவன் - துறையையுடைய தலைவன், புணரிய இருந்த ஞான் றும் - அளவளாவ இருந்த பொழுதும், நல் நுதல்கவின் - நினது

கல்ல நெற்றியின் அழகு, இன்னது - பிறர் அலர் கூறும் குறை பாட்டையுடைய இத்தகையதாயிற்று ; மன் - இஃது இரங்கற் குரியது !

(முடிபு) துறைவன் புணரிய இருந்த ஞான்றும் நன்னுதற் கவின் இன்னது மன்.

(கருத்து) தலைவன் வரைந்தாலன்றி நின் வேறுபாடு நீங்காது.

(வி - ரை.) தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுங்காலம் ஒழுகினனாக, அதனால் தலைவி வருந்தினாள் ; அவ்வருத்தத்தை அவ ளது நுதல் வேறுபாடு முதலியன வெளியிட ஊரார் அறிந்து அலர் தூற்றுவாராயினர். இந்நிலையைத் தலைவன் கேட்கும் அணிமை யில் இருப்பத் தலைவிக்குக் கூறுவாள் போலத் தோழி அவனுக்கு அறிவித்தது இது. தலைவனோடு நாடோறும் பயின்று வரினும் அச்சத்தின்பாற்பட்ட அக்களவின்பம் தலைவிக்குத் துன்பத்தை உண்டாக்குவதென்றும் அலர் மிக்கதென்றும் அறிந்து தலைவன் அவளை வரைந்துகொள்ளுதல் இதன் பயன்.

நுதற்கவின் இன்னதென்றது பசலை பெற்றதைக் குறித்தது. களவுக்காலத்து இடையீடு உண்மையின் அதனால் வருந்திய தலைவி யின் நிலை நீங்க வரைந்துகொண்டு இடையீடின்றி உடனுறைந்து இல்வாழ்க்கை நடத்தலே தகுதி யென்று தோழி குறிப்பால் அறி வுறுத்தினாள்.

(மேற்.) மு. தலைமகள் கவின ழிபுரைத்தது (நம்பி. 164.)

(ஒப்பு.) 1. இறவின் புறம் வகைந்தது : குறுந். 160 : 2 ; " சிலையு மான... ...பச்சிருப் பிறழும் " (பெரும்பாண். 269-70); " முடங்கிரு ", " முடங்கு புற விறவின் மோவா யேற்றை, எறிகிரை தொகுத்த வெக்கர் " (நற். 49 : 3, 211 : 5-6); " முடங்குபுற விறவு ", " துய்த்தலை முடங்கிரு " (அகநா. 220 : 17, 376 : 16); " பூட்டுசிலை யிறவு " (சீவக. 1788); " முடங்கிரு முது கீர் " (தே. திருநா. திருவாரூர்.)

2. இருதிரை : மலைபடு. 226 ; ஐங். 465 : 1 ; அகநா. 82 : 5, 112 : 14, 274 : 2.

4. நுதற்கவின் : கலி. 53 : 24. (கoக)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற பருவம் வரவும் அவன் வாராதொழிக, " இனி அவர் வரினும் வாராவிடினும் நமக்குப் பயனொன்றும் இல்லை ; நான் இறந்து படுவேன் " என்று தலைவி கூறியது.]

ககo. வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர

நீலப் பைம்போ துளரிப் புதல
பீலி யொண்பொறிக் கருவிளை யாட்டி
5. நுண்மு ளீங்கைச் செவ்வரும் பூழ்த்த
வண்ணத் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்ன தெறிதரும் வாடையொ
டென்ன யினள்கொ லென்ன தோரே.

எ - து. (1) பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

(2) தலைமகனைக் கொடுமைகூறித் தலைமகளைத் தோழி வற்புறீஇ யதுமாம் (பி - ம். வற்புறுத்தியது.)

கிளிமங்கலங்கிழார் (பி - ம். கிள்ளிமங்கலங்கிழார்.)

(பி - ம்.) 2-3. 'கீர் நிலைப்' 3-4 'புதன்மலியொண்' 7 'றின்ன வெறி தரும்', 'றின்ன தெறி வரும்'

(ப -ரை.) தோழி—, கீர - கீரிலுள்ள, நீலம் பைம்போது உளரி- நீலத்தினது மலருஞ் செவ்வியையுடைய பேரரும்பை மலரச் செய்து, புதல - புதலிலே உள்ள, பீலி ஒள் பொறி கருவிளை - மயிற் பீலியின் ஒள்ளிய கண்ணிப் போன்ற கருவிளைமலரை, ஆட்டி-அலைத்து, நுண் முள் ஈங்கை செ அரும்பு ஊழ்த்த - நுண்ணிய முள்ளையுடைய ஈங்கையினது செவ்விய அரும்புகள் மலர்ந்த, வண்ணம் துய்மலர் - நிறத்தையும் துய்யையும் உடைய மலர்கள், உதிர - உதிரும்படி, தண்ணென்று - குளிர்ச்சியையுடையதாகி, இன்னது எறிதரும் வாடையொடு - இன்னதாகி வீசுகின்ற வாடைக்காற்றினால், என் ஆயினள் கொல் - எத்தன்மையினள் ஆனளோ, என்னுதோர் - என்று நினைந்து கவலையுறுத தலைவர், வாராராயினும் - வாராவிடினும், வரினும் - வந்தாலும், நமக்கு யார் ஆகியர் - நமக்கு எத்தகைய உறவினராவர்? வருவதற்குள் இறந்து படுவேன்.

(முடிபு) தோழி, என்னுயினள் கொல் என்னுதோர், வாராராயினும் வரினும் யாராகியர்?

(கருத்து) தலைவர் வாராமையின் யான் இறந்து படுவேன்.

(வி - ரை.) "உயிரோடிருப்பின் அவர் வந்தால் இன்புறுவேன்; அவர் வருதற்குரித்தான இப்பருவத்தில் வாராமையின் யான் இனி

இறந்து படுவேன்; யான் இறந்துபட்ட பின்னர் அவர் வரினும் வாராவிடினும் எனக்கு ஆகும் பயன் ஒன்றுமில்லை" என்று தலைவி கூறினாள்.

இன்னுதெறிதரும் வாடையென்றது அவ்வாடையே தன் உயிர் நீத்தற்குரிய காரணமாகுமென்று குறிப்பித்தவாறு.

துய் - பஞ்சின் நுனிபோன்றதொரு பொருள். ஓ, ஏ: அசை நிலைகள்.

இரண்டாவது கருத்து: "நம்மேல் அன்புடையராயின் நம்மைத் துன்புறுத்தும் இவ்வாடைக்காலத்தே வந்து துன்பத்தைப் போக்க வேண்டும். இதற்குப் பாதுகாப்பாக வாராவிடின் அவர் இனி வந்தும் பயனில்லை" என்று தோழி கூறியதாகக் கொள்க.

(மேற்.) 1-2. அகைப்பு வண்ணம் வந்தது (தொல். செய். 229, பேர்., ந.)

மு. பருவங்கண்டழிந்து தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ந, செய், 211, பேர். ந.)

(ஒப்பு.) 1. யாராகியர்: குறுந். 40: 1.

1-2. அவர் யாராகியர்: "வாரா தோர்நமக் கியாஅர்" (அகநா. 50: 8.)

4. கருவிளம் பூவிற்கு மயிற்பீலி: "தண்புனக் கருவிளைக் கண்போன் மாமலர், ஆடுமயிற் பீலியின் வாடையொடு துயல்வர" (நற். 262: 1-2.)

3-4. புதல் கருவிளை: "கருவிளை முரணிய தண்புதற் பகன்றை" (அகநா. 255: 11.)

5. நுண் முன் ஈங்கை: "கொடுமு ளீங்கை" (நற். 205: 9; அகநா. 357: 1.)

5-6. ஈங்கையின் துய்ம்மலர்: "ஈங்கைய, வண்ணத் துய்ம்மலர்" குறுந். 380: 5-6); "ஈங்கைத் துய்த்தலைப் புதுமலர்" (நற். 193: 1-2); 'ஈங்கைத் துய்யவிழ் பனிமல ருதிர", "முட்கொம் பீங்கைத் துய்த்தலைப் புதவி" (அகநா. 252: 9-10, 306: 3.)

5-7. வாடையால் ஈங்கைப்பூ உதிர்தல்: "ஈங்கைவா டுதிர்புக..... மேனின்ற வாடையால்" (கலி. 31: 3-6.)

4-7. கருவிளை, ஈங்கை, வாடை: "நீர்வார் கண்ணிற் கருவிளை மலரத், துய்த்தலைப் பூவின் புதலிவ ரீங்கை, நெய்த்தோய்த் தன்ன நீர்நிலை யந்தளிர், இருவகி ரீருளி னீரிய துயல்வர.....ஆனு தெறிதரும் வாடையொடு" (அகநா. 294: 5-15.)

மு. குறுந். 82. (ககo)

தோழி கூற்று

[தலைவன் வேலிப்புறத்தானாக அவனுக்குப் புலப்படும்படி தோழி, "நின்மேனியின் வேறுபாடு கண்டு அன்னை வெறியாடத் தொடங்கினள். அவ் வேறுபாடு நீங்குதற்குரிய வழி வெறியாட

லன்றென்பதைத் தாய் அறியும்பொருட்டுத் தலைவன் இங்கே வந்து செல்லுதல் நலம்" என்று தலைவியை நோக்கிக் கூறியது.]

கக. மென்றோ ணெகிழ்த்த செல்லல் வேலன்
வென்றி நெடுவே ளென்னு மன்னையும்
அதுவென வுணரு மாயி னுயிடைக்
கூழை யிரும்பிடிக் கைகரந் தன்ன
5. கேழிருந் துறுகற் கெழுமலை நாடன்
வல்லே வருக தோழிநம்
இல்லோர் பெருநகை காணிய சிறிதே.

எ - து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் வேறுபாடு கண்டு வெறியெடுப்பக் கருதிய தாயது நிலைமை தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகத் தோழி கூறியது.

தீன்மிதி நாகன் (பி - ம். தின்மதி நாகன்.)

(பி - ம்.) 5 'செழுமலை' 6-7 'நம, மல்லோர்'

(ப - ரை.) தோழி—, மெல் தோள் நெகிழ்த்த செல்லல் - நின் மெல்லிய தோளை மெலியச்செய்த துன்பம், வேலன் - வெறியாட்டாளன், வென்றி நெடுவேள் என்னும் - வெற்றியையுடைய நெடிய முருகக்கடவுளால் வந்ததென்று சொல்லுவான்; அன்னையும் - நம் தாயும், அது என உணருமாயின் - அதுவென்றே நினைப்பாளாயின், ஆயிடை - அப்பொழுது, கூழை இரு பிடி - குறிய கருமையான பெண் யானையினது, கை கரந்தன்ன - கைமறைந்தாற் போன்ற, கேழ் இரு துறுகல் கெழுமலை நாடன் - கரிய நிறத்தையுடைய பெரிய குண்டுக்கல் பொருந்திய மலைநாட்டையுடைய தலைவன், நம் இல்லோர் பெரு நகை காணிய - நம் வீட்டிலுள்ளாரது பெரிய நகைக்கிடமான செய்கையைக் காணும் பொருட்டு, சிறிது - சிறிது நேரம், வல்லே வருக - இங்கே விரைந்து வந்து செல்வானாக.

(முடிபு) தோழி, செல்லலை வேலன் நெடுவேளென்னும்; அன்னையும் அதுவென உணருமாயின், மலைநாடன் காணிய சிறிது வல்லே வருக.

(கருத்து) தாய் நின் வேறுபாடு கண்டு வெறியெடுத்தலைத் தலைவன் அறிவானாக.

(வி - ரை.) முருகக் கடவுளுக்குரிய வேலைத் தான் ஏந்தி நிற்றலின் வெறியாட்டாளன் வேலனென்னும் பெயர் பெற்றான்

இவன் படிமத்தானெனவும் கூறப்படுவான். பிள்ளையாயிராமல் தான்வேண்டிய வடிவு கோடலின் நெடுவேளென்றுன் ; "சேவலங், கொடியனெடியன்" (முருகு. 210-11, ந.)

அன்னையும் : உம்மை உயர்வு சிறப்பு ; வேலன் நெடுவேளென்று கூறினுயினும், பெண்ணியல்பினுலும் என்னெடு பயின்ற பயிற்சியினுலும் என் நிலையை ஓர்ந்தறிதற்குரிய தாயும் அதனை உண்மையென்று கருதி, என் வேறுபாடு முருகனுல் வந்த தென்றே உணர்தல் அருமையென்னும் கருத்தால் உணருமாயினென்றுள்.

வாளா நோக்குவார்க்குப் பிடி கைகரந்தாற் போன்ற தோற்றத்தையும் ஆய்ந்தறிவாருக்குத் தன் உண்மைத் தோற்றத்தையும் தன் நாட்டினுள்ள துறுகல் தருதலைப்போல, ஆய்வின்றிக் காண்பார்க்கு முருகனுல் வந்த வினையென்றும் ஆய்ந்து காண்பார்க்குத் தன்னுல் வந்ததென்றும் தோற்றும்படி தலைவன் தந்த நோய் செய்ததென்பது குறிப்பு.

வல்லே வருகவென்றது, தாய் விரைவில் வெறியெடுக்கக் கருதுவாளென்பதையும் குறிப்பித்தது.

நகை - நகையை வினைக்கும் செயல். தாய் செயல் பேதைமையை யுடையதாதலின் அது கண்டு நகை வினையும்; "எள்ள வினைமை பேதைமை மடனென், றுள்ளப் பட்ட நகைகான் கென்ப" (தொல். மெய்ப். 4) என்பது காண்க. சிறிது காணிய வென்றமையால் இதனைப்போல எத்துணையோ நகைக்குக் காரணமான செயல்களை இல்லோர் புரிவரென்பது பெறப்படும் ; அவையாவன கட்டுப் பார்த்தல், கழங்கு பார்த்தல் முதலியன.

நெடுவேள் : ஆகுபெயர், அவன் செயலுக்கு ஆயினமையின். சிறிதே : ஏகாரம் அசைநிலை.

இதனுல் தோழி சிறைப்புறமாக இருந்த தலைவனுக்கு, "தலைவன் இன்னும் வரைந்து கொள்ளாமையால் தலைவி துன்புற்றுள் ; அவளுடைய அகத்துன்பம் புறத்தாருக்குப் புலனுகும்படி அவள் தோள்கள் நெகிழ்ந்தன. அதுகண்டு தாய் வெறியாட்டெடுக்க எண்ணியுள்ளாள்" என்பதைப் புலப்படுத்தினுளாயிற்று. தலைவன் இதனை யுணர்ந்து விரைவில் வரைந்து கொள்ளுதல் இதன் பயன்.

(ஒப்பு.) 1. தோள்நெகிழ்த்த செல்லல் : குறுந். 87 : 5, ஒப்பு.

2. நெடுவேள் : முருகு. 211, 273 ; பெரும்பாண். 75 ; பரி. 19 : 84 ; அகநா. 22 : 6, 98 : 27, 120 : 1, 382 : 5 ; புறநா. 55 : 19 ; சிலப். 23 : 190.

4-5. துறுகல்லுக்கு யானை : குறுந். 13 : 1-2, ஒப்பு.

துறுகல்லுக்குப்பிடி : "சுரும்புணக் கனித்த புகர்முக வேழம், இரும் பிணர்த் துறுகற் பிடிசெத்துத் தழூஉம்" (ஐங். 239 : 1-2); "பிடி தழீஇ வன்ன வறை" (கலி. 108 : 40.)

1-7. வெறியாட்டெடுக்கையில் தலைவன் வருதலும் இல்லோர் பேதைமை கண்டு நகுதலும் : அகநா. 22.

கருத்து : அகநா. 242, கருத்து. (கக)

தலைவி கூற்று

[தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுநாள் ஒழுகினானை, "நான் ஊரார் அலருக்கு அஞ்சி மறைந்தொழுகின்றேன்; என் காமம் மெலிகின்றது; அதனை முற்றும் விடும் நிலையைப் பெறும் ஆற்றலில்லேன்" என்று கூறித் தலைவி வருந்தியது.]

கக2. கௌவை யஞ்சிற் காம மெய்க்கும்
எள்ள றவிடி னே யுள்ள தது நாணே
பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ
நாருடை யொசிய லற்றே
5. கண்டிசிற் ரோழியவ ருண்டவென் னலனே.

எ - து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஆலத்தூர்கிழார்.

(பி - ம்.) 3. 'நிலம்படர்' 4 'நாளுடை

(ப - ரை.) தோழி—, கௌவை அஞ்சின் - பிறர் கூறும் பழி மொழியை அஞ்சினால், காமம் எய்க்கும் - காமம் மெலிவடையும்; எள் அற விடின் - பிறர் இழித்தல் அறும்படி அக்காமத்தை விட்டு விடின், உள்ளது நாணே - என்பால் இருப்பது நாண மட்டுமே ஆகும்; அவர் உண்ட என் நலன் - தலைவர் நுகர்ந்த எனது பெண்மை நலம், பெரு களிறு வாங்க - பெரியகளிறு உண்ணும்பொருட்டு வளைக்க, முரிந்து - வளைந்து, நிலம் படாஅ - நிலத்திற் படாத, நாருடை ஒசியல் அற்று - பட்டையையுடைய ஒடிந்த கிளையைப் போன்றது; கண்டிசின் - இதனைக் காண் பாயாக.

(முடிபு) தோழி, கௌவை அஞ்சின் காமம் எய்க்கும்; விடின் நாணே உள்ளது; அவர் உண்ட நலன் ஒசியலற்று; கண்டிசின்.

(கருத்து) ஊரார் அலரை அஞ்சிக் காமத்தை மிகுதியாக வெளிப்படுத்தாமல் இருக்கின்றேன்.

(வி - ரை.) கௌவை - பலர் கூறும் பழிமொழி. "என்பாலுள்ள காமத்தினால் உண்டாய வேறுபாடுகளை ஊரினர் அறிந்து பழிமொழி கூறுகின்றனர்; அப்பழிமொழிக்கு அஞ்சுவேனையின் என்பாலுள்ள காமம் குறைவுபடும்; அக்கவ்வை சிறிதேனும் உண்டாகாமலிருத்தற் பொருட்டு என் காமத்தை முற்றும் விடின் என்பால் எஞ்சியிருப்பது நாணம் ஒன்றுமேயாகும்; எனது பெண்மைநலனும் கற்பும் அழிந்துவிடும். பெண்மை நலன் முன்னரே தலைவரால் உண்ணப்பட்டுச் சிறிதளவு எஞ்சிநிற்கின்றது" என்று தலைவி கூறினாள்.

காமத்தை விடுவதாற் பயனில்லை யென்பது தலைவி கருத்து. கௌவையும் காமமும் ஒன்றுக்கொன்று முரணுக இருந்து தலைவியைத் துன்பத்துக்கிடமாக்கின;

> "நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்
> வலிதி னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
> நலியும் விழுமம் மிரண்டு" (கலி. 142 : 56-8)

என்பதில் இக்கருத்து விளக்கமாக அமைந்துள்ளது.

கௌவையும் நாணும் காமத்தைப் பெருகவிடாமல் தடை பண்ணுவன (குறள், 1163.)

களிறு வளைத்துத் தழைகளை உண்டதனால் ஒடிந்த மரக்கிளையானது தன்னுடைய இயல்பான நிலையை ஒழிந்து மீட்டும் அந்நிலையைப் பெறுதவண்ணம் இருப்பினும், முற்ற ஒடிந்து கீழே விழுந்து வாடி உலராமல் நாரின் தொடர்பினால் மீண்டும் தழைக்கும் நிலையில் இருத்தலைப்போல, தலைவனால் உண்ணப்பட்ட நலன் தன் பண்டை நிலைமையைப் பெறுத நிலையிலிருப்பினும், முற்றும் அழிந்தொழியாமையால் தலைவர் வரைவாரென்னும் கருத்தினால் பின் சிறக்கத்தக்க நிலையில் அமைந்துள்ளதென்று உவமையை விரித்துக்கொள்க.

உண்ட நலனென்றது உண்ணப்படுவதற்குரியதல்லாத பொருளைப் பிறர் உண்டதுபோலக் கூறும் மரபுபற்றி வந்தது (தொல் பொருள். 21, ந.)

இசின் : முன்னிலையில் வந்தது. நாணே : ஏகாரம் பிரிநிலை; ஏனை ஏகாரங்கள் அசைநிலைகள்.

(மேற்.) மு. தலைவனை வழிபடுதலை மறுத்த தலைவியே அவனை ஏற்றுக் கோடலை விரும்பியபோது கூறியது; 'இது நாணே உள்ளது; கற்புப் போமென்றலின் மறுத்தெதிர் கோடலாம்' (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 2. காமமும் நாணமும் : குறுக். 149 : 1-6 ; "காமம் விடு வொன்றே நாண்விடு நன்னெஞ்சே, யாஞ்செ பொறேனிவ் விரண்டு" (குறள், 1247.)

5. கண்டிசிற்றேழி : குறுந். 220 : 7, 240 : 5.
தலைவன் உண்ட நலம் : குறுந். 236 : 6 ; நற். 15 : 4. (ககஉ)

தோழி கூற்று

[பகற்குறியின்கண் வந்து அளவளாவிய தலைவனுக்குத் தாம் பயிலும் இடத்தை மாற்றி வேறிடங்கூறுவாளாய், "தலைவி காட் டாற்றங்கரையிலுள்ள பொழிலுக்கு எம்முடன் வருவாள்" என்று ஆண்டு வரும்வண்ணம் குறிப்பாகத் தோழி கூறியது]

ககந. ஊர்க்கு மணித்தே பொய்கை பொய்கைக்குச்
சேய்த்து மன்றே சிறுகான் யாறே
இரைதேர் வெண்குரு கல்ல தியாவதும்
துன்னல்போ கின்றுற் பொழிலே யாமெம்
5. கூழைக் கெருமண் கொணர்கஞ் சேறும்
ஆண்டும் வருகுவள் பெரும்பே தையே.

எ - து. பகற்குறி நேர்ந்த தலைமகற்குக் குறிப்பினாற் குறியிடம் பெயர்த்து (பி - ம். குறிப்பிடம் பொய்தது)ச் சொல்லியது.

மாதீரத்தன் (பி - ம்- மாதீரத்தன், மாதீர்த்தன்.)

(பி - ம்.) 2 'சேயத்துமன்று' 3 'தியாவரும்' 5 'கூழைக்கேர் மணங்குறுகம', 'கூழைக்கேருமணங்குணர்கஞ்'

(ப - ரை) தலைவ, பொய்கை—, ஊர்க்கும் அணித்து - ஊருக் கும் அருகிலுள்ளது ; சிறு கான் யாறு - சிறிய காட்டாறு, பொய் கைக்கு சேய்த்தும் அன்று - அப்பொய்கைக்குத் தூரியதும் அன்று ; அணிமையிலே உள்ளது ; பொழில் - அங்குள்ள சோலை, இரை தேர் - அப்பொய்கையிலும் யாற்றிலும் உணவை ஆராய்கின்ற, வெண்குருகு அல்லது - வெள்ளிய நாரைகளையன்றி, யாவதும் - வேறு எவ்வுயிரும், துன்னல் போகின்று - நெருங்கல் ஒழிந்ததாகும் ; யாம் எம் கூழைக்கு - நாங்கள் எமது கூந்தலுக்கு இட்டுப் பிசை யும் பொருட்டு, எருமண் கொணர்கம் - எருமண்ணைக் கொணர்வே மாய், சேறும் - அங்கேசெல்வேம் ; பெருபேதை - பெரிய பேதை மையையுடைய தலைவி, ஆண்டும் வருகுவள் - அங்கும் வரு வாள்.

(முடிபு) பொய்கை ஊர்க்கும் அணித்து; யாறு சேய்த்து மன்று; பொழில் யாவதுந் துன்னல் போகின்று; யாம் சேறும்; பெரும் பேதை ஆண்டும் வருகுவள்.

(கருத்து) பொய்கைக்கு அணித்தாகிய காட்டாற்றின் கரையிலுள்ள பொழிலகத்தே தலைவியைக் கண்டு அளவளாவலாகும்.

(வி - ரை.) பொய்கை என்றது, ஊரினர் உண்ணுதற்கும் ஆடுதற்கும் பயன்படும் பெரய்கையை. ஊர்க்கு அணித்தாயிருத்தல் பற்றி அதனை ஊரணியென வழங்குதலும் உண்டு; "சேர், * ஊரணி யுற்றவர்க் கூரன்மற் றயாவர்க்கு மூதியமே" (திருச் சிற். 400, பி-ம்.); பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை ஊர்க்கும் உம் எதிரது தழீஇய எச்சவும்மை; சிறுகான் யாற்றுக்கும் அணித்தென்னும் பொருளைத் தழுவி நின்றது. தலைவன் சிறுகான்யாற்றைக் கடந்துவரும் வழக்கமுடையனாதலின் அவ் யாற்றைச் சுட்டிக் கூறினாள். இரை - மீன் முதலியன. போகின்று - நீங்கியது. எருமண் என்றது களிமண்ணை. கூந்தலிலுள்ள எண்ணெய்ப்பசை, சிக்கு முதலியன போகும்பொருட்டுக் களிமண்ணைத் தேய்த்துக் கொண்டு மகளிர் நீராடுதல் வழக்கு; இதனைச் சிற்றூர்களில் இன்றும் காணலாம்;

"கூழைபெ யெக்கர்" (குறுந். 372 : 5),

"கூந்த னறுமண்" (பெருங். 1. 40 : 28) என்பவற்றைப் பார்க்க.

ஆண்டும் வருகுவளென்றது ஈண்டு வந்ததையன்றி யென்னும் எச்சப் பொருளைத் தந்தது.

பெரும் பேதை யென்றாள், கூழை முடியா நிலையிலுள்ள தனக்கு எருமண் வேண்டிற்றிலதாகவும் எம்மொடு வருவாளென்பது கருதி.

ஊர்க்குமணித்தே பொய்கை, அப்பொய்கைக்குக் கான்யாறு அருகிலுள்ள தென்றதனால் 'யாங்கள் வரல்எளிது' என்பதைக்

---

* "காரணி கற்பகம்" என்னும் முதலியுடைய இச் செய்யுளின் ஈற்றடியின் முதல் "ஊரணி" என்று ஒரு பழம்பிரதியிற் காணப்பட்டது. எதுகை நயத்தையும், 'உற்றவர்க்குச் சேர் ஊரணி - சுற்றத்தார்க்கு அவர் வேண்டிய செய்யவிருத்தலின் அணித்தாகிய ஊரணியோடொக்கும்' என்ற பேராசிரியர் உரையையும், இக் குறுந்தொகைச் செய்யுட் பொருளையும் கருதுகையில் இப்பாடம் சிறப்புடையதாகத் தோற்றுகின்றது. ஊருக்கு அணித்தானமையின் பொய்கையை ஊரணியென்று கூறுதலும், ஊரினரால் உண்ணப்படும் தகுதியுடைய நீர்நிலையை ஊருணியென்று கூறுதலும் வழக்கென்று கொள்ளுதல் பொருந்தும்.

குறிப்பித்தாள். இங்ஙனம் வருதற் கெளியதாகிய இடத்துத் தனியிடமு முண்டாங்கொலோ வென்னும் ஐயம் நிகழாதபடி யாவதும் துன்னுதல் நீங்கியது அப்பொழில் என்றாள். யாம் வருவது எம் கூழைக்கு எருமண் கொணர்தற்கேயாதலின் யாமும் கான்யாற்றங் கரையிலே நிற்றலன்றிப் பொழிலிற் புகுதோ மென்பதை அறிவித்தாள்.

"தோழியின் முடியு மிடனுமா ருண்டே" (தொல். களவு. 30) என்னும் விதிபற்றித் தோழி குறியிடங் கூறினள்.

ஏகாரங்கள் அசைநிலைகள்.

(மேற்.) 1. உயர்வு சிறப்பும்மை வந்தது (தொல். இடை. 7, கல், ந.)

2. ஐயவும்மை வந்தது (தொல். இடை. 7, கல்.)

1 - 2. ஐயவும்மை வந்தது (தொல். இடை. 7, ந.); நான்காம் வேற்றுமையுருபு இதற்கிது வென்பதுபட வந்தது (நன். 297, மயிலை; இ. வி. 201.)

மு. பகற்குறி நேர்ந்தது (தொல். களவு. 24, இளம்.); பகற்குறி கேர்ந்து இடங்காட்டியது (தொல். களவு. 23, ந.) மெய்ந்தமை கூறிய தோழி தலைமகற்குக் குறிப்பினும் பகற்குறியிடங்காட்டியது (களவியற்.)

(ஒப்பு.) 3 - 4. குருகு குறியிடத்தில் இருத்தல் : குறுந். 25 : 4 - 5. (ககக)

தோழி கூற்று

[தலைவியைக் குறியிடத்தில் நிறுத்தி வந்த தோழி தலைவனிடம் வந்து அதனைக் குறிப்பாகப் புலப்படுத்தியது.]

ககச. நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி
நின்குறி வந்தனெ னியறேர்க் கொண்க
செல்கஞ் செலவியங் கொண்மோ வல்கலும்
ஆர லருந்த வயிற்ற
5. நாரை மிதிக்கு மென்மக ணுதலே.

எ - து. இடந்துய்த்து நீங்குந் தோழி தலைமகற்குக் கூறியது. பொன்னாகன்.

பி - ம்.) 1 'கிடப்பினென்' 3 'வைகலும்' 4 'ஆராலருந்திய' 'லருந்தும்' 5 'மெனமதிநுதலே'

(ப - ரை.) இயல் தேர் கொண்க - இயற்றப்பட்ட தேரையுடைய தலைவ, நெய்தல் பரப்பில் - நெய்தல் நிலத்தின்கண், பாவை கிடப்பி - எனது பாவையை வளர்த்திவிட்டு, நின் குறி

வந்தனென் - நீ இருக்கு மிடத்து வந்தேன்; அல்கலும் - இரவு வருதலும், ஆரல் அருந்த வயிற்ற - ஆரல் மீனை அருந்தி நிறைந்த வயிற்றை.றயுடையனவாகிய, நாரை - நாரைகள், என் மகள் நுதல் மிதிக்கும் - என் மகளாகிய அப்பாவையின் நெற்றியை மிதிக்கும்; ஆதலின், செல்கம் - யாம் போகின்றோம்; செல்ல வியங்கொண் மோ - அவளைப் போகும்படி நீயே ஏவுவாயாக.

(முடிபு) கொண்க, பாவை கிடப்பினென்; வந்தனென்; என் மகள் நுதல் நாரை மிதிக்கும்; செல்கம்; செல வியங்கொண்மோ.

(கருத்து) தலைவியைக் கண்டு அளவளாவி விரைவில் விடுப் பாயாக.

(வி - ரை.) நெய்தற் பரப்பு - நெய்தற் பூவின் பரப்பெனினு மாம்; பாவையினிடத்துள்ள பேரன்பினால் நெய்தல்மலர்களைப் பரப்பி அப்பரப்பின்மேல் மெத்தென வளர்த்திவந்தாளெனக் கொள்க. பாவை - பஞ்சாய்க் கோரையினாற் செய்த பாவை; தாது முதலியவற்றாற் செய்த பாவையுமாம். இயல் தேர் - இயலுந்தே ரெனலுமாம். வந்தனென் என்று முன்பு ஒருமையாற் கூறிப் பின்பு செல்கமெனப் பன்மையாற் கூறினமையின் தோழியுடன் தலைவி வந்துள்ளாளென்பதையும் அவளைக் குறியிடத்தே நிறுத்தித் தோழி வந்தனளென்பதையும் தலைவன் உணர்வான். வியங் கொள்ளல் - ஏவலை மேற்கொள்ளல்; "வியங் கொண்டான்" (சிலப். 9 : 78.) ஆரலருந்திய வயிற்ற வென்றது, மிதிக்குங்கால் நோய்தரும் கனமுடையதென்றபடி.

என் மகளென்றது பாவையை. பாவையினிடத்தே அன்பு பூண்டு அதனைப் போற்றி வளர்த்தலும், மணம் முதலியன செய்து மகிழ்தலும் மகளிர்க்கு இயல்பு மகளிர்க்குப் பாவையின்பா லுள்ள அன்பை இந்நூல் 48 - ஆம் செய்யுளாலும் அதன் விசேட வுரையாலும் உணரலாகும்.

மோ : முன்னிலையசை (குறுந். 275 : 2, 390 : 2). அல்கல் - இரா; பகல் குறைந்து இரா வருதலென்னும் பொருளில் வந்தது.

ஏ : ஈற்றசை.

(மேற்.) மு. தலைமகள் குறைநயந்தமை தலைமகற்குக் கூறியது (தொல். களவு. 24, இளம்.); ஆயத்தின்நீங்கித் தன்னொடு நின்ற தலைவியைத் தலைவ னொடு கூட்டவேண்டி அவளின்நீங்கித் தலைவனுக்கு இன்னுழி எதிர்ப்படுதி யென உரைக்குமிடத்துப் பாங்கிக்குக் கூற்று நிகழ்ந்தது; 'வந்தனென்னென்றும் என்மகளென்றும் ஒருமைகூறிச் செல்கமென்ற உளப்பாட்டுப்

பன்மையால் தலைவிவரவுங்கூறி இடத்துய்த்தவாறும் உணர்த்தினள்; செலவியங்கொண்மோவென்றது நீயே அவளைப் போகவிடுவாயாக வென்றதாம்' (தொல். களவு. 24, ந.)

(ஒப்பு.) 1. பாவை: குறுந். 48 : 1, ஒப்பு.

7. தலைவன் தேருந்து வருதல்: தொல். பொருள். 18.

4-5. ஆரல் அருந்த வயிற்ற நாரை: "பழனப் பன்மீ னருந்த நாரை" (ஐங். 70 : 1.)

நாரை ஆரல்மீனை அருந்துதல்: குறுங். 25 : 4-5, ஒப்பு; "கூர்வாய்ச் சிறுகுருகே குண்டுநீ ருட்கிடந்த, ஆர லிரைகருகி நித்தலு நிற்றியால்" (தொல். களவு. 20, ந. மேற்.); "கழிப்புநீ ராரலொடு கொழுப்பிருக் கொளீஇய, நாரைச் சேவல் பார்வலொடு வதிந்த", "கழனி யாரல கவுளகத் தடக்கிப், பழன மருகிற பார்ப்புவாய் சொரிநது, கருங்கா னுைை நரன்றுவந் திறுப்ப" (பெருங். உ. 4: 42-3, 7: 29-31.)

மு. "பனியேர் நறுமலர்ப் பாயலிற் கண்வளர் பாவையொரு
தனியே கிடந்தழுந் தாயுமங் கில்லத தடஞ்சிலம்பா
முனியேல் விடைகொள்வன் முற்றுநின் காவன் முகிணகைசெங்
கனியே யினியசெவ் வாய்நவ்வி மான்விழிக் காரிகையே"

(அம்பிகாபதி கோவை, 153.)

(ககச)

தோழி கூற்று

[தலைவனுடன் போகும்படி தலைவியை உய்க்கும் தோழி, "இவளை எக்காலத்தும் அன்புவைத்துப் பாதுகாப்பாயாக" என்று அவனுக்குக் கூறியது.]

ககடு. பெருநன் ருற்றிற் பேணரு முளரே
ஒருநன் றுடைய ளாயினும் புரிமாண்டு
புலவி தீர வுளிமதி யிலைகவர்
பூடமை யொழுகிய தண்ணறுஞ் சாரல்
5 மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்னல திலளே.

எ - து. உடன்போக்கு ஒருப்படுத்து மீளுந் தோழி தலை மகற்குக் கூறியது.

கபிலர்.

(பி - ம்) 1 'பெருநன்ருற்றிய', 'பெருநன்ருன்றிற்' 2 'புரிமாணடு' 3-4 'யிலை கவரப்பாடமைபொழுகிய'

(ப - ரை.) ஆடு அமை ஒழுகிய - அசைகின்ற மூங்கில்கள் நீண்டு வளர்ந்த, தண் நறு சாரல் - தண்ணிய நறிய மலைப்பக்கத்தின்கண், மெல் நடை மரையா - மெல்லிய நடையையுடைய மரையா, இலை கவர்பு - இலைகளை விரும்பிஉண்டு, துஞ்சும் - துயிலுதற்கிடமாகிய, நல் மலை நாட - நல்ல மலைநாட்டையுடைய தலைவ, பெரு நன்று ஆற்றின் - பெரிய நன்மை யொன்றை ஒருவர் தமக்குச் செய்தால், பேணுரும் உளரே - அங்ஙனம் செய்தாரைப் போற்றுதாரும் உள்ளாரோ? யாவரும் போற்றுவர்; அது சிறப்பன்று; ஒரு நன்று - சிறிதளவு நன்மையை, உடையளாயினும் - இத்தலைவி பெற்றவளாக இருக்கும் காலத்திலும், புரி மாண்டு - விருப்பம் மாட்சிமைப்பட்டு, புலவி தீர - புலத்தல் நீங்கும் வண்ணம், அளிமதி - இவளைப் பாதுகாப்பாயாக; நின் அலது இலள் - இவள் நின்னையன்றி வேறு பற்றுக் கோடு இல்லாள்.

(முடிபு) மலைநாட, பெருநன்று ஆற்றிற் பேணுரும் உளரே? ஒரு நன்றுடையளாயினும் அளிமதி; நின்னலதிலள்.

(கருத்து) இவள்பால் இன்றுபோல என்றும் அன்பு வைத்துப் பாதுகாப்பாயாக.

(வி - ரை.) "இவள் நினக்குப் பலவகையிலும் இன்பம் தரும் நிலையில் இருக்கின்றாள்; இவள்பால் இப்பொழுது நீ அன்பு பூண்டு பாதுகாத்தல் பெரிதன்று; பெரிய உபகாரம் செய்தாரைப் பாதுகாத்தல் உலகில் யாவர்க்கும் இயல்பே. ஆதலின் இவளால் இப்பொழுது பெறும் இன்பத்தை அடையமுடியாத முதுமைப் பருவத்திலும் இவளுக்கு நின்பாலுள்ள அன்பொன்றையே கருதிப் பாதுகாத்து வருவாயாக. இவளைப் பாதுகாப்பதற்கு வேறு யாரும் இலர்" என்று தோழி கூறித் தலைவியைத் தலைவனுடன் விடுத்தாள்.

உளரே: ஏகார வினை எதிர்மறைப்பொருள் தந்தது. ஒரு நன்றென்றது தலைவிக்குத் தலைவன்பாலுள்ள அன்பை; "கொன்றன்ன வின்னை செயினு மவர்செய்த, ஒன்றுநன் றுள்ளக் கெடும்" (குறள், 109) என்பது இங்கே நினைக்கத்தக்கது. இலையென்றது மூங்கில் இலையையன்று; பிறமரங்களி லுள்ளவற்றை. கவர்த லென்னும் சொல் விலங்கினங்கள் உணவுதேடியுண்டலைக் குறித் தற்குச் சான்றோரால் ஆளப்படுகின்றது; "மரையா மரல்கவர" (கலி. 6: 1) முதலியவற்றைப்பார்க்க.

மரையா தனக்குப் பயன்படாது ஓங்கிவளர்ந்த மூங்கில்களை யுடைய சாரலாயினும் தனக்குப் பயன்படும் இலைகளைத் தேடியுண்டு அதன்கண் அன்புவைத்துத் துயில்வதுபோல, நினக்குப்

பயன்படாத மூப்புடையளாயினும் தினக்கு உவந்த நல்லியல்பு கண்டு இன்புற்று இவள்பால் அன்பு வைத்தொழுகுவாயாக வென்பது குறிப்பு.

இலளே : ஏ அசைநிலை.

(மேற்.) மு. பாங்கி தலைவனுக்கு ஓம்படை கூறியது (இறை. 23); தலைவன் ஒருவழித் தணக்கும்வழிப் பாங்கி ஓம்படை கூறியது (தொல். களவு. 24, இளம், ந.)

(ஒப்பு.) 1. பெருநன்று : "சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா ஞாலப், பெறுநன்றி மன்னும் பெரிதென்று" (யா. வி. 4, மேற்.)

4. ஆடமை : குறுந். 131 : 1 ; அகநா. 82 : 1, 225 : 5.

5. மென்னடை மரையா : "துளங்குநடை மரையா" (அகநா. 3 : 7.)

6. தலைவி தலைவனை யன்றிப் பாதுகாப்பார் பிறரிலன் : குறுந். 397 : 7-8; "தம்மின் றமையா நந்நயந் தருளி" (நற். 1 : 7); "இவளே நின்னல திலளே" (இறை. 23, மேற்.) (கஉடு)

தலைவன் கூற்று

[ஊழ்வலியால் தலைவியைக் கண்டு அளவளாவிய தலைவன் அவளது கூந்தற் சிறப்பைப் பாராட்டி நெஞ்சிற்குக் கூறியது.]

கஙசு. யானயந் துறைவோ டேம்பாய் கூந்தல்,
வளங்கெழு சோழ ருறந்தைப் பெருந்துறை
நுண்மண லறல்வார்ந் தன்ன
நன்னெறி யவ்வே நறுந்தண் ணியவே.

எ - து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இளங்கீரன்.

(பி - ம்.) 3 'லறலார்ந்தன்ன'

(ப - ரை.) நெஞ்சே, யான் நயந்து உறைவோள் - என்னால் விரும்பப்பெற்றுத் தங்கும் தலைவியினது, தேம் பாய் கூந்தல் - வண்டுகள் தாவுகின்ற கூந்தல், வளம் கெழு - வளப்பம் பொருந்திய, சோழர் உறந்தை பெரு துறை - சோழரது உறையூரிற் பெரிய நீர்த்துறைக்கண் உள்ள, நுண் மணல் அறல் - நுண்ணிய கரு மணல், வார்ந்தன்ன - நீண்டு படிந்தாற் போன்ற, நல் நெறிய - நல்ல நெறிப்பை யுடையன ; நறு தண்ணிய - நறுமையும் தண்மையும் உடையன.

(முடிபு) யான் நயந்துறைவோள் கூந்தல் நன்னெறிய; நறுந் தண்ணிய.

(கருத்து) தலைவியின் கூந்தல் நெறிப்பையும் நறுமணத்தையும் தண்மையையும் உடையன.

(வி - ரை.) யான் நயப்ப உறைவோளென எச்சத்தைத் திரித்துப் பொருள் கொள்ளலும் ஆம். கூந்தலென்றது கூந்தலின் ஐவகைப் பகுப்புக்களை யாதலின் பன்மையால் முடித்தான். வளங் கெழு வென்றது உறந்தைக்கு அடை. உறந்தைப் பெருந்துறை யென்றது காவிரித்துறையை. நெறிப்பு - படிப்படியாய் நீரோட்டத்தினால் மணலில் உண்டாகும் சுவடு; இது பற்றமென்றும் கூறப்படும்.

இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைவன், தலைவியின் கூந்தலாகிய மெல்லணையில் துஞ்சி இன்புற்றவனுதலின் அக் கூந்தலின் இயல்புகளை நினைந்து, இவற்றுற் பெறும் இன்பத்தை இடைவிடாமல் நுகரும் பேறு பெற்றிலேமே என்னும் இரக்கக் குறிப்புப்பட இதனைத் தன் நெஞ்சிற்குக் கூறினன்.

சேய்மையிற் கண்டபோழ்து தோற்றத்தால் இன்பத்தைத் தருமென்பான் நன்னெறியவ்வே யென்று முதலிலும், நெருங்கும் போழ்து மணத்தால் இன்பத்தைத் தருமென்பான் நறுமையுடையன வென்றும், பின்னும் நெருங்கி அளவளாவிய போழ்து ஊற்றினுலின்பந் தருமென்பான் தண்ணிய வென்றும் முறையே கூறினன்.

நன்னெறி யவ்வே: வகரம் விரிக்கும் வழி விரித்தது. ஏகாரங்கள் அசைநிலை.

(ஒப்பு.) 2: சோழர் உறந்தை: அகநா. 93 : 4-5, 369 : 13-4, 385 : 3-4.
3. மணலின் நெறிப்பு : குறுந். 351 : 3.
4. கூந்தலின் நெறிப்பு : குறுந். 190 : 1, 199 : 4.
1-4. கூந்தலின் நறுமணம் : குறுந். 2 : 4-5, ஒப்பு.
கூந்தலின் நறுமணமும் தண்மையும் : "தண்ணிய கமழுந் தாழிருங் கூந்தல்" (நற். 137 : 1.) (ககசு)

தோழி கூற்று

[தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுநாள் ஒழுகினனுக, அவ்வொழுக்கத்தால்வரும் அச்சத்தினும் அவன் வாராதமைவதால் வரும் துன்பம் பொறுத்துக் கொள்ளுதற்கரியதென்று தலைவிக்குக் கூறும் வாயிலாகத் தோழி வரைவின் இன்றியமையாமையைப் புலப்படுத்தியது.]

கக எ. மாரி யாம்ப லன்ன கொக்கின்
பார்வ லஞ்சிய பருவர ளீர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇய நண்டர்
கயிறறி யெருத்திற் கதழுந் துறைவன்
5. வாரா தமையினு மமைக
சிறியவு முளவீண்டு விலைஞர்கை வளையே.

எ - து. வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

குன்றியன் (பி - ம். குன்றியனார்.)

(பி - ம்.) 3 'செலீஇ' 4 'கயிறரி பெருந்தீரத் தழுந்துந்துறை வன்', 'பெருந்திறத்தழுந்துதுறைவன்'

(ப - ரை.) தோழி, மாரி ஆம்பல் அன்ன கொக்கின் - மாரிக் காலத்து ஆம்பல்மலரைப்போன்ற தோற்றத்தையுடைய கொக்கினது, பார்வல் அஞ்சிய பருவரல் - பார்வையை அஞ்சிய துன்பத்தையுடைய, ஈர் ஞெண்டு - ஈரமான நண்டு, கண்டல் வேர் அளை செலீஇயர் - தாழைவேரினிடையே உள்ள வளைக்குட் செல்லும் பொருட்டு, அண்டர் கயிறு அரி எருத்தின் - இடையராற் பிணிக்கப்பட்ட கயிற்றை அறுத்துச் செல்லும் எருதைப் போல, கதழும் - விரைந்து செல்லுற்கு இடமாகிய, துறைவன் - கடற்றுறையையுடைய தலைவன், வாராது அமையினும் அமைக - இங்கே வாராமற் பொருந்தினும் பொருந்துக; அவன் வாராமையால் நின் உடல் மெலிய நின்கைகள் முன் அணிந்த வளைகளை இழப்பினும் பிறருக்கு அம்மெலிவு புலப்படாமல் அங்ஙிலையிலும் செறிப்பதற்குரியனவாகிய, விலைஞர் கைவளை - விற்பார் தரும் கைவளைகளுள், சிறியவும் - சிறிய அளவை யுடையனவும், ஈண்டு உள - இங்கே உள்ளன.

(முடிபு) துறைவன் வாராதமையினும் அமைக; விலைஞர் கைவளை சிறியவும் ஈண்டு உள.

(கருத்து) தலைவன் வரைந்து கொள்ளாமையால் உண்டான மெலிவை நாம் மறைத்து ஒழுகுவோமாக.

(வி - ரை.) கொக்கின் புறத்தே அலைநீர்த்திவலைகள் காணப்படுமாதலின், அதற்கு மாரியினால் நனைந்த ஆம்பலை உவமை கூறினாள். பார்வல் - பார்வை; "இன்க ணுடைத்தவர் பார்வல்" (குறள், 1152) என்பதன் உரையைப் பார்க்க.

தலைவன் தலைவியோடு களவின்பம் துய்த்து வரைந்து கொள்ளாமல் நெடுநாள் ஒழுகினான்; அதனால் தலைவி துயருற்றாள். தோழி அதனை உணர்ந்து, "இவர் வரைதலின்றிக் களவில் வந்து செல்லுதல் அச்சந் தருதற்குரியது. இங்ஙனம் நம் உள்ளத்தே அச்சம் மிகும்படி வருவதினும் வாராதமைவதே நலம் தரும். அங்ஙனம் வாராமலிருப்பின் எனக்குத் துயரம்மிக்கு உடல் மெலியும், அவ்வுடல் மெலிவைக் கைவளைகள் கழன்று புலப்படுத்துமே யெனின் அம்மெலிவைப் பிறரறியாவாறு செறித்துக் கொள்ளும் சிறியவளைகளும் உள்ளன" என்றாள். இதனால் களவுப் புணர்ச்சியினால் வரும் அச்சத்தையும், அது பெருவிடின் தலைவிக்கு உண்டாகும் துன்பத்தையும் வெளியிட்டு, இவ்விரண்டும் நீங்க விரைவில் வரைந்துகொள்ளுதலே தக்கதென்னும் கருத்தைக் குறிப்பித்தாள்.

இது, தலைவன் சிறைப்புறத்தானைத் தோழி தலைவிக்குக் கூறியதென்று தோற்றுகின்றது.

கொக்கின் பார்வையை அஞ்சி நண்டு தன் வளையிலே தங்குவதைப்போல, ஊரினர் அலரை அஞ்சித் தலைவன் தலைவியை விரைவில் மணந்துகொண்டு தன் அகத்தே இல்லறம் நடத்தற்குரியனென்பது குறிப்பு.

ஏகாரம் ஈற்றசை.

(மேற்.) 3-4. கதழ்வு என்னும் உரிச்சொல் விரைவுப்பொருளில் வந்தது (தொல். உரி. 18, இளம், 17, ந.)

1-4. தொல். உவமை. 30, இளம். மேற்.

(ஒப்பு.) க. கொக்கின் புறத்திற்கு ஆம்பற்பூ: குறுந். 122: 1-2; "மாரிக் கொக்கின் கூர லன்ன, குண்டுநீ ராம்பற் றண்டுரை யூரன்", "கயக்கணக் கொக்கி னன்ன கூம்புமுகைக், கணைக்கா லாம்பல்", "கொக்கின், கூம்புகிலை யன்ன முகைய வாம்பல்" (நற். 100: 2-3, 230: 2-3, 280: 1-2.)

2. பார்வல்: மதுரைக். 231; பதிற். 84: 5; புறநா. 3: 19; பெருங். 3. 4: 43.

2-3. நண்டினது கண்டல் வேரை: "புலவுத்திரை யுதைத்த கொடுங் தாட் கண்டற், சேர்ப்பே ரீரள யலவன்" (நற், 123: 9-10); "கனிகவின் சிதைய வாங்கிச் கொண்டுதன், தாழை வேரள வீழ்துணைக் கிடுஉம், அலவன்" (அகநா. 380: 5-7); "கண்டல் வேரள சேரலவா நீ" (நன். 310, மயிலை. மேற்.)

நண்டின் வேரை: குறுந். 328: 1-2; ஐங். 22: 1-2, 23: 1.

1-3. கொக்கிற்கு அஞ்சி நண்டு தன் வளையிற் புகுதல்: "வேப்புநனை யன்ன நெடுங்கணீர்ஞெண், டிரைதேர் வெண்குரு கஞ்சி யயல, தொலித்த

பகன்றை யிருஞ்சேற் றள்ளற், றிதலையின் வரிப்ப வோடி விரைந்துதன், நீர்மலி மண்ணீச் செறியு மூர" (அகநா. 176 : 8-12.)

(ககஎ)

தலைவி கூற்று

[தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுநாள் இருப்ப, தலைவி அவன் வரவை ஒவ்வொருநாளும் எதிர்நோக்குவாளாய் மாலைப் பொழுதில், "இன்னும் வந்திலர்" என்று கூறி வருந்தியது.]

ககஅ. புள்ளு மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நாரின் மாலைப்
பலர்புகு வாயி லடைப்பக் கடவுநா
வருவீ ருளீரோ வெனவும்
5. வாரார் தோழி நங் காத லோரே.

எ - து. வரைவு நீட்டித்தவழித் தலைமகள் பொழுதுகண்டு தோழிக்குச் சொல்லியது.

நன்னெகையார்.

(பி - ம்.) 3 'லடையக்' 4 'வருவிருளிரோ'

(ப - ரை.) தோழி—, புள்ளும் மாவும் - பறவைகளும் விலங்கினங்களும், புலம்பொடு வதிய - தனிமையோடு தங்க, நள்ளென வந்த - நள்ளென்னும் ஓசைபட வந்த, நார் இல் மாலை - அன்பில்லாத மாலைக்காலத்தில், பலர் புகு வாயில் - பலரும் புகுதற்குரிய வீட்டுவாயிலை, அடைப்ப - அடைக்க எண்ணி, கடவுநர் - வினவுவார், வருவீர் உளீரோ எனவும் - உள்ளே வருவீர் இருக்கின்றனிரோ என்று கேட்கவும், நம் காதலோர் - நம் தலைவர், வாரார் - வாராராயினர்.

(முடிபு) தோழி, மாலையில் கடவுநர், வருவீர் உளீரோ எனவும் நம் காதலோர் வாரார்.

(கருத்து) நம் தலைவர் இன்றும் வந்திலர்.

(வி - ரை.) தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுங்காலம் இருந்தானாக, அவன் வரைவொடு புகுதுவா னென்று ஒவ்வொருநாளும் எதிர்பார்த்திருக்குந் தலைவி மாலைப்பொழுது கண்டு அவன் வாராமையினால் துன்புற்று, "இன்றும் தலைவர் வந்திலர்" என இரங்கிக் கூறினள்.

தனக்குத் துன்பம் பயப்பதுபற்றி மாலையை நாரின் மாலை யென்றாள். தன் வீட்டில் விருந்தினர் பலர் வந்து உண்ணுவாரா

தலின் அவர் தடையின்றிப் புகும்வாயிலைப் பலர் புகுவாயிலென் ருள். இராக்காலத்தில் விருந்தினர்களைப் புகவிட்டுப் பின்னும் எவரேனும் உள்ளாரோவென ஆராய்வாராகி ஏவலாளர்கள் வினவி, ஒருவரும் இலராக வாயிற் கதவை அடைத்தனர். தலைவன் வந்திருப்பின் விருந்தினர் கூட்டத்தில் ஒருவனைப் புகுவான் (தொல். களவு. 16.); அவன் அங்ஙனம் புகவில்லையாதலின், அவர் வந்திலரென்று தலைவி கூறினள்.

'வாயில் அடையக் கடவுநர்' என்பதுபாடமாயின் வாயிலின் கண் உள்ளாரை ஒருவர் விடாமல் முற்றவும் ஆராய்வாராய், "வருபவர்கள் உளீரோ?" என்று கேட்பவும் தலைவர் வந்திலரென்று பொருள் கொள்க.

ஏகாரம் ஈற்றசை.

(ஒப்பு.) 1. புள்ளும் மாவும்: "மாவும் புள்ளும் வகுவயிற் படர" (யா. வி. 35, மேற்.); "விலங்கும் பறவையும் வீழ்பதிப் படர" (பெருங். க. 33: 43, பி - ம்)

2. நள்ளென வந்த மாலை: குறுந். 6: 1, ஒப்பு, 160: 4, ஒப்பு.

3. பலர் புகுவாயில்: "வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண" (குறிஞ்சிப். 202 - 3); "உலகுபுகத் திறந்த வாயிற், பலரோ டுண்டன் மரீஇ யோனே" (புறநா. 234: 5 - 6); "பலர் புகத் திறந்த பகுவாய் வாயில்" (மணி. 7: 92, 17: 77.)

(ககஅ)

தலைவன் கூற்று

[இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து மீண்ட தலைமகனது வேறு பாடு கண்ட பாங்கன், "நினக்கு இஃது எற்றினையிற்று?" என்றவழி, "ஓர் இளைய மகளால் ஆயிற்று" என்று தலைவன் கூறியது.]

ககக. சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை
கான யானை யணங்கி யாஅங்
கிளையண் முளைவா ளெயிற்றள்
வளையுடைக் கையளெம் மணங்கி யோளே.

எ - து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

சத்தி நாதனார் (பி - ம். சத்தி நாகனார்.)

(பி - ம்.) 3 'கிளையமுளை'

(ப - ரை.) தோழ, இளையள் - இளமையை யுடையவளும், முளைவாள் எயிற்றள் - நாணல் முளையைப் போன்ற ஒளியை யுடைய பற்களையுடையவளும், வளையுடைக் கையள் - வளையினை யுடைய கையினளுமாகிய ஒருத்தி, சிறு வெள் அரவின் - சிறிய வெள்ளிய பாம்பினது, அ வரி - அழகிய கோடுகளையுடைய, குருளை - குட்டியானது, கானம் யானை - காட்டுயானையை, அணங் கியாங்கு - வருத்தினாற்போல, எம் அணங்கியோள் - எம்மை வருந் தச் செய்தனள்.

(முடிபு) இளையள், எயிற்றள், கையள் எம் அணங்கியோள்.

(கருத்து) ஓர் இளைய மகள் என்னைத் தன் அழகினால் வருத் தினாள்.

(வி - ரை.) கரும்பாம்பும் உளதாதலின் அதனை நீக்க வெள் ளர வென்றான். இதனைக் கோதுமை நாகமென இக்காலத்தில் வழங்குவர். தோற்றத்தால் அழகிய வரியையுடையதேனும் செயலாற் கொடியதென்பது குறிப்பு.

இளைய பாம்புக்குட்டியானது, பிறருக்கு அடங்காது திரியும் யானையைத் தீண்டி வருத்தியதுபோல, இளமையையுடைய தலைவி பகைவரால் தோல்வியுறுத லென்னை வருத்தினாளென்று உவமையை விரித்துக்கொள்க.

பாம்பின் இளமை தலைவியின் இளமைக்கும், அதன் வரி வளைக்கும் உவமைகள். முளைவாளெயிறென்ற பொருளடையை உவமைக்குங் கூட்டுக. அரவின் குட்டி தன் எயிற்றால் யானையை வருத்தியது போல் தலைவி தன் முறுவலினால் என்னை வருத்தினா ளென்றும் உவமையை விவரிக்க.

இயற்கைப் புணர்ச்சிக்குமுன் காட்சியினால் இளையளென் பதையும், முறுவற் குறிப்புணர்ந்தவழி முளைவாளெயிற்ற ளென் பதையும், இயற்கைப் புணர்ச்சியின்கண் தழுவுவழி வளையுடைக் கையளென்பதையும் உணர்ந்தவனதலின் அவற்றை முறையே வைத்துக் கூறினான்.

ஏகாரம்: ஈற்றசை.

(மேற்.) 1. குருளை யென்பது பாம்பிற்கும் சிறுபான்மை வந்தது. (தொல். மரபு. 8, பேர்.)

மு. தலைவன் உற்ற துரைத்தது (இறை. 3; களவியற். 26); பாங் கற்குத் தலைமகன் கூறியது (தமிழ்நெறி. 16); தூங்கிசை யகவற் சிறப் புடை இயற்சீரான் வந்த நேரிசையாசிரியப்பா (யா. வி. 71.)

(ஒப்பு.) 1. அரவின் குருளை: "சிறுவெள் ளரவின் குருளை" (சிலப். 12: 22.)

1 - 2. இளைய அரவு வருத்துதல்: "அளிதா முரவு மரியும்வெங் கீயு மரசுமெங்ஙன், இளிதாயி னுங்கொல்லும்" (அம்பிகாபதி. 126.)

அரவு யானையை வருத்துதல்: "குஞ்சரங் கோளிழைக்கும், பாம்பு" (திருச்சிற். 21.)

4. எம் அணங்கியோள்: ஐங். 259 : 6.

3 - 4. இளையளாயினும் தலைவி தலைவனை அணங்குதல்: "குன்றக் குறவன் காதன் மடமகள், வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி, வளையண் முளைவா ளெயிற்றள், இளைய ளாயினு மாரணங் கினளே" (ஐங். 256.)

மு. "அளைபா ரரவின் குருளை யணங்க வறிவழிந்து
துளையார் நெடுங்கைக் களிறு நடுங்கித் துயர்வதுபோல்
வளையார் முளைபெயிற் றுர்மன்னன் மாறன்வண் கூடலன்ன
இளையா ரொருவ ரணங்கைத் தால்யா னினைகின்றதே."
(பாண்டிக் கோவை.)

(ககக)

தலைவன் கூற்று

[தலைவன் குறியிடத்தில் வந்ததைக் குறிப்பால் அறிவித்த காலத்தில் தலைவி அவன் வருதற்கு முன்னரே குறியல்லாததைக் குறியென்றெண்ணிச்சென்று வறிதே மீண்டவளாதலின் வாரா தொழிய, வருத்தமுற்ற தலைவன், "தலைவி நன்மையையுடையா ளென்பதை யறிந்தது போலப் பெறுதற்கரியா ளென்பதையும் இதுகாறும் அறிந்திலையே!" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது]

கஉ0. இல்லோ னின்பங் காமுற் றுஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்ல ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே.

எ - து. (1) அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

(2) இஃது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிந்த வழிக் கலங்கியதுமாம் (பி - ம். கலங்கிற்றுமாம்.)

பரணர்.

(பி - ம்) 2 'நல்லா'

(ப - ரை) நெஞ்சே—, இல்லோன் இன்பம் காமுற்றுஅங்கு - பொருளில்லாத வறிஞன் இன்பத்தை விரும்பினாற்போல, அரிது வேட்டனை - பெறுதற்கரியதை நீ விரும்பினை; நீ, காதலி - நம்

தலைவி, நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு - நமக்கு நன்மை தருப வளாதலை அறிந்ததுபோல, அரியள் ஆகுதல் அறியாதோய் - நாம் நினைக்கும் பொழுதெல்லாம் நமக்கு எளியளாய் வருவதின்றிப் பெறற்கரியளாதலையும் அறியாயாயினை.

(முடிபு) நெஞ்சே, அரிது வேட்டனை ; அறியாதோய் தலைவி பெறுதற்கரியள்.

(வி-ரை.) இல்லோன் - பொருளில்லாதவன் (குறுந். 63, வி - ரை.) வறிஞனுக்கு இன்பம் இல்லையென்பதை இந்நூல் 63 - ஆம் செய்யுளாலும் அதன் விசேட வுரையாலும் உணரலாம். அரி தென்றது தலைவியைத் தான் நினைத்த காலத்தில் எதிர்ப்பட்டு இன்புறுதலை. காம மயக்கத்தால் நெஞ்சைக் கேட்பதுபோலக் கூறினள்.

நல்லளாகுதலையறிந்தது இதற்குமுன் நிகழ்ந்த கூட்டங்களில். நெஞ்சே, அறியாதோய், அரிது வேட்டனை என்று கூட்டிப் பொருள் கொள்ளுதலும் ஒன்று.

இரண்டாவது கருத்து: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலை மகன் தலைவியைப் பிரிந்து, 'இனி இவளைக் காணுமாறு எங்ஙனம்!' என்று மயங்கி, "இதுகாறும் நமக்கு நல்லளாகிய இவள் இனி அரியளன்றே!" என்று நெஞ்சை நோக்கிக் கூறியது.

(மேற்.) மு. குறிபிழைத்தவழித் தலைவன் உள்ளத்திற்குச் சொல்லியது (தொல். களவு. 17, இளம்.); புணர்ந்து பிரிந்துழி அன்புமிகுதியால் தான் மறைந்து அவளைக்காணுங்கால் சிறாரிடைக் கண்டு இனிக் கூடுதல் அரிதெனத் தலைவன் இரங்கியது (தொல். களவு. 11, ந.); * இரவுக்குறி கழிதல் (களவியற்.); தலைவன் தலைவியைப் பிரிந்துழிக் கலங்கிக் கூறுதல் (இ. வி. 501.)

(ஒப்பு.) 1. இல்லோனுக்கு இன்பம் அரிதாதல்: குறுந். 63 : 1, ஒப்பு; "பொருளிலார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு", "இன்மை யெனவொரு பாவி மறுமையும், இம்மையு மின்றி வரும்" (குறள், 247, 1042.)

2, நெஞ்சு அரிது வேட்டல்: குறுந். 29 : 4.

மு. குறுந். 128. (கஉ0)

தலைவி கூற்று

[தலைவன் செய்த குறியென்று பிறிதொன்றை யெண்ணிச் சென்று அவனை எதிர்ப்படப்பெறாமல் ஒரு நாள் மீண்ட தலைவி, பின் ஒரு நாள் அவன் வந்தமை கூறிய தோழியை நோக்கி, "நீ

---

* 'இரவுக்குறி கழிதலென்பது அல்லகுறிப்பட்டு மீண்ட தலைமகன் வருந்துதல்' (களவியற் காரிகையுரை.)

உரைப்பது உண்மையோ? முன் அவன் வாராமையால் துன்புறு கின்றேன்" என்று கூறியது.]

கஉக. மெய்யோ வாழி தோழி சாரல்
மைபட் டன்ன மாமுக முசுக்கலை
ஆற்றப் பாயாத் தப்ப லேற்ற
கோட்டொடு போகி யாங்கு நாடன்
5 தான்குறி வாயாத் தப்பற்குத்
தாம்பசந் தனவென் றடமென் றோளே.

எ - து. இரவுக்குறி வரும் தலைமகன் செய்யுங்குறி பிறிதொன் றனுல் நிகழ்ந்து மற்று அவன் குறியை ஒத்தவழி அவ்வொப்புமையை மெய்ப்பொருளாக வுணர்ந்து சென்ருள், ஆண்டு அவனை (பி - ம். சென்ருண்டவனை)க் காணுது தலைமகள் மயங்கியவழிப் பின்னர் அவன் வரவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் கூறியது.

[இரவுக்குறி.....மயங்கியவழி - தலைவி அல்ல குறிப்பட்டு மீண்டவிடத்து. பின்னர் - பின் ஒரு நாள்.]

கபிலர்.

(பி - ம்.) 1 'மெய்யே' 2 'மைப்பட்டன்ன' 3 'லொற்ற' 4 கேட்டொடு' 5 'வாராத்'

(ப - ரை.) தோழி—, மெய்யோ - இப்பொழுது தலைவன் வந்ததாக நீ கூறியது உண்மையோ? முன்பு, சாரல் - மலைப்பக்கத் தில், மை பட்டன்ன மா முகம் முசு கலை - மைபட்டாற் போன்ற கரிய முகத்தையுடைய ஆண்குரங்கு, ஆற்ற பாயா தப்பல் - கொம்பு தாங்கும்படி பாயாத தவற்றினது பயன், ஏற்ற கோட் டொடு போகியாங்கு - அக்குரங்கை ஏற்றுக்கொண்டு முறிந்த அக் கொம்பினிடத்துச் சென்ருற்போல, நாடன் - தலைவன், குறி வாயா தப்பற்கு - குறிப்பை வாய்ப்பச் செய்யாத தவற்றின் பொருட்டு, என் தட மெல் தோள் பசந்தன - என்னுடைய பரந்த மெல்லிய தோள்கள் பசலையை அடைந்தன.

(முடிபு.) தோழி, மெய்யோ? நாடன் தப்பற்கு என் தோள் பசந்தன.

(கருத்து) ஏற்றகுறியைச் செய்யாது முன்னர்த் தவறிய தலை வன் இப்போது வந்தானென்று நீ கூறுதல் மெய்யோ?

(வி - ரை.) அல்லகுறிப்பட்டு மீண்டவளாதலின், தோழியும் அவ்வாறே பிறிதொரு குறிப்பைத் தலைவன் செய்ததாக எண்ணி அவன் வந்தானென்று கூறுகின்றாளோவென ஐயுற்று, மெய்யோ வென்றாள். வாழி : அசைநிலை ; மெய்யாயின் அவனது வரவாகிய நற்செய்தியை உரைத்த நீ வாழ்வாயாகவெனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். முசுவென்பது முகமட்டும் கரிய தாயிருக்கும் ஒருவகைக் குரங்கு. ஆற்ற - முற்றவென்பதும் ஒன்று. நாடன் - குறிஞ்சி நிலத் தலைவன் ; குறுந். 3, வி-ரை. தப்பல் - தப்பு, தவறு.

தான், தாம், ஏ : அசைநிலைகள்.

தான் செய்த குறியையறிந்து தலைவி வந்திலளென்று தலைவன் கூறுதல் கூடுமென்று நினைத்தவளாதலின் இங்ஙனம் கூறினாள்.

"குரங்கு, கொம்பு ஏற்றுக் கொள்ளும்படி பாயாமையால் அது முறிந்து போனதுபோல, தலைவர் நான் அறியும் வண்ணம் குறி செய்யாத தவற்றால் என் தோள்கள் பசந்தன" என்று தலைவி கூறினாள்.

தலைவியின் தோள் பசந்தமைக்குக் காரணம் தலைவனை எதிர்ப்படாமை.

(மேற்.) 2. கலையென்னும் பெயர் முசுவிற்கு வந்தது (தொல். மரபு. 46, பேர்.)

5-6. அல்ல குறிப்படுதல் (தொல். களவு. 42, ந.)

மு. மெய்யே யென்ற லென்னும் மெய்ப்பாடு வந்தது; 'இதனுட் கூறியதென ஒரு சொல்வர வேண்டும்' (தொல். மெய்ப். 22, இளம்.); இரவுக்குறி வரும் தலைவன் செய்யுங்குறி பிறிதொன்றனால் நிகழ்ந்து தலைவன் குறியை ஒத்தவழி அதனை மெய்யாக உணர்ந்து மயங்கிய வழித் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது; 'கோடு ஆற்றப்பாயாது வேண்டியவாறு பாய்ந்து அதனை முறித்த முசுப்போல நாம குறிபெறுங்காலத்து வாராது புள் தாமே வெறித்தியம்புந் துணையும் நீட்டித்துப் பின்பு வருதலின், குறி வாயாத் தப்பு அவன் மேலேற்றி, அதற்குத் தோள் பசந்தன வென்று பின் ஒருநாள் அவன் வந்துழித் தோழியை நோக்கி, இவ்வரவு மெய்யோ வெனவே தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தையும் பெற்றும்' (தொல். களவு. 20, ந)

(ஒப்பு.) 1. மைபட்டன்ன மாமுக முசுக்கலை: "மைபட் டன்ன மாமுக முசுவினம்" (அகநா. 267 : 9.)

மாமுக முசுக்கலை : முருகு. 303.

3. தப்பல் : குறுந். 79 : 7, ஒப்பு.

6. தோள் பசத்தல் : "கண்ணுந் தோளும்....பழநல மிழந்து பசலை பாய" (நற். 219 : 1-2); "வேய்புரை மென்றோட் பசலையும்" (கலி. 39 : 48.)

தடமென்றோள் : குறுந்: 77 : 6, ஒப்பு.

5-6. தலைவியின் துயரத்தைத் தோன் காட்டுதல் : குறுந். 77, வி - ரை.

தலைவனது தவறு தோளின் தவருதல் : " தாம்பழி யுடைய ரல்லர் நாளும், நயந்தோர்ப் பிணித்த றேற்ற வயங்குவினை, வாளே ரெல்வளை நெகிழ்த்த, தோளே தோழி தவறுடை யவ்வே " (அகநா. 267 : 14-7.) (கூக)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்தில் மாலைப்பொழுது கண்டு தலைவி வருந்திக் கூறியது.]

கூஉ. பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்பலுங் கூம்பின வினியே
வந்தன்று வாழியோ மாலை
ஒருதா னன்றே கங்குலு முடைத்தே.

எ - து. தலைமகள் பொழுதுகண்டு அழிந்தது.

ஓரம்போகியார் (பி - ம். ஓரம் போதியார்.)

(பி - ம்.) 1 ' பைங்கார்க் '

(ப - ரை.) பசு கால் கொக்கின் - பசிய கால்களையுடைய கொக்கினது, புல்புறத்து அன்ன - புல்லிய புறத்தைப் போன்ற, குண்டு நீர் ஆம்பலும் கூம்பின - ஆழமாகிய நீர்நிலையில் வளர்ந்த ஆம்பலின் மலர்களும் குவிந்தன ; இனி - இப்பொழுது, மாலை வந்தன்று - மாலைக்காலம் வந்தது; வாழி - அது வாழ்வதாக ! ஒரு தான் அன்று - இங்ஙனம் வந்தது இம்மாலையாகிய தான் ஒன்று மட்டும் அன்று ; கங்குலும் உடைத்து - தன் பின்வரும் யாமத்தையும் உடையது ; இனி என்செய்வேன் !

(முடிபு) ஆம்பலுங் கூம்பின ; இனி மாலை வந்தன்று ; ஒரு தான் அன்று ; கங்குலும் உடைத்து.

(கருத்து) இராக்காலம் வந்து விட்டது ; இனி யான் மிக்க துன்பத்தை அடைவேன்.

(வி - ரை.) ஆம்பலும் : உம்மை உயர்வு சிறப்பு. ஆம்பற் பூக் குவிவதனால் மாலை வந்ததைத் தலைவி அறிந்தாள். நீர்வள மின்றிக் குவியாது மாலைக்காலம் வந்தமையாற் குவிந்தன வென்பாள், ' குண்டுநீராம்பல் ' எனச் சிறப்பித்தாள். வாழியோ : ஓகாரம் அசைநிலை. மாலையை வாழ்த்தியது குறிப்புமொழி ; தனக்குத் துன்பத்தைத் தரும் அது வாழ்தற்குரியதன்றென்பது.

தலைவியின் உள்ளக் கிடக்கை; "செல்வ லத்தை சிறக்கநின் ஞளே" (புறநா. 196 : 15) என்னும் ஆவூர் மூலங்கிழார் செய்யுட் பகுதியிற், 'சிறக்கநின் ஞளே' என்று வாழ்த்தியதைக் குறிப்பு மொழியென்று அதன் உரையாசிரியர் கூறியது காண்க; இங் ஙனம் வரும் குறிப்பு மொழிகளை,

"விடுத்தனன் வெளியர்நின் வேலே" (புறநா. 202 : 17),

"வானேர் பெருமிதம் வாழியே" (தக்க. 562) என்பவற்றிற் காணலாம்.

ஏகாரங்கள் : அசைநிலை. கங்குலும் : உம்மை இறந்ததுதழீஇ யது.

மாலை வந்ததனால் துன்புற்ற தலைவி, "இம்மாலையோடு என் துயர் ஒழிந்திலது; இதன்பின் வருவது கங்குல்; அதுவும் என் துயரை மிகுவிப்பதாகும்" என வருந்தினள்.

மாலை - இரவின் முதல் யாமம்; கங்குல் - இடையாமம். இவ்விரண்டையும் தலைவி அஞ்சுதல், இந்நூல், 387 - ஆம் செய்யு ளால் நன்கு விளங்கும்.

மாலையைத் தொடர்ந்து கங்குல் வருதலின் அக்கங்குலை மாலை உடையதென்று கூறினள்.

இவற்றால் வரும் துயரை எங்ஙனம் ஆற்றுவேனென்பது எச்சம்.

ஒப்பு. 1. கொக்கின் புறம் ஆம்பலுக்கு : குறுந். 117 : 1, ஒப்பு. (கஉஉ)

தோழி கூற்று

[தலைவன் பகலில் வந்து மறைந்து நிற்க, "தலைவர் இன்னும் பாணிப்பாராயின் நம் தமையன்மார் மீன்வேட்டையினின்றும் திரும்பி வருவாராதலின் அவர் நம்மைக் காண்ட லரிது; இப் பொழுதே வருவாராயின் நன்றாகும்" என்னும் கருத்துத் தோன் றத் தோழி தலைவிக்குக் கூறியது.]

கஉக. இருடிணிந் தன்ன வீர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மண லொரு சிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார்வரூஉம்
5 பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே.

எ - து. பகற்குறியிடத்து வந்த தலைமகனைக் காணுத தோழி, அவன் சிறைப்புறத்தானுதல் அறிந்து தலைமகட்குச் சொல்லியது.

ஐயூர் முடவன்.

(பி - ம்.) 2 ' நிலவு குவித்தன்ன ' 4 ' இன்னுவாரார் '

(ப - ரை) தோழி, நிலவு குவித்தன்ன வெண்மணல் ஒரு சிறை நிலவைத் தொகுத்தாற்போன்ற தோற்றத்தையுடைய வெள்ளிய மணற்பரப்பின் ஒரு பக்கத்தில் உள்ள, இருள் திணிந்தன்ன ஈரம் தண் கொழு நிழல் - இருள் செறிந்தாற் போன்ற ஈரமும் குளிர்ச்சியுமுடைய கொழுவிய நிழலையுடைய, கரு கோடு புன்னை பூ பொழில் - கரிய கிளைகளையுடைய புன்னைமரங்கள் அடர்ந்த பூஞ்சோலை, புலம்ப - தனிமைப்பட்டிருப்ப, இன்னும் வாரார் - தலைவர் இன்னும் வந்தாரிலர்; பல் மீன் வேட்டத்து - பலவகை மீன்களை வேட்டையாடுதலையுடைய, என்னையர் திமில் - தமையன்மார் ஏறிச் சென்ற மீன் படகுகள், வரூஉம் - மீண்டு வரும்.

(முடிபு) பொழில் புலம்ப, இன்னும் வாரார்; என்னையர் திமில் வரூஉம்.

(கருத்து) தலைவர் இப்பொழுதே வருதல் நலம்.

(வி - ரை.) பகலில் தலைவியைக் கடற்கரைப் பொழிலிற் கண்டு இன்பந் துய்த்துவரும் தலைவன் ஒருநாள் அங்கே தலைவி அறியாதவாறு அவளும் தோழியும் பேசுவனவற்றை அறிந்து மகிழும் அவாவினால் மறைந்திருந்தான். அவன் வந்திலனென்று கருதிய தோழி பின்பு அவன் அருகில் மறைந்திருப்பதை உணர்ந்து அவன் கேட்க வேண்டுமென்னும் கருத்தோடு தலைவிக்குச் சொல்லுவாளாய் இதனைக் கூறினாள்.

இருள் திணிந்தன்ன நிழலென்றது உள்ளே நிகழ்வனவற்றைப் புறத்தார் அறிவரிய நிலையின தென்றபடி. கொழு நிழல் புன்னைப்பூம் பொழிலுக்கு அடை. கடற்கரை மணற்பரப்பின் ஒரு சார் புன்னைப் பொழில் உள்ளது. மெத்தென்ற மணற்பரப்பும், தண்மையும், பூமணமும் விரவியிருத்தலால் அது பகற் குறிக்கு ஏற்ற தகுதியையுடைய இடமென்பது பெறப்படும்.

புலம்ப - தனிப்ப; தலைவன் வாராமையினால் பொழில் தனிமை யுடையதாயிற்று.

"தலைவர் இதற்குள் வந்திருத்தல்வேண்டும். இனி வருவதற்குப் பாணிப்பின் மீன்வேட்டைக்குச் சென்ற நம் தமையன்மார் மீண்டு வந்துவிடுவாராதலின், இங்கே நிற்றலரிதாகும்" என்று

தலைவன் அறியும்படி கூறினள். இதற்குப் பயன் தலைவன் உடனே மறைவினின்றும் வெளிவந்து தலைவியைக் காண்டல்.

காலையில் மீன்படகில் மீன்பிடிக்கச் சென்ற நெய்தனிலமாக்கள் மாலையில் மீண்டு வருதல் இயல்பு. 'என்னையர் திமில் வரூஉம்' என்றமையால் பகற்போது சுருங்குவதையும் தோழி குறிப்பித்தாளாயிற்று.

ஏகாரம்: ஈற்றசை.

(மேற்.) 5. "வல்லெழுத் தியற்கை யுறழத் தோன்றும்" என்பதனுள் தோன்றுமென்பதனாற் பல என்பதன் அகரம் கெட, லகரம் மெல்லெழுத்தாய் முடிந்தது (தொல். உயிர்மயங்கு. 13, ந.)

மு. ஒருவழித் தணத்தற்கண் தோழி தலைவிக்குக் கூறியது (தொல். களவு. 24, இளம்.); தலைவன்மீடத் தலைவி வருந்தியது (நம்பி. 154.)

(ஒப்பு.) 1. நிழலுக்கு இருள்: குறுந். 81: 5-6, ஒப்பு.; "தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப், புக்கிருந்தா லன்ன பொழில்" (கள. சுயம்வர. 22.)

2. மணலுக்கு நிலவு: குறுந். 320: 3; "நிலவெக்கர்ப் பலபெயர" (பொருந. 213); "நிலவுக்கானல்" (மதுரைக். 114); "நிலவடைந்த விருள் போல, வலியுணங்கு மணன்முன்றில்" (பட். 82-3); "நிலவுமணல்", "நிலவுமணன் முற்றத்து", "நிலவுக்குவித் தன்ன மோட்டுமணல்", "நிலவுத்தவழ் மணற்கோடு"; "நிலவுமண லீந்தி" (நற். 31: 9, 140: 6, 159: 3, 163: 5, 183: 3), "வாணிலா வேய்க்கும் வபங்கொளி யெக்கர்" (கலி. 131: 17); "நிலாவினிலங்கு மணன்மலி மறுகு" (அகநா. 200: 1); "நிலவுமணல் வியன்கானல்" (புறநா. 17: 11); "நிலாவெழுந்த வார்மணல்" (திணைமா. 29); "நிலவோ ரன்ன வெண்மணற் பாக்கத்து" (தமிழ்நெறி. மேற்.); "அறல் விளங்கு நிலாமணல்" (மணி. 8: 11.)

1-2. நிழலுக்கு இருளும் மணலுக்கு நிலவும்: "பொழிலே, இரவோ ரன்ன விருளிற் ருகியும், நிலவோ ரன்ன வெண்மண லொழுகியும், அரைசுமண நயந்த பந்தர் போலவும், வரைவா ழியக்கிய ருறைவிடம் போலவும்" (யா. வி. 69, மேற்.)

3. கருங்கோட்டுப்புன்னை: நற். 67: 5, 249: 1, 311: 9. ஐங். 161: 2; பெருங். 1. 40: 68.

2-3. நிலவுமணலும் கருங்கோட்டுப்புன்னையும்: "நிலவுக் குவித்தன்ன வெண்மண லொருசிறை, இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை" (யா. வி. 38, மேற்.)

3-4. புன்னைப்பொழிலில் தலைவனும் தலைவியும் அளவளாவுதல்: குறுந். 299: 3-4, 303: 6; கலி. 135: 6, 9, 12; அகநா. 320: 10-13, 340: 1-2, 370: 3-4.

5. மீன்வேட்டம்: "புன்றலை யிரும்பரதவர்.....பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது" (பட். 90-92); "கோட்டுமீ னெறிந்த வுவகையர் வேட்டமடிந், தெமரு மல்கினர்", "எல்லிமிழ் பனிக்கடன் மல்குசுடர்க்

கொளீஇ, எமரும் வேட்டம் புக்கனர்", "கோட்சுறுக் குறித்த முன்பொடு, வேட்டம் வாயா தெமர்வா ரலசே", "திண்டிமிற் பரதவ ரொண்சுடர்க் கொளீஇ, நடுநாள் வேட்டம் போகி" (நற். 49 : 5-6, 67 : 8-9, 215 : 11-2, 388 : 4-5); "பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்", "கோட்டுமீன் வழங்கும் வேட்டமடி பரப்பு" (அகநா. 140: 170: 11.); அகநா. 10:11 ; புறநா. 399 : 5

மீன்வேட்டையாடுவார் திமில் : குறுந். 304 : 4.

4-5. மீன்வேட்டம் புக்கார் திமிலில் வருதல் : "எந்தை திமிலிது நுந்தை திமிலென, வலைநீர் வேட்டம் போகிய கிளைஞர், திண்டிமி லெண்ணும்" (நற். 331 : 6-8); "ஏற்பட, வருதிமில்" (அகநா. 190 : 2-3.) (கஉங)

தோழி கூற்று

[தலைவியைப் பிரிந்து தனியே செல்ல விரும்பிய தலைவன், "பாலைநிலம் இவள் வருதற்கு உரியதன்று ; இன்னுமையையுடையது" என்று கூற, "தலைவரைப் பிரிந்தாருக்கு வீடுமட்டும் இனிமையையுடையதோ ?" என்று வினவு முகத்தால் தலைவியையும் உடன்கொண்டு செல்லும்படி தோழி அறிவித்தது.]

கஉச. உமணர் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்ன வென்றி ராயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே.

எ - து. புணர்ந்துடன் போக்கினைத் தலைமகள் ஒழியப் போகலுற்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

[தலைமகள் ஒழிய - தலைவி தனியே இருப்ப. புணர்ந்து உடன் போக்கினைத் தோழி சொல்லியதென இயைக்க. புணர்ந்துடன் போக்கு : தொல். கற்பு. 2.]

பாலைபாடிய பெருங் கடுங்கோ.

(பி - ம்.) 1 'உமணர்ச் சேர்ந்து' 2-3 'பெருங் காட்டின்ன' 4 'தமியேற்கு'

(ப - ரை.) பெரும - தலைவ, உமணர் - உப்பு வாணிகர் சேர்ந்து கழிந்த மருங்கின் - பலர் கூடிக் கடந்து சென்ற பக்கத்தையும், அகன்றலை - விரிந்த இடத்தையும் பெற்ற, ஊர் பாழ்த்தன்ன - குடியிருந்த ஊர் பாழாகப் போனதைப் போன்ற தோற்றத்தையுடைய, ஓமை பெரு காடு - ஓமை மரங்கள் வளர்ந்த பெரிய பாலை நிலங்கள், இன்ன - இன்னுமையை யுடையன, என்றிராயின் -

என்று கூறித் தனியே செல்லக் கருதினீராயின், தமியோர்க்கு - தலைவரைப் பிரிந்த தனிமையையுடைய மகளிருக்கு, மனை - வீடுகள், இனியவோ - இனிமை தருவனவோ? அல்ல.

(முடிபு) பெரும, காடு இன்னு என்றிராயின், தமியோர்க்கு மனை இனியவோ?

(கருத்து) தலைவியையும் உடன்கொண்டு செல்லுதல் வேண்டும்.

(வி - ரை.) தலைவியை உடன்கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பிய தோழியை நோக்கித் தலைவன், "யான் செல்லும் வழியிலுள்ள பாலைநிலம் இன்னுமையை யுடையது" என்று கூற அது கேட்ட தோழி கூறியது இது. "பாலைநிலம் இன்னுதென்றீர்; தலைவர் பிரிந்த மனை, மகளிர்க்கு இனிமையைத் தருவனவோ? இன்னுமையையன்றே தருவன? இவளைப் பிரிந்து சென்றால் இம்மனை இவளுக்குப் பாலையினும் இன்னுமையை உடையதாகும்; ஆதலின் இவளை உடன் கொண்டு செல்லுதலே நன்று" என்று தோழி கூறினள்.

உமணர் சேர்ந்து கழிந்த மருங்கினையுடைய காடு, ஊர் பாழ்த்தன்ன காடென இயைக்க. பாழ்த்த ஊரன்ன காடென்று மாறிக்கூட்டினும் பொருந்தும். பாலை நிலத்தில் உமணர் செல்லுதலை, "நீரில லத்தத் தாரிடை மடுத்த, கொடுங்கோ லுமணர் பகடு தெழி தெள்விளி, நெடும்பெருங் குன்றத் திமிழ்கொள வியம்பும்" (அகநா. 17: 12-4) என்பதனாலும் அறியலாகும். வறியனவாய்ப் பொலிவழிந்து சிதைந்து கிடக்கும் வீடுகளையுடைய ஊர், பசுமையின்றிப் பொலிவழிந்து நிற்கும் ஓமை மரங்களையுடைய பாலை நிலத்துக்கு உவமை. ஓமையம் பெருங்காடு: அம் சாரியை.

'தமியோர்க்கு மனை இனியவோ' என்று பொது வகையாற் கூறினாளேனும் கருதியது தலைவியையேயெனக் கொள்க. இனியவோ வென்றவினை எதிர்மறைப் பொருளையுடையது. ஏகாரம் ஈற்றசை.

(மேற்.) மு. அடி முதலிற் கூன் வந்த ஆசிரியம் (வீர. யாப்புப். 13); 'இதன் முதற்கண் நாலசைச்சீர் வந்ததன்றேவெனின், அஃது ஐஞ்சீரடியாக வைப்பினும் குற்றுகரத்தை ஒற்றுகக்கொண்டு நாற்சீரடியாக வைப்பினும் நாலசைச்சீர் அன்றும்' (யா. வி. 95); ஆசிரியப்பாவுள் ஐஞ்சீரடி வந்தது (யா. கா. ஒழிபு. 5; இ. வி. 745.)

(ஒப்பு.) 1. **உமணர்**: குறுந். 388: 4.

2. **ஓமையம் பெருங்காடு**: "உவரெழு களரி யோமையங் காட்டு" (நற். 84: 8.)

2 - 4. "ஊழி யருக்கனும், எரியு மென்ப தியாண்டைய நீண்டுகின், பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள்" (கம்ப. நகர்நீங்கு. 226.)

(கஉச)

தலைவி கூற்று

[தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுநாள் ஒழுகினமை வருந்திய தலைவி, அவன் கேட்கும் அண்மையில் இருப்பத் தோழியை நோக்கி, "தலைவன் என் நலம் கொண்டான்; அந்நலம் என்னைப் பிரிந்தது. நான் இன்னும் உயிரோடு வாழ்ந்திருக் கின்றேன்" என்று கூறித் தலைவன் வரையாவிடின் உயிர் நீங்கு மென்ற குறிப்பை உணர்த்தியது.]

கஉடு. இலங்குவளை நெகிழச் சாஅ யானை
உளெனே வாழி தோழி சாரற்
றழையணி யல்குன் மகளி ருள்ளும்
விழவுமேம் பட்டவென் னலனே பழவிறற்
5. பறைவலந் தப்பிய பைத லுரை
திரைதோய் வாங்குசினை யிருக்கும்
தண்ணந் துறைவனெடு கண்மா றின்றே.

எ - து. வரைவு நீடித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சிறைப்புறமாகச் சொல்லியது.

[சிறைப்புறமாக - தலைவன் கேட்கும் அண்மையில் மறைவாக இருக்கும்பொழுது.]

அடிமுறை.

(பி - ம்.) 5 'பறைவலி'

(ப - ரை.) தோழி—. சாரல் தழை அணி அல்குல் மகளிருள் ளும் - மலைச்சாரலில் விளைந்த தழையினுலாய உடையை அணி யும் அல்குலையுடைய மகளிர் யாவரினும், விழவு மேம்பட்ட என் நலன் - விழாவைப் போலச் சிறப்பெய்திய எனது பெண்மை நலம், பழ விறல் பறைவலம் தப்பிய பைதல் - பழைய விறலையுடைய சிறகின் வன்மை தவறியதனுல் உண்டாகிய துன்பத்தையுடைய, உரை—, திரை தோய் - அலைகள் தோயப் பெற்ற, வாங்கு சினை இருக்கும் - வளைந்த மரக்கிளையில் தங்கியிருக்கும், தண்ணந் துறை வனெடு - குளிர்ந்த கடற்றுறையையுடைய தலைவனேடு, கண் மாறின்று - என்னை விட்டுப் பிரிந்து சென்று இடம் பெயர்ந்தது;

அங்ஙனமாகவும், யானே - யான் மாத்திரம், இலங்கு வளை நெகிழ சாஅய் - விளங்குகின்ற வளைகள் நெகிழும்படி மெலிந்து, உளென் - இன்னும் உயிருடன் இருக்கின்றேன்.

(முடிபு) தோழி, என்நலன் துறைவனெடு கண்மாறின்று ; யானே சாஅய் இன்னும் உளென்.

(கருத்து.) தலைவன் விரைவில் வரைந்துகொள்ளாவிடின் உயிர் தரியேன்.

(வி - ரை.) தலைவன் வரையாது ஒழுகினமையால் ஊரார் அலருக்கு அஞ்சித் தலைவியின் உடல்மெலிய வளைகள் நெகிழ்ந்தன. யானே : ஏகாரம் பிரிநிலை. உளெனே : ஏகாரம் அசைநிலை; இரக்கக்குறிப்புமாம். வாழி : அசைநிலை. உளெனே யென்றது உயிர் விடும் நிலையினேன் என்னும் குறிப்பைப் புலப்படுத்தியது. தழை - தழையாலும் மலராலும் அமைத்து மகளிர் உடுக்கும் ஒரு வகை ஆடை ; இது மிகுதிபற்றி வந்தபெயர்.

விறல் - மிடுக்கு. வலம் - வெற்றி ; இங்கே அதற்குக் காரண மாகிய வலிக்குஆயிற்று. மரம் கரையிலிருப்பினும் அதன்நிலை அலைவந்து தோயுமாறு வளைந்தது.

கண்மாறுதல் - இடமாறுதல். மாறின்று - மாறியது; ஏகாரம் ஈற்றசை.

தலைவன் என் நலம்கொண்டா ஞதலின் அஃது என்னிடத்தி னின்றும் பிரிந்து அவனெடு போய்விட்டதென்று தலைவி கூறினாள்.

நாரை தன் பழைய சிறைவலி கெட்டுத் திரை தானே கொணர்ந்து தரும் மீனைப்பெற்றாலன்றி வேறு இரைபெறுத நிலை யில் (குறுந். 166) திரைதோயும் சினையில் இருத்தலைப் போல, யான் என் பழைய நலனை இழந்து தலைவன் தானே உளமிரங்கிச் செய்யும் தண்ணளியை எதிர்நோக்கி ஈண்டுள்ளே னென்பது குறிப்பு. அத்திரை, மீனைத் தாராதொழியின் நாரை இரையின்றி உயிர்நீத்தலைப் போலத் தலைவன் இரங்கி வரைந்து கொள்ளா னேல் யானும் உயிர்விடுவேனென்னும் குறிப்புங் கொள்க.

(ஒப்பு.) 1. வளை நெகிழ்தல் : குறுந். 11 : 1, ஒப்பு.

2. உளெனே : குறுந். 133 : 4, 310 : 5.

3. தழையணி யல்குல் மகளிர் : குறுந். 159 : 1, 214 : 4, 294 : 5 - 7 ; குறிஞ்சிப். 102 ; ஐங். 72 : 1 - 2.

தழையணி மகளிர் : குறுந். 295 : 1-2, 342 : 5.

4. நலத்தின் சிறப்பு : குறுந். 245 : 1 - 2.

மேற்பட்ட நலன் : " விறனலன் " (கலி. 3 : 5.)

5. பறை : குறுந். 166 : 1, 172 : 1.

பறைவலந் தப்பிய நாரை : (குறுங். 128 : 1) ; "பறைதபு முதுகுருகு" (ஐங். 180 : 3.)

7. கண்மாறல் ; மதுரைக், 642 ; கலி. 46 : 18 ; அகநா. 144 : 6, 337 : 18; புறநா. 143 : 4.

4-7. நலன் தலைவனெடு நீங்கல் : குறுந் : 54 : 1 - 5, ஒப்பு.

(கஉரு)

தலைவி கூற்று

[தலைவன் மீண்டுவருவேனெனக் கூறிச்சென்ற கார்ப்பருவம் வந்த பின்பும் அவன் வாராமையால் வருந்திய தலைவி தோழியை நோக்கி, "கார்ப்பருவம் வந்துவிட்டது ; முல்லைக்கொடிகள் அரும்பின ; தலைவர் இன்னும் வந்திலர்" என்று கூறியது.]

கஉசு. இளமை பாரார் வளநசை இச் சென்றோர்
இவணும் வாரா ரெவண ரோவெனப்
பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை யிலங்கெயி றுக
5. நகுமே தோழி நறுந்தண் காரே.

எ - து. பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

ஒக்கூர் மாசாத்தி.

(பி - ம்.) 2 'ரோவென்ப'

(ப - ரை.) தோழி—, இளமை பாரார் - இளமையது அருமையைப் பாராராகி, வளம் நசைஇ சென்றோர் - பொருளை விரும்பி என்னைப் பிரிந்து சென்ற தலைவர், இவணும் வாரார் - இவ்விடத்தும் இன்னும் மீண்டு வந்திலர் ; எவணரோ - எவ்விடத்தில் உள்ளாரோ? என - என்று யாம் எண்ணியிருப்ப, நறு தண் கார் - நறிய தண்ணிய கார் காலம், பெயல் புறந்தந்த - மழையாற் பாதுகாக்கப்பட்ட, பூ கொடி முல்லை - பூவையுடைய முல்லைக்கொடியினது, தொகு முகை இலங்கு எயிறு ஆக - தொக்க முகைகளை விளங்குகின்ற தன்பற்களாகக் கொண்டு, நகும் - நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

(முடிபு.) தோழி, சென்றோர் எவணரோ என, கார் நகும்.

(கருத்து) கார்காலம் வந்துவிட்டது ; தலைவர் வந்திலர்.

(வி - ரை.) பொருள் தேடச் செல்வார்க்கு இளமையது அருமை அம்முயற்சிக்குத் தடைசெய்யுமாதலின் வளம் விரும்பிச் சென்றோர்

இளமை பாராராயின ரென்ருள் ; இளமைய தருமையை எண்ணி யிருப்பின் செல்லா ரென்று கொள்க ; 'வாழ்க்கைநாள் சிலவாதல் ஏதுவாகப் பொருள்செய்தல் குறித்தாரை இளமையது அருமை இன்பத்தின்கண் ஈர்த்து ஒன்ருமை' (தொல். அகத். 41, ந.) என் பதைப் பார்க்க. பெயலும் முல்லைமுகையும் கார்காலத்தை அறி வுறுத்துவன. பூ : முல்லையாகிய முதலுக்கு அடை. முகை எயிருக என்றதற்கேற்பக் காராகிய மகள் என்று உருவகத்தை நிரப்புக ; இஃது ஏகதேச உருவகம். நகுமென்றது, "நும் தலைவர் தாம் கூறிய பருவம் வந்த பின்பும் வாராததுகண்டு நீவிர் இன்னும் உயிரோடு உள்ளீரோ?" என்னும் எள்ளல் காரணமாக நகைக்கு மென்றவாறு.

தொகுமுகையாகலின் பல்வரிசையை ஒத்தன. முல்லைமலரால் நறுமையும், பெயலால் தண்மையும் உடைமையின் நறுந்தண் காரென்ருள் ; "நறுந்தண்ணீரள்" என்று மகளிர் இயல்பைச் சிறப்பிக்கும் மரபுபற்றி மகளாக உருவகம் செய்த காரையும் இங் ஙனம் கூறினுள்.

இவணும் : உம்மை உயர்வு சிறப்பு. ஓ : ஐயம். ஏகாரங்கள் அசைநிலை.

எவணரோ என நகுமென்று கூட்டிப் பொருள்கொள்ளுத லும் ஒன்று.

(ஒப்பு.) 1. இளமைபாராது பொருளுக்குப் பிரிதல் : குறுந். 151 : 6 ; "இறந்துசெய் பொருளு மின்பந் தருமெனின், இளமையிற் சிறந்த வள மையு மில்லை, இளமை கழிந்த பின்றை வளமை, காமந் தருதலு மின்றே" (நற்- 126 : 7-10) ; "வளமையா னுகும் பொருளிது வென்பாய், இள மையுங் காமமு நின்பாணி நில்லா", "இளமையுந் தருவதோ விறந்த பின்னே" (கலி. 12 : 11-2, 15 : 26.)

3. பெயல்புறந்தந்த முல்லை : "பெய்த புலத்துப் பூத்த முல்லை" (குறுந். 323 : 4.)

3-4. முல்லைமுகைக்கு எயிறு : (குறுந் : 186 : 2-3) ; "மாதரார் முறுவல் போன் மணமௌவன் முகையூழ்ப்ப" (கலி. 27 : 4.)

3-5. முல்லைத்தொகுதி நகையைக் காட்டுதல் : குறுந் : 162 ; 3-5 ; "தீந்தள வுகள்செய்யுஞ் சிறுகுறு நகைகாணுய்" (கம்ப. வனம்புகு. 9) ; "வேள்சரத் தடைகுநர் கோல நோக்கி, இருண்மகள் கொண்ட குறுநகை போல, முல்லையு மௌவலு முருகுயிர்த் தவிழ" (கல். 'கோடிய கோவி னன்.')

கார்ப் பருவத்தில் முல்லை முகைத்தல் : குறுந். 108, 162, 186, 188, 220, 221, 358, 382. (கஉசு)

தோழி கூற்று

[தலைவன் தலைவியின்பால் பாணனைத் தூதாக விட்டுத் தான் பின் நிற்பத் தோழி அவனை நோக்கி, "நின்பாணன் பொய்யனையினன்; அதனால் பாணர் யாவரும் பொய்யர் போலுமென எண்ணுவேமாயினேம்" என்று கூறி வாயில் மறுத்தது.]

கஉஎ. குருகுகொளக் குளித்த கெண்டை யயல
துருகெழு தாமரை வான்முகை வெரூஉம்
கழனியம் படப்பைக் காஞ்சி யூர!
ஒருநின் பாணன் பொய்ய னாக
5. உள்ள பாண ரெல்லாம்
கள்வர் போல்வர்நீ யகன்றிசி னோர்க்கே.

எ - து. பாணன் வாயிலாகப் புக்கவழித் தலைமகற்குத் தோழி சொல்லியது.

ஓரம் போகியார் (பி - ம். ஓரம் போதியார்)

(பி - ம்) 2 'வெருளும்' 'கழனியபடப்பை '6 'நின்னகன்றிசி'

(ப - ரை) குருகு கொள-நாரை கவர்ந்து கொள்ள, குளித்த–அதன் வாயினின்று தப்பி நீருட் குளித்த, கெண்டை - கெண்டை மீன், பின்பு, அயலது - அயலதாகிய, உரு கெழு தாமரை வான் மூகை - நிறம் பொருந்திய தாமரையின் வெள்ளிய அரும்பை, வெரூஉம் - அஞ்சும், கழனி படப்பை - வயற் பக்கங்களையுடைய, காஞ்சி ஊர - காஞ்சிமரங்கள் வளர்ந்த ஊரையுடைய தலைவ, நின் ஒரு பாணன் பொய்யன் ஆக - நின் பாணன் ஒருவன் பொய் பேசுவா னாயினமையால், உள்ள பாணர் எல்லாம் - மற்றுள்ள பாணர்கள் யாவரும் நீ அகன்றிசினோர்க்கு - நீ அகன்றதனால் தனித்திருக்கும் மகளிருக்கு, கள்வர் போல்வர் - பொய்யரைப் போலத் தோற்றுவர்.

(முடிபு.) ஊர, நின் பாணன் பொய்யனாக, நீ அகன்றிசினோர்க்கு உள்ள பாணரெல்லாம் கள்வர் போல்வர்.

(கருத்து.) நின் தூதுவனாகிய பாணன் பொய்யன்.

(வி - ரை.) குருகு - கொக்குமாம். குளித்தல் - மறைதல். உரு - அச்சமுமாம். தாமரை - இங்கே வெண்டாமரை.

நாரையாற் கௌவப்பட்டுத் தப்பி நீருட் குளித்த கெண்டை மீண்டும் நீரின்மேல் எழும்போது தாமரை முகையை அந்நாரை

யென்றே கருதியது; "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல் லாம் பேய்" என்ற பழமொழி இங்கே நினைத்தற்குரியது.

கழனியம் படப்பை : அம் சாரியை.

"தலைவன் நின்னை மறப்பானல்லன்; அவன் தூய ஒழுக்க முடையவன்" என்று அப்பாணன் தலைவிபாற் கூறிய பொய்க் கூற்றுக்களைக் கேட்டவளாதலின் ஒரு நின்பாணன் பொய்யனாக வென்றாள். நின்பாணன் கூறுவனவெல்லாம் பொய்யென்னும் தன் கருத்தையே சமற்காரமாகப் புலப்படுத்தி வாயில் மறுத் தாள்.

நீ அகன்றிசினே ரென்றது நீ பல மகளிரோடு நட்புடையா யென்னும் கருத்தை உள்ளடக்கியது. அகன்றிசினோர்க்குக் கள் வர் போல்வரென்று பொதுப்படக் கூறினளேனும், கருதியது தலைவியையே யென்று கொள்க.

குருகிற்கு அஞ்சிய கெண்டை அக்குருகைப் போன்ற தோற் றத்தைமட்டும் உடையதும் கொடுமை யில்லாததுமாகிய தாமரை முகையையும் அஞ்சினற்போல, நீ விடுத்த பாணனைப் பொய்ய னாகக் கண்டு வெறுத்த மகளிர் பொய்யரல்லாத பிற பாணரையும் வெறுத்தனரென்பது குறிப்பு.

ஏகாரம் ஈற்றசை.

(ஒப்பு.) 1-2. மீன் தனக்கு அச்சத்தைத் தரும் பொருளைத் தோற்றத்தால் ஒக்கும் பிற பொருள்களையும் அஞ்சுதல்: "கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த, நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக், கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப், பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை, நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉம்" (பெரும்பாண். 284 - 8); "கொடுங்கழி மருங்கி னிரைவேட் டெழுந்த, கருங்காற் குருகின் கோளுப்ந்து போகிய, முடங்குபுற விறவின் மோவா யேற்றை, எறிதிரை தொகுத்த வெக்கர் நெடுங்கோட்டுத், துறுகடற் றலைய தோடுபொதி தாழை, வண்டுபடு வான்போது வெரூஉம்" (நற். 211 : 3-8.) (கூஎ)

தலைவன் கூற்று

[தலைவன் தலைவியைக் குறியிடத்திற் காணாது மீளும்பொழுது நெஞ்சை நோக்கி, "இனி, தலைவி காண்டற் கரியள்; நீ துன் புறற்குரியை" என்று கூறியது.]

கூஅ குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை

அயிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
5. *நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.*

எ - து. (1) அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகன், தன் நெஞ் சினைநெருங்கிச் சொல்லியது.

[நெருங்கிச் சொல்லல் - இடித்துரைத்தல். மு. அகநா. 212, கருத்து.]

(2) இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண், தலைமகன் கூறி யதூஉமாம்.

[உணர்ப்புவயின் வாரா ஊடல் - தலைவி ஊடினளாக அவள் ஊடற்குக் காரணமாகக் கூறிய குற்றங்கள் தன்பால் இல்லை யென்று தெளிவித்த பின்பும் தன் குறிப்புக்கு உடன்பட்டு வாராத ஊடற் காலத்து.]

பரணர்.

(பி - ம்.) 2 'திண்டோட்'

(ப - ரை.) நெஞ்சே—, குணக்கு கடல் திரையது - கீழ்கடல் அலைக்கு அருகிலுள்ளதாகிய, பறைதபு நாரை - முதுமையால் சிறகுகள் நீங்கப்பெற்ற நாரை, திண் தேர் பொறையன் - திண்மையாகிய தேரையுடைய சேரனது, தொண்டி முன்துறை - மேல்கடற் கரையிலமைந்த தொண்டி யென்னும் பட்டினத்தின் கடற்றுறையின் முன் உள்ள, அயிரை அரு இரைக்கு - அயிரை மீனுகிய பெறற்கரிய உணவைப் பெறும்பொருட்டு, அணவந் தாங்கு - தலையை மேலே எடுத்தாற் போல, சேயள் அரியோள் - நெடுந்தூரத்திலுள்ளவளும் பெறற்கரியவளுமாகிய தலைவியை, படர்தி - பெறுவதற்கு நினைந்தாய்; நோயை - நீ வருத்தத்தை யுடையை; நோய் பாலோய் - துன்பத்துக்குக் காரணமாகிய ஊழ் வினையை யுடையை.

(முடிபு) நெஞ்சே, அரியோட் படர்தி; நோயை; நோய்ப் பாலோய்.

(கருத்து) இனித் தலைவி நாம் பெறற்கரியள்.

(வி - ரை.) தலைவன் அல்லகுறிப்பட்டு மீள்பவனுதலின், 'இனித் தலைவியைப் பெறுதல் அரிது போலும்!' என்று எண்ணிக் காமமயக்கத்தால் நெஞ்சை நோக்கிக் கூறுவானுகி, "நீ கிட்டுதற் கரிய தொன்றை அவாவி வருத்தமுறுகின்றாய்; உன் தலையெழுத்து இதுதான்" என்று இடித்துக் கூறியது இது.

கீழ்கடலிலுள்ள நாரைக்கு மேல்கடலிலுள்ள அயிரை தூரியதும் பெறற்கரியதுமாதலின் அதனை உவமை கூறினன். மேல் கடற்குப் பறந்து சென்று பெறும் நிலையிலதென்பான் பறைதபு நாரையென்றனன்.

திண்டேர் – போர்க்களத்தில் மேடும் பள்ளமுமாய இடங்களில் ஓடினும் சிதைவின்றித் திண்ணியதாகுந் தேர். முன்துறை–துறைமுன் ; பின்முன்னுகத் தொக்கது. அணவருதல் - இரையைப் பெறும் ஆர்வத்தோடு தலையை மேலெடுத்தல். தான் சென்று அடைய முடியாத இடத்தினளாதலின் சேயளென்றும், அவளாக வந்து தன்னை எதிர்ப்பட்டு எளியளாகாமையின் அரியளென்றும் கூறினன். பால் - ஊழ்வினை.

நோய்ப்பாலோயே : ஏகாரம் தேற்றம் ; அசைநிலையுமாம்.

இரண்டாவது கருத்து : தான் முன் உண்ட பழக்கத்தால் அயிரைமீனுக்கு நாரை அணவந்ததாயினும் தானும் பறத்தற் கருவியாகிய சிறகினை இழப்ப அயிரையும் நெடுந்தூரத்திலுண்மையின் அது பெறற்கரிதாயினதுபோல, முன் பயின்ற பழக்கத்தால் நீ இவளோடு அளவளாவக் கருதினும் நான் இவளது ஊடலை நீக்கும் பழைய வலியிழந்தேன் ; இவளும் நெஞ்சால் எனக்குச் சேயளாயினளாதலின் இவள் பெறற்கரியள் என்று உவமையை விவரித்துக் கொள்க.

(மேற்) 4. பிறன்கட் டோன்றிய வருத்தம் வந்தது (தொல். மெய்ப். 6, பேர்.)

மு. அல்லகுறிப்பட்டுப் பெயர்ந்து செல்லுந் தலைவன் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது (இறை. 17) ; நெஞ்சினை வேறு நிறீஇக் கூறினமையின் பிறன்கட்டோன்றிய பிணி (தொல். மெய்ப். 6, பேர் ; இ. வி. 578); புணர்ந்து பிரிந்துழி அன்பு மிகுதியால் தான் மறைந்து அவட்காணுங்கால் ஆயத்திடைக் கண்டு, இனிக் கூடுதலரிதெனத்தலைவன் இரங்கியது (தொல். களவு. 11, ந.) ; அல்ல குறிப்பட்டுத் தலைவன் புலந்து போகியது (நம்பி. 160) ; இரவுக்குறி கழிதல் (களவியற்.)

(ஒப்பு.) 1. பறைதபு நாரை : குறுந். 125 : 5, ஒப்பு.

2. தொண்டி : குறுந். 210 : 2, 238 : 4.

3. அயிரை : குறுந். 178 : 1.

அணவருதல் : குறுந் : 64 : 3, ஒப்பு ; பெரும். 1. 54 : 42.

1-3. நாரைக்கு அயிரை உணவாதல் : "நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்" (குறுந். 166 : 2) ; "அன்றிலு நாரையுந் துன்றுபுகெழீஇ..... அயிரையும் பிறவு மல்கிரை யமைத்து" (பெரும். 1. 51 : 71–3.)

மு. அகநா. 212 ;

" வடமலை மிசையோன் கண்ணின் முடவன்
தென்றிசை யெல்லை விண்புகு பொதியிற்
சூருடை நெடுஞ்சுனை நீர்வேட் டாங்கு
வருந்தினை வாழியெ னுள்ளஞ் சாரற்
பொருதுபுறங் கண்ட பூநுத லொருத்தல்
சிலம்பிழி பொழுதி னத்தம் பெயரிய
வல்லிய மடுக்கத் தொடுங்கு நல்வரைக்
கல்லக வெற்பன் மடமகள்
மெல்லியல் வனமுலைத் துயிலுற் றேயே "

(தொல். களவு. 43, ந. மேற்.)
(கஉஅ)

தலைவன் கூற்று

[தலைவியோடு அளவளாவி மீண்ட தலைவனது வாட்டத்தைக் கண்ட பாங்கன், "நினக்கு இவ்வாட்டம் உண்டாதற்குக் காரணம் யாது?" என்றவழி, "ஒரு மங்கையது நுதல் என் உள்ளத்தைப் பிணித்தது" என்று தலைவன் கூறியது.]

கஉக. எலுவ சிறுஅ ரேமுறு நண்ப
புலவர் தோழ கேளா யுத்தை
மாக்கட னடுவ ணெண்ணைட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
5. கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்
புதுக்கோள் யானையிற் பிணித்தற் ரெம்மே.

எ-து. தலைமகன் பாங்கற்கு உரைத்தது.
கோப்பெருஞ் சோழன்.

(பி-ம்) 1 'ரெமமுறு', 'ரேமமுறு' 4 'பகுவெண்' 5 விளங்குந் திருநுதல்'

(ப - ரை.) எலுவ - எம் நண்ப, சிறுஅர் ஏமுறு நண்ப - இளைஞர் இன்புறுதற்குக் காரணமாகிய நட்பையுடையோய், புலவர் தோழ - அறிவுடையாருக்குத் தோழ, கேளாய் - கேட்பாயாக : மா கடல் நடுவண் - பெரிய கடலின் நடுவில், எண்ணுள் பக்கத்து பசு வெண் திங்கள் - எட்டாந் திதிக்குரிய இளைய வெள்ளிய திங்கள், தோன்றியாங்கு - தோன்றியதைப்போல, கதுப்பு அயல்

விளங்கும் சிறு நுதல் - ஒரு மகளின் கூந்தலுக்கு அயலில் விளங்குகின்ற சிறிய நெற்றி, புது கோள் யானையின் - புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைப் போல, எம் பிணித்தற்று - எம்மைப் பிணித்தது.

(முடிபு) எலுவ, நண்ப, தோழ, கேளாய்: சிறுநுதல் எம்மைப் பிணித்தற்று.

(கருத்து) ஓர் அழகிய மகள் என் நெஞ்சத்தைக் கவர்ந்தாள்.

(வி - ரை.) எலுவ வென்றது தனக்குத் தோழமை யுடைமையைச் சுட்டியது. தான் தலைவியைப் பாங்கனது உதவியினாற் கண்டு இன்புறலாகுமென்று எண்ணியவனுதலின், ஏமுறு நண்ப வென்றான்; ஏமம் ஏமென்றியிற்று (மூருகு. 97, ந.) அறிவுரையைக் கூறுதல் அவன் கடமை யென்பதைப் புலப்படுத்திப் புலவர் தோழ வென்றான்; சிறுவர் நண்பவென்றதனால் இழுக்கு நேராதவாறு புலவர் தோழவென்று சிறப்பித்தான்.

எண்ணுட்பக்கம் - எட்டாவது திதி; அட்டமி. பசுமை - இளமை. கூந்தலுக்குக் கடலும் நுதலுக்குத் திங்களும் உவமைகள். கதுப்பயல் விளங்கும் சிறுநுதலென்றது அளகமாகிய முன்னுச்சி மயிருக்கு அருகில் விளங்கும் நெற்றியென்றபடி; இது பற்றியே, "அளகவாணுதல்" (கம்ப. ஊர்தேடு. 53) என்பது போன்ற வழக்குகள் உண்டாயின; குறுந். 34, வி - ரை.

புதுக்கோள் யானை - புதியதாகக் காட்டிலிருந்து பிடிபட்ட யானை; தலைவன் தான் முன்னர் இத்தகைய உள்ளக்கவர்ச்சியை அடைந்தவனல்லனாதலின் புதுக்கோள் யானையை உவமை கூறினன். பிணித்தற்று: பிணித்தன்றென்பதன் விகாரம்; பிணித்தல் - இங்கே உள்ளத்தைப் பிணித்தல்.

அத்தை: ஏ அசைநிலை.

(மேற்.) 1. ரகார வீற்று உயர்திணைப் பெயர் விளிவேற்றுமைக்கண் அளபெடுத்தது (நன். 308, மயிலை.) ['சிறுஅர்' என்பதை மயிலைநாதர் விளியாகக்கொண்டார் போலும்.]

1 - 2. னகாரவீற்று உயர்திணைப் பெயர் அண்மை விளிக்கண் ஈறு அழிந்தது (நன். 306, மயிலை, 307, சங்.)

3 - 5. 'கடல் போன்றது கூந்தலெனவும், கடல் நடுவெழுந்த எண்ணுட் பக்கத்து மதி போன்றது நுதலெனவும் கூறினன்; அதனால், கடல் போலு மயிரென்றதும், பல காவதப் பரப்புடைய மதிபோன்றது நுதலென்றதும் கழியப் பெரியவாயினும், அது வழக்காதலிற் சிறப்பிற்றீராது மனங்கொள வந்த உவமம் எனவே படும்' (தொல். உவம. 10, பேர்); எண்ணுட்

டிங்கள் மகளிர்நெற்றிக்கு உவமை (சிலப். 2 : 38 - 40, அடியார்.); குழவிப் பருவத்து ஒரு கலியுடைத்தாய்ப் பின்பு இளமைப் பருவத்தே நின்ற பிறை, மகளிர்நெற்றிக்கு உவமை (சீவக. 165, ந.)

மு. தலைவன் பாங்கற்கு உற்ற துரைத்தது (இறை. 3 ; தொல். களவு. 11, இளம், ந ; நம்பி. 137); பாங்கன் கேட்பத் தலைவன் கூறியது (தொல். செய். 196, பேர், ந.); பாங்கற் கூட்டம் (தொல். செய். 198, பேர், 201, ந.); தலைவன் பாங்கனை எலுவவென்று விளித்தது (தொல். பொருளியல், 26, ந.)

(ஓப்பு.) 2. அத்தை : குறுந். 389 : 2.

4. பசு வெண்டிங்கள் : குறுந். 359 : 2; "பசுவெண் ணிலவு" (நற். 196 : 2.)

3 - 5. நுதலுக்குப் பிறை : குறுந். 226 : 2 - 3.

6. புதுக்கோள் யானை : மணி. 12 : 45, 18 : 168; பெரும். 1. 33 : 79. தலைவனுக்கு யானை : குறுந். 359 : 4; கலி. 2 : 26 - 9; மணி. 18 : 160 - 68.

5 - 6. தலைவியின் நுதல் தலைவன் உள்ளத்தைக் கவர்தல் : "ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள், நண்ணரு முட்குமென் பீடு" (குறள், 1088.) (கஉக)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்திருக்கும்போது வருந்திய தலைவியை நோக்கி, "தலைவர் இவ்வுலகில் எங்கேனும் ஓரிடத்தில் இருப்பார்; அவரைத் தேடித் தருவேன்" என்பதுபடத் தோழி கூறியது.]

கஙo. நிலந்தொட்டுப் புகாஅர்; வான மேறார்
விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்
நாட்டி லுட்டி னூரி னூரிற்
குடிமுறை குடிமுறை தேரிற்
5. கெடுநரு முளரோ நங் காத லோரே.

எ - து. (1) பிரிவிடை அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. 'நீ அவர் பிரிந்தாரென்று ஆற்றுயாகின்றது என்னை? யான் அவர் உள்வழி அறிந்து தூதுவிட்டுக் கொணர்வேன்; நின் ஆற்றுமை நீங்குக' எனத் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

(2) தோழி தூதுவிடுவாளாகத் தலைமகள் தனது ஆற்றுமையாற் கூறியதூஉமாம்.

[தூது விடுவாளாக - தூது விடும்பொருட்டு.]

வெள்ளி வீதியார் (பி - ம். வெள்ளி வீதி.)

(பி - ம்.) 2 'பிறங்கிரு', 'மூங்கீராவிற்'

(ப - ரை.) தோழி, நம் காதலோர் - நம்முடைய தலைவர். நிலம் தொட்டு புகாஅர் - சித்தி பெற்ற சாரணரைப்போலப் பூமியைத் தோண்டி உள்ளே புகார்; வானம் ஏறூர் - ஆகாயத்தின் கண் ஏறூர்; விலங்கு இரு முந்நீர் - குறுக்கிடுகின்ற பெரிய கடலின்மேல், காலின் செல்லார் - காலினுல் நடந்து செல்லார்; நாட்டின் நாட்டின் - நாடுகள் தோறும், ஊரின் ஊரின் - ஊர்கள் தோறும், குடிமுறை குடிமுறை - முறையாகக் குடிகள் தோறும், தேரின் - ஆராய்ந்தால், கெடுநரும் உளரோ - அகப்படாமல் தப்புவாரும் உள்ளாரோ? இரார்.

(முடிபு) நம் காதலோர் புகாஅர்; ஏறூர்; செல்லார்; தேரிற் கெடுநரும் உளரோ?

(கருத்து) தூதுவிட்டுத் தலைவரைத் தேடித் தருகுவன்.

(வி - ரை.) நிலந்தொட்டுப் புகுதல் முதலிய மூன்று அற்புத சத்திகளும் சித்தி வகைகள்; இவற்றை இருத்தி யென்பர். சைனர்கள் இத்தகைய சித்திகளைப் பெற்ற சாரணரெண்மரென்பர். பௌத்தர்களும் இத்தகைய சித்திகளைப் பற்றிப் பாராட்டுவர். தம் தந்தையாகிய சுத்தோதனனுக்கு ஞானம் உண்டாக்குதற் பொருட்டு இத்தகைய அற்புதங்களைப் புத்தர் காட்டினரென்று அசுவகோஷ போதிசத்துவ ரென்பவரால் இயற்றப்பெற்ற புத்த சரிதத்தின் 19-ஆம் வர்க்கம் தெரிவிக்கின்றது.

விலங்குதல் - அலைகள் குறுக்கிடுதல். முந்நீர் - மண்ணைப் படைத்தல், காத்தல், அழித்தலென்னும் மூன்று நீர்மையையுடையது (சிலப். 17: 'முந்நீரின்' அடியார்.); யாற்று நீரும் ஊற்று நீரும் மழைநீருமுடைமையால் இப்பெயர் பெற்றதென்பது சிலர் கொள்கை (புறநா. 9, விசேடவுரை.)

நாடு, ஊர், குடி என்பன ஒன்றனுள் ஒன்று அடங்கியவை ஆதலின், அம்முறைப்படிக் கூறினள். குடியென்றது குடும்பத்தை.

"நம் தலைவர் இவ்வுலகத்தில் ஏதேனும் ஒரு நாட்டிலுள்ள ஓரூரில் ஒரு குடியில் இருப்பர்; சாரணரைப்போல இவ்வுலகுக்குப் புறம்பே செல்பவரல்லர்; ஆதலின் எல்லா நாட்டிலும் உள்ள ஊர்கள் யாவற்றிலும் அமைந்த குடிகளையெல்லாம் தேடின் அகப்படாமற் போதற்கு நியாயமில்லை; அங்ஙனம் தேடித் தருவேன். நீ வருந்தற்க" என்று தோழி, தலைவியை ஆற்றுவித்தாள்.

ஏ : அசைநிலை.

இரண்டாவது கருத்து: "தலைவரைத் தேடின் அகப்படுவார்" என்று கூறும் வாயிலாக, தூது விட்டு அங்ஙனம் தேடி அவரைக் கண்டு தன் நிலையைக் கூறச்செய்யின் நலமென்னும் கருத்தைத் தலைவி தோழிக்குப் புலப்படுத்தினள்.

(மேற்.) மு. செவிலி இடைச்சுரத்துச் சென்று தலைவியைத் தேடத் துணிந்தது; 'இக் குறுந்தொகையுள், நம்மாற் காதலிக்கப் பட்டாரென்றது அவ்விருவரையும்' (தொல். அகத். 37, ந. தமிழ்நெறி; 23, மேற்.) இருவராவார் : தலைவனும் தலைவியும்.

வரலாறு

இச்செய்யுளைப் பாடிய வெள்ளி வீதியார் தம்முடைய கணவனைத்தேடிக் கிரிந்தா ரென்றதொரு செய்தி,

"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவயர்ந் திசினால் யானே" (அகநா. 147 : 8-10)

என்று ஔவையாரால் கூறப்பட்டுள்ளது. அகநானூற்றின் 45 - ஆம் செய்யுளில் வெள்ளி வீதியார்,

"ஆகி மந்தி போலப் பேதுற்
றலந்தனை னுழல்வென் கொல்லோ"

என்று பாடியுள்ளார். வெள்ளி வீதியார் தம் கணவனைத் தேடிய வரலாற்றை நோக்குமிடத்து அங்ஙனம் தேடிவதற்குமுன் அகநானூற்றின் 45-ஆம் செய்யுளையும், குறுந்தொகைச் செய்யுளாகிய இதனையும் கூறினரென்று தோற்றுகின்றது.

(ஒப்பு.) 1-2. நிலத்திற் புகுதல், வான மேறுதல், கடலிற் செல்லுதல்: "நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச், சலத்திற் றிரியுமோர் சாரணன்" (மணி. 24 : 46-7); "நீரினிற் பூவில் வானி னினைத்துழி யொதுங்கு கின்ற, சாரண ரெண்ம ராவார் சமணரி லிருத்தி பெற்றோர்" (சூடாமணி. 2 : 4.)

3. மு. அகநா. 236 : 17. (கூடு)

தலைவன் கூற்று

[தலைவியைப் பிரிந்துவந்த தலைவன் தான் மேற்கொண்ட முயற்சி முற்றுப்பெற்றபின் தலைவிபால் மீள எண்ணி, "தலைவியின் ஊர் நெடுந்தூரத்தில் உள்ளது; அவள்பாற் செல்வதற்கு என் நெஞ்சம் மிக விரைகின்றது" என்று கூறியது.]

கூஉக. ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணிரிடை யதுவே நெஞ்சே
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்
5 தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்ரு னெகோ யானே.

எ - து. வினைமுற்றிய் தலைமகன் பருவவரவின்கட் சொல்லியது.

[வினைமுற்றிய - தன் தலைவியைப் பிரிந்துவந்ததற்குக் காரணமாகிய காரியம் முற்றுப்பெற்ற.]

ஓரேருழவனர். (பி - ம். நக்கீரர்)

(பி - ம்.) 2 'பேரமைக்கண்ணி' 3 'நெடுஞ்சேணுருடை

(ப - ரை.) ஆடு அமை புரையும் வனப்பின் - அசைகின்ற மூங்கிலை யொத்த அழகினையும், பணை தோள் - பருமையையும் உடைய தோளையும், பேர் அமர் கண்ணி - பெரிய அமர்த்தலை யுடைய கண்ணையும் பெற்ற தலைவி, இருந்த ஊர்—, நெடு சேண் அரு இடையது - நெடுந்தூரத்தின்கண் அடைதற்கரிய இடத்தில் உள்ளது; நெஞ்சு - எனது நெஞ்சானது, ஈரம் பட்ட செவ்வி பசு புனத்து - ஈரம் உண்டாகிய செவ்வியையுடைய பசிய புனத்தை யுடைய, ஓர் ஏர் உழவன் போல - ஒற்றை ஏரையுடைய உழவனைப்போல, பெரு விதுப்பு உற்றன்று - பெரிய விரைவை அடைந்தது; யான் நோகு - அதனால் நான் வருந்துவேன்.

(முடிபு) கண்ணி இருந்த ஊர் நெடுஞ்சேணிடையது; நெஞ்சு பெருவிதுப்புற்றன்று; யான் நோகு.

(கருத்து.) யான் கூறிவந்த பருவம் வந்தமையின் என் நெஞ்சம் தலைவியை அடைய அவாவுகின்றது.

(வி - ரை.) தோளிணைத்துஞ்சி யின்புற்றவனதலின் அவற்றின் சிறப்பை முற்கூறினன். அமைபுரையும் தோள், வனப்பிற்றேரள், பணைத்தோளென இயைக்க. பணைத்தோள் - பருமையையுடைய தோள். அமர்த்தலாவது கண்டார் நெஞ்சொடு போர் புரிதல் (கலி. 75 : 7, ந.)

ஓரேருழவன், ஈரம் வீண்படாமல் உழுதற்கு விரைதலைப் போல என் நெஞ்சம் தலைவியை உரியபருவத்தே கண்டு அள வளாவ விரைகின்ற தென்றன். பல ஏருடையான் சிறிது சோம்பியிருப்பினும் ஏவலாளர் உதவிகொண்டு குறுகிய கால

அளவில் உழுதுவிடல் கூடும்; ஒரேருழவனே அவ்வோரேரைக் கொண்டே ஈரம் வீண்படாமல் உழவேண்டியவனுதலின் விரைவான். ஆதலின் அவனை உவமை கூறினன். ஒரேருழவனென்றது ஒரேரும் அதனால் உழப்படும் சிறு நிலமும் உடையவனைக் குறித்தது. விதுப்பு - விரைவு; விதும்பென்பது இதன் விகாரப் பகுதி.

ஏகாரங்களும் ஓகாரமும் அசைநிலைகள்.

தன் நெஞ்சு விரையவும், தான் உடனே சென்றுகாண்பதற் குரிய நிலையில் இன்மையின் நோகோயானே யென்றான்.

(மேற்.) மு. தலைமகன் தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கியது (கம்பி. 156.)

(ஒப்பு.) 1. ஆடமை: குறுந். 115: 4, ஒப்பு.

ஆடமைத்தோள்: "ஆடமைத் தோளி" (பு. வெ. 264); "ஆடமைத்தோ ணல்லார்" (நன். 55.)

மகளிர் தோளுக்கு மூங்கில்: குறுந். 268: 6, ஒப்பு.

2. பேரமர்க் கண்ணி: குறுந். 286: 4; கலி. 74: 14; புறநா. 71: 6; குறள், 1083.

3. நெடுஞ்சே றிரிடை: அகநா. 3: 18.

5. ஓரேருழவன்: 'ஓரேர்க்காரன் உழுது கெட்டான்; அஞ்சேர்க்காரன் அமர்த்திக் கெட்டான்' (ஒரு பழமொழி.)

6. விதுப்புறுதல்: அகநா. 136: 8.

4-6. ஈரங்கண்டு உழவன் விரைதல்: "மாவீரம் போகுதென்று விதை கொண் டோட" (தனிப்.)

சிறுநில முடைய உழவன் அந்நிலத்தைப் பாதுகாத்தல்: "வறிஞரேம்பு மோர், செய்யெனக் காத்து" (கம்ப. அரசியற். 12); "மிடியனொருசெய் யாளனச்செய் விளையக் காக்குஞ் செயல்போல" (பிரபு. மாயை உற்பத்தி. 49.)

6. நோகோயானே: குறுந். 178: 7, 212: 5; நற். 26: 1, 108: 9, 257: 10, 312: 1, 394: 9; ஐங். 107: 4; அகநா. 137: 16; புறநா. 116: 9, 234: 1. (தொடர்)

தலைவன் கூற்று

[பேரறிவுடைய நீ ஒரு மகள் திறத்து உள்ளமுடைதல் அழ கோவென இடித்துரைத்த பாங்கனை நோக்கித் தலைவியின் இயல் பும் வனப்பும் கூறி, "இத்தகைய தன்மையுடையாளை யான் எங்ஙனம் மறந்தமைவேன்!" என்று தலைவன் சொல்லியது.]

கஉ. கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்குமறந் தமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்லா னடுங்குதலைக் குழவி
5. தாய்காண் விருப்பி னன்ன
சாஅய்நோக் கினளே மாஅ யோளே.

எ - து. கழற்றெதிர்மறை.

[கழறு எதிர்மறை - பாங்கன் இடித்துரைத்தபோது தலைவன் அதனை எதிர் மறுத்துக் கூறியது.]

சிறைக்குடியாந்தையார்.

(பி. - ம்.) 5 'விரும்பினன்ன' 6 'சாஅ', 'சாஆய'

(ப - ரை.) தோழ, மாஅயோள் - மாமையையுடைய தலைவி, கவவு கடுங்குரையள் - தழுவுவதில் விரைவுடையவள்; காமர் வனப்பினள் - விருப்பம் தரும் வனப்பையுடையவள்; குவவு மெல் முலையள் - குவிதலையுடைய மெல்லிய நெகிழினையுடையவள்; கொடி கூந்தலள் - நீட்சியையுடைய கூந்தலையுடையவள்; ஞாங்கர் - பக்கத்தில் மேயச் சென்ற, கடு சுரை நல் ஆன் - மிக்க சுரப்பையுடைய நல்ல பசுவினது, நடுங்கு தலை குழவி - நடுங்கும் தலையையுடைய கன்று, தாய் காண் விருப்பின் அன்ன - அத்தாய்ப் பசுவைக் காணவேண்டும் விருப்பத்தோடு இருந்தாற்போன்ற, சாஅய் நோக்கினள் - விருப்பத்தை வெளிப்படுத்தும் மெலிந்த பார்வையையுடையவள்; ஆதலால், யான்—, யாங்கு மறந்து அமைகு - அப்படி அவளை மறந்து அமைவேன்!

(முடிபு.) மாஅயோள், கவவுக்கடுங்குரையள்; வனப்பினள்; முலையள்; கூந்தலள்; நோக்கினள்; யான் யாங்கு மறந்தமைகு!

(கருத்து.) தலைவி மறத்தற்கரிய இயல்புடையவள்.

(வி - ரை.) கவவு - அகத்திடுதல் (தொல். உரி. 59); இங்கே தழுவுதல் (கலி. 33: 7) கடுங்குரையள் - கடுமையள்; குரை: அசை. வனப்பு - பல உறுப்புக்களிலும் காணப்படும் அழகு: 'வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்புந் திரண்ட வழிப் பெறுவதோர் அழகு.' (தொல். செய். 235, பேர்.) இயற்கைப் புணர்ச்சி யின்பம் துய்த்த நிலையினைதலின் முதலில் தலைவி தழுவிய இன்பத்தைக் கூறினன். தன் முயற்சி யின்றியே தலைவியும் பெரு விருப்பினளென்பான் தழுவுதலில் விரைவுடையாளென்று கூறினன் (குறள், 1290)

யாங்கு - எவ்வாறு. ஞாங்கர் - ஊர்ப்பக்கம். கடுஞ்சுரை யென்ற அடை கன்று ஆவின்பால் உண்ணும் விருப்பினதென்ப தைப் புலப்படுத்தியது. 'வாங்கக் கலம் நிறைக்கும்' பசுவாதலின் கடுஞ்சுரை யென்பதற்கு விரைவிற் சுரத்தலையுடைய வென்பதும் பொருந்தும்.

நடுங்குதலை யென்ற அடை கன்றின் இளமை மிகுதியை விளக்கியது.

சாஅய் நோக்கு - மெலிந்த நோக்கம்; என்றது தலைவனை எதிர் நோக்கிய பார்வையை.

ஏகாரங்கள் அசைநிலை; அமைகோ: ஓகாரம் இரக்கக் குறிப்பு; அசைநிலையுமாம்.

.'கன்று பசுவைப் பார்த்திருத்தலைப் போன்ற விருப்புடைய ளாதலினாலும், மனங்கவரும் இயல்பினளாதலினாலும் அவளை மறந்து அமைதல் அரிது' என்று தலைவன் கூறினான். ஈன்றணி மையையுடைய நடுங்கு தலைக் கன்றைத் தலைவிக்கு உவமை கூறி னான், அணிமையிலே முதன்முதற் கண்டு நெஞ்சு கலந்தவ னதலின்.

தலைவனுக்குப் பசுவையும் தலைவிக்குக் கன்றையும் உவமை கூறும் மரபு இந்நூல் 94-ஆம் செய்யுளாலும் அதன் விசேட வுரை முதலியவற்றாலும் விளங்கும்.

(மேற்.) 2. கொடியென்பது நீடலென்னும் பொருளில் வந்தது (தொல். புறத். 33, ந.)

மு. களவுக் காலத்து நிகழ்ந்த கூட்டத்து அருமையைத் தனித்துச் சுழலுதலையுடைய உள்ளத்தோடே உசாவிய விடத்துத் தலைவற்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 5, ந.)

(ஒப்பு.) 1. தலைவி தழுவுதல்: "இன்னகை யிளையோள் கவவ" (அகநா. 314: 21.)

தலைவியின் கவவுக் கடுமை: 'நம் கவவுக் கடுமை யறிந்த தலைவர்' (குறள், 1156, பரிமேல்.)

4. கடுஞ்சுரையான்: பு. வெ. 18.

6. மாயோன்: குறுந். 9: 1, ஒப்பு.

4-6. தலைவன் வரவை எதிர்பார்க்கும் நிலைவிக்குத் தாய்ப் பசுவை எதிர் பார்க்கும் கன்று: குறுந். 64: 1-4. (கஉ)

தலைவி கூற்று

[தலைவன் வரைந்து கொள்ளாமல் நெடுங்காலம் இருந்தானாக, வருந்திய தலைவி, "என் நலத்தை இழந்தும் தலைவர் வரைவாரென்

னும் கருத்தினால் இன்னும் உயிர்தாங்கி நிற்கின்றேன்" என்று கூறியது.]

கஉஉ. புனவன் றுடவைப் பொன்போற் சிறுதினை
கிளிகுறைத் துண்ட கூழை யிருவி
பெரும்பெய லுண்மையி னிலீயொலித்தாங்
கென்
உரஞ்செத்து முளெனே தோழியென்
5. நலம்புதி துண்ட புலம்பி னனே.

எ - து. வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் சொல்லியது. உறையூர் முதுகண்ணன் சாத்தன்.

(பி - ம்.) 1. 'நெடவைப்' 'சிறுதினைக்' 3-4 'ஒலித்தாங்கெண்' 'ணுரஞ்' 4. 'உள்ளேன்றோழி' 5. 'நலம்புத்துண்ட'

(ப - ரை.) தோழி—, புனவன் துடவை - குறவனுக்குரிய தோட்டத்தில் விளைந்த, பொன்போல் சிறுதினை - பொன்னைப் போன்ற சிறிய தினையினது கதிரை, கிளி குறைத்து உண்ட கூழை இருவி - கிளி ஒடித்து உண்ணுதலால் கூழையாகிய தாளில், பெரு பெயல் உண்மையின் - பெரிய மழை உண்டான மையால், இலை ஒலித்தாங்கு - இலை தழைத்தாற் போல, என் நலம் புதிது உண்ட புலம்பினன் - தலைவர் எனது பெண்மை நலத்தைப் புதிதுண்டமையால் உண்டாய தனிமை வருத்தத் தோடு, என் உரம் செத்தும் - எனது வலி அழிந்தும், உளென் - இன்னும் உயிரோடு இருக்கின்றேன்.

(முடிபு.) தோழி, புலம்பினன் உரஞ்செத்தும் உளென்.

(கருத்து) தலைவர் அருள் செய்வாரென்று இன்னும் உயிர் தாங்கி நிற்கின்றேன்.

(வி - ரை.) புனவன் - தினைப்புனத்தையுடைய குறவன் பொன் போற் சிறுதினை யென்றது செந்தினையை. குறைத்து உண்ட வென்பதனை உண்டு குறைத்தவென்று விகுதி பிரித்துக் கூட்டினும் பொருந்தும்.

சிறு பெயலால் அத்தினை இலைவிடாதாதலின் பெரும் பெய லைக் கூறினள். உரம் - மனவலி, கன்னித் தன்மையுமாம். புதி துண்ணல் - பிறரால் உண்ணப் படாது புதிதாக உள்ள பொருளை முதன்முறை உண்டல். நலம் புதிதுண்டலென்பதற்கு நலத் தின் புதுமையை நுகரலென்று உரை கூறுவர் நச்சினார்க்கினியர், கலி

83 :21. புலம்பு - நலமிழந்த தனிமை. உண்டற்குரியதல்லாத நலத்தை உண்டதாகக் கூறுதல் ஒரு மரபு. புலம்பினுல் உரஞ் செத்தும் உளென் என்று கூட்டிப் பொருளுரைப்பினும் அமையும்.

கிளி உண்டமையாற் கதிரிழந்த தினைத்தாள் பெரும்பெய லுண்மையால் உலர்ந்து வாடாமல் இலை விட்டதுபோல, தலைவர் உண்டமையால் நலனிழந்த யான் அவரது தண்ணளியை நினைந்து உயிர் வைத்துள்ளேனென்று உவமையை விரித்துக் கொள்க. பெரும்பெயல் நீட்டிப்பின் தினை மீண்டும் கதிர் விடுதல்போலத் தலைவன் தண்ணளி மிக்கு வரைந்து கொள்வா னேல் என் நலனை மீண்டும் பெறுவேனென்பதும் இவ்வுவமையாற் பெறப்படும்.

குறிஞ்சி நிலத்தினளாகிய தலைவி தினைப்புனங் காத்துக் கிளி யோப்பிய பழக்கத்தினுல் தான் அறிந்த உவமையையே கூறினுள்.

உளெனே:ஏகாரம் இரக்கக் குறிப்பு. புலம்பினனே : ஏகாரம் அசைநிலை.

(ஒப்பு.) மு. குறுந். 105 : 1.

2. கூழை ; குறுந். 176 : 9, 227 : 3.

1-2. தினையைக் கிளி உண்ணுதல் : குறுந். 360 : 5 - 6.

3. பெரும் பெயல் : குறுந். : 13:2.

4. தலைவி உரனழிதல் : குறுந். 140 : 3-4.

உளெனே : குறுந். 125 : 2, ஒப்பு.

5. தலைவன் தலைவியின் நலனுண்டல் : 112 : 5, 236 : 6, 384 : 3.

தலைவன் புதிதுண்டல் : "தோள் புதிதுண்ட ஞான்றை" (அகநா. 320 : 13.); "பூமாண் கருங்குழலா ருள்ளம் புதிதுண்பான்" (ஆதியுலா, 58.) தலைவன் நலம் புதிதுண்டல்: "பூவினன்ன நலம்புதி துண்டு" (நற். 15 : 4.); "நலம்புதி துண்டுள்ளா நாணிலி" (கலி. 83 : 21.); "பொன்மலை மார்பனென் புதுநலனுண் டிகழ்வானே" (தே. திருநா. திருப்பழனம்.)(கஉக)

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருட்குப் பிரிந்த காலத்தில் வருந்திய தலைவியைத் தோழி ஆற்றுவிப்ப அத்தோழியை நோக்கி, "தலை வன் பிரியாமல் இருப்பின் அவனது நட்பு நன்று ; பிரிவுண்மை யின் வருத்தம் உண்டாகின்றது" என்று தலைவி கூறியது.]

கஉச. அம்ம வாழி தோழி நம்மொடு
பிரிவின் ரூயி னன்றுமற் றில்ல

குறும் பொறைத் தடைஇய நெடுந்தாள் வேங்கைப்
பூவுடை யலங்குசினை புலம்பத் தாக்கிக்
கல்பொரு திரங்குங் கதழ்வீ ழருவி
நிலங்கொள் பாம்பி னிழிதரும்
விலங்குமலை நாடனொடு கலந்த நட்பே.

எ - து. வரைவிடை ஆற்றுளாகிய தலைமகள் ஆற்றுவிக்கும் தோழிக்குச் சொல்லியது.

கோவேங்கைப் பெருங்கதவன்.

(பி - ம்.) 2 'நன்றுமற்றில்லை', 'நன்று மாறில்ல' 4 'பூவிடை' 5 'பொருதிலங்கும்' 'கதம் வீழருவி'

(ப - ரை.) தோழி—, அம்ம - ஒன்று கூறுவன் கேட்பாயாக: குறு பொறை தடைஇய - குறிய கற்களினிடத்தே பருத்து வளர்ந்த, நெடு தாள் வேங்கை - உயர்ந்த அடியையுடைய வேங்கை மரத்தினது, பூ உடை அலங்கு சினை - மலர்களையுடைய அசைந்த கிளைகள், புலம்ப - அம்மலர்களை நீங்கித் தனிக்கும்படி, தாக்கி - அடித்து, கல் பொருது - கற்களை அலைத்து, இரங்கும் - ஒலிக்கும், கதழ் வீழ் அருவி - விரைந்து வீழும் அருவியானது, நிலம் கொள் பாம்பின் - நிலத்தைத் தனக்கு இடமாக ஊர்ந்துகொள்ளும் பாம்பைப் போல, இழிதரும் - இறங்குதற் கிடமாகிய, விலங்கு மலை நாடனொடு - ஒன்றற் கொன்று குறுக்கிடும் மலைகளையுடைய காட்டுக்குத்தலைவனோடு, கலந்த நட்பு - மணந்ததனால் உண்டான தொடர்பு, நம்மொடு பிரிவு இன்றாயின் - தலைவனுக்கு நம்மோடு பிரிவு இல்லையாயின், நன்றுமன் - நிச்சயமாக நன்றாகும்; தில்ல - இஃது எனது விருப்பம்.

(முடிபு) தோழி, நாடனொடு கலந்த நட்பு, பிரிவின்றாயின் நன்று.

(கருத்து) தலைவன் பிரிவை நான் ஆற்றேனாயினேன்.

(வி - ரை.) தலைவன் வரைந்து கொள்ளுதற்குரிய பொருளைத் தேடப் பிரிந்தான். அப்பிரிவை யாற்றாது தலைவி வருந்தினாள். அப்பொழுது தோழி அவளை நோக்கி, "தலைவர் உன்னை மணப்பதற்கன்றோ முயல்கின்றனர்? அவர் நட்பினால் நன்மையைப் பெற்ற நீ வருந்துதல் தகாது" என்றவழித் தலைவி கூறியது இது.

வாழி: அசைநிலை. நம்மொடு என்று கூறினாள் தோழிக்கும் தனக்கும் உள்ள ஒற்றுமை பற்றி. பிரிவின்றாயின் நன்றென்று

மையின், இப்பொழுது பிரிவு உண்மையின் எனது ஆற்றுமைக் கேதுவாயிற் றென்பது பெறப்படும். குறும் பொறை - குறிய கற்கள் : மலையில் உருண்டைக் கற்களுக்கிடையே வேங்கை மரம் வளர்ந்தது. தடைஇய - பருத்த (நெடுநல். 149, ந.)

அருவியின் அருகில் வளர்ந்ததாதலின் வேங்கை பருத்தும் உயர்ந்தும் பூக்கள் மலிந்தும் விளங்கியது. அருவி தாக்குதலால் பூக்கள் உதிர்ந்தன ; அதனல் சிறை தனிமை யுற்றது. கதழ்வீழ் அருவி - கதழ்ந்து வீழும் அருவி ; இத்தொடர் 'வரிப்புனைபந்து' என்பது போல நின்றது.

குறும்பொறைகள் குறுக்கிடுங்கால் வளைந்து வளைந்து வேக மாகச் செல்லுவதால் அருவிக்குப் பாம்பு உவமையாயிற்று. ஏ அசைநிலை.

நிலங் கொள் பாம்பு என்ற உவமையடையைப் பொருளுக்கும் கூட்டி அருவி நிலப்பரப்பில் இழிதலையும் கொள்க.

அருவி நிலப் பரப்பில் இழிந்து வளந்தருவதேனும் இடையில் மலரை உதிர்த்தலும் கல்லைப் பொருதலும் பாம்பு போலத் தோன்றலுமாகிய துன்பத்திற் கேதுவான செயலைச் செய்தது போல, நாடனது நட்பு முடிவில் நன்மையையே தருவதாயினும் இடையிற் பிரிவினல் துன்பத்திற்குக் காரணமாயிற்றென்பது குறிப்பு. ஏ

(ஒப்பு.) 1. அம்ம வாழி தோழி : குறுந். 77 : 1, ஒப்பு.

2. நன்று மற்றில்ல : குறுந். 58 : 2, ஒப்பு.

3. குறும் பொறை : குறுந். 215 : 5, 333 : 4. கற்களுக்கிடையே வேங்கை வளர்ந்திருத்தல் : "அகலறை மலர்ந்த வரும்புமுதிர் வேங்கை", "கல்சேர் வேங்கை", "குறும்பொறை யயலது நெடுந்தாள் வேங்கை" (அகநா. 105 : 1, 141 : 27, 368 : 6.)

5. கல்பொரு திரங்கும் அருவி : "கல்பொரு திரங்கு மல்லற் பேரி யாற்று" (புறநா. 192 : 8.) 4-5. பூவுடையலங்கு சிறை புலம்பத் தாக்கும் அருவி : "பூவுடை யலங்குசிறை புலம்பவோர் கீண்டு....நாக நறுமல ருதிர.... இழுமென விழிதருமருவி" (முருகு. 298 - 316.)

3-5. அருவியின் அருகில் வேங்கைமரம் இருத்தல் : குறுந். 96 : 1, ஒப்பு.

5-6. அருவிக்குப் பாம்பு : "பாம்பென முடுகு நீர்" (அகநா. 339 : 3.) ; "ஓங்குகோட்டுத் தொடுத்த பாம்புபுரை யருவி" (தொல். செய். 54, பேர். மேற்.) ; "நெடுவரை மருங்கிற் பாம்பென விழிதரும், கடுவரற் கலுழி" (யா. வி. 95. மேற்- 'துணியிரும்') ; "பாம்பீன புகுவதேபோற் பாய்தரு பரவைத் தெண்ணீர்", "குண்டிகை யிருந்த நீத்தம் குவலயம் படர்ந்த பான்மை, எண்டருந் தடையால் வல்லோ னிருங்கடத் திட்ட பாந்தள்,

மண்டலத் தொருவ னீப்ப வழிக்கொளல் போன்ற தன்றே" (கந்த. ஆற்றுப். 33, இந்திரனருச். 2.) 7. விலங்குமலை நாடு: குறுந். 144: 7. 2-7. நட்பு, பிரிவின்றுயின் நன்று: குறுக். 32: 3, 57: 3. (கூசை)

தோழி கூற்று.

[தலைவன் பிரியவெண்ணியிருப்பதை யறிந்து வேறுபட்ட தலைவியை நோக்கி, "ஆடவர் மகளிர்க்கு உயிரென்று கூறிய வராகிய தலைவர் இப்பொழுது நின்னைப் பிரிந்து செல்லார்' என்று தோழி கூறி ஆற்றுவித்தது.]

கஉடு. வினையே யாடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோருந் தாமே
அழாஅ ரேழி யழுங்குவர் செலவே.

எ - து. தலைவன் பிரியுமென வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

பாலைபாடிய பெருங்கடுங்கோ.

(பி - ம்.) 4 'அழாற்றேழி'

(ப - ரை.) தோழி—,வினையே - தொழில்தான், ஆடவருக்கு உயிர் - ஆண்மக்களுக்கு உயிர் ஆகும்; வாணுதல் - ஒளிபொருந்திய நெற்றியையுடைய, மனையுறை மகளிர்க்கு - இல்லின்கண் உறையும் மகளிர்க்கு, ஆடவர் உயிர் என - கணவன்மாரே உயிர் ஆவரென்று, நமக்கு உரைத்தோரும் தாமே - நமக்கு எடுத்துக் கூறியவரும் அத்தலைவரே; அழாஅல் - அழுதலை யொழிவாயாக; செலவு அழுங்குவர் - அவர் செல்லுதலைத் தவிர்வர்.

(முடிபு) தோழி, உரைத்தோரும் தாமே; அழாஅல்; செலவு அழுங்குவர்.

(கருத்து) தலைவர் உன்னைப் பிரியாராதலின் நீ வருந்தற்க.

(வி - ரை.) தலைவன், "ஆடவர்க்கு வினை உயிர்" என்று கூற அதனால், "இவன் வினைமேற் பிரியக் கருதினன்" என்று எண்ணித் தலைமகள் வேறுபட்டாள். அதுகண்ட தோழி, "வினையே ஆடவர்க்கு உயிரென்ற தன்றி, மகளிர்க்கு ஆடவரே உயிரென்றும் அவர் கூறியுள்ளார்; ஆதலின் அவர் உடலாகிய நின்னைவிட்டுப் பிரியார்; நீ வருந்தாதே" என்று கூறி ஆற்றுவித்தாள். இது கற்புக் காலத்தது.

வினையே: ஏகாரம் பிரிநிலை. வினையே யென்பதன் ஏகாரத்தை உயிரென்பதற்கும் கூட்டி முடிக்க. உயிரே: ஏகாரம் அசைநிலை. மனையுறை மகளிர் - மனையிலிருந்து கற்பொழுக்கம் தவறாத மகளிர். உடலுள்ளளவும் முயற்சியுடன் இருத்தல் ஆடவர்க்கு இலக்கணமாதலின் அவர்க்கு வினை உயிரென்றும், கணவரைப் பிரிதலின்றி வாழ்வதே மகளிர்க்கு இலக்கணமாதலின் அவருக்கு ஆடவர் உயிரென்றும் கூறினன். நமக்கென்றது தனக்கும் தலைவிக்கும் உள்ள ஒற்றுமைபற்றி. உரைத்தோரு மென்ற உம்மை இப்பொழுது பிரிவதற்குரிய முயற்சியைச் செய்வோரும் என்று எதிரதுதழீஇயது. தாமே: ஏகாரம் தேற்றம்.

அழுங்குவர் - தவிர்வர்; 'செலவழுங்கினர் - செலவு கெடுத்தார்' (தொல். உரி. 53, இளம்.) செலவே: ஏ அசைநிலை.

(ஒப்பு.) 1. வினை ஆடவர்க்கு உயிர்: "வினை நன்றுதல் வெறுப்பக் காட்டி" (அகநா. 33: 1.); "இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர், துன்பந் துடைத்தூன்றுந் தூண்" (குறள், 615.)

2. மகளிர்க்கு ஆடவர் உயிர்: "இன்னுயி ரன்ன பிரிவருங் காதலர்" (நற். 237: 3); "ஆடவ ருயிரென வருகு போயினர்", "ஐயா நீயென தாவி யென்பது, பொய்யோ பொய்யுரை யாத புண்ணியா", "பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்புடற், குருடரு தேர்மிசை யுயிர் கொண்டுய்த்தலான்", "விழைவுறு பொருடரப் பிரிந்த வேந்தர்வந், துழையுற வுயிருற வுயிர்க்கு மாதரின்" (கம்ப. எழுச்சிப். 22, அரசியற். 9, கார் காலப். 22, 25.)

4. அழாஅல்: குறுந். 82: 2. "ஆழன் மடந்தை யழுங்குவர் செலவே" (நற். 391: 1.) (கூடு)

தலைவன் கூற்று

["நீ காம நோயுறல் தகாது" என்ற பாங்கனை நோக்கித் தலைவன், "காமம் யாவரிடத்தும் இயல்பாக உள்ளதே; ஆயினும் அது வெளிப்படற் குரியதொரு காலத்தை யுடையது" என்று கூறியது.]

கூடி: காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நுணங்கிக்
கடுத்தலுந் தணிதலு மின்றே யானை
குளகுமென் றுண்மதம் போலப்
5. பாணியு முடைத்தது காணுநர்ப் பெறினே.

எ - து. தலைமகன் பாங்கற்கு உரைத்தது.

மிளைப் பெருங் கந்தன்.

(பி - ம்.) 3 'தணித்தலும்' 4 'ருள் பதம்'

(ப - ரை,) காமம் காமம் என்ப - காமம் காமம் என்று உலகினர் அதனைக் குறை கூறுவர்; காமம் - அக்காமமானது, அணங்கும் - புதியதாகத் தோற்றும் வருத்தமும், பிணியும் அன்று - நோயும் அன்று; நுணங்கி - நுண்ணிதாகி, கடுத்தலும்-மிகுதலும், தணிதலும் - குறைதலும், இன்று - இலது; யானை—, குளகு மென்று ஆள் மதம் போல - தழை யுணவை மென்று தின்று அதனாற் கொண்ட மதத்தைப் போல, காணுநர்ப் பெறின் - கண்டு மகிழ்வாரைப் பெற்றால், அது பாணியும் உடைத்து - அக் காமம் வெளிப்படும் செவ்வியையும் உடையது.

(முடிபு) காமம் காமம் என்ப; காமம் அணங்கும் பிணியும் அன்று; கடுத்தலும் தணிதலும் இன்று; அது காணுநர்ப் பெறின் பாணியும் உடைத்து.

(கருத்து) காமம் இயல்பாகவே ஒருவரிடம் இருந்து உரிய காலத்தில் வெளிப்படுவது.

(வி - ரை.) தலைவன் ஒரு தலைவியைக் காமுற்ற னென்பதை யறிந்த பாங்கன், "பேரறிவுடைய நீ காம நோயை அடைதல் நன்றே?" என்று இடித்துரைக்க, அவனை நோக்கித் தலைவன் கூறியது இது.

என்ப - என்று உலகினர் கூறுவர். பொதுவாகச் சுட்டினும் பாங்கன் கூறியதையே தலைவன் கருதினன். அணங்கு - பிறரால் உண்டாகும் வருத்தம். பிணி - தன்பால் தோன்றும் நோய். கடுத்தல்: கடியென்னும் உரிச்சொல் ஈறு திரிந்தது; குறள், 706, பரிமேல்.

நுணங்கிக் கடுத்தலென்னும் தொடரை இரண்டு செயலாக்கி நுணங்குதலும், கடுத்தலுமென்று கொள்க. கடுத்தல் - வெம்மை யாதல்; தணிதல் - தண்மையாதல் எனலும் பொருந்தும் (குறள், 1104.)

அடங்கியிருந்த யானையின்மதம் தழையுணவை உண்ட காலத்தில வெளிப்படுவதைப்போல, ஊழின் வலியால் காணற் குரியாரைக் காணப் பெறின் இயல்பாகவே உள்ளத்துள் அடங்கியிருந்த காமம் வெளிப்படுமென்று உவமையை விரித்துக் கொள்க. இங்ஙனம் கூறியதனால், "தெய்வத்தின் ஆணை வழியே யான் தலைவியைக் கண்டேன்; அவள் எனக்குரியளாதலின் அவளைக்

கண்ட மாத்திரத்தே என்பால் இதுகாறும் தோற்றுமல் அடங்கி யிருந்த காமம் வெளிப்படும் செவ்வியை உடையதாயிற்று. ஆதலின் யான் கொண்ட காமம் பிறரால் வந்த வருத்தமன்று; என்பால் புதிதாக வந்த நோயுமன்று" என்பதைத் தலைவன் விளக்கினன்.

இங்ஙனமே தலைவியைக் கண்ட காலத்தில் காமம் உண்டாவதற்குக் குளகையுண்டபோது யானைக்கு மதம் விளைதலை உவமம் கூறிய,

"நாறுமும் மதத்தினுலே நாகத்தை யிரிக்கு நாகம்
ஆறிய சினத்த தன்றி யதிங்கத்தின் கவளங் கொண்டால்
வேறுநீர் நினைந்து காணீர் யாவர்க்கும் விடுக்க லாகா
தூறித்தே னெழுகுங் கோதை நம்பிக்கு மன்ன னென்றன்" (750.)

என்ற சிந்தாமணிச் செய்யுளும், "குளகுபோல் மதத்தை விளைப்பவள் இவளும் ஆதலால் விடுத்தலரிதென்றன்" என்ற அதன் விசேடவுரையும் இங்கே பயன் படுவன.

காமம் தலைவனிடத்தே அடங்கியிருந்து தலைவியைக் கண்ட காலத்தே வெளிப்படுமென்னும் கருத்து,

"நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னும்
தீயாண்டுப் பெற்ற ளிவள்" (குறள், 1104)

என்பதன் விசேடவுரையில் பரிமேலழகர்,

'தன் காமத்தீத் தன்னையே அவள் தந்தாளாகக் கூறினன், அவளான் அது வெளிப்படுதலின்

என்றெழுதியதனாலும் விளங்கும்.

பாணி - ஏற்ற காலம் (புறநா. 209 : 17); என்றது வெளிப்படற் குரிய காலத்தை.

காணுநர் எனப் பன்மையாற் கூறினமையின் தலைவன் தலைவி யென்னும் இருசாரார்க்கும் இங்ஙிலை பொதுவென்பது பெறப்படும்; இதனை, உதயணனும் வாசவதத்தையும் ஒருவரை யொருவர் காணுங் காலையில் அவ்விருவரிடத்தும் புதிதாகக் காமம் வெளிப்பட்டு இருவயினெத்த தென்பதைக் கூறுவதாகிய,

"இருவரு மவ்வழிப் பருகுவனர் நிகழ
... ...
... ... எடுத்த சென்னியன்
மன்னவன் முகத்தே மாதரு நோக்கி
உள்ளமு நிறையுங் தள்ளிடக் கலங்கி
வண்டுபடு கடாஅத்த வலிமுறை யொப்பன
பண்டுகடம் படாஅ பறையினுங் கனல்வன

விடற்கருந் தெருவினுள் விட்ட செவ்வியுட்
டுடக்குவரை நில்லாது தோட்டி நிமிர்ந்து
மதக்களி றிரண்டுடன் மண்டி யாஅங்
கில்வழி வந்ததம் பெருமை பீடுறத்
தொல்வழி வயத்துத் தொடர்வினை தொடர
... ...
... ... இசைந்த
அமைப்பருங் காதலும் ... ...
... ...
இருவயி னெய்த்த" (க. 32 : 79)

என்னும் இனிய அரிய பெருங்கதைப் பகுதியால் உணரலாகும்.

ஊழ்வலியினுலன்றி, வடகடலிட்ட ஒரு நுகத்தின் ஒரு துளையில் தென் கடலிட்ட ஒரு கழி கோத்தாற் போலக் (இறை. 2, உரை) காணப் பெறுதல் அருமையாதலின், (குறள், 334, பரிமேல்) பெறினென்றான்.

காணுநர்ப் பெறின் - ஆராய்வாரைப் பெறினென்பதும் ஒன்று.

(மேற்.) மு. களவுக் காலத்துத் தலைவனைப் பாங்கன் கழறல் (தொல். கற்பு. 41, இளம்.)

(ஒப்பு.) 1-2. காமம்.....அன்றே : குறுந். 204 : 1-2. 4. யானை தழை யுணவைத் தின்று மதங் கொள்ளுதல் : "புன்காற், சிறியிலை வேம்பின் பெரிய கொன்று, கடாஅஞ் செருக்கிய கடுஞ்சின முன்பிற்களிறு" (நற். 103 : 1-3.) (கஉசு)

தலைவன் கூற்று

[தலைவியைப் பால்வயத்தனுகிக் கண்டு அளவளாவிய தலைவன், "நின்னை யான் பிரியேன்" என்று கூறி, அவள் பிரிவென்ப தொன்றுண்டென்று ஓர்ந்து அஞ்சுமாறு செய்தது.]

கஉஎ. மெல்லிய லரிவைநின் னல்லகம் புலம்ப
நிற்றுறந் தமைகுவெ னுயி னெற்றுறந்
திரவலர் வாரா வைகல்
பலவா குகயான் செலவுறு தகவே.

எ - து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிவச்சம் உரைத்தது.

[பிரிவச்சம் உரைத்தது - பிரிவென்பதொன்று உண்டென்றும், அஃது அஞ்சுதற் குரியதென்றும் தோன்ற உணர்த்தியது.]

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(பி - ம்) 1 'புலம்பல்' 4 'செலாஅது தகவே'

(ப - ரை.) மெல் இயல் அரிவை - மென்மைத் தன்மையையுடைய அரிவையே, நின் நல் அகம் புலம்ப - நின் நல்ல நெஞ்சம் தனிமையால் வருந்த, நின் துறந்து - நின்னைப் பிரிந்து சென்று, அமைகுவென் ஆயின் - சென்ற இடத்தே மனம் பொருந்தி இருப்பேனாயின், யான் செலவுறு தகவு - யான் அங்ஙனம் செல்வதற்குற்ற தக்க வினையின் கண், என் துறந்து இரவலர் வாரா வைகல் பல ஆகுக - என்னை நீங்கி இரப்போர் வாராத நாட்கள் பலவாகுக!

(முடிபு) அரிவை, நின் அகம் புலம்ப நிற்றுறந்து அமைகுவெனாயின் யான் செலவுறு தகவு இரவலர் வாரா வைகல் பல வாகுக.

(கருத்து) நின்னைப் பிரியேன்; பிரியின் அறப்பயனை இழந்து வருவேன்.

(வி - ரை.) மெல்லியலரிவை யென்றதும் நல்லகமென்றதும் என் பிரிவால் துன்பத்தைத் தாங்கற் கேற்ற ஆற்றலுடையவ யல்லை யென்னும் கருத்துடையன. அரிவையென்றது இங்கே பருவங் குறித்ததன்று.

எற்றுறந்து - என்னை நெடுந்தூரத்திலே மனத்தால் துறந்து.

"ஒல்வ, கொடாஅ தொழிந்த பகலு முரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண்" (நாலடி. 169)

என்பவாதலின் ஈதலில்லா நாள் நன்னாளன்று. யான் வினை மேற் கொண்டு செல்வேனாயின் அங்ஙனம் செல்லுமிடத்தில் இரவலரைப் பெறுத துன்பத்தை யானடைகவென்பது கருத்து.

யான் செலவுறு தகவானது இரவலர் வாரா வைகல் பல வற்றின் பயனை உடையதாகுக வென்றும் பொருள் கூறுதல் பொருந்தும். செல்லலென்பது துன்பத்துக்குப் பெயராதலிற் போலச் செலவென்பதையும் துன்பத்துக்குப் பெயராகக் கொண்டு யான் துன்பத்தை அடையும்படி இரவலர் வாரா வைகல் பல எனக்கு ஆகுக வென்று பொருள் கொள்ளுதலும் ஒன்று; செலவு உறுதக - துன்பத்தை அடைய.

இரப்போரைக் காணுமலும், இரப்போர்க்கு ஈயாமலும் இருக்கும் நாள் கெட்ட நாளென்பது கருதி வஞ்சினங் கூறுவோர் இங்ஙனம் குறிப்பது மரபு;

"புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே" (புறநா. 72 : 17-8),
"ஏற்றவற் கொருபொரு ளுள்ள தின்றென்று
மாற்றல னுதவலன் வரம்பில் பல்பகல்
ஆற்றில னுழற்றுமோ ராத னெய்துமக்
கூற்றுறு நரகினுர் கூறு கொள்கையான்" (கம்ப. பள்ளியடைப். 113),
"கருந்தடங்கண் மங்கையரை நோக்குற்ற கண்ணும்
பெருந்தடந் தோள்பிணித்த கையும் - பருந்தின்
வலவாயிற் பெய்யேனேல் வந்திரந்தார் துன்பம்
கலவாது மாற்றுக வென்கை" (வீர. பொருட். 17, மேற்.)

என்பவற்றை ஓர்க.

தலைவன் இங்ஙனம் கூறியதனுல் தலைவி, "இவர் செலவுறு தற்குரிய காரியமும் உண்டு போலும்!" என்று கருதிப் பிரிவை அஞ்சுவாள்;

"இவ்வாறு இவை கேட்ட தலைமகள் 'எம்பெருமான் இன்னிற் பிரியேன், பிரியினுமாற்றே னென்கின்றனுல் பிரிவென் பதும் ஒன்று உண்டுபோலும்! கேட்ட தகைமையால் அது தங் காதலரைக் காணுதுங் கேளாதுங் கையினகன்று மெய்யினீங்குவது' எனக் கலங்கி.....மனமுருகிப் பசந்து காட்டினுள்" (இறை. 2, உரை) என்பதைப் பார்க்க.

(மேற்.) மு. தெளிவகப் படுத்தியது (தொல். களவு. 10, ந.); தீராத் தேற்றம். (இ. வி. 497.)

(ஒப்பு.) 1. மெல்லியலரிவை : குறுந். 89 : 7, ஒப்பு. (கூ)

தோழி கூற்று

[முதல்நாள் உரிய இடத்தே வந்து தலைவியைக் காணுத தலைவன் மறுநாள் கேட்கும் அணிமையில் நிற்பதை அறிந்த தோழி, "நேற்றிரவு தலைவரது வரவை எதிர்நோக்கித் துயிலாமல் இருந்தேம்; அவர் வந்திலர்" எனக் கூறியது.]

கூஅ. கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
எம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர லெனைச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே.

எ - து. (1). குறிபிழைத்த தலைமகன், பிற்றை ஞான்று இரவுக்குறி வந்துழித் தோழி, சிறைப் புறமாகக் கூறியது.

(2) இரவுக்குறி நேர்ந்ததூஉமாம்.

கொல்லன் அழிசி.

(பி ம்) 2 'ஏழினும்பர்', 'உம்பரம்'

(ப - ரை) எம் இல் அயலது - எமது வீட்டின் அயலதாகிய, ஏழில் உம்பர் - ஏழிற்குன்றத்தின் மேலுள்ள, மயிலடி இலைய - மயிலின் அடியைப் போன்ற இலையையுடைய, மாகுரல் நொச்சி - கரிய பூங்கொத்தையுடைய நொச்சியினது, அணி மிகு மெல் கொம்பு ஊழ்த்த - அழகு மிக்க மெல்லிய கொம்புகள் உதிர்த்த, மணிமருள் பூவின் பாடு - நீலமேனி போன்ற மலர்களின் ஓசையை, நனி கேட்டு - மிகக் கேட்டு, கொன் ஊர் துஞ்சினும் - பெரிய ஊரிலுள்ளார் துயின்றாலும், யாம் துஞ்சலம் - நாங்கள் துஞ்சே மாயினேம்.

(முடிபு) ஊர் துஞ்சினும், யாம் பூவின்பாடு கேட்டுத் துஞ்சலம்.

(கருத்து) நேற்றுத் தலைவரை யாம் எதிர் நோக்கி யிருந்தேம்.

(வி - ரை.) கொன் - பெருமை; அலரால் தலைவியை அஞ்சு வித்தலின் அச்சமுமாம். தலைவிக்கும் தனக்கும் உள்ள ஒற் றுமை பற்றி யாமென்றாள். ஏழில் : ஒருமலை, இது நன்னன் என் வனுக்குரியது; ஏழிலைப்பாலை யென்னும் மரமும் ஆம்; இப்பொருள் கொள்ளுங்கால் உம்பரென்பதற்கு அப்பாலென்று கொள்க.

தலைவன் கேட்கும் அணிமையில் இருப்பதை அறிந்த தோழி, "நேற்றிரவு நாம் துயிலாமல் தலைவரது வரவை எதிர்நோக்கி இருந்தேம். ஊரினர் யாவரும் துயின்றனர். வீட்டுக்கு அரு கிலுள்ள ஏழிற் குன்றத்தின்மேல் வளர்ந்த நொச்சியின் மலர் உதிரும் ஓசையும் எம் காதில் விழுந்தது. தலைவர் வந்தால் நாம் நன்கு அறிந்திருப்பேம். அவர் வந்திலர்" என்று கூறியது. மருள் : உவமவுருபு : கலி. 14 : 1. திருச்சிற். நள்ளிரவில் நொச்சியினது மலர்கள் உதிரும்; "நொச்சிப் பூவுதிர் நள்ளிரு ணடுநாள்." (கல். 2: 18,) ஏகாரங்கள் அசைநிலைகள்.

இரண்டாவது கருத்து : "இராக் காலத்தில் யாம் துயிலேம்" என்றமையால் அப்பொழுது வரின் தலைவியைக் கண்டு அளவளா வலாமென்று குறிப்பித்தாள்.

(மேற்.) 1. இடைச்சொல் பெயரைப் பின்னே அடுத்து வந்தது (தொல். இடை. 3, இளம். சே. கல், தெய்வச், ந.); கொன்னென்னும் இடைச்சொல் பெருமை யென்னும் பொருளில் வந்தது (தொல். இடை. 6,

இளம், சே, கல், தெய்வச் ந; இ. வி. 265.); 'இடைச் சொற்களிலும் விசேடித்து நிற்றற்கு மூரியன சிலவுள' (தொல். எச்ச. 59-60, ந.) இடைச் சொல் பெயரின் அகத்துறுப்பாய் மூன்னே வந்தது (நன். 419, மயிலை, 420, சங்.); இடைச் சொற்றொடர் வந்தது (இ. வி. 54.)

மு. இரவுக்குறி பிழைத்தவிடத்துத் தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். களவு. 16, ந.); என் பிழைப்பு அன்றென்று இறைவி நோதல் (நம்பி. 160; இ. வி. 519); தூங்கிசை யகவலோசை ஆசிரியப்பா (யா. வி. 69.)

(ஒப்பு.) 1. ஊர் துஞ்சினும் தலைவி துயிலாமை: குறுந். 6: 3-4, ஒப்பு.

2. ஏழில்: நற். 391: 7; அகநா. 152: 13, 345; 7, 349: 9.

3. நொச்சியின் இலைக்கு மயிலின் அடி: "மயிலடி யிலைய மாக்குர லெச்சி", "மயிலடி யன்ன மாக்குர லெச்சியும்" (நற். 115: 5, 305: 2); "நொச்சிப்பா சிலையன்ன பைந்தாண் மஞ்ஞை" (திருவிளை. இந்திரன். 74.)

3-4. நள்ளிரவில் நொச்சிப்பூ உதிர்தல்: "நொச்சி மென்போது வீழு மிருளின்" (கூர்ம. இராமன்வனம். 62.)

3-5. நள்ளிரவில் நொச்சிப்பூ விழ்தலைக் கேட்டல்: "ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெரு அன், மாறினெ னெனக்கூறி மனங் கொள்ளுந் தானென்ப, கூடுதல் வேட்கையாற் குறிபார்த்துக் குரலெச்சிப், பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானுக" (கலி. 46: 10-13.); "வியலூர் ரெயிற்புற நொச்சியி னூழ்மலர் வீழ்தொ றெண்ணி, மயலூர் மனத்தொடு வைகினன் யான்றஞ்சை வாணன் வெற்பர், புயலூ ரிருட் கங்குல் வந்தவ மேகின்று போயினரென், றயலூர் நகைக்கு மென்னே யென்ன பாவங்கொ லாக்கினவே" (தஞ்சை. 201.); "நொச்சிப் புதுமலர் வீங்கிருள் வீழ்வன நோக்குதுமே" (தணிகை. களவு. 575.) (கூ.அ)

தோழி கூற்று

[பரத்தையர் வீட்டிற்குச் சென்ற தலைவன் தலைவியிடத்தே மீண்டு வந்த காலத்தில் தோழி, "நீ இங்கே வந்தாற் பரத்தையர் பழி கூறுவார் ஆதலின் இங்கே வாரற்க" என்று கூறியது.]

கூ.கூ. மனையுறை கோழிக் குறுங்காற் பேடை
வேலி வெருகின மாலை யுற்றெனப்
புகுமிட னறியாது தொகுபுடன் குழீஇய
பைதற் பிள்ளைக் கிளைபயிர்ந் தாஅங்
5. கின்ன திசைக்கு மம்பலொடு
வாரல் வாழிய ரையவெந் தெருவே.

எ - து. வாயில் வேண்டிப் புக்க தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.

ஒக்கூர் மாசாத்தியார்.

(பி - ம்.) 3 'புகுவிடன்' 'குழீஇப்' 4 'கிளிப்பயிர்ந்' கிளைப் பயிர்ந்'

(ப - ரை.) ஐய—, மனை உறை கோழி குறுகால் பேடை - இல்லின்கண் உறைகின்ற கோழியினது குறிய காலையுடைய பேடையானது, வேலி வெருகு இனம் - வேலிக்கு அயலில் உள்ள காட்டுப் பூனையின் கூட்டம், மாலை உற்றென - மாலைக் காலத்தில் உற்றதாக, புகும் இடன் அறியாது - அதற்கு அஞ்சிப் பாதுகாப் பாகப் புகுவதற்குரிய இடத்தை அறியாமல், தொகுபு உடன் குழீஇய - சேர்ந்து ஒருங்கே கூடும் பொருட்டு, பைதல் பிள்ளை கிளை-துன்பத்தை யுடைய குஞ்சுகளாகிய இனத்தை, பயிர்ந்தாஅ ங்கு - அழைத்துக் கூவினைப் போல, இன்னது இசைக்கும் அம்ப லொடு - இன்னதாகிப் பரத்தையராற் கூறப்படும் பழிமொழி யோடு, எம் தெரு - எம்முடைய தெருவிற்கு, வாரல் - வருதலை ஒழிவாயாக; வாழியர் - நீ வாழ்வாயாக!

(முடிபு) ஐய, அம்பலொடு எம் தெரு வாரல்; வாழியர்!

(கருத்து) எம் தெருவிற்கு வரின் பரத்தையர் பழி கூறுவர்.

(வி - ரை.) காட்டுப் பூனைகள் வேலியின்கண்ணே மறைந்து வாழ்வன வாதலின், "வேலி வெருகினம்" என்றார்; 'படப்பை வேலியும் புதலும் பற்றி விடக்கிற்கு வேற்றுயிர் கொள்ளும் வெருகு' (தொல். மரபு, 68, பேர்.)

தன்னைப் பாதுகாக்கப்பட்ட பிள்ளையை வெருகு கவருமோ வென்னும் அச்சத்தினால் கோழிப் பேடை கூவியது போலத் தம்பால் இருந்து வந்த தலைவனைத் தலைவி கவர்ந்து தன்பால் இருத்திக் கொள்வாளோ வென்னும் அச்சத்தினால் பரத்தையர் பழிமொழி கூறின ரென்று உவமையை விரித்துக் கொள்க.

அம்பல் - தலைவன் பரத்தையரோடு அளவளாவினை னென்று ஊரினர் கூறும் பழிமொழி யெனலுமாம்;

"..... .... நெருநை
ஆடினை யென்ப புனலே யலரே
மறைத்த லொல்லுமோ மகிழ்ந
புதைத்த லொல்லுமோ ஞாயிற்ற தொளியே" (ஐங். எக: 2-5.)

"இங்ஙனம் ஊரினர் நின்னைப் பற்றிக் கூறும் பழிமொழிக ளோடு இங்கே வரின் தலைவி நின்னை ஏற்றுக்கொள்ளாள்;

ஆதலின் வாரற்க" என்று தோழி கூறியதாக இப்பொருளுக் கேற்பச் செய்யுட் பொருளை முடித்துக் கொள்க.

தலைவனிடத்துப் பணிந்தொழுகும் நிலையினளாகிய தோழி 'வாரல்' என்று வாயில் மறுத்தாளாதலின் அத்துணிவுக்கு மாற்றாக 'வாழியர்' என வாழ்த்தினள்.

ஏகாரம் அசைநிலை.

(மேற்.) 1. பிள்ளை என்னும் இளமைப் பெயர் கிளியின் மேல் வருமென்பதற்குப் பேராசிரியர், "பைதற் பிள்ளைக் கிளிபயிர்ந்தாங்கு" என்ற ஓரடியைக் காட்டினர் (தொல். மரபு, 4, உரை); அவ்வடி இவ் வடியின் பாடபேதம் போலும்.

மு. *நீத்த நிழலை நிகழுமாறு படஇக் காத்த தன்மையிற் கண்ணின்று பெயர்க்குங்கால் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 9, இளம்.); 'இதனுள் அம்பலொடு வாரலெனவே, பன்னாள் நீத்தமையுங் கண்ணின்று பெயர்த்தமையுங் கூறிற்று. கோழி போலத் தாயர் மகளிரைத் தழீஇக் கொண்டா ரென்றலிற் புறம்போயும் பயமின்றெனக் காத்த தன்மை கூறிற்று (தொல். கற்பு. 9, ந.)

(ஒப்பு.) 1. மனையுறைகோழி: "மனைவாழளகு", "மனையுறை கோழி யொடு" (பெரும்பாண். 256, 299); "மனையளகு" (திருவள்ளுவ. 5.)

2. வேலி வெருகு: "ஈர்முள் வேலிப் புலவுநாறு முன்றில், எழுதியன்ன கொடிபடு வெருகின், பூவை யன்ன பொங்குமயிர்ப் பிள்ளை" (அகநா. 297 : 12-4.)

1-2. வெருகு மாலைக் காலத்திற் கோழியைக் கவர்தல்: "குவியிடை வெருகின் பைங்க ணேற்றை, ஊனைசைப் பிணவி னுயங்குபசி களைஇயர், தளிர்புரை கொடிற்றிற் செறிமயி ரெருத்திற், கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ வன்ன, நெற்றிச் சேவ லற்றம் பார்க்கும், புல்லென் மாலையும்" (அகநா. 367 : 8-12.)

4. பிள்ளை: குறுங் 46 : 5, 92 ; 4.

1-4. வெருகினை யஞ்சி, கோழிப் பேடை ஒலித்தல்; "ஊர்முது வேலிப் பார்நடை வெருகின், இருட்பகை வெரீஇய நாகிளம் பேடை, உயிர் நடுக் குற்றுப் புலாவிட் டரற்ற" (புறநா. 326 : 1-3.) (கசு)

தலைவி கூற்று

[தலைவன் பொருள்வயிற் பிரிந்த காலத்தில் அவனுடைய பிரிவினால் துன்புற்ற தலைவியை நோக்கி, "நீ ஆற்றாமல் இருக் கின்றாய்" என்று தோழி இரங்கினளாக, "இவ்வூர் இப்பொழுது

---

*பரத்தையிற் பிரிந்து தலைவியைக்கைவிட்ட தலைவனைத் தானெழுகும் இல்லறத்தே படுத்தல் வேண்டிப் புறத்தொழுக்கிற் பயனின்மை கூறிக்காத்த தன்மையினாலே கண்ணோட்ட மின்றி நீக்குதல் (ந.)

யான் படுந்துன்பத்தை எங்ஙனம் அறிந்தது?" என்று முன்னிலைப் புறமொழியாகத் தலைவி கூறியது.]

கசo. வேதினை வெரிநி னேதி முதுபோத்
தாறுசென் மாக்கள் புட்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதல ருரனழிந்
தீங்கியான் ருங்கிய வெவ்வம்
5 யாங்கறிந் தன்றிவ் வழுங்க லூரே.

எ - து. பொருள்வயிற் பிரிந்தவிடத்து, நீ ஆற்றுகின்றிலை யென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

அள்ளூர் நன்முல்லை.

(பி -ம்.) 2 'புட்கொளப்போதும்' 4 'யானழுங்கிய' 5 ஆங்கறிந்'

(ப - ரை.) காதலர் - தலைவர், வேதினம் வெரிநின் - கருக்கரி வாளைப் போன்ற முதுகையுடைய, ஓதிமுது போத்து - முதிய ஆண் ஓந்தியானது, ஆறு செல் மாக்கள் - வழிச்செல்லும் மனிதர் கள், புள் கொள பொருந்தும் - நிமித்தமாகக் கொள்ளும்படி தங்குகின்ற, சுரன் சென்றனர் - பாலைநிலத்திற் சென்றனர், உரன் அழிந்து - வலிமை யழிந்து, ஈங்கு யான் தாங்கிய எவ்வம் - அவர் பிரிந்த பிறகு இங்கே இருந்து யான் பொறுத்துக் கொண் டுள்ள துன்பத்தை, இ அழுங்கல் ஊர் - இரங்குதலையுடைய இவ்வூர், யாங்கு அறிந்தன்று - எவ்வாறு அறிந்தது?

(முடிபு) காதலர் சுரன் சென்றனர்; இவ்வூர் யான் தாங்கிய எவ்வம் யாங்கு அறிந்தன்று.

(கருத்து) தலைவர் பிரியுங்காலத்து அவரைச் செல்லாதவாறு செய்யாமல் இப்பொழுது என்னை, "நீ ஆற்றுகின்றிலை" என்று கூறிப் பயனில்லை.

(வி - ரை) ஓந்தியும் நன்னிமித்தம் பார்த்தற்குரியதென்பது "நாவிசிச் சிலி யோந்தி தான்.....வலமாயின் வழிப்பயணமாக நன்றும்" (அறப்பளீசுர சதகம்) என்பதனாற் பெறப்படும். புள் - நிமித்தம்; உரன் - மனவலியும், உடல்வலியும். ஊரென்றது தோழியை. தலைவர் பிரிந்த காலத்தில் அவரைச் செல்லாமற் காத்தலின்றி அவர் பிரிவுக்கு உடம்பட்டிருந்து, இப்பொழுது தன் எவ்வத்தை ஆற்றியிருக்க வேண்டு மென்னும் குறிப்புப்பட உரைத்த தோழியின்பாற் சினங்கொண்டவளாதலின் அவளை வேறு படுத்து 'ஊர்' என்றாள் (குறள், 1129, பரிமேல்.)

யாங்கு - எவ்வாறு (புறநா, 191 : 2); யாரிடத் தென்றலும் ஒன்று. அழுங்கலூரென்றது காதலர் சென்ற பிறகு அழுங்குவதாற் பயனில்லையென்னும் நினைவிற்று.

(மேற்.) 1. ஓந்தி யென்பது ஓதியென இடைக்குறைந்து வந்தது (தொல். எச்ச. 57, சே, ந; யா. வி. 95; நன். 155, மயிலை, 156, சங்.; இ. வி. 58.); ஓதி யென்றது குறிப்பாற் பொருளை விளக்குஞ் சொல் (இ. வி. 170.)

மு. கற்புக் காலத்தும் அலரெழுந்ததென்று கூறுதல் தலைவிக்கு உண்டு. (தொல். கற்பு. 19, இளம், 21, ந.)

[குறிப்பு. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஊரென்பதற்கு ஊரினரென்றே பொருள் கொண்டனரென்று தெரிகிறது.]

(ஒப்பு.) 1. ஓதி முது போத்து : "கானம் வெம்பிய வறங்கூர் கடத்திடை, வேனி லோதி முதுபோத்து" (நற். 186 : 4-5.)

5. யாங்கறிந்தன்று : குறுத். 209 : 6 ; நற். 29 : 6. அழுங்கலூர் : குறுந். 12 : 6, ஒப்பு ; 276 : 8, 385 : 7 : கலி. 23 : 5 ; அகநா. 70 : 17. (கசo)

தலைவி கூற்று

[இராக்காலத்தே வந்து ஒழுகா நின்ற தலைவன் கேட்கும் அண்மையனாக, அவன் வரும் வழியினது ஏதத்தை அஞ்சிய தலைவி தோழியை நோக்கி 'நீ தலைவரிடம், இனி இரவில் வாரற்க: எம் தாய் எம்மைத் தினைப்புனங்காக்கும்படி கூறியுள்ளாள் ; ஆதலின் அங்கே வருக வென்று உணர்த்தின் என்ன குற்றம் உளதாகும் ?' என்று கூறியது.]

கசக. வளைவாய்ச் சிறுகிளி விளைதினைக் கடீஇயர்
செல்கென் றேளே யன்னை யெனநீ
சொல்லி னெவனே தோழி கொல்லை
நெடுங்கை வன்மான் கடும்பகை யுழந்த
5. குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை
பைங்கட் செந்நாய் படுபதம் பார்க்கும்
ஆரிரு ணடுநாள் வருதி
சாரலை வாரலோ வெனவே.

எ - து. இற்செறிக்கப்பட்டுழி இரவுக்குறி வந்தொழுகுந் தலைமகற்கு வரும் ஏதம் அஞ்சிப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டான் அது[வு] மறுத்துச் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

[அது - அவ்விரவுக்குறி. அதுவும் என்ற உம்மை மிகையென்று தோற்றுகின்றது.]

மதுரைப் பெருங் கொல்லன்.

(பி - ம்.) 1 'வினை திணை கடியாச்', 'விழைதினை கடியச்.' 2 'செல்கின்றேளே' 'அன்னை சேணெனச்' 3 'னெவனுந்' 5 'கொலைவலேற்றை' 6 'படுமதம்' 8 'ணுடநீ வாரலோ'

(ப - ரை.) தோழி—, சாரல் நாட - மலைப்பக்கத்தை யுடைய நாட, கொல்லை - கொல்லையிலுள்ள, நெடு கைவல் மான் - நெடிய கையையுடைய யானையினது, கடுபகை உழந்த - கடிய பகையி னால் வருந்திய, குறு கை இரு புலி கோள் வல் ஏற்றை - குறிய கையையுடைய கொல்லுதல் வல்ல பெரிய ஆண்புலியானது, பசு கட் செநாய் - பசிய கண்ணையுடைய செந்நாய், படுபதம் பார்க்கும் - அகப்படுகின்ற செவ்வியைப் பார்த்திருக்கும், அரு இருள் நடு நாள் வருதி - வருதற்கரிய இருளையுடைய நடுயாமத்தில் வருகின் றாய்; வாரல் என - அங்ஙனம் வருதலை ஒழிவாயாக எனவும், வளைவாய் சிறுகிளி - வளைந்த அலகையுடைய சிறு கிளிகளை, வினைதினை கடீஇயர் - விளைந்த தினையிடத்துப் படாமற் கடியும் பொருட்டு, அன்னை - நம் தாய், செல்க என்றாள் - செல்வீராக என்றாள், என நீ சொல்லின் எவன் - எனவும் நீ தலைவனுக்குக் கூறின் வரும் குற்றம் யாது?

(முடிபு) தோழி, 'சாரனுட, நடுநாள் வருதி; வாரல்' எனவும், 'அன்னை செல்கென்றாள்' எனவும் சொல்லின் எவன்?

(கருத்து) தலைவரை இனிப் பகற்குறிக்கண் வரும்படி நீ சொல்லவேண்டும்.

(வி - ரை.) கிளி, விளைந்த தினையின்கண் அதனை உண்ணும் பொருட்டுப் படியும் விளை தினையைக் கொய்து உண்ணும் கருவியுடைய தென்பாள், 'வளைவாய்ச்சிறுகிளி' என்றாள். கடீஇ யர் - கடியும் பொருட்டு. குறிஞ்சிநில மகளிர் தினைப்புனம் காத்தலும், அப்புனத்திற் படியும் கிளி முதலியவற்றைத் தட்டை, கவண் முதலியவற்றும் கடிதலும் இயல்பு.

என்றேளே: ஏ அசைநிலை, எவனே: ஓ அசைநிலை. கொல்லை யென்றது இங்கே புனத்தை. குறுங்கை: கையென்றது முன்கால்களை. படுபதம் கண் படுக்கும் செவ்வி யெனலும் ஆம். நீ வரும் வழி இத்தகைய ஏதமுடைய தென்பாள் புலியின் செய லைக் கூறினாள். வாரலோ: ஓகாரம் அசைநிலை. எனவே: ஏ ஈற் றசை. 'வாரலோ வெனவும் செல்கென்றாளே யெனவும் சொல் லின்' என்னும் உம்மைகள் தொக்கன.

அன்னை தினைகாக்கும் பொருட்டு எம்மைச் செல்லச் சொன்னாளென்றதன் குறிப்பு, நீ இனி ஈண்டு இரவில் வாராது ஆண்டுப் பகலில் வருகவென்பது.

(மேற்) மு. பொழுதும் ஆறும் புரைவதன்மையின் அழிவு தலை வந்த கிழத்தைக் கண் தலைவி கூறியது (தொல். களவு. 21, இளம், 20, ந-) தலைமகள் குறி விலக்குவித்தது (நம்பி. 164 ; இ. வி. 521.)

(ஒப்பு) : 1. வளைவாய்ச் சிறுகிளி : குறுந். 67 : 1-2, ஒப்பு. "வளைவாய்க் கிளை" ஐங். எழு. 13.

3. சொல்லினெவனே : ஐங். 399 : 3.

5. மு. நற். 36 : 1 ; ஐங். 216 : 1.

குறுங்கை யிரும்புலி : "குறுக்கை யிரும்புலி பொருஉ நாட" (ஐங். 266 : 2.)

புலிக் கோள்வ லேற்றை : "கோள்வல் புலியதளும்" (திணைமாலை. 22.)

கோள்வ லேற்றை : அகநா. 171 : 9.

4-5. களிறு புலியோடு பொருதல். குறுந், 88 : 2-3, ஒப்பு. (கசக.)

தலைவன் கூற்று

[தலைவியைப் பால் வயத்தனாகிக் கண்டு அளவளாவி நீங்கும் தலைவன், "என் உள்ளம் தலைவியினிடத்தே உள்ளது ; இதனை அவள் அறிந்தனளோ, இலளோ !" எனக் கூறியது.]

கசஉ. சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ விலளோ பானாட்
பள்ளி யானையி னுயிர்த்தென்
5. உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

எ - து. (1) இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்குந் தலைமகன் சொல்லியது.

(2) தோழிக்குத் தலைமகன், தன்குறை கூறியதூஉமாம்.

கபிலர்.

(பி - ம்.) 1 'தைஇயப்' 3 'தானறிந்தன்றேவிலளே' 5 'பின்னுத்', 'பின்னுழந்'

(ப - ரை) பால் நாள் பள்ளி யானையின் உயிர்த்து - நடுயாமத்துப் படுத்துத் துயிலுதலையுடைய யானையைப் போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, என் உள்ளம் - எனது நெஞ்சம், பின்னும் -

நான் தலைவியைப் பிரிந்து வந்த பின்னரும், தன் உழையது - அவளிடத்திலே இருக்கின்றது; சுனை பூ குற்று - சுனையில் மலர்ந்த மலர்களைப் பறித்து, தொடலை தைஇ - மாலையைக் கட்டி, புனம் கிளி கடியும் - தினைப் புனத்திற் கதிரை உண்ணும் பொருட்டு வீழும் கிளிகளை ஓட்டுகின்ற, பூ கண் பேதை - பூவைப் போன்ற கண்ணையுடைய பேதையாகிய அத்தலைவி, அறிந்தனளோ இலளோ - இதனை அறிந்தாளோ இல்லையோ!

(முடிபு) என் உள்ளம் தன்னுழையது; பேதை அறிந்தனளோ இலளோ!

(கருத்து) என் உள்ளம் தலைவியின் பால் உள்ளது.

(வி - ரை.) குற்று - பறித்து. தொடலை - தொடுக்கப்படும் மாலை. முதலிற் குறிப்பு நோக்கால் இன்புறுத்தினமையை நினைந்து, 'பூங்கட்பேதை' என்றான். தனது நெஞ்சம் அவளிடத்தே பொருந்தியிருப்பதை அறியாமையின், 'பேதை' என்றான்.

தான் அறிந்தனளோ இலளோ என்ற ஓகாரங்கள் ஐயப் பொருளன; "யான்கண் டனனே விலனே" (குறுந். 311 : 4.) பார்க்க. பால்நாள்-நடுஇரவு. உள்ளத்துக்கு உயிர்த்தல் முதலியன இல்லையாயினும், உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல், மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்து உரைக்கும் மரபு பற்றிக் கூறப்பட்டன. தான் தலைவியின் பிரிவாற்றுமையால் உயிர்ப்பதையே இலக்கணவகையால் நெஞ்சின் மேல் ஏற்றிக் கூறினான்.

பின்னுமென்றது தான் தலைவியோடு அளவளாவுவதற்கு முன்னும் அவளைக் கண்ட மாத்திரத்தே தன் நெஞ்சம் அவள்பாற் சென்ற தென்பதைக் குறித்து நின்றது.

'பின்னுத் தன்னுழையதுவே' என்ற பாடத்திற்குத் தலைவியின் பின்னலினிடத்ததென்று பொருள் கொள்க;

"கன்றுபுகு மாலை நின்றேர் ளெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணெடு மிடைந்த கற்பின் வாணுதல்
அத்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே"

(அகநா. 9: 20 - 26) என்பதைக் காண்க.

தோழிக்குத் தலைமகன் தன்குறை கூறியதாக இச் செய்யுளைக்

கொள்ளுங்கால், 'ஆதலின் என் உள்ளம் விரும்பியதை யான் பெறுவேனுக' என்ற எச்சத்தைப் பெய்து பொருளுரைக்க.

(மேற்.) 3 - 5. உயிர்ப்பு என்பது முன்புவிடும் அளவினன்றிச் சுவாதம் நீள விடுதல் (தொல். மெய்ப். 12, இளம்.)

(ஒப்பு.) 1. மகளிர் பூக்குறுதல் : குறுந். 144 : 1, 178 : 3.

"பூக்குற் றெய்திய" (ஐங். 23 : 2); "சுணைப்பூக் குற்றுஞ் சுள்ளி சூடியும்" (பெருங். 2. 12 : 129.)

தொடலை தைஇ : அகநா. 105 : 2.

1. மு. கற். 173 : 1.

3. பாறல் : குறுந். 94 : 3, ஒப்பு. அறிந்தன்றே விலங் : பதிற். 77 : 7, உரை.

4. பள்ளி யானையின் உயிர்த்தல் : "பள்ளி யானையினுயிரா வசைஇ" (குறுந். 359 : 4); "பள்ளி யானையின் வெய்ய வுயிரினை" (கற். 253 : 2.) பள்ளியானை : அகநா. 302 : 3.

தலைவனுக்கு யானை உவமை : அகநா. 6 : 9. (கசஉ)

தோழி கூற்று

[தலைவன் வரை பொருட்காகப் பிரிந்தவிடத்து வருந்திய தலைவியை நோக்கி, "தலைவர் நம்முடைய வருத்தத்தை யறிந்து இரங்கும் தன்மையுடையவர்; ஆதலின் அவர் விரைவில் வருவர்; நின் மேனிப் பசப்பு அவர் வரவால் நீங்கிவிடும்" என்று தோழி கூறியது.]

கசங. அழிய லாயிழை யழிபுபெரி துடையன்
பழியு மஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற் ருகலின்
நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற்
5. கடப்பாட் டாள னுடைப்பொருள் போலத்
தங்குதற் குரிய தன்றுநின்
அங்கலுழ் மேனிப் பாய பசப்பே.

எ - து. வரைவிடை வைத்துப் பிரிந்தவிடத்துத் தலைமகட்குத் தோழி கூறியது.

மதுரைக் கணக்காயன் மகன் நக்கீரன்.

(பி - ம்.) 1. 'யிழிபுபெரி', 'யன்புபெரி' 2 'பழமலை' 6 'தூங்குதற்' 7 'பாஅய'

(ப - ரை.) ஆய் இழை - தெரிந்து அணிந்த அணிகலங்களை யுடையாய், பயம் மலை நாடன் - பயனையுடைய மலைநாட்டுக்குத் தலைவன், அழிபு பெரிது உடையன் - நம்மைப்போல இரங்குதலை மிக உடையன்; பழியும் அஞ்சும் - பழியையும் அஞ்சுவான்; நில்லாமையே நிலையிற்று ஆகலின் - நில்லாது அழியும் தன்மையே இவ் வுலகத்தில் நிலைபெற்றதாதலின், நல் இசை வேட்ட - நிலை பெறுதலையுடைய நல்ல புகழை விரும்பிய, நயன் உடை நெஞ்சின் - நீதியையுடைய நெஞ்சையுடைய, கடப்பாட்டாளன் உடை பொருள் போல - ஒப்புரவாளன் பெற்ற செல்வத்தைப்போல, நின் அம் கலுழ் மேனி - நினது அழகு ஒழுகும் மேனியின்கண், பாய பசப்பு - பரவிய பசலை, தங்குதற்கு உரியதன்று - தங்குவதற்கு உரிமையுடையதன்று; ஆதலின், அழியல் - நீ வருந்தாதே.

(முடிபு.) ஆயிழை, நாடன் அழிபு பெரிதுடையன்; பழியும் அஞ்சும்; நின் மேனிப் பாய பசப்பு தங்குதற்குரியதன்று.

(கருத்து) தலைவன் நம்பால் இரங்கி விரைவில் வந்து வரைந்து கொள்வான்.

(வி - ரை.) "தலைவர் யான் ஈண்டிருந்து இரங்கும்படி பிரிந்து சென்றனர்; என்பால் இரக்கமில்லார்; ஊரினர் கூறும் பழி மொழியையும் அஞ்சினரல்லர். அவருடைய பிரிவினால் என் மேனியழகு கெடப் பசலை பரந்தது" என்று கூறி வருந்திய தலை வியை நோக்கித் தோழி சொல்லியது இது.

அழிபு - வருத்தம். 'நீ தலைவரைப் பிரிந்து இரங்குதலைப் போலவே அவரும் நின்னைப் பிரிந்தமையால் இரங்குவர்' என் பாள் அழிபு பெரிதுடையனென்றாள். ஒரு பெண்ணை வருந்தச் செய்தாரென்னும் பழியையும் அஞ்சுவாரென்பது படப் பழியு மஞ்சுமென்றாள்; "ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப் படர்ந்தது" (அகநா. 39 : 1.) என்ற விடத்து ஒழித்த தென்பதனை 'ஸ்திரீ விஸநம் பண்ணலாகாதென்று முன்னோர் கழித்தது' என்று அதன் உரையாசிரியர் உரைத்தனர். ஈண்டுப் பழியென்று கூறப்பட்டதும் அதுவே; 'ஒரு மகள்பால் நட்புப் பூண்டு நெடு நாள்வரையாதொழுகுகின்றான்' என்னும் பழியென்பதும் பொருந் தும்.

உலகத்திலுள்ள பொருள்கள் நிலையற்றவை; புகழ் ஒன்றே நிலையுடையதாதலின் அதனைக் கடப்பாட்டாளர் விரும்புவர்;

"ஒன்று வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில்" (குறள், 233)

என்னும் பொதுமறையைக் கருதுக.

கல்வி, ஆண்மை, ஈகை முதலியவற்றுல் உண்டாகும் இசை வகைகளுள் ஈகையால் வருவது சிறந்ததாதலின் அதனை நல்லிசை யென்று சிறப்பித்தாள்.

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு" (குறள், 231)

என்பதன் உரையில் பரிமேலழகர்,

'இசைபட வாழ்வதற்குக் கல்வி ஆண்மை முதலிய பிற காரணங்களும் உளவேனும், உணவின் பிண்ட முண்டி முதற்ருகலின், ஈதல் சிறந்ததென் பதற்கு ஞாபகமாக ஈதலென்ருர்'

என்றெழுதிய பகுதியினுல் இதனை உணரலாகும். நயனுடைய நெஞ்சு - ஈயுப்போது அன்போடு கொடுக்கும் நெஞ்சம்.

"முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானும்
இன்சொலினதே யறம்" (குறள், 93.) என்பது காண்க; நயன் - அன்பு.

"நல்லிசை நிலைஇய நனந்தலை யுலகத்
தில்லோர் புன்கண் டீர நல்கும்
நாடல் சான்ற நயனுடை நெஞ்சிற்
பாடுநர் புரவலன்" (பதிற். 86 : 5. 8.)

என்பதிலும் நயனுடை நெஞ்சு கூறப்பட்டிருத்தல் காண்க.

கடப்பாடு - ஒப்புரவு. (தொல். கற்பு, 10, ந.)

தாம் பெற்ற பொருளைப் பிறருக்கு ஈந்து புகழ் படைக்க விரும்புவோன் இரப்போர்க்கு முற்றும் வழங்கிவிடுதலின், அப் பொருள் அவனை நீங்குதல் போலப் பசலை நின்னை விட்டு நீங்கு மென்ருள்;

"நிலையிலா வுலகினின் றவண் புகழை
வேட்ட வனியமே போன்றும்
....
உலைவிலார் நில்லா தொருபகலுள்ளே
யுருப்பவிர் வெஞ்சுரங் கடந்தார்" (சீவக. 2107)

என்று பிறரும் இக்கருத்தை உவமையாக ஆளுதல் காண்க. 'புகழை விரும்பினவன் கையிற் பொருள் போமாறு போலேயும்' என்று இப்பாடலுக்கு உரையெழுதினர் நச்சினர்க்கினியர்.

'நின் பசப்புத் தங்குதற்குரியதன்று' என்றதனுல் போவதற் குரிய தென்பது பெறப்படும்; தலைவனைப் பிரிந்த காலத்தில் தலை விக்குப் பசலை உண்டாவதும், அவனோடு பொருந்திய காலத்தில் அது நீங்குவதும் மரபு; இதனை இந்நூல் 399 - ஆம் செய்யுளால் நன்குணரலாகும். பசலை நீங்குமென்று தோழி கூறியது, அந்

நீக்கத்திற்குக் காரணமாகிய தலைவர் வரவு உண்டாகுமென்னும் கருத்தை நினைந்தே.

அம் கலுழ் மேனி யென்றது பசலை பரவாது இயல்பான அழகுடன் நின்ற மேனியை; அழகுதான் தங்குதற்குரியது, அதனை மறைக்கும் பசலை தங்குதற்குரியதன்றென்பதை இவ்வடையினால் உணரவைத்தாள்.

பசப்பு - பசலை. ஏகாரம் அசைநிலை.

(மேற்.) மு. தோழி தலைமகளை ஆற்றுவித்தது (தொல். களவு. 24, இளம்.); தோழி இயற்பட மொழிந்து தலைவியை வற்புறுத்தியது (தொல். களவு. 23. ந)

(ஒப்பு.) 1. பி - ம். தலைவன் அன்புடையன்: குறுந். 37 : 1,213 : 1.

2. தலைவன் பழியஞ்சுதல்; குறுந். 252 : 8. பயமலை: மணி. 17 : 50; பெருங். 2. 18 : 3. பயமலை நாடன்: கலி. 43 : 6.

3-4. உலகின் நிலையாமையும் புகழின் நிலைபேறும்: "நில்லா வுலகத்து நிலைமை" (பொருந. 176, பெரும்பாண். 466); "மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" (புறநா. 165 : 1-2); "மன்னு வுலகத்து மன்னிய சீர்த்தஞ்சைவாணன்" (தஞ்சை. 21.)

புகழின் நிலை பேறு: மலைபடு. 70, அடிக்.

7. அங்கலுழ் மேனி: "அங்கலி முகம்", "அங்கலிழ் மேனி" (ஐங். 106 : 4, 174 : 4); "அங்கலுழ் மாமை" (அகநா. 41 : 15, 96 : 12); "அங்கலுழ் மேனியாய்" (சீவக. 1988.) (கசக)

செவிலித்தாய் கூற்று

[தலைவி தலைவனுடன் போனாளாக, அவளைப் பிரிந்த செவிலித் தாய், "ஆயமகளிரோடு பிரிவின்றி விளையாடும் என் மகள் இப் பொழுது பாலைநிலத்திலே பரல் தன் அடிகளை வருத்தா நிற்க எம்மைப் பிரிந்து சென்றனள்" என்று கூறி வருந்தியது.]

கசச. கழிய காவி குற்றுங் கடல
வெண்டலைப் புணரி யாடியு நன்றே
பிரிவி லாய மூரியதொன் றயர
இவ்வழிப் படுதலு மொல்லா ளவ்வழி ப்
5. பரல்பாழ் படுப்பச் சென்றனண் மாதோ
சென்மழை தவழுஞ் சென்னி
விண்ணுயர் பிறங்கல் விலங்குமலை நாட்டே

எ - து. மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

மதுரை ஆசிரியன் கோடங் கொற்றன் (பி - ம். மதுரை நூலாசிரியன், மதுரைப்பாலாசிரியன்.)

(பி - ம்.) 1 'கழியா', 'கழியிற்' 4 'இல்வழி' 5 'பரல் பாற்', 'பால்பரற்', 'பரலலாற்' 6 சேண்மழை' 7 'மலைநாடே'

(ப - ரை.) கழிய காவி குற்றும் - கழியினிடத்து மலர்ந்த காவிமலர்களைப் பறித்துப், கடல வெள்தலை புணரி ஆடியும்-கடலிலுள்ள வெள்ளிய தலையையுடைய அலையின்கண் விளையாடியும், நன்று - மிக, பிரிவு இல் ஆயம் - தன்னோடு என்றும் பிரிதலில்லாத ஆயத்தார், உரியது ஒன்று அயர - தத்தமக்கு உரிய விளையாட்டைப் புரிய, இ வழி படுதலும் ஒல்லாள் - இவ்விடத்துப் பொருந்துதலுக்கும் உடம்படாளாகி, செல் மழை தவழும் சென்னி - விரைந்து செல்லும் மேகங்கள் தவழ்கின்ற உச்சியையுடைய, விண் உயர் பிறங்கல் - வானத்தளவும் உயர்ந்த விளக்கத்தையுடைய, விலங்குமலை நாட்டு - குறுக்கிடும் மலைகளையுடைய நாட்டில், அ வழி - அப்பாலை நிலத்தில், பரல் பாழ்படுப்ப - பருக்கைக்கற்கள் தன் அடியின் அழகைச் சிதைக்கும் வண்ணம், சென்றனள் - தலைவி போயினள்.

(முடிபு) ஆயம் அயர இவ்வழிப்படுதலும் ஒல்லாள்; விலங்கு மலைநாட்டில் அவ்வழிச் சென்றனள்.

(கருத்து) தலைவி நம்மைப் பிரிந்து தலைவனுடன் சென்றனள்.

(வி - ரை.) பிரிவில் ஆயமென்றுள் அதனையும் பிரிந்தனளென்று நினைந்து. உரியதொன்று அயர - தலைவிக்கு உரியதொரு செயலைப்புரிய என்றலுமாம்.

பால் பரற்படுப்ப என்ற பாடத்திற்கு ஊழ்வினை தன்னைப் பாலை நிலத்துப் பருக்கைக்கற்களினிடையே செல்லும்படி செய்யவென்று பொருள்கொள்க. மாது, ஓ : அசை நிலைகள்.

செல் மழை - இடியையுடைய மேகமெனலும் ஒன்று. விண்ணளவும் உயர்ந்ததாகலின், விரைவாகச் செல்லும் மேகம் அம்மலையினால் தடையுற்றுத் தவழ்ந்தேறியது. பிறங்கல் - விளக்கம்; (பிறங்கு கல், பிறங்கலென விகாரம்; வழியுயர்ச்சியுமாம்' (அ : 13, உரை) என்பர் அகநானூற்றுரையாசிரியர்.

பரல் பாழ்படுப்பச் சென்றனளென்றது தலைவியின் மென்மைத் தன்மைக்கு இரங்கியவாறு.

(ஒப்பு.) 1. கழிப்பூக் குறுதல் : " கழிப்பூக் குற்றும் " (அகநா. 330 : 1.)

மகளிர் பூக்குறுதல் : குறுங். 142 : 1, ஒப்பு.

2- **மகளிர் கடலாடுதல் :** "வெண்டலைப் புணரி யாயமொ டாடி", "தொடலை யாயமொடு கடலுட னுடியும்", "திரையுழுந் தசைஇய நிரை வலை யாயம்" (அகநா. 20 : 8, 110 : 6, 190 : 1.)

வெண்டலைப் புணரி : அகநா. 20 : 8 ; புறநா. 2 : 10, 55 : 18.

5. **பரல் பாழ்படுத்தல் :** "பரற்பகை யுழுந்த நோயொடு சிவணி" (பொருந. 44.) ; "பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல், விரனுதி சிதைக்கு நிரை நிலை யதர, பரன்முரம் பாகிய பயமில் கானம்" (அகநா. 5 : 13 - 5) ; "பரல்வடுப் பொறிப்ப" (பெருங். 2 : 9 : 162)

6. **விண்ணுயர் பிறங்கல் மலை :** "வானுயர் பிறங்கன்மலை" (குறுங். 285 : 8.)

விலங்கு மலை நாடு : குறுங். 134 : 7. (கசச)

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருட்குப் பிரிந்து நீட்டிப்ப அதனால் துன்ப முற்ற தலைவி தோழியை நோக்கி, "என்துன்பத்தை அறியாமல் துயிலுகின்ற மாக்களை யுடைமையால் இச்சிறுகுடி எனக்கு உறை பதி யன்று" எனக் கூறித் தன் ஆற்றுமையைப் புலப்படுத்தி யது.]

கசடு. உறைபதி யன்றித் துறைகெழு சிறுகுடி
கானலஞ் சேர்ப்பன் கொடுமை யெற்றி
ஆனைத் துயரமொடு வருந்திப் பானட்
டுஞ்சா துறைநரொ டுசாவாத் [தே.
5. துயிற்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்

எ - து. வரைவிடை ஆற்றாது தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கொல்லனழிசி.

(பி - ம்.) 1 'சிறுகுடிக்' 4 'துறைநரொடு சார்வாத்'

(ப - ரை.) இ துறைகெழு சிறுகுடி - கடற்றுறை பொருந்திய இந்தச் சிற்றூர், கானல் அம் சேர்ப்பன் - கடற்கரைச் சோலையை யுடைய சேர்ப்பனது, கொடுமை எற்றி - கொடுமையை நினைந்து, ஆனை துயரமொடு - மிகுகின்ற துன்பத்தோடு, வருந்தி - துயரமுற்று, பானள் - நடுயாமத்தில், துஞ்சாது உறைநரொடு - துயிலாமல் தங்குவாரை, உசாவா - ஏனென்று வினவாத, துயில் கண் மாக்களொடு - துயிலுதல் பொருந்திய கண்களையுடைய அறிவற்ற

மக்களோடு, நெடு இரா உடைத்து - நெடிய இரவை உடையது; ஆதலின், உறைபதி அன்று - இது நாம் தங்கியிருத்தற்குரிய ஊர் அன்று.

(முடிபு) இச்சிறுகுடி துயிற்கண் மாக்களொடு நெட்டிரா வுடைத்து; உறைபதியன்று.

(கருத்து) தலைவர் இல்லாமையால் இவ்வூர் நமக்கு இனி உறையும்பதி அன்று.

(வி - ரை) "புல்வேய் குரம்பை, ஊரென வுணராச் சிறுமை" (அகநா. 200 : 2-3.)யுடைத்தாதலின் சிறுகுடியென்றாள். கொடுமை - பிரிவின்கண் நீட்டித்தல்; குறள், 1169, பரிமேல். எற்றி - நினைந்து (தொல். உரி. 39.) துஞ்சாதுறைநரென்று தலைவி தன் னையே பிறர் போலக் கூறினாள். குறள், 1154, பரிமேல். உறைந ரொடு - உருபு மயக்கம். உசாவாவென்றது உசாவித் தன் துயர் நீங்குதற்கு ஆவனவற்றைச் செய்யாத என்பதாம். தோழி மறை வெளிப்படுத்துக் கொண்டு மேல் அறத்தொடு நிற்றற் பொருட்டுத் தலைவி கூறுவன கேட்டற்குப் பொய்த்துயில் கொள்வாளதலின் 'துயிற்கண்மாக்கள்' என்றாள்.மாக்களென்றது இங்கே தோழியை; தன் ஆற்றுமை அறியும் வன்மையில்லாமை பற்றி இங்ஙனம் கூறினாள். கணவனைப் பிரிந்தவர்க்கு இராப்பொழுது பண்டை யினெடியதாகத் தோற்றுதல் இயல்பாதலின் நெட்டிரா வென் றாள்; "ஊழியிற் பெரிதாயூழிகை யென்னும்" (திவ். பெரிய திரு. 2. 7 : 4.) ஏகாரம் : அசை நிலை.

(மேற்.) 2. எற்று என்னும் சொல் நினைவென்னும் பொருளில் வரும் (தொல். உரி. 41. சே, தெய்வச், 39, ந; இ - வி. 282.)

மூ. தலைவனைநெடி தன் நிறத்து ஒருவரும் ஒன்று உரையாத வழித் தனது ஆற்றுமையால் தன்னைநெடும் அவனைநெடும் பட்டன சில மாற்றம் தலைவி தானே கூறுதலும் உள (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 2. தலைவன் கொடுமை : குறுந். 9 : 7, ஒப்பு; அகநா. 398 : 7 : குறள், 1169.

3. தலைவி துஞ்சாமை : குறுந். 6 : 4, ஒப்பு.

5. மாக்கள் : குறுந். 6 : 2, ஒப்பு.

நெட்டிரா : "கொடியார் கொடுமையிற் றூங்கொடிய விந்நாள், நெடிய கழியு மிரா" (குறள். 1169.)

4-5. தலைவி துஞ்சாமையும் பிறர் துயிலலும் : குறுந். 6 : 1 - 2, ஒப்பு.

(கசடு)

தோழி கூற்று

[தலைவன் சான்றோரைத் தலைவியின் தமர்பால் மணம் பேசி வர விடுப்ப, தன்தமர் மறுப்பாரோ என்று அஞ்சிய தலைவியை நோக்கி, "தலைவன் வரைவை நமர் ஏற்றுக் கொண்டனர்; நீ கவலை ஒழிவாயாக" என்று தோழி கூறியது.]

கசகூ. அம்ம வாழி தோழி நம்மூர்ப் [லோ
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
'நன்றுநன் றென்னு மாக்களோ
5. 'டின்றுபெரி தென்னு' மாங்கண தவையே.

எ - து. தலைமகன் தமர் வரைவொடு வந்து சொல்லாடுகின்றுழி வரைவு மறுப்பவோ எனக்கவன்ற தலைமகட்குத் தோழி சொல்லியது.

[தலைமகள் தமர் வரைவு மறுத்தல்: இறை. 29, உரை.]

வெள்ளிவீதியார்.

(பி - ம்.) 2 'புணர்பவ', 'புணர்ப்பவ'

(ப - ரை) தோழி—, அம்ம - கேட்பாயாக: ஆங்கணது அவை அவ்விடத்திலுள்ளதாகிய நம்மைச் சார்ந்த குழுவிலுள்ளார், தண்டுடை கையர் - தண்டைப்பிடித்த கையினரும், வெள் தலை சிதவலர் - நரையையுடைய தலைக்கண் துகிலையுடைய வருமாகிய, நன்று நன்று என்னும் மாக்களோடு - நன்று நன்று என்று கூறும் தலைவன் தமரோடு, இன்று பெரிது என்னும் - இந்நாள் நீங்கள் வரப் பெற்றமையால் பெருமையுடையதென்று முகமன் கூறுவர்; ஆதலின், நம் ஊர் - நமது ஊரின் கண், பிரிந்தோர் புணர்ப்போர் இருந்தனர் - பிரிந்தவர்களைச் சேர்த்து வைப்போர் இருந்தனர்.

(முடிபு.) அவை மாக்களோடு இன்று பெரிதென்னும்; பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர்.

(கருத்து.) தலைவன் வரைவை நமர் ஏற்றுக்கொண்டனர்.

(வி - ரை.) வாழி: அசைநிலை. பிரிந்திருக்கும் தலைவியும் தலைவனும் வரைவினுல் ஒன்றுபடுவராதலின் அதற்குடம்பட்டோரை, 'பிரிந்தோர்ப் புணர்ப்போர்' என்றுள். தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவல ரென்றது, தலைவன் விடுத்த சான்றோரது முதுமைப் பருவத்தை விளக்கி நின்றது; பெரியோரை மணம்

பேச விடுத்தல் மரபு ; "கற்றூர் மற்றுங் கட்டுரை வல்லார் கவி யென்னும், நற்றேர் வல்லார் நால்வரை விட்டாற் கவர்சென்றூர்" (சீவக. 1054.) சிதவல் - சிதறிய துணி; "சிதவற்றுணி யொடு" (மணி. 3 : 106); இங்கே தலையிலணியும் துகிலுக்கு ஆயிற்று. அவையென்றது தந்தையையும், தன்னையரையும் 'தலைமகன் பார்ப்பாரை முன்னிட்டு அருங்கலங்களோடு வரைவு வேண்டி விட்ட விடத்துத் தந்தையும், தன்னையரும் மறுத்தார்' (இறை. 28, உரை); இந்த அவை மன்றென்றும் கூறப்படும். (குறள், 1138.) கொல், ஓ, ஏ : அசை நிலைகள்.

(மேற்.) மு. தமர் வரைவு மறுப்பரோவெனக் கவன்றூட்குத் தோழி கூறியது (தொல். களவு, 23, ந.)

(ஒப்பு) 1. அம்மவாழி தோழி : குறுந். 77 : 1, ஒப்பு.

2. பிரிந்தோர்ப் புணர்ப்போர் : "பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்" (குறுந். 156 : 6.)

3. தண்டுடைக் கையர் : "தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற், றிரு மிடை மிடைந்த சிலசொற், பெருமூ தாளரேம்" (புறநா. 243 : 12 - 4.)

5. ஆங்கண் : மதுரைக். 327 ; குறிஞ்சிப். 4, 192 ; மலைபடு. 350, 438.

அவை : "மன்றங் கறங்க மணப்பறை யாயின' (நாலடி. 23.)

3 - 5. நரைமூதாளர் மன்றத் திருத்தல் : "கொழுங்குடி போகிய பெரும் பாழ் மன்றத்து, நரைமூ தாளர்" (அகநா. 377 : 6 - 7); "பாழ்படு பொதியில், நரைமூ தாளர்" (புறநா. 52 : 13-4.) (கசசு)

தலைவன் கூற்று

[தலைவன் தலைவியைப் பிரிந்து சென்ற இடத்துத் துயிலும் பொழுது அவளைக் கனவிற் கண்டு பிரிவாற்றுமற் சொல்லியது.]

கசஎ. வேனிற் பாதிரிக் கூன்மல ரன்ன
மயிரோர் பொழுகிய வழங்கஞ்சுழ் மாமை
நுண்பூண் மடந்தையைத் தந்தோய் போல
இன்றுயி லெடுப்புதி கனவே
5. எள்ளா ரம்ம துணைப் பிரிந் தோரே.

எ - து. தலைமகன் பிரிந்தவிடத்துக் கனவுக் கண்டு சொல்லியது.

[தலைவன் பிரிவின்கண் கனவிற் றலைவியைக் காண்டல்: தொல். பொருளியல், 3 ; ஐங். 324.]

கோப் பெருஞ் சோழன்.

(பி - ம்.) 2 'மயிரோ வொழுகிய', 'மயிரொடு வொழுகிய' 4 'லெழுப்புதி'

(ப - ரை) கனவே—, வேனில் பாதிரி கூன் மலர் அன்ன - வேனிற்காலத்தில் மலரும் பாதிரியினது வளைந்த மலரினது தூய்மையைப் போன்ற, மயிர் ஏர்பு ஒழுகிய அம் கலுழ் மாமை - மயிர் எழுந்து படர்ந்த அழகு ஒழுகும் மாமையையும், நுண்பூண் - நுண்ணிய தொழிலையுடைய ஆபரணத்தையும் உடைய, மடந்தையை - தலைவியை, தந்தோய் போல - கொணர்ந்து கொடுத்தாயைப்போல, இன்துயில் எடுப்புதி - இனிய துயிலினின்றும் எழுப்புகின்றாய்; துணை பிரிந்தோர் - தம் துணைவியைப் பிரிந்தோர், எள்ளார் - நின்னை இகழார்.

(முடிபு) கனவே, இன்றுயில் எடுப்புதி; துணைப் பிரிந்தோர் எள்ளார்.

(கருத்து) தலைவியைக் கொணர்ந்து காட்டிய கனவிற்கு யாது கைம்மாறு செய்வேன்!

(வி - ரை.) பாதிரி வேனிற் பருவத்தே மலர்வதென்பது, 'வேனிற்கட் பாதிரி' (நன், 300. மயிலை.) எனவும், 'வேனிற்கட் பூத்தது பாதிரி' (நன். 301, சங்.) எனவும் காட்டப்பெற்ற உதாரணங்களால் விளங்கும். பாதிரியின் மலர் வளைந்திருப்பதாதலின் கூன் மலரென்றான்; "பைங்கூற் பாதிரிப் போது" (பெரும். க. 42: 204) என்பது காண்க. மலர்: ஆகுபெயர், பாதிரிமலரிலுள்ள தூய் மயிரென்றும் வழங்கும்; "பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர்" (நற். 337: 4.) பாதிரிமலரின் தூய் தலைவியின் வயிற்றினிடத்தேயுள்ள மயிரொழுங்கிற்கு உவமை; "எய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற், றைதுமயி ரொழுகிய தோற்றம்" (பொருந. 6-7) என்று வருணிக்கப்படுதல் காண்க. நுண்பூணென்றது, "நூலாக்கலிங்கம்" (பதிற். 12: 21) என்பது போலப் பூணின் சினையாகிய சிற்பத்தின் அடை சினையோடு முதற்கு உள்ள ஒற்றுமை பற்றி முதல் மேலேற்றிக் கூறப்பட்டது. மடந்தையென்றது பருவங் குறியாது தலைவியென்னும் மாத்திரையாய் நின்றது. பிரிந்த தலைவர் தம் தலைவியரைக் கனவிற் காண்டல்,

"பிரியாப் பெருக்கத்துப் பிரச்சோ தனன்மகள்
... ...
நனவிற் போலக் காதலன் முகத்தே
கனவிற் றோன்ற" (கூ. 9: 151-7.)

என்னும் பெருங்கதைப் பகுதியாலும் விளங்கும். எடுப்புதல் -

எழுப்புதல்; "துயிலெடை நிலை" (தொல். புறத். 36.) கனவே: விளி பிரிந்தோரே: ஏ அசைநிலை.

கனவு, உண்மையில் தலைவியைத் தந்திலதாதலின் தந்தோய் போலவென்றான். தலைவியைப் பிரிந்தமையால் துன்புற்றுத் துயிலாமையே பெரும்பாலும் உடையான் அரிதிற் பெற்ற துயிலாதலின் இன்றுயிலென்றான். துயிலுங்கால் தலைவியைக் கனவிற் கண்டு பொருக்கென விழித்தவனுதலின் அங்ஙனம் துயிலினின்றும் எழுதற்குக் கனவைக் காரணமென்றான். இனிய துயிலை நீப்பதற்குக் காரணமாகி எள்ளுதற்குரிய தாயினும் அதனினும் இனிய தலைவியின் தோற்றத்தைத் தந்ததாதலின் எள்ளாரம்ம வென்றான். எள்ளாரென்றது புகழ்வாரென்றபடி. துணைப் பிரிந்தோரென்றமையின் தலைவன் தலைவி ஆகிய இருவருக்கும் இந்நிலை பொதுவென்று கொள்க.

(ஒப்பு.) 1. வேனிற் பாதிரி மலர்: "காய்சினங் திருகிய கடுங்கிறல் வேனிற், பாசிலை யொழித்த பராரைப் பாதிரி, வள்ளிதழ் மாமலர்" (பெரும்பாண் 3-5); "செங்க ணிருங்குயில், புகன்றெதி ராலும் பூமலி காலையும்... ... ...துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி, வாலித ழலரி வண்டுபட வேங்கைப், புதுமலர் தெருவுதொறு நுவலும்", "முதிரா வேனி லெதிரிய வதிரல், பராரைப் பாதிரிக் குறுமயிர் மாமலர்" (நற். 118: 9, 337: 3-4); "புன்காற் பாதிரி யரிதிறத் திரள்வீ, நுண்கொடி யதிரலொடு நுணங்கறல் வரிப்ப... ... ...குயில்குரல் கற்ற வேனிலும்", "கானப் பாதிரிக் கருந்தகட் டொள்வீ, வேன லதிரலொடு விரைஇ" (அகநா. 237: 1-5, 261: 1-2.)

பாதிரிக் கூன்மலர்: "வேனிற் பாதிரிக் கூனி மாமலர்" (அகநா. 257: 1.)

2. அங்கலுழ் மாமை: அகநா. 41: 15, 96: 12.

மயிரேர்பு ஒழுகிய மாமை: "மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத், தடங்கு மயிரொழுகிய வவ்வாய்" (மலைபடு. 31-2.)

4. தலைவன் கலுக் காண்டல்: கலி. 24: 7; "பரந்துபடு பாய னவ்வி பட்டெனை இலங்குவளை செறியா விருத்த நோக்கமொடு, நிலங்கினை நினைவினை நின்ற நிற்கண், டின்னகை யினைய மாகவு மெம்வயின், ஊடல் யாங்குவந் தன்றெனை யாழநின், கோடேந்து புருவமொடு குவவுநுத னீவி, நறுங்கதுப் புளரிய நன்ன ரமயத்து, வறுங்கை காட்டிய வாயல் கனவு" (அகநா. 39; 16-23.)

(கசஞ)

தலைவி கூற்று

[தலைவன் மீண்டு வருவதாகத் கூறிச் சென்ற கார்ப் பருவம் வரவும் அவன் வாராமையால் துன்பமுற்ற தலைவியை நோக்கித்

தோழி, "இது பருவமன்று; அவர் பொய்யார்" என வற்புறுத்தவே தலைவி, "கொன்றை மரங்கள் பூத்தன; இது கார்ப் பருவந் தான்" எனக் கூறியது.]

கசஅ. செல்வச் சிறுஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய பொலஞ் செய் கிண்கிணிக்
காசி னன்ன போதீன் கொன்றை
குருந்தோ டலம்வரும் பெருந்தண் காலையும்
5. காரன் றென்றி யாயிற்
கனவோ மற்றிது வினவுவல் யானே?

எ - து. பருவங் கண்டு அழிந்த தலைமகளைத் தோழி பருவமன்றென்று வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது.

இளங்கீரந்தையார்.

(பி - ம்.) 1 'சிறுஅர்ச்' 4 'குறுந் தோ' 'டலரும்', 'டலமரும்' 5 'காரெனத் தேறுயாயின்'

(ப - ரை.) செல்வம் சிறுஅர் - செல்வத்தையுடைய சிறுபிள்ளைகளுடைய, சிறு அடி பொலிந்த - சிறிய அடியின் கண் விளங்கிய, தவளை வாய - தவளையின் வாயைப் போன்ற வாயையுடைய, பொலம் செய் கிண்கிணி காசின் அன்ன - பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணிக் காசைப் போன்ற, போது ஈன் கொன்றை - பேரரும்பை வெளிப்படுத்தும் கொன்றை மரம், குருந்தோடு - குருந்த மரத்தோடு, அலம் வரும் - சுழலும், பெருதண் காலையும் - மிக்க தண்மையையுடைய பருவத்தையும், கார் அன்று என்றி ஆயின் - கார்காலமன்றென்று நீ கூறுவாயாயின், இது கனவோ - இங்ஙனம் தோற்றுவது கனவோ? யான் வினவுவல் - யான் கேட்பேன்; கூறுவாயாக.

(முடிபு) கொன்றை அலம் வரும் காலையும் காரன்றென்றியாயின் கனவோ? யான் வினவுவல்.

(கருத்து) தலைவர் இக்கார் காலத்தும் மீண்டு வந்திலர்.

(வி - ரை.) பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணி யென்னும் ஆபரணத்தை யணியும் பொருள் மிகுதியை யுடையராதலின் 'செல்வச் சிறுஅர்' என்றுள். பொலிந்த கிண்கிணி, வாய கிண்கிணியென இயையும். கிண்கிணி பொன்னாற் செய்யப்படுதலின் 'பொலஞ் செய் கிண்கிணி' என்றுள். கிண்கிணி கொன்றைப்

போதிற்கு உவமை; போது - மலரும் பருவத்தரும்பு. கொன்றை யும் குருந்தும் கார்காலத்தே மலர்வன; "குருந்தலே வான்படலே சூடிச் சுரும்பார்ப்ப, ஆயன் புகுதரும் போழ்திஞன்" (ஐங். எழு. 28.) என்பது காண்க. காற்றடித்தலால் கொன்றை குருந்தோடு அலம் வந்தது; அலமருதல் அலம் வருதலெனவும் வழங்கும்; "வெறியோ டலம்வரும் யாய்" (ஐங். ஐம். 20); "அலம் வருஞ் சுடருடுக்களு மமரரும் பிறரும், வலம் வரும்படி யிருப்பது கயிலே மால் வரையே" (கந்த. திருக்கைலாசப். 12.) காலேயும்: உம்மை உயர்வு சிறப்பு. என்றி - என்கின்ருய்; "இன்றை யளவைச் சென்றைக் கென்றி" (குறுந். 383: 3) என்று பின்னும் வருதல் காண்க. கனவோ: ஓகாரம் வினு. மற்று, ஏ: அசைநிலேகள்.

(மேற்.) மு. இகுளே வம்பென்பதைத் தலேவி மறுத்தது (நம்பி. 170.)

(ஒப்பு.) 2. பொலஞ்செய் கிண்கிணி: கலி. 96: 17.

தவனேவாய்க் கிண்கிணி: "தேரைவாய்க் கிண்கிணி" (கலி. 86: 9); (பெருங். 1. 46: 246, 53: 166; 3. 9: 167; 5. 9: 90.); (சீவக. 243, 24 81, 3126.)

1-2. சீறடிக் கிண்கிணி: "கிண்கிணி கலேந்தகா லொண்கழ லொட்டு" (புறநா. 77: 1.)

சிறுர் காலில் கிண்கிணி யணிதல்: "அரிபெய் கிண்கிணி யார்ப்பத் தெருவிற், றேர்நடை பயிற்றுந் தேமொழிப் புதல்வன்", "பெருஞ் செங்கிண்கிணிப் பாலார் துவர்வாய்ப் பைம்பூட் புதல்வன்" (நற். 250: 2-3, 269: 1-2); "அரிபொலி கிண்கிணி யார்ப் போவா தடிதட்ப... ... ... போல வருமென்னுயிர்", "காலவை, சுடுபொன் வளேஇய வீரமை சுற்றொடு, பொடியழற் புறந்தந்த செய்வுறு கிண்கிணி" (கலி. அக: 6-10, 85: 1-2.)

2-3. கொன்றை மலருக்குப் பொன்: "நன்னெடுங் காந்தட் போகி னறை விரி கடுக்கை மென்பூத், துன்னிய கோபத் தோடுந் தோன்றிய தோற்றந் தும்பி, இன்னிசை முரல்வ நோக்கி யிருநில மலர்க்கை யேந்திப், பொன் னெடுங் காசை யீட்டிக் கொடுப்பதே போன்ற தன்றே" (கம்ப. கார்காலப். 31.)

4 - 5. குருந்து கார்காலத்தில் மலர்தல்: "குரவுந் தளவுங் குருந்துங் கோடலும் அரவுகொண் டரும்ப.....கார்வளம் பழுனிக் கவினிய கானத்து" (பெருங். 1. 49: 98-101.); "குருந்தோடு முல்லே குலேத்தன காண்" (திணைமா. 112); கைந்நிலே, 25, 29. கொன்றையும் குருந்தும்: "குருந்துங் கொன்றையும் வருந்த வணங்கி", "கொன்றையும் குருந்தும்" (பெருங். 1. 51: 42. 2. 12: 18-9); "கொன்ருய் குருந்தே கொடிமுல்லாய் வாடினீர்" (திணைமா. 81.) 3-5. கொன்றை கார்காலத்து மலர்தல்: குறுந். 21: 3-4, ஒப்பு. (கசஅ)

தலைவி கூற்று

[தோழி தலைவனுடன் போகவேண்டுமென்று கூறத் தலைவி அவனுடன் செல்லுதலால் நாண் அகலுமென்று இரங்கிக் கூறியது.]

கசகூ. அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னேங்குமணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீய்ந்துக் காஅங்குத்
5. தாங்கு மளவைத் தாங்கிக்
காம நெரிதரக் கைகந்நில் லாதே.

எ - து. உடன்போக்கு உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

வெள்ளி வீதியார் (டி - ம். வெள்ளி வீதி.)

(பி - ம்.) 2. 'சனி நீடமர்ந்தன்று,' 'நனி நீட்டமர்ந்தன்று 3 'சிறு சிறைத்' 4 'வீழ்ந்துக்'

(ப - ரை.) தோழி—, நாண் - நாணம், நம்மொடு நனி நீடு உழந்தன்று-நம்மோடு மிக நெடுங்காலம் உடனிருந்து வருந்தியது; இனி - இனிமேல், வான் பூ கரும்பின் - வெள்ளிய பூவையுடைய கரும்பினது, ஓங்கு மணல் சிறு சிறை - உயர்ந்த மணலையுடைய சிறிய கரை, தீம்புனல் நெரிதர-இனிய நீர் நெருங்கி அடித்தலால், வீய்ந்து - அழிந்து, உக்காங்கு - வீழ்ந்தாற் போல, தாங்கும் அளவை தாங்கி - தடுக்கும் வரையில் தடுத்து, காமம் நெரிதர - காமம் மேன்மேலும் நெருக்க, கை நில்லாது - என்பால் நில்லாது, போய்விடும்; அளிது - அஃது இரங்கத் தக்கது.

(முடிபு) நாண் நனி நீடுழந்தன்று; கைந்நில்லாது; அளிது.

(கருத்து) யான் தலைவனுடன் செல்லுதலால் நாணழியும்.

(வி - ரை.) அளிது - இரங்கத்தக்கது; "அளிதோ தானே பாரியது பறம்பே" (புறநா. 109: 1.) நாண் நீடுழந்தன் றென்றது, தலைவியோடு உடன் வளர்ந்து அணியாய் நின்று பிரியாதிருந்தமை பற்றி: 'நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாகவே உள தொரு தன்மை' (இறை. 2, உரை.) மன் கழிவுப் பொருளை உணர்த்திற்று. கரும்பின் பூ வெண்மையுடையதாதலின் 'வான்பூ' என்றுள்; "ஆடுகட் கரும்பின் வெண்பூ" (புறநா. 35: 10).

நாணத்திற்குச் சிறு சிறையும் காமத்திற்குப் புனலும் உவமை; "சிறையு முண்டோ செம்புனன் மிக்குழீஇ, நிறையு முண்டோ காமங் காழ்க்கொளின்" (மணி. 5: 19-20.); "சிறையென்ப தில்லைச் செவ்வே செம்புனல் பெருகுமாயின், நிறை யென்ப தில்லைக் காம நேர்நின்று சிறக்கு மாயின்" (சூளா. கல்யாணச். 155) எனப் பிறரும் உவமை கூறுதல் காண்க. இதுவரை தம்முள் ஒத்த அளவினவாக இருந்த காமம் நாண் என்னும் இரண்டனுள் நாணத்தைக் காமம் வென்றதென்பது கருத்து. நில்லாதே: ஏகாரம் அசைநிலை.

(மேற்.) 1. இனியென்பது பின்வருங்காலம் உணர்த்தி நின்றது (தொல். எச்ச. 67, ந.)

1-2. இனியென்பது காலத்தின்மேல் முன்னென்னும் பொருள்பட வரும் (நன். 420, மயிலை.) 6. தலைவி தோழிக்கு நாணும் மடனும் நீங்கிய சொல்லைக் கூறுதலும் பொருந்தும் (தொல். களவு. 19, ந)

மு. நொதுமலர் வரைவின்கண் தலைவி நாணழிபிரங்கிக் கூறியது (தொல். களவு. 23, இளம்.);

இக்குறுந்தொகை தலைவி நாண் நீங்கினமை கூறியது (தொல். அகத். 42, ந.); இஃது உடன் போக்கு வலித்தமையின் தலைவி நாண் துறந்து கூறியது (தொல். களவு. 16. ந.); தலைமகள் உடன் செல நேர்ந்த பாவக்கிளவி (தமிழ்நெறி. 20.); தலைவி உடன்போக்கின்கண் நாணழிந்து வருந்தல் (இறை. 23); உடன்போக்கு நயப்பித்த தோழி தலைமகளுழைச் சென்றுணர்த்தத் தலைமகள் சொல்லுதல் (களவியற் காரிகை); தலைவி நாணழி பிரங்கல் (நம்பி. 182.)

(ஒப்பு.) 1-2. நாண் அளிது: "என் கண்மணிபோன், றொருநாள் பிரியா துயிரிற் பழகி யுடன்வளர்ந்த, அருநா ணளிய தழல் சேர் மெழு கொத் தழிகின்றதே" (திருச்சிற். 44.)

நாண் நனிநீடுழந்தன்று: "சேணு மெம்மொடு வந்த, நாணும் விட்டே மலர்கவிவ் வூரே" (நற். 15: 9-10); "நாணே டுடன்பிறந்த நான்" (முத். 98.)

1-6. காமமும் நாணமும்: குறுந். 112: 2, ஒப்பு.

காமத்தால் நாண் அழிதல்: "மிகுபெயல், உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல, நாணுவரை நில்லாக் காம நண்ணி", "காமங் கைம் மிகச் சிறத்தலி னாணிழந்து" (அகநா. 208: 18-20, 266: 8.)

மு. "ஏணு மிகலு மழிந்து தெவ் வேந்தரெல் லாமிறைஞ்சிக், காணுங் கழனெடு மாறன்செங் கோனின்று காக்குமண்மேற், சேணு மகலா துடனென்னெ டாடித் திரிந்துவந்த, நாணு மழியத் தகுகற்பு மேம்பட நைகின்றதே" (பாண்டிக்கோவை.) (கசுகூ)

தலைவி கூற்று

[தலைவனுக்கு இரவுக்குறி நேர்ந்த தோழி தலைவிக்கு அதனைத் தெரிவிப்ப, தலைவி, "தலைவர் மார்பு நினைத்தால் காமநோய் மிகுதற்குக் காரணமாக உள்ளது; புல்லினால் அந்நோய் நீங்குதற்குக் காரணமாக உள்ளது" என்று தோழிக்குக் கூறும் வாயிலாகத் தன் உடம்பாட்டைத் தெரிவித்தது.]

கடுஉ. சேணோன் மாட்டிய நறும்புகை ஞெகிழி
வான மீனின் வயின்வயி னிமைக்கும்
ஓங்குமலை நாடன் சாந்துபுல ரகலம்
உள்ளி னுண்ணோய் மல்கும்
புல்லின் மாய்வ தெவன்கொ லன்னாய்!

எ - து. இரவுக்குறி நேர்ந்த தோழிக்குத் தலைமகள் கூறியது. மாடலூர் கிழார்.

(பி - ம்.) 2 'வாஅன் மீனின்' 4 'உண்ணோய் மிகுமினி மல்கும்'

(ப - ரை.) அன்னாய் - தோழியே, சேணோன் - மரத்தின் உச்சியிற் பரணின் மீது இருக்கும் குறவன், மாட்டிய - கொளுத்திய, நறு புகை ஞெகிழி - நன் மணமுள்ள புகையையுடைய கொள்ளியானது, வானம் மீனின் - வானத்திலுள்ள நட்சத்திரங்களைப் போல, வயின் வயின் இமைக்கும் - இடந்தோறும் ஒளியை வீசும், ஓங்கு மலைநாடன் - ஓங்கிய மலை நாட்டையுடைய தலைவனது, சாந்து புலர் அகலம் - பூசிய சந்தனம் புலர்ந்த மார்பினை, உள்ளின் உள்நோய் மல்கும் - யான் நினைத்தால் என் உள்ளத்தின் கண் காமநோய் பெருகும்; புல்லின் - அம் மார்பை அணைந்தால், மாய்வது எவன் - அந்நோய் இல்லையாதல் என்ன ஆச்சரியம்!

(முடிபு) அன்னாய், நாடன் மார்பு உள்ளின் நோய் மல்கும்; புல்லின் மாய்வது எவன்?

(கருத்து) தலைவனைக் கண்டு அளவளாவினலன்றி என் நோய் தீர்வதில்லை.

(வி - ரை) சேணோன் - மலைமிசை யுறையும் குறவனென்பர் (மதுரைக். 204, ந.); "கலிகெழு மரமிசைக் சேணோன்" (குறிஞ்சிப். 40) என்பதனால் இவன் மரத்தின்மீது இருப்பவனென்பது விளங்கும். வேங்கை மரத்தின் மீது கட்டப்பட்ட பரணிலும்,

யானையாலும் எட்டமுடியாதபடி குன்றின் மீது கட்டப்பட்ட பரணிலும் இருப்பவனுதலின் இவன் சேணோனெனப்பட்டான். மாட்டிய - மடுத்து எரிக்கப்பட்ட (புறநா. 108 : 1.) சந்தன மரம் முதலியவை எரிக்கப்பட்டமையின் நறும்புகை ஞெகிழி யென்றுள். "நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை" (குறுந். 339 : 1); "குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி, ஆரமாதலி னம்புகை" (புறநா. 108 : 1-2); "ஈரமில் குறவ ரிதண்மிசைப் பொத்திய, ஆரத்துணியொடு காரகில் கமுமிய, கொள்ளிக் கூரெரி" (பெருங். 1. 50 : 17-19.) என்பவற்றாலும் இது விளங் கும். பன்றி (அகநா. 88 : 4-6), யானை (நற் 393. 4-5) முதலியன புனத்தை மேய வாராதபடி கொள்ளியேற்றுவது இயல்பு. ஞெகிழிக்கு வானமீன் உவமையாக இந்நூல், 357-ஆம் பாடலி லும் கூறப்பட்டுள்ளது. ஞெகிழி இரவில் ஒளி விடுவதை நோக் கித் தலைவன் வருவதை, (அகநா. 88 : 5-7) 'ஞெகிழி வயின் வயின் இமைக்கு நாடன்' என்பதனாற் குறிப்பித்தாள். தலைவன் இரவுக் குறிக்கண் சந்தனம் பூசிவருதல் இயல்பாதலின், 'சாந்து புல ரகலம்' என்றாள். கொல் : அசைநிலை.

(மேற்.) 1. சேணோனென்பது மரத்தின் உச்சியில் இராக்காலத்தில் ஆகாயத்தில் இருப்போனென்று பொருள்படும் (குறிஞ்சிப், 40, ந.) 5. தோழியைத் தலைவி அன்னையென்றது (தொல். பொருளியல், 52, ந.) மூ. தலைவன் அளி சிறந்த வழி தலைவிக்குக் கூற்று நிகழ்ந்தது. (தொல். களவு. 21, இளம், 20, ந,); தோழிமுன் தலைவிக்கு வேட்கைக் கூற்று நிகழ்ந்தது (தொல், களவு. 27, ந.); தலைமகள் இரவுக்குறி நேர்ந்து பாங்கியொடுரைத்தது (நம்பி. 158.)

(ஒப்பு.) 1. சேணோன்: "சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பு" (மதுரை 294); "கழுகிற் சேணோன்" (மலைபடு.243.); "சேணோ னிழைத்த நெடுங்காற் கழுகின்" (நற். 276 : 5); "ஏனலஞ் சிறுகிணைச் சேணோன் கையதைப், பிடிக்கை யமைந்த கனல்வாய்க் கொள்ளி", "கல்லுயர் கழுகிற் சேணோன்" (அகநா. 73 : 14-5, 392 : 14); "கலிகெழு மீமிசைச் சேணோ னுதை யும்" (சிலப். 25 : 30.)

[கு-பு. பலவிடங்களிலுமுள்ள ஆட்சியை நோக்கும்போது சேணோன் பது ஆகுபெயர் வகையாற் பரணுக்கே உரிய பெயராக வழங்கிய தென்று தோற்றுகின்றது.]

ஞெகிழி மாட்டல் : "நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டி" (மலைபடு. 446.)

சேணோன் மாட்டிய ஞெகிழி : (குறுந். 357 : 5-6.); "கானவ னெறிந்த கடுஞ்செலன் ஞெகிழி" (நற், 393 : 5.)

3. தலைவன் சந்தனம் பூசி வருதல் : குறுக். 161 : 6, 198 : 7, 321 : 1; கலி. 52 : 7, 15.

4. உள்ளின் உண்ணேய் மல்கும் : குறுக். 102 : 1.

5. எவன் கொலன்னுய் : ஐங். 21 : 4, 30 : 4, 216 : 6, 217 : 4, 219 : 4. தோழியைத் தலைவி அன்னை யென்றல் : குறுக் 33 : 1. (கடு0)

தலைவன் கூற்று.

[பொருள் தேடிவரும் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லத் துணிந்த தன் நெஞ்சை நோக்கி, "பாலைநிலம் செல்லுதற்கு அரிதென்று கருதாமல் தலைவியைப் பிரிந்து செல்லுதல் நம் இளமைக்கு முடிவாகும்" என்று கூறித் தலைவன் வருந்தியது.]

கடுக. வங்கர்க் கடந்த செங்கர்ற் பேடை
எழாலுற வீழ்ந்தெனக் கணவற் காணது
குழலிசைக் குரல குறும்பல வகவும்
குன்றுகெழு சிறுநெறி யரிய வென்னது
5 மறப்பருங் காதலி யொழிய
இறப்ப லென்பதீண் டிளமைக்கு முடிவே.

எ - து. பொருள் வலிக்கப்பட்ட நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது

தூங்கலோரி.

(பி - ம்.) 1 'வங்கர்கடந்த' 'கடிந்த', 'கிடந்த' 2 'விழந்தெனக்' 3 'குறும்பலமிகவும்' 4 'குன்றுறு' 6 'டின்மைக்கு'

(ப - ரை.) நெஞ்சே,—வங்கா கடந்த - ஆண் வங்காப் பறவை நீங்கப் பெற்றமையால் தனித்த, செ கால் பேடை - சிவந்த காலையுடைய பெண் பறவை, எழால் உற வீழ்ந்தென - பல்லூறென்னும் பறவை தம் மேல் நெருங்க இரையாகக் கொள்ளும் பொருட்டு வீழ்ந்ததாக, கணவன் காணது - தம்முடைய கணவனுகிய ஆண்பறவையைக் காணுமல், குழல் இசை குரல - வேய்ங் குழலினது இசையைப் போன்ற குரல்களே யுடையன வாய், குறு பல அகவும் - குறிய பல ஒலிகளால் அழைக்கும், குன்று கெழு சிறு நெறி - குன்றைப் பொருந்திய சிறிய வழிகள், அரிய என்னது - கடத்தற்கு அரியன வென்று எண்ணுமல், மறப்பு அரு காதலி ஒழிய - மறத்தற்கரிய நம் தலைவி இங்கே

தங்க, இறப்பல் என்பது - நான் செல்வேனென்று துணிவது, ஈண்டு - இங்கே, இளமைக்கு முடிவு - நம் இளமைப் பருவத்துக்கு முடிவாகும்.

(முடிபு) நெஞ்சே, சிறுநெறி அரிய என்னுது காதலி யொழிய இறப்பலென்பது இளமைக்கு முடிவு.

(கருத்து) இளமை பயனற்றுக் கழியுமாதலின், யான் தலைவியைப் பிரிந்து செல்லேன்.

(வி - ரை.) நெஞ்சென்னும் முன்னிலை முன்னத்தால் வருவிக்கப்பட்டது. வங்கா - ஒருவகைப் பறவை (தொல். உயிர் மயங்கு. 23, ந. மேற்); "வங்கா வரிப்பறை" (நற். 341 : 1); இது வக்கா வெனவும் வழங்கும் (குற்றாலக்குறவஞ்சி) எழால் - புள்ளாறென்னும் பறவை; "மயிலு மெழாலும் பயிலத் தோன்றும்" (தொல். மரபு. 43) என்பதனாலும், "போத்தொடு வழங்கா மயிலு மெழாலும்" என்னும் அதன் மேற்கோளாலும் விளங்கும். கணவனென்பது அஃறிணைக்கும் வரும்; "கயந்தலை மடப்பிடி, வலிக்கு வரம் பாகிய கணவ னேம்பலின்" (மலைபடு. 307 - 8), "பைங்கட் செந்நாய், மாயா வேட்டம் போகிய கணவன், பொய்யா மரபிற் பிணவுநினைந் திரங்கும்" (நற். 103 : 6-8), "நிறைச் சூல் யாமை.....மூட்டை, பார்ப்பிடனுகு மளவைப் பகுவாய்க் கணவ னேம்பும்" (அகநா. 160 : 5-8) என்பவற்றால் இது விளங்கும். குறும்பல - தன்னுடைய குறிய பல குஞ்சுகளை யெனினுமாம்; "தேம்பாய் கூந்தற் குறும்பல மொசிக்கும், வண்டுகடிந் தோம்ப றேற்றாய்" (அகநா. 257 : 8-9.) குறிஞ்சி திரிந்த பாலை நிலமாதலின், 'குன்று கெழு சிறு நெறி' என்றான். மறப்பருங் காதலி யென்றது அவள் குணங்கள், இடைச்சுரத்தே செல்வினும் நினைத்தற் குரிய வாதல் பற்றி (ஐங். 321-3, 325-7.)

இளமைக் காலத்தே தலைவியோடிருந்து இன்புற வேண்டும்; பொருள் தேடச் சென்றால் அது முற்றும் வரையில் பிரிவு நேர்வதால் அதற்குள் இளமை கழியும்; இளமை கழியுமேல் அவ்வின்பம் கைகூடாதென்று கருதியவனுதலின், இறப்பலென்பது இளமைக்கு முடிவென்றான்.

முடிவே : ஏகாரம் தேற்றம்; அசைநிலையுமாம்.

(ஒப்பு.) 2. எழால் : (பதிற். 36 : 10, அகநா. 103 :1); "சிறுபுன் புற வொடு சிற்றெழால் சீறும், நெறியரு நீள் சுரத்து" (திணைமொழி. 15)

3. குறும்பல : நற் : 261 : 4; புறநா. 159 : 3; சிலப். 10 : 39, 12 : 3.

4. குன்று கெழு சீறு நெறி : "வரைசேர் சிறுநெறி" (அகநா. 123 : 3.)

6. பொருட்பிரிவு இளமையின்பத்தைக் கெடுக்கும் : குறுந். 126 : 1, ஒப்பு; நற். 46; கலி. 18 : 7-8.

5-6. "மறப்பருங் காத லிவளீண் டொழிய, இறப்பத் துணிந்தனிர்" (கலி. 2: 9-10.) (கடுக)

தலைவி கூற்று

[தலைவன் நெடுங்காலம் வரையாது இருந்தமையின் வருந்திய தன்னை இடித்துரைத்த தோழியை நோக்கி முன்னிலைப் புறமொழியாக, "என்னை இடித்துரைப்போர் காமத்தின் தன்மையையும் தலைவர் உடனுறைவதன் இன்றியமையாமையையும் உணர்ந்திலர்" என்று தலைவி கூறியது.]

கடுஉ. யாவது மறிகிலர் கழறு வோரே
தாயின் முட்டை போலவுட் கிடந்து
சாயி னல்லது பிறிதெவ னுடைத்தோ
யாமைப் பார்ப்பி னன்ன
5 காமங் காதலர் கையற விடினே.

எ - து. வரைவு நீட்டித்தவழி (பி. ம். நீட்டியவழி) ஆற்ரு ளாகிய தலைமகள், "நீ ஆற்றுகின்றிலை" என்று நெருங்கிய தோழிக்குச் சொல்லியது.

[நெருங்கிய - இடித்துரைத்த]

கிளிமங்கலங் கிழார் (பி. ம். கிழிமங்கலங்கிழர், கழிமங்கலங் கிழார், கிள்ளிமங்கலங்கிழார்.)

(ப - ரை.) யாமை பார்ப்பின் அன்ன காமம் - தாய்முகம் நோக்கி வளருந் தன்மையையுடைய ஆமையின் பார்ப்பைப் போலத் தலைவரைப் பல்காற் காண்டலால் வளருந் தன்மையையுடைய காமமானது, காதலர் கையற விடின் - அவர் நாம் செயலறும்படி நம்மைப்பிரிந்து கைவிட்டால், தாய் இல் முட்டை போல - தாயில்லாத முட்டை கிடந்தபடியே அழிவது போல, உள் கிடந்து சாயின் அல்லது - உள்ளத்துள்ளே கிடந்து மெலியினன்றி, பிறிது எவன் உடைத்து - வேறு என்ன உறுதியை உடையது? கழறுவோர் - என்னை இடித்துரைப்போர், யாவதும் - இதனைச் சிறிதேனும், அறிகிலர் - அறிந்திலர்.

(முடிபு) காமம், காதலர் விடின், சாயினல்லது பிறி தெவனுடைத்து? கழறுவோர் யாவதும் அறிகிலர்.

(கருத்து) தலைவர் விரைவில் வரைகிலரேல் காமம் பயனற்றுக் கெடும்.

(வி ரை.) விரைவில் வரைந்து கொள்ளுதற்குரிய முயற்சியைத் தலைவன் செய்யும்படி அவனைத் தூண்டாமல் தன்னைக் கடிந்த அயன்மை பற்றித் தோழியை வேறுபடுத்திப் படர்க்கையாற் கூறினள்; முன்னிலைக்கண் உள்ள தோழிக்குப் படர்க்கையாற் குறிப்பாக உணர்த்தினமையின் இது முன்னிலைப் புறமொழி.

கழறுதல் - இடித்துரைத்தல்.

தாயில்லாத முட்டை அத்தாயால் இடப்பட்டும் அடுத்தடுத்துப் பாதுகாத்தலை யொழிந்தமையின் குஞ்சாகும் பயனைப் பெறுதது போல, தலைவனுல் உண்டான காமம் அவன் வரைந்து கொண்டு இடையீடின்றி உடனுறையும் நிலை பெறுமையின் இல்லறப் பயனைப் பெறுதென உவமையை விரித்துக் கொள்க. உட்கிடந்து சாய்தலை உவமைக்குங் கூட்டிக் கருவானது வெளிவராமல் முட்டைக்குள்ளே கிடந்து அழிதலையுங் கொள்க.

"தீம்பெரும் பொய்கை யாமை யிளம்பார்ப்புத்
தாய்முக நோக்கி வளர்ந்திசி னஅங்
கதுவே யையநின் மார்பே
அறிந்தனை யொழுகுமதி யறனுமா ரதுவே" (ஐங். 44.)

என்புழியும் யாமைப் பார்ப்பைக் காமத்துக்கு உவமை கூறியிருத்தல் காண்க. பார்ப்பின் அன்ன: இன் வேண்டாவழிச் சாரியை.

(மேற்.) 4-5. பார்ப்பென்னும் இளமைப் பெயர் தவழ்வனவற்றிற்கும் உரியது (தொல். மரபு. 26, இளம், 5, பேர்.)

மு. தலைவி முன்னிலைப் புறமொழி மொழிந்தது (இ. வி. 513.)

(ஒப்பு.) 1. கழறுவோர் காமத்தின் தன்மையை அறியார்: குறுந். 260: 1-2. 4. யாமைப் பார்ப்பு: அகநா. 160: 5-7. (கருஉ)

தலைவி கூற்று

[தலைவன் வரையாமல் நெடுங்காலம் வந்து அளவளாவுதலால் வருந்திய தலைவி தோழியை நோக்கி, "இனி அவரை வாரற்க வென்று கூறுவாயாக" என, தோழி தலைவியை, "அங்ஙனம் கூறுதற்குக் காரணம் யாது?" என வினவ, "அவர் வரும் வழியின் ஏதமறிந்து எனக்கு ஆற்றுமை உண்டாகின்றது" என்று தலைவி கூறியது]

கடுங்குன்றக் கூகை குழறினு முன்றிற்
பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்

அஞ்சும னளித்தெ னெஞ்ச மினியே
ஆரிருட் கங்கு லவர்வயிற்
5. சார னீளிடைச் செலவா னுதே.

எ - து. வரையாது நெடுங்காலம் வந்தொழுகின்றுழி, "நாம் அவரை வேறுபடுத்துதற்குக் காரணம் என்னை?" என்ற தோழிக்கு, "அவர் வரவு நமக்கு ஆற்றுமைக்குக் காரணமாம்" எனத் தலை மகள் கூறியது.

[வேறு படுத்தல் - இங்ஙனம் வருதலைத் தவிர்வாயாக வென்று கூறிப் பிரித்தல்.]

கபிலர்.

(பி - ம்.) 4 'லவர்வரிற்' 5 'சீரானீளிடைச்'

(ப - ரை.) என் நெஞ்சம்—, குன்றம் கூகை குழறினும் - குன்றிலுள்ள பேராந்தை ஒலித்தாலும், முன்றில் - முற்றத்திலுள்ள, பலவின் இரு சினை - பலாமரத்தினது பெரிய கிளையினிடத்து, கலை பாய்ந்து உகளினும் - ஆண் குரங்கு தாவித்துள்ளினாலும், அஞ்சும் - அச்சத்தை முன்பு அடையும்; மன் - அது கழிந்தது; இனி - இப்பொழுது, அரு இருள் கங்குல் - செல்லுதற்கரிய இருளையுடைய இரவில், அவர் வயின் - அவரிடத்தே, சாரல் நீள் இடை - மலைச்சாரற்கண்ணுள்ள நெடுவழியில், செலவு ஆனாது - செல்லுதலை நீங்காது; அளித்து - அஃது இரங்குதற்குரியது.

(முடிபு) என் நெஞ்சம் அஞ்சுமன்; இனி அவர்வயிற் செலவு ஆனாது; அளித்து.

(கருத்து) தலைவர் இரவில் வருதலின், ஆற்றின் ஏதம் அஞ்சி வருந்துகின்றேன்.

(வி - ரை.) குழறுதல் - பொருளற்ற ஒலியைச் செய்தல்; கூகை ஒலித்தலைக் குழறலென்றல் மரபு. தலைவர் வருங்காலத்தும் மீண்டு செல்லுங்காலத்தும் அவருக்கு ஏதேனும் இடையூறு உண்டாகுமோவென அஞ்சி அவரையே நினைந்திருத்தலின் தன் நெஞ்சத்தை அவர்வயின் நீளிடைச் செல்வதென்றாள். ஆரிருட் கங்குலென்றாள், புறத்தே செல்லுதற்குரிய காலமன்றென்பது கருதி. சாரலென்றாள், புலி முதலிய கொடிய விலங்குகள் உண்மையை நினைந்து. நீளிடையாதலும் ஆற்றுமையை மிகுவித்தற்குக் காரணமாயிற்று.

(மேற்.) 1. குன்றக் கூகை யென்பதில் அக்குச் சாரியையின் அகரம் நிற்ப ஏனைய கெட்டன (தொல். புணர். 26, ந.); உருபு தொக வந்தது (தொல். வேற்றுமை மயங். 21, சே, ந, கல்.); ஏழாம் வேற்றுமைத் தொகை (தொல். எச்ச. 17, இளம், 16, தெய்வச் : நன். 362, மயிலை, 363, சங்.)

மு. தலைமகள் ஆறுபார்த்துற்ற அச்சக்கிளவி (நம்பி. 164.)

(ஒப்பு.) 3. இனி : குறுந். 84 : 2, ஒப்பு.

1-3. கூகை குழறினுல் மகளிர் அஞ்சுதல் : "பரா அரை வேம்பின் படுசினை யிருந்த, குரா அற் கூகையு மிரா அ விசைக்கும், ஆ ஞ நோயட வருந்தி" (நற். 218 : 7-9); "வெருவர, மன்ற மரா அத்த கூகை குழறினும், நெஞ் சழிந் தரணஞ்சேரும்" (அகநா. 158 : 12-4); "மாடத் தகத்தி லாடவினைக் காவினுட், கொம்பர் மீமிசைக் கூகைவந் துலா அய், வித்தகக் கைவினைச் சத்தி யேறி, உட்குத்தக வுரைத்தலுங் கட்கின் பாவை, நெஞ்சந் துட்கென நெடு விடை நின்ற, காற்றெறி வாழையி னற்ற நடுங்கி", "இரவுக் குறிவயின், வெருவக் குழறிய விழிகட் கூகைக், கடுங்குர லறியாள் கதுமென நடுங் கினள்" (பெருங். 3. 14 : 151-6, 22 : 150-52.)

ஆண்குரங்கு பாய மகளிர் அஞ்சுதல் : "கருமுக முசுக்கலை கதுமெனத் தோன்ற, இன்னதென் றுணரா ணன்னுத னடுங்கி", "முகத்தே வந்தோர் முசுக்கலை தோன்ற, அகத்தே நடுங்கி யழற்பட வெய்துயிர்த்து" (பெருங். 2. 16 : 109-10, 19 : 167-8.)

3-5. தலைவனெடு நெஞ்சு அவன் செல்லும் வழியிற் செல்லுதல் : "சாரல், விலங்கு மலையாரா றுள்ளுதொறும், நிலம்பரந் தொழுகுமென் னிறையி னெஞ்சே" (நற். 154 : 10-12); "நன்னர் நெஞ்சம், என்னெடு நின்னெடுஞ் சூழாது கைம்மிக், கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற், குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக், கான நாடன் வரூஉம் யானைக், கயிற்றுப் புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி, மாரி வானந் தலைஇ நீர்வார், பிட்டருங் கண்ண படுகுழி யியவின், இருளிடை மதிப்புழி நோக்கியவர், தளரடி தாங்கிய சென்ற தின்றே" (அகநா. 128 : 6-15.) (கடுங)

தலைவி கூற்று

[பொருளீட்டும் பொருட்டுத் தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து, "என்னைப் பிரிந்து நெடுந்தூரத்தில் தங்கும் வன்மையை அவர் எங்ஙனம் பெற்றார்?" என்று தலைவி தோழியை நோக்கிக் கூறியது.]

கடுஞ. யாங்கறிந் தனர்கொ ரோழி பாம்பின்
உரிநிமிர்ந் தன்ன வுருப்புவி ரமைய த்தீ
திரைவேட் டெழுந்த சேவ லுள்ளிப்
பொறிமயி ரெருத்திற் குறுநடைப் பேடை

5. பொரிகாற் கள்ளி விரிகா யங்கவட்டுத்
தயங்க விருந்து புலம்பக் கூஉம்
அருஞ்சுர வைப்பிற் கானம்
பிரிந்துசே ணுறைதல் வல்லு வோரே

எ - து. பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து தலைமகள் தோழிக்கு உரைத்தது.

மதுரைச் சீத்தலைச் சாத்தன்.

(பி - ம்) 3. 'லுன்னிப்' 5 'பொரிக்காற்'

(ப - ரை) தோழி—, பாம்பின் உரி நிமிர்ந்தன்ன - பாம்பினது உரி மேலெழுந்தாற் போன்ற, உருப்பு அவிர் அமையத்து - கானல் விளங்குகின்ற நண்பகற்காலத்தில், இரை வேட்டு எழுந்த சேவல் உள்ளி - இரையை விரும்பி மேலெழுந்து பறந்து சென்ற ஆண் பறவையை நினைந்து, பொறி மயிர் எருத்தின் - புள்ளிகளையுடைய மயிர் பொருந்திய கழுத்தையும், குறுநடை - குறுக அடியிடும் நடையினையும் உடைய, பேடை - பெண்புறுவானது, பொரி கால் கள்ளி - பொரிந்த அடியை யுடைய கள்ளியினது, விரி காய் அம் கவட்டு - வெடித்த காயையுடைய அழகிய கிளையில், தயங்க இருந்து - விளங்கும்படி இருந்து, புலம்ப கூஉம் - தனிமை தோன்றும்படி கூவுகின்ற, அரு சுரம் வைப்பின் கானம் - கடத்தற் கரிய வழியையுடைய இடமாகிய பாலைநிலத்தை, பிரிந்து - கடந்து, சேண் உறைதல் வல்லுவோர் - நெடுந்தூரத்தில் தங்குதலில் வன்மையையுடைய தலைவர், யாங்கு அறிந்தனர் - அவ்வன்மையை எவ்வாறு தெரிந்து கொண்டனர்?

(முடிபு) தோழி, கானம் பிரிந்து உறைதல் வல்லுவோர் யாங்கு அறிந்தனர்?

(கருத்து) தலைவர் என்னைப் பிரிந்து எங்ஙனம் ஆற்றியிருக்கின்றனர்?

(வி - ரை.) யான் அத்தகைய வன்மையை அறிந்திலனே யென்னும் கருத்தால் அவர் எங்ஙனம் அறிந்தனரென்றாள். கானலின் தோற்றத்திற்குப் பாம்பின் சட்டை உவமை. விரிகாய் - வெடிக்கும் காய்.

அப்பாலை நிலத்தைக் கடக்கும்போது அங்குள்ள காட்சிகள் தலைவன் தலைவியரிடையே இருக்க வேண்டிய அன்பை நினைப் பூட்டுவன வாதலின் அவற்றைப் பார்த்த பின்பும் மேலே செல்லு

தற்குப் பெருவன்மை வேண்டுமென்பாள் உறைதல் வல்லுவோ ரென்றாள்.

பிரிந்த சேவலை நினைந்து பேடை கூவுதலைக்கண்டு தம்மை நினைந்து யானும் வருந்துதலைத் தலைவர் உணர்தல் கூடுமென்பது தலைவி கருத்து.

கொல், ஏ : அசைநிலைகள்.

(மேற்.) மு. தலைவன் பிரிந்துழித் தோழிகூற்றினைப் பின்னும் கேட்டற்குத் தலைவி விரும்பியது; 'இது வல்லுவோ ரென்னும் பெயர் கூறித் தோழி கொடுமை கூறியவழி அவளையே பிரிதல் வன்மை யாங்கறிந்தன ரெனத் தலைவி வினவுதலின் அது பின்னுங் கேட்டற்கு அவாவியதாம்' (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 2. உருப்பு : குறிஞ்சிப். 45 ; கற். 43 : 1, 99 : 2 ; அகநா. 11 : 2; பு. வெ. 255.

4. புரு, பொறிகளை யுடையது : "பொறிவரிப் புறவின் செங்காற் சேவல்" (அகநா. 47 : 11) ; புறநா. 43 : 6.

4-6. புரு கள்ளியில் இருத்தல் : (குறுந். 174 : 1-3); "நுண்பொறிப் புறவின் செங்காற் சேவல், வெண்சிறைப் பெடையொடு விளையாட்டு விரும்பி, வன்பர லார்ந்த வயிற்ற வாகிக், கண்பொரி கள்ளிக் கவர்சினை யேறிக், கூப்பிடு குரலிசை சேட்புலத் திசைப்பவும்" (பெருங். 1. 52 : 46-50.)

7. அருஞ்சுர வைப்பு : குறுந். 77 : 5, ஒப்பு. (கருசை)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற பருவம் வந்தமை யறிந்த தலைவி, "இன்னும் அவர் வந்திலர்" என்று கூறி வருந்தியது.]

கடுடு. முதைப்புனங் கொன்ற வார்கலி யுழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே, மெழுகுறழ்
றூதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
5. மரம்பயி லிறும்பி னிர்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரு மென்னு முரைவா ராதே.

எ - து. தலைமகள் பருவங்கண்டு அழிந்து சொல்லியது.

உரோடகத்துக் காரத்தன் (பி- ம். ஒரோடகத்துக் கந்தரத்தனர்.)

(பி - ம்) 6 'தயர்வர்' 7 'மென்முன்', 'மென்னுமுன்னுரை'

(ப - ரை.) முதை புனம் கொன்ற - பழங்கொல்லையை உழுத, ஆர் கலி உழவர் - மிக்க ஆரவாரத்தையுடைய உழவர்களுடைய, விதை குறு வட்டி - காலையிலே விதைக்கும் பொருட்டு விதையை எடுத்துச் சென்ற சிறிய வட்டிகள், போது பொதுள - விதைத்துவிட்டு வீட்டிற்கு மீளும்பொழுது மலர்கள் நிறையும் படி, பொழுது வந்தன்று - மாலைப்பொழுது வந்தது; மெழுகு ஆன்று - அரக்காற் செய்த கருவில் அமைத்து, ஊது உலை பெய்த- ஊதுகின்ற கொல்லனுலையின்கண் பெய்து இயற்றிய, பகுவாய் தெள் மணி - பிளவுபட்ட வாயையுடைய தெளிந்த ஓசையையுடைய மணிகள், மரம் பயில் இறும்பின் ஆர்ப்ப - மரங்கள் நெருங்கி வளர்ந்த குறுங் காட்டிடத்து ஒலிக்கும்படி, சுரன் இழிபு- அரு வழியைக் கடந்து, மாலை நனி விருந்து அயர்மார் - மாலைக் காலத்தில் மிக விருந்து நுகரும் பொருட்டு வரும் தலைவருடைய, தேர் வரும் என்னும் உரை வாராது - தேர் வருகின்ற தென்று கூறும் உரை வந்திலது.

(முடிபு) பொழுதோ வந்தன்று; விருந்தயர்மார் தேர் வரு மென்னும் உரை வாராது.

(கருத்து.) மாலைக் காலம் வரவும் தலைவர் வந்திலர்.

(வி - ரை.) முதை - பழமை. பழைய கொல்லையில் உள்ள மரங்களை வெட்டி உழுதுவிட்ட இடத்திற் பருவமறிந்து விதைக்கும் பொருட்டு உழவர் சென்றனர்; "நறைபடர் சாந்த மற வெறிந்து நாளால், உறையெதிர்ந்து வித்தியவு மேனல்" (திணை மா. 1) என்பதனால் உணர்க. இதனால் மழைக்குரிய கார்ப்பருவம் வந்த தென்பது பெறப்படும்.

வட்டி - பனையோலை முதலியவற்றால் முடையப் பெற்ற சிறு பெட்டி. போதொடு: ஒடு இசை நிறைப் பொருளில் வந்தது.

காலையில் விதைக்கும் பொருட்டுச் சென்ற உழவர் மாலைக் காலத்தில் மீள்கையில் தாம் விதையைக் கொண்டு சென்ற வட்டிகளில் வழியிற் பூத்த முல்லைப் பூவைக் கொணர்ந்தனர். போதென்றது இங்கே முல்லைப் போதை, கார்காலத்து மாலையில் மலர்வது அதுவே யாதலின். பொழுது - தலைவர் கூறிய கார்காலத்து மாலைப் பொழுது. பொழுதோ: ஓகாரம் அசைநிலை; பிரிநிலையுமாம். தான், ஏ: அசைநிலைகள். தெண்மணி: தெள்ளென்ற

அடை மணியொலியைக் கருதியது. இறும்பு - செய்காடென் பாரும் உளர் (திருச்சிற். 148, பேர்.)

மணி தேரில் உள்ளது. அயர்மார் - அயர்பவர்; "தந்தொழின் மூடிமார்" (முருகு. 89) என்ற விடத்து மூடிமாரென்பதற்கு மூடிப்பாரென்று நச்சினார்க்கினியர் உரையெழுதி யிருத்தல் காண்க; அயர்மார் - நாம் அயரும் பொருட்டு எனலு மொன்று.

தலைவர் மீண்டுவரின் தலைவியர் விருந்தயர்தல் மரபு; "அரும் பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு" (குறுந். 398 : 6) என வருதல் காண்க.

(மேற்.) 1-2. ஒடி வென்னும் இடைச் சொல் இசை நிறைப் பொருளில் வந்தது (நன். 435, மயிலை, 436, சங்; இ. வி. 272.)

1-3. பிரிநிலை யோகாரம் வந்தது (நன். 422, மயிலை.)

மு. தலைவி பொழுது கண்டு மகிழ்ந்து கூறியது (தொல். கற்பு. 6, உ.)

(ஒப்பு.) 1. முதைப்புனம்: "முதைச் சுவல்" (குறுந். 204 : 3); முதையலங் காட்டு", "முதைச்சுவன் மூழ்கிய கான்" (அகநா. 5 : 8, 359 : 14.)

2. விதைக் குரு வட்டி: "வித்தொடு சென்ற வட்டி" (நற். 210 : 3.) வட்டி: ஐங். 47 : 2, 48 : 2.

1-2. "விதையர் கொன்ற முதையற் பூழி" (நற். 121 : 1.)

4. ஊதுலை: மணி. 2 : 43.

பகு வாய்த் தெண் மணி: குறுந். 279 : 2.

5. மரம்பயில் இறும்பு: பெரும்பாண். 495; அகநா. 92 : 8, 137 : 10, 238 : 1, 368 : 9.

6. தலைவன் வரவுகுறித்து விருந்தயர்தல்: "பூண்கதில் பாகநின் றேரே, ... அரிவை, விருந்தயர் விருப்பொடு வருந்தின ளசைஇய, முறுவ லின்னகை காண்கம்", "நெடுநா வொண்மணி பாடுசிறந் திசைப்ப, மாலை மான்ற மணன்வலி வியனகர்த், தந்தன நெடுந்தகை தேரே யென்றும், அரும்பட ரகல நீக்கி, விருந்தயர் விருப்பின டிருந்திழை யோளே" (நற். 81 : 9, 361 : 5 - 9.) "விருந்தும் பெறுகுநர் போலுந் திருந்திழைத், தடமென் பணைத்தோண் மடமொழி யரிவை.....செல்லு நெடுந்தகை தேரே, முல்லை மாலை நகர்புக லாய்ந்தே", "மனைக்கொண்டு புக்கன னெடுந்தகை, விருந்தோ பெற்றன டிருந்திழை யோளே" (அகநா. 324 : 1 - 15, 384 : 13 - 4); "விளைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து, மாலை யயர்கம் விருந்து" குறள். 1268.)

4 - 7. தலைவன் மணியொலிக்கத் தேரில் வருதல்: (குறுந். 336 : 3 - 4); "காமம் பெருமையின் வந்த ஞான்றை ... ... தேர்மணித் தெள் ளிசை கொல்லென" (நற். 287 : 7 - 10); "தாதுண் பறவை பேதுற

லஞ்சி, மணிகா வார்த்த மாண்வினைத் தேரன், உவக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்'' (அகநா. 4 : 11 - 3.)

3 - 7. பொழுது வந்தது, தலைவர்வந்திலர் ; ஐங். 341 - 50.

(கருடு)

தலைவன் கூற்று

[தலைவியின்பால் விருப்புற்ற தன்னைப் பாங்கன் இடித்துரைத்த போது தலைவன் பாங்கனை நோக்கி, "நீ இடித்துரைத்தலால் பயனென்றுமில்லை" என்று கூறியது.]

கருசு. பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கி னன்னர் கனைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே
5. எழுதாக் கற்பி னின்சொ லுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ மயலோ விதுவே.

எ - து. கழறிய பாங்கற்குக் கிழவன் அழிந்து கூறியது.

பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன்.

(பி-ம்.) 3 'தாழ்மண்டிலத்துப்' 4 'படிம' 5 'னின்செயலுள்ளும்'

(ப - ரை.) பார்ப்பன மகனே பார்ப்பன மகனே—, செம்பூ முருக்கின் - செம்மையாகிய பூவையுடைய புரச மரத்தினது, நல்நார் கனைந்து - நல்ல பட்டையை நீக்கி விட்டு, தண்டொடு பிடித்த - அதன் தண்டோடு ஏந்திய, தாழ் கமண்டலத்து - தாழ்கின்ற கரகத்தையும், படிவம் உண்டி - விரதவுணவையுமுடைய, பார்ப்பன மகனே— எழுதா கற்பின் - வேதத்தை யறிந்த, நின் சொல்லுள்ளும் - நின்னுடைய அறிவுரைகளுள், பிரிந்தோர் புணர்க்கும் - பிரிந்த தலைவியரையும் தலைவர்களையும் சேரச் செய்யும், பண்பின் - தன்மையையுடைய, மருந்தும் உண்டோ - பரிகாரமும் இருக்கின்றதோ? இது - இங்ஙனம் நீ கழறுதல், மயல் - மயக்கத்தால் வந்ததாகும்.

(முடிபு) பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே, பார்ப்பன மகனே, நின் சொல்லுள்ளும் மருந்துமுண்டோ? இது மயல்.

(கருத்து) நீ என்னை இடித்துரைத்தலால் வரும் பயன் யாதும் இல்லை.

(வி - ரை.) இது பார்ப்பனப் பாங்கன் காமநிலை யுரைத்துத் தேர்நிலை யுரைத்த போது (தொல். கற்பு. 36) தலைவன் கூறியது. முருக்கென்றது புரச மரத்தை; இது பலாசென்றும் கூறப்படும். தாழ் கமண்டலம் - உறியிலே தாழ்ந்த கமண்டலம்; "உறித் தாழ்ந்த கரகமும்" (கலி. 9: 2.) எழுதாக் கற்பு - எழுதாக் கிள வியைக் கற்ற கல்வி; அதாவது வேத முணர்தல். மருந்து - பரி காரம்; "மருந்தில் கூற்றம்" (புறநா. 3: 12.) மருந்துமுண்டோ வென்ற உம்மை பயனற்ற இடித்துரையே யன்றிப் பரிகாரமும் உண்டோவென்னும் பொருட்பயன் உடையது. 'நாம் இடித்து ரைத்தால் இவன் கொண்ட காமம் நீங்கும்' என்று பாங்கன் எண்ணிய எண்ணத்தை மயலென்றான். உண்டோ: ஓகாரம் எதிர்மறைப் பொருளது; மயலோ: ஓ அசைநிலை.

பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின் மருந்தும் உண்டோ வென் றது என்னையும் தலைவியையும் சேர்த்து வைக்கும் முயற்சியே பயன்படுவதென்னும் குறிப்பையுடையது; எனவே நீ கழறுவ தொழிந்து அது செய்க என்றானையிற்று.

(மேற்.) 1. முறைமை சுட்டா மகனென்னும் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்றது (தொல். விளி. 18, தெய்வச்.); உயர்திணைப் பெயர் ஏகார விளி யுருபு பெற்று வந்தது (நன். 304, மயிலை.)

4. முறைமை சுட்டா மகனென்பது விளிவேற்றுமைக்கண் ஏகாரம் பெற்றுவந்தது (தொல். விளி. 12, ந.; இ. வி. 207.)

3-4. அந்தணர்க்குக் கரகமும் முக்கோலும் உரியவை (தொல். மரபு. 70, பேர்.)

(ஒப்பு.) 2. நாரென்பது பட்டைக்கு வருதல்: குறுந். 112: 4, 274: 5.

4. படிவஞ்சுட்டிப் பார்ப்பன மகன்: "படிவப் பார்ப்பான்" (முல்லைப். 37.)

6. பிரிந்தோர்ப் புணர்த்தல்: குறுந். 146: 6. (கடுசு)

தலைவி கூற்று

[பூப்பு எய்திய தலைமகள் அதனை மறைத்துக் கூறுவாளாய், "வைகறை வந்தது; இனித் தலைவனைப் பிரியநேருமென்று அஞ்சு கின்றேன்" என்று சொல்லியது.]

கடுஎ. குக்கூ வென்றது கோழி யதனெதிர்
துட்கென் றன்றென் றாய நெஞ்சம்
தோடோய் காதலர்ப் பிரிக்கும்
வாள்போல் வைகறை வந்தன் றெனவே.

எ - து. பூப்பெய்திய தலைமகள் உரைத்தது.

அள்ளூர் நன்முல்லை (தி. ம். அள்ளூர் நன்மூலன்.)

(பி - ம்.) 2 ' றற்றென் ' ' றுரஉய ' 4 ' வான்போல்

(ப - ரை.) கோழி—, குக்கூ என்றது - குக்கூவென்று கூவியது ; அதன் எதிர் - அதற்கு நேரே, தோள் தோய் காதலர் பிரிக்கும் - எனது தோளை மணந்த தலைவரைப் பிரியச்செய்யும், வாள் போல் - வாளைப்போல, வைகறை வந்தன்று என - விடியற் பொழுது வந்ததென்று, என் தூய நெஞ்சம் - எனது மாசற்ற நெஞ்சம், துட்கென்றன்று - அச்சத்தை யடைந்தது.

(முடிபு) கோழி குக்கூவென்றது ; நெஞ்சம், துட்கென்றன்று.

(கருத்து) தலைவனை இனிப் பிரிந்திருத்தல் வேண்டுமென்று அஞ்சுகின்றேன்.

(வி - ரை.) "அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்" என்பது விதியாதலின் தலைவிதான் பூப்பெய்தியதை வெளிப்படையாகக் கூறுதொழிந்தாள். துட்கென்றன்று - துட்கென்றது ; துட்கு - அச்சம். தலைவனோடு ஒன்றுபட்டுப் பிறிதொரு நினைவின்றி யமைந்ததாதலின் தூய நெஞ்சாயிற்று.

பூப்புக்காலமாகிய மூன்றுநாளும் தலைவியினது சொற்கேட்கும் அணிமையிலிருத்தலையன்றி அளவளாவுதல் அறநெறியன்றுதலின் பூப்பு, தலைவனைத் தோள் தோயாமற் பிரிப்பதாயிற்று ;

> ' மூன்றாளுங் கூடி உறையப்படுங் குற்றமென்னெனவெனின் பூப்புப் புறப்பட்டனான்று நின்ற கரு வயிற்றில் அழியும் ; இரண்டாம் நாள் நின்ற கரு வயிற்றிலே சாம் ; மூன்றும் நாள் நின்ற கரு குறுவாழ்க்கைத்தாம் ; வாழினுங் கிருவின்றும். அதனாற் கூடப்படா தென்பது ;
>
> பூப்புமுதன் மூன்நாட் புணராரா புணரின்
> யாப்புறு மரபி னோயரு மமரரும்
> யாத்த கரண மழிபு மென்ப
>
> எனப் பிறரும் ஓதினாராகலான் அமையாதென்பது' (இறை. 43, உரை) என்பதனால் பூப்புநாட்களிற் கூட்டமின்மை உணரப்படும்.

ஆல், ஏ : அசைநிலைகள்.

(மேற்.) மு. தலைவிக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கு நிகழும்வழிக் கூற்று நிகழும் (தொல். கற்பு. 6, இளம்.) மூன்நாட்பிரிவாகிய பூப்பிடைப் பிரிவு வந்துழித் தலைவி கூறியது (தொல். களவு. 31, ந.) ' பூப்புப் புறப்பட்டனான்றும் மற்றை நாளுங் கருத்தங்கின் அது வயிற்றில் அழிதலும், மூன்றும் நாள் தங்கின் அது சில்வாழ்க்கைத்தாதலும் பற்றி மூன்நாளுங்

கூட்டமின்றென்றார்.....குக்கூ என்பதனைக் காட்டுவாரு மூளர்' (தொல். கற்பு. 46, ந.)

(ஒப்பு.) 3. தோள் தோய் காதலர் : குறுந். 323 : 6.

4. வான் போல் வைகறை : குறள், 334. (கடுஎ)

தலைவி கூற்று

[தலைவன் இரவுக்காலத்தில் வந்து அளவளாவுங்காலத்து ஒரு நாள் பெருமழை உண்டாயிற்றாக, அவனது வரவுக்குத் தடை நிகழுமோவென அஞ்சிய தலைவி அவ்வச்சத்தைத் தலைவன் வந்த பின்னர் அம்மழையை நோக்கிக் கூறுவாளாய் அவன் கேட்பக் கூறியது.]

கடுஅ. நெடுவரை மருங்கிற் பாம்புபட விடிக்கும்
கடுவிசை யுருமின் கழறுகுர லனைஇக்
காலொடு வந்த கமஞ்சூன் மாமழை
ஆரளி யிலையோ நீயே பேரிசை
5. இமயமுந் துளக்கும் பண்பினை
துணையில ரளியர் பெண்டிரிஃ தெவனே.

எ - து. தலைமகன் இரவுக்குறி வந்துழி, அவன் கேட்பத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

ஔவையார் (மி. ம். அவ்வையார்.)

(பி - ம்.) 2 'குரல் செலீஇக்' 6 'துணையிலாளர்' 'தெவனே'

(ப - ரை.) நெடுவரை மருங்கின் - உயர்ந்த மலையின் பக்கத்திலுள்ள, பாம்பு பட இடிக்கும் - பாம்புகள் இறந்துபடும்படி இடிக்கின்ற, கடு விசை உருமின் - மிக்க வேகத்தையுடைய இடியேற்றினது, கழறு குரல் அனைஇ - இடிக்கும் முழக்கத்தோடு கலந்து, காலொடு வந்த - காற்றோடு வந்த, கம சூல் மா மழை - நிறைந்த நீராகிய சூலையுடைய பெரிய மழையே, நீ ஆர் அளி இலையோ - இயல்பாகவே நின்பால் நிறைந்த இரக்கத்தை நீ இப்பொழுது பெறவில்லையோ? பெரு இசை இமயமும் துளக்கும் பண்பினை - பெரிய புகழையுடைய இமயமலையையும் அசைக்கின்ற தன்மையினை உடையாய்; பெண்டிர் துணை இலர் - நின்னால் அலைக்கப்படும் மகளிர் துணைவரைப் பெற்றிலர்; அளியர் - ஆதலின் இரங்கத்தக்கார்; அங்ஙனம் இருப்ப, இஃது எவன் - இங்ஙனம் நீ பெய்து அலைத்தல் எதன் பொருட்டு?

(முடிபு) மாமழை, நீ அளியையோ? இமயமும் துளக்கும் பண்பினை; பெண்டிர் துணையிலர்; அளியர்; இஃது எவன்?

(கருத்து) இதுகாறும் தலைவர் வாராமையின் இப்பெருமழையினால் அவர் வரவு தடைப்படுமோ வென்று அஞ்சினேன்.

(வி - ரை.) தலைவன் பெருமழையினால் துன்புறுவானே வென்றும் வாரானே வென்றும் அஞ்சிய தலைமகள் தான் அங்ஙனம் அஞ்சியதை இதனால் தலைவனுக்கு உணர்த்தினள். இங்ஙனம் அஞ்சுதற்குரிய ஒழுகலாற்றை விடுத்து வரைந்துகொண்டு எப்பொழுதும் உடனுறைவதே நன்றென்பது எச்சப்பொருளாதலின், இது வரைவு கடாவியதாகும்.

மழையின் அச்சத்தன்மையை மிகுவித்துக் கூறுவாளாய் அதனைச்சார்ந்த இடியின் கொடுமையையும் உடன்கூறினள். நடுக்கின்றி நிலைபெறுவதாகிய இமயமும் (புறநா. 2) நின்னால் துளங்குமெனின் பற்றுக் கோடில்லாத யாங்கள் எவ்வளவினேமென்றாள். இமயமும்: உம்மை உயர்வு சிறப்பு.

இடிமுழக்கம், பெருங்காற்று முதலியவற்றோடு வந்த மழையினால் தலைவனுக்கு வரும் ஏதங்குறித்து அஞ்சுதலையன்றித் தம் மெல்லியல்பாலும் பெண்டிர் அஞ்சுவராதலின் 'அளியர்' என்றாள். பெண்டிரென்று பொதுவகையாற் கூறினும் கருதியது தன்னையே என்க.

துணையிலரளியரென்றமையின், துணையுளராயின் அஞ்சாரென்பதாம். இஃதென்றது அளியின்மையை.

(மேற்.) 3. கம என்னும் உரிச்சொல் நிறைவுப் பொருளில் வந்தது (தொல். உரி. 58, இளம். 59, சே. தெய்வச்.)

5-6. 'மலையைத்துளக்கும் ஆற்றலையுடையாய், காமப்பிணி கூர்ந்தோரை அலைப்பது நினக்குத் தகுவதன்று' என இளிவந்து வாடைக்குக் கூறினமையின், இது தன்கட்டோன்றிய பிணிபற்றி இளிவரவு பிறந்தது (தொல். மெய்ப். 6, பேர்.; இ. வி. 578.)

(ஒப்பு.) 1-2. பாம்புபட இடிக்கும் உரும: குறுந். 190: 4-5, 268: 3-4, 391: 3-4; "நாகத், தணங்குடை யருந்தலை யுடலி வலனேர், பார்கலி னல்லேறு திரிதரும்", "ஈர்ங்குர லுருமி னிர்கலி னல்லேறு, பாம்புகவி னழிக்கும்", "கேழ்கிள ருத்தி யரவுத்தலை பனிப்பப், படுமழை யுருமி னுரற்று குரல்", "திருமணி யரவுத்தேர்ந் தழல, உருமுச்சிவக் தெறியு மோங்கு வரை யாறே" (நற். 37: 8-10, 114: 9-10, 129: 7-8, 255: 10-11); "உருமுச்சிவந் தெறிந்த வுரனழி பாம்பின்", "பாம்பின், பைபட விடிக்குங் கடுங்குர லேற்றெடு" (அகநா. 92: 11, 323: 10-11); "இடியே றுண்ட நாகம் போல" (பெருங். 2. 10: 112.)

3. காலொடு வந்த மழை: "காலொடு பட்ட மாரி" (நற். 2: 9); "காற்றுடைக் கனைபெயல்" (கலி. 45: 4.)

கமஞ்சூன் மாமழை: முருகு. 7.

3-4. மழைக்கு அளித்தன்மையுண்மையைக் கூறுதல்: குறுந். 216: 5-6.

1-5. மழை பாம்பை வருத்தி மலையைத் துளக்குதல்: "யாங்குச்செய் வாங்கொ ரோழி யோங்குகழைக், காம்புடை விடரகஞ் சிலம்பப் பாம்புடன், ரேங்குவரை மிளிர வாட்டி வீங்குசெலற், கடுங்குர லேற்றொடு கனைதுளி தலைஇப், பெயலா னதே வானம்", "முழங்குகடன் முகந்த கமஞ்சூன் மாமழை, மாகிர னனந்தலை புதையப் பாஅய், ஓங்குவரை மிளிர வாட்டிப் பாம்பெறிபு" (நற். 51: 1-5, 347: 1-3.)

மழை மலையைத் துளக்குதல்: "பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெயல்" (கலி. 45: 4.) (கருஅ)

தோழி கூற்று

[தலைவன் கேட்கும் அணிமையிலே நின்றுனக, "தலைவியின் துயரத்தை உணர்ந்து இரங்காதாரை யுடையதாயிற்று இவ்வூர்" என்று கூறும் வாயிலாகத் தலைவியை இற்செறிக்கக் கருதி யிருப் பதைத் தோழி அவனுக்குப் புலப்படுத்தியது.]

கடுகூ. தழையணி யல்கு லுங்கல் செல்லா
நுழைசிறு நுசுப்பிற் கெவ்வ மாக
அம்மெல் லாக நிறைய வீங்கிக்
கொம்மை வரிமுலை செப்புட னெதிரின
5 யாங்கா குவள்கொல் பூங்குழை யென்னும்
அவல நெஞ்சமொ டுசாவாக்
/கவலை மாக்கட்டிப் பேதை யூரே.

எ - து. (1) தலைமகன் சிறைப்புறமாகத் தோழி செறிப்பறி வுறுத்தது.

(2) உயிர் செல வேற்றுவரைவு வரினும் அது மாற்றுதற்கு நிகழ்ந்ததாஉமாம்.

["உயிர் செல வேற்றுவரைவு வரினது மாற்றுதற் கண்ணும்" தலைவிக்குக் கூற்று நிகழுமென்பது (களவு. 20) தொல்காப்பிய விதி. இதன்பொருள்: 'இறந்துபாடு பயக்குமாற்றால் தன்றிறத்து நொதுமலர் வரையக் கருதிய ஞான்று அதனை மாற்று தற்கு நிகழ்ந்த தலைவி கூற்று.]

வடம வண்ணக்கன் பேரிசாத்தன்.

(பி-ம்) 2 'யல்குலுருங்கல்' 3 'வீங்கிய' 4 'வருமுலை'

(ப - ரை.) இ பேதை ஊர் - இந்தப் பேதைமையை யுடைய ஊர், தழை அணி அல்குல் - தழையை அணிந்த அல்குலை, தாங்கல் செல்லா - பொறுத்தலாற்றாத, நுழை சிறு நுசுப்பிற்கு - நுணுகிய சிறிய இடைக்கு, எவ்வம் ஆக - துன்பம் உண்டாகும்படி, அ மெல் ஆகம் நிறைய வீங்கி - அழகிய மெல்லிய மார்பகம் நிறையப் பருத்து, கொம்மை வரி முலை - பெருமையையும் தேமலையும் உடைய நகில்கள், செப்புடன் எதிரின - செப்போடு மாறுபட்டன; பூ குழை - பூத் தொழிலையுடைய குண்டலத்தை யணிந்த தலைவி, யாங்கு ஆகுவள் - என்ன துன்பத்தையுடையள் ஆவளோ, என்னும் அவலம் நெஞ்சமொடு - என்று எண்ணும் கவலையை யுடைய நெஞ்சத்தோடு, உசாவா - ஏனென்று கேளாத, கவலை மாக்கட்டு - கவலையையுடைய மாக்களை உடையது.

(முடிபு) இப்பேதையூர் 'பூங்குழை யாங்காகுவள்' என உசாவாக் கவலைமாக்கட்டு.

(கருத்து) என்தாய் முதலியோர் என் நிலையை உணர்ந்திலர்.

(வி - ரை.) தழை - மகளிர் உடுக்கும் உடை விசேடம். தழை யணியல்குலென்றுள் தழையும் ஒருபொறை யென்பது கருதி. "தலைவி தக்க பருவத்தை அடைந்தனளே; இவள் கருத்து யாதோ? இவள் யாரிடத்தில் அன்பு பூண்ட தகைமையினளோ" என்று பிறர் உசாவ வேண்டுமென்பது தோழி கருத்து. உசாவா - உசாவி ஆவன செய்யாத. கவலைமாக்கட்டென்றது, குறிப்பு மொழி; சிறிதும் கவலையற்றவர்களென்னும் நினைவிற்று. தலைவியின் துயரறியும் அறிவின்மையின் மாக்களென்றுள்; மாக்களென்றது செவிலி முதலியோரை. பேதை பூரென்றது, ஊரிலுள்ளார் தலைவியின் நிலையுணராப் பேதைமை யுடையா ரென்றபடி.

தலைவி பருவம் வாய்த்தாளென்னும் காரணம்பற்றி இற் செறிக்கப்படுவதை இதன் முதற்பகுதியால் தோழி உணர்த்தினள்;

> "முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
> தலைமுடி சான்ற தண்டழை யுடையை
> அலமர லாயமொ டியாங்கணும் படாஅல்
> மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய

காப்பும் பூண்டிசிற் கடையும் போகலே
பேதை யல்லே மேதையங் குறுமகள்
பெதும்பைப் பருவத் தொதுங்கினே புறத்தென
ஒண்சுடர் நல்லி லருங்கடி நீவி" (அகநா. 7)

என்புழிப் பருவம் வந்த தலைமகளே இற்செறித்துக் காக்கும் செய்தி காணப்படும்.

கொல், ஏ : அசைநிலை.

இரண்டாவது கருத்து :—நொதுமலர் வரைவு நேரின் இவள் எந் நிலையினளாவனெனச் சிறிதும் ஆராயாத மாக்களையுடையது என்று பொருள் கொள்க.

(மேற்.) மு. தலைவனேடு தன்கிழத்தி ஒருவரும் ஒன்று உரையாத வழித் தனது ஆற்றுமையால் தன்னேடும் அவனேடும் பட்டன சில மாற்றம் தலைவி தானே கூறியது (தொல். களவு, 21, இளம், 20, ந.)

(ஒப்பு.) 1. மகளிர் தழையுடை யணிதல் : குறுந். 125 : 3, ஒப்பு. 2. நுழை சிறு நுசுப்பு : குறுந். 71 : 3. 4. கொம்மை வரிமுலை : (அகநா. 65 : 18) ; "கொம்மை வெம்முலை", "கொம்மை யார்ந்தன...விழுத்தகு முலைத்தடம்" (சீவக. 347, 2364.)

நகிலுக்குச் செப்பு : "முலையும், சூழி மென்முகஞ் செப்புட னெதிரின", (அகநா. 315 : 1-2); "தாமச் செப்பிணை" (சீவக. 171.)

5. யாங்காகுவள்கொல் : (குறுந். 337 : 6); "யாங்கா குவென்கொ லளியேன் யானே" (நற். 152 : 9); "யாங்கா குவங்கொல் பாண", "யாங்கா குவள்கொ ருனே" (அகநா. 14 : 13, 260 : 11.)

6-7. குறுந். 145 : 4-5. (கருகூ)

தலைவி கூற்று

[வரைபொருட்குப் பிரிந்த தலைவன் மீட்டித்தானுக, ஆற்று மையை யடைந்த தலைவியை நோக்கித் தோழி, "அவர் நின்னை வரைந்து கொள்வர் ; நீ ஆற்றியிருப்பாயாக" என, "அவர் வர வேண்டிய பருவத்து வந்தாரிலர் ; இனி வரைந்து கொள்வது யாங் ஙனம் ?" என்று கவன்று கூறியது]

கூகூ. நெருப்பி னன்ன செந்தலை யன்றில்
இறவி னன்ன கொடுவாய்ப் பெடையொடு
தடவி னேங்குசினைக் கட்சியிற் பிரிந்தோர்
கையற நரலு நள்ளென் யாமத்துப்
5. பெருந்தண் வாடையும் வாரார்
இஃதோ தோழிநங் காதலர் வரைவே.

எ - து. வரைவு நீட்டிப்ப ஆற்றாளாகிய தலைமகனை நோக்கித், தோழி, வரைவரென ஆற்றுவிப்புழித் தலைமகள் கூறியது.

மதுரை மருதன் இளநாகன்.

(பி - ம்.) 2 'இரவின்', 'அரவின்' 3 'னெங்குசினக்' 6 'வரவே'

(ப - ரை.) தோழி—, நெருப்பின் அன்ன செ தலை அன்றில் - நெருப்பைப்போன்ற சிவந்த தலையையுடைய ஆண் அன்றில், இற வின் அன்ன கொடு வாய் பெடையொடு - இருமீனை ஒத்த வளைந்த அலகையுடைய பெண் அன்றிலோடு, தடவின் ஓங்கு சினை கட்சியில் - தடா மரத்தினது உயர்ந்த கிளையின்கண்ணுள்ள கூட்டினிடத்தே யிருந்து, நரலும் - ஒலிக்கின்ற, நள்ளென் யாமத்து - செறிந்த இடையிரவையுடைய, பெரு தண் வாடை யும் - பெரிய தண்மையையுடைய வாடைக் காற்று வீசும் கூதிர்க் காலத்திலும், வாரார் - தலைவர் வந்தாரிலர்; நம் காதலர் வரைவு - நம் தலைவர் என்னை மணந்து கொள்வது, இஃதோ - இதுதானே?

(முடிபு) தோழி, வாடையும் வாரார்; காதலர் வரைவு இஃதோ?

(கருத்து) தலைவர் இன்னும் வந்திலர்; வரைவரெனக் கருது தல் எங்ஙனம்?

(வி - ரை.) செந்தலையென்றது செஞ்சூட்டை: தலை: ஆகு பெயர்; "பூந்தலை யன்றில்" (ஐந். ஐம். 41) என்பதற்குப் பழைய உரையாசிரியர், 'செம்பூப் போலுஞ் சூட்டினையுடைய பெடை யன்றில்' என்றெழுதியது காண்க. தடவென்பது ஒரு மரம்; இதன் இலையைத் தைத்து உண்கலமாகக் கொள்ளும் வழக்குக் காளத்தி முதலிய இடங்களிற் காணப்படுகிறது; "தடவும் பிட வுந் தாழச் சாய்த்து" (பெருங். 1. 51: 43.) ஆண்அன்றில் பெடையோடு மகிழ்ந்து நரலுதல் கேட்டு, 'இப்பறவை பெற்ற பேறு யாம் பெற்றிலமே!' எனத் தனித்தார் இரங்குவராதலின், 'பிரிந்தோர் கையற நரலும்' என்றாள்.

வாடையும்: உம்மை உயர்வுசிறப்பு; தலைவர் வரைவு இன்றியமையாததாகிய இக்காலத்தும் அவர் வந்திலர்; இனி வரு வரென்று துணிதல் யாங்ஙனமென்றாள் தலைவி. 'தலைவர் வரு தலையே கண்டோமில்லை: இனி வந்து வரைவரென நீ கூறுவது எங்ஙனம் நிகழும்?' என்று தோழியை நோக்கிக் கூறினாள். இஃதோ - இங்கிலையோ.

(ஒப்பு) 1. செந்தலையன்றில்: "சேவ லோடுறை செந்தலை யன்றிலின், காவி லல்வலி யெஞ்ச நடுங்குவாள்" (கம்ப. சூர்ப்ப. 76)

நெருப்பின் அன்ன செந்தலையன்றில்: "எரியகைந் தன்ன செந்தலை யன்றில்" (தொல். களவு. 21, ந. மேற்.)

1-2. அன்றிலின் கொடுவாய்: "ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றில்" (குறிஞ்சிப். 219); "கொடுவாய்ப் புணரன்றில்" (கைந்நிலை, 57.)

4, நள்ளென்யாமம்: குறுந். 6: 1, ஒப்பு; நெடுதல். 186; நற். 22: 11, 145: 10, 178: 8, 199: 3, 287: 9, 333: 12; ஐங். 324: 3; அகநா. 103: 12, 129: 2, 142: 20, 170: 12, 279: 6.

1-4. அன்றில் யாமத்து நரலுதல்: (குறுந். 177: 1-4, 301: 1-4); "பெடைபுண ரன்றி லியங்குகுர லஞ்இக், கங்குலுங் கையறவு தந்தன்று", "இன்னும், தமியேன் கேட்குவென் கொல்லோ, பரியரைப் பெண்ணை யன்றிற் குரலே", "ஓலியவிந் தடங்கி யாம நள்ளென.....மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத், துணைபுண ரன்றி லுயவுக்குரல் கேட் டொறும், தஞ்சாக் கண்ண டுயரடச் சாஅய், நம்வயின் வருந்து நன்னுத லென்ப", "மையிரும் பனிமிசைப் பைதல வுயவும், அன்றிலு மென்புற நரலும்" (நற். 152: 7-8, 218: 9-11, 303: 1-7, 335: 7-8); "கழுது கண் படுக்கும் பாஅட் கங்குல், எம்மினு முயவுகி செந்தலை யன்றில்" (தொல். களவு. 16, ந. மேற். "இருள்வீ.")

5. பெருந்தண்வாடை: குறுந். 35: 5, ஒப்பு. (கசுo)

தலைவி கூற்று

[தாய் உறங்காமல் விழித்திருந்தமையால் தலைவன் இரவில் வந்தும் அவனைக் காணுதற்கு இயலாத தலைவி மறுநாள் அவன் வந்து மறைவில் நிற்பதை யறிந்து, "நேற்று அன்னை விழித்திருந் தாள். தலைவன் வந்தானென்பதை யான் உணர்ந்தும் பயனில தாயிற்று" என்று தோழியை நோக்கிக் கூறியது.]

கசுக. பொழுது மெல்லின்று பெயலு மோவாது
கழுதுகண் பனிப்ப வீசு நுதன்றலைப்
புலிப்பற் றுலிப் புதல்வற் புல்லி
அன்னை வென்னு மன்னையு மன்னே
5. என்மலைந் தனன்கொ ருனே தன்மலை
ஆர நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே.

எ - து. இரவுக்குறிக்கண் வந்த தலைமகனைக் காப்புமிகுதியான் எதிர்ப்படப் பெருத தலைமகள், பிற்றைஞான்று தலைமகன் சிறைப் புறத்தானாக, தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

நக்கீரர்.

(பி - ம்.) 2 'வீசுந் தன்றலே' 3 'புதல்வர்ப்' 4 'அன்னையென் னும்' 7 'நின்றோனே'

(ப - ரை.) தோழி, பொழுதும் எல் இன்று - சூரியனும் விளக்கம் இலனாயினன்; பெயலும் - மழையும், ஓவாது - ஒழி யாமல், கழுது கண்பனிப்ப - பேய்கள் கண்ணீ அடிக்கடி கொட்டி நடுங்கும்படி, வீசும் - வேகமாகப் பெய்யும்; அதன் தலை - அதற்கு மேல், அன்னையும் - தாயும், புலி பல் தாலி - புலிப்பற்கோத்த தாலியை யணிந்த, புதல்வன் புல்லி - மகனைத் தழுவி, அன்னு என்னும் - அன்னையே யென்று என்னை விளிப்பாள்; அப்பொழுது, தன் மலை ஆரம் நாறும் மார்பினன் - தனது மலையில் விளைந்த சந் தனம் மணக்கின்ற மார்பையுடைய தலைவன், மாரி யானையின் - மழையில் நனைந்த யானையைப் போல, வந்து நின்றனன் - இவ் வீட்டுப்புறத்தே வந்து நின்றான்; அன்னை - அந்தோ! என் மலைந் தனன் கொல் - அவன் எதனைச் செய்ய மேற்கொண்டானோ!

(முடிபு) பொழுதும் எல்லின்று: பெயலும் வீசும்; அன்னை யும் அன்னுவென்னும்; மார்பினன் வந்து நின்றனன்; என் மலைந் தனன் கொல்?

(கருத்து) நேற்றுக் காப்புமிகுதியால் தலைவனைக் காணப் பெற்றேனில்லை.

(வி - ரை.) பொழுது - சூரியன்; "முழுநீர்ப் பொய்கையிற் பொழுதொடு விரிந்த, செழுமலர்த் தாமரை" (பெருங். 2. 16: 32-3.) "எல்லு மெல்லின்று" (குறுந். 179: 2, 390: 1) என்று பின்வருவதுங் காண்க. "எல்லினிர் புகினே" (மலைபடு. 346) என்றவிடத்து நச்சினார்க்கினியர் 'இராக்காலத்தை யுடையிராய்' என எல்லினிரென்பதைக் குறிப்பு வினையாகக் கொண்டனர்; அதை ஆராய்கையில், எல்லின் றென்பதே இருண்டதென்னும் பொருள்தரும் ஒரு சொல்லென்று கருதவும் இடமுண்டு. இராக் காலத்திற் பேய்கள் அச்சமின்றித் திரிவன; அவையும் கண் பனித்தன வென்பது பெயலின் கடுமை மிகுதியை உணர்த்தியது. புலிப்பற்றுலி - புலிப்பல்லைப் பொன்னிலமைத்துச் சிறுவர் மார்பி லணியும் ஓர் ஆபரணம்.

'புதல்வனைப்புல்லிய தாய் அன்னுவென்று என்னையும்

அழைத்தலின் நானும் அவளருகில் இருத்தல் இன்றியமையாத தாயிற்று' என்று தலைவி புலப்படுத்தினள். அன்னையென்றது விளியேற்று, "முறைப்பெயர் மருங்கி னியெ னிறுதி, ஆவொடு வருதற் குரியவு முளவே' (தொல். விளி. 9) என்னும் விதிப்படி அன்னுவென வந்தது. புதல்வனைப் புல்லி அவனையே அன்னு வென்னுமென்று பொருள் கொள்ளுதலும் ஒன்று. தலைவன் தன் மலையில் விளைந்த சந்தனத்தைப் பூசி வந்தகாலத்தில் அதன் மணத்தை யறிந்தவளாதலின், அவன் புறத்தே வந்துநின்றுனெனி னும் அச் சந்தன மணத்தால் அவன் வரவை யறிந்தாள்.

என் மலைந்தனன் கொலென்றது, அவன் நினைந்தது நிறை வேற வில்லையென்னும் நினைவிற்று. கொல்: ஐயம். தான், ஏ: அசைநிலைகள்.

(மேற்.) 1-4. தலைவியிடத்துக் காதல் கையிகந்து பெருகுதலால் துயிலா கின்றுழியும் ஒன்று கூறிச் செவிலி அரற்றியது இது; 'பொழுது மெல்லின் றென்பதனுள் புதல்வற்புல்லி அன்னுயென்று தலைவியை விளித்தது கனவின் அரற்ற லாயிற்று' (தொல். களவு. 24, ந.)

7. உவமையில் நினை மயங்கிவந்தது (தொல். உவம. 6, பேர்.)

5-7. துஞ்சிச் சேர்தல் என்னும் மெய்ப்பாடு வந்தது; 'என்ன காரி யம் மேற்கொண்டு வந்தானென்றமையின் இது துஞ்சிச் சேர்தலாயிற்று; அல்லாக்கால் அங்ஙனஞ் சொல்லுதல் அன்பழிவெனப்படும்' (தொல். மெய்ப். 23, பேர்; இ. வி. 580.)

மு. காப்பு மிகுதிக்கண் மனையகப்பட்டுக் கலங்கி உணர்வு அழிந்த வழித் தலைவி ஆராய்ச்சி யுடையதாகிய அருமறையினைத் தோழிக்குக் கூறி யது (தொல். களவு. 21, இளம், 20, ந.)

(ஒப்பு.) 1. பொழுதும் எல்லின்று: "எல்லின்று பொழுதே" (நற். 264: 6, அகநா. 224: 1); "எல்லு மெல்லின்று" (குறுந். 179: 2, 390: 1); அகநா. 110: 11, 370: 2.

3. புலிப்பற்ருலி: "புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி" (அகநா. 7: 18); "புலிப்பற் ருலிப் புன்றலைச் சிருஅர்" (புறநா. 374: 9); "மறங் கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற, மாலை வெண்பற்ருலி" (சிலப். 12: 27-8); "போகிற் பொலியுந் தொழிற்புலிப் பற்குரற் பொற்ருெடியே" (திருச்சிற். 239.)

6. ஆரம் நாறும் மார்பினன்: குறுந். 198: 7, 321: 1; கலி. 52: 7, 15.

7. யானை தலைவனுக்கு: குறுந். 244: 2; அகநா. 308: 15.
மாரியானை: நற். 141: 2. (கசுக)

தலைவன் கூற்று

[தலைவியைப் பிரிந்த தலைமகன் தான் மேற்கொண்ட செயல் முடித்து மீளும்பொழுது வழியில் அரும்பியிருந்த முல்லையைப் பார்த்து, " நீ தனித்திருப்போரை நோக்கி அரும்பால் எள்ளி நகையாடல் தகுமோ ?" என்று கூறியது.]

கசூஉ. கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பலர்புகு தருஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
5. நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே.

எ - து. வினைமுற்றி மீளும் தலைமகன் முல்லைக்குரைப்பானுய் உரைத்தது.

[வினைமுற்றி - தான் தலைவியைப் பிரிந்து செல்லுதற்குக் காரணமான செயல் நிறைவேறப்பெற்று.]

கருவூர்ப் பவுத்திரன்.

(பி - ம்.) 1 ' கார்புனந்', ' கார்ப்புனந் '; ' வியன்புனத்துப் ' 2 பல்லா புகுதரும் '

(ப - ரை.) முல்லை - முல்லையே, வாழி - நீ வாழ்வாயாக. முல்லை - முல்லையே, கார் புறந்தந்த - மேகத்தாற் பாதுகாக்கப் பெற்ற, நீருடை வியன்புலத்து - நீரையுடைய அகன்ற முல்லை நிலத்தின்கண், பலர் புகுதரும் புல் என் மாலை - பலர் தம் இல்லத்திற் புகும் ஒளியிழந்த மாலைக் காலத்தில், நீ நின் சிறுவெள் முகையின் - நீ நினது சிறிய வெள்ளிய அரும்புகளினுல், முறுவல் கொண்டனை - புன்னகை கொண்டாய்; தமியோர் மாட்டு - தலைவியரைப் பிரிந்த தனிமையை யுடையோர்பால், நகுவை போல காட்டல் இது தகுமோ - எள்ளி நகைப்பாய் போலக் காட்டுதலாகிய இது நினக்குத் தகுமோ ?

(முடிபு.) முல்லை, வாழி ! முல்லை, புலத்து மாலையில் நீ முகையின் முறுவல்கொண்டனை , தமியோர்மாட்டு நகுவைபோலக் காட்டல் தகுமோ ?

(கருத்து.) நான் தலைவியைப் பிரிந்தமையை இகழ்ந்து என்னைச் சிரிப்பதுபோல் இம்முல்லைக்கொடிகள் பூத்தன.

(வி - ரை.) கார் - பெய்யும் நிலையிலுள்ள மேகம். தம்தம் செயல் முடிந்து மாலையில் யாவரும் வீடுபுகுவராதலின், 'பலர் புகுதரூஉம் மாலை' என்றான். தலைவியோடு சேரப்பெற்றிலனாதலின் அவனுக்குப் புல்லென் மாலையாயிற்று. காம மயக்கத்தால் முல்லையை நகைப்பதுபோலக் கொண்டு இது கூறினான்.

வாழியென்றது குறிப்புமொழி. நகுதலாவது, இந்தக் கார்ப் பருவத்திலும் தலைவியைச் சேராது தனித்தனையே யென்று எள்ளி நகுதல். தமியோரென்று பன்மையிற் கூறினும் கருதியது தன்னையே யென்க.

வாழியோ : ஓ அசைநிலை. மற்று, ஏ : அசைநிலைகள்.

(ஒப்பு.) 2. புல்லென் மாலை : அகநா. 234 : 14 ; பு. வெ. 296.

3. முல்லையை முன்னிலைப்படுத்திக் கூறுதல் : "நின்னுடைக் கேண்மை யெவனே முல்லை" (தொல். அகத். 3, ந. மேற்.)

2-3. மாலையில் முல்லை மலர்தல் : குறுந். 108 : 4-5, ஒப்பு.

1-3. கார்புறந்தந்த புலத்து முல்லை : குறுந். 126 : 3, ஒப்பு.

3-5. முல்லை நகுதல் : குறுந். 126 : 3-5, ஒப்பு ; 186 : 2-3.

(கசுஉ)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவினால் வருந்துந் தலைவி காமமிகுதியாற் கடலை நோக்கி, "நீ நள்ளிரவிலும் ஒலிக்கின்றனையே; யாரால் வருத்த முற்றாய்?" என இரங்கிக் கூறியது.]

கசுஉ. யாரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளாத் தோடுபரந் தன்ன
மீனூர் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
5. நள்ளென் கங்குலுங் கேட்குநின் குரலே.

எ - து. தன்னுட் கையாறெய்திடு கிளவி.
[கையாறு - செயலறுதல்.]
அம்மூவன்.

(பி - ம்.) 1 'கடலே யூழி' 4 'தாழைத்திரை'

(ப - ரை.) கடலே—, பூழியர் - பூழிநாட்டாரது, சிறு தலை - சிறிய தலையையுடைய, வெள்ளா தோடு பரந்தன்ன - வெள்ளாட்டின் தொகுதி பரவினாற்போன்ற, மீன் ஆர் குருகின் - மீனை உண்

ணும் கொக்குகளையுடைய, கானல் பெரு துறை - சோலை சூழ்ந்த பெரிய துறையினிடத்து, வெள் வீ தாழை - வெள்ளிய பூவையுடைய தாழையை, திரை அலை - அலைகள் அலைக்கின்ற, கள்ளென் கங்குலும் - நடு இரவிலும், நின் குரல் கேட்கும் - நினது ஆரவாரம் செவிப்படும்; யார் அணங்கு உற்றனை - நீ யாரால் வருத்த மடைந்தாய்?

(முடிபு.) கடலே, கங்குலும் நின்குரல் கேட்கும்; யார் அணங்குற்றனை?

(கருத்து.) கடலே, நீ யார் பிரிவுபற்றி வருந்துகின்றாய்?

(வி - ரை) தலைவனைப் பிரிந்த காம மயக்கத்தால் கடலைப் பார்த்துத் தலைவி கூறியது இது. கள்ளென் கங்குலிலும் துயிலா மல் அரற்றும் நிலையையுடைய அவள் கடலையும் தன்னைப் போன்ற தெனக் கருதி, "யான் ஒரு தலைவனால் அணங்குற்றதுபோல நீயும் ஒரு தலைவனால் அணங்குற்றனைபோலும்! அத்தலைவன் யார்?" என்று வினவினள்.

பூழிநாட்டினர் ஆட்டுநிரையுடையரென்ற செய்தி, "பூழியர், உருவத் துருவி ணெய்மெய லாரும்" (நற். 192 : 3-4) என்றவிடத்தும் காணப்படுகின்றது. வெள்ளை - வெள்ளாடு (மலைபடு. 414, ந.) கானலம் பெருந்துறை : அம் சாரியை. கானல் - கடற்கரைச் சோலை. வெள்வீத் தாழை யென்றாள் செந்தாழையும் உண்மையின்.

நள்ளென் கங்குலில் நின்குரல் கேட்குமென்றமையால் அதனைக் கேட்பாளாகிய தலைவியும் அந்நள்ளிரவில் துஞ்சாமை பெறப்படும்.

(மேற்.) மு. கடலொடு கவலல் (களவியற்.)

(ஒப்பு.) 2. சிறுதலை வெள்ளாத்தோடு: "இடையன், சிறுதலை யாய மொடு குறுகல் செல்லா" (புறநா. 54 : 11 - 2.) வெள்ளை : அகநா. 104 : 9, 107, 156. 14. ஆட்டின் தோடு: "ஆடுதலைத் துருவின் ரோடு" (அகநா. 274 : 4.) 3. மீனர் குருகு: அகநா. 40 : 3. கானலம் பெருந்துறை: அகநா. 90 : 3; 280 : 14. மு. அகநா. 300 : 4.

4. தாழையின் மலர் திரையால் அலைக்கப்படுதல்: "தயங்குதிரை பொருத தாழை வெண்பூ" (குறுந். 226 : 5.)

நள்ளென் கங்குல்: குறுந். 6 : 1, ஒப்பு; 160 : 4, ஒப்பு.

மு. "பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கடல்
தூவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிறம்
நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றுரை யுடையையோ நீ"

(கலி. 129 : 8-11);

"மணிநிற நெய்த லிருங்கழிச் சேர்ப்பன்
அணிநல மூண்டகன்ற னென்றுகொ லெம்போற்
றிணிமண லெக்கர்மே லோதம் பெயரத்
துணிமுந்நீர் துஞ்சா தது"

(ஐங். எழு. 60);

"பூங்கணை வேளைப் பொடியாய் விழவிழித் தோன்புலியூர்
ஓங்கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந் தோலமிட்டுத்
தீங்கணைந் தோரல்லுந் தேரும் கலங்கிச் செறிகடலே
ஆங்கணைந் தோர்நின் னையுமுள ரோசென் றகன்றவரே"

(திருச்சிற். 179);

"காமுற்ற யாமன்றே காளத்தி யான்கழற்கே
யாமுற்ற துற்ற யிருங்கடலே—யாமத்து
ஞாலத் துயிரெல்லாங் கண்டுஞ்சு நள்ளிருள்கூர்
காலத்துந் துஞ்சாதுன் கண்" (கைலைபாதி. 64);

"தன்போற் சினத்துரு மேந்திய கோன்கன்னித் தண்டுறையும்
பொன்போன் மலர்புன்னைக் கானலு நோக்கிப் புலம்புகொண்ட
என்போ லிரவினெல் லாந்துயி லாதுநின் றேங்குதியால்
அன்போ டொருவற் கறிவழிந் தாயோ வலைகடலே"

(பாண்டிக்.);

"உன்னையு நீத்தகன்ற ருண்டோ வுடல்கருகிப்
புன்னை கமழும் பொருகடலே—என்னைப்போல்
நெஞ்சா குலம்பெருகி நீயு மிரவெல்லாம்
துஞ்சாத தென்கொலோ சொல்" (திவித்தெளிவு.)

குறிப்பு;—இத்தகைய செய்யுட்கள் பல பிற்காலத்துப் பிரபந்தங்களில் உண்டு; தீவ். திருவாய். 2. 1 : 3 முதலியன (ககூ)

காதற்பரத்தை கூற்று

[தலைவி தன்னைப் புறங்கூறினனெனக் கேட்ட காதற்பரத்தை, தலைவிக்குப் பாங்காயினர் கேட்பத் தன்தோழியை நோக்கிக் கூறுவாளாய், "தலைவி குறை கூறுதற்குரிய குற்றம் உடையேமெனின் எம்மைக் கடல் வருத்துக" என்று சொல்லியது.]

ககூச. கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு
துணர்த்தேக் கொக்கின் றீம்பழங் கதூஉம்
தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்க் குணது
தண்பெரும் பவ்வ மணங்குக தோழி

5. மனையோண் மடமையிற் புலக்கும்
அனையே மகிழ்நற்கியா மாயின மெனினே.

எ - து. காதற்பரத்தை தலைமகட்குப் பாங்காயினர் கேட்ப உரைத்தது.

[ஒப்பு: அகநா. 76, கருத்து.]

மாங்குடி மருதன்.

(பி - ம்) 1 'கனைக் கோட்டு' 2 'துணர்த்தேங்' 3 'தொன்று முது'

(ப - ரை.) தோழி—, மனையோள் மடமையின் புலக்கும் அனையேம் - தலைவி தன் அறியாமையாற் புலப்பதற்குக் காரணமாகிய அத் தன்மையேமாக, மகிழ்நற்கு - தலைவன் திறத்து, யாம் ஆயினம் எனின் - நாம் ஆயினேமாயின், கணை கோடு வாளை - திரண்ட கொம்பையுடைய வாளை மீனினது, கம சூல் மடம் நாகு - நிறைந்த கருப்பத்தையுடைய மடப்ப மிக்க பெண்ணினது, துணர் தேக் கொக்கின் - கொத்தையுடைய தேமாவினது, தீ பழம் - உதிர்ந்த இனிய பழத்தை, கதூஉம் - கவ்வுதற்கிடமாகிய, தொன்றுமுதிர் வேளிர் - மிகப் பழைய வேளிருக்குரிய, குன்றூர் குணது - குன்றூருக்குக் கிழக்கின் கண்ணுள்ளதாகிய, தண் பெரு பவ்வம் - தண்ணிய பெரிய கடல், அணங்குக - எம்மை வருத்துவதாக.

(முடிபு) தோழி, மனையோள் புலக்கும் அனையேம் மகிழ்நற்கு யாம் ஆயினம் எனின், பவ்வம் அணங்குக.

(கருத்து) தலைவி அறியாமையால் எம்மைக் குறைகூறுகின்றாள்.

(வி - ரை.) கோடு - பக்கமுமாம். துணரென்றது மலர்க்கொத்துக்கேயன்றிக் காய்க்கொத்து பழக்கொத்து ஆகியவற்றிற்கும் வரும்; "பைம்பாகற் பழந்துணரிய, செஞ்சுளைய கனிமாந்தி" (பொருந. 191-2) என்பதன் உரையைப் பார்க்க. தேக்கொக்கு - தேமாவென்னும் சாதி. நீரளவுந் தாழ்ந்த பழக்கொத்திலுள்ள கனியை வாளை கவ்வுமென்பதும் பொருந்தும். தொன்றுமுதிர் வேளிர் - மிகப் பழங்காலமுதல் இந்நாட்டில் இருந்து பழமையுற்ற வேளிர்.

பவ்வம் அணங்குகவென்றது யாம் செய்த குற்றத்திற்குரிய தண்டமாகக் கடல் எம்மை வருத்துக வென்றபடி; கடல் தன்பாலுள்ள தெய்வத்தால் எம்மை வருத்துகவெனலும் ஒன்று.

மனையினிடத்தே இருப்பவளுக்குப் புறத்தே நிகழும் செய்தி

அறிதற் கியலாதென்னும் நினைவினளாதலின் மனை யோளென்றுள் மடமை - அறியாமை. புலத்தல்: 'இவள் என் கொழுநனை வலியின் நயப்பித்துக்கொண்டு புறம்போகாவாறு செய்தனள்' என்று பழிகூறி வெறுத்தல்.

ஆயினமெனினென்றது ஆகாமையை உணர்த்தி நின்றது.

'வானோகு தான் இருந்தவிடத்தே யிருந்து முயற்சி சிறிதின்றி எளிதில் கொக்கின் பழத்தைப் பெற்றதுபோல, யாம் முயலாமே தலைவன் வலியவந்து எம்மை நயப்ப யாம் அவனோடு உறைந்தேம்; ஆதலின் யாம் குறைகூறற்குரியேமல்லேம்' என்று காதற் பரத்தை கூறினள்.

(மேற்.) 1. ஈகென்பது இளமைக்கு வரும் (தொல். மரபு. 26, பேர்.)

(ஒப்பு) 1. கணைக்கோட்டு வாளை: நற். 340: 4; அகநா. 126: 8; புறநா. 249: 2. 2. தேக்கொக்கு: குறுந். 26: 6, ஒப்பு. 1-2. வாளை மாம்பழத்தை உண்ணுதல்: குறுந். 8: 1-2, ஒப்பு. 3. தொன்றுமுதிர் வேளிர் குன்றூர்: நற். 280: 8. (கசுசை)

தலைவன் கூற்று

[தோழியினிடம் இரந்து நின்றும் உடம்பாடு பெறுத தலைவன் தலைவிபாற் சென்ற தன் நெஞ்சை நோக்கி, "ஒருமுறை விரும்பி அறிவிழந்தாய்; மீண்டும் விழைகின்றாய்!" என்று கூறியது.]

கசுடு. மகிழ்ந்ததன் றலையு நறவுண் டாங்கு
விழைந்ததன் றலையு நீவெய் துற்றனை
அருங்கரை நின்ற வுப்பொய் சகடம்
பெரும்பெய றலையவீந் தாங்கிவள்
5. இரும்பல் கூந்த லியலணி கண்டே.

எ - து. பின்னின்ற தலைமகன், மறுக்கப்பட்டுப் பெயர்த்துங் கூடலுறு (பி - ம். பெயர்ந்ததுங் கூடலு) நெஞ்சிற்குச் சொல்லியது.

[பின்னிற்றல் - வழிபடுதல்.]

பரணர்.

(பி - ம்.) 2 'விழைத்ததன்' 4 'பெரும்புயற்றலை', 'பெரும் பெயற் றலையவிந் தாங்', 'றலையவீ இந் தாங்'

(ப - ரை.) நெஞ்சே, அரு கரை நின்ற - ஏறுதற்கரிய கரையில் நின்ற, உப்பு ஒய் சகடம் - உப்பைச் செலுத்துகின்ற வண்டி, பெருபெயல் தலைய - பெரியமழை பொழிந்ததனால், வீந்தாங்கு - அழிந்ததுபோல, இவள் இரு பல் கூந்தல் - இவளது கரிய பல

வாகிய கூந்தலின், இயல் அணிகண்டு - இயற்கை அழகைக்கண்டு, மறுக்கப் பட்டோமென்று அன்பு ஒழியாயாய்க் காமத்தால் நாண் அழிந்து, மகிழ்ந்ததன் தலையும் - கள்ளுண்டு அறிவிழந்து களித்த தன்மேலும், நற உண்டாங்கு - கள்ளை உண்டாற்போல், நீ—, விழைந்ததன் தலையும் - ஒருமுறை விரும்பியதன் பின்னும், வெய்து உற்றனை - விருப்பத்தை அடைந்தாய்.

(முடிபு) சகடம் வீந்தாங்கு இவள் கூந்தல் அணிகண்டு நற வுண்டாங்கு நீ வெய்துற்றனை.

(கருத்து) நீ தலைவியோடு அளவளாவ விரும்பல் மயக்கத் தின் பாற்பட்டது.

(வி - ரை.) தலைவியைப் பாங்கிவாயிலாக அடையவிரும்பிய தலைவன் அவள்பாற் பணிந்து குறையிரந்தும் அவள் உடம்படாத காலத்து, விருப்பம் மிக்க தன்நெஞ்சை நோக்கிக்கூறியது இது.

மகிழ்தல் - கள்ளுண்டார் அறிவிழந்து நின்று களித்தல் (குறள், 1281, பரிமேல்.) ஒருமுறை கள்ளுண்டு மீட்டும் உண்ணும் வேட்கையைக் காமமுடையார் நிலைக்கு உவமைகூறும் வழக்கு, .

> "களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்றுற் காமம்
> வெளிப்படுந் தோறு மினிது" (குறள், 1145)

என்பதிலும் காணப்படும்.

வெய்துறுதல் - விருப்புறுதல் (குறுந். 363 : 6); வெம்மை விருப்பமாதல்போல அதன் வேறுவாய்பாடாகிய வெய்தும் விருப்பமாயிற்று ; வெய்துறல் - வெப்பத்தையடைதலெனலுமாம் (பெருங் க. 35 : 51.)

'உப்பொய் சகடமென்பதை, சகடம் ஒய்த உப்பென்று மாறிக் கூட்டுக ; "குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே" (புறநா. 58 : 32) என்றவிடத்து, நாடுகெழுகுன்றெனக் கூட்டிப் பொருள் செய்தல்போல. ஒய்தல் - செலுத்துதல் (பதிற். 87 : 4, உரை ; புறநா. 70 : 17, உரை.)

'பெரும்பெயற்றலை யவிந்தாங்கு' என்ற பாடத்துக்குப் பெரிய மழையினிடத்து அழிந்ததுபோலவெனப் பொருள் கொள்க. இவளென்று தலைவியைச் சுட்டினான், நெஞ்சிற்கணியளாக விருத் தல் பற்றி (புறநா. 72 : 2, உரை.) ஐந்து பிரிவாக உள்ளதாதலின் பல்கூந்தலென்றான். வெய்தாம் அக்காமவிடாய் தீர்த்தற்குக் கூந்தலின் நிழல் உதவுதலின் கூந்தலணிகண்டு நெஞ்சு விரும்பியது.

உப்பொய் சகடமானது பெருமழையால் அழிந்தது போல நீ நாணும் உரனும் அழிந்தாயெனவும், ஒருமுறை கள்ளுண்டான்

நாணும் அறிவும் அற்று மயங்கினும் அதனை உணராது மீண்டும் உண்டுமகிழ்ந்தது போல ஒருமுறை தலைவியை விரும்பி இத்தோழி பாற்பணிந்து குறையிரந்து நாணழிந்து நின்றும் அமையாமல் மீண்டும் விரும்பினை யெனவும் உவமைகளை விரித்துக்கொள்க.

(ஒப்பு.) 1. மகிழ்ந்ததன் றலையும் நறவுண்ணுதல்: "களித்தார்க்குக், கள்ளற்றே" (குறள், 1288.) 1-2. காமம் உற்றருக்குக் கள்ளுண்போர் உவமை: "உட்கொண் டரற்று முறுபிணி தலைஇக், கட்கொண் டாங்குக் களிநோய் கனற்ற", "நறவினை தேற லுறுபிணி போலப், பிறிதிற் நீராப் பெற்றி நோக்கி" (பெருங். 1. 35: 50-51, 2. 16: 63-4.)

3. உப்பொய் சகடம்: "நோன்பகட் டுமண ரொழுகை" (சிறு பாண். 55); "பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச், சில்பத வுணவின் கொள்ளை சாற்றி" (பெரும்பாண். 63-4); "உப்பின் கொள்ளை சாற்றி, நெடுநெறி யொழுகை நிலவுமண லீந்தி" (நற். 183: 2-3); "உப்பொ யுமண ரருந்துறை போக்கும், ஒழுகை" (அகநா. 30: 5-6); "உமணர், உப்பொ யொழுகை" (புறநா. 116: 7-8.)

4. பெரும் பெயல்: குறுந். 13: 2, 133: 3, 168: 3; முல்லை. 6. பெயல் தலை: "தலைப்பெய றலைஇய" (முருகு. 9)

3-4. உப்பு மழையால் அழிதல்: "கடல்விளை யமுதம் பெயற்கேற் றழங், குருகி யுகுதல்" (நற். 88: 4-5); "உப்பியல் பாவை யுறையுற் றதுபோல, உக்கு விடுமென் னுயிர்" (கலி. 138: 16-7); "நெடுவெள் ளுப்பி னிரம்பாக் குப்பை, பெரும்பெயற் குருகி யாஅங்கு", "மிகுபெயல், உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல, நாணுவரை நில்லாக் காம நண்ணி" (அகநா. 206: 14-5, 208: 18-21); "உப்பின் பெருங்குப்பை நீர்படியி னில்லாகும்" (திரி. 83); "கடும்புன னெருங்க வுடைந்துகில யாற்று, உப்புச் சிறைபோ லுண்ணெகிழ்ந் தருகி" (பெருங். 3. 20: 120-21); "ஒளிநல வுப்புக் குன்ற மூர்புனற் குடைந்த தேபோல்" (சீவக. 813.)

5. இரும்பல் கூந்தல்: குறுந். 19: 5, ஒப்பு; ஐங். 231: 2, 281: 3; அகநா. 142: 18; புறநா. 120: 17. (கசூடு)

தோழி கூற்று

[தாய் முதலியோருடைய பாதுகாப்பின்கண் தலைவி இருத்தலால் தலைவன் அவளைக்கண்டு அளவளாவுதல் அரிதாயிற்றுக, அதனால் உண்டான துன்பத்தைக் குறிப்பிப்பாளாகி, மரந்தையூர் சிறந்ததாயினும் தனிமையினால் வருத்தந் தருவதாகின்றதென்று தோழி கூறியது.]

கசூசு. தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும் [பறை

ஊரோ நன்றுமன் மரந்தை
ஒருதனி வைகிற் புலம்பா கின்றே.

எ - து. காப்பு மிகுதிக்கண் தோழி தலைமகட்கு உரைத்தது. கூடலூர் கிழார்.

(பி - ம்.) 1 'நிறைபோத்', 'நிரைபெயர்த்', 'நிரைபோத்' 3 'மாந்தை', 'மாநகை'

(ப - ரை.) தண் கடல் படு திரை பெயர்த்தலின் - குளிர்ந்த கடற்கண்ணே உண்டாகும் அலைகள் மீன்களைப் பெயரச்செய்வ தனால், வெள் பறை நாரை நிரை - வெள்ளிய சிறகுகளையுடைய நாரையின் வரிசை, பெயர்ந்து அயிரை ஆரும் - நீங்கி அயிரைமீனை உண்ணுதற் கிடமாகிய, ஊர் மரந்தை - ஊராகிய மரந்தை, நன்றுமன் - தலைவனோடு இருக்குங்கால் மிக நன்மையையுடையது; ஒரு தனி வைகின் - தலைவனைப் பிரிந்து தனியே தங்குவேமாயின், புலம்பு ஆகின்று - வருத்தத்தைத் தருவதற்குக் காரணமாகின்றது.

(முடிபு) மரந்தை நன்றுமன்; தனிவைகிற் புலம்பாகின்று.

(கருத்து) தலைவனைப் பிரிந்திருத்தல் துன்பத்துக்குக் காரண மாகின்றது.

(வி - ரை.) திரை மீனைப் பெயர்த்தாலும் நாரை அம்மீன் உள்ள இடத்தே சென்று அதனை ஆர்ந்தது போல, தாயர் முதலி யோர் இற்செறித்துக் காப்பிடை வைப்பினும் தலைவன் தலைவி யிருக்குமிடத்து வந்து கண்டு இன்புறல் வேண்டுமென்பது குறிப்பு.

மரந்தை இயற்கை யழகால் நன்மையையுடையது; ஆயினும் தலைவன் இல்லாத் தனிமையால் புலம்புடையதாயிற்றென்று கூறலும் பொருந்தும். மரந்தை கடற்றுறைப்பட்டின மாதலின் கடலில் நிகழும் நிகழ்ச்சியை அதற்கு அடையாக்கினள். ஒருதனி - மிக்கதனிமை. தமக்கினிய சுற்றத்தார் சூழவிருப்பினும் தலைவனில் வழித் தனிமைத் துன்பம் தோற்றும்; இது புலம்பித் தோன்ற லென்னும் மெய்ப்பாடு (தொல். மெய்ப். 18, பேர்.) புலம்பு - தனிமையால் வரும் வருத்தம்.

ஓ, ஏ : அசைநிலைகள். நன்று - முன்பு நன்றாக இருந்தது; மன் - அதுகழிந்ததே யெனலும் பொருந்தும்.

(ஒப்பு.) 1. பறை : குறுந். 125 : 5, 172 : 1.

2. நாரை அயிரைமீனை உண்ணுதல் : (குறுந். 128 : 1-3, ஒப்பு); "தடந்தா ணாரை யிரிய வயிரைக், கொழுமீ னர்கைய" (பதிற். 29 : 4-5.)

3. மரந்தை : குறுந். 34 : 6, ஒப்பு. 4. ஒரு தனி : மணி. 3 : 31, 4 : 9, 96,

8 : 27, 15 : 76, 16 : 33, 18 : 56, 20 : 94 ஆகின்று : குறுந். 15 : 4, ஒப்பு, 105 : 6. 3. 4. தலைவரோடு கூடின் ஊர் நன்று, இன்றெனின் நன்றன்று : " இனிதே காணுநர்க் காண்புழி வாழ்தல, கண்ணுறு விழுமங் கைபோ லுதவி, நம்முறு துயரங் களையா ராயினும், இன்ன தன்றே யவரில் லூரே " (நற். 216 : 2-5); " தமரையில் லார்க்கு, நகரமுங் காடுபோன் றுங்கு " (பழ. 3) (ககூசு)

செவிலித்தாய் கூற்று

[தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று வந்த செவிலி நற்றாயினிடத்தில், " தலைவி தலைவன் உவக்கும்படி அட்டு உண்பிக்கின்றாள் " என்று கூறியது]

ககூஎ. முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
5. இனிதெனக் கணவ னுண்டலின் [னே.
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முக

எ - து. கடிநகர்ச் சென்ற (பி - ம். கடிநகர் சென்ற) செவிலித் தாய் நற்றாய்க்குரைத்தது.

[கடிநகர் - தலைவனும் தலைவியும் மணம்புரிந்து கொண்டு இல்லறம் நடத்தும் மனை. சென்ற - சென்று மீண்ட]

கூடலூர் கிழார்.

(பி - ம்.) 2. 'கழாஅதுரீஇ' 3 'குய்புகை' 'கழுமத்'

(ப - ரை) தோழி, முளி தயிர் பிசைந்த - முற்றிய தயிரைப் பிசைந்த, காந்தள் மெல் விரல் - காந்தள்மலரைப்போன்ற மெல்லியவிரலை, கழுவுறு கலிங்கம் - துடைத்துக்கொண்ட ஆடையை, கழாஅது உடீஇ - துவையாமல் உடுத்துக்கொண்டு, குவளை உண்கண் - குவளை மலரைப்போன்ற மையுண்ட கண் களில், குய் புகை கமழ - தாளிப்பினது புகை மணப்ப, தான் துழந்து அட்ட - தானே துழாவிச் சமைத்த, தீ புளி பாகர் - இனிய புளிப்பையுடைய குழம்பை, கணவன் - தன் தலைவன், இனிது என உண்டலின் - இனிதென்று உண்பதனால், ஒள் நுதல் முகன் - தலைவியின் முகமானது, நுண்ணிதின் மகிழ்ந்தன்று - நுண்ணிதாக மகிழ்ந்தது.

(முடிபு) தான் அட்ட பாகரைக் கணவன் இனிதென உண்டலின் ஒண்ணுதல் முகன் மகிழ்ந்தன்று.

(கருத்து) தலைவி தன் தலைவனுக்கு வேண்டியவற்றை அவன் மகிழும்படி செய்துவருகின்றாள்.

(வி - ரை.) முளிதயிர் - நன்றாக முற்றிய தயிர்; முளிதல் - காய்தல்; நன்றாகக் காய்ந்த பாலால் உண்டாகிய தயிரென்று கொள்க; இதனை, "பாறைபடுதயிர்" (சீவக. 426) என்பர்.

இறுகிய தயிராதலின் தலைவி புளிக்குழம்பு செய்யும் பொருட்டுத் தன் மெல்விரலால் துழாவித் தாளிதம் செய்தாள். விரைவில் அமைக்கவேண்டுமென்னும் விருப்பினளாதலின் தயிர் பிசைந்த கையைத் துடைத்த ஆடையைத் துவைத்தலை மறந்தாள்; கையை ஆடையிற்றுடைத்தது செல்வ மிகுதியால் வந்த இயல்பு. "ஏனது சுவைப்பினு நீகை தொட்டது, வானே ரமுதம் புரையுமா லெமக்கென" (தொல். கற்பு. 5) விரும்புபவனுதலின் இனிதென உண்டான்.

தலைவி கொண்ட அகமகிழ்ச்சியை முகம் காட்டியது. இயல் பாகவே பொலிவுபெற்ற நுதல் மகிழ்ச்சியாற் பின்னும் பொலி வுடையதாயிற்று. அம்மகிழ்ச்சியை மிகுதியாக வெளிப்படுத்தா மையின் நுண்ணிதின் மகிழ்ந்தன்றென்றான். அங்ஙனம் வெளிப் படுத்தின் அது தருக்கின்பாற்படும்.

இதனால் தலைவி தற்கொண்டானைப் பேணுந் தகை சிறந்தா ளென்பதைச் செவிலி உணர்த்தினளாயிற்று.

(மேற்.) 5 - 6. கற்பினுள், நகுநயமறைத்தலென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 19, பேர்.)

மு. அடிசிற்றொழிலின்கண் மகிழ்ச்சியாகிய தலைவியின் மாண்பை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முள் தாம் கூறியது (தொல். கற்பு. 11, இளம், ந.); 'இது பார்ப்பானையும் பார்ப்பனியையுந் தலைவராகக் கூறி யது. கடிமனைச் சென்ற செவிலி கூற்று. வாயில் நேர்வித்தலுமாம்' (தொல். அகத். 24, ந.); உலகியல் வழக்கே வந்தது (தொல். அகத். 53, ந.; இ. வி. 378); செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனைவாழ்க்கைத் தன்மை உணர்த்தியது (நம்பி. 203.)

(சூ. பு.) இப்பாட்டிற் கூறப்படும் உணவு வகையினுல் நச்சினார்க்கினியர் 'பார்ப்பானையும் பார்ப்பனியையும் தலைவராகக் கூறியது' எனக் கொண் டனர் போலும்; பெரும் பாணாற்றுப்படையில் அந்தணர்மனையிற் பாணர் பெறும் உணவைப்பற்றிக் கூறியிருக்கும் பகுதி (304 - 10) இங்கே ஆராய் தற்குரியது.]

(ஒப்பு.) 1. முளிதயிர்: அகநா. 394: 2; கம்ப. கிட்கிந்தை. 21. காந்தள் மெல்விரல்: பொருந. 33.

1 - 2. தயிர் முதலியவற்றை ஆடையில் துடைத்துக்கொள்ளல் : "நெய்யுங் குய்யு மாடி மையொடு, மாசுபட் டன்றே கலிங்கமுந் தோளும்" (நற். 380 : 1 - 2.)

3 - 4. "கிளரிழை யரிவை நெய்துழந் தட்ட, விளரு னம்புகை யெறிந்த நெற்றிச், சிறுநுண் பல்வியர் பொறித்த, குறுநடை" (நற். 41 : 7 - 10.) (ககூஎ)

தலைவன் கூற்று

[பொருள்தேடத் துணிந்த நெஞ்சை நோக்கி, "தலைவியைப் பிரியின் உயிர்வாழ்தல் அரிது" என்று தலைவன் கூறியது]

ககூஅ. மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து
பெரும்பெயல் விடியல் விரித்துவிட் டன்ன
நறுந்தண் ணியளே நன்மா மேனி
5. புனற்புணை யன்ன சாயிறைப் பணைத்தோள்
மணத்தலுந் தணத்தலு மிலமே
பிரியின் வாழ்த லதனினு மிலமே.

எ - து. பொருள்வலிக்கும் நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

[பொருள்வலிக்கும் - பொருள்தேடும் முயற்சியைத் துணியும்]

சிறைக்குடி யாந்தையார்

(பி - ம்.) 2 'பசுங்கொடைப்' 3 'பெரும்புலர்' 5 'சாயிறை யணைத்தோள்' 6 'மணத்தொறும்'

(ப - ரை.) நெஞ்சே, தலைவி, நல் மா மேனி - நல்ல மாமையை யுடைய மேனி, மாரி பித்திகத்து - மாரிக்காலத்தில் மலரும் பிச்சி யினது, நீர் வார் கொழு முகை - நீர் ஒழுகும் கொழுவிய அரும்பு களில், இரு பனை பசு குடை - பெரிய பசிய பனங்குடையில், பல உடன் பொதிந்து - பலவற்றை ஒருங்கே வைத்து மூடி, பெரு பெயல் விடியல் - பெருமழை பெய்தலையுடைய விடியற் காலத்தே, விரித்துவிட்டன்ன - விரித்து விட்டாற் போன்ற, நறு தண்ணி யள் - நறுமையையும் தண்மையையும் உடையவள்; புனல் புணை அன்ன - நீரில் விடும் தெப்பத்தைப் போன்ற, சாய் இறை பணை தோள் - வளைந்த சந்தினையுடைய பருத்த அவள் தோள்களை, மணத்தலும் - பொருந்துதலும், தணத்தலும் - பிரிதலும், இலம்-; பிரியின் - பிரிவோமாயின், வாழ்தல் - உயிர் வாழ்தல், அதனினும் - அதனைக் காட்டிலும், இலம் - இல்லேம்.

(முடிபு) மேனி நறுந்தண்ணியள்; தோள் மணத்தலும் தணத்தலும் இலம்; பிரியின் வாழ்தல் அதனினும் இலம்.

(கருத்து) தலைவியைப் பிரிதல் அரிது.

(வி - ரை.) மாரிக்காலத்தில் அரும்பியதாதலின் நீர்வார் கொழு முகை யாயிற்று. பித்திகம் மாரிக்காலத்தில் அரும்பி மலர் வதென்பது: குறுந். 94, வி - ரை. குடை - உட்குழிவாகப் பணை யோலையால் அமைக்கப்பட்டதொரு கருவி.

மேனியியல்பையும் தோளியல்பையும் கூறினன், அவற்றுற் கவரப்பட்டுப் பிரியமாட்டாமையின். புணை - பேய்க்கரும்பாற் செய்த தெப்பம் (கலி. 56: 20, ந.) சாயிறை - வளைந்த சந்து (அகநா. 32. 18, உரை); மெல்லிய சந்தென லுமாம்.

எப்பொழுதும் தோளோடு ஒன்றுபட்டு இருத்தலின், புதிதாகு மணத்தலும் பின்பு தணத்தலும் இலமென்றான்; அதனினுமென்ற சுட்டு, தணத்தலும் இலமென்பதிலுள்ள இன்மையைச் சுட்டியது.

(ஒப்பு.) 1. மாரிப்பித்திகம்: குறுந். 94: 1, ஒப்பு. மு குறுந். 222: 5. 1 - 2. மலர்களைப் பனங்குடையிற் பெய்தல்: "அவல் வகுத்த பசுங்குடையாற், புதன்முல்லைப் பூப்பறிக் குந்து" (புறநா. 352: 3 - 4) 3. பெரும்பெயல்: குறுந். 165: 4, ஒப்பு. 4. நறுந்தண்ணியள்: குறுந். 70: 2, ஒப்பு. நன் மாமேனி: குறுந். 185: 8. 1 - 4. தலைவியின்மேனிமணத்திற்கு மலர்: குறுந். 62: 1 - 4, ஒப்பு. 5. புனற்பணையன்ன தோள்: "எந் தோள்புரை புணையே" (ஐங். 78: 4); "முழங்கு நீர்ப் புணையென வமைந்தநின் றடமென்றோள்" (கலி. 56: 20.) இறைப்பணைத்தோள்: குறுந். 279: 8 7. பிரியின்வாழாமை: குறுந். 32: 6, ஒப்பு. வாழ்தல் அதனினு மிலம்: "யானுயிர் வாழ்த லதனினு மரிதே" (அகநா- 98: 30.) அதனினும் இலம்: புறநா. 192: 13. (கசுஅ)

தலைவி கூற்று

[தலைவன் தன்பால் பரத்தைமை இல்லையென்று தலைவியினிடம் கூறித் தெளிவிக்குங் காலத்து, தலைவி, "எம் உயிர் நீங்குவதாக!" என்று கூறியது.]

கசுகூ. சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே;
பாணர், பசுமீன் சொரிந்த மண்டை போல
5. எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே.

எ - து. (1) கற்புக்காலத்து தெளிவிடை விலங்கியது.

[களவுக் காலத்தும் வரைவு நீட்டித்துத் தலைவன் சூளுற்ற வழி அதற்கு நொந்து தெளிவிடை விலங்கல் (தொல். களவு. 20,ந.) உண்மையின், இங்கே அதனின் வேறுபடுத்தக் கற்புக்காலத் தென்பதமைக்கப்பட்டது. தெளிவு - தலைவன் தான் யாதொரு குற்றமும் செய்யாமையை ஏதுவானும் சூளினானும் தலைவி தெளியச் சொல்லுதல். விலங்கியது - தலைவி மாறுப்பட்டது. இதனை அகப்பொருட் பெருந்திணைக் குரிய துறை யாக்குவர் அகப்பொருள் விளக்கமுடையார் (கம்பி. 243)]

(2) இனி, தோழி வரைவு நீட்டித்தவழி வரைவுகடாயதூஉ மாம்.

வெள்ளி வீதியார்.

(பி - ம்.) 1 'சுரஞ் செல்லியானைக்' 2 'மற்றியான்' 5 'எமக்குப்'

(ப - ரை) ஐய—, யாம் நும்மொடு நக்க வால்வெள் எயிறு - யாம் நும்மோடு மகிழ்ந்து சிரித்த தூய வெள்ளிய பற்கள், சுரம் செல்யானை - பாலை நிலத்திற் செல்லும் யானையினது, கல் உறு கோட்டின் - மலையைக் குத்திய கொம்பைப் போல, தெற்றென - விரைவாக, இறீஇயர் - முறிவனவாக; எம் உயிர் - எமது உயிர், பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல - பாணர் தாம் பிடித்த பச்சை மீனைப் பெய்த மண்டையைப் போல, எமக்கும் பெரு புலவாகி-எமக்கும் பெரிய வெறுப்பைத் தருவதாகி, நும்மும் பெறேஎம் - உம்மையும் யாம் பெறேமாய், இறீஇயர் - அழிக.

(முடிபு) ஐய, யாம் நக்க எயிறு இறீஇயர்; எம் உயிர் எமக்கும் புலவாகி நும்மும் பெறேஎம் இறீஇயர்.

(கருத்து) இனி, நும்மோடு அளவளாவுதலினும் இறத்தல் நன்று.

(வி - ரை.) தலைவன், "யாம் முன்னெநகால் அன்போடு மகிழ்ந்து பயின்று நகையாடினேமன்றே!" என்று பழமையை நினைவுறுத்தினனாக அது கேட்ட தலைவி, "அங்ஙனம் நும்மோடு நகை செய்த எம் பற்கள் இறுவனவாக" என்று சினந்து கூறினள்.

வால்வெள்ளெயிறு - மிக வெண்மையான எயிறெனலுமாம்; ஒரு பொருட் பன்மொழி. பாணர் மீன் பிடித்துத் தமக்குரிய மண்டையிலே இட்டு வைத்தல் மரபு. மண்டை - வாயகன்ற மண்பாத்திரம்; வாணெயென வழங்கும். 'அம்மண்டை மீன்நாற்றத்தைப்

பெற்று வேறொன்றற்குப் பயன்படாதது போல எம் உயிர் எமக்கே வெறுப்புத் தருவதாயிற்று; நுமக்கும் இனிப் பயன் படேம்; இது கழிக' என்றாள். பெறேமென்ற முற்றுவினை இங்கே வினையெச்சப் பொருளில் வந்தது.

தலைவனது பரத்தைமையால் மிக்க சினம் கொண்டவளா தலின் தலைவி இங்ஙனம் கூறினாள்.

இரண்டாவது கருத்து: 'நீ இன்னும் வரைந்துகொள்ளாமல் இருக்கின்றாய்; தலைவி நின்னால் நலனுணப்பட்டாள்; நின்னையும் பெறாள் போலும்; இனி உயிர்கழிக' என்று தோழி கூறியதாகக் கொள்க. இங்ஙனம் வன்மை தோன்றக் கூறின் தலைவன் விரை வில் மணந்து கொள்வானென்பது தோழியின் கருத்து.

(மேற்.) 3. தன் மடத்தால் நகை தோன்றியது, "நீயிர் கூறிய அத னையே மெய்யெனக்கொண்டு மகிழ்ந்து நக்கன மென்றமையின்' (தொல். மெய்ப். 5, பேர்.); நகுநயமறைத்தலென்பது தலைவிமாட்டு நிகழும் மெய்ப் பாடு; இதன்கண் 'நகை கூறிற்றாலெனின், அங்ஙனம் மறைக்கப்பட்ட நகை தலைமகன் அறிந்தது மெய்ப்பாடாமாகலான் அவ்வாறு கூறினனென் பது' (தொல். மெய்ப். 13, பேர்.)

மு. இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலத்துத் தலைவனது தீங்கு உணராது அவனை நன்றாக உணர்ந்த அறிவினது மடப்பங்கூறித் தம் காதற் சிறப்புரைத்தவிடத்துத் தோழி கூறியது; 'இஃது அவனெடு நகு தற்குத் தோன்றிய உணர்வு இன்றியமையாமை கூறித் தம் காதற்சிறப் புரைத்தது' (தொல். களவு. 23, ந.)

(ஒப்பு.) 1. சுரஞ் செல் யானை: அகநா. 65: 16-7; திணைமொழி. ஐம். 1. 3. தலைவனெடு நகுதல்: குறுந். 320: 4-5.

4. பாணரும் மீனும்: பெரும்பாண். 283-7; ஐங். 47: 1-3, 48: 1-3, 49: 1-2, 111: 1-3; அகநா. 216: 1-2. மண்டையில் மீன் சொரிதல்: "மண்டை, இருங்கெடிற்று மிசையொடு பூங்கள் வைகுந்து" (புறநா. 384: 8-9.) பாணர் மண்டை: புறநா. 103: 9, 115: 2, 125: 1-3, 179: 2, 235: 10, 261: 2, 398: 21. (கசுக)

தலைவி கூற்று.

[தலைவன் வரைவிடைவைத்துப் பிரிந்த காலத்தில் அவனது பிரிவை யாற்றாளெனக் கவலையுற்ற தோழிக்கு, "தலைவனது நட்புக் கெடாதென்பதை யான் அறிந்துள்ளேன்; பலர் தமக்குத் தோற்றியவறைச் சொல்லுக. அதனால் யான் உறுதி நீங்கேன்" என்று தலைவி கூறியது.]

கஎ0. பலருங் கூறுகவஃ தறியா தோரே
அருவி தந்த நாட்குர லெருவை

கயநா டியானை கவள மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
5. தலைபோ காமைநற் கறிந்தனென் யானே.

எ - து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கருவூர் கிழார்.

(பி - ம்.) 3 'கடஞுடியானை' 'நன்கறிந்தனன்'

(ப - ரை.) தோழி, யான்—, அருவி தந்த - அருவியால் தரப்பட்ட, நாள் குரல் எருவை - காலத்தில் விளைந்த கொத்தையுடைய கொறுக்காந்தட்டையை, கயம் நாடு யானை - ஆழமான நீர்நிலையை ஆராய்கின்ற யானையானது, கவளம் மாந்தும் - கவளமாக உண்ணும், மலைகெழு நாடன் கேண்மை - மலைகள் பொருந்திய நாட்டையுடைய தலைவனது நட்பு, தலைபோகாமை - கெடாமையை, நற்கு - நன்றாக, அறிந்தனென்; அஃது - அதனை, அறியாதோர் பலரும் - அறியாதோராகிய பலரும், கூறுக - தமக்குத் தோற்றியவற்றைக் கூறுக.

(முடிபு) யான், நாடன்கேண்மை தலைபோகாமை அறிந்தனென்; அஃது அறியாதோர் பலருங் கூறுக.

(கருத்து) தலைவன் என்னை வரைந்துகொள்வானென்னும் துணிவுடையேன்.

(வி - ரை) பலர் - செவிலி முதலியோர். அஃது - கேண்மையின் இயல்பு; செய்யுளாதலின் சுட்டுப்பெயர் முன்வந்தது. எருவை - கொறுக்காந்தட்டை (குறிஞ்சிப். 68, ந) யானையின் உணவைக் கவளமென்றல் மரபு. தலைபோதல் - முடிதல்; அழிதல்; தலை யென்றது அசைநிலையாக நின்றது; "அரசுதலை நீங்கிய வருமறை யந்தணன்" (மணி. 11 : 84.)

கயத்தை நாடிச் செல்லும் யானை, தன் முயற்சியின்றியே அருவியினால் கொணர்ந்து தரப்பட்ட எருவையை நுகர்ந்தாற்போல விளையாட்டு விருப்பான் வந்த தலைவன் நல்லாழின் வயப்பட்டு என்னைக்கண்டு இன்புற்றனென்பது குறிப்பு. இக்கேண்மை பால்வயத்தால் அமைந்ததாகலின் அருளென்பது தலைவி கருத்து.

அருவியை ஊழிற்கு உவமை கூறும் மரபு, "நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர், முறைவழிப் படூஉம்" (புறநா. 192: 9-10) என்பதனாற் பெறப்படும்.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) 3-4. மாந்துமலை : அல்வழிக்கண் மகரம் கெட்டுவந்த பெய ரெச்சம் (தொல். புள்ளி மயங்கு. 19, ந.)

(ஒப்பு.) 3. கயநாடு யானை (குறுந். 215 : 4); அகநா. 6 : 8-9. யானை கவளமுண்ணல் : முல்லை. 35-6 ; மதுரைக். 658-9.

4-5. தலைவன் கேண்மை கெடாதது : குறுந். 264 : 4-5, 313 : 4-5.

(கஎ0)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடைவைத்துப் பிரிந்த காலத்தில் அயலார் வரையப் புக்கனராக, அதுகண்டு கவன்ற தோழிக்கு, "இவர்கள் செய்யும் முயற்சி பயன்படாதொழியும்" எனத் தலைவி கூறியது.]

கஎக. காணினி வாழி தோழி யாணர்க்
கடும்புன லடைகரை நெடுங்கயத் திட்ட
மீன்வலை மாப்பட் டாஅங்
கிதுமற் றெவனே நொதுமலர் தலையே.

எ - து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலை மகள் கூறியது (பி. ம். சொல்லியது.)

பூங்கணுத்திரையார் (பி. ம். பூங்கண்ணுத்திரையார்.)

(பி - ம்.) 4 "நொதுமலர்த்தலையே"

(ப - ரை.) தோழி—, இனி காண் - இப்பொழுது பார்ப்பா யாக ; யாணர் - புதுவருவாயாகிய, கடு புனல் - மிக்க புனலையும், அடைகரை - அடைந்த கரையையுமுடைய, நெடு கயத்து இட்ட - ஆழமான குளத்தின்கண் அமைத்த, மீன்வலை - மீனுக்குரிய வலை யின்கண், மா பட்டாஅங்கு - விலங்கு அகப்பட்டாற் போல, நொதுமலர் தலை - அயலாரிடத்து, இது - வரைவுக்குரிய இம் முயற்சி, எவன் - என்ன பயனுடைத்து ?

(முடிபு) தோழி, காண் ; நொதுமலர்தலை இது எவன் ?

(கருத்து) அயலார் வரைவுமேற்கொள்வதனற் பயனென்று மில்லை.

(வி - ரை) மீனுக்கென அமைத்த வலையில் விலங்கு பட் டாற் போலத் தலைவனுக்கென அமைந்த என்திறத்து நொதுமலர் வரைய முயன்றனரென்று உவமையை விரித்துக்கொள்க. மா - ஈர்நாய் முதலியன.

வாழி, மற்று, ஓ, ஏ : அசைநிலைகள்.

(மேற்.) மு. தலைவி பிற விலக்குவித்தது (நம்பி. 164.)

(ஒப்பு.) மு. அருங்கண்ணி வெண்மதி சூடும்பிரான் வெங்கை யாவி மலர்க்
கருங்கண்ணி கங்கையின் மென்றூவி யன்னங் கருதி வைத்த
பெருங்கண்ணி யிற்புனற் காக்கைபட் டாங்குப் பிறர்நமதில்
மருங்கண்ணி வந்தன ரென்பது கேட்டின்னு மாய்ந்திலமே.
(வெங்கைக் கோவை, 229.) (களக)

தலைவி கூற்று

[வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில், 'இவள் ஆற்றாள்' எனக் கவன்ற தோழியை நோக்கி, அவர் என்னைப் பிரிந்து அங்கே எங்ஙனம் இருப்பார்? என்மனம் மிக வருந்துகின்றது" என்று தலைவி கூறியது.]

களஉ. தாஅ வஞ்சிறை நொப்பறை வாவல்
பழுமரம் படரும் பையுண் மாலை
எமிய மாக வீங்குத் துறந்தோர்
தமிய ராக வினியர் கொல்லோ
5 ஏழூர்ப் பொதுவினைக் கோஊர் யாத்த
உலைவாங்கு மிதிதோல் போலத்
தலைவரம் பறியாது வருந்து மென்னெஞ்சே.

எ - து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(பி - ம்.) 4 'தமியமாக' 5 'வேளூர்ப்'

(ப - ரை.) தோழி, தா அம் சிறை - வலியையுடைய அழகிய சிறையையும், நொ பறை - மென்மையாகப் பறத்தலையும் உடைய, வாவல் - வெளவால்கள், பழு மரம் படரும் - பழுத்த மரங்களை நினைத்துச் செல்லும், பையுள் மாலை - தனியராளுர்க்குத் துன்பத்தைத் தரும் மாலைக்காலத்தில், எமியம் ஆக - யாம் தமியேமாகும்படி, ஈங்கு துறந்தோர் - ஈங்கு எம்மை வைத்துப் பிரிந்த தலைவர், தமியர் ஆக - தாம் தனிமையை உடையராகவும், இனியரோ - இனிமையை யுடையரோ? என் நெஞ்சு—, ஏழ் ஊர் பொதுவினைக்கு - ஏழு ஊரிலுள்ளார்க்குப் பொதுவாகிய தொழிலின் பொருட்டு, ஓர் ஊர் யாத்த - ஓர் ஊரின்கண் அமைத்த, உலை

வாங்கு மிதிதோல் போல - உலியிற் செறித்த துருத்தியைப் போல, தலைவரம்பு அறியாது - எல்லையை யறியாமல், வருந்தும் - வருத்தத்தை அடையும்.

(முடிபு) ஈங்குத் துறந்தோர் இனியர் கொல்லோ? என் நெஞ்சு வருந்தும்.

(கருத்து) தலைவர் என்னைப் பிரிந்த தனிமையினால் துன்புறு வாரென்று என் நெஞ்சம் வருந்துகின்றதே யன்றி எனது தனி மைத் துன்பத்தைக் குறித்தன்று.

(வி - ரை.) உடலோடு பொருந்தித் தோலாலமைந்தமையின் வெளவாலின் சிறை வலியுடைய தாயிற்று. பறை - பறத்தற் றொழில்; "துணைபுறை நிவக்கும் புள்ளின மான" (மலைபடு. 55) என்பதன் உரையைப் பார்க்க பழுமரம் - ஆலமரமுமாம். எமியமென்றது தோழியையும் நினைந்து. மாலையில் தலைவர் உட னிருத்தல் இன்றியமையாமையின் அக் காலத்திலும் யாம் தனித் திருப்பத் துறந்தோரென்றாள். இனியர் கொல்லோ வென்றது இனியரா யிராரென்னும் நினைவிற்று. ஓர் ஊரென்றது ஓரூரி லுள்ள கொல்லனை. உலை - அவனது உலை. தலை வரம்பு: தலை அசைநிலை.

(ஒப்பு.) 2. பழுமரம்: பொருந. 64; சீவக. 93.

பையுண் மாலை: குறுந். 195: 2, 391: 6.

1-2, "பையுண் மாலைப் பழுமரம் படரிய, நொவ்வுப்பறை வாவ னேன் சிறை" (தொல். களவு. 23. ந. மேற்.)

வாவல் மாலையிற் பழுமரம் நோக்கிச் செல்லுதல்: (குறுந். 352: 1-5); "ஞாயிறு ஞான்று கதிர்மழுங் கின்றே.....வாவலும் வயின்றொறும் பறக்கும்" (நற். 218: 1-3); "குறுஞ்சினை வேம்பி னறும்பழ முணீஇய, வாவ லுகக்கு மாலையும்", "செல்லிய முயலிப் பாஅய சிறகர், வாவ லுகக்கு மாலை" (ஐங். 339: 2-3, 378: 1-2.)

3. எமியம்: குறிஞ்சிப். 32; அகநா. 33: 12, 112: 7, 371: 10.

6. உலை வாங்கு மிதிதோல்: "மென்றோல், மிதியுலை" (பெரும்பாண். 206-7.)

5-6. ஒன்றுக்கு ஏழு கூறும் மரபு: குறுந். 24: 4, ஒப்பு; குறள், 1278. (களஉ)

தலைவன் கூற்று

[பாங்கியிற் கூட்டத்தின் கண் தலைவன் தோழியிடம் குறை யிரப்ப அவள் மறுத்தாளாக, "இனி மடலேறும் பரிகாரமொன்று இருத்தலால், அது செய்ய நினைந்து நான் செல்கின்றேன்" என்று அவன் கூறியது.]

(ஆசிரியப்பாலைத் திணை)

களங. பொன்னே ராவிரைப் புதுமலர் மிடைந்த
பன்னூன் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க வேறி நாணட்
டழிபட ருண்ணோய் வழிவழி சிறப்ப

5. இன்னள் செய்த திதுவென முன்னின்
றவள்பழி நுவலு மிவ்வூர்
ஆங்குணர்ந் தமையினீங் கேகுமா ருளனே.

எ - து. குறை மறுக்கப்பட்ட தலைமகன் தோழிக்கு உரைத்தது.

[குறை - தலைவியைக் காணல் வேண்டு மென்ற காரியம்.]

மதுரைக் காஞ்சிப் புலவன்.

(பி - ம்) 3-4 'நானப் பழிபடருண்ணோய்', 'நாணடப்பழி' 5. 'இன்னுள்' 7. 'தமையினீரேகு மாறுளனே'

(ப - ரை.) பொன் னேர் ஆவிரை புதுமலர் மிடைந்த - பொன் னைப் போன்ற ஆவிரையின் புதிய பூக்களை நெருங்கக் கட்டிய, பல் நூல் மாலை - பலவாகிய நூல்களையுடைய மாலைகளை அணிந்த, பனை படு கலிமா - பனங்கருக்கால் உண்டாக்கப்பட்ட மனச் செருக்கை யுடைய குதிரையை, பூண் மணி கறங்க ஏறி - அதன் கழுத்திற் பூட்டிய மணி ஒலிக்கும்படி ஊர்ந்து, நாண் அட்டு - நாணத்தைத் தொலைத்து, அழி படர் உள் நோய் - மிக்க நினைவை யுடைய உள்ளத்தேயுள்ள காமநோய், வழிவழி சிறப்ப - மேலும் மேலும் மிகுதியாக, இன்னள் செய்தது இது என - இன்னளால் உண்டாக்கப்பட்டது இக்காம நோயென்று யான் கூற, இ ஊர் - அக் கோலத்தைக் கண்ட இவ்வூரிலுள்ளார், முன் நின்று - எல் லோர்க்கும் முன்னே நின்று, அவள் பழி நுவலும் - தலைவியினது பழியைக் கூறுவர். ஆங்கு உணர்ந்தமையின் - உள்ளதொரு பரிகாரத்தை அறிந்திருத்தலால், ஈங்கு - இவ்விடத்தினின்றும், ஏகுமார் உளென் - போகும் பொருட்டு உள்ளேன்.

(முடிபு) கலிமா ஏறி நாண் அட்டு நோய் சிறப்ப இன்னள் செய்தது இதுவென, இவ்வூர் அவள் பழி நுவலும்; ஆங்கு உணர்ந்தமையின் ஏகுமாருளென்.

(கருத்து) நான் இனி மடலேறுவேன்.

(வி - ரை.) மடலேற்றத்தைப் பற்றிய செய்திகளை இந்நூல் 14, 17 ஆம் செய்யுட்களின் விசேடவுரை முதலியவற்றுல் உணர லாகும்.

மடலேறுவார், அம் மடன் மாவிற்கு ஆவிரம் பூ அணிவர்,

கலிமா வென்றது சாதியடை. நாண் - செய்யத்தகாதனவற்றின் கண் உள்ளம் ஒடுங்குதல் (தொல். பொருள். 53, ந.); "இழிவாயின செய்தற்கண் விலக்குவது' (குறள். 1133, உரை) என்பர் பரிமேலழகர். அழி படர் - மிக்க படர்; "அழிபசி" (குறள், 226) என்பதற்கு 'மிக்க பசி' என்றெழுதிய உரையைக் காண்க; ஆண்மையையும் நாணையும் அழிக்கும் படரென்பதும் பொருந்தும்; "நாணெடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன், காமுற்ற ரேறு மடல்" (குறள். 1133) எனக் கூறுதல் காண்க. வழி வழி - மேன்மேலும் (அகநா. 47: 1, உரை.)

தலைவனே தன் நோய் இன்னளால் வந்ததெனக்கூறும் செய்தியைக் கலித்தொகை, 138, 139, 140, 141 - ஆம் செய்யுட்களிற் பரக்கக் காணலாகும். இன்னள் செய்த திதுவென இவ்வூர் பழி நுவலுமென்று கூட்டிப் பொருள் கோடலும் பொருந்தும்; "நல்லோள் கணவ னிவனெனப், பல்லோர் கூற" (குறுந். 14) என்று முன் வந்தமை உணர்க.

அத்தகைய பரிகார மொன்றுண்மையின் நீ மறுத்தமையாற் கவலாது செல்லத் துணிகின்றே னென்றான்; இதனால், தான் மடலேறித் தன் குறையை முடித்துக் கொள்ளுந் துணிபுடையனாதலைப் புலப்படுத்தினான்.

(ஒப்பு.) 1. பொன்னேர் ஆவிரை மலர்: "பொலமலராவிரை", "அடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி" (கலி. 138 : 18, 140 : 7.)

2. நூல் மாலை மா: "மணிப் பீலி சூட்டிய நூலொடு", "பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி" (கலி. 138 : 8, 140 : 6.) பனை படு கலிமா : குறுந். 17 : 1, ஒப்பு, 182 : 1.

1-2. மடன் மாவிற்கு ஆவிரம் பூ அணிதல்: "அணிப்பூவா யாவிரை யெருக் கொடு பிணித்தியாத்து", "அணியலங் காவிரைப் பூவோ டெருக்கின், பிணையலங் கண்ணி மிலைந்து" (கலி. 138 : 9, 139 : 8 - 9); "பனிவா ராவிரைப் பன்மலர் சேர்த்தி" (குணநாற்பது.)

3. மடல் மாவிற்கு மணி கட்டுதல்: "மணிபணி பெருந்தார் மரபிற் பூட்டி" (குறுந். 182 : 2); "சிறுமணி தொடர்ந்து.....உண்ணு நன்மாப் பண்ணி" (நற். 220 : 1 - 3); "மணியார்ப்ப, ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்து", "பெய்ம்மணி கட்டி" (கலி. 139 : 9 - 10, 140 : 6)

மடலேறும் தலைவன் நாணத்தை நீத்தல்: "பெருநா ணீக்கி" (குறுந். 182 : 4); "அறிவு நம் மறிவாய்ந்த வடக்கமு நாணெடு வறிதாக" (கலி. 138 : 3 - 4.); "நோனு வுடம்பு முயிரு மடலேறும், நாணினை நீக்கி நிறுத்து" (குறள். 1132.)

4. அறிபடர்: குறுந் : 185 : 8; அகநா. 255 : 8, 285 : 2, 297 : 2.

வழிவழி சிறத்தல்: மதுரைக். 194; அகநா. 47 : 1.

5. இன்னள் : குறுந் : 98 : 1, 185 : 3, 296 : 7
2-6 : குறுந். 17 : 1 - 3, ஒப்பு. (களக)

தலைவி கூற்று

[தலைவன் பொருள்வயிற் பிரியக் கருதியிருப்பதை யுணர்ந்து கூறிய தோழியை நோக்கி, "பாலை நிலத்து வழிகள் கடத்தற் கரியன வென்று எண்ணுமல் நம்மை அவர் பிரிந்து செல்வரேல், உலகத்தில் பொருள்தான் பெறற்குரியது போலும்! அருள் யார் பாலுமின்றி ஒழிவது போலும்!" என்று தலைவி கூறியது.]

களச. பெயன்மழை துறந்த புலம்புறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் றூவித் துணைப்புற விரிக்கும்
அத்த மரிய வென்னுர் நத்துறந்து
5. பொருள்வயிற் பிரிவா ராயினிவ் வுலகத்துப்
பொருளே மன்ற பொருளே
அருளே மன்ற வாருமில் லதுவே.

எ - து. பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது. வெண்பூதி.

(பி - ம்.) 1 'புலம்பறு' 2 'கவைமுடக்', 'கடிநொடி' 4 'வெண்ணுர்'

(ப - ரை.) தோழி, பெயல் மழை - பெய்தலையுடைய மழை, துறந்த - பெய்யாது நீங்கிய, புலம்பு உறு கடத்து - தனிமை மிக்க பாலை நிலத்தில், கவை முள் கள்ளி - கவைத்த முள்ளை யுடைய கள்ளியினது, காய் விடு கடுநொடி - காய் வெடிக்கும் பொழுது விடும் கடிய ஒலியானது, துதை மெல் தூவி துணை புறவு இரிக்கும் - நெருங்கிய மெல்லிய சிறகுகளையுடைய ஆணும் பெண்ணுமாகிய இரட்டைப் புறுக்களை நீங்கச் செய்யும், அத்தம் - அருவழிகள், அரிய என்னுர் - கடத்தற்கரியன வென்று கருதாராகி, நம் துறந்து - நம்மைப் பிரிந்து, பொருள்வயின் பிரிவார் ஆயின் - பொருளைத் தேடும்பொருட்டு நம் தலைவர் பிரிவாராயின், இ உலகத்து - இந்த உலகத்தில், மன்ற - நிச்சயமாக, பொருளே பொருள் - செல்வமே உறுதிப் பொருளாவது; மன்ற—, அருளே - அருள்தான், ஆரும் இல்லாது - தன்னை ஏற்றுக் கொள்வார் யாரும் இல்லாதது.

(முடிபு) அத்தம் அரிய என்னுர் நத்துறந்து பொருள் வயிற் பிரிவாராயின், பொருளே பொருள்; அருளே ஆரும் இல்லது.

(கருத்து) அருளுடையாராயின் என்னைப் பிரிந்து செல்லல் தகாது.

(வி - ரை.) மழை, பெய்தலைத் துறந்த வெனலும் பொருந்தும்; துறந்த: காரணப் பொருளில் வந்த பெயரெச்சம். புலம்பு - நீர் பெருத வருத்தமுமாம் (அகநா. 4: 5, உரை); நத் துறந்து: இத்தகைய புணர்ச்சி முடிபுகளை இரண்டாம் வேற்றுமைத் திரிபைத் தொகுத்து உணாத்தும் சூத்திரத்தில் (தொல். தொகை. 15) 'அன்ன பிறவும்' என்பதனுள் நச்சினர்க்கினியர் அமைப்பர்; 'எக்கண்டு பெயருங் காலை யாழநின், கற்கெழு சிறு குடியெனவும், நப்புணர்வில்லா நயனில் லோர் நட்பெனவும் வருவழி எக்கண்டு, நப்புணர்வு என்னும் தொடக்கங் குறுகும் உயர்திணைப் பெயர்கள் மெல்லெழுத்துப் பெறுதற்கு உரியன, வல்லெழுத்துப் பெறுதல் கொள்க.'

'அத்தம் கடத்தற்கரியனவாயிருப்பவும் அது கருதாமலும், நம்மைத் துறத்தல் அருளுக்கு மாறுபாடான செயலாக இருப்பவும் அது கருதாமலும் செல்லுதற்குக் காரணமான பொருள் பெறற்குரிய உறுதியுடையது போலும்!' என்றுள். 'அருளுடையராயின் என்னை நீத்துச் செல்லார்; பொருளைப் பொருளாகக் கருதார்' என்பது தலைவியின் நினைவு. பொருளே மன்ற பொருளே: ஏகாரங்களுள் முன்னது பிரிநிலை யேகாரம்; பின்னது தேற்றம்.

(ஒப்பு.) 1. புலம்புறு கடம்: "புள்ளும் வழங்காப் புலம்புகொளாரிடை" (கலி. 4:6); "புலம்புவீற் றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்" (அகநா. 335 : 8.)

2. கலை முள்: புறநா. 98 : 8. கலை முட் கள்ளி: புறநா. 322 : 2.

கள்ளிக்காய் விடு கடு நொடி: "கொடிவிடு வன்ன காய்விடு கள்ளி" (நற். 314 : 9); "கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி தீச்சில வேயுலறி, வெள்ளும் வெடிபடும் பாலை" (திரு வேகம்ப. திருவந். 68.)

நொடி: "அமைக்கண் விடு நொடி" (அகநா. 47 : 7.)

2-3. கள்ளியும் புறவும்: குறுந், 154 : 4-6, ஒப்பு; நற். 314 : 9-11.

4. நத் துறந்து: குறுந், 228 : 4; நற். 329 : 8, 343 : 8; அகநா. 85 : 3, 183 : 3, 185 : 3, 223 : 1, 298 : 20, 317 : 21.

6-7. பொருளும் அருளும்: குறுந், 20 : 1-2, ஒப்பு, 395 : 1-3; அகநா. 53 : 14-6, 75 : 1-2, 305 : 9. (கஎச)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்து ஆற்றுளாகிய தலைவியை நோக்கி, "நீ ஆற்றியிருத்தல் வேண்டும்" என்று தோழி வற்புறுத்தினளாக, "நான் வருந்துகின்றேனல்லேன்; ஊரார் யாது கூறினும் கூறுக" என்று தலைவி சொல்லியது.]

கஎடு. பருவத் தேனசை இப் பல்பறைத் தொழுதி
உரவுத்திரை பொருத திணிமண லடைகரை
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்
மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்
5. கிரங்கேன் றோழியிங் கென்கொ லென்று
பிறர்பிற ரறியக் கூறல்
அமைந்தாங் கமைக வம்பலஃ தெவனே.

எ - து. பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்து வாட்குக் கிழத்தி உரைத்தது.

[வற்புறுத்தல் - மீண்டும் மீண்டும் கூறி அறிவுறுத்தல்.]

உலோச்சன்.

(பி. - ம்.) 1 'தேனசைஇயப்பல' 5 'யிங்கென லென்று' 7 'அமைத்தாங்'

(ப - ரை.) தோழி—, பருவம் தேன் நசைஇ - செவ்வியையுடைய தேனை விரும்பி, பல்பறை தொழுதி - பல வண்டுக் கூட்டங்கள், உரவு திரை பொருத - உலாவுதலையுடைய அலைகள் மோதிய, திணி மணல் அடைகரை - செறிந்த மணல் அடைந்த கரையின் கண் உள்ள, நனைந்த புன்னை - அலைத் துவலையால் நனைந்த புன்னை மரத்தினது, மா சினை தொகூஉம் - பெரிய கிளையின்கண் கூடுகின்ற, மலர்ந்த பூவின் - மலர்ந்த மலர்களையும், மா நீர் - கரிய நீரையுமுடைய, சேர்ப்பற்கு - கடற்கரைத் தலைவன் பொருட்டு, இரங்கேன் - வருந்தேன். இங்கு என் என்று - இவ்விடத்து இவள் ஏன் இங்ஙனம் ஆயினளென்று, பிறர் பிறர் அறிய கூறல் - பிறர் பிறர் அறியும் படி கூறுதல், அமைந்தாங்கு அமைக - அவர்களுடைய மனம் அமைந்தபடி அமைக; அம்பல் - அவர்கள் கூறும் அம்பல், எவன் - என்ன துன்பத்தைச் செய்வதாகும்?

(முடிபு) தோழி, சேர்ப்பற்கு இரங்கேன்; பிறர் கூறல் அமைக; அம்பல் எவன்?

(கருத்து) ஊரவர் கூறும் பழிமொழியை யான் அஞ்சேன்.

(விரை.) பறை - பறத்தற்குரிய சிறகு முடைமை பற்றிப் பறவைக்காயிற்று. தேன் நசைஇ யென்ற குறிப்பால் பறை யென்ற பொதுப்பெயர் இங்கே வண்டிற்காயிற்று. தொழுதி - தொகுதி. உரவு - வன்மையுமாம். திரை பொருத மணற்கரையில் நிற்றலின் புன்னை நுனைந்தது. மாச்சினை - கரிய கிளை யெனலுமாம். மலர்ந்த பூ வென்றது புன்னையில் மலர்ந்து உதிர்ந்த பூக்களை; முள்ளி மலர் முதலியனவும் ஆம்.

தலைவி பிரிவாற்றாது வருந்தியது கண்ட தோழி, "நின் ஆற்றாமை ஊரவர்க்குப் புலனுதலின் அவர் அம்பல் கூறுகின்றனர். ஆதலின் நீ பொறை பூண்டிருத்தல் வேண்டும்" என்று வற் புறுத்திய காலத்தில் தலைவி கூறியது இது.

"தலைவன் என்னைப் பிரிந்தானென நான் வருந்தினேனல்லேன்; ஆயினும் என்னையறியாது என்பால் வேறுபாடுகள் உண்டா கின்றன. அது கண்டு பிறர் கூறுவன கூறுக; அவற்றால் என் காமம் வலியுறுமே யன்றி எனக்கு வரும் ஏதமொன்றில்லை" என்றாள்.

"பிறர் என் நிலை குறித்துக் கூறுதலைக் கூறுக. அது பற்றி நான் வருந்தேன்; பழிமொழியை ஏன் கூறுகின்றனர்? அதனால் யான் வருந்துகின்றேன்" என்று பொருள் கோடலும் ஒன்று.

அம்பல் - சிலர் அறிந்து கூறும் பழிமொழி. அம்பலஃது: அஃது, பகுதிப் பொருள் விகுதி. கொல், ஏ: அசை நிலைகள்.

பலவிடங்களிற் பறந்து செல்லும் வண்டுகள் பருவத் தேனை உரிய காலத்திலே உண்ண வந்து அடையும் சேர்ப்பனுதலின், பல வகை முயற்சிகளின் பொருட்டு என்னைப் பிரிந்து செல்வா னெனினும் உரிய காலத்தே வந்து அளவளாவுவனென்னும் உறுதியுடையனாதலின் அவன் பொருட்டு வருந்தேனென்பது குறிப்பு.

(ஒப்பு) 1. **பறைத் தொழுதி**: நெடுநல். 15; நற். 123 : 2; அகநா. 40 : 3.

வண்டின் தொழுதி: "அஞ்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி" (அகநா. 234 : 12.)

2. **உரவுத் திரை**: பட். 101.

உரவுத்திரை பொருத கரை: "உரவுத்திரை, அடுங்கரை" (குறிஞ்சிப். 178-9.)

(கஎடு)

தோழி கூற்று

[தலைவனைத் தலைவி ஏற்றுக் கொள்ள வேண்டு மென்னுங் கருத்தினால், "பல நாள் இங்கே வந்து பணிந்த சொற்களைக் கூறிச்சென்ற தலைவன் இப்பொழுது எங்கே இருக்கின்றானே? அவனை நினைந்து என் நெஞ்சம் கலங்குகின்றது" என்று அவளுக்கு இரக்கம் உண்டாகும்படி தோழி கூறியது.]

கஎசு. ஒருநாள் வாரல னிருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்ச நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
5. ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னன்னாட்டுப் பெய்த
ஏறுடை மழையிற் கலிழுமென் னெஞ்சே.

எ - து. தோழி, கீழ்த்தியைக் குறைநயப்பக் கூறியது.

[குறை நயப்ப - தலைவனது காரியத்தை விரும்பி நிறை வேற்றுதற்கு.]

வருமூலையாரித்தி

(பி. ம்.) 2 'பணிமொழி' 3 'நெகிழ்ந்த' 6 'வேறுபுனல்' 'புலநன்னாட்டுப்', 'புலநாட்டுப்' 7 'கலுழும்'

(ப - ரை.) ஒருநாள் வாரலன் - ஒருநாள் வந்தானல்லன்; இருநாள் வாரலன் - இரண்டு நாட்கள் வந்தானல்லன்; பலநாள் வந்து - பல நாட்கள் வந்து, பணிமொழி பயிற்றி - பணிவைப் புலப்படுத்தும் மொழிகளைப் பல்காற் கூறி, என் நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை - எனது நன்மையையுடைய நெஞ்சத்தை இரங்கச் செய்தபிறகு, வரை முதிர் தேனின் போகியோன் - மலையினிடத்தில் முதிர்ந்து வீழ்ந்த தேனிரூலப் போலப் போயினவனும், ஆசு ஆகு எந்தை - நமக்குப் பற்றுக் கோடாகிய எந்தையுமாகிய தலைவன், யாண்டு உளன் கொல் - எங்கே இருக்கின்றானே? வேறு புலன் நல்நாட்டு பெய்த - வேற்றுப் புலங்களையுடைய நல்ல நாட்டிற் பெய்த, ஏறுடை மழையின் - இடியேற்றையுடைய மழைநீர் கலங்கி வருவதுபோல, என் நெஞ்சு—, கலிழும் - கலங்கும்.

போகியோன், எந்தை, யாண்டுளன் கொல்? என் நெஞ்சு கலிழும்.

(கருத்து) நின்னை ஒரு தலைவன் விரும்பி அலமருகின்றான்.

(வி - ரை.) தலைவியினது நெஞ்சில் இரக்கம் தோன்றும்படி கூறப்புக்கவளாதலின், தலைவன் பலநாள் வந்தானென்பதை விரித்து 'ஒருநாள் வாரலன்.....பயிற்றி' என்று தோழி கூறினாள். ஒருமை, இருமை, பன்மையென்னும் வழக்கு அவள் கூற்றிலமைந்துள்ளது. பயிற்றல் - பலமுறை கூறி வற்புறுத்தல். தலைவனைப் பற்றித் தலைவிபால் தான் கூறப்புக்கது நன்மையையே கருதியென்பதைக் குறிப்பிப்பாள், 'என் நன்னர் நெஞ்சம்' என்றாள்.

வரையில் முதிர்ந்த தேனடை, தன்பாலுள்ள தேனை ஒருவரும் கொள்ளாது வீழ்ந்து கழிதல் போல, தன் மொழியை யாரும் கொள்ளாமையின் தலைவன் போயினானென உவமையை விரித்துக் கொள்க. போகியோன் - போனானென முற்றுகக் கொள்ளலும் பொருந்தும். ஆசு - பற்றுக் கோடு; 'ஆசாகென்னும் பூசல் - எனக்கு நீர் பற்றுக வேண்டுமென்னும் ஆரவாரம்' (புறநா. 266 : 9, உரை.); ஆசாகு என்பதனை இரங்கற் குறிப்பப்படு மொழி யென்பாரும் உளர். (கூடி.) எந்தையென்றாள் தலைவன்பால் தனக்குள்ள ஆதரவு தலைவிக்குப் புலப்படும் பொருட்டு. கொல்: ஐயம். வேறு புலனன்னுட்டுப் பெய்த வென்பதை வேறு நாட்டுப் புலத்துப் பெய்தவென்று கூட்டிப் பொருள் செய்க. வேற்று நாட்டிற் பெய்த மழைநீர் அந் நாட்டில் தெளிவுடையதாக வீழினும் அந்நீர் வெள்ளம் அயல் நாட்டிற் புகும்போது கலங்கி வருமாதலின் அதனை உவமை கூறினாள்.

(மேற்) மு. தோழி வலிதாகச் சொல்லிக் குறை நயப்பித்தது (இறை. 10.); பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும் தோழிக்குக் கூற்று நிகழும் (தொல். களவு. 24, இளம், 23, ந.)

(ஒப்பு.) 2. தலைவன் பலநாள் வந்து குறை யிரந்தனன்: "கயமல ருண்கண்ணாய் காணு மொருவன், வயமா னடித்தேர்வான் போலத் தொடைமாண்ட, கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு, முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற, நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்" (கலி. 37 : 1-5.)

பணிமொழி பயிற்றல்: "இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றி" (அகநா. 32 : 4.) 2. மு. அகநா. 310 : 4.

1-2. ஒருநாள், இருநாள், பன்னாள் வருதல்: "ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம், பலநாள் பயின்று பலரொடு செல்லினும்" (புறநா. 101 : 1-2.)

ஒருமை, இருமை, பன்மை : தொல். மொழிமரபு. 12, எச்ச.21, இளம். 5. மு. குறுந். 325 : 4 ; புறநா. 235 : 16, 307 : 1.
மு. அகநா. 32. (கஎசு)

தோழி கூற்று

[தலைவன் மாலைக்காலத்தில் வருவானென்று தோழி தலைவிக்குக் கூறியது.

கஎஎ. கடல்பா டவிந்து கானன் மயங்கித்
துறைநீ ரிருங்கழி புல்லென் றன்றே
மன்றவம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலு மின்றவர்
5. வருவர்கொல் வாழி தோழி நாந்தப்
புலப்பினும் பிரிவாங் கஞ்சித்
தணப்பருங் காமந் தண்டி யோரே.

எ - து. கிழவன் வரவுணர்ந்து, தோழி கிழத்திக்கு உரைத்தது. உலோச்சன் (பி - ம். உலோச்சனர்.)

(பி - ம்.) 3 'மன்றலம் பெண்ணை', 'மன்றற் பெண்ணை', 'மன்றப் பெண்ணை' 5 'தோழி நாநகப்'

(ப - ரை) தோழி—, கடல்பாடு அவிந்து - கடலானது ஓலி அடங்க, கானல் மயங்கி - கடற்கரைச் சோலை மயக்கத்தையுடையதாக, துறை நீர் இரு கழி - துறையையும் நீரையும் உடைய கரிய கழி, புல்லென்றன்று - பூக்கள் கூம்பியதனால் பொலிவழிந்தது ; மன்றம் அம் பெண்ணை - மன்றத்தின் கண் உள்ள அழகிய பனைமரத்தினது, மடல் சேர் வாழ்க்கை - மடலின் கண்ணே பொருந்திய வாழ்க்கையையுடைய, அன்றிலும்-அன்றிற் பறவையும், பையென - மெல்ல, நரலும் - கூவும் ; நாம் தம் புலப்பினும் - முன்பு நாம் தம்மைப் புலந்தாலும், பிரிவு ஆங்கு அஞ்சி - அவ்விடத்துப் பிரிதலை அஞ்சி, தணப்பு அரு காமம் - நீங்குதற்கரிய காம இன்பத்தை, தண்டியோர் - அளித்தும் பெற்றவராகிய, அவர் - தலைவர், இன்று—, வருவர்—.

(முடிபு) தோழி, கழி புல்லென்றன்று ; அன்றிலும் நரலும் ; தண்டியோர் இன்று வருவர்.

(கருத்து) தலைவர் இன்று வருவர்.

(வி - ரை.) கடல் பாடவிதல் முதலியன இரவு வந்ததைப் புலப்படுத்தின. கடல் ஒலியடங்குதலாவது, வலைஞரும் கலவரும் தொழிலொடுங்கி அகஞ் சேர்ந்தமையின் அவர்களால் உண்டாகும் ஆர்ப்பு அடங்குதல். இருளினுல் கானல் மயங்கியது. அவிந்து, மயங்கி : எச்சத் திரிபுகள்.

அன்றில் பெரும்பாலும் பனைமடலிலே வாழ்வது. வருவர் கொல் : கொல், அசைநிலை. (புறநா. 98 18, உரை); "வருவர் கொல்" (கலி. 11 : 5) என்பதற்கு 'வருவர் போல இருந்தது' என்று உரைப்பர் நச்சினர்க்கினியர். வாழி : அசைநிலை. தப்புலப்பினும் : தம், நிலை மொழி; "நத் துறந்து" (குறுந். 174: 4.) என்றது போல. தண்டியோர் - அலைத்துங் கொள்வோர் (பொருந. 104, ந.)

(ஒப்பு.) 1. கடல் பாடு அவிந்து : அகநா. 50 : 1.

2. புல்லென்றல் : குறுந். 19 : 2, ஒப்பு. 3-4. மன்றப் பெண்ணையில் அன்றில் இரவில் நரலுதல் : "யாம நள்ளென.....மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பைத், துணைபுண ரன்றி லுயவுக்குரல் கேட்டொறும்" (நற். 303 : 1-5.) பெண்ணையில் வாழும் அன்றில் இரவில் நரலுதல் : குறுந். 301 : 1-4.

அன்றில் இரவில் நரலுதல் : குறுந். 160 : 1-4, ஒப்பு.

அன்றில் பனைமரத்தில் வாழ்தல் : "மன்றிரும் பெண்ணை மடல்சே ரன்றில்" (கலி. 129 : 12); "மனைசேர் பெண்ணை மடிவா யன்றில்", "பெண்ணை யோங்கிய வெண்மணற் படப்பை, அன்றி லகவும்", "துணை புண ரன்றில், எக்கர்ப் பெண்ணை யகமடல் சேர", "பராரைப் பெண்ணைச் சேக்குங் கூர்வாய், ஒரு தனி யன்றில்", "பனிமிசை, அன்றில் சேக்கு மூன்றில்" (அகநா. 50 : 11, 120 : 14-5, 260 : 6-7, 305 : 12-3. 360 : 16-7); 'பனையின் கண் அன்றில்' (நன். 301, சங். மேற்.)

5-6. நாம் தப் புலப்பினும் : குறுந். 340 : 2.

7. தணப்பருங் காமம் : குறுந். 57 : 3, ஒப்பு. (களவு)

தோழி கூற்று

[தலைவனும் தலைவியும் வாழும் மனைக்கு அவர்களோடு சென்ற தோழி தலைவியை அளவளாவுதலில் தலைவனுக்கு இருக்கும் விரைவைக் கண்டு, "இக் காலத்தில் இப்படி இருப்பீராகிய நீர் களவுக்காலத்தில் தலைவியோடு அளவளாவ வேண்டு மென்றும் விரைவை வெளிப்படாமற் செய்து வருந்தினீர் போலும்" என்று கூறி இரங்கியது.]

கஎஅ. அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால்

ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
5. தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.

எ - து. கடி நகர் புக்க தோழி, தலைமகன் புணர்ச்சி விதும்பல் கண்டு, முன்னர்க் களவுக் காலத்து ஒழுகலாற்றை(பி - ம். களவுகம் ருழுகலாற்ருமை) நினைந்து அழிந்து கூறியது.

[கடி நகர் - தலைவனும் தலைவியும் மணம் புரிந்து கொண்டு இல்லறம் நடத்தும் மனை. விதும்பல் - விரைதல். அழிதல் - இரங்கல்.]

நெடும்பல்லியத்தை.

(பி - ம்.) 2 'மலர்ந்த' 'திரள்தாள்' 3 'குற்றுநர்' 5 'யானுமக்' 6 'கரியேம்' 7 'நோன்றநீர்'

(ப - ரை.) அயிரை பரந்த - அயிரை மீன் மேய்தற்குப் பரந்த, அம்தண் பழனத்து - அழகிய தண்மையாகிய பொய்கையினிடத்து, ஏந்து எழில் மலர - அழகை மேற் கொண்ட மலரையுடையனவாகிய, தூம்புடை திரள்கால் - உள்ளே துளையையுடைய திரண்ட தண்டையுடைய, ஆம்பல் குறுநர் - ஆம்பலைப் பறிப்போர், நீர் வேட்டாங்கு - புனல் வேட்கையை அடைந்தாற்போல, இவள் இடைமுலை கிடந்தும்-இத் தலைவியின் நகிலினிடையே துயிலப் பெற்றும், நடுங்கல் ஆனீர் - நடுங்குதலை யொழிந்தீர் அல்லீர்; யாம்—, தொழுது காண் பிறையின் தோன்றி - கன்னி மகளிரும் பிறரும் தொழுது காணும் பிறையைப் போல் தோன்றி, நுமக்குக் காண்டற்கரியேமாகிய களவுக் காலத்தில், பெரிய நோன்றனிர்-பெரிய வருத்தங்களைப் பொறுத்தீர்; யான் நோகு - யான் அதனை யறிந்து வருந்துவேன்.

(முடிபு.) இவள் இடைமுலைக் கிடந்தும் நடுங்கல் ஆனீர்; யாம் நுமக்கு அரிய மாகிய காலைப் பெரிய நோன்றனிர்; யான் நோகு.

(கருத்து) நீர் தலைவிபாற் கொண்ட அன்பின் வன்மையை முன்பு யான் நன்கறிந்திலேன்.

(வி - ரை.) ஏந்துதல் - நீருக்கு மேலே உயர்தலுமாம். மலரும் காலும் ஆம்பலாகிய முதலுக்கு அடை; ஆம்பல் - இங்கே ஆம்பல் மலர்; ஆகுபெயர்.

நீரில் வளர்ந்த ஆம்பலைப் பறிப்போர் விடாயுற்ற காலத்தில் எளிதிற் பருகுதற்கு அணிமையில் நீர் இருப்பவும் நீரை வேட்டு விரைந்தாற் போல, நும் வேட்கையை முற்றுவிக்கும் தலைவி இடையறாது நும் அருகிலே இருப்பவும் நீர் விரைந்தீரென்றாள். இதனால் தலைவனது காம நிலை உரைக்கப்பட்டது.

இடைமுலை - முலையிடை ; இடை - நடுவில் ; முன்பின்னாகத் தொக்கது ; மொழிமாற்றென்பாரும் உளர். நடுங்குதல் - காம வேகத்தால் நடுங்குதல் ; விரை வுடையாருக்கு மெய்ந் நடுங்குதல் இயல்பு.

பிறை - மூன்றாநாட் சந்திரன் அது திங்களுக் கொரு முறையே தோன்றுவதாதலின் காட்சியருமைக்கு அதனை உவமை கூறினாள் ; கார்த்திகைப் பிறையுமாம். பெரிய - பெரிய வருத்தங் களை ; என்றது காமத்தால் நேரும் துன்பங்களை. "களவுக் காலத் தில் நீர் இவளைக் காண்டல் குறித்து மிக வருந்தி யிருத்தல் வேண்டும். அஃது இப்பொழுதுள்ள நும் நிலையால் உய்த்துணரக் கிடக்கின்றது. அதனை அக் காலத்தே நன்கறிந்திலேன் " என்னுங் கருத்தால் 'நோகோ யானே' என்றாள் நோகோ : ஓ அசைநிலை, யானே : ஏ அசைநிலை.

(மேற்.) 4. மொழி மாற்றுப் பொருள் கோள் வந்தது (தொல். எச்ச. 13, ந.)

மு. பொழுது மறுப்பாக்க மென்னும் மெய்ப்பாடு வந்தது ; 'தொழுது காண் பிறையிற் றோன்றின மென்பது, களவுக் காலத்து இடையீடு பெருகிற் றெனக் கூறி, அங்ஙனம் வரைந்த பொழுதினை மறுத்த காலத்தும் நடுங்க லானீரென்றமையின் இஃது அப் பொருட்டாயிற்று'. (தொல். மெய்ப். 24, பேர்.) [குறிப்பு. வரைந்த பொழுதினை மறுத்த காலம் - இரவுக்குறி யென்றும் பகற்குறி யென்றும் வரை யறுத்த காலத்தை நீக்கி எப்பொழுது வேண்டு மெனினும் இன்புறற்குரிய காலம்.] ; பெறுதற்கரிய பெரும்பொருளை முடித்த பின்னர்த் தோன்றிய தெறுதற்கரிய மரபு காரணத்தால் தலைவன் சிறப்பித்துக் கூறுமிடத்துத் தோழிகூற்று நிகழும் (தொல். கற்பு. 9, இளம்.) வதுவை நிகழ்ந்த பின் தன்னைச் சிறப்பித்துக் கூறுமிடத்துத் தோழிக்குக் கூறறு நிகழ்ந்தது. இதனுள் முலையிடைக் கிடந்தும் பனிக்கின்ற நீர் அரிய மாகிய காலத்து எங்ஙனம் ஆற்றினீரென நோவா நின்றேன் ; இங்ஙனம் அருமை செய்தலால் தேற்றுத குரியேனுகிய என்னைச் சிறப்பித்துக் கூற லாகா தென்றவாறு காண்க '. (தொல். கற்பு. 9, இளம். ந.) பாங்கி தலைவனை வரையும் நாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை விளைவியது (நம்பி. 203) ; பொழுது மறுப்பாக்கம் வந்தது (இ. வி. 580.)

(ஒப்பு.) 1. அயிரை : குறுந் : 128 : 3, 166 : 2.

2. தூம்புடைத் தீரல் காலாம்பல் : "நீர்வள ராம்பற் றூம்புடைத் திரள் கால்" (நற். 6 : 1.)

3. "குவளை குறுநர் நீர் வேட்டாங்கு" (நற். 332 : 2); "வெள்ளத்து ணவற்றி யாங்கு" (திருவா. நீத்தல். 14.)

4. இடைமுலைக் கிடத்தல் : "இரவின் வந்தெம் மிடைமுலை பொருந்தி" (அகநா. 328 : 5.)

தலைவன் தலைவியின் நகிலிடைக் கிடத்தல் : குறுந். 39 : 4, ஒப்பு.

5. தொழுது காண் பிறை : (குறுந். 307 : 1 - 3); "ஒள்ளிழை மகளிர் ருயர்பிறை தொழூஉம், புல்லென் மாலை" (அகநா. 239 : 9 - 10); "அப்பிறை, பதினெண் கணனு மேத்தவும் படுமே" (புறநா. 1 : 9-10); "குழவித் திங்க ளிமையவ ரேத்த" (சிலப். 2 : 38-9); "முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்ரு யத்திசையே, இன்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண்-மன்னும், பொருகளிமால் யானைப் புகார்க் கிள்ளி பூண்போற், பெருகொளியான் மிக்க பிறை" (தொல். களவு, 23, ந, மேற்); "அந்தி யாரண மந்திரத் தன்புட னிவனை, வந்தி யாதவர் மண்ணினும் வானினு மில்லை" (வி. பா. குருகுலச். 6 ; கோவை நூல்களில் வரும் 'பிறை தொழு கென்றல்' என்னும் துறைச் செய்யுட்களிலும் காண்க.

7. நோகோ யானே : 131 : 6, ஒப்பு. (களஅ)

தோழி கூற்று

[பகலில் வந்து தலைவியோடு அளவளாவிய தலைவனை நோக்கி, "எம் ஊருக்கு வந்து இரவில் தங்கிச் செல்வாயாக" என்று தோழி கூறியது.]

கஎக. கல்லென் கானத்துக் கடமா வோட்டி
எல்லு மெல்லின் ரு ஞமலியு மினைத்தன
செல்ல லுறுதுவெம் மூரே
ஓங்குவரை யடுக்கத்துத் தீந்தேன் கிழித்த
5. குவையுடைப் பசுங்கழை தின்ற கயவாய்ப்
பேதை யானை சுவைத்த
கூழை மூங்கிற் குவட்டிடை யதுவே.

எ - து. பகல் வருவானை இரவுக்குறி நேர்ந்தாள் போன்று வரைவு கடாயது.

குட்டுவன் கண்ணன்.

(பி - ம்.) 3 'சொல்லுறுதுவெம்' 5 'பசுங்கிளை'

(ப - ரை.) ஐய—, கல் என் கானத்து - கல்லென்னும் ஆர வாரத்தையுடைய காட்டின் கண், கடமா ஆட்டி - கடமாவை நீ அலைப்ப, எல்லும் எல்லின்று - பகற் பொழுதும் மங்கியது; ஞமலியும் இளைத்தன - நாய்களும் நின்னுடன் வேட்டையாடி இளைப்பை அடைந்தன; செல்லல் - போகற்க; ஓங்கு வரை அடுக்கத்து - உயர்ந்த மலைப் பக்கத்தில், நீ தேன் கிழித்த - இனிய தேனிறாலைக் கிழித்த, குவையுடை பசு கழை தின்ற கயம் வாய் - கூட்டமாகிய பசிய மூங்கில்களின் குருத்தைத் தின்ற ஆழ்ந்த வாயையுடைய, பேதை யானை - பேதைமையையுடைய யானை, சுவைத்த கூழை மூங்கில் - தின்றதனாற் கூழையாகிய மூங்கிலை யுடைய, குவட்டிடையது-உச்சியின் இடையே உள்ளதாகிய, உது எம் ஊர் - அஃது எமது ஊராகும்.

(முடிபு) ஐய, எல்லும் எல்லின்று; ஞமலியும் இளைத்தன; செல்லல்; குவட்டிடையதுவாகிய உது எம் ஊர்.

(கருத்து) இரவில் எம்முடைய ஊருக்கு வந்து தங்கிச் செல்வாயாக.

(வி - ரை) கல்லென்றல்: சிள் வீடு, விலங்கு முதலியவற்றால் உண்டாகும் ஆரவாரம். கடமா - ஒரு வகை விலங்கு, "கடமா தொலைச்சிய காணுறை வேங்கை" (நாலடி. 300.) எல்லின்று: 161, வி - ரை. ஞமலி, தலைவனோடு வந்தவை: தலைவன் நாயொடு வருதலை,

> "முளைபாழ் படுக்குந் துன்னருந் துப்பிற்
> பகைபுறங் கண்ட பல்வே லிளைஞரின்
> உரவுச்சினஞ் செருக்கித் துன்னுதொறும் வெருளும்
> முளைவா ளெயிற்ற வள்ளுகிர் ஞமலி
> நிளையாக் கண்ண வளைகுபு நெரிதர" (குறிஞ்சிப். 128-32)

என்பதனால் உணரலாகும்.

செல்லலென்றும், உதுவெம் மூரென்றும் கூறியதனால், நீ போகாமல் எம்முடன் வந்து இரவில் தங்கிச் செல்வாயாக வென்றாளாயிற்று. இதனால் இடையறாது உடனுறைய வேண்டுமென்னும் தம் விருப்பத்தை உணர்த்தி, அங்ஙனம் இருத்தற்கு ஏற்ற நிலை வரைந்து கொண்டு இல்லறம் நடத்தலே யென்பதை உய்த்துணர வைத்தாள்; வைத்தமையின், இது வரைவு கடாவிய தாயிற்று.

(ஒப்பு.) 1. கல்லென் கானம்: "கல்லென் கடத்திடை" (மலைபடு. 415.)

கானத்துக் கடமா வாட்டல்: "வெட்சிக் கானத்து வேட்டுவ ராட்டக் கட்சி காணுங் கடமா நல்லேறு" (புறநா. 202 : 1-2.)

2. எல்லும் எல்லின்று: குறுந். 390 : 1; அகநா. 110 : 11.

தலைவனுடன் நாய் வருதல்: அகநா. 118 : 5, 182 : 5, 388 : 14-5.

3. உது வெம்மூர்: "அஃதெம்மூர்" (அகநா. 38 : 17.)

4. ஓங்குவரை யடுக்கம்: (குறுந். 69 : 4.); "நெடுமலை யடுக்கம்" (அகநா. 92 : 1.)

4-5. அடுக்கத்துக் கழை: "கழைவள ரடுக்கம்" (அகநா. 82 : 9.)

தேனடையைக் கழை கிழித்தல்: "காம்பு கால்பொரக் கண்ணகன் மால் வரைப், பாம்பு நான்றெனப் பாய்பசுந் தேறலே" (கம்ப. நாட்டுப். 35.)

5-6. யானை மூங்கிலை உண்ணுதல்: நற். 116 : 4-5; அகநா. 85 : 7-8, 148 : 13, 218 : 2-3, 328 : 13, 332 : 1-2; புறநா. 73 : 9; 80 : 7. (களக)

தோழி கூற்று

[தலைவனது பிரிவால் வருந்திய தலைவியை நோக்கி, "அவர் சென்ற விடத்தில் தாம் கருதிச் சென்ற பொருளைப் பெற்றனரோ; இலரோ; பெற்றனராயின் உடனே மீண்டு வருவார்" என்று தோழி கூறி வற்புறுத்தியது.

கஅ0. பழூஉப்பல் லன்ன பருவுகிர்ப் பாவடி
இருங்களிற் றினநிரை யேந்தல் வரின்மாய்ந்
தறைமடி கரும்பின் கண்ணிடை யன்ன
பைத லொருகழை நீடிய சுரனிறந்
5. தெய்தினர் கொல்லோ பொருளே யல்குல்
அவ்வரி வாடத் துறந்தோர்
வன்ப ராகத்தாஞ் சென்ற நாட்டே.

எ து. பிரிவிடை வேறுபட்டானைத் தோழி வற்புறுத்தியது. கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(பி - ம்) 1 'பழுப்பல்' 3 'தறைமடிக்' 4 'வைகல்', 'வைத லொருகோ' 5 'தேயினர்'

(ப - ரை.) அல்குல்—, அ வரி வாட-அழகிய தேமல் வாடும்படி, துறந்தோர் - நம்மைப் பிரிந்த தலைவர், பழூஉ பல் அன்ன - பேயின் பற்களைப் போன்ற, பரு உகிர் பா அடி - பருத்த நகங்களை யுடைய பரவிய அடிகளைப் பெற்ற, இரு களிறு இனம் நிரை ஏந்தல் வரின் - பெரிய களிற்றுத் திரளின் வரிசையினது தலைவன் வந்து கைக்கொள்ளின், மாய்ந்து - அழிந்து, அறை மடி கரும்பின் - பாத்தியின்கண் வீழ்ந்த கரும்புகளின், கண் இடை அன்ன - கணுக்களின் இடையே யுள்ள பகுதியைப் போன்ற, பைதல் ஒரு

கழை - வருந்துதலை யுடைய ஒற்றை மூங்கில், நீடிய - ஓங்கிய, சுரன் இறந்து - பாலை நிலத்தைக் கடந்து, வன்பர் ஆக - வன்னெஞ் சினராக, தாம் சென்ற நாட்டு - தாம் போன நாட்டினிடத்து, பொருள் எய்தினர் கொல் - பொருளை அடைந்தாரோ இல்லையோ?

(முடிபு) துறந்தோர் பொருள் எய்தினர் கொல்லோ?

(கருத்து) தலைவர் தாம் தேடிச் சென்ற பொருளைப் பெற் றாரோ, இலரோ?

(வி - ரை.) யானை அடியின் நகத்திற்குப் பேயின் பல் உவமை. பழு - பேய். (குறிஞ்சிப். 259, ந.) யானைகள் கூட்ட மாகப் போகுங்கால் அக்கூட்டத்திற்குமுன் ஒரு வலிய களிறு செல்லுவது வழக்கம்; அதனை யூதநாதனென்பர்; இங்கே ஏந்த லென்றதும் அதனையே. அறை - பாத்தி (மலைபடு. 118, ந.) யானையால் முறிக்கப்பட்ட கரும்பின் ஒரு கணுவுக்கும் மற்றொரு கணுவுக்கும் இடையிலுள்ள அளவே வளர்ந்த மூங்கில்.

எய்தினர் கொல்: கொல் ஐயம். பொருளை அடைந்தனரோ இலரோ என்றது, பொருளைப் பெற்றால் உடனே தங்காது மீண்டு வருவரென்று வற்புறுத்தியபடி.

(மேற்.) 1. செய்யுளில் முகர உகரம் மீண்டு உகரம் பெற்று வந்தது (தொல். உயிர்மயங்கு. 59, இளம், ந; இ. வி. 95); குற்றெழுத்தள பெடை வந்தது (இ. கொ. 90.)

(ஒப்பு) 1. யானையின் கால் நகத்திற்குப் பேயின் பல்: "கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள், நிணனுண்டு சிரித்த தோற்றம் போலப், பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தாள், அண்ணல் யானை" (சிறுபாண். 197 - 200.)

2. களிற்றின நிரை: குறுந். 255: 4; கலி. 25: 9, 52: 4 - 5; அகநா 218: 1.

களிற்றின நிரை யேந்தல்: "அலகி லானைக ளனேகமு மவற்றொடு மிடைந்த, திலக வாணுதற் பிடிகளுங் குருளையுஞ் செறிந்த, உலவை நீள் வனத் தூதமே யொத்தவவ் வூதத், தலைவ னேயொத்துப் பொலிந்தது சந்திர சயிலம்" (கம்ப. வரைக் காட்சி. 7.)

1-2. பாவடிக் களிறு: "பாவடி யானை" (புறநா. 233: 2.)

3. அறைமடி கரும்பு: (குறுந். 262: 7, ஒப்பு); "அறைக் கரும்பு" (பொருந. 193); "அறையுற், றுலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே" (மலைபடு. 118-9); "அறையுறு கரும்பு" (பதிற். 75: 6; பெரும். 1: 48: 146.)

4. பாலை நிலத்திலுள்ள மூங்கிலின் நிலை: குறுந். 331: 1, ஒப்பு.

5-6. அல்குலவ்வரி: கலி. 60: 4; அகநா. 33: 16.

7. வன்பர்: குறுந். 395 · 3. (கஅ)

தலைவி கூற்று

[தலைவன் பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைவியின் ஆற்ருமையைக் கண்ட தோழி அவனது பரத்தைமையை இழிவு தோன்றக் கூறிய போது, "நமக்கு எவ்வளவோ கடமைகள் உள ; அவற்றைச் செய்து கொண்டிருத்தல் சாலும் ; தலைவனைக் குறை கூறல் வேண்டா" என்று தலைவி கூறியது.]

கஅக. இதுமற் றெவனே தோழி துனியிடை
இன்ன ரென்னு மின்னாக் கிளவி
இருமருப் பெருமை யின்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியி னகலாது
5. பாஅற் பைம்பயி ராரு மூரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரே மாகிய நமக்கே.

எ - து. தலைமகன் பரத்தையிற் பிரிந்தவழி ஆற்ருளாகிய தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி இயற்பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.

கிளிமங்கலங் கிழார் (மு - ம். கிள்ளி கிழார்.)

(பி - ம்.) 1 'இதுவுமற்' 5 'பாஅற்பெய் பைம்பயிர்' 7 'பெருமுதிர்', 'பெண்டிராகிய'

(ப - ரை.) தோழி—, இரு மருப்பு எருமை ஈன்றணி காரான் - பெரிய கொம்பையுடைய ஈன்றணிமையையுடைய பெண்ணெருமையானது, உழவன் யாத்த குழவியின் அகலாது - உழவனுற் கட்டப்பட்ட கன்றின் பக்கத்தினின்றும் அகலச் செல்லாமல், பாஅல் பை பயிர் - பக்கத்திலுள்ள பசிய பயிர்களை, ஆரும் ஊரன் - மேய்வதற் கிடமாகிய ஊரையுடைய தலைவனது, திருமனை பல கடம் பூண்ட - செல்வத்தையுடைய மனைவாழ்வுக் குரிய பல கடப்பாடுகளை மேற்கொண்ட, பெரு முது பெண்டிரேம் ஆகிய நமக்கு - பெரிய முதிய பெண்டிராகிய நமக்கு, துனியிடை - புலவிக் காலத்தினிடையே, இன்னர் என்னும் இன்ன கிளவி - தலைவர் இத்தகையரென்னும் இனிமையில்லாத கூற்றுகிய, இது எவன் - இதனுற் பயன்யாது ?

(முடிபு) தோழி, ஊரன் மனைக்கடம் பூண்ட நமக்கு இன்னைக் கிளவி எவன் ?

(கருத்து) தலைவனைக் குறை கூறாமல் நம் கடப்பாடுகளை நாம் செய்வோமாக.

(வி- ரை.) இது : செய்யுளாதலின் சுட்டு முன் வந்தது. மற்று, ஓ : அசைநிலை. இன்னரென்றது, பரத்தைமையுடைய ரென்று கூறுதல் ; ஆதலின் இன்னாக் கிளவியாயிற்று. இரு மருப்பு - கரிய மருப்பெனலுமாம். "பெற்றமு மெருமையு மரையு மாவே" (தொல். மரபு. 60) என்பது விதியாதலின் எருமையைக் காராமென்றார். எருமையின் கன்று குழவி யென வழங்கப்படும் மரபு, "ஆவு மெருமையு மவைசொலப் படுமே" (தொல். மரபு. 20) என்னும் சூத்திரத்தால் உணரப் படும். திருமனை யென்றார் இல்லறம் புரிதற் குரிய செல்வ முடைமை பற்றி. பல கடமாவன,

"அறவோர்க் களித்தலு மந்தண - ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்" (சிலப். 16 : 71-3)

முதலியன. பூணல் - மேற் கொள்ளல்.

தலைவன் பரத்தையர்பாற் சென்றிருந்த காலத்தில் தலைவி ஆற்றுமையை உடையளானாள் ; அப்பொழுது தலைவனுடைய பரத்தைமையைக் கூறின் அவள் தன் துயர்க்காரணமறிந்து கூறுகின்றாளென ஆற்றியிருப்பா ளென்று எண்ணிய தோழி, இழிப்புக் குறிப்புத் தோன்றத் தலைவன் ஒழுகலாற்றை எடுத் துரைத்தாள். தான் தன் அன்புடைமையினால் ஆற்றாளாயினும் பிறர் தன் தலைவனது குறையைக் கூறப் பொறாத சிறந்த கற்புடையளாதலின் தலைவி அவளை நோக்கி, "அவரோடு புலந்து உறையும் இக்காலத்தில் அவரைப் பற்றிக் குறை கூறுவதனாற் பயனென்றுமில்லை. இல்லறம் நடத்தும் பெண்டிராகிய நாம் செய்யக் கடவ அறங்கள் பலவுண்டு ; இன்பமொன்றையே பெரி தாகக் கருதும் இளமையையும் நாம் கடந்து முதுமை யெய்தினேம். ஆதலின் தலைவர் எங்ஙனம் இருப்பினும் நம் கடப்பாடுகளை நாம் செய்தல் சாலும்" என்று கூறினாள்.

"அன்புடைக் கணவ ரழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை" (பெருங். உ. 14: 98-1)

என்பவாதலின் தலைவி இங்ஙனம் கூறினாள்.

எருமை கட்டப்பட்ட தன் குழவியினின்றும் அகலாமல் அருகி லேயுள்ள பயிரை ஆரும் ஊரனென்றது, தலைவன் இல்லின்கண் உறையும் தலைவிபாற் கொண்ட அன்பு குறையாமல் தனக்கு

வேண்டிய இன்பத்தை அருகிலுள்ளார்பாற் பெறுகின்றனென்னும் குறிப்பைப் புலப்படுத்துவது.

(மேற்.) மு. அடங்கா ஒழுக்கதையுடைய தலைவன் மாட்டு மனன் அழிந்தோளை அடங்கக் காட்டுதற்கு ஏதுவான பொருட் பக்கத்தில் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது. (தொல். கற்பு. 9, இளம.); தோழி இன்னுக் கிளவி கூறியதனை, இது பொழுது கூறிப் பயந்த தென்னெனத் தலைவி காய்ந்து கூறியது (தொல். கற்பு. 6. ந); தலைவியைப் பாங்கி கழறியது (நம்பி. 205)

(ஒப்பு.) 1. இது மற்றெவனே தோழி: குறுந். 299 : 1.
இன்னர்: "இன்ன னுவ தெவன்கொ லன்னாய்" (ஐங். 26 :4); "இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ் சொல்" (நாலடி. 205.)
3. எருமை காரான்: குறுந். 261 : 3; நற். 80 : 1.
3-4. எருமைக் குழவி: பட். 14; நற். 120 : 1-2, 271 : 1; ஐங். 92 : 1 - 2.
6 கடம் பூணல்: சிலப். 15 : 2; மணி. 3 : 70.
7. பெருமுது பெண்டிர்: முல்லைப். 11. (கஅக)

தலைவன் கூற்று

[தன் குறையைத் தோழி மறுத்தாளாக, "தலைவியும் இரங்கிக் குறை நயந்திலள்; தோழியும் உடம்படவில்லை; ஆதலின் இனி மடலேறுவேன்" எனபதுபடத் தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.]

கஅஉ. விழுத்தலைப் பெண்ணை விளையன் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி
வெள்ளென் பிணிந்துபிற ரெள்ளத் தோன்றி
ஒருநாண் மருங்கிற் பெருநா ணீக்கித்
5. தெருவி னியலவுந் தருவது கொல்லோ
கலிழ்ந்தவி ரசைநடைப் பேதை
மெலிந்திலண் ணம்விடற் கமைந்த தூதே.

எ - து. தோழியாற் குறைமறுக்கப்பட்ட தலைமகன் தன் நெஞ்சிற்கு உரைத்தது.

மடல் பாடிய மாதங்கீரன்.

(பி - ம்.) 2 'மார்பிற்' 5 'னியல்வு தருவது' 6 'கலிங்கவிர்', 'கலிந்தவிர்', 'கலிழ்கவின்' 7 'மெலிந்திலளாம்'

(ப - ரை.) நெஞ்சே, கலிழ்ந்து அவிர் அசை நடை பேதை - அழகு ஒழுகி விளங்கும் அசைந்த நடையையுடைய தலைவி, மெலிந்திலள் - நம்மாட்டு நெஞ்சம் நெகிழ்ந்திலள்; நாம் விடற்கு அமைந்த தூது - நாம் அத் தலைவியினிடத்து விடுதற்கு அமைந்த தூது, விழுதலை பெண்ணை - சிறந்த உச்சியையுடைய பனையின் கண், விளையல் மாமடல் - முதிர்தலையுடைய பெரிய மடலாற் செய்த குதிரைக்கு, மணி அணி பெரு தார் - மணிகள் அணிந்த பெரிய மாலையை, மரபின் பூட்டி - முறைமையோடு அணிந்து, வெள் என்பு அணிந்து - நாம் வெள்ளிய என்பை அணிந்து கொண்டு, பிறர் எள்ள தோன்றி - பிறர் இகழும்படி அம்மடல் மாவின் மேல் தோன்றி, ஒரு நாள் மருங்கில் - ஒரு நாளில், பெரு நாண் நீக்கி - பெரிய நாணத்தை விட்டு விட்டு, தெருவின் இயலவும் தருவது கொல் - தெருவின் கண் செல்லவும் தருவதோ?

(முடிபு) பேதை மெலிந்திலள்; தூது, மா மடலில் தார் பூட்டி என்பணிந்து எள்ளத் தோன்றி நாண் நீக்கித் தெருவின் இயலவுந் தருவது கொல்?

(கருத்து) நான் இனி மடலேறுவேன்.

(வி - ரை.) கருக்குடையதாக வேண்டுதலின் விளையல் மாமடலென்றான். மாமடலென்பதை மடன் மா வென்று மாற்றிப் பொருள் கொள்ளுதலும் ஒன்று. மணியை மடல்மாவுக்குப் பூட்டுவர். பேதை யென்றான், தன் நெஞ்சத்திலுள்ள காமத்தை அறியாமையின். தூதென்றது தோழியை; 'பெட்ட வாயில்' என்று அவளைக் குறிக்கும் வழக்காறு காண்க. அமைந்த தூது என்றான், தலைவியினிடத்துச் சென்று தன் குறை கூறத்தக்க உரிமையுடையாளிவளே யென்பதை முன்னர்த் தலைவியின் நோக்கக் குறிப்பால் உணர்ந்தவனதலின்.

நெஞ்சை நோக்கிக் கூறினானேனும் கருதியது தோழி அறிய வேண்டுமென்பதே.

இயலவும்: உம்மை இழிவு சிறப்பு.

கொல்: ஐயம்; ஓ, ஏ: அசைநிலைகள்.

மடலேறுதலைப் பற்றிப் பாடிய சிறப்பால் இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் 'மடல் பாடிய' என்ற சிறப்பைப் பெற்றார்.

(மேற்.) மு. தோழி சேட்படுத்த விடத்துத் தலைவன் மடன்மா ஏறுவ லெனத் தன் நெஞ்சொடு கிளந்தது (தொல். களவு. 11, ந.)

(ஒப்பு.) 1-2. மடன்மாவிற்கு மணி யணிதல்: குறுந். 172: 3, ஒப்பு.

3. மடலேறுவார் என்பை அணிதல்: "மங்கையர்தங் கண்ணுன் மையங்கினர் வெள்ளெலும்பும், துங்க வெருக்குந் தொடுத்தணிந் - தங்க

மெலாம், வெந்தாறு சாம்பன் மிகவணிந்து வீதிதொறும், வந்தேறி யூர்வர் மடல்" (கிளவித் தெளிவு); "என் பணி வேன்மடன் மேல்வருவேன்", "தொடையே யெருக்கென்பு கீயணிந் தாலென்னே" (தஞ்சை. 103-4), "கொம்மைப் பணைமுலை கூட்டும் பரிசு கொடியிடையார், தம்மைப் பெருதவர் தாலப் புரவியு மாலையென்பும் .....இம்மைக்கு நாடி" (அம்பிகாபதி கோவை, 119.)

மடலேறுவாரைப் பிறர் எள்ளுதல்: "வறிதாகப் பிறரென்னை நகுபவும்", "காணுந பெள்ளக் கலங்கித் தலைவந்து" (கலி. 138 : 4, 139 : 20.)

4. மடலேறுவார் நாணை நீக்குதல்: குறுந். 173 : 3, ஒப்பு.

1-5. மடலேறித் தெருவில் வருதல்: குறுந். 17 : 1-3, ஒப்பு.

6. (பி - ம்.) கலிழ்கவின்: மதுரைக். 413; ஐங். 106 : 4, 174 : 4; அகநா. 41 : 15; 96 : 12; பெருங். 2. 5 : 170.

அசைநடைப் பேதை: "அசையியற் கொடிச்சி" (குறுந். 214 : 3); "அசைநடைக் கொடிச்சியை" (ஐங். 258 : 2); "அசையியற்கு" (குறள், 1098.) (கஅ2)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வரவும் அவன் வாராமையால் தலைவி ஆற்றுளென்று எண்ணி வருந்திய தோழியை நோக்கி, "கார்காலத்துக்குரிய அடையாளங்களே அவர் கண்டு என்னை நினைந்து வருவர்" என்பதுபடத் தலைவி கூறியது.]

கஅ3. சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
நம்போற் பசக்குங் காலைத் தம்போற்
சிறுதலைப் பிணையிற் றீர்ந்த நெறிகோட
டிரலை மானையுங் காண்பர்கொ னமரே
5. புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயி லெருத்திற் றோன்றும்
கான வைப்பிற் புன்புலத் தானே.

எ - து. பருவ வரவின்கண் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது.

ஔவையார் (பி-ம். அவ்வையார்.)

(பி - ம்.) 7 'கானக', 'புன்புல வைப்பிற் கானத் தானே

(ப - ரை.) தோழி, புல் என் காயா பூ கெழு பெருஞினை - மழை பெய்வதற்கு முன் பொலிவழிந்திருந்த காயாவினது மலர்கள் பொருந்திய பெரிய கிளை, மெல் மயில் எருத்தின் தோன்றும் -

மழை பெய்தபின் மெல்லிய மயிலினது கழுத்தைப் போலத் தோற்றும், கானம் வைப்பின் புல் புலத்தான் - காட்டிடத்தை யுடைய புல்லிய நிலத்தின் கண், சென்ற நாட்ட - எம்மைப் பிரிந்து சென்று தங்கிய நாட்டிடத்து உள்ளனவாகிய, கொன்றை அம் பசுவீ - கொன்றையின் அழகிய செவ்வி மலர்கள், நம் போல் பசக்கும் காலை - நம்மைப் போலப் பசலை நிறத்தையடையும் கார்ப் பருவத்தில், சிறுதலை பிணையின் தீர்ந்த - சிறிய தலையையுடைய பெண் மானிடத்தினின்றும் நீங்கிய, நெறி கோடு இரலை மானையும் - நெறிந்த கொம்பையுடைய ஆண்மானையும், நமர் - நம் தலைவர், காண்பர் கொல் - காண்பரோ ; காணுர்.

(முடிபு) புன்புலத்தான் கொன்றையம் பசுவீ பசக்குங் காலைப் பிணையிற்றீர்ந்த இரலை மானையும் நமர் காண்பர் கொல் ?

(கருத்து) கார்காலம் வந்ததை அறிந்து தலைவர் விரைவில் வந்து விடுவர்.

(வி - ரை.) பசத்தல் - பொன்னிற மடைதல் ; என்றது கார் காலத்திற் கொன்றை வளம்பெற்று மலர்வதைக் குறித்தபடி. தாம் என்னைப் பிரிந்திருப்பது போலப் பிணையைப் பிரிந்திருக்கும் இரலை யென்ருள். காண்பர் கொலென்றது காணுரென்ற நினைவிற்று. "கார்காலத்தில் ஆண்மானும் பெண்மானும் ஒருங்கு கூடி உகளுதலே இயல்பு ; ஆதலின் அவர் அவ்விரண்டும் ஒன்றியிருப்பதையே காண்பாரன்றித் தனித்திருக்கும் இரலையைக் காணுர் ; அவ்வொன்றிய காட்சியைக் கண்டு தாமும் அங்ஙனம் ஒன்றுபட வேண்டு மென்னும் விருப்புடையராவர். ஆண்டுள்ள கொன்றை மரத்திலுள்ள மலர்கள் தம்மைப் பிரிந்தமையால் என்பால் உண்டாயிருக்கும் பசலையை நினைவுறுத்தும். இவற்ருல் அவர் விரைவில் மீள்வர். இது கருதி நான் ஆற்றியுள்ளேன்" என்று கூறினுள். ஆற்ருளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவ லென்பது படக் கூறியது இது.

> "வன்பரற் றெள்ளரல் பருகிய விரலை
> இன்புறு துணையொடு மறுவந் துகளத்
> தான்வந் தன்றே தளிதரு தண்கார்" (குறுந். 65 : 1-3)

என்பது முதலியவற்ருற் கார்காலத்தில் ஆண்மான் தனித்திராது பெண்மானுேடு சேர்ந்திருக்குமென்பது தெளியப்படும்.

புல்லென் காயா வென்பதிலுள்ள அடை முன்னிருந்த நிலையைக் குறித்தது. கானவைப்பு - முல்லை நிலம். புன்புலம் - புன்செய்.

(ஒப்பு.) 1-2. பசலை கொன்றைப் பூவிற்கு : "கொன்றை, ஊழுறு மலரிற் பாழ்பட முற்றிய, பசலை மேனி" (அகநா. 398 : 3-5); "மெல்லியாள், தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப், பொன்னுருவங் கொண்டு புலம்புற்றாள்" (ஆதியுலா, 131-2); "குழலுஞ் சுணங்குங் கொன்றை காட்ட" (திருவாரூர் மும். 1.)

கொன்றை கார்காலத்தில் மலர்தல் : குறுந். 21 : 3-4, ஒப்பு ; ஐங். 462, 497.

3. சிறுதலைப் பிணை : "சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை" (புறநா. 2 : 21.)

5. காயாமரம் கார்காலத்தில் மலர்தல் : "மணியெனப், பன்மலர்க் காயாங் குறுஞ்சினை கனலக், கார்தொடங் கின்றே" (நற். 242 : 3-5); "வானம் வாய்ப்பக் கனிணிக் கானம், கமஞ்சூன் மாமழை கார்பயந் திறுத்தென, மணிமருள் பூவை யணிமல ரிடையிடைச், செம்புற மூதாய் பரத்தலின்", "மணிமிடை பவளம் போல வணிமிகக், காயாஞ் செம்ம ருஅய்ப் பலவுடன் சுயன் மூதா யிர்ம்புறம் வரிப்பப், புலனணி கொண்ட காதெதிர் காலே", "காயா, அணிமிகு செம்ம லொளிப்பன மறையக், கார் கனின் கொண்ட காமர் காலே" (அகநா. 134 : 1-4, 304 : 13-6, 374 : 13-5.)

1-5. கொன்றையும் காயாவும் : பொருந. 201 ; மூலைப். 93-4 ; நற். 242 : 3-4, 371 : 1 ; ஐங். 412 : 1, 420 : 1-2 ; பெருங். 1. 49 : 115-6.

5-6. காயாஞ்சினை மயிலின் கழுத்திற்கு : "கருஙனைக் காயாக் கணமயி லனிழ" (சிறுபாண். 165); 'மயிலெருத் தழகணி - மயிலினது கழுத்தை மாறு படுகின்ற அணியப்பட்ட காயாம் பூவாற் செய்த கண்ணிகள்' (கலி. 103 : 59, ந.); "விரவுப் பொறி மஞ்ஞை வெரீஇ யரவின், அணங்குடை யருந்தலை பைஞிரிப் பவைபோற், காயா மென்சினை தோய நீடிப், பசுஞ்சுடுப் பெடுத்த வலங்குகுலைக் காந்தள்" (அகநா. 108 : 12-5); "கருவுற்ற காயாக் கணமயி லென்றஞ்சி" (திணைமாலை. 107); "கலவ மாமயி லெருத்திற் கடிமல ரவிழ்ந்தன காயா" (சீவக. 1558.)

7. புன்புலம் : குறுந். 202 : 2. (கஅக)

தலைவன் கூற்று

[தன்னை இடித்துரைத்த பாங்கனை நோக்கி, "சிற்றூரிடத்திற் செல்பவர் யாரும் தலைவியின் கண்வலையிற் படுவர் ; என் நெஞ்சம் அதிற்பட்டது" என்று கூறியது.]

கஅச. அறிகரி பொய்த்த லான்றேர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்ட தென்னை ததற்பட்
டாண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்

5. மயிற்க ணன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படுஉங் கான லானே.

எ - து. கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.
ஆரிய வரசன் யாழ்ப் பிரமதத்தன்.

(பி-ம்) 3 'அதர்ப்பட்டு' 4 'ஒழிந்தன்றென்' 'தன்றே ணாண்டகை', 'தன்றென் மாண்டகை' 5 'மாமுடிப்' 7 'காண லானே'

(ப -ரை.) மயில் கண் அன்ன - மயிலினது பீலிக் கண்ணைப் போன்ற, மாண்முடி பாவை - மாட்சிமைப் பட்ட முடியையுடைய பாவை போல்வாளாகிய, நுண்வலை பரதவர் மடமகள் - நுண்ணிய வலையையுடைய நெய்தனில மாக்களுடைய மடமையையுடைய மகளது, கண் வலை படூஉம் கானலான் - கண்வலையின்கண் ஆண்டுச் செல்வார் அகப்படுகின்ற கடற்கரைச் சோலையினிடத்து, மாண்தகை நெஞ்சம் - எனது மாட்சிமைப்பட்ட தகுதியையுடைய நெஞ்சம், இதற்கு இது மாண்டது - இப்பொருளுக்கு இப் பொருள் ஏற்ற மாட்சியையுடையது, என்னுது - என்று ஆராயாமல், அதன் பட்டு - அக்கண் வலையின் கண்ணே பட்டு, ஆண்டு ஒழிந்தன்று - அக்கானலினிடத்தே தங்கியது; ஆன்றோர்க்கு - அறிவான் அமைந்தவர்கட்கு, அறிகரி பொய்த்தல் இல்லை - தாம் கண்டறிந்த தொன்றை மறைத்துப் பொய்க்கரி கூறும் இயல்பு இல்லை; ஆதலின் யாம் கண்டறிந்த இதனை உண்மையாகக் கொள்க; சிறுகுடி செலவு - அச்சிற்றூரினிடத்துச் செல்லுதலை, குறுகல் ஓம்புமின் - அடைதலைப் பரிகரிமின்.

(முடிபு) கானலான் நெஞ்சம் ஒழிந்தன்று; அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை. குறுகல் ஓம்புமின்.

(கருத்து) நீவிர் ஆண்டுச் சென்றுல் இங்ஙனம் கழறீர்.

(வி - ரை.) அறிகரி பொய்த்தல் - தாம் அறிந்ததோருண்மையான நிகழ்ச்சியை மறைத்துப் பொய்க்கரி கூறுதல்; அறிகரி - நெஞ்சறிந்த கரி; "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" (குறள், 293) என்பது இங்கே அறிதற் குரியது. ஆன்றோரென்றது தன்னையும் உளப்படுத்தி; இங்ஙனங் கூறுதல் தற்புகழ்ச்சியன்று; பட்டாங்கு கூறியது (திருச்சிற். 27, உரை; சீவக. 1364, உரை.) அதற்பட்டு: அன், சாரியை; "என்னிதற் படலே" (அகநா. 95: 15) என்று வருதலுங் காண்க. ஆன்றோனுதலின் மாண்டகை நெஞ்ச முடைய

ஞியினன். நாண்டகை நெஞ்ச மென்ற பாடத்திற்கு நாணத்தை நீத்த நெஞ்சமென்று பொருள் கொள்க. நுண்வலை யென்றது நுண்ணிய நூலாலான வலையை; "நுண்ஞாண் வலியில்" (ஐந். எழு. 66.) வலையை யுடையார் மகளென்றமையின் அவள் கண் னையும் வலையாக உருவகித்தான். கண்வலை யென்றதற் கேற்ப நெஞ்சத்தை மீனாகக் கொள்க (திருச்சிற். 74.)

"பரதவர் மடமகள் கண்வலையில் என் நெஞ்சம் பட்டு ஆண்டே தங்கி விட்டது; இங்கிலை எனக்கு மட்டும் அமைந்த தன்று; யாராயினும் அவ்வலையிலே படுவர்; இது யான் அறிந்த உண்மை; ஆதலின் அங்கே ஒருவரும் செல்லற்க; செல்லின் துன் புறுவீர்" என்னும் கருத்துப்படத் தலைவன் கூறினன். இதனால், "நீர் கண்டனிராயிற் கழறலிர்" (அகநா. 130 : 2) என்ற எச்சப் பொருள் தோன்றியது.

(மேற்.) மு. முல்லையும் குறிஞ்சியும் ஒழிந்தவற்றுடன் திணைதொறும் மரீஇய பெயருடையோரிலும் திணை நிலைப் பெயராகிய தலைமக்களாக வழங்குவாரும் உளர்; 'இது கழறிய பாங்கற்குக் கூறியது' (தொல். அகத். 22, ந.)

(ஒப்பு.) 1. அறிகரி பொய்த்தல் : நற். 196 : 9, சிலப். 15 : 78.

கரி பொய்த்தல் : கலி. 34 : 10.

அறிகரி : அகநா. 256 : 28.

2. குறுந். 206 : 5.

சிறுகுடி : குறுந். 95 : 3, 100 : 3, 108 : 1, 145 : 1, 228 : 3; 284 : 8, 332 : 3, 332 : 5, 355 : 6, 373 : 7.

6. நுண்வலை : "நானல நுண்வலை" (திணைமாலை. 32.)

6-7. மடமகள் கண்வலை : "காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து, வீசின போதுள்ள மீனிழந்தார்" (திருச்சிற். 74.) (கஅசு)

தலைவி கூற்று

[தலைமகன் இரவில் வந்து தலைவியோடு அளவளாவி வருங் காலத்தில் ஆற்றின் ஏதம் அஞ்சி வேறுபட்ட தலைவியை நோக்கி, "நீ வேறுபட்டாயால்!" என்ற தோழிக்கு, "யான் வேறுபட்ட மையைத் தலைவனுக்குச் சொல்லிப் பரிகாரம் தேடுவாயாக" என்று தலைவி கூறியது.]

கஅடு. நுதல்பசப் பிவர்ந்து திதலை வாடி
நெடுமென் பணைத்தோள் சாஅய்த் தொடி
[நெகிழ்ந்

தின்ன ளாகுத னும்மி னுகுமெனச்
சொல்லி னெவனுந் தோழி பல்வரிப்
பாம்புபை யவிந்தது போலக் கூம்பிக்
கொண்டலிற் றெலைந்த வொண்செங்
கன்மிசைக் கவியு நாடற்கென் [காந்தள்
நன்மா மேனி யழிபடர் நிலையே.

எ - து. தலைமகன் இரவுக்குறி வந்து ஒழுகா நின்ற காலத்து வேறுபட்ட தலைமகளை, "வேறுபட்டாயால்" என்றுட்குக் கிழத்தி உரைத்தது.

[என்றுட்கு - என்ற தோழிக்கு.]

மதுரை அறுவை வாணிகன் இள வேட்டன்

(பி . ம். வேட்டன், இளவேட்டனார்.)

(பி-ம்.) 2 'நெகிழ்த்து' 3 'னும் மிற்றுகுமென' 8 'னமர்மேனி'

(ப - ரை.) தோழி—, பல் வரி பாம்பு - பல பத்திக் கீற்றுக் களையுடைய பாம்பினது, பை அவிந்தது போல கூம்பி - படம் ஒடுங்கியதைப் போலக் குவிந்து, கொண்டலின் தெலைந்த - கீழ் காற்றால் வீழ்த்தப்பட்ட, ஒள் செ காந்தள் - ஒள்ளிய செவ்விய காந்தள் மலர், கல் மிசை - பாறையின் மேல், கவியும் - கவிந்து கிடக்கும், நாடற்கு - நாட்டையுடைய தலைவனுக்கு, என் நல் மா மேனி - எனது நல்ல மாமையையுடைய மேனியினது, அழி படர் நிலை - மிக்க துயரையுடைய நிலையை, நுதல் பசப்பு இவர்ந்து - நெற்றி பசலை பரந்து, திதலை வாடி - தேமல் ஒளியிழந்து, நெடுமெல் பணை தோள் - நெடிய மெல்லிய பருத்த தோள்கள், சாஅய் - மெலிந்து, தொடி நெகிழ்ந்து - வளைகள் நெகிழப் பெற்று, இன்னள் ஆகுதல் - இத்தகைய வேறுபாட்டை யுடையளாகுதல், நும்மின் ஆகும் என - உம்மால் ஆகியதென, சொல்லின் எவனும் - விளங்கச் சொன்னால் என்ன குற்றம் உளதாகும் ?

(முடிபு) தோழி, நாடற்கு என் மேனி நிலையை இன்ன ளாகுதல் நும்மினுகுமெனச் சொல்லின் எவனும் ?

(கருத்து) தலைவன் இராவந்தொழுகுவதனால் நான் வேறு பட்டமையை அவனுக்கு நீ அறிவிப்பாயாக.

(வி - ரை.) "இரவிலே தலைவன் வந்து அளவளாவும் பொழுது அதனால் மனமகிழ்ந்து இருத்தற்கு மாறாக நீ இங்ஙனம் வேறு பட்டாயே !" என்ற தோழியை நோக்கி, "இங்ஙனம்

என்னிடம் கூறுவதினும் என் நிலையைத் தலைவனிடம் கூறுதல் நலம்" என்று தலைவி கூறினாள்.

தோழி அங்ஙனம் கூறின் தலைவன் தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் யாதென்று ஆராயப்புகுந்து, தான் இரவருதலால் ஆற்றின்கண் ஏதம் நிகழுமோ வெனத் தலைவி அஞ்சி வேறு பட்டாளென்பதனை அறிவான்; அறிந்து இவ் வொழுகலாற்றை நீத்து வரைந்து கொண்டு இடையறாது உடனிருத்தலே நலமென்று கருதி வரைவு மேற்கொள்வான். இதுவே இங்ஙனம் கூறியதற்குப் பயன்.

நிதலை - தேமல். பணைத்தோள் - மூங்கிலைப் போன்ற தோளெனலுமாம். தோள் மெலிந்தமையின் தொடி நெகிழ்ந்தது. இவர்ந்து வாடி முதலிய எச்ச வினைகள் சினைக்கும் முதலுக்கு முள்ள ஒற்றுமை பற்றி ஆகுதலென்னும் வினைமுதல் வினையோடு முடிந்தன. நும்மினுகு மென்றல், "யாம் யாதுஞ் செய்திலமே! இவளை நாடொறும் காண்டற் பொருட்டன்றே நீண்ட நெறியைக் கடந்து வருகின்றேம்" என்று ஆராயப்புகுவான்; ஆதலின் அங்ஙனம் கூறும்படி சொன்னாள்.

"நெஞ்சங் கடுத்தது காட்டும் முகம்".(குறள், 706) ஆதலின், தன் வேறுபாடுகளைக் கூறப் புக்கவள் முதலில் நுதல் வேறுபாட்டை உரைத்தாள்.

(ஒப்பு.) 1. நுதல் பசத்தல்: குறுந். 87 : 4, ஒப்பு.

2. நெடு மென்பணைத் தோள்: குறுந். 268 : 6.

தோள் மெலிதல்: குறுந். 87 : 5, ஒப்பு.

தொடி நெகிழ்தல்: 50 : 4-5, ஒப்பு.

தோள் மெலிதலும் தொடி நெகிழ்தலும்: குறுந். 239 : 1; குறள், 1236.

1-2. நுதல் பசத்தலும் தோள் நெகிழ்தலும். குறுந். 87 : 4-5, ஒப்பு.

3. இன்னாராதல்: குறுந். 98 : 1, 296 : 7-8.

4. சொல்லின் எவன்: "சொல்லி னெவனே பாண" (அகநா. 50 : 10.)

4-5. பல்வரிப் பாம்பு: குறுந். 119 : 1, 190 : 3-4.

5-6. காந்தளுக்குப் பாம்பு: குறுந். 239 : 3-5, ஒப்பு.

மு. தலைவி தன் வேறுபாட்டைத் தலைவனுக்கு அறிவிக்க விரும்புதல்: குறுந். 98 : 1-3, ஒப்பு. (கஅடு)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச்சென்ற கார்ப்பருவம் வரவும் அவன் வாராமையால் தலைவி துயருறுவாளென்று வருந்திய தோழியை நோக்கி, "தலைவனை நினைந்து துயிலேனுயினேன்" என்று தலைவி கூறியது.]

கஅசு. ஆர்கலி யேற்ரெடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறென முகைக்கு நாடற்குத்
துயிறுறந் தனவாற் ரோழியென் கண்ணே.

எ - து. பருவ வரவின்கண் ஆற்ருளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

ஒக்கூர் மாசாத்தி.

(பி - ம்.) 1 'யாற்ரெடு' 3 'முகையு' 4 'ரோழியெங்'

(ப - ரை.) தோழி—, என் கண் - என் கண்கள், ஆர் கலி - ஏற்ரெடு - மிக்க முழக்கத்தையுடைய இடியேற்ரோடு, கார் தலை மணந்த - மேகம் மழைபெய்து கலந்த, கொல்லை புனத்த - முல்லை நிலத்திலுள்ளனவாகிய, முல்லை மென் கொடி - மெல்லிய முல்லைக் கொடிகள், எயிறு என முகைக்கும் நாடற்கு - பற்களைப் போல அரும்பும் நாட்டையுடைய தலைவன் பொருட்டு, துயில் துறந்தன - உறக்கத்தை யொழிந்தன.

(முடிபு) தோழி, என் கண் நாடற்குத் துயில் துறந்தன.

(கருத்து) தலைவன் இன்னும் வாராமையின் நான் துயிலொழிந்து வருந்துகின்றேன்.

(வி - ரை.) ஏறு - இடியேறு; "இன்குர லேற்ரெடு" (குறிஞ்சிப். 49); "முழவதிர்ந் தன்ன முழக்கத் தேரோ, டுரவுப் பெயல் பொழிந்த நள்ளென் யாமத்து" (அகநா. 328 : 2-3.) தலை மணந்த : தலை அசைநிலை; 'தலை மயங்கி யென்பதனுள் தலை அசை நிலை' (புறநா. 157 : 9, உரை) எனப் பிரண்டும் இவ்வசை நிலை வருதல் காண்க. கொல்லைப் புனம் - புனமாகிய கொல்லை; 'புனமென்பது, முன்பு பயிராயதனை; கொல்லை யென்பது, பயிரின்றித் தரிசாய்க் கிடந்த காட்டினை' (89 : 17) என்பர் அகநானூற்று உரையாசிரியர். முல்லை யெயிறென முகைக்கு மென்றது கார்ப்பருவம் வந்ததைப் புலப்படுத்தியது. 'முகையும்' என்னும் பாடமும் அரும்பும் என்னும் பொருளையுடையது;

"முகைந்த தாமரை" (ஐங். 6 : 4.) என வருவதை இங்கே கருதுக. நாடற்குத் துயில் துறத்தலாவது, நாடனைச் சேரா மையின் அவனை நினைந்து துயிலா திருத்தல்; நாடனுல் துயில் துறந்தனவென உருபு மயக்க மாக்குதலும் ஆம்.

இஃது ஆற்றுமைக்குக் காரணம் கூறியது.

(ஒப்பு.) 2. கொல்லைப் புனம்: "கொல்லை யிரும்புனத்து" (நாலடி. 178); "கொல்லைப் புனத்த வகில்" (ஐங். எழு. 2.)

1-2. கார், புனம், முல்லை: குறுந். 188 : 1-2.

2-3. முல்லை எயிறென முகைத்தல்: (குறுந். 126 : 3-4, ஒப்பு); "முல்லை யிலங்கெயி றீன" (கார். 14); "கார் கொடிமுல்லை யெயிறீன" (ஐங். எழு. 21.) "கார்செப் புறவிற் கவினிக் கொடிமுல்லை, கூரெயிறீன," "முல்லை யெயிறீன" (கைந்நிலை, 25, 34.)

முல்லை முகைக்கும்: "பாசிலை முல்லை முகைக்கும்" (புறநா. 117 : 9.)

1-3. முல்லை கார்காலத்தில் அரும்புதல்: குறுந். 126 : 3-5, ஒப்பு.

3-4. தலைவன் பிரிவினுல் கண் துயிலாமை: குறுந். 5 : 4-5, ஒப்பு. (கஅசு)

தலைவி கூற்று

[வரை பொருட்குப் பிரிந்த தலைவன் நீட்டித்தானுக, அவன் மேற் குறையேற்றி உரையாடிய தோழியை நோக்கி, "அவர் தாம் சென்ற வினையை நிறைவேற்றிக் கொண்டு விரைவில் வரும் வன்மையை யுடையார்" என்று தலைவி கூறியது.]

கூஅ எ. செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
சுரைபொழி தீம்பா லார மாந்திப்
பெருவரை நீழ லுகளு நாடன்
கல்லினும் வலியன் ரோழி
5. வலிய னென்னது மெலியு மென்னெஞ்சே.

எ - து. வரைவு நீட்டித்தவழி ஆற்ருளாகிய தலைமகளை ஆற்று விக்க வேண்டித் தலைமகனை இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கபிலர்.

(பி - ம்.) 1 'செல்வரை'; 'செச்சை வருடை' 4 'பல்லினும்'

(ப - ரை.) தோழி—, செ வரை சேக்கை - செவ்விய மலைப் பக்கத்தின்கண் தங்குதலை யுடைய, வருடைமான் மறி - எண் கால் வருடையினது குட்டி, சுரைபொழி தீ பால் - தன் தாயின் மடியி

னின்றும் சுரக்கின்ற இனிய பாலை, ஆர மாந்தி - வயிறு நிறைய உண்டு, பெருவரை நீழல் - பெரிய மலைப்பக்கத்திலுள்ள நிழலில், உகளும் நாடன் - துள்ளுதற் கிடமாகிய நாட்டை யுடைய தலைவன்; கல்லினும் வலியன் - கல்லைக் காட்டிலும் வன்மையை உடையவன், என் நெஞ்சு—, வலியன் என்னாது - அவன் வன் மையை யுடையா னென்று கருதாமல், மெலியும் - அவன் திறத்து மெலிவை அடையும்.

(முடிபு) தோழி, நாடன் வலியன்; என் நெஞ்சு மெலியும்.

(கருத்து) தலைவன் வரைபொருள் பெற்று விரைவில் மீள்வான்.

(வி - ரை.) வரை பொருளுக்காகப் பிரிந்த தலைமகன் நீட்டித் தானாக, தலைவி அன்பு மிகுதியினால் ஆற்றுளாயினள்; அது கண்ட தோழி, அவளை ஆற்றுவிக்க எண்ணி "தலைவன் தான் நினைந்து சென்ற பொருளைப் பெற்றிலன் போலும்! உரிய காலத்தே அதனைப் பெற்று வருதற்குரிய வன்மையிலன் போலும்!" என்று தலைவனுக்கு இழிபு தோன்றக் கூறினள். அது கேட்ட தலைவி, தலைவனைக் குறை கூறுவதைக் கேட்கப் பொறுத கற்புடை யவளாதலின், "அவன் வலியன்; தான் நினைந்த பொருள் பெற்று மீள்வன். என் நெஞ்சு அவன் வன்மையை நினையாது அறியாமை யால் வருந்துகின்றது. என் ஆற்றுமைக்குக் காரணம் தலைவன் செயலன்று; எனது நெஞ்சின் அறியாமையே" என்று தலைவன் திறத்திற் குற்றம் சாராதவாறு மொழிந்தாள்.

செவ்வரை - செங்குத்தான மலையுமாம்; அத்தகைய மலைக ளில் ஏறும் வன்மை வருடைக்கு உண்டு; "நெடுவரை மிசையது குறுங்கால் வருடை" (ஐங்: 287: 2.) வருடை - எட்டுக்காலை யுடைய தொரு விலங்கு; இதற்கு முதுகிற் கால்கள் இருக்கு மென்பர்; "மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள், வரை வாழ் வருடை வன்றலை மாத்தகர்" (மலைபடு. 502-3) என்பதன் உரையைப் பார்க்க. பாலை மாந்திய களிப்பினால் மறி வரை நீழலில் துள்ளி விளையாடிற்று.

வருடையின் மறி பாலை ஆரமாந்தி வரை நீழலில் உகளும் நாட னென்றது, தலைவன் வரைவதற்குரிய பொருள் நிரம்பப் பெற்று ஈண்டு வந்து வரைந்து கொண்டு இல்லறம் நடத்துவா னென்ற குறிப்பை யுடையது.

(மேற்.) 1. மறி யென்னும் இளமைப் பெயர் சிறுபான்மை வருடைக் கும் வரும் (தொல். மரபு 12, பேர்.)

(ஒப்பு) 1. வரைச் சேக்கை வருடை : "வரையாடு வருடை" (பட். 139); "மலைப், போருடை வருடை" (நற். 359 ; 7-8) "வரைவாழ் வருடை" (அகநா. 378 : 6) ; "வரையாடு வருடையும்" (சிலப். 25 : 5); "வரைபாய் வருடை" (தொல். தொகை. 15, ந. மேற்.)

வருடை மான் மறி : "வருடை மான் குழவி", "வருடை மடமறி", "வருடை நன்மான், குழவி" (கலி. 43 : 14, 50 : 4, 21-2.) (கஅள)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்ததைக் கண்ட தலைவி "கார்காலம் வந்துவிட்டது, இன்னும் தலைவர் வந்திலர்!" என, தோழிக்குக் கூறி வருந்தியது]

கஅஅ முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வாலிழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்றென் மாணலங் குறித்தே.

எ - து. பருவங் கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது. மதுரை அளக்கர் ஞாழார் மகன் மள்ளன் (பி - ம். மகனர் மள்ளனர்.)

(பி - ம்.) 2 'தகைமுற்றினமே'

(ப - ரை.) தோழி, முல்லை முகை முற்றின - முல்லைக் கொடிகளில் அரும்பு முதிர்ந்தன ; தண் கார் வியல் புனம் முல்லையொடு தகைமுற்றின - தண்ணிய கார்காலத்தை ஏற்ற அகன்ற முல்லை நிலங்கள் முல்லை மலர்களோடு அழகு முதிர்ந்தன ; என் மாண் நலம் குறித்து - எனது மாட்சிமைப் பட்ட அழகைக் கெடுத்தலை எண்ணி, மாலை வந்தன்று - மாலைக் காலம் வந்தது ; வால் இழை நெகிழ்த்தோர் வாரார் - என்னைப் பிரிந்து என் தூய ஆபரணங்களை நெகிழச் செய்த தலைவர் இன்னும் வந்தாரல்லர்.

(முடிபு) முல்லை முகை முற்றின ; புனம் தகை முற்றின ; மாலை வந்தன்று ; இழை நெகிழ்த்தோர் வாரார்.

(கருத்து) கார்காலம் வந்தபின்பும் தலைவர் வந்திலர்.

(வி - ரை.) தகை - தகுதி ; முல்லைத் திணையென்னும் தகுதியை முல்லை மலர்களாற் பெற்ற தென்றலுமாம். தலைவன் பிரிவினால் தலைவியின் உடல் மெலிந்தது ; அதனால் இழைகள் நெகிழ்ந்தன. தன் மெலிவினால் இழைகள் நெகிழ்ந்தனவே யன்றி அவை குற்ற முடையன வல்ல வென்பாள் 'வாலிழை' என்று

சிறப்பித்தாள். 'கார்காலத்தைக் கண்டு வருந்தினேன்; அக் கார்ப்பருவத்திலும் காமம் மலர்வதற்குரிய மாலையைக் கண்டு பின்னும் வருந்தினேன்' என்பாள் அவற்றை அடைவே கூறினாள். வந்தன்று - வந்தது. நலங்குறித்து வந்ததென்று நலத்தை யழித்தல் குறித்து வந்த தென்றவாறு; "பகைவர்ச் சுட்டிய படைகொ ணுனைவிரல்" (முல்லைப். 77) என்பது போல.

(ஒப்பு.) 1. முல்லை கார் காலத்தில் அரும்புதல்: குறுந். 126 : 3-5, ஒப்பு.

1-2. முல்லை, கார், புனம்: குறுந். 186 : 1-2.

3. வாலிழை: குறுந். 45 : 2.

இழை நெகிழ்த்தல்: (குறுந். 358 : 1); "விறலிழை நெகிழ்த்த வீவருங் கடுநோய்" (குறிஞ்சிப். 3); "இழைநெகிழ் பருவரல்", "புனைபிழை ஞெகிழ்த்த புலம்புகொ ளவலமொடு" (நற். 70 : 9, 348 : 7); "இழை நெகிழ் செல்லல்", "இழைநிலை நெகிழ", "இழைநெகிழ் செல்ல லுறீஇ" "வில்லிழை நெகிழ" (ஐங். 25 : 4, 310 : 2, 315 : 3, 318 : 2); "பாசிழை ஞெகிழ" (பதிற். 68 : 15); "திருந்திழை நெகிழ்த்தன", "வீங்கிழை நெகிழச் சாஅய்", "திருத்திழை நெகிழ்ந்து" (அகநா. 206 : 16, 251 : 3, 255 : 17, 387 : 11.)

3-4. தலைவர் வாரார், மாலை வந்தது: குறுந். 155 : 3-7, ஒப்பு. (கஅஅ.)

தலைவன் கூற்று

[வேந்தனது வினைமேற் செல்லாநின்ற தலைவன் தன் பாகனை நோக்கி, "இன்று விரைந்து சென்று வினைமுடித்து, நாளைத் தலைவி பால் மீண்டு வருவேமாக" என்று கூறியது]

கஅங. இன்றே சென்று வருவது நாளைக்
குன்றிழி யருவியின் வெண்டேர் முடுக
இளம்பிறை யன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியிற் பைம்பயிர் துமிப்பக்
5. காலியற் செலவின் மாலை யெய்திச்
சின்னிரை வால்வளைக் குறுமகள்
பன்மா ணுக மணந்துவக் குவமே.

எ - து. வினை தலைவைக்கப்பட்ட விடத்துத் (பி - ம். பட்டிடத்துத்) தலைமகன் பாகற்கு உரைத்தது.

[தலை வைக்கப்பட்ட விடத்து - செய்ய வேண்டுமென்று சுமத்தப்பட்ட காலத்தில்.]

மதுரை சுழத்துப் பூதன்றேவன்.

(பி - ம்.) 4 'விசும்பு வீசு'; 'துமியக்' 5 'காலியிற் செலீஇ' 7 'மடைந்துவக்கும்மே', 'மடைந்து சார்குதுமே'

(ப - ரை.) பாக, இன்றே சென்று - இன்றைக்கே வினையின் பொருட்டுப் புறப்பட்டுப் போய், நாளை வருவது - நாளை மீண்டு வருவேமாக. குன்று இழி அருவியின் - குன்றினின்று வீழும் அருவியைப் போல, வெள் தேர் முடுக - யானைத் தந்தத்தாற் செய்த வெள்ளிய தேர் விரைந்து செல்ல, இள பிறை அன்ன - இளம் பிறையைப் போன்ற, விளங்கு சுடர் நேமி - விளங்குகின்ற ஒளியையுடைய அத்தேரினது சக்கரம், விசும்பு வீழ் கொள்ளியின் - வானத்தினின்றும் வீழ்கின்ற கொள்ளியைப் போல, பசு பயிர் துமிப்ப - பசிய பயிர்களைத் துணிப்ப, கால் இயல் செலவின் - காற்றைப் போன்ற இயல்பையுடைய வேகத்தினால், மாலை எய்தி - மாலைக் காலத்தில் தலைவியிருக்கு மிடத்தை யடைந்து, சில் நிரை வால் வளை குறுமகள் - சிலவாகிய வரிசையையுடைய வெள்ளிய வளைகளை யணிந்த அவளது, பல் மாண் ஆகம் - பலவாக மாட்சிமைப் பட்ட மேனியை, மணந்து உவக்குவம் - மணந்து உவப்போம்.

(முடிபு) இன்றே சென்று நாளை வருவது. தேர் முடுக, நேமி துமிப்ப, மாலை எய்திக் குறுமகள் ஆகம் மணந்து உவக்குவம்.

(கருத்து) இன்று சென்று வினைமுடித்து விட்டுத் தலைவியின் பால் நாளை மாலையில் வந்து எய்துவோமாக.

(வி - ரை.) வேந்தனால் ஏவப்பட்டு வினைமேற் செல்லும் தலைவன் இது கூறினான்.

இன்றே: ஏகாரம் பிரிநிலை. வருவது - வருவேமாக; வியங்கோட் பொருளில் வந்தது; "கொள்ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே" (திருச்சிற். 87) என்பதில் மறப்பதென்பது வியங்கோளாக வந்ததைக் காண்க. யானையின் தந்தம் வெண்ணிற முடையதாதலின் அதனைச் செய்த தேரை 'வெண்டேர்' என்றான்; "வெண்காலமளி" (சிலப். 6: 170) என்ற விடத்து, 'வெண்கால் - மருப்புக்கால்' என அடியார்க்கு நல்லார் எழுதினர்.

நேமி போகும்போது மண்ணிற் புதைந்த பகுதி போக எஞ்சிய பகுதியே வெளியில் தெரியுமாதலின் அப்பகுதிக்குப் பிறை உவமையாயிற்று. விசும்பினின்றும் வீழும் கொள்ளியினற் பயிர் துமிதலைப் போல நேமியால் துமிந்தது; "இழையணி நெடுந்தே ராழி யுறுப்ப, நுண்கொடி மின்னிற் பைம்பயிர்

துமிய" (அகநா. 254 : 13 - 4) என்பதனோடு இதனை ஒப்பு நோக்குக.

சின்னிரை வளையென்ற அடை தலைவி பெதும்பைப் பருவங் கடந்த மங்கைப் பருவத்தினளென்பதைக் குறித்தது (பதிற். 57 : 6, உரை); பல்வளைகள் அணிந்திருப்பினும் தன் உடன் மெலிவினால் அவற்றை இழந்து சில்வளை யுடையளா யிருப்பாளென்னும் கருத்தினாற் கூறினனெனினுமாம். (அகநா. 19 : 15, உரை.) வால் வளை - சங்கினாற் செய்த வளை. பன் மாணகம் - காட்சியினிமை, ஊற்றினிமை, நன்மணம் முதலிய பல மாட்சிமைப்பட்ட உடம்பு. ஆகத்தைப் பன்மாண் மணந்துவக்குவமெனக் கூட்டிப் பன்மாணென்பதற்குப் பலபடியாக வென்று பொருளுரைத்தலும் ஒன்று.

(மேற்.) மு. தலைவன் பிரிவலெனக் கூறியது (தொல். அகத். 41, ந.) 1 - 2 வேந்துறு தொழிலுக்கு இழிந்த எல்லை கூறுர் (தொல். கற்பு. 48, ந.); மு. நெட்டாறு சேறலின்றி அணிமைக்கட் பிரியும் பிரிவு வந்தது (தொல். களவு. 17, இளம்.); நீடே னென்று தலைவன் நீங்கியது (நம்பி. 170.)

(ஒப்பு.) 1. தேருக்கு அருவி : "நல்லெழி னெடுந்தே ரியவுவந் தன்ன, கல்யா ரெலிக்கும் விடர்முழங் கிரங்கிசை" (மலைபடு. 323 - 4,); "கற்பா லருவியி லெலிக்கு நற்றேர்" (அகநா. 184 : 17.)

வெண்டேர் : குறுந். 205 : 3.

அருவி வேகத்திற்கு : "கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்" (பு. வெ. 11.)

3 - 4. பயிர் முதலியவை துமியத் தேர் வருதல் : குறுந். 227 : 1 - 3, ஒப்பு.

5. காலியற் செலவு : "காலுறழ் கடுந்திண்டேர்", "வளியி னிகன் மிகுந் தேரும்" (கலி. 33 : 31, 50 : 15); "காலென மருள வேறி நூலியற், கண்ணேக் கொழிக்கும் பண்ணமை நெடுந்தேர்", "துனைகா லன்ன புனைதேர்", "வான்வழங் கியற்கை வளி பூட்டினையோ" (அகநா. 234 : 7 - 8, 251 : 7, 384 : 6); "காலிய னெடுந்தேர்" (தமிழ்நெறி. மேற்.)

6. சின்னிரை வளை : "சில்வளை" (பதிற் 40 : 21, 57 : 6, 78 : 3.)

குறுமகன் : குறுந். 89 : 7, ஒப்பு. (கஅக)

தலைவி கூற்று

[பொருளீட்டும் பொருட்டுத் தலைவன் பிரிந்திருந்த காலத்தில் தனிமையை யாற்றுத தலைவி தோழியை நோக்கி, "நடு யாமத்தில் யான் துயிலின்றிப்படும் துன்பத்தைத் தலைவர் அறிவாரோ? என்று கூறியது.]

கக0. நெறியிருங் கதுப்பொடு பெருந்தோ ணீவிச்
செறிவளை நெகிழச் செய்பொருட் ககன்றோர்
அறிவர்கொல் வாழி தோழி பொறிவரி
வெஞ்சின வரவின் பைந்தலை துமிய
5. உரவுரு முரறு மரையிரு ணடுநாள்
நல்லே றியங்குதோ றியம்பும்
பல்லான் றொழுவத் தொருமணிக் குரலே.

எ - து. பிரிவிடை ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பூதம்புல்லன் (பி - ம். பூதம்புலவன்.)

(பி - ம்.) 5 'நரையுரு, மாவுரு, வரவுரு' 7 'எழுமணிக்'

(ப - ரை.) தோழி,— நெறி இரு கதுப்பொடு - நெறிப்பை யுடைய கரிய கூந்தலொடு, பெரு தோள் நீவி-பெரிய தோள்களைத் தடவி என்னைத் தேற்றி, செறி வளை நெகிழ - இறுகச் செறித்த வளைகள் நெகிழும்படி, செய்பொருட்கு அகன்றோர் - தாம் ஈட்டும் பொருளின் பொருட்டு என்னைப் பிரிந்து சென்ற தலைவர், பொறி வரி வெஞ்சினம் அரவின் - புள்ளிகளையும், பத்திக்கீற்றுக்களையும் மிக்க சினத்தையுமுடைய பாம்புகளின், பசு தலை துமிய - பசிய தலைகள் துணியும்படி, உரம் உரும் உரறும் - வலியையுடைய இடியேறு முழங்குகின்ற, அரை இருள் நடு நாள் - பாதியிரவின் கண், பல் ஆன் தொழுவத்து - பல பசுக்கள் உள்ள தொழுவத்தில், நல் ஏறு இயங்கு தோறு இயம்பும் - நல்ல ஆனேறு செல்லுந் தோறும் ஒலிக்கின்ற, ஒரு மணிகுரல் - ஒற்றை மணியின் குரலை, அறிவர் கொல் - அறிவாரோ?

(முடிபு) தோழி, அகன்றோர் நடு நாள் ஏறு இயங்கு தோறியம் பும் மணிக்குரலை அறிவர் கொல்?

(கருத்து) இங்கே நான் படும் துன்பத்தைத் தலைவர் அறியார் போலும்!

(வி - ரை.) கதுப்பும் தோளும் நீவித் தலையளி செய்தது பின்பு பிரியும் பொருட்டு. செறிவளை - முன்பு செறிந்திருந்த வளை. அறிவர் கொல் என்றது அறிந்தாற் பிரிந்திரா ரென்னும் நினைவிற்று. கொல்: ஐயம். வாழி: அசைநிலை. உரம் - மலை யையும் பிளக்கும் ஆற்றல்; "வரையுதிர்க்கும், நரை யுரு மினேறு" (மதுரைக். 62 - 3.) ஆவினங்களுக்கு இன்பந் தருதலின்

கல்லேறுயிற்று. இயங்கு தோறு - அசையுந் தோறு மெனினுமாம். ஒரு மணி ஏற்றின் கழுத்திலுள்ளது. பல பசுக்கள் கட்டிய தொழுவத்திற் கேட்கும் ஒரு மணிக்குரல், அவை அந்நல்லேற் றோடு இன்புற்றிருக்கும் நிலையை நினைவுறுத்தி, "இவை பெற்ற பேறு யாம் பெற்றிலேமே!" என இரங்குதற்குக் காரண மாயிற்று. அக்குரலை நள்ளிரவில் தான் கேட்பதாகக் குறிப்பித் தாள்; இதனால் அவள் நள்ளிரவிலும் துஞ்சாமை பெறப்படும்.

(ஒப்பு.) 1. நெறியிருங் கதுப்பு: "நெறிபடு கூந்தல்" (குறுங். 199: 4); "நெறியிருங் கதுப்பினென் பேதை", "நெறியிருங் கதுப்பிற் கோதை யும் புனைக" (அகநா. 35: 17, 269: 2.)

கதுப்பு நீவுதல்: (குறுங். 379: 6); "பாறு மயிர் நீவி" (அகநா. 300: 7); "ஓதியு நுதலு நீவி" (தொல். மெய்ப். 15. பேர். மேற்.)

கதுப்பும் தோளும்: "நெறியிருங் கதுப்பு நீண்ட தோளும்" (நற். 387: 1.)

5. அரையிரு ணடுநாள்: "அரை நாட் கங்குல்", "அரைநாள் யாமத்து", "அரை நாள்" (அகநா. 112: 4, 198: 4, 311: 4.)

மு. நற். 68: 8.

4 - 5. பாம்பின் தலை கெட இடி இடித்தல்: குறுங். 158: 1-2, ஒப்பு; பதிற். 51: 25 - 8; அகநா. 92: 11, 323: 10 - 11; புறநா. 17: 38 - 9, 37: 1 - 4, 58: 6-7, 126: 19, 366: 3; நாலடி. 164; கார். 20; களவழி. 13, 38; இனியவை நாற்பது. 28.

உரவுரும் உரறுவதால் அரவின் பைந்தலை துமிதல்: "பானுள், உத்தி யரவின் பைத்தலை துமிய, உரவுரு முரறும்" (அகநா. 202: 9 - 11.)

6 - 7. ஏற்றின் மணி: குறுங். 275: 3 - 4. தலைவி யாமத்தில் ஆன்மணி யோசையைக்கேட்டுத் துன்புறல்: குறுங். 86: 4 - 6, ஒப்பு. (கஙo)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்தில், "தம் பிரிவினால் யான் துன்புறுவேனென்பதையும், தாம் பிரியுங்காலம் ஏற்றதன்றென் பதையும் கருதாமற் பிரிந்து சென்ற தலைவர் மீண்டு வரிற் புலந்து மறுப்பேன்" என்று தோழிக்குத் தலைவி கூறியது.]

கஙக. உதுக்கா ணதுவே யிதுவென் மொழிகோ
நோன்சினை யிருந்த விருந்தோட்டுப்
புள்ளினம்
தாம்புணர்ந் தமையிற் பிரிந்தோ ருள்ளா
தீங்குர லகவக் கேட்டு நீங்கிய

5. ஏதி லாள ரிவண்வரிற் போதிற்
பொம்ம லோதியும் பூணியல்
எம்முந் தொடாஅ லென்குவெ மன்னே.

எ - து. பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.]

(பி - ம்.) 2 'நேர்சிணை' 3 'ருள்ளாது', 'ருள்ளத்' 'என்குவம்'

(ப - ரை.) தோழி-, இது என் மொழிகு - இதனை என்னென்று சொல்வேன்? நோன் சிலை இருந்த - வலிய மரக்கிளையில் இருந்த, இரு தோடு புள் இனம் - பெரிய தொகுதியையுடைய பறவைக் கூட்டங்கள், தாம் புணர்ந்தமையின் - தாம் துணைகளோடு சேர்ந்தமையால், பிரிந்தோர் உள்ளா - துணைவரைப் பிரிந்தாருடைய துன்பத்தை எண்ணுதனவாய், தீகுரல் அகவ கேட்டும் - இனிய குரலால் அழைப்பக் கேட்ட பின்பும், நீங்கிய - நம்மைப் பிரிந்த, ஏதிலாளர் - அயற்றன்மையையுடைய தலைவர், இவண் வரின் - இங்கே மீண்டு வந்தால், போதின் பொம்மல் ஓதியும் பூணியல் - மலர்களால் பொங்குதலையுடைய கூந்தலையும் அலங்கரித்தலை யொழிக, எம்மும் தொடாஅல் - எம்மையும் தொடுதலை யொழிக, என்குவெம் - என்று கூறுவம்; அது - அங்ஙனம் செய்தலை, உது காண் - உவ்விடத்துப் பார்ப்பாயாக.

(முடிபு) இது வென் மொழிகு? கேட்டும் நீங்கிய ஏதிலாளர் வரின்; "ஓதியும் பூணியல், தொடாஅல்" என்குவம்; அது உதுக்காண்.

(கருத்து) நம்மைப் பிரிந்த தலைவர் வரின், அவரை ஏற்றுக் கொள்ளேன்.

(வி - ரை.) உதுக்காண்: இத் தொடரின் இலக்கண முடிபை இந்நூல் 81 - ஆம் செய்யுள் விசேட வுரையிற் காண்க. புள்ளினம் அகவுதலை, 'உதுக்காண்' என்று சுட்டியதாகப் பொருள் செய்தலும் அமையும். 'இது வென் மொழிகோ' என்பது, 'இங்ஙனம் நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் செயலை, அறத்தின் பாற் பட்ட தென்றோ அருளின் பாற்பட்ட தென்றோ என்னென்று சொல்லுவேன்?' என்றவாறு. என்னென்றது வினவுதல் கருதாது தலைவியது கவற்சியை விளக்கியது (திருச்சிற். 24, உரை.) பிரிந்தோருள்ளா வென்றது, தாம் புணர்ந்துடன் கூடிய மகிழ்ச்சியால் அகவும் குரல் பிரிந்தாருக்குத் துன்பத்தைத் தருமென அவர்

நிலையை நினையாவாயென்றபடி. பிரிந்தோர் துன்புறுதலாவது, 'இவை பெற்ற பேறு யாம் பெற்றிலமே! என இரங்குதல். புணர்ந்த மகிழ்ச்சியால் அகவுவதாதலின் தீங்குரலாயிற்று. கேட்டும்: உம்மை இழிவு சிறப்பு.

ஏதிலாளர் - ஏதின்மையை யுடையவர்; நம்பால் அன்புடைய ராயின் பிரியாரென்னும் நினைவிற்று. தலைவன் தன் ஆதரம் புலப்படத் தலைவியின் கூந்தலைப் புனைதல் மரபு;

"போழ்கிடைப் படாஅமன் முயங்கியு மமையாரென்
தாழ்கதுப் பணிகுவர் காதலர்" (கலி. 4: 10-11)

பிரிந்த தலைவன் மீண்டுவந்தவுடன் தலைவியின் கூந்தலை அணிந்து தன் அன்பை வெளிப்படுத்தும் மரபு,

"இனிதுசெய் தனையா லெந்தை வாழிய
பனிவார் கண்ணள் பலபுலந் துறையும்
ஆய்தொடி யரிவை கூந்தல்
போதுகுர லணிய வேய்தந் தோயே" (அகநா. 104: 14. 7)

என்பதனால் உணரப்படும்.

தலைவன் வந்தவுடன் முதலில் ஓதியைப் புனைந்து பின்பு மேனியைத் தொடப் புகுவானென்பது தலைவியின் நினைவு. இம்முறை,

"பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணெடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள்
மென்றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே" (9: 22-6)

என்ற அகநானூற்றுச் செய்யுளாலும் தெரிய வருகின்றது.

ஏதிலாளரென்று பன்மையாற் கூறியவள் பின் புனையல், தொடாஅ லென ஒருமையாற் கூறினள் தன் உள்ளத் தெழுந்த செறல் பற்றி; "எனைத் துணைய ராயினு மென்னுந் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல்" (குறள், 144.) என்புழிப் போல. சங்கர நமச்சிவாயர் இக்குறளைச் 'செறலிற்பலர்பால் ஒருமைப் பாலாயிற்று' என்பதற்கு உதாரணமாகக் காட்டினர்; நன். 379, உரை.

'புனையல், தொடாஅ லென்குவம்' என்ற தலைவி,

"எழுதங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து" (குறள், 1285)

என்றபடி தலைவனைக் காணுத விடத்தே புலந்திருத்தலும் கண்ட விடத்தே புலவி தீர்ந்து எதிர் கொள்ளலும் மகளிர் இயல்

பாதலின் (கலி. 67 : 77) அது கருதி, "இது பொருளற்ற கூற்று; அவர் வரின் இவள் ஊடல் தானே நீங்கும்" எனத் தோழி எண்ணுதல் கூடுமென்னும் நினைவினளாதலின் ஆக்கப் பொருள் தரும் மன்னைக் கூட்டி, 'என்குவம் மன்னே' என்றாள். ஏ : ஈற்றசை. ஓதியும் : உம், எதிரது தழீஇயது; எம்மும் : உம் இறந்தது தழீஇயது.

(மேற்.) மு. தலைவன் பிரிந்த வழித் தலைவி காய்ந்து கூறியது (தொல். கற்பு. 6, ந.); ஊடலென்னும் உரிப்பொருள் வந்தது (நம்பி. 251.)

(ஒப்பு.) 1. உதுக் காண் : குறுந். 81 : 4, ஒப்பு; ஐங். 101, 453; கலி. 108 : 39; புறநா. 307 : 3.

2. தோட்டுப் புள்ளினம் : குறுந். 34 : 4-5, வி-ரை.

2-4. புணர்ந்த பறவையின் ஒலி பிரிந்தாருக்குத் துன்பத்தை உண்டாக்குதல்: (குறுந். 160 : 1-4); "அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா, எவ்வ நெஞ்சத் தெஃகெறிந் தாங்குப், பிரிவில புலம்பி நுவலுங் குயிலினும்", "புணர் குயில் விளித்தொறு, நம்வயி னினையு நெஞ்சமொடு கைம்மிகக், கேட்டொறுங் கலுழுமால்", "செங்க ணிருங்குயி லெதிர்குரல் பயிற்றும், இன்ப வேனிலும் வந்தன்று" (நற். 97 : 1-3, 157 : 5-7, 224 : 5-6.)

பறவைகள் புணர்ந்து அகவுங் காலத்தில் தலைவர் பிரிதல்: "அடைகரை மாஅத் தல்குசினை பொலியத், தளிர் கவினெனைத்திய தண்ணறும் பொதும் பிற், சேவலொடு கெழீஇய செங்க ணிருங்குயில், புகன்றெதி ராலும் பூமலி காலையும், அகன்றோர் மன்றநம் மறந்திசிஞ்சோர்", "பூங்கணிருங் குயில்..... அகற லோம்புமி னறிவுடை யிரெனக், கையறத் துறப்போர்க் கழறுவ போல, மெய்யுற விருந்து மேவர நுவல, இன்ன தாகிய காலைப் பொருள் வயிற், பிரித லாடவர்க் கியல்பெனின்" (நற். 118 : 1-5, 243 : 4-10);

"விரிகாஞ்சித் தாதாடி யிருங்குயில் விளிப்பவும், பிரிவஞ்சா தவர் தேமை" (கலி. 34 : 8-9.)

5. தலைவனை ஏதிலனென்றல் : "ஏதி லாளர்க்குப் பசந்தவென் கண்ணே", "ஏதிலாளனை" (ஐங். 34 : 4; 232 : 2.)

6. பொய்ம் மோதி : குறுந். 379 : 6; நற். 252 : 12; அகநா. 249 : 9, 221 : 3, 311 : 7, 353 : 23; பெரும். 1. 55 : 119; சிவக. 1674, 2364.

தலைவன் தலைவியின் ஓதியைப் புனைதல் : குறுந். 82 : 1, 192 : 6.

7. எம்மும் தொடரல் : "தொடல்விடு நற்கலையே" (திருச்சிற். 358.) (கஙக)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்தில், "அவர் வருவர்; நீ வருந் தற்க" என்று தோழி கூறி ஆற்றுவிப்பத் தலைவி, "இளவேனிற் பருவத்தும் அவர் வாராமையின் தனித்திருக்கும் யான் எங்ஙனம் வருந்தாமல் இருப்பேன்!" என்று இரங்கிக் கூறியது.]

கக2. ஈங்கே வருவ ரினைய லவரென
அழாஅற்கோ வினியே நோய்நொந்
[துறைவி
மின்னின் றூவி யிருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டூ கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்த றைவரு வேனே.

எ - து. பிரிவிடை வற்புறுத்த வன்புறை (பி - ம். வன் பொறை) எதிரழிந்து கிழத்தி உரைத்தது.

[வற்புறுத்த - வற்புறுத்திய. வன்புறை - ஆற்றுவித்தல்; இறை. 54, உரை.]

கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(பி - ம்.) 2 'வினிய' 3 'மின்னென்' 6 'வருங்குரற்

(ப - ரை.) நோய் நொந்து உறைவி - நோயால் வருந்தி உறையும் தோழி, அவர் ஈங்கே வருவர் - தலைவர் இவ்விடத்தே மீண்டு வருவார், இனையல் என - வருந்தற்க என்று நீ சொல் வதனால், இனி - இப்பொழுது, அழாஅற்கோ - நான் அழாமல் இருப்பேனோ? மின் இன் தூவி - மின்னுகின்ற இனிய இறகுகளை யுடைய, இரு குயில் - கரிய குயில், பொன்னின் உரை திகழ் கட்டூ கடுப்ப - தன் மேனி பொன்னினது உரைத்த பொடி விளங்குகின்ற உரைகல்லை ஒக்கும்படி, மா சினை - மாமரத்தின் கிளையினிடத்து, நறு தாது கொழுதும் பொழுதும் - நறிய பூந் தாதைக் கோதுகின்ற இளவேனிற் காலத்திலும், வறு குரல் கூந்தல் தைவருவேன் - அவர் வாராமையால் பூணையப் பெரும லுள்ள வறிய கொத்தாகிய கூந்தலைத் தடவுவேன்.

(முடிபு) "நோய் நொந்துறைவி, இனையல்" என அழாஅற் கோ? வறுங் குரற் கூந்தல் தைவருவேன்.

(கருத்து) தலைவருடைய பிரிவைப் பொறுத்துக் கொண்டு யான் எங்ஙனம் வருந்தாமல் இருத்தல் இயலும்?

(வி - ரை.) அழாஅற்கு : தன்மை யொருமை, எதிர்மறை முற்று விகை; அழுகென்னும் உடம்பாட்டின் எதிர்மறை. அழேனென்னும் பொருளது; ஓகார வினவுடன் சேர்ந்து அழேனோ வென்னும் பொருளதாயிற்று. இனி - இப்பொழுது; ஏகாரம் அசைநிலை. நோநொந்துறைவி யென்பதும் பாடம்.

உறைவி: உறையென்னும் வினையடியாகப் பிறந்த பெயர்; தகுவி, கள்வி என்பன போல. மின்னென்றாவி யென்ற பாடத்திற்கு மின்னைப் போன்ற தூவி யென்று பொருள் கொள்க. இன்றாவி: இனிமை, காட்சிக் கினிமையும் ஊற்றினிமையும். மாம்பூவின் தாதிற்குப் பொற்பொடியும் குயிலுக்குக் கட்டாளைக் கல்லும் உவமை. தாதிலாடிய குயிலுக்கு இங்கே கட்டாளைக் கல்லை உவமித்தது போல,

> "நறுந்தா தாடிய தும்பி பசுங்கேழ்ப்
> பொன்னுரை கல்லி னன்னிறம் பெறூஉம்" (நற். 25 : 3-4)

என்று தாதாடிய தும்பிக்கு உவமித்திருத்தல் கருதற்குரியது.

நறுந்தாதென்றுள், குயில் கோதும் தாதின் மணம் தான் இருக்கும் இடத்தளவும் வந்து வீசுதலால். குயில் மாம்பூவின் தாதைக் கொழுதும் என்ற அடையினால் இங்கே குறித்த பெரும் பொழுது இளவேனிலாயிற்று. பொழுதும்: உயர்வு சிறப்பும்மை. இளவேனிற் காலம் காமத்தை மிகுவிப்பதாதலின் அக்காலத்திற் பிரிவுத் துன்பம் மிகுதியாகத் தோற்றும்.

வறுங்குரற் கூந்தல்: மகளிர் தம் காதலரைப் பிரிந்த காலத்தில் கூந்தலைப் புனைதல், மலரணிதல் முதலியவற்றைச் செய்யார்; தலைவர் மீண்ட காலத்துப் புனைந்து மகிழ்வர்;

> "நெய்யொடு துறந்த மையிருங் கூந்தல்
> மண்ணுறு மணியின் மாசற மண்ணிப்
> புதுமலர் களைஇ வின்று பெயரின்
> அதுமனெம் பரிசில்" (புறநா. 147 : 6-9)

என்பதைக் காண்க.

குரற் கூந்தல் - கொத்தாகக் கிடந்த கூந்தல்; எண்ணெய் நீவுதல் முதலியன இன்றி ஒன்றோடொன்று பிணங்கிக் கற்றைச் சடையாகிய கூந்தல்;

> "வாச வெண்ணெ யின்றி மாசொடு
> பிணங்குபு கிடந்த பின்னுச்சேர் புறத்தொடு" (4. 7 : 103-4.)

என்ற பெருங்கதை யடிகளையும்,

> "கமையி னுடிரு முகத்தயல் கதுப்புறக் கவ்விச்
> சுமையு டைக்கற்றை நிலத்திடைக் கிடந்தது மதியை
> அமைய வாயிற்பெய் துமிழ்கின்ற வயிலெயிற் றரவிற்
> குமையு றத்திரண் டொருசடை யாகிய குழலாள்" (காட்சிப். 10)

என்ற கம்பராமாயணச் செய்யுளையும் காண்க. குரல் - ஐம்பால் வகையுள் ஒன்றெனினும் ஆம் (பு. வெ. 223, உரை.)

கூந்தற் பாயலில் துயிலும் தலைவரைத் தைவரற்குரிய காலத்தில் கூந்தலை மட்டுந் தைவருவே னென்னும் நினைவினால் வறுங்குரற் கூந்தல் தைவருவேனே யென்றாள்.

(மேற்.) 2. *அழுகென்னும் உடம்பாட்டிற்கு அழாற்கென எதிர்மறை வந்தது* (தொல். வினை. 6, உ.)

(ஒப்பு.) 1. தோழி தலைவியை இனையலென்றல்: அகநா. 171 : 5, 197 : 5, 227: 5.

2. தலைவன் பிரிவால் தலைவி அழுதல்: குறுந். 11 : 2, ஒப்பு, 367 : 9. உறைவி: குறுந். 400 : 7 ; அகநா. 298 : 23, 351 : 17 ; புறநா. 145 : 10.

3-4. பொன்னின் உரைதிகழ் கட்டளை: "*பொன்காண் கட்டளை*" (பெரும்பாண். 220); "*தாதுகப் பொன்னுரை கட்டளை கடுப்ப*" (அகநா. 178 : 10-11.)

3-5. குயில் மாவின் தாதைக் கொழுதுதல்: "*மாவினை கொழுதி மகிழ்குயி லாலும்*" (நற். 9 : 10); "*மாவினை கொழுதிய மணிநிற விருங்குயில்*" (அகநா. 25 : 6.)

6. குரற் கூந்தல்: கலி. 72 : 20, 93 : 22.

3-6. குயில் மாவிலிருந்து மகிழும் காலத்திலும் தலைவன் பிரிந்திருத்தலால் தலைவி வருந்துதல்: நற். 118 : 1-5, 157 : 4-6 ; அகநா. 229 : 18-21. (கஙஉ)

தலைவி கூற்று

[*தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்ற தோழி,.*"*நீ வரையு நாளளவும் நின் நலம் தொலையாமல் ஆற்றி யிருந்தாய்*" என்று பாராட்ட *அது கேட்ட தலைவி*, "*அஃது என் வலியன்று ; தலைவன் செய்த தண்ணளியே அத்தகைய நிலையைத் தந்தது*", என்றது.]

கஙஎ. மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன
இட்டுவாய்ச் சுனைய பகுவாய்த் தேரை
தட்டைப் பறையிற் கறங்கு நாடன்
தொல்லைத் திங்க ணெடுவெண் ணிலவின்
மணந்தனன் மன்னெடுந் தோளே
இன்று முல்லை முகைநா றும்மே.

எ - து. தோழி கடிநகர் புக்கு, "நலந்தொலையாமே நன்கு ஆற்றினாய்" என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

அரிசில் கிழார் (பி - ம். அரிசிற்கிழார், அழிசிற் கிழார்)

(பி - ம்.) 2 'இட்டுவர்ச்சுணையபகுவாய்த் தட்டைப்' 5 மன்னனெந்', 'மன்னெந்'

(ப - ரை.) தோழி, மட்டம் பெய்த - கள்ளைப் பெய்த, மணி கலத்து அன்ன - நீலக் குப்பிகளைப் போன்ற, இட்டு வாய் சுணைய - சிறிய வாயையுடைய சுணையின்கண் உள்ளனவாகிய, பகு வாய் தேரை - பிளந்த வாயையுடைய தேரைகள், தட்டை பறையின் கறங்கும் நாடன் - கிளிகடிகருவியாகிய தட்டைப் பறையைப் போல ஒலிக்கும் நாட்டையுடைய தலைவன், தொல்லை திங்கள் நெடு வெள் நிலவின் - களவுக் காலமாகிய பழைய திங்களில் நெடிய வெண்ணிலாவின்கண், நெடு தோள் - என் நீண்ட தோள்களை, மணந்தனன் - தழுவினன்; அதனால், இன்றும் - இக் காலத்தும், முல்லை முகை நாறும் - அவன் மேனியினது முல்லை யினது மொட்டரு மலரின் மணத்தை என் தோள்கள் வீசா நிற்கும்.

(முடிபு) நாடன், தொல்லைத் திங்கள் நிலவில் தோளை மணந்தனன்; இன்றும் முல்லை முகை நாறும்.

(கருத்து) தலைவன் களவுக் காலத்துச் செய்த இன்னருள் இன்றளவும் மாறாது என்னைப் பாதுகாத்தது.

(வி - ரை.) மட்டம் - கள் (பதிற். 42 : 12); மட்டென்பது கள்ளின் பெயர்; அஃது அம்முச்சாரியை பெற்று இங்ஙனம் வந்தது. கள்ளைக் குப்பிகளில் ஊற்றி வைத்தல் பழைய வழக்கம்;

"சோலைக் கழகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடம்" (பெரும்பாண் 381 - 2),

"கள்ளி னிரும்பைக் கலம்" (மதுரைக் 228)

என்பவற்றையும் அவற்றின் உரைகளையும் பார்க்க.

கள் வைத்த கலம் சுணைக்கு உவமை. இட்டுவாய் - இட்டிய வாய்; சிறியவாய் (மதுரைக். 482.)

தட்டைப் பறையென்றது தட்டையையே; தட்டை மகளிர் தினைப்புனத்திற் கிளி முதலியவற்றைக் கடிவதற்குரிய கருவிகளுள் ஒன்று; மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து ஓசை யுண்டாக ஒன்றிலே தட்டப் படுவது (குறிஞ்சிப். 43. ந.); தட்டப்படுவதனால் தட்டையென்னும் பெயர் உண்டாயிற்று (மதுரைக். 305, ந.)

மன் : மிகுதியை உணர்த்தியது. நெடுந்தோளென்றுள், அவன் மணந்தமையாற் பொலிவு பெற்றமையை யுணர்த்த வேண்டி.

சிறந்த ஆடவர் மேனி முல்லைமலரின் மணமுடையதென்று தெரிய வருகிறது ; இதனை,

* " பந்தினை யினையவர் பயிலிட மயிலூர்
கந்தனை யணையவர் கலிதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம் (கம்ப. நாட்டு. 48),
" தேன்மறிக்கும் வெறித்தொங்க லறற்கூந்தற் றிருந்திழைகண்
மான்மறிக்குன் றிருமேனி மலர்முல்லைப் புறவமே "
(சிதம்பரச் செய். 57)

என்னும் செய்யுட்கள் உணர்த்துகின்றன.

தொல்லைத் திங்களென்றது அவன் நெடுங்காலத்துக்கு முன் மணந்தனனேனும் அவனன்பு இன்றளவும் ஆறாது நின்று காத்த தென்பதை வெளியிட்டவாறு. முல்லை முகைநாறு மென்றுள் அந்நறு மணத்தை மோந்து ஆற்றினேனென்பது கருதி.

நாறும்மே : விரிக்கும் வழி விரித்தது. ஏகாரங்கள் அசை நிலைகள்.

(மேற்.) மு. தலைமகள் தலைவன் பிரிவின்கண் வருந்தாதிருந்ததற்குக் காரணம் கூறியது (நம்பி. 203)

(ஒப்பு.) 2. சுனையின் குறுகிய வாய் : " துங்கின், தடிகண் புரையுங் குறுஞ்சுனை " (கலி. 108 : 40-41.)

பகுவாய்த் தேரை : அகநா. 154 : 2.

1-2. சுனையின் குறுமை : குறுந் : 12 : 1.

3. தட்டை : குறுந. 223 : 4 ; மலைபடு. 9, 328 ; பெருங். 2. 12 : 120.

2-3. தேரையின் ஒலிக்குத் தட்டையின் ஒலி : " அரிக்குரற் றட்டை " (மலைபடு. 9.)

தேரை கறங்குதல் : அகநா. 364 : 3.

4. திங்கள் நிலவு : " அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவின்..... இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின் " (புறநா. 112 : 1-3.)

இச்செய்யுள் நிரனிறை. இதன்பொருள்: இளைய மகளிர் சந்தனவனங்களில் பந்தாடல் செய்தனர்; அவ்வனங்கள் தம் இயற்கை மாறி அம்மகளிர் மேனியின் இயற்கைமணமாகிய சண்பக மணத்தால் சண்பகவனம் போலாயின. அங்ஙனமே கந்தனையணைய ஆடவர் கலி தெரிகழகங்கள் அமைந்த நந்தன வனங்கள் அவர் தம் மேனியின் முல்லை மணத்தால் முல்லை வனம் போல் ஆயின.

என்னுடைய ஆசிரியராகிய மகாவித்துவான் பிள்ளையவர்கள் இச் செய்யுளுக்குக் கூறிய இவ்வரியவுரை இக் குறுந்தொகைச் செய்யுளுக்கு உரைகாணப் பயன்பட்டது.

நெடு வெண்ணிலவு : குறுங். 47 : 4, ஒப்பு.

நெடுந்தோள் : குறுங். 268 : 6.

தலைவன் தலைவியின் தோளை மணத்தல் : குறுங். 36 : 4, 50 : 5, 100 : 7, 272 : 1-8.

6. தலைவன் மேனி நறுமணம் உடையதாதல் : "ஊர னறுமேனி, கூட லினிதா மெனக்கு" (ஐங். ஐம். 30.) (கஙஙு)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்ததை மேகத்தின் ஒலியாலும் மயிலின் மகிழ்ச்சியாலும் அறிந்த தலைவி தோழிக்குத் தன் ஆற்றுமைக் காரணத்தை அறிவித்தது.]

சுஙூ. என்னெனப் படுங்கொ ரோழி மின்னுபு
வானோர் பிரங்கு மொன்ரு வதனெதிர்
கான மஞ்ஞை கடிய வேங்கும்
ஏதில கலந்த விரண்டடற்கென்
5. பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே.

எ-து. பருவ வரவின்கண் ஆற்றுளெனக்(பி - ம். ஆற்றுளாமெனக்) கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கோவதத்தன் (பி - ம். கோவத்தன்.)

(பி - ம்.) 2 'வலனேர்' 1-2 'மின்னுவானேயிரங்கு', 'மின்னுவரலே யிரங்கு' 4 'விரண்டடற்கே'

(ப - ரை.) தோழி—, மின்னுபு - மின்னி, வான் ஏர்பு-மேகம் எழுந்து, இரங்கும் ஒன்ரு - ஒலிக்கின்ற செயல் ஒன்று தானு எனக்குத் துன்பந்தருவது ? அதன் எதிர் - அந்த மேகம் ஒலித் தற்கு எதிரே, கானம் மஞ்ஞை - காட்டிலுள்ள மயில்கள், கடிய ஏங்கும் - விரைவனவாகி ஆரவாரிக்கும் ; ஏதில கலந்த இரண் டடற்கு - இவ்வாறு அயன்மையை யுடையனவாகிக் கலந்த இரண்டு பொருளாலும், என்பேதை நெஞ்சம் - எனது பேதைமையை யுடைய நெஞ்சம், பெருமலக்கு உறும் - பெரிய கலக்கத்தை அடையும் ; என் எனப்படும் - இந்நெஞ்சினது நிலை எத்தகைய தென்று சொல்லப்படும் ?

(முடிபு.) தோழி, வான் இரங்கும் ஒன்ரே ? மஞ்ஞை ஏங் கும் ; இரண்டற்கு என் நெஞ்சம் மலக்குறும்.

(கருத்து) கார்ப்பருவம் வந்தமையின் என் மனம் கலங்குகின்றது.

(வி - ரை.) கொல் : அசைநிலை. ஒன்றோ : எண்ணிடைச் சொல் (புறநா. 187 : 1-2, உரை.)

கார்காலம் வந்துவிட்டதை மேகத்தின் முழக்கம் உணர்த்தியது; அதனெதிர் அகவிய மயிலின் ஆரவாரம் பின்னும் அதனை வலியுறுத்தியது.

ஏர்பு - கடலினீரைக் குடித்து வானத்தில் எழுந்து, தனக்குத் துன்பத்தைத் தருவனவாதலின் மேக முழக்கத்தை இரங்கு மென்றும், மயிலின் ஆரவாரத்தை ஏங்குமென்றும் குறித்தாள். அதன் எதிர் - அம் மேகத்தின் எதிரே எனலுமாம். ஏதில - தனது துன்பத்தைக் கருதாத அயன்மை யுடையன. இரண்டற்கு மென்ற முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

தலைவரது வாய்மையை உணராது வருந்துவதாதலின் பேதை நெஞ்சமென்றாள். தனது கலக்கத்தை நெஞ்சின் மேலேற்றிக் கூறினாள்.

இதனால் தலைவி தோழிக்கு ஆற்றுமையின் காரணம் கூறினளாயிற்று.

(மேற்.) 1. 'என்' என்பது யாதென்னும் பொருளில் வந்தது. (சீவக. 1632, ந.)

(ஒப்பு.) என்னைனப் படுங்கொல் தோழி : நற். 228 : 1, 332:1; அகநா. 206 : 1.

2. (பி - ம்)வலனேர்பு : முருகு. 1 ; மல்லி. 4 ; நெடுநல். 1 ; பட். 67.

3. மஞ்ஞை கார்காலத்தில் ஒலித்தல் : குறுந். 391 : 7-8.

கானமஞ்ஞை : குறுந். 38 : 1 :-சிறுபாண். 85 ; அகநா. 177 : 10, 344 :6.

4. மேகத்தின் ஏதின்மை : "நொதுமல்வானத்து" (குறுந். 251 : 7.)

(கசுசு)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச்சென்ற பருவ வரவின்கண், "எனக்குத் துன்பத்தைத் தரும் இம்மாலைக் காலத்தில் தாம் மேற்கொண்ட வினையை முடிக்கச் சென்றவர் எனது நிலையை உணராராயினர். அவர் யாண்டுள்ளாரோ!" என்று தலைவி கூறி வருந்தியது.]

கசுடு. சுடர்சினந் தணிந்து குன்றஞ் சேரப்
படர்சுமந் தெழுதரு பையுண் மாலை
யாண்டுளர் கொல்லோ வேண்டுவினை முடிநர்
இன்னு திரங்கு மென்னு ரன்னே

5. தைவர லசைவளி மெய்பாய்ந் துறுதரச்
செய்வுறு பாவை யன்னவென்
மெய்பிறி தாகுத லறியா தோரே.

எ - து. பிரிவிடைப் பருவவரவின்கட் கிழத்தி மெலிந்து கூறியது.

தோழன் (பி - ம். தோதான், தாமோதரன்.)

(பி - ம்.) 2 'தெழுதகு', 'தெழுதரும்' 5 'தை இயசைவளி', 'தைவசை வளி'; 'மெய்பாய்ந்தூதா,' 'மெய்பாய்ந்துர்தர' 6 'செய்புறு', 'செய்யறு'

(ப - ரை.) தோழி, தைவரல் அசை வளி - தடவுதலையுடைய அசைந்து வரும் காற்று, மெய் பாய்ந்து உறுதர - உடம்பின்கண் பரந்து தீண்ட, அதனால், செய்வு உறு பாவை அன்ன - அலங்காரம் செய்தலைப்பெற்ற பாவையைப் போன்ற, என் மெய் - எனது மேனி, பிறிது ஆகுதல் அறியாதோர் - வேறுபாடுடையதாகுதலை அறியாதவராகிய தலைவர், வேண்டுவினை முடிநர் - தாம் விரும்பிச் சென்ற கருமத்தை முடித்துக் கொள்வாராய், சுடர் சினம் தணிந்து - கதிரவன் வெம்மை நீங்கி, குன்றம் சேர - அத்தகிரியை அடைய, படர் சுமந்து - நினைவு கூரும் துன்பத்தை மேற்கொண்டு, எழுதரு பையுள் மாலை - வாரா நிற்கும் துன்பத்தைத்தரும் மாலைக் காலத்தில், யாண்டு உளர்கொல் - எங்கே இருக்கின்றனரோ? அன்னை - அந்தோ! இன்னது - இம்மாலைக் காலம் துன்பத்தைத் தருவது, இரங்கும் - தலைவி வருந்துவாள், என்னர் - என்று நினையாராயினர்.

(முடிபு) என் மெய் பிறிதாகுதலை அறியாதோர், வேண்டுவினை முடிநர் யாண்டுளர் கொல்? இரங்கு மென்னர்.

(கருத்து) என்னுடைய மெலிவையறிந்து தலைவர் இன்னும் மீண்டாரல்லர்.

(வி - ரை.) சினம் - வெயிலுமாம். சினந்தணிந்தமையைக் கூறினமையின் குன்றம் அத்தகிரியாயிற்று. படர் - தமியராயினர் படும் துன்பம். அதனைச் சுமந்தென்று மாலையைக் கூறியது இலக்கணை. கொல்: ஐயம். ஓ: அசைநிலை; இரங்கற் குறிப்புமாம். அசைவளி - மெலிந்த காற்று; மெல்லென்ற காற்றெனலுமாம்.

தாம் பிரியுங் காலத்தில் பாவையன்னதாக விருந்த என் மேனியையே யறிந்தவர், இப்பொழுது அழகு கெட்டமையை

உணராரென்றூள்; உணர்வரேல் மீள்வரென்றது தலைவியின் நினைவு. பாவையன்ன வென்மேனி யென்றது கழிந்ததற் கிரங் கியதாதலின் தற்புகழ்ச்சி யாகாது; பட்டாங்கு கூறியதுமாம். ஏகாரம் ஈற்றசை. செய்வு - செய்தல் (கலி. 7 : 7, ந.) பாவை - பொன்னுற் செய்த பாவை; "செங்நீர்ப் பசும்பொன் புனைந்த பாவை, செல்சுடர்ப் பசுவெயிற் றோன்றி யன்ன, செய்யர்" (மது ரைக் 410 - 12) எனவும், "தாவி னன்பொன் றைஇய பாவை, விண்டவ ழிளவெயிற் கொண்டு நின்றன்ன, மிகுகவின்" (அகநா. 212 : 1-3) எனவும் வருவனவற்றைக் காண்க.

(மேற்.) 2. பையுளென்னும் உரிச்சொல் நோயென்னும் குறிப்புணர்த் தியது (தொல். உரி. 45, சே, தெய்வச்.)

(ஒப்பு) 1. சுடர் சினந்தணிதல்: "கதிர்சினந் தணிந்த கையறு மாலை" (குறுந். 387 : 2.)

சுடரின் சினம்: கலி. 16 : 11; புறநா. 59 : 5-6.

சுடர் குன்றம் சேர்தல்: சிறு பாண். 170-71; மதுரைக். 546-7; குறிஞ்சி. 215-6; கலி. 119 : 1-2, 120: 3, 121 :1, 126 : 1, 148 : 3; அகநா. 47 :9.

1. மு. நற்: 369 : 1.

2. படர்சுமந் தெழுதரு மாலை: "படருறு மாலை" (சிலப். 8 : 68.)
பையுண் மாலை: குறுந். 46 : 6.

5. அசைவளி: குறுந். 28 : 4, ஒப்பு.

6. தலைவிக்குப் பாவை: நற். 319 : 7-8; அகநா. 98 : 12.
செய்வுறு பாவை: புறநா. 243 : 2.

(ககஙு)

தோழி கூற்று

[ஊடியிருந்த தலைவியின் உடம்பாடு பெறுவதற்குத் துணை புரியும் வண்ணம் தலைவன் தோழியை வேண்டியபொழுது, "நீர் முன்பு எம் தலைவிபால் அன்புடையராயினீர்; இப்பொழுது அதனை நீங்கினீர்; ஆதலின் நும்மை ஏற்றுக் கொள்ளுமாறு எங்ஙனம்?" என்பது பட அவள் கூறியது.]

ககசு. வேம்பின் பைங்காயென் றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
5. வெய்ய வுவர்க்கு மென்றனிர்
ஐய வற்ரு லன்பின் பாலே.

எ - து. வாயில் வேண்டிப் புக்க கிழவற்குத் தோழி கூறியது. மிளைக்கந்தன்.

(பி - ம்.) 5 'அதுவே, வெய்ய' 6 'லவ்வன்பின் . 'அன்பின பாலே'

(ப - ரை.) ஐய—, என் தோழி - என் தோழியாகிய தலைவி, வேம்பின் பசுகாய் - வேம்பினது பசிய காயை, தரின் - முன்பு தந்தால், தேம் பூ கட்டி - இனிய பொலிவு பெற்ற வெல்லக்கட்டி, என்றனிர் - என்று பாராட்டிக் கூறினீர்; இனி - இப்பொழுது, பாரி பறம்பில் - பாரி யென்னும் வள்ளலுக்குரிய பறம்பென்னும் மலையிடத்திலுள்ள, தை திங்கள் தண்ணிய - தை மாதத்திற் குளிர்ந்தனவாகிய, பனி சுனை தெள் நீர் தரினும் - குளிர்ச்சியை யுடைய சுனையிலுள்ள தெளிந்த நீரைத் தந்தாலும், வெய்ய உவர்க்கும் என்றனிர் - வெப்பத்தை யுடையனவாகி உவர்ப்புச் சுவையைத் தருமென்று கூறினீர்; அன்பின்பால் - நுமது அன்பின் பகுதி, அற்று - அத்தகையது.

(முடிபு) ஐய, என் தோழி வேம்பின் காய் தரின் கட்டி என்றனிர்; இனி, தண்ணிய தரினும் வெய்ய வுவர்க்கு மென்ற னிர்; அன்பின்பால் அற்று.

(கருத்து) முன்பு நீர் தலைவிமாட்டு அன்புடையராயிருந்து இப்போது அவ்வன்பு இல்லீராயினீர்.

(வி - ரை.) "இயல்பாகவே கைப்புடையதாகிய வேப்பங் காய் முன்பு தலைவியின் கைப்பட்ட காரணத்தால் நுமக்கு இனிதாயிற்று; இயல்பாகவே இனிய நீர் இவள் கைப்பட்ட கார ணத்தால் இப்பொழுது நுமக்கு உவர்ப்புடையதாயிற்று. அன்றும் இவளே தந்தனள்; இன்றும் இவளே தந்தனள். ஆயினும் நும் பால் இம்மாறுபாடு உண்டாயதன் காரணம் நும் அன்பு மாறி யதேயாம்" எனத் தோழி கூறினள்.

"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது, வானே ரமுதம் புரையுமா லெமக்கென" (தொல். கற்பு. 5) மகிழ்பவனுதலின் வேம்பினை வெல்லக் கட்டி யென்றான்.

கட்டி - கற்கண்டுமாம். பாரி - ஏழு வள்ளல்களுள் ஒருவன். இவன் வாழ்ந்த மலை பறம்பு. அதன் கண் உள்ள சுனை பாராட்டப் படும் மரபு,

"கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
நீம்பெரும் பைஞ்சுனை" (அகநா. 78 : 22-3)

என்பது முதலியவற்றால் அறியப்படும்.

தை மாதத்தில் சுனை நீர் மிகக் குளிர்ந்திருக்கும். தண்மையும் உண்ணுதற் கினிமையுமுடைய சுனை நீரை வெய்ய வென்றும் உவர்க்கும் என்றும் கூறியமை அவனது அன்பின் திரிபைப் புலப்படுத்தியது. அற்று - அத்தகைய மாறுபாட்டை யுடையது ஆல், ஏ : அசைநிலைகள்.

(மேற்.) 1-2. ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது வானே ரமுதம் புரையுமா லெமக்கென அடிசிலும் பூவுந் தொடுதற்கண் தலைவன் கூறிய கூற்றினைத் தோழி கொண்டு கூறியது (தொல். கற்பு. 5, இளம், ந.)

மு. தாம் எளியராகிய கற்புக் காலத்திலே, களவுக் காலத்துத் தமது பெருமையை உணர்த்திய வருத்தத்தின்கண் தோழி கூறியது (தொல். கற்பு. 9, இளம், ந); பாங்கி அன்பிலை கொடியை யென்று இணர்த்தார் மார்பனை இகழ்ந்தது (நம்பி. 206 ; இ. வி. 555.)

(ஒப்பு.) 2. **கட்டி** : (பெரும். 2. 4 : 93); "சாறட்ட கட்டியே" (யா. வி. 62, மேற். 'வையகமெல்லாம்')

3. **பாரி பறம்பு** : சிறுபாண். 91 ; அகநா. 303 : 10 ; புறநா. 108 : 4-5. 109 : 1, 110 : 2, 113 : 7, 118 : 5, 158 : 4.

பாரி பறம்பிற் சுனை : "அளிதோ தானே பாரியது பறம்பே..... மீன்க ணற்றதன் சுனையே" (புறநா. 109 : 1-10.)

3. மு. புறநா. 176 : 9, 337 : 6.

4. **தைத்திங்கள் நீர் தண்ணிது** : "தைஇத் திங்கட் டண்கயம்" (நற். 80 : 7);"தைஇத் தண்கயம்" (ஐங், 84 : 4) "தைஇத் திங்கட் டண்கயம் போல" (புறநா. 70 - 6.)

மு. "தீம்பால் கமழு மணிவாய்ப் புதல்வற்குச் சிற்றெலும்பு
பூம்பாவை யாக வருள்வோன் றென் வெங்கைப் பொருப்பிலிளங்
காம்பான தோளிமுன் வேம்புதந் தாலுங் கழைக்கரும்பாம்
வேம்பா முனக்குக் கரும்பா யினுமின்று வேலவனே"
(வெங்கைக் கோவை, 403.) (ககசு)

தலைவி கூற்று

[பருவ வரவின் கண், "தலைவர் வருவர் ; நீ வருந்தற்க" எனத் துணிபு கூறிய தோழியை நோக்கி, 'என் உயிரைக் கொள்ள வருவது போல இக் கூதிர்ப் பருவம் வந்தது ; இனி என் செய்வேன்?" என்று தலைவி கூறியது.]

ககஎ. யாதுசெய் வாங்கொ ரோழி நோதக
நீரெதிர் கருவிய காரெதிர் கிளைமழை

ஊதையங் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் ருருவிற் கூற்றம்
5. காதலர்ப் பிரிந்த வெற்குறித்து வருமே

எ - து. பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தீ உரைத்தது.

கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(ப - ரை.) தோழி—, நோதக - நோதல் பொருந்தும்படி, நீர் எதிர் கருவிய - நீரை ஏற்றுக் கொண்ட மின் முதலிய தொகுதியை யுடையனவாகிய, கார் எதிர் கிளை மழை - கார்காலத்தை ஏற்றுக் கொண்ட கிளைத்த மழையையுடைய, ஊதையம் குளிரொடு - ஊதைக் காற்றினது குளிர்ச்சியொடு, பேதுற்று மயங்கிய - மிக மயங்கிக் கலந்த, கூதிர் உருவின் கூற்றம் - கூதிர்க் காலமாகிய உருவத்தையுடைய கூற்றம், காதலர் பிரிந்த என் குறித்து வரும் - தலைவரைப் பிரிந்திருக்கும் என்னைக் கொல்லுதல் குறித்து வாரா நின்றது; யாது செய்வாம்—!

(முடிபு) தோழி, கூதிர் உருவிற் கூற்றம் எற் குறித்து வரும்; யாது செய்வாம்!

(கருத்து) தலைவர் கூதிர்க் காலத்தும் வந்திலராதலின் இனி உயிர் வாழேன்.

(வி - ரை.) யாது - இத்துன்பத்தினின்றும் உய்வதற்குரிய முயற்சிகளுள் எதனை. கொல்: அசைநிலை. கருவி - தொகுதி; இந்நூல், 42 - ஆம் செய்யுளின் விசேடவுரையைப் பார்க்க. மழைத்துளி வீசுதலும் ஊதைக் காற்றும் கூதிர்காலத்துக் குரியவை. ஊதை - வாடை. ஊதையங் குளிர்: அம், சாரியை. கூற்றமென்றுள் தன் உயிரை உடலினின்றும் கூறுபடுத்துவதற் கேதுவாதலின். எற் குறித்து - என்னைக் கொல்லுதல் குறித்து. ஏகாரம்: ஈற்றசை.

ஒப்பு. மு. அகநா. 364 : 12.

4. கூதிர் உருவிற் கூற்றம்: "வாடையாய்க் கூற்றி னரு முருவினை மாற்றி வந்தார்" (கம்ப. கார்காலப். 60.); சிகாளத்திப். பொன்முகரி, 41.

5. எற்குறித்து வரும்: குறுந். 188 : 4, 216 : 7. (ககூள.)

தோழி கூற்று

["இனி யாங்கள் திணைப்புனங் காக்கச் செலகின்றேம்; நீ ஆண்டே வருக. ஈண்டு எம்முடைய தாய் வருவாளாதலின் வாரற்க" என்று தோழி தலைவனுக்குக் கூறியது]

ககூஅ. யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவிற்
கரும்புமருண் முதல பைந்தாட் செந்தினை
மடப்பிடித் தடக்கை யன்ன பால்வார்பு
கரிக்குரற் டிறைஞ்சிய செறிகோட் பைங்
(குரற்

5. படுகிளி கடிகஞ் சேறு மடு போர்
எஃகுவிளங்கு தடக்கை மலையன் கானத்
தார நாறு மார்பினை
வாரற்க தில்ல வருகுவள் யாயே.

எ - து தோழி குறியிடம் பெயர்த்துக் கூறியது.

[குறியிடம் - இரவுக்குறி யிடத்தை. பெயர்த்து - மாற்றி]

கபிலர்.

(பி - ம்.) 1 'மாஅங் கொன்ற', 'மாவுங் கொன்ற' 2 'கருப்பு மருள்' 4 'செறிகோற்', 'செறிதாட்' 8 'வாரன் மற்றைய'

(ப - ரை.) யாஅம் கொன்ற - யாமரத்தை வெட்டிய, மரம் சுட்ட இயவில் - மரங்களைச் சுட்ட வழியில், கரும்பு மருள் முதல - கரும்பைப் போன்ற அடியை யுடையன வாகிய. பசு தாள் செ தினை - பசிய காம்பை யுடைய சிவந்த தினையானது, மட பிடி தட கை அன்ன - மடமை மிக்க பிடியினது வளைந்த கையைப் போன்றனவாகி, பால் வார்பு - பால் நிரம்பி, கரி குறட்டு இறைஞ் சிய - கரியை எடுக்கின்ற குறட்டைப் போல வளைந்த, செறி கோள் பசு குரல் - செறிந்த குலையையுடைய பசிய கதிர்களில், படுகிளி - தின்னும் பொருட்டு வீழ்கின்ற கிளிகளை, கடிகம் சேறும் - ஓட்டுவேமாகிச் செல்வேம்; யாய் வருகுவள் - இவ் விடத்தில் தாய் வருவாள்; அடு போர் - பகைவரைக் கொல்லும் போர்க்குரிய, எஃகு விளங்கு தட கை - வேற்படை விளங்குகின்ற பெரிய கைகளையுடைய, மலையன் கானத்து - மலையனது முள் ளூர்க் கானத்தில் வளர்ந்த, ஆரம் நாறும் மார்பினை - சந்தனம் மணக்கின்ற மார்பினை யுடையையாகி, வாரற்க - வருதலையொழிக; தில்ல - இஃது எங்கள் விருப்பம்.

(முடிபு) இயவில் சேறும்; யாய் வருகுவள்; வாரற்க.

(கருத்து) இனித் தினைப் புனத்தே வந்து தலைவியோடு அளவளாவுவாயாக.

(வி - ரை.) தினை விதைத்தற் பொருட்டு யாமரங்களை வெட்டினர் (குறுந். 214.) சுட்ட இயவு, சுட்டியவாயிற்று; அகரம் விகாரத்தாற் றொக்கது; "புகழ் புரிந்தில்லி லோர்" (குறள். 59) என்புழிப்போல.

களிற்றின் கை கொம்புடையதாதலின் அதனைக் கூரிய பிடியின் கையைக் கூறினள். பால் - தினை முதலியவற்றிலுள்ள பால். கரிக் குறடு - கொல்லர் கரியை எடுக்கப் பயன் படுத்தும் குறடு. கோள் - வித்துமாம். தடக்கை, மலையனுக்கு அடை. மலையன் - மலையமான் திருமுடிக் காரியென்னும் வள்ளல். 'மலையன் கானத்து ஆரம் நாறும் மார்பினை' என்றது, அவ்வாரத்தின் மணமறிந்து, "இஃது எற்றினன் வந்தது?" என்று தாய் ஆராய்தற்கு ஏதுவாகித் துன்பம் பயக்குமென்னும் நினைவிற்று. தலைவியைக் காண வந்தவனுதலின் சந்தனம் முதலியவற்றூற் புனைந்து கொண்டு வந்தான்.

யாம் இயவிற் சேறுமென்றது, நீயும் ஆண்டே வருக வென்னும் எச்சப் பொருளைத் தந்தது. இதனால் இது குறியிடம் பெயர்த்துக் கூறியதாயிற்று.

(மேற்.) 1. அகக்காழன மரமென்று கூறப்படும் (தொல். மரபு. 85 பேர்.)

மு. தலைவனது குறையைக் கடிது முடியாமையைக் கருதும் தோழி குரவரைத் தான் அஞ்சித் தலைவியும் அவரை அஞ்சுவளெனக் கூறுவனவற்றுள் இது யாயை அஞ்சுதல் கூறியது (தொல். களவு. 23, ந.); பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கியது. (நம்பி. 156.)

(ஒப்பு.) 1. யாம்: குறுந். 37: 3, வி -ரை.

2. தினையின் தாளுக்குக் கரும்பு: "கரும்பெனக் கவினிய பெருங்குரலேனல்" (அகநா. 302: 10.) பைந்தாட் செந்தினை: அகநா. 242: 5.

1-2. மரங்களை வெட்டிய இடத்தில் தினையை விதைத்தல்; குறுந். 214: 1-2; திணைமாலை; 1; யா - வி. மேற்.

மரங்களைச் சுட்டவிடத்தே தினையை விதைத்தல்: "சுடுபுன மருங்கிற் கவித்த வேனல்" (குறுந். 291: 1); "தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம், கரிபுறங் கழீஇய பெரும்பாட் டீரத்துத், தோடுவளர் பைங்கிளி ஓடுகுரல்" (அகநா. 368: 1-3); "கானவர், கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை, ஐவனம் வித்தி மையுறக் கவினி, ஈனல் செல்லா வேனற்கு", "எரிபுனக் குறவன் குறைய லன்ன, கரிபுற விறகி னீம வொள்ளழல்" (புறநா. 159: 15-8, 231: 1-2.)

2-3. பால்வார்ந்த தினை : "துய்த்தலைப் புனிற்றுக்குரல் பால்வார் பிறைஞ்சித், தோடலைக் கொண்டன வேனல்","ஏனற் செந்தினைப் பாலார் கொழுங்குரல்" (நற். 206 : 1-2. 288 : 8.)

3-4. தினைக்கதிருக்குப் பிடியின் கை : (குறுந். 360 : 5); "யானை..... இறங்குகை கடுப்பத், துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல், நற்கோட் சிறு தினை" (குறிஞ்சிப். 35-8); "பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக், கொய்பத முற்றன குலவுக்குர லேனல்" (மலைபடு. 107-8); "நீடி ருஞ் சிலம்பிற் பிடியொடு புணர்ந்த, பூம்பொறி யொருத்த லேந்துகை கடுப்பத், தோடுதலை வாங்கிய நீடுகுரற் பைங்கினை", "மணியேர் தோட்ட மையா ரேனல், இரும்பிடித் தடக்கையிற் றடைஇய பெரும்புனம்" (நற். 317 : 1-3, 344 : 2-3); "உறங்குபிடித் தடக்கை யொருங்குநிரைத் தவைபோல், இறங்குகுர லிறடி" (பெரும். 1. 49 : 103-4.)

5. கிளி கடிகஞ் சேறும் : "உறுகிளி கடிகஞ் சென்றும்" (நற். 288 : 9.)

2-5. "முறஞ்செவி யானைத் தடக்கையிற் றடைஇ, இறைஞ்சிய குரல பைந்தாட் செந்தினை, வரையோன் வண்மை போலப் பலவுடன், கிளையோ டுண்ணும் வளைவாய்ப் பாசினம்" (நற். 376 : 1-4.)

4-5. தினையிற் கிளி கடிதல் : குறுந். 291 :1-2, 360 : 5-6.

6. எஃகு விளங்கு தடக்கை மலையன் கானம் : "செவ்வேன் மலையன், முள்ளூர்க் கான நாற" (குறுந். 312 : 2-3.)

எஃகு விளங்கு தடக்கை மலையன் : "செவ்வேல், முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி" (அகநா. 209 :11-2); "வல்வேன் மலையன்" (புறநா. 125 : 14.)

7. தலைவன் சந்தனம் பூசி வருதல் : குறுந். 150 : 3, ஒப்பு.

8. வாரற்க தில்ல : குறுந். 360 : 4; அகநா. 40 : 12.

மு. குறுந். 141. (ககஅ)

தலைவன் கூற்று

[தாய் முதலியோர் தலைவியை வீட்டிற்கு அழைத்துச் செல்ல எண்ணியிருப்பதைத் தோழியால் அறிந்த தலைவன், "இனி இவளைப் பெறுவது அரிது போலும்! ஆயினும் என் காமநோய் என்றும் அழியாதது; பிறவிதோறும் தொடர்ந்து வருவது" என்று நெஞ்சை நோக்கிக் கூறியது.]

ககக. பெறுவ தியையா தாயினு மூறுவதொன்
றுண்டுமன் வாழிய நெஞ்சே தினைடேர்க்
கைவள் ளோரி கானந் தீண்டி
எறிவளி கமழு நெறிபடு கூந்தல்

5. மையீ ரோதி மாஅ யோள்வயின்
இன்றை யன்ன நட்பி னிந்நோய்
இறுமுறை யெனவொன் றின்றி
மறுமை யுலகத்து மன்னுதல் பெறுமே.

எ - து. தோழி செறிப்பறிவுறுப்ப, நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது.

பரணர்.

(பி - ம்.) 3 'கைவளரோரி' 8 'பெறினே'

(ப - ரை.) நெஞ்சே—, திண் தேர் - திண்ணிய தேரையுடைய, கைவள் ஓரி - கைவண்மையையுடைய ஓரியினது, கானம் தீண்டி - கானத்தைத் தீண்டி, எறி வளி - வீசுகின்ற காற்றைப் போல, கமழும் - மணக்கின்ற, நெறிபடு கூந்தல் - நெறிப்பு அமைந்த கூந்தலாகிய, மை ஈர் ஓதி - மையைப்போன்ற தண்ணிய மயிரையுடைய, மாயோள்வயின் - மாமையை உடையோளிடத்து, இன்றை அன்ன நட்பின் இ நோய் - இன்றைநிலையைப் போன்று என்றும் உள்ள நட்பையுடைய இந்தக்காமநோயானது, இறுமுறை என ஒன்று இன்றி - அழியுமுறை என்பது ஒன்று இல்லாமல், மறுமை உலகத்தும் - மறுமையில் வாழ்தற்குரிய உலகத்திலும், மன்னுதல் பெறும் - நிலைபேற்றை அடையும்; ஆதலின், பெறுவது இயையாது ஆயினும் - தலைவியை இப்பிறவியின்கண் பெறுதல் நம்மாட்டுப் பொருந்தாதாயினும், உறுவது ஒன்று உண்டு - மறுமையுலகத்துப் பெறுவதாகிய நாம் அடையும் பயன் ஒன்று உண்டு.

(முடிபு) நெஞ்சே, இந்நோய் மறுமையுலகத்தும் மன்னுதல் பெறும்; பெறுவது இயையாதாயினும் உறுவதொன்றுண்டு.

(கருத்து) இனி இம்மையில் தலைவியைக் காணப்பெறேன்.

(வி - ரை.) மன், வாழிய: அசைநிலைகள். ஓரி - ஒரு வள்ளல்.

இந்தநட்பு என்றும் குன்றாது பிறவிதோறும் தொடர்ந்து வருவதென்றான். மறுமை - மறுபிறவி.

(மேற்.) மு. தோழி இற்செறிப்பு அறிவுறுப்பத் தலைவன் ஆற்றானுய்க் கூறியது (தொல். களவு. 12, ந.); தலைமகன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளந்தது (நம்பி. 154.)

(ஒப்பு.) 2. வாழிய நெஞ்சே: குறுந். 19: 3, ஒப்பு.

3. கைவள்ளோரி: "மழவர் பெருமகன் மாவள் ளோரி, கைவளம்" (நற். 52: 9-10); "ஓரி விசும்பிற், கருவி வானம் போல, வரையாது சுரக்கும் வள்ளியோய்" (புறநா. 204: 12-4.)

4. நெறிபடு கூந்தல் : குறுந். 116 : 4, 190 : 1.

3-4. "வல்வில் லோரி கான நாறி, இரும்பல் லொலிவரும் கூந்தல்" (கற். 6 : 8-9.)

5. மையிரோதி : "மையிருங் கூந்தல்" (குறுந். 209 : 7) ; "மையுக் கன்ன மொய்யிருங் கூந்தல்" (மதுரைக். 417.)

மாயோள் : குறுந். 9 : 1, ஒப்பு.

6. இன்றையன்ன நட்பு : குறுந். 385 : 6, ஒப்பு.

6-8. நட்பு மறுபிறப்பிலும் மன்றுதல் : (குறுந். 2 : 3, ஒப்பு, 49 : 3-5, ஒப்பு) ; "ஏனை யுலகத்து மியைவதா னமக்கென" (குறிஞ்சிப். 24.)

(ககஙக)

தலைவி கூற்று

[பருவம் வந்தகாலத்துக் கவன்ற தலைவியை நோக்கி, "இது காரன்று ; வம்பு" எனக்கூறிய தோழிக்கு, "கார்ப்பருவத்துக் குரிய மேகமுழக்கமும் புதுவெள்ளமும் உள்ளன; இக்காலத்தும் தலைவர் வந்திலர் ; அவர் நம்மை மறந்தார்போலும்!" என்று தலைவி கூறி வருந்தியது.]

உஙஙு. *பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்*
மீமிசைத் தாஅய வீஇ சுமந்துவந்
திழிதரும் புனலும் வாரார் தோழி
மறந்தோர் மன்ற மறவா நாமே
5. *கால மாரி மாலை மாமழை*
இன்னிசை யுருமின முரலும்
முன்வர லேமஞ் செய்தகன் றோரே.

எ-து. பருவ வரவின்கண் ஆற்றுளாகிய தலைமகட்குத் தோழி, "பருவமன்று ; வம்பு" என்றவழித் தலைமகள் சொல்லியது.

ஔவையார். (பி. ம். அவ்வையார்.)

(பி - ம்) 1 'தண்கமழ்' 2 'நிலமிசை' ; 'வீசும்வந்,' 'வீசுமக்' 'வீசும் வளி கலந்து;' 'வீழும் வீசுமந்து' 'மாமறை' 'குரலும்'.

(ப - ரை.) தோழி—, காலம் மாரி - கார்ப்பருவத்துப் பெய் தற்குரிய மழையையுடைய, மாலை மா மழை - மாலைக்காலத்து வரும் கரிய மேகங்கள், இன் இசை உருமின முரலும் - வித்தி வானேக்கும் புலமுடையாருக்கு இனிய ஒலியையுடைய இடி யேற்றையுடையனவாகி முழங்கும் ; பெய்த குன்றத்து - முன்பு

மழைபெய்த குன்றத்தின்கண், பூநாறு தண் கலுழ் மீமிசை - மலர் மணக்கின்ற தண்ணிய கலங்கலின்மேலே, தாய - பரவிய, வீ சுமந்து வந்து - மலர்களைச் சுமந்து வந்து, புனலும் இழிதரும் - அருவிப் புனலும் வீழும்; முன் வரல் ஏமம் செய்து அகன்றோர் - கார்ப்பருவத்திற்கு முன்னரே வருவேமென்ற பாதுகாப்பைச் செய்து அகன்ற தலைவர், வாரார் - இன்னும் வாராராயினர்; மன்ற மறந்தோர் - அவர் நிச்சயமாக நம்மை மறந்தார்; நாம் மறவாம் - நாம் அவரை மறத்தல் செய்யாம்.

(முடிபு) தோழி, மழை முரலும்; புனலும் இழிதரும்; அகன்றோர் வாரார்; மறந்தோர் மன்ற; நாம் மறவாம்.

(கருத்து) கார்ப்பருவம் வரவும் தலைவர் வந்தாரல்லர்.

(வி - ரை.) கலுழ் அருவிநீரில் புதுமழையால் உண்டாயது. முன்னரே வீழ்ந்த பூக்களுந் தாதும் உண்மையின் கலுழ் பூநாறியது. வீயென்றது அப்பொழுது உதிர்ந்த பூக்களை. வம்பென்றுளை மறுத்தவளாதலின் ' 'காலமாரி' என்றுள். கார் காலத்திற்கு முன்னரே வருவதாகக் கூறிச் சென்றவர் அது வந்த பின்பும் வந்திலரென்றுள்.

நாமே : ஏகாரம், பிரிநிலை. அகன்றோரே : ஏகாரம் அசை நிலை.

(ஒப்பு) 1-3. புனலும் பூவும் : "நீர்நிறங் கரப்ப ஊழுறு புதிர்ந்த, பூமலர் கலுழிய கடுவரற் கான்யாற்று" (அகநா. 18 : 1-2.)

4. மறந்த தலைவனைத் தலைவி மறவாமை : "நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்" (சிலப். 7 : 32.) 5. காலமாரி : குறுந். 251 ; 2.

6. இன்னிசை யுரும் : "இன்குரற், றளிமழை பொழியும்" (மதுரைக். 262-3.)

7. முன்வர லேமம் : "கூதிர்ப், பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே" (ஐங். 252 : 4-5.) (200)

தலைவி கூற்று

[தலைவனும் தலைவியும் மணந்துகொண்டு இல்லறம் நடத்தும் மனைக்கண் சென்றதோழி, "வரைந்துகொள்ளும் வரையில் நீ வேறுபடாமல் எங்ஙனம் ஆற்றியிருந்தாய்" என்று கூற, "நான் அங்ஙனம் ஆற்றியிருக்கும்வண்ணம் அயன்மனைக் கிழத்தி முன்பு தலைவன் வரவைக் கூறினள்; அவள் வாழ்க!" என்று தலைவி சொல்லியது.]

உஙக. அமிழ்த முண்கநம் மியலி லாட்டி
பால்கலப் பன்ன தேக்கொக் கருந்துபு

நீல மென்சிறை வள்ளுகிர்ப் பறவை
நெல்லி யம்புளி மாந்தி யயலது
முள்ளி லம்பணை மூங்கிற் றூங்கும்
கழைநிவந் தோங்கிய சோலை
மலைகெழு நாடனை வருமென் றோளே.

எ - து. கடிநகர் வேறுபடாது நன்கு ஆற்றினையென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[கடிநகர் - காவலமைந்த வீட்டில்; மணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும் மனையிலெனலும் ஆம்.]

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.]

(பி - ம்.) 1 'அமிர்த' 'அமுத' 'மயிலியலாட்டி' 4 'மாந்தி யல்லது' 5 'மூங்கிலிற்' 6 'ஓங்கிய சாரல்'

(ப - ரை.) தோழி, அயல் இல் ஆட்டி - அயன்மனைக் கிழத்தி. பால் கலப்பு அன்ன - பாலைக் கலந்தாற்போன்ற இனிமையையுடைய, தேக்கொக்கு அருந்துபு - தேமாம்பழத்தைத் தின்று, நீலம் மெல்சிறை - கரியமெல்லிய சிறகுகளையும், வள் உகிர் பறவை - கூரிய நகங்களையும் உடைய வெளவால், நெல்லியம் புளி மாந்தி - நெல்லியினது புளித்த காயை உண்டு, அயலது - அயலிலுள்ளதாகிய முள் இல் அம் பணை மூங்கில் தூங்கும் - முள்ளில்லாத அழகிய பருத்த மூங்கிலின் கண்ணே தொங்குகின்ற, கழை நிவந்து ஓங்கிய சோலை - மூங்கிற் கோல்கள் உயர்ந்து வளர்ந்த சோலைகளையுடைய, மலைகெழு நாடனை - மலைகள் பொருந்திய நாட்டையுடைய தலைவனை, வருமென்றோள் - வரைவுக்குரியவற்றோடு வருவானென்று கூறினாள்; ஆதலின், அமிழ்தம் உண்க - அவள் அமிழ்தத்தை உண்பாளாக!

(முடிபு) அயலிலாட்டி நாடனை வருமென்றோள்; அமிழ்தம் உண்க!

(கருத்து) தலைவன் வரைவொடு வருதலை முன்பு கூறி எனக்கு உறுதி யுண்டாக்கிய அயலிலாட்டி வாழ்வாளாக!

(வி - ரை.) அமிழ்தமுண்கவென்றது சுவர்க்க போகத்தைப் பெறுக வென்றபடி. இங்ஙனம் வாழ்த்தும் மரபை இந்நூல் 83 - ஆம் செய்யுளாலும் உணரலாகும்.

தலைவி, புறம்போந்து செய்தியறிதற்கியலாத பெருங்காப்பினளாக இருந்தமையின், தலைவன் வரைவொடு புகுதலைத் தான் அறியாது அயலிலாட்டி கூற அறிந்தாள்.

நெல்லியம் புளியென்றது நெல்லிக்காயையே; அம்: சாரியை. தேமாங்கனியை அருந்தித் தெவிட்டினமையின் வேற்றுச் சுவையையுடைய நெல்லியம்புளியை வெளவால்கள் உண்டன.

தலைவன் வரைவுடன் வருதலை அயலிலாட்டி முன்பு கூறின மையின் ஆற்றியிருந்தேனென்று தலைவி காரணத்தைப் புலப் படுத்தினளாயிற்று.

தேமாம்பழத்தை உண்ட வெளவால் பின்பு மாறுபட்ட சுவையையுடைய நெல்லிக்காயை உண்டு சிறிதும் ஊறு உண் டாக்காத முள்ளில்மூங்கிலிற் றூங்கியது போல, களவுப் புணர்ச்சியின்கண் இன்பந்துய்த்த தலைவன் அவ்வின்பத்துக்கு மாறுகிய இடையீடுகளையும் ஏற்றுப் பின் வரைந்துகொண்டு சிறிதும் ஏதமின்றி இன்பம் துய்க்கும் நிலையினனையினனென்பது குறிப்பு.

(மேற்.) 1. அகரத்தோடு கூடிய ககரவீறு வியங்கோளில் வாழ்த்துதற் பொருண்மைக்கண் வந்தது (நன். 337, மயிலை; இ. வி. 239.)

(ஒப்பு.) 1. அயலிலாட்டி: அகநா. 386: 11.

1, மு. நற். 65: 1. 2. தேக்கொக்கு: குறுந். 26: 6. ஒப்பு.

4. நெல்லியம்புளி: "தீம்புளி நெல்லி" (குறுந். 317: 2); "பராரை நெல்லி யம்புளித் திரள்காய்" (அகநா. 69: 7.)

2-4. வெளவால், மா, நெல்லி: "உள்ளூர் மாஅத்த முள்ளெயிற்று வாவல், ஓங்க லஞ்சினைத் தூங்குபில் பொழுதின், வெல்போர்ச் சோழ ரழிசியம் பெருங்காட்டு, நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு" (நற். 87: 1-4.)

7. குறுந். 83: 5.

6-7. சோலை மலைகெழு நாடன்: "பிறங்கிருஞ் சோலை நன்மலை நாடன்" (கலி. 42: 4) மு. குறுந். 38, 389; நற். 65. (உ0க)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனுக்குத் தூதாகவந்த தோழியை நோக்கி, "தலைவர் இப்பொழுது எனக்கு இன்ன மையைத் தரும் ஒழுக்கத்தினராதலின் என் நெஞ்சு வருந்தும்; அவரை ஏற்றுக் கொள்ளேன்" என்று தலைவி கூறியது.]

உ0உ. நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்டயந் தாஅங்
கினிய செய்தநங் காதலர்
5. இன்ன செய்த னெமென் னெஞ்சே.

எ - து. வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

அள்ளூர் நன்முல்லை.

(பி - ம்.) 1 'நோமனெஞ்சே' 2 'நெரிஞ்சி' 4 'செய்தியல்' 5 'செய்யினேம்'; 'னேமேநெஞ்சே'

(ப - ரை.) தோழி, என் நெஞ்சு நோம் - என் நெஞ்சு வருந்தும்; என் நெஞ்சு நோம் -; புன்புலத்து - முல்லை நிலத்தின்கண், அமன்ற - நெருங்கி முளைத்த, சிறிய இலை நெருஞ்சி - சிறிய இலை களையுடைய நெருஞ்சியினது, கட்கு இன் புதுமலர் - முன்னர்த் தோன்றிக் கண்ணுக்கு இனிய புதியமலர், முள் பயந்தாஅங்கு - பின்னர் இன்னுமையைத்தரும் முள்ளைத் தந்தாற்போல, இனிய செய்த நம் காதலர்-முன்பு நமக்கு இனியவற்றைச் செய்தொழுகிய நம் தலைவர், இன்னு செய்தல் - இப்பொழுது இன்னுதனவற்றைச் செய்தொழுகுதலால், என் நெஞ்சு நோம்—.

(முடிபு) என் நெஞ்சு நோம்; என் நெஞ்சு நோம்; நம் காதலர் இன்னு செய்தலால் என் நெஞ்சு நோம்.

(கருத்து) தலைவர் இன்னராகி ஒழுகுதலால் என் நெஞ்சம் வருந்தும்.

(வி - ரை.) நோமென்னெஞ்சே நோமென்னெஞ்சே யென்ற அடுக்கு இடைவிடாது நோதலைக் குறித்தது; "பொய்யாமை பொய்யாமை யாற்றின்" (குறள். 297) என்புழிப்போல. புன்புலம் - செந்நிலம்; என்றது முல்லைநிலத்தை; புன்மை - செம்மை; புன் செய்யுமாம். சிறிய இலை, சிறியிலையென விகாரம் (கன். 155, வி.)

"தலைவர் நின்மாட்டு இனிய பல செய்தவரன்றே; அவரை நீ ஏற்றுக்கோடல் வேண்டும்" என்ற தோழியை மறுப்பவளாதலின், "அவர் இனியராயிருந்தது முன்பு; இப்பொழுது இன்னராயினர்" என்றாள். கட்கின் புதுமலரென்பதனோடு முரண் நயம்பட ஊற்றிற்கு இன்னுதை முள்ளென்பதை இசையெச்சத்தால் வருவிக்க. இன்னு செய்தலாவது பரத்தையர்மாட்டு அன்புடையனாகி யொழுகுதல்.

(மேற்.) 2-5. தலைவி பாங்கியோடு பகர்ந்தது (இ வி. 513.)

மு. தலைவி பாங்கியோடு பகர்தல் (நம்பி. 154.)

(ஒப்பு.) 1. நோமென்னெஞ்சு: குறுந். 4: 1, ஒப்பு.

2. சிறியிலை நெருஞ்சி: "சிறறிலை நெருஞ்சிப் பொற்பூ" (கல். 65: 15.) சிறியிலை: புறநா. 109: 4, 308: 4.

4-5. இனிய செய்த தலைவர் பின் இன்னுசெய்தல்; "இனியசெய் தகன்றுநீ யின்னுதாத் துறத்தலின்" (கலி. 53 : 12.) (202)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்த தலைவனுக்குத் தூதாகப் புக்க தோழியை நோக்கி, "தலைவர் உடனுறைந்து அன்பு பாராட்டற் குரிய நிலையினராக இருந்தும் அயன்மை தோன்ற ஒழுகுகின்றார்; அவர்பால் முன்பு பரிவுடையேன்; இப்பொழுது அது நீங்கியது" என்று தலைவி மறுத்துக் கூறியது.]

மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்று வூரரு மல்லர்·
கண்ணிற் காண நண்ணுவழி யிருந்தும்
கடவு ணண்ணிய பாலோர் போல
5. ஓரீ இ யொழுகு மென்னெக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே.

எ - து. வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது. நெடும்பல்லியத்தன் (பி - ம். நெடும்பல்லியத்தை.)

(பி - ம்.) 3 'யிருந்து' 4 'கடவுணணிய' 5 'வெரீஇயி னெழுகு,' 'ஓரீஇயின னெழுகு' 'வெரீஇயின னெழுகு' 6 'பரிய லெமன்'; 'யாம்'

(ப - ரை.) தோழி, மலை இடை இட்ட நாட்டரும் அல்லர் - தலைவர் மலைகள் இடையிடுவதனற் சேயதாகிய நாட்டினரு மல்லர்; மரந்தலை தோன்று ஊரரும் அல்லர் - தன்னிடத்துள்ள மரங்கள் நமக்குத் தோன்றுத சேய்மையிலுள்ள ஊரினரும் அல்லர்; கண்ணின் காண - கண்ணுலே காணும்படி, நண்ணுவழி இருந்தும் - விரைவில் வருதற்குரிய அணிமையிடத்தில் இருந்தும், கடவுள் நண்ணிய பாலோர் போல - முனிவரை அணுகி வாழும் பகுதியினரைப்போல, ஓரீஇ ஒழுகும் என்னெக்கு - மனத்தால் நீங்கி ஒழுகுகின்ற என் தலைவர் பொருட்டு, யான்—, பண்டு ஒரு கால் - முன்பு ஒரு சமயத்தில், பரியலென் - பரிதலையுடையேனுயி னேன்; மன் - அசை; இப்பொழுது கழிந்ததே!

(முடிபு) நாட்டரு மல்லர்; ஊரரும் அல்லர்; நண்ணுவழி யிருந்தும் ஓரீஇயொழுகும் என்னெக்குப் பண்டொருகால் யான் பரியலென்மன்.

(கருத்து) இப்பொழுது என்னைப் புறக்கணித் தொழுகும் தலைவர்பால் யான் முன்பு பரிவுடையளாக இருந்தேன்.

(வி - ரை.) மலையிடை யிட்ட நாட்டரென்றது வேற்று நாட்டாரென்றபடி; மரந்தலை தோன்ரு ஊரரென்றது காடிடை யிட்ட வேற்றூராரென்றபடி. மலையிடையிட்ட நாட்டினராயின் நினைத்தபோது காண்டற்கு அரிய நிலையினராவர்; வேற்றூரா ராயின் எப்பொழுதும் காணும் நிலையிலதாகும். கண்ணிற்காண நண்ணுவழி - கண்ணுலே காணுதற்குரிய அணிமை; என்றது கற்பொழுக்கத்திற்றலைப்பட்டு எப்பொழுதும் உடனுறையும் நிலையைக் குறித்தது.

மரந்தலை - மரம்; தலை: அசைநிலை; 'கயந்தலை' போல; "மரந்தலை கரிந்து" (அகநா. 169: 1.)

முனிவரைக் கண்டார் தம் தூய்மையன்மை காரணமாக அஞ்சி விலகி யொழுகும் தன்மையைப்போல என்னிடத்தினின்றும் நீங்கி ஒழுகினரென்ருள். இவ்வுவமையால், தனது தூய்மையை யும் தலைவனது பரத்தைமையாகிய தூய்மையன்மையையும் குறிப் பாலுணர்த்தினுள். கடவுள் - முனிவர் (மதுரைக். 41, ந.)

அவர் இங்ஙனம் ஒழுகினும் என்பால் உரிமையுடையா ரென்னும் கருத்துப்பற்றி என்னையென்ருள். பண்டென்றது களவுக்காலத்தைச் சுட்டியபடி.

களவுக் காலத்து மலையிடையிட்டும் காடிடையிட்டும் உள்ள இடத்திலிருந்து வருந்திவந்து என்னேடு இன்புற்ற அவர், இப் பொழுது என்றும் உடனுறைவதற்கேற்ற நிலையைப் பெற்றும் ஒருவி யொழுகினரென்ருள்.

பண்டொருகால் பரிவையுடையேனென்றது, இப்பொழுது அதனை ஒழிந்தேனென்னும் பொருள் பயந்து வாயில்மறுத்த தாயிற்று.

வாயில் வேண்டிய தோழி, "நீ முன்பு அவர்பால் மிக்க அன் புடையையாக இருந்தாயன்றே! ஆதலின் உடம்படுக" என்று கூறினுளாதலின், "அவரும் தம் பண்டை நிலையிற் பிறழ்ந்தார்; யானும் பரிவு நீங்கினேன்" என மறுத்தாள்.

மன்: கழிவிரக்கப் பொருளில் வந்தது.

(மேற்.) 5. தலைமகள் தலைவனை என்னை யென்றது (தொல். பொருள். 50, இளம்.) 5-6. மேற்படி (தொல். பொருள். 52, ந.)

(ஒப்பு.) 3, மு. பொருந. 76. மு. குறுந். 231. (உக)

பாங்கன் கூற்று

[தலைவனைப் பாங்கன் இடித்துரைத்தது.]

உஅ காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்ரு விளம்புல்
மூதா தைவந் தாங்கு
5. விருந்தே காமம் பெருந்தோ ளோயே.

எ - து. தலைமகற்குப் பாங்கன் உரைத்தது.

மிளைப்பெருங் கந்தன்.

(பி - ம்) 1 'என்பர்' 3 'முதுசுவற்' 4 'கைவந்தாங்கு'

(ப - ரை.) பெரு தோளோயே - பெரிய தோளையுடைய தலைவ, காமம் காமம் என்ப - காமம் காமமென்று அதனை அறியார் இகழ்ந்து கூறுவர்; காமம் - அக் காமமானது, அணங்கும் பிணியும் அன்று - வருத்தமும் நோயும் அன்று; முதை சுவல் கலித்த - பழங் கொல்லையாகிய மேட்டு நிலத்தில் தழைத்த, முற்ரு இள புல் - முதிராத இளைய புல்லை, முது ஆ - முதிய பசு, தைவந்தாங்கு - நாவால் தடவி இன்புற்ரு ற்போல, நினைப்பின் - நினைக்குங் காலத்து, காமம் விருந்து - அக்காமம் புதிய இன்பத்தை யுடையதாகும்.

(முடிபு) பெருந்தோளோயே, காமம் காமம் என்ப; காமம் அணங்கும் பிணியும் அன்று; அது விருந்தே.

(கருத்து) காமம் நம்முடைய அறிவின் எல்லைக்கு உட் பட்டது.

(வி - ரை.) காமமென்றது இங்கே காம உணர்ச்சியை. தலை வன், "ஒரு மகள் என்னை அணங்க இந்நோய் உற்றேன்" என்ரு னதலின் காமம் பிறர் அணங்க வருவதன்றெனவும் நோயன்றென வும் மறுத்துரைத்தான். நினைப்பின் - ஆராய்ந்தாலெனலுமாம். 'தனக்குக் கறிக்க வியலாத இளம்புல்லைத் தடவியவளவில் முதிய பசு இன்புற்றதற்குக் காரணம் அப் புல்லின் சுவையன்று; பசுவின் ஆர்வமே. அதன் ஆர்வத்தளவு அவ்வின்பம் நிற்றலைப் போலக் காமமானது நமது நினைப்பினளவிற் புதுமை யின்பத்தைத் தருவதாகின்றது. அதனை நம் அறிவினுல் அவித் தொழுகின் அதனுல் இன்பந்தோன்ரு து. நம் மனநிலையே அதனை விருந்தாகத் தோற்றுவிக்கின்றது' என உவமையை விரித்துக் கொள்க.

விருந்தென்றது புதிதாகத் தோற்றிச் சிறுபொழுதில் அழிவ தென்றும், என்றும் நிலைநிற்கும் நற்குணமன்றென்றும் உணர்த் தியபடி.

இதனால், அறிவுடையார்பாற் காமம் தோன்றுதென்றும், அறிவின்றி மனத்தின்வழியே செல்வார்க்கு அது விருந்தாவதென் றும் புலப்படுத்தி இடித்துரைத்தாளுயிற்று.

பெருந்தோளாயே என்றது, இத்தகைய தோளின் வன்மையை இழந்தனையேயென இரங்கியபடி.

(மேற்.) மு. பாங்கன் கூற்று (தொல். செய். 189, பேர், ந.); தலைவன் உற்றதுரைப்பக் கேட்ட பாங்கன் உலகத்து நிலைநிற்கும் நற்குணங்களை அவனை நினைப்பித்துக் கழறிக் கூறியது (தொல். களவு. 11, ந.); பாங்கன் கிழவோற் பழித்தது (நம்பி. 137.)

(ஒப்பு.) 1 - 2. மு. குறுந். 136 : 1 - 2.

3. சுவல் : குறுந். 282 : 1; மலைபடு. 436. முதைச்சுவல் : குறுந். 155 : 1; அகநா. 359 : 14. (20ச)

தலைவி கூற்று

[வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவனை நினைந்து ஆற்ரு ளென வருந்திய தோழியை நோக்கி, "தலைவர் பிரிந்தவுடன் என் நுதலிற் பசலை தானே பரந்தது" என்று தலைவி கூறியது.]

மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க
விசும்பா டன்னம் பறைநிவந் தாங்குப்
பொலம்படைப் பொலிந்த வெண்டே ரேறிக்
கலங்குகடற் றுவலை யாழி நினைப்ப
5. இனிச்சென் றனனே யிடுமணற் சேர்ப்பன்
யாங்கறிந் தன்றுகொ ரூழியென்
தேங்கமழ் திருநுத லூர்தரும் பசப்பே.

எ - து. வரைவிடை ஆற்ருளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

உலோச்சன்.

(பி - ம்.) 1 'கருவிப்பெயன் மழை' 3. 'வொண்டே ரேளிக்' 4 'றிவலை'

(ப - ரை) தோழி—, இடு மணல் சேர்ப்பன் - அலைகள் கொண்டு வந்திட்ட மணலையுடைய கடற்கரையையுடைய

தலைவன், மின்னு செய் கருவிய - மின்னலைச் செய்கின்ற தொகுதியையுடையனவாகிய, பெயல் மழை தூங்க - பெய்தலையுடைய மேகம் பெய்யா நிற்ப, விசும்பு ஆடு அன்னம் - வானத்தில் அசையும் அன்னப் பறவை, பறை நிவந்தாங்கு - பறத்தலில் உயர்ந்ததைப்போல, பொலம்படை பொலிந்த - பொற்படைகளாற் பொலிவு பெற்ற, வெள் தேர் ஏறி - யானைமருப்பாற் செய்த வெள்ளிய தேரின்கண் ஏறி, கலங்கு கடல் துவலை - கலங்கிய கடலிலுள்ள அலையின் நீர்த்துளிகள், ஆழி நனைப்ப - அத்தேரின் சக்கரங்களை நனைக்க, இனி சென்றனன் - இப்பொழுது என்னைப் பிரிந்து சென்றான் ; பசப்பு - பசலையானது, யாங்கு அறிந்தன்று - இதனை எப்படி அறிந்தது? என் தேம் கமழ் திருநுதல் ஊர்தரும் - எனது மணம் கமழ்கின்ற அழகிய நெற்றியிடத்து அது பரவா நிற்கின்றது.

(முடிபு) தோழி, சேர்ப்பன் ஏறி நனைப்பச் சென்றனன் ; பசப்பு யாங்கறிந்தன்று கொல்? நுதலில் ஊர்தரும்.

(கருத்து) தலைவன் பிரிவினால் யான் பசலை நோயுற்றேன்.

(வி - ரை) பறை - பறத்தல் ; சிறகுமாம். படை - தட்டு ; பக்கத்திலமைத்த பலகைகளுமாம் ; " இழையணி நெடுந்தேர் " (புறநா. 123 : 4) என்பதற்கு, ' பொற்படைகளால் அணியப்பட்ட உயர்ந்த தேர் ' என்றுள்ள உரையைக் காண்க ;

" கோடகத் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை " (கம்ப. கிளைகண்டு. 33)

என்பதனால் பொன்னாலாகிய தேர்த்தட்டுண்மையை உணரலாகும் வெண்டேர் : குறுந். 189, வி-ரை.

இருபுறமும் உள்ள சக்கரங்கள் துவலையால் நனைய வெண்டேர் விரைந்து செல்லுதல் இரண்டு சிறகுகளும் மழைத்துளியால் நனைய அன்னம் விரைந்து போதலைப் போன்றது.

பொலம்படையென்பதற்குப் பொன்னாலாகிய சேணமென்று பொருள் கொண்டு அதனைக் குதிரைக்கு அடையாகக் கொள்ளலும் ஒன்று. அது சினைக்கும் முதலுக்கும் உள்ள ஒப்புமையால் வெண்டேரொடு முடிந்தது. " பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி " (மலைபடு. 574) என வருதல் காண்க.

விசும்பாடன்னத்தைக் குதிரைக்கு உவமை கூறுவதன் பொருத்தம், " விசும்புசெ லிவுளி " (பெரும்பாண். 492) என்பதனாலும் வலியுறும்.

தேம் - மணம் ; இனிமையுமாம். தேங்கமழ் திருநுதலென்றது, அத்தகைய அழகிய நுதலின் இயல்பு இப்பொழுது அழிந்ததே!

எனக் கழிந்ததற்கு இரங்கியதாதலின் தற்புகழ்ச்சி யன்று. நுதல் இயற்கைமணமுடையது. கொல் : ஐயம்.

தலைவன் பிரிந்தவுடன் பசலை பரந்ததென்றுள்; குறுந். 399.

ஊர்தரும் பசப்பு யாங்கறிந்தன்றுகொலென எச்சமாக்கி மூடித்தலும் ஒன்று. 'அவர் பிரிவை யறிந்து யான் துன்புறுவ தற்கு முன்பு இப்பசலை அதனை எங்ஙனம் அறிந்தது!' என வியப் புத் தோன்றக் கூறினள்.

(மேற்.) மு. களவு அலராகாமல் யான் பிரிந்துழித் தலைவி கலங்குவ ளென்றஞ்சித தலைவன் பிரியாது உறைதலின் பிரிவைக் கருதப்பெறுத தலைவி அவ்வாறன்றிப் பிரிந்துழிக் கலங்கியது (தொல். களவு. 20,ந.)

(ஒப்பு.) 1. கருவி மழை : குறுந். 42 : 2, ஒப்பு.

2. பறைநிவத்தல் : "துணை பறை நிவக்கும் புள்ளினம்" (மலைபடு. 55.)

3. பொலம்படைப் பொலிந்த குதிரை : புறநா. 116 : 19, 359 : 14; பு வெ. 276.

2-3. குதிரையின் வேகத்திற்கு அன்னம் : மதுரைக். 385 - 7, அடிக்.

5. இனி : குறுந். 84 : 2, ஒப்பு. 6. யாங்கறிந்தன்று : குறுந் : 140 : 5.

7. நறுநுதல் : குறுந். 22 : 5, ஒப்பு. நுதல் பசத்தல் : குறுந். 87 : 4, ஒப்பு.

5-7. தலைவன் பிரிவினற் பசலை தோன்றல் : குறள், 1185-6. (உரு)

தலைவன் கூற்று

[பாங்கன் தன்னை இடித்துரைத்தபோது, "அறியாமையால் நான் காமநோயுற்றேன். இனிச் செய்யுமாறு யாது? நீவிர் அங் ஙனம் செய்யற்க" என்று தலைவன் கூறியது.]

உரு. அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி
அன்ன வினியோள் குணனு மின்ன
இன்ன வரும்படர் செய்யு மாயின்
உடனுறை வரிதே காமம்
5. குறுக லோம்புமி னறிவுடை யீரே.

எ - து. கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

ஐயூர் முடவன்.

(பி - ம்.) 1 'அமிர்தத்' 2 'குன்றுமின்ன' 5 'அறிவுடை யோரே'

(ப - ரை.) அறிவுடையீரே - அறிவையுடையவரே, அமிழ் தத்து அன்ன - அமிழ்தத்தைப்போன்ற, அம் தீம் கிளவி - அழகிய இனிய சொற்களையுடைய, அன்ன இனியோள் - மனத்தாலுணர்

தல் மாத்திரையே யியன்ற அத்தகைய இனிமையையுடையோளது, குணனும் - குணமும், இன்ன - இத்தகைய, இன்னு அரு படர் செய்யுமாயின் - இன்னுதனவாகிய துன்பங்களே உண்டாக்குமா யின், காமம் - காமமானது, உடன் உறைவு அரிது - ஒருங்கு வாழ் தற்கு அரிது; ஆதலின், குறுகல் ஓம்புமின் - அதனை அணுகுதலைப் பரிகரிமின்.

(முடிபு.) அறிவுடையீரே, இனியோள் குணனும் படர்செய்யு மாயின் காமம் உடனுறைவரிது; குறுகல் ஓம்புமின்.

(கருத்து) காமம் என்னுல் தாங்கற்கரியது.

(வி - ரை.) கேட்டார் பிற செயல்களே மறந்து நிற்றலின் அமிழ்தத்தை உவமை கூறினர்; "அஞ்சொற்க ளமுதி னள்ளிக் கொண்டவள்" (கம்ப மாரீசன், 70) என்றுர் கம்பரும். அந்தீங் கிளவி - அழகிய இனிய சொல்; அழகு பொருளால் அமைந்தது; இனிமை மென்மையாலமைந்தது. தான் நுகர்ந்த இனிமையைச் சொல்லால் உணர்த்தலாகாமையின் 'அன்ன இனியோள்' என்றுன் (திருச்சிற். 19, பேர்.) இனிமை ஐம்பொறிக்கும் இனிம்ம. குணனும்: உம்மை உயர்வு சிறப்பு. இத்தகைய இனிமையையுடையா ளது இனிய குணங்களும் காமத்தின் தொடர்பால் இன்னுமை செய்யின் அக்காமம் கோடற்கு உரியதன்றென்றுன்.

'கிளவி அமிழ்தத்தன்ன; குணனும் அன்ன; இன்ன (கிளவி யும் குணனும்) படர் செய்யுமாயின், காமம் உடனுறைவரிது' எனக் கூட்டிப் பொருள்கொள்ளுதலும் பொருந்தும்.

அரும்படர் - பிறமருந்தால் தீர்த்தற்கரிய துன்பம்;

"பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னேய்க்குத் தானே மருந்து" (குறள், 1102.)

அரிதே: ஏகாரம் தேற்றம். பாங்கனைப் பன்மையாற் கூறி னன்; பார்ப்பனப்பாங்கனைப் பன்மையாற் கூறுவது மரபென்று தெரிகின்றது (இறை. 3, உரை.)

'நான் அறிவின்மையால் இந்நோய் தலைக் கொண்டேன். இத னுல் விளைந்த துன்பம் தீர்த்தற்கரிதாயிற்று. அறிவுடையீராகிய நீர் செல்லுதலை ஒழிமின்' என்றுன். இதனுல் தலைவன் தன் நிலை மையை ஒருவாறு புலப்படுத்தினனையிற்று.

(ஒப்பு.) 3. இன்ன அரும்படர்: நெடுநல். 167.
5. குறுக லோம்புமின்: குறுந். 184: 2.

தலைவி கூற்று

[தலைவர் சொல்லாமற் பிரிந்து செல்வதைத் தோழி கூறிய பொழுது, "இங்ஙனம் சொல்லிய ஆர்வலர் பலர்; அவரைப்போல நீயும் சொன்னாய்; தலைவரைத் தடுத்தாயல்லை" எனத் தலைவி இரங்கிச் சொல்லியது.]

உஎ. செப்பினஞ் செலினே செலவரி தாகுமென்
றத்த வோமை யங்கவட் டிருந்த
இனந்தீர் பருந்தின் புலம்புகொ டெள்விளி
சுரஞ்சென் மாக்கட் குயவுத்துணை யாகும்
5. கல்வரை யயலது தொல்வழங்கு சிறுநெறி
நல்லடி பொறிப்பத் தாஅய்ச்
சென்றெனக் கேட்டநம் மார்வலர் பலரே.

ஏ - து. செலவுக் குறிப்பறிந்து, அவர் செல்வார் (பி - ம். செல்லார், சொல்லார்) என்று தோழி சொல்லக் கிழத்தி உரைத்தது.

[செலவுக்குறிப்பு - ஆயுதங்களைத் துடைத்தல் முதலியன; கலி. 7. நற் 177;]

உறையன்.

(பி - ம்.) 1 'செப்பினெஞ்', 'செப்பிநாம்'; 'சொலினே' 3 புலம்புகொண்டவ்விளி' 5 'கல்வரைபலாது'; 'தோல் வழங்கு' தேர்வழங்கு' 'பேளர் பட்ட தொல் வழங்கு'

(ப - ரை.) செப்பினம் செலின் - நம்முடைய செலவைத் தலைவியினிடத்துச் சொல்லிச் செல்வேமாயின், செலவு அரிது ஆகும் - செல்லுதல் அரிதாகும், என்று - என்று கூறி, அத்தம் ஓமை - பாலைநிலத்திலுள்ள ஓமைமரத்தினது, அம் கவட்டு இருந்த - அழகிய கிளையின்கண் இருந்த, இனம் தீர் பருந்தின் - இனத்தினின்றும் பிரிந்து வந்த பருந்தினது, புலம்பு கொள் தெள் விளி - தனிமையைப் புலப்படுத்தலைக் கொண்ட தெளிந்த ஓசை, சுரம் செல் மாக்கட்கு - அருவழியிற் செல்லும் மனிதர்களுக்கு, உயவு துணை ஆகும் - உசாத்துணையாக அமைதற்கு இடமாகிய, கல் வரை அயலது - கற்களையுடைய மலையினது அயலதாகிய, தொல் வழங்கு சிறுநெறி - யாவரும் நடக்கும் பழையதாகிய சிறிய வழியில், நல் அடி பொறிப்ப - தம் நல்ல அடிகள் சுவடு செய்ய, தாஅய் - தாவி, சென்றென - சென்றார் என்று, கேட்ட நம் ஆர்வலர் பலர் - கேட்ட நம்முடைய அன்பர் பலராவர்.

(முடிபு) என்று சென்றெனக் கேட்ட ஆர்வலர் பலர்.

(கருத்து) தலைவர் செலவை யான் முன்னரே அறிந்தேன்.

(வி - ரை.) அத்த வோமை - சிவந்த அடியையுடைய ஓமை யென்பதும் பொருந்தும்; "ஓமைச் செவ்வரை" (நற். 279 : 7); "ஓமைப், பெரும்பொளிச் சேயரை நோக்கி" (அகநா. 397 : 11 - 2); "அரக்கார்ந்த வோமை" (கைந்நிலை, 19.)

இனந்தீர் பருந்தாதலின் புலம்புகொள் விளியாயிற்று. பிற ஓலியின்மையின் தெள்விளியாயிற்று. தோல்வழங்கென்ற பாடத் திற்கு யானைகள் வழங்குகின்றவெனப் பொருள்கொள்க.

நல்லடியென்றது அப்பாலை நிலத்தில் நடத்தற்குரியதன்றென் னும் நீணவிற்று. சென்ருரெனவென்பது சென்றென விகாரப் பட்டு நின்றது.

"என்பால் அன்புடையார் பலர் கேட்டு இதனை எனக்கு முன் னரே தெரிவித்தனர். நீ இப்பொழுது தெரிவித்தலால் ஆகும் பயன் யாது? எல்லோரையும் போல நீ கேட்டலை யன்றிச் செல வழுங்குவித்தாயல்லை" எனத் தோழியின் நொதுமற்றன்மையைச் சுட்டித் தலைவி இரங்கினள்.

என்று சொல்லிச் சென்ருராக, அவர் அங்ஙனம் கூறியதைக் கேட்ட ஆர்வலர் பலரென்றலும் ஒன்று.

பழைய கருத்தில், செல்லாரென்பது பாடமாயின், "அவர் சென்றனரென அறிந்து கூறினவர் பலராக இருப்ப, நீ செல்லா ரென்றது என்னை?" எனவும், சொல்லாரென்பது பாடமாயின், "அவர் சொல்லாது அகறலை யாவரும் அறிந்தனர்; நீ அவரைச் செல்லாமல் தடுத்தனையல்லை" எனவும் பொருள் கொள்க.

ஆர்வலர் - ஆர்வமில்லாரைச் சுட்டிய குறிப்புமொழியென லும் பொருந்தும். ஏகாரங்கள் அசைநிலை.

(ஒப்பு) 1. சொல்லிப் பிரிதலரிதாதல்: "மனமகிழ்ந்து, தெருட்டிற் றெளியலள் செப்பும் வகையில்லை" (திருச்சிற். 270.)

2. அத்தவோமை: "ஓமை நீடிய கானிடை யத்தம்" (நற். 198 : 2.)

3. தெள்விளி: அகநா. 17 : 13, 28 : 10. புலம்புகொள் தெள்விளி: நற். 212 : 2, 305 : 7.

பருந்தின் தெள்விளி: "வலைவாய்ப் பருந்தின் வள்ளுகிர்ச் சேவல், கிளைதரு தெள்விளி" (அகநா. 363 : 13 - 4.)

2-3. ஓமைக்கவட்டிற் பருந்து இருத்தல்: "பருந்தினைப் படூஉம் பாறுதலை யோமை", "கருங்கா லோமை யேறி வெண்டலைப், பருந்து பெடை பயிரும்" (அகநா. 21 : 15, 117 : 6-7.)

ஒமையிலிருந்து பருந்து விளித்தல்: "உலறுதலைப் பருந்தி னுளிவாய்ப் பேடை, அலறுதலை யோமை யங்கவட் டேறிப், புலம்புகொள விளிக்கு கிலங்காய் கானத்து" (ஐங். 321: 1-3.)

4. **உயவுத்துணை:** ஐங். 477: 3; அகநா. 103: 12, 298: 22, 338: 11, 343: 14.

3-4. **பருந்தின் விளி உயவுத்துணையாதல்:** "பருந்திருந் துயாவிளி பயிற்றும்" (அகநா. 19: 2-3)

5. (பி-ம்.) **தோல்வழங்கு சிறுநெறி:** ஐங். 314; அகநா. 123: 1-4, 318: 1.

வரையயலது சிறுநெறி: "பெருவரைச் சிறுநெறி" (நற். 261: 10.)
(உஎ)

தலைவி கூற்று

[வரைவிடை வைத்துத் தலைவன் பொருள்வயிற் பிரிந்த காலத்து ஆற்றுளாகிய தலைமகளை நோக்கி, "நீ ஆற்றல் வேண்டும்" என்ற தோழிக்கு அவள், "நான் தலைவர் கருத்தை உணர்ந்தேன்; ஆயினும் நொதுமலர் வரையப்புகுவரேல் என் செய்வதென ஆற்றேனாயினேன்" என்றது.]

உஅ. ஒன்றே னல்லே னென்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய மலரு நாடனை
5. டொன்றேன் ரோழி யொன்ற னானே.

எ-து. வரைவிடை ஆற்றல்வேண்டுமென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கபிலர்.

(பி-ம்.) 1 'என்றேனலவென்' 2 'துமித்த நெறிதாள்' 4 'நின்று கொய்மலையகநாடனெடு' 5 'யொன்றி னானே,' 'யொன் றேனானே', 'யென்றி னானே'

(ப-ரை) தோழி—, ஒன்றேன் அல்லேன்-யான் தலைவ னோடு பொருந்தாத இயல்பினை உடையேனல்லேன்; ஒன்றுவென்-பொருந்தும் இயல்பினேன்; ஆயினும், ஒன்றனன்-நொதுமலர் வரைவொடு புகுவதாகியதொரு காரணத்தினால், குன்றத்து-மலையினிடத்து, பொருகளிறு மிதித்த-ஒன்றோடொன்று பொருத களிறுகளால் மிதிக்கப்பட்ட, நெரிதாள் வேங்கை-நெரிந்த

அடியையுடைய வேங்கைமரம், குறவர் மகளிர் - குறமகளிர், கூந்தற் பெய்ம்மார் - தம்முடைய கூந்தலின்கண்ணே அணிந்து கொள்ளும்பொருட்டு, நின்று கொய - ஏறவேண்டாமல் நின்ற படியே மலர்களைக் கொய்யும்படி, மலரும் - தாழ்ந்து மலர்தற்கிட மாகிய, நாடனொடு - நாட்டையுடைய தலைவனோடு, ஒன்றேன் - பொருந்தேன்.

(முடிபு) தோழி, ஒன்றேனல்லேன்; ஒன்றுவென்; ஒன்ற னானே ஒன்றேன்.

(கருத்து) தலைவர் வரவு நீட்டித்தலின் நொதுமலர் வரையப் புகுவரென்று யான் ஆற்றேனாயினேன்.

(வி - ரை.) "நின்னை வரைந்து கொள்ளற்பொருட்டன்றே அவர் பிரிந்தனர். அவர் தம் கருத்தோடு நீ ஒன்றுது ஆற்றுயாகின்ற தென்?" என்ற தோழிக்குக் கூறியது இது. ஒன்றுதல் - மனத் தாற் பொருந்தி ஆற்றியிருத்தல்.

பொருத களிறு மிதித்தலால் வேங்கைமரம் சாய்ந்து மகளிர் ஏறுமே மலர் பறித்தற்கு எளிதாக மலர்ந்தது. மகளிர் வேங்கை மரத்தின்மேல் ஏறிப் பூப்பறித்தலுமுண்டென்பது,

> "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
> மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
> பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்" (குறுந். 26 : 1 - 3)

என்பதனாற் பெறப்படும்.

பொருகளிற்றால் மிதிக்கப்பட்ட வேங்கைமரம் சிதைந்தொழி யாது பின்னும் பறித்தற்கு எளியதாகித் தாழ்ந்து மலருமென்றது, நொதுமலர்வரைவினால் அச்சமுற்றேனாக, அதுவே காரணமாக விரைவில் மணந்துகொண்டு பின்னும் எளிதில் இன்பந்துய்த்தற்கு உரியானென்ற குறிப்பு உணர்த்தியது.

ஒன்றனானே - தாம் கூறிய காலத்தே வாராமையாகியதொரு காரணத்தாலெனலும் ஆம்; 'பிரிந்து சென்றதற்கே புலந்து ஒன்று இயல்பினரைப் போலாது, பிரிந்தும் உரிய காலத்தே வரின் ஒன்றும் இயல்பினளே யான்; அங்ஙனம் வாராமைக் காரணத் தால் அவ்வியல்பு நீங்கி ஒன்றே னாயினேன்' என்பது கருத்தாகக் கொள்க.

(மேற்.) 1-3. தலைவி உள்ளுறையுவமம் கூறுங்கால் அவளறியுங் கருப் பொருளானே கூறல்வேண்டும்; 'பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை மரம் படப்பையில் உள்ளதாகலானும், தன்னால் பூக்கொய்யப் படுமாக லானும் அஃது அவளறி கிளவி எனப்பட்டது' (தொல். உவம. 26, பேர்.)

மு. இறைச்சிப்பொருள் பிறிதுமோர் பொருள்கொள்ளக்கிடந்தது;

'வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்தவழித் தலைமகனெடு ஒன்றுமாறு என் னெனக் கவன்ற தோழிக்கு உடன்போதற் குறிப்பினளாய்த் தலைமகள் கூறி யது; ஆதலின், இதனுள் பொருகளிறு என்றமையால், தலைமகள்தமர் தலை மகன்வரைவிற்கு உடன்படுவாரும் மறுப்பாருமாகி மாறுபட்டனரென்பது தோற்றுகின்றது. பொருகளிறு மிகித்த வேங்கை யென்றதனால், பொரு கின்ற இரண்டு களிற்றினும் மிகிப்பது ஒன்றுகலின் வரைவுடன் படாதார் தலைமகளை அவமதித்தவாறு காட்டிற்று. வேங்கை நின்று கொய்ய மலரு மென்றதனால், முன்பு ஏறிப் பறித்தல் வேண்டுவது இப்பொழுது நின்று பறிக்கலாயிற்று என்னும் பொருள் பட்டது; இதனானே பண்டு நமக்கு அரியனை தலைமகன் தன்னை அவமதிக்கவும் நமக்கு எளியனாகி அருள் செய்கின்றனெனப் பொருள்படக் கிடந்தவாறு காண்க' (தொல். பொருள். 34, இளம்.); மிகியுண்டு வீழ்ந்த வேங்கை குறையுயிரோடு மலர்ந்தாற்போல யானும் உளேனையினே னென்றமையின் மெய்யுவமப் போலியாயிற்று (தொல். உவம. 25,பேர்.);உள்ளுறையுவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருளை நிலமாகக் கொள்ளும்; 'இக் குறுந்தொகை, பிறிதொன்றன் பொருட்டுப் பொருகின்ற யானையால் மிதிப்புண்ட வேங்கை நசையற வுணங்காது மலர் கொய்வார்க்கு எளிதாகி நின்று பூக்கும் நாடனென்றதனானே, தலைவன் நுகருங் காரணத்தானன்றி வந்து எதிர்ப்பட்டுப் புணர்ந்து நீங்குவான் எம்மை இறந்துபாடு செய்வியாது ஆற்றுவித்துப் போயினனெனவும், அதனானே நாமும் உயிர் தாங்கியிருந்து பலரானும் அலைப்புண்ணு கின்றனம் வேங்கை மரம் போலெனவும் உள்ளத்தான் உவமங் கொள்ள வைத்தவாறு காண்க' (தொல். அகத். 47, ந.); உள்ளுறை யுவமம் வந்தது (கலி. 38, ந.)

(ஒப்பு.) 2. களிறு மிதித்த வேங்கைமரம்: "மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை" (நற். 362: 7); "புலிக்கேழ் வேங்கைப் பூஞ்சினை புலம்ப, முதல்பாய்ந் திட்ட முழுவலி யொருத்தல்" (அகநா. 227: 8-9.)

2-3. வேங்கை மலரை மகளிர் அணிந்து கொள்ளுதல்: "தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை, மலைமா ரிடுஉ மேமப் பூசல்" (மலைபடு. 305-6); 'கருங்கால் வேங்கை நாளுறு புதுப்பூப், பொன்செய் கம்மியன் கைவினை கடுப்பத், தகைவனப் புற்ற கண்ணழி கட்டழித், தொலிபல் கூந்த லணிபெறப் புனைஇ" (நற். 313: 1-4); "அகலறை மலர்ந்த வரும்பு முதிர் வேங்கை, ஒள்ளிலைத்தொடலை தைஇ", "பொன்னென, மலர்ந்த வேங்கை மலிதொட ரடைச்சிப், பொலிந்த வாயமொடு காண்டக வியலி", "கருங்கால் வேங்கைச் செம்பூம் பிணையல்,.....யாமணிந் துவக்கும்", "பொரியரை வேங்கைத், தண்கமழ் புதுமலர் நாறும், அஞ்சி லோதி", "வதுவை மகளிர் கூந்தல் கமழ்கொள, வங்கூ ழாட்டிய வங்குழை வேங்கை" (அகநா. 105 :1-2, 188: 8-10,345: 8-9, 365: 13-5, 378: 2-3.)

2-4. வேங்கைப் பூவை மகளிர் கொய்தல்: குறுந். 26: 1-3; மதுரைக். 296-7; ஐங். 297: 1-2, 311: 1; அகநா. 48: 6; 52: 2-4. (உஅ)

தலைவன் கூற்று

[பொருள்வயிற் சென்ற தலைவன் அப்பொருளைப் பெற்று மீண்டு வந்து தோழியை நோக்கி, "நான் பிரிந்தவிடத்து வேறொன்றையும் நினையாமல் தலைவியின் கூட்டத்தையே நினைந் திருந்தேன்" என்று கூறும் வாயிலாகத் தனது அன்பைத் தலைவிக்குப் புலப்படுத்தியது]

உஅ அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோளிடங் கறங்கும்
இறப்பருங் குன்ற மிறந்த யாமே
குறுநடை பலவுள் ளலமே நெறிமுதற்
5. கடற்றிற் கலித்த முடச்சினை வெட்சி
தளையவிழ் பல்போது கமழும்
மையிருங் கூந்தன் மடந்தை நட்பே.

எ - து. பொருள்முற்றி மறுத்தரும் (பி-ம். மறுதரும்) தலை மகன் தோழிக்கு உரைப்பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது.

[பொருள்முற்றி - பொருளீட்டும் முயற்சி நிறைவெய்தி. மறுத்தரும் - மீளும் கலி. 15 : 15, 81 : 34.]

பாலைபாடிய பெருங்கடுங்கோ (பி - ம். பெருங்கோ)

(பி - ம்.) 1 'சுரந்தலைப்' 4 'குறுநடைப்பல் லுள்ளலமே' 5 'கடத்திற்', 'களரிற்' 'முட்சினை,' 7 'நண்பே'

(ப - ரை.) குறுநடை - குறுக அடியிட்டு நடக்கும் நடையை யுடைய தோழி, அறம் தலைப்பட்ட - வழிப்போவாரது உயிரைத் தாங்கற்குரிய அறத்தைச் செய்யும், நெல்லி அம் பசு காய் - நெல்லிமரத்தினது அழகிய பசிய காய்கள், மறம் புலி குருளை - வலியையுடைய புலிக்குட்டிகள், கோள் இடம் - கொள்ளற்குரிய இடத்தில், கறங்கும் - உதிர்ந்து உருளுகின்ற, இறப்பு அரு குன்றம் - கடத்தற்கரிய மலைகளை, இறந்த யாம் - கடந்து சென்ற யாம், அங்ஙனம் சென்றவிடத்து, பல உள்ளலம் - பல பொருள் களை நினைந்தேமல்லேம்; நெறிமுதல் - வழியினிடத்தே, கடற்றில் கலித்த - காட்டினிடத்தில் தழைத்த, முடம் சினை வெட்சி - வளைந்த கிளைகளையுடைய வெட்சியினது, தளை அவிழ் - முறுக்கு அவிழ்ந்த, பல் போது கமழும் - பல பேரரும்புகள் மணக்கின்ற. மை இரு கூந்தல் - மையைப் போன்ற கரிய கூந்தலையுடைய, மடந்தை நட்பே - தலைவியினது நட்பையே நினைந்திருந்தேம்.

(முடிபு), குறுநடை, யாம் பல உள்ளலம்; மடந்தை நட்பே உள்ளினேம்.

(கருத்து) நான் எப்பொழுதும் தலைவியையே நினைந்திருந்தேன்.

(வி - ரை.) இஃது, "எம்மை நினைத்தும் அறிதிரோ?" என வினவிய தோழிக்கு உரைத்தபடி.

"குறும்பொறை மருங்கிற் கோட்சுர னீந்தி
நெடுஞ்சேண் வந்த நீர்நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி" (அகநா. 271: 5-7)

என்பவாதலின், அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காயெனச் சிறப்பித்தான். தருமத்தின்பொருட்டு வளர்த்த நெல்லி மரத்தின் காயெனலும் ஒன்று. அம்: சாரியையுமாம்.

கறங்கும் - கீழே உதிர்ந்து ஒலிக்குமென்பதும் ஆம். பாலை நிலத்தில் நெல்லிக்காயுதிர்தல்,

"பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை யீட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படுஉங் கதிர்தெறு கவாஅன்" (அகநா. 5: 9-11)

என்பதனாலும் விளங்கும்.

யாமே: ஏ அசைநிலை. பன்மை பொருண்முற்றிய பெருமிதந் தோன்ற நின்றது.

'இறப்பருங்குன்றத்தை அரிதிற் கடந்தயாம் அங்ஙனம் கடத்தற்குக் காரணமான பொருண் முயற்சிக்குரிய பலவற்றையும் உள்ளலம்' என்று கூறினன்.

வெட்சி காட்டில் தழைத்து வளர்வது; "வெட்சிக் கானத்து" (புறநா. 202: 1.) முட்சினை யென்ற பாடத்திற்கு, இதல் முள்ளைப்போன்ற அரும்பையுடையவெனப் பொருள் கொள்க; "இதன்முள் ளொப்பின முகைமுதிர் வெட்சி" (அகநா. 133: 14); சினை - அரும்பு. மகளிர் வெட்சிமலரைப் பூணுதல் வழக்கம்;

"துணையோ ராய்ந்த வினையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிகுபு" (முருகு. 20-21.)

மடந்தை: இங்கே பருவங் குறியாது தலைவியென்னுந் துணையாய் நின்றது. நட்பு - கூட்டம். ஏகாரம் பிரிநிலை. மையிருங் கூந்தலென்ற அடை அக்கூந்தற்பாயலிற்றுயிலும் நிலையையே நினைத்திருந்தேனென்ற கருத்தைப் புலப்படுத்தியது. நட்பே உள்ளினமென ஒருசொல் வருவித்து முடிக்க.

(ஒப்பு.) 1. நெல்லியம்பசுங்காய் : "நெல்லிப் பைங்காய்", "புன்காய் நெல்லிக், கோடை யுதிர்த்த குவிகட் பசுங்காய்", "புல்லிலை நெலலிப் புகரில் பசுங்காய்", "நெல்லிப் பைங்காய்" (அகநா. 54: 15, 315 : 10-11, 363 : 6, 399 : 14.)

7. மையிருங் கூந்தல் : குறுந். 199 : 5, ஒப்பு. (உஅக)

தோழி கூற்று

[தலைவியைப் பிரிந்து சென்று மீண்டுவந்த தலைவன், "யான் பிரிந்த காலத்தில் தலைவி துயருறுமல் நன்கு ஆற்றுவித்திருந்தாய்" என்று தோழியைப் புகழ, "என் செயல் ஒன்றுமின்று ; காக்கை கரைந்த நன்னிமித்தத்தால் அவளை ஆற்றுவித்தேன்" என்று அவள் கூறியது.]

உக்o. திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் ரெண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென் ரோழி
5. பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

எ - து. பிரிந்துவந்த தலைமகன், "நன்காற்றுவித்தாய்" என்ருற்கு (பி - ம். என்ருர்க்கு)த் தோழி உரைத்தது.

காக்கை பாடினியார் (பி - ம். பாடினி) நச்செள்ளையார்.

(பி - ம்.) 3 'விழைந்த' 4 'ரெருகலத்' 5 'செல்வற்கு' 6 'விரைந்து வரக்'

(ப - ரை.) திண் தேர் நள்ளி - திண்ணிய தேரையுடைய நள்ளி யெனனும் உபகாரியினது, கானத்து - காட்டிலுள்ள, அண்டர் - இடையர்களுக்குரிய, பல் ஆ பயந்த நெய்யின் - பல பசுக்கள் உண்டாக்கிய நெய்யோடு, தொண்டி - தொண்டியென்னும் ஊரிலுள்ள வயல்களில், முழுது உடன் விளைந்த - முற்றும் ஒருங்கே விளைந்த, வெள் நெல் வெ சோறு - வெண்ணெல்லரிசியால் ஆக்கிய வெம்மையையுடைய சோற்றை, எழு கலத்து ஏந்தினும் - ஏழு பாத்திரங்களில் ஏந்திக் கொடுத்தாலும், என் தோழி - என் தோழியாகிய தலைவியினுடைய, பெரு தோள் நெகிழ்த்த செல்லற்கு - பெரிய தோளை நெகிழச் செய்த துன்பத்தை நீக்கும் பொருட்டு, விருந்து வர - விருந்தினர் வரும்படி, கரைந்த காக்

கையது பலி - கரைதலைச் செய்த காக்கைக்குரிய அப் பலியானது, சிறிது - சிற்றளவினதே யாகும்.

(முடிபு) சோறு ஏந்தினும் கரைந்த காக்கையது பலி சிறிது.

(கருத்து) காக்கை கரைதலாகிய நின்வரவுக்குரிய நிமித்தங் காட்டி, யான் தலைவியை ஆற்றுவித்தேன்.

(வி - ரை.) நள்ளி - ஏழு வள்ளல்களில் ஒருவனாகிய கண்டீரக் கோப்பெரு நள்ளி. கானம் - முல்லை நிலம். தொண்டி - ஈண்டு மேல் கடற்கரைக் கண்ணேயுள்ளதொரு துறைமுகப் பட்டினம்.

நெய்யிற் சோறு ஏந்தினுமென இயைக்க.

செந்நெல்லும் உண்மையின், வெண்ணெல்லென்றுள். வெம்மை சோறட்ட அணிமையைக் குறித்தது.

பெருந்தோளென்றது நெகிழ்தற்குரியதன்றென்னும் கருத்தினது. செல்லற்கு விருந்தென்றது 'நோய்க்கு மருந்து' என்பது போல நின்றது. காக்கைக்கு இடும் உணவைப் பலியென்றல் மரபு. காக்கை கரைதல் புதியோர் வரவைக் குறிக்கும் நிமித்தமென்பர்;

"மறுவி றாவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைங்நிண வல்சி
பொலம்புனை கலத்திற் றருகுவென் மாதோ
வெஞ்சின விறல்வேற் காளையொ
டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே" (ஐங். 391);

"பணங்களஞ் சாலும் பருவர வார்த்தவன் றில்லையன்ன
மணங்கொளஞ் சாயலு மன்னனு மின்னே வரக்கரைந்தால்
உணங்கலஞ் சாதுண்ண லாமொண் ணிணப்பலி யோக்குவன்மாக்
குணங்களஞ் சாற்பொலி யுந்நல சேட்டைக் குலக்கொடியே"
(திருச்சிற். 235.)

"நான் ஆற்றுவித்தற்பொருட்டுப் பெருமுயற்சி செய்தேனல்லேன். நின்வரவை முன்னரே யுணர்த்தும் நிமித்தமாகக் காக்கை கரைந்தது. அதுகாட்டி யான் ஆற்றுவித்தேன். ஆதலின் அக் காக்கையே பாராட்டுதற்குரியதாகும்" என்றுள்.

காக்கையை இங்ஙனம் பாடிய சிறப்பால் இச்செய்யுளைப் பாடியவர் காக்கைபாடினியாரென்னும் பெயரைப் பெற்றார்.

(மேற்.) மு. குற்றமில்லாத தலைமகனைச் சுட்டிய தெய்வக்கடன் கொடுத்தற்கண் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 9, இளம்.)

(ஒப்பு.) 1. திண்டேர்: குறுந். 128: 2, வி - ரை.

2. தொண்டி: குறுந். 128: 2, ஒப்பு.

2-3. நெய்யுஞ் சோறும்: "நெய்யிடை நல்லதோர் சோறும்" (திவ் திருப்பல்லாண்டு, 8); "பாற்சோறு, மூடநெய் பெய்து முழங்கை வழிவார" (திருப்பாவை, 27.) தொண்டி நெல்: குறுந். 238: 2-4.

4. ஏழுகூறுதல் மரபு: குறள், 1278; சீவக. 116.

5. தோள் நெகிழ்த்த செல்லல்: குறுந். 87: 5, ஒப்பு.

6. காக்கையது பலி: "செஞ்சோற்ற பலிமாந்திய, கருங் காக்கை" (பொருந. 183-4); "பலியுண் காக்கை", "உகுபலி யருந்திய தொகுவிரற் காக்கை" (நற். 281: 1, 343: 5.) **(உ60)**

தோழி கூற்று

[தலைவன் பிரிந்தகாலத்தில், "சுரத்திடையே தம் துணையைப் பிரிந்த விலங்கும் பறவையும் கவல்வது கண்டு நாமும் அங்ஙனம் கவல்வோமென நினைந்து தலைவர் மீள்வரோ?" என ஐயுற்ற தலைவியை நோக்கி, "அவர் அத்தகைய அருள் உடையரல்லர். நம்மைப் பிரிந்த வன்மையையுடையார். ஆதலின் மீளார்" என்று தோழி கூறியது.]

உ6உ. அஞ்சி லோதி யாய்வளை நெகிழ
நேர்ந்துநம் மருளார் நீத்தோர்க் கஞ்சல்
எஞ்சினம் வாழி தோழி யெஞ்சாத்
தீய்ந்த மராஅத் தோங்கல் வெஞ்சினை
5. வேனி லோரிணர் தேனே டூதி
ஆராது பெயருந் தும்பி
நீரில் வைப்பிற் சுரனிறந் தோரே.

எ - து. 'இடைச்சுரத்துக் கவலுவன கண்டு, நம்மை ஆற்ற ரென நினைந்து மீள்வர்கொல்?' எனக் கவன்ற கிழத்திக்குத் தோழி சொல்லியது.

காவன்முல்லைப் பூதனார்.

(பி - ம்.) 2 'நொந்துந மருளார்' 3-4 'யெஞ்சா, தீந்த', 'யெஞ்சாறீந்த' 4 'மராஅந்தொங்கல் வஞ்சினை'

(ப - ரை.) தோழி—, எஞ்சா - குறைந்து, தீய்ந்த மராஅத்து - வேனிலால் வெம்பிய மராமரத்தினது, ஓங்கல் வெ சினை - ஓங்கு தலையுடைய வெவ்விய கிளையின்கண், வேனில் ஓர் இணர் - வேனிற் காலத்து மலர்ந்த ஒற்றைப் பூங்கொத்தை, தேனோடு ஊதி - தேனென்னும் சாதி வண்டோடு ஊதி, ஆராது பெயரும் - அதன்

கண் ஒன்று மின்மையின் உண்ணுமல் மீள்கின்ற, தும்பி - தும்பி யென்னும் வண்டுகளையுடைய, நீர் இல் வைப்பின் - நீரில்லாத இடங்களையுடைய, சுரன் இரந்தோர் - பாலைநிலத்தைக் கடந்தோரும், அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையுடைய நினது, ஆய் வளை நெகிழ - அழகிய வளைகள் நெகிழும்படி, நேர்ந்து - நம் விருப்பத்திற்கு உடம்பட்டு, நம் அருளார் - நம்பால் அருள் செய்யாராகி, நீத்தோர்க்கு - நம்மைப் பிரிந்து சென்றோருமாகிய தலைவர்பொருட்டு, அஞ்சல் எஞ்சினம் - அஞ்சுதலை நீங்கினேம்.

(முடிபு) தோழி, சுரன் இறந்தோராகிய நீத்தோர்க்கு அஞ்சல் எஞ்சினம்.

(கருத்து) தலைவர் மீளார்.

(வி - ரை.) நெகிழும்படி நீத்தோர். 'அவர் இடைச் சுரத்தில் தம் துணையையிழந்து கவலுவனவற்றைக்கண்டு மீளும் இயல் புடையராயின், ஈண்டு நாம் துன்புறும்படிசெய்து பிரியார். நம்மோடு உடம்பட்டு ஈண்டிருந்து அருள்செய்வார்' என்பது படக் கூறினள்.

நேர்தலாவது செலவமுங்கல். நேர்ந்தென்னுமெச்சம் அருளா ரென்பதன் பகுதியோடு முடிந்தது. எஞ்சுதல் - குறைதல். மராமரம் வேனிலிற் பூப்பது. தேன் - ஒரு சாதி வண்டு (சீவக. 892, ந.) ஆராது - தெவிட்டாதெனினும் பொருந்தும்.

"அவர் இரங்கும் நெஞ்சுடையராயின் வளை நெகிழும்படி நமக்கு உளதாகும் துன்பத்தையும், நீரில் வைப்பிற் சுரம் போகுங் கால் தமக்கு உளதாகும் துன்பத்தையும் எண்ணிப் பிரியார். அவர் பிரிந்தமையின் இடைச்சுரத்தே இரங்கி மீளா வலிய நெஞ்சினராவர்" என்று தோழி கூறினள்.

இடைச்சுரத்திலிருந்து வினைமுடியாமல் மீளுதல் அறனன்றுதலின் தலைவி கவன்றாள்.

(ஒப்பு.) 1. அஞ்சிலோதி: குறுந். 214: 3, 280: 2; குறிஞ்சிப். 180; நற். 105: 10, 324: 8, 355: 8, 370: 7; ஐங். 49: 1, 391: 6, 448: 5; அகநா. 261: 3; சீவக. 2576.

2. வளை நெகிழ்தல்: குறுந். 11: 1, ஒப்பு.

4-5. மராம் வேனிலில் மலர்தல்: குறுந். 22: 3-4, ஒப்பு; ஐங். 348.

7. நீரில் வைப்பிற் சுரம்: "நீரி லத்தத் தாரிடை", "நீரிலா ராற்று நிவப்பன" (அகநா. 17: 12, 45: 4.) (உக்க)

தோழி கூற்று

[தலைவனது குறையைத் தலைவி நயக்கும்படி, "தலைவனது தேர் வந்து வறிதே பெயர்வதாயிற்று ; அவன் விருப்பம் கழிந்தது. அது கருதி வருந்துகின்றேன்" என்று தோழி கூறியது]

உகஉ. கொண்க னூர்ந்த கொடுஞ்சி நெடுந்தேர் [பக்
தெண்கட லடைகரைத் தெளிமணி யொலிப்
காண வந்து நாணப் பெயரும்
அளிதோ தானே காமம்
5. விளிவது மன்ற நோகோ யானே.

எ - து. குறைநேர்ந்த தோழி குறைநயப்பக் கூறியது.

[குறை நேர்ந்த - தலைவனது குறையை நிறைவேற்றுதற்கு உடம்பட்ட. குறை நயப்ப - தலைவனது குறையைத் தீர்த்தலைத் தலைவி நயக்கும் வண்ணம்.]

நெய்தற் கார்க்கியன்.

(பி - ம்) 1 'கொடிஞ்சி' 'கொடுஞ்சினை' 2 'தெளிர்மணி' 3 'கானல் வந்து'

(ப - ரை.) கொண்கன் ஊர்ந்த - தலைவன் ஏறிச்சென்ற, கொடுஞ்சி நெடு தேர்-கொடுஞ்சியை யுடைய உயர்ந்த தேரானது, தெள் கடல் அடை கரை - தெள்ளிய நீரையுடைய கடலை அடைந்த கரைக்கண், தெளி மணி ஒலிப்ப - தெளிந்த ஓசையை யுடைய மணிகள் ஒலிக்கும்படி, காண வந்து நாண - நாம் காணும்படி வந்து பின்பு நாம் நாணும்படி, பெயரும் - மீண்டு செல்லா நிற்கும் ; காமம்—, அளிது - இரங்கத் தக்கது ; மன்ற விளிவது - நிச்சயமாக அழியக் கடவதாகும் ; யான் நோகு - இவை கருதி யான் வருந்துவேன்.

(முடிபு) கொண்கன் ஊர்ந்த தேர் வந்து பெயரும் ; காமம் அளிது ; அது விளிவது ; யான் நோகு.

(கருத்து) தலைவன் குறை பெறுமல் வருந்திச் சென்றான்.

(வி - ரை.) கொண்கன் - நெய்தனிலத் தலைவன் (குறுந். 230 : 1, 299 : 4); தமிழ் நெறிவிளக்கம், 8 - ஆம் சூத்திரம் பார்க்க.

கொடுஞ்சி - தாமரை மொட்டின் வடிவமாகச் செய்து தேர் முன் நடப்படுவது ; தேரூரும் தலைவர் இதனைக் கையாற் பற்றிக் கொள்வது வழக்கம் ; "மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றி"

(மணி. 4 : 48.) தம்பால் நயந்து வந்தோரது குறையைப் போக்குதல் அறநெறியாளர் கடனுதலின், அதனைச் செய்யாமையால் வறிதே தலைவன் மீண்டது நாணத்தைத் தருவதாயிற்று; "இன்னுதிரக்கப் படுத லிரந்தவர், இன்முகங் காணு மளவு" (குறள், 224); "இன்மை யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்றுக்கால், தன்மெய் துறப்பான் மலை" (கலி. 43 : 26-7) என்பவற்றை ஓர்க.

'நாம் காண வந்தானையினும் நீ கண்டு குறைநயந்தாயில்லை' என்பது குறிப்பு. காமம் - தலைவனது காமம். தலைவன் நிலைக்கு இரங்கி, 'யான் வருந்துவேன்' என்றுள், தலைவிக்கும் இரக்கம் உண்டாகிக் குறை நயத்தற் பொருட்டு.

ஓகாரங்கள், ஏகாரங்கள், தான் : அசைநிலைகள்.

கருப்பொருளால் இப்பாட்டு நெய்தற்குரியதாயிற்று; இங்ஙனமே நெய்தற்றிணைக்குரிய பலசெய்யுட்களைப் பாடிய காரணத்தால் இச்செய்யுளை இயற்றிய நல்லிசைப்புலவர், நெய்தற் கார்க்கியனென்னும் சிறப்புப் பெற்றார்போலும்.

(ஒப்பு.) 1. கொண்கன்:குறுந். 230 : 1,229 : 4. கொடுஞ்சி நெடுந்தேர் : குறுந். 345 : 1 ; பொருந. 163 ; பெரும்பாண. 416 : மதுரைக். 752.

1-3. தேர்மணியொலிப்பத் தலைவன் வருதல் : குறுந். 336 : 3-4.

4. அளிதோதானே : குறுந். 149 : 1, 395 - 7 ; புறநா. 109 : 2, 111 : 1.

5. நோகோ யானே : குறுந். 131 : 6, ஒப்பு. (உகஉ)

தோழி கூற்று

[தலைவனைப் பிரிந்த காலத்து, "நம்பாலுள்ள விருப்பத்தினால் தலைவர் தாம் சென்ற வினையை நிறைவேற்றுமல் வந்துவிடுவாரோ?" என்று ஐயுற்ற தலைவியை நோக்கி, "அவர் விலங்கினமும் தமது கட்டமையை ஆற்றும் காட்சி கண்டு தாமும் தம்கடனுற்றத் துணிவராதலின் மீளார்" என்று தோழி கூறியது.]

உகங. நசைநன் குடையர் தோழி ஞெரேரெனக்
கவைத்தலை முதுகலை காலி னெற்றிப்
பசிப்பிணிக் கிறைஞ்சிய பரூஉப்பெருந் தகரல்
ஒழியி னுண்டு வழுவி னெஞ்சிற்
5. றெறித்துநடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி
நின்றுவெயில் கழிக்கு மென்பநம்
இன்றுயின் முனிநர் சென்ற வாறே.

எ - து. 'நம்பெருமான், நம்பொருட்டு இடைநின்று மீள்வர்' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்தது.

கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன்.

(பி - ம்.) 1 'நெரேரென', 'நெரோவென' 2 'கவைத்தலை முதுபோத்து' 3 'இறைஞ்சிப்'; 'பெருந்தாதால்', 'பெருந்தாளால்' 4 'வழியினெஞ்சிற்', 'வழியனெஞ்சிற்' 5 'தெறித்து நகை' 6 'வெயிற்'

(ப - ரை.) தோழி—, நசை நன்கு உடையர் - தலைவர் நின்பால் விருப்பம் மிக உடையவர்; நம் இன் துயில் முனிநர் - நம்மோடு செய்யும் இனிய துயிலை வெறுத்துப் பிரிந்து சென்ற அவர், சென்ற ஆறு - போனவழியில், ஞெரேரென - விரைவாக, கவை தலை முது கலை - கிளைத்த கொம்பையுடைய தலையைப்பெற்ற முதிய ஆண் மான், காலின் ஒற்றி - காலால் உதைத்து, பசி பிணிக்கு இறைஞ்சிய - பசி நோயைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு வளைத்த, பரூஉ பெரு ததரல் - பருத்த பெரிய மரப்பட்டை, ஒழியின் உண்டு - தனது குட்டி உண்டபின் எஞ்சினால் தான் அதை உண்டு, வழு இல் நெஞ்சின் - குற்றமில்லாத நெஞ்சினையுடு, தெறித்து நடை மரபின் - துள்ளி நடத்தலாகிய இயல்பினையுடைய, தன் மறிக்கு நிழலாகி - தனது குட்டிக்கு நிழலாகி, நின்று வெயில் கழிக்கும் - நின்று வெயிலை நீக்கும், என்ப - என்று கூறுவர்.

(முடிபு) தோழி, நசை நன்குடையர், முனிநர், அவர் சென்ற ஆறு கலை வெயில் கழிக்கும் என்ப.

(கருத்து) தலைவர் தம் கடமையை உணர்ந்து, மீளாது, சென்று பொருள் தேடி வருவர்.

(வி -ரை.) ஞெரேரென - விரைவாக (பொருந. 141, ந.) கவை - கவைத்த கொம்பு: ஆகுபெயர். கவைத்தலை - கவை போன்ற கொம்புகளையுடைய தலையெனலும் ஆம்; "தொடுதோற் கானவன் கவைபொறுத் தன்ன, இருதிரி மருப்பி னண்ண லிரலை" (அகநா. 34 : 3-4.) ஒற்றுதல் - உதைத்து வீழ்த்துதல் (புறநா. 237 : 16, உரை.) இறைஞ்சிய - இறைஞ்சுவித்த; "ஓடித்துண் டெஞ்சிய" (குறுந். 232 : 4) என்பதில் உள்ள 'எஞ்சிய' என்பது போல. ததரல் - சிதைந்த பட்டை (கலி. 91 : 13, ந.) தெறித்தல் - துள்ளுதல் (அகநா. 4 : 4, உரை.)

தன் பசியைத் தீர்த்துக் கொள்ளுதலில் நாட்டமின்றித் தன் மறியின் பசியை முதலில் நீக்கியும், தன்மேற்படும் வெயில்வெம்மையைக் கருதாமல் மறிக்கு நிழலாகியும் கடம் பேணுதலின்

வழுவினெஞ்சுடையதாயிற்று; வழு - அறத்தினீங்கிய செயல்; தன் குட்டி பசித்திருப்பத் தான் உண்டலும் அது வெயிலால் வாடத் தான் ஓடுதலும் வழுவாகும். வெயில் கழிக்கும் - வெயிற் போதைக் கழிக்குமென்பதும் பொருந்தும்.

"தலைவர் நசை நன்குடையரேயாயினும், தன்னலத்தையும் பேணாது கடம் பேணிய கலையைக் காண்பார்; தாமும் தம் நசையையே கருதாது இல்லறம் புரியுங் கடமையை நினைந்து அதற்குரிய பொருள் தேடச் சென்று அது முற்றியே மீள்வர்" என்பது தோழியின் கருத்து.

தான் பாலைநில நிகழ்ச்சிகளை யறியாளாதலின் அறிந்தார் வாய்க் கேட்டுள்ளே னென்பாள் 'என்ப' என்றாள்.

(மேற்.) 2. கலையென்னும் ஆண்மைப் பெயர் புல்வாய்க்கு வந்தது (தொல். மரபு. 46, பேர்.) 5. மறியென்னும் இளமைப் பெயர் புல்வாய்க்கு வந்தது (தொல். மரபு. 12, பேர்.)

(ஒப்பு.) 1. தலைவனது நசை: குறுந். 37 : 1, ஒப்பு.

2. கலைத்தலை முதுகலை: "கலைமருப் பெழிற்கலை" (அகநா. 395 : 8.) ஒற்றி : அகநா. 2 : 14.

3. தகரல் : அகநா. 257 : 16. 7. இன்றுயில் முனிநர் : குறுந். 39 : 4. (உகக)

தோழி கூற்று

[தலைவியின் வேறுபாடு கண்டு தாய் முதலியோர் வெறியாட் டெடுத்த விடத்து, "இவளுக்குத் தழையுடையுதவி அன்பு செய் தான் ஒருவன் இருப்ப, அதனை யறியாது இது முருகனால் வந்த தெனமயங்கி வெறியெடுப்பதனாற் பயனில்லை" என்று தோழி கூறி உண்மையை வெளிப்படுத்தியது]

உகச. மரங்கொல் கானவன் புனந்துளர்ந்து
விதித்திய
பிறங்குகுர லிறடி காக்கும் புறந்தாழ்
அஞ்சி லோதி யசையியற் கொடிச்சி
திருந்திழை யல்குற்குப் பெருந்தழை யுதவிச்
5. செயலை முழுமுத லொழிய வயல
தரலை மாலை சூட்டி
ஏமுற் றன்றிவ் வழுங்க லூரே.

எ - து. தோழி வெறியாட்டு எடுத்துக்கொண்ட விடத்து அறத்தொடு நின்றது.

கூடலூர்கிழார்.

(பி - ம்.) 6 'சூடி

(ப - ரை) மரம் கொல் கானவன் - மரங்களை வெட்டிய குறவன், புனம் துளர்ந்து வித்திய - கொல்லையை உழுது விதைத்த, பிறங்கு குரல் இறடி - விளங்குகின்ற கதிரையுடைய தினையை, காக்கும் - காவல் செய்யும், புறம் தாழ் அம் சில் ஓதி - புறத்தின் கண்ணே தாழ்ந்த அழகிய சிலவாகிய கூந்தலையும், அசை இயல் - மெலிந்த சாயலையும் உடைய, கொடிச்சி - தலைவியினது, திருந்து இழை - செவ்விதாக அமைத்த ஆபரணத்தை யணிந்த, அல் குற்கு—, பெரு தழை உதவி - பெரிய தழையாகிய உடையை அளித்து, செயலை முழுமுதல் ஓழிய - அசோகினது பெருத்த அடி மரம் ஒழிந்து நிற்ப, அயலது - அதனோடு தொடர்பின்றி அயல தாய் நின்ற, அரலை மாலை சூட்டி - அலரி மாலையை முருகனுக்குச் சூட்டி வெறியெடுத்து, இ அழுங்கல் ஊர் - இந்த ஆரவாரத்தை யுடைய ஊரானது, ஏம உற்றன்று - மயக்க முற்றது.

(முடிபு) செயலை ஓழிய அரலை மாலை சூட்டி இவ்வூர் ஏமுற்றன்று.

(கருத்து) தலைவிக்குத் தழையுடை யளித்த அன்பனொருவன் உளன்.

(வி - ரை.) துளர்தல் - களைக்கொட்டால் கொத்துதலெனலும் ஆம் (மலைபடு. 122, ந.) பிறங்கு குரலிறடி காக்குமென்றுள், கதிர் தோன்றிய பின்னரே காவல் இன்றியமையாததாதலின். அசைதல் - இளைத்தல்; மெலிதல் (பெரும்பாண். 331, ந.); 'அசையியல் - நுடங்கிய இயல்பு' என்பர் பரிமேலழகர் (குறள், 1098, உரை.) அசையியல் - அசைந்து நடக்கும் இயல்பெனலுமாம்; "அசை நடைப்பேதை" (குறுந். 182: 6) என்பதன் உரையையும் ஒப்புமைப் பகுதியையும் பார்க்க.

இழையென்றது இங்கே மேகலையை. பெருந்தழையென்றுன் அதனை யணியும் உறுப்புப் பெரிதாதல் பற்றி; "அகலல்குலேரள் கண்ணென மூவழிப் பெருகி" (கலி. 108: 2.)

தலைவன் அசோகந்தழையைத் தந்தான்.

அயலது - அயன்மையையுடையது; இது சூட்டுவதனைப் பயனில்லை யென்ற குறிப்பை யுணர்த்தியது; அருகிலுள்ளதெனப் பொருள்கொண்டு அரலைமலர் கொய்வார் அதனருகே நின்ற செயலையின் நிலை கண்டு அது தழையின்றி நிற்பதன் காரணத்தை ஆய்ந்திலரென்னுங் குறிப்புரைத்தலும் பொருந்தும்.

வெறியாடுவார் அரலைமாலையை முருகக்கடவுளுக்குச் சூட்டுதல் வழக்கம் (முருகு. 236); அரலை யென்பது இப்போது அரளி யென வழங்கும்.

ஏமுறுதல் - மயக்குறுதல்; "ஏமுற் றவரினும்" (குறள், 873, பரிமேல்.); ஏமம் ஏமென நின்றது.

ஊரென்றது தாய் முதலியோரை.

இதனால், 'தலைவனொருவன் தலைவி திணைப்புனங்காக்கும் காலத்தில் ஆண்டுப் போந்து அசோகந் தழையுதவி அவளோடு அளவளாவிச் சென்றான்' என்பதைத் தோழி உணர்த்தினாள்.

(ஒப்பு.) 1. கானவன் மரத்தை வெட்டியவிடத்து விதையை வித்துதல்: குறுந். 198: 1-2, ஒப்பு. 2. இறடி: மலைபடு. 169; பெரும். 1. 49: 104.

3. அஞ்சிலோதி: குறுந். 211: 1, ஒப்பு. மு. ஐங், 299: 3, பி-ம்.

2-3. புறந்தாழ் ஓதி: "புறந்தாழ் பிரிவரிய பிறங்குகுர லைம்பால்" (அகநா. 126: 20.)

4. அல்குற்குத் தழை: குறுந். 125: 3, ஒப்பு.

5. முழுமுதல்: குறுந். 255: 2, 361: 4.

4-5. தலைவன் அசோகந்தழை உதவல்: "கையது செயலையந் தழையே" (தமிழ் நெறி. மேற்.) 6. அரலை: நற். 121: 4. (உகசை)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்தில் வருந்திய தலைவியை நோக்கி, "உன்னுடைய துன்பம் நீங்கும்; தலைவர் இன்று வந்து விடுவார்" என்று தோழி உறுதி கூறியது.]

உகடு படரும் பைபயப் பெயருஞ் சுடரும்
என்றூழ் மாமலை மறையு மின்றவர்
வருவர்கொல் வாழி தோழி நீரில்
வறுங்கயந் துழைஇய விலங்குமருப் பியானை
5. குறும்பொறை மருங்கி னமர்துணை தழீஇக்
கொடுவரி யிரும்புலி காக்கும்
நெடுவரை மருங்கிற் சுரனிறந் தோரே.

எ - து. பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

[வற்புறுத்தியது - உறுதி கூறியது.]

மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார் (பி - ம். மதுரை யளக்கர் ஞாழார் மள்ளர், மதுரை அளக்கர் ஞாழலார் மகனர் மள்ளனர்.)

(பி-ம்) 1 'பயப்பயப்', 'பைப்பைய', 'பையப்பயப்' 6 'கொடுவரை'

(ப-ரை) தோழி—, படரும் பைபய பெயரும் - துன்பமும் மெல்ல மெல்ல நீங்கும்; சுடரும் என்றூழ் - ஒளி விடுகின்ற சூரியன், மா மலை மறையும் - பெரிய அத்தகிரியின்கண் மறையா நின்றது; ஆதலின், நீர் இல் வறு கயம் துழைஇய - நீரில்லாத வறிய குளத்தைத் துழாவிய, இலங்கு மருப்பு யானை - விளங்கிய கொம்புகளையுடைய ஆண் யானைகள், குறு பொறை மருங்கின் - குறிய குண்டுக் கற்களுக்கு அருகில், அமர் துணை தழீஇ - தாம் விரும்புகின்ற பிடிகளைத் தழுவி, கொடு வரி இருபுலி - வளைந்த கோடுகளையுடைய பெரியபுலி தாக்குதலினின்றும், காக்கும் - பாதுகாக்கின்ற, நெடுவரை மருங்கின் - உயர்ந்த மலைப்பக்கத்திலுள்ள, சுரன் இறந்தோர் - பாலை நிலத்தைக் கடந்து சென்றோராகிய, அவர் - அத்தலைவர், இன்று வருவர்—; வாழி - நீ வாழ்வாயாக!

(முடிபு) தோழி, படரும் பெயரும்; என்றூழ் மறையும்; சுரனிறந்தோராகிய அவர் இன்று வருவர்; வாழி!

(கருத்து) தலைவர் இன்று வருவர்

(வி-ரை.) படர் - தலைவனை நினைந்து வருந்தும் துயர். வருவர் கொல்: கொல் அசைநிலை. இலங்கு மருப்பியானை யென்றுள், புலியொடு பொரும் கருவியுடையனவென்பதைப் புலப்படுத்த. குறும்பொறை மருங்கில் மறைந்து ஆண்யானை பெண்யானைகளைத் தழுவி நின்றன. குறிஞ்சி திரிந்த பாலையாதலின் நெடுவரை மருங்கிற் சுரனென்றுள்.

(ஒப்பு.) 1. பையய: நற். 41: 3, 199: 10, 378: 3; ஐங். 83: 1, 113: 5. 5. குறும்பொறை: குறுந். 134: 3, 333: 4.

அமர்துணை தழீஇ: குறுந். 237: 1.

4-6. யானை பிடியைப் புலியினின்றும் காத்தல்: மலைபடு. 307-9.

யானை பிடியைக் காத்தல்: அகநா. 168: 9-10, 189: 4-6.

7. சுரனிறந்தோர்: குறுந். 211: 7, 260: 8, 314: 6. (உகடு)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச்சென்ற கார்ப்பருவம் வந்ததாகத் தலைவி ஆற்றுளெனக் கவலையுற்ற தோழியை நோக்கி, "அவர் பொருள் தேடச் சென்றார். நான் அவரை நினைந்து வருந்துகின்றேன். கார்ப்பருவமும் வந்துவிட்டது; இனி என் உயிர் நில்லாது போலும்!" என்று தலைவி கூறியது.]

உகசு. அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
5. அன்ன ளளிய ளென்னது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்
[தே.

எ - து. பருவவரவின்கண் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றன்.

(பி - ம்.) 1 'அவரேளள' 4 'படர்சார்ந்' 6 'பெய்யுமுழங்கு'

(ப - ரை) தோழி—, அவர் - அத்தலைவர், கேடு இல் விழு பொருள் - கேடில்லாத உயர்ந்த செல்வத்தை, தருமார் - கொணரும் பொருட்டு, பசு இலை வாடா வள்ளி காடு இறந்தோர் - பச்சையிலைகளையுடைய வாடாத வள்ளிக்கொடி படர்ந்த காட்டைக் கடந்து சென்றார்; யான்—, தோடு ஆர் எல் வளை நெகிழ - தொகுதியார்ந்த விளக்கத்தையுடைய வளைகள் நெகிழும்படி, ஏங்கி - கவலையுற்று, பாடு அமை சேக்கையில் - படுத்தல் அமைந்த படுக்கையின்கண் வீழ்ந்து, படர் கூர்ந்திசின் - துன்பம் மிக்கேன்; மா மழை - கரிய மேகம், அன்னள் - அத்தகைய துன்பத்தையுடையாள், அளியள் - இரங்கத் தக்காள், என்னது - என்று எண்ணுமல், இன்னும் பெய்ய முழங்கி - இன்னும் மழையைப் பெய்யும் பொருட்டு முழக்கம் செய்து, என் இன்னுயிர் குறித்து - எனது இனிய உயிரைக் கொள்ளுதலைக் குறித்து, மின்னும் - மின்னுகின்றது.

(முடிபு) தோழி, அவர் காடிறந்தோர்; யான் படர் கூர்ந்திசின்; மழை என் உயிர் குறித்து மின்னும்.

(கருத்து) கார்காலம் வந்தது கண்டு யான் துன்புறுவேனையினேன்.

(வி - ரை) அவர்: நெஞ்சறி சுட்டு. கேடில் விழுப் பொருள் - தன்னையுடையார் கெடுதலன்றித் தானே கெடுதலறியாத சீரிய பொருள்; "வீத லறியா விழுப்பொருள்" (கலி. 86 : 21) என்ற விடத்து நச்சினார்க்கினியர் இங்ஙனம் பொருள் எழுதினர். "கேடில்

விழுச் செல்வங் கல்வி" (குறள், 400) என்று கூறுவதே தக்கதாத லின் கேடுடைய செல்வத்தை இங்ஙனம் கூறியது குறிப்பு மொழி யெனலும் பொருந்தும்; இ. கொ. 8, உரை பார்க்க.

வள்ளியங்காடு : அம், சாரியை. படர் - நினைந்து வருந்தும் துன்பம். அன்னள் - மிக்க வருத்தத்தை யுடையவள். உயிர் குறித்து - உயிரைக் கொள்ளுதல் குறித்து (குறுந். 188 : 4, 197 : 5.)

(மேற்.) 2. சொல்லின் ஈற்றிலும் அசைநிலை யேகாரம் வந்தது (தொல். இடை. 9, ந.) ; ஈற்றசை செய்யுளிடையும் வந்தது (இ. வி. 278.)

1-2. அளவடிக்கண் ஆசிரியப்பாவிற் சீர் கூஞ்ய் வந்தது (தொல். செய். 47, இளம், 49, பேர், ந.) ; நான்கு இயற்சீரும் வந்தன (தொல். செய். 13, பேர், ந.); வருக்க வெதுகை வந்தது (தொல். செய். 94,பேர்.); செய்யுளி டைக்கண் வரும ஈற்றசை ஏகாரம் இரண்டு மாத்திரை பெற்றுப் பாவென் னும் உறுப்பை விளக்கி நின்றது (தொல்.இடை, 38, ந.); வினையிடத்து ரகர ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாயிற்று (இ. வி. 326.)

மு. ஆசிரியத்துள் அடிமுதற்கண் கூன் வந்தது (வீர. யாப்புப். 13 ; யா. வி. 94 ; யா. கா. ஒழிபு. 8 ; இ. வி. 751.)

(ஒப்பு.) 2. வள்ளியங்காடு : முல்லைப். 101. வாடா வள்ளி - கூத்து ; தொல். புறத். 5 ; பெரும்பாண். 370.

1-2. பொருள்தரும் பொருட்டுத் தலைவர் சென்றார் : குறுந். 254 : 6, 331 : 8, 350 : 8, 395 : 2. 3. வினை நெகிழ்தல் : குறுந். 11 : 1, ஒப்பு.

4. பாடமை சேக்கை : "படையமை சேக்கை" (அகநா. 289 : 12)

(உகசு)

தோழி கூற்று

["'பகற்குறியும் இரவுக்குறியும் இப்பொழுது பொருந்தா ; என் செய்வேம்!' என்றதற்குத் தலைவன் உடன்போக்கை யெண்ணி வெய்துயிர்த்தான் ; அது நன்றேயென நான் கூறினேன்" எனத் தோழி தலைமகளுக்குக் கூறி உடன்போக்கை நயக்கச் செய்தது.]

உகஎ. தினைகிளி கடிகெனிற் பகலு மொல்லும்
இரவுநீ வருதலி னூறு மஞ்சுவல்
யாங்குச்செய் வாமெம் மிடும்பை நோய்க்கென
ஆங்கியான் கூறிய வினைத்திற்குப் பிறிதுசெத்
5. தோங்குமலை நாட னுயிர்த்தோன் மன்ற
ஐதே காமம் யானே
கழிமுதுக் குறைமையும் பழியுமென் றிசினே.

எ - து. உடன்போக்கு நயப்பத் தோழி தலைமகட்குக் கூறியது.

தங்கால் முடக்கொல்லனார் (பி - ம். முடிக்கோலவனர், முடக் கோவலனர்.)

(பி - ம்) 1 'தினைக்கிளிகடிதெனிற்' 2 'வருதலு' 4 'வினைத் தற்கு' 6 'ஐதேய்கம்ம', 'ஐதேகம்ம', 'ஐதெமக்கம்ம', 'வைதேள யகமயானே"

(ப - ரை.) தினை கிளி கடிகெனின் - தினையின்கண் படியும் கிளிகளை ஓட்டுவீர்களாகவென்று கூறி எம்தாய் எம்மைப் போதர விடின், பகல் ஒல்லும் - பகற்காலம் நின்னோடு அளவளாவுதற்குப் பொருந்தும், அங்ஙனம் இன்மையின், இரவு நீ வருதலின் - இராக் காலத்து நீ வருதலினால், ஊறு அஞ்சுவல் - வழியின்கண் நேரும் துன்பங்களுக்கு அஞ்சுவேன், எம் இடும்பை நோய்க்கு - துன்பத் தைத் தரும் எமது காமநோயை நீக்குதற்கு, யாங்கு செய்வாம் - எவ்வாறு பரிகாரம் செய்வேம், என ஆங்கு யான் கூறிய அனைத் திற்கு - என்று அவ்வாறு யான் சொன்ன அதற்கு, ஓங்கு மலை நாடன் - உயர்ந்த மலைநாட்டையுடைய தலைவன், பிறிது செத்து - வேறு ஒன்றை நினைத்து, உயிர்த்தான் - அந்நினைவினால் வெய் துயிர்த்தான்; காமம் ஐது - காமநோய் நுண்ணியது; யான் - அவனது குறிப்பை உணர்ந்த யான், கழி மூதுக்குறைமையும் - நீ நினைத்தவாறு செய்தல் மிக்க அறிவுடைமையும், பழியும் - பழிக்குக் காரணமும் ஆம், என்றிசின் - என்றேன்.

(முடிபு) என யான் கூறிய அனைத்திற்கு நாடன் உயிர்த்தோன்; காமம் ஐது; யான் மூதுக்குறைமையும் பழியும் என்றிசின்.

(கருத்து) தலைவன் நின்னை உடனழைத்துச் செல்ல விரும்பு கின்றான்.

(வி - ரை) உம்மை இரண்டும் அசைநிலைகள். எம்நோயென் றூள் காமநோயால் தலைவி துயருறவும் அதுகண்டு தான் துயருற வும் காரணமாதலின். அனைத்திற்கு - அவ்வளவிற்கெனலும் ஆம் (குறள், 1129, உரை.) ஐது - மெல்லிதெனலும் ஆம்; "மலரினு மெல்லிது காமம்" (குறள், 1289.)

"'இப்பொழுது தினைகாவலை ஒழிந்தேமாதலின் பகற்குறி வாயாது; இரவுக் குறியோ ஆற்றாதஞ்சும் நிலையினது; ஆதலின் அதனையும் விரும்பேம். இங்நிலையில் யாது செய்வேம்!' எனக் கவன்றேன். அதற்குரிய பரிகாரமொன்றை நினைந்த தலைவன் அதனை வாய்விட்டுக் கூற அஞ்சிப் பெருமூச்சு விட்டான். காமம் எவ்வளவு நுண்ணியது! யான் அவன் குறிப்பை உணர்ந்தேன். அவன் நினைந்ததே தக்க விரகாகத் தோற்றியது. 'நீ நினைந்தது

அறிவுடைமையே யாகும்; ஆயினும் ஊரினர் பழி கூறுதற்கு இடமாம்' என்றேன்" என்று தோழி கூறினள். இதனால் தலைவன் உடன்போக்கு நயக்கின்ற னென்பதையும், அதனையன்றி வேறு பரிகாரம் இல்லையென்பதையும், அங்ஙனம் செய்தலே அறிவுடைமைக்கு ஏற்றதென்பதையும், பழிக்கு அஞ்சி அறிவுடைய செயலை விலக்குதல் தகாதென்பதையும் புலப்படுத்திக் தலைவியை உடம்படச்செய்தாள்.

(மேற்.) 6. ஐயென்னும் உரிச்சொல் வியப்பென்னும் குறிப்பில் வந்தது (தொல். உரி. 88, இளம், 89, சே, 87, ந.)

(ஒப்பு.) 3. யாங்குச் செய்வாம் : குறுந். 268 : 3, 380 : 5 ; நற். 51 : 1, 259 : 1 ; அகநா. 252 : 9. 6. ஐதே காமம் : குறுந். 401 : 6 ; நற். 143 : 1.

(பி - ம்.) ஐதேகம்ம : நற். 52 : 11, 240 : 1. (உசவ)

தலைவி கூற்று

[பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழியை நோக்கி, "தலைவர் நம் உயிர்க்கு உயிர்போன்றவர்; அவரைப் பிரிந்து கணப்போதும் பொருந்தும் வன்மையிலேம்; இத்தகைய நம்மை அவர் மறந்து ஆண்டேயிருப்பராயின் அவர் பொருட்டுக் கடவுளைப் பராவுதலும் நிமித்தம் பார்த்தலும் என்ன பயனைத் தரும்?" என்று தலைவி கூறியது]

உகஅ விடர்முகை யடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணுங் கைந்நூல் யாவாம்
புள்ளு மோராம் விரிச்சியு நில்லாம்
உள்ளலு முள்ளா மன்றே தோழி
5. உயிர்க்குயி ரன்ன ராகலிற் றம்மின்
றிமைப்புவரை யமையா நம்வயின்
மறந்தாண் டமைதல் வல்லியோர் மாட்டே.

எ - து. பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கொற்றன் (பி-ம். கொறன.)

(பி-ம்) 2 'பூணை' 'கைநூல் யாவாமற்' 3 'மோராமல்" 7 'வலியோர்'

(ப - ரை) தோழி—, உயிர்க்கு உயிர் அன்னர் ஆகலின் - நம் உயிருக்கு உயிரைப் போன்றவராதலின், தம் இன்று - தம்மை

யின்றி, இமைப்புவரை - இமைப்பொழுதளவேனும், அமையா - பிரிந்திருத்தலைப் பொருந்தாத, நம்வயின் - நம்மை, மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டு - மறந்துவிட்டுத் தாம் சென்ற அவ் விடத்தே தங்குதலில் வல்ல தலைவர்திறத்தில், விடர் முகை அடுக் கத்து - பிளப்பையும் குகைகளையுமுடைய மலைப்பக்கத்திலுள்ள, விறல்கெழு சூலிக்கு - வெற்றி பொருந்திய துர்க்கைக்கு, கடனும் பூணும் - பலிக்கடன் கழித்தலைச் செய்யோம்; கை நூல் யாவாம் - கையிற் காப்புநூலைக் கட்டோம்; புள்ளும் ஓராம் - நிமித்தத் தையும் பாரோம்; விரிச்சியும் நில்லாம் - நற்சொல்லைக் கேட்டற் குச் சென்று நில்லோம்; உள்ளலும் உள்ளாம் - நினைத்தலையும் செய்யோம்.

(முடிபு) தோழி, ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டு, கடனும் பூணும்; யாவாம்; ஓராம்; நில்லாம்; உள்ளாம்.

(கருத்து) நம் அன்புநிலை தெரிந்து விரைந்துவருதல் தலைவர் கடனும்.

(வி - ரை.) விறல் - மிடுக்குமாம். சூலத்தையுடைமையின் கொற்றவையைச் சூலியென்றாள். கடன் - பராய்க்கடன். பிரிந்த தலைவர் மீண்டு வந்து சேர்ந்து, பின் பிரியாது உறைய வேண்டு மென்று கொற்றவையை வழிபடுதலை இங்கே தலைவி குறித்தாள். முருகக் கடவுளையும் இங்ஙனம் வழிபடும் மரபு, "கெழீஇக் கேளிர் சுற்ற நின்னை, எழீஇப் பாடும் பாட்டமர்ந் தோயே" (பரி. 14: 23-4) என்பதனாலும், 'பிரிந்த கேளிர் வந்து புணர்ந்து பின் நீங்காமைப் பொருட்டு மகளிர் யாழை யெழுவி நின்னைப் பாடு கின்ற பாட்டை விரும்பினையே' (பரிமேல்) என்னும் அதன் உரை யாலும் அறியப்படுகின்றது.

தலைவர் மேற்கொண்ட வினை நன்கு முடிய வேண்டுமென்று கடம்பூணுதலும் உண்டு;

"செய்பொருள் வாய்க்கெனச் செவிசார்த்து வோரும்
ஐயம ர்டுகென வருச்சிப் போரும்" (பரி. 8: 107-8.)

தலைவரைப் பிரிந்த மகளிர் அவர் மேற்கொண்ட வினை நன்கு முடிந்து விரைவில் வந்து சேரவேண்டுமென்று கருதி நோன் பிருத்தல் வழக்கம். அந்நோன்பு நோற்குங்காற் கையிற் காப்பு நாணினிவர்;

"பொலந்தொடி தின்ற மயிர்வார் முன்கை
வலம்புரி வளைபொடு கடிகைநூல் யாத்து" (நெடுநல். 141-2.)

புள் ஓர்த்தல் - நிமித்தம் பார்த்தல் (மலைபடு. 448, ந.); தலைவர்

வருதற்குரிய நன்னிமித்தங்களைப் பார்த்தல். விரிச்சி - நற்சொல்; தலைவர் வரவைக் குறிப்பால் தெரிவிக்கும் நற்சொல். பிரிந்த தலைவரது வருகையை விரிச்சிபார்த்து நின்றறியும் மரபை,

"நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுய ரலமர நோக்கி யாய்மகள்
நடுங்குசுவ லசைத்த கையள கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
இன்னே வருகுவர் தாய ரென்போள்
நன்னர் நன்மொழி கேட்டன மதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட கிறைபர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீகின்
பருவர லெவ்வங் களைமா யோயென" (9-21)

என்னும் முல்லைப் பாட்டுப் பகுதியால் அறியலாகும்.

'ஒருகணப் போழுதேனும் அவரைப் பிரிந்து அமையேமாகிய நம்மைப் பிரிந்து, தாம் சென்ற இடத்தே நம்மை மறந்து இருக்கும் மனவலியையுடையர் தலைவர். அவர் நம் உயிருக்கு உயிர் போன்றவராதலின், நம் நிலையை உணர்ந்து விரைவில் வரும் கடப் பாடுடையர். அங்ஙனம் அவர் செய்யாராயின் நாம் கடவுளை வழி பட்டுப் பயன் என்?' என்று தலைவி கூறினாள்.

அன்று, ஏ: அசைநிலைகள். நம்வயின்: உருபு மயக்கம்.

(ஒப்பு.) 1. விடர் முகை: குறுந். 239: 2, 343: 4; நற். 156: 9, 158: 5, 261: 8, 322: 4, 332: 5; ஐங். 395: 2.

விடர்முகை யடுக்கம்: அகநா. 47: 6; புறநா. 374: 12.

2. கடன் பூணல்: "நிலையுயர் கடவுட்குக் கடம்பூண்டு" (கலி. 46: 16.)

கைந்நூல் யாத்தல்: "செந்நூல் யாத்து" (முருகு. 231); "காப்பு நூல் யாத்து" (தொல். புறத். 5, ந. மேற்.)

3. விரிச்சி நிற்றல்: "திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப" (நற். 40: 4); "நென்னீ பெறிந்து விரிச்சி யோர்க்கும்" (புறநா. 280: 6.)

4. உள்ளலும் உள்ளாம்: குறுந். 37: 1, ஒப்பு.

5-6. தலைவரையின்றித் தலைவி யமையாமை: "தம்மின் றமையா நங்நயந் தருளி" (நற். 1: 7); "தமமின்றி, யாமுயிர் வாழு மதுகை யிலேமாயின்" (கலி. 24: 13-4.); "தம்மல தில்லா நம்மிவ ணெழிய". (அகநா. 313: 8.)

7. வல்லியோர்: குறுந். 266: 4. (உகஅ)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தில் இருப்பத் தலைவி தோழிக்குக் கூறுவாளாய்த் தன் துயரின்மிகுதி கூறி, "தலைவர் நம் துயர் நீக்க இது செவ்வி" என்று உணர்த்தியது.]

உகக. பயப்பென் மேனி யதுவே நயப்பவர்
நாரி னெஞ்சத் தாரிடை யதுவே
செறிவுஞ் சேணிகந் தன்றே யறிவே
ஆங்கட் செல்க மெழுகென வீங்கே
5. வல்லா கூறி யிருக்கு முள்ளிலைத்
தடவுநிலைத் தாழைச் சேர்ப்பர்க்
கிடமற் றேழியெந் நீரிரோ வெனினே.

எ - து. சிறைப்புறம்.

வெள்ளூர் கிழார்மகனார் வெண்பூதியார் (பி-ம். வெள்ளூர் கிழார் வங்கனார் வெண்பூதியார்.)

(பி-ம்.) 1 'பசப்பென்' 2 'நாஅர் நெஞ்சத்' 5 'மள்ளிலைத்' 6 'சேர்ப்பற்' 7 'நீரோ'

(ப - ரை.) தோழி—, பயப்பு என் மேனியது - பசலையானது எனது மேனியின்கண்ணது; நயப்பு அவர் நார் இல் நெஞ்சத்து அரு இடையது - காதல் அவரது அன்பற்ற நெஞ்சமாகிய செல்லுதற்கரிய இடத்தின்கண்ணது; செறிவும் - எனது அடக்கமும், சேண் இகந்தன்று - நெடுந்தூரத்தில் நீங்கியது; அறிவு - எனது அறிவு, ஆங்கண் செல்கம் எழுகென - தலைவர் உள்ள இடத்திற்கே செல்வேம் அதன்பொருட்டு எழுவாயாக வென்று, வல்லா கூறி ஈங்கு இருக்கும் - நம்மால் மாட்டாதவற்றைக் கூறி இங்கே தங்கியிருக்கும்; எ நீரிரோ எனின் - எந்தத்தன்மையிலுள்ளீரோ வென்று பரிவு கூர்ந்து வினவிக் குறைதீர்ப்பராயின், முள் இலை - முள்ளமைந்த இலையையுடைய, தடவு நிலை தாழை சேர்ப்பர்க்கு - பருத்த அடியையுடைய தாழையையுடைய கடற்கரைத் தலைவருக்கு, இடம் - இது தக்க செவ்வியாகும்.

(முடிபு) தோழி, பயப்பு என் மேனியது; நயப்பு ஆரிடையது; செறிவும் இகந்தன்று; அறிவு இருக்கும்; எந்நீரிரோ எனின், சேர்ப்பர்க்கு இடம்.

(கருத்து) தலைவர் வரைவதற்கு ஏற்ற சமயம் இது.

(வி - ரை.) பகற்குறிக்கண் நிகழும் இடையீட்டால் வருந்திய தலைவி தலைவன் வரைந்து கோடலிலிருந்தும்பிக் கூறியது இது. இதன்கண் தன் நிலையைப் புலப்படுத்தி, இது நீங்குதற் குரிய செவ்வி இது வென்று தலைவன் உணரும்படி கூறினள், அவன் அதனை உணர்ந்து விரைவில் வரைந்து கொள்வானென்பது கருதி.

நயப்பு - விருப்பம்; இங்கே தலைவன் மாட்டுள்ள அன்பு; நயப்பு, தலைவன் நெஞ்சளவிலே நிற்றலல்லது எம் மாட்டுத் தொடர்ந்திலதெனலும் ஒன்று. செறிவு - அடக்கம்; அறிவு - நன்மையப்பனவும் தீமையப்பனவும் அறிவிப்பது; இவ் விரண்டும் பெண்பாலார்க்குரிய சிறப்பியல்புகளைச் சார்ந்தன;

"செறிவு நிறைவுஞ் செம்மையுஞ் செப்பும்
அறிவு மருமையும் பெண்பா லான" (தொல். பொருள். 15.)

தலைவன் உள்ளவிடத்தே செல்லவேமெனத் தலைவி கூறுதல் மரபு;

"காமக் கிழவ னுள்வழிப் படினும்
தாயி னன்மொழி கிழவி கிளப்பினும்" (தொல். களவு. 22)

என்பதன் உரையைப் பார்க்க.

இடம் - செவ்வி; "இடனறிந் தூடி" (நாலடி. 384.) மன் ஆக்கப்பொருளில் வந்தது. எந்நிரோ வெனின் - எந் நிலையிலுள் ளீரோ வென்று வினவப்புகின்; என்றது அங்ஙனம் வினவிக் குறைதீர்க்க எண்ணின் என்றவாறு.

(ஒப்பு.) 1. பயப்பும் நயப்பும்: அகநா. 344: 12 - 3; குறள், 1181, 1189 - 90.

5. வல்லா கூறல்: தொல். செய். 113.

6. தடவுநிலை: குறுந். 66: 1. (உகக)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற கார்காலம் வரவும் அவன் வாராமை யால், "தாம் வரவேண்டிய இக்காலத்தும் வந்திலர்; இனி என் செய்வேன்!" என்று தோழிக்குத் தலைவி கூறியது.]

உ೭೦. பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கிற் பூத்த முல்லை
வெருகுசிரித் தன்ன பசுவீ மென்பிணிக்

5. குறுமுகை யவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும் வாரார்
கண்டிசிற் றோழி பொருட்பிரிந் தோரே.

எ - து. பருவவரவின்கட் கிழத்தி தோழிக்கு உரைத்தது. ஒக்கூர் மாசாத்தி.

(பி - ம்.) 'பழமழை கலித்த' 3 'அருவிசேர்'. 4 'பருவீ'

(ப - ரை.) தோழி—, பொருள் பிரிந்தோர் - பொருள் ஈட்டி வரும்பொருட்டு நம்மை இங்குவைத்துப் பிரிந்த தலைவர், பழ மழை கலித்த - பழைய மழையினால் தழைத்த, புது புனம் வரகின் - புனத்திலுள்ள புதிய வரகினது, இரலை மேய்ந்த குறை தலை பாவை இருவி - ஆண்மான் மேய்ந்தமையால் குறைதலை யுடைய நுனியையுடைய கதிர் அரிந்த தாள், சேர் மருங்கின் - சேர்ந்த பக்கத்தில், பூத்த முல்லை - மலர்ந்த முல்லைக்கொடியினது, வெருகு சிரித்தன்ன - காட்டுப் பூனை சிரித்தாற் போன்ற தோற்றத்தையுடைய, பசு வீ மெல் பிணி குறு முகை - செவ்விப் பூவின் மெல்லிய பொதிதலையுடைய சிறிய அரும்புகள், அவிழ்ந்த - மலர்ந்த, நறு மலர் புறவின் - நறிய மலர்களையுடைய முல்லை நிலத்தில், வண்டு சூழ் மாலையும் வாரார் - வண்டுகள் அம்மலரை ஊதும்பொருட்டுச் சுற்றுகின்ற மாலைக் காலத்திலும் வாரா ராயினர்; கண்டிசின் - இதனைக் கருதுவாயாக.

(முடிபு) தோழி, பிரிந்தோர் மாலையும் வாரார்; கண்டிசின்.

(கருத்து) தலைவர் தாம் கூறிச்சென்ற பருவம் வரவும் வந்திலர்.

(வி - ரை.) பழமழையென்றது வரகு விதைத்த காலத்திற் பெய்த மழையை. புதுமை கதிரின்மேற்று. பாவை - மானுல் உண்ணப்படும் இலையையுடைய வரகின்தாள்; இங்ஙனமே அறுகின் தண்டையும் கூறுதல் மரபென்று தெரிகிறது;

"பதவின் பாவை முனை இ மதவுநடை
அண்ண லிரலை யமர்பிணை தழீஇ",

"பழங்கன்று கறிக்கும் பயம்பம லறுகைத்
தழங்குகுரல் வானின் றலைப்பெயற் கீன்ற
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவை"

(அகநா. 23 : 7 - 8, 136 : 11 - 3.)

இருவி - கதிர்கொய்த தட்டை (திருச்சிற். 144, பேர்.)

(ஒப்பு.) 1. பழகீர் : குறுந். 251 : 5 ; மழையாற் கலித்த வரகு : "வரகிணர் சிறப்ப, மாமலை புலம்பக் கார்கலித் தலைப்ப" (ஐங். 496 : 1 - 2.)

1-2. வரகை இரலை மேய்தல் : "வானம் வாய்த்த வயங்குகதிர் வரகிற், றிரிமருப் பிரலையொடு மடமா னுகள" (முல்லைப். 98 - 9) ; "ஈரிலை வரகின், கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை, அரலை யங்காட் டிரலையொடு வதி யும்" (நற். 121 : 2 - 4.)

4. பசுவீ : குறுந். 62 : 1, 183 : 1.

4 - 5. பிணியவிழ்ந்த பூ : குறுந். 366 : 4 - 5.

3 - 5. முல்லையரும்பிற்கு வெருகின்பல் : (குறுந். 240 : 3) ; "பிள்ளை வெரு கின் முள்ளெயிறு புரையப், பாசிலை முல்லை முகைக்கும்" (புறநா. 117 : 8 - 9) ; "வெருகு வேட்பச் சிரிப்பனபோன் முகைத்த முல்லை" (சீவக. 1651.)

முல்லை கார்காலத்தில் மலர்தல் : குறுந். 124 : 3 - 5, ஒப்பு.

7. கண்டிசின் : குறுந். 240 : 5, 356 : 1.

கண்டிசிற் றேழி : குறுந். 112 : 5. (220)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச்சென்ற பருவம் வந்ததுகண்டு கவன்ற தலை வியை, "நீ ஆற்றியிருத்தல் வேண்டும்" என வற்புறுத்திய தோழியை நோக்கி, "முல்லை மலர்ந்தது ; கார்காலம் வந்துவிட் டது ; அவர் வந்திலர்; யான் எங்ஙனம் ஆற்றியிருப்பேன் ?" என்று தலைவி கூறியது.]

220. அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னிச்
5. சூடிய வெல்லாஞ் சிறுபசு முகையே.

எ - து. பிரிவிடைப் பருவவரவின்கண் வற்புறுத்துந் தோழிக் குக் கிழத்தி உரைத்தது.

உறையூர் முதுகொற்றன் (பி - ம். முது கூற்றன்.)

(பி - ம்.) 4 - 5. 'சென்னி சூடிய'

(ப - ரை.) தோழி, முல்லையும் பூத்தன - முல்லைகளும் மலர்ந் தன ; பறியுடை கையர் - பறியோலையை யுடைய கையினை யுடை யார், மறி இனத்து ஒழிய - குட்டிகளையுடைய ஆட்டின் திர ளோடு சென்று தங்க, பாலொடு வந்து கூழொடு பெயரும் - பாலைக் கொணர்ந்துவந்து பாற்சோற்றைப் பெற்று மீண்டு செல்

கின்ற, ஆடுடை இடை மகன் - ஆடுகளை யுடைய இடையன், சென்னி சூடிய எல்லாம் - தன் தலையில் அணிந்து கொண்டன யாவும், சிறு பசுமுகையே - சிறிய செவ்வியையுடைய அம் முல்லை யின் அரும்புகளே யாகும் ; அவர் வாரார் - அத்தலைவர் இன்னும் வாராராயினர்.

(முடிபு) முல்லையும் பூத்தன ; இடைமகன் சூடியவெல்லாம் முகையே ; அவர் வாரார்.

(கருத்து) கார்ப்பருவம் வரவும் தலைவர் வந்திலர்.

(வி - ரை.) அவரோ : ஓகாரம் அசைநிலை ; இரங்கற்குறிப்பு மாம். முல்லையும் : உம்மை, சிறப்பு. முல்லை பூத்தல் கார்காலத் திற்கு அடையாளம். பறி - இடையர்கள் மழைக்காகத் தலையிற் கவிழ்த்துக் கொள்ளும் ஒரு வகைக் கருவி ; இது பனையோலையால் செய்யப்படுவது ; இதிற் படுத்தலும் உண்டு.

மாலைக்காலத்தில் ஆட்டை மேய்ப்பவர்கள் மேய்ச்சல் நிலத் திற்றங்க இடையன் பாலை வீட்டிற்குக் கொணர்ந்துகொடுத்து அவர்களுக்குப் பாற்சோற்றை கொண்டு சென்றான். பாலை விற்கும்பொருட்டு வந்த இடையன் ஊரில் அதனை விற்றுவிட்டு அதற்கு விலையாக உணவுக்குரிய தானியத்தைப் பெற்றுச் சென்றனனலுமொன்று. இடையர் பாலைவிற்றல் வழக்கம் ; "பாலனைடை யிடையன்" (நற். 142 : 4.) அவன் செல்லும் வழியிற் பூத்த மூல்லைப்பூக்களைப் பறித்துத் தன் தலையிற் சூடினான்.

முகையே : ஏகாரம் பிரிநிலை.

(மேற்.) மு. இருத்தலென்னும் உரிப்பொருள் வந்தது ; 'இது பருவங் கண்டு ஆற்றுது கூறியது. இது முல்லை சான்ற கற்பாயிற்று ; அவன் கூறிய பருவம் வருந்துணையும் ஆற்றியிருத்தலின்' (தொல். அகத். 14, ந.)

(ஒப்பு.) 1. அவரோ வாரார். ஐங். 341 - 50.

முல்லை கார்காலத்தில் மலர்தல் : குறுந். 126 : 3-5, ஒப்பு.

2. பறி : "பறிப்புறத் திட்ட...இடையன்" (நற். 142 : 4); "மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற விடையன்" (அகநா. 94 : 4); "பறி யோலை மேலொடு கீழா விடையர், பிறியோலை பேர்த்து விளியாக் கதிப்ப" (கிணைமாலை. 113); "பறியோலைச் சயனத்தர்" (திவ். பெரியாழ்வார், 1. 1 : 5.) 3. கூற் : பெரும்பாண். 175.

4. ஆடுடை இடைமகன் : நற். 266 : 3 ; "அ, 2 அறியாவறிவிலிடை மகனே" (யா. கா. மேற்.)

4-5. இடையன் முல்லைப்பூ அணிதல் : குறுந். 358 : 7.

5. பசுமுகை - போது ; குறுங். 323 : 5. (உஉ)

தலைவன் கூற்று

[தலைவியும் தோழியும் நீராடி ஒருங்கிருந்தவிடத்து அத் தோழியின்பால் தலைவிக்குளதாய ஒற்றுமையை யறிந்து, "இவளே தலைவியை நாம் பெறுதற்குரிய வாயில்; இனி இவள்வாயிலாக நாம் இரந்து குறைபெறுதும்" என்று தலைவன் நினைந்தது.]

உஉஉ. தலைப்புணைக் கொளினே தலைப்புணைக்
கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக்
கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரி நுறழுங் கொழுங்கடை
மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னேளே.

எ - து. பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுத்தல்.

சிறைக்குடி யாந்தையார்.

(பி - ம்.) 1 'புணைகொளினே' 2 'புணைகொளினே' 3 'புனல் கைவிட்டுப்'

(ப - ரை.) மாண்ட - மாட்சிமைப்பட்ட, மாரி பித்திகத்து - மழைக்காலத்தில் மலரும் பிச்சியினது, நீர் வார் கொழு முகை - நீர் ஒழுகும் வளவிய அரும்பினது, செ வெரிந் உறழும் - சிவந்த புறத்தை யொத்த, கொழு கடை மழை கண் - கொழுவிய கடையையும் குளிர்ச்சியையும் உடைய கண்களையும், துளி தலை தலைஇய - மழைத்துளி தன்னிடத்தே பெய்யப்பெற்ற, தளிர் அன்னேள் - தளிரைப் போன்ற மென்மையையும் உடைய தலைவி, தலை புணை கொளின் தலைபுணை கொள்ளும் - தெப்பத்தின் தலைப்பை இத்தோழி கைக்கொண்டால் தானும் அதன் தலைப்பைக் கைக்கொள்வாள்; கடைபுணை கொளின் கடை புணை கொள்ளும் - இவள் தெப்பத்தின் கடைப்பகுதியைப் பிடித்துக் கொள்ளின் தலைவியும் அதன் கடைப்பகுதியைக் கொள்வாள்; புணை கை விட்டு - தெப்பத்தைக் கைசோரவிட்டு, புனலோடு ஒழுகின் -

நீரோடு இவள் சென்றால், ஆண்டும் வருகுவள் போலும் - அங்கும் தலைவி வருவாள் போலும்.

(முடிபு) தளிரன்னாள் தலைப்புணைக் கொளின் தலைப்புணைக் கொள்ளும்; கடைப்புணைக் கொளின் கடைப்புணைக் கொள்ளும்; ஓழுகின் வருகுவள்போலும்.

(கருத்து) இத்தோழி தலைவியோடு மனமொத்த நிலையினள்.

(வி - ரை.) தலைவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறியது இது. நீராடியபோது கண்டவனுதலின் அக்காலத்து நிகழ்ச்சியையே கூறினன். தலைப்புணை, கடைப்புணை : புணைத்தலை, புணைக்கடை என்பவை மாறிநின்றன. புணையென்றது, வாழைமரத்துண்டு, மிதக்கும் தன்மையையுடைய மரத்துண்டுகள் போன்றவற்றை;

"நறுவீ நாகமும் மகிலு மாரமும்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகி" (சிறுபாண். 116 - 7);

வேழக்கோலாற் செய்த தெப்பமெனலும் ஆம்.

தோழி வலியின்மையிற் கைசோர்ந்து புனலோடு செல்லின் தலைவி தன்பால் வலியுளதாகவும் தோழி வழியொழுகுவாளென் பதனால் அவ்விருவருக்கும் உள்ள ஒற்றுமை விளக்கப்பட்டது;

"ஒன்றித் தோன்றுந் தோழி" (அகத்திணை. 39)

என்பது தொல்காப்பியம்.

மாரிக்காலத்து அரும்பியதாதலின் நீர் வார்ந்தது. பித்திகம் - பிச்சிமலர். அது மாரிக்காலத்தில் மலர்வது.

இயல்பாகவே சிவந்த கண்ணின் கடை நீராடியதாற் பின்னும் சிவப்பு மிக்கது. தலைவியினது கண்ணின் குறிப்பினால் உயிர்த் தோழியை அறிந்தவனுதலால் அக்கண்ணைச் சிறப்பித்தான் (திருச்சிற் 18)

கொழுமுகையினது வெளிந் செம்மையும் தண்மையும் ஒருங்கே பெற்றதுபோலக் கண்ணின் கடையும் பெற்றது.

தளிர் மென்மைக்கும் தண்மைக்கும் உவமை; மேனியின் நிறத் திற்கும் பொருந்தும்; நீராடிய அண்மையிற் கண்டவனுதலின் மழைத்துளி பொழியப்பெற்ற தளிரை உவமை கூறினன்.

தளிரன்னாளென்பதைத் தோழிக்கு ஆக்குவதும் ஒன்று.

போலுமென்றது துணியப்படாததன்கட் செல்லும் சொல் லாக நின்றது.

(மேற்.) மு. தோழி உடம்பட்டு விலக்கியது (இறை. 10); பெட்ட வாயில் பெற்று இரவு வலியுறுப்பினு மென்பதற்கு இரட்டுறமொழித லென்பதனால், தலைமகள் தான் விரும்பப்பட்ட தோழியாகி எமக்கு வாயில் நேர்வாளிவளெனப் பெற்று, பின் இரந்து குறையுற நினைத்தலுண்டு;

அங்ஙனம் நினைந்தது (தொல். களவு. 11, இளம்.); தோழியிற் கூட்டம் (தொல். செய். 187, பேர்.); 'தலைவன் தோழியை இரந்து பின்னிற்பலென வலித்தது; இது தலைவி அவட்கு இனையளென்று கருதி அவளை வாயி லாகத் துணிந்தது. அன்றி, தோழி கூற்றெனின் தலைவியை அருமை கூறினன்றி இக்குறை முடிப்பலென ஏற்றுக் கொள்ளாள், தனக்கு ஏதமா மென்றஞ்சி; அன்றியும், தானே குறையுறுகின்றாற்கு இது கூறிப்பயந்ததூ மின்று' (தொல். களவு. 11, ந.)

(ஒப்பு.) 1. தலைப்புணை: அகநா. 166: 12, 266: 3.

3. புனலோ டொழுகல்: "காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள், தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனே டொழுகலால்" (கலி. 39: 1 - 2.)

5. மாரிப் பித்திகம்: குறுந். 94: 1, ஒப்பு. மு. குறுந். 168: 1.

6. மழைக்கண்: குறுந். 259: 4, 329: 7.

5-6. பித்திகத்தின் அரும்பு சிவந்திருத்தல்: குறுந். 94: 1 - 2, ஒப்பு.

கண்ணின் கடைக்குப் பித்திகம்: "மாரிப் பித்திகத் தீரிதழ் புரையும், அங்கலுழ் கொண்ட செங்கடை மழைக்கண்" (அகநா. 295: 19 - 20.)

7. துளிதலைத் தலைஇய: அகநா. 8: 15, 132: 9.

தலைவிமேனிக்குத் தளிர்: குறுந். 62: 4 - 5, ஒப்பு.

5-7. தலைவியின் கடைக்கண்ணுக்குப் பிச்சியரும்பும் மேனிக்குத் தளிரும்: "மலிபெயற் கலித்த மாரிப் பித்திகத்துக், கொயலரு நிலைய பெயலேர் மணமுகைச், செவ்வெரி நுறைமுங் கொழுங்கடை மழைக்கட், டளிரேர் மேனி மாஅ யோயே" (அகநா. 42: 1 - 4.)

மு. தோழிக்கும் தலைவிக்கும் உள்ள ஒற்றுமை: நற். 128: 3-4; திருச்சிற். 81; இறை. மேற். "ஓங்கும் பெரும்புகழ்" (உஉஉ)

தலைவி கூற்று

[தலைவன் வரைபொருட்குப் பிரிந்த காலத்தில் வற்புறுத்திய தோழிக்கு, "முன் ஒருகால் நின்சொற் கேட்டுத் தலைவனைக் கண்டு என் நலனிழந்தேன். நலனிழந்த புலம்பொடு இப்பொழுதும் கவல்வே னுயினேன்" என்று தலைவி கூறியது.]

உஉந. பேரூர் கொண்ட வார்கலி விழவிற்
செல்வாஞ் செல்வா மென்றி யன்றிவண்
நல்லோர் நல்ல பலவாற் றில்ல
தழலுந் தட்டையு முறியுந் தந்திவை
5. ஒத்தன நினக்கெனப் பொய்த்தன கூறி
அன்னை ஓம்பிய வாய்நலம்
என்னை கொண்டான்யா மின்னமா லினியே.

எ - து. வரைவிடை வேறுபட்ட கிழத்தியது வேறுபாடு கண்டு வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மதுரைக் கடையத்தார் மகன் வெண்ணாகன்.

(பி - ம்.) 2 'யென்றிவண்', 'யென்றிவள்' 3 'நல்லோநல்ல', 'றில்லே', 6 'அன்னையன்றும்பிய' 7 'என்னைக்', 'மின்ன பாலினியே'

(ப - ரை.) தோழி, பெரு ஊர் கொண்ட ஆர் கலி விழவின் - மூன்றெருநாள் பெரிய ஊரினர் மேற்கொண்ட மிக்க ஆர வாரத்தையுடைய விழாவிற்கு, செல்வாம் செல்வாம் என்றி - போவோம் போவோமென்று கூறினாய்; அன்று இவண் நல்லோர் நல்ல பல - அன்று நாம் புறப்படுகையில் இங்கு நல்லோராற் கூறப்பட்ட நல்ல வாய்ச்சொற்களாகிய நிமித்தங்கள் பலவாக இருந்தன; தழலும் தட்டையும் - கிளிகடி கருவிகளாகிய தழலையும் தட்டையையும், முறியும் - தழையையும், தந்து - எனக்குக் கொடுத்து, இவை நினக்கு ஒத்தனஎன - இப்பொருள்கள் உனக்கு ஏற்புடையன என்று சொல்லி, பொய்த்தன கூறி - பின்பு புனைந் துரைகளைக் கூறி, அன்னை ஓம்பிய ஆய்நலம் - நம்முடைய தாய் பாதுகாத்த அழகிய எம் பெண்மை நலத்தை, என்னை கொண் டான் - என்னுடைய தலைவன் கொள்ளை கொண்டான்; யாம் இனி இன்னம் - யாம் இப்பொழுது அந்நலனிழந்த இத்தகையே மாயினேம்.

(முடிபு) செல்வாம் செல்வாம் என்றி; நல்ல பல; நலம் என்னை கொண்டான்; யாம் இனி இன்னம்.

(கருத்து) தலைவனுல் நலனிழந்தமை நினைந்து வேறு பட்டேன்.

(வி - ரை.) தலைவியும் தோழியும் விழவின்கட் சென்று தலை வனை எதிர்ப்பட்டு அளவளாவிய பழைய நிகழ்ச்சியைத் தலைவி நினைவுறுத்தினுள். விழாக் காலத்து வீரர்கள் குழுமுதலும் மகளிர் துணங்கையாடுதலும் வழக்கு; குறுந். 31.

செல்வாம் செல்வாமென்றது பன்முறை வற்புறுத்தியதைப் புலப்படுத்தியது. அன்று - புறப்பட்ட நாளில். நல்லவென்றது நல்ல நிமித்தமாகிய வாய்ச் சொல்லை; இதனைப் புள்ளென்றும் விரிச்சி யென்றும் கூறுவர்; "நல்ல நல்லோர் வாய்ப்புள்" (முல்லைப். 18.) தில், காலங்குறித்தது; பலவாகியும் யான் நலனிழந் தேனென்பது பயந்து ஒழியிசைப் பொருள்பட நின்றதெனலும் ஆம்.

தழல் - கையாற் சுற்றின காலத்துத் தன்னிடத்துப் பிறக்கும்

ஓசையாற் கிளி முதலியவற்றை ஓட்டுங் கருவி ; கவணென்பாரும் உளர் (குறிஞ்சிப். 43, ந.) தட்டை - கிளிகடிகருவியுள் ஒருவகை - குறுந். 193, வி - ரை.

முறி - தழை ; என்றது தழையாலாகிய உடையை ; தளிரென லுமாம் ; விளா, புன்கு முதலியவற்றின் தளிர்களே மகளிர் அப்பிக் கொள்ளுதல் வழக்காதலின் அவற்றை யளித்தான் ;

" வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியா " (முருகு. 37);

" பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி " (நற். 9 : 5-6);

" எழிற்றகை யிளமுலை பொலியப்
பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே " (ஐங். 341 : 2-3.)

பொய்த்தன கூறலென்றது தலைவன் பொய் பாராட்டியதை.

புறத்தே செல்லற்கவென்று தகைந்தும், பெருங்காவல் புரிந்தும் தாயர் பாதுகாத்தமையின் அன்னை யோம்பிய வாய்நலமென்றுள். ஆய் நலம் - பலராற் சிறப்பித்துக் கூறப்பட்டு ஆராய்ச்சிக்குட்படும் அழகெனலும் ஆம் ; " பலராய் மாண்கவின் " (அகநா. 98 : 12.)

இன்னமென்றுள் நலமிழந்த நிலையைச் சுட்டி.

" தலைவன் நின்னை வரைந்து கொள்ளுதற்பொருட்டன்றே பொருட்குப் பிரிந்தான் ; நீ கவலுதல் நன்றன்றே " என்று தோழி வற்புறுத்த, " நின் சொல்லைக் கேட்டு முன்னர் என் நலனிழந்தேன் ; மீண்டும் நீ வற்புறுத்துகின்றாய் !" என்று தலைவி கூறினள்.

'நல்லோம் நல்ல' என்ற பாடத்திற்குப் பின்வருமாறு பொருள் கொள்க :—

வரைவிடை வேறுபட்ட கிழத்தியை நோக்கி, " நின் வேறுபாடு புறத்தே தோற்றாது மறைத்து விழாக் காண வருதி " என்று கூறிய தோழிக்கு, " விழாக்காணச் செல்வோம், செல்வோமென்கின்றாய். முன்பு யாம் நலனிழவாமல் நல்லோமா யிருந்தோம் ; எம்பால் நல்லியல்புகள் பல இருந்தன ; இப்பொழுதோ எம் நலத்தைத் தலைவன் கொண்டான் ; அதனால் அழகிழந்து புறத்தே தோற்றும் வேறுபாடுடையே னாயினேன் ; அதனை எங்ஙனம் மறைப்பேன் !" என்று தலைவி கூறினள்.

(ஒப்பு.) 1. பேர் கொண்ட விழவு : (குறுந். 41 : 2); " ஊர் கொண்ட சீர்கெழு விழவினும் " (முருகு. 220); " அகன்றலைப் பேரூர்ச், சாறு " (பொருந. 1-2.)

ஆர்கலி விழவு : மதுரைக். 428 ; கலி. 5 : 10 ; அகநா. 4 : 14.

4. தட்டை : குறுந். 193 : 3, ஒப்பு ; நற். 147 : 8 ; ஐங். 285 : 2 ; அகநா. 32 : 6, 388 : 2.

தழலுந் தட்டையும் : "தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும் " (குறிஞ்சிப். 43); "தட்டை குளிர் தழலைத் தாங்கி " (கந்த. வள்ளி. 52.)

தழல் தட்டை முறி : "தழலை வாங்கியுந் தட்டை யோச்சியும், அழலேர் செயலை யந்தழை யசைஇயும் " (அகநா. 188 : 11 - 2.)

6. அன்னை ஓம்பிய நலம் : "அன்னை காக்குந் தொன்னலம் " (நற். 23 : 4); "யாய்நபந் தெடுத்த வாய்நலம் " (ஐங். 384 : 3); "தாயோம் பாய்நலம்", "ஓம்பிய, நலம்புனை யுதவியோ வுடையேன் மன்னே " (அகநா. 146 : 13, 195 : 9-10.)

7. தலைவனைத் தலைவி என்னையென்றல் : குறுந். 24 : 2, ஒப்பு.

இன்னம் : அகநா. 128 : 6 ; புறநா. 141 : 9.

6-7. என்னை நலங்கொண்டான் : ஐங். 24 : 3-5.

5-7. தலைவனுல் நலனிழத்தல் : நற். 36 : 4-5 ; அகநா. 146 : 9-13 ; பெருங். 3. 6 : 133. (உஉக)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்து, "இவள் இறந்து படுவாளோ !" என்று கவலையுற்ற தோழிக்கு முன்னிலைப் புறமொழியாக, "தலை வரைப் பிரிந்த துயரினும் இவள் வருந்துதலைக் காணுந்துயர் பெரிதாயிற்று " என்று தலைவி கூறியது.]

உஉச. கவலை யாத்த வவல நீளிடைச்
சென்றோர் கொடுமை யெற்றித் துஞ்சா
நோயினு நோயா கின்றே கூவற்
குராலன் படுதுய ரிராவிற் கண்ட
5. உயர்திணை யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே.

எ - து. பிரிவிடை இறந்துபடுமெனக் கவன்ற தோழி கேட்பக் கீழத்தி (பி - ம். கிழவி) உரைத்தது.

கூவன் மைந்தன்.

(பி - ம்.) 4 'ரிரவிற்'

(ப - ரை.) கூவல் குரால் ஆன் படு துயர் - கிணற்றின் கண்ணே வீழ்ந்த குராற்பசு படுந் துன்பத்தை, இராவில் கண்ட -

இராக்காலத்திற்கண்ட, உயர்திணை ஊமன் போல - ஊமையாக இருப்பவன் அத்துயரத்தை வெளியிட முடியாமல் துன்புற்றது போல, தோழி நோய்க்கு - என் பொருட்டுத் தோழி படும் வருத்தத்தினுல், துயர் பொறுக்கல்லேன் - துயரைப் பொறுக்கும் ஆற்றல் இல்லேனுயினேன்; அத்துயரம், கவலே யாத்த - கவர்த்த வழிகளில் யாமரங்களே யுடைய, அவலம் நீள் இடை - துன்பத்தை யுடைய நீண்ட வழிகளில், சென்றோர் கொடுமை எற்றி - எம்மைப் பிரிந்து சென்ற தலைவரது கொடுமையை நினைந்து, துஞ்சா நோயினும் - துயிலாமலிருக்கும் துன்பத்தைக் காட்டிலும், நோய் ஆகின்று - மிக்க துன்பமாகின்றது.

(முடிபு) தோழிநோய்க்குத் துயர் பொறுக்கல்லேன்; துஞ்சா நோயினும் நோயாகின்று.

(கருத்து) தோழி வருந்துதல் பயனற்றது.

(வி - ரை.) இது முன்னிலைப் புறமொழியாகத் தோழிக்கு அறிவுறுத்தியது.

கவர்த்த வழிகளும் ஆங்கு நேரும் அவலங்களும் நீண்ட வழிகளும் துன்பத்தை மிகுவிப்பன. எற்றல் - நினைதல் (குறுந். 145: 2; தொல். உரி 39.) துஞ்சா நோய் - யான் துஞ்சாமைக்குக் காரணமாகிய நோய்.

குராலான் - குரால் நிறமுள்ள பசு; "ஏந்திமிற் குராலும்" (கலி. 105: 14) என்பதன் உரையைப் பார்க்க; இந்நிறத்தைக் கபில நிறமென்பர்.

ஊமன் என்பது அஃறிணையாகிய கோட்டானுக்கும் வருதலின் அதனை விலக்க, 'உயர்திணை யூமன்' என்றுள்; இது வெளிப்படையென்னும் இலக்கணத்தின் பாற்படும்

பசு இராக்காலத்தில் கிணற்றில் விழுந்துவிட்டதைக் கண்ட ஊமன் அதனை வினங்கப் பிறருக்குச் சொல்லும் வன்மை இல்லாமையால் மிக வருந்துவதைப்போல யானும் இத்துயரைப் பிறருக்குச் சொல்லும் வலியின்றி வருந்தினேனென்றுள். துயர் பொறுக்கல்லேனென்றது, அதனைப் பொறாது வாய்விட்டு இங்ஙனம் புலப்படுத்தத் துணிந்ததன் காரணம் கூறியவாறு.

"என் துயரத்தை நான் ஆற்றுவேனே! தோழியின் துயரத்தை ஆற்றுவேனே! ஏதும் செய்ய அறிகிலேன்!" என்பதனுல் தோழியின் வருத்தம் பயனற்ற தென்றுணர்த்தினுள். 'எனக்கு இத்துயர் வாராதவாறு காப்பதையேனும், யான் இத்துயர் படாவாறு ஆற்றுவதையேனும் செய்யாது பின்னும் இதனை மிகுவித்தாள்' என்னும் கருத்தினுல் இது கூறினுள்.

துயர் கூறவியலா நிலையிலுள்ள தலைவிக்குக் குராற்பசு கூவலில் விழுக்கண்ட ஊமனை உவமை கூறிய இச்சிறப்பினுல் கூவலென்ற அடை இதனை யியற்றிய ஆசிரியர் பெயருக்கு அமைந்தது போலும்.

(மேற்.) 3-6. உயர்திணைப்பால், உவமத்தில் மயங்கி வந்தது (தொல். உவம. 6, பேர்.)

(ஒப்பு.) 1. கவலை : குறுந். 233: 1, 263 : 2 ; புறநா. 219 : 1. பாலையில் யாமரம் இருத்தல் : குறுந். 232 : 5.

2. பிரிந்து சென்ற தலைவனது கொடுமையை எற்றித் துஞ்சாமை : குறுந். 145 : 2-4.

தலைவனது கொடுமை : குறுந். 9 : 7, ஒப்பு, 145 : 2, ஒப்பு.

தலைவி துஞ்சாமை : குறுந். 6 : 4, ஒப்பு.

5-6. துயர்பொருத தலைவிக்கு ஊமன் :

" கோமுறு நோய்நிலை நுவல கிற்றிலள்
ஊமரின் மனத்திடை யுன்னி விம்முவாள் " (கம்ப. மிதிலைக். 42.)
(உ.உ.சு)

தோழி கூற்று

[வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியும் தலைவனை நோக்கி, " இதுகாறும் நின்விருப்பப்படியே ஒழுகி வந்த யாம் செய்த நன்றியை மறவாது, எம் விருப்பத்திற்கு இணங்க விரைவில் வரைந்து கொள்வாயாக " என்று தோழி கூறியது.]

உ உ கு. கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கன் னுட
கெட்டிடத் துவந்த வுதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
5. நன்றிமறந் தமையா யாயின் மென்சிர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவா நினக்கே.

எ - து. வரைவிடைவைத்துப் பிரிவாற்குத் (பி -ம். பிரிவார்க்குத்) தோழி சொல்லியது.

கபிலர்.

(பி - ம்.) 2 ' றினைபிடி ' ; ' பெருங்கணணுட ' 3 ' துலந்த ' 5 ' மறந்தனையாயின் ', ' மறந்தமையாயின் ' 7 ' னினக்கே '

(ப - ரை.) கன்று தன் பயம் முலை மாந்த - யானைக் கன்று தனது பாலுள்ள முலைகுடித்து நிற்ப, முன்றில் தினை - வீட்டின் முன்னிடத்துள்ள தினைப் பயிரை, பிடி உண்ணும் - பெண் யானை உண்ணுதற்கு இடமாகிய, பெரு கல் நாட - பெரிய மலைகளையுடைய நாடனே, கெட்ட இடத்து உவந்த உதவி - தான் வறுமையுற்ற காலத்துப் பிறராற் பெற்று மகிழ்ந்த உதவியை, கட்டில் வீறு பெற்று - அரசுகட்டிலாகிய சிறப்பைப் பெற்று, மறந்த மன்னன் போல - மறந்து விட்ட அரசனைப்போல, நன்றி மறந்து - நீ யாம் செய்த நன்றியை மறந்து, அமையாய் ஆயின் - பொருந்தாயாகி அதனை நினைந்து வரைந்து கொள்வாயாயின், இவள் - இத்தலைவியினுடைய, மெல் சீர் கலி மயில் கலாவத்து அன்ன - மெல்லிய சிறப்பையுடைய ஆரவாரிக்கும் மயிலினது பீலியைப் போன்ற, ஒலி மெல் கூந்தல் - தழைத்த மெல்லிய கூந்தற் பகுதிகள், நினக்கே உரிய ஆம் - நினக்கே உரிமையுடையன வாகும்.

(முடிபு) நாட, நன்றி மறந்து அமையாயாயின், இவள் கூந்தல் நினக்கே உரியவாம்.

(கருத்து) நீ யாம் புரிந்த நன்றியை மறவாது விரைவில் வரைந்து கொள்ளவேண்டும்.

(வி - ரை.) கெட்ட இடம் கெட்டிடமாயிற்று ; தொகுத்தல் விகாரம். கட்டில் வீறு - அரசுகட்டிலாற் பெற்ற சிறப்பெனலுமாம் ; கட்டில் - சிங்காதனம். நன்றி மறந்து அமையாயாயினென்றது, நன்றி மறவாது அமைவாயாயினென்னும் பொருள் தந்தது.

தான் நல்ல நிலைக்கு வருந்துணையும் பிறர் உதவியை உவந்து பின் அதனை மறந்ததுபோல, நீ நின்விருப்பத்தை நிறைவேற்றும் வரையில் எம்மாற் செய்யப்பெற்ற உதவிகளையேற்று இப்போது எம்மை மறவாதொழிக என்றுள்.

கன்று தன் முலைமாந்திக் கொண்டேயிருப்பத் தன் பசியை நீக்குதற்கும் அக்கன்றுக்குரிய பாலைப் பெறுதற்கும் தினையைப் பிடி உண்டதுபோல, நீயும் யாங்கள் நின்வரவை எதிர்நோக்கி மகிழ்ந்திருக்குங்கால் நின் கடப்பாட்டையும் இவளை வரைவதையும் ஒருங்கே செய்வித்தற்குக் கருவியாகிய பொருளை ஈட்டி வருதற்குரியை யென்பது குறிப்பு.

தலைவியின் கூந்தலில் தலைவன் துயின்று இன்புறுதலின் அதனை அவனுக்கு உரிமைப்படுத்தினள். கூந்தல் உரியவா

மெனப் பன்மை வாசகம் படக்கூறினுள், குழல் முதலிய ஐந்தையும் நீனைந்து (அகநா. 7: 2, உரை.)

(மேற்.) மு. கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப்படும் பொருட்டாதலேயன்றி அக்கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளும் உள ; 'இதனுள், தான் கெட்டவிடத்து உதவின உதவியை அரசவுரிமை யெய்திய மன்னன் மறந்தாற்போல நீ இரந்து துயருற்ற காலத்து யான் தலைவியை நின்னோடு கூட்டிய செய்ந்நன்றியை மறவாது இன்று நீ வரைந்து கொள்வாயாயின் இவள் கூந்தல் நினைக்குரிய வென்ற வழி, உவமையும் பொருளும் ஒத்து முடிந்தமையின், முன் நின்ற நாட வென்பது உள்ளுறை யுவமமன்றுப் இறைச்சியாம் ; என்னை ? தன் கன்றிற்குப் பயன்பட்டுப் பிறர்க்கு உயிரைக் கொடுக்கின்ற தினையைத் தான் உண்டு அழிவு செய்கின்றுற்போல, நீ நின் கருமம் சிதையாமற் பார்த்து எமக்கு உயிராகிய இவளைத் துயருறுத்தி எம்மை இறந்து படுவித்தலாகாதென்று உவமை யெய்திற்றேனும், பின்னர் நின்ற பொருளோடு இயையாது இவ்வுவமம் உள்ளுறையுற்றுப் பொருள் பயவாது இறைச்சியாகிய நாடனென்பதனுள்ளே வேறோர் பொருள் தோற்றுவித்து நின்றதேயாதலின். மூலமாந்த வென்றது, தன் கருமஞ் சிதையாமற் பார்த்தென்னும் துணையன்றி உள்ளுறையுவமப் பொருளை முற்ற உணர்த்தாமை யுணர்க' (தொல். பொருள். 36, ந.) ; கருப்பொருள் பிறிதோர் பொருட்கு உபகாரப் படுதலேயன்றி அக்கருப்பொருள் தன்னுள்ளே தோன்றும் பொருளுமுள ; அஃது உள்ளுறை யுவமமன்று ; இறைச்சி யென்று கொள்க (மாறன். பொருளணி. 91.)

(ஒப்பு) 3. கட்டில் : குறுந். 359 : 3 ; மலைபடு. 550 ; பதிற். 79 : 14. நன்றி மறத்தல் : கலி. 34 : 4 - 5, 10.

6. கலிமயிற் கலாவம் : அகநா. 152 : 14.

7. ஒலிமென் கூந்தல் : குறிஞ்சிப். 2 ; நற். 6 : 10, 141 : 12, 197 : 6. 260 : 8, 295 : 2, 313 : 4 ; கலி. 64 : 6 ; புறநா. 109 : 16, 306 : 3,

6-7. கூந்தலுக்கு மயிற்கலாவம் : "அணிகிளர் கலாவ மைது விரித் தியலும், மணிபுரை யெருத்தின் மஞ்ஞை போலநின், வீபெய் கூந்தல் வீசுவளி யுளர", "கலிமயிற் கலாவத் தன்னவிவள், ஒலிமென் கூந்தல்" (நற். 264 : 3 - 5, 265 : 8 - 9) ; "விசும்பிழி தோகைச் சீர்போன் றிசினே, பசும்பொ னவிரிழை பைய நிழற்றக், கரைசேர் மருதமேறிப், பண்ணை பாய்வோ டண்ணறுங் கதுப்பே" (ஐங். 74) ; "கலிமயிற் கலாவங் கால்குவித் தன்ன, ஒலிமென் கூந்தல்" (புறநா. 146 : 8 - 9.)

தலைவியின் கூந்தல் தலைவனுக்கே உரியது : "ஒருஉ நீ யெங்கூந்தல் கொள்ளல்", "யாரிவ னெங்கூந்தல் கொள்வான்" (கலி. 87 : 1, 89 : 1) ; "கூந்தற் கிழவரை" (புறநா. 113 : 9) ; "கூந்த லருடேல்" (சீவக. 1229.)

(22-ஆ)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடைவைத்துப் பிரிந்தகாலத்தில் தலைவிஆற்ரு ளெனக் கவன்ற தோழியை நோக்கி, "தலைவன் என்னை மணந்த பின் என் நலனீழந்தேன்" என்று தலைவி வருந்திக் கூறியது.]

உஉசு. பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉ நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
5. தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனெடு நகாஅ வூங்கே.

எ - து. வரைவிடை ஆற்ருளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மதுரை எழுத்தாளன் சேந்தம்பூதன்.

(ப - ரை.) தோழி—, அல்கலும் - இரவுதோறும், தயங்கு திரை பொருத - விளங்கிய அலைகளால் மோதப்பட்ட, தாழை வெண் பூ - தாழையினது வெள்ளிய பூ, குருகு என மலரும் - நாரையைப் போல மலர்தலைச் செய்வதற்கு இடமாகிய, பெரு துறை விரிநீர் சேர்ப்பனெடு - பெரிய துறைகளையுடைய அகன்ற நீர்ப்பரப்பையுடைய சேர்ப்பனெடு, நகா ஊங்கு - நகுவதற்கு முன்பு, பூவொடு புரையும் கண்ணும் - தாமரை மலரையொத்த கண்களும், வேய் என விறல் வனப்பு எய்திய தோளும்-மூங்கிலைப் போல வெற்றியையுடைய அழகைப் பெற்ற தோள்களும், பிறை என மதி மயக்குறூஉம் நுதலும் - பிறையென்று கருதும்படி அறிவை மயங்கச் செய்யும் நெற்றியும், நன்றும் நல்ல - மிகவும் நல்லனவாக இருந்தன; மன் - அந்நிலை இப்பொழுது கழிந்தது!

(முடிபு) தோழி, சேர்ப்பனெடு நகாஅ வூங்கு, கண்ணும். தோளும் நுதலும் நல்லமன்!

(கருத்து) தலைவனது பிரிவினல் என் மேனி நலம் அழிந்தது.

(வி - ரை.) பூவொடு: உருபு மயக்கம். விறல் வனப்பு - பிறர் தோள் வனப்போடு ஒப்பு நோக்குங்கால் தான் யாவற்றினும் விஞ்சி வெற்றிபெறும் வனப்பு.

"ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினுள்
நண்ணுரு முட்குமென் பீடு" (குறள், 1088)

என்பதனுல் நுதல் மதியை மயக்குதல் பெறப்படும். தன் உறுப்புக் களைப் புகழ்ந்தது தற்புகழ்ச்சியாகாது, கழிந்ததற்கு இரங்கின மையின். தலைவன் மயங்கியபடியை அவன் தனது நலம் பாராட்டிய வழிக் கூறக் கேட்டுணர்ந்தவளாதலின் நுதல் மதி மயக்குமென்று கூறினுள்.

வாழி: அசைநிலை. தாழை வெண்பூ வென்றுள் செந் தாழையை விலக்குதற்கு.

நகுதல் - அளவளாவுதல்; இஃது இடக்கரடக்கிக் கூறியது. ஏகாரம் ஈற்றசை.

(ஒப்பு) 1. கண்ணிற்குப் பூ: குறுந். 72: 1-5, ஒப்பு, 101: 4, ஒப்பு.

2. விறல் வனப்பு: "விறனலன்" (கலி. 3: 5, 124: 15.)

1-2. தோளுக்கு வேய்: குறுந். 268: 6, ஒப்பு.

3. மதிமயக்குறூஉம் நுதல்: "மதிமருட்டுஞ் சிறுநுதல்" (யா. கா. 4.)

2-3. நுதலுக்குப் பிறை: குறுந். 129: 3-5; நற். 250: 7, 263: 1; பெரும். 1. 36: 265, 4. 11: 68, 5. 6: 11; சீவக. 165.

4. நல்லமன்: குறுந். 357: 4. வாழி தோழி: குறுந். 260: 4.

1-4. கண், தோள், நுதல் பழைய அழகு கெடுதல்: "தோளே தொடி கொட் பானு கண்ணே, வாளீர் வாடியின் வடிவிழந் தனவே, நுதலும் பசலைபா யின்று" (நற். 133: 1-3.)

5. தாழை நிரையால் அலைக்கப்படுதல்: குறுந். 163: 4.

5-6. தாழைப் பூவிற்குக் குருகு: குறுந். 228: 1-2; "நெய்தற் குருகு தன் பிள்ளையென் றெண்ணி நெருங்கிச்சென்று, கைதை மடற்புல்கு தென்கழிப் பாலை யதினுறைவாய்" (தே. திருநா.); "அருகு கைதை மலரக் கெண்டை, குருகென் றஞ்சுங் கூடலூரே" (திவ். பெரிய. 5. 2: 9.) "தாழை குருகீனும்" (தொல். பொருள். 290, மேற்.)

7. தலைவனெடு நகுதல்: குறுந்: 169: 3, 320: 5, 381: 7, 394: 7; மதுரைக். 420; நற். 135: 9, 187: 10, 299: 9.

மு. குறுந். 357. (உஉசு)

தோழி கூற்று

[அல்லகுறிப்பட்டு மறுநாள் வந்த தலைவன் மறைவில் இருப்ப, அவன் முதல் நாள் வந்ததைத் தோழி தலைவிக்கு உணர்த்தியது.]

உஉஎ. பூண்வனைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி
வாண்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த

கூழை நெய்தலு முடைத்திவட்
டேரோன் போகிய கானலானே.

எ - து. சிறைப்புறம்.

ஓத ஞானி.

(பி-ம்.) 1 'பூவணந்தன்ன' 4 'கானலோனே'

(ப - ரை.) தேரோன் போகிய கானலான் - தேரில் வந்த தலைவன் மீண்டு சென்ற கடற்கரைச் சோலையில், இவண் - இவ் விடம், பூண் வணந்தன்ன - பூணைப் பதித்தாற் போன்ற, பொலஞ் சூட்டு நேமி - பொன்னாலாகிய விளிம்பையுடைய சக்கரத்தின், வாள் முகம் துமிப்ப - வாளைப்போன்ற வாய் துணித்தலினால், வள் இதழ் குறைந்த - வளவிய இதழ்கள் ஒடிக்கப்பட்ட, கூழை நெய்தலும் உடைத்து - குறையாகிய நெய்தற்பூக்களையும் உடை யது.

(முடிபு) தேரோன் போகிய கானல் நெய்தலும் உடைத்து.

(கருத்து) நேற்றுத் தலைவன் ஈண்டு வந்திருந்தான்.

(வி - ரை.) தலைவன் அல்லகுறிப்பட்டுச் சென்று மறுநாள் வந்து தான் முதல்நாள் வந்து தலைவியைக் காணப் பெறுமையைத் தோழியிடம் உரைப்ப, தலைவி தான் குறியென மருண்டு சென்றும் தலைவன் வந்திலனெனக் குறை கூறும்பொழுது தோழி, " அவன் வந்திருந்தான். அதற்கு அடையாளமாக அவன் ஊர்ந்து வந்த தேர்ச்சக்கரச்சூட்டாற் குறைக்கப்பட்ட நெய்தல்மலர்களைக் காண லாம் " என்று கூறினள். கூழை நெய்தற்கொடிகளெனினுமாம்.

கானலானே : ஏ அசைநிலை.

(ஒப்பு.) 1. பொலஞ் சூட்டு நேமி : " பொலஞ்சுட ராழி பூண்ட தேரே " (தொல். புள்ளி. 61, ந. மேற.)

3. கூழை : குறுந். 133 : 2, 179 : 7 ; அகநா. 275 : 17.

1-3. நேமியால் நெய்தல் குறைதல் : " கடுமா கெடுந்தேர் நேமி போகிய, இருங்கழி நெய்தல் போல " (குறுங். 336 : 4-5); " நெய்தன் மயக்கி வந் தன்று...கொண்கன் றேரே " (ஐங். 101 : 3-5); " ஆழி, நுதிமுகங் குறைத்த பொதிமுகிழ் நெய்தல் " (அகநா. 160 : 12-3.)

கடற்கரைக் கொடிகள் நேமியால் குறைதல் : நற். 338 : 2-3 ; அகநா. 80 : 8-10. (உ.உ.ள)

தலைவி கூற்று

[தலைவனுடன் இல்வாழ்க்கை நடத்திய தலைவியை நோக்கி, " நீ இதுகாறும் நன்றாக ஆற்றியிருந்தாய்!" என்று தோழி கூறிய

பொழுது, "தலைவர் என் நெஞ்சிற்கு அணியராயிருந்ததனாலும் அவர் நாட்டுத்திரை நம்மூர்க்கு வந்து பெயர்ந்ததனாலும் ஆற்றியிருந்தேன்" என்று தலைவி கூறியது.]

உஉஅ. வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை
குருகுள ரிடத்தின் விரிபுதோ டவிழும்
கான னண்ணிய சிறுகுடி முன்றிற்
றிரைவந்து பெயரு மென்பநத் துறந்து
5. நெடுஞ்சே ணட்டா ராயினும்
நெஞ்சிற் கணியர் தண்கட லூட்டே.

எ - து. 'கடிநகர் வேறுபடாது நன்கு ஆற்றினாய்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்.

(பி - ம்.) 2 'குருகுளரிறகின்', 'குருகுகுளிரிடத்தின்' 3 'கான நண்ணிய'; 'குன்றிற்' 6 'கணியரே', 'கணியரோ', 'கணியோர்'

(ப - ரை.) தோழி, நம் துறந்து - நம்மைப் பிரிந்து சென்று, நெடு சேண் நாட்டார் ஆயினும் - மிக்க சேய்மையிலுள்ள நாட்டில் இருப்பவராயினும், நெஞ்சிற்கு அணியர் - நெஞ்சிற்கு அணிமையிடத்துள்ளாரது, தண் கடல் நாட்டு - தண்ணிய கடலையுடைய நாட்டினிடத்து, வீழ் தாழ் தாழை - விழுது தாழ்ந்த தாழையினது, ஊழ் உறு கொழு முகை - முதிர்ந்த கொழுவிய அரும்பு, குருகு உளர் இடத்தின் - நாரைகள் சிறகைக் கோதுகின்ற இடத்தில், விரிபுதோடு அவிழும் - விரிந்து மடல்கள் மலர்கின்ற, கானல் நண்ணிய - கடற்கரைச்சோலையிற் பொருந்திய, சிறுகுடி முன்றில் - சிற்றூரின் முன்னிடத்தில், திரை வந்து பெயரும் - அலைகள் வந்து மீண்டு செல்லும்.

(முடிபு) சிறுகுடி முன்றிலில் திரைவந்து அணியரது தண்கடல் ஊட்டுப் பெயரும்.

(கருத்து) தலைவன் என் நெஞ்சில் இருந்தமையின் ஆற்றியிருந்தேன்.

(வி - ரை.) குருகுளரிறகின் என்ற பாடத்திற்குக் குருகுகள் கோதுகின்ற சிறகைப்போலவெனப் பொருள் கொள்க. நத்துறந்து: குறுந். 174 : 4, வி-ரை.

"தலைவர் நின்னை வரைந்து கொள்வதற்குமுன் அவர் நெடுந் தூரத்திலுள்ள நாட்டினராகியிருப்பவும் நீ ஆற்றியிருந்தது நின் வன்மையைக் காட்டுகின்றது" என்று தோழி தலைவியைப் புகழ, தலைவி, "அவர் நெடுந்தூரத்திலிருந்தாராயினும் என் நெஞ்சிற்கு அணியராக இருந்தார். அதனாலும் அவர் நாட்டுக்கும் எங்கள் ஊருக்கும் அலைகளின் தொடர்பு இருந்தமையாலும் ஆற்றியிருந்தேன்" என்றாள். தலைவனது நாட்டிலிருந்து வரும் நீரையேனும் பிறபொருளையேனும் கண்டும் கைக்கொண்டும் ஆற்றியிருத்தல் தலைவியர் இயல்பு; இதனை இந்நூல் 361 - ஆம் செய்யுளால் உணரலாம்.

(ஒப்பு.) 1. வீற்றாழ் தாழை : பட். 84; நற் 78 : 4; கலி. 131 : 10-11; அகநா. 20 : 6; பெரும். 1. 40 : 112-3.

2. இறகை உளர்தல் : சீவக. 1819.

3. காலல் நண்ணிய சிறுகுடி : நற். 4 : 1, 45 : 1.

சிறுகுடி : குறுந். 184 : 2, ஒப்பு.

4. நத்துறந்து : குறுந். 184 : 4, ஒப்பு.

5. நெடுஞ்சேணுட்டார் : நற். 115 : 8.

6. நெஞ்சிற் கணியர் : குறுந். 36 : 3, ஒப்பு; குறள், 1130.

5-6. குறுந். 302 : 7-8. (உஉஅ)

கண்டோர் கூற்று

[தலைவனும் தலைவியும் பாலைநிலத்தில் உடன்போனவழி அவரைக் கண்டார், "இவர்கள் இளமையில் ஒருவரோடொருவர் கலாம் விளைத்திருந்தனர். இப்பொழுதோ இணைபிரியாத துணைவராயினர். ஊழின் வலிதான் என்னே!" எனத் தம்முட் கூறியது.]

உஉக. இவனிவ ளேம்பால் பற்றவு மிவளிவன்
புன்றலை யோரி வாங்குநள் பரியவும்
காதற் செவிலியர் தவிர்ப்பவுந் தவிரா
தேதில் சிறுசெரு வுறுப மன்னே
நல்லமன் றம்ம பாலே மெல்லியற்
றுணைமலர்ப் பிணைய லன்னவிவர்
மணமகி ழியற்கை காட்டி யோயே.

எ - து. இடைச் சுரத்துக் கண்டார், தம்முள்ளே சொல்லியது.

மோதாசனர்.

(பி - ம்.) 2 'புன்றலை'; 'வாங்கினள்' 4 'உறுப்ப'; 'மன்னே' 5 'நல்லை மன்ற பாலே' 6 'லன்னவர்' 7 'மனமகிழ்', 'மணமகிழ்'

(ப - ரை.) இவன் இவள் ஐம்பால் பற்றவும் - இவன் இவளது கூந்தலைப் பிடித்து இழுக்கவும், இவள் இவன் புன் தலை ஓரி வாங்குநள் பரியவும் - இவள் இவனது புல்லிய தலைமயிரை வலைத்து இழுப்பாளாய் ஓடவும், காதல் செவிலியர் தவிர்ப்பவும் - அன்புடைய செவிலித்தாயர் இடைமறித்துத் தடுக்கவும், தவிராது - ஒழியாமல், ஏதில் சிறு செரு உறுப - அயன்மையையுடைய சிறிய சண்டையை முன்பு பொருந்துவார்கள்; இப்பொழுது, மலர் துணை பிணையல் அன்ன இவர் - மலரைப் பிணைத்த இரட்டை மாலையைப் போன்ற இவர்கள், மணம் மகிழ் இயற்கை காட்டியோய் - மணம் புரிந்து மகிழும் இயல்பை உண்டாக்கினையாய்; ஆதலின், பாலை-ஊழ்வினையே, மன்ற நல்லை - நீ நிச்சயமாக நன்மையையுடையாய்.

(முடிபு) செரு உறுப; பாலை, மணமகிழியற்கை காட்டியோய்; நல்லை மன்ற.

(கருத்து) ஊழ்வினையின் வலியால் இவர்கள் தலைவனும் தலைவியும் ஆயினர்.

(வி - ரை.) தமக்கு அணிமையிலே செல்வதைக் காண்பவராதலின் இவனென்றும் இவளென்றும் சுட்டினர். ஐம்பால் - ஐந்துபகுப்பையுடைய கூந்தல்; அவை குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை யென்பன (சீவக. 2437, ந.)

புன்றலை - சிவந்த தலையெனலுமாம் (பட். 90, மலைபடு. 217, 253, ந.) ஓரி - ஆண் தலைமயிர் (பெரும்பாண். 172, ந.) ஐவகையின ராதலின் செவிலியரெனப் பன்மையாற் கூறினர் (சீவக. 363, ந.) ஏதில் சிறுசெரு - காரணமில்லாத சிறிய கலாமெனலுமாம்; ஏது-காரணம்; "ஏதின்றி" (கலி. 122 : 3.) மன்ற அம்மவென்பது மன்றம்மவென வந்தது; விகாரம்; அம்ம : வியப்பிடைச் சொல். துணைப்பிணையல், மலர்ப்பிணையல் எனக் கூட்டுக.

தம்முட் கலாம் விளைத்தாரை ஒன்று படுத்திப் பாலைநிலத்தில் உடன்போகச் செய்வித்தமையின் 'நல்லை மன்றம்ம' என்று வியந்தனர். இளமையிற் கலாம் விளைத்ததை யறிந்தவராதலின் இது கூறினர்.

(மேற்.) மு. தலைவியும் தலைவனும் ஒருநிகர் (தொல். களவு. 2, ந; இ. வி. 487.)

(ஒப்பு.) 1. ஐம்பால் பற்றல் : நற். 100 : 4.

5. ஊழினை வாழ்த்துதல் : "வாழிய பாலே" (ஐங். 110 : 5.) மன்றம்ம : கலி. 142 : 5 ; அகநா. 367 : 13.

6. துணைமலர்ப் பிணையல் : "துணைத்த கோதை" (குறுந். 326 : 1) ; "துணையார் கோதை" (சிறுபாண். 69) ; "துணையறை மாலையின்" (குறிஞ் சிப். 177) ; "துணைமலர்க் கோதையார்" (கலி. 70 : 9) ; "துணையமை பிணையல்" (அகநா. 5 : 23.)

தலைவனுக்கும் தலைவிக்கும் துணைமாலைகள் உவமை : "துணையொத்த கோதை யும் போலெழிற் பேதையுந் தோன்றலுமுன், இணையொத்த கொங்கையொ டேயொத்த காதலொ டேகினரே" (திருவேகம்பமுடையார் திருவந்தாதி, 73.) (உஉக)

தோழி கூற்று

[தலைவனது குறையைக் கேட்ட தோழி தலைவிபால், "நெடு நாட்களாக நினது உடம்பாட்டை எதிர்நோக்கி வந்து கொண்டி ருந்த தலைவன் யான் சேட்படுத்தியமையின் சிலகாலமாக வாரா தொழிந்தான்" என்று இரக்கம் வரும்படி கூறியது.]

உந.o. அம்ம வாழி தோழி கொண்கன்
தானது துணிகுவ னல்லன் யானென்
பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்
5. வயச்சுரு வழங்குநீ ரத்தம் [லோ
சின்ன ளென்ன வரவறி யானே.

எ - து. வலிதாகக் கூறிக் குறை நயப்பித்தது.
அறிவுடை நம்பி.

(பி - ம்.) 3 'பெறுதகை' 4 'றுடையன்' 5 'நீரததவச்' 6 'ளின்ன'

(ப - ரை.) தோழி—, அம்ம - ஒன்று கூறுவன், கேட்பாயாக: கொண்கன் - தலைவன், வய சுரு வழங்கு நீர் அத்தம் - வலியை யுடைய சுருமீன் வழங்குகின்ற நீரையுடைய வழியில், சில் நாள் - சில நாட்களாக, அன்ன-முன்னர் வந்து கொண்டிருந்த அத்தகைய, வரவு அறியான் - வருதலை அறியாஞயினன் ; தான் அது துணிகு வன் அல்லன் - அங்ஙனம் வாராதிருத்தலைத் தானுகவே துணிந்து ஒழுகும் இயல்புடையனல்லன் ; யான்—, என் பேதைமையால் - என் அறிவின்மையால், பெரு தகை கெழுமி - பெரிய உரிமையைப்

பொருந்தி, நோதக செய்தது ஒன்று - அவன் வருந்தி இங்கே வாராத வண்ணம் செய்த செயலொன்றை, உடையேன்கொல் - உடையேனே?

(முடிபு) தோழி, கொண்கன் வரவறியான்; தான் துணிகுவன் அல்லன்; யான் கெழுமிச் செய்தது உடையேன்கொல்.

(கருத்து) நின்னைக் காணப் பலகால் வந்த தலைவன் யான் சேட்படுத்தியமையின் வாராதொழிந்தான்கொல்?

(வி - ரை.) வாழி: அசைநிலை. கொண்கன் - நெய்தனிலத் தலைவன். அதுவென்னும் சுட்டு, செய்யுளாதலின் முன் வந்தது; வாராமையைச் சுட்டியது தகை - தகுதி; இங்கே உரிமை.

"பேதைமை யொன்றே பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்" (குறள், 805)

என்பவாகலின் நான் நட்புரிமையால் இங்ஙனம் செய்தே னென்றாள். நோதக - நோவ. தலைவன் நோவச் செய்தலாவது சேட்படுத்தல். ஓ: அசைநிலை. அன்ன: பண்டறி சுட்டு. வரவறியான் - வந்திலனென்றபடி.

(ஒப்பு.) 1. அம்மவாழி தோழி: குறுந். 77: 1, ஒப்பு.

5. வயச்சுரு: குறுந். 269: 3.

சுருவழங்குநீர்: "எறிசுருக் கலித்த விலங்குநீர்ப் பரப்பு" (குறுந். 318: 1); "சுறவுப்பிற ழிருங்கழி நீந்தி யல்கலும், இரவுக்குறிக் கொண்கன் வந்தனன்" (சிற்றட்டகம்.) (உகo)

தலைவி கூற்று

[தலைவனுக்குத் தூதாக வந்த தோழியை நோக்கி, "அவர் இங்கே வந்தாலும் என்னோடு அளவளாவாமற் செல்வர். அவருக்கு என்பால் அன்பு இலதாயிற்று" என்று தலைவி கூறி வாயில் மறுத்தது]

உங. ஓரூர் வாழினுஞ் சேரி வாரார்
சேரி வரினு மாரு முயங்கார்
ஏதி லாளர் சுடலை போலக்
காணக் கழிப மன்னே நாணட்டு
5. நல்லறி விழந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்றுசேட் படவே.

எ - து. வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(பி - ம்.) 1 'ஓராஅவாழினும்', 'ஒருஉவாழினும்' 4 'நாணிட்டு', 'நாணட', 'நாணிட'

(ப - ரை.) தோழி, ஓர் ஊர் வாழினும் சேரி வாரார் - தலைவர் நம்மோடு ஓர் ஊரிலே வாழ்ந்தாலும் நாம் இருக்கும் தெருவில் வாரார்; சேரி வரினும் ஆர முயங்கார் - இத்தெருவில் வந்தாலும் நன்றாகத் தழுவிக்கொள்ளார்; நாண் அட்டு - நாணத்தை அழித்து, நல் அறிவு இழந்த காமம் - தக்கதிது தகாததிதுவென்று எண்ணும் நல்ல அறிவை இழக்கச் செய்யும் காமமானது, வில் உமிழ் கணையின் - வில்லால் எய்யப்பட்ட அம்பைப்போல, சென்று சேண் பட - போய் நெடுந்தூரத்தில் அழியும்படி, ஏதிலாளர் சூடலைபோல - அயலாருடைய சூடுகாட்டைப்போல, காணாக் கம்மைக் கண்டும் வேறொன்றும் புரியாமல், கழிப - செல்லுவார்.

(முடிபு) வாரார்; முயங்கார்: காமம் சேட்படக் கழிப.

(கருத்து) தலைவர் என்பால் அன்பின்றி ஒழுகுகின்றார்.

(வி - ரை.) ஆர - எனக்கு மனநிறைவு உண்டாம்படி. "சூடலையை யாரும் விரும்பார்; அயலார் சூடலையாயின் வெறுத்து ஒதுங்கிச் செல்வர்; அதுபோல என்னைக் கண்டும் விருப்பின்றி வெறுத்தொழுகினார்" என்றாள்.

காமம் நாணை இழப்பதற்கும் நல்லறிவை இழப்பதற்கும் காரணமாதலின் நாணட்டு நல்லறிவிழந்த காமமென்றாள். விரைவில் நெடுந்தூரம் செல்லுதல்பற்றி வில்லுமிழ் கணையை உவமை கூறினாள். தலைவன் புறத்தொழுக்கினால் தலைவி தன் காமத்தை இழந்தாள். தலைவன்பால் விருப்பமில்லாள்போலக் கூறி வாயில் மறுத்தாள்.

'நாணத்தை நீக்கி நல்லறிவிழந்த தம் காமம் என்பால் அமையாமல் சேணிடத்திலுள்ளாராகிய பரத்தையர்பால் அமைவதற்காக என்னைக் கண்டும் செல்லுவார்' எனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

> "நோதக் கன்றே காமம் யாவதும்
> நன்றென வுணரார் மாட்டும்
> சென்றே நிற்கும் பெரும்பே தைமைத்தே" (குறுங். 78)

என்பவாகலின், 'நல்லறிவிழந்த காமம்' என்றாள்.

மன், ஏ: அசை நிலைகள்.

(மேற்.) 1-2. சித்திரவண்ணம் வந்தது (தொல். செய். 214, இளம்.)

(ஒப்பு.) 1. சேரி: குறுந். 258: 1.

1-4. குறுந். 203 : 1-5.
4-5. நானும் காமமும் : குறள், 1163, 1247.
6. கணை வேகத்திற்கு : நற். 46 : 2 ; பெரும். 1. 48 : 8 ; சீவக. 502, 701.
(உகக)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்தில், "தலைவர் நம்மை நினைத்திலர் போலும்!" எனக் கவன்ற தலைவியை நோக்கி, "அவர் நினையாமலிரார் ; வினை முற்றுமையின் வந்திலர்" என்று தோழி கூறியது.]

உஉ. உள்ளார் கொல்லோ தோழி யுள்ளியும்
வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ
மரற்புகா வருந்திய மாவெருத் திரலை
உரற்கால் யானை யொடித்துண் டெஞ்சிய
5. யாஅ வரிநிழற் றுஞ்சும்
மாயிருஞ் சோலை மலையிறந் தோரே.

எ - து. பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

[வற்புறுத்தியது - துணிவுபடச் சொல்லியது.]

ஊண்பித்தை.

(பி - ம்.) 3 'வரற்புகா', 'வருந்த,' 4 'பொளித்துண்'

(ப - ரை.) தோழி—, மரல் புகா அருந்திய - மரலாகிய உணவை உண்ட, மா எருத்து இரலை - பெரிய பிடரையுடைய ஆண்மான், உரல் கால் யானை - உரலைப் போன்ற காலையுடைய யானை, ஒடித்து உண்டு எஞ்சிய - முறித்து உண்டு குறையச் செய்த, யாஅ வரிநிழல் - யாமரத்தின் புள்ளிகளையுடைய நிழலில், துஞ்சும் - தூங்குகின்ற, மா இரு சோலை மலை இறந்தோர் - மிகப் பெரிய சோலைகளையுடைய மலைகளைக் கடந்து நம்மைப் பிரிந்து சென்ற தலைவர், உள்ளார் கொல் - நம்மை நினைத்தாரலரோ? உள்ளியும் - அன்றி நினைத்தும், வாய்ப்பு உணர்வு இன்மையின் - வினைமுற்றி மீள்வதற்கு வாய்த்த செவ்வியை உணராமையினால், வாரார் கொல் - வாராராயினரோ?

(முடிபு) தோழி, மலையிறந்தோர் உள்ளார் கொல்? உள்ளியும் வாய்ப்பு உணர்வின்மையின் வாரார்கொல்?

(கருத்து) தலைவர் வினை முற்றுமையின் வந்திலர்; விரைவில் வருவர்.

(வி - ரை) தலைவி, "அவர் வாராராயினர்; நம்மை நினைத்திலர்" என்று கவன்றனளாதலின், அவள் கருத்தையும் ஐயத்தின் பாற்படுத்தித் தன் கருத்தையும் ஐயத்தின்பாற் படுத்தினுள்; படுப்பினும் வாய்ப்பு உணர்வின்மையின் வாராராயின என்பதே தோழி கருத்தாகக் கொள்க.

கொல்: ஐயம். ஓ: அசைநிலை.

வாய்ப்பு - வாய்த்தல்; என்றது தாம் நினைந்து வந்த வினை முடிந்து மீள்வதற்குரிய செவ்வி வாய்த்தல். புகா - உணவு. உண்டு - உண்ண எனினுமாம்; எச்சத்திரிபு.

தனக்கு வேண்டிய உணவைப் போதிய அளவுண்ட இரலை யாமரத்தினடியின்கண் வந்து துஞ்சுதலைப் பார்ப்பாராதலின் தமக்கு வேண்டிய வினையை நன்கு முடித்து ஈண்டு வந்து நின்னோடு இன்புறுவரென்பது குறிப்பு.

(மேற்.) 4. செய்தெனெச்சம் செயவெனெச்சப் பொருட்டாய் நின்றது (தொல். வினை. 34, சே.); செய்தெனெச்சம் வினைமுதல் வினை கொள்ளாது பிறிதின் வினைகொண்டு ஈறுதிரிந்தது (தொல். எச்ச. 61, சே, 55, தெய்வச்.); செய்தெனெச்சம் தனக்குரிய வினைமுதலானன்றிப் பிற வினைமுதலோடு காரணகாரியமின்றி வந்துமுடிந்தது (தொல்.வினை. 34, ந.); செய்தெனெச்சம் பிறவினைகொண்டு முடிந்தது (சிவக. 15, ந.); முதனிலை திரியாத பிறவினை (இ. கொ. 71)

4-5. செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்தது (நன். 345, மயிலை.; 346, சங்.); முதற்பொருளின் வினை தமக்குரிய வினைமுதல் வினையானன்றிப் பிறவினைமுதல் வினையோடு முடிந்தது (இ. வி. 248); எஞ்சிய வென்பதற்கு எஞ்சுவித்தவெனப் பொருள் கொள்ளவேண்டும் (தொல். பாயிரவிருத்தி. ப 10.)

(ஒப்பு.) 1. உள்ளார்கொல்லோ தோழி: குறுந். 16 : 1, ஒப்பு.

1-2. "உள்ளார் கொல்லோ காதல ருள்ளியும், சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ" (அகநா. 235 : 2-3.)

3. மரல்: குறுந். 100 : 2.

மான் மரல உண்ணுதல்: கலி. 6 : 1; "மடமா னசாவினந் திரங்குமரல் சுவைக்கும்", "வரிமரற் கறிக்கு மடப்பிணைத், திரிமருப் பிரலேய காடிறந் தோரே" (அகநா. 49 : 12, 133 : 17-8.)

4. உரற்கால் யானை: "கறையடிக், குன்றுறழ் யானை" (பெரும் பாண். 351-2); "உரல்புரை பாவடி.....ஒருத்தல்" (கலி. 21 : 1-2); "உரற்காற் குஞ்சரம்" (தஞ்சை. 413)

4-5. யானை யாலை உண்ணல்: குறுந். 37 : 3-4, ஒப்பு; மலைபடு. 429.

தலைவன் கூற்று

[தலைவியை மணந்துகொள்ளாமல் வினைமேற் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருகையில் பாகனுக்குத் தலைவியினது ஊரைக் காட்டியது.]

உங. கவ்லை கெண்டிய வகல்வாய்ச் சிறுகுழி
கொன்றை யொள்வீ தாஅய்ச் செல்வர்
பொன்பெய் பேழை மூய்திறந் தன்ன
காரெதிர் புறவி னதுவே யுயர்ந்தோர்க்கு
5 நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்
வரைகோ ளறியாச் சொன்றி
நிரைகோற் குறுந்தொடி தந்தை யூரே.

எ - து. பட்டபின்றை வரையாது சென்று வினைமுற்றி மீளுந் தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

[பட்ட பின்றை - களவு வெளிப்பட்ட பிறகு; "பட்ட பின்றை வரையாக் கிழவன், நெட்டிடை கழிந்து பொருள் வயிற் பிரிதலும்.....கற்பா லான" (இறை. 25)]

பேயன்.

(பி - ம்.) 'கல்வாய்ச்' 4 'காஎனெதிர்.....யுணர்ந்தோர்க்கு' 6 'வரை கொள்வறியா', 'வரைகொள வறியா'

(ப - ரை) பாக, உயர்ந்தோர்க்கு - பெரியவர்களுக்கு, நீரொடு சொரிந்த மிச்சில் - நீரொடு தானம் பண்ணி எஞ்சிய பொருளையும், யாவர்க்கும் வரைகோள் அறியா சொன்றி - யாவருக்கும் தடை செய்தலை அறியாத சோற்றையும் உடைய, நிரை கோல் குறு தொடி - வரிசைப்பட்ட திரட்சியையுடைய குறிய வளைகளை யணிந்த தலைவியினுடைய, தந்தை ஊர் - தந்தைக்குரிய ஊரானது, கவலை கெண்டிய அகல் வாய் சிறு குழி - கவலைக் கிழங்கைக் கல்லி யதனால் உண்டான அகன்ற வாயையுடைய சிறிய குழி, கொன்றை ஒள் வீ தாஅய் - கொன்றையினது ஒள்ளிய மலர் பரவப் பெற்று, செல்வர் - செல்வருக்குரிய, பொன் பெய் பேழை - பொன்னை யிட்டு வைக்கும் பெட்டியினது, மூய் திறந்தன்ன - மூடியைத் திறந்து வைத்தாற்போன்ற தோற்றத்தையுடைய, கார் எதிர் - கார்காலத்தை ஏற்றுக்கொண்ட, புறவினது - முல்லை நிலத்தின் கண்ணது.

(முடிபு) குறுந்தொடியின் தந்தையூர், புறவினது.

(கருத்து) முல்லைநிலத்தினிடையே தோன்றும் அதுவே தலைவியின் ஊராகும்.

(வி - ரை.) களவு வெளிப்பட்ட பின்னர்த் தலைவியை வரைந்து கொள்ளாமல் வினைமேற் சென்று வினையை முடித்துக் கொண்டு, வரைந்து கொள்ளும்பொருட்டு மீளுந் தலைவன், தலைவியின் ஊரை உவகை மிகுதியினால் பாகனுக்குக் காட்டிக் கூறியது இது.

"வெளிப்படை தானே கற்பினெ டொப்பினும்
ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக
வரையாது பிரிதல் கிழவோற் கில்லை" (தொல். களவு. 50)

என்ற சூத்திரத்தின் உரையில் நச்சினார்க்கினியர்,

'மூன்றுமென முற்றும்மை கொடாது கூறினமையின் ஏனைப்பிரிவு களின் வரையாது பிரியப் பெறும் என்றவாறாயிற்று; அவை வரை தற்குப் பொருள்வயிற் பிரிதலும் வேந்தற்குற்றுழியும் காவற்குப் பிரிதலு மென மூன்றுமாம்'

என்றெழுதியதனால் இதற்கு விதிபெறலாகும். இதனைக் கற்பினுள் அமைத்துக் கூறுவர் தொல்காப்பியனாரும் இறையனாரகப் பொருளுடையாரும்.

கவலை - ஒருவகைக் கிழங்கு. கெண்டுதல் - கல்லுதல்; இச் சொல் இக்காலத்தில் கிண்டுதலென வழங்கும். கெண்டிய - தோண்டியெடுத்த, வெட்டிய; அகநா. 10; நற். 114: 2. ஒள்வீ யென்றது அப்பொழுது உதிர்ந்த மலர்களை.

பொன்பெய்பேழை செல்வரேயுடைமையின் 'செல்வர் பொன்பெய் பேழை' என்றான். பொன் என்றது இங்கே பொற் காசுகளை. பொற்காசுகள் உருண்டை வடிவினவாக ஒருகாலத்தில் இருந்தனவென்பது இந்நூல் 67 - ஆம் செய்யுளால் உணரலாகும். கொன்றை மலரை அப்பொற் காசோடு உவமித்தலை,

"காசி னன்ன போதின் கொன்றை" (குறுந். 148: 3)

என்ற அடியால் அறியலாம்.

குழிக்குப் பேழையும், கொன்றைக்குப் பொன்னும் உவமைகள். காரெதிர் புறவென்றான், கொன்றை மலருங்காலம் அதுவாதலின். தன்கையாற் சுட்டி 'அதுவே' எனக் காட்டினான். ஏகாரம் தேற்றம்.

உயர்ந்தோரென்பது அந்தணர்களை; அவருக்கே நீரொடு சொரிதல் மரபாதலின். மிச்சில் - எஞ்சிய பொருள். வரைகோள் - வரைதல்; தடைசெய்தல்;

" உண்மருந் தின்மரும் வரைகோ ளறியாது
... ... யாவரும்
கண்டுமகி மருளும் வாடாச் சொன்றி " (பதிற். 24 : 18-22.)

தலைவியின் தந்தை பொன்னும் நெல்லும் மிகவுடையனென் பதைத் தலைவன் கூறினன்.

ஊரே : ஏகாரம் அசை நிலை.

(மேற்) மு. பிரிந்து மீளுந் தலைமகன் பாகற்குக் கூறியது (தொல். களவு. 12, ந.)

(ஒப்பு.) 1. கவலை கெண்டிய குரி : " கவலையங் குழும்பு " (மதுரைக். 241.)

கவலைக் கிழங்கைக் கல்லுதல் : " கல்லுவென் மலைமேலுங் கவலையின் முதல்யாவும் " (கம்ப. கங்கைப். 66)

1-2. கிழங்ககழ் குழியில் மலர் வீழ்தல் : ஐங். 208 : 1-3.

1-3. கொன்றைக்குப் பொன் : குறுந். 21 : 2-3, ஒப்பு.

4. காரெதிர் புறவு : " காரெதிர் கானம் " (புறநா. 144 : 3.)

2-4. கொன்றை கார்காலத்தில் மலர்தல் : குறுந். 21 : 3-4, ஒப்பு.

6. வரைகோள் இல்லாத சோறு : " சாறயர்ந் தன்னதிமிடாஅச் சொன்றி, வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப, மலரத் திறந்த வாயில் பலருண " (குறிஞ்சிப். 201-3.)

5-6. செல்வமும் சோறும் : " பெருங்கிரு நிலைஇய வீங்குசோற் றகன் மனை " (கலி. 83 : 1)

7. கோற் குறுந்தொடி : " கோலமை குறுந்தொடிக் குறுமகள் ", " கோலமை குறுந்தொடித் தளிரன் னேளே " (குறுந். 267 : 5, 356 : 8) ; குறிஞ்சிப். 167.

6-7. சோற்றுவளமுடைய தந்தை : " தந்தை, அல்குபத மிகுத்த கடியுடை வியனகர் ", " கூழுடைத் தந்தை யிடனுடை வரைப்பின் " (அகநா. 49 : 13-4, 145 : 17.)

மு. குறுந். 235, அகநா. 274. (உகக)

தலைவி கூற்று

[பருவ வரவின்கண் தோழியை நோக்கி, " மாலைக்கால மென்று தனியே ஒன்றை வரையறுத்துச் சிலர் கூறுவர். தமிய ராயினர்க்கு எல்லாப் பொழுதும் மாலைப் பொழுதே " என்று தலைவி கூறியது.]

உஉச. சுடர்செல் வானஞ் சேப்பப் படர்கூர்ந்
தெல்லறு பொழுதின் முல்லை மலரும்
மாலை யென்மனர் மயங்கி யோரே
குடுமிக் கோழி நெடுநக ரியம்பும்

பெரும்புலர் விடியலு மாலை
பகலு மாலை துணையி லோர்க்கே.

எ - து. பருவவரவின்கண் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.
மினைப்பெருங் கந்தன்.

(பி - ம்.) 2 'தெல்லுறு', தெல்லிறு

(ப - ரை.) தோழி, மயங்கியோர் - அறிவு மயங்கியோர், சுடர் செல் வானம் சேப்ப - சூரியன் மறைந்து சென்ற வானம் சிவப்பு நிறத்தை யடைய, படர் கூர்ந்து - துன்பம் மிக்கு, எல் அறு பொழுதில் - ஒளி மங்கிய பொழுதில், முல்லை மலரும் - முல்லைப்பூ மலர்கின்ற, மாலை - மாலைக்காலம், என்மனார் - என்று அதனை வரையறுத்துக் கூறுவர்; துணையிலோர்க்கு - துணைவரைப் பிரிந்தவர்களுக்கு, நெடுநகர் - நீண்ட நகரத்தில், குடுமி கோழி இயம்பும் - உச்சிக் கொண்டையையுடைய கோழி கூவுகின்ற, பெரு புலர் விடியலும் - பெரிய இராப்பொழுது புலர்கின்ற விடியற்காலமும், மாலை - மாலைக்காலமாகும்; பகலும் மாலை - பகற்காலமும் மாலைக் காலமாகும்.

(முடிபு) மயங்கியோர் முல்லை மலரும் மாலையென்மனார்; துணையிலோர்க்கு விடியலும் மாலை; பகலும் மாலை.

(கருத்து) தலைவரைப் பிரிந்தமையால் நான் எப்பொழுதும் துன்பத்தையுடையவளானேன்.

(வி - ரை.) படர் - தமியரானார் படும் துன்பம்.

"மாலைக்காலமென்பது சூரியன் மறைந்து முல்லைமலரும் பொழுதென்று வரையறுத்து மயங்கியோர் கூறுவர். அது சிலருக்குப் பொருந்தும். தலைவரைப் பிரிந்த மகளிருக்கு எக் காலத்தும் காம நோய் மிகுதியாகவே இருத்தலின் எப்பொழுதும் மாலையேயாகும்" என்று தலைவி கூறினாள்.

தோழி, 'மாலைப் பொழுது வந்துவிட்டதே; இனித் தலைவி ஆற்றுளாவள்' என்று எண்ணியபொழுது, "ஆற்றுமை எனக்குப் புதிதன்று; அதனை எப்பொழுதும் உடையேன். எல்லாப் பொழுதும் எனக்கு மாலைக்காலம் தரும் துன்பத்தையே தருதலின் எல்லாம் மாலையே" என்று தலைவி கூறினாள்.

பகலென்றது விடியல், மாலை, யாமமொழிந்த சிறுபொழுதுகளை.

ஏகாரங்கள் இரண்டும் அசைநிலைகள்.

(மேற்.) 3. என்மனார்: மன் அசைநிலைப் பொருளில் வந்தது (நன். 431, மயிலை.)

(ஒப்பு.) 3. மு. கலி. 119 : 16.
2-3. மாலையில் முல்லை மலர்தல் : குறுந். 108 : 4-5, ஒப்பு ; ஐங். 489 : 2.
4. குடுமிக் கோழி : குறுந். 107 : 1-2.
5. பெரும்புலர் விடியல் : அகநா. 304 : 5.
மு. ஐங். 183. (உ.சே)

தலைவன் கூற்று

[வரைந்து கொள்வதற்குமுன் பிரிந்து சென்ற தலைவன், தலைவி பால் மீளும்போது வாடைக்குக் கூறுவானாகி, "வாடையே, அதோ தெரிகின்றதே, அது தலைவியின் ஊர் ; நீ அவளைப் பாதுகாப் பாயாக" என்று பாகனுக்கு உணர்த்தியது.]

உந. ஓம்புமதி வாழியோ வாடை பாம்பின்
தூங்குதோல் கடுக்குந் தூவெள் ளருவிக்
கல்லுயர் நண்ணி யதுவே நெல்லி
மரையின மாரு முன்றிற்
புல்வேய் குரம்பை நல்லோ ளூரே.

எ - து. வரையாது பிரிந்து வருவான் வாடைக்கு (பி - ம். வாடைக் கண்) உரைப்பானாய்ப் பாகற்கு உரைத்தது.

[வருவான் - மீண்டு வரும் தலைவன்.]

மாயெண்டன்.

(பி - ம்.) 1 'வாழிய' 2 'தூங்குவெள்' 3 'கல்லுயரண்ணி யதுவே'

(ப - ரை.) வாடை - வாடைக் காற்றே, நெல்லி - நெல்லிக்காயை, மரை இனம் ஆரும் முன்றில் - மரையின் திரள் உண்ணுகின்ற முன்னிடத்தையுடைய, புல் வேய் குரம்பை - புல்லால் வேயப் பட்ட குடிசைகளையுடைய, நல்லோள் ஊர் - நல்ல தலைவியினது ஊரானது, பாம்பின் தூங்கு தோல் கடுக்கும் - பாம்பின் நாலு கின்ற உரியை ஒக்கும், தூ வெள் அருவி - தூய வெள்ளிய அருவியை உடைய, கல் உயர் நண்ணியது - மலையின் உயரத்திலே பொருந்தியது ; ஓம்புமதி - அங்கேயுள்ள தலைவியை நீ பாதுகாப் பாயாக ; வாழி - நீ வாழ்வாயாக !

(முடிபு) வாடை, நல்லோள் ஊர் நண்ணியது ; ஓம்புமதி ; வாழி.

(கருத்து) மலையின் உச்சியிலே தோன்றுவது தலைவியினது ஊராகும்.

(வி - ரை) ஒம்புதலாவது தலைவியைத் துன்புறுத்தாமற் பாதுகாத்தல். தலைவி வாடைக்கு வருந்துதல் இயல்பு. துன்பம் செய்யும் இயல்பினதாகிய வாடைக்குக் கூறுவான், அதனை வயப்படுத்துவான் போல வாழி யென்றான். வாழியோ: ஓகாரம் அசைநிலை. உயர் - உயர்ந்த இடம்; என்றது உச்சியை. நல்லோளென்றான் அவள் நல்லியல்புகளை என்றும் நினைந்தவனுதலின்.

இதனால் தலைவி வாடைக் காற்றால் வருந்துவாளென்பதைப் புலப்படுத்தி அவள் ஊர் உள்ள இடமும் உணர்த்திக் குறிப்பினாற் பாகனை விரைந்து தேரைச் செலுத்தத் தூண்டினான்.

(மேற்.) மு. தலைவன் நெட்டாறு சேறலின்றி அணிமைக்கட் பிரிந்த வழிக் கூறியது (தொல். களவு. 17, இளம்.); வரைவிடை வைத்துப் பிரிந்து போகும் தலைமகன் கூறியது (தொல். களவு. 12, இளம். ந.)

(ஒப்பு.) 1-2. அருவிக்குப் பாம்பின் உரி: "செவ்வரைக் கொழிநீர் கடுப்ப வரவின், அவ்வரி யுரிவை யணவரு மருங்கின்" (அகநா. 327 : 12-3.)

3-4. நெல்லிக்காயை மரையினம் உண்ணுதல்: (குறுந். 317 : 1-2); "பராரை நெல்லி யம்புளித் திரள்காய், கான மடமரைக் கணநிரை கவரும்", "பல்கா னெல்லிப் பைங்கா யருந்தி, மெல்கிடு மடமரை" (அகநா. 69 : 7-8, 399 : 14-5); "மரைபிரித் துண்ட நெல்லி வேலி" (புறநா. 170 : 1.)

5. புல்வேய் குரம்பை: மலைபடு. 439; அகநா. 87 : 3, 172 : 10, 200 : 2, 369 : 23; புறநா. 120 : 13.

மு. குறுந். 233; அகநா. 94, 274, 284. (உரு)

தோழி கூற்று

[வரைவிடை வைத்துத் தலைவியைப் பிரிந்து செல்ல எண்ணிய தலைவன், "இவளை வருந்தாது பாதுகாப்பாயாக" என்று தோழிக்குக் கூற, அவள், "இவளைப் பிரிந்தால் என்றும் பிரிந்தே யிருக்க வேண்டும்; அங்ஙனம் செய்வாயேல் நீ உண்ட நலனைத் தந்து செல்வாயாக" என்று கூறுமுகத்தால் அவன் பிரிவைத் தடுத்தது.]

உருஉவிட்டென விடுக்குநாள் வருக வதுநீ
நேர்ந்தனை யாயிற் றந்தனை சென்மோ
குன்றத் தன்ன குவவுமண லடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை

5. வம்ப நாரை சேக்கும்
தண்கடற் சேர்ப்பநீ யுண்டவென் னலனே.

எ - து. வரைவிடை வைத்துப் பிரிவான், 'இவள் வேறு படாமை ஆற்றுவி' என்ருற்குத் தோழி நகையாடி உரைத்தது.

நரிவெரூஉத் தலையார் (பி - ம். நரிவெருத்தலையார்)

(பி - ம்.) 1 'விட்டுடன்' 2 'நொந்தனை' 6 'னலக்கே'

(ப - ரை.) குன்றத்து அன்ன - குன்றைப்போன்ற, குவவு மணல் அடை கரை - குவிதலையுடைய மணல் அடைந்த கரையினிடத்து, நின்ற புன்னை நிலம் தோய் படு சினை - வளர்ந்து நின்ற புன்னை மரத்தினது நிலத்தைத் தோய்ந்த தாழ்ந்த கிளையில், வம்ப நாரை சேக்கும் - புதிய நாரை தங்கும், தண் கடல் சேர்ப்ப - தண்ணிய கடற்கரையை யுடைய தலைவ, விட்டென விடுக்கும் நாள் வருக - இவளை நீ கைவிட்டாயென விடுக்கும் காலம் வருவதாக! அது நீ நேர்ந்தனையாயின் - அதற்கு நீ உடம்படுவாயாயின், நீ உண்ட என் நலன் - நீ நுகர்ந்த என் பெண்மை நலத்தை, தந்தனை சென்மோ - தந்து செல்வாயாக.

(முடிபு) சேர்ப்ப, நாள் வருக; நேர்ந்தனையாயின் நலன் தந்து சென்மோ.

(கருத்து) இவளைப் பிரிந்து செல்லல் தகாது.

(வி - ரை.) விட்டென - முற்றும் கைவிட்டா யென்னும்படி. சென்மோ: மோ முன்னிலையசை. புதிய நாரையாதலின் மீனுணவு கொள்ளும் இடமறியாது மணற்குன்றிலுள்ள புன்னைச் சினையில் இருந்தது; நீ இவளியல்பறியாது பிரிய எண்ணினை யென்ற குறிப்பையுடையது.

படுசினை - தாழ்ந்த கிளை. என் நலனென்றுள் தனக்கும் தலைவிக்கும் உள்ள ஒற்றுமை பற்றி (தொல். பொருள். 27.)

தலைவனிடம் நலந்தாவெனத் தோழி கூறும் மரபு

"மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்" (தொல். கற்பு. 9) என்பதனுற் பெறப்படும்.

இதனுல் தோழி, பிரிந்தால் தலைவி உயிர் வாழாளென்பதைக் குறிப்பாற் புலப்படுத்தினுள்.

(மேற்) மு. நீ கொண்ட நலத்தினைத் தந்து போவெனக் கூறுதற் கண் தோழிக்குக் கூற்று நிகழ்ந்தது (தொல். கற்பு. 9, இளம்.)

(ஒப்பு.) 3. குன்றத் தன்ன மணல்: (குறுந். 311: 5); "குன்றத் தன்ன

குவவுமண னீந்தி", "குன்றிற் றோன்றுங் குவவுமண லேறி"(நற். 207:5, 235 : 6); "குன்றிற் றோன்றுங் குவவுமணற் சேர்ப்ப" (அகநா. 310 : 10.)

3 - 4. மணற் குன்றிற் புன்னை : குறுங். 311 : 5.

5. வம்பநாரை : அகநா. 100 : 14, 190 : 8 : தொல். உரி. 30, இளம். சே.

4 - 5. புன்னையில் நாரை இருத்தல் : குறுங். 296 : 1 - 2; அகநா. 100 : 13 - 4 ; 190 : 7 - 8.

6. சேர்ப்பன் உண்ட நலன் : குறுங். 133 : 5, ஒப்பு.

2 - 6. என் நலத்தைத் தாவென்றல் : குறுங். 237 : 3 - 4, 349 : 3 - 4; கற். 395 : 9 - 10 ; ஐங். 159 : 5 ; கலி. 128 : 10 - 11 ; அகநா. 376 : 18, 396 : 19 ; ஐந். எழு. 64, 66 ; தொல். கற்பு. 8. (உகசு)

தலைவன் கூற்று

[பொருளுக்காகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் அதனை ஈட்டிக் கொண்டு மீள்கையில், தேர்ப்பாகனை நோக்கி, "எனக்கும் தலைவிக்கும் உள்ள இடையிடம் சேயதாகவும் பல இடையூறுகளை யுடையதாகவும் உளது. ஆயினும் என் நெஞ்சு அவள் பால் விரைந்து சென்றது" என்று கூறியது.]

உடஎ. அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇய
நெஞ்சுநப் பிரிந்தன் றுயினு மெஞ்சிய
கைபிணி நெகிழினஃ தெவனே நன்றும்
சேய வம்ம விருவா மிடையே
5. மாக்கடற் றிரையின் முழங்கி வலனேர்பு
கோட்புலி வழங்குஞ் சோலை
எனைத்தென் றெண்ணுகோ முயக்கிடை
[மலைவே.

எ - து. பொருள் முற்றி மீள்வான், தேர்ப்பாகனுக்கு உரைத்தது (பி - ம். உரைப்பானைத் தன்னெஞ்சிற் குரைத்தது.)

அள்ளூர் நன்முல்லை.

(பி - ம்.) 2 'நெஞ்சுணப்' 4 'விருவர் தமிடையே' 5 'முழங்கு'

(ப - ரை.) பாக, அஞ்சுவது அறியாது-அஞ்சுதலை யறியாமல், அமர் துணை தழீஇய - நாம் விரும்பும் தலைவியைத் தழுவும் பொருட்டு, நெஞ்சு - என் நெஞ்சு, நம் பிரிந்தன்று - நம்மைப் பிரிந்து சென்றது; ஆயினும் - ஆனாலும், எஞ்சிய - குறை பாடாக

உள்ள, கை பிணி நெகிழின் - கையாற்றழுவுதல் நெகிழுமாயின், அஃது எவன் - நெஞ்சு சென்று தழுவிய அதனற் பயன் யாது? இருவாம் இடை - யானும் தலைவியுமாகிய இருவருக்கும் இடையி லுள்ள இடங்கள், நன்றும் சேய - மிக்க சேய்மையை யுடையன; முயக்கிடை மலைவு - தலைவியோடு சேர்தற்கு இடையிலே உள்ள தடையாகிய, கோள் புலி - கொலை செய்யும் புலியானது, மா கடல் திரையின் முழங்கி - கரிய கடலின் அலையைப் போல ஆரவாரஞ் செய்து, வலன் ஏர்பு - வலமாக எழுந்து, வழங்கும் சோலை - உலவு கின்ற சோலை, எனைத்து என்று எண்ணுகு - எத்தனை யென்று எண்ணுவேன் ?

(முடிபு) நெஞ்சு பிரிந்தன்று; ஆயினும் நெகிழின் எவன்? இடை சேய; மலைவாகிய சோலை எனைத்தென்று எண்ணுகு?

(கருத்து) தலைவியுள்ள இடம் நெடுந்தூரத்தில் உள்ளது,

(வி - ரை) அஞ்சுவது அறியாது - நான் அஞ்சுவதைத்தான் அறியாது எனலும் ஆம். தலைவியைக் காண்பதற்குரிய விருப்பை யும் விரைவையும் நெஞ்சத்தின் மேல் ஏற்றிக் கூறினன். தனக்கு முன் நெஞ்சு பிரிந்து தலைவியை யடைந்ததென்னும் இத்தகைய கருத்து,

" கன்றுபுகு மாலை நின்றே ளெய்தி

... ...

தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணெடு மிடைந்த கற்பின் வாணுதல்
அந்தீங் கிளவிக் குறுமகள
மென்றோள் பெறனசைஇச் சென்றவென்னெஞ்சே "

(அகநா. 9 : 20 - 26)

என்பதிலும் காணப்படும்.

'நெஞ்சு என்னினும் முந்தச் சென்றதாயினும் கை நெகிழாது தழுவாமையால் அது சென்றும் பயனில்லை. யான் செல்வின் நெகி ழாது தழுவுவேன்' எனக் கூறினன. உள்ளப் புணர்ச்சியினும் மெய்யுறு புணர்ச்சியே வேண்டுவதென்பது அவன் கருத்து. நனறு மிகுதிப் பொருளது (குறுந். 29 : 4) இருவாம் - இருவராகிய யாம் (கலி. 41 : 3, 43 : 4.)

சோலையின்கண் மலைவு எனைத்தெனக் கூட்டலும் பொருந்தும்.

இதனல் தலைவன் பாகனுக்குத் தனது காம மிகுதியையும் நெஞ்சின் விதுப்பையும் புலப்படுத்தி விரைவில் தேரை விடுதல் வேண்டுமென்று குறிப்பிததான்.

அம்மவும், ஓகாரங்களும், ஏகாரங்களும் அசைநிலைகள்.

(ஒப்பு.) 1. அமர் துணை தழீஇ : குறுந். 215 : 5.

2. (பி - ம்.) நெஞ்சுணை : நற். 204 : 5, 214 : 6 ; அகநா. 157 : 10.

3. கையினை நெகிழ்தலாற் பயனின்மை : "முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது, வைகுதொடிப் பேதை நுதல்" (குறள், 1238.)

5 - 6. புலியின் முழக்கத்திற்குக் கடலின் ஒலி : "வயமாப் போல, ஆலித்துப் பாயு மலைகடற் றண்சேர்ப்ப" (பழ. 40.)

7. எனைத்து : குறள், 515. (உகள)

தோழி கூற்று

[பரத்தை யினிடத்திருந்து மீண்டு வந்த தலைவன் தோழியின் பாற் சூள் கூறித் தெளிவிக்கப் புகுகையில், "எம் நலனைத் தந்து நின்சூளைக் கொண்டு செல்க" என்று அவள் கூறி வாயில் மறுத்தது.]

உஉஅ.பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
தொண்டி யன்னவென் னலந்தந்து
5. கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே.

எ - து. தலைமகன் பரத்தையின் மறுத்தந்து (பி - ம். மறுதந்து) வாயில் வேண்டித் தோழியிடைச் சென்று தெளிப்பான் புக்காற்குத் தோழி சொல்லியது.

[மறுத்தந்து - மீண்டு வந்து (குறுந். 209, கருத்து.) தெளித்தல்-சூள் கூறித் தேற்றுதல்]

குன்றியன்.

(பி - ம்) 2 'வாம்பணைத்'

(ப - ரை) மகிழ்நன்—, பசு அவல் இடித்த - பச்சை அவலை இடித்த, கரு காழ் உலக்கை - கரிய வயிரம் பொருந்திய உலக்கையை, ஆய் கதிர் நெல்லின் - அழகிய கதிரையுடைய நெற்பயிரையுடைய வயலினது, வரம்பு அணைதுயிற்றி - வரப் பாகிய அணையிலே படுக்க வைத்து, ஒள் தொடி மகளிர் - ஒள்ளிய வளையையுடைய பெண்கள், வண்டல் அயரும் - விளையாட்டைச் செய்யும், தொண்டி அன்ன - தொண்டியென்னும் பட்டினத்தைப்

போன்ற, என் நலம் தந்து - எனது பெண்மை நலத்தைத் தந்து விட்டு, நின் சூள் கொண்டனை சென்மோ - நினது சூளைப் பெற்றுக்கொண்டு செல்வாயாக.

(முடிபு) மகிழ்ந, என் நலம் தந்து நின் சூள் கொண்டனை சென்மோ.

(கருத்து) நீ சூள் கூறுவதனால் யாம் மயங்கேம்.

(வி - ரை.) தலைவன் பரத்தையினிடத்திருந்து மீண்டு வந்து தலைவியின் உடம்பாட்டைப் பெறும் பொருட்டுத் தோழியை அணுகி அவளைத் தூது விடக் கருதி அவள் பால் சூளுற்றுத் தான் பரத்தைமையுடையன் அல்லனெனக் கூறியவழி, தோழி, "நின் சூளின் இயல்பை நன்கறிவேம்; அதனை நீயே கொண்டு செல்; யாம் வேண்டேம். எம்பால் நீ நுகர்ந்த நலத்தைத் தந்து செல்க" என்று கூறி வாயில் மறுத்தாள்.

பாசவல் - நெல்லை வருமல் இடித்துச் செய்த அவல். என் நலந்தந்து சென்மோ: 236-ஆம் செய்யுள் வி - ரை பார்க்க. தொண்டி: குறுந். 210.

நெல்: வயலுக்கு ஆகுபெயர். துயிற்றி: துயிலாததனை இங்ஙனம் கூறியது இலக்கணை. மகிழ்நன் - மருத நிலத் தலைவன்.

(ஒப்பு.) 1. பாசவல்: அகநா. 141: 16 - 8; புறநா. 63: 13; சிவக. 68; 1562.

3. வண்டலயர்தல்: அகநா. 180: 3, 330: 2.

மு. குறுந். 243: 3. 1-3. பதிற். 29: 1 - 2.

4. தொண்டியன்ன நலம்: "வளங்கெழு தொண்டி யன்னவிவ ணலனே", "திண்டேர்ப் பொறையன் றொண்டியன்னவெம்" (அகநா. 10: 13, 60: 7.) நலத்தைத்தா வென்றல்: குறுந். 236: 2-6, ஒப்பு.

5. தலைவனது சூள்: குறுந். 384: 4; தொல். கற்பு. 6, 9; ஐங். 56: 4; பரி. 8: 65, 12: 64; கலி. 75: 21, 81: 33. (உ.அ.)

தலைவி கூற்று.

[தலைவன் சிறைப்புறமாக இருக்கையில் தலைவி தோழிக்குக் கூறுவாளாய், "என் தோள்கள் நெகிழ்ந்தன; நாணமும் அகன்றது" என்று கூறி வரைவு கடாயது.]

உஉக. தொடிநெகிழ்ந் தனவே தோள்சா யினவே
விடுநா ணுண்டோ தோழி விடர்முகைச்

சிலம்புடன் கமழு மலங்குகுலைக் காந்தள்
நறுந்தா தூதுங் குறுஞ்சிறைத் தும்பி
பாம்புமிழ் மணியிற் றோன்றும்
முந்தூழ் வேலிய மலிகிழ வோற்கே.

எ - து. சிறைப்புறம்.

ஆசிரியன் பெருங்கண்ணன்.

(பி - ம்) 1 'தொடி நெகிழ்ந்தன' 2 'விடுநாளுண்டோ'

(ப - ரை.) தோழி—, விடர் முகை சிலம்பு உடன் கமழும் - பிளப்பையும் முழைகளையும் உடைய பக்கமலை முழுதும் மணம் வீசும், அலங்கு குலை காந்தள் நறு தாது - அசைகின்ற கொத்துக்களிலுள்ள காந்தட் பூவின் நறிய தாதை, ஊதும் தும்பி - ஊதுகின்ற தும்பி யென்னும் வண்டு, பாம்பு உமிழ் மணியின் தோன்றும் - பாம்பினால் உமிழப்படும் மணியைப் போலத் தோன்றுகின்ற, முந்தூழ் வேலிய - மூங்கிலை வேலியாகவுடைய, மலை கிழவோற்கு - மலைகளையுடைய தலைவன் பொருட்டு, தொடி நெகிழ்ந்தன - என் வளைகள் நழுவின; தோள் சாயின - என் தோள்கள் மெலிந்தன; விடு நாண் உண்டோ - இனி விடுவதற்குரிய நாணம் உள்ளதோ? அது முன்னரே ஒழிந்தது.

(முடிபு) தோழி, மலைகிழவோற்குத் தொடி நெகிழ்ந்தன; தோள் சாயின; விடு நாண் உண்டோ?

(கருத்து) என் நிலையறிந்து தலைவன் விரைவில் வரைந்து கொள்ள வேண்டும்.

(வி - ரை.) தொடி - தோள்வளை; கைவளையுமாம். விடு நாண் - இனி விடப்படும் நாண். 'முன்பே நாணம் ஒழிந்த தாதலின் இனி விடுவதற்கு என்பால் நாணம் என்றொன்றில்லை.' என்றபடி. உண்டோ: ஓகாரம் எதிர்மறை. நறுந்தாது இயல் பிலே கமழ்வதாயினும் தும்பி ஊதியதனால் பின்னுங் கமழ்வ தாயிற்று. பாம்பு காந்தளுக்கும் மணி வண்டுக்கும் உவமைகள்.

காந்தளின் தாதை ஊதி அதன் மணம் எங்கும் பரவும்படி செய்யும் தும்பியைப் போல, என் நலனுகர்ந்து அலர் எங்கும் பரவச் செய்தானெனினும், காந்தளுந் தும்பியும் பொருந்தியது பாம்பும் மணியும் போலும் வெருவரும் தோற்றத்தைத் தந்தது போல, எம் இருவர் நட்பும் அஞ்சுதற்குரியதாயிற்றெனவும் குறிப்புக்கள் தோன்றின.

இதனால் தன் மேனிமெலிவையும் நாணழிவையும் கூறி

வரைவின் இன்றியமையாமையைத் தலைவி தலைவனுக்குப் புலப் படுத்தினளாயிற்று.

(மேற்.) 1. 'மற்றுத் தொடி ஞெகிழ்ந்தனவே தோள் சாயினவே யெனப் பிரிவின்கண் வந்த வேறுபாட்டினை ஈண்டுக் கூறுரோ வெனின், அவை இன்னதன் பின்னர் இன்னது தோற்று மென்னும் முறைமைய அல்ல வாகலின் ஈண்டுக் கூறார்; அவை, விளையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே யென்புழிச் சொல்லப்படும் என்பது' (தொல். மெய்ப். 14, பேர்.)

மு. ஆற்றுமை மிக்க விடத்து ஊழணி தைவரலென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 21, பேர்.)

(ஒப்பு) 1. தொடி நெகிழ்தல்: குறுந். 50: 4-5; 185: 2, 252: 1. தோள் மெலிதல்: குறுந். 87: 5, ஒப்பு; கலி. 26: 10; அகநா. 147: 12.

தொடி நெகிழ்ந்து தோள் சாய்தல்: குறுந். 185: 2, ஒப்பு; ஐங். 28: 3-4; அகநா. 387: 1.

விடர் முகை: குறுந். 218: 1, ஒப்பு.

3. சிலம்புடன் கமழும் காந்தள்: "கறுந்தண் சிலம்பி ஞறுகுலைக் காந்தள்" (ஐங். 226: 2); "அடுக்கநா றலர்காந்தள்" (கலி. 59: 3.)

குலைக் காந்தள்: குறுந். 1: 4, ஒப்பு.

3-4. காந்தளை ஊதுந் தும்பி: கலி. 43: 8-9; அகநா. 108: 15-6, 138; நற். 185: 8-10, 359: 2; நாலடி. 283.

5. பாம்புமிழ் மணி: குறிஞ்சிப். 221, அகநா. 72: 14-5.

3-5. காந்தளுக்குப் பாம்பு உவமை: குறுந். 185: 5-7; கலி. 45: 2-3; அகநா. 108: 12-5; கா. 11. திணைமாலை. 107; திணைமொழி. 3, 29; திருச்சிற். 233, 324.

வண்டுக்கு நிலமணி: "சில தும்பி ... ... நீலம் புரைவன மலகாணும்" (கம்ப. வனம்புகு. 12.)

காந்தளுக்குப் பாம்பும் தும்பிக்கு மணியும்: "திருமணி யுமிழ்ந்த நாகங் காந்தட், கொழுமடற் புதுப்பூ வூதுந் தும்பி, நன்னிற மருளு மருவிடர்" (அகநா. 138: 17-9.) 6. முந்நூற் வேலி: குறுந். 18: 1, ஒப்பு. (உகக)

தலைவி கூற்று.

[வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி ஆற்றுளெனக் கவன்ற தோழியை நோக்கி, "நான் அவர் மலையை நோக்கி ஆற்றினேன்; மாலைக் காலத்தில் அது மறைகின்றது; ஆதலின் ஆற்றேனுயினேன்" என்று தலைவி கூறியது.]

உசo. பனிப்புத லிவர்ந்த பைங்கொடி யவரைக்
கிளிவா யொப்பி னெளிவிடு பன்மலர்

வெருக்குப்பல் லுருவின் முல்லையொடு
வாடை வந்தன் றலையு நோய்பொரக் [களுல
5. கண்டிசின் வாழி தோழி தெண்டிரைக்
கடலாழ் கலத்திற் றோன்றி
மாலை மறையுமவர் மணிநெடுங் குன்றே.

எ - து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கொல்லன் அழிசி (பி - ம். கொல்லனழிசி.)

(பி - ம்.) 2 'பணமலர்' 3 'வெருகுப்பல்', 'களுலி' 4 'நோயோர்க்' 6 'றோற்றி'

(ப - ரை.) தோழி—, பனி புதல் இவர்ந்த - குளிர்ச்சியையுடைய புதலின்கட் படர்ந்த, பசு கொடி அவரை - பசிய கொடியாகிய அவரையினது, கிளிவாய் ஒப்பின் ஒளி விடு பல் மலர் - கிளிமூக்கை ஒப்பாகவுடைய ஒளியை வெளிப்படுத்தும் பல மலர்கள், வெருகு பல் உருவின் முல்லை யொடு களுல - காட்டுப்பூனையின் பல்லைப் போன்ற உருவத்தையுடைய முல்லை மலர்களோடு நெருங்கும்படி, வாடை வந்ததன் தலையும் - வாடை வீசுங்காலம் வந்ததற்கு மேலும், நோய் பொர - வருத்தம் என்னை அலைக்கும் வண்ணம், அவர் மணி நெடு குன்று - தலைவரது மணிகளுண்டாகும் உயர்ந்த குன்று, கடல் ஆழ் கலத்தில் தோன்றி - கடலில் ஆழ்கின்ற கப்பலைப் போலத் தோன்றி, மாலை மறையும் - மாலைக் காலத்தில் மறையும்; கண்டிசின் - இதனைக் காண்பாயாக.

(முடிபு) தோழி, களுல வாடை வந்ததன்றலையும் பொரக் குன்று மறையும்; கண்டிசின்.

(கருத்து) அவர் மலையை நோக்கி ஆற்றினேன்; அது மறைவதால் ஆற்றேனுயினேன்.

(வி - ரை.) அவரை யென்றது இங்கே மொச்சையை. அவரையின் பூவிற்குக் கிளிமூக்கு உவமை. "வாடையே துன் பத்தை உண்டாக்குகின்றது; அதற்கு மேலும் இம்மாலையால் நோய் உண்டாகும்" என்றுள். தலையும்: "கன்லு நோய்த் தலையும்" (கலி. 66 : 13.) வாழி: அசை நிலை.

இருளில் மறையும் குன்றுக்குக் கடலில் ஆழும் கலம் உவமை. கதிரவன் மறைய மறைய, மலை அடியிலிருந்து வரு மாதலின் ஆழுங் கலத்தை உவமை கூறினள்.

இருளுக்குக் கடல் நீரை உவமை கூறும் மரபு,

"கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே" (குறுந். 387) என்பதிலும் காணப்படும்.

தலைவி தலைவனது குன்றை நோக்கி ஆற்றியிருக்கும் வழக்கம் இந்நூல், 249 - ஆம் செய்யுளாலும் உணரப்படும்.

மணி நெடுங்குன்று - நீல மணியைப்போன்ற நெடிய குன்றெனலும் ஆம் (குறுந். 367 : 6 - 7.)

(மேற்.) மு. பருவங் கண்டு ஆற்றாது தலைவி தோழிக்குக் கூறியது (தொல். களவு. 21, ந.)

(ஒப்பு.) 1. பனிப் புதல் : குறுந். 98 : 4, ஒப்பு.

1-2. அவரையின் செம்மலர் : "பைங்கொடி யவரை பவழங் கோப்பவும்" (சிறுபாண். 164.)

3. முல்லை யரும்பிற்கு வெருகின்பல் : குறுந். 220 : 3-5, ஒப்பு.

4. தலைவி வாடையால் வருந்துதல் : குறுந். 103 : 4, ஒப்பு.

5. கண்டிசின் தோழி : குறுந். 112 : 5, ஒப்பு.

7. மணி நெடுங்குன்று : சிறுபாண். 1 ; ஐங். 207 : 4, 209 : 5, 250 : 2 ; பரி. 13 : 1. பரி. திரட்டு, 2 : 3.

மலையில் மணி உண்டாதல் : புறநா. 218 : 2 ; நான்மணிக். 5 ; சிலப். 2 : 77 ; சீவக. 4.

6-7. தலைவனது மலையைக் கண்டு தலைவி உவத்தல் : "சேணெடுங்குன்றங் காணிய நீயே" (நற். 222 : 10); "அன்னாய் வாழி வேண்டன்னை நம்படப்பைப், புலவுச் சேர் துறுகல் லேறியவர் நாட்டுப், பூக்கெழு குன்ற நோக்கி நின்று, மணிபுரை வயங்கிழை நிலைபெறத், தணிதற்கு முரித்தவ ளுற்ற நோயே" (ஐங். 210); "உள்ளா ராயினு முளனேயவர் நாட்டு..... கடுங்கிற லணங்கி னெடும்பெருங் குன்றத்துப், பாடின் னருவி சூடி, வான் றேய் சிமையந் தோன்ற லானே" (அகநா. 378 : 19 - 24); "தோழி யென், நெஞ்சிற் பிரிந்ததூஉ மிலரேதம், குன்ற நோக்கங் கடிந்தது மிலரே" (தொல். களவு. 20, ந. மேற். "தொடி நிலை".)

தலைவன் குன்று மறையத் தலைவி வருந்துதல் : "அவர் நாட்டு, மணிநிற மால்வரை மறைதொறிவள், அறைமலர் நெடுங்க ணீர்ந்தன பனியே" (ஐங். 208 : 3 - 5.) (உசா)

தலைவி கூற்று

[பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழியை நோக்கி, "யான் ஆற்றுவதற்கு எண்ணியும் என் கண்கள் தாமே அழுதன ; என் அவல நிலைக்கு யாது செய்வேன்!" என்று தலைவி கூறியது.]

உசாத். யாமே காமந் தாங்கவுந் தாந்தம்
கெழுதகை மையி னழுதன தோழி

கன்ருற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்
மன்ற வேங்கை மலர்பத நோக்கி
5. ஏறு திட்ட வேமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பும்
குன்ற நாடற் கண்ட வெங் கண்ணே.

எ - து. பிரிவிடை ஆற்ருளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கபிலர்.

(பி - ம்.) 1 'யாமெங்', 'தாங்கலம்' 2 'கெழுதகைமையினுள்' 4 'மலர்ப்பதம்' 7 'கண்டவென்'

(ப - ரை.) தோழி—, யாமே காமம் தாங்கவும் - நாம் காம நோயைப் பொறுத்து ஆற்றியிருப்பவும், கன்று ஆற்றுப்படுத்த புன் தலை சிறு அர் - கன்றுகளை வழியிலே செலுத்திய புல்லிய தலையையுடைய சிறுவர்கள்; மன்றம் வேங்கை மலர் பதம் நோக்கி - மன்றத்தின் கண் உள்ள வேங்கை மரம் மலரும் செவ்வியைப் பார்த்து, ஏறு அது இட்ட ஏமம் பூசல் - அம் மரத்தின் மேல் ஏறுமல் செய்த இன்பத்தைத் தரும் ஆரவாரம், விண் தோய் விடர் அகத்து இயம்பும் - வானத்தை அளாவிய மலை முழையின் கண் எதிரொலியுண்டாக்கும், குன்றம் நாடன் - குன்றங்களையுடையநாட்டுக்குத் தலைவனை, கண்ட எம் கண் தாம் - கண்ட எம் கண்களாகிய தாம், தம் கெழுதகைமையின் - தமக்கு எம்பாலுள்ள உரிமையினால், அழுதன - தலைவர் பிரிந்தமை கருதி அழுதன.

(முடிபு) தோழி, யாமே காமம் தாங்கவும் கண் தாம் கெழுத கைமையின் அழுதன.

(கருத்து) யான் ஆற்ற எண்ணியும் ஆற்றுமை மீதூர்கின்றது.

(வி - ரை) யாமே: ஏகாரம் பிரிநிலை. தாங்குதல் - தடுத்தல்; வெளிப்படாது அடக்குதல். தாம்: அசைநிலையுமாம். கெழுத கைமை - உரிமை; குறள். 802. கண்ட உரிமை யென்பதும் பொருந்தும். கன்று - யானைக்கன்று; பசுக் கன்றுமாம். ஆற்றுப் படுத்த - போக்கிய (கலி. 85 : 16, ந.) புன்றலை - சிவந்த தலையுமாம். மன்றம் - பொதுவிடம். தெய்வம் உறைதலின் வேங்கை மரத்தின் மேல் ஏறுராயினர்.

வேங்கை மலரைப் பறிக்கக் கருதுவார் புலி புலியென்று ஆரவாரித்தல் வழக்கம்;

"ஒலிசினை வேங்கை கொய்குவஞ் சென்றுழிப்
புலி புலி யென்னும் பூச லுேன்ற" (அகநா. 48 : 6-7.)
கண்ணே : ஏகாரம் அசைநிலை.

'தலைவி ஆற்றுள்' எனக் கவன்ற தோழிக்குத் தான் ஆற்றுவ லென்பது படவும், ஆற்றுமையைக் கண்களின்மேல் ஏற்றியும் கூறினாள்.

(மேற்.) 3. கருமச் சிதைவு இல்வழிப் பல பொருளொரு சொல்லைக் கிளந்து கூறவேண்டா (தொல். கிளவி. 55, கல், ந.) மு. கையறு தோழி கண்ணீர் துடைத்த காலத்துத் தலைவி கூறியது (தொல். களவு. 21, இளம், 20, ந.) ; தலைமகள் கலுழ்தற் காரணம் கூறியது (நம்பி. 176.)

(ஒப்பு.) 1. காமந் தாங்குதல் : குறுந். 290 : 1.

3. ஆற்றுப் படுத்த : முல்லை. 81. புன்றலைச் சிறார் : மலைபடு. 217, 253.

4. மன்ற வேங்கை : ஐங். 259 : 2 ; அகநா. 232 : 7.

5. ஏமப் பூசல் : மலைபடு. 306.

4-5. வேங்கை மலரின் பொருட்டு இடும் ஆரவாரம் : "கருங்கால் வேங்கை யிருஞ்சினைப் பொங்கர், நறும்பூக் கொய்யும் பூசல்" (மதுரைக். 296-7); "தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை, மலைமா ரிடூஉ மேமப் பூசல்" (மலைபடு. 305-6); "கிளர்ந்த வேங்கைச் சேணெடும் பொங்கர்ப், பொன்னேர் புதுமலர் வேண்டிய குறமகள், இன்னு விசைய பூசல் பயிற்றலின்" (அகநா. 52 : 2-4.)

6. விடரகத்தியம்பும் : குறுந். 42 : 3 மு. அகநா. 8 : 12.

2-7. கண்கள் தாமே அழுதல் : "தன்வரைத் தன்றியுங் கலுழ்ந்தன கண்ணே", "கண்ணே காமங் கரப்பரி யவ்வே", "கரப்பவுங் கரப்பவுங் கைம்மிக், குரைத்த தோழி புண்க ணீரே (நற். 12 10, 23 : 9, 263 : 9-10.)
(உசக)

செவிலித்தாய் கூற்று

[தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் மனைக்குச் சென்று மீண்டு வந்த செவிலித்தாய், "தலைவனும் தலைவியும் பிரிவின்றி ஒன்றி வாழ்கின்றனர். அவன் எங்கே சென்றாலும் விரைவில் வந்து விடுகின்றான்" என்று நற்றாய்க்குக் கூறியது.]

உசஉ. கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஞண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்

5. வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவர லறியாது செம்ம றேரே.

எ - து. கற்புக் காலக்துக் கடிநகர் சென்ற செவிலித்தாய் நற்றாய்க்குச் சொல்லியது.

[கடிநகர் - தலைவன் தலைவியுடன் இல்லறம் புரியும் மனை.]

குழற்றத்தன்.

(பி - ம்.) 1 'கானக்' 2 'ஓண்பொரி', 'நுண்பொறி' 5 'செல்லினும்' 6 'சேர்ந்துவர', செம்மற்றேரே'

(ப - ரை.) மடந்தை - தலைவி, கானங் கோழி கவர் குரல் சேவல் - காட்டுக் கோழியினது கவர்த்த குரலையுடைய சேவலினது, ஒள் பொறி எருத்தில் - ஒள்ளிய புள்ளிகளையுடைய கழுத்தில், தண் சிதர் உறைப்ப - தண்ணிய நீர்த்துளி துளிக்கும்படி, புதல் நீர் வாரும் - புதலின்கண் நீர் ஒழுகும், பூ நாறு புறவில் - மலர் மணம் வீசுகின்ற முல்லைநிலத்தின்கண் அமைந்த, சிறு ஊரோள் - சிறிய ஊரில் உள்ளாள்; செம்மல் தேர் - தலைவனது தேர், வேந்து விடு தொழிலொடு - வேந்தனால் ஏவப்பட்ட தொழிலை மேற்கொண்டு, வேறு ஊர் செலினும் - வேற்றூருக்குச் சென்றாலும், சேந்துவரல் அறியாது - சென்ற ஊரின் கண்ணே தங்கிப் பின் வருதலை அறியாது; உடனே வந்து விடும்.

(முடிபு) மடந்தை சிறாரோள்; செம்மல் தேர் செலினும் அறியாது.

(கருத்து) தலைவனும் தலைவியும் பிரிவின்றி ஒன்றி வாழ்கின்றனர்.

(வி - ரை.) கானங் கோழி: அம் சாரியை. மடந்தை: பருவங் குறியாது தலைவியென்னும் துணையாய் நின்றது. செலினுமென்றது செல்லுதலின் அருமையைப் புலப்படுத்தியது. வேற்றூர் செலினுமென்று வாளாகூறுது, வேந்துவிடு தொழிலொடு செலினுமென்றது, பிறவற்றிற்காகச் செல்லுதலின்மையையும், அரசனது ஆணைக்கு அடங்குதல் இன்றியமையாததாலின் அதன் பொருட்டே செல்லுதலையும் குறித்தது.

"தலைவன் தலைவியைப் பிரியாது உறைகின்றான். எச் செயல் குறித்தும் பிரிந்து செல்வதில்லை. அரசனது ஏவல் கடத்தற் கரிதாதலின் அதன் பொருட்டு மாத்திரம் அரிதிற் சிலகால் வேற்றூர் போவான். போயினும் உடனே மீள்வன்" என்ற கருத்துக்களை இவ்வடிகள் கொண்டுள்ளன.

(மேற்.) 1. சேவலென்பது காட்டுக் கோழிக்கு வந்தது (தொல். மரபு. 48, பேர்.); னகர வீறு வேற்றுமைக்கண் அம்முச்சாரியை பெற்று வந்தது (தொல். புள்ளி மயங்கு. 110, ந.)

மு. செவிலி தலைமகனது நிலைமையும் தலைமகளது நிலைமையும் பார்த்து வந்து நற்றாய்க்குச் சொல்லியது (இறை. 53.); தலைவியின் மாண்பு களை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முட் கூறியது (தொல். கற்பு. 11, இளம்.); செவிலி நற்றாய்க்கு உவந்துரைத்தல் (தொல். கற்பு. 12. ந.); செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தது (நம்பி. 203.)

(ஒப்பு.) 1. மு. மலைபடு. 510. 2. தண் சிதருறைப்ப : குறுந். 104 : 2.
3. புதல் நீர் வாரும் புறவு : குறுந். 98 : 4, ஒப்பு.
5. வேந்து விடு தொழில் : தொல். மரபு. 81.

மு. "தெவ்வர் மேற்செலினும், பெருநெடுந் தோளண்ணல் பேர்ந் தன்றித் தங்கான்", "தேர்மன்ன னேவச்சென் றாய மூணமிசைச் சேந்தறியா, போர்மன்னு வேலண்ணல் பொன்னெடுந் தேர்பூண் புரவிகளே", "வாரார் கழன்மன்னன் றானே பணிப்பினும் வல்லத்தத் தன், நேரார் முனையென்றுந் தங்கி யறியா னெடுந்தகையே" (பாண்டிக்.); "நனையகத் தல்கிய நாண்மல ரோதி நயந்துறையும், மனையகத் தல்லிடை வைகுத லாற்றஞ்சை வாணனென்னார், வினையகத் தல்குதல் செல்லுவ ரேனுமவ் வேந்தர்பொற்றேர், முனையகத் தல்கல்செல் லாதொரு நாளு முகிழ்நகையே" (தஞ்சை. 376.) (உசஉ)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி வருந்தியது கண்டு, "நீ ஆற்றியிருக்க வேண்டும்" என்று வற்புறுத்திய தோழியை நோக்கி, "நான் தலைவனை நினைப்பதனால் ஆற்றுமை மீதூர் கின்றது; இனி நினையேன்" என்று இரங்கித் தலைவி கூறியது.]

உசந. மானடி யன்ன கவட்டிலை யடும்பின்
தார்மணி யன்ன வொண்பூக் கொழுதி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
புள்ளிமிழ் பெருங்கடற் சேர்ப்பனை
5. உள்ளென் றோழி படீஇயரென் கண்ணே.

எ - து. வன்புறை யெதிர் அழிந்து சொல்லியது.
[வன்புறை - வற்புறுத்துதல். அழிந்து - இரங்கி.]
நம்பி குட்டுவன்.
(பி - ம்.) 2 'வெண்பூக்' 4 'புள்ளுமிழ்' 'படிகியரென்'

(ப - ரை.) தோழி—, மான் அடி அன்ன கவடு இலை அடும்பின்- மானின் குளம்பைப் போன்ற பிளவையுடைய இலைகளையுடைய அடும்பினது, தார் மணி அன்ன ஒள் பூ கொழுதி - குதிரைக் கழுத்திலிடும் மாலையின் கண் உள்ள மணியைப் போன்ற ஒள்ளிய பூவை வலிய அலர்த்தி, ஒள் தொடி மகளிர் - ஒள்ளிய வளையலையுடைய பெண்கள், வண்டல் அயரும் - விளையாட்டைச் செய்யும், புள் இமிழ் பெருகடல் சேர்ப்பனை - பறவைகள் ஒலிக்கும் பெரிய கடற்கரைக்குத் தலைவனை, உள்ளேன் - இனி நினையேன்; ஆதலின், என்கண் படீஇயர் - என் கண்கள் துயில்க.

(முடிபு) தோழி, சேர்ப்பனை உள்ளேன்; என்கண் படீஇயர்.

(கருத்து) தலைவனை நினையாதிருத்தல் அரிதாதலின் ஆற்றுமையும் நீங்கல் அரிது.

(வி - ரை.) தலைவனது பிரிவினால் தலைவி துயிலொழிந்தனள். அது கண்ட தோழி, "நீ துஞ்சாதது என்? நீ ஆற்றியிருத்தல் வேண்டும்" என்று வற்புறுத்திக் கூறினாள். அது கேட்ட தலைவி, தன் இயல்பறியாது தோழி கூறுவதற்கு நெஞ்சழிந்து, "நான் தலைவனை நினைந்தேன்; அதனால் என் கண்கள் துயிலொழிந்தன. இனி நீ வற்புறுத்தியமையின் நினையேன்; என் கண்கள் துயிலுக" என்றாள். தலைவனை நினையாமையும் கண் துயிலுதலும் கூடா வென்பதே தலைவி கருத்து. அடும்பு - நெய்தனிலத்தில் வளரும் ஒரு வகைக் கொடி. மகளிர் நெய்தனிலத்தில் அடும்பின் மலரைக் கொய்து வண்டலயரும் வழக்கம்,

> "வண்ட றைஇயும் வருதிரை யுதைத்தும்
> குன்றேங்கு வெண்மணற் கொடியடும்பு கொய்தும்"
>
> (நற். 254: 1-2.)

என்பதனாலும் அறியப்படுகின்றது.

தம் விளையாட்டொன்றையே கருதி மகளிர் பூவை அலைக்கும் சேர்ப்பனென்றது, தன் வினையொன்றையே கருதிப் பிரிந்து என்னை வருந்தச் செய்வானென்னுங் குறிப்பினது.

(மேற்.) மு. பெரிதாகிய இடையீட்டினுள் அரிதாகத் தலைவன் வந்த ஞான்றும் பெருத ஞான்றைத துன்பமிகுதியாற் பெற்றதனையும் கனவு போன்று கொண்டு இகழ்ந்திருப்பின் தலைவிக்குக் கூற்று நிகழும் (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. கவட்டிலை யடும்பு: "ஞெண்பன் மலர கவட்டிலை யடும்பு" (அகநா. 80: 8.) அடும்பின் இலைக்கு மானின் அடி: "கான லடும்பின் கவட்டிலைகள்—மானின், குளம்பேய்க்கு நன்னுடன்" (நள. கலிதொடர். 89.)

2. பூக் கொழுதுதல் : குறுந். 85 : 5. 3. மு. குறுந். 238 : 3.
4. புள்ளிமிழ் சேர்ப்பு : " புள்ளிமிழ் கானல் " (குறுந். 299 : 2.)
5. தலைவி துஞ்சாமை : குறுந். 6 : 4, ஒப்பு. மு. ஐங். 142 : 3. (உசாத்)

தோழி கூற்று

[தலைவன் இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற காலத்துக் காப்பு மிகுதியால் தலைவியைக் காணப் பெறுமையின், தோழி அதன் காரணங்கூறி வரைவுகடாயது]

உசா. பல்லோர் துஞ்சு நள்ளென் யாமத்
துரவுக்களிறு போல்வந் திரவுக்கதவ
கேளே மல்லேங் கேட்டனம் பெரும [முயறல்
ஓரி முருங்கப் பீலி சாய
5. நன்மயில் வலைப்பட் டாங்கியாம்
உயங்குதொறு முயங்கு மறனில் யாயே.

எ - து. இரவுக்குறி வந்தொழுகா நின்ற தலைமகற்குத் தம் காவல் மிகுதியாற் (பி - ம். தாம் காவன் மிகுதியாற்) புறப்பட்டு எதிர் கொள்ளப் பெறுதவழி, பிற்றை (பி - ம். இறைை) ஞான்று தோழி, " வரைந்து கொளினல்லது இவ்வொழுகலாற்றின் (பி - ம். இவ்வொழுகலாது) இனிக் கூடல் (பி - ம். கூட) அரிது " என வரைவு கடாயது.

[பிற்றை ஞான்று - மறுநாள். இவ்வொழுகலாதென்றது களவொழுக்கத்தை.]

கண்ணன்.

(பி - ம்) 2 'கதவு' 3 'கேட்டனெம்'

(ப - ரை.) பெரும - தலைவ, பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து - ஊரிலுள்ளார் பலரும் துயிலும் இருள் செறிந்த இடையிரவின் கண், உரவு களிறு போல் வந்து - வலியையுடைய களிற்றைப் போல வந்து, இரவு கதவம் முயறல் - இராக் காலத்தே தாழிட்ட கதவைத் திறக்க முயன்றதனால் உண்டான ஒலியை, கேளேம் அல்லேம் - யாம் கேளேம் அல்லேம்; கேட்டனம் - கேட்டேம்; ஓரி முருங்க - தலைக் கொண்டை சிதைய, பீலி சாய - தோகை மெலிய, நல் மயில் வலை பட்டாங்கு - நல்ல மயில் வலையின் கண்ணே அகப்பட்டாற் போல, யாம் உயங்து தொறும் - யாம் வருந்துந் தோறும், அறன் இல் யாய் - மறமிக்கதாய், முயங்கும் -

எம்மைத் தழுவு வாள்; அதனுல் நின் குறிப்பறிந்து நின்பால் வர இயல வில்லை.

(முடிபு) பெரும, கதவம் முயறல் கேளேம் அல்லேம்; கேட்டனம்; யாய் முயங்கும்.

(கருத்து) காவல் மிகுதியால் நின்னேத் தலைவி காண்டல் அரிதாதலின் வரைந்து கோடலே நலம்.

(வி - ரை.) தலைவன் இரவுக்குறியின் கண் தலைவியோடு அளவளாவுதற்கு வந்து கதவைத் தட்டித் தன் வரவைக் குறிப்பித்தான். அப்பொழுது அவன் வந்தது தெரிந்த தலைவி வருந்தினள்; அவளது வருத்தத்தின் காரணத்தை உணராத செவிலி அவள் அச்சத்தால் அங்ஙனம் வருந்தினளென்று கருதி இறுகத் தழுவிக் கொண்டாள். இச்செய்தியையே தோழி தலைவனுக்குக் கூறினள்.

பல்லோர் துஞ்சும் யாமமாதலின் தலைவன் செய்த ஒலி தெளிவாகக் கேட்டது. தாம் கேட்டதை வற்புறுத்திக் கூறுவாளாகி எதிர் மறையாலும் உடம் பாட்டாலும் உணர்த்தினன். நள் - நளி யென்பதன் திரிபு; மலைபடு. 397.

ஓரி - ஆண் தலைமயிர்; இங்கே ஆண்மயிலின் கொண்டைக் காயிற்று. தலைவனே எதிர்ப்படாது தடுத்தலின் அறனில் யா யென்றுள்.

(மேற்.) மு. காப்பு வரையிறத்தல் (தொல். களவு. 24, இளம்.); இரவுக் குறிக் காப்பின் கடுமை தோழி கூறியது (தொல். களவு. 23, ந.)

(ஒப்பு.) 1. நள்ளென் யாமம்: குறுந். 6 : 1, ஒப்பு. பல்லோர் துஞ்சும் யாமம்: (குறுந். 6 : 1-3, 302 : 6-7, 355 : 4); "துஞ்சூர் யாமத்தும்", "பலர்மடி பொழுதில்" (ஐங். 13 : 4, 104 : 2)

2. கலிறு தலைவனுக்கு: குறுந். 161 : 7, ஒப்பு.

தலைவன் கதவம் முயறல்: "கலையாகின் குறிவந்தெங் கதவஞ் சேர்ந் தசைத்தகை", "பொருந்துநோன் கதவொற்றிப் புலம்பியா முலமர" (கலி. 68 : 8, 83 : 2); "மீழாக் கதவ மசையினன் புகுதந்து", "கடைநின், றருங்கடிக் காப்பி னகனக மொருசிறை, எழுதியன்ன திண்ணிலைக் கதவம், கழுதுவழங் கரைநாட் காவலர் மடியத், திறந்து" (அகநா. 102 : 13, 311 : 1-5.)

5. மயில் வலைப்படுதல்: குறிஞ்சிப். 250; கலி. 128 : 16; சிவக. 424, ந.

6. அறனில் யாய்: குறுந். 262 : 2; நற். 63; 6, 145 : 7, 376 : 12.

அன்னை தலைவியை முயங்கல்: குறுந். 353 : 6-7. (உசா)

தலைவி கூற்று

[வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி ஆற்றுளெனக் கவன்ற தோழியை நோக்கி, "தலைவனது கொடுமையைப் பிறர் அறியின் அது மிக இன்னாது; ஆதலின் யான் ஆற்றியிருப்பேன்" என்று தலைவி கூறியது.]

உரு. கடலங் கான லாய மாய்ந்த வென்
நலமிழந் ததனினு நனியின் னாதே
வாள்போல் வாய கொழுமடற் றுழை
மாலை வேனட்டு வேலி யாகும்
5. மெல்லம் புலம்பன் கொடுமை
பல்லோ ரறியப் பரந்து வெளிப் படினே.

எ - து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மாலை மாறன்.

(பி - ம்.) 4 'மாலை நாட்டு', 'மானில வெனட்டு', 'மரலை வெனட்டு'

(ப - ரை.) தோழி, வாள்போல் வாய - வாளரம் போன்ற விளிம்பையுடைய, கொழு மடல் தாழை - கொழுவிய மடலையுடைய தாழையானது, மாலை வேல் நாட்டு வேலி ஆகும் - வரிசையாக உள்ள வேல்களை நாட்டிய வேலியைப் போலப் பயன் தரும், மெல்லம் புலம்பன் கொடுமை - மெல்லிய கடற்கரையையுடைய தலைவன் என் மாட்டுச் செய்த கொடுமை, பல்லோர் அறிய பரந்து வெளிப்படின் - பலர் அறியும் வண்ணம் பரவி வெளிப்பட்டால், அங்ஙனம் வெளிப்படுதல், கடல் அம்கானல் ஆயம் - அழகிய கடற்கரைச் சோலையிலே விளையாடும் மகளிர் கூட்டத்தினர், ஆய்ந்த என் நலம் இழந்ததனினும் - பாராட்டிய எனது பெண்மை நலத்தை நான் இழந்ததைக் காட்டிலும், நனி இன்னாது - மிக இன்னாமையைத் தருவதாகும்.

(முடிபு) புலம்பன் கொடுமை வெளிப்படின் நலம் இழந்ததனினும் இன்னாது.

(கருத்து) என் துயரைப் பிறர் அறியாவாறு ஆற்றுவேன்.

(வி - ரை.) கடலங்கானல் : அம் சாரியையுமாம். ஆயம் ஆய்ந்த நலனுவது, எல்லாருடைய நலனிலும் சிறப்பாகத் தெரிந்

தெடுத்துப் பாராட்டும் நலன். கானலில் நலமிழந்ததனினு மெனக் கூட்டிப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். வாள் - கருக் கமைந்த வாயையுடைய கருவி. இயல்பாகவே வளர்ந்த தாழை செயற்கை வேலியைப் போலத் தோற்றியது. மெல்லம் புலம்பன்: அம் சாரியை. புலம்பு - கடற்கரை. ஆயம் - மக்கட் டொகுதி; குறுந். 294: 2; அகநா. 11: 7. வெளிப்படுதல் இன்னுதெனச் சொற் கூட்டியுரைக்க. கொடுமை யென்றது பிரிந்து சென்றதை.

செயற்கையானன்றி இயல்பாகவே உள்ள தாழை வேலி யாவது போல, நீ கூற வேண்டாமே இயல்பாகவே தலைவன் கொடுமையை நான் மறைத்து ஆற்றுவேனென்பது குறிப்பு.

தலைவி கூற்று

(ஒப்பு.) 2. நனியின்னாதே: அகநா. 392: 10.

2. ஒப்பு: "நாடிழந் ததனினு நனியின்னாது" (புறநா. 165: 11.)

1-2. ஆயம் ஆய்ந்த நலம்: "வல்லோ ராய்ந்த தொல்கவின் றெலைய" (நற். 283: 4); "பலராய் மாண்கவின்" (அகநா. 98: 12.)

3. தாழையின் மடலுக்கு வாள்: "அரவுவாள் வாய மூள்ளிலைத் தாழை" (நற். 235: 2; குறள், 1261.)

4. வேல் நாட்டு வேலி: "எஃகுடன்றி" (பட். 78); "வாண் மதிலாக வேன்மிகு யுயாத்து" (பதிற். 33: 7); "வேன் மிடைந்த வேலியும்" (சீவக. 279); "சுற்றிலும் வேலியிட்ட தவர்களிட்ட வில்லும் வாளும் வேலுமே" (திருவாலங்காக். 53.)

3-4. தாழைவேலி: "கண்டல் வேலி" (நற். 191: 5, 207: 1.)

5. மெல்லம் புலம்பன்: குறுந். 5: 4, ஒப்பு.

தலைவனது கொடுமை: குறுந். 9: 7, ஒப்பு; கலி. 77: 14.

(உசாவு)

[இரவுக் குறி வந்த தலைவன் சிறைப்புறத்தில் இருப்ப, தலைவி தோழியை நோக்கிக் கூறுவாளாய், "நேற்று இரவில் ஒரு தேர் ஈண்டுப் போந்து சென்றது என்று சிலர் சொல்ல, அது முதல் தாய் என்னை வருத்துகின்றாள்" எனக்காவலன் மிகுதியை உணர்த்தி வரைவு கடாவச் செய்தது.]

உசாவு. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
களிற்றுச்செவி யன்ன பாசடை மயக்கிப்
பனிக்கழி துழவும் பாடுட னெனித்தோர்
தேர்வந்து பெயர்ந்த தென்ப வதற்கொண்

5 டோரு மலைக்கு மன்னை பிறரும்
பின்னுவிடு கதுப்பின் மின்னிழை மகளிர்
இளையரு மடவரு முளரே
அலையாத் தாயரொடு நற்பா லோரே.

எ - து. சிறைப்புறம்.

கபிலர்.

(பி - ம்.) 1 'நிரையது' 2 'மயக்கிய' 3 'கழித்துழவும்', 'பாஞணீத்தோர்' 4 'பெயருமென்ப' 5 'மன்ன' 8 'நற்பா லோரே'

(ப - ரை) தோழி. பெரு கடல் கரையது - பெரிய கடற் கரையின்கண் உள்ளதாகிய, சிறு வெள் காக்கை - சிறிய வெண்மையையுடைய காக்கை, களிறு செவி அன்ன - களிற்றினது காதைப் போன்ற, பசு அடை மயக்கி - பசிய இலையைக் கலக்கி, ⁽ளி கழி - குளிர்ச்சியை யுடைய கழி நீரை, துழவும் - இரையின் பொருட்டுத் துழாவுகின்ற, பால் நாள் - பாதி இரவில், தனித்து ஓர் தேர் வந்து பெயர்ந்தது என்ப - தனியாக ஒரு தேர் இங்கே வந்து மீண்டு சென்றதென்று அயலார் கூறுவர்; அதற்கொண்டு - அது தொடங்கி, அன்னை - தாய், அலைக்கும் - என்னைத் துன்புறுத்துகின்றாள்; பின்னு விடு கதுப்பின் - பின்னல் நாலவிடப்பட்ட கூந்தலையுடைய, மின் இழை மகளிர் - மின்னுகின்ற ஆபரணத்தை யணிந்த மகளிருள், இளையரும் மடவரும் - இளமையுடையோரும், மடப்ப முடை யோருமாகிய, பிறரும்—, உளர் - இருக்கின்றனர்; அவர், அலையா தாயரொடு - தம்மை வருத்துதல் இல்லாத தாய்மாரோடு, நல் பாலோர் - நல் வினையுடையர்.

(முடிபு) தேர் வந்து பெயர்ந்ததென்ப; அன்னை அலைக்கும்; மகளிர் இளையரும் மடவரும் பிறரும் உளர்; அவர் நற்பாலோர்.

(கருத்து) இப்பொழுது காப்புமிக்கதாதலின், தலைவன் என்னை வரைந்து கொள்வதே நலம்.

(வி - ரை) சிறுவெண்மை யென்றது கழுத்திலுள்ள நிறத்தை. பாசடை - நெய்தலின் இலை முதலியன. அதற் கொண்டு - அது தொடங்கி (குறிஞ்சிப். 237, ந.); அதனைக் காரணமாகக் கொண்டு எனலுமாம்.

ஓரும்: அசைநிலை; இங்ஙனம் வந்த தேர் யாவரதென ஆராய்வாளெனலும் ஒன்று. அலைத்தலாவது புறம் போக லென்று காத்தல்.

பிறரும் இளையரும் மடவரும் உளரென்றமையின் தலைவி இளைய ளென்பதும் மடவளென்பதும் பெறப்பட்டன; உளரே: ஏகாரம் அசைநிலை. நற்பாலோரே: ஏகாரம் தேற்றம். யான் அந் நற்பால் பெற்றிலே னென்பது எச்சம்.

இதனால் இரவுக்குறியினால் உண்டாகும் அச்சமுணர்த்தி வரைதலே நலனென்னுங் கருத்துண்டாகச் செய்தாள். தலைவன் வரைதல் இதன் பயன்.

(மேற்.) மு. பிறர்கூற்றால் தமர் தலைவியைக் காத்தற்கண் தலைவி கூறியது (தொல். களவு. 20. ந.)

(ஒப்பு.) 1 **சிறு வெண் காக்கை:** குறுந். 334: 1; நற். 31: 2, 345: 4. மு. ஐங்: 161 - 70: 1. (பி - ம்) பெருங்கடற்பிரையது சிறுவெண் காக்கை: குறுந். 313: 1, பி. ம்.

2. **பாசடைக்குக் களிற்றுச்செவி:** "நெய்தற் பாசடை புரையு மஞ்செவி", "பிடிச் செவியி னன்ன பாசடை", "களிற்றுச் செவி யன்ன பாசடை தயங்க" (நற். 47: 3, 230: 1 310: 2); "களிற்றுச் செவியன்ன பாசடை மருங்கின்", "நீர் மிசை நிவந்த நெடுந்தாளகலிலை.....பெருங் களிற்றுச் செவியி னலைக்கும்" (அகநா. 176: 4, 186: 4 - 6)

1-2. **காக்கை பாசடையை மயக்கல்:** "பெருங்கடற் கரையது சிறு வெண் காக்கை, இருங்கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்" (ஐங். 170: 1-2.)

1-3. **காக்கை கழியைத் துழவல்:** "சேயிரு வெறிந்த சிறுவெண் காக்கை, பாயிரும் பனிக்கழி துழைஇ" (நற். 31: 2-3.)

4. **அதற் கொண்டு:** கலி. 139: 7; அகநா. 32: 9, 250: 9.

5. **அன்னை அலைத்தல்:** (குறுந். 262: 2); "எவ்வாய்ச் சென்றனை யவணெனக் கூறி, அன்னை யானுள் கழற", "சிறுகோல் வலந்தனள் அன்னை யலைப்ப" (நற். 147: 4-5, 149: 4.); "என், அமர்க்க ணஞ்ஞுபை யலைத்த கையே" (அகநா. 145: 21-2.); "அன்னை, அலையு மலை" (ஐங். எழு. 3); "அன்னையுங் கோல்கொண்டலைக்கும்" (முத். 66)

3-5. **தலைவன் தேர் வந்ததெனக் கேட்டு அன்னை அலைத்தல்:** "பொங்கு கழி நெய்த லுறைப்ப வித்துறைப், பல்கால் வருஉந் தேரெனச், செல்லா தீமோ வென்றனள் யாயே" (ஐங். 186: 3-5); கைந்நிலை, 24. "கொடி தறி பெண்டிர் சொற்கொண் டன்னை, கடிகொண்டனளே தோழி..... நிலவு மணற் கொட்குமோர் தேருண் டெனவே" (அகநா. 20: 12-6.)

6. **பின்னுவிடு கதுப்பு:** (குறுந். 353: 6.); "பின்னகம்" (அகநா. 9: 22.)

7. **இளையர்:** குறுந். 258: 6, 275: 6; தொல். கற்பு. 29. (உசாவு.)

தோழி கூற்று

[தலைவன் விரைவில் வரைந்து கொள்வானென்று தலைவியிடம் தோழி கூறியது]

உசாஎ. எழின்மிக வுடைய தீங்கணிப் படுஉம்
திறவோர் செய்வினை யறவ தாகும்
கிளையுடை மாந்தர்க்குப் புணையுமா ரிவ்வென
ஆங்கறிந் திசினே தோழி வேங்கை
5. வீயா மென்சினை வீயுக யானை
ஆர்துயி லியம்பு நாடன்
மார்புரித் தாகிய மறுவி னட்பே.

எ - து. (1) கடிநகர்த் தெளிவு விலங்கினமை யறிய, தோழி கூறியது.

[கடிநகர் - காவற்பட்ட மனையில். தெளிவு விலங்கினமை - தலைவன் தான் கூறித் தெளித்த சொல்லினின்றும் மாறுபட்டமையை. அறிய - தலைவி வாயிலாக அறியும் பொருட்டு]

(2) வரைவுடன் பட்ட தோழி தலைமகட்குக் கூறியதூஉமாம்.

[வரைவுடன படுத்திய வென்பதே பொருத்த மூடையது]

சேந்தம் பூதன்.

(பி-ம்.) 1 'தீங்கனிப்', 'கணிப்புகூஉம்' 3 'புணையுமாரில் லென' 5 'யாஅமென்சினை'

(ப - பை.) தோழி—, வேங்கை - வேங்கை மரத்தினது, வீயா மென் சினை வீ உக - கெடாத மெல்லிய கிளையிலிருந்து மலர்கள் உதிர, அங்ஙனம் உதிருமிடத்திலே, யானை ஆர் துயில் இயம்பும் நாடன் - யானையானது பெறுதற்கரிய துயில் செய்வதனால் உயிர்ப்பின் ஒலியுண்டாகும் நாட்டையுடைய தலைவனது, மார்பு உரித்தாகிய மறு இல் நட்பு - மார்பை உரியதாகப் பெற்ற குற்றமற்ற நட்பானது, எழில் மிக உடையது - மிக அழகுடையது; சுங்கு அணிப்படூஉம் - இவ்விடத்தில் அணிமைக் காலத்தே உண்டாகும்; திறவோர் செய்வினை - திறமையுள்ளோர் செய்யும் காரியம், அறவது ஆகும் - அறத்தொடு பொருந்தியதாகும்; கிளை உடை மாந்தர்க்கு - சுற்றத்தை யுடைய மக்களுக்கு, இவ் புணையும் என - இவை பற்றுக் கோடும் ஆகு மென்று, ஆங்கு அறிந்திசின் - அங்ஙனம் அறிந்தேன்.

(முடிபு) தோழி, நாடன் நட்பு எழில் உடையது; அணிப் படுஉம்; வினை அறவதாகும்; இவ் புனையும் ஆம்; ஆங்கு அறிந் திசின்.

(கருத்து) தலைவன் நின்னை விரைவில் வரைந்து கொள்வான்.

(வி - ரை.) இங்ஙனம் கூறின், "அவன் தான் கூறிய உறுதி மொழி பொய்த்தனன்" என்று தலைவி கூறுவாளாதலின், தெளிவு விலங்கினமையைத் தோழி அறிவாள்.

இரண்டாவது கருத்து: காப்பு மிகுதி முதலியவற்றைத் தலை வன்பால் எடுத்துரைப்ப அவன் 'வரைந்துகொள்வேன்' என்று உறுதி கூறியதை யறிந்த தோழி அச்செய்தியைத் தலைவியிடம் கூறினாள்.

"அவன் வரைவானே, வரையானே" எனக் கவன்ற தலைவி யிடம் முதலில் எழில் மிகவுடையதென்றாள், அவள் மனம் உறுதி பெறற்கு. அணிப்படும் - விரைவில் நடைபெறும். அவன் அங்ங னம் செய்யப் புகுந்தது அறத்தின்பாற்பட்டதென்பாள் அறவ தென்றாள். திறவோரென்றமையால் தலைவனைப் பாராட்டினாள். கிளையுடை மாந்தரென்றது தம்மையே. "சுற்றத்தாரிடையே காவற்பட்டுக் கிடக்கும் நமக்கும் அச்சுற்றத்தாருக்கும் உவப் பாக இருக்கும். வரைவிற்குரிய செயல்கள் இதுகாறும் பற்றின் றிக் கலங்கிய மனத்தினேமாகிய நமக்குப் பற்றுக்கோடாயின" என்றாள்.

இவ் - இவை; அண்மையில் நிகழும் செயல்களாதலின் இங் ஙனம் சுட்டினாள். மார்: அசைநிலை. அறிந்திசின்: இசின் தன்மைக் கண் வந்த அசை. யானையாற் சிதைக்கப்படாமல் இருத் தலின், "வீயா மென்சினை" என்று சிறப்பித்தாள். துயில்: ஆகு பெயர். இயம்புதல் - நெடுந்தூரம் ஒலித்தல் (அகநா. 8 : 12, உரை.)

வேங்கைமலர் தன்மேல் உதிரப் புறத்தே செவிப்படும் ஒலி யோடு யானை தூங்கும் நாடனென்றது, தலைவன் இருவகைச் சுற்றத்தாரும் பாராட்ட அவரிடையே தலைவியை மணந்து கொண்டு வெளிப்படையாகத் தலைவியின் இன்பம் நுகர்வா னென்ற குறிப்பினது.

"புலிப்பகை வென்ற புண்கூர் யானை
கல்லகச் சிலம்பிற் கையெடுத் துயிர்ப்பின்
நல்லிணர் வேங்கை நறுவீ கொல்லன்
குருகுடு மிதியுலைப் பிதிர்விற் பொங்கிச்

சிறுபன் மின்மினி போலப் பலவுடன்
மணிகிற விரும்புதற் ருவு நாட " (அகநா. 202 : 3-8.)

என்னும் பகுதியைப் பார்க்கையில் இச்செய்யுளின் 4 - 6 ஆம் அடிகள்,

" ... ... வேங்கை
வீயா மென்சினை வீயுக யானை
ஆருயி ரியம்பு நாடன் "

என்று இருக்கலாமென ஊகிக்கப்படுகின்றது.

(ஒப்பு.) 2. *நிறவோர் - நீதிநூலுடையோர்; " நிறவதிற்நீர்ந்த பொருள் "* (திரிகடு.) 3. இவ்வென ; தொல். கிளவி. 4.

6-7. நாடன்மார்பு தலைவிக்கு உரியது : குறுந். 68 : 4, ஒப்பு ; நற். 327 : 7-9.

நாடன் நட்பு : குறுந். 3 : 4, 134 : 7, 304 : 8, 313 : 4, 326 : 3, 401 : 6. (உசஎ)

தோழி கூற்று

[வரைவு நீட்டித்தவழி ஆற்ருளாகிய தலைவியை நோக்கி, " வெறியாட்டு அயர்ந்து தாய் தலைவனையறிந்து, வரைவுக் குரிய வற்றைச் செய்கின்ருளாதலின் வரைவுண்டாதல் ஒருதலை; அதற் குரிய நாளும் அணிமையிலுள்ளது; ஆதலின் நீ ஆற்ருயாதல் நன்றன்று " என்று தோழி கூறியது.]

உசஅ. அதுவர லன்மையோ வரிதே யவன்மார்
புறுக வென்ற நாளே குறுகி
ஈங்கா கின்றே தோழி கானல்
ஆடரை புதையக் கோடை யிட்ட
5. அடும்பிவர் மணற்கோ டீர நெடும்பனை
குறிய வாகுந் துறைவனைப்
பெரிய கூறி யாயறிந் தனளே.

எ - து. வரைவு நீட்டித்தவழி ஆற்ருளாகிய கிழத்தியைத் தோழி ஆற்றுவித்தது.

உலோச்சன்.

(டி - ம்.) 1 ' அதுவரவன்மையோ ' 2 ' பிறுக ' 5 ' அடம்பிவர் பமன்ற கோடுயர் '; ' டீர்நெடும்பெண்ணை ' 7 ' பெறிய '

(ப - ரை.) தோழி—, கானல் ஆடு அரை புதைய - கடற் கரைச் சோலையினிடத்திலுள்ள அசைந்த அடியிடம் புதையும் படி, கோடை இட்ட - மேல் காற்றுக் கொணர்ந்து இட்ட, அடும்பு இவர் மணல் கோடு ஊர - அடும்பங் கொடி படர்ந்த மணற்குவி யல் பரவ, நெடுபனை - நெடிய பனைமரங்கள், குறிய ஆகும் - குறி யனவாகும், துறைவனை - கடற்றுறையையுடைய தலைவனை, பெரிய கூறி - முருகனென்று சொல்லி வெறியெடுத்து, யாய் அறிந்தனள் - நம் தாய் அறிந்து கொண்டாள்; ஆதலின், அது வரல் அன்மை அரிது - வரைவுக்குரிய நாள் வாராமை அரிதாகும்; வரைவு நேரும்; அவன் மார்பு உறுக என்ற நாள் குறுகி - அவனது மார்பை அடைகவென்று வரையறுத்த நாள் அணிமையாகவந்தும், ஈங்கு ஆகின்று - இவ்வண்ணம் நின்பால் ஆற்றுமை உண்டாகின் றது; இஃது என் கொல்?

(முடிபு) தோழி, துறைவனை யாய் கூறி அறிந்தனள்; அது வரலன்மை அரிது; குறுகி ஈங்காகின்று.

(கருத்து) வரைவு அணிமையில் நிகழ்வதாதலின் நீ ஆற்று திருத்தல் நன்றன்று.

(வி - ரை.) அது : நெஞ்சறி சுட்டு; வரைவு நாளைச் சுட்டியது. அன்மையோ : ஓகாரம் அசைநிலை. அரிதே : ஏகாரம் தேற்றம். குறுகியுமென்ற உம்மை தொக்கது. குறுகியதனால் இத்தகைய முயற்சிகள் நடைபெறுகின்றன என்று பொருள் கொள்ளுதலும் ஆம்.

கோடை-மேல் காற்று; குறுந். 343 : 5, 388 : 2, 369 : 3 மணல் மேலே பரவப்பரவ வெளியிலே தோன்றும் பனையின் அடிப்பகுதி குறியதாகின்றது. பெரிய கூறுதலாவது, இது தெய்வத்தான் வந்ததெனக் கூறுதல். பெரிய கூறல். புறநா : 375 : 19. கூறி யென்றது கூறி வெறியாட்டெடுத்தா ளென்பதைக் குறித்தது. யாய் அறிந்தது, தோழி அறத்தொடு நின்றதனால்.

(ஒப்பு.) 1-2. தலைவன் மார்பைத் தலைவி உறுதல் : குறுந். 68 : 4, ஒப்பு; 247 : 7, ஒப்பு.

3. ஆகின்று : குறுந். 15 : 4, ஒப்பு. ஈங்காகின்று : கற். 144 : 5.

5. மணற் கோட்டின் மேல் அடும்பங் கொடி படர்தல் : (குறுந். 349 : 12); "அடும்பிவ ரணி யெக்கர்" (கலி. 132 : 16); "அடும்பம னெடுங்கொடி யுள்புதைந் தொளிப்ப, வெண்மணல் விரிக்குந் தண்ணந் துறைவன்" (தொல். களவு. 20, ந. மேற்.)

4-5. காற்றால் மணற் குவியல் உண்டாதல் : (குறுந். 372 : 2); "கடுவளி தொகுப்ப வீண்டிய, வடுவா ழெக்கர் மணலினும்" (புறநா. 55 : 20 - 21.)

5-6. மணலால் பனை மறைதல் : குறுந். 372 : 1-3. (உசா)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரியுங் காலத்தில், தன்னை நோக்கி, "நீ ஆற்றும் ஆற்றல் உடையையோ?" என்ற தோழிக்கு "அவர் மலையைக் கண்டு ஆற்றுவேன்" என்பதுபடத் தலைவி கூறியது.]

இனமயி லகவு மரம்பயில் கானத்து
நரைமுக வூகம் பார்ப்பொடு பனிப்பப்
படுமழை பொழிந்த சார லவர்நாட்டுக்
குன்ற நோக்கினென் றோழி
பண்டை யற்றோ கண்டிசி னுதலே.

எ - து. வரைவிடை வைப்ப, ஆற்றகிற்றியோ வென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கபிலர்.

(பி - ம்.) 3 'சாரலலர்'

(ப - ரை.) தோழி—, இனம் மயில் அகவும் - திரளாக உள்ள மயில்கள் ஆரவாரிக்கும், மரம் பயில் கானத்து - மரங்கள் செறிந்த காட்டிடத்தில், நரை முகம் ஊகம் - வெள்ளை முகத்தையுடைய கருங்குரங்கு, பார்ப்பொடு பனிப்ப - குட்டிகளோடு குளிரால் நடுங்கும்படி, படு மழை பொழிந்த சாரல் - ஒலிக்கின்ற மழை பொழிந்த மலைச்சாரலையுடைய, அவர் நாடு குன்றம் - அத் தலைவரது நாட்டிலுள்ள குன்றத்தை, நோக்கினேன் - பார்த்தேன்; அதனால், நுதல் - ஒளியிழந்து பசப்பூர்ந்த என் நெற்றி, பண்டை அற்றோ - பசப்பூராத பழைய தன்மையுடையதாயிற்றோ? கண்டிசின் - பார்ப்பாயாக.

(முடிபு) தோழி, அவர் நாட்டுக் குன்றம் நோக்கினேன்; நுதல் பண்டையற்றோ? கண்டிசின்.

(கருத்து) தலைவருடைய குன்றத்தை நோக்கி ஆற்றியிருப்பேன்.

(வி - ரை.) தலைவன் பிரியுங்காலத்தில் தலைவி வேறுபட்டாள்; அவள் நுதல் பசப்பூர்ந்தது. அது கண்ட தோழி, "இப்பொழுதே நின் வண்ணம் வேறுபடுகின்றது. தலைவன் பிரிந்திருக்கும் காலமுழுதும் ஆற்றும் ஆற்றல் நின்பால் உளதோ?" என்று வினவத் தலைவனது குன்றத்தை நோக்கி ஊக்கம் பெற்ற தலைவி, "இப்பொழுது என் நுதலைப் பார்; பழைய விளக்கம் அதன்பால் உண்

டாயிற்றன்றே. இங்ஙனமே தலைவர் குன்றத்தைப் பார்த்துப் பார்த்து ஆற்றுவேன்" என்று கூறினாள்.

மழைபொழிந்த கார்காலமாதலின் மயிலினம் அகவின. மழைக்குக் குரங்குகள் நடுங்கும்; அங்ஙனம் நடுங்கி ஒடுங்கியிருக்கும் இருப்பைக் கூரலிருக்கை (நற். 181 : 7) என்றும் குன்னுக்கல் (நெடுநல். 9, ந) என்றும் கூறுவர்;

"மாமேயன் மறப்ப மந்தி கூர" (நெடுநல். 9);

"மடவ மயில்கூவ மந்திமா கூர" (கைந்நிலை, 36.)

படுமழை - தாழ்ந்த மழையெனலும் பொருந்தும்.

(ஒப்பு.) 2-3. மழைக்குக் குரங்கு அஞ்சுதல்: "மழையென்றஞ்சிச், சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவையாறே" (தே. திருஞா.) "மந்தி துயிலுற்ற முழை வன்கடுவ னங்கத், திந்திய மவித்ததனி யோகி யினிருந்த" (கம்ப. கார்காலப். 76.) 5. கண்டிசின்: குறுந். 240 : 5. 4-5. தலைவனது குன்றத்தை நோக்கித் தலைவி உவத்தல்: குறுந். 240 : 6-7, ஒப்பு. (உசாக)

தலைவன் கூற்று

[தலைவியைப் பிரிந்து சென்று வினைமுற்றி மீண்டு வரும் பொழுது தலைவன் தேர்ப்பாகனை நோக்கி, "இன்று மாலை வருவதற்குள் தலைவி இருக்குமிடத்திற்கு விரைவில் தேரைச் செலுத்துவாயாக" என்றது.]

உடும. பரலவற் படுநீர் மாந்தித் துணையோ
டிரலை நன்மா னெறிமுத லுகளும்
மாலை வாரா வளவைக் காலியற்
கடுமாக் கடவுமதி பாக நெடுநீர்ப்
5. பொருகயன் முரணிய வுண்கட்
டெரிதீங் கிளவி தெருமர லுயவே.

எ - து. தலைமகன்பாகற்கு (பி - ம். பாங்கற்கு) உரைத்தது.

நாமலார் மகன் இளங்கண்ணன் (பி-ம். இளங்கணன்.)

(பி - ம்.) 2 'டிரலைமான்'; 'னெறிதலுமுகளும்' 4 'கடுமா கடவுமதி' 6 'தெருமரலுகவே'

(ப - ரை) பாக - தேர்ப்பாகனே, பரல் அவல்படு நீர் - பருக்கைக்கற்களையுடைய பள்ளத்திலே தங்கிய நீரை, மாந்தி - உண்டு, இரலை நல்மான் - ஆண்மான், துணையோடு - பெண்

மானேடு, மாலைவாரா அளவை - மாலைக்காலம் வருவதற்கு முன்னே, நெடு நீர் பொரு கயல் முரணிய உண்கண் - ஆழ்ந்த நீரிலுள்ள ஒன்றையொன்று எதிர்ந்த இரண்டு கயல்களை யொத்த மையுண்ட கண்களையும், தெரி தீம் கிளவி - ஆராய்ந்த இனிய சொற்களையுமுடைய தலைவி, தெருமரல் உய - துன்பத்தாற் சுழலுதலினின்றும் நீங்க, கால் இயல் கடுமா கடவுமதி - காற்றின் இயல்பையுடைய விரைகின்ற குதிரையைச் செலுத்துவாயாக.

(முடிபு) பாக, மாலை வாரா அளவை, கிளவி உய மாக் கடவுமதி.

(கருத்து) மாலை வருவதற்குமுன் தலைவியிருக்கு மிடத்திற்குத் தேரைச் செலுத்துவாயாக.

(வி - ரை.) மாலை வந்தால் தலைவி காமம் மிக்குத் துன்புறுவ தன்றித் தானும் நெறிமுதலுகளும் இணைமான்களைக் கண்டு, 'இப்பொழுது நாம் இங்ஙனம் தலைவியோடு இருக்கப் பெற்றிலேமே!' என்னும் ஆராமையுறுதலின் அதற்குமுன் தலைவிபாற் செல்ல விரும்பினன்.

கடவாக் குறையன்றிக் குதிரையாற் குறையில்லை யென்பான் அதனை, 'காலியற் கடுமா' எனச் சிறப்பித்தான்.

நெடுநீர்: நெடுமை இங்கே ஆழத்தின் மேற்று; "நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்" (குறள், 17) என்புழிப் போல.

பொருகயல் - ஒன்றையொன்று எதிரிடுங் கயல். முரணிய: உவமவாசகம்.

(ஒப்பு.) 1. பரலின் நீர்: குறுங். 65: 1, ஒப்பு.

1-2. பரலும் இரலையும்: குறுங். 65: 1, ஒப்பு.

பரலிலுள்ள நீரைப் பருகி இரலைமான் பெண்மானேடு உகளுதல்: குறுங். 65: 1-2. இரலையும் துணையும் இணைந்திருத்தல்: குறுங். 65: 1-3, ஒப்பு.

3-4. குதிரையின் வேகத்திற்குக் காற்று: "வான்வழங் கியற்கை வளி பூட்டினையோ" (அகநா. 384: 9.) 5. கயல் முரணிய வுண்கண்: "கயலென வமர்த்த வுண்கண்", "மதர்கயன் மலைப்பி னன்னகண்" (அகநா. 126: 19, 140: 10); "கயன்மலைப் பன்ன கண்ணினை" (யா. வி. 39, மேற்.) (உரு0)

தோழி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற கார்காலம் வந்தபொழுது தலைவி வருந்த, "இது கார்காலமன்று; இப்பொழுது பெய்வது கால மல்லாத காலத்துப் பெய்யும் மழை" என்று தோழி வற்புறுத்திக் கூறி ஆற்றுவித்தது.]

உருக. மடவ வாழி மஞ்ஞை மாயினம்,
கால மாரி பெய்தென வதனெதிர்

ஆலலு மாலினு பிடவும் பூத்தன
காரன் றிகுளு தீர்கநின் படரே
5. கழிந்த மாரிக் கொழிந்த பழ நீர்
புதுநீர் கொளீஇய வுகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

எ - து. பிரிவிடைத் தோழி, "பருவமன்று; பட்டது வம்பு" என்று வற்புறுத்தியது (பி - ம். வற்புறுத்தது.)

[வம்பு - காலமல்லாத காலத்துப் பெய்யும் மழை]

இடைக்காடன்.

(பி - ம்) 1 'மடவரல்வாழி'; 'யாயினம்' 2 'காலமாரி' 3 'ஆலு மாலின' 7 'நொதுமலர்'

(ப - ரை.) இகுளை - தோழி, கழிந்த மாரிக்கு ஒழிந்த பழ நீர் - சென்ற கார்காலத்திற் பெய்யாது எஞ்சியிருந்த பழைய நீரை, புது நீர் கொளீஇய - புதிய நீரைக் கொள்ளும் பொருட்டு, உகுத்தரும் - சொரிகின்ற, நொதுமல் வானத்து - அயன்மையையுடைய மேகத்தினது, முழங்கு குரல் கேட்டு - ஒலிக்கின்ற ஓசையைக் கேட்டு, மஞ்ஞை மா இனம் - மயில்களாகிய கரிய கூட்டங்கள், காலம் மாரி பெய்தென - பருவத்துக்குரிய மழை பெய்ததென்று தவருக எண்ணி, அதன் எதிர் - அம்மழைக்கு எதிரே, ஆலலும் ஆலின - ஆடுதலைச் செய்தன; பிடவும் பூத்தன - பிடாவும் மலர்ந்தன; மடவ - அவை அறிபாமையை உடையன; கார் அன்று - இது கார்காலமன்று; ஆதலின், நின்படர் தீர்க - நின் துன்பத்தை விடுவாயாக.

(முடிபு) இகுளை, கேட்டு மஞ்ஞையினம் ஆலின; பிடவும் பூத்தன; மடவ; காரன்று; நின் படர் தீர்க.

(கருத்து) இது கார்காலமன்று.

(வி - ரை.) தலைவன் கார்காலத்தில் மீள்வதாகக் கூறிச் சென்றான். அக்காலம் வந்ததும் அவன் வாராமையின் தலைவி துயர் கூர்ந்தாள். அது கண்ட தோழி, "இஃது அவர் கூறிச் சென்ற கார்ப்பருவமன்று" என்றாள். "மழை பெய்கின்றது; மயில் ஆடுகின்றது; பிடா மலர்கின்றது. இவை கார்ப்பருவத்துக்கு உரியன வல்லவோ?" என்று விளைய தலைவிக்குத் தோழி கூறியது இது.

மடவ: இந்நூல், 66, வி-ரை பார்க்க. வாழி: அசைநிலை. மாயினம் - கரிய திரள்; "மாயிருஞ் சோலை" (குறுந் 232

6) என் புழிப் போல யகரம் பெற்றது. காலமாரி யென்றது கார் காலத்து மழையை. பிடா கார்காலத்தில் மலர்வது.

ஓழிந்த - பெய்யாது எஞ்சிய. நொதுமல்வானமென்றுள், தலைவி துன்புறுவாளென்பதை அறியாது முழங்குதலின்;

"என்னெனப் படுங்கொ ரேழி மின்னுபு
வானோர் பிரங்கு மொன்ரே வதனெதிர்
கான மஞ்ஞை கடிய வேங்கும்
ஏதில கலந்த விரண்டற்கென்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே" (குறுந். 164)

என முன் வந்துள்ளது காண்க.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" (குறள். 292)

என்பதுபற்றித் தோழி கார்காலம் வரவும், அன்றென்று கூறினாள்.

(மேற்.) மு. இருநீர் வம்பென்றது (கம்பி. 170.)

(ஒப்பு.) 1. மடவ: நற். 316: 1. மஞ்ஞையினம் மடவ: குறுந். 361. 2. காலமாரி: குறுந். 200: 5. 3. ஆலலும் ஆலின: குறுந். 37: 1; "மோக்கலு மோந்தன", "மருட்டலு மருட்டினன்", "தொழலுந தொழுதான் ரெடலுந் தொட்டான்" (கலி. 54: 8-14, 55: 19.) பிடவு கார்காலத்தில் மலர்தல்: "சேணறு பிடவமொடு" (முல்லைப். 25.); "பூவலர் குரவோடும் புடைதவழ் பீடவீனும், மாவலர் சொரிசூழல்" (கம்ப. வனம்புகு. 7.)

1-3. மயில் வம்பமழையைக் கண்டு ஆலுதல்: "பொய்யிடி யதிர்குரல் வாய்செத் தாலும், இனமயின் மடக்கணம போல, நிணமருள் வேலே வாழியர் மழையே" (நற். 248: 7-9.) மஞ்ஞையும் பிடவும் மடவ: "பிடவங் குருந்தொடு பிண்டி மலர, மடவமயில் கூவ" (கைந்நிலை. 36.)

5. பழ நீர்: குறுந். 220: 1, 261: 1. மு. குறுந். 66; நற். 99. (உருக)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனை ஏற்றுக்கொண்ட தலைவியை நோக்கி, "நீ சிறிதும் மாறுபாடின்றித் தலைவனை ஏற்றது ஏன்?" என்ற தோழிக்கு, "அவன் பழியஞ்சுபவன்; ஆதலின் அவன் பழியை யெடுத்துரையாது உடம்பட்டேன்" என்று தலைவி கூறியது.]

உடை. நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த கொடிய ஞகிய குன்றுகெழு நாடன்

வருவதோர் காலை யின்முகந் திரியாது
கடவுட் கற்பி னவ்வனை திர் பேணி
மடவை மன்ற நீயெனக் கடவுபு
துனியல் வாழி தோழி சான்றோர்
புகழு முன்னர் நாணுப
பழியாங் கொல்பவோ காணுங் காலே.

எ - து. தலைமகன் வரவறிந்த தோழி, அவர், நம்மை வலிந்து போயினர்க்கு எம் பெருமாட்டி தீயன கடிந்து (பி - ம்.கடந்து) நன்காற்றினாய்" என்றுட்குக் கிழத்தி உரைத்தது.

[வலிந்து - மாறுபட்டு (தக்க. 317) தீயன - வாயில் மறுத்தலும், பழி கூறலும் போல்வன. நன்கு - நன்மை; என்றது இன்முகங் கொண்டு எதிரேற்றதை.]

கீடங்கிற் குலபதி நக்கண்ணன் (பி. ம். கிடங்கிற் குலபதினக் கண்ணன்.)

(பி - ம்.) 1 'நெழுக' 4 'னவனே பேணி' 7 'முன்னர் நானும்'

(ப - ரை.) தோழி—, நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த - நெடுமையையும் திரட்சியையும் உடைய தோள்களிலுள்ள வளை களை நெகிழச்செய்த, கொடியனாகிய குன்று கெழு நாடன் - கொடுமையை உடையவனாகிய குன்றுகள் பொருந்திய நாட்டை யுடைய தலைவன்; வருவதோர் காலை - பரத்தையர் வீட்டினின்று வருங்காலத்தில், இன்முகம் திரியாது - இனியமுகம் வேறுபடாமல், கடவுள் கற்பின் - தெய்வத்தன்மையையுடைய கற்பினால், அவன் எதிர் பேணி - அவனை எதிர்முகமாகச் சென்று உபசரித்து, நீ மன்ற மடவை - நிச்சயமாக அறிவில்லாயாயினை, என கடவுபு - என்று வினவி, துனியல் - வருத்தமுறுதே; சான்றோர் - அறி வானமைந்த பெரியோர், புகழும் முன்னர் - தம்மைப் புகழ்வதற்கு முன்னரும், நாணுப - நாணுவர்; அத்தகையோர், காணுங்கால் - ஆராயுமிடத்து, பழி யாங்கு ஒல்ப - பழிச் சொல்லை யாம் கூற எங்ஙனம் பொறுப்பர்?

(முடிபு) தோழி, மடவை நீயெனக் கடவுபு துனியல்; சான்றோர் புகழு முன்னர் நாணுப; பழி யாங்கு ஒல்ப?

(கருத்து) தலைவன் பழிக்கு அஞ்சும் இயல்பினனாதலின் நான் அவனை ஏற்றுக் கொண்டேன்.

(வி - ரை) 'நெடிய' என்றது முதல் 'நீ' என்றது வரையி லுள்ளன தோழிகூற்றைத் தலைவி கொண்டு கூறியவை.

நெடுமையும் திரட்சியும் தோளுக்கு அடை. கொடியன் - தன்னுல் தலைவிக்கு உண்டாகும் நோயறியாத கொடுமையை யுடையவன். இன்முகந்திரியாதென்றது முகனமர்ந்து எதிர் கொண்டதை யுணர்த்தியது. கடவுட்கற்பு - மழை தருதல் முதலிய தெய்வத்தன்மையை யுடைய கற்பு; அருந்ததி போன்ற கற்பெனலும் ஆம் (அகநா. 16: 18)

திரியாது பேணி மடவையென வினை முடிவு செய்க. வாழி: அசைநிலை. சான்ரோரின் இயல்பு இதுவென உலகின்மேல் வைத்துக் கூறினும் தலைவி கருதியது தலைவனையே யென்க. இதனுல் தலைவன் சான்ரோ னென்பதையும், பழிக்கு நாணுபவ னென்பதையும் புலப்படுத்தினள். ஓகாரமும் ஏகாரமும் அசை நிலைகள்.

(ஒப்பு.) 1. தோள்வனை நெகிழ்தல்: குறுந். 50: 4-5, ஒப்பு.

2. தலைவனைக் கொடிய னென்றல்: குறுந். 26: 8, ஒப்பு.

1 - 2. தோள்வனை நெகிழ்த்த நாடன்: "பணைத்தோ ளெல்வளை ஞெகிழ்த்தவெங் காதலர்" (நற். 193: 6.)

4. கடவுட் கற்பு: அகநா. 184: 1.

5. மடவை மன்ற: நற். 34: 11, 183: 6; அகநா. 27: 6; பெரும். 1. 47: 251.

6 - 7. சான்ரோர் தம்புகழ் கேட்பின் நாணுதல்: "தம்புகழ் கேட்டார் போற் றலைசாய்த்து மரந்துஞ்ச" (கலி. 119: 6); "தன் பெயராகலிணி", "பரந்தோ ரெல்லாம் புகழத் தலைபணிந், திறைஞ்சி யோனே குரிசில்" (புறநா. 152: 22, 285: 13-4); "பிறர்தன்னைப் பேணுங்கா ணலும்" (திரிகடு. 6.)

8. பழிக்குத் தலைவன் அஞ்சுதல்: குறுந். 143: 2. (உரை)

தோழி கூற்று

[பிரிவிடை வருந்திய தலைவியை நோக்கி, "தலைவர் நின் நிலையை உணர்ந்திலர்; உணரின் தம் வினை முற்றுதலையும் ஓராது உடனே மீள்வர்" என்று தோழி கூறி ஆற்றுவித்தது.]

உருத்.கேளா ராகுவர் தோழி கேட்பின்
விழுமிது கழிவ தாயினு நெகிழ்நூற் [நின்
பூச்சே ரணையிற் பெருங்கவின் றொலைந்த
நாட்டுயர் கெடப்பி னீடலர் மாதோ
5. ஒலிகழை நிவந்த வோங்குமலைச் சாரற்
புலிபுகா வுறுத்த புலவுநாறு கல்லூர

ஆறுசென் மாக்கள் சேக்கும்
கோடுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

எ - து. பிரிவிடைத் தோழி வற்புறுத்தது (பி - ம். வரவுறுத்தது.) பூங்கண்ணன்.

(பி - ம்.) 3 'பூச்சோரணியிற்' 4 'கேட்பின்', 'கொட்பின்'

(ப - ரை) தோழி—, ஒலி கழை நிவந்த - ஒன்றோடொன்று உராய்ந்து ஒலிக்கின்ற மூங்கில்கள் ஓங்கி வளர்ந்த, ஓங்கு மலை சாரல் - உயர்ந்த மலைப்பக்கத்தில், புலி புகா உறுத்த புலவு நாறு கல் அளை - புலி தனக்குரிய உணவைச் செலுத்தி வைத்திருந்த புலால் நாற்றம் வீசும் கற்குகையினிடத்து, ஆறு செல் மாக்கள் சேக்கும் - வழிச்செல்லும் மனிதர் தங்கும், கோடு உயர் பிறங்கல் மலை - சிகரங்கள் உயர்ந்த விளக்கத்தையுடைய மலைகளை, இறந்தோர் - கடந்து சென்ற தலைவர், கேளார் ஆகுவர் - நின் துயரைக் கேளார் ஆவர்; கேட்பின் - கேட்டாராயின், விழுமிது கழிவதாயினும் - சிறந்த பொருள் நீங்குவதாக இருப்பினும், நெகிழ்நூல் பூ சேர் அணையில் - நெகிழ்ந்த நூலாற் கட்டிய மலர்மாலைகள் சேர்ந்த படுக்கையினிடத்தே இருந்து வருந்தி, பெரு கவின் தொலைந்த நின் - பெரிய அழகு நீங்கிய நினது, நாள் துயர் - இக்காலத்துள்ள துயரமானது, கெட - கெடும்படி, பின் நீடலர் - பின்பும் தாமதியாமல் வருவார்.

(முடிபு) தோழி, மலையிறந்தோர் கேளாராகுவர்; கேட்பின் நீடலர்.

(கருத்து) அவர் நின் நிலையை அறிந்திலர்; அறியின் உடனே மீள்வர்.

(வி - ரை.) கேட்பின் நீடலரென்ற குறிப்பு நான் தூது விட்டு நின் துயர்நிலையை அறிவித்து மீளச் செய்வேனென்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றது. இது கற்புக்காலத்தது.

விழுமிது - அறம், பொருள் முதலியன (அகநா. 13 : 12, உரை); மிக உயர்ந்த பொருளெனலுமாம். கேட்பின் விழுமிது கழிவதாயினும் நீடலர். நீடலராதலின் துயர் கெடும். கெட என்ற எச்சம் நீடலரென்றதன் கண்ணுள்ள அலரென்ற வினைக் குறிப்பைக் கொண்டு முடிந்தது. நாட்டுயர் - நாள்தோறும் படும துயரெனலும் பொருந்தும்.

முறுக்கேறிய நூலாயின் மெல்லிய மலர்களைத் தொடுத்தற்கு இயலாமையின் நெகிழ்நூலைக் கூறினள். மாலைகளை நூலாற்

கட்டும் வழக்கமும் உண்டு. அணையினுற் குறை யில்லை யென்பாள் அதனைச் சிறப்பித்தாள்.

தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி பாயலில் இருந்து துயருறும் செய்தி நெடுநல்வாடையில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.

ஒலி கழை - தன்பாலுள்ள துளைவழியே காற்றுப் போகை யில் ஒலிக்கும் மூங்கிலெனலும் ஆம்;

"ஆடமைக் குயின்ற வகிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசையாக" (அகநா. 82 : 1-2);

தழைத்த மூங்கிலென்பதும் ஒன்று. புகா - உணவு; "புகாஅக் காலை" (தொல். களவு. 16) என்பதன் உரையைப் பார்க்க. பிறங்கல் - பிறங்குகல் என்பதன் விகாரமுமாம்.

(ஒப்பு.) 2-3. நூலாற் பூவைத் தொடுத்தல்: "பன்னூன் மாலை" (குறுந். 173 : 2); "விரிநுண்ணூல் சுற்றிய வீரித ழலரி" (கலி. 64 : 3); "புரிநூன் மீக்கோள் பூம்புறத் தேற்றதன், தெரிதூல் வாங்கி யிரு நூற் கொளீஇப், பவழமும் வெள்ளியும் பசும்பொன் னடரும், திகழ்கதிர் முத்தமுந் திருமணிக் காசும், உழற்படக் கோத்த வொளியின போல, வண்ணம் வாடாது வாசங் கலந்த, தண்ணறும் பன்மலர் தானத் தினீஇ, வாட்டொழிற் றடக்கையின் வத்தவர் பெருமகன், சூட்டுநலம் புனைந்து சுடர் நுதற் கிய" (பெருங். 2. 15 : 126 -34.)

6. புகா: குறுந். 232 : 3, 258 : 5; ஐங். எழு. 31.

புலியின் புலால் நாற்றம் வீசும் உணவு: "புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை" (அகநா. 3 : 9, 97 : 3.)

கல்லளையும் புலியும்: "பைங்கண் வல்லியங் கல்லளைச் செறிய" (அகநா. 362 : 4); "புலிசேர்ந்து போகிய கல்லளை போல" (புறநா. 86 : 4.)

8. பிறங்கல் மலை: குறுந். 144 : 7, 285 : 8. (உடுக)

தலைவி கூற்று

[தலைவன் வருவதாகக் கூறிச் சென்ற பருவம் வரவும் அவன் வாராமை, வருந்திய தலைவியை நோக்கி, "நீ ஆற்றல் வேண்டும்" என்று வற்புறுத்திய தோழிக்கு, "அவர் கூறிய பருவம் வந்த பின்னரும் அவர் வருவாரெனச் சொல்லும் தூதுகள் வந்திலை; அவர் என்னை மறந்தனர்" என்று தலைவி கூறியது.]

உரை. இலையி லஞ்சினை யினவண் டார்ப்ப
முலையேர் மென்முகை யவிழ்ந்த கோங்கின்

தலையலர் வந்தன, வாரா தோழி
துயிலின் கங்குற் றுயில்வர் மறந்தனர்
5. பயின்றுறுங் கதுப்பிற் பாயலு முள்ளார்
செய்பொரு ளுரனசை இச் சென்றோர்
எய்தின ராலென வருஉந் தூதே.

எ - து. பருவங்கண்டு, வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[கண்டு உரைத்ததென்று கூட்டுக.]

பாரகாபரன் (பி - ம்.) பார்காப்பான், பாரகரபரன், பாரகாபான்.)

(பி - ம்.) 3 'வாரார்' 4 'றுயில்வரமறந்தனர்' 5 'பயிலிருங்' 6 'டரநசைஇச்'

(ப - ரை.) தோழி—, இலை இல் அம் சினை இனம் வண்டு ஆர்ப்ப - இலையில்லாத அழகிய கிளையினிடத்துத் திரளாகிய வண்டுகள் ஆரவாரிக்கும் படி, முலை ஏர்மெல் முகை அவிழ்ந்த - நகிலையொத்த மெல்லிய அரும்புகள் விரிந்த, கோங்கின் தலை அலர் வந்தன - கோங்கமரத்தினது முதற்பூக்கும் மலர்கள் தோன்றின; செய்பொருள் தரல் நசைஇ சென்றோர் - ஈட்டுதற்குரிய பொருளைக் கொண்டு வருதலை விரும்பிச் சென்ற தலைவர், எய்தினர் என வருஉம் தூது - மீண்டு வந்தனரென்று அறிவித்தற்கு வரும் தூதுகள், வாரா - வந்தில; அவர் - நம்மைப் பிரிந்து சென்ற அவர், துயில் இன் கங்குல் துயில் மறந்தனர் - துயிலுதலினிய இராக்காலத்தில் உடன் துயிலுதலை மறந்தனர்; பயில் நறு கதுப்பின் பாயலும் உள்ளார் - தாம் பழகுகின்ற நறிய என் கூந்தலாகிய அணையையும் நினையாராயினர்.

(முடிபு) தோழி, அலர் வந்தன; தூது வாரா; அவர் மறந்தனர்; உள்ளார்.

(கருத்து) தலைவர் என்னை மறந்தனர் போலும்.

(வி - ரை.) கோங்கின் முகையவிழ்ந்தமை கூறுதலின் பருவம் இளவேனிலாயிற்று (ஐங். 343.)

இலவமரத்தின் இனமாகிய கோங்கும் அவ்விலவத்தைப் போன்றே மலருங் காலத்தில் இலையின்றித் தோன்றும். தலையலர் - முதலிற் பூக்கும் மலர்கள்; "தலைநாட் செருந்தி" (சிறுபாண். 147) என்பது போன்றது.

துயிலினிமை கங்குலுக்கு அடை. பயில் நறுங்கதுப்பிற்

பாயலென்றது, பாயலுக்குரிய மென்மையும் மணமும் உடைய தென்றபடி. துயிலையும் பாயலையும் நினைத்தனரேல் வந்திருப்ப ரென்பது தலைவியின் உள்ளக் கிடக்கை. பாயலும்: உம்மை உயர்வு சிறப்பு. ஆல், ஏ: அசை நிலைகள்.

(ஒப்பு.) 1. இலையி லஞ்சினை: "இலையில மலர்ந்த வோங்குகிலை யிலவம்" (ஐங். 338: 2); "இலையில மலர்ந்த முகையி லிலவம்" (அகநா. 11: 3.)

3. கோங்கரும்புக்கு நகில்: முருகு. 34-5; சிறுபாண். 25-6; கலி. 56: 23-4; அகநா. 240: 11; புறநா. 336: 9-10; நாலடி. 400; சிறுபஞ்ச. 44; பெருங். 2. 12: 100-105; திருச்சிற். 1. 1-3. ஐங். 341-50.

5. கதுப்பிற் பாயல்: "நறுமென் கூந்தன் மெல்லணை யேமே" (குறுந். 270: 8); "கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி", "ஒள்ளிழை, வாருறு கூந்தற்றுயில் பெறும்" (கலி. 71: 19, 104: 20); "மகளிர், விரிமென் கூந்தன் மெல்லணை வதிந்து" (பதிற். 50: 18-9); "தண் ணறுங் கமழ்தொடை வேய்ந்தகின், மண்ணுர் கூந்தன் மரீஇய துயிலே", "தோடார் கூந்தன் மரீஇ யோரே", "இருளிணர்க் கூந்தலீன்றுயின் மறந்தே", "கூந்தன் மெல்லணைத் துஞ்சி" (அகநா. 223: 15-6, 231: 15, 233: 15, 308: 13.)

6. செய் பொருள்: குறுந். 190: 2 / கலி. 7: 21, 12: 10, 16: 18, 29: 24.

7. பிரிந்த தலைவன் தூதுவிடுத்தல்: குறுந். 266: 4; அகநா. 333: 22.

(உரிச)

தோழி கூற்று.

[வினைமேற் சென்ற தலைவன் தன்மாட்டுள்ள அன்பினால் தான் குறித்த இடத்தின்கட் செல்லாமல் இடையே மீள்வனென்று கவன்ற தலைவியை நோக்கி, "அவர் தாம் செல்லும் பாலைநிலத் தில் யானை தன் சுற்றத்தைப் பாதுகாக்கும் காட்சியைக் கண்டு, நாமும் நம் இல்லறக்கடன் இறுப்பதற்கு நம் முயற்சி முற்றல் வேண்டுமென்று சொல்வார்" என்று தோழி கூறியது]

உருடு. பொத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுத லுருவக் குத்தி[நடைச்
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்கு
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும்

5. தடமருப் பியானை கண்டனர் தோழி
தங்கட வினீஇய ரெண்ணி யிடந்தொறும்

காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே.

எ - து. இடைநின்று மீள்வரெனக் கவன்ற கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

கடுகு பெருந் தேவன்.

(பி - ம்.) 3 'யியங்குநடை' 5 'கண்டன' 6 'கடன்கடனிறீஇய' 7 'போதிய'

(ப - ரை.) தோழி—, தம் கடன் இறீஇயர் - தம்முடைய கடமையை நிறைவேற்றும் பொருட்டு, எண்ணி - கருதி, இடங் தொறும் - இடங்கள் தோறும், காமர் பொருள் பிணி போகிய - விருப்பத்தையுடைய பொருண்முயற்சிக்கண் உள்ள உள்ளப் பிணிப்பினுற் சென்ற, நாம் வெம் காதலர் - நாம் விரும்பும் தலைவர், சென்ற ஆறு - நம்மைப் பிரிந்து சென்ற வழியில், பொத்து இல் காழ - புரை யற்ற வயிரத்தை யுடையனவாகிய, அத்தம் யாத்து - அருவழியில் நின்ற யாமரங்களின், பொரி அரை முழுமுதல் - பொரிந்த திரண்ட அடியை, உருவ - உருவும்படி, குத்தி - தன் கொம்பாற் குத்தி, மறம் கெழு - வன்மை பொருந்திய, தடகையின் வாங்கி - வளைந்த கையினுற் கொண்டு தந்து, உயங்கு நடை - வருந்திய நடையையும், சிறுகண் - சிறிய கண்களையுமுடைய, பெருநிரை - பெரிய யானை வரிசையின், உறு பசி தீர்க்கும் - மிக்க பசியைத் தீர்க்கின்ற, தடமருப்பு யானை - வளைந்த கொம்பையுடைய ஆண் யானையை, கண்டனர் - கண்டார்.

(முடிபு) தோழி, இறீஇயர் எண்ணிப் போகிய காதலர் சென்றவாற்றில், யானை கண்டனர்.

(கருத்து) தலைவர் வினைமுற்றியே மீள்வர்.

(வி - ரை) பொத்து - பொந்து; உட்புரை. காழ் - வயிரம். அத்தயா - சிவந்த யாமரமுமாம்; "செங்கிலையா" (அகநா. 33: 3.) பாலைநிலமாதலின் நீரின்றி யாவின் அரை பொரிந்தது. தட மருப்பு யானையாதலின் குத்தியது கோட்டாலென்று கொள்க. நிரை யென்றது பிடியும் கன்றுகளுமாகிய யானைவரிசையை.

"குழூஉப்புறந் தருதல் குஞ்சரத் தியல்பே" என யானையின் இயல்பை விதந்தோதுவர். இங்ஙனம் யானைக்கூட்டத்தைப் பாதுகாக்கும் களிற்றை ஏந்தலெனவும், யூதநாதனெனவும் வழங்குவர்; இந்நூல் 180-ஆம் செய்யுளைப் பார்க்க.

காண்பாரென்னுது கண்டனரென்றது துணிவு பற்றி. தம் கடனென்றது, தம் சுற்றத்தாரைப் பாதுகாத்தலும் தம்பால்

இரப்பார்க்கீதலுமாகிய செயல்களை. அவை செய்யப் பொருள் வேண்டு மாதலின் காதலர் சென்றார் ;

" அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர் "
(கலி. 11 : 1-4),

" கேள்கே டுன்றவுங் கிளைஞ ராரவும்
கேளல் கேளிர் கெழீஇயின மொழுகவும்
ஆள்வினைக் கெதிரிய வூக்கமொடு " (அகநா. 93 : 1 - 3)

என்பவற்றைக் காண்க.

காமர் - காமம் மருவிய வென்பதன் விகாரமாக்கி, விருப்பம் பொருந்திய வெனப் பொருளுரைத்தலும் பொருந்தும். பொருட் பிணி - பொருளிடத்து நெஞ்சுபிணித்தல் (கலி. 4 : 25, ந.)

தன் கடனையறிந்து அதனை முற்ற ஆற்றும் யானையைக் காண்பாராதலின், இல்லறத்திற்கு உரியன ஆற்றும் பொருட்டுப் பொருள் தேடச் சென்ற அவர் தம்வினை முற்றிய பின்னரே மீள்வரென்பது குறிப்பு.

அறம் புரிவதில் தலைவியும் மனமொத்த தன்மையினளாகித் தலைவனுக்குத் துணை செய்பவளாதலின், "அவர் இடை நின்று மீண்டால், அறம் செய்தலிற் குறை நேரு மன்றே" எனக் கவன்றாள்.

தாம் சென்ற விடத்துக் காட்சிகள் அவருடைய கடனை நினைவுறுத்துமாதலின் சோர்வின்றி எண்ணிய எண்ணியாங் கெய்தி வருவரெனத் தோழி துணிவுறுத்தினாள்.

(ஒப்பு.) 1. முழுமுதல் : குறுந். 214 : 5: 361 : 4.
4. யானையின் நிரை : குறுந். 180 : 2, ஒப்பு.
1-5. யானையும் யாமரமும் : குறுந். 37 : 2-4, ஒப்பு.
7. பொருட்பிணி : குறுந். 344 : 7, 350 : 8 ; நற். 46 : 11, 71 : 1, 113 : 5 ; ஐங். 355 : 2 ; கலி. 4 : 25 ; அகநா. 43 : 14, 51 : 8.
8. நாம் வெங் காதலர் : கலி. 27 : 26. 7-8. மு. நற். 186 : 9-10. (உடு)

தலைவன் கூற்று

[பொருள்வயிற் பிரிய எண்ணிய தலைவன் தன் கருத்தைத் தலைவிக்கு உணர்த்த, அவள் வெய்துற்று அழுதாளாக, அது கண்ட தலைவன் செலவு தவிர்ந்து கூறியது.]

உருசு.மணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகை
பிணிகான் மென்கொம்பு பிணையொடு மார்ந்த
மானே றுகளுங் கானம் பிற்பட
வினைநலம் படஇ வருது மவ்வரைத்
5. தாங்க லொல்லுமோ பூங்குழை யோயெனச்
சொல்லா முன்னர் நில்லா வாகி
நீர்விலங் கழுத லானை
தேர்விலங் கினவாற் றெரிவை கண்ணே.

எ - து. பொருள் விலக்கப்பட்ட கிழவன் செலவழுங்கியது.

[பொருள் முயற்சியினின்றும் விலக்கப்பட்ட தலைவன் செல்லுதலினின்றும் நீங்கியது.]

ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

(பி - ம்.) 2 'மமர்ந்த', 'மாந்த' 3 'கான்பின்பட 7 'கழிதலானு' 8 'றெரியிழைகண்ணே'

(ப - ரை.) பூ குழையோய் - பொலிவையுடைய குழையையணிந்தோய், மணி வார்ந்தன்ன - நீலமணி ஒழுகினாற் போன்ற, மா கொடி அறுகை - கரிய கொடியாகிய அறுகினது, பிணி கால் மெல் கொம்பு - பிணிப்பு நீங்கிய மெல்லிய தண்டை, பிணையொடும் ஆர்ந்த - பெண்மானோடு வயிறு நிரம்ப உண்ட, மான் ஏறு உகளும் - ஆண்மான் துள்ளுகின்ற, கானம் பின்பட - காடு பின்னுகச் சென்று, வினை நலம் படஇ வருதும் - தொழில் நன்மை உண்டாகப் பெற்று மீண்டு வருவேம்; அ வரை - அக்காலத்தளவும், தாங்கல் ஒல்லுமோ - நின்னைற் பொறுத்திருத்தல் இயலுமோ? என சொல்லா முன்னர் - என்று நாம் சொல்லாமைக்கு முன்னமே, தெரிவை கண் - தலைவியின் கண்கள், நில்லா ஆகி - பழைய நிலையில் நில்லாமற் கலங்கி, நீர் விலங்கு அழுதல் ஆனு - நீரால் மாறுபடு தலையுடைய அழுகை அமையாவாகி, தேர் விலங்கின - எம் தேரைத் தடை செய்தன.

(முடிபு) 'பூங்குழையோய், கானம் பிற்பட வினைநலம்படஇ வருதும்; தாங்கல் ஒல்லுமோ?' எனச் சொல்லா முன்னர், தெரிவை கண் அழுதல் ஆனுவாகித் தேரை விலங்கின.

(கருத்து) தலைவி என் பொருட்பிரிவுக்கு உடம்படாமையின் யான் செல்லேன்.

(வி - ரை.) மணி - நீலமணி. பிணியென்றது அறுகினது இலை இளைதாக இருக்குங்கால் அமைந்துள்ள மூறுக்கு. மென் கொம்பாதலின் ஆர்ந்தது. கானம் பிற்பட வென்றது கானத்தைக் கடந்தென்றபடி. ஆண்டுச் செல்வேனுயினும் பிணைமானும் மானேறும் ஒன்றுபட்டு உகளும் காட்சிகண்டு மேற்செல்லாது மீள்வே னென்பது குறிப்பு.

வினைநலம்படுதல் - பொருள்முயற்சி முற்றுப்பெறுதல். வரை யென்றது அளவு; அஃது ஈண்டுக் கால அளவு குறித்தது. தாங்கல் - பிரிவினுல் உண்டாகும் துன்பங்களைப் பொறுத்தல். பூங்குழை - பூத்தொழில் அமைந்த குழை யெனினுமாம்.

நீர் விலங்கு அழுதல் - நீர் கண்ணிலுள்ள பாவையை மறைக் கின்ற அழுகையென்பதும் ஆம்; "பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு" (அகநா. 5: 21.)

கண் தேர்விலங்கினவென்று கூறினும், அவள் அழுதல் கண்டு நான் செலவு தவிர்ந்தே னென்பதே கருத்து. தெரிவை: தலைவி யென்னும் பொருட்டாய் நின்றது.

(ஒப்பு.) 1. அறுகின் கொடிக்கு நீலமணி: "பழங்கன்று கறிக்கும் பயம்பம லறுகைத், தழங்குகுரல் வானின் றலைப்பெயற் கீன்ற, மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவை" (அகநா. 136: 11-3.)

2-3. பிணையும் மானும் உகளுதல்: குறுந். 65: 1-3, ஒப்பு. பிணையும் மானேறும்: குறுந். 319: 1. 1-3. அருகம்புல்லை மான் பிணையோடு உண்ணல்: அகநா. 23: 7-9; பு. வெ. 277.

5. காமந் தாங்குதல்: குறுந். 241: 1, தாங்கல் ஒல்லுமோ: அகநா. 333: 5. (உருசு)

தலைவி கூற்று

[வரைவுணர்த்திய தோழியை நோக்கி, "தலைவனைக் கண்ட போது இன்பமும் அவனைக் காணுதபோது துன்பமும் உடையேனை இருந்தேன். இனி எப்பொழுதும் உடனுறைதலால் இன்பமே உண்டாகும்" என்பது படத் தலைவி கூறியது.]

உருஎ. வேரு முதலுங் கோடு மொராங்குத்
தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்
கீழ்தாழ் வன்ன வீழ்கோட் பலவின்
ஆர்கலி வெற்பன் வருதொறும் வரூஉம்
5. அகலினு மகலா தாகி
இகலுந் தோழிநங் காமத்துப் பகையே.

எ - து. வரைவுணர்த்தீய தோழிக்குக் கிழத்தி உரைத்தது. உறையூர்ச் சிறு கந்தன்.

(ப - ரை.) தோழி—, நம் காமத்து பகை - நம்மிடத்துள்ள காமமாகிய பகை, வேரும் முதலும் கோடும் - வேரிலும் அடிமரத்திலும் கிளையிலும், ஓராங்கு - ஒருபடியாக, தொடுத்த போல - தொடுத்து வைத்தன போல, தூங்குபு தொடரி - தொங்கித் தொடர்ந்து, கீழ் தாழ்வன்ன - கீழே தாழ்ந்தாற் போன்ற, வீழ்கோள் பலவின் - தணிந்த குலைகளையுடைய பலாமரத்தினையுடைய, ஆர்கலி வெற்பன் - ஆரவாரத்தையுடைய மலைக்குத் தலைவன், வருதொறும் - இங்கே வருந்தோறும், வரூஉம் - வெளிப்படும்; அகலினும் - அவன் அகன்றாலும், அகலாதாகி - போகாததாகி, இகலும் - மாறுபடும்; இஃது என்ன வியப்பு!

(முடிபு) தோழி, காமத்துப்பகை, வெற்பன் வருதொறும் வரூஉம்; அகலினும் இகலும்.

(கருத்து) தலைவனைப் பிரிதலின்றி ஒன்றியிருத்தலே எனக்கு இன்பம் பயப்பது.

(வி - ரை.) தொடுத்தபோல - ஓரிடமும் எஞ்சாது தொடர்ந்து காய்களைத் தொடுத்தாற் போல. கீழ்தாழ்வன்ன - கீழே விழுந்து விடுதலைப் போன்ற வெனலுமாம்; பருமையைச் சுட்டியபடி. வீழ் கோள் - விரும்பும் குலையெனலும் பொருந்தும். கோள் - காய்க்குலை. மலையிலுள்ள பலவகை ஆரவாரங்களை 'மலைபடுகடாம்' என்னும் பாட்டால் உணரலாம்.

காமம் இன்பத்தைத் தருவதாயினும் தலைவனைப் பிரிந்த ஞான்று தன்னுடனுறைந்தே துன்பத்தைத் தருதலின் அதனைப் பகையாகக் கூறினள்;

> "கைதையந் தண்புனற் சேர்ப்பனெடு
> செய்தன மன்றவோர் பகைதரு நட்பே",
> "பகையா கின்றவர் நகைவிளை யாட்டே" (குறுந். 304: 7-8, 394: 7.)

என வருவனவற்றையும் காண்க.

தலைவனைக் காணுந்தோறும் காமம் வெளிப்படு மென்றாள்; இக் கருத்து முன்பு (136 - ஆம் செய்யுளில்) வந்துள்ளது.

தலைவன் வருங்காலத்திற் காமம் இன்பம் பயத்தலும் அவன் பிரிந்த காலத்தில் துன்பம் பயத்தலுமாகிய இக் கருத்து,

> "நீரின் றண்மையும் தீயின் வெம்மையும்
> சாரச் சார்ந்து தீரத் தீரும்
> சார லுடன் கேண்மை

சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே"

என்ற பழம்பாட்டிலும் காணப்படுகின்றது.

"தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ" (1159) என்பது குறள்.

காமத்துப்பகை : அத்து, வேண்டாவழிச் சாரியை.

(ஒப்பு.) 1. ஓரங்கு : குறுந். 38 : 5, 316 : 5.

1-3. வேரிற் காய்க்குலையை யுடைய பலவு : (குறுந். 18 : 1, ஒப்பு); "செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி", "பலவின், வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெரும்பழம்" (நற். 201 : 5, 213 : 2-3.)

கோடு தொறும் காய்க்குலையை யுடைய பலவு : குறுந். 83 : 3-5, ஒப்பு.

5-6. காமத்தின் தன்மை : "நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணெனு, தீ" (குறள், 1104.) (உரை)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்த தலைவனை நோக்கி, "தலைவி அழகிழந்தாள்; ஆதலின் நினக்கு ஆகும் பயனொன்றில்லை; ஈண்டு வாரற்க" என்று தோழி வாயில் மறுத்தது]

உடுஅ·வாரலெஞ் சேரி, தாரனின் றூரே,
அலரா கின்றூற் பெருமஃ காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
5. அரியலம் புகவி னந்தோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளினையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னிவிவள்
பழிதீர் மாணலந் தொலைதல் கண்டே.

எ - து. (1) தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.

(2) வாயில் நேர்ந்ததூஉமாம்.

பரணர். வரலாறு காண்க.

(பி - ம்) 1 'வாரலோ வாரலெஞ்சேரி.' 2 'பெருமா காவிரி' 4 'சேந்தனுறந்தை' 5 'அரியரிலம்புகவிளங்கோட்டு வேட்டை' 7 'தொழுதன கண்ணே'

(ப - ரை) பெரும—, காவிரி பலர் ஆடு பெருதுறை - காவிரி நதியினது பலர் நீராடுகின்ற பெரிய நீர்த்துறையின்கண் வளர்ந்த,

மருதொடு பிணித்த - மருத மரத்திற் கட்டிய, ஏந்து கோடு யானை - மேலுயர்ந்த கொம்பையுடைய யானைகளையுடைய, சேந்தன் தந்தை - சேந்தனுடைய தந்தையும், அரியலம்புகவின் - கள்ளாகிய உணவையும், அம் தோடு வேட்டை - அழகிய விலங்குத் தொகுதியை வேட்டையாடும் தொழிலையும், நிரையம் ஒள்வாள் - பகைவருக்கு நரக வாழ்வைப் போன்ற துன்பத்தைத் தரும் ஒள்ளிய வாளையுமுடைய, இளையர் பெருமகன் - இளைய வீரர்களுடைய தலைவனுமாகிய, அழிசி ஆர்க்காடு அன்ன - அழிசியினது ஆர்க்காடென்னும் நகரத்தைப் போன்ற, இவள் பழி தீர் மாண் நலம் - இவளது குற்றந்தீர்ந்த மாட்சிமைப்பட்ட அழகு, தொலைதல் கண்டு - அழிதலைக் கண்டபின், எம் சேரி - எமது சேரிக்கண், வாரல் - வருதலை யொழிவாயாக; நின் தார் தாரல் - நின் மாலையைத் தருதலை யொழிக; அலர் ஆகின்று - பழிமொழி உண்டாகின்றது.

(முடிபு) பெரும, இவள் நலம் தொலைதல் கண்டு வாரல்; தாரல்.

(கருத்து) நீ ஈண்டு வாரற்க.

(வி - ரை.) இவள் நலம் தொலைதல் கண்டாய்; இனி இவள் பால் நினக்கு இன்பம் பிறவாது; ஆதலின் வாரற்க என்று வாயில் மறுத்தாள்.

அலர் - பரத்தையர் கூறும் பழிமொழி; 'தலைவி தலைவனைத் தன்பாலே இருத்திக் கொண்டாள்' எனக் கூறுவது. ஆற்றங் கரைகளிலும் துறைகளிலும் மருத மரங்களை வளர்த்தல் வழக்கம்.

அரியலம் புகவு: அம் சாரியை. புகவு - உணவு; புகா வென்பதன் விகாரம். அரியலம் புகவின் இளையரென்க. இது வீரபானம்; "கள்ளி னிரும்பைக் கலஞ்செல வுண்டு" (மதுரைக். 228) என்பதையும் அதனுரையையும் பார்க்க. தோடு - விலங்கின் தொகுதி. நிரைய வொள்வாள் - பகைவருக்கு நரக வேதனையை உண்டாக்கும் ஒள்ளிய வாள்;

"நிரைகளி ருழுகிய நிரைய வெள்ளம்" (பதிற். 15: 4),

"நிரயத் தானை" (சிலப். 26: 37)

என்பவற்றின் உரையைப் பார்க்க.

சேந்தனென்பவனுடைய தந்தை அழிசி யென்பதும் அவனுக்கு ஆர்க்காடு உரியதென்பதும்,

"நோவினி வாழிய நெஞ்சே மேவார்
ஆரரண் கடந்த மாரி வண்மகிழ்த்
திதலை யெஃகிற் சேந்தன் றந்தை
தேங்கமழ் விரிதா ரியறே ரழிசி

வண்டுமூசு நெய்த னெல்லிடை மலரும்
அரியலங் கழனி யார்க்கா டன்ன
காமர் பணைத்தோ ணலம்வீ றெய்திய
வலிமான் மழைக்கட் குறுமகள்
சின்மொழித் துவர்வாய் நகைக்குமகிழ்ந் தோயே" (நற். ககo)

என்னும் பாட்டினாலும் அறியப்படுகின்றன.

இரண்டாவது கருத்து: 'வாரல் எம் சேரி; தாரல் நின்தார்; இவள் நலம் தொலைதல் கண்டு அலராகின்று' என்று கூட்டி, 'எமக்கு நீ வருதலும் நின்தார் தருதலும் உடம்பாடல்லவேனும், ஊரினர் கூறும் பழிமொழியை அஞ்சினேம்; ஆதலின் நினக்கு உடம்பட்டேம்' எனக் கூற்றெச்சம் வருவித்துரைக்க.

(ஒப்பு.) 1. சேரி: குறுந். 231: 1.

தலைவி தலைவனது தாரை விரும்பாமை: "பல்லார்தோ டோய்ந்து வருதலாற் பாய்புனல், நல்வய லூரநின் ஞர்புலால்" (தொல். கிளவி. 56, ந. மேற்.); "ஒல்லேங் குவளைப் புலாஅன் மகன்மார்பிற், புல்லெருக்கங் கண்ணி நறிது" (தொல். கிளவி. 55, சே. மேற்.)

2. அரோகின்று: ஐங். 132: 3; அகநா. 96: 18.

ஆகின்று: குறுந். 15: 4, ஒப்பு.

3. பெருந்துறை மருது: "உளைப்பூ மருதத்துக் கிளைக்குரு கிருக்கும், தண்டுறை", "முடமுதிர் மருதத்துப் பெருந்துறை", "மருதுயர்ந் தோங்கிய விரிபூம் பெருந்துறை", "கரைசேர் மருதம்" (ஐங். 7: 4 - 5, 31: 3, 33: 2, 74: 3); "திருமருத முன்றுறை", "திருமருத நீர்ப்பூந் துறை", "தீம்புனல் வையைத் திருமருத முன்றுறையால்", "திருமருத முன்றுறை முற்றங் குறுகி" (பரி. 7: 83, 11: 30, 22: 45, திரட்டு, 2: 72.); "திசை திசை தேரூர்க்குந் திருமருதமுன்றுறை" (கலி. 26: 13); "வருபுனல் வையை வார்மண லகன்றுறைத், திருமரு தோங்கிய விரிமலர்க் காவின்" "துறையணி மருதமொடு" (அகநா. 36: 9 - 10, 97: 19); "உயர்சினை மருதத் துறை" (புறநா. 243: 6) "வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை" (சிலப். 14: 72.)

5 - 6. "மட்டப் புகாவிற் குட்டுவ ரேறே" (பதிற். 90: 26.)

8. மாணலம்: குறுந். 74: 5, ஒப்பு. (உ.அ)

தோழி கூற்று

[தோழி அறத்தொடு நின்றபின், அங்ஙனம் தான் செய்ததைத் தலைவன் அறிந்தால் வரைந்து கொள்ளுவதற்குரிய முயற்சிகளைச் செய்வானென்று தான் எண்ணியதைத் தலைவிக்கு உணர்த்து வாளாய், "பொய் சொல்லுவதிற் பயன் யாது? தலைவன் நன்னெஞ்சமுடையான்" என்று கூறியது.]

உடுக மழைசேர்ந் தெழுதரு மாரிக் குன்றத்
தருவி யார்ந்த தண்ணறுங் காந்தள்
முகையவிழ்ந் தாஞ நாறு நறுநுதற்
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோயே!
5. ஒல்வை யாயினுங் கொல்வை யாயினும்
நீயளந் தறிவைநின் புரைமை வாய்போற்
பொய்ம்மொழி கூறலஃ தெவனே
நெஞ்ச நன்றே நின்வயி னானே.

எ - து. காப்பு மிகுதிக்கண் ஆற்ருளாகிய தோழி, அறத்தொடு நின்று, அவனே பரிகரிப்பனென்று கருதியதனைத் தலைமகளும் நயப் பாளாகக் கூறியது.

[நின்று கூறியதென இயைக்க.]

பரணர்.

(பி - ம்.) 6 'வாய்போலப்' 8 'நின்னுயிர் நானே'

(ப - ரை.) மழை சேர்ந்து எழு தரும் - மேகங்கள் சேர்ந்து எழுந்த, மாரி குன்றத்து - மழையையுடைய மலையினிடத்துள்ள, அருவி ஆர்ந்த - அருவிக்கு அருகிற் பொருந்திய, தண் நறு காந்தள் முகை அவிழ்ந்து - தண்ணிய நறிய காந்தளரும்புகள் விரிந்து, ஆஞ நாறும் நறுநுதல் - அமையாதனவாய் மணம் வீசுகின்ற நறிய நெற்றியையும், பல் இதழ் மழை கண் - பல இதழையுடைய தாமரைப் பூவைப்போன்ற குளிர்ச்சியையுடைய கண்ணையும் உடைய, மாஅயோயே - மாமை நிறம் பொருந்தியோய், ஒல்வை ஆயினும் - நீ என் பிழையைப் பொறுப்பாயாயினும், கொல்வை ஆயினும் - அன்றிச் சினந்து கொல்வாயாயினும், நின் புரைமை - நினது உயர்வை, நீ அளந்து அறிவை - நீயே அளவிட்டு அறியும் ஆற்றலையுடையை; வாய்போல் பொய் மொழி - மெய்யைப் போலப் பொய் வார்த்தைகளை, கூறல் அஃது எவன் - கூறுதலாகிய அஃது என்ன பயனைத் தரும்? நின் வயின் - நின் திறத்து, நெஞ் சம் நன்று - தலைவனது நெஞ்சு நலமுடையது.

(முடிபு) மாஅயோயே, நின் புரைமை நீ அறிவை; பொய்ம் மொழி கூறல் எவன்? நின் வயினுன் நெஞ்சம் நன்று.

(கருத்து) நான் அறத்தொடு நின்றதனல் நன்மையே விளை யும்.

(வி - ரை.) மழை சேர்ந்தமையின் மாரியும், மாரியுடைமை

யின் அருவியும், அருவியிருத்தலின் தண்ணறுங்காந்தளும் உண்டாயின. நறுநுதல் - நன்மையையுடைய நுதலுமாம். பல்லிதழ்: தாமரை மலருக்கு ஆகு பெயர் (குறுந். 5 :5, வி - ரை.)

'யான் செய்தது நின் உயர்வுக்கு ஏற்றதோ, அன்றே வென்பதை யான் அறியேன்; நீயே நின் உயர்வை அறிவாய். நான் செய்ய வேண்டுவதைத் துணிந்து செய்தேன்' என்றாள் தோழி. வாய் போற் பொய்ம்மொழி கூறலாவது தலைவியின் வேறுபாடு கண்டு தாயர் ஆராய்ந்தபொழுது உண்மை கூறுமல் அவ்வேறு பாட்டுக்குப் பொய்க் காரணங்களை உரைத்தல். 'அங்ஙனம் கூற்று தலாற் பயனில்லையாதலின் நான் உண்மையையே கூறினேன்' என்று தான் அறத்தொடு நின்றதைக் குறிப்பித்தாள். எவனே: ஓகாரம் அசைநிலை.

தலைவன் நின் திறத்து நல்ல நெஞ்சுடைய னென்றது, வரைந்து கொள்ளும் கொள்கையுடைய னென்பதை உணர்த்திய வாறு; அக் கொள்கை யுடையனுதலின் அறத்தொடு நிற்பின் நலம் விளையுமென்பது தோழியின் உட்கிடக்கை.

நெஞ்சம் நன்றே - எனது நெஞ்சம் நன்றே யெனலும் பொருந்தும்; 'யான் நன்மை கருதியே செய்தேன்' என்றபடி.

நன்றே: ஏகாரம் தேற்றம்.

(ஒப்பு.) 2. அருவியார்த்த காந்தள்: "நீரயற் கலித்த நெரிமுகைக் காந்தள்" (பரி. 14 : 13); "உயர்முகை நறுங்காந்த ணூடோறும் புகினை, அயனந்தி யணிபெற வருவியார்த் திழிதரும், பயமழை தலைஇய பாடுசால் விறல் வெற்ப" (கலி. 53 : 5-7)

3. நுதலுக்கு மணம் உண்மை: குறுந். 22 : 5, ஒப்பு.

2-3. நுதல் காந்தளின் மணம் வீசல்: "சிலையொண் காந்த ணறு நறு நுதல்" (அகநா. 338 : 7.)

4. பல்லிதழ் மழைக் கண்: குறுந். 5 : 5, ஒப்பு.

5-6. "அடுகை யாயினும் விடுகை யாயினும், நீயளந் தறிதிகின் புரைமை" (புறநா. 36 : 1-2) 6-7. வாய்போற் பொய்ம்மொழி: அகநா. 3 : 14.

8. தலைவனது நல்ல நெஞ்சம்: குறுந். 265 : 6. (உருக)

தோழி கூற்று

[தலைவனது பிரிவை ஆற்றிருந்த தலைவியை நோக்கி, "நன்னிமித்தங்கள் உண்டாகின்றன; ஆதலின் தலைவர் வந்து விடுவர்; நீ ஆற்றுக" என்று தோழி கூறியது.]

உகூ0. குருகு மிருவிசும் பிவரும் புதலும்
வரிவண்டு தை வாய்நெகிழ்ந் தனவே

சுரிவளைப் பொலிந்த தோளுஞ் செற்றும்
வருவர்கொல் வாழி தோழி பொருவார்
5. மண்ணெடுத் துண்ணு மண்ணல் யானை (துக்
வண்டேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்
கன்றி லோரா விலங்கிய
புன்ரு ளோமைய சுரனிறந் தோரே.

எ - து. அவர் வரவிற்கு நிமித்தமாயின கண்டு, ஆற்றுளாகிய தலைமகட்குத் தோழி சொல்லியது.

கல்லாடனர்.

(பி - ம்.) 2 'வாய்ளெகிழ்ந்' 6 'வழையமரடுக்கத்துச்', 'வழைமல ரடுக்கத்துச்' 7 'கன்றிலேரா'

(ப - ரை) தோழி—, குருகும் இருவிசும்பு இவரும் - நாரைகளும் கரிய வானத்தின்கண் உயரப் பறக்கும்; புதலும் - புதலிலுள்ள போதுகளும், வரி வண்டு ஊத - கோடுகளையுடைய வண்டுகள் ஊதுவதனால், வாய் நெகிழ்ந்தன - மலர்ந்தன; சுரிவளை பொலிந்த தோளும் - சுழித்த சங்காற் செய்த வளையினால் விளங்கிய தோள்களும், செற்றும் - நெகிழ்ச்சி நீங்கிய வளையோடு செறியும்; ஆதலின், பொருவார் - பகைவரது, மண் எடுத்து உண்ணும் - பூமியைக் கொண்டு நுகரும், அண்ணல் யானை - தலைமை பொருந்திய யானையையும், வள் தேர் - வளவிய தேரையுமுடைய, தொண்டையர் - தொண்டைமான்களுக்குரிய, வழை அமல் அடுக்கத்து - சுரபுன்னைகள் நெருங்கிய மலைப்பக்கத்தில், கன்று இல் ஓர் ஆ - கன்றில்லாத ஒற்றைப்பசுவை, விலங்கிய - நிழலினால் தம்பால் வரச்செய்து தடுத்த, புல்தாள் ஓமைய சுரன் - புல்லிய அடியையுடைய ஓமை மரங்களையுடைய பாலை நிலங்களை, இறந்தோர் - கடந்து சென்ற தலைவர், வருவர்.

(முடிபு) தோழி, குருகும் இவரும்; புதலும் நெகிழ்ந்தன; தோளுஞ் செற்றும்; சுரன் இறந்தோர் வருவர்.

(கருத்து) நன்னிமித்தங்கள் உண்டாதலின் தலைவர் வருவர்.

(வி - ரை.) இதிற் கூறப்படும் நிமித்தங்கள் கூதிர்காலமென்பதைப் புலப்படுத்தின (நெடுநல். 15 - 7.) புதல்: ஆகுபெயர். வண்டுத மலர்கள மலர்வது இயல்பு. வளை சங்கினாற் செய்த தோள்வளை. வளை இறுகுதல் நன்னிமித்தம்;

" மயிர்வார் முன்கை வனையுஞ் செறூஉம்
... ...
பெருங்க ணடன் வருங்கொ லன்னுப் " (ஐங். 218 : 2- 5.)

கொல், வாழி : அசைநிலைகள். பொருவார் மண்ணெடுத்துண்ணும் தொண்டையரென இயைக்க. பொருவார் மண்ணெடுத்துண்ணுதலாவது பகையரசர்களுடைய நாடுகளை வென்று அடிப்படுத்து அவற்றுல் வரும் பயன்களை நுகர்தல்; இப்பொருள் பற்றியே வடமொழியிலும் அரசனை, 'பூபுக்' என்று கூறுவர்;

" பிறர்மண் ணுண்ணுஞ் செம்மனின் னூட்டு
வயவுறு மகளிர் வேட்டுணி னல்லது
பகைவ ருண்ணு வருமண் ணினையே " (புறநா. 20 : 13-5.)

தொண்டையரடுக்கமென்றது வேங்கட மலையை;

" வென்வேற் றிரையன் வேங்கட நெடுவரை ",

" விளைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
இனமழை தவழு மேற்றரு நெடுங்கோட்
டோங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர் " (அகநா. 85 : 9, 213 : 1-3.)

விலங்கிய - தடுத்த (குறுந். 59 : 5) புன்தாள் - சிவந்த தாளெனலும் பொருந்தும்; " ஓமைச் செவ்வரை " (நற். 279 : 7.)

(மேற்.) 8. குறிப்பு விளைமுற்று, பெயரெச்சக் குறிப்பாயிற்று (நன். 350, மயிலை, 351, சங்கர; இ. வி 250.)

(ஒப்பு.) 1. குருகு விசும்பிற் பறத்தல் : " வேழவெண்பூ, விசும்பாடு குருகிற் றோன்று மூரன் " (ஐங். 17 : 1-2)

1-2. வண்டு ஊதப் புதல் மலர்தல் : குறுந். 265 : 1-5, ஒப்பு.

4. வாழி தோழி : குறுந். 226 : 4, 240 : 5, 278 : 4, 316 : 3, 331 : 5, 339 : 5 ; 350 : 1 ; 387 : 4.

6. வழையம லடுக்கம் : " வழையமை சாரல் " (மலைபடு. 181.)

8. புன்கு னோமை : குறுந். 79 : 2, ஒப்பு. (உசு0)

தலைவி கூற்று

[இரவுக்குறிக் கண் வந்த தலைமகன் சிறைப்புறத்தே இருப்ப அதனை யறிந்த தலைவி தோழிக்குச் சொல்வாளாகி, " தலைவரது வரவை எதிர்நோக்கி வருந்தி இரவெல்லாம் துயின்றிலேன் " என்று கூறி, விரைவில் வரைந்து கோடலே நன்றென்பதைப் புலப்படுத்தியது.]

உசுக. பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் சில்பெயற் கடைநாட்

சேற்றுநீலை முனைஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத் தையெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னென்னு மென்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்
கணக்காய் வகையின் வருந்தியென்
நெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே.

எ - து. இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கழார்க் கீரன் எயிற்றி (பி - ம். கிழார்க் கிரனெயிற்றி.)

(பி - ம்) 1 'படுமழை' 2 'விற்பெயற்', 'விற்பெயர்க்' 5 'பொழுதினு ணு' 8 'விழுமத்தானே'

(ப - ரை.) தோழி—, காவலர் கணக்கு ஆய் வகையின் வருந்தி - நாழிகைக் கணக்கர் இரவில் காலக்கணக்கை ஆராயும் திறத்தைப் போல ஆராய்ந்து வருந்தி, நெஞ்சு புண் உற்ற விழுமத்தான் - நெஞ்சம் புண்பட்ட துன்பங் காரணமாக, பழமழை பொழிந்தென - பழைய மழை பொழிந்ததாக, பதன் அழிந்து உருகிய - செவ்வி அழிந்து ஒழுகிய, சிதடு காய் எண்ணின் - உள் வீடில்லாத ஊமைக் காயையுடைய எட்பயிரையுடைய, சில் பெயல் கடைநாள் - சிறிய மழையையுடைய கார்ப்பருவத்தின் இறுதி நாட்களில், சேற்று நிலை முனைஇய - சேற்றின்கண் நிற்றலை வெறுத்த, செ கண் காரான் - சிவந்த கண்ணையுடைய எருமை, நள்ளென் யாமத்து - இருள் செறிந்த நடு இரவின் கண், ஐ என கரையும் - ஐயென்று ஒலிக்கும், அஞ்சு வரு பொழுதினு னும் - அச்சம் உண்டாகின்ற காலத்திலும், என் கண் - என்னுடைய கண்கள், துஞ்சா - தூங்காவாயின.

(முடிபு) தோழி, வருந்தி உற்ற விழுமத்தான் பொழுதினுனும் என் கண் துஞ்சா.

(கருத்து) தலைவனது வருகையை நோக்கி நான் இரவில் துயிலாதிருந்தேன்.

(வி - ரை.) பழமழை பொழிந்த காலத்தில் எள் பதனழிந்தது. பதனழிந்துருகுதல் உள்ளீடு அழுகிவிடுதலால் ஒன்றும் இல்லையாதல்.

ஐயென : அநுகரணவொலி. தனிமைத் துன்பத்தை மிகுதிப் படுத்தலின் யாமத்தை அஞ்சுவரு பொழுதென்றார். கரையும் பொழுதென இயைக்க.

காவலரென்றது நாழிகைக் கணக்கரை. அவர் இரவில் துயிலாது நாழிகை வட்டிலிலக் கூர்ந்து நோக்கி யாமக்கணக்கை அறிவிப்பர்; அவர்கள் துயிலாதிருத்தலிப் போல யானும் தலிவன் வரும் பொழுதை நினைந்து நினைந்து துயிலாதிருந்தேனென்றுள். வருந்துதல் இன்னும் வந்திலரே யென்றும், காவலர் ஆதியோர் கண்டனரோ வென்றும் வருந்துதல்.

இதனுல் தான்படும் துன்பத்தையும் அச்சத்தையும் கூறி, வரைதலே இதற்குப் பரிகாரமென்று தலிவி புலப்படுத்தினுள்.

(மேற்.) 3. முனை வென்னும் உரிச்சொல் முனிவென்னும் குறிப்பை உணர்த்தியது (தொல். உரி. 89, இளம், 90, சே, தெய்வச். 88, ந.) ஆவென்னும் பெயர் எருமைக்கும் வந்தது (தொல். மரபு. 60, பேர்.)

(ஒப்பு.) 1. பழமழை : குறுங். 251 : 5, ஒப்பு.

2. சில பெயற் கடைநாள் : குறுங். 332 : 1. 3. காரான் : குறுங். 181 : 3, ஒப்பு.

செங்கட்காரான் : "செங்க ணெருமை" (மலிபடு. 472.); "செந்நோக் கெருமை" (ஐங். எழு. 46.) 3. மு. அகநா. 46 : 1.

4. நள்ளென் யாமம் : குறுங். 6 : 1, ஒப்பு. 160 : 4, ஒப்பு.

5-6. தலிவி துஞ்சாமை : குறுங். 6 : 4, ஒப்பு.

6-7. நாழிகைக் கணக்கர் கணக்காய்தல் : முல்லைப். 55-8; சிலப். 5 : 49, அடியார்; கம்ப. மாரீசன். 129. (உகக)

தோழி கூற்று

[தலிவி தலிவனுடன் போவதற்கு நேர்ந்த தோழி, அதனைத் தலிவிக்கு உணர்த்தியது.]

உகஉ. ஊஉ ரலரெழச் சேரி கல்லென,
ஆன தலிக்கு மறனி லன்னை
தானே யிருக்க தன்மனை யானே
நெல்லி தின்ற முள்ளெயிறு தயங்க
5. உணலாய்ந் திசினை லவரொடு சேய்நாட்டு
விண்டொட நிவந்த விலங்குமலைக் கவாஅற்
கரும்புநடு பாத்தி யன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே.

எ - து. உடன்போக்கு நேர்ந்த தோழி கிழத்திக்கு (தி-ம்., தோழிக்குக் கிழத்தி) உடன்போக்கு உணர்த்தியது.

பாலை பாடிய பெருங்கடுங்கோ.

(பி-ம்.) 3 'யிருக்கத்தன் மனையே யானே'

(ப - ரை) ஊர் அலர் எழ - ஊரில் பழிமொழி உண்டாக, சேரி கல்லென - தெருவிலுள்ளார் கல்லெனறு ஆரவாரிப்ப, ஆனது அலைக்கும் - அமையாமல் நம்மை வருத்துகின்ற, அறன் இல் அன்னை - அறனினைவில்லாத தாய், தன்மனை - தன்வீட்டில், தானே இருக்க - நின்னைப் பிரிந்து தான் ஒருத்தியே இருப்பாளாக; யான் சேய் நாட்டு - நான் நெடுந்தூரத்திலுள்ள நாட்டின்கண், விண் தொடநிவந்த - வானத்தைத் தொடும்படி உயர்ந்த, விலங்கு மலை கவான் - குறுக்கிட்ட மலையின் அடிவாரத்திலுள்ள, கரும்பு நடு பாத்தி அன்ன - கரும்பை நட்ட பாத்தியைப்போன்ற, பெருகளிறு அடிவழி - பெரிய ஆண் யானையினது அடிச்சுவட்டின்கண், நிலைஇய - தங்கிய, நீர் - நீரை, அவரொடு - அத்தலைவரோடு, நெல்லி தின்றமுள் எயிறு தயங்க - நெல்லிக் காயைத் தின்ற முள்ளைப் போலக் கூரிய பற்கள் விளங்கும்படி, உணல் ஆய்ந்திசின் - நீ உண்ணுதலை நினைந்தேன்.

(முடிபு) எழ, கல்லென, அன்னை இருக்க; யான் உணல் ஆய்ந்திசின்.

(கருத்து) நீ தலைவனுடன் போதலுக்கு யான் நேர்ந்தேன்.

(வி - ரை.) ஊர் அலரெழுதலும் சேரி ஆரவாரித்தலும் தலைவி தலைவனுடன் செல்வதனால் நிகழ்வன. சேரியிலுள்ளார் ஊரினருள் தலைவியை நன்கறிந்தவராதலின் ஆரவாரித்தனர். அலைத்தல் - காவல் செய்தல். அறன் - தக்க தலைவன் இன்னனென்பதை அறிந்து மணம் செய்து தருதல். தானே: ஏகாரம் பிரிநிலை.

முள் எயிறு - முட்போலக் கூரிய எயிறு. நெல்லி பாலை வழியில் இருப்பது. அதனைத் தின்றமையால் ஒளி இழந்த பல் நீருண்பதனால் விளக்க முறும். உணல் - தலைவி உண்ணுதல்.

யானை அடிச்சுவட்டின்கண் தங்கிய நீர் கரும்பின் பாத்தியிலுள்ள நீரைப் போல்வது. இங்ஙனம் நீர் களிற்றடிச்சுவட்டிற் றங்குதலை இந்நூல், 52-ஆம் செய்யுளாலும் உணரலாகும்.

நெல்லிக் காயைத் தின்ற பின்னர் நீரைக் குடித்தால் இனிக்கும் (அகநா. 54: 15-6) இங்ஙனம் குடிக்கும் வழக்கம்,

> "செழுந்தண் மனையோ டெம்மிவ ணெழியச்
> செலபெருங் காஎ பொய்மருண்டு சேய்நாட்டுச்
> சுவைக்காய் நெல்லிப் போக்கரும் பொங்கர்
> வீழ்கடைத் திரள்கா யொருங்குடன் றின்று

வீசுஜேச் சிறுநீர் குடியினள் கழிந்த
குவளே யுண்க ணெண்மகள் " (நற். 271 : 3-8)

என்பதனாலும் விளங்கும்.

களிற்றின் அடிவழி நிலேயிய நீராயினும் அது தலேவனேடு உண்ணும்பொழுது தலேவிக்கு மிக இனியதாகும்;

" அன்னாய் வாழிவேண் டன்னேநம் படப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவாநாட்
டுவலேக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே " (ஐங். 203.)

இச்செய்யுளே அடியொற்றி வந்த பழஞ் செய்யுளொன்று வருமாறு :—

" ஊருஞ் சேரியு மலரெழ யாயும்
தானே யிருக்க தன்மனே யானே
திருந்துவேல் விடலேயொடு கெழீஇ
அருஞ்சுரஞ் சேறல் புரிந்தன னினியே " (தமிழ்நெறி. மேற். 92.)

(மேற்.) 1. ஊராருடைய கூற்று, கொண்டெடுத்து மொழியப்பட்டது (தொல். செய். 192, பேர். 191, ந ; இ. வி. 563); அசையும் ஒரோவழிச் சீராம் (யா. வி. 95.)

2-3. இடையூறு பொருளின்கண் தலேவி போக்குடன்பட்டது (தொல். பொருள். 31, ந.)

மு. போக்கு நோந்தமை தோழி கூறியது (தொல். அகத். 39, ந.)

(ஒப்பு.) 1. ஊருஞ் சேரியும் அலரெழல் : " ஊருஞ் சேரியு முடனியைந் தலரெழ ", " ஊருஞ் சேரியு மோராங் கலரெழ " (அகநா. 220 : 1, 383 : 2.) அலராற் கல்லெனல் : (குறுந். 24 : 6); " இவ்வூர்க், கல்லென் கௌவை "; (ஐங். 131 : 2-3.)

கல்லென்றல் : குறுந். 24 : 6, ஒப்பு; நற். 207 : 3, 215 : 7.

2. அன்னை அலேத்தல் : குறுந. 247 : 5, ஒப்பு.

அறனிலன்னை : குறுந். 244 : 6, ஒப்பு.

4. முள்ளெயிறு : குறுந். 286 : 1, நற். 120 : 11 ; கலி. 4 : 13, 104 : 18, 112 : 20 ; அகநா. 212 : 5 ; ஏலாதி. 7 ; மணி. 18 : 71 ; சீவக. 491, 1099, 2732.

6. விண்டொட நிவந்த மலே : குறுந். 144 : 7, 285 : 8.

விலங்கு மலே : குறுந் 134 : 7, 144 : 7. மலேக் கவான் : குறுந். 353 : 2 ; நற். 32 : 1.

7. கரும்பு நடு பாத்தி : குறுந். 180 : 2, ஒப்பு ; ஐங். 65 : 1 ; பதிற். 13 : 3.

7-8. " பெருங்களிறு மிதித்த வடியகத் திரும்புலி, ஒதுங்குவன கழிந்த செதும்ப லீர்வழி " (அகநா. 155 : 11-2.) மு. அகநா. 65. (உசுஉ)

தோழி கூற்று

[தாய் வெறியாட் டெடுக்கக் கருதி யிருப்பதைத் தோழி தலைவிக்குக் கூறுவாளாகிச் சிறைப்புறத்தானகிய தலைவனுக்கு உணர்த்தியது.]

மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇச்
செல்லாற்றுக் கவலைப் பல்லியங் கறங்கத்
தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா [திப்
வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்
5. பேஎய்க் கொளீஇய ளிவளெனப் படுதல்
நோதக் கன்றே தோழி மால்வரை
மழைவினை யாடு நாடனைப்
பிழையே மாகிய நாமிதற் படவே.

எ - து. "அன்னை (பி-ம். இப்பாட்டன்னை) வெறியாட் டெடுக்கக் கருதாநின்றாள்; இனி, யாம் இதற்கு என்கொலோ செயற்பாலது?" எனத் தோழி, தலைமகட்குத் தலைமகன் சிறைப் புறமாகக் கூறியது.

பெருஞ்சாத்தன்.

(பி-ம்.) 8 'நாமிகற்'

(ப - ரை.) தோழி—, மால்வரை - பெரிய மலையினிடத்து, மழை விளையாடும் நாடனை - மேகம் விளையாடுகின்ற நாட்டுக்குத் தலைவன் மாட்டு, பிழையேம் ஆகிய நாம் - தவறிலேமாகிய நாம், இதன்பட - இக் களவொழுக்கத்திலே நிகழா நிற்ப—, மறிகுரல் அறுத்து - ஆட்டின் கழுத்தை அறுத்து, தினை பிரப்பு இரீஇ - தினையையுடைய பிரப்பை வைத்து, செல் ஆறு கவலை - ஓடுகின்ற ஆற்றுத் துருத்தியிலே, பல் இயம் கறங்க - பலவகையான இசைக் கருவிகள் ஒலிப்ப, தோற்றம் அல்லது - தாம் வெளிப்படுதலையன்றி, நோய்க்கு மருந்து ஆகா - நம்முடைய காமநோய்க்குப் பரிகாரம் ஆகாத, வேறு பெரு தெய்வம் பலஉடன் வாழ்த்தி - வேறுகிய பெரிய தெய்வங்கள் பலவற்றை ஒருங்கு வாழ்த்தி, இவள் பேஎய் கொளீஇயள் - இவள் பேயாற் கொள்ளப் பட்டாள், என படுதல் - என்று கூறப்படுவது, நோதக்கன்று - வருந்துதற்கு உரியதாகும்.

(முடிபு) தோழி, நாம் இதற்பட, அறுத்து இரீஇ வாழ்த்தி எனப்படுதல் நோதக்கன்று.

(கருத்து) தாய் வெறியாடக் கருதினுள்; அதனை நாம் தடுக்க வேண்டும்.

(வி - ரை.) தலைவியின் வேறுபாடு கண்ட தாய் வெறியாட்டெடுத்து உண்மையறிய எண்ணினுள். அதனை உணர்ந்த தோழி அச்செய்தியைத் தலைவிக்குக் கூறும் வாயிலாகத் தலைவனுக்குத் புலப்படுத்தியது இது. பிரப்பு - தானியங்களைப் பலியாக வைத்தல். ஆற்றுக் கவலை - ஆற்றிடைக் குறையாகிய துருத்தி; "உள்ளாற்றுக் கவலை" (புறநா. 219 : 1) என்பதன் உரையைப் பார்க்க. துருத்தியில் தெய்வம் உறைதலை,

"கானின் பெறு துருத்தியும்" (முருகு. 223),

"நல்யாற்று நடுவும்" (பரி. 4 : 67) என்பவற்றுல் அறியலாகும்.

வழிப்போவார் செல்லும் வழியிலுள்ள கவர்த்த இடம் என்றலும் ஒன்று.

மறியறுத்துத் தினைப்பிரப்பை வைத்து முருகன் முதலியோரை வழிபடுதலை, "சிறு தினை மலரொடு விரைஇ மறியறுத்து" (முருகு. 218) என்பதனுல் உணரலாகும்.

தலைவனையே தெய்வமாகக் கொள்ளும் கற்புடையாராதலின், தாய் வெறியாட்டெடுக்குங்கால் வணங்குந்தெய்வங்களை 'வேற்றுப் பெருந் தெய்வம்' என்றுள். அவற்றை, 'நோய்க்கு மருந்தாகாத் தெய்வம்' எனவே நோய்க்கு மருந்தாகும் தெய்வமொன்றுண்டென்பது பெறப்படும்; அத்தெய்வமே தலைவன்;

"நோய்க்கு மருந்தாகிய கொண்கன்" (ஐங். 101 : 5)

என வருதல் காண்க.

நாடனைப் பிழையேமென்றது நாடன் திறத்துள்ள அன்பினில் மாறுபடேமென்றவாறு.

இதற்பட - இத்துன்பத்திலே பட வென்பதும் பொருந்தும்.

இதனுல், தலைவன் வரைந்து கொள்ள வேண்டியதன் இன்றியமையாமையைத் தோழி புலப்படுத்தினுள்.

(ஒப்பு.) 3. நோய்க்கு மருந்து: குறள், 1102; கம்ப. மிதிலைக். 80.

1-3. தெய்வம், வழிபடத் தோன்றுதல்: முருகு. 239-44; பரி. 5 : 14-5.

4. வேற்றுப் பெருந்தெய்வம்: குறிஞ்சிப். 6.

6. நோதக்கன்று: குறுந். 78 : 4.

6-7. வரையில் மழை விளையாடுதல்: குறுந். 108 : 1, ஒப்பு.

மு. குறிஞ்சிப். 1-8; அகநா. 98; 242. (உசுஉ)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவால் தலைவியினது மேனியின் நிறம் வேறு படுதலைக் கண்டு கவன்ற தோழியை நோக்கி, "யான் அவர் கேண்மையின் உறுதியை அறிவேனுதலின் ஆற்றுவேன்" என்று தலைவி கூறியது.]

உசா. கலிமழை கெழீஇய கான்யாற் றிகுகரை
ஒலிநெடும் பீலி துயல்வர வியலி
ஆடுமயி லகவு நாட னம்மொடு
நயந்தனன் கொண்ட கேண்மை
5. பயந்தக் காலும் பயப்பொல் லாதே.

எ - து. ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்றது.

கபிலர்.

(பி-ம்.) 1 'றிடுகரை', 'றிருங்கரை' 5 'பசந்தக்காலும் பசப்பொல்லாதே'

(ப - ரை.) தோழி, கலி மழை கெழீஇய - ஆரவாரத்தை யுடைய மழை பொருந்திய, கான் யாறு இகு கரை - காட்டாற்றினது தாழ்ந்த கரையினிடத்து, ஒலி நெடு பீலி துயல்வர - தழைத்த நெடிய தோகை அசைய, இயலி - நடந்து, ஆடு மயில் அகவும் நாடன் - ஆடுகின்ற மயில்கள் கூவும் நாடன், நம்மொடு நயந்தனன் கொண்ட கேண்மை - நம்மோடு விரும்பி உண்டாக்கிக் கொண்ட நட்பானது, பயந்தக்காலும் - நாம் பசலையை அடைந்தாலும், பயப்பு ஒல்லாது - அப் பசலையொடு பொருந்தாது.

(முடிபு) நாடன் கொண்ட கேண்மை பயந்தக்காலும் பயப்பு ஒல்லாது.

(கருத்து) என் மேனியில் வேறுபாடு உண்டாயினும் என் நெஞ்சம் அவர் செய்த நட்பில் உறுதியுடையதாகையால் ஆற்றுவேன்.

(வி - ரை.) கலி - இடி முதலியவற்றுல் உண்டாகும் ஆர வாரம். இகு கரை - தாழ்ந்த கரை; "இகுத்த நோக்கம்" (அகநா. 39 : 17) என்ற விடத்து அதன் உரையாசிரியர், தாழ்ந்த நோக்க மெனப் பொருளெழுதி யிருத்தல் காண்க; இகுத்தலென்பதற்கு அடித்த லென்னும் பொருளுண்மையின் (புறநா. 158 : 1) அலைகள்

மோதும் கரையெனப் பொருள் கொள்ளுதலும் ஆம்; "இருங் கலி குப்பத்து" (மலைபடு. 367) என்ற விடத்து இகுப்பமென்பதற்கு நச்சினார்க்கினியர் திரட்சி யெனப் பொருள் கூறுதலின், திரண்ட கரை யென்பதும் ஒன்று.

கேண்மை அப்பயப்புக்கு உடம்படாது விரைவில் கூட்டுவிக்குமென்பதும் பொருந்தும்.

'என்னுடைய மேனி பசந்ததேயன்றித் தலைவன் கொண்ட கேண்மை மெலிவுற்றிலது. அது மிக்க திண்ணிதாக அமைந்தது. ஆதலின் யான் ஆற்றுவேன்' என்று தலைவி கூறினள்.

(ஒப்பு.) 3. மயில் அகவும் நாடன்: "மயிலின மகவு நாடன்" (யா. கா. மேற். 'பூத்த வேங்கை'.)

1-3. மயில் இயலி ஆடுதல்: "மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந்தாலும், பீலி மஞ்ஞையி னியலி" (பெரும்பாண் 330-31); "கழைவள ரடுக்கத் தியலியாடு மயில்" (அகநா. 82: 9.)

3 - 4. நாடன் கேண்மை: குறுந். 61: 5, ஒப்பு. நயந்த, பயந்த: குறுந். 219: 1; குறள் 1181, 1190.

4-5. தலைவன் கேண்மை கெடாதது: குறுந். 170: 4-5, 313: 4-5. தலைவியின் உடல் வேறுபாடும்தும் தலைவன் கேண்மை மெலியாமை: குறுந். 90: 6-7, ஒப்பு. (உசுசை)

தோழி கூற்று

[வரைபொருட்குத் தலைவன் பிரிந்தானாக; அவன் வரையாது பிரிந்தானென வருந்திய தலைவிக்குத் தலைவன் பிரிந்த காரணங் கூறித் தோழி ஆற்றுவித்தது.]

உசுடு. காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது
வண்டுவாய் திறக்கும் பொழுதிற் பண்டும்
தாமறி செம்மைச் சான்றோர்க் கண்ட
கடனறி மாக்கள் போல விடன்விட்
5. டிதழ்தலை யவிழ்ந்த வேகல் வெற்பன்
நன்னர் நெஞ்சத்தன் றேழி நின்னிலை
யான்றனக் குரைத்தனை யாகத்
தாஞ ணினனிஃ தாகா வாறே.

எ-து. வரையாது பிரிந்தவிடத்து, அவர் பிரிந்தது (பி-ம். பிரிந்த காரணம்) நின்னை வரைந்து கோடல் காரணமாகத்தானெனத் தோழி தலைமகட்குக் கூறியது.

கருவூர்க் கதப்பிள்ளை.

(பி-ம்.) 3 'சான்றோர்கண்ட

(ப - ரை.) தோழி—, காந்தள் அம் கொழுமுகை - காந்தளினது அழகிய கொழுவிய அரும்பை, காவல் செல்லாது - தானுகமலரும் வரையில் காத்து நில்லாமல், வண்டு - வண்டுகள், வாய் திறக்கும் பொழுதில் - மூடிய இதழ்களைத் திறக்கும் சமயத்தில், பண்டும் தாம் அறி செம்மை சான்றோர் கண்ட - முன்பும் தாம் அறிந்த நடுநிலைமையையுடைய சான்றோரைக் கண்ட, கடன் அறிமாக்கள் போல - எதிர் கொள்ளுதல் முதலிய கடமைகளை அறிந்த மனிதரைப் போல, இடன் விட்டு - இடங் கொடுத்து, இதழ் தளை அவிழ்ந்த - இதழ்கள் பிணிப்பவிழ்ந்த, ஏகல் வெற்பன் - உயர்ச்சியை யுடைய மலைகளையுடைய தலைவன், நின் நிலை - நினது நிலையை, யான் தனக்கு உரைத்தனென் ஆக - நான் தனக்குச் சொன்னேனுக, இஃது ஆகாவாறு - இக் களவொழுக்கம் மேலும் நீட்டித்து நிகழாதபடி, நாணினன் - நாணத்தையடைந்தான்; நன்னர் நெஞ்சத்தன் - அவன் நின்னை வரைந்து கொள்ள வேண்டுமென்னும் நல்ல நெஞ்சத்தை உடையவன்.

(முடிபு) தோழி, நின்னிலை யான் உரைத்தனெனுக, வெற்பன் இஃது ஆகாவாறு நாணினன்; நன்னர் நெஞ்சத்தன்.

(கருத்து) நின்னை வரைந்து கொள்ளுதல் காரணமாகவே தலைவன் பிரிந்தானுதலின் நீ வருந்தற்க.

(வி - ரை.) வாய் திறத்தல் - பாடுதலுமாம். தானே மலரும் பருவத்துக்கு முன் வண்டு மலரைத் திறக்கு மென்றது, களவு வெளிப்பட்டு அலராதலுக்கு முன் வரைந்துகொள்ளும் எண்ணமுடையான் தலைவனென்ற குறிப்பினது.

'யான், நீ ஆற்றாதஞ்சுதலையும் காவன் மிகுதியால் துன்பப்படுதலையும் கூறி வரைவு கடாவினேனுக, இனி இத்தகைய களவொழுக்கம் நிகழாவாறு எண்ணி நாணினன். அதனால் வரைபொருட்குப் பிரிந்தான்' என்றாள். நாணத்தால் நிகழும் காரியம் களவொழுக்கமாகாவாறு செய்வது; இங்கே காரணத்தைக் காரியமாக உபசரித்தாள்.

'யாம் இதுகாறும் இதனை அறிந்து ஆவன புரிந்திலேமே!' எனத் தலைவன் நாணினன்; இதனால் அவன், "வடுப்பரியு நாணுடையான்" (குறள், 502) என்பது போதருமென்.

(ஒப்பு.) 5. ஏகல் வெற்பு : நற். 116 : 10; அகநா. 52 : 5, 177 : 8; கலி. ஐம். 10; பழ. 68, 127.

1-5. வண்டு வாய் திறக்கப் போது மலர்தல் : (குறுங். 260 : 1-2, 370 : 1-2.); " வண்டுவாய் திறப்ப விண்ட பிடவம் " (நற். 238 : 3.)

6. தலைவன் நன்னர் நெஞ்சத்தன் : குறுங். 259 : 8. (உசுடு)

தலைவி கூற்று

[தலைவன் வரைந்து கொள்ளாமல் பிரிந்த காலத்தில் வருந்திய தலைவி தோழியை நோக்கி ," அவர் வருவாரென்று தெரிவிக்கும் தூது ஒன்றையும் காணேம் " எனக் கூறியது.]

உசுசு. நமக்கொன் றுரையா ராயினுந் தமக்கொன்
றின்ஞ விரவி னின்றுணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.

எ - து. வரையாது பிரிந்தவிடத்துத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

நக்கீரர்.

(ப - ரை.) தோழி, துறத்தல் வல்லியோர் - நம்மைப் பிரிந்து சென்ற வன்மையையுடையோராகிய தலைவர், புள் வாய் தூது - பறவை வாயிலாக விடும் தூது மொழியை, நமக்கு ஒன்று உரையார் ஆயினும் - நம்மைப் பொருட் படுத்தி நமக்கு ஒன்றைக் கூறி விடாராஞலும், தமக்கு ஒன்று இன்ஞ இரவின் - தமக்குப் பொருந்திய இன்ஞமையையுடைய இராக்காலங்களில், இன்துணை ஆகிய- இனிய துணையாக இருந்த, படப்பை வேங்கைக்கும்-மனைத் தோட்டத்தின்கண் உள்ள வேங்கைமரத்திற்கும், மறந்தனர் கொல் - தூது மொழியை மறந்தனரோ ?

(முடிபு) வல்லியோர் தூது நமக்கு உரையாராயினும் வேங்கைக்கு மறந்தனர் கொல் ?

(கருத்து) தலைவர் வருதற்குரிய அடையாளமொன்றும் கண்டேமில்லை.

(வி - ரை.) நமக்கு ஒன்று உரையாரென்றது, ' அவர் வரையாது சென்றவராதலின் சென்ற வினை முடிந்து என்னை வரைந்து கொள்ளும் பொருட்டு எமர்பால் மணம் பேசுதற்குத் தூதுவிட்டாரிலர் ' என்னும் கிடக்கையது. தாம் பிரிந்து சென்ற காலத்தில் நமக்கு ஒன்று உரைத்துவிட்டுச் சென்ருரிலரென்று பொருள் கூறுதலும் பொருந்தும். இரவுக்குறி வந்தொழுகிய காலத்தில்

தலைவன் வேங்கைமரத்தின் அடியில் தலைவியைக் கண்டானாகி, தலின் அவனுக்கு அதனை இன்றியமையாதது என்றாள்;

"பனைவளர் கைம்மாப் படாத்தம் பலத்தரன் பாதம்விண்ணோர்
புனைவளர் சாரற் பொதியின் மலைப்பொலி சந்தணிந்து
சுனைவளர் காவிகள் சூடிப்பைந் தோகை துயில்பயிலும்
சினைவளர் வேங்கைகள் யாங்கணின் றடுஞ் செழும்பொழிலே"

(திருச்சிற். 154) என்ற செய்யுளில் இரவுக்குறியாக வேங்கை மரச் சூழல் சொல்லப்பட்டுள்ளது.

இன்ன இரவு - காவல் மிகுதியாகிய துன்பத்தையுடைய இரவு. தன்னைக் காண்பதற்குரிய இடமாதலின் இன்றியமையாதது என்றாள்.

வேங்கைக்குத் தூது மறந்தனர் கொல் என்றது, இரவுக் குறியினிடத்து வந்து அளவளாவிய செய்திகளை மறந்தனரோ வென்னும் கருத்தினது.

மரத்திற்கேற்பப் புள்வாய்த்தூது கூறினாள். புள் விடு தூது புலனெறி வழக்கம். ஓ, ஏ : அசை நிலைகள்.

(ஒப்பு.) 3. வேங்கை தலைவியின் வீட்டருகில் இருத்தல் : குறுந். 355: 6.
4. வல்லியோர் : குறுந். 218 : 7 ; அகநா. 316 : 12, 398 : 15.
பிரிந்த தலைவன் தூது விடுத்தல் : குறுந். 254 : 7, ஒப்பு.
புள்வாய்ந் தூது : "துணிமுந்நீர்ச் சேர்ப்பற்குத் தூதோடு வந்த, பணிமொழிப் புள்ளே" (கைந்நிலை, 51.) (உசுசு)

தலைவன் கூற்று

['முன்னுரைப் பின்பற்றி நாமும் பொருள் தேடச் செல்வேம்' என்றெண்ணிய தலைவன் பிறகு வாழ்நாளது சிறுமையையும் இளமையினது அருமையையும் கருதிச் செலவு தவிர்ந்தது.]

உசுஎ. இருங்கண் ஞாலத் தீண்டுபயப் பெருவளம்
ஒருங்குட னியையவ தாயினுங் கரும்பின்
காலெறி கடிகைக் கண்ணியின் றன்ன
வாலெயி றூறிய வசையி நீநீர்க்
5. கோலமை குறுந்தொடிக் குறுமக ளொழிய
ஆள்வினை மருங்கிற் பிரியார் நாளும்
உறன்முறை மரபிற் கூற்றத்
றனில் கோன்றற் கறிந்திசி னோரே.

எ - து. 'மேனின்றும் ஆடவர் பொருட்குப் பிரிந்தாராகலின் நாமும் பொருட்குப் பிரிதும்' (பி - ப. பொருடருதும்) என்னும் நெஞ்சிற்கு, நாளது சின்மையும் இளமையது அருமையும் கூறிச் செல வழுங்கியது.

[மேல் நின்றும் - முற்காலந் தொடங்கி. நாளது சின்மை - வாழ் நாளின் சிறுமை; இளமையது அருமை - இளமை பெறுதற் கரிதாதல்; இவ்விரண்டும் பொருள் தேடற்குரிய முயற்சியைத் தகைவன (தொல். அகத். 44, இளம்.)]

காலெறி கடிகையார் (பி - ம். காலறிகடிகையார், காலரிகடிகையார்.)

(பி - ம்) 3 'காலறி', 'காலரி'

(ப - ரை.) நெஞ்சே, நாளும் - நாள் தோறும், உறல் முறை மரபின் - முறையாக அடைதலாகிய மரபையுடைய, கூற்றத்து - கூற்றுவனது, அறன் இல் கோள் - கண்ணோட்டமில்லாத கொலைத் தொழிலை, நற்கு அறிந்திசினோர் - நன்றாக அறிந்தோர், இரு கண் ஞாலத்து - பெரிய இடத்தையுடைய பூமியின் கண், ஈண்டு பயம் பெரு வளம் - தொக்க பயனையுடைய பெரிய செல்வம், ஒருங்கு உடன் இயைவது ஆயினும் - ஒருங்கே பொருந்துவதாயினும், கரும்பின் கால் எறி தடிகைக் கண் - கரும்பின் அடிப்பகுதியில் வெட்டிய 'துணட்டத்தை, அயின்றன்ன - உண்டாற் போன்ற சுவையையுடைய, வால் எயிறு ஊறிய - வெள்ளிய பல்லினிடத்தே ஊறிய, வசை இல் தீ நீர் - குற்றமில்லாத இனிய நீரையும், கோல் அமை குறு தொடி - திரட்சியமைந்த குறிய வளையையும் உடைய, குறுமகள் ஒழிய - இவ்வாய தலைவி நீங்கியிருப்ப, ஆள்வினை மருங்கின் - முயற்சியின் பொருட்டு, பிரியார் - தாம் மட்டும் தனித்துப் பிரிந்து செல்லார்.

(முடிபு) அறிந்திசினோர் வளம் இயைவதாயினும் குறுமகள் ஒழியப் பிரியார்.

(கருத்து) நான் தலைவியைப் பிரியேன்.

(வி - ரை.) கரும்பின் அடிப்பகுதி மிகச் சுவையுடையதாயிருக்கும்;

"கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே" (நாலடி 138) என்பதிற்

கரும்பின் நுனிப்பகுதியினும் அடிப்பகுதி இனிமையையுடையதென்ற கருத்துக் காணப்படும். கடிகைக் கண் : உருபு மயக்கம்.

நாளும் உறன் முறைமரபிற் கூற்றம் - நாள்தோறும், வாழ் நாள் முடிவு வரையறுக்கப்பட்ட உயிர்கள்பால் முறையே செல்லும் மரபையுடைய கூற்றுவன்;

"ஞாலத் தின்னுயிர் வாழ்வோர் நாப்பட்
காலம் பார்க்குங் காலன்" (பெருங். 1. 37 : 204-5.)

அறனில் கோள் : ஈண்டு அறனென்றது கண்ணோட்டத்தை;

"தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டி ராற்றுப் பாலகர்
மூதியோ ரென்ன னிளையோ ரென்னுன்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப" (மணி. 9 : 97-100)

என்று கூற்றுவனது அறனில் கோள் கூறப்பட்டிருத்தல் காண்க

கூற்றுவனது கோளை அறிந்திசினேர், நாம் பிரியின் இருவருள் ஒருவர் உயிர்விட நேரின் மீட்டும் கூடுதல் அரிதென்று அஞ்சிப் பொருள்வயிற் பிரியார்; இது நாளது சின்மைபற்றிச் செலவு தவிர்ந்தது. தலைவியின் வாய்நீரூறலைப் புணர்ந்து அவளைக் குறுமகளெனச் சுட்டினமையின் அவள் இளமைப் பருவ மூடையாளென்பது பெறப்படும். இங்ஙனம் கூறியது, 'இவ் விளமைப் பருவத்தே நுகரும் இன்பத்தை இடையீடின்றி நுகரே மேல் இது பின் பெறற்கரிய தாகும்' என்னும் குறிப்பை உட் கொண்டு; இஃது இளமையதருமையை நினைந்தது.

அறிந்திசினேரெனப் பொதுவிற் கூறினும் தான் அறிந் தமையையே கருதினன். அறிந்திசினேர் குறுமகள் ஒழிய என்ற ஒருமை பன்மை மயக்கத்தை, "ஏவலிளையர் தாய் வயிறு கரிப்ப" (தமிழ் நெறி மேற்.) என்பது போலக் கொள்க.

தலைவியின் எயிற்றில் ஊறிய நீரின் சுவைக்குக் கரும்பின் காலெறி கடிகையின் சுவையை உவமித்தமையின் இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் காலெறி கடிகையார் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்.

(ஒப்பு) 2-3. கரும்பின் அடிப்பகுதி சுவையாக இருத்தல்: "கருப்புக் கான் மட்டுங் கின்று லெனகின்ற கண்ணப்பன்" (காளத்திநாதர் கட்டளைக் கலிப்பா.)

4. வாலெயி றூறிய நீர்: அகநா. 237 : 17; குறள், 1121.

வாலெயிறு: ஐங். 48 : 1.

3-4. "சுரும்பிவர் நறவமிற் சூழ்ந்தெழு கரும்பிற், றீநீ ரன்ன வாய் நீர்" (திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, 13.)

5. கோலமை குறுந் தொடி: குறுந். 233 : 7, ஒப்பு.

குறுந்தொடி: குறுந். 359 : 8, 384 : 2. குறுமகள்: குறுந். 89 : 7, ஒப்பு

6. ஆன்வினை மருங்கிற் பிரிதல் : அகநா. 93 : 3, 255 : 7, 353 : 1, 379: 4.
1-6. பெரும்பொருள் பெறினும் தலைவியைப் பிரியாமை : குறுந். 300 : 7-8; பட். 218-20 ; கற். 16.
7-8. கூற்றத்து அறனில் கோள் : " அறனில் கூற்றங் கிறனின்று துணிய", " நயனில் கூற்றம் " (புறநா. 210 : 8, 237 : 9, 227 : 1); " ஆட்பார்த் தழலு மருளில் கூற்று " (நாலடி. 20.)
8. இரின் படர்க்கைக்கண் வருதல் : ஐங். 73 : 4, 175.
மு. அகநா. 379. (உசுஎ)

தோழி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தே இருப்ப, இரவுக்குறியின்கண் உண்டாகும் ஏதத்துக்கு அஞ்சுதலையும், தலைவனது வருகையின் இன்றியமையாமையையும் தோழி தலைவிக்குக் கூறி, வரைந்து கோடலே தக்கதெனப் புலப்படுத்தியது.]

உசுஅ. சேறி ரோவெனச் செப்பலு மாற்ரும்
வருவி ரோவென வினவலும் வினவாம்
யாங்குச்செய் வாங்கொ ரோழி பாம்பின்
பையுடை யிருந்தலை துமிக்கு மேற்ரெடு
5. நடுநா ளென்னுர் வந்து
நெடுமென் பணைத்தோ ளடைந்திசி னேரே.

எ - து. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கருவூர்ச் சேரமான் சாத்தன் (பி - ம். கருவூர்ச் சேரமான் சிரத்தன்.)

(பி - ம்.) 2 ' மருவிரோ ' 4 ' மேரெடு '

(ப - ரை.) தோழி—, பாம்பின் பையுடை இரு தலை - பாம்புகளின் படத்தையுடைய பெரிய தலையை, துமிக்கும் - துணிக்கும், ஏற்ரெடு - இடியொடு கூடிய, நடுநாள் - பாதியிரவு, என்னுர் - என்று எண்ணுராகி, வந்து - ஈண்டுப் போந்து, நெடு மெல் பணை தோள் - நெடிய மெல்லிய மூங்கிலைப் போன்ற இன் தோள்களை, அடைந்திசினேர் - அடைந்த தலைவர் பால், சேறிரோ என - செல்கின்றீரோ என்று, செப்பலும் ஆற்ரும் - செப்புதற்கும் வன்மை இல்லேமாயினேம் ; வருவிரோ என - சென்ரூல் மீண்டும் வருவீரோ என்று, வினவலும் வினவாம் - கேட்டலையும் செய்யோம் ; யாங்கு செய்வாம் - எவ்வாறு செய்வேம் !

(முடிபு) தோழி, வந்து அடைந்திசினேர்பால், சேறிரோ வெனச் செப்பலு மாற்றும்; வினவாம்; யாங்குச் செய்வாம்.

(கருத்து) தலைவர் வரைந்து கொள்ளுதலே நலம்.

(வி - ரை.) தலைவனுடன் இடையீடின்றி இருத்தலே விரும்பு பவராதலின் சேறிரோ வெனச் செப்பும் ஆற்றல் இலராயினர். இடி முதலிய ஆற்றாறுகளை அஞ்சுபவராதலின் வருவிரோவென வினவ அஞ்சினர்.

தலைவனது வரவினுல் இன்பம் உண்டாயினும் ஆற்றில் நிகழும் ஏதம் நினைந்து அச்சமும், அவன் வாராமையின் அவ்வச்ச மின்றெனினும் அவனைக் காணுத் துன்பமும் உண்டாதலின் 'யாங்குச் செய்வாம்!' என மயங்கினுள். இடையீடின்றி உடனுறைவதற்குரிய இல்லறநிலையே தக்கதென்றும், அதன் பொருட்டுத் தலைவன் வரைந்து கொள்ள வேண்டுமென்றும் உய்த்துணரவைத்தாள்.

அடைந்திசினேர்; வினைமுற்றுக்குப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். கொல், ஏ : அசைநிலைகள்.

(ஒப்பு.) 2. வினவலும் வினவாம் : குறுந். 37 : 1, ஒப்பு.

3. யாங்குச் செய்வாம் : குறுந். 217 : 3, ஒப்பு.

3-4. இடி பாம்பை எறிதல் : குறுந். 158 : 1-2, ஒப்பு.

5. தலைவன் நடு நாளில் வருதல் : குறுந். 88 : 4.

6. பணைத்தோள் : குறுந். 131 : 1, 279 : 8, 315 : 4, 318 : 6. 326 1, 364 : 5.

தோளுக்கு மூங்கில் : குறுந். 226 : 1-2 நெடுந்தோள் : குறுந். 163 : 5. மென்றோள் : குறுந். 90 : 7. (உசூஅ)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தானுக, தலைவி, "எந்தையும் யாயும் ஈண்டு இப்போது இலராதலின் தலைவன் என்னைக் காண்டற்கு இஃது எளிய செவ்வியென யாரேனும் அவன்பாற் சென்று சொல்லின் நன்றும்" என்று தோழிக்குக் கூறியது.]

உசூகூ. சேயா றுசென் றுதனபரி யசாவா
துசாவுநர்ப் பெறினே நன்று மற்றில்ல
வயச்சுரு வெறிந்த புண்டணிந் தெந்தையும்
நீனிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்

5. உப்பை மாறி வெண்ணெற் றரீஇய
உப்புவிலை கழனிச் சென்றன ளதனற்
பனியிரும் பரப்பிற் சேர்ப்பற்
கினிவரி னெளிய ளென்னுந் தூதே.

எ - து. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

கல்லாடனார்.

(பி - ம்.) 1 'துணைபரி' 'புணையரி' 'துணைவரசாவாது 6 'கழனி சென்றன'

(ப - ரை.) தோழி, எந்தையும் வய சுரு எறிந்த புண் தணிந்து - என் தந்தையும் வலியையுடைய சுறுமீன் வீசியதனால் உண்டான புண் ஆறி, நீல் நிறம் பெருங்கடல் புக்கனன் - மீண்டும் மீன் வேட்டை ஆடும் பொருட்டு, நீலநிறத்தை யுடைய பெரிய கடலினிடத்துப் புகுந்தனன்; யாயும் - என் தாயும், உப்பை மாறி - உப்பை விற்று, வெள்ளெல் தரீஇய - வெண்ணெல்லை வாங்கிவரும் பொருட்டு, உப்பு விலை கழனி சென்றனள் - அவ்வுப்பு உண்டாகின்ற அளத்திற்குச் சென்றுள்; அதனால்—, பனி இரு பரப்பின் சேர்ப்பற்கு - குளிர்ச்சியையுடைய பெரிய பரப்பாகிய கடற்கரையையுடைய தலைவனுக்கு, இனி வரின் எளியள் என்னும் தூது - இப்பொழுது இங்கே வந்தால் தலைவி எளிதிற்கண்டு பெறுதற்குரியளென்னும் தூது மொழியை, சேய் ஆறு சென்று - நெடுந்தூரமாகிய வழியைக் கடந்து போய், துணை பரி அசாவாது - விரையும் நடையினால் வருந்தாமல், உசாவுநர் பெறின் - கூறி உசாத்துணையாவாரைப் பெற்றால், நன்றுமன் - மிக நல்லதாகும்; தில்ல - இஃது என் விருப்பம்.

(முடிபு) 'எந்தையும் கடல் புக்கனன்; யாயும் சென்றனள்; அதனால் இனி வரின் எளியள்' என்னும் தூதினைச் சேர்ப்பற்குக் கூறி உசாவுநர்ப் பெறின் நன்றுமன்.

(கருத்து) தலைவன் என்னோடு அளவளாவுதற்கேற்ற செவ்வி இது.

(வி - ரை.) தலைவி நெய்தனிலமகள். அவள் தந்தை சுரு வெறிந்த புண்ணாற் பல நாள் வீட்டிற்றங்கினன்; அவனுக்கு உரியன ஆற்றும் கடப்பாட்டினால் தாயும் வீட்டில் இருந்தாள். ஆதலின் தலைவனும் தலைவியும் பல நாள் கண்டு அளவளாவல்

இயலாதாயிற்று. இந்நிலையில் தலைவன் ஒரு நாள் வந்து மறைவில் நின்றானாக, அவன் முன்னுட்களைப் போல் தன்னைக் காணுமற் போய் விடின் என் செய்வதெனக் கவன்ற தலைவி, அதுகாறும் தம் கூட்டத்திற்குத் தடையாக நின்ற தந்தை தாயார் இன்மையை உரைத்து 'இது நற் செவ்வி' எனப் புலப்படுத்தினள்.

தூது செலின் நலமென்றது, தோழியைப் புறம் போக்கு தற்குக் கூறியதொரு குறிப்பு.

சேயாறுதலின் விரைந்த நடை கூறினள். உசாவுநர் - தலைவிக்கு உசாத்துணையாவார். நீல்: நீலமென்பதன் விகாரம். இருமை, கருமையுமாம்.

தூதால் உசாவுநரென்று பொருள் கூறுதலும் பொருந்தும் தூது - தூது மொழி (சீவக. 1022, ந.)

(ஒப்பு.) 1. சேயாறு: குறுக். 400 : 1.

3. வயச்சுரு: குறுக். 230 ; 5 ; அகநா. 190 : 12.

4. நீல் நிறப் பெருங்கடல்: நற். 45 : 2.

5. உப்பை விற்று நெல்லைப் பெறுதல்: "உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு", "நெல்லி னேரே வெண்க லுப்பெனச், சேரி விலைமாறு கூறலின்", "நெல்லு முப்பு நேரே யூரீர், கொள்ளீ ரோவெனச் சேரிதொறு நுவலும்" (அகநா. 60 : 4, 140 : 7-8, 390 : 8-9.)

6. உப்பு வினை கழனி: "இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு" (மதுரைக். 117); "இருங்கழிச் செறுவி னுழாஅது செய்த, வெண்க லுப்பின் கொள்ளை" (அகநா. 140 : 2-3.) (உசுக)

தலைவன் கூற்று

[வினைமுற்றி மீண்டு தலைவியோடு இன்புற்ற தலைமகன் மழையை நோக்கி, "நீ நன்றாகப் பெய்வாயாக!" என வாழ்த்தியது]

உஎ0. தாழிரு ளிமிய மின்னித் தண்ணென
வீழுறை யினிய சிதறி யூழிற்
கடிப்பிகு முரசின் முழங்கி யிடித்திடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
5. செய்வினை முடித்த செம்ம லுள்ளமோ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தா ணெய்ம்மலர் நாறும்
நறுமென் கூந்தன் மெல்லணை யேமே.

எ - து. வினைமுற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியோடு உடனிருந்து கூறியது.

பாண்டியன் பன்னாடு தந்தான்.

(பி - ம்) 2 'வீழ்முறை'; 'யூழியிற்' 3 'கடிப்பிடு' 4 'பெய்கினி', 'பெய்யினி' 6 'மேவலமாகிக்', 'மேவுதலாகிக்'

(ப - ரை) யாம்—, செய் வினை முடித்த செம்மல் உள்ள மொடு - செய்வினை முற்றுவித்ததனால் நிறைவையுடைய உள்ளத்தோடு, இவளின் மேவினம் ஆகி - இத்தலைவியோடு விரும்பிப் பொருந்தினேமாகி, குவளை குறு தாள் நாள் மலர் நாறும் - சூடிய குவளையினது குறிய காம்பையுடைய அலர்ந்த செவ்வியையுடைய மலர் மணக்கின்ற, நறு மெல் கூந்தல் மெல் அணையேம் - நல்ல மெல்லிய கூந்தலாகிய மெல்லிய பாயலின் கண்ணே யிருந்தேம்; ஆதலின், பெருவான் - பெரிய மேகமே, இனி - இப்பொழுது, தாழ் இருள் துமிய மின்னி - தங்கிய இருள் கெடும்படி மின்னுதலைச் செய்து, தண்ணென வீழ் உறை இனிய சிதறி - குளிர்ச்சி உண்டாம்படி வீழுகின்ற துளிகளுள் இனியவற்றைத் துளித்து, ஊழின் - முறைமையினால், கடிப்பு இகு முரசின் முழங்கி - குறுந்தடியால் அடிக்கப்பெறும் முரசைப் போல முழங்கி, இடித்து இடித்து - பன்முறை இடித்து, பெய்து வாழி - மழையைப் பெய்து வாழ்வாயாக!

(முடிபு) யாம் மெல்லணையேம்; பெருவான், இனி மின்னிச் சிதறி முழங்கி இடித்துப் பெய்து வாழி!

(கருத்து) நாம் இன்பம் பெற்றேம்; மழை நன்கு பெய்வதாக!

(வி - ரை.) இது, வினைமுற்றிய தலைமகன் தான் மேற்கொண்ட இல்லறத்துக்குரிய பொருள் கைவந்தமையால் அறமும் பொருளும், தலைவியைச் சேர்ந்தமையால் இன்பமும் பெற்ற உள்ளநிறைவினால் வான வாழ்த்தியது. அறம், பொருள், இன்பமென்னும் இம்மூன்றையும் பெற்ற தலைவன் அம்மூன்றும் நடத்தற்கு ஏதுவாகிய வான வாழ்த்தினன்.

"கடவுளது ஆணையான் உலகமும் அதற்குறுகியாகிய அறம் பொருளின் பங்களும் நடத்தற்கு ஏதுவாகிய மழை" (குறள். வான்சிறப்பு, அவதாரிகை, பரி.)

வாழ்த்தப்படும் பொருள்களுள் வானும் ஒன்று;

'வாழ்த்தப்படும் பொருளாவன: கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன' (தொல். செய். 109, பேர்.)

இங்ஙனம் தலைவன் வாழ்த்துதலைக் கோவைப் பிரபந்தங்களுட் பெரும்பாலனவற்றின் இறுதியிற் காணலாம்.

வீழ் உறை - உயிர்களால் விரும்பப்படும் துளியெனலும் ஆம். அளவிகந்து பெய்து இன்னுமை விளையாமை வேண்டி 'இனிய சிதறி' என்றான். ஊழ் - முறை; முறை முரசை அடித்தலின் மேற்று. வாழியோ: ஓ அசைநிலை. செம்மல் - உள்ளநிறைவு; செம்மலுள்ளமென்பதற்குத் தலைமைபொருந்திய உள்ளமென்று பொருளெழுதுவர் (முருகு. 62, ந.)

நாறு மென்றமையின் நறுமை நன்மையாயிற்று. மென்மையும் நறுமையும் அணையின் இலக்கணமாதலின் அவற்றையுடைய கூந்தலை அணையென்றான். ஏகாரங்கள் அசைநிலைகள்.

(மேற்) 1-5. பிரிந்தவிடத்துத் தான் பெற்ற பெருக்கம் எய்திய சிறப்பின்கண் தலைவன் மனமகிழ்ந்து கூறியது (தொல். கற்பு. 5, ந.)

மு. பிரிந்து வந்து புகுந்த தலைவன் கூற்று (தொல். கற்பு. 5, இளம்.); தலைவன் பள்ளியிடத்து வந்திருந்து கூறியது (தொல். கற்பு. ந); தலைமகளோடு இருந்த தலைமகன் கார்ப் பருவங் கண்டு உவந்து சொல்லியது (நம்பி. 209.)

(ஒப்பு.) 3. கடிப்பிகு முரசு: புறநா. 158: 1; நாலடி. 100; பெரும். 1. 37: 5.

இடியின் ஒலிக்கு முரசின் முழக்கம்: குறுந். 380: 1-3; முருகு. 121; குறிஞ்சிப். 49; நற். 191: 10-12; பரி. 4: 19, 22: 4; அகநா. 312: 10; புறநா. 17: 39, 350: 4; திணை. ஐம். 23.

5. வினைமுடிந்தமையால் தலைவனுக்கு இன்பம் உண்டாதல்: "வினைமுடித் தன்ன வினியோள்" (நற். 3: 8.) 5, மு. குறுந். 275: 5; அகநா. 184: 5.

8. கூந்தலின் மணம்: குறுந். 2: 4-5, ஒப்பு.

கூந்தலணை: குறுந். 254: 5, ஒப்பு. 6-8. "குவளை நாறுங் குவையிருங் கூந்தல்" (குறுந். 300: 1); "குவளை நாறுங் கூந்தற் றேமொழி" (நற். 262: 7.) (உரை)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்கு உடம்பட்டுத் தூதாக வந்த தோழியை நோக்கி, "தலைவரோடு ஒருநாள் நட்புப் பூண்டேன்; அது பலநாளும் எனக்குத் துன்பந்தருவதாயிற்று. அவ்வொரு நாட் செய்த நட்புப்பற்றியே ஏற்றுக்கொள்வேன்" என்றது.]

உஎ. அருவி யன்ன பருவுறை சிதறி
யாறுநிறை பகரு நாடனைத் தேறி

உற்றது மன்னு மொருநாண் மற்றது
தவப்பன் னுடோண் மயங்கி
5. வெளவும் பண்பி னேயா கின்றே.

எ - து. தலைமகற்கு வாயில் நேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

அழிசி நச்சாத்தனர்.

(பி - ம்.) 2-3 'தெரியுற்றது' 4 'மயக்கி'

(ப - ரை.) தோழி, அருவி அன்ன பரு உறை சிதறி - அருவியை யொத்த பரிய துளிகளைச் சிதறி, யாறு நிறை பகரும் - ஆறு வெள்ளத்தைக் கொண்டு ஒலிக்கும், நாடனை தேறி - நாட்டையுடைய தலைவனைத் தெளிந்து, உற்றது - அவனெடு பொருந்திய காலம், ஒரு நாள் - ஒரு நாளே யாகும், அது - அங்ஙனம் பொருந்தியது, தவ பல் நாள் - மிகப் பல நாட்கள், தோள் மயங்கி - தோளோடு கலந்து, வெளவும் பண்பின் - அழகைக் கொள்ளைகொள்ளும் தன்மையினையுடைய, நோய் ஆகின்று - நோயாக ஆகின்றது.

(முடிபு) நாடனை உற்றது ஒரு நாள்; அது மயங்கி நோயாகின்று.

(கருத்து) அறங்கருதித் தலைவனை ஏற்றுக்கொள்கின்றேன்.

(வி - ரை.) தலைவன் பரத்தையிற் பிரிந்துவந்து தோழியை வாயில் வேண்டிய விடத்து அவள் அவனுக்கு உடம்பட்டாள்; அதனைத் தலைவியிடம் தெரிவித்து, 'நீ அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று கூறியபொழுது, தலைவி, "அவனைத் தெளிந்து மணந்தது ஒரு நாள். அங்ஙனம் ஒரு நாள் மேற்கொண்ட அச் செயல் பலநாள் அவன் கொடுமையை நினைந்து வருந்தி அழகு கெடுதற்கு ஏதுவாயிற்று" என்றாள். இதனால் தான் அவனுக்கு உரியளானமையின் அவனை ஏற்றுக் கோடல் அறனென்னும் குறிப்புத் தோற்றியது.

யாறு தன் துளிகளை அருவிபோலச் சிதறிப் புறத்தேயுள்ள பொருள்களுக்குப் பயன்பட்டது போல, தலைவன் புறத்துள்ள பரத்தையர்க்குப் பயன்படுவானென்பது குறிப்பு.

நிறை - வெள்ளம். "வேழம் வெண்பூப் பகரும்" (ஐங். 13:2) என்பதற்கு அதன் உரையாசிரியர், வேழம் வெண்பூவைக் கொடுக்குமென்று பொருளெழுதியிருத்தலின், ஈண்டுப் பகருமென்பதற்குக் கொடுக்கு மென்று பொருள் உரைத்தலும் பொருந்தும்.

மன், உம் : அசை நிலைகள் (குறள், 1146, பரிமேல்.) மற்று : அசைநிலை.

(ஒப்பு.) 3. "கண்டது மன்னு மொருநாள்" (குறள். 1146.)

5. ஆகின்று : குறுந். 15 : 4, ஒப்பு. மு. குறுந். 326, 393. (உஎக)

தலைவன் கூற்று

[இடித்துரைத்த பாங்கனை நோக்கித் தலைவி பெறுதற்கரியளென்று தலைவன் கூறியது.]

உஎஉ. தீண்டலு மியைவது கொல்லோ மாண்ட
வில்லுடை வீளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
5. சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி
மாறுகொண் டன்ன வுண்கண்
நாறிருங் கூந்தற் கொடிச்சி தோளே.

எ - து. கழறிய பாங்கற்குக் கிழவன் உரைத்தது.

[கழறிய - இடித்துரைத்த.]

ஒருசிறைப் பெரியன்.

(பி - ம்.) 2 'வில்லுடையிளையர்' 4 'நேர்படநசைஇச்' 7 'மாறுகண்டன்ன' 8 'நாறிரு...நுதற்கொடிச்சி'

(ப - ரை.) மாண்ட - மாட்சிமைப்பட்ட, வில்லுடை வீளையர் - வில்லையுடைய வீளையொலியையுடையோராய், கல் இடுபு எடுத்த - கற்களை வீசியெழுப்பிய, நன தலை கானத்து இனம் தலைப் பிரிந்த - அகன்ற இடத்தையுடைய காட்டிடத்துத் தன் இனத்தினின்றும் பிரிந்த, புன் கண் மடம் மான் - துன்பத்தையும் மடப்பத்தையுமுடைய பெண்மான், நேர் பட - நேரே இருப்ப, தன்னையர் - தன் தமையன்மார், சிலை மாண் கடுவிசை - சிலைத்தல் மாட்சிமைப்பட்ட மிக்க வேகத்தையுடைய, கலைநிறத்து அழுத்தி - ஆண்மானினது மருமத்திலே அழுந்தச் செய்து, குருதியொடு பறித்த - இரத்தத்தோடு பிடுங்கிய, செங்கோல் வாளி - சிவந்த திரட்சியையுடைய அம்பு, மாறு கொண்டன்ன உண்கண் - ஒன்றையொன்று மாறுபட்டாற் போன்ற மையுண்ட கண்களையும்,

நாறு இரு கூந்தல் - மணம் வீசுகின்ற கரிய கூந்தலையும் உடைய, கொடிச்சி தோள் - தலைவியினுடைய தோள்களை, தீண்டலும் இயைவது கொல் - மீட்டும் ஒரு கால் தழுவுதலும் என்பாற் பொருந்துவதோ!

(முடிபு) உண்கண்ணையும் கூந்தலையும் உடைய கொடிச்சி தோள் தீண்டலும் இயைவது கொல்!

(கருத்து) தலைவி பெறுதற்கரியவள்.

(வி - ரை.) தீண்டலும்: உம் சிறப்பு. கொல்லோ: ஓ அசைநிலை; இரங்கற் குறிப்புமாம. மாண்ட வில் - பல விலங்குகளைக் கொல்வதற்குக் கருவியாகி மாட்சிமைப்பட்ட வில்.

வீளை - சீழ்க்கை; உதட்டை மடித்துச் செய்யும் ஒலி; இதனை இக்காலத்தில் 'சிட்டி' யென்பர். கல்லிடுபெடுத்தலால் இனத்தினின்றும் மடமான் பிரிந்தது. மடமான் நேர்பட என்றது அது வருந்தவும் அதனை ஓராராய்க் கலையைக் கொல்லுவரென அவரதி வன்கண்மையைப் புலப்படுத்தியபடி. சிலை - கலையின் மூழக்கம்; "இன்சிலை, ஏறுடை யினத்த நாறுயிர் நவ்வி" (அகநா. 7: 9-10) நிறம் - உயிர்நிலை. விலங்குகளின் உயிர்நிலையை யறிந்து அதன்கண் அம்பெய்து கொல்லுதல் வேடர் இயல்பு;

"இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்திக் கோடெரிந்து
வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி" (அகநா. 172: 6-8.)

குருதியோடு பறித்தமையால் அது செவ்வாளியாயிற்று. தலைவியின் கண்களுக்கு உவமை கூறுமுகத்தால் அவள் தன்னை யரின் வன்கண்மையைப் புலப்படுத்தி, 'இத்தகைய கொடியர் பாலுள்ள தலைவியைப் பெறுதல் அரிதன்றே' என்பதை உய்த்துணர வைத்தான்.

வாளியன்ன கண்ணென்றுன் அது தன்னை வருத்தியதை நினைந்து. நாறிருங் கூந்தற் கொடிச்சி யென்றுன் முன் அவளுடன் அளவளாவியவனுதலால்.

கொடிச்சி - குறிஞ்சி நிலமகள். தோள் தீண்டல் - இடக்கரடக்கு.

(மேற்) 2. வீளை - சீழ்க்கை (சிவக. 447, ந.)

மு. கழறிய பாங்கற்குக் கூறும் தலைவன், 'இவனன் இக்குறை முடியாது; நெருநல் இடந்தலைப் பாட்டிற் கூடியாங்குக் கூடுவல்; அது கூடுங் கொல்!' என்று கூறுவான், அற்றை ஞான்று மெய்தொட்டுப் பயின்றதே கூறியது (தொல். களவு. 11, இளம், ந.); தலைவன் நீடு நினைந் திரங்கியது (நம்பி. 127.)

(ஓப்பு.) 2. வீனை : குறிஞ்சிப். 161 ; நற். 263 : 3, அகநா. 33 : 5, 182 : 4. 274 : 1 ; கைக்கிலை, 13 ; சீவக. 120. 3. நனந்தலைக் காளம் : குறுந். 297 : 5.

4-5. வேடர் மானை எய்தல் : " எய்யத் தொடுத்தோன் குறத்தி நோக்கேற்றதெனக், கையிற் கணைகளைந்து கன்னிமான் - பையப்போ, என்கின்ற பாவனைசெ யிங்கோயே தூங்கெயில்கள், சென்றன்று வென்ருன் சிலம்பு " (திருவீங்கோய். 12); " கானமர் குன்றர் செவியுற வாங்குகணை துணையா, மானமர் நோக்கியர் நோக்கென மானற் ருெடை மடக்கும் " (திருச்சிற். 274.)

வேடர் கலையை எய்தல் : " அள்ள லாடிய புள்ளி வரிக்கலை, வீனை யம்பின் வில்லோர் பெருமகன் " (நற். 265 : 2-3.)

6. செங்கோல் வாளி : குறுந். 1 : 2, ஒப்பு.

6-7. தலைவியின் கண்ணுக்குக் குருதியொடு பறித்த அம்பு : " ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த, பகழி யன்ன சேயரி மழைக்கண் ", " கொடுவிற் கானவன் கோட்டுமா தொலைச்சிப், பச்சூன் பெய்த பகழி போலச், சேயரி பரந்த வாயிழை மழைக்கண் ", (நற். 13 : 3-4, 75 : 6-8); " நிறத்தெ றிந்து பறித்த நிணங்கொள்வேற், நிறத்தை வௌவிய சேயரிக் கண்ணினள் " (சீவக. 993.)

8. கூந்தலின் மணம் : குறுந். 2 : 4-5, ஒப்பு.

நாறிருங் கூந்தல் : புறநா. 113 : 9.

கொடிச்சி : குறுந். 214 : 3, 291 : 2, 335 : 7, 360 : 6.

1-8. தோள் தீண்டல் : குறுந். 50 : 5, ஒப்பு. 193 : 5, ஒப்பு.

தோள் தீண்டற் கரிது : குறுந். 100 : 7. (உஎஉ)

தோழி கூற்று

தலைவன் பிரிவானென எண்ணிக் கவன்ற தலைவியை நோக்கி, " தலைவன் பிரிய எண்ணினும் நம் நிலை நோக்கிச் செலவு தவிர்வான் " என்று தோழி கூறித் துணிவுண்டாக்கியது.]

உஎந. அல்குறு பொழுதிற் ருதுமுகை தயங்கப்
பெருங்காட் டுளரு மசைவளி போலத்
தண்ணிய கமழு மொண்ணுத லோயே
நொந்தனை யாயிற் கண்டது மொழிவல்
5. பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல
ஏமாந் தன்றிவ் வுலகம்
நாமுளே மாகப் பிரியலன் றெளிமே.

எ - து. பிரிவரெனக் கவன்ற தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

சிறைக்குடி யாந்தையார்.

(பி - ம்.) 1 'புதுமுகை' 2 'பெருங்காடுள்ளும்', 'பெருங்காட்டுள்ளுறும்', 'பெருங்காடுள்ளுறும்' 8 'நாமுளைமாகப்'; 'பிரியலெந்தெளிமே'

(ப - ரை.) அல்குறு பொழுதில் - இரவில், தாது முகை தயங்க-தாதையுடைய அரும்பு விளங்க, பெரு காடு ஊரும் - பெரிய காட்டில் தடவி வருகின்ற, அசைவளி போல - அசைகின்ற காற்றைப் போல, தண்ணிய கமழும் - குளிர்ந்தனவாகிய நறுமணம் வீசுகின்ற, ஒள் நுதலோய் - ஒள்ளிய நெற்றியையுடையோய், நொந்தனை ஆயின் - நீ தலைவன் பிரிவானென்று வருந்தினையாயின், கண்டது மொழிவல் - யான் அறிந்ததைச் சொல்லுவேன், கேட்பாயாக: பெரு தேன் கண்படு வரையில் - பெரிய தேனிறால் தங்கியிருக்கும் மலைப்பக்கத்தில், அத்தேனிறாலைப் பெறும் பொருட்டு, முது மால்பு - பழைய கண்ணேணியின் மேல், அறியாது ஏறிய மடவோன் போல - அறியாமல் ஏறிய அறிவிலாதானைப் போல, இ உலகம் - இந்த உலகமானது, ஏமாந்தன்று - ஏமாந்தது; நாம் உளேம் ஆக - நாம் உயிரோடு இருப்ப, அது காறும், பிரியலன் - தலைவன் நின்னைப் பிரிந்து செல்லான்; தெளிமே - இதனைத் தெளிவாயாக.

(முடிபு) நுதலோய், நொந்தனையாயின் மொழிவல்; இவ்வுலகம் ஏமாந்தன்று, உளேமாகப் பிரியலன்; தெளிமே.

(கருத்து) தலைவன் நின்னைப் பிரிந்து செல்லான்.

(வி - ரை.) அசைவளி - அசைந்து மெல்ல வீசும் காற்று; மந்தமாருதமென்பதற்கு நேரான பொருளுடையது. கண்டது - அறிந்தது. பெருந்தேன் - மலைத்தேன்; இங்கே அதனையுடைய இருளுக்கு ஆயிற்று. கண்படுதல் - பிறராற் கொள்ளப்படாது நெடுங்காலமாக அமைந்து இருத்தல். முது மால்பு - பழையதாகி ஒடிந்துபோம் நிலையையுடைய கண்ணேணி; மால்பு - கண்ணேணி (புறநா. 105 : 5); மூங்கிலின் கணுவைக் கழியாமல் கால் வைக்கும் படி செப்பஞ் செய்து சார்த்தி அக்கணுவையே படியாகக்கொண்டு ஏறுவது. முதுமால்பு அறியாதேறிய மடவோன் சிறிது ஏறிப் பின் அவ்வேணியின் இயல்பறிந்து அஞ்சி மீண்டும் இறங்குவன். அது போலச் சேய் நாடு சென்று வினை முற்றுறக் கருதிய தலைவன் தலைவியைப் பிரிதலை மேற்கொள்ள எண்ணி அப்பிரிவு தலைவி

யின் உயிரிழவையும் அதனால் தனக்கு இன்னுமையையும் தருதலை யறிந்து செலவு தவிர்ந்தான். உலகத்தின் மேல் வைத்துக் கூறினும் கருதியது தலைவனையே யென்க.

ஏமாந்தது தான் முதலில் எண்ணியபடி செய்யமாட்டாமல் செலவு தவிர்ந்தது.

நாம் உளேமாகப் பிரியலனென்றது, பிரிந்தால் தலைவி உயிர் நீங்குவளென்பதை உணர்ந்தமையைக் குறித்தது.

மே: முன்னிலையசை.

(ஓப்பு.) 2. வளி உளர்தல்: (குறுந். 278: 1); "வீபெய் கூந்தல் வீசுவளி யுளர" (நற். 264: 5); "விரைவளர் கூந்தல் வரைவளி யுளர" (புறநா. 133: 4.) அசைவளி: குறுந். 28: 4, ஒப்பு.

3. நுதல் மணத்தல்: குறுந். 22: 5, ஒப்பு.

1-3. அருப்பின் மேல் வீசிய காற்றின்மணம் நுதலின் மணத்திற்கு: "கொய் யகை முல்லை காலொடு மயங்கி, மையிருங் கான நாறு நறுநுதல்" (அகநா. 43: 9-10.) 4. கண்டது மொழிதல்: குறுந். 2: 2.

5. பெருந்தேன் கண்படுவரை. "பிரசந் தூங்குமலை" (குறுந். 392: 8); "தேன்றூங்கு முயர்சிமைய, மலை" (மதுரைக். 3-4); "பிரசந் தூங்கு சேட் சிமை, வரையக வெற்பன்" (அகநா. 242: 21 - 2.)

5-6. மால்பிலேறித் தேன் எடுத்தல்: "கலிகை யற்ற காண்பி னெடு வரை, நிலைபெய் திட்ட மால்பு நெறியாகப், பெரும்பயன் றெகுத்த தேங் கொள் கொள்ளை" (மலைபடு. 315-7); "அவ்வரைத், தேனி னிருலென வேணி யிழைத்திருக்கும், கானக நாடன் மகன்" (கலி. 39: 8-10); "ஈவினை யாட நறவினை வோர்ந்தெமர் மால்பியற்றும், வேய்வினை யாடும் வெற்பா" (திருச்சிற். 133.) (உஎ)

தலைவன் கூற்று

[பொருள்வயிற் பிரியக் கருதிய தலைவன் பாலை நிலத்தின் வெம்மையை நினைந்தபின், "தலைவியின் இனிய தன்மைகளை நினைந்துசெல்லின் அவ்வெம்மை தோற்றுது" என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.]

உசெ. புறவுப்புறத் தன்ன புன்கா லுகர்அய்க்
காசினை யன்ன நளிகனி யுதிர
விடுகணை வில்லொடு பற்றிக் கோடிவர்பு
வருநர்ப் பார்க்கும் வன்க ணடவர்
5. நீர்நசை வேட்கையி னர்மென்று தணியும்
இன்னுக் கானமு மினிய பொன்னெடு

மணிமிடை யல்குன் மடந்தை
அணிமுலை யாக முள்கினஞ் செலினே.

எ - து. பொருள் வலித்த நெஞ்சிற்குக் கிழவன் உரைத்தது. உருத்திரன்.

(பி - ம்) 1 'புன்காயுகாய்', 'புன்காலுகாஅத்துச்சினை 3 'பற்றிக் கொடியவர்' 8 மூழ்கினம்', முயங்கினம்', 'முழக்கினம்'

(ப - ரை.) நெஞ்சே, பொன்னொடு மணிமிடை அல்குல் மடந்தை - பொன்னாலும் மணியாலும் இயற்றப்பட்ட அணிகளை யணிந்த அல்குலையுடைய தலைவியினது, அணி முலை ஆகம் - அழகிய நகிலையுடைய மார்பை, உள்கினம் செலின் - நினைந்தே மாகிச் சென்றால், புறவு புறத்து அன்ன புல் கால் உகாய் - புறவினது முதுகைப் போன்ற புல்லிய அடியையுடைய உகாய் மரத்தினது, காசினை அன்ன - மணியைப் போன்ற, நளி கனி உதிர - செறிந்த பழங்கள் உதிரும்படி, விடு கணை வில்லொடு பற்றி - விடுகின்ற அம்பை வில்லோடு பிடித்து, கோடு இவர்பு - உயர்ந்த இடத்தின்மேல் ஏறி, வருநர் பார்க்கும் - வழியிலே வருபவரைப் பார்க்கும், வன்கண் ஆடவர் - தறுகண்மையையுடைய ஆறலைகள்வர், நீர் நசை வேட்கையின் - நீரை விரும்புகின்ற வேட்கையினால், நார் மென்று தணியும் - மரப்பட்டையை மென்று அவ்வேட்கை நீங்கும், இன்னா கானமும் இனிய - இன்னாமையையுடைய காடுகளும் இனியவாகும்.

(முடிபு) மடந்தை ஆகம் உள்கினம் செலின், இன்னாக் கானமும் இனிய.

(கருத்து) தலைவியை மறவாது நினைத்திருப்பின் பிரிந்து வருதல் கூடும்.

(வி - ரை.) புறு பாலைநிலத்ததாதலின் இடத்திற்கு ஏற்ப அதனை உவமை கூறினான். உகாஅய் - ஒரு மரம்; இது யகர வீறுடையதென்பது நேமிநாதம், சூ. 15, உரையால் உணரப்படும்; உகாஅ வெனவும் வரும். இதன் கனி மணியைப் போன்ற தோற்றமுடைய தென்பது,

> "வெயிலவிர் நுடங்கும் வெவ்வெங் களரிக்
> குயிற்கண் ணன்ன குரூஉக்காய் மூற்றி
> மணிக்கா சன்ன மானிற விருங்கனி
> உகாஅய் மென்சினை யுதிர்வன கழியும்" (அகநா. 293 : 5-8)

என்பதனாலும் அறியப்படும். காசினை : ஐகாரம் அசைநிலை.

கனி உதிரும்படி அம்பை விடுவர். நார் - பட்டை (குறுந். 112 : 4, 156 ; 2.) தலைவியை நினைந்து செல்லின் கானம் இனியவாகு மென்று தலைவன் கருதுவதை,

"நெடுங்கழை முளிய வேனி னீடிக்
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய வாயின முன்னே யினியே
ஒண்ணுத லரிவையை யுள்ளுதொறும்
தண்ணிய வாயின சுரத்திடை யாறே",

"வேனி லரையத் தலைலியொலி வெரீஇப்
போகில்புகா வுண்ணது பிறிதுபுலம் படரும்
வெம்பலை யருஞ்சுர நலியா
தெம்வெங் காதலி பண்புதணைப் பெற்றே",

"பொறிவரித் தடக்கை வேத லஞ்சிச்
சிறுகண் யானை நிலந்தொடல் செல்லா
வெயின்முளி சோலைய வேயுயர் சுரனே
அன்ன வாரிடை யானும்
தண்மை செய்தவித் தகையோள் பண்பே" (ஐங். 322, 325, 327)

என்னும் செய்யுட்களிலும் காணலாம்.

(மேற்.) 1. செய்யுளிற் குறியதன்கீழ் ஆக்குறுகி உகரமேற்றது (தொல். உயிர்மயங்கு. 32, ந. ; இ. வி. 90.)

(ஒப்பு.) 1. புன்கால் உகாய் : "புல்லரை யுகாஅய்" (குறுந். 363 : 4.)

(பி - ம்.) புன்காய் உகாய் : நற். 66 : 1-2. உகாய் : பெருங். க. 52 : 37.

1-3. கனியை அம்பால் உதிர்த்தல் : சீவக. 1640-41 ; வி. பா. பழம் பொருந்து. 3.

3-5. "ஊரில்ல வுயவரிய, நீரில்ல நீளிடைய, பார்வ லிருக்கைக் கவிகண் ணேக்கிற், செந்தொடை பிழையா வன்க ணடவர்" (புறநா. 3 : 17-20.) 6. இன்னுக் கானம் : குறுந். 124 : 2-3. (உ.சே.)

தோழி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற பருவம் வந்த காலத்துத் தலைவியை நோக்கி, "மணியொலி செவிப்படுகின்றது ; அது தலைவனது தேர் மணி யோசையோவென்று சென்று பார்ப்போம்" என்று தோழி கூறியது.]

உஎ. முல்லை யூர்ந்த கல்லுய ரேறிக்
கண்டனம் வருகஞ் சென்மோ தோழி

எல்லூர்ச் சேர்தரு மேறுடை யினத்துப்
புல்லார் நல்லான் பூண்மணி கொல்லோ
5. செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
வல்வி லினையர் பக்கம் போற்ற
ஈர்மணற் காட்டாறு வருஉம்
தேர்மணி கொல்லாண் டியம்பிய வுளவே.

எ - து. பருவவரவின்கண் வரவு நிமித்தந் தோன்றத் தோழி தலைமகட்கு உரைத்தது.

[வரவு நிமித்தம்: குறுந். 260, கருத்து.]

ஒக்கூர் மாசாத்தி.

(பி - ம்.) 1 'கல்லுயர்பேறிக்' 3 'யினத்தது' 4 'புல்லூர்' 'பூமணி'

(ப - ரை.) தோழி—, ஆண்டு இயம்பிய உள - அங்கே ஒலிப்பனவாக உள்ளவை, எல்லூர் சேர்தரும் - மாலைக்காலத்தில் ஊரை வந்து அடையும், ஏறுடை இனத்து - காளையையுடைய பசுவினத்திலுள்ள, புல் ஆர் நல் ஆன் - புல்லை உண்ட நல்ல பசுக்கள், பூண்மணி கொல் - கழுத்திற் பூண்ட மணியோசையோ? செய்வினை முடித்த - தாம் செய்த வினையை முற்ற முடித்ததனாலாகிய, செம்மல் உள்ளமொடு - நிறைவுடைய உள்ளத்தோடு, வல்வில் இனையர் பக்கம் போற்ற - வலிய வில்லையுடைய இளைய வீரர் தன் அருகிற் பாதுகாப்ப, ஈர் மணல் காடு ஆறு வரும் - ஈரமாகிய மணலையுடைய காட்டு வழியிலே வரும், தேர் மணி கொல் - தேரின் மணியோசையோ? முல்லை ஊர்ந்த கல் உயர் ஏறி - முல்லைக் கொடி படர்ந்த கல்லின்மேல் ஏறி, கண்டனம் வருகம் - கண்டு வருவேம்; சென்மோ-வருவாயாக.

(முடிபு) ஆண்டு இயம்பிய உள; ஆன் பூண்மணி கொல்? தேர்மணி கொல்? ஏறிக் கண்டனம் வருகம்; சென்மோ.

(கருத்து) தலைவனது தேரின் மணியோசை கேட்டலின் அவன் வருகின்றானெனத் தோற்றுகின்றது.

(வி - ரை.) உயர் - உயர்ந்த இடம் (குறுந். 235: 3.) மோ: முன்னிலையசை (குறுந். 2: 2.) வல்வில்: குறுந். 100, வி - ரை.

இளையர் பாதுகாத்தலை, "உழைக்குறுந் தொழிலுங் காப்பு முயர்ந்தோர்க்கு, நடக்கை யெல்லா மவர்கட் படுமே" (தொல். கற்பு. 30) என்னும் இலக்கணம் தெளிவுறுத்தும்.

மழை பெய்த கார்ப்பருவமாதலின் காட்டாறு ஈர்மணலை யுடையதாயிற்று.

(ஒப்பு.) 1. முல்லை யூர்ந்த கல்: "கல்லிவர் முல்லை" (குறிஞ்சிப். 77); "முல்லை தாயகல்" (நற். 343: 1); "கல்லிவர் முல்லைக் களிவண்டு" (யா. வி. 42, மேற்.) கல்லுயர்: குறுந். 235: 3, ஒப்பு.

1-2. உயர்ந்த இடத்திலேறிப் பார்த்தல்: "பொருபெரு வேந்தர்க்குப் போர்ப்புணை யாகி, ஒருபெருங் காதலர் சென்றூர்—வருவது, காணிய வம்மோ கனங்குழை கண்ணைக்கால், நீணகர் முன்றின்மே னின்று" (தொல். அகத். 27, ந. மேற்.)

3. ஏறுடை யினம்: நெடுநல். 4; மலைபடு. 408-9, 573; அகநா. 269: 3.

4. ஆன்மணி: குறுந். 86: 5-6; 190: 6-7; மலைபடு. 573; நற். 264: 8.

5, மு. குறுந். 270: 5, ஒப்பு.

6. வல்வில்: குறுந். 100: 5, ஒப்பு.

வல்வில் இளையர்: அகநா. 120: 12, 152: 15; பெருங். 3. 17: 217.

6-8. தலைவன் இளையர் போற்ற மணல் வழியில் தேரேறி வருதல்: "வினை வலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து, போர்வ லிளையர் தாள்வலம் வாழ்த்தத், தண்பெயல் பொழிந்த பைதுறு காலை ... ... வெண்கள ரிமண னன்பல தாஅய் ... ... கிண்டேர் வலவ கடவெனக் கடைஇ, இன்றே வருவர்" (அகநா. 74: 1-12.) (உஎடு)

தலைவன் கூற்று

[தோழியாற் சேட்படுத்தப் பட்டவிடத்துத் தலைவன், "இனி மடல் ஏறிச் சான்றோரறிய வழக்குரைத்துத் தலைவியை மணம் புரிவேன்" என்று தோழி அறியும்படி முன்னிலைப் புறமொழியாகக் கூறியது]

உஎசு. பணைத்தோட் குறுமகள் பாவை தைஇயும்
பஞ்சாய்ப் பள்ளஞ் சூழ்ந்து மற்றிவள்
உருத்தெழு வனமுலை யொளிபெற வெழுதிய
தொய்யில் காப்போ ரறிதலு மறியார்
5. முறையுடை யரசன் செங்கோ லவையத்
தியான்றற் கடவின் யாங்கா வதுகொல்
பெரிதும் பேதை மன்ற
அளிதோ தானேயிவ் வழுங்க லூரே.

எ - து. தோழிக்குக் குறைமருமல் தலைவன் (பி-ம். தலைமகன்) கூறியது.

[குறை - தலைவியை உடம்படச் செய்தல்.]

கூழிக் கொற்றன் (பி-ம். கோழிக்கொற்றன், கூளிக் கொற்றன்.)

(பி-ம்.) 1 'பாவைதையும்' 4 'ரறிதலுமறியாது', 'தொய்மின் மிகுதி காப்போரறியார்' 6 'கடவினி யாங்காவது கொல்'

(ப - ரை.) பணை தோள் குறுமகள் பாவை தைஇயும் - மூங்கிலைப் போன்ற தோள்களையுடைய இளைய தலைவியினது பாவையைப் பண்ணி ஈந்தும், பஞ்சாய் பள்ளம் சூழ்ந்தும் - அதன் பொருட்டுப் பஞ்சாய்க் கோரை வளர்ந்த பள்ளமாகிய நீர் நிலையைச் சுற்றியும், இவள் உருத்து எழு வனம் முலை - இவளது தோற்றம் செய்து எழுந்த அழகிய நகிலில், ஒளிபெற - நிறம் பெற, எழுதிய தொய்யில் - நான் எழுதிய தொய்யிலை, காப்போர் - இவளைப் பாதுகாத்து நிற்போர், அறிதலும் அறியார் - அறிதலையும் செய்யார்; முறையுடை அரசன் - நீதியையுடைய அரசனது, செ கோல் அவையத்து - செங்கோன்மையையுடைய அறங்கூறவையத்தில், யான் தன் கடவின் - யான் தலைமகளை வினவினால், யாங்கு ஆவது - இஃது எவ்வாறுவது? ஆதலின், இ அழுங்கல் ஊர் - இந்த வருத்தத்தையுடைய ஊர், மன்ற பெரிதும் பேதை - நிச்சயமாக மிகக அறிவின்மையையுடையது; அளிது - இரங்கத் தக்கது!

(முடிபு) தைஇயும் சூழ்ந்தும் எழுதிய தொய்யிலை, காப்போர் அறியார்; அரசன் அவையத்தில் யான் கடவில் யாங்காவது? இவ்வூர் பேதை; அளிது.

(கருத்து) மடலேறி அறங்கூறவையத்துச் சான்றோரது துணைகொண்டு தலைவியை மணந்து கொள்வேன்.

(வி - ரை) தலைவி இளையளெனவும், பெறற்கரியளெனவும் கூறித் தோழி தலைவனைச் சேட்படுத்தவழி அவன் முன்னுறு புணர்ச்சி மொழிந்து, "யான் மடலேறிச் சான்றோர் அறியத் தலைவியால் யான் துன்புற்றதை அறிவிப்பேன். அப்பொழுது அறங்கூறவையத்தாராகிய அவர்கள் முன்னிலையில் தலைவியை நான் பெறும் வண்ணம் வினவப் புகுந்தேனையின் என்னைத் தடுக்கும் தோழியின் முயற்சி எவ்வாறு முடியும்!" என்று படர்க்கை வாய்பாட்டால் தோழிக்குக் கூறியது இது. இதனால் தோழி அஞ்சி, அவனது குறை முடிக்கக் கருதுவள்.

முதலில் தான் தலைவியின் விளையாட்டுக்குத் துணைசெய்

தையும் தொய்யிலெழுதியதையும் உணர்த்தும் வாயிலாக முன்னுறு புணர்ச்சி முறையுறப் புலப்படுத்தினன்.

பைஞ்சாயென்பது பஞ்சாயென வந்தது. பஞ்சாய்க் கோரையாற் பாவை பண்ணித் தலைவன் கொடுத்தான்; இச்செயல்,

> *"செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்ரு யென்றவன்*
> *பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ"*
> (கலி. 76 : 6-7)

என்பதிலும் சொல்லப்பட்டது. இவளென்ரூன், நெஞ்சிற்கு அணியளாதலின்.

வனமுலையென்றது தொய்யிலால் அழகு வேண்டாதே இயல்பாக அழகுடைய தென்றபடி; என் ஆதரவு மிகுதியால் தொய்யிலெழுதினேனென்பது தலைவன் கருத்து. அங்ஙனம் எழுதியதனுல் அத்தொய்யில் ஒளிபெற்றது. காப்போரென்றது தலைவியைக் காப்போராகிய தன்னையராதியோர்.

தலைவன் தொய்யிலெழுதும் வழக்கு,

> *"பிரிந்துறை சூழாகி யைய விரும்பிநீ*
> *என்ரே ளெழுதிய தொய்யிலும்",*
> *"நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்ரோட்*
> *பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற்*
> *ரெய்யி லெழுதவும் வல்லன்" (கலி. 18 : 2-3, 143 : 31-3)*

என்பவற்ரு லும் பெறப்படும்.

அவையத்துச் சான்ரோரிடம் தலைவியைப் பற்றிக் கூறி அவளைப் பெற விரும்பிக் கேட்டலைக் கலித்தொகை 139, 140-ஆம் செய்யுட்களால் உணரலாகும்.

அழுங்கலூரென்றது தோழியை. இவ்வூர் யாங்காவது கொல் எனக்கூட்டிப் பொருளுரைத்தலும் பொருந்தும். மற்று, கொல், ஓ, தான், ஏ : அசைநிலைகள்.

(மேற்.) மு. தோழி சேட்படுத்தியவழித் தலைவன் பிற கூறியது (தொல். களவு. 11, இளம்.) தோழி இவ்விடத்துக் காவலர் கடியரெனக் கூறிச் சேட்பட நிறுத்தலின் தனக்கு உண்டாகிய வருத்தத்தைப் பார்த்துத் தலைவன் மடல் மா ஏறுதலைக் கூறியது (தொல். களவு. 11, ந.)

(ஒப்பு.) 1. குறுமகள் : குறுந். 89 : 7, ஒப்பு. தலைவியின் பாவை : குறுந். 48 : 1, ஒப்பு. பாவை தைஇ : கலி. 56 : 7.

1-2. "சாய்தாட் பிள்ளை தந்து கொடுத்தும்" (கல்லாடம்.)

3. அறிதலும் அறியார் : நற். 106 : 1.

3-4. தலைவன் தொய்யில் எழுதுதல் : கலி. 76 : 14-5, 144 : 34; சீவக. 1081.

5. அரசனது செங்கோலவையம் : மதுரைக். 497 ; நற். 90 : 12, 400 : 7-8 ; அகநா. 93 ; 5 ; புறநா. 39 : 8-9 ; 71 : 7-9; சிலப். 5 : 135 ; பெரும். 1. 34 : 25. 7-8. ஊர் பேதை : குறுந். 89 : 3, ஒப்பு. (உஎசு)

தோழி கூற்று

[தலைமகன் குறித்துச்சென்ற பருவம் வருங்காலம் யாதென்று தோழி அறிவரை வினவியது.]

உஎஎ. ஆசி றெருவி னுயில் வியன்கடைச்
செந்நெ லமலை வெண்மை வெள்ளிழு
தோரிற் பிச்சை யார மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
5. சேமச் செப்பிற் பெறீஇயரோ நீயே
மின்னிடை நடுங்குங் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவ தென்றி
அக்கால் வருவரெங் காத லோரே.

எ - து. தலைமகன் பிரிந்தவழி, அவன் குறித்த பருவ வரவு, தோழி அறிவரைக் (பி-ம். அறிவாரைக்) கண்டு வினையது.

ஓரிற் பிச்சையார்.

(பி-ம்.) 4 'அற்சிரை'; 'தண்ணீர்ச்' 6 'கடைபெயல்' 7 'வருவரென்றி'

(ப - ரை.) அறிவ! மின் இடை நடுங்கும் - மின்னைப் போன்ற இடையையுடைய தலைவி நடுங்குதற்குக் காரணமான, கடை பெயல் வாடை - இறுதியில் மழையையுடைய வாடைக் குரிய காலம், எ கால் வருவது என்றி - எப்பொழுது வருவது என்பாயோ, அ கால் - அப்போது, எம்காதலர் - எம்முடைய தலைவர், வருவர்—; ஆதலின் சொல்வாயாக ; நீ—, ஆசு இல் தெரு வில் - குற்றமற்ற தெருவினிடத்தே, நாய் இல் வியன்கடை - நாய் இல்லாத அகன்ற வாயிலில், செ நெல் அமலை - செந்நெற் சோற்று உருண்டையும், வெண்மை வெள் இழுது - மிக வெள்ளிய நெய்யும் ஆகிய, ஓர் இல் பிச்சை - ஒரு வீட்டில் இடும் பிச்சையை, ஆர மாந்தி - பெற்று வயிறு நிரம்ப உண்டு, அற்சிரம் வெய்ய வெப்பம் தண்ணீர் - அற்சிரக் காலத்துக்குரிய விரும்பத் தக்க வெப்பத்தை யுடைய நீரை, சேமம் செப்பில் - நீரைச் சேமித்து வைக்கும் செப்பில், பெறீஇயர் - பெறுவாயாக.

(முடிபு) வாடை எக்கால் வருவதென்றி ; அக்கால் எம் காதலோர் வருவர். நீ தெருவில் பிச்சையை மாந்தி நீரைப் பெறீஇ யர்.

(கருத்து) வாடை வீசும் பருவம் எப்பொழுது வரும்?

(வி - ரை) அறிவவென்னும் விளி முன்னத்தால் வருவிக்கப் பட்டது. தலைவன் வாடை வீசும் பருவத்தில் வருவதாகக் கூறிச் சென்றான். அப் பருவம் எப்பொழுது வருமென்று அறியும் பொருட்டுத் தோழி அறிவரை வினவினாள்.

அறிவர் - துறவுள்ளமும், முக்காலத்தையும் அறியும் ஆற்ற லும் உடைய பெரியோர் ; இவர்,

" மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியி னுற்றிய அறிவன் " (தொல். புறத். 20)

எனச் சிறப்பிக்கப்பெறுவர். முக்காலமுமுணர்ந்த முனிவ ரென்பர் புறப்பொருள்வெண்பாமாலை உரையாசிரியர். இவர் எக்காலத்திலும், கற்பு முதலிய நல்லவற்றைக் கற்பித்தலும் தீய வற்றைக் கடிதலுமாகிய செயலுடையார் (தொல். கற்பு. 13); தலைவன் தலைவியாகிய இருவரும் இவரது ஏவலைச் செய்து நிற்பர். அவர்களை இடித்துரைத்து நல்வழியிலே நிறுத்துதல் இவர் இயல்பு (தொல். கற்பு. 14); இவர் வாயில்களுள் ஒருவகையினர் (தொல். கற்பு. 52); இவர் கூற்றை யாவரும் கேட்டு அதன் வழி யொழுகுவர்(தொல்.செய்யுள். 197.)இவர் துறவுள்ளத்தினராதலின் துறவியரைப்போலவே பிச்சையுண் பெற்றுண்பரென்றது இச் செய்யுளாற் பெறப்படுகின்றது.

வாடை முன்பனிப் பருவத்தும் உளதாதலின் இதிற் கூறப் பட்ட பருவம் அஃதென்றே கொள்க.

ஆசில் தெருவென்றும், நாயில் வியன் கடையென்றும் சிறப் பித்தமையால் இங்கே கூறியது அந்தணர் தெருவென்று தோற்று கின்றது ;

" பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதி " (பெரும்பாண். 298 - 301.)

ஆய் இல் கடையென வைத்து, செல்வம் சுருங்குதலில்லாத வாயிலென்று பொருளுரைத்தலும் பொருந்தும் ; ஆய்தல் - சுருங் குதல் (தொல். உரி. 32)

செந்நெல் நெல் வகையில் உயர்ந்தது. பல வீடுகளிற் சென்று ஐயம் பெற்றுண்ணும் இரவலரது பிச்சை போலாது ஒரு வீட்டிற்

பெற்றுண்ணும் பிச்சையாதலின், 'ஓரிற் பிச்சை' என்றாள். ஆர - உள்ள நிறைவுண்டாக வெனலும் ஒன்று.

அற்சிரம் - முன்பனிக்காலம்; இஃது அச்சிரமெனவும் வழங்கும். வெப்பத் தண்ணீர் - வெந்நீர். தண்ணீரென்பது நீரென்னும் துணையாய் நின்றது.

அறிவர் பெறும் உணவை ஓரிற்பிச்சை யென்று சிறப்பித்தமையால் இச்செய்யுளியற்றிய புலவர் ஓரிற்பிச்சையாரென்று பெயர் பெற்றார்.

(ஒப்பு.) 1- நாயில் வியன் கடை: "பார்ப்பாரிற் கோழிபு நாயும் புக வின்ன" (இன்ன. 3.)

2. அமலை: "அமலைக் கொழுஞ்சோறு" (புறநா. 34 : 14); "பெருஞ் சோற்றமலை" (மணி. 17 : 2.)

1-3. அந்தணர் வீட்டுச் சோறும் நெய்யும்: "முந்துமுக் கனியி னுலை முதிரையின் முழுத்த நெய்யில், செந்தயிர்க் கண்டங் கண்ட மிடையிடை செறிந்த சோற்றில், தந்தமி லிருந்து தாமும் விருந்தொடுந் தமரி னேடும், அந்தண ரமுத வுண்டி யயில்வுறு மமலை யெங்கும்" (கம்ப. நாட்டுப். 19.)

5. பெரியர்: குறுந். 75 : 4, ஒப்பு.

6. தலைவி வாடைக்கு நடுங்கல்: குறுந். 103 : 4, ஒப்பு. (உளவு).

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்திருந்த காலத்து, நீ ஆற்றுதல் வேண்டுமென்று வற்புறுத்துந் தோழியை நோக்கித் தலைவி, "அவர் எம்மை நினையாது கொடியராயினர்" எனக் கூறியது.]

உஎஅ. உறுவளி யுளரிய வந்தளிர் மாஅத்து
முறிகண் டன்ன மெல்லென் சீறடிச்
சிறுபசும் பாவையு மெம்மு முள்ளுயர்
கொடியர் வாழி தோழி கடுவன்
5. ஊழுறு தீங்கனி யுதிர்ப்பக் கீழிருந்
தேற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே.

எ - து. பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

பேரி சாத்தன் (பி - ம். வேரிசாத்தன்.)

(பி - ம்.) 1 'யுள்ளியவந்தளிர்' 6 'தேர்ப்பன வேர்ப்பன', 'தொப்பன வொப்பன வுண்ணும்' 7 'பார்ப்படை'

(ப - ரை.) தோழி—, கடுவன் - ஆண்குரங்கு, ஊழுறு தீங்கனி உதிர்ப்ப - முதிர்ந்த இனிய பழங்களை மரத்தின்மேல் இருந்து உதிர்க்க, கீழ் இருந்து - அம்மரத்தின் கீழே இருந்து, ஏற்பன ஏற்பன உண்ணும் - ஏற்பவற்றை ஏற்பவற்றைத் தின்னுகின்ற, பார்ப்புடை மந்திய மலை இறந்தோர் - குட்டிகளையுடைய பெண் குரங்குகள் உள்ள மலையைக் கடந்துசென்ற தலைவர், உறு வளி உளரிய - மிக்க காற்றுக் கோதிய, அம் தளிர் மாஅத்து - அழகிய தளிரையுடைய மாமரத்தினது, முறி கண்டன்ன - தளிரைக் கண்டாற் போன்ற, மெல் என் சிறுஅடி - மெல்லிய சிறிய அடியையுடைய, சிறு பசு பாவையும் எம்மும் உள்ளார் - சிறிய பசிய தாது முதலியவற்றாற் செய்த விளையாட்டுப் பாவையையும் எம்மையும் நினையார்; கொடியர் - அவர் கொடுமையை யுடையர்.

(முடிபு) தோழி, மலையிறந்தோர் உள்ளார்; கொடியர்.

(கருத்து) தலைவர் எம்மை நினைந்திலர்.

(வி - ரை.) தலைவன் இயற்றித்தந்த பாவையாதலின் அதனை முற்கூறினள். 'கடுவன் தன் மந்தியையும் பார்ப்பையும் அகலாது அவற்றிற்குரிய கனியை உதிர்க்கும் மலையைக் கண்டும் அவர் என்னையும் பாவையையும் அகன்று உறைந்தார். அவர் கொடுமை இருந்தவாறு என்னே!' என்பது தலைவியின் கருத்து. வாழி, ஏ : அசைநிலைகள்.

(மேற்.) 6-7. பார்ப்பென்னும் இளமைப்பெயர் குரங்கிற்கும் உரியது (தொல். மரபு. 14, பேர்.)

(ஒப்பு.) 1. வளி உளர்தல் : குறுந். 273 : 2. அந்தளிர் மா : "பைங்கான் மாஅத்தந்தளிர்" (குறுந். 331 : 6.) 3. பாவை : குறுந். 48 : 1, ஒப்பு.

பாவையும் தலைவியும் : ஐங். 383 : 5-6 ; பெருங். 2. 15 : 112 ; திருச்சிற். 200, உரை.

4. தலைவனைக் கொடிய னென்றல் : குறுந். 26 : 8, ஒப்பு.

வாழி தோழி : குறுந். 260 : 4, ஒப்பு. 5. ஊழுறு தீங்கனி : அகநா. 2 : 2.

4 - 5. ஆண்குரங்கு பழத்தை உதிர்த்தல் : "ஆய்சுளைப் பலவின் மேய்கலை யுதிர்த்த, துய்த்தலை வெண்காழ்" (அகநா. 7 : 20-21.)

7. பார்ப்புடை மந்தி : குறுந். 29 : 6, ஒப்பு. (உஎஅ)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றுளாகிய தலைவியை ஆற்றல் வேண்டுமென்று தோழி வற்புறுத்திய பொழுது தலைவி ஆற்றுமையின் காரணத்தைக் கூறியது.]

உகூ. திரிமருப் பெருமை யிருணிற மையூன்
வரு மிட றியாத்த பகுவாய்த் தெண்மணி
புலம்புகொள் யாமத் தியங்குதொ றிசைக்கும்
இதுபொழு தாகவும் வாரார் கொல்லோ

5. மழைகழூஉ மறந்த மாயிருந் துறுகல்
துகள்சூழ் யானையிற் பொலியத் தோன்றும்
இரும்பல் குன்றம் போகித்
திருந்திறைப் பணைத் தோளுள்ளா தோரே.

எ - து. வற்புறுத்துந் தோழிக்குக் கீழ்த்தி உரைத்தது.

மதுரை மருதன் இளநாகனார்.

(பி - ம்.) 5 'மழைகெழு', 'மறைந்த' 7 'அரும்பல்குன்றம்' 'போக்கித்'

(ப - ரை.) தோழி, மழை கழூஉ மறந்த மா இருதுறுகல் - மழை கழுவுதலை மறந்த கரிய பெரிய பொற்றைக் கல், துகள்சூழ் யானையின் - புழுதி படிந்த யானையைப் போல, பொலிய தோன்றும் - விளங்கத் தோன்றுகின்ற, இரு பல்குன்றம் போகி - பெரிய பல மலைகளைக் கடந்து சென்று, திருந்து இறை பணைதோள் உள்ளாதோர் - இலக்கணத்தால் திருந்திய சந்துகளையுடைய மூங்கிலைப் போன்ற என் தோள்களை நினையாதோர், திரி மருப்பு எருமை இருள் நிறம் மை ஆன் - முறுக்கிய கொம்பையும் இருள் நிறத்தையுமுடைய எருமையினது, வரு மிடறு யாத்த-வளர்கின்ற கழுத்தின் கண் கட்டப்பட்ட, பகு வாய் தெள் மணி - பிளந்த வாயையுடைய தெளிந்த ஓசையையுடைய மணியானது, புலம்பு கொள் யாமத்து - தனிமையைக் கொண்ட நடு இரவில், இயங்கு தொறு - அவ்வெருமை நடக்குந்தோறும், இசைக்கும் - ஒலிக்கின்ற, இது பொழுது ஆகவும் - இக்காலம் தாம் வருதற்குரிய செவ்வி யாக இருப்பவும், வாரார் - அவர் வாராராயினர்.

(முடிபு) போகி உள்ளாதோர் வாரார்.

(கருத்து) தலைவர் வருதற்குரிய செவ்வி இஃதாக இருந்தும் அவர் வந்திலரென ஆற்றேனுயினேன்.

(வி - ரை.) எருமையின் மணியோசையைத் தலைவி துயிலாது கேட்டவளாதலின் இங்ஙனம் கூறினள். இரவில் தனிமையை மிகுதிப்படுத்திக் காட்டும் அம்மணியோசையினால் தலைவி துன்

புறுவாள். இதனை இந்நூல் 86 - ஆம் செய்யுளாலும் உணரலாகும்.

புலம்பு கொள் யாமமென்றது தனது தனிமையை நினைந்து. மழை கழுஉ மறந்த துறுகலென்றது மழையின்றி வெம்பிய பாலை நிலத்தின் இயல்பைக் குறிப்பித்தபடி. துகள் - புழுதி; யானை தன்மீது புழுதியைத் தானே வாரி வீசிக் கொண்டதனால் துகள் சூழ்ந்ததாகும்.

பணைத் தோள்களை உள்ளுவராயின் அவற்றோடு பொருந்தி அளவளாவும் ஆர்வத்தால் மீள்வரென்பது தலைவியின்கருத்து.

கொல், ஓ, ஏ : அசைநிலைகள்.

(ஒப்பு.) 1. எருமை ஆன் : பெரும்பாண். 165 ; அகநா. 165 : 5.

தீர்மருப் பெருமை : அகநா. 206 : 3.

2. பகுவாய்த் தெண்மணி : குறுந். 155 : 4.

1-4. குறுந். 86 : 4-6, ஒப்பு.

6. துகள் சூழ் யானை : " நீருடிய களிறு " (பட். 48.)

5-6. துறுகல்லிற்கு யானை : குறுந். 13 : 1-2, ஒப்பு.

8. இறைப் பணைத் தோள் : குறுந். 168 : 5 ; கலி. 38 : 26 ; புறநா. 354 : 9. (உஎக)

தலைவன் கூற்று

[தன்னை இடித்துரைத்த பாங்கனை நோக்கித் தலைவன் தலைவியினது அருமையைக்கூறியது.]

உஅ0. கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
நெஞ்சுபிணிக் கொண்ட வஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின் [யானே.
5. அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென்

எ - து. கழற்றெதிர் மறை.

நக்கீரர்.

(பி - ம்.) 5 'வேண்டலன்'

(ப - ரை.) கேளிர் - நண்பரே, வாழி - நீர் வாழ்வீராக! கேளிர்—, நாளும் என் நெஞ்சுபிணி கொண்ட - எப்பொழுதும் என்னுடைய நெஞ்சத்தைத் தன்னிடத்திலே பிணித்துக் கொண்ட, அம் சில் ஓதி - அழகிய சிலவாகிய கூந்தலையும், பெரு தோள் - பெரிய தோளையுமுடைய, குறுமகள் - இளைய தலைவியினது, சிறு மெல் ஆகம் - சிறிய மெல்லிய மேனியை, ஒரு நாள் புணர

புணரின் - ஒரு நாள் என் ஐம்புலனும் இயையும்படி அளவளாவு வேனுயின், யான்—, அரை நாள் வாழ்க்கையும் - அதன்பின் அரை நாளேனும் வாழ்தலே, வேண்டலென் - விரும்பேன்.

(முடிபு) கேளிர், வாழி! கேளிர், குறுமகள் ஆகம் ஒரு நாள் புணரப் புணரின் யான் வேண்டலென்.

(கருத்து) தலைவி எனக்கு இன்றியமையாதவள்.

(வி - ரை) பாங்கனைப் பன்மையாற் கூறும் வழக்கு, "இடிக்குங் கேளிர்" (குறுந். 58) என்னும் செய்யுளிலும் வந்துள்ளது; பாங்கனைப் பன்மையாற் கூறுவதற்குரிய காரணமாக இறையனாரகப் பொருள் உரையாசிரியர் கூறுவது வருமாறு:

'பாங்கனொருனென்று பன்மை படக் கூறிய தெற்றிற்று? அவன் ஒருவனுலோவெனின்; பாங்கன் பார்ப்பானுகலிற் பன்மை வாசகத்தாற் சொன்னுரென்பது. அல்லதூஉம், இருமுதுகுரவ ரானும், இவனை எப்போற் கொண்டொழுகென்று தலைமகற்குக் காட்டிக் கொடுக்கப்பட்டான் பாங்கனென்பதூஉம், நீயும் எம் போலத் தீயன கண்டு பண்பானவிடத்து அடக்குவாயாகென்று பாங்கற்குக் காட்டிக்கொடுக்கப் பட்டான் தலைமகனென் பதூஉம் போதரல் வேண்டி இவ்வாறு பன்மை வாசகம் படச் சொன்னுரென்பது' (3, உரை)

பிணிக் கொண்ட - பிணித்துக் கொண்ட; 'வரிப்புனை பந்து' (முருகு. 68) என்பது போல நின்றது.

தலைவன் கூந்தற்பாயலையும் தோள் மாறுபடுதலையும் நினைந்த வனுதலின் அவ்விரண்டையும் கூறினன்.

தலைவியோடு அளவளாவாது பல நாள் உயிர் வாழ்வதினும், அவளோடு அளவளாவி அப்பாற் சிறிது பொழுதிலே இறந்து படுதல் நன்றென்றனன்.

புணரப் புணரின் - புணரக் கூடுமாயினென்பதும் பொருந் தும்; 'வெகுளாமை புணரின் நன்று - வெகுளாமை ஒருவர்க்குக் கூடுமாயின் அது நன்று' (குறள், 308, பரிமேல்) வாழ்க்கையும்: உம்மை, இழிவு சிறப்பு; பிரித்து அரைநாளென்பதனேடு கூட்டப் பட்டது. ஓ, ஏ: அசைநிலைகள்.

(மேற்.) 1. இர் ஈறு விளி வேற்றுமையில் இயல்பாய் நின்றது (தொல். விளி. 12, ந; சீவக. 393, ந.)

மு. தலைவன் கூற்று (தொல். செய். 189, பேர்; இ. வி. 562); பாங்கற் கூட்டத்துப் பாட்டு (தொல். செய். 198, பேர், 201, ந.); தலைவன் தலைவியின் தன்மை கூறியது (தொல். களவு. 11, ந.)

(ஒப்பு.) 1. கேளிர்: அகநா. 130: 1.

பாங்கனைப் பன்மையிற் கூறுதல்: திணைமொழி ஐம். 49.

2. நெஞ்சு பிணிக் கொண்ட தலைவி: "கொடிச்சி கையகத் ததுவே பிறர், விடுத்தற் காகாது பிணித்தவென் னெஞ்சே" (நற். 95: 9-10.)
அஞ்சிலோதி: குறுங். 211: 1. ஒப்பு.
3. குறுமகள்: குறுங். 89: 7, ஒப்பு. (உ.அ)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்தவிடத்து வேறுபட்ட தலைவியைத் தோழி வற்புறுத்தினளாக அவளை நோக்கி, "தலைவர் கொடிய பாலை நிலத்தைக் கடந்தனரோ வென்னும் வருத்தத்தால் ஆற்றேனு யினென்" என்று தலைவி கூறியது.]

உஅக. (வெண்மணற் பொதுளிய பைங்காற் கருக்கின்
கொம்மைப் போந்தைக் குடுமி வெண்டோட்
டுத்த வேம்பி னமலை வான்பூச்
சுரியா ருளைத்தலை பொலியச் சூடிக்
5. குன்றுதலை மணந்த) கானம்
சென்றனர் கொல்லோ சேயிழை நமரே.

எ-து. பிரிவிடை வேறுபட்டாளைக் கண்டு தோழி வற்புறுப் பாட்குக் கிழத்தி உரைத்தது.

குடவாயிற் கீரத்தன்

(பி-ம்.) 2 'வெண்டோடத்த'

(ப-ரை.) செ இழை - சிவந்த பொன்னணியையுடையாய், நமர் - நம் தலைவர், வெள்மணல் பொதுளிய - வெள்ளிய மணலின் கண்ணே தழைத்த, பசு கால் கருக்கின் - பசிய அடியையும் கருக் கையும், கொம்மை போந்தை - திரட்சியையும் உடைய பனையினது, குடுமி வெள் தொடு - உச்சியிலுள்ள வெள் ளிய குருத்தோலையின்கண் வைத்த, அத்த வேம்பின் - பாலை நிலத்திலுள்ள வேப்பமரத்தினது, அமலை வான் பூ - நெருக்கத்தை யுடைய வெள்ளிய மலரை, சுரி ஆர் உளைதலை பொலிய சூடி - சுழித்தல் ஆர்ந்த மயிரையுடைய தலை விளங்கும்படி அணிந்து கொண்டு, குன்றுதலை மணந்த கானம் - மலைகளோடு சேர்ந்த காட்டை, சென்றனர் கொல் - கடந்து சென்றனரோ?

(முடிபு) சேயிழை, நமர் கானம் சென்றனர் கொல்?

(கருத்து) தலைவர் பாலையைக் கடந்து சென்றனரோ? இலரோ?

(வி - ரை.) குடுமி - உச்சி. உச்சியிலுள்ளதென்றும் வெண்ணிற முடைய தென்றும் சிறப்பித்தமையால் தோடு, குருத்தோலையாயிற்று. வேம்பு பாலை நிலத்திற்குரியது. வேம்பின் பூவைக் கூறினமையின் தலைவன் பிரிந்த பருவம் இளவேனிலென்பது பெறப்படும் (குறுந் 24.)

" அவரோ வாரார் தான்வந் தன்றே
வேம்பி ஞெண்பூ வுறைப்பத்
தேம்படு கிளவியவர் தெளிக்கும் பொழுதே " (ஐங். 350)

என்னும் இளவேனிற் பத்துச் செய்யுளைக் காண்க.

மலரைப் பனந்தோட்டில் வைத்துக் கட்டி அணிந்து கொள்ளல் மரபு. சுரி - சுருள். தலை மணந்த : தலை அசைநிலை; இடமுமாம். குன்று தலைமணந்த கானமென்றது குறிஞ்சியும் முல்லையுங் கலந்து இயல்பு திரிந்த பாலைநில மென்றபடி.

கொல் : ஐயம். ஓ, ஏ : அசைநிலைகள்.

(ஒப்பு.) 1 - 2. மணல் சூழ்ந்த பனை : குறுந். 372 : 1 - 2.

3 - 4. வேப்பம் பூவை ஆடவர் அணிதல் : பெரும்பாண். 59 - 61.

1 - 4. பூக்களைப் பனந் தோட்டுடன் வைத்துச் சூடுதல் : " போர்படு மள்ளர் போங்தொடு தொடுத்த, கடவுள் வாகைத துய்வீ ", " நாறிணர்க் கொன்றை வெண்போழ்க் கண்ணியர் " (பதிற். 66 : 14 - 5, 67 : 13); " வட்கர் போகிய வளரிளம் போந்தை, உச்சிக் கொண்ட ஓரிவெண் டோடு, வெட்சி மாமலர் வேங்கையொடு விரைஇச், சுரியிரும் பித்தை பொலியச் சூடி ", " ஓங்குகிலை வேங்கை யொள்ளிணர் நறுவீப், போந்தையந் தோட்டிற் புனைந்தனர் தொடுத்து " (புறநா. 100 : 3 - 6, 265 : 3 - 4); " வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன், புட்கைச் சேணை பொலியச் சூட்டி ... ... வஞ்சி சூடுதும் " (சிலப். 25 : 146 - 9.)

(உரை)

தோழி கூற்று

[தலைவன் வினைவயிற் பிரிந்த காலத்தில் அவன் கூறிய கார்ப் பருவம் வந்ததாக, " இப் பருவத்தின் அடையாளங்களைத் தாம் சென்ற விடத்தே கண்டு இனி நீ ஆற்று யென்பதறிந்து தலைவர் மீண்டு வருவார் " என்று தோழி தலைவிக்குக் கூறியது.]

உஅஉ. செவ்விகொள் வரகின் செஞ்சுவற கலித்த
கௌவை நாற்றின் காரிரு ளோரிலை
நவ்வி நாண்மறி கவ்விக் கடன்கழிக்கும்
காரெதிர் தண்புனங் காணிற் கைவலை

5. நீர்திகழ் சிலம்பி னேரோங் கவிழ்ந்த
வெண்கூ தாளத் தந்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவ போலச்
சோர்குவ வல்ல வென்பர்கொ னமரே.

எ - து. வினைவயிற் பிரிந்தவிடத்துத் தோழி கிழத்திக்கு உரைத்தது.

நாகம் போத்தன்

(பி - ம்.) 3 'நன்மறி' 5 'கவிந்த' 7 'புகுவீபோலச்' 8 'வென்பர் கொலவரே'

(ப - ரை.) நமர் - நம்மைப் பிரிந்து சென்ற தலைவர், செ சுவல் கலித்த - செம்மண்ணையுடைய மேட்டின் மேல் தழைத்த, செவ்வி கொள் வரகின் - பருவம் வாய்த்த வரகினது, கௌவை நாற்றின் - காற்றால் ஒலித்தலையுடைய நாற்றினது, கார் இருள் ஓர் இலை - மிக்க கறுப்பையுடைய ஓர் இலையை, நவ்வி நாள் மறி - நாட் காலத்தே வந்த மான்குட்டி, கவ்வி—, கடன் கழிக்கும் - தின்ன லென்னும் கடனைத் தீர்த்துக் கொள்ளுதற்கிடமாகிய, கார் எதிர் தண்புனம் - கார்காலத்தை ஏற்றுக் கொண்ட தண்ணிய கொல்லையை, காணின் - காண்பாராயின், நீர் திகழ் சிலம்பின் - நீர் விளங்குகின்ற மலைப்பக்கத்தில், ஓராங்கு அவிழ்ந்த - ஒரு படித்தாக மலர்ந்த, வெள் கூதாளத்து அம் தூம்பு புது மலர் - வெள்ளிய கூதாளத்தின் உட்டுளையையுடைய அழகிய புதிய மலர்கள், ஆர் கழல்பு உகுவ போல - காம்பிற் கழன்று உதிர்தலைப் போல, கைவளை - நின் கை வளைகள், சோர்குவ அல்ல என்பர் கொல் - சோர்ந்து வீழ்வன அல்லவென்று எண்ணுவாரோ? எண்ணார்.

(முடிபு) அவர் புனம் காணின், வளை சோர்குவ அல்ல என்பர் கொல்?

(கருத்து) தாம் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்ததறிந்து தலைவர் விரைவில் வருவர்.

(வி - ரை.) தலைவன் கார்காலத்தில் மீண்டுவருவேனென்று கூறி வினைவயிற் பிரிந்து சென்றான். அவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வரவும், அது கண்டு தலைவி ஆற்றாளாவளென்றஞ்சிய தோழி கூறியது இது.

வரகு கார்காலமாகிய செவ்வியைக் கொண்டது. செஞ்சுவல் - முல்லை நிலத்திலுள்ள செம்மண் மேடு.

"கான நந்திய செங்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலேயொடு மடமா னுகள" (முல்லைப். 97 - 9)

என்பதில் வரகு செம்மண்ணேயுடைய முல்லைநிலத்திற் கார் காலத்தில் வளம் பெறுவதென்பதும், அதனே மான் மேயுமென்பதும் கூறப்பட்டுள்ளன.

மான்மறி தன் இளமையினுல் ஓரிலேயைக் கௌவுதலோடு அமைந்தது. கூதாளம்: இது கூதளம், கூதளியெனவும் வழங்கும். ஆர் - காம்பு.

சோர்குவவல்லவென்பர்கொலென்றது சோர்தலே எண்ணுவரென்பதைப் புலப்படுத்தியது.

வரகுப்புனத்தின் நிலேகண்டு, தாம் மீள்வதாகக் கூறிய கார்ப்பருவம் வந்தமையையும், அதனுல் கைவளே சோரும் நின் நிலேமையையும் உணர்ந்து விரைவில் மீள்வரென்பது கருத்து.

(மேற்.) 3. மறியென்னும் இளமைப் பெயர் நவ்வியோடு அடுத்து வந்தது (தொல். மரபு. 12, பேர்.)

(ஒப்பு.) 1 - 2. சுவலில் விளேந்த பயிர்: குறுந். 204: 3; பெரும்பாண். 131; மலேபடு. 436.

1 - 2. மான் வரகிலேயைக் கறித்தல்: குறுந். 220: 1 - 2, ஒப்பு.

4. காரெதிர் புனம்: குறுந். 233: 4, ஒப்பு.

5. நீர் நிகழ் சிலம்பு: குறுந். 52: 1.

6. வெண் கூதாளம்: முருகு. 192; பட். 85.

6-7. ஆர் கழற்பு மலர் உருதல்: "வெண்பூ... ... ...ஆர் கழல்பு, களிறுவழங்கு சிறு நெறி புதையத் தாஅம்" (குறுந். 329: 1-3); "ஆர் கழல், பாலி வானிற் காலொடு பாறி" (அகநா. 9: 6-7.) (உஅஉ)

தலேவி கூற்று

[தலேவன் பொருளீட்டச் சென்ற காலத்தில் ஆற்ருளெனக் கவன்ற தோழியை நோக்கி, "அவர் பிரிவுகருதி வருந்தேன்; அவர் சென்ற பாலே நிலத்திலுள்ளார் செய்யும் தொழிற் கொடுமையெண்ணி அஞ்சினேன்" என்று தலேவி கூறியது.]

உஅங.உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவெனச்
சொல்லிய வன்மை தெளியக் காட்டிச்
சென்றனர் வாழி தோழி யென்றும்

5. கூற்றத் தன்ன கொலைவேன் மறவர்
ஆற்றிருந் தல்கி வழங்குநர்ச் செகுத்த
படுமுடை பருந்துபார்த் திருக்கும்
நெடுமூ திடைய நீரி லாறே.

எ - து. தலைமகன் பொருள்வயிற் பிரிந்தவழி ஆற்ருளெனக் கவன்ற தோழிக்கு, "அவர் பிரிய, ஆற்றேனுயினே னல்லேன்; அவர் போயின கானத்துத் தன்மை நினைந்து வேறுபட்டேன்" என்று கிழத்தி சொல்லியது.

பாலை பாடிய பெருங் கடுங்கோ.

(பி - ம்) 2 'யிறவினு'; 'மிழிவெனச்' 3 'சொல்லிவண்மை' 7 'படுமுடைப்' 8 'நெடுமூருடைய'

(ப - ரை.) தோழி—, உள்ளது சிதைப்போர் - தம்முடைய மூன்னேரால் தேடிவைக்கப்பெற்றுத் தம்பால் உளதாகிய செல்வத்தைச் செலவழிப்போர், உளர் என படாஅர் - செல்வ ரென்று உலகத்தாராற் சொல்லப் படார், இல்லோர் வாழ்க்கை - தாமாக ஈட்டிய பொருள் இல்லாதார் முந்தையோர் பொருளின் பயனைத் துய்த்து வாழ்தல், இரவினும் இளிவு - இரத்தலைக் காட்டினும் இழிவுடையது, என - என்று, சொல்லிய வன்மை - சொன்ன ஆண்மைத் தன்மையை, தெளிய காட்டி - யாம் தெளியும்படி எடுத்துக் கூறி, என்றும் கூற்றத்து அன்ன - எப் பொழுதும் கூற்றுவனைப் போன்ற, கொலைவேல் மறவர் - கொலைத் தொழிலைச் செய்யும் வேலையுடைய மறச்சாதியார், ஆறு இருந்து அல்கி - வழியினிடத்தே தங்கி, வழங்குநர் செகுத்த படு முடை - வழிப் போவாரைக் கொன்றதனல் உண்டான புலாலை, பருந்து பார்த்து இருக்கும் - பருந்துகள் எதிர் நோக்கித் தங்கியிருக்கின்ற, நெடு முது இடைய - நெடிய பழைய இடத்தை யுடையனவாகிய, நீர் இல் ஆறு - நீரில்லாத பாலை நிலத்து வழிகளிலே, சென்றனர் - தலைவர் சென்ருர்; வாழி - அவர் வாழ்வாராக!

(முடிபு) தோழி, 'சிதைப்போர் உளரெனப் படார்; இல்லோர் வாழ்க்கை இளிவு' எனச் சொல்லிய வன்மை காட்டி ஆறு சென்றனர்; வாழி.

(கருத்து) தலைவர் சென்ற வழியினது கொடுமையை நினைதலால் ஆற்ருமை உண்டாகின்றது.

(வி - ரை.) முன்னேரால் ஈட்டிவைத்த பொருள்கொண்டு

இல்லறம் நடத்துதல் முறையன்றென்பது பண்டையோர் கொள்கை ; இதனை,

'இனி, பொருட் பிணி யென்பது பொருளிலனாய்ப் பிரியு மென்பதன்று; தன் முதுகுரவராற் படைக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாங் கிடந்தது மன் ; அதுகொடு துய்ப்பது ஆண்மைத் தன்மை அன்றெனத் தனது தாளாற்றலாற் படைத்த பொருள் கொண்டு வழங்கி வாழ்தற்குப் பிரியுமென்பது ; அல்லதூஉந் தேவர் காரியமும் பிதிரர் காரியமும் தனது தாளாற்றலாற் படைத்த பொருளாற் செய்தன தனக்குப் பயன்படுவன ; என்ன ? தாயப் பொருளாற் செய்தது தேவரும் பிதிரரும் இன்புறார், ஆதலான் ; அவர்களையும் இன்புறுத்தற்குப் பிரியு மென்பது' (இறை. 35, உரை),

'பொருள்வயிற் பிரிதலென்பது, குரவர்களாற் படைக்கப்பட்ட பொருள் கொண்டு இல்லறஞ் செய்தால் அதனான் வரும் பயன் அவர்க்கு ஆம் அத்துணை யல்லது தமக்காகாமையால் தமது பொருள் கொண்டு இல்லறம் செய்தற்குப் பொருள் தேடப் பிரியா நிற்றல் (திருச்சிற். 332, உரை) என்பவற்றால் தெளியலாகும்.

தம் முயற்சி யொன்றின்றியே பெற்ற பொருளால் வாழ்தலினும், இரத்தலாகிய சிறு முயற்சியேனும் செய்து பொருள் பெற்று வாழும் இரவு உயர்ந்ததாயிற்று. இல்லோர் - வறியவரென்பதும் அமையும். சென்றனர் - சென்ற தலைவரென விணையாலணையும்பெயராக்குதலும் ஒன்று. முடை - தசை ; ஆகு பெயர் (அகநா. 3 : 9, உரை.)

வன்மை தெளியக்காட்டி என்றதனால் அவர் பிரிவின் காரணத்தை நன்கறிந்து ஆற்றினேனென்பதும், பாலைவழியின் இயல்பைக் கூறியதனால் அவ்வழியின் ஏதமே ஆற்றுமைக்குக் காரணமாவதென்பதும் புலப்படுத்தினாள்.

(ஒப்பு.) 4. வாழி தோழி : குறுந். 260 : 4, ஒப்பு.

7. பருந்து முடை பார்த்திருத்தல் : "மான்றுவேட் டெழுந்த செஞ் செவி யெருவை.....புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை, கொள்ளை மாந்தரி னுணுது கவரும்" (அகநா. 3 : 5-10.) படுமுடை : நற். 164 : 8.

5 - 7. ஆறலை கள்வர் செயல் : (குறுந். 274 : 3-4, 297 : 1-4, 331 : 1 - 3.) ; "செங்கோல் வாளிக் கொடுவி லாடவர், வம்ப மாக்க ளுயிர்த்திறம் பெயர்த்தென", "இலைமாண் பகழிச் சிலைமா ணிரீஇய, அன்பி லாடவ ரலைத்தலிற் பலருடன், வம்பலர் தொலைந்த வருஞ்சுரக் கவலை" (நற். 164 : 6 - 7, 352 : 1 - 3) : "அற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாம், கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர், துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வெளவலின்" (கலி. 4 : 3 - 5) ; "இறந்தோர், கைப்பொருளில்லை யாயினு மெய்க்கொண், டின்னுயிர் செகாஅர் விட்டதந் தப்பற்கு",

"அம்புதொடை யமைதி காண்மார் வம்பலர், கலனில ராயினுங் கொன்று புள் ளுட்டும், கல்லா வினையர்" (அகநா. 109 : 10 - 12, 375 : 3-5.)

மறவர் கொன்றமையாற் பட்ட தசையைப் பருந்து விரும்புதல் : "வடியாப் பித்தை வன்க ணுடவர், அடியமை பகழி யார வாங்கி, வம்பலர்ச் செகுத்த வஞ்சுவரு கவலைப், படுமுடை நசைஇய வாழ்க்கைச் செஞ்செவி, எருவைச் சேவல்", "வாங்குதொடை பிழையா வன்க ணுடவர், விடு தொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி, ஆறுசெல் வம்பல ருயிர்செலப் பெயர்ப்பின், பாறுகிளை பயிர்ந்து படுமுடை கவரும்" (அகநா. 161 : 2-6, 175 : 2 - 5); "செந்தொடை பிழையா வன்க ணுடவர், அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத், திருந்துசிறை வலவாய்ப் பருந்திருந் துயவும்" (புறநா. 3 : 20 - 22.) (உ.அ.)

தோழி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த காலத்தில், ஊரினர் அலரையஞ்சிய தலைவியை நோக்கி, "இவ் வூரினர் அறிவிலர் போலும்!" என்று தோழி கூறியது.]

உஅஉ. பொருத யானைப் புகர்முகங் கடுப்ப
மன்றத் துறுகன் மீமிசைப் பலவுடன்
ஒண்செங் காந்த ளவிழு நாடன்
அறவ னுயினு மல்ல னுயினும்
5. நம்மே சுவரோ தம்மிலர் கொல்லோ
வரையிற் ருழ்ந்த வால்வெள் ளருவி
கொன்னிலைக் குரம்பையி னிழிதரும்
இன்ன திருந்தவிச் சிறுகுடி யோரே.

எ - து. வரைவிடைத் தோழி, கிழத்திக்கு உரைப்பாளாய் உரைத்தது.

மிளை வேள் தித்தன்.

(பி - ம்.) 3 'காந்தள் வீழும்' 4 'அவலனுயினு' 6 'வாள்வெள்'

(ப - ரை.) பொருத யானை - போர் செய்த யானையினது, புகர் முகம் கடுப்ப - புள்ளியை யுடைய முகத்தை யொப்ப, மன்றம் துறுகல் மீ மிசை - மன்றத்தின்கண் ணுள்ள பொற்றைக் கல்லின் மேல், ஒள் செ காந்தள் பல உடன் அவிழும் நாடன் - ஒள்ளிய செங்காந்தள் மலர் பல ஒருங்கே மலர்கின்ற நாட்டை யுடைய தலைவன், அறவன் ஆயினும் - வாய்மையை யுடைய

னுயினும், அல்லன் ஆயினும் - வாய்மையனல்லனுயினும், வரையில் தாழ்ந்த - மலையினிடத்திலே தாழ்ந்து வீழ்கின்ற, வால் வெள் அருவி - தூய வெள்ளிய அருவியானது, கொன் இலை குரம்பையின் இழி தரும் - அச்சத்தைத் தரும் இலையால் வேய்ந்த குடிலினருகில் இறங்கி ஓடும், இன்னது இருந்த இ சிறு குடியோர் - நமக்கு இன்னுதாகியிருந்த இச்சிற்றூரிடத்திலுள் ளார், நம் ஏசுவரோ - தலைவன் அங்ஙனம் இருத்தல் கருதி நம்மைப் பழிப்பார்களோ? தம் இலர் கொல் - அவர் தமக்கென்று ஓரறிவும் இல்லாதவர்களோ?

(முடிபு) நாடன் அறவனுயினும், அல்லனுயினும், இச் சிறு குடியோர் நம் ஏசுவரோ? தம் இலர் கொல்லோ?

(கருத்து) தலைவன் செயல்பற்றி நம்மை ஏசுவோர் அறிவில்லாதவர்.

(வி - ரை.) தலைவன் வரைபொருட்குப் பிரிந்த காலத்தில் தலைவி, "தலைவன் கூறிய காலத்தில் வந்து மணப்பானே? அல்லனே? அங்ஙனம் மணவாவிடின் இவ்வூரினர் நம்மைப் பெரிதும் ஏசுவரே" என்று கவன்றனள்; அது கண்ட தோழி, "தலைவன் நல்லனுயினும் அல்லனுயினும் நம்மை ஏசுவதால் மட்டும் பயனில்லை; அறிவில்லாரே அங்ஙனம் செய்வர்" என்றாள்.

தமக்கென்று ஒரு பயனை யிலரோ வெனலும் ஆம்; தம் குடித் தலைமகளுக்கு வரும் நன்மையைக் கண்டு உவத்தலும் அவளுக்கு வரும் தீமை கண்டு துன்புறுதலும் குடியோர் கடமை யாதலின் அவருக்கும் தலைவன் தொடர்பினாற் பயனுண்மையைக் கூறினள்.

பொருதமையினால் உண்டான புண்ணும், இயல்பாக உள்ள புள்ளியும் காந்தள் மலரின் தோற்றத்தைத் தந்தன. துறு கல்லுக்கு யானை உவமை.

அறவன் - நல்லனெனலும் பொருந்தும். தம் இலர் கொல் - தம்மை ஏசுதல் இலரோ வென்பதும் அமையும்.

'அறவனுயினும் - தான் வரைவொடு வருதலை ஏற்றுக் கொண்டால் தலைவன் அறநெறி வழி வரைந்து கொள்ளினும், அல்லனுயினும் - அங்ஙனம் ஏற்றுக் கொள்ளாரேல் மனவலிமிக்கு ன்னை உடனழைத்துச் சென்றானேனும்' என்றுரைத்தலும் ஆம். இக் கருத்தை, தலைவனைச் சுற்றத்தார் ஏற்றுக் கொள்வாரோ வெனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்ததாகக் கொள்க.

கொன்: இலைக்கு அடையாக்கி எலி, அணில் முதலிய

வற்றிற்கு அச்சத்தைத் தரும் ஈத்திலையென்று பொருள் உரைப்பினும் இயையும்;

" வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை " (பெரும்பாண். 85-8)

என்பது காண்க.

குரம்பை - சிறுகுடில். இன்னுமை தலைவி திறத்தமைந்தது. இன்னுது: வினையெச்சம்; " இன்னு துறைவி", "இன்னு துயங்கும்" (அகநா. 164: 10, 270: 14.)

(ஒப்பு.) 1-3. மலருக்கு யானையின் முகப்புண்: கலி. 48: 1-6.

காந்தள் மலருக்கு யானையின் முகத்துவரி: " நிரைத்த யானை முகத்துவரி கடுப்பப், போதுபொதி புடைந்த வொண்செங் காந்தள் " (நற். 176: 5-6.)

துறுகல்லிற்கு யானை: குறுந். 13: 1 - 2, ஒப்பு.

4. அறவன், அலைன்: புறநா. 44: 11-3, 390: 1-2.

7. இலைக்குரம்பை: பெரும்பாண். 88; மதுரைக். 310.

8. சிறு குடி: குறுந். 184: 2, ஒப்பு. (உ.அ.ச)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற பருவங் கண்டு வேறுபட்ட தலைவியை நோக்கித் தோழி வற்புறுத்தினளாக, அவளுக்கு, " தலைவர் கூறிய பருவம் இதுவே. யான் ஒவ்வொரு நாளும் அவர் வரவை நோக்கி நிற்கின்றேன்; அவர் வந்திலர் " என்று தலைவி வருந்திக் கூறியது.]

உஅடு. வைகல் வைகல் வைகவும் வாரார்
எல்லா வெல்லை யெல்லையுந் தோன்றூர்
யாண்டுளர் கொல்லோ தோழி யீண்டிவர்
சொல்லிய பருவமோ விதுவே பல்லூழ்
5. புன்புறப் பெடையொடு பயிரி யின்புற
விமைக்க மேனா கின்றூ ரெமைத்தலை
ஊனசை யொருபருந் திருக்கும்
வானுயர் பிறங்கன் மலையிறந் தோரே.

எ - து. பருவங்கண்டு வேறுபட்ட விடத்து வற்புறுத்தும் தோழிக்கு வன்புறை (மி-ம். வன்பொறை) எதிரழிந்து தலைமகள் சொல்லியது.

[வன்புறை எதிர் அழிந்து - வற்புறுத்திய கூற்றுக்கு மாறுக வருந்தி]

பூதத் தேவன்.

(பி - ம்.) 1 'வைகாவைகல்' 2 'யெல்லவுந் தோன்றூர்' 5 'பேடையொடு' 6 'வமைத்தலை,' 'மைத்தலை' 7 'திறுக்கும்' 8 'பருந்திருந் துயக்கும்'

(ப - ரை.) தோழி—, இன் புறவு - இனிய ஆண் புரு, பல் ஊழ் - பல முறை, புல் புறம் பெடையொடு புயிரி - புல்லிய புறத்தையுடைய பெண் புறவை அழைத்து, இமைக் கண் ஏது ஆகின்று - இமைப் பொழுதில் எத்தகைய இன்பத்தையுடையதாக ஆகின்றது! இங்ஙனம் அவை இருப்பவும், ஞமை தலை - ஞமை மரத்தின் உச்சியில், ஊன் நசைஇ - இறந்தோரது தசையை விரும்பி, ஒரு பருந்து இருக்கும் - ஒற்றைப் பருந்து இருக்கின்ற, வான் உயர் பிறங்கல் மலை இறந்தோர் - வானளவும் உயர்ந்த விளக்கத்தையுடைய மலையைக் கடந்து சென்ற தலைவர், வைகல் வைகல் வைகவும் வாரார் - நாள் தோறும் விடியற் காலம் நீங்கிப் பகல் வரவும் அப் பகற்காலத்தில் வந்திலர்; எல்லா எல்லை எல்லையும் தோன்றூர் - எல்லாப் பகலின் எல்லையாகிய இரவிலும் மீண்டு வந்து தோன்றூர்; யாண்டு உளர் கொல் - எங்கே இருக்கின்றாரோ? ஈண்டு இவர் சொல்லிய பருவம் இதுவே - இங்கே அவர் மீண்டு வருவேனென்று சொல்லிய பருவம் இதுவே; பிறிதன்று.

(முடிபு) தோழி, மலையிறந்தோர் வைகவும் வாரார்; எல்லை யெல்லையுந் தோன்றூர்; யாண்டுளர் கொல்? இவர் சொல்லிய பருவமோ இதுவே.

(கருத்து) தாம் கூறிச் சென்ற பருவம் வந்தபின்பும் தலைவர் வந்திலர்.

(வி - ரை.) தலைவன் கூறிச் சென்ற பருவம் வந்துவிட்ட தறிந்து தலைவி கவன்று வேறுபட்டாள். அப்பொழுது தோழி, "தலைவர் விரைவில் வருவர்; நீ ஆற்றியிரு" என்று வற்புறுத்தினள். அது கேட்ட தலைவி, "ஒவ்வொரு நாளும் பகலிலும் இரவிலும் அவர் வரவை எதிர்பார்த்து நிற்கின்றேன். இரவில் விடிந்தால் வருவரென்றெண்ணுவேன்; ஆயினும் விடிந்த பின் அவர் வந்திலர்; அது கண்டு பகல் கழிந்தால் தோன்றுவரென எண்ணுவேன்; அப்பொழுதும் வந்திலர். அவர் கூறிய பருவம் இஃதென்பதிலோ ஐயமில்லை" என்று கூறினள்.

நெஞ்சிற்கு அணியராதலின் இவரென்றாள். ஆண் புரு, பெண் புறவின் அருகிருந்து அழைத்து இன்புறுதலைத் தலைவரும் கண்டிருத்தல் கூடுமென்பதும் அக் காலத்தும் தன்னை நினைந்து மீண்டிலரே யென்பதும் தலைவியின் எண்ணம்.

(ஒப்பு.) 1. வைகல் வைகல் வைகுதல் : "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்" (நாலடி. 39.)

3. யாண்டுளர் கொல்லோ : குறுங். 176 : 5, ஒப்பு.

5. ஆண் புரு பெண் புருவைப் பயிர்தல் : குறுங். 79 : 4.

8. வானுயர் பிறங்கல் மலை : குறுங். 144 : 7, 253 : 8. (உ-அ)

தலைவன் கூற்று

[தலைவியைத் தோழி வாயிலாகப் பெற நினைந்து அத் தோழியிடம் பணிவுடைய சொற்களைக் கூறிநின்ற தலைவன் தலைவிக்கும் தனக்கும் முன்னுள்ள பழக்கத்தைக் குறிப்பாக அறிவித்தது.]

உஅசு. உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுமஞ் செவ்வாய்க் கமழகில்
ஆர நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கட் கொடிச்சி
5. மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே.

எ - து. (1) இரந்து பின்னின்ற கிழவன், குறைமருமற் கூறியது.

(2) பாங்கற்குச் சொல்லியதூஉமாம்.

எயிற்றியனார்.

(பி - ம்.) 1 'உள்ளிற்' 2 'றமிர்த', 'றமுத' 3 'மழை போற்' 4 'மழைக்கண் மடந்தை'

(ப - ரை) முள் எயிறு - முள்ளைப் போன்ற கூரிய பற்களையும், அமிழ்தம் ஊறும் அம் செ வாய் - அமிழ்தம் ஊறுகின்ற அழகிய செய்ய வாயையும், கமழ் அகில் - மணம் வீசுகின்ற அகிற் புகையும், ஆரம் - சந்தனப் புகையும், நாறும் - மணக்கின்ற, அறல் போல் கூந்தல் - கருமணலைப் போலக் கரிய கூந்தலையும், பேர் அமர் மழைகண் - பெரிய அமர்ந்த குளிர்ச்சியையுடைய கண்களையும் உடைய, கொடிச்சி - தலைவியின், மூரல் முறுவலொடு - புன்னகையோடு, மதைஇய நோக்கு - செருக்கின பார்வையை, உள்ளி காண்பென் போல்வல் - நினைத்துப் பார்ப்பேன் போல்வேன்.

(முடிபு) கொடிச்சியின் மூரன் முறுவலொடு நோக்கினை உள்ளிக் காண்பென் போல்வன்.

(கருத்து) யான் அளவளாவிய தலைவியை இனிக் காண்டல் அரிது போலும்.

(வி - ரை.) உள்ளிக் காண்பெனென்றது கண்ணுற் காண்டல் அரிதென்றபடி. போல்வலென்றது ஒப்பில் போலியாகி ஐயப் பொருளை உடையதாயிற்று. செவ்வாயமிழ்தும், கூந்தற் பாயலும் அவனுக்கு இன்பத்தை யளித்தன வாதலின் அவற்றைச் சிறப்பித்தான். அமர்கண் - ஒன்றையொன்று அமர்த்த கண்; தம்மைக் காண்பாரை அமர்த்த கண்கள் எனலும் பொருந்தும்; பிறருக்கு அமர்த்த கண்ணையினும் எனக்கு மழைக்கண் ஆயினவென்றான். மதைஇய நோக்கு - செருக்கின பார்வை; 'மதைஇய நோக்கு - செருக்கின நோக்கு; என்றது எக்காலத்தும் அவள் என்னவாவில் அன்புடையளாயிருப்பாள்; அவளறிவது ஒன்றுண்டோ? உன்னுடைய கொடுமையல்லவோ இந்த மாறுதல்? எனத் தோழியோடு புலந்து கூறினன்' (அகநா. 86 : 30, உரை) என்பது ஈண்டும் ஏற்புடைத்தாதல் காண்க.

அமிழ்தமூறும் செவ்வாயென்றும் அறல்போற் கூந்தலென்றும் கூறியவற்றால், முன்னுறு புணர்ச்சி மறையுற மொழிந்தான். 'இங்ஙனம் முன்னரே ஒன்றுபட்ட எங்களை நீ நடுவின்று விலக்குவதாற் பயனென்' என்பதுபடக் கூறி தோழி மருவகை செய்தான்.

தலைவியின்பால் வறிதுநகை தோற்றிய காலத்துக் கண்டு மகிழ்ந்து அவளது அருட் பார்வையால் உள்ளந் தளிர்த்த வனுதலின் அவ்விரண்டையும் உள்ளிக் காண்பெனென்றான்.

இரண்டாவது கருத்து: தலைவியை மீட்டும் ஒருகாற் பெறுவேனே வென வருந்திக் கூறியது.

(மேற்.) மு. ஒரு தலையுள்ளுத லென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். களவு. 9, இளம்; இ. வி. 405); "தலைமகளைக் காணு வகையிற் பொழுது மிகவும் கடந்தபொழுது தலைவன் கூறியது (தொல். களவு. 17, இளம்.); இருவரும் உளவழி வந்த தலைவன் தலைவி தன்மை கூறவே, இவள் கண்ணது இவன் வேட்கை யென்று தோழி குறிப்பான் உணர அவன் கூறியது (தொல். களவு. 11, ந.); பின்னுள் நெடுந்தகை குறிவயின் நீடு சென்றிரங்கியது (நம்பி. 156.)

(ஒப்பு.) 1. முன்னெயிறு : குறுந். 262 : 4, ஒப்பு.

1-2. எயிற்றில் ஊறிய அமிழ்தம் : குறுந். 14 : 1-2, ஒப்பு.

3. ஆரம் நாறும் கூந்தல் : "சாந்துளர் நறுங்கதுப்பு" (குறுந். 312 : 6.)

4. பேரமர்க்கண் : குறுந். 131 : 2, ஒப்பு. பேரமர் மழைக்கண் : கற். 29 : 9, 44 : 2, 391 : 10 ; ஐங். 214 : 4. அகநா. 326 : 2.

5. மதைஇய நோக்கு : கலி. 131 : 21 ; அகநா. 86 : 30, 130 : 14 ; சிலப். 8 : 76.

1-5. தலைவன் தலைவியின் நோக்கை நினைத்தல் : "உள்ளுப திில்ல தாமே... ...திங்க ளன்ன நின்றிரு முகத், தொண்சூட் டவிர்குழை மலிந்த நோக்கே" (அகநா. 253 : 21-6); "மடங்கெழு நோக்க மரீஇய நெஞ்சே" (தமிழ்நெறி. மேற்.) (உ.அசு)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்து, "தலைவர் நம்மைத் துறந்தார்; இனி வாரார்" என்று கவன்ற தலைவியை நோக்கி, "இதோ கார்ப் பருவம் வந்தது; இனி அவர் துறந்திரார்; வருவர்" என்று தோழி கூறியது]

உஅஎ. அம்ம வாழி தோழி காதலர்
இன்னே கண்டுந் துறக்குவர் கொல்லோ
முந்நாற் றிங்க ணிறைபொறுத் தசைஇ
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
5. கடுஞ்சூன் மகளிர் போலநீர் கொண்டு
விசும்பிவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்ற நோக்கிப்
பெருங்கலி வான மேர்தரும் பொழுதே.

எ - து. பிரிவிடை வேறுபட்ட தலைவி (பி-ம். வேறுபட்ட கிழத்தி) நம்மைத் துறந்து வராரெனென்று கவன்றுட்குப் பருவங் காட்டித் தோழி, வருவரெனச் சொல்லியது.

கச்சிப்பேட்டு நன்னாகையார்.

(பி-ம்.) 3 'முந்நாட்டிங்கள்'

(ப - ரை.) தோழி—, அம்ம - கேட்பாயாக : மு நால் திங்கள் நிறை பொறுத்து அசைஇ - பன்னிரண்டு மாதம் நிறைந்த கருப் பத்தைத் தாங்கித் தளர்ந்து, ஒதுங்கல் செல்லா - நடக்க மாட் டாத, பசு புளி வேட்கை - பச்சைப் புளிச்சுவையில் விருப்பத்தை யுடைய, கடு சூல் மகளிர் போல - முதற் சூலையுடைய மகளிரைப் போல, நீர் கொண்டு - நீரை முகந்து கொண்டு, விசும்பு இவர் கல்லாது - வானத்தின் கண் ஏறுமல், தாங்குபு புணரி - அந்நீர்ப்

பொறையைத் தாங்கிக் கொண்டு ஒன்றோடொன்று சேர்ந்து, செழு பல் குன்றம் நோக்கி - வளமிக்க பல மலைகளை நோக்கி, பெரு கலி வானம் - பெரிய முழக்கத்தையுடைய மேகங்கள், ஏர்தரும் பொழுது - எழுகின்ற கார்ப்பருவத்தை, இன்னே கண்டும் - இப் பொழுது பார்த்த பின்பும், காதலர் - தலைவர், துறக்குவர் கொல்லோ - நம்மைப் பிரிந்து வாராமல் இருப்பாரோ? வருவர்.

(முடிபு) தோழி, காதலர் பொழுது கண்டும் துறக்குவர் கொல்லோ?

(கருத்து) கார்ப்பருவம் வந்தமையின் இனித் தலைவர் விரைவில் மீள்வர்.

(வி - ரை.) துறக்குவர் - துறந்துறைவரென்னும் பொருட்டு. கொல்: அசைநிலை; ஓ: வினா; எதிர்மறைப் பொருளது.

மகளிர் பன்னிரண்டு திங்கள் கருவுற்றிருத்தலும் உண்டு;

"பன்னிரு திங்கள் வயிற்றிற் கொண்டவப் பாங்கினால்
என்னிளங் கொங்கை யமுத மூட்டி யெடுத்து யான்
பொன்னடி நோவப் புலரியே கானிற் கன்றின்பின்
என்னிளஞ் சிங்கத்தைப் போக்கினே னெல்லே பாவமே"
(பெரியாழ். 3. 2 : 8.)

நிறை - நிறைந்த கருப்பம். ஓதுங்கல் - நடத்தல்.

வயாநோயுடையார் புளித்த சுவையையுடைய பொருள்களை விரும்புதல் இயல்பு; பசும்புளி - பச்சைப் புளியங்காய்;

"நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுகின்
மலர்ந்த மார்பிவள் வயாஅ நோய்க்கே" (ஐங். 51.)

கடுஞ்சூல் மகளிர் - மூதற்சூல் கொண்ட மகளிர் (மதுரைக். 609, ந.)

(ஒப்பு.) 1. அம்ம வாழி தோழி: குறுந். 77 : 1, ஒப்பு.

4. வயாநோயுற்றோர் புளியை விரும்புதல்: "வயாவு நோய் நிலையாது, வளைகாய் விட்ட புளியருந் தாது" (கல. 7 : 5-6); "பொய்த்துயில் கொண்டு புளிக்கு முவந்தாள்" (பிரபு. மாயை உற்பத்தி. 27.)

5. கடுஞ்சூல்: சிறுபாண். 148; பெரும்பாண். 395; கலி. 110 : 14.

(உஎ)

தலைவி கூற்று

[தலைவன் அன்பிலனென்று தோழி கூறிக் கொண்டிருப்ப, அவனது வரவுணர்ந்த தலைவி அவன் செய்வன யாவும் இனியன வென்று கூறியது.]

உஅ. கறிவள ரடுக்கத் தாங்கண் முறியருந்து
குரங்கொருங் கிருக்கும் பெருங்க ளடன்
இனிய ளகலி னினத்தி னியன்ற
இன்ன மையினு மினிதோ
5. இனிதெனப் படுஉம் புத்தே ணாடே.

எ - து. தலைமகனது வரவுணர்ந்து, நம்பெருமான் நமக்கு அன்பிலனென்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

[கிழத்தி உணர்ந்து தோழிக்கு உரைத்ததென்க.]

கபிலர்.

(பி - ம்.) 2 'கிருக்கும்' 3 'னினத்தியன்ற'

(ப - ரை.) தோழி, கறி வளர் அடுக்கத்து ஆங்கண் - மிளகு கொடி வளர்கின்ற மலைப்பக்கமாகிய அவ்விடத்தே, முறி அருந்து குரங்கு ஒருங்கு இருக்கும் - தளிரை உண்ணுகின்ற குரங்குகள் ஒன்றுகத் திரண்டு இருக்கின்ற, பெரு கல் நாடன் - பெரிய மலைகளையுடைய நாட்டினனாகிய தலைவன், இனியன் - பிரிந்தனனாயினும் நம் மாட்டு இனிமையை உடையான்; ஆகலின்—, இனத்தின் இயன்ற இன்னமையினும் - உறவுடையாராற் செய்யப்படும் இன்னமையைக் காட்டிலும், இனிது என படும் புத்தேள் நாடு - இனியதென்று சிறப்பிக்கப்படும் தேவருலகம், இனிதோ - இனிமையை உடையதோ?

(முடிபு) நாடன் இனியனாகலின், இனத்தின் இயன்ற இன்னமையினும் புத்தேணாடு இனிதோ?

(கருத்து) அன்புடைய தலைவன் செய்வனயாவும் இனியனவே.

(வி - ரை.) தலைவனது வரவு நீட்டித்ததாகத் தோழி, "தலைவன் நம்பால் அன்பிலன்" என இயற்பழித்தாள்; அப்பொழுது தலைவன் வந்தான்: அவன் வரவை யறிந்த தலைவி, "அன்புடைய உறவினர் செய்யும் இன்னமை தேவருலக இன்பத்தினும் சிறந்தது" என்று கூறி இயற்பட மொழிந்தாள்.

இனத்தின் மேல் வைத்துக் கூறினும் கருதியது தலைவனையே யென்க. அவன் இனிய னாகலின், அவன் செய்வனவற்றுள் சில இன்னாதனவாகத் தோன்றினும், முடிவில் இனியனவாகவே முடியுமென்பது தலைவி கருத்து. இனிதோ: ஓகாரம் எதிர்மறைப் பொருளது.

புத்தேணாடு ஒருபடித்தாக இன்பம் பயத்தலின் அதனினுங்கர்

வார் இன்பத்தின் அருமையை அறியார்; தலைவன் செய்யும் இன்னுமை பின்வரும் இன்பம் மிகுதிப்படுவதற்குக் காரணமாகி அவ்வின்பத்தின் அருமையை யறியச் செய்தலின் அவ்வின்னுமை புத்தேணுட்டினும் இனிதாயிற்று;

"இனியவ ரென்சொலினு மின்சொல்லே" (நீதிநெறி.)

"மாசற்ற நெஞ்சுடையார் வன் சொலினிது" (நன்னெறி.)

என்பவற்றிற் சொல்லுக்குக் கூறிய கருத்து ஈண்டு நிற்ணைத குரியது.

"... ... ... நரகம் பெறினும்

எள்ளேன் றிருவருளாலே யிருக்கப் பெறினிறைவா" (திருவாசகம்)

என்பதும் இக்கருத்தோடு ஒப்புமையுடையது

(ஒப்பு.) 1. கறிவள ரடுக்கம்: குறுந். 90: 2; புறநா. 168: 2. மலையில் மிளகு கொடி வளர்தல்: ஐங். 243. 1; அகநா. 2: 6, 112: 14; சிலப். 28: 114

1-2. முறியருந்து குரங்கு: "முறிமே யாக்கைக் கிளை" (மலைபடு. 313); "முறிமேய் கடுவன்" (ஐங். 276: 1.)

குரங்கு கறிமுறி யுண்ணுதல்: அகநா. 182: 14; திருச்சிற். 196.

3-4. தலைவன் செய்யும் இன்னுமை இனிதாதல்: "நாடனயமுடைய னென்பதனு னீப்பினும், வாடன் மறந்தன தோள்" (ஐங். எழு. 2.) 4-5. ஒருவாறு ஒப்பு: குறள், 1323. (உ-அ)

தலைவி கூற்று

[தலைவன் கூறிய பருவம் வந்தது கண்டு தலைவி வேறுபட்டா ளெனக் கவலையுற்ற தோழிக்கு, "நான் அவரை நினைந்து இரங்கினே னல்லேன்; என் பொருட்டுக் கவலையுடையார் போல் இவ்வூரினர் அவரைக் கொடியரென்பதை யறிந்தே வருந்தினேன்" என்று தலைவி கூறியது]

உஅசு. வளர்பிறை போல வழிவழிப் பெருகி
இறைவளை நெகிழ்த்த வெவ்வ நோயொடு
குழைபிசைந் தனையே மாகிச் சாஅய்
உழைய ரன்மையி னுழப்ப தன்றியும்
5. மழையுந் தோழி மான்றுபட் டன்றே
பட்ட மாரி படாஅக் கண்ணும்
அவர்திறத் திரங்கு நம்மினும்
நந்திறத் திரங்குமிவ் வழுங்க லூரே.

எ - து. காலங்கண்டு வேறுபட்டாளெனக் கவன்ற தோழிக்கு, "காலத்து வந்திலரென்று வேறுபட்டேனல்லேன். அவரைப் புறத்தார்

கொடியரென்று கூறக்கேட்டு வேறுபட்டேன்" என்று தலைமகள் சொல்லியது.

பெருங்கண்ணன்.

(பி - ம்) 1 'வழிவழி பெருகி' 6' கண்ணம்'

(ப - ரை.) தோழி—, வளர் பிறை போல - பூருவபக்கத்து வளர்கின்ற பிறையைப்போல, வழி வழி பெருகி - மேலும் மேலும் பெருக்கத்தை யடைந்து, இறைவளை நெகிழ்த்த எவ்வம் நோயொடு - தோட்சந்தில் அணிந்த வளையை நெகிழச் செய்த துன்பத்தைத் தரும் காம நோயினால், குழை பிசைந்தனையேம் ஆகி - தளிரைக் கசக்கினாற் போன்ற நிலையை உடையேமாகி, சாஅய் - மெலிந்து, உழையர் அன்மையின் - அந் நோயைத் தீர்ப் பதற்குரிய தலைவர் பக்கத்திலுள்ளார் அல்லாமையினால், உழப் பது அன்றியும் - நாம் துன்பப் படுவதல்லாமலும், மழையும் - இம் மழையும், மான்று பட்டன்று - மயங்கிப் பெய்தது; பட்ட மாரி படாஅ கண்ணும் - அங்ஙனம் பெய்த மழை பெய்வதற்கு முன்னரே, இ அழுங்கல் ஊர் - இந்தக் கலக்கத்தையுடைய ஊரிலுள்ளார், அவர் திறத்து இரங்கும் நம்மினும் - அவர் பொருட்டு வருந்துகின்ற நம்மைக் காட்டிலும் மிக, நம் திறத்து இரங்கும் - நம்மாட்டு இரங்குவர்.

(முடிபு) தோழி, அனையேமாகிச் சாஅய் உழப்பதன்றியும், மழையும் மான்று பட்டன்று; படாஅக் கண்ணும் ஊர் இரங்கும்.

(கருத்து) பிறர் தலைவரைக் கொடியரென்பது நினைந்து வேறு பட்டேன்.

(வி - ரை.) தோள்வளை நெகிழ்தல் மெலிவின் மிகுதியைப் புலப்படுத்தலின் இறை, தோட்சந்தாயிற்று; முன்கையுமாம். நெகிழ்த்த நோய் எவ்வநோ யென்க. தலைவிக்குத் தளிரை உவமை கூறுதல் மரபு. சாஅய் - மேனி நலம் மெலிந்து. மான்றுபடல் - மயங்கி வீழ்தல். (அகநா. 39 : 13) காலமல்லாத காலத்து மழை யென்பது தலைவியின் நினைவு.

கார்ப்பருவம் வந்த விடத்து, "மழைபெய்தது; தலைவர் வந்திலர்; இவள் வேறுபட்டாள்; இவளை இங்ஙனியில் இருக்கச் செய்த அவர் கொடியர்" என்று தோழி கவன்றுளாக அதனை யறிந்த தலைவி இது கூறினள்.

"அவரைப் பிரிந்து நாம் துன்பப்படுகின்றோம்; இதன் மேலும் மழையானது மயங்கிப் பருவமல்லாத காலத்துப் பெய்தது; அது பெய்வதற்கு முன்பே இவ்வூரினர் நமக்கு இரங்குவார் போல

அவரைக் கொடிய ரென்கின்றனர். நம்பால் இவர்கட்கு நம்மினும் உள்ள ஆதரவுதான் என்னே!" எள்ருள் தலைவி.

அழுங்கல் - ஆரவாரமுமாம். ஊரென்று கூறினளாயினும் கருதியது தோழியை என்க (ஐங். 154, உரை.)

இதனால் தோழி கவலுதல் வீணென்பதை அறிவுறுத்தினுள்.

இச்செய்யுட் பொருளோடு இந்நூல் 224-ஆம் செய்யுள் ஒருவாறு ஒப்புமையுடையது.

(ஒப்பு) 1. வளர் பிறை போலப் பெருகுதல்: "குடமுதற் ரேன்றிய தொன்முதொழு பிறையின், வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்" (மதுரைக். 193-4); "ஆநா ணிறைமதி யலர்தரு பக்கம்போல், நாளிஞாளி னளிவரைச் சிலம்பு தொட்டு, நிலவுப் பரந்தாங்கு நீர்நிலம் பரப்பி" (பரி. 11 : 31-3); "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும், வரிசை வரிசையா நந்தும்" (நாலடி. 125); "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு" (குறள், 782); "சுடர்ப்பிறை போலப், பெருக்கம் வேண்டி" (பெரும். 2 : 6 : 35-6.)

2. வளை நெகிழ்த்த நோய்: "தோள், இலங்குவளை நெகிழ்த்த கலங்க ஞர்" (கற். 214 : 9-10.)

வளை நெகிழ்தல்: குறுந். 11 : 1, ஒப்பு; நற். 236 : 7; ஐங். 20 : 5, 165 : 4.

3. தலைவியின் மேனிக்குத் தளிர் உவமை: குறுந். 62 : 4-5, ஒப்பு, 331 : 6-7, 383 : 5; ஐங். 216 : 5 - 6.

4. உழையர்: நற். 312 : 6.

6. பட்டமரி: நற். 2 : 9; புறநா. 82 : 2.

8. அழுங்கலூர்: குறுந். 12 : 6, ஒப்பு. (உஅக)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில், "நீ ஆற்றியிருத்தல் வேண்டு மென்ற தோழிக்கு முன்னிலைப் புறமொழியாக, "காமத்தின் இயல்பறியாத வன்கண்ணர் அதனைத் தாங்கி ஆற்றவேண்டு மென்கின்றனர்" என்று தலைவி கூறியது.]

உகo. காமந் தாங்குமதி யென்போர் தாமஃ
தறியலர் கொல்லோ வுணருமது கையர்கொல்
யாமெங் காதலர்க் காணே மாயிற்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
5. கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல வில்லா குதுமே.

எ - து. வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது.

[அழிவுற்று - நெஞ்சழிந்து; வருந்தி.)

கல்பொரு சிறுநுரையார்.

(பி - ம்.) 2 'தறியுநர்கொல்லோ'; 'வகீனய மதுகையர்', 'வெகீண மதுகையர்' 6 'வில்லாகும்மே'

(**ப - ரை.**) காமம் தாங்குமதி என்போர் - காமநோயைப் பொறுத்து ஆற்றுவாயாக என்று வற்புறுத்துவோர், அஃது அறியலர் கொல் - அக்காமத்தின் தன்மையை அறிந்திலரோ? அகீண மதுகையர் கொல் - அத்துணை வன்மையுடையவரோ? யாம்—, எம் காதலர் காணேம் ஆயின் - எம் தலைவரைக் காணேமானால், செறி துனி பெருகிய நெஞ்சமொடு - செறிந்த துயர் மிக்க நெஞ்சத்தோடு, பெருநீர் - மிக்க வெள்ளத்தில், கல் பொரு சிறுநுரை போல - பாறையின் மேல் மோதும் சிறிய நுரையைப் போல, மெல்ல மெல்ல இல் ஆகுதும் - மெல்ல மெல்ல இல்லையாவேம்.

(**முடிபு**) காமம் தாங்குமதி என்போர், அஃது அறியலர் கொல்? மதுகையர் கொல்? யாம் காணேமாயின் இல்லாகுதும்.

(**கருத்து**) தலைவரது பிரிவு கீட்டிப்பின் என் உயிர் நீங்கும்.

(**வி - ரை.**) "காமத்தைத் தாங்கி ஆற்றியிருத்தல் வேண்டுமென்பார் அக்காமத்தின் இயல்பை அறியலர் போலும்! அதனை இரக்கமுள்ள நெஞ்சினர் அறிதல் கூடும். அவர் வன்னெஞ்சராதலின் அறிந்திலர். தலைவர் பிரியுமிடத்து ஆற்றேமாதலுக்கே இங்ஙனம் கூறுகின்றனர். அவர் பிரிவு நீட்டிப்பின் மெல்ல மெல்ல உயிரை இழப்பேம்; அதன் தன்மை இவரால் அறிவரிதேயாகும்" என்று தலைவி கூறினள். அகீனமதுகையர் கொல் - காமத்தைத் தாங்கும் அத்துணை வன்மையுடையரோவெனலும் பொருந்தும்.

இது படர்க்கையிற் கூறினும் தோழியைக் கருதியதே யாதலின் முன்னிலைப் புறமொழி.

கற்பொரு சிறு நுரையெனற்பாலது எதுகை நோக்கிக் கல் பொரு சிறுநுரையென நின்றது. நுரை கல்லில் மோதுந் தோறும் சிறிது சிறிதாகக் கரைதலைப் போலத் தலைவர் பிரிவை எண்ணுந் தோறும் உயிர் தேய்ந்தொழியுமென்க. இவ்வுவமையின் சிறப்பினால் இச் செய்யுளியற்றிய நல்லிசைப் புலவர் 'கல் பொரு சிறுநுரையார்' என்னும் பெயர் பெற்றார்.

இல்லாகுதல்: "இல்லாகி" (குறள். 479.) மெல்ல மெல்ல இல்லாகுதல் சாக்காடென்னும் மெய்ப்பாடு.

தாம், ஓ, ஏ: அசைநிலைகள்.

(மேற்.) மு. அறமும் பொருளும் செய்வதனைப் புறத்து உறைதலால் தலைவனைத் தலைவி நீங்குங்காலம் பெரிதாகலின் அதற்குச் சுழற்சி மிக்க வேட்கைமிகுதி நிகழ்ந்த விடத்துத் தெருட்டும் தோழிக்குத் தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1. காமந் தாங்குதல்: குறுந். 241: 1. 1-2; "யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார், யாம்பட்ட தாம்படா வாறு" (குறள். 1140.)

காமம் தாங்க மாட்டாமை: "பொறை நில்லா நோய்" (கலி. 3: 4.)

6. இல்லாகுதும்: "நாமில மாகுத லறிதும்" (நற். 299: 6.)

5-6. மெல்ல மெல்ல அழிதல்: "ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய, தேய்புரிப் பழங்கயிறு போல, வீவது கொல்லென் வருந்திய வுடம்பே" (நற். 284: 9-11.)

மு. குறுந். 152. (உகo)

தலைவன் கூற்று

[தலைவன் பாங்கனுக்குத் தலைவி இவ்விடத்தினள், இவ்வியல் பினளென்று கூறியது.]

உகக. சுடுபுன மருங்கிற் கலித்த வேனற்
படுகிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே
இசையி னிசையா வின்பா ணித்தே
கிளியவள் விளியென வெழலொ ல்லாவே

5. அதுபுலந் தழுத கண்ணே சாரற்
குண்டுநீர்ப் பைஞ்சுனைப் பூத்த குவளை
வண்டுபயில் பல்லிதழ் கலுஇத்
தண்டுளிக் கேற்ற மலர்போன் றனவே.

எ - து. பாங்கற்கு உரைத்தது.

கபிலர்.

(பி - ம்.) 1 'சுடும்புன மருங்கிற்' 3 'இசைஇயின்னிசையாய்' விழவொல்லாவே' 7 'பல்லிதழ்க் கலுஇய' 8 'மலர்போன்றவ்வே'

(ப - ரை.) தோழ, சுடு புனம் மருங்கில் - மரங்களை வெட்டிச் சுட்ட கொல்லியில், கலித்த ஏனல் - தழைத்த தினையினிடத்தே, படுகிளி கடியும் - வீழ்கின்ற கிளிகளை ஓட்டுகின்ற,

கொடிச்சி கை குளிர் - தலைவியினது கையின்கண் உள்ள குளிர் என்னும் கருவியானது, இசையின் இசையா - இசையோடு பொருந்தி, இன்பாணித்து - இனிய தாளத்தையுடையது; அவள் விளி என - அக்குளிரின் ஓசையை அத்தலைவியின் பாட்டென்று கருதி, கிளி - கிளிகள், எழல் ஒல்லா - தாம்படிந்த தினையினின்றும் எழுதலைப் பொருந்தா; அது புலந்து அழுதகண் - அதனைப் புலந்து அழுத அவளுடைய கண்கள், சாரல் - மலைப்பக்கத்திலேயுள்ள, குண்டு நீர் பசு சுனை பூத்த குவளை - ஆழமாகிய நீரையுடைய பசிய சுனையினிடத்தே பூத்த குவளையினது, வண்டு பயில் - வண்டுகள் பழகுகின்ற, பல் இதழ் கலிஇ - பல இதழ்கள் கலிந்து, தண் துளிக்கு ஏற்ற - தண்ணிய மழைத்துளியை ஏற்றுக் கொண்ட, மலர் போன்றன - மலர்களைப் போன்றன.

(முடிபு) கொடிச்சியின் கைக்குளிர் இன்பாணித்து; கிளி எழலொல்லா; கண் மலர் போன்றன.

(கருத்து) தலைவி தினைப்புனத்திற் காவல் செய்து கொண்டிருக்கின்றாள்.

(வி - ரை.) குளிர் - கிளிகடி கருவிகளுள் ஒன்று; தினைப் புனத்திற் கிளிகளை ஓட்டுவார் மூங்கிலை வீணைபோற் கட்டித் தெறிக்குங் கருவியென்பர் தஞ்சைவாணன் கோவை யுரையாசிரியர். இசையின் இசையாயென்ற பாடத்திற்கு இசைகளுக்குட் சிறந்த இசையாகியெனப் பொருள் கொள்க.

தலைவியினுடைய பாட்டென்று குளிரின் முழக்கத்தை நினைந்த கிளிகள் அவ்வொலியால் அச்சமுற்று நீங்காமல் அதில் மயங்கித் தினைப் பயிரில் விழுந்தன. தலைவியின் பாட்டில் மயங்கி அதை விரும்பியவை யாதலின், அவள் பாடிக்கொண்டே ஒலிப்பிக்கும் குளிரைத் தனித்து ஒலிப்பிக்குங் காலத்திலும் அவள் பாட்டென மயங்கின. தலைவியின் பாட்டைக் கேட்டுக் கிளிகள் தினைப் புனத்திலே எழாமல் இருத்தலை,

> "சாந்த மெறிந்துழுத சாரற் சிறுதினைச்
> சாந்த மெறிந்த விதண்மிசைச் - சாந்தம்
> கமழக் கிளிகடியுங் கார்மயி லன்னாள்
> இமிழக் கிளியெழா வார்த்து" (திணைமாலை. 3)

என்னும் செய்யுளாலும் அறியலாகும்.

கிளி எழாமல் வீழ்வதனால், தான் செய்யும் தினைக்காவல் பயனின்றி யொழிந்ததென்று தலைவி அழுதாள். குவளைமலர் போன்ற கண்கள் அழுதமையால் நீர்த்துளிகளோடு கூடித் துளிக்கேற்ற மலர் போன்றன. துளிக்கு : உருபுமயக்கம்.

(ஒப்பு.) 1. மரங்களைச் சுட்ட இடத்தில் தினையை விளைத்தல்: குறுந். 198: 1-2, ஒப்பு. 2. கொடிச்சி: குறுந். 272: 8, ஒப்பு.

1-2. ஏனலில் தலைவி கிளிகடிதல்: குறுந். 198: 1-5.

குளிராற் கிளி கடிதல்: "ஏனல், உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே" (குறுந். 360: 5-6); "குளிரும் பிறவும், கிளிகடி மரபின் வழுழ் வாங்கி" (குறிஞ்சிப். 43-4); "சிறுகிளி கடிதல் பிறக்கியா வணதோ, குளிர்படு கையள் கொடிச்சி" (நற். 306: 2-3.)

6. குண்டு நீர்ப் பைஞ்ஞாப் பூத்த குவளை: குறுந். 59: 2-3, ஒப்பு. 5-8. நற். 379: 5-9. (உகக)

தோழி கூற்று

[தலைவன் இரவுக்குறிக்கண்வந்து சிறைப்புறத்தானாக, அதனை யறிந்த தோழி தலைவிக்குக் கூறுவாளாய், "நம் தாய், ஒரு நாள் தலைவன் வந்ததை அறிந்தாள்; அறிந்த அன்றுமுதல் முன்னையினும் மிகப்பாதுகாத்து வருகின்றாள்" என்று கூறி விரைவில் வரைந்து கோடலே நன்றென்பதைப் புலப்படுத்தியது.]

உகஉ. மண்ணிய சென்ற வொண்ணுத லரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றெ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவுங் கொள்ளான்

5. பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ வன்னை
ஒருநாள், நகைமுக விருந்தினன் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.

எ - து. தோழி இரவுக்குறிக்கட் சிறைப்புறமாகக் காப்பு மிகுதி சொல்லியது.

பரணர்.

(பி - ம்) 1 'பொன்னுதலரிவை' 2 'றப்பிற்' 4 'கொடுப் பினுங்' 6 'செலீஇயளோ'

(ப - ரை.) அன்னை - தாய், ஒரு நாள் - ஒரு நாளில், நகை முகம் விருந்தினன் வந்தென - நகுதலையுடைய முகத்தைக் கொண்ட விருந்தினனாகித் தலைவன் வந்தானாக, பகைமுகம் ஊரின் - பகைவர் மாறுபடும் போர்க்களத்தின்கண் உள்ள ஊரினரைப் போல, துஞ்சல் இலள் - பலநாளும் துயில் செய்தல் இலள்; மண்

ணிய சென்ற ஒள் நுதல் அரிவை - நீராடும் பொருட்டுச் சென்ற ஒள்ளிய நெற்றியையுடைய பெண், புனல் தரு பசுங் காய் தின்ற தன் தப்பற்கு - அந்நீர் கொணர்ந்த பசுங்காயைத் தின்றதாகிய குற்றத்திற்காக, ஒன்பதிற்று ஒன்பது களிற்றோடு - எண்பத்தொரு ஆண் யானைகளோடு, அவள் நிறை பொன் செய்பாவை கொடுப்பவும் கொள்ளான் - அவளது நிறையையுடைய பொன்னுற் செய்த பாவையைக் கொடுப்பவும் கொள்ளானாகி, பெண் கொலை புரிந்த நன்னன் போல - அப்பெண்ணைக் கொலை செய்த நன்னனைப்போல, வரையா நிரையத்து செலீஇயர் - நீக்குதல் இல்லாத நரகத்தின் கண் சென்று துன்புறுவாளாக.

(முடிபு) அன்னை, ஒரு நாள் விருந்தினன் வந்தெனத் துஞ்சல் இலள் ; நிரையத்துச் செலீஇயர்.

(கருத்து) அன்னையின் காப்பு இப்பொழுது மிக்கது.

(வி - ரை.) நன்னன் என்னும் சிற்றரசனொருவன் ஆற்றங் கரையிலிருந்த தன் தோட்டத்தில் அரிதின் வளர்த்த மாமரத்தின் காயொன்று அவ்வாற்றிலே வீழ்ந்து மிதந்துவர, அதனை ஆற்றிற்கு நீராடச் சென்ற பெண்ணொருத்தி எடுத்துத் தின்றாள். அதுகண்ட காவலர் அவளை நன்னன்முன் கொண்டு நிறுத்த, அவன் அவளுக்குக் கொலைத் தண்டம் விதித்தான் ; அதனை அறிந்த அவள் தந்தை அவளது நிறைக்கேற்ற பொன்னுற் செய்த பாவையையும், எண்பத்தொரு களிற்றையும் தண்டமாக இறுப்பதாகக் கூறவும் நன்னன் அதற்கு உடம்படாமற் கொலை புரிவித்தான்.

அரசனைப் பிழைத்தவர் தம் நிறையுள்ள பொன்னுற் பாவை செய்து தண்டமாக இறுத்தல் மரபு ;

"... ... ... ஆடிவி ருளிரெனின்
ஆடகப் பொன்னினு மளவி னியன்ற
பாவை யாகும் படுமுறை" (பெருங். 1. 40 : 371 - 3.)

தலைவன் விருந்தினர்களோடு ஒருவனுகப் புக்கபோது தாய் அவனை அறிந்து கொண்டாள் ; இங்ஙனம் புகுவதுண்டென்பது, இந்நூல் 118-ஆம் செய்யுளாலும் பெறப்பட்டது.

(மேற்.) 2. தன்மை முன்னிலைகட்குரிய தரலென்பது படர்க்கைக் கண் வந்தது (தொல். இளவி. 30, இளம், கல், 29, ந ; நன். 380, மயிலை ; இ. வி. 301)

5 - 6. நன்னன் பெண் கொலை செய்த குற்றத்தால் அவனது குலத்திற் பிறந்தார், சான்றோரால் வரையப்படுதற்குக் காரணமாவர் (புறநா. 161, உரை.)

மு. புகாக் காலத்துத் தலைமை மிக்க தலைவன் புக்கதற்கு விருந்தே லாது, செவிலி இரவும் துயிலாதாளைத் தலைவி முனிந்து கூறியது (தொல். களவு. 16, ந.); "தாய் துஞ்சாமை" (நம்பி. 161; இ. வி. 519.)

(ஒப்பு.) 3. தப்பல்: குறுந். 79: 7, ஒப்பு.

4. பொன் செய் பாவை கொடுத்தல்: அகநா. 127: 8.

8. பகை முக ஊர் துஞ்சாமை: குறுந். 91: 7-8, ஒப்பு. (உகூஉ)

தலைவி கூற்று

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்குத் தூதாக வந்த தோழியை நோக்கி, "தலைவன் ஈண்டுறைவது தெரியின் பரத்தை இங்கு வந்து அவனைக் கொண்டு செல்வள்" என்று கூறியது.]

உகூக. கள்ளிற் கேளி ராத்திரை யுள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியங் குறுங்காய்
ஓங்கிரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி யருமன் மூதூ ரன்ன
5. அயவெள் ளாம்ப லம்பகை நெறித்தழை
தித்திக் குறங்கி னூழ்மா றலைப்ப
வருமே சேயிழை யநதிற்
கொழுநற் காணிய வளியேன் யானே.

எ - து. பரத்தையிற் பிரிந்து வந்த கிழவற்கு வாயிலாகப் புக்க தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கள்ளிலாத்திரையன்.

(பி - ம்) 1 'ரார்த்திய' 2 'பள்ளை தந்த'; 'வஞ்சியங்' 5 'வயல்வெள்' 7 'வருமோ' 8 'கொழுநர்க்'

(ப - ரை) தோழி, கள்ளில் கேளிர் ஆத்திரை - கள்ளைக் குடிக்கும் விருப்பத்தையுடையவர்களது பயணம், உள் ஊர் பாளை தந்த பஞ்சி அம் குறு காய் - ஊரினகத்துள்ள பாளையினுல் ஈனப்பட்ட நாரையுடைய குறிய காய்களைக் கொண்ட, ஓங்கு இரு பெண்ணை நுங்கொடு பெயரும் - உயர்ந்த கரிய பனையினது நுங்கைக் கைக்கொண்டு மீள்வதற்கு இடமாகிய. ஆதி அருமன் மூது ஊர் அன்ன - ஆதி அருமனுக்குரிய பழைய ஊரைப்போன்ற, அயம் வெள் ஆம்பல் அம் பகை நெறி தழை - நீரில் வளர்ந்த வெள்ளாம்பலினது அழகிய மாறுபட்ட முழு நெறியையுடைய தழையுடை, தித்தி குறங்கின் ஊழ் மாறு அலைப்ப - தேமலை

யுடைய துடையின்கண் முறையே மாறி மாறி அசைய, செ இழை - பொன்னுற் செய்த செவ்விய அணிகலன்களையுடைய பரத்தை, அந்தில் - அவ்விடத்திலே, கொழுநன் காணிய - தலை வனைக் காணும் பொருட்டு, வரும் - வருவாள்; யான் அளியேன் - நான் இரங்கத்தக்கேன்.

(முடிபு) மூதூரன்ன சேயிழை, கொழுநற்காணிய, அலைப்ப வரும்; யான் அளியேன்.

(கருத்து) தலைவனை மீட்டும் பரத்தை கைக்கொள்வாள்.

(வி - ரை) கள்ளில் - கள்; கட்கடையுமாம், ஆத்திரை - யாத்திரை; "ஆத்திரை முன்னி" (பெருங். 1. 36 : 221.)

பஞ்சியென்றது நுங்கின் புறத்தேயுள்ள நாரை; பன்னுடை யுமாம். சூறுங்காய் பெண்ணைக்கு அடை.

அருமனது மூதூரை நக்கீரர்,

"கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கட் கருனைச் செங்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்காற்
கூழுடை நன்மனை குழுவின விருக்கும்
மூதி லருமன் பேரிசைச் சிறுகுடி" (நற். 367 : 1 - 6)

என்று சிறப்பிப்பர்.

பனைமரத்திலுள்ள கள்ளையுண்ணச் சென்றோர், அதனை உண்ணுதலோடமையாது நுங்கைக் கைக்கொண்டு அப்பனைக்கு ஊறுபுரிந்தாற் போலத் தலைவனைக் காண வருபவள் அவனைக் கைக்கொண்டு தலைவியை இழிவுபடுத்திச் செல்வாளென்பது உவமையாற் பெறப்படும் கருத்து.

இது வாயில் மறுத்தது.

கள்ளுண்பாரது செலவைக் கள்ளிலாத்திரையெனக் கூறிய இதனுல் இச்செய்யுளை யியற்றிய புலவர் கள்ளிலாத்திரையன் என்னும் பெயர் பெற்றார் போலும்.

(மேற்.) 7 - 8. அந்திலென்னும் இடைச்சொல் இடஞ்சுட்டி வந்தது (தொல். இடை. 19, இளம், சே, தெய்வச், ந; நன். 436. மயிலை, 427, சங்கர.)

(ஒப்பு.) 1. ஆத்திரை: பெரும். 1. 36: 238, 255, 38 : 1, 139, 2. 9 : 251, 11 : 75, 15 . 9, 37, 3. 1 : 105.

1-3. பனங்கள்: "பிணர்ப்பெண்ணைப் பிழிமாந்தியும்" (பட். 89); "அரியற் பெண்டி ரல்கிற் கொண்ட, பகுவாய்ப் பாளைக் குவிகுலைச் சுரந்த, அரிநிறக் கலுழி யார மாந்தி" (அகநா. 157 : 1-3.)

உள்ளூர்ப் பகை : " நடுவூருள் வேதிகை சுற்றுக் கோட் புக்க, படுபகை யன்னர் " (நாலடி. 96.)

5. அய ஆம்பல் : " குண்டுநீ ராம்பல் " (குறுங். 122 : 2.)

பகைநெறித் தழை : " அம்பகை நெறித்தழை யணிபெறத் தைஇ " (கற். 96 : 8) ; " நெய்தலம் பகைத்தழை " (ஐங. 187 : 3) ; ஆம்பற் பூவாலான தழையுடை : " அளிய தாமே சிறுவெள் ளாம்பல், இளைய மாகத் தழையா யினவே " (புறநா. 248 : 1-2) ; " ஆம்ப லணித்தழை " (திணை. ஐம். 40.)

6. தீத்திக் குறங்கு : அகநா. 385 : 10. (உகக)

தோழி கூற்று

[பகற்குறிக்கண் தலைவன் சிறைப்புறமாக நிற்ப, தோழி தலைவிக்குக் கூறுவாளாகி, " பலரோடு நாம் விளையாடும்போது தலைவன் வந்து அளவளாவிச் சென்றால் அலருண்டாகும் ; அதனால் நாம் இன்பத்தையே பெறுவோம். எப்பொழுதும் அருகில் தலைவன் இருத்தலின் தாய் அறிந்தாள் ; இனி இல்லிற்கு அழைத்துச் சென்று பாதுகாப்பாள் ; இதற்குத் தலைவனே காரணம் ஆயினன் " என்று கூறியது.]

உகச. கடலுட னுடியுங் கான லல்கியும்
தொடலை யாயமொடு தழுவணி யயர்ந்தும்
நொதுமலர் போலக் கதுமென வந்து
முயங்கினன் செலினே யலர்ந்தன் று மன்னே
5 தித்தி பரந்த பைத்தக லல்குற்
றிருந்திழை துயல்வுக்கோட் டசைத்த பசுங்
தழையினு முழையிற் போகான் [குழைத்
தான்றந் தனன்யாய் காத்தோம் பல்லே.

எ - து. பகற்குறிக்கண் தலைமகன் வந்தவிடத்துத் தோழி செறிப் பறிவுறீஇயது.

அஞ்சியாந்தை.

(பி - ம்.) 2 ' தழூஉவணி ' 4 மனனே ' 5 ' துத்திப்பாந்தட் பைத்தக ' 6 ' துயவுக்கோட் ' ' பசுங்கழைத் '

(ப - ரை.) கடல் உடன் ஆடியும் - கடலிடத்தே ஒருங்கே நீர் விளையாட்டுப் புரிந்தும், கானல் அல்கியும் - கடற்கரைச் சோலையினிடத்தே தங்கியும், தொடலை ஆயமொடு - மாலையை யுடைய மகளிர் கூட்டத்தோடு, தழுவணி அயர்ந்தும் - குரவை

கோத்து ஆடியும், நொதுமலர் போல - அயலாரைப் போல, கதுமென வந்து - விரைவாக வந்து, முயங்கினன் செலின் - தலைவன் தழுவிச் செல்வானாயின், அலர்ந்தன்றுமன் - அலருண்டாயிற்று; அஃது இப்பொழுது கழிந்தது. இப்பொழுது அங்ஙனம் செய்யாமல், தித்தி பரந்த - தேமல் படர்ந்த, பைத்து அகல் - விரிந்து அகன்ற, அல்குல் - அல்குலினது, திருந்து இழை துயல்வு கோடு அசைத்த - திருத்தமுறச் செய்த அணிகலன்கள் அசைதலையுடைய பக்கத்தின்கண் கட்டிய, பசு குழை தழையினும் - பசிய தளிராற் செய்த தழையைக் காட்டினும், உழையின் போகான் - மிக அணிமையிலிருந்து போகானாகி, அக்காரணத்தால், யாய் காத்து ஓம்பல் - தாய் நம்மை இற்செறித்துக் காவல் செய்தலை, தான் தந்தனன் - தானே உண்டாக்கினன்.

(முடிபு) ஆடியும் அல்கியும் அயர்ந்தும் முயங்கினன் செலின், அலர்ந்தன்று மன்; உழையிற் போகான், தான் ஓம்பலைத் தந்தனன்.

(கருத்து) தலைவனை யறிந்த தாய் நின்னை இற்செறிக்கக் கருதினாள்.

(வி - ரை.) இது சிறைப்புறம். பல மகளிரொடு கூடிக் கடலில் நீராடியும், பொழிலில் விளையாடியும், குரவையாடியும் விளையாடும் காலத்தில் அயலானைப் போல வந்தால் அலருண்டாகும்; அவ்வலர் என் ஆருயிர் நிற்றற்கரிய துணையாகும் (குறள், 1141) என்றாள். அலர்ந்தன்று மனனேயென்னும் பாடத்திற்கு மனம் மகிழ்ச்சியால் மலர்ந்ததென்று பொருள் கொள்க. இழை - இங்கே மேகலை. கோடு - பக்கம்.

(மேற்.) மு. பகற்குறிக்கண் சிறைப்புறமாகச் செறிப்பறிவுறீஇயது. (தொல். களவு. 23, ந.)

(ஒப்பு.) 1. கடலாடுதலும் கானலில் விளையாடுதலும் அப்போது தலைவன் வருதலும்: "கடலாடு மகளிர் கான லிழைத்த, சிறுமனைப் புணர்ந்த நட்பே" (குறுந். 326 : 2-3.)

5. தித்தி பரந்த அல்குல்: குறுந். 27 : 5, ஒப்பு.

5-6. அல்குற்கோடு : "கோடேந் தல்குல்" (நற். 282 : 2)

6-7. தழையுடுத்தல்: குறுந். 125 : 3, ஒப்பு. (உ.சே)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் தோழியை வாயில்வேண்டிய பொழுது அவள், "நீ பரத்தையரோடிருந்தமை தோன்ற வந்தாய்; நின் வளத்திற்குக் காரணமான தலைவியை நீத்து உறைந்தாய்" என்று கூறியது.]

உகூடு. உடுத்துந் தொடுத்தும் பூண்டுஞ் சேரீஇயும்
தழையணிப் பொலிந்த வாயமொடு துவன்றி
விழவொடு வருதி நீயே யிஃதோ
ஓரான் வல்சிச் சீரில் வாழ்க்கை
5. பெருநலக் குறுமகள் வந்தென
இனிவிழ வாயிற் றென்னுமிவ் வூரே.

எ - து. வாயில் வேண்டிச் சென்ற கிழவற்குத் தோழி உரைத்தது.

தூங்கலோரி.

(பி - ம்.) 1 'செறீஇயும்' 3 'நின்ருய்நீயே' 4 'ஓராவல்சிச்'

(ப - ரை.) உடுத்தும் - உடையாக உடுத்துக் கொண்டும், தொடுத்தும் - மாலையாகத் தொடுத்தணிந்தும், பூண்டும் - குழை முதலிய அணிகலன்களாக அணிந்தும், செரீஇயும் - கூந்தலின் கண்ணே செருகியும், தழை அணி பொலிந்த ஆயமொடு - தழையலங்காரத்தினுற் பொலிவு பெற்ற பரத்தையர் கூட்டத்தோடு, துவன்றி - நெருங்கி, நீ விழவொடு வருந்தி - நீ நீர்விழாவிற்குரிய அடையாளங்களோடு வாராநின்ருய்; இ ஊர் - இந்த ஊரிலுள்ளார், இஃது ஓர் ஆன் வல்சி சீர் இல் வாழ்க்கை - ஒரு பசுவினுல் வரும் ஊதியத்தைக் கொண்டு உண்ணும் உணவையுடைய செல்வச் சிறப்பில்லாத இவ்வாழ்க்கை, பெரு நலம் குறு மகள் வந்தென - மிக்க அழகையுடைய இளைய தலைவி இவனுக்கு வாழ்க்கைப் பட்டுப் புக்கனளாக, இனி - இப்பொழுது, விழவு ஆயிற்று - விழாவை யுடையதாயிற்று, என்னும் - என்று சொல்வர்.

(முடிபு) துவன்றி நீ வருதி; இவ்வூர், 'ஓரான் வல்சி வாழ்க்கை, குறுமகள் வந்தென விழவாயிற்று' என்னும்.

(கருத்து) நின் செல்வத்துக்குக் காரணமாகிய தலைவியை நீத்துறைந்தமையால் ஊரினர் பழி கூறினர்.

(வி - ரை.) தழையை உடுத்துதலாவது மலரோடு இடையிட்டுத் தொடுத்துத் தழையென்னும் ஆடையாக உடுத்துவது; தொடுப்பதாவது மலரோடு கட்டிப் படலை மாலையாக அணிவது; பூண்பதாவது காதிற்குழையாகப் பூணுதல்; செருகுதல் - தலையிற் செருகுதல்.

"நீ நீர்விழாவை யயர்ந்து வருகின்ருய். தலைவி வருதற்கு முன் இவ்விழாவுக் குரிய வளம் நின்பால் இல்லை. அவள் வந்த

பின்னரே நீ செல்வம் பெற்றுயென்று ஊரினர் கூறினர். இப்படியிருப்பவும் நீ அவளைப் புறக்கணித்தாய் என்று தோழி தலைவனை இடித்துரைத்து வாயில் மறுத்தாள்.

ஓராவையுடைய வீடு வறியதென்ற கருத்து,

"சிறப்புஞ் சீரு மின்றிச் சீறூர்
நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை
ஓரா யாத்த வொருதூண் முன்றில்
ஏதில் வறுமனை" (அகநா. 369 : 22 - 5)

என்பதிலும் அமைந்துள்ளது.

இஃதோ வாழ்க்கையென்றது இவ்வாழ்க்கை யென்னும் பொருட்டாய் நின்றது; 'இஃதோ செல்வன் - இந்தச்செல்வன்' (அகநா. 26 : 19-20, உரை.) வல்சி வாழ்க்கை, சீரில் வாழ்க்கை யென்க.

தலைவியின் சிறப்பை இங்கே கூறியது, "ஏர் பிடித்தவன் என்ன செய்வான்; பானை பிடித்தவள் பாக்கியம்" என்ற பழமொழியை நினைவுறுத்துகின்றது.

(மேற்) மு. கழறித் தலைவனை எல்லையின் கண்ணே நிறுத்துதல் அறிவர்க் குரியது; அங்ஙனம் கழறியது இது (தொல். கற்பு. 14, இளம்.); நல்குரவு சிறப்பித்தல் காரணமாகவந்தது; 'இதனுள் ஓரான்வல்சிச்சீரில் வாழ்க்கையெனத் தலைமகன் செல்வக் குறைபாடு கூறி, பெரு நலக் குறுமகள் வந்தென விழவாயிற்றென்னுமிவ் வூரென்றமையான் நல்குரவு பற்றித் தலைமகளைச் சிறப்பிக்க வந்தது' (தொல். பொருள். 49, இளம்.); உணர்ப்பு வயின் வாராது ஊடிய தலைவி மாட்டு ஊடின தலைவனை அறிவர் கழறியது (தொல். கற்பு. 14, ந.); தோழியும் அறிவரும் பரத்தையிற் பிரிவால் தலைவர்க்கும் தலைவியர்க்கும் தோன்றிய வருத்த மிகுதியைத் தீர்க்கக் கருதி, அவரது இல்வாழ்க்கை நிகழ்ச்சிக் கண்ணே தமக்கு வருத்தந் தோன்றிற்றுகக் கூறியது. இதனுள் முன்னர் நிகழ்த்திய வாழ்க்கை இவள் வந்தாளாகப் புறத்து விளையாடும் விழவுளதாயிற்றென்று இவ்வூர் கூறு நிற்கும் செல்வமு, இவளை நெகிழ்ந்தாற் பழைய தன்மையாமென்று அறிவர் இரங்கிக் கூறியவாறு காண்க' (தொல். பொருள். 32, ந.)

(ஒப்பு) 1-2. தழையணியாயம் : குறுந். 125 : 3, ஒப்பு.
5. குறுமகள் : குறுந். 89 : 7, ஒப்பு. (உகூடு)

தலைவி கூற்று

[பகற்குறிக் கண் இடையீடின்றித் தலைவனோடு அளவளாவும் நிலை பெறுத தலைவி வருந்தி, தலைவன் சிறைப்புறத்தானாக, தோழிக்குக் கூறுவாளாய், "நீ அவரைக் கழறுதலை யொழி" என்று கூறும் வாயிலாகத் தன் நிலையைப் புலப்படுத்தியது.]

உகூ. அம்ம வாழி தோழி புன்னை
அலங்குசினை யிருந்த வஞ்சிறை நாரை
உறுகழிச் சிறுமீன் முனையிற் செறுவிற்
கண்ணுறு நெய்தல் கதிரொடு நயக்கும்
5. தண்ணந் துறைவற் காணின் முன்னின்று
கடிய கழற லோம்புமதி தொடியோள்
இன்ன ளாகத் துறத்தல்
நும்மிற் றகுமோ வென்றனை துணிந்தே.

எ - து. காணும் பொழுதிற் காணப் பொழுது பெரிதாகலான் ஆற்றுளாய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

['இவ்வகை பகற்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும் பொழுதிற் காணப் பொழுது பெரிதாகலான் ஆற்றுளாய்' (இறை. 18, உரை.)]

பெரும்பாக்கன் (பி - ம். பெரும்பாகன்.)

(பி - ம்.) 3 'அறுகழிச்'; 'முனையிற்' 4 'கண்ணுர்' 8 'நும் மிதிற்', நும்மினிற்', நுமிதற்'

(ப - ரை.) தோழி—, அம்ம - ஒன்று கூறுவன் கேட்பாயாக: புன்னை அலங்கு சினை இருந்த அம் சிறை நாரை - புன்னையினது அசைந்த கிளையினிடத்திருந்த அழகிய சிறகையுடைய நாரை, உறுகழி சிறு மீன் முனையின் - மிக்க கழியிடத்துச் சிறுமீன் உணவை வெறுத்த தாயின், செறுவில் - வயலிலுள்ள, கள் நாறு நெய்தல் கதிரொடு நயக்கும் - கள் மணக்கின்ற நெய்தற் பூவை நெற்கதிரோடு விரும்புகின்ற, தண் அம் துறைவன் காணின் - தண்ணிய அழகிய துறைவனைக் கண்டால், முன் நின்று - அவன் முன்னே நின்று, தொடியோள் இன்னள் ஆக - வளையை அணிந்த தலைவி இத்தன்மையை யுடையளாகும்படி, துறத்தல் - பிரிந்து செல்லுதல், நும்மின் தகுமோ - உமக்குத் தகுமோ, என்றனை துணிந்து கடிய கழறல் ஓம்புமதி - என்று துணிந்து கடுமையான சொற்களைக் கூறி இடித்துரைத்தலைப் பாதுகாப்பாயாக.

(முடிபு) தோழி, துறைவற்காணின் முன்னின்று, "துறத்தல் தகுமோ?" என்றனை துணிந்து கழறல் ஓம்புமதி.

(கருத்து) இங்ஙனம் பிரிந்து வருதல் பற்றித் தலைமகனை நீ கழறற்க.

(வி - ரை.) வாழி: அசை நிலை. தொடியோள் இன்னளாக-தொடியை யணிந்த தலைவி அத் தொடியை யிழந்து மெலிந்து வருந்தும் இந்நிலையினளாக.

தோழி கழறுமை வேண்டுதல் தலைவி கருத்தன்று; சிறைப் புறத்தானுகிய தலைவன் தன் துயர்நிலையையறிதல் வேண்டு மென்பதே கருத்து.

(மேற்.) 5. தண்ணந் துறைவனென்றது விரிக்கும் வழி விரித்தது (தொல். எச்ச. 7, இளம், சே.)

(ஒப்பு.) 1. அம்ம வாழி தோழி: குறுந்: 77: 1, ஒப்பு.

1-2. புன்னையில் நாரை இருத்தல்: குறுந். 236: 4-5, ஒப்பு.

4. கண்ணறு நெய்தல்: சிலப். 7: 33.

7. இன்னள்: குறுந். 173: 5, ஒப்பு.

7-8. குறுந். 185: 3. (உகூ)

தோழி கூற்று

[தோழி, "இனித் தலைவனுடன் சென்று அவனை மணந்து வாழ்தலே செயற்குரியது" என்று தலைவிக்குக் கூறியது]

உகூஎ. அவ்விளிம் புரீஇய கொடுஞ்சிலை மறவர்
வைவார் வாளி விறற்பகை பேணார்
மாறுநின் றிறந்த வாறுசெல் வம்பலர்
உவலிடு பதுக்கை யூரிற் றோன்றும்
5. கல்லுயர் நனந்தலை நல்ல கூறிப்
புணர்ந்துடன் போதல் பொருளென
உணர்ந்தேன் மன்றவவ ருணரா வூங்கே.

எ - து. தோழி வரைவு மலிந்தது.

காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணன்.

(பி - ம்) 3 'மாறு நின்றெதிர்ந்த'

(ப - ரை.) அ விளிம்பு உரீஇய கொடு சிலை மறவர் - மேல் விளிம்பை உருவிய கொடிய வில்லையுடைய மறச்சாதியாருடைய, வைவார் வாளி விறல் பகை பேணார் - கூர்மையையுடைய நீண்ட அம்பினது வெற்றியையுடைய பகையினின்றும் தம்மைப் பாதுகாவாராகி, மாறு நின்று இறந்த ஆறு செல் வம்பலர் - எதிரே நின்று இறந்து பட்ட வழிப் போவார் மீது, உவல் இடு பதுக்கை - தழையை இட்டுவைத்த குவியல்கள், ஊரின்

தோன்றும் - ஊரைப் போலத் தோன்றுகின்ற, கல் உயர் நன தலை - மலைகள் ஓங்கியுயர்ந்த அகன்ற இடத்தில், நல்ல கூறி - ஆண்டுப்போய் வரைவேமென்பது முதலிய நல்ல சொற்களைக் கூறி, புணர்ந்து உடன் போதல் - தலைவனோடு சேர்ந்து போதலே, பொருள் என - செய்யத்தக்க காரியமென்று, அவர் உணரா ஊங்கு - தலைவர் உணர்வதற்கு முன்னர், மன்ற - நிச்சயமாக, உணர்ந்தேன் - யான் உணர்ந்தேன்.

(முடிபு) நனந்தலை, கூறிப்போதல் பொருளென அவர் உணராவூங்கே உணர்ந்தேன்.

(கருத்து) தலைவனுடன் சென்று நீ மணத்தலே நன்று.

(வி - ரை.) இது, தலைவனது வரைவிற்குத் தலைவியின் தமர் உடம்படாரென்பது உணர்ந்த தோழி வெளியிட்டது. தலைவனும் இதுவே கூறுவானுதலின் இதனை முன்பே யான் உணர்ந்து நினக்கு அறிவித்தேனென்றாள்.

நல்ல கூறி யென்பது, இனி ஆண்டுச் சென்று வரைவே னென்ற மங்கலச் சொற்களைக் கூறியெனப் பொருள் பட்டு, வரைவு மலிந்ததாயிற்று, கொடுப்போரின்றியும் கரணம் நிகழ்தலுண்டாதலின்.

அவ் விளிம்பு : அகரச்சுட்டு மேல்விளிம்பைக் குறித்தது.

பாலை நிலத்திலுள்ள மறவர் தம் சிலைவிளிம்பை உருவி நாணேற்றி அம்பு தொடுப்பர் ;

> " வீங்குவிளிம் புரீஇய விசையமை நோன்சிலை
> வாங்குதொடை பிழையா வன்க ணுடவர்
> விடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி
> ஆறுசெல் வம்பல ருயிர்செலப் பெயர்ப்பின் ",
>
> " அவ்விளிம் புரீஇய விசையமை நோன்சிலைச்
> செவ்வாய்ப் பகழிச் செயிர்நோக் காடவர்
> கணையிட " (அகநா.175 : 1-4, 371 : 1-3)

வம்பலர் உயிர் கவர்தலின் கொடிய வில்லாயிற்று ; வளைந்த வில்லுமாம். வாளியாகிய பகையென்க. பொருள் - மேற் கொள்ளத்தக்க காரியம்.

(ஒப்பு.) 1-3. மறவர் செயல் : குறுந். 283 : 5-7, ஒப்பு.

3. ஆறு செல்வம்பலர் : குறுந். 331 : 2, 350 : 6.

3-4. வம்பலர் மேல் உவலிடு பதுக்கை : (குறுந். 77 : 3, ஒப்பு.) ; " செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணுடவர், வில்லிட வீழ்ந்தோர் பதுக்கை " (அகநா. 157 : 4-5.)

5. நனந்தலை : குறுந். 272 : 3. (உகூள)

தோழி கூற்று

[தலைவன் மடலேறத் துணிந்ததைத் தோழி தலைவிக்கு உணர்த்தியது.]

உகூஅ. சேரி சேர மெல்ல வந்துவந்
தரிது வாய்விட் டினிய கூறி
வைக றோறு நிறம்பெயர்ந் துறையுமவன்
பைத லேக்க நினையாய் தோழி

5. இன்கடுங் கள்ளி னகுதை பின்றை
வெண்கடைச் சிறுகோ லகவன் மகளிர்
மடப்பிடிப் பரிசின் மானப் [நிலையே.
பிறிதொன்று குறித்ததவ னெடும்புற

எ - து. கிழத்திக்குத் தோழி குறைமருமற் கூறியது.

பரணர்.

(பி - ம்) 4 'மையலேக்க' 5 'இன்கடுங்களிற்றின்'; 'னஃகுதை'; 'னகுதைதந்தை' 7 'யானப்' 8 'குறித்தவ'

(ப - ரை.) தோழி—, சேரி சேர - நம்முடைய தெருவின் கண் அடைய, மெல்ல வந்து வந்து—, அரிது வாய்விட்டு - அருமையின் வாய்திறந்து, இனிய கூறி - நம் சிந்தைக்கு இனியவற்றைக் கூறி, வைகல் தோறும் - நாள் தோறும், நிறம் பெயர்ந்து உறையும் அவன் - தான் நினைத்ததொன்று கைகூடாமையின் ஒளிமாறித் தங்குகின்ற அத்தலைவனது, பைதல் நோக்கம் - துன்பத்தைப் புலப் படுத்தும் பார்வையை, நினையாய் - நினைத்துக் காண்பாயாக; அவன் நெடு புறம் நிலை - அவன் நீண்ட நேரம் இங்ஙனம் என் பின் நிற்றல், இன் கடு கள்ளின் - இனிய கடுமையையுடைய கள்ளையுடைய, அகுதை பின்றை - அகுதைக்குப் பின் நின்ற, வெள் கடை சிறு கோல் அகவல் மகளிர் - வெள்ளிய மூனையையுடைய சிறிய கோலைக் கொண்ட அகவன் மகளிர் பெறும், மடம் பிடி பரிசில் மான - மடப்பம் பொருந்திய பிடியாகிய பரிசிலைப் போல, பிறிது ஒன்று குறித்தது - நம்மைக் கண்டு இனிய கூறுதலே யன்றி வேறு ஒன்றைக் கருதியதாயிற்று.

(முடிபு) தோழி, சேரி சேர வந்து வந்து வாய்விட்டுக் கூறிப்

பெயர்ந்து உறையும் அவன் நோக்கம் நிறையாய்; அவன் நிலை பரிசில் மானப் பிறிதொன்று குறித்தது.

(கருத்து) தலைவன் மடலேற நினைந்தான்.

(வி - ரை.) இனிய கூறுதலாவது, 'நீவிர் வேண்டும் குறை முடித்துத் தருவேன்' என்றல். தலைவன் தன்குறையை வாய் விட்டுக் கூறுது வருந்துதல்,

"கயமல ருண்கண்ணுய் காணு யொருவன்
வயமா னடித்தேர்வான் போலத் தொடை மாண்ட
கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னுளும்" (கலி. 37 : 1-5)

என்பதிலும் காணப்படும்.

நிறையாயென்றது, நினைந்து அவன் குறை தீர்க்கவேண்டு மென்னும் பொருட்டு.

இன் கடுங்கள் - உண்ணற்கினிமையும், மயக்கந் தருதலிற் கடுமையும் உடைய கள். அகவன் மகளிர் : குறுந். 23 - ஆம் செய்யுளைப் பார்க்க வெண் கடை - வெள்ளிய நுனி; என்றது வெள்ளியாற்செய்த பூண் கட்டிய நுனியை.

அகுதை : மதுரையிலிருந்த ஓர் உபகாரி.

தலைமகள் குறை மறுதபடி கூறுவதாதலின், பிறிதென்றது இங்கே மடலேறுதலைக் குறித்தது. புற நிலை - பின்னிற்றல்; வழி பட்டு நிற்றல்;

"என்குறைப் புறநிலை முயலும்
அண்கணுளனை நகுகம் யாமே" (அகநா. 32 : 20-21)

என்பதன் உரையைப் பார்க்க.

(ஒப்பு.) 3 : கம்ப. கடல்காண். 6.

4. பைதல் நோக்கம் : அகநா. 38 : 15.

3-4. குறை வேண்டிய தலைவன் மெலிதல் : குறுந். 74 : 5.

5. இன் கடுங்கள் : குறுந். 330 : 5; நற். 10 : 5; அகநா. 137 : 6; புறநா. 80 : 1.

இன் கடுங்கள்ளின் அகுதை : அகநா. 76 : 3.

6. அகவன் மகளிர் : குறுந். 23 : 1.

அகவன் மகளிர் கோல் உடையராதல் : "நுணங்குகட் சிறுகோல் வணங் கிறை மகளிரொ, டகவுநர்", "நுண்கோ லகவுநர்" (அகநா. 97 : 10-11, 152 : 4, 208 : 3.)

5-7. அகுதை யானை வழங்குதல் : அகநா. 113 : 4; புறநா. 233 : 2-3.

8. நெடும்புற நிலை : அகநா. 58 : 14, 220 : 11.

புறநிலை : நற். 306 : 11. (உகூ)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தே நிற்ப, தலைவி தன் தோள் மெலிவைத் தோழிக்குக் கூறுவாளாய் வரைதல் வேண்டு மென்பதை அவனுக்குப் புலப்படுத்தியது.]

உகக. இதுமற் றெவனே தோழி முதுநீர்ப்
புணரி திரைக்கும் புள்ளிமிழ் கானல்
இணரவிழ் புன்னை யெக்கர் நீழற்
புணர்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்
5. கண்டன மன்னெங் கண்ணே யவன்சொற்
கேட்டன மன்னெஞ் செவியே மற்றவன்
மணப்பின் மாணல மெய்தித்
தணப்பின் ஞெகிழ்பவெந் தடமென் றோளே.

எ - து. சிறைப்புறமாகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது. வெண்மணிப் பூதி.

(பி - ம்.) 1 'இதுவுமற்' 3 'இணர்வீழ்' 5 'மன்னங்' 8 'ஞெகிழ்பவென்றட,' 'ஞெகிழ்பதட'

(ப - ரை.) தோழி—, முதுநீர் புணரி திரைக்கும் - நிலத்திற்குப் பழையதாகிய கடலின் அலை அளவளாவுகின்ற, புள் இமிழ் கானல் - பறவைகள் ஒலிக்கின்ற கடற்கரைச் சோலையிலுள்ள, இணர் அவிழ் புன்னை எக்கர் நீழல் - பூங் கொத்துக்கள் மலர்ந்த புன்னை வளர்ந்த மேட்டிலுள்ள நிழலில், புணர் குறி வாய்த்த ஞான்றை - புணர் குறியைப் பெற்ற காலத்தில், எம் கண் - எம் கண்கள், கொண்கன் கண்டன - தலைவனைப் பார்த்தன; எம் செவி - எம் முடைய காதுகள், அவன் சொல் கேட்டன - அவனுடைய சொற்களைக் கேட்டன; எம் தட மெல் தோள் - எமது பரந்த மெல்லிய தோள்கள், அவன் மணப்பின் - அவன் எம்மை மணந் தால், மாண் நலம் எய்தி - மாட்சிமைப்பட்ட அழகைப் பெற்று, தணப்பின் - அவன் பிரிந்தால், ஞெகிழ்ப - சோர்வன; இது எவன் - இஃது என்ன வியப்பு!

(முடிபு) தோழி, எம் கண் கண்டன; செவி கேட்டன; தோள் மணப்பின் நலம் எய்தித் தணப்பின் ஞெகிழ்ப.

(கருத்து) தலைவன் இடையிட்டு வருவதால் யான் வருந்து வேனுயினேன்.

(வி - ரை.) இது: செய்யுளாதலின் சுட்டு முன் வந்தது. மற்று, ஓ: அசைநிலைகள். நீர்க்குப் பின்னே நிலம் தோற்றுதலின் நீரை மூதுநீரென்றார். கொண்கன் - நெய்தனிலத்தலைவன் (குறுந். 212, வி - ரை.)

'தலைவனைக் கண்ட கண்ணும் கேட்ட செவியும் வாளா விருப்பத் தோள்கள் மட்டும் தம் மெலிவைப் புறத்தாரறியும்படி நெகிழ்ந்தன' என்றார். இடையிட்டு வந்து அளவளாவும் கள வொழுக்கத்தில் தான் தலைவனைப் பிரிந்திருக்குங் காலத்தில் ஆற்றுமை மிகுமென்பதும், இடையீடின்றி அளவளாவும் கற் பொழுக்கத்திற்குரிய வரைவே இனி மேற்கொள்ளுதற்கு உரிய தென்பதும் இதனால் தலைவனுக்குக் குறிப்பிக்கப்பட்டன.

(ஒப்பு.) 1. இதுமற்றெவனே தோழி: குறுந். 181: 1.

3. புன்னை இணர்: குறுந். 303: 6.

4. ஞாண்டை: குறுந். 393: 5.

3-4. புன்னை நீழற் புணர்குறி: (குறுந். 123: 3-4, ஒப்பு); "புன்னையங் கானற் புணர்குறி வாய்த்த" (நற். 227: 3); "மின்னிலைப் பொலிந்த விளங்கிணர ரவிழ்பொற், றண்ணறும் பைந்தா துறைக்கும், புன்னையங் கானற் பகல்வந் தீமே", "பூவேய் புன்னையந் தண்பொழில், வாவே தெய்ய மணந்தனை செலற்கே", "கழிசேர் புன்னை யழிபூங் கானற், றணவா நெஞ்சமொடு தமியன் வந்துநம், மணவா முன்னும்" (அகநா. 80: 11 - 3, 240: 14-5, 290: 9-11); "புன்னையங் கான லிருந்தேமாப் பொய்த் தெம்மைச், சொன்னலங் கூறி நலனுண்ட சேர்ப்பனை" (கைந்நிலை, 54); "கண்டலி யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்த கள்வர்" (திருச்சிற். 177.)

7. மாணலம்: குறுந். 74: 5, ஒப்பு.

தோள் தலைவனை மணப்பின் நலமெய்தல்: ஐங். 120. 8. தலைவனைப் பிரிந்தமையால் தோள் நெகிழ்தல்: குறுந். 87: 5, ஒப்பு; குறிஞ்சிப். 9; நற். 14: 1, 309: 1; ஐங். 230: 3; கலி. 37: 11, 45: 15.

தடமென்றோள்: குறுந். 77: 6, ஒப்பு, 87: 5.

7-8. தோள் மணத்தல்: குறுந். 36: 4, ஒப்பு, 50: 5, ஒப்பு.

தோள் மணப்பின் நலம் பெற்றுத் தணப்பின் நெகிழ்தல்: "தணந்தமை சால வறிவிப்ப போலும், மணந்தநாள் வீங்கிய தோள்" (குறள், 1233.)

5-8. "கண்டன வுண்கண் கலந்தன நன்னெஞ்சம், தண்டப் படுவ தடமென்றோள் - கண்டாய், உலாஅ மறுகி லுறைபூர் வளவற், கெலாஅ முறை கிடந்தவாறு" (முத். 55.) (உகூக)

தலைவன் கூற்று

[இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவன் தலைவியை நோக்கி, "நான் நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன்" என்றலை அது

கேட்ட தலைவி, "பிரிவென்பது ஒன்றும் உண்டாங்கொல்?" என அஞ்சினளோ, "நீ அஞ்சற்க; நான் இவ்வுலகத்தைப் பெறுவேனாயினும் நின்னைப் பிரியேன்" என அவன் வற்புறுத்தியது.]

கூ00. குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்ப லுறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பல் திதி மாஅ யோயே
5. நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற்
கடல்சூழ் மண்டிலம் பெறினும் [சேக்கும்
விடல்சூ ழலனி னின்னுடை நட்பே.

எ - து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், பிரிவச்சமும் வன்புறையும் (பி - ம். வன்பொறையும்) கூறியது.

சிறைக்குடி யாந்தையார்.

(பி - ம்) 4 'நுண்பகுறுத்தி' 8 'சூழலென்', 'சூழிலன்', 'சூழலன்யானின்னுடை'

(ப - ரை.) குவளை நாறும் - குவளை மலரின் மணத்தை வீசுகின்ற, குவை இரு கூந்தல் - தொகுதியாகிய கரிய கூந்தலையும், ஆம்பல் நாறும் - ஆம்பல் மலரின் மணத்தை வீசும், தேம் பொதி துவர் வாய் - தேன் பொதிந்த சிவந்த வாயையும், குண்டு நீர் தாமரை கொங்கின் அன்ன - ஆழமாகிய நீரில் வளர்ந்த தாமரைப் பூந்தாதைப் போன்ற, நுண்பல் திதி - நுண்ணிய பல தேமற் புள்ளியையுமுடைய, மாஅயோயே - மாமை நிறமுடையாய், நீ—, அஞ்சல் என்ற என் சொல் - யான் பிரிவேனென்று கருதி அஞ்சாதே கொளென்ற எனது சொல்லைக் கேட்டு, அஞ்சலை - அஞ்சாதே கொள்; யான்—, நின்னுடை நட்பு - நினது நட்பினை, குறு கால் அன்னம் - குறிய காலையுடைய அன்னப் பறவைகள், குவவு மணல் சேக்கும் - குவிதலையுடைய மணலின் கண்ணே தங்கியிருக்கும், கடல் சூழ் மண்டிலம் பெறினும் - கடல் வளைந்த நிலவட்டத்தைப் பெறினும், விடல் சூழலன் - விடுதலை நினையேன்.

(முடிபு) மாஅயோயே, நீ அஞ்சலை; யான் நின்னுடைய நட்பு விடல் சூழலன்.

(கருத்து) நின்னைப் பிரியேன்.

(வி -ரை.) கூந்தலும், வாயும் இன்பமளித்தன வாதலின் அவற்றை முற்கூறினன். தேமென்றது வாயூறலை நினைந்து. தலைமகள் உறுப்பு நலன் கூறவந்த தலைவன் நீர்ப்பூக்கள் மூன்றை உவமையாகக் கூறினன், மாஅயோய் - மாமையை உடையோய்.

மண்டிலமென்பது வட்டம்; கடல்சூழ் மண்டிலமென்றமையின் நிலவட்டமாயிற்று. அன்னம் மணலிற் சேக்கு மென்றது கடலுக்கு அடை. ஏகாரங்கள், ஆல் : அசைநிலைகள்.

(மேற்) 2. மூக்காலறியப்பட்ட பொதுத்தன்மை வந்தது (தொல். உவம. 3, இளம்.) "ஆம்பலென்றது முதலாகு பெயர் (நன். 289, மயிலை. 290, சங்கர.; இ. வி. 192.) மு. தலைவன் நயப்பும் வன்புறையுங் கூறியது (தொல். களவு. 10, ந.); தலைவன் பிரிவுணர்த்தல் (களவியற். 23.)

(ஒப்பு.) 1. குவளை நாறும் கூந்தல் : குறுந். 270 : 6-8, ஒப்பு.

குவையிருங் கூந்தல் : குறுந். 52 : 3.

2. ஆம்பல் நாறும் வாய் : "ஆம்ப னறுந் தேம்பொதி நறுவிரைத், தாமரைச் செவ்வாய்" (சிலப். 4 : 73-4); "ஆம்பனறைமுதச் செவ்வாய்", "ஆம்பனறு மரக்கார் பவளவா யாரமுதன்னர்" (சீவக. 561, 1656.); காலடி. 396.

3-4. தேமலுக்குப் பூந்தாது : "அம்பூந் தாதுக் கன்ன, நுண்பஃ றித்தி மாஅயோளே" (நற். 157 : 9-10.)

7-8. குறுந். 267 : 1-6, ஒப்பு. (கூ00)

தலைவன் கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில், "நீ ஆற்றும் வன்மை யுடையாயோ?" என வினவிய தோழிக்கு, "தலைவன் வாராவிடினும், அவன் வருவானென்னும் நினைவினால் நான் துயின்றிலேன்" என்று தலைவி கூறியது.]

நoக. முழவுமுத லரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமட லிழைத்த சிறுகோற் குடம்பைக்
கருங்கா லன்றிற் காமர் கடுஞ்சூல்
வயவுப்பெடை யகவும் பானட் கங்குல்

5. மன்றம் போழு மினமணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயிற்றுறந் தனவா ரோழியென் கண்ணே.

எ - து. வரைவிடை வைப்ப, "ஆற்ற கிற்றியோ?" என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது

குன்றியன்.

(பி - ம்.) 2 'சிறுபொற்' 5 'போழுமணியுடை' 8 'துயின்மறந் தனவால்'

(ப - ரை.) தோழி—, முழவு முதல் அரைய - முழவினைப் போன்ற அடி மரத்தையுடைய, தடவு நிலை பெண்ணை - வளர்ந்த நிலையையுடைய பனையினது, கொழுமடல் இழைத்த - கொழுவிய ஓலையின் கண்ணே இயற்றிய, சிறுகோல் குடம்பை - சிறிய சுள்ளி களாலாகிய கூட்டிலுள்ள, கருகால் அன்றில் - கரிய காலையுடைய அன்றிலினது, காமர் கடுஞ்சூல் வயவு பெடை - விருப்பத்தையுடைய முதற்சூலினால் உண்டான நோயையுடைய பெண்பறவை, அகவும் - ஆண் பறவையை அழைக்கின்ற, பானாள் கங்குல் - பாதியிரவில், மன்றம் போழும் - தனது சக்கரத்தால் மன்றத்தைப் பிளந்து கொண்டு வரும், இனம் மணி நெடு தேர் - தொகுதியாகிய மணியை யுடைய தலைவனது நெடிய தேர், வாராதாயினும்—, வருவது போல—, செவி முதல் இசைக்கும் அரவமொடு - காதினிடத்து ஒலிக்கும் ஒலியினால், என் கண் - என்னுடைய கண்கள், துயில் துறந்தன - தூக்கத்தை நீத்தன.

(முடிபு) தோழி, கங்குலில் தேர் வாராதாயினும் வருவது போல இசைக்கும் அரவமொடு கண் துயில் துறந்தன.

(கருத்து) தலைவன் வரவை எதிர்பார்த்துத் துயின்றிலேன்.

(வி - ரை.) இஃது ஆற்றேனென்றும், அதன் காரணம் இன்ன தென்றும் கூறியவாறு.

கங்குலில் தலைவனது தேர் வருவதை முன்னம் அறிந்தவளாத லின் அப்பழக்கத்தாலும் நினைவாலும் தேர்மணியின் ஒலி கேட் பதாகத் தோற்றியது.

(மேற்.) 6-8. எதிர் பெய்து பரிதலென்னும் மெய்ப்பாடு வந்தது; வாரா தென்றுணர்ந்தது இக்காலத்தாகலான் அதற்கு முன் இன்னவாறு பட்ட தன்று என்றமையின் எதிர்பெய்து பரிதலாயிற்று' (தொல். மெய்ப். 22, பேர்; இ. வி. 580.)

மு. இரவுக்குறி பிழைத்த விடத்துத் தலைவி கூறியது (தொல். களவு. 61, ந.)

(ஒப்பு) 1. பலாமரத்தின் அடிக்கு முழவு : "முழாவரைப் போந்தை" (புறநா. 85 : 7, 375 : 4.)

4. பாளை : குறுந். 94 : 3, ஒப்பு.

3-4. கங்குலில் அன்றில் அகவுதல் : (குறுந். 160 : 1-4, ஒப்பு.); "ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றில், ஓங்கிரும் பெண்ணை யகமட லகவ" (குறிஞ்சிப். 219-20); "கடவுண் மரத்த முண்மிடை குடம்பைச், சேவலொடு புணராச் சிறுகரும் பேடை, இன்ன துயங்குங் கங்குலும்" (அகநா. 270 : 12-4.)

கடுஞ்சூல் வயவுப் பெடை : "கடுஞ்சூல் வயவொடு கானலெய்தாது, கழனி யொழிந்த கொடுவாய்ப் பேடைக்கு" (கற். 263 : 5 - 6.)

அன்றிற் பெடை சேவலை யழைத்தல்: "அன்றிற் பேடை யரிக்குர லசைஇச், சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்ப" (மணி. 5 : 127-8.)

5. மன்றம் போற்றல் : குறுந். 346 : 3.

தேர்மணி : குறுந். 275 : 8 ; அகநா. 4 : 12.

4-6. தலைவன் தேர் பாளையில் வருதல் : குறுந். 311 : 3 - 7.

8. தலைவி துஞ்சாமை : குறுந். 6 : 4, ஒப்பு. (கூ0க)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் ஆற்ரு ளெனக் கவன்ற தோழிக்குத் தலைவி ஆற்ரு மையின் காரணத்தைக் கூறியது.]

கூ0உ. உரைத்திசிற் ரேழியது புரைத்தோ வன்ரே
அருந்துய ரழத்தலு மாற்ரு மதன்றலைப்
பெரும்பிறி தாக வுதனினு மஞ்சுதும்
அன்னை வின்னு நன்மலை நாடன்
5. பிரியா நண்பின ரிரு்வரு மென்னும்
அலரதற் கஞ்சினன் கொல்லோ பலருடன்
துஞ்சூர் யாமத் தானுமென்
நெஞ்சத் தல்லது வரவறி யானே.

எ - து. வரைவிடைக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது. மாங்குடி கிழார்.

(பி - ம்) 4 'அன்னை பின்னும்' 5 'நண்பினிருவரும் வன் பினரிருவரும்' 8 'வரவறியோனே'

(ப - ரை.) தோழி—, அரு துயர் உழத்தலும் ஆற்ரும் - தலைவ னுடைய பிரிவால் உண்டாகிய பொறுத்தற்கரிய துயரால் வருந்து

தற்கும் ஆற்றலில்லேம்; அதன் தலை - அதற்கு மேல், பெரும் பிறிது ஆகல் அதனினும் அஞ்சுதும் - இறந்துபடுதலை அதைக் காட்டிலும் அஞ்சுகின்றோம்; அன்னே - அந்தோ! இன்னும்—, நன்மலை நாடன் - நல்ல மலைநாட்டைப் புடைய தலைவன், இருவரும் பிரியா நண்பினர் என்னும் - இருவரும் என்றும் பிரியாத நட்பை யுடையார் என்று பிறர் கூறும், அலரதற்கு அஞ்சினன் கொல் - பழிமொழிக்கு அஞ்சினனே? பலர் உடன் துஞ்சு ஊர்யாமத்தானும் - ஊரிலுள்ளார் பலர் ஒருங்கே துயிலுகின்ற இரவிலும், என் நெஞ்சத்து அல்லது- யான் தன்னையே நினைப்பதனால் என் நெஞ்சின் கண் வருதலை யன்றி, வரவு அறியான் - நேரிலே வருதலை அறியான்; அது புரைத்தோ - அங்ஙனம் இருத்தல் உயர் வுடையதோ? அன்று—; உரைத்திசின் - நீ கூறுவாயாக.

(முடிபு) தோழி, உழத்தலும் ஆற்றும்; பெரும் பிறிதாகல் அதனினும் அஞ்சுதும்; நாடன் அஞ்சினன் கொல்? வரவறியான்; அது புரைத்தோ? அன்று; உரைத்திசின்.

(கருத்து.) தலைவனை நான் நினைந்திருத்தலையன்றி, அவன் வந்தானல்லன்.

(வி - ரை.) 'தலைவனைப் பிரிந்திருக்கும் கொடுமையை ஆற் றும்; ஆற்றுது ஈண்டிருத்தலினும் இறந்து படுதல் நன்றெனினே, அதுவும் அஞ்சுதற் குரியது. ஊரினர் அலர் கூறுதற்கு அஞ்சித் தலைவன் வந்திலனே? அங்ஙனம் கூறப்படும் அலர்தான் என் உயிர் செல்லாமற் காப்பதும் அவனுக்கு உரிமை யாக்குவது மாதலின் அதற்கு அஞ்சுதல் உயர்வன்று' என்று தலைவி கூறினள்.

இறத்தற்கு அஞ்சினள் 'அவன் வாராதொழியான்' என்ற துணிவினால்; "வாரா தொழியா னெனும்வண் மையினால், ஓராயிர கோடியிடர்க் குடையேன்" (கம்ப. உருக்காட்டு. 6.) அலர் தம்மிடையே உள்ள நட்பை உறுதிப் படுத்துவதாக இருப்ப, அதற்கு அஞ்சுதல் முரணுதலின் புரைத்தோ வன்றே யென்றாள்.

(மேற்.) மு. வரைவிடைக் கவன்ற தோழிக்குத் தலைவி கூறியது (தொல். களவு. 21, ந. மேற்.)

(ஒப்பு.) மு. "உரைத்திசிற் ... ... உயிரே" (தொல். களவு. 12, ந. மேற்.)

2. அதன்றலை : குறுந். 366 : 3. 3. பெரும்பிறிது : குறுந். 69 : 1, ஒப்பு.

7. ஊரினர் யாமத்தில் துஞ்சுதல் : குறுந். 28 : 5, 32 : 2, ஒப்பு; கலி. 65 : 3.

துஞ்சூர் யாமம் : ஐங். 13 : 4; அகநா. 198 : 11, 360 : 12.

7-8. தலைவன் தலைவியின் நெஞ்சத்து வருதல் : " தந் நெஞ்சத் தெம்மைக் கடி கொண்டார் நாணூர் கொல், எந்நெஞ்சத் தோவா வரல் " (குறள், 1205.) (கo2)

தோழி கூற்று

[" தலைவி வேறுபாடு மிக்கனள் ; ஆதலின் தாய் இற் செறிக்கக் கருதினள் ; இனி இவளை மணந்து கோடலே தக்கது " என்று தோழி தலைவனுக்கு உரைத்தது.]

கoங். கழிதேர்ந் தசைஇய கருங்கால் வெண்குரு
கடைகரைத் தாழைக் குழீஇப் பெருங்கடல்
உடைதிரை யொலியிற் றுஞ்சுந் துறைவ
தொன்னிலை நெகிழ்ந்த வளைய ளீங்குப்
5. பசந்தனண் மன்னென் றோழி யென்னெடு
மின்னிணர்ப் புன்னையம் புகர்நிழற்
பொன்வரி யுலவ லுட்டிய ஞான்றே.

எ.-து. செறிப்பறிவுறீஇ வரைவு கடாயது.

அம்மூவன். —ஆசிரியமாலை அகம்.

(பி-ம்.) 1 'குறுங்கால்' 4 'ளிங்குப்'

(ப-ரை.) கழி தேர்ந்து - மீனுணவின் பொருட்டுக் கழியின் நீரை ஆராய்ந்து, அசைஇய - உணவுண்டு தங்கிய, கரு கால் வெள் குருகு - கரிய காலையுடைய வெள்ளிய நாரைகள், அடைகரை தாழை - அடை கரையிலுள்ள தாழையினிடத்து, குழீஇ - கூடி, பெரு கடல் உடை திரை ஒலியின் - பெரிய கடலில் கரையை மோதி உடைகின்ற அலையின் ஓசையினால், துஞ்சும் துறைவ - துயில்கின்ற துறையையுடைய தலைவ, என்னெடு —, மின் இணர் புன்னை அம் புகர் நிழல் - மின்னுகின்ற பூங்கொத்துக்களையுடைய புன்னைமரத்தினது அழகிய புள்ளியையுடைய நிழலில், பொன் வரி அலவன் ஆட்டிய ஞான்றே - பொன் போன்ற கோடுகளையுடைய நண்டுகளை அலைத்து விளையாடிய போதே, என் தோழி - என் தோழியாகிய தலைவி, தொல் நிலை நெகிழ்ந்த வளையள் - தம் பழைய செறிந்த நிலையினின்றும் நெகிழ்ந்த வளைகளையுடையளாகி, ஈங்கு மன் பசந்தனள் - இங்கே மிகப் பசந்தாள்.

(முடிபு) துறைவ, என் தோழி அலவன் ஆட்டிய ஞான்றே நெகிழ்ந்த வளையள் ; ஈங்குப் பசந்தனள் மன்.

(கருத்து) இனித் தலைவியை மணத்தலே ஏற்புடையது.

(வி - ரை.) அசை இய - தங்கிய (முருகு. 176, ந.) அலவ னுட்டிய ஞான்றே நெஞ்சம் நந்த வனையளென்றது, அது முதல் இவ ளது வேறுபாடு பெரிதாகி இப்பொழுது புறத்தே யாவரும் அறி யும் பசப்பிற்குக் காரணமாயிற்றென்றபடி. வனைகழலினும், 'சிறியவும் உளவீண்டு விலைஞர் கைவனையே' (குறுந். 117 : 6.) என்பராதலின் மெலிவிற்கேற்ற வனையணிந்து புறத்தாருக்கு வேறுபாடு புலனுகாமற் காத்தல் கூடும்; பசப்போ மாற்றுதற்கு அரிதாயிற்று. அவள் மிகப்பசந்தாளென்றது தாயறிவுற்று இற் செறிப்பாளென்ற குறிப்புணர்த்திய வாறு.

தலைவி தோழியோடு அலவனுட்டி விளையாடுகையில் தலைவன் வந்து அளவளாவிய இயற்கைப்புணர்ச்சியைக் குறிப்பாகக் கூறினுள்.

என்னெஞ்சும் இன்னிணர்ப் புன்னையெனக் கண்ணழித்தலும் ஆம்.

குருகு கழிதேர்ந்து வயிறு நிரம்ப உண்டு பின் தாழை மட லிலே துஞ்சுமென்றது, இது காறும் களவொழுக்கத்தில் நின் உள்ள நிறைவுண்டாம் வண்ணம் அளவளாவினையாதலின் இனி வரைந்து கொண்டு நின் இல்லின்கண் உறைந்து இல்லறம் நடத்து வாயாகவென்ற கருத்தை உணர்த்தியது.

(ஒப்பு.) 1. "மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு" (யா. வி. 39, மேற்.)

கருங்கால் வெண்குருகு : குறுந். 325 : 5; நற். 54 : 4, 67 : 3.

6. இணர்ப்புன்னை : குறுந். 299 : 3.

7. அலவன் ஆட்டல் : குறுந். 316 : 5-6; பட். 101; நற். 363 : 10; ஐங். 197 : 1.

5-7. தலைவனும் தலைவியும் புன்னைநிழலில் அளவளாவுதல் : குறுந். 123 : 3-4, ஒப்பு. 299 : 3-4. ஒப்பு. (கூடு)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் ஆற்ரு ளெனக் கருதிக் கவன்ற தோழியை நோக்கித் தலைவி, "அன்று இனிதாயிருந்த நட்பைத் தலைவனோடு செய்தேம்; இப்போது அந்நட்பு நமக்கே பகையாய் முடிந்தது" என்று கூறியது]

கூசு. கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்

தாங்கரு நீர்ச்சுரத் தெறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீ னெறிய
நெடுங்கரை யிருந்த குறுங்கா லன்னத்து
வெண்டோ டிரியும் வீததை கானற்
கைதையந் தண்புனற் சேர்ப்பனெடு
செய்தனெ மன்றவோர் பகைதரு நட்பே.

எ - து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கணக்காயன் தத்தன்.

(பி - ம்.) 1 'தொல்வினைப்' 2 'முனிவெதிர்' 3 'தாங்கருவாய் நீர்'

(ப - ரை.) தோழி, கொல் வினை பொலிந்த - கொல்லுந் தொழிலிற் பொலிவு பெற்ற, கூர்வாய் - கூரிய முகத்தையுடைய, எறி உளி - எறிகின்ற உளியை, முகம் பட மடுத்த - தன்னுடைய முகத்தின்கண் அமையும்படி பொருத்தப் பெற்ற, முளி வெதிர் நோன் காழ் - உலர்ந்த மூங்கிலின் வலிய காம்பை, தாங்கு அரு நீர் சுரத்து எறிந்து - தாங்குதற்கரிய நீரையுடைய வழியின்கண் எறிந்து, வாங்கு - கைக்கொள்ளும், விசை கொடு திமில் பரதவர் - வேகத்தையுடைய வளைந்த மீன் படகையுடைய பரதவர், கோடு மீன் எறிய - கொம்பையுடைய சுறு மீனை எறிய, நெடு கரை இருந்த - நெடிய கரையினிடத்தே இருந்த, குறு கால் அன்னத்து வெள் தோடு - குறிய காலகளையுடைய அன்னப்பறவைகளின் வெள்ளிய தொகுதி, இரியும் - கெட்டு ஓடும், வீ தகை கானல் - மலர்கள் நெருங்கிய சோலையையும், கைதை - தாழையையும், அம் தண் புனல் - அழகிய தண்ணிய நீரையுமுடைய, சேர்ப்பனெடு - கடற்கரையையுடைய தலைவனோடு, மன்ற - நிச்சயமாக, ஓர் பகை தரு நட்பு செய்தனெம் - பகையைத் தருகின்றதொரு நட்பைச் செய்தேம்.

(முடிபு) சேர்ப்பனெடு ஓர் பகைதரு நட்புச்செய்தனெம்.

(கருத்து) தலைவனுடைய பிரிவினல் நான் மிக்க வருத்தத்தை அடைந்தேன்.

(வி - ரை.) கொல்லும் தொழிலினிடத்தே பொலிந்ததற்குக் காரணம் கூர்மை யென்பாள், பொலிந்த கூர்வா யெறியுளியென வைத்தாள். கொல்வினை - கொற்றொழில் எனலுமாம். எறி உளி - படகிலிருந்தபடியே எறிந்து கொல்லும் ஒருவகை ஆயுதம்;

இதன் காம்பிற் கயிறு கட்டப்பட்டிருத்தலின் வாங்குதற்கு எளி தாயிற்று. தாம் கருநீர்ச் சுரத் தெனப் பிரித்துத் தாமென்பதை அசையாக்குதலும் ஒன்று.

நீர்ச்சுரம் - நீரிலுள்ள வழி; என்றது படகு செலுத்தும் வழியை;

"திமின்மேற் கொண்டு திரைச்சுர நீந்கி
வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி" (நற். 111 : 6-7.)

கோட்டுமீன் - சுறு மீன்; "கோட்டுமீன் கெண்டி" (அகநா. 10 : 11) என்பதன் உரையைப் பார்க்க. பறவைத் தொகுதியைத் தோடென்று வழங்குதலில, இந்நூல் 34 - ஆம் செய்யுளுரையால் உணரலாகும்.

பகைதரு நட்பென்றுள், அந்நட்பு, பிரிவின்கண் 'நற் கவின் பெறலியவும் நறுந்தோ ணெகிழவும் புட்பிற ரறியவும் புலம்புவந் தலைப்பவும் உட்கரந் துறையு முய்யா வரும்படர்' (குறிஞ்சிப் 9-11) உண்டாதற்குக் காரணமாதலின். இதுகாறும் எனக்கு நல்லராயவர் பகையும் நல்லனவாகியவற்றின் பகையும் தரும் நட்பென்றலும் இயையும்.

(ஒப்பு.) 3. நீர்ச்சுரம் : "திரைச்சுரம்" (அகநா. 240 : 5.)

4. தீமிர் பரதவர் : குறுந். 123 : 5; பட். 112; நற். 111 : 6 - 7, 372 : 11-2. கோட்டு மீன் : பட். 86; நற். 49 : 5; அகநா. 170 : 11; புறநா. 399 : 5; சீவக. 2325.

1-4. மீன் வேட்டை : குறுந். 123: 5, ஒப்பு; நற். 111 : 6-7. பரதவர் எறியுளியாற் சுறுமீனை எறிதல் : "கயிறுகடை யாத்த கடுநடை யெறியுளித், திண்டிமிற் பரதவ ரொண்சுடர்க் கொளீஇ, நடுநாள் வேட்டம் போகி" (நற். 388 : 3 5); "பரதவர், எறியுளி பொருத வேமுறு பெருமீன்" (அகநா. 210 : 1-2.)

8. பகைதரும் நட்பு : குறுந். 257 : 6, 394 : 7.

7-8. சேர்ப்பனெடு செய்த நட்பு : குறுந். 247 : 6. 7, ஒப்பு. (கூ0ச)

தலைவி கூற்று

[இற்செறிக்கப்பட்டுக் காப்புமிகுதியால் வருந்திய தலைவி, "என் காமநோய் நீங்குதற்கு உரியன செய்யுந் துணையைப் பெற்றிலேன்" என்று தானே கூறுமுகத்தால் அறத்தொடு நிற்றல் வேண்டுமென்பதைத் தோழிக்குப் புலப்படுத்தியது.]

கூ0டு. கண்டுர வந்த காம வெள்ளெரி
என்புற நலியினு மவரொடு பேணிச்

சென்றுநா முயங்கற் கருங்காட் சியமே;
வந்தஞர் கடிதலை யவராற் றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்திடை கழையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
கழைவோ ரிலையா னுற்ற நோயே.

எ - து. காப்பு மிகுதிக்கண், தோழி அறத்தோடு நிற்பாளாக, தனது ஆற்றுமை தோன்றத் தலைமகள் தன்னுள்ளே கூறியது.

[நிற்பாளாக - நிற்கும் பொருட்டு.]

குப்பைக் கோழியார்.

(பி - ம்) 1 'வெள்ளெரி' 8 'இல்லையா'

(ப - ரை.) கண் தர வந்த காமம் ஒள் எரி - தலைவரைக் கண்ட கண்கள் தந்ததனால் உண்டாகிய காமமாகிய ஒள்ளிய தீ, என்பு உற நலியினும் - என்பைப் பொருந்தும்படி வருத்தினும், அவரொடு பேணி சென்று - அவர்பால் விரும்பிப்போய், முயங்கற்கு - அள வளாவுதற்கு, நாம்—, அரு காட்சியம் - முன்பு நம்மை அவர் கண்ட இடத்திற் காணுதல் அரியேமாயினேம்; அவர்—, வந்து அஞர் கடிதலை ஆற்றலர் - நாமிருக்கும் இடத்திற்கு வந்து துன்பத்தை நீக்குதல் செய்தாரல்லர்; இந்த நிலையில், யான் உற்ற நோய் - யான் அடைந்த இக்காமநோய், உய்த்தனர் விடாஅர் - பிறர் செலுத்தி விடார், பிரித்து இடை கழையார் - இடையிலே சென்று பிரியச் செய்து நீக்காராக, குப்பை கோழி தனி போர் போல - குப்பைக் கோழிகளின் தனிமையையுடைய சண்டையைப் போல, விளிவாங்கு விளியின் அல்லது - தானே அழியும் வழி அழிந்தாலன்றி, கழைவோர் இல்லை - இதனை நீக்குவார் இல்லை.

(முடிபு) காம ஒள்ளெரி நலியினும் சென்று முயங்கற்கு அருங்காட்சியம்; அவர் வந்து கடிதலை ஆற்றலர்; யான் உற்ற நோய் போர் போல விளிவாங்கு விளியினல்லது, கழைவோர் இல்லை.

(கருத்து) என் துன்பத்தை நீக்கும் துணையாவாரைப் பெற் றிலேன்.

(வி - ரை.) தலைவனைக் கண்டபோதே பால் வயப்பட்ட நெஞ்சம் அவன்பாற் காமத்தை யுடையதாயிற்றுதலின், கண்தர வந்த காமவொள்ளெரி யென்றாள். என்புற நலிதல் புறத்தே தோற்றுமல் அகத்தே வருத்தும் துன்பமிகுதியைக் குறித்தது.

பகற்குறிக் கண்ணே தலைவன் எளிதிற் காணும் நிலை நீங்கிக் காப்பிற்பட்டவளாதலின் அருங்காட்சிய மென்றாள்; அருங் காட்சியமென்றது, "அருங்கேடன்" (குறள், 210) என்றாற் போல நின்றது; காட்சி யரியமென்னும் பொருட்டு.

போரின் பொருட்டு வளர்க்கப்பட்டு அப்போரில் ஊக்க மூடையாரால் உய்க்கப்படும் சேரிக் கோழியின் போர் பெருந் திரளான மக்கட்கிடையே நிகழும்; குப்பைக் கோழிப்போர் உய்ப் பாரும் களவாரும் காண்பாரும் இலதாயிற்று.

யான் உற்ற நோயைக் களவாரில்லை யென்றது அங்ஙனம் களவாரொருவரை வேண்டி நிற்றலைப் புலப்படுத்தியது; இதனால் அறத்தொடு நிற்றல் வேண்டுமென்பதைத் தோழிக்குத் தலைவி குறிப்பித்தாள்.

(ஒப்பு.) 1. **கண் தரவந்த காமம்**: "கண்டாங் கலுழ்வ தெவன் கொலோ தண்டாநோய், தாங்காட்ட யாங்கண்ட தை", "தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப், பைத லுழப்ப தெவன்", "கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு, மிதுநகத் தக்க துடைத்து", பெயலாற்ரு நீருலந்த வுண்க ணுயலாற்ரு, உய்விலே யென்க ணிறுத்து", "படலாற்ரு பைத லுழக்குங் கடலாற்றுக், காமநோய் செய்தவென் கண்", "ஓஒ வினிதே யெமக்கிந் நோய் செய்தகண், தாஅ மிதற்பட்டது", "உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து, வேண்டி யவர்க்கண்ட கண்" (குறள், 1171-7); "கருநெடுங் கண்டருங் காம நோயே" (நன். 403, சங்கர. மேற்.)

காம எரி: "நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி, ஒளிப்பினுங் காமஞ் சுடும்" (நாலடி. 90); "காமநோய் போல, விடிற்சுட லாற்றுமோ தீ" (குறள், 1159.); "காமக் கனலெரி" (பெருங். 1. 33 : 203); "மொழிந்த காமக் கொடுங்கனன் மூண்டதால்" (கம்ப. சூர்ப்பநகைப். 72.)

6. **குப்பைக் கோழி**: "குப்பை கிளைப்போவாக் கோழி" (நாலடி. 341); "குப்பை கிளைப்பருக் கோழி போல்வர்" (பெருங். 3. 14 : 112.) (கஅடு)

தலைவி கூற்று

[காப்பு மிகுதியால் வருந்திய தலைவி, வரையாது வந்தொழுகும் தலைவனிடத்துச் சிறிது வேறுபாடுடையளாகியும் அவ்வேறுபாடு அவனைக் கண்டக்கால் மறைவதைத் தன் நெஞ்சை நோக்கிக் கூறுவாளாய்க் கூறியது.]

கூஅசு. "மெல்லிய வினிய மேவரு தகுந"
இவைமொழி யாமெனச் சொல்லினு மவைநீ
மறத்தியோ வாழியென் னெஞ்சே பலவுடன்
காமர் மாஅத்துத் தாதமர் பூவின்

5. வண்டுவீழ் பயருங் கானற்
றண்கடற் சேர்ப்பனைக் கண்ட பின்னே.

எ - து. காப்பு மிகுதியால் நெஞ்சுமிக்கது வாய் சோர்ந்து கிழத்தி உரைத்தது.

[நெஞ்சு மிக்கது வாய் சோர்ந்து - நெஞ்சில் மிகுதியாக உள்ளது தன் முயற்சி யின்றியே வெளிப்பட்டு (இறை. 18, உரை.]

அம்மூவன்.

(பி - ம்) 4 'மாஅத்தாதமர்' 5 'வண்டுவீழ்வ பயருங்' 6. "றெண்கடற்'

(ப - ரை.) என் நெஞ்சே—, மெல்லிய இனிய - ஓசையால் மெல்லியனவும் பொருளால் இனியனவும், மேவரு தகுந - விரும்பத் தக்கனவுமாகிய, இவை- இச்சொற்களை, மொழியாம் - மொழியேம், என சொல்லினும் - என்று நினக்கு நான் சொன்னாலும், காமர் மாஅத்து - அழகிய மாமரத்தினது, தாது அமர் பூவின் - தாதுகள் பொருந்திய மலரினிடத்து, வண்டு பல உடன் - வண்டுகள் பல ஒருங்கே, வீழ்பு அயரும் - விழ்தலைச் செய்யும், கானல் - சோலையை யுடைய, தண்கடல் சேர்ப்பனை - தண்ணிய கடற்கரையையுடைய தலைவனை, கண்டபின்—, நீ அவை மறத்தியோ - நீ நான் கூறிய அவற்றை மறந்து விடுகின்றாயோ?

(முடிபு) நெஞ்சே, மொழியாமெனச் சொல்லினும் சேர்ப்பனைக் கண்டபின், நீ அவை மறத்தியோ?

(கருத்து) தலைவனைக் காணின் எல்லாத் துன்பங்களையும் மறந்து விடுகின்றேன்.

(வி - ரை.) கானல் - கடற்கரைச் சோலை. தலைவன் வரையாது வந்தொழுகுதலை விரும்பாத தலைவி, 'அவன் வரின் இன்மொழி கூறேன்' என எண்ணியிருந்தும், அவன் வந்த காலத்து நெஞ்சின் கண் உள்ள ஆதரவினால் மீட்டும் இன்மொழி கூறி அளவளா வினாள். அவனைக் கண்டவுடன் தான் கொண்டிருந்த உறுதி தளர்ந்து போதலை இதிற் கூறினாள்;

"புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு" (குறள், 1259.)

வாழி: அசைநிலை

(ஒப்பு.) 1-2. "மெல்லிய வினிய மேவரக் கிளந்து" (குறிஞ்சிப். 138.)

3. வாழி யென் னெஞ்சே: குறுந். 11: 4.

4-5. கடற்கரைச் சோலையில் மாமரம் இருத்தல்: "கொக்கார் கொடுங்கழிக் கூடுநீர்த் தண்சேர்ப்பன்" (கைந்நிலை, 55.) 'மாஞ்சோலை நிறைந்த வளைந்த

கழியினையுடைய பொருந்திய நீர்த்தண் சேர்ப்பன்' என்பது இதன் பழைய வுரை. (கஅசு)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவின்கண், "நீ ஆற்றுயாதல் நன்றன்று" என்று இடித்துரைத்த தோழியை நோக்கித் தலைவி கூறியது.]

கஅஅ. வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வாய் வானத் ததையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே யன்னே
மறந்தனர் கொல்லோ தாமே களிறுதன்
5. உயங்குநடை மடப்பிடி வருத்த நோனாது
நிலையுயர் யாஅந் தொலையக் குத்தி
வெண்ணார் கொண்டு கைசுவைத் தண்ணந்
திறுங்க னெஞ்சமொடு முழங்கும்
அத்த நீளிடை யழப்பிரிந் தோரே.

எ - து. பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லிய தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

[கடுஞ்சொல் - நீ ஆற்றுயாதல் நன்றென்று வற்புறுத்திக் கடிந்து கூறிய சொல்.]

கடம்பனூர்ச் சாண்டிலியன் (பி-ம். சாண்டலியன்.)

(பி-ம்) 3 'யங்நோய்' 6 'யாஅத்துலையக்'

(ப - ரை.) தோழி, பிறை—, வளை உடைத்தனையது ஆகி - வளையையுடைத்தாற் போன்றதாகி, பலர் தொழ - கன்னி மகளிர் பலரும் தொழும்படி, செ வாய் வானத்து - செவ்விய இடத்தை யுடைய ஆகாயத்தின் கண், ஐ என தோன்றி - விரைவாகத் தோன்றி, இன்னம் பிறந்தன்று - இன்னும் பிறந்தது; களிறு - ஆண்யானை; தன் உயங்கு நடை மடம் பிடி வருத்தம் - வருந்திய நடையையுடைய தனது மடப்பத்தையுடைய பிடியினது வருத்தத்தை, நோனாது - பொறுமல், நிலை உயர் - உயர்ந்த நிலையை யுடைய, யாஅம் தொலைய குத்தி - யாமரம் அழியும்படி கொம் பாற் குத்தி, வெள் நார் கொண்டு - பசையற்ற வெள்ளிய பட்டையைக் கைக்கொண்டு, கை சுவைத்து - வறுங்கையைச் சுவைத்து, அண்ணாந்து - மேல் நோககி, அழுங்கல் நெஞ்சமொடு -

தன் பிடியின் வருத்தத்தைப் போக்க இயலாமையை நினைந்து வருந்துதலையுடைய நெஞ்சோடு, முழங்கும் - பிளிறுகின்ற, அத்தம் நீள் இடை - அரிய வழியையுடைய நீண்ட இடத்து, அழ பிரிந்தோர் - நாம் அழும்படி நம்மைப் பிரிந்து சென்ற தலைவர், அன்னே - அந்தோ, மறந்தனர் கொல் - நம்மை மறந்தனரோ?

(முடிபு) பிறை இன்னம் பிறந்தன்று; அழப் பிரிந்தோர் மறந்தனர் கொல்?

(கருத்து) தலைவர் என்னை மறந்தனர் போலும்.

(வி - ரை) பலர் தொழ - கன்னிமகளிரும் பிறருமாகிய பலர் தொழவெனலும் பொருந்தும். செவ்வாய் வானம் - செவ்வானம். ஐயென - விரைய (சீவக. 448, ந.) இன்னம் பிறை பிறந்ததென்றது, 'தலைவன் என்னைப் பிரிந்திருக்குங் காலத்திலும் எனக்குத் துன்பத்தைத் தரும் பொருட்டுப் பிறந்தது' என்னும் நினைவிற்று. வெண்ணெரென்பது உலர்ந்த பட்டையை; ஆதலின் கை சுவைத்தது.

பெண் யானையின் வருத்தத்தை நீக்க முயலும் ஆண் யானையைத் தாம் செல்லும் வழியிலே கண்டும், எனது வருத்தத்தை நீக்க முயன்றிலரென்பது தலைவியின் கருத்து. தாம்: அசைநிலை.

(ஒப்பு.) 1. உடைந்த வளைக்குப் பிறை: "புலவியி லுடைந்த சங்கம் புரி சடைத் திங்கட் கீற்றின், மலைவற விணைக்கு மேல்வை" (கூர்ம. கடவுள். 2); "ஊடலி னுடைந்த சங்க மொளிர்சடைப் பிறைவெண் கீற்றின், மாடுறப் பொருத்தும் போழ்து" (திருச்செந்தூர்த் தலபுராணம், கடவுள். 2); குமரகுருபர. 528.

2. ஐயென: அகநா. 305 : 2; சீவக. 907, 983, 1040, 1205, 2225.

1-3. பிறையைப் பலர் தொழுதல்: (குறுந். 178 : 5, ஒப்பு); "தொன்று தொழு பிறையின்" (மதுரைக். 193.)

7. வெண்ணெர்: அகநா. 83 : 6.

4-7. யானை யாமரத்தின் பட்டையை உரித்துப் பிடிக்குத் தருதல்: குறுந். 37 : 2 - 4, ஒப்பு.

யானை யாமரப் பட்டையைச் சுவைத்தல்: "கவைமுறி யாஅத்து, நாரரை மருங்கி னீர்வரப் பொளித்துக், களிறுசுவைத் திட்ட கோதுடைத் ததரல்" (அகநா. 257 : 14-7.)

9. தலைவனது பிரிவால் தலைவி அழுதல்: (குறுந். 82 : 2, ஒப்பு); "நாமழத் துறந்தன ராயினும்" (அகநா. 205 : 7.) (கூ0ள)

தோழி கூற்று

[வரைவிடை வேறுபட்ட தலைவியை நோக்கி, "நின் பொருட்டன்றே தலைவன் பிரிந்தான்" என்று தோழி கூறியது.]

சோலை வாழைச் சுரிநுகும் பிணைய
அணங்குடை யருந்தலை நீவலின் மதனழிந்து
மயங்குதுய ருற்ற மையல் வேழம்
உயங்குயிர் மடப்பிடி யுலைபுறந் தைவர
ஆமிழி சிலம்பி னரிதுகண் படுக்கும்
மாமலை நாடன் கேண்மை
காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே.

எ - து. வரைவிடைக் கிழத்தியை வன்சொற் சொல்லி வற் புறுத்தியது.

பெருந்தோட் குறுஞ்சாத்தன்.

(பி-ம்.) 1 'சுரித்துகும்பிணிய' 2 'யிருந்தலை'

(ப - ரை.) சோலை வாழை சுரிநுகும்பு - சோலையின் கண் உள்ள வாழையினது சுருண்ட குருத்து, இணைய - தான் வருந்தும் படி, அணங்கு உடை அரு தலை நீவலின் - தெய்வத்தையுடைய பிறர் இருத்தற்கரிய மத்தகத்தைத் தடவுதலினால், மதன் அழிந்து-வலி கெட்டு, மயங்கு துயர் உற்ற மையல் வேழம் - கலங்கிய துயரத்தை அடைந்த மயக்கத்தையுடைய களிறு, உயங்கு உயிர் மடம் பிடி - வருந்திய மூச்சையுடைய மடப்பத்தையுடைய பிடி, உலை புறம் தைவர - வருந்தும் தன் முதுகைத் தடவ, ஆம் இழி சிலம்பின் - நீர் இறங்கியோடும் மலைப்பக்கத்தில், அரிது கண்படுக்கும் - அரிதிற்றுயில்கின்ற, மாமலை நாடன் கேண்மை - பெரிய மலைநாட்டையுடைய தலைவனது நட்பு, காமம் தருவது ஓர்கை தாழ்ந்தன்று - மெய்யுறு புணர்ச்சியைத் தருகின்றதொரு செயலிலே தங்கியது.

(முடிபு) நாடன் கேண்மை காமந்தருவதோர் கை தாழ்ந் தன்று.

(கருத்து) தலைவன் தினக்கு நன்மை உண்டாதற் பொருட் டன்றே பிரிந்தான்.

(வி - ரை.) வாழைத் தோட்டத்தைச் சோலையென்றலும் மரபு; நுகும்பென்றது குருத்தை; 'நுகும்பென்பது பனை, வாழை, மரல், புல் என்பவற்றிற் குரித்து' (நன் 387, மயிலை.) வாழையினால் யானையின்வலி கெடுமென்பது, 'ஆனைக்கு வாழைத்தண்டு, ஆளுக்குத் தீரைத்தண்டு' என்னும் பழமொழி யாலும் பெறப்படும்.

வாழையால் மதனழிந்த வேழம் மயங்கிப் பின் கண்படுக்கு மென்றது, நாம் வரைவு கடாவினமையின் மயங்கிய தலைவன் வரைந்து கொண்டு இடையீடில்லாத இன்பத்தைப் பெறுவா னென்ற குறிப்பினது.

காமம்: இங்கே மெய்யுறு புணர்ச்சி. "அவன் வரையா தொழுகுங் காலும் ஆற்றினையல்லை; நின்னை வரைந்து கொள்ளும் முயற்சியினைகவும் ஆற்றுயாயினை" என்று தோழி வன்சொற் கூறினள்.

(ஒப்பு.) 1. சோலை வாழை: மலைபடு. 131; நற். 232: 3.

1-2. வாழையிலை யானையை நீவுதல்: "சிலம்பிற் போகிய செம்முக வாழை, அலங்க லந்தோ டசைவளி யுறுதொறும், பள்ளி யானைப் பரூஉப் புறந் தைவரும், நல்வரை நாடன்" (அகநா. 302: 1-4.)

1-4. வாழையினுல் யானை வலியழிதலும் பிடி அதனை ஆற்றுதலும்: "வாழை யோங்கிய தாழ்கண் ணைசும்பிற், படுகடுங் களிற்றின் வருத்தஞ் சொலியப், பிடிபடி முறுக்கிய பெருமரப் பூசல்" (அகநா. 8: 9-11.)

6. தலைவன் கேண்மை: குறுந். 61: 5, ஒப்பு. (கோ அ)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனை நோக்கி, "நீ எம்மை அகன்று எமக்கு இன்னுதன செய்யினும் யாம் நினக்கு அன் புடையேமாகி ஒழுகுவேம்" என்று தோழி கூறி வாயில் நேர்ந்தது.]

கோக. கைவினை மாக்கடஞ் செய்வினை முடிமார்
சுரும்புண மலர்ந்த வாசங் கீழ்ப்பட
நீடின வரம்பின் வாடிய விடினும் [னது
கொடியரோ நிலம்பெயர்ந் துறைவே மென்
5. பெயர்த்துங் கடிந்த செறுவிற் பூக்கும்
நின்னூர் நெய்த லனையேம் பெரும
நீயெமக், கின்ன தனபல செய்யினும்
நின்னின் றமைதல் வல்லா மாறே.

எ - து. பரத்தையிற் பிரிந்துவந்த கிழவற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

உறையூர்ச் சல்லியன் குமாரன்.

(பி-ம்.) 2 'வாசங்கீழ்ப்ப' 3 'நடனவரம்பின் வாடிவிடினும்'; 'வாடவிடினும்' 7 'கின்னுகியபல' 8 'வல்லாமாற்றே'

(ப - ரை.) பெரும - தலைவ, நீ எமக்கு - இன்னுதன பல செய்யினும் - இன்னுதனவாகிய பல செயல்களைச் செய்தாலும், நின் இன்று அமைதல் வல்லாமாறு - நின்னை இன்றிப் பொருந்துதற்கு வன்மையில்லாமையின், யாம், கைவினை மாக்கள் - தொழில் புரியும் உழவர், தம் செய்வினை முடிமார் - தமது செய் தொழிலை முடிப்பாராகி, சுரும்பு உண மலர்ந்த வாசம் கீழ்பட - வண்டு உண்ணும்படி மலர்ந்த மலரின் மணம் கீழே படும்படி, நீடின வரம்பின் வாடிய விடினும் - நீண்ட வரப்பிலே வாடும்படி விட்டாலும், கொடியர் நிலம் பெயர்ந்து உறைவேம் என்னுது - இவர் கொடியர் இந் நிலத்தை நீங்கித் தங்குவே மென்றெண்ணுமல், பெயர்த்தும் கடிந்த செறுவில் - மீட்டும் தம்மை நீக்கிய வயலினிடத்தே, பூக்கும் - மலர்கின்ற, நின் ஊர் நெய்தல் அனையேம் - நின் ஊரின் கண் உள்ள நெய்தலைப் போன்ற தன்மையையுடையே மாயினேம்.

(முடிபு) பெரும, நீ எமக்கு இன்னுதன செய்யினும், வல்லாமாறு நெய்தல் அனையேம்.

(கருத்து) நின்னையின்றி அமைந்திருத்தல் எமக்கு இயலாமையின் நீ இன்னுதன செய்யினும் நின்னை ஏற்றுக் கொள்வேம்.

(வி - ரை.) கைவினை மாக்க ளென்றது இங்கே உழவர்களை. செய்வினை - உழவு. அது முடித்தற்குக் களைபறித்தனர். நெய்தற் கிழங்கு செறுவில் இருத்தலின் அது மீட்டும் பூத்தது.

நெய்தல் தனக்கு இன்னுசெய்த உழவரது செறுவில் மீட்டும் பூத்ததைப்போல எமக்கு இன்னுசெய்த நின்பால் மீட்டும் அன்புடையே மாயினே மென்று உவமையைவிரித்துக் கொள்க.

கொடியரோ: ஓ, அசைநிலை; இரங்கற்குறிப்புமாம். இன்னுதன பல வென்றது, பரத்தையரோடு சென்று நீராடியது முதலிய செயல்களை.

வல்லாமாறு - வன்மையில்லாத காரணத்தினால்; மாறு: ஏதுப் பொருள் தருவதோர் இடைச் சொல். (புறநா. 4 : 17, உரை.)

(ஒப்பு.) 1-3. களை பறிப்போர் அக்களையை வரம்பின்மேல் எறிதல்: "குறுகரிட்ட குவளையம் போதொடு - களைபறிப்பார் வரம்பிலிட்ட குவளைப் பூவுடனே" (சிலப். 10 : 86, அடியார்.); "கடுங்கை வயலுழவர் காலைத் தடிய, மடங்கி யரியுண்ட நீலம் - தடஞ்சேரா, நீளரிமேற் கண்படுக்கும்" (தண்டி. 24. மேற்.); "கடைசியர் களைதரு நீலம், செய்வரம் பரும்பு" (திருவிசைப்பா, கருவூர்த் தேவர், கோயில், 2); "கெட்ட சிறுமருங்கிற் கீழ்மகளிர் நீள்வரம்பி, லிட்ட பசுங்குவளை" (நள.) கம்ப. நாடு. 10, அகலிகை. 65.)

5-6. நெய்தல் செறிவிற்பூத்தல் : "நீர்ச்செறுவி னீணெய்தற், பூ" (பட். 11-2.) ; "வண்டு மூசு நெய்த னெல்லிடை மலரும், அரியலங் கழனி" (நற். 190 : 5-6.)

நெய்தற் கனை : "நெல்லெரி தொழுவர் கூர்வா ளுற்றெனப், பல்லிதழ் தயங்கிய கூம்பா நெய்தல்" (நற். 195 : 6-7) ; "தண்ணறு நெய்தற் றனை யவிழ் வான்பூ, வெண்ணெ லரிநர் மாற்றின ரறுக்கும்" (ஐங்.190 : 1-2.)

7. தலைவன் இன்றென செய்தல் : குறுந். 288 : 3-4, 397 : 6.

8. தலைவனது இன்றியமையாமை : "நீரின் றமையா வுலகம் போலத், தம்மின் றமையா நந்நயந் தருளி", "தம்மல தில்லா நந்நயந் தருளி" (நற். 1 : 6-7, 189 : 1) ; "நின்னல திலா விவள்" (ஐங். 179 : 4); "நின்னின் றிமைப்புவரை வாழாண் மடவோள்" (கலி. 21 12-3.)

6-8. தலைவன் இன்னு செயினும் தலைவி அவனை விரும்புதல் : (குறுந். 397 : 4-7) ; "நல்கா யாயினு நயனில செய்யினும், நின் வழிப் படுஉமென் றோழி" (நற். 247 : 6-7) ; "இடர்களையா ரேனு மெமக்கிரங்கா ரேனும், பட்ரு நெறிபணியா ரேனும் - சுடருருவில், என்பருக் கோலத் தெரியாடு மெம் மானர்க், கன்பரு தென்னெஞ் சவர்க்கு" (காரைக்காலம்மையார் அற்புதத் திரு வந்தாதி, 2) ; "கண்டா ரிகழ்வனவே காதலன்ரன் செய்கிடினும், கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்" (பெருமாள் திருமொழி.) (கூ0க)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் தன்னை வற்புறுத்திய தோழியின்பாற் சினமுற்று, "என் நிலையைத் தலைவருக்கு உரைப்பாருளராயின் என் உயிர் உளதாகும்" என்று கூறியது.]

கூக0. புள்ளும் புலம்பின பூவுங் கூம்பின
கானலும் புலம்புநனி யுடைத்தே, வானமும்
நம்மே போலு மம்மர்த் தாகி
எல்லை கழியப் புல்லென் றன்றே
5. இன்னு முளெனே தோழி யிந்நிலை
தண்ணிய கமழு ஞாழற் [பெறினே.
றண்ணந் துறைவர்க் குரைக்குநர்ப்

எ - து. வரைவிடை முனிந்து கிழத்தி தோழிக்கு உரைத்தது. பெருங்கண்ணன்.

(பி - ம்) 2 'புலம்புபெரிதுடைத்தே' 5 'முளனே'; 'தோழி முன்னிலே' 7 'துறையவர்க்கு'

(ப - ரை.) தோழி—, புள்ளும் புலம்பின - பறவைகளும் ஒலித்தன; பூவும் கூம்பின - மலர்களும் குவிந்தன, கானலும் புலம்பு நனி உடைத்து - கடற்கரைச் சோலையும் தனிமையை மிகவுடையதாயிற்று; வானமும்—, நம்மே போலும் மம்மர்த்து ஆகி - நம்மையே போன்ற மயக்கத்தையுடையதாகி, எல்லே கழிய - பகல் கழிய, அதனால், புல்லென்றன்று - பொலிவழிந்தது; இ நிலை - இந்த என் நிலைமையை, தண்ணிய கமழும் ஞாழல் - தண்ணியனவாய் மணம் வீசுகின்ற மலரையுடைய ஞாழல்கள் வளர்ந்த, தண்ணந் துறைவர்க்கு உரைக்குநர் பெறின் - தண்ணிய அழகிய துறையை உடைய தலைவருக்கு உரைப்பாரைப் பெற்றால், இன்னும் உளென் - இனி மேலும் உயிரோடு இருப்பேனுவேன்.

(முடிபு) தோழி, புலம்பின; கூம்பின; உடைத்து; புல்லென்றன்று; துறைவர்க்கு உரைக்குநர்ப் பெறின் இன்னும் உளென்.

(கருத்து) யாரேனும் என் துயர்நிலையைத் தலைவனுக்கு உரைப்பாராயின் நன்றும்.

(வி - ரை.) பூ வென்றது ஆம்பல் முதலிய நீர்ப்பூக்களை. நம்மே போலும் மம்மர்த்தாகி யென்பதனால் தான் மயக்கமுடைய ளாதலைத் தெரிவித்தாள். எல்லை - சூரியனெனலுமாம். ஞாழல் - புலிநகக் கொன்றை. 'என்னைக் கடிந்து சொல்வாரையன்றி என் துயர் நிலைக்கு இரங்கித் தலைவர்பாற் சென்று இந்நிலையைத் தெரிவிப்பார் ஒருவரும் இலர்' என்னும் நினைவினால், 'உரைக்குநர்ப்பெறினே' என்றாள்.

(மேற்.) மு. தலைமகள் தன் துயர் தலைவற் குரைத்தல் வேண்டியது (நம்பி. 164.) [கு - பு. இக்கருத்து சிறப்புடையதாகத் தோற்றுகின்றது.]

1. (ஒப்பு.) மாலையில் மலர் கூம்புதல் : குறுந். 122 : 2-3.

2. கானல் புலம்புடைத்தாதல் : "இனிப்புலம் பின்றே கானலும்" (அகநா. 240 : 4.)

4. எல்லை : பகல், சூரியன்; குறுந். 355 : 3, 387 : 1; குறிஞ்சிப். 215.

புல் லென்றல் : குறுந். 19 : 2, ஒப்பு. 2-4. "அமர்க மருங்கிற் கணவனை யிழந்து, தமரகம் புகூஉ மொருமகள் போலக், கதிராற்றுப் படுத்த முதிராத் துன்பமோ, டந்தி யென்னும் பசலைமெய் யாட்டி, வந்திறுத் தனளான் மாநகர் மருங்கென்" (மணி. 5 : 137-41.)

6. தண்ணிய கமழும் : குறுந். 273 : 3. 5-7. (குறுந். 98 : 1-3); "வரைப்பான் மதுரைத் தமிழ்தெரி வாணன்றென் மாறைவையை,

துரைப்பான் முகந்தன்ன நுண்டுகி லாயிந்த நோயவர்க்கின், றுரைப்பாரு ளரே லுயிரெய்த லாநமக் கூர்நிரைசூழ், தரைப்பால் வளரும் புகழெய்த லாமவர் தங்களுக்கே " (தஞ்சை. 217.) (கக0)

தலைவி கூற்று

[" இரவில் தலைவன் ஈண்டு வந்து செல்வதை ஆயத்தார் யாவ ரும் அறிந்தனர் ; அதனால் அலர் பெருகியது " என்று தலைவி, தலை வன் சிறைப்புறத்தில் இருப்பத் தோழிக்குச் சொல்லியது.]

கக. அலர்யாங் கொழிவ தோழி பெருங்கடற்
புலவுநா றகன்றுறை வலவன் ருங்கவும்
நில்லாது கழிந்த கல்லென் கடுந்தேர்
யான்கண் டனனே விலனே பானள்
5. ஓங்கல் வெண்மணற் ருழ்ந்த புன்னைத்
தாதுசேர் நிகர்மலர் கொய்யும்
ஆய மெல்லா முடன்கண் டன்றே.

எ - து. அலரஞ்சிய தலைமகள், தலைமகன் சிறைப்புறத்தானு கத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது (பி - ம். சொற்றது.)

சேந்தன்கீரன்.

(பி - ம்.) 1 ' அலர்யாங்கொல்வ ' 4 ' கண்டன்ருேவிலனே '

(ப - ரை.) தோழி—, பெரு கடல் - பெரிய கடலினது, புலவு நாறு அகல் துறை - புலால் நாற்றம் வீசும் அகன்ற துறையின் கண்ணே, வலவன் தாங்கவும் - பாகன் தடுக்கவும், நில்லாது கழிந்த - நில்லாமற் சென்ற, கல் என் கடு தேர் - கல்லென ஓர வாரம் செய்யும் விரைந்த தலைவனது தேரை, யான் கண்டனனே யான் கண்டனனே இலனே இல்லையோ, பால் நாள் - நடு இரவின் கண், ஓங்கல் வெள் மணல்தாழ்ந்த புன்னை - உயர்ச்சியை யுடைய வெள்ளிய மணலினிடத்துத் தாழ்ந்து வளர்ந்த புன்னை மரத்தினது, தாது சேர் நிகர் மலர்கொய்யும் - மகரந்தம் சேர்ந்த ஒளியையுடைய மலர்களைப் பறிக்கும், ஆயம் எல்லாம் உடன் கண்டன்று - மகளிர் கூட்டமெல்லாம் ஒருங்கே கண்டது ; இங் ஙனமாக, யாங்கு அலர் ஒழிவ - எவ்வாறு பழிமொழி ஒழிவன வாகும்.

(முடிபு) தோழி, தேர் யான் கண்டனனே இலனே, ஆயமெல் லாம் கண்டன்று ; அவர் யாங்கு ஒழிவ ?

(கருத்து) தலைவன் வந்து செல்வதை யாவரும் அறிந்து பழி மொழி கூறுகின்றனர்.

(வி - ரை.) தாங்குதல் - வேகமாகச் செல்லுதலைத் தடுத்தல்; "நிமிர்பரிய மாதாங்கவும்" (புறநா. 14. 7.) வேகத்தினால் தேர் கல்லென்னும் முழக்கத்தையுடைய தாயிற்று. ஓங்கல் வெண் மணல் - மணல்மேடு; மணற்குன்றென்பர். புன்னைத் தாதுசேர் நிகர் மலர் கொய்யுமென்றது ஆயத்தினர் இயல்பைக் கூறியபடி. நிகர் மலர் - ஒளியையுடைய மலர்.

இதனால் தலைவி தலைவனுக்கு அலர் மிகுதியைப் புலப்படுத்தி வரைந்து கொள்ள வேண்டுமென்பதை அறிவுறுத்தினளாயிற்று.

(மேற்.) மு. அலர் பார்த்துற்ற அச்சக்கிளவி (நம்பி. 164.)

(ஒப்பு.) 3. கடுந்தேர்: குறுந். 45 : 1.

2-3. தேரை வலவன் தடுத்து ஓட்டுதல்: "வலவன், வள்புவலித் தூரினல்லது முள்ளூறின், மூங்கீர் மண்டில மாகி யாற்று, நன்னல்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்", "நுண்ணயிர் பரந்த தண்ணய மருங்கின், நிரைபறை யன்னத் தன்ன விரைபரிப், புல்லுளைக் கலிமா மெல்லிதிற் கொளீஇ, வள்பொருக் கமையப் பற்றி மூழ்கிய, பல்கதி ராழி மெல்வழி யறுப்பக், காலென மருள வேறி நூலியற், கண்ணுக் கொழிக்கும் பண்ணமை நெடுந்தேர், வல்விரைந் தூர்தி நல்வலம் பெறுஉ" (அகநா. 104 : 3-4, 236 : 2-9.)

3-4. பாலுள்: குறுந். 94 : 3, ஒப்பு.

3-4. பாலுளில் தலைவன் தேர் வருதல்: குறுந். 301 : 4-6.

5. ஓங்கல் வெண் மணல்: குறுந். 236 : 3, ஒப்பு.

மணற்குன்றின் புன்னை: "குன்றத் தன்ன குவவுமண லடைகரை, நின்ற புன்னை" (குறுந். 236 : 3-4)

6. நிகர்மலர்: குறுந். 329 : 6; அகநா. 11: 12; சிலப். 9 : 2; மணி. 3:15.

(ககக)

தலைவன் கூற்று

[இரவுக்குறிக்கண் தலைவியை எதிர்ப்பட்டு மீங்கும் தலைவன் தன் நெஞ்சை நோக்கி, "இவள் இரவில் நம்மோடு ஒத்த ஒழுக்கமும் பகலில் அயலாரைப் போன்ற ஒழுக்கமும் உடையளாக இருக்கும் ஆற்றலுடையாள்" என்று கூறி வியந்தது]

ககஉ. இரண்டறி கள்வி நங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு நம்மோ ரன்னள்

5. கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே.

எ - து. இரவுக்குறி வந்து நீங்குகின்ற தலைமகன், தன் னெஞ் சிற்கு வரைவுடைமை (டி - ம்.வரைவிடை) வேட்பக் கூறியது.

கபிலர்.

(பி - ம்.) 1 'களவினங்', 'களவினள்' 3 'நண்ணுறவந்து' 4 'அன்னெள்' 7 'முகத்தாளாகி'

(ப - ரை.) நெஞ்சே, நம் காதலோள் - நம் தலைவி, இரண்டு அறி கள்வி - இரு வேறுபட்ட ஒழுகலாற்றை அறிந்த கள்ளத் தன்மையை யுடையாள், நள்ளென் கங்குல் - செறிந்த இருளை யுடைய இரவில், முரண் கொள் துப்பின் - மாறுபாட்டைக் கொண்ட வலியையுடைய, செ வேல் மலையன் - சிவந்த வேலை யுடைய மலையனது, முள்ளூர் கானம் நாற வந்து - முள்ளூர் மலைக் காட்டிலுள்ள நறுமணத்தைப் போன்ற மணம் வீசும்படி வந்து, நம் ஓரன்னள் - நம்மோடு ஒத்தவளாயினள்; வைகறை யான் - விடியற் காலத்தில், கூந்தல் வேய்ந்த - நான் தனது கூந்த லில் அணிந்த, விரவு மலர் உதிர்த்து - பலவாகக் கலந்த மலர்களை உதிர்த்துவிட்டு, சாந்து உளர் நறு கதுப்பு எண்ணெய் நீவி - மயிர்ச் சாந்தையிட்டுக் கோதிய நறிய கூந்தலில் எண்ணெயைத் தடவி, அமரா முகத்தள் ஆகி - பொருந்தாத முகத்தை யுடையவ ளாகி, தமர் ஓரன்னள் - தன் தமரோடு ஒத்தவளாயினள்.

(முடிபு) நம் காதலோள் இரண்டறி கள்வி; நள்ளென் கங்குல் வந்து நம்மோரன்னள்; வைகறையான், உதிர்த்து நீவி ஆகித் தமரோ ரன்னள்.

(கருத்து) தலைவி நம்முடைய தொடர்பை அயலார் அறியா வண்ணம் கரந்து ஒழுகுகின்றாள்.

(வி - ரை.) துப்பு - துணைவலி. செவ்வேல் - இரத்தத்தாற் சிவந்த வேல். மலையன் - மலையமான் திருமுடிக்காரி யென்னும் வள்ளல்; இவனைத் தேர்வண் மலையனென்பர்.

மலையன், மன்னர்களுள் யாருக்குத் துணையாகச் செல்வானோ அம்மன்னன் போரில் வெற்றி பெறுவான்; ஆதலின் அவன் 'முரண்கொள் துப்பின் மலையன்' எனச் சிறப்பிக்கப்பட்டான்; அவனைச் சேர சோழ பாண்டியர்கள் தமக்குத் துப்பாக வேண்டு மென்று இரப்பார்கள்;

"வியாத் திருவின் விறல்கெழு தாணை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
ஏத்தினர் தரூஉங் கூழே நுங்குடி
வாழ்த்தினர் வரூஉ மிரவல ரதுவே" (புறநா. 122 : 4-7.)

சேரமான் மாந்தரஞ் சேர லிரும்பொறையும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் பொருதவழிச் சோழற்குத் துப்பாகிய தேர்வண் மலையன வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார் பாடிய செய்யுளில்,

"குன்றத் தன்ன களிறு பெயரக்
கடந்தட்டு வென்ரோனு நிற்கூ றும்மே
வெலீஇயோ னிவனெனக்
கழலணிப் பொலிந்த சேவடி நிலங்கவர்பு
விரைந்துவந்து சமந்தாங்கிய
வல்வேன் மலைய னல்ல னெயின்
நல்லமர் கடந்த லெளிதும னமக்கெனத்
தோற்ரோன் ரனு நிற்கூ றும்மே" (புறநா. 125.)

என்று, மலையன் துப்பாகியதனால் சோழன் வென்ரானென்பதும் சேரன் தோற்ரானென்பதும் காணப்படுகின்றன.

முள்ளூர்க் கானம் - முள்ளூர் மலையைச் சார்ந்த காடு; இது மலையனுக்குரியது.

நம்மோரன்னளென்றது, தன் நெஞ்சிற்குப் பொருந்திய அன்பு செய்பவளாக இருந்தா ளென்றபடி. தமரோரன்ன ளென்றது, தன் தமர் நம்பால் எங்ஙனம் நொதுமலராக ஒழுகுகின்றனரோ அங்ஙனம் ஒழுகின ளென்றபடி. பகலென்னது வைகறையென்ரான், விடிந்த அளவிலே அவள் தமரோ ரன்னளாயினு ளென்ற வியப்புத் தோன்ற. பகலில் தலைவியின் மனைக்கு விருந்தினனுகச் சென்ற காலத்துத் தலைவி நொதுமலர் போல் ஒழுகுவதை யறிந்தவனுதலின் இது கூறினன்.

இரவில் தனக்குப் பொருந்தியும் பகலில் தமர்க்குப்பொருந்தியு மொழுகும் இரண்டு தன்மையினளாதலின், இரண்டறி களவி யென்ரான். தன்னேடுள்ள தொடர்பு தமருக்குப் புலப்படாவாறு கரந்து ஒழுகுதல் பற்றிக் கள்வி யென்ரான்.

தமரையஞ்சி இங்ஙனம் கரந்தொழுகுகின்ரு ளென்றமையால், இது நீட்டித்து நிகழ்தலரிதென்பதும் வரைதலேநன்றென்பதும் புலப்பட்டு, வரைவுடைமை வேட்பக் கூறியதாயிற்று.

(மேற்.) மு. தான் புகுதற்குத் தகுதியில்லாத காலத்துக்கண் அகம்புக்கு எதிர்ப்பட்டுழி அவரால் நீக்கப்படாத விருந்தின் பகுதியனையவழித்

தலைவன் கூறியது (தொல். களவு. 17, இளம்.); அமரா முகத்தளாதலும், தமரோரன்னளாகுதலும் தலைமகற்குப் புலனுகலின் அவை கண்ணுணர் வெனப்படும் (தொல். மெய்ப். 27. போ.) தான் வருந்திக் கூறுகின்ற கூற்றி னைத் தலைவியைச் சார்த்திக் தலைவன் கூறலின், இவ்வாறு ஆற்ருளாய் இங்ஙனம் கூறினனென்று அஞ்சித் தோழி உணராமல் தலைவி தானே கூடிய பொழுது தலைவன் கூறியது (தொல். களவு. 11, ந.); 'எஞ்ஞான்றும் கூட்டம் பெற்றமையால் தலைவி மகிழ்தல், இரண்டறி கள்வி யென்னும் பாட்டினுள் தோற்றப் பொலிவை மறைப்பளெனத் தலைவன் கூறியவாற்ருல் உணரப்படும் (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. **கள்வி** : மணி : 18 : 121.

3. **கானத்தின் மணம் கூந்தன்மணத்திற்கு** : (குறுந். 199 : 3-4, ஒப்பு); "இமயக் கான நாறுங் கூந்தல்" (அகநா. 399 : 2.)

2-3. **மலையன் முள்ளூர்** : "பேரிசை முள்ளூர்ப், பலருடன் கழித்த வொள்வாண் மலையன்" (நற். 170 ; 6-7) ; "செவ்வேல், முள்ளூர் மன்னன் கழறொடிக் காரி" (அகநா. 209 : 11-2) ; "மலையன், மகிழா நீத்த விழையணி நெடுந்தேர், பயன்கெழு முள்ளூர் மீமிசைப், பட்ட மாரி யுறை யினும் பலவே", "பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந", "எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை, அருவழி யிருந்த பெருவிறல் வளவன், மதி மருள் வெண்குடை காட்டியக் குடை, புதுமையி னிறுத்த புகழ்மேம் படுந" (புறநா. 123 : 3-6, 126 : 8 : 174 : 13-6.)

4. **நள்ளென் கங்குல்** : குறுந் : 6 : 1, ஒப்பு. 160 : 4, ஒப்பு.

6. **நறுங் கதுப்பு** : குறுந். 2 : 4-5, ஒப்பு.

கதுப்பில் எண்ணெய் நீவுதல் : "எண்ணெயு நானமு மிவை மூழ்கி..... கடைகுழன்ற கருங்குழல்கள்" (சீவக. 164.)

7. **அமரா முகத்தள்** : மலைபடு. 74 ; அகநா. 253 : 3.

8. **ஓரன்னள்** : கலி. 23 : 9, 11, 13. (ககஉ)

தலைவி கூற்று

[இரவுக்குறி வந்த தலைவன் சிறைப்புறமாக இருப்பத் தோழி, இயற்பழித்த விடத்துத் தலைவி, "அவரது நட்பு என்றும் அழி யாதது" என்று கூறியது.]

ககங. பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
நீத்துநீ ரிருங்கழி யிரைதேர்ந் துண்டு
பூக்கமழ் பொதும்பிற் சேக்குந் துறைவனெ
டியாத்தேம் யாத்தன்று நட்பே
5 அவிழ்த்தற் கரிதது முடிந்தமைந் தன்றே.

எ - து. இரவுக்குறி வந்து ஒழுகுங் காலத்துத் தலைமகனது வரவுணர்ந்து, பண்பிலர் என்று இயற்பழித்த தோழிக்கு, (அவரோடு பிறந்த நட்பு அழியாத நட்பன்றே) வென்று, சிறைப்புறமாகத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

[ஆசிரியர், பெயர் காணப்படவில்லை]

(பி - ம்.) 1 'கடற்றிரையது'

(ப - ரை) தோழி, பெரு கடல் கரையது - பெரிய கடற்கரையின் கண்ணதாகிய, சிறுவெள் காக்கை - சிறிய வெண்மையையுடைய காக்கையானது, நீத்து நீர் இரு கழி இரை தேர்ந்து உண்டு - வெள்ளமாகிய நீரையுடைய கரிய கழியிடத்து மீனுகிய இரையைத் தேடி உண்டு, பூ கமழ் பொதும்பில் சேக்கும் துறைவனொடு - மலர் மணம் வீசும் சோலையினிடத்துத் தங்கும் துறையையுடைய தலைவனோடு, யாத்தேம் - நம்மைக் கட்டினேம்; நட்பு யாத்தன்று - அங்ஙனம் கட்டப்பட்ட நட்பு நன்முகப் பொருந்தியது; அது அவிழ்த்தற்கு அரிது - அது பிறராற் பிரித்தற்கு அரியதாகி, முடிந்து அமைந்தன்று - முடிக்கப்பட்டு அமைந்தது.

(முடிபு) துறைவனோடு யாத்தேம்; நட்பு யாத்தன்று; அது அவிழ்த்தற் கரிதாகி, முடிந்தமைந்தன்று.

(கருத்து) தலைமகனது நட்பு அழியாதது.

(வி - ரை.) தலைவன் வரையாது வந்தொழுகுவது குறித்துத் தோழி, "அவர் நம் நிலையை யறியும் பண்பிலர்" என்று அவனது இயல்பை இழித்துக் கூறினுள்; அது கேட்ட தலைவி, "அவர் நமது நிலையை உணர்ந்தவரே; அவரது நட்பு என்று கெடாத உறுதியினது" என்று கூறி அவன் விரைவில் வரைந்து கொள்வானென்பதைப் புலப்பட வைத்தாள். இது கேட்ட தலைவன் வரைந்து கோடல் பயன்.

கடற்கரையின்கண் இரை தேர்ந்துண்ட காகம் பூக்கமழ் பொதும்பில் தங்குந்துறைவனென்றது, களவொழுக்கத்தின் கண் வந்து ஒழுகும் தலைவன் வரைந்து கொண்டு தன் மனையிலிருந்து இல்லறம் நடத்துவானென்னும் குறிப்புணர்த்தியது.

யாத்ததாக நட்பைக் கூறினமையின் நட்பை முடியாக (முடிச்சாக) உருவகித்தாளாயிற்று; "அற்புத் தளையு மவிழ்ந்தன" (நாலடி. 12) என்று பிறரும் கூறுதல் காண்க.

பால் வயப்பட்டு நின்றதாதலின் நட்பு அவிழ்த்தற்கு அரிதாயிற்று.

(மேற்.) மு. தலைவனைத் தவறிலனென்று தலைவி கூறியது (தொல். கற்பு. 6, ந.)

(ஒப்பு.) 1, மு. குறுங். 246 : 1, ஒப்பு.
1-3. மு. ஐங். 162 : 1-4.
3-4. தலைவனது நட்பு : குறுங். 247 : 6-7, ஒப்பு.
3-5. தலைவன் நட்பு, கெடாதது : குறுங். 170 : 4-5, 264 : 4-5.

(உகஉ)

தலைவி கூற்று.

[தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்த விடத்து வேறு பட்ட தலைவியை நோக்கி, "நீ ஆற்றல் வேண்டும்" என்று வற்புறுத்திய தோழிக்கு, "அவர் கூறிய பருவம் வந்தது; அவர் வந்திலர்" என்று தலைவி வருந்திக் கூறியது.]

உகச. சேயுயர் விசும்பி னீருறு கமஞ்சூற்
றண்குர லெழிலி யொண்சுட ரிமைப்பப்
பெயரும் பிருளிய புலம்புகொண் மாலையும்
வாரார் வாழி தோழி வருஉம்
5. மின்னுற ழிளமுலை ஞெமுங்க
இன்ன வைப்பிற் சுரனிறந் தோரே.

எ - து. பிரிவிடை வேறுபட்ட கிழத்தி வற்புறுத்துந் தோழிக்குப் பருவங்காட்டி அழிந்து கூறியது.

பேரிசாத்தன் (பி - ம். பெருஞ்சாத்தன், பேறிச்சாத்தன், பேரிச் சாத்தன்.)

(பி - ம்.) 2 'ரிமைப்பப்' 3 'பெயருமிருளிய' 5 'மின்னு மிளமுலை', மின்னுறலிளமுலை' 6 'சுரமிறந்தோரே'

(ப - ரை.) தோழி—, இன்ன வைப்பின் - துன்பத்தைச் செய்யும் இடங்களையுடைய, சுரன் இறந்தோர் - பாலை நிலத்தைக் கடந்து சென்றவர், சேய் உயர் விசும்பின் - நெடுந்தூரம் உயர்ந்த வானத்தின்கண், நீர் உறு கம சூல் - நீர்மிக்க நிறைந்த கருப்பத்தை யுடைய, தண் குரல் எழிலி - தண்ணிய முழக்கத்தையுடைய மேகம், ஒள் சுடர் இமைப்ப - ஒள்ளிய மின்னலின் ஒளிவிட்டு விளங்க, பெயல் தாழ்பு இருளிய - மழைபெய்து இருண்ட, புலம்பு கொள் மாலையும் - தனிமையைக் கொண்ட மாலைக்காலத் திலும், வருஉம் - வளருகின்ற, மின் உறழ் இளமுலை ஞெமுங்க - மின்னுதல் மிக்க இளைய முலைகள் அழுந்தும்படி தழுவுதற்கு, வாரார் - வாராராயினர்.

(முடிபு) தோழி, சுரனிறந்தோர் ஞெமுங்க மாலையும் வாரார்.

(கருத்து) கார்ப்பருவம் வரவும் தலைவர் வந்திலர்.

(வி - ரை.) "வானினு முயர்ந்தன்று" (குறுந் 3 : 1) என்று சிறப்பித்தலின், சேயுயர் விசும்பென்றுரை. தண்ணிய எழிலி, குரலெழிலியெனக் கூட்டிப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். மாலை : கார்காலத்துமாலை. மாலையும் : உம்மை, சிறப்பும்மை. வாழி : அசைநிலை. வருஉம் - எழும் ; 'வருமுலை - எழுகின்ற பெரியமுலை' (சிறுபாண். 72,ந.) இன்னுறல் இளமுலையென்னும் பாடத்திற்கு, இனிய முயக்கத்தையுடைய இளைய நங்கையென்று பொருள் கொள்க ; 'இன்னுறல் வியன் மார்ப - இனிய முயக்கத்தையுடைய அகற்சியையுடைய மார்பனே' (கலி. 8 : 23, 100 : 21, ந.) ஞெமுங்கத் தழுவுதற்கென ஒரு சொல் வருவிக்க.

(ஒப்பு.) 1-2. கமஞ்சூலெழிலி : "கமஞ்சூன் மாமழை" (முருகு. 7 ; நற். 347 : 1 ; அகநா. 134 : 2.)

5, பி - ம். இன்னுறல் : அகநா. 399 : 3.

6. சுரனிறந்தோர் : குறுந். 211 : 7, 215 : 7, 290 : 8.

(நகச)

தலைவி கூற்று

["தலைவன் வரைவிடை வைத்துப் பிரியுங் காலத்தில் ஆற்றும் ஆற்றல் உடையையோ?" என்று வினவிய தோழிக்கு, "அவனது விருப்பப்படியே ஒழுகும் தன்மையினேனுதலின் ஆற்றுவேன்" என்று தலைவி கூறியது.]

நகடு எழுதரு மதியங் கடற்கண் டாஅங்
கொழுகுவெள் ளருவி யோங்குமலை நாடன்
ஞாயி றனையன் றேழி [தோளே.
நெருஞ்சி யனையவென் பெரும்பணைத்

எ - து. வரைவிடை யாற்றகிற்றியோ என்ற(பி-ம். வேறுபடுகின்றுயென்ற) தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மதுரை வேளாதத்தன் (பி-ம். தும்பி சேர்கீரன்.)

(பி-ம்.) 3 'றனையனென்றேழி'

(ப - ரை.) தோழி—, எழுதரு மதியம் - உதயமாகின்ற சந்திரன், கடல் கண்டாஅங்கு - கடலினிடத்தே காணப்பட்டாற் போல, ஒழுகு வெள் அருவி - ஓடிவருகின்ற வெள்ளிய அருவியையுடைய, ஓங்கு மலைநாடன் - உயர்ந்த மலைநாட்டையுடைய

தலைவன், ஞாயிறு அனையன் - சூரியனைப் போன்றவன்; என் பெரு பணை தோள் - என் பெரிய மூங்கிலைப் போன்ற தோள்கள், நெருஞ்சி அனைய - நெருஞ்சி மலர்களைப் போன்றன.

(முடிபு) தோழி, மலைநாடன் ஞாயிறனையன்; என் தோள் நெருஞ்சி யனைய.

(கருத்து) தலைவன் கருதுவதையே யானும் கருதி ஆற்றி யிருப்பேன்.

(வி - ரை) மதியமென்றது இங்கே பிறையை. அருவிக்குப் பிறையும் மலைக்குக் கடலும உவமைகள். நெருஞ்சிமலர் ஞாயிற் றையே நோக்கி நிற்கும் இயல்பினது; ஞாயிறு கீழ்த்திசை யிருப்பின் கிழக்கு நோக்கியும், மேற்றிசைச் செல்லின் மேற்கு நோக்கியும் உச்சி வானத்திலிருப்பின் உச்சியை நோக்கியும் நிற்பது ஞாயிற்றை நோக்கிய நெருஞ்சிபோலத் தலைவனை என் தோள் நோக்கி நிற்குமென்றாள்.

தோள் மேல் வைத்துக் கூறினும் 'அவனது கருத்தின்படியே யான் ஒழுகுவேன்' என்ற தனது இயல்பையே கருதினாள்.

(மேற்.) மு. தலைமகள் பிரிவுடன் பட்டது (தமிழ் நெறி. 24.)

(ஒப்பு.) 1. கடற் கண்டாங்கு: முருகு. 2.

2-3. தலைவனுக்கு ஞாயிறு: "ஞாயிறனையன் யானே" (தமிழ்நெறி. 55, மேற்.)

4. பணைத்தோள்: குறுந். 268 : 6, ஒப்பு.

3-4. நெருஞ்சி ஞாயிற்றை நோக்கி நிற்றல்: "சுடரொடு திரிதரு நெருஞ்சி போல" (அகநா. 336 : 18); "பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ, ஏர்தரு சுடரி னெதிர்கொண் டாஅங்கு" (புறநா. 155 : 4-5); "செங்கதிர் விரும்பும் பைங்கொடி நெருஞ்சிப், பொன்புனை மலர்" (பெருங். 2. 4 : 14-5); "வெஞ் சுடர் நோக்கு நெருஞ்சியில்" (பாண்டிக்) "நீள்சுடர் நெறியை நோக்கு நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்" (சீவக. 461); "ஏழுளைப் புரவியொ டெழுகதிர் நோக்கிய, சிற்றிலை நெருஞ்சிப் பொற்பூ வென்ன" (கல். 65 : 14-5); "நிரம்பு கதிர்நேர் நெருஞ்சியெனத் தன்பால், திரும்புவிழி யாய மொடு சென்றாள்" (வெங்கையுலா, 352.) (கசடு)

தலைவி கூற்று

[வரைவிடை வேறுபட்ட தன்னை வினவிய தோழிக்கு, "தலைவன் இன்னும் வந்திலன்; என் துன்பத்தை அன்னை யறியின் உயிர் நீப்பேன். அங்ஙனம் அறிவாளோவென அஞ்சி வேறு பட்டேன்" என்பதுபடத் தலைவி கூறியது.]

நகசு. ஆய்வளை ஞெகிழவு மயர்வுமெய் நிறுப்பவும்
நோய்மலி வருத்த மன்னை யறியின்
உளெனே வாழி தோழி விளியா
துரவுக்கடல் பொருத விரவுமண லடைகரை
5. ஓரை மகளிர் ரோராங் காட்ட
வாய்ந்த வலைவன் றுன்புறு துணைபரி
ஓங்குவரல் விரிதிரை கலையும்
துறைவன் சொல்லோ பிறவா யினவே.

(சிலபிரதிகளில் இப் பாட்டு இல்லை.)

எ - து. "வரைவிடை வேறுபடுகின்றாய்" என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

தும்பிசேர் கீரன்.

(பி ம்) 1 'நிற்பவும்' 3 'உளெனே' 4 'பொருவிரவு' 5 'ஓராங்குக்' 6-7 'துணைப்பரி, வோங்கு' 7 'ஓங்குவரலருவி விரி திரை' 8 'சொன்னனி பிறவாயினவே'

(ப - ரை.) தோழி—, விளியாது - கெடாமல், உரவு கடல் பொருத - வலியையுடைய கடலால் அலைக்கப்பட்ட, விரவு மணல் அடை கரை - மணல் விராவிய அடைகரையினிடத்து, ஓரை மகளிர் - விளையாட்டையுடைய பெண்கள், ஓராங்கு ஆட்ட - ஒரு தன்மையாக அலைக்க, வாய்ந்த அலவன் - பொருந்திய நண்டினது, துன்புறு துணை பரி - வருத்தம் மிக்க விரைந்த செலவை, ஓங்கு வரல் விரிதிரை கலையும் - உயர்ந்து வருதலையுடைய விரிந்த அலை நண்டைக் கொண்டு சென்று நீக்குகின்ற, துறைவன் - துறையையுடைய தலைவன், சொல்—, பிற ஆயின - வேறு பாடுடையனவாயின; ஆய்வளை ஞெகிழவும் - அழகிய வளைகள் நெகிழ்ந்து போகவும், அயர்வு மெய் நிறுப்பவும் - அயர்வினை மெய் யின் கண்ணே நிலைக்கச் செய்யவும், நோய் மலி வருத்தம் - துன்ப மிக்க எனது வருத்தத்தை, அன்னை அறியின் - தாய் அறிவா ளாயின், இன்னும் உளெனே - இனிமேலும் உயிரோடு இருப்பேனுவேனே?

(முடிபு) தோழி, துறைவன் சொல் பிற ஆயின; வருத்தம் அன்னை அறியின் உளெனே?

(கருத்து) தலைவன் வாராமையால் துன்புற்ற என் நிலையைத் தாய் அறியின் யான் உயிர் நீப்பேன்.

(வி - ரை.) ஞெகிழவும் நிறுப்பவும் மலி வருத்தமென இயைக்க. நோய் - உடலின் கண் தோற்றுவது; காம நோயுமாம். உளெனே: ஓ எதிர்மறைப் பொருளில் வந்தது. வாழி: அசைநிலை.

பரிவென்னும் பாடத்திற்குத் துன்புறுதலென்று பொருள் கொள்க.

மகளிர் அலைக்குங்காலத்தில் அவர்க்கு அஞ்சி விரைந்து ஓடிய நண்டை அம்மகளிர் கைப்படாவாறு அலை கொண்டு சென்றது; அதனால் அந்நண்டின் துன்பமும் விரைந்த நடையும் ஒழிந்தன. இது, தாயை அஞ்சி நின்ற எனது நோய்மலி வருத்தத்தை, வரைந்து கொண்டு என்னைத் தன் மனைவியாகப் பெறுமாற்றால் நீக்கற்குரியவன் தலைவனென்னும் குறிப்பை உணர்த்தியது.

சொல் - இத்துணைக் காலத்துள் வருவேனென்ற சொல். பிற - மாறுபட்ட பொருளுடையன. தலைவன் சொல் பிறவாயின - தலைவன் சொற்கள் பொய்பட்டன. அவன் தான் குறித்த காலத்தே வந்திலனென்றபடி (ஐங். 192: 4, உரை.) பிரிந்திரேனென்றும், விரைவில் வருவேனென்னும், நீட்டிப்பின் ஆற்றேனென்றும் பலபடியாகக் கூறியவையாதலின் சொல்லைப் பன்மையாற் கூறினள்.

சொல்லோ: ஓ அசைநிலை; ஏ அசைநிலை.

(ஒப்பு.) 1. தலைவன் பிரிவினும் வரை நெகிழ்தல்: குறுந். 11 : 1, ஒப்பு.

2. நோய்மலி வருத்தம்: நற். 64 : 13 ; அகநா. 205 : 6.

3, பி-ம். உளெனே வாழி தோழி: நற். 199 : 5.

வாழி தோழி: குறுந். 260 : 4, ஒப்பு.

4. "உரவுத்திரை பொருத திணிமண லடைகரை" (குறுந். 175 : 2); "உரவுத்திரை, அடுங்கரை" (குறிஞ்சிப். 178-9.)

மணலடைகரை: "மோட்டுமண லடைகரை" (அகநா. 10 : 11.)

5. ஓரை மகளிர்: குறுந். 48 : 3, ஒப்பு; நற். 155 : 1, 398 : 5; கலி. 75 : 4.

ஓராங்கு: குறுந். 38: 5, 257: 1.

5-6. மகளிர் அலைவருட்டுதல்: குறுந். 303: 7, ஒப்பு.

4-6. மணலடை கரையில் அலவன் ஆட்டுதல்: "பன்மலர் வேய்ந்த நலம் பெறு கோதையள், திணிமண லடைகரை யலவ னாட்டி" (அகநா. 280: 2-3.)

8. மு. ஐங். 162 : 4. (ககக)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்ருளாகிய தலைவியை நோக்கி, "தலைவன் குறித்த பருவத்தே வருவான்" என்று தோழி கூறி வற் புறுத்தியது.

கூகஅ. புரிமட மரையான் கருநரை நல்லேறு
தீம்புளி நெல்லி மாந்தி யயலது
தேம்பாய் மாமலர் நடுங்க வெய்துயிர்த்
தோங்குமலைப் பைஞ்சுனை பருகு நாடன்
5. நம்மைவிட் டமையுமோ மற்றே கைம்மிக
வடபுல வாடைக் கழிமழை
தென்புலம் படரும் தண்பனி நாளே.

எ - து. பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

மதுரைக் கண்டரதத்தன் (பி - ம். மதுரைக் கண்டாகததன்.)

(பி - ம்) 3 'தேம்பிய மாமலர்'

(ப - ரை) புரிமடம் மரையான் - விரும்புகின்ற மடப்பத்தை யுடைய மரையானினது, கருநரை நல் ஏறு - கருமையையும் பெருமையையுமுடைய நல்ல ஆண், தீ புளி நெல்லி மாந்தி-இனிய புளிப்பையுடைய நெல்லிக்காயைத் தின்று, அயலது - அருகில் உள்ளதாகிய, தேம்பாய் மாமலர் - தேன் பரவிய அழகிய மலர்கள், நடுங்க வெய்து உயிர்த்து - நடுங்கும்படி வெப்பமாகிய மூச்சை விட்டு, ஓங்கு மலை பசு சுனை - உயர்ந்த மலையினிடத்துள்ள பசிய சுனை நீரை, பருகும் நாடன் - உண்ணுகின்ற நாட்டையுடைய தலைவன், கைம்மிக - மிகும்படி, வடபுலம் வாடைக்கு - வடதிசை யினின்றும் வரும் வாடைக்காற்றுக்கு, அழிமழை - அழிந்த மேகம், தென் புலம் படரும் - தென் திசையை நோக்கிச் செல்லும், தண் பனி நாள் - தண்ணிய பனிப்பருவத்தில், நம்மை விட்டு அமையுமோ - இன்றியமையாத நம்மைப் பிரிந்து பொருந்து வானே? பொருந்தான்.

(முடிபு) நாடன், தண்பனி நாளில் நம்மைவிட்டு அமையுமோ?

(கருத்து) தலைவன் குறித்த பருவத்தில் வந்துவிடுவான்.

(வி - ரை.) நரை - பெருமை (மதுரைக். 63, ந); வெண்மையுமாம் முதலிற் புளிப்பும் அப்பால் இனிமையும் தோற்றுதலின் தீம்புளி

நெல்லியென்றுள். நெல்லியைத்தின்று நீர்குடிக்குங்கால் இன்சுவை தோற்றும்.

காட்டிலுள்ள மரையா முதலியன மலரால் மூடப்பட்ட சுனை நீரைக் குடிக்கையில் அம்மலர்களைத் தம் மூச்சுக் காற்றால் விலகச் செய்து அப்பால் நீரைக் குடித்தல் வழக்கம்;

" ... ... கொழுங்கொடி முல்லை
ஆர்கழல் புதுப்பூ வுயிர்ப்பி னீக்கித்
தெள்ளறல் பருகிய திரிமருப் பெழிற்கலை" (அகநா. 184: 9-11.)

வாடை - வடகாற்று; அது வீசியதால் மேகம் தென்றிசையிற் படர்ந்தது.

மற்று, ஏகாரங்கள், கை: அசைநிலைகள்.

(மேற்.) 1. நரை யென்பது பெருமை யென்னும் பொருளில் வந்தது (மதுரைக். 63-4, ந.)

(ஒப்பு.) 2. தீம்புளி நெல்லி: குறுந். 201: 4, ஒப்பு.

1-2. மரையா நெல்லிப்புளியை மாந்துதல்: குறுந்: 235: 3-4, ஒப்பு.

3-4. சுனை நீரைப் பூ மூடியிருத்தல்: குறுந். 56: 2.

4-5. நாடன் நம்மை விட்டமையுமோ: "அமையே னின்னையா னகன்ற ஞான்றே" (தமிழ்நெறி. மேற். 1)

6-7. மழை தென்புலம் படர்தல்: "பெரும்பெயல் பொழிந்த தொழில வெழிலி, தெறகோர் பிரங்கு மறசிரக் காலையும், அரிதே காதலர்ப் பிரிதல்", "தன்றெழில் வாய்த்த வின்குர லெழிலி, தென்புல மருங்கிற் சென்றற் றுங்கு" (நற. 5: 5-7, 153: 4-5); "தெற்கேர்பு, கழிமழை பொழிந்த பொழுதகொ ளமையத்து" "வாடை வைகறை, விசும்புரி, வதுபோல் வியலிடத் தொழுகி, மங்குன் மாமழை தென்புலம் படரும்" (அகநா. 13: 12-3, 24: 6-8.) (கக்ள)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தே நிற்பத்தோழிக்குக் கூறுவாளாய், "தலைவன் பிரியேனென்று சூள் செய்தான். அதனைக் காப்பாற்றுதல் அவன் கடன். அதனை அவனே அறியவேண்டுமன்றி யான் கூறுதலாற் பயனில்லை" என்று தலைவி கூறி விரைவில் வரைய வேண்டுமென்னும் குறிப்பை உணர்த்தியது.]

நகஅ. எறிசுறாக் கலித்த விலங்குநீர்ப் பரப்பின்
நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய்
வெறியயர் களத்தினிற் றோன்றுந் துறைவன்
குறியா னுயினுங் குறிப்பினும் பிறிதொன்

5. *றறியாற் குரைப்பலோ யானே யெய்த்தவிப்*
பணையெழின் மென்றோ ளணைஇய வந்நாட்
பிழையா வஞ்சினஞ் செய்த
கள்வனுங் கடவனும் புணைவனுந்தானே.

எ - து. கிழவன் கேட்கும் அண்மையனகத் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

அம்மூவன்.

(பி - ம்) 1 'எறிதருக்' 5 'றறியார்க்'; 'யானேவேய்கவிப்' 8 'புணைவனுங்'

(ப - ரை) தோழி, எறிசுறு - அடைந்தாரை எறிகின்ற சுறு மீன்கள், கலித்த - மிக்க, இலங்கு நீர் பரப்பின் - விளங்கிய கடற் பரப்பினிடத்து, நறுவீ ஞாழலொடு புன்னை தாஅய் - நறிய ஞாழற்பூவோடு புன்னை மலரும் பரவி, வெறி அயர் களத்தினின் தோன்றும் துறைவன் - வெறியாடும் இடத்தைப் போலத் தோன்று கின்ற துறையையுடைய தலைவன், குறியான் ஆயினும் - என்னை வரைந்து கொள்ளுதலை நெஞ்சுட்குறிக்கொள்ளானாயினும், குறிப்பினுய்-குறிக்கொண்டானாயினும், பிறிது ஒன்று அறியாற்கு- அயலார் வரைவாகிய வேறு ஒன்று நேருமென்பதை அறியாத அவனுக்கு, யான் உரைப்பலோ? -நான் சொல்லுவேனே?எய்த்த - இப்பொழுது இளைத்த, இ பணை எழில் மெல் தோள் - இந்த மூங்கிலைப் போன்ற அழகையுடைய மெல்லிய தோள்களை, அணை இய அ நாள் - அணைந்த அந்த நாளிலே, பிழையா வஞ்சினம் செய்த - தான் நம் திறத்துப் பிழையாமையைப் புலப்படுத்தும் சூளைச் செய்த, கள்வனும் - வஞ்ச நெஞ்சுடையவனும், கடவனும் - அவ்வஞ்சினத்தை நிறைவேற்றும் கடப்பாடுடையவனும், புணைவனும், - நமக்கோர் புணைபோன்று இருப்பவனும், தானே - அத்தலைவனே; அன்றிப் பிறரில்லை.

(முடிபு) துறைவன் குறியானாயினும் குறிப்பினும், அறியாற்கு யான் உரைப்பலோ? அணை இய அந்நாள் வஞ்சினஞ் செய்த கள்வனும் கடவனும் புணைவனும் தானே.

(கருந்து) தலைவன தன் மொழி தவறாது வரைந்து கொள்ள வேண்டும்.

(வி - ரை) எறி - வலைஞரால் எறியப்படுகின்றவென்பதும் பொருந்தும். கலித்த - ஆரவாரஞ் செய்த வெனலும் ஆம். விலங்கு

நீர் - மாறுபட்ட நீரென்பதும் இயையும். நறுவீ ஞாழலென்றதை ஞாழல் நறுவீயெனமாற்றுக.

பலமலர்கள் பரவிய இடத்திற்கு வெறியாடும் இடத்தை உவமை கூறுவர், அவ்விடம் தெய்வத்தை வழிபடுவோர் சிந்தும் மலர்கள் நிறைந்திருத்தலின்.

பிறிது - களவொழுக்கத்தினையன்றி வரைதலாகிய பிறிது என்பதும் அமையும். அறியானென்றது சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது.

எய்த்த தோளென்றதனால் தலைவனது ஒழுகலாறு தனக்கு உடல் மெலிவை யுண்டாக்கினமையைப் புலப்படுத்தினள். வஞ்சினம் செய்தற்கேற்ப ஒழுகாமையின் கள்வனென்றாள். கள்வனாயினும் அவனை ஒறுப்பாரிலர், தானே அதனை நிறைவேற்றும் கடப்பாடுடையனென்பாள் கடவனென்றாள். எங்ஙனமாயினும் அவனையன்றிப் புகல் பிறரிலரென்பாள் புனைவனென்றாள்.

வஞ்சினமென்றது, 'நின்னிற் பிரியேன், பிரியின் ஆற்றேன்' என்று இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவன் செய்த சூளை. பிரியாதிருத்தல் வரைந்துகொண்டாலன்றி நிகழாதாதலின் அவ்வஞ்சினத்தை நிறைவேற்றுதற்கு வரைதலே தக்கதென்பதைப் புலப்படுத்தினள்.

(ஒப்பு.) 1. சுரு எறிதல்: "வயச்சுரு வெறிந்த புண்டணிந்து" (குறுந். 269 : 3.)

2. நறுவீ ஞாழல்; "நறுமலர், ஞாழல்", "ஞாழல், மணங்கமழ் நறுவீ வரிக்குந் துறைவன்" (நற். 106 : 6-7, 267 : 4-5); "எக்கர் ஞாழ னறு மலர்" (ஐங். 150 : 1.)

ஞாழலும் புன்னையும்: "நறுவீ ஞாழன் மாமலர் தாஅய்ப், புன்னை தைதந்த வெண்மண லொருசிறை", "புதுவீ ஞாழலொடு புன்னை தாஅம், மணங்கமழ் கானல்", "சிறுவீ, ஞாழலொடு கெழீஇய புன்னையங் கொழுநிழல்" (நற். 96 : 1-2, 167 : 8-9, 315 : 6-7); "புன்னையொடு ஞாழல் பூக்குந் தண்ணந் துறைவன்", "பொன்னிணர் ஞாழன் முன்னியிற் பொதிய விழ், புன்னையம் பூஞ்சினைச் சேக்குந் துறைவன்". (ஐங். 103 : 1-2, 169 : 2-3); "எக்கர்ப் புன்னை யின்னிழ லசைஇ.....ஞாழ லோங்குசினைத் தொடுத்த கொடுங்கழித், தாழை வீழ்கயிற் றூச றூங்கி", "பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும், கானலம் பெருந்துறை", "ஞாழலொடு கெழீஇப், படப்பை நின்ற மூடத்தாட் புன்னைப், பொன்னேர் நுண்டாது நோக்கி" (அகநா. 20 : 3-6; 70 : 9-10, 180 : 12-4.)

3. வெறியயர் களம்: குறுந். 53 : 3, ஒப்பு.

2-3. பல மலர்கள் பரந்த இடத்திற்கு வெறியயர் களம்: குறுந். 53 : 2-3;

மதுரைக். 279-84; மலைபடு. 149-50; அகநா. 114: 1-3, 182: 15-7; பெருங். 2. 2: 104-5.

6. பணைத் தோள்: குறுங். 268: 6, ஒப்பு.

மென்றோள்: குறுங். 90: 7, 268: 6.

தோளே அணைதல்: குறுங். 193: 5, ஒப்பு.

5-6. தோள் மெலிதல்: குறுங். 87: 5, ஒப்பு.

7. பிழையா வஞ்சினம்: குறுங். 36: 5; அகநா. 267: 2, 378: 18.

8. தலைவனைக் கள்வனென்றல்: குறுங். 25: 1, ஒப்பு; குறள். 1258; கம்ப. மிதிலைக். 55. கடவன்: புறநா. 106: 5

7-8. தலைவன் வஞ்சினம் பொய்த்தல்: குறுங். 25: 1-2, ஒப்பு.

6-8. தலைவன் தலைவியின் தோளே அணைந்தபோது வஞ்சினம் கூறுதல்: குறுங். 36: 4-5. (உகஅ)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்தது கண்ட தலைவி வேறுபட்டாளாக, "நீ ஆற்ற வேண்டும்" என்று வற்புறுத்திய தோழியை நோக்கி, "நான் எங்ஙனம் ஆற்றுவேன்? என் உயிர் நில்லாது போலும்" என்று தலைவி கூறியது.]

உகக. *மானேறு மடப்பிணை தழீஇ மருள்கூர்ந்து*
கான நண்ணிய புதன்மறைந் தொடுங்கவும்
கையுடை நன்மாப் பிடியொடு பொருந்தி
மையணி மருங்கின் மலையகஞ் சேரவும்
5. *மாலை வந்தன்று மாரி மாமழை*
பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்
இன்னும் வாரா ராயின்
என்னுந் தோழிநம் மின்னுயிர் நிலையே.

எ - து. பருவ வரவின்கண் வேறுபட்ட கிழத்தி வன்புறை (பி - ம். வன்பொறை) யெதிரழிந்து சொற்றது.

[வன் புறை - தோழி வற்புறுத்தல்.]

தாயங்கண்ணன்.

(பி - ம்.) 3 'பொருந்திய' 5 'மாழைப்' 6 'நன்னிறஞ்'

(ப - ரை.) தோழி—, மான் ஏறு - ஆண்மான்கள், மடம் பிணை தழீஇ - மடப்பம் பொருந்திய பெண்மான்களைத் தழுவி, மருள் கூர்ந்து - மயக்கம் மிக்கு, கானம் நண்ணிய - காட்டினிடத்துப் பொருந்திய, புதல் மறைந்து ஒடுங்கவும் - புதலின் கண்ணே

மறைந்து ஒடுங்கியிருக்கும்படியும், கை உடை நல்மா - துதிக்கையையுடைய நல்ல ஆண்யானைகள், பிடியொடு பொருந்தி - பெண்யானைகளோடு சேர்ந்து, மை அணி மருங்கின் மலையகம் சேரவும் - மேகங்களை அணிந்த பக்கத்தையுடைய மலையிடத்தை அடையும்படியும், மாரி மா மழை - கார்காலத்துக்குரிய பெரிய மழை, மாலை வந்தன்று - மாலைக் காலத்திலே வந்தது; பொன் நேர் மேனி - பொன்னையொத்த எனது மேனியின், நல் நலம் சிதைத்தோர் - நல்ல அழகைக் கெடுத்த தலைவர், இன்னும் வாரார் ஆயின்—, நம் இன்னுயிர் நிலை - நம்முடைய இனிய உயிர் நிலை, என் ஆம்-எத்தகையது ஆகும்?

(முடிபு) தோழி, மானேறு ஒடுங்கவும், மா சேரவும், மழை வந்தன்று; சிதைத்தோர் வாராராயின் உயிர்நிலை என்னும்?

(கருத்து) தலைவர் வாராவிடின் என் உயிர் நீங்கும்.

(வி - ரை.) மழையை அஞ்சி மான் முதலிய விலங்கையுடைய நன்மா என்றலின் யானையாயிற்று. மழை கூறினமையின் கார் காலமாயிற்று.

பொன் ஏர் மேனி - இப்பொழுது பசலை எழுகின்ற எனது மேனி யெனலும் பொருந்தும்.

தலைவன் மீண்டு வருவதாகக் கூறிச் சென்ற பருவம் வந்ததன்றி அப்பருவத்தில் ஆண் விலங்குகள பெண் விலங்குகளோடு ஒன்றுபட்டதும் தலைவியின் ஆற்றுமையை மிகுவிப்பதாயிற்று. 'அவ்விலங்குகள் பெற்றபேறு யாம் பெற்றிலேமே!' என்று கவன்றாள்.

(மேற்.) 6. நேரென்பது உவம உருபாக வந்தது (நன். 366, மயிலை.)
(ஒப்பு.) 2. மானேறும் பிணையும்: குறுந். 256: 2-3.
பொன்னேர் மேனி: குறுந். 101: 4, ஒப்பு; நற். 166: 1-2.
8. "என்னை வதுகொனம் மின்னுயிர் நிலையே" (ஐங். 228: 4.)
இன்னுயிர்: குறுந். 216: 7, 334: 5, 349: 7. (ககக)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தானாக, "ஊரினர் கூறும் அலர் பெரிதாயிற்று" என்று தோழிக்குக் கூறுவாளாய், விரைவில் வரைந்து கொள்ள வேண்டுமென்பதை அவனுக்குத் தலைவி புலப்படுத்தியது.]

நஉ0. பெருங்கடற் பரதவர் கொண்மீ னுணங்கல்
அருங்கழிக் கொண்ட விறவின் வாடலொடு

நிலவுநிற வெண்மணல் புலவப் பலவுடன்
எக்கர்தொறும் பரக்குந் துறைவனெ டொரு
5. நக்கதோர் பழியு மிலமே போதவிழ் [நாள்
பொன்னிணர் மரீஇய புள்ளிமிழ் பொங்கர்ப்
புன்னையஞ் சேரி யிவ்வூர்
கொன்னலர் தூற்றுந்தன் கொடுமை யானே.

எ - து. அலரஞ்சி யாற்ருளாகிய தலைமகள், தலைவன் கேட்பா னெகத் தோழிக்குக் கூறியது.

தும்பிசேர் கீரன். (பி - ம். தும்பிசேர்கீரன், தும்பி மோசி கீரன்.)

(பி - ம்) 1 'கோண்மீனுணங்கலின்' 2 'கழிகொண்ட' 4 'பரிக்குந்' 6 'புள்ளுமிழ்' 8 'தூற்றத்தன்', 'தூர்த்தன'

(ப - ரை) தோழி, பெரு கடல் - பெரிய கடலினிடத்தே, பரதவர் கொள்மீன் உணங்கல் - பரதவர் கொண்ட மீனினது உலர்ந்த வற்றல், அரு கழி கொண்ட - நீந்துதற்கு அரிய கழியி னிடத்தே அவர் கைக்கொண்ட, இறவின் வாடலொடு - இறுமீனின் வாடிய வற்றலோடு, நிலவு நிறம் வெள் மணல் புலவ - நிலவினது நிறத்தைக் கொண்ட வெள்ளிய மணல் புலால் நாறும்படி, பல உடன் - பல ஒருங்கே, எக்கர் தொறும் பரக்கும் துறைவனெடு - மணல் மேடு தோறும் பரவுகின்ற துறையையுடைய தலைவனெடு, ஒரு நாள் நக்க தோர் பழியும் இலம் - ஒரு நாளேனும் மகிழ்ந்து விளையாடிய பழி இல்லேம்; அங்ஙனம் இலமாகவும், போது அவிழ் பொன் இணர் மரீஇய - செவ்வி அரும்பு மலர்ந்த பொன் போன்ற பூங்கொத்துக்கள் பொருந்திய, புள் இமிழ் - வண்டுகள் ஒலிக்கின்ற, பொங்கர் புன்னை அம் சேரி - கிளைகளையுடைய புன்னைமரங்களையுடைய சேரிகள் உள்ள, இ ஊர் - இவ்வூரார், தன் கொடுமையான் - தம்பாலுள்ள கொடிய தன்மையினால், கொன் அலர் தூற்றும் - வீணே பழிமொழிகளைக் கூறுவர்.

(முடிபு) துறைவனெடு ஒரு நாள் நக்கதோர் பழியுமிலம்; இவ்வூர் அலர் தூற்றும்.

(கருத்து) ஊரினர் கூறும் அலர் பெரிதாயிற்று

(வி - ரை) புலவ - புலால் நாற்றம் வீச; இஃது புலாவவென வும் வரும்; "புலாவ வீர்க்கும் (அகநா. 8: 7.) ஒரு நாளு மென உம்மையை மாறிக் கூட்டுக; உம்: இழிவு சிறப்பு; ஒரு நாளே னும் நக்கபழியிலமென்றுளேனும் கருதியது சில நாளே மகிழ்ந்தே மென்பது; தன் நெஞ்சத்து நிறைவின்மையின் அது

பெற்றும் பெறுததாயிற்று. நக்கது : அவையல் கிளவி. பொன்னிணர் மரீஇய புன்னையெனக் கூட்டுக. புள் - நாரை முதலியனவுமாம். புன்னையஞ்சேரி : அம், சாரியை. ஊர் : ஆகுபெயர். சேரி - தெரு.

வலியர் கொண்டமீனும் இறவும் மணல் முழுதும் புலவப் பரக்குமென்றது, தலைவன் என்னோடு கொண்ட நட்பு ஊர் முழுதும் அலர் கூறப் பரவியதென்ற குறிப்பினது.

(ஒப்பு.) 2. இறவின் வாடல் : "முடிவலை முகந்த முடங்கிருப் பாவைப், படுபுள் ளோப்பலிற் பகன்மாய்ந் தன்றே", "சூழ்கழி யிறவின், கணங்கொள் குப்பை யுணங்குதிற லேக்கி" (நற். 49 : 3 - 4. 101 : 2 - 3.)

கழியில் இருமீன் உண்மை : "தெண்கழிச் சேயிருப் படூஉம்" (ஐங் 196 : 3.)

1 - 2. மீனையும் இறவையும் பரதவர் தொகுத்தல் ; "இருங்கழி முகந்த செங்கோ லவ்வலை, முடங்குபுற விறவோ டினமீன் செறிக்கும்" (அகநா. 220 : 16 - 7)

3. மணலுக்கு நிலவு : குறுந். 123 : 2, ஒப்பு.

4 - 5. தலைவி தலைவனொடு நகுதல் : குறுந. 169 : 3, 226 : 7.

7. புன்னையஞ் சேரி: (குறுந். 351 : 6); "புன்னையங் கொழுநிழன் மூன்னுய்த்துப் பரப்பும், துறைநணி யிருந்த பாக்கமும்" (நற். 101 : 4 - 5.)

6 - 7. புன்னைப் பூங்கொத்துக்குப் பொன் : "பொன்னிணர் நறுமலர்ப் புன்னை", "பொன்னென, நன்மலர் நறுவீ தாஅம், புன்னை நறும் பொழில்" (அகநா. 126 : 15, 360 : 17 - 9.)

7 - 8. ஊரினரது கொடுமை : குறுந். 24 : 5 - 6. (கூ.ஒ)

தோழி கூற்று

[நொதுமலர் வரையப் புக்க காலத்தில், "நான் அறத்தொடு நிற்பேன்" என்று தலைவிக்குத் தோழி கூறியது]

நூ.உ. மலைச்செஞ் சாந்தி னுரை மார்பினன்
சுனைப்பூங் குவளைச் சுரும்பார் கண்ணியன்
நடுநாள் வந்து நம்மனைப் பெயரும்
மடவர லரிவைநின் மார்பம ரின்றுணை
5. மன்ற மரையா விரிய வேறட்டுச்
செங்க ணிரும்புலி குழுமு மதலை
மறைத்தற் காலையோ வன்றே
திறப்பல் வாழிவேண் டன்னைநங் கதவே.

எ - து. தோழி, கிழத்திக்கு நொதுமலர் வரையுமிடத்து, "அறத்தொடு நிற்பேன்" என்றது.

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை]

(பி - ம்.) 1 'மலிச்சேரஞ் செஞ்சாந்தினை', 'மலிச்சேரஞ் செஞ்சாந்தின்' 4 'மடமாவரிவை' 8 'திறம்பல்'

(ப - ரை.) அன்னை—, மடவரல் அரிவை - மடப்பம் வருதலை யுடைய அரிவையே, நின் மார்பு அமர் இன் துணை - நினது மார்பைப் பொருந்தும் இனிய தலைவன், மலை செ சாந்தின் ஆரம் மார்பினன் - மலையில் உண்டாகிய செஞ்சந்தனத்தையும் முத்து மாலையையும் அணிந்த மார்பினனுகியும், சுனை பூ குவளை சுரும்பு ஆர் கண்ணியன் - சுனையில் மலர்ந்த குவளையினது வண்டுகள் நிறைந்த கண்ணியை உடையவனுகியும், நம் மனை நடு நாள் வந்து - நம்மூடைய வீட்டிற்கு நள்ளிரவில் வந்து, பெயரும் - மீண்டு செல்வான்; அக் காலத்தில் மன்றம் மரையா இரிய - மன்றத்தின் கண் உள்ள மரையாவானது நீங்க, ஏறு அட்டு - அதன் ஆணைக் கொன்று, செ கண் இரு புலி குழுமும் - செவ்விய கண்களை யுடைய கரிய புலி முழங்கும்; அதனால்—, மறைத்தற்காலை அன்று - நம் ஒழுக்கத்தை மறைக்கும் காலம் இஃது அன்று; நம் கதவு - நமது மந்தணத்தை, திறப்பல் - வெளியிடுவேன்; வேண்டு - இதனை நீ விரும்புவாயாக.

(முடிபு) அன்னை, அரிவை, நின் துணை, மார்பினன், கண்ணி யன், வந்து பெயரும்; புலி ஏறு அட்டுக் குழுமும்; அதனால் மறைத்தற்காலை அன்று; நம் கதவு திறப்பல், நீ வேண்டு.

(கருத்து) நான் அறத்தொடு நிற்பேன்.

(வி - ரை.) மலிச்சாந்தை யணிந்து வருவதனால் தலைவன் வரு கையைப் பிறர் அச்சாந்தின் மணத்தாலறிவரென்னும் குறிப்பும் பெறப்படும். மார்பென்றது ஆகுபெயரால் நகில்களைக் குறித்த லுமாம். மன்றம் - பொதுவிடம். புலிகுழுமும் என்றது தலைவன் வரும் இடையாமத்தில் அப்புலியினால் அவனுக்கு ஏதம் நிகழ் தலுங் கூடுமென்ற அச்சத்தைக் கொண்ட நினைவிற்று. அதனால் இனி அறத்தொடு நின்று அவனது வரைவை ஏற்றுக் கொள்ளச் செய்தலே நன்றென்பதைத் தோழி உணர்த்தினள்.

கதவு திறப்பலென்றது, பிறரறியாவாறு மறைக்கப்பட்டிருந்த நும் நட்பைப் பிறருக்கு வெளியிடுவேனென்ற பொருளையுடையது.

வாழி: அசைநிலை. நான் அறத்தொடு நிற்ப, அதனால் நீ வாழ்வாயாக வென்பதும் ஆம்.

நம் கதவென்றுள் தானும் அம்மறையை உணர்ந்தவளாதலின்.

(ஒப்பு) 1. தலைவன் சந்தனம் பூசி வருதல்: குறுங். 150 : 3, ஒப்பு; நற். 168 : 10 - 11, 344 : 5 - 8; அகநா. 100 : 1 - 4.

2. சுணைப்பூங் குவளை: குறுங். 59 : 2 - 3, ஒப்பு; நற். 105 : 8.

2 - 3. தலைவன் குவளைப்பூ அணிந்து வருதல்: நற். 376 : 5 - 6; அகநா. 38 : 2, 128 : 9 - 10.

1 - 3. தலைவன் சந்தனம் பூசியும் கண்ணி பூண்டு வருதல்: "நாடன், ஆர மார்பி னரிஞிமி ருர்ப்பத், தாரன் கண்ணிய னெஃகுடை வலத்தன்..... புகுதந்து" (அகநா. 102 : 9 - 13.)

4. மடவரலரிவை: குறுங். 378 : 5.

3 - 4. தலைவன் நடுநாளில் வருதல்: குறுங். 268 : 5, 311 : 4 - 5.

5. மன்ற மரையா: "மரைசேர் மன்றத்து" (அகநா. 373 : 2.)

6. புலி குழுமுதல்: ஐங். 218 : 3 - 4, 274 : 2.

செங்கணிரும் புலி: நற். 148 : 9; அகநா. 92 : 4.

5 - 6. மரையாவைப் புலி கொல்லுதல்: மலைபடு. 505 - 6; அகநா. 3 : 7 - 9.

8. கதவு திறப்பல்: குறுங். 333 : 6. வாழி வேண்டன்னை: குறிஞ்சிப் 1; ஐங். 101 - 10, 201 - 10; அகநா. 48 : 1, 68 : 1. (கூஉக)

தலைவி கூற்று

[தலைமகனது வரவு நீட்டித்ததாகத் தோழி இயற்பழித்த விடத்து, தலைவன் வர, அஃதுணர்ந்த தலைவி, "நாம் அவரூருக்குப் போய் அவரோடு பழகுவோம்" என்று கூறியது.]

கூஉஉ. அமர்க்க ணமா னஞ்செவிக் குழவி
கானவ ரெடுப்ப வெரீ இ யினந்தீர்ந்து
கான நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளைய ரோம்ப மரீ இயவ ணியந்து
5. மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவி னினியவு முளவோ
செல்வாந் தோழி யொல்வாங்கு நடந்தே.

எ - து. தலைமகன் வரவுணர்ந்து (பி - ம். வரைவுணர்ந்து) தலைமகள் இயற்பட மொழிந்தது.

ஐயூர் முடவன்.

(பி - ம்.) 2 'வொரீஇ' 7 'யொல்லாங்கு

(ப - ரை.) தோழி—, அமர் கண் ஆமான் அம்செவி குழவி - மேவுதலையுடைய காட்டுப் பசுவின் அழகிய காதுகளையுடைய

கன்று, கானவர் எடுப்ப வெரீஇ இனம் தீர்ந்து - வேட்டுவர் எழுப்புவதனால் அஞ்சித் தன் இனத்தினின்றும் பிரிந்து சென்று, கானம் நண்ணிய சிறுகுடி பட்டென - காட்டினிடத்துப் பொருந்திய சிறிய ஊரிலே அகப்பட்டதாக, இளையர் ஓம்ப மரீஇ-இளைய மகளிர் பாதுகாப்பக் கலந்து, அவண் நயந்து - அவ்விடத்தை விரும்பி, மனை உறை வாழ்க்கை வல்லியாங்கு - வீட்டின்கண் உறையும் வாழ்க்கையில் வன்மை பெற்றது போல, மருவின - கலந்து பழகுதலைக் காட்டிலும், இனியவும் உளவோ - இனிய பொருள்களும் இருக்கின்றனவோ? ஆதலின் நாமும் தலைவரோடு மருவும் பொருட்டு, ஒல் வாங்கு நடந்து-இயன்ற அளவில் நடந்து, செல்வாம் - தலைவன் இருக்குமிடத்திற்குச் செல்வேம்.

(முடிபு) தோழி, ஆமான் குழவி எடுப்ப வெரீஇத் தீர்ந்து குடிப்பட்டென, ஓம்ப மரீஇ நயந்து வல்லியாங்கு, மருவின் இனியவும் உளவோ? நடந்து செல்வாம்.

(கருத்து) தலைவர் இருக்குமிடத்துக்கு யாம் போவோமாக.

(வி - ரை) தலைவன் குறியிடத்து உரிய காலத்தே வாராமையின், தோழி, "அவனது இயல்பும் நம் இயல்பும் ஒத்தனவல்ல" எனக் கூறி இயற்பழித்தாள். அப்பொழுது தலைவன் வந்து சிறைப்புறத்தே நின்றான். அதனை அறிந்த தலைவி, "அவர் வாராவிடினும் நாமேனும் அவர் உள்ள இடத்திற்கு நடந்து செல்வேமாக" என்று கூறித் தன் ஆதரவைப் புலப்படுத்தினாள்.

அமர்த்தல் - மேவுதல். (புறநா. 117 : 4, உரை.) எடுப்ப - மறைந்திருந்த புதல்களிலிருந்து கொம்பு முதலியன ஊதுதலாலும் பிறவாற்றாலும் எழுப்ப.

இளையர் - சிறுமைமாம். வல்லியாங்கு மருவுத லென்று தொழிற் பெயரின் முதனிலையோடு இயைக்க.

ஆமானின் குழவி தன் இயல்புக்கு ஒவ்வாத குடியிற் பட்டாலும் அவர்களோடு மருவி அவரது வாழ்க்கையிலே வன்மை பெற்றதுபோல் தலைவர் நம் இயல்புக்கு ஒவ்வாரெனினும் அவரோடு பழகி அவருடைய இயல்புகளைப் பெற்று வாழ வேண்டுமென உவமையை விரித்துக் கொள்க.

வேறுபட்ட இயல்புடையாருள் பழக்கத்தினால் இனியராதலை,

"பழகிய பகையும் பிரிவின் றே" (நற். 108 : 6)

என்பது புலப்படுத்தும்.

தலைவன் வரவறிந்த தலைவி, 'நடந்து செல்வாம்' என்று கூறினாள், அது நேரான தென்னும் கருத்துடையளாதலின்.

(ஒப்பு.) 1- அமர்க்கணமான் : நற். 165 : 1 ; புறநா. 117 : 4-5.
3. சிறுகுடி : குறுந். 184 : 2, ஒப்பு.
1-3. ஆமான் குழவி இனத்திற் பிரிந்து அகப்படல் : "தொழுதி போக வலிந்தகப் பட்ட, மடநடை யாமான் கயமுனிக் குழவி" (மலைபடு. 499-500)
7. பி - ம், ஒல்லாங்கு : கலி. 3 : 11. (கூஉ)

தலைவன் கூற்று

[தான் மேற்கொண்ட வினை முடிந்த விடத்துத் தலைவன் பாகனை நோக்கி, "தலைவியைப் பிரிந்திருக்கும் நாள் நன்னாளன்று; பயனற்றது; ஆதலின் அவனை யடையும்படி விரைவில் தேர் விடுக" என்பது படச் சொல்லியது.]

எல்லா மெவனே பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய வெழாலின்
வானத் தெழுஞ்சுவர் நல்லிசை வீழப்
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
5. பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழு நாளே.

எ - து. வினை முற்றினன் பாகற்கு உரைத்தது.

பதடி வைகலார்.

(பி - ம்.) 3 'தெடுஞ்சுவர்', 'தஞ்சுவா'

(ப - ரை.) பாணர் படுமலை பண்ணிய - பாணர்கள் படுமலைப் பாலையென்னும் பண்ணை வாசித்த, எழாவின் - இசையினது, வானத்து எழும் நல் சுவர் இசை வீழ-வானத்தின் கண் எழுகின்ற நல்ல உச்ச ஒலியை ஒப்ப ஒலி யுண்டாக, பெய்த புலத்து - மழை பெய்த கொல்லையின் கண், பூத்த முல்லை - மலர்ந்த முல்லையினது, பசு முகை தாது நாறும் நறுநுதல் - பசிய அரும்பினது தாதின் மணம் போன்ற மணம் வீசுகின்ற நல்ல நெற்றியையுடைய, அரிவை தோள் இணை துஞ்சி - தலைவியின் இரண்டு தோள்களிலே துயின்று, கழிந்த நாள் இவண் வாழும் நாள் - சென்ற நாட்களே இவ்வுலகத்தில் வாழும் நாட்களாகும்; எல்லாம் - ஏனைய நாட்க ளெல்லாம், எவன் - என்ன பயனை உடையன? பதடி வைகல் - அவை உள்ளீடில்லாத கருக்காயைப் போன்ற நாட்கள்.

(முடிபு) அரிவை தோளினைத் துஞ்சிக் கழிந்த நாள் வாழும் நாள் ; எல்லாம் எவனே ? பதடிவைகல்.

(கருத்து) விரைவில் தலைவிபாற் போய்ச் சேர்தல்வேண்டும்.

(வி - ரை.) இவண் வாழுநாளெனத் தனியே பிரித்துக் கூறுதலின், எல்லா மென்றது தலைவியோடு அளவளாவாத ஏனைய நாட்களைக் குறித்தது. எவனே : ஓ அசைநிலை.

இன்பமாகிய உள்ளீடின்மையின் பதடிவைகலென்றார். மேட்டுநிலத்திற் பெய்த மழையின் ஓசைக்குப் படுமலைப் பாலையிசை உவமை ;

> "பலவயி னிலைஇய குன்றிற் கோடுதோ
> றேயினை யுரைஇயரோ பெருங்கலி யெழிலி
> படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்
> பெழீஇ யன்ன வுறையினை" (நற். 139 : 2-5)

என்று பிறரும் கூறுதல் காண்க.

படுமலை - படுமலைப் பாலை ; பாலைப்பண் பன்னிரண்டனுள் ஒன்று. (சிலப் 3 : 70-71, அடியார்.) எழால் - இசையோசை.

சுவலென்பது சுவரென வந்தது ; சுவல் - மேலிடம் ; என்றது மந்தம், உச்சம், சமமென்ற மூன்றில் உச்ச நிலையைக் குறித்தது போலும். வீழ் : உவமவுருபு. பசுமுகை - செவ்வியரும்பு. நாறுமென வைத்தலின் நறுமை, நன்மையாயிற்று. அரிவை : பருவங் குறியாது தலைவி யென்னுந்துணையாய் நின்றது. நாளே : ஏ அசைநிலை.

தலைவியோடிருக்கும் நாட்களே சிறந்தனவெனச் சிறப்பிக்கும் வாயிலாக அவளை விரைவில் அடையவேண்டுமென்ற தன் ஆர்வத்தைப் புலப்படுத்தினள். அது கேட்ட பாகன் தேர் பண்ணி விரைவில் தலைவிபாற் சேர்த்தல் பயன்.

தலைவியோடு இன்புறுத நாட்களைப் பதடி வைகலெனத் தலைவன் கூறியதாக அமைத்த சிறப்பால் இச் செய்யுளின் ஆசிரியர், "பதடிவைகலார்" என்னும் பெயர் பெற்றார்.

(ஒப்பு.) 2. படுமலைப் பாலை : புறநா. 135 : 7.

4-5. முல்லை நாறும் நுதல் : "நின், நன்னுத னுறு முல்லை மலர்" (ஐங். 492 : 1-2.)

"முல்லை காலொடு மயங்கி, மையிருங் கான நாறு நறுநுதல்" (அகநா. 43 : 9-10.)

நுதல் மணத்தல் : குறுந். 22 : 5, ஒப்பு.

6. தலைவியின் தோளில் தலைவன் துஞ்சுதல் : "வேய்புரை மென்றோ ளின்றுயில்" (குறிஞ்சிப். 242); "வேயுறழ் மென்றோட் டுயில் பெறும்

(கலி. 104 : 24) ; "தோள்புலம் பகலத் தஞ்சி", "முருந்தோர் முறுவ லீளையோள், பெருந்தோ ளின்றுயில் கைவிடு கலனே" (அகநா. 187 : 1, 193 : 13-4) ; "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்" (குறள், 1103.) (கூஉக)

தோழி கூற்று

[தலைவனிடம் தலைவி இற்செறிக்கப்படுவாளென்பதனைக் கூறிய தோழியை நோக்கி, "யான் ஆண்டு வந்து இரவுக் குறியில் தலைவியைக் கண்டு செல்வேன் ; அப்பால் வரைந்து கொள்வேன்" என்று தலைவன் கூற, அது கேட்ட தோழி, "நீ நின் அன்பின் மிகுதியால் வழியின் ஏதம் பாராது வருகின்றாய் ; இவள் அதற்கு அஞ்சுவாள்" என்று கூறி வரைவு கடாயது.]

கூஉச. கொடுங்கான் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை
இனமீ னிருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்
5. மடனுடை மையி னுயங்கும் யானது
†கவைமக நஞ்சுண் டாஅங்
கஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே.

எ - து. செறிப்பறிவுறுக்கப்பட்டு, "இராவாரா வரைவல்" என்றற்கு (பி - ம். என்றர்க்கு)த் தோழி அதுமறுத்து வரைவு கடாயது.

[செறிப்பறிவு .....என்றற்கு - தலைவி இற் செறிக்கப்படுவாளென்பதைத் தோழியால் உணர்த்தப் பெற்று, இரவுக்குறி வந்து தலைவியோடு அளவளாவி அப்பால் வரைந்து கொள்வேனென்ற தலைமகனுக்கு.]

கவை மகன்.

(பி - ம்.) 1 'கொடுந்தாண்' 5 'னுயக்கும்'

(ப - ரை.) பெரும - தலைவ, நீ நின் நயன் உடைமையின் - நீ நினது அன்புடைமையால், கொடு கால் முதலை கோள்வல் ஏற்றை - வளைந்த கால்களையுடைய முதலையினது கொள்ளுதல் வல்ல ஆணை னது, வழி வழக்கு அறுக்கும் - வழியினிடத்தே பிறர் செல்லு வதை நீக்கும், கானல் பெரு துறை - கானலையுடைய பெரிய கடற்

றுறையின்கண், இனம் மீன் இரு கழி நீந்தி - திரளாகிய மீன்களை யுடைய கரிய கழியை நீந்திக்கடந்து, வருதி - வருகின்றாய் ; இவள் தன் மடன் உடைமையின் உயங்கும் - இத்தலைவி தன் அறியாமை யை யுடைமையினால் வருந்துவாள் ; யான்—, என் நெஞ்சத்தான் - என் மனத்தினுள்ளே, கவை மகநஞ்சு உண்டாங்கு – இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர் திறத்தும் ஒரு தாய் வருந்துவது போல, அது அஞ்சுவல் - நீ அங்ஙனம் வருதலை அஞ்சுவேன்.

(முடிபு) பெருமை, நீ நயனுடைமையின் நீந்தி வருதி ; இவள் தன் மடனுடைமையின் உயங்கும் ; யான் அஞ்சுவல்.

(கருத்து) நீ இரவில் வருதல் நன்றன்று.

(வி - ரை.) இரவுக்குறி வேண்டிய தலைவனுக்கு ஆற்றின் ஏதம் கூறி அது மறுத்த வாய்பாட்டால் வரைவுகடாயது இது.

நீர்வழியிற் போவாரைக் கொல்லுந் தொழிலுடைமையின், வழிவழக்கறுக்கும் பெருந்துறை யென்றாள் ; இதனால், 'நீ அக் கழி யின்கண் நீந்தி வருங்கால் நினக்கு ஏதம் நேருங்கொலோவென அஞ்சினேம் ' என்னும் குறிப்பை அறிவித்தாளாயிற்று.

கானலம்பெருந்துறை : அம் சாரியை. நயன் - அன்பு. மடன் - நின் அன்பையும், வழியில் நிகழும் ஏதத்திற்கு அஞ்சாத நின் ஆண்மையையும் அறியாமை. அது வென்றது இரவுக்குறியை.

'நீ நின் அன்பினால் வருதலின் நீ வருதலைத் தடுத்தலும் தக்க தன்று ; நினக்கு ஏதம் வருமோவென இவள் உயங்குதலின் இர வுக்குறி நேர்தலும் தக்கதன்று. நும்மிருவருக்கும் துன்பமுண் டாகும் இந்நிலையில் இரட்டைப் பிள்ளைகள் நஞ்சுண்டால் இரு வர் திறத்திலும் இரங்கும் தாயைப் போல, யான் இருவர் திறத்தும் இரக்கமுடையேன் ' என்றாள்.

இவ்வுவமையினால், இரண்டு மகவினுக்கும் ஒருங்கே நஞ்சு தீர்க்கும் மருந்து தருதலே தக்கதாதல் போல, இருவருக்கும் நன்மை தரும்வரையே ஏற்புடைத்தென்ற வரைவுகடாதற் பொரு ளும் பெறப்படும்.

கவைமகவின் செய்தியை உவமையாக எடுத்தாண்ட சிறப் பால் இப்பாட்டை இயற்றிய புலவர் கவைமகனென்னும் பெயர் பெற்றார்.

(மேற்.) 1. ஏற்றைக்கிளவி ஆற்றலொடு புணர்ந்த ஆண்பாலுக் கெல்லாம் உரித்து (தொல். மரபு. 49, பேர்.)

(ஒப்பு.) 1. கொடுங்கால் முதலை : குறிஞ்சிப். 257 ; மலைபடு. 90.

2. வழக்கறுத்தல் : புறநா. 368 , 9 : சீவக. 461, 907.

3. இனமீனிருங்கழி : குறுந். 9 : 5 ; திணைமொழி. 44.

6-7. ஒருவாறு ஒப்பு : "இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்" (கமப. அயோத்தியா. மந்திரப். 32.) (கூஉசை)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்தகாலத்து ஆற்றுளென எண்ணிக் கவலையுற்ற தோழியை நோக்கி, "அவர் செல்லாரென நினைந்து, போவீராக வெனச் சொன்னேன். இப்பொது அவர் யாண்டுள்ளாரோ!" என்று தலைவி வருந்திக் கூறியது.]

உரு. சேறுஞ் சேறு மென்றலிற் பண்டைத்தன்
மாயச் செலவாச் செத்து மருங்கற்று
மன்னிக் கழிகென் றேனே யன்னே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
5. கருங்கால் வெண்குருகு மேயும் [நிறைந்தே.
பெருங்குள மாயிற்றென் னிடைமுலை

எ - து. பிரிவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி மெலிந்து உரைத்தது.

[மெலிந்து - வருந்தி.]

நன்னகையார்.

(பி - ம்.) 1 'பண்டைத்தம்' 2 'செலவாசெத்து' 6 'நனைந்தே'

(ப - ரை) தோழி—, சேறும் சேறும் என்றலின் - செல்வேம் செல்வேமென்று தலைவன் பலகாற் சொல்லியதனால், பண்டை தன் மாயம் செலவா செத்து - முன்பு அவன் கூறிய பொய்ச் செலவாக எண்ணி, மருங்கு அற்று - என் பக்கத்தினின்றும் நீங்கி, மன்னி கழிக என்றேன் - நிலைபெற்று நீங்குக என்றேன்; அன்னே - ஐயோ! ஆசு ஆகு எந்தை யாண்டுளன் கொல்லோ - நமக்குப் பற்றுக் கோடாகிய தலைவன் எங்கே இருக்கின்றானே! என் இடை முலை நிறைந்து - என் நகில்களின் இடையிலுள்ள இடம் அவனது பிரிவால் அழுத என் கண்ணீரால் நிறைந்து, கருகால் வெள்குருகு மேயும் - கரிய காலையுடைய வெள்ளிய நாரை உணவை உண்ணும், பெருகுளம் ஆயிற்று - பெரிய குளம் போல ஆயிற்று.

(முடிபு) என்றலின், செத்து, கழிக என்றேன்; எந்தை யாண்டுளன் கொல்லோ! என் இடைமுலை குளமாயிற்று.

(கருத்து) தலைவன் பிரிவை யான் ஆற்றேனாயினேன்.

(வி -ரை.) தலைவன் பலகால், யான் பிரிவேன் பிரிவேன் எனச் சொல்லியும் பிரியாதிருந்தான். ஒருநாள் அவன் பன்முறை அங்ஙனம் கூறக்கேட்டுச் சிறிது வெறுப்படைந்த தலைவி சினத்தால், 'என்னை விட்டுப் போக' என்று கூறினள். அதுவே தலைக் கூடாகத் தலைவன் பிரிந்தான். அவன் பிரிவால் வருந்திய தலைவி கூறியது இது.

மருங்கு - கண்ணோட்டமுமாம். கழிந்து மன்னுகவென்க. என்றேனே : ஏ அசைநிலை. எந்தையென்றது முறை குறித்த தன்று ; உறவின் மிகுதியைக் குறித்தது. கொல்லோ : இரங்கற் பொருட்டு (நன். 420, மயிலை.) முலையிடை யென்றது இடைமுலை யெனமாறி நின்றது.

(மேற்) 4. கொல்லோ வென்பது இரக்கம் குறித்து வந்தது (நன். 420, மயிலை.) 5-6. 'தன் முலையிடை தடமாப் படி தன் இரு கண்ணினீரும் வடிந்து வீழ அழுமோ வென்க ; கருங்கால் ... ...நிறைந்தே யென்னூர் பிறரும்' (சீவக. 1629, ந.)

(ஒப்பு.) 2. **மாயச்செலவு** : தஞ்சை. 29.

"1-3 "சேறுஞ் சேறு மென்றலிற் பலபுலந்து, சென்மி னென்றல் யானஞ் சுவலே" (நற். 229 : 1-2.)

4. மு. குறுந். 176 : 5, ஒப்பு.

5. **கருங்கால் வெண்குருகு** : குறுந். 303 : 1, ஒப்பு.

6. அழுதலால் முலையிடை குளமாதல் : "அறுகுள நிறைக்குந போல வல் கலும், அழுதன் மேவலவாகிப், பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே" (அகநா. 11 : 13-5) ; "அழு தாட்ட மாக வணங்கிழையே", "கண்ணீர் நிழன் மணிப்பூட், பரப்பி னிடைபாய்ந்து குளமாய்ப் பாலார் படா முலையை, வருத்தி மணிநெடுங்கோட் டருவி போல வீழ்ந்தனவே" (சீவக. 1523 ,2944.)

கண்ணீர் நகிலில் வீழ்தல் : குறுந். 348 : 4-5, ஒப்பு.

5-6. "உருகி வாடியென் னுற்றது கொல்லெனக்
கருகி வாடிய காமரு கோதைதன்
இருக ணீரு மிடைமூலை பாய்ந்துகக்
குருகு பாய்தட மாக வழுங்கொலோ" (சீவக. 1629.) (கூஉ)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப் புறத்தினளாகத் தோழிக்குக் கூறுவாளாய், "தலைவன் ஒரு நாள் என்னைப் பிரிந்திருந்தானாயின் எனக்கு அதனால் உண்டாகும் துன்பம் பலநாள் என்னை வருத்துகின்றது" என்றுகூறி, இனிப் பிரிவு நேராதவண்ணம் வரைதலே தக்கதென்பதைத் தலைவி புலப்படுத்தியது.]

கூஉசு. துணைத்த கோதைப் பணைப்பெருந் தோளி
கடலாடு மகளிர் கான லிழைத்த [னர்
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி
ஒருநாட் டுறைவன் றுறப்பிற்
5. பன்னாள் வருஉ மின்னா மைத்தே.

எ - து. சிறைப்புறம்.

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை]

(பி - ம்.) 1 'தோகைப்பிணைப்பெருந்'

(ப - ரை) தோழி—, துணைத்த கோதை பணைபெரு தோளினர்-கட்டிய மாலையை யணிந்த மூங்கிலைப் போன்ற பருத்த தோளை யுடையராகிய, கடல் ஆடு மகளிர் - கடலில் நீர்விளையாடலைச் செய்யும் மகளிர், கானல் இழைத்த - கடற்கரைச் சோலையிலே செய்த, சிறு மனை - சிற்றிலினிடத்தே, புணர்ந்த நட்பு - யாம் தலைவனோடு பொருந்திய நட்பு, துறைவன் ஒருநாள் துறப்பின் - அத் தலைவன் ஒரு நாள் நம்மைப் பிரிந்தால், பல் நாள் வருஉம் இன்னா மைதது - பல நாளில் வருகின்ற துன்பத்தை யுடையது.

(முடிபு) தோழி, சிறுமனையிற் புணர்ந்த நட்பு ஒரு நாள் துறைவன் துறப்பின் பன்னாள் வருஉம் இன்னாமைத்து.

(கருத்து) தலைவன் சிறிது பொழுது பிரியினும் எனக்குப் பெரிய துன்பம் உண்டாகின்றது.

(வி - ரை.) துணைத்த - கட்டிய; 'கழுநீர் துணைப்ப - செங்கழுநீர்களை மாலை கட்டும்படியாக' (மதுரைக். 551, ந); இரட்டையாகக் கட்டிய வெனலுமாம் (குறுந். 229 : 6.) சிறுமனை-சிற்றில் தலைவி சிற்றிலிழைத்து விளையாடுகையில் தலைவனுடைய நட்பு உண்டாயிற்று.

களவொழுக்கமாதலின் இடையிடையே பிரிவு நேர்வது கருதி, 'ஒருநாள் துறைவன் துறப்பின் பன்னாள் வருஉம் இன்னா மைத்து' என்றாள். இதனால் இடையீடின்றி உடனுறையும் இல் வாழ்வே தக்கதென்றும் அதற்கு வரைந்து கொள்ளுதலே விரகென்றும் தலைவன் உணர வைத்தாள். ஏகாரங்கள் அசைநிலை.

(ஒப்பு.) 1. பணைப்பெருந்தோள்: குறுந். 268 : 6, ஒப்பு.
3- தலைவனது நட்பு: குறுந். 247 : 6-7, ஒப்பு.

2-3. விளையாடுகையில் தலைவனைக் கண்டு தலைவி நட்புச் செய்தல்: (குறுந். 294 : 1-4); "புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்தும், அணி

வரி தைஇயுகம் மில்வந்து வணங்கியும், நினையுபு வருந்துமிந் நெடுந்தகை" (கலி. 76 : 1-3); "தொடலை யாயமொடு கடலுட ஞடியும், சிற்றி லிழைத்துஞ் சிறுசோறு குவைஇயும், வருந்திய வருத்தந் தீர யாஞ்சிறி, திருந்தன மாக வெய்த வந்து, தடமென் பணைத்தோண் மடநல் லீரே, எல்லு மெல்லின் றசைவுமிக வுடையேன். மெல்லிலைப் பரப்பின் விருந்துண் டியானுமிக், கல்லென் சிறுகுடித் தங்கின்மற் றெவனே, எனமொழிந் தனனே யொரு வனவற்கண், டிறைஞ்சிய முகத்தேம் புறஞ்சோபு பொருந்தி, இவை நுமக் குரிய வல்ல விழிந்த, கொழுமீன் வல்சி யென்றன மிழுமென, நெடுங்கொடி நுடங்கு நாவாய் தோன்றுவ, காண மோவெனக் காலிற் சிதையா, நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும், என்னே குறித்த நோக்கமொடு நன்னுதல், ஒழிகோ யானென வழிதகக் கூறி, யான்பெயர் கென்ன நோக்கித் தான்றன், நெடுந்தோ க்கொடுஞ்சி பற்றி, நின்றேன் போலு மென்றுமென் மகட்கே", "நகைநனி யுடைத்தாற் றேழி தகைமிகக், கோதை யாயமொடு குவவுமண லேறி, வீததை கானல் வண்ட லயரக், கதழ்பரித் திண்டேர் கடைஇ வந்து, தண்கயத் தமன்ற வொண்பூங் குவளை, அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி, பின்னுப்புறந் தாழக் கொன்னே சூட்டி, நல்வர விளமுலை நோக்கி நெடிதுகினைந்து, நில்லாது பெயர்ந்தன னெருவன்" (அகநா. 110 : 6-25, 180 : 1-9); "வண்டலுற்றே மெங்கண் வந்தொரு தோன்றல் வரிவளையீர், உண்டலுற் றேமென்று நின்றதொர் போழ்துடை யான்புலியூர்க், கொண்டலுற் றேறுங் கடல்வய வெம்முயிர் கொண்டுதந்து, கண்டலுற் றேர்நின்ற சேரிச்சென் றனெர் கழலவனே" (திருச்சிற். 290.)

3-5. குறுந். 271 : 3-5. (கூஉசு)

தலைவி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தே நிற்ப ஆற்றை நோக்கி, "நீ தலைவனைக் காட்டிலும் கொடியை" என்று கூறும் வாயிலாகத் தலைவி அவனது கொடுமையை உணர்த்தியது.]

நஉஎ. நல்கின் வாழு நல்கூர்ந் தோர்வயின்
நயனில ராகுத னன்றென வுணர்ந்த
குன்ற நாடன் றன்னினு நன்றும்
நின்னிலை கொடிதாற் றீய கலுழி
5. நம்மனை மடமக ளின்ன மென்மைச்
சாயல ளளிய ளென்னுய்
வாழைதந் தனையாற் சிலம்புபுல் லெனவே.

எ - து. கிழவன் கேட்கும் அண்மையளுக அவன் மலையினின்று வரும் யாற்றிற்கு (பி-ம். அண்மையாளுக யாற்றுரே) உரைப்பாளாய் உரைத்தது.

அம்மூவன்.

(பி-ம்.) 4 'நீங்கலுழுகி,' 'நீயகலுழ்கி' 6 'சாயலளியள்', 'சாயலளியவென்னுய்'

(ப - ரை.) நீய கலுழி - பொல்லாங்கையுடைய ஆறே, நம் மனை மடம் மகள் - நாம் செல்லும் மனையிடத்துள்ள மடப்பத்தையுடைய தலைவி, இன்ன - இதனைப் போன்ற, மென்மை சாயலள் - மெல்லிய சாயலை உடையவள், அளியள் - அளிக்கத் தக்காள், என்னுய் - என்று கருதாயாகி, சிலம்பு புல்லென - மலைப்பக்கம் பொலிவழியும்படி, வாழை தந்தனை - அங்கே வளர்ந்த வாழை மரத்தைப் பெயர்த்துக் கொணர்ந்தனை; ஆதலின், நல்கின் வாழும் - தாம் தண்ணளி செய்தார்பால் வாழ்கின்ற, நல்கூர்ந்தோர் வயின் - வறியோர்பால் நயன் இலர் ஆகுதல் நன்று என உணர்ந்த குன்றம் நாடன் தன்னினும் - அன்பு இல்லாராதல் நல்லதென்று உணர்ந்த குன்றநாடனது நிலையைக் காட்டிலும், நின் நிலை நன்றும் கொடிது - நினது இயல்பு மிகவும் கொடியது.

(முடிபு) கலுழி, புல்லென வாழை தந்தனை; குன்ற நாடன் றன்னினும் நின்னிலை கொடிது.

(கருத்து) தலைவன் கொடியன்.

(வி - ரை.) தலைவன் நெடு நாள் வரையாது வந்தொழுகினுனுக, அதனை விரும்பாத தலைவி கூறியது இது.

உலகின்மேல் வைத்துச் சொல்லினும் நல்குதலென்று தலைவன் தண்ணளி செய்தலையும், நல்கூர்ந்தோரென்றது தலைவியையும், நயனிலராகுதலென்றது வரையாது ஒழுகுதலையும் குறித்து நின்றன. பொதுவகையாற் கூறுதலின் பன்மை வாசகம் படவைத்தாள். நாடன் - நாடனது நிலை; ஆகுபெயர். நன்றும்: மிகுதியைப் புலப்படுத்தியது. யாறு தலைவனது குன்றத்திலிருந்து வந்து தலைவியின் மனைக்கு அருகில் ஓடுவதாதலின் 'நம்மனை மடமகள்' என்று உளப்படுத்திக் கூறினள் (குறுந். 284 : 6-8.)

தலைவியின் மென்மைக்கு வாழையின் மென்மை உவமை. நின்னெடு உறவுடைய என்னை நினைக்கச் செய்யும் வாழையைப் பறித்து வந்ததும், நீ தோன்றும் மலையின் பொலிவு அழியச் செய்ததுமாகிய கொடுமை தலைவனது கொடுமையினும் மிக்கதென்றுள். தலைவன் பழகியார்திறத்து அன்பிலனுதலொடு

அமைய, யாரோ பழகியார்பாற் பகைத்தன்மையும் உடையதாயிற் றுதலின் அதனை நன்றுங் கொடிய தென்றாள்.

ஆல், ஏ : அசை நிலைகள்.

(ஒப்பு) 1. தலைவன் நற்குதல் : குறுந். 37 : 1, ஒப்பு.

7. சிலம்பிலிவாழை வளர்தல் : "வாழையஞ் சிலம்பு" (அகநா. 328: 14, 332 : 9.) மு. ஆற்றை நோக்கிக்கூறல் : அகநா. 398. (கூ.உ)

தோழி கூற்று

[வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்தில் வருந்திய தலைவியை நோக்கி, "அவரை அஞ்சற்க; அவ்வலர் நன்மையையே விளைக்கும்" என்று தோழி கூறியது.]

நூ.உ. சிறுவீ ஞாழல் வேரளைப் பள்ளி
அலவன் சிறுமனை சிதையப் புணரி
குணில்வாய் முரசி னிரங்குந் துறைவன்
நல்கிய நாடவச் சிலவே யலரே
5. வில்கெழு தானை விச்சியர் பெருமகன்
வேந்தரொடு பொருத ஞான்றைப் பாணர்
புலிநோக் குறழ்நிலை கண்ட
கலிகெழு குறும்பூ ராரப்பினும் பெரிதே.

எ - து. வரைவிடை வேறுபடும் கிழத்தியை, அவர் வரையும் நாள் அணித்தெனவும், அலரஞ்சலெனவும் கூறியது.

பரணர்.

(பி - ம்) 7 'புலிநோர்குறழனிலை' 8 'குறும்பரார்ப்பினும்'

(ப - ரை.) சிறு வீ ஞாழல் வேர் அளை பள்ளி - சிறிய மலரையுடைய ஞாழல் மரத்தின் வேரின்கண் அமைக்கப் பட்ட வளை யிடத்திலுள்ள, அலவன் சிறுமனை சிதைய - நண்டினது சிறிய வீடு அழியும்படி, புணரி - அலைகள், குணில் வாய் முரசின் இரங்கும் துறைவன் - குறுந்தடி வாய்த்த முரசைப் போல வீசி முழங்கும் கடற்றுறையையுடைய தலைவன், நல்கிய நாள் தவ சிலவே - தண்ணளி செய்த நாட்கள் மிகவும் சிலவேயாகும்; அலர் - பழிமொழியோ, வில் கெழு தானை விச்சியர் பெருமகன் - விற்படையைக் கொண்ட படைகளையுடைய விச்சியர்களுக்குத் தலைவன், வேந்தரொடு பொருத ஞான்றை அரசர்களோடு போர் செய்த காலத்தில், பாணர் புலி நோக்கு உறழ்நிலை கண்ட -

பாணர்களது புலியினது பார்வையை ஒத்த நிலையினைற் காணப் பட்ட, கலி கெழு குறும்பூர் - ஆரவாரமிக்க குறும்பூரினிடத்தி லுள்ளார் செய்த, ஆர்ப்பினும் பெரிது - முழக்கத்தினும் பெரிய முழக்கத்தை யுடையதாயிற்று.

(முடிபு) துறைவன் நல்கிய நாள் தவச்சிலவே; அலர் ஆர்ப் பினும் பெரிது.

(கருத்து) அலர் மிகுதியாயிற்று.

(வி - ரை.) குணில்வாய் - குறுந்தடியால் அடித்தல் வாய்க்கப் பெற்ற. இரங்குதல் - ஒலித்தல். நல்குதல் - தலையளிசெய்தல்; கலி. 4 : 22.

விச்சியர் பெருமகன் : புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் விச்சிக்கோன் என்ற ஓர் உபகாரி சொல்லப்படுகிறான்; இவன் அவன் போலும்.

பாணர் போர்க்களத்தில் களவழிப்பா, பரணி முதலியன பாடுதல் மரபாதலின் அங்கே சென்றார். புலியென்றது இங்கே சிங்கத்தை. புலி நோக்கு - அரிமா நோக்கு; ஸிஹ்மாவலோ கனம்; இருபுறமும் பார்த்தல். பொருவார் இருசாராராதலின் இடைநின்ற பாணர் சிங்க நோக்காற் பார்த்தனர். குறும்பூர் : ஓரூர் போலும்.

சிலவே : ஏ பிரிநிலை; ஏனை ஏகாரங்கள் அசைநிலை.

'அலர் பெரிதாதலின் அவ்வலரால் தமர் தலைவனையறிந்து அவன் வரைவினை ஏற்றுக்கொள்வர்; ஆதலின் அலரை அஞ்சற்க' என்று தோழி கூறினளாயிற்று.

(ஒப்பு.) 1. சிறுவீ ஞாழல் : குறுந். 50 : 1; நற். 191 : 1.

1-2. நண்டின் வேகை : குறுந். 117 : 2 - 3, ஒப்பு.

3. கடலொலிக்கு முரசொலி : பெரும். 1. 38 : 130.

3-4. தலைவன் நல்குதல் : குறுந். 37 : 1, ஒப்பு, 327 : 1.

8. வீரர் ஆர்த்தல் : குறுந். 34 : 5, ஒப்பு.

4-8. அலர் ஆர்ப்பினும் பெரிது : குறுந். 393 : 2-6; அகநா. 36 : 12-23, 209 : 2-6, 253 : 3-7, 256 : 13-21. (கூஉ அ)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்து வருந்திய தலைவியைத் தோழி வற் புறுத்தினளாக, "யான் ஆற்றுவேன்; என்கண்கள் துயிலாவாகி அழுதன" என்று தலைவி கூறியது.]

நஉக. கான விருப்பை வேனல் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை யுகுத்தலி னுர்கழல்பு
களிறுவழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை யருஞ்சுர மிறந்தவர்ப் படர்ந்து
5. பயிலிரு ணடுநாட் டுயிலரி தாகித்
தெண்ணீர் நிகர்மலர் புரையும்
நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே.

எ - து. பிரிவிடை மெலிந்த கிழத்தி வற்புறுத்துந் தோழிச்கு யான் ஆற்றுவ லென்பதுபடச் சொல்லியது.

ஓதலாந்தையார்.

(பி - ம்.) 1 'வேனில்' 2 'சினையஞற்றலி', 'யுகுத்தலினு னுது' 4 'வழங்குஞ் சிறுநெறிதாவும்' 7 'மழைக்கணிக்கு'

(ப - ரை.) தோழி, கானம் இருப்பை - காட்டிலே வளர்ந்த இருப்பை மரத்தினது, வேனல் வெள்பூ - வேனிற் காலத்திலே மலரும் வெள்ளிய பூக்கள், வளிபொரு நெடு சினை உகுத்தலின் - காற்றால் அலைக்கப்பட்ட நெடிய கொம்புகள் உதிர்ப்பதனால், ஆர்கழல்பு - காம்பினின்றும் கழன்று, களிறு வழங்கு சிறு நெறி புதைய - களிறுகள் செல்லும் சிறியவழி மறையும்படி, தாஅம் - பரக்கின்ற, பிறங்குமலை அரு சுரம் - விளங்கிய மலைகளையுடைய கடத்தற்கு அரிய பாலைநிலத்தை, இறந்தவர் படர்ந்து - கடந்து சென்ற தலைவரை நினைந்து, பயில் இருள் நடுநாள் - பயிலுகின்ற இருளையுடைய அரையிரவில், துயில் அரிது ஆகி - துயிலல் அரிய தாகி, தெள் நீர் நிகர் மலர் புரையும் - தெள்ளிய நீரிடத்திலுள்ள ஒளியையுடைய மலரை ஒக்கும், நன் மலர் மழைக்கணிற்கு - நல்ல மலர்ந்த குளிர்ச்சியையுடைய கண்ணிற்கு, பனி எளிய - நீர்த் துளிகள் எளிதிலே உண்டாவன.

(முடிபு) சுரம் இறந்தவர்ப் படர்ந்து துயில் அரிதாகிக் கண்ணிற்குப் பனி எளிது.

(கருத்து) யான் ஆற்றியிருப்பவும் என் கண்கள் துயிலுத லொழிந்து அழுதன.

(வி - ரை) தலைவனது பிரிவினால் வருந்திய கிழத்தியை நோக்கி, "நீ ஆற்றுதல் வெண்டும். துயிலாதிருத்தலையும் அழுதலையும் நீங்குதி" என்று தோழிகூற, கிழத்தி, "நான் ஆற்று வேன்; ஆயினும் என் கண்கள் தாமே துயிலொழிந்து அழுதன.

யான் என் செய்கேன்!" என்று கண்கலை வேறுபடுத்துக் கூறினள். கானம் - பாலைநிலம். இருப்பை அந்நிலத்திற்குரியது;

"அத்த விருப்பைப்பூ" (நற். 111 : 1.)

வேனிலென்பது வேனலெனவும் வரும்;

"இளவேனல் வந்ததா லென்னுங்கொ லின்று
வளவேனற் கண்ணி மனம்";

"வேனற்பா ணிக்கலந்தாண் மென்பூந் திருமுகத்தைக்
"கானற்பா ணிக்கலந்தாய் காண்"

(சிலப். 8 : இறுதி வெண்பாக்கள்);

"வேனல்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்திருக்கும் பாழ்நெஞ்சே"

(திருவா. திருச்சதகம், 19.)

வளி பொருதலின் சினை பூவை உகுத்தன. பயில் இருள் நடுநாள் - நானும் தலைவனும் ஒருவரோடொருவர் பயிலுதற்குரிய இருளையுடைய நடுநாளென்பதும் பொருந்தும். நிகர் மலர்புரையு மென்று வைத்தலின் மலர் மழைக்கண்ணென்பதில் மலர் விளையாயிற்று. கண்ணுக்குத்துயில் அரிதாகி அழுதல் எளிதாயிற்று.

(ஒப்பு.) 1-3. இருப்பைமலர் காற்றினுல் உகுதல்: "இருப்பை,..... ஆலி வானிற் காலொடு பாறி", "அத்த விருப்பை யார்கழல் புதுபூத், துய்த்த வாய துகணிலம் பரக்க" (அகநா. 9 : 3-9, 15 : 13-4.)

மலர் ஆர் கழற்பு உருதல்: குறுந். 282 : 6-7.

4. அருஞ்சுரம்: குறுந். 77 : 5, ஒப்பு.

7. மழைக்கண்: குறுந். 222 : 6, 259 : 4. 6-7 : குறுந். 291 : 5-8; அகநா. 11 : 12-5.

5-7. தலைவி துயிலாமை: குறுந். 6 : 4, ஒப்பு.

தலைவி துயிலாமையும் அழுதலும்: குறுந். 11 : 2, ஒப்பு; அகநா. 82 : 16-8. (கூ.கு)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் வருந்திய தலைவி, "தலைவர் சென்ற நாட்டில் என்னை வருத்தும் மாலையும் புலம்பும் இலவோ?" என்று தோழிக்குக் கூறியது.]

கூகூ. நலத்தகைப் புலத்தி பசைதோய்த் தெடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத் திட்ட
நீரிற் பிரியாப் பரூஉத்திரி கடுக்கும்
பேரிலைப் பகன்றைப் பொதியவிழ் வான்பூ

5. இன்கடுங் கள்ளின் மணமில கமழும்
புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொ லோழியவர் சென்ற நாட்டே.

எ - து. பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

கழார்க்கீரனெயிற்றியன் (பி - ம். கிழாற்கீரனெயிற்றியன், கிழார்க் கீரன்.)

(பி - ம்.) 1 'புலைச்சி', 'புலத்தி' 2 'தண்ணயத்' 3 'பரூஉக்கிரி' 7 'நாடே'

(ப - ரை) தோழி—, நலம் தகை புலைத்தி - நன்மையையும் அழகையும் உடைய வண்ணாத்தி, பசை தோய்த்து எடுத்து - கஞ்சியிலே தோய்த்து எடுத்து, தலைபுடை போக்கி - முதல் தப்பலைத் தப்பிவிட்டு, தன் கயத்து இட்ட - தண்ணிய நீர் நிலையிலே போகட்ட, நீரில் பிரியா பரூஉதிரி கடுக்கும்-அந்நீரிலே பிரியாத பருத்த ஆடையின் முறுக்கை ஒக்கும், பெரு இலை பகன்றை பொதி அவிழ் வால் பூ - பெரிய இலையையுடைய பகன்றையினது கூம்பு மலர்ந்த வெள்ளிய மலர், இன்கடு கள்ளின் - இனிய கடுமையாகிய கள்ளைப்போல, மணம் இல கமழும் - நறு நாற்றமில்லாதனவாகி நாறுகின்ற, புன் கண் மாலையும் - துன்பத் தைத் தரும் மாலைக்காலமும், புலம்பும் - தனிமையும், அவர் சென்ற நாட்டு - அத்தலைவர் நம்மைப் பிரிந்து சென்ற நாட்டிலே, இன்று கொல் - இல்லையோ.

(முடிபு) தோழி, மாலையும் புலம்பும் அவர் சென்ற நாட்டு இன்று கொல்?

(கருத்து) மாலைக் காலமும் தனிமையும் எனக்கு வருத்தத்தை உண்டாக்குகின்றன.

(வி-ரை) தகை - தகுதியுமாம். புலைத்தி ஆடையைப் பசையில் தோய்த்தல் வழக்கம்;

"பசைவிரற் புலைத்தி நெடுதுயிசைந் தூட்டிய
பூந்துகில்" (அகநா. 387 : 6-7.)

பகன்றையின் பூவை,

"தலைபிணி யவிழாச் சுரிமுகப் பகன்றை" (அகநா. 24 : 3)

என்பவாதலின் அது முறுக்கிய ஆடையை ஒத்தது. பகன்றை - சிவதையென்பர் நச்சினார்க்கினியர் (குறிஞ்சிப். 88, உரை); பெருங்கையாலென்பர் அடியார்க்கு நல்லார் (சிலப். 13: 155-60, உரை.)

பொதி - தலையவிழாத கட்டு. பகன்றைமலர் வெண்ணிற முடையது. மணமென்றது நறுமணத்தை; நச்சினார்க்கினியரும், 'மணமில்லாத பகன்றைப் பூ' என்பர் (கலி. 73 : 1-5, உரை.)

'மாலையும் புலம்பும் அவர் சென்ற நாட்டில் இன்றுகொல்' என்றது, 'தலைவரது பிரிவால் இவ்விரண்டும் எனக்குத் துன்பத்தைத் தருகின்றன; அவை என்னைப் பிரிந்த தலைவருக்கும் துன்பத்தைத் தருவனவாம். அவர் துன்புறுவரேல் ஆண்மையுடைய வராதலின் அத்துன்பத்தினின்றும் நீங்க ஈண்டே வருவர். அவர் நாட்டில் இவையின்மையின் துன்பத்தை அறிந்திலர் போலும்!' என்னும் குறிப்பு விற்று. இன்றென்பதை மாலைக்கும் புலம்பிற்கும் தனித்தனியே கூட்டுக. கொல்: ஐயம். நாட்டே: ஏ அசைநிலை.

(ஒப்பு.) 1. புலத்தி: கலி. 72 : 14; புறநா. 311 : 2.

1-3. **புலத்தி பசை தோய்த்தல்**: "அறனில் புலத்தி யெல்லித் தோய்த்த, புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு" (நற். 90 : 3-4.); "பசை கொன் மெல்விரற் பெருந்தோட் புலத்தி" (அகநா. 34 : 11.)

4. **பகன்றை**: குறிஞ்சிப். 88; நற். 86 : 3; ஐங். 87 : 1; அகநா. 176 : 10, 316 : 6; புறநா. 16 : 14; 235 : 18.

பேரிலைப் பகன்றை வான்பூ: "பேரிலைப், பகன்றை வான்மலர்" (அகநா. 219 : 3-4.)

பகன்றையின் மலர் வெண்ணிறமுடையது: "பகன்றை வான்மலர்", "வெள்ளிதழ்ப், பகன்மதி யுருவிற் பகன்றை மாமலர்" (ஐங். 97 : 1, 456 : 1-2); "பகன்றைப்பூ வுறழ்ணீண்ட பாசடைத் தாமரை, கண்பொர வொளிவிட்ட வெள்ளிய வள்ளத்தாற், றண்கமழ் நறுந்தேற லுண்பவண் முகம்போல, வண்டினி தலைவிடூஉம் வயலணி நல்லூர" (கலி. 73 : 2-5); "பகன்றை, நீலுண் பச்சை நிறமறைத் தடைச்சிய, தோலெறி பாண்டிலின் வாலிய மலர" (அகநா. 217 : 6-8.)

3-4. **பகன்றைப் பூவிற்கு ஆடை**: "பனித்துறைப் பகன்றைப் பாங்குடைத் தெரியல், கழுவுறு கலிங்கங் கடுப்பச் சூடி" (பதிற். 76 : 12-3); "போதவிரி பகன்றைப் புதுமல ரன்ன, அகன்றுமடி கலிங்கமுடீஇ" (புறநா. 393 : 17-8.)

5. **இன் கடுங்கள்**: குறுந். 298 : 5, ஒப்பு. 6-7, மு. குறுந். 46 : 6-7.

(கூகo)

தோழி கூற்று

[தலைவன் பொருள்வயிற் பிரிய எண்ணியதையறிந்து வருந்திய தலைவியை நோக்கி, "அவர் கொடுமையையுடைய பாலை நிலத்தைக் கடந்து செல்வரோ? செல்லார்" என்று தோழி கூறியது.]

நடந. நெடுங்கழை திரங்கிய நீரி லாரிடை
ஆறுசெல் வம்பலர் தொலைய மாறுநின்று

கொடுஞ்சிலை மறவர் கடுறுகூட் டுண்ணும்
கடுங்கண் யானைக் கான நீந்தி
5. இறப்பர்கொல் வாழி தோழி நறுவடிப்
பைங்கான் மாஅத் தந்தளி ரன்ன
நன்மா மேனி பசப்ப
நம்மினுஞ் சிறந்த வரும்பொரு டரற்கே.

எ - து. செலவுக் குறிப்பறிந்து வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

வாடாப் பிரமந்தன் (பி - ம். வாடாப்பிரபந்தன், பிரமாந்தன்.)

(பி - ம்.) 4 'யானைகான' 6 'பைங்கண் மாஅத்'

(ப - ரை) தோழி—, நறுவடி - நறிய வடுவையும், பசுகால் மாஅத்து அம் தளிர் அன்ன - பசிய அடியையுமுடைய மாமரத்தினது அழகிய தளிரை ஒத்த, நல்மா மேனி பசப்ப - நல்ல மாமை நிறம் பசலையையடைய, நம்மினும் சிறந்த அருபொருள் தரற்கு - நம்மைக் காட்டிலும் தலைவருக்குச் சிறந்ததாகத் தோற்றுகின்ற பொருளைக் கொணரும் பொருட்டு, நெடுகழை திரங்கிய நீர் இல் அரு இடை - நெடிய மூங்கில் உலர்ந்த நீர் இல்லாத அரிய இடத்தில், ஆறுசெல் வம்பலர் தொலைய - வழியிற் போகும் பிரயாணிகள் அழியும்படி, மாறு நின்று - எதிராக நின்று, கொடு சிலை மறவர் - வளைந்த வில்லையுடைய மறச்சாதியார், கடறு கூட்டுண்ணும் - காட்டைக் கொள்ளையிடும், கடுகண் யானைகானம் நீந்தி - தறுகண்மையையுடைய யானைகளையுடைய காட்டைக் கடந்து, இறப்பர் கொல் - செல்வாரோ?

(முடிபு) தோழி, பொருள் தரற்கு, மேனி பசப்ப, கானம் நீந்தி இறப்பர் கொல்?

(கருத்து) தலைவர் பொருள்வயிற் பிரிதல் உறுதியன்று.

(வி - ரை) தலைவர் செல்ல எண்ணிய பாலைநிலம் கடுங்கண் மறவரையுடையதாதலின் அங்கே போகாரென்னும் நினைவினளாகிய தோழி அப்பாலையின் கொடுமையை விரித்துரைத்தாள். கடறு கூட்டுண்ணுதலாவது வழிப்போவார்பால் உள்ள பொருள்களை வௌவுதல். கடத்தற்கரிய பரப்பினதாதலின் நீந்தியென்றாள்.

மாமேனி - மாமைநிறம். "மாநிறமுங் கொண்டாரிங்கே". (திவ். திருநெடுந்தாண்டகம், 23.)

தலைவன் பிரிவினால் மாமையழியப் பசலை உண்டாதல், இந்நூல் 27 - ஆம் செய்யுளாலும் விளங்கும்.

நம்மினும் சிறந்த அரும்பொருளென்றது குறிப்புமொழி ; நம்மினுஞ் சிறந்ததன்றென்னும் கிடக்கையாற் கூறியது.

இறப்பர்கொல் என்ற ஐயம் செல்லாமையைச் சார்ந்தே நின்றது.

(ஒப்பு.) 1. பாலை நிலத்தில் முங்கில் உலர்தல் : (குறுந். 180 : 4 ; 396 : 7); "மழைபெயன் மறந்த கழைதிரங் கியவில்", "மழைகரந் தொளித்த கழைதிரங் கடுக்கத்து" (அகநா. 245 : 5, 347 : 10.)

நீரிலாரிடை : குறுந். 347 : 1.

2. ஆறுசெல் வம்பலர் : குறுந். 297 : 3, 350 : 6 ; அகநா. 95 : 8, 107 : 6.

1-3. பாலை நிலத்தில் மறவர் ஆறலைத்தல் : குறுந். 283 : 5-7, ஒப்பு.

4. கானல் நீந்தல் : குறுந். 350 : 7 ; அகநா. 103 : 10.

5-6. நறுவடிமா : நற். 243 : 3 ; ஐங். 61 : 1, 213 : 1.

வடுவையுடைய மாத்துத்தளிர் : "வடிக்கொண்மாஅத்து வண்டளிர்" (ஐங். 14 : 2.)

6-7. மாந்தளிர் மகளிரது மேனிக்கு : "மாவின், அவிர்தளிர் புரையு மேனியர்" (முருகு. 143-4): "தேமா மேனிச் சிலவீ யாயம்" (சிறுபாண். 176); "கழிகவி னிளமாவின் றளிரன்னுப்" (கலி. 57 : 13); "வளங்கெழு மாவி னிளந்தளி ரன்ன, நயத்தகு மேனியும்", "மாந்தளிர் மேனியும்" (பெரும். 3. 6 : 83-4, 4. 13 : 219); "மாந்தளிரே மாமேனி" (சீவக. 652.); "நறுமா வின், கொய்தளி ரன்ன நிறம்" (முத். 83); "மாந்தளிர் போல், மின்னிய மாமை விளர்ப்ப தென்னே" (தஞ்சை. 22.)

7. மாமை பசலையால் அழிதல் : (குறுந். 27 : 4-5, ஒப்பு); "பொன்னேர் பசலை பூர்தரப் பொறிவரி, நன்மா மேனி தொலைத லஞ்சி" (அகநா. 229 : 13-4.)

8. பொருள் நம்மினுஞ் சிறந்தது : கலி. 2 : 19-22, 5 : 4-5 ; அகநா. 265 : 23. (கக)

தோழி கூற்று

[தலைவன் வரையாமல் வந்தொழுகிய காலத்தில் ஒரு நாள் அவன் சிறைப்புறத்தில் நிற்பத் தலைவிக்கு, "தலைவனுக்கு நின் துயர் நிலையைக் கூறினல் என் ?" என்று தோழி கூறியது]

வந்த வாடைச் சில்பெயற் கடைநாள்
நோய்நீந் தரும்படர் தீர நீ நயந்து
கூறி னெவனே தோழி நாறுயிர்
மடப்பிடி தழீஇத் தடக்கை யானை
குன்றச் சிறுகுடி யிழிதரு
மன்ற நண்ணிய மலைகிழ வோற்கே.

எ - து. வரையாது வந்தொழுகாநின்ற காலத்துக் கிழவன் கேட்பக் கிழத்திக்குத் தோழி கூறியது.

மதுரை மருதங் கிழார் மகன் இளம்போத்தன்.

(பி – ம்.) 3 'நாறுமயிர்' 5 'குன்றகச்' 6 'மன்றனண்ணிய

(ப - ரை.) தோழி—, நாறு உயிர் மடம் பிடிதழீஇ - மணம் வீசுகின்ற மூச்சையுடைய மடப்பத்தையுடைய பெண்யானையைத் தழுவி, தடகை யானை - வலீந்த கையையுடைய யானை, குன்றம் சிறுகுடி இழிதரு மன்றம் - குன்றினிடத்திலுள்ள சிற்றூரின்கண் இறங்கிச் செல்லும் மன்றங்கள், நண்ணிய மலை கிழவோற்கு - பொருந்திய மலையையுடைய தலைவனுக்கு, வந்த வாடை சில் பெயல் கடை நாள் - வாடை வந்த சிலவாகிய பெயலையுடைய நாளின் கடையாமத்தில், நோய் நீந்து அருபடர் தீர - வருத்தத்திலே துளையும் பொறுத்தற்கரிய நின் துன்பம் தீரும் வண்ணம், நீ நயந்து - நீ விரும்பி, கூறின் எவன் - கூறத்தகுவனவற்றைக் கூறினால் என்ன துன்பம் உளதாகும்?

(முடிபு) தோழி, மலைகிழவோற்குப் படர்தீர நீ கூறின் எவனே?

(கருத்து) நினது துன்ப மிகுதியைத் தலைவனுக்கு நீயே கூற வேண்டும்.

(வி - ரை.) நாறு உயிர் - தோன்றுகின்ற உயிர்ப்பெனலும் ஆம்.

பிடியைத் தழுவி யானை இழிதருவதைக் கூறியது, தலைவன் தன்னை வெளிப்படையாக வரைந்து கொள்ள வேண்டு மென்னும் குறிப்பை உணர்த்தியது.

(ஒப்பு.) 1. சில்பெயற் கடைநாள் : குறுந். 261 : 2.

1-2. வாடை துயர் தருதல் : குறுந். 103 : 4, ஒப்பு. 3. நாறுயிர் : அகநா. 7 : 10.

3-4. நாறுயிர் மடப்பிடி தழீஇ : அகநா. 189 : 4.

5. குன்றச் சிறுகுடி : "குன்றகச் சிறுகுடி" (முருகு. 196.)

6. மன்றம் : குறுந். 346 : 3. மு. குறுந். 98 : 1-3, ஒப்பு. (கஙஉ)

தோழி கூற்று

[தலைவியின் நோய் மிகுதியைக் கண்ட தோழி, "அறத்தொடு நின்று தலைவனது வரவை நமர் ஏற்றுக் கொள்ளச் செய்வேன்" என்றது]

கஙங. குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனமுண்டு கடிந்த பைங்கண் யானை

நறுந்தழை மகளி ரோப்புங் கிள்ளையொடு
குறும்பொறைக் கணவுங் குன்ற நாடன்
5. பணிக்குறை வருத்தம் வீடத்
துணியி னெவனே தோழிநம் மறையே.

எ - து. அறத்தொடு நிற்பலெனக் கிழத்திக்குத் தோழி உரைத்தது.

உழுந்தினம் புலவன் (மி - ம். உழுந்தினம் புல்லன்.)

(பி - ம்.) 2 'கழிந்த' 'படிந்த' 6 'துணியிலெவனே'

(ப - ரை.) தோழி—, குறுபடை பகழி - குறிய படையாகிய அம்பையும், கொடு வில் கானவன் - வளைந்த வில்லையும் உடைய வேட்டுவனது, புனம் உண்டு கடிந்த பசு கண் யானை - தினைப் புனத்தை உண்டதனாற் கடியப்பட்ட பசிய கண்ணையுடைய யானை, நறு தழை மகளிர் - நறிய தழையுடையை அணிந்த மகளிர், ஓப்பும் கிள்ளையொடு - ஓட்டுகின்ற கிளிகளோடு, குறு பொறைக்கு அணவும் - குறிய பொற்றைக்கல்லினிடத்துச் செல்ல மேல் நோக்கும், குன்றம் நாடன் - மலையையுடைய நாட்டினனாகிய தலைவன், பணி குறை வருத்தம் - வினை நிறைவேறுமற் குறைவாக நிற்றலினால் உண்டாகிய வருத்தம், வீட - நீங்கும் படி, நம் மறை - நம்முடைய இரகசியத்தை, துணியின் எவன் - தாய்க்குத் தெளிவித்தால் என்ன குற்றம் உளதாகும்?

(முடிபு) தோழி, நாடன் வருத்தம் வீட நம்மறை துணியின் எவன்?

(கருத்து) யான் அறத்தொடு நிற்பேன்.

(வி - ரை.) கானவன் புனங்காத்து நிற்ப யானை அவனாற் கடியுண்டது. மகளிராற் கிளிகள் கடியுண்டன. அவ் விரண்டும் குறும்பொறைக்குச் செல்ல அவாவின. பணிக்குறை வருத்தமென்றது தலைவன் வரைவொடு புகும்பொழுது அது நிறைவேறுதிருப்பதனால் நேரும் வருத்தம். அறத்தொடு நின்றால் உண்மையுணர்ந்து தமர் ஏற்றுக் கொள்வராதலால் தலைவனது குறைதீரும். துணியின் - தெளியச் செய்யின்; தன்வினை பிறவினைப் பொருளில் வந்தது. மறை - மந்தணம்; என்றது தலைவி தலைவன்பாற் காதலுடையாளென்பது. இம்மறை தோழியாலும் அறியப்பட்டதாதலின் தன்னையும் உளப்படுத்தி நம்மறை யென்றாள். எவனே: ஓ அசைநிலை. மறையே: ஏ அசைநிலை.

தினை காப்பவரால் யானையும் கிளியும் கடியப்படும்

நாடனென்றது செவிலியர் முதலியோரது காவலால் தலைவன் தான் விரும்பிய இன்பத்தைப் பெறாது வருந்தும்படி கடியப் பட்டானென்ற குறிப்பை யுணர்த்தியது.

(ஒப்பு) 2. யானை நீரைப்புனத்தில் மேய்தல்: குறிஞ்சிப். 157-65; கலி. 41: 7.

4. குறும் பொறை: குறுங். 134: 3, 215: 5.

அணவுதல்: பொருந. 13; குறிஞ்சிப். 35; பரி. 1: 2.

5. பணிக் குறை: குறள், 674. 6. மறை: குறுங். 97: 4, 321: 8.

(கூகூ)

தலைவி கூற்று

["தலைவன் வரை விடை வைத்துப் பிரிந்தால் நீ ஆற்றும் வன்மை உடையையோ?" என்று வினவிய தோழிக்கு," அவன் பிரியின் என் உயிர் போம்" என்று தலைவி கூறியது.]

நகச. சிறுவெண் காக்கைச் செவ்வாய் பெருந்தோ
டெறிதிரைத் திவலை யீர்ம்புற நனைப்பப்
பனிபுலந் துறையும் பல்பூங் கானல்
விரிநீர்ச் சேர்ப்ப னீப்பி னெருநம்
5. இன்னுயி ரல்லது பிறிதொன்
றெவனே தோழி நாமிழப் பதுவே.

எ - து. "வரைவிடை ஆற்றகிற்றியோ?" என்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

இளம்பூதனார்.

(பி - ம்) 1 'பைந்தோடு' 'செவ்வாய்ப் பெருந்தோட்' 4 இருநீர்ச்', 'பெருநீர்ச்'

(ப - ரை.) தோழி—, சிறு வெள் காக்கை - சிறிய வெண்மையை யுடைய காக்கையினது, செ வாய் பெருதோடு - செவ்விய வாயை யுடைய பெரிய தொகுதி, எறி திரை திவலை ஈர்ம்புறம் நனைப்ப - வீசுகின்ற அலைகளின் நீர்த்துளிகள் தம் ஈரமாகிய புறத்தை நனைக்க, பனி புலந்து - அக்குளிரை வெறுத்து, உறையும் பல் பூ கானல் - தங்குதற்கு இடமாகிய பல மலர்களையுடைய சோலையை யுடைய, விரி நீர் சேர்ப்பன் நீப்பின் - அகன்ற கடற்கரையை யுடைய தலைவன் பிரிந்தால், நாம் இழப்பது - நாம் இழக்கும் பொருள், நம் இன் உயிர் அல்லது - நமது இனிய உயிரையன்றி, பிறிது ஒன்று எவன் - வேறொன்று யாது?

(முடிபு) தோழி, சேர்ப்பன் நீப்பின் நாம் இழப்பது உயிரல்லது பிறிதொன்று எவன்?

(கருத்து) தலைவனது பிரிவை யான் ஆற்றேன்.

(வி - ரை) சிறு வெண்மை யென்றது கழுத்திலுள்ள நிறத்தை. காக்கையின் உள்வாய் சிவந்திருக்கும்.

'நாமிழப்பது பிறிதொன்றெவன்?' என்றது, தோழிபாற் செறலைப் புலப்படுத்தியது; "நம்மிடம் இழப்பதற்கு உயிரை யன்றி வேறு என்ன பொருள் இருக்கிறது?" என்று வினவியது, 'இதனை நீ அறிந்தும் அறியாள்போல் என்னை வினவினை' என்னும் நினைவிற்று.

எவனே: ஓ அசை நிலை. ஏ: அசைநிலை.

(மேற்.) மு. சேணிடையின்றி இட்டிதாகப்பிரிந்துழித் தலைவி இரங்கித் தன் வயினுரிமையும் அவன்வயிற் பரத்தைமையும்படக்கூறியது (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. சிறு வெண் காக்கை: குறுந் 246 : 1, ஒப்பு.

பறவைகளின் தொகுதியைத் தோடென்றல்: குறுந். 34 : 4, வி - ரை.

4-6. தலைவன் பிரியின் தலைவி உயிர் நீங்குதல்: குறுந். 32 : 6, ஒப்பு, 57 : 3-4, ஒப்பு, 103 : 6, 169 : 6, 197 : 4-5, 273 : 8, 290 : 3-6, 319 : 7-8; அகநா. 52 : 13, 95 : 4-5. (கூகச)

தோழி கூற்று

[தலைவி இற்செறிக்கப்படுதலை உணர்த்திய தோழி, "அவள் ஊர் வெற்பிடை நண்ணியது" என்றும், "அவள் வல்விற் கானவர் தங்கை" என்றும் கூறி இரவுக்குறி பெறுதற்கரிது என்பதைத் தலைவனுக்குப் புலப்பட வைத்தது.]

நூநடு. நிரைவளை முன்கை நேரிழை மகளிர்
இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்
சுனைபாய் சோர்விடை நோக்கிச் சினையிழிந்து
பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்
5. வெற்பிடை நண்ணி யதுவே வார்கோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி யிருந்த வூரே.

எ - து. இரவுக்குறி நயவாமைத் தோழி செறிப்பு அறிவுறீஇயது.
[நயவாமை - தலைவன் விருப்பாதபடி.]

இருந்தையூர்க் கொற்றன் புலவன்.

(பி - ம்.) 5 'வெற்பயனண்ணி', 'வெற்பனண்ணி', 'வெற்பன நண்ணி'

(ப - ரை.) வார் கோல் - நீண்ட அம்பையும், வல்வில் - பல இலக்குக்களை ஒரு தொடையில் துளைக்கவிடும் வலிய வில்லையும் உடைய, கானவர் தங்கை - வேட்டுவருடைய தங்கையாகிய, பெரு தோள் கொடிச்சி - பெரிய தோளையுடைய குறிஞ்சிநில மகளாகிய தலைவி, இருந்த ஊர் - வாழும் ஊர், நிரை வளை முன்கை - வரிசையாகிய வளையையுடைய முன்கையையும், நேர் இழை மகளிர் - நேர்ந்த அணிகலன்களையுமுடைய மகளிர், இரு கல் வியல் அறை - கரிய மலையிலுள்ள அகன்ற பாறையினிடத்து, செ தினை பரப்பி - சிவந்த தினையைப் பரப்பி, சுளை பாய்சோர்வு இடை நோக்கி - சுளையின்கண் பாய்கின்ற சோர்தலையுடைய சமயத்தைப் பார்த்து, சினை யிழிந்து - மரக்கிளையினின்றும் இறங்கி, பசு கண் மந்தி - பசிய கண்ணையுடைய பெண் குரங்குகள், பார்ப்பொடு கவரும் - குட்டிகளோடு அத் தினையைக் கைக்கொள்ளும், வெற்பிடை நண்ணியது - மலையினிடத்தே பொருந்தியது.

(முடிபு) கொடிச்சி இருந்த ஊர் வெற்பிடை நண்ணியது.

(கருத்து) தலைவியை இரவுக்குறியிற்கண்டு அளவளாவுதல் அரிது.

(வி - ரை.) நேரிழை - பொருந்திய அணிகலன் (பட். 22, ந.) வார்கோல் வல்விற் கானவர் தங்கை யென்றதில் உடம்படு புணர்த்தும் வாயிலாகக் கானவர் இயல்பையும் புலப்படுத்தினள். வெற்பிடை நண்ணியது என்றதனால் அடைதற்கரிய இடத்தினளென்பதையும், கொடிய கானவர் தங்கை யென்றதனால் அவர் அறியின் தீங்கு நிகழுமென்பதையும் குறிப்பித்தாள்.

இதனால், வரைந்து கொள்வதே நன்றென்னும் தன் நினைவு கூறினள். இஃது இரவுக்குறி மறுக்கும் வாய்பாட்டால் வரைவு கடாயது.

(ஒப்பு.) 1-2. பாறையில் தினையை உலர்த்துதல்: "செந்தினை யுணங்கரு குகும், இன்கல் யாணர்த்தம் முறைவி னூர்க்கே" (நற். 344 : 11-2.)

4. மந்தியும் பார்ப்பும்: குறுந். 278 : 7.

2-4. மந்தி பிறர் சோர்வுற்றதை யறிந்து உணவுப் பொருளைக் கவர்தல்: "காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ, நெடுங்கை யாண நெய்ம்மிகி கவளம், கடுஞ்சூன் மந்தி கவரும்" (பெரும்பாண். 393-5.)

6. வல்வில்: குறுந். 100 : 5, ஒப்பு.

கானவர் தங்கை: குறுந். 392 : 5; சிறுபாண் 190; ஐங். 363 : 2.

7. பெருந்தோட் கொடிச்சி: குறுந். 400 : 2.

6-7. கானவர் தங்கையாகிய கொடிச்சி: "களிற்றுமுகந் திறந்த கவுளுடைப் பகழி, வானிணப் புகவிற் கானவர் தங்கை, அம்பணை மென்றோ ளாயிதழ் மழைக்கண், ஒல்கியற் கொடிச்சியை" (அகநா. 132 : 4-7.) (கூடு)

தோழி கூற்று

[தலைவன் இரவுக்குறி நயந்த காலத்துத் தோழி, "நீ இரவில் வருதல் தகாது; அதனால் இவள் வருந்துவள்" என்று அது மறுத்த வாய்பாட்டால் வரைவு கடாயது.]

நெடுமா. செறுவர்க் குவகை யாகத் தெறுவர
ஈங்கனம் வருபவோ தேம்பாய் துறைவ
சிறுநா வொண்மணி விளரி யார்ப்பக்
கடுமா நெடுந்தேர் நேமி போகிய
5 இருங்கழி நெய்தல் போல
வருந்தின ளளியணீ பிரிந்திசி னோளே.

எ - து. தலைமகன் இரவுக்குறி நயந்தானைத் தோழி சொல்லி மறுத்தது.

குன்றியன்.

(பி-ம்.) 1 'செறுவார்க்' 2 'ஈங்கினம்'

(ப - ரை.) தேம் பாய் துறைவ - தேன் பரவுகின்ற துறையை யுடைய தலைவ, செறுவர்க்கு உவகை ஆக - பகைவருக்கு மகிழ்ச்சி உண்டாக, தெறுவர - எமக்குத் துன்பமுண்டாகும்படி, ஈங்கனம் வருபவோ - இங்கே அறிஞர் வருவரோ? நீ பிரிந்திசினோள் - நீ பிரிந்த தலைவி, சிறுநா ஒள்மணி - சிறிய நாவையுடைய ஒள்ளிய மணிகள், விளரி ஆர்ப்ப - விளரிப் பண்ணைப் போல முழங்க, கடுமா நெடு தேர் நேமி போகிய - விரையும் குதிரையைப் பூண்ட நெடிய தேரினது சக்கரம் மேலே ஏறிப் போனமையால் நலிந்த, இருகழி நெய்தல் போல - கரிய கழியினிடத்துள்ள நெய்தல் மலரைப் போல, வருந்தினள் - வருத்தத்தை யடைந்தாள்; அளியள் - இரங்கத்தக்காள்.

(முடிபு) துறைவ, வருபவோ? நீ பிரிந்திசினோள் வருந் தினள்; அளியள்.

(கருத்து) நீ இரவில் வருதல் நன்றன்று.

(வி - ரை.) செறுவர்க்கு உவகையாக என்றது நினக்கு ஏதம் நேரும் என்றபடி. விளரி - இரங்கற்பண்; நெய்தனிலத்துக்

குரியது. தலைவன் தேரேறிக் கடற்கரை வழியே வரும் வழக்க முடையனுதலின் அவனறிந்த உவமையையே எடுத்துரைத்தாள்.

நீ பிரிந்திசினேனென்றது களவுக்காலத்தில் இடையிடையே உண்டாகும் பிரிவினை நினைவுறுத்தியது; இதனால் என்றும் பிரியாதுறைதலே வேண்டற்பாலதென்பதும், அதற்கு வரை தலே தக்க தென்பதும் உணர்த்தப்பட்டன.

பிரிந்திசினேனுள் : இசின் படர்க்கைக் கண் வந்தது.

(மேற்.) மு. தலைவன் இரவுக்குறி நயந்தானைத் தோழி மறுத்தது (தொல். களவு. 22, ந.)

(ஒப்பு.) 3. சிறுநா வொண்மணி : நற். 267 : 9.

3-4. தலைவன் தேர்மணி யொலிக்க வருதல் : குறுங். 155 : 4-7, ஒப்பு, 212 : 1-3.

5. கழி நெய்தல் : குறுங். 9 : 4-5, ஒப்பு.

4-5. தேரின் நேமியால் நெய்தல் குறைதல் : குறுங். 227 : 1-3, ஒப்பு. (கூகசு.)

தலைவன் கூற்று

[இரந்து பின்னின்ற தலைவனுக்குத் தோழி தலைவியின் இளமைத்தன்மை கூறியபொழுது, அவன் அவள் பருவம் வாய்த் ததையும் தன்னை வருத்திய வண்ணத்தையும் உணர்த்தியது.]

நகஎ. முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளை இய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குதற்
5. கியான்ற னறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொ ருனே
பெருமுது செல்வ ரொருமட மகளே.

எ - து. தோழியை இரந்து பின்னின்ற கிழவன், தனது குறை யறியக் கூறியது.

பொதுக் கயத்துக் கீரந்தை.

(பி-ம்.) 1 'முகிழ்முகுத்தனவே';' தலைஇய ' 2 'குரலே ' 3 ' செறி நிறை ' 5 ' யான்றன் னறிவலென்ன றியலளே ' 7 ' செல்வனெரு '

(ப - ரை.) முலை முகிழ் முகிழ்த்தன - நகில்கள் அரும்பின; தலை - தலையில், கிளை இய மெல்குரல் கிழக்கு வீழ்ந்தன - கிளைத்த

மெல்லிய மயிர்க்கொத்துக்கள் கீழே தாழ்ந்தன ; செறிநிரை வெள்பலும் - செறிந்த வரிசையாகிய வெள்ளிய பல்லும், பறி முறை நிரம்பின - முதன்முறை விழுந்து முற்றும் முளைத்து நிரம் பின ; சுணங்கும் சில தோன்றின - தேமலும் சில வெளிப் பட்டன ; அணங்குதற்கு யான் தன் அறிவல் - அவள் வருத்தும் பொருட்டு நான் அவளை அறிவேன் ; தான் அறியாளள் - அவள் அதனை அறிந்திலள் ; பெரு முது செல்வர் ஒரு மடமகள் - பெரிய முதிய செல்வத்தையுடையாரது ஒப்பற்ற மடப்பத்தையுடைய தலைவியாகிய அவள், யாங்கு ஆகுவள் கொல் - எத்தன்மையை யுடையவளாவளோ ?

(முடிபு) முலை முகிழ் முகிழ்த்தன ; தலை குரல் வீழ்ந்தன ; பல்லும் நிரம்பின ; சுணங்கும் தோன்றின ; யான் தன்னறிவல் ; தான் அறியலள் ; மடமகள் யாங்காகுவள் கொல் ?

(கருத்து) தலைவி பருவம்வாய்த்தவளாகி என்னை வருத்தினாள்.

(வி - ரை.) தலைவி பேதைப்பருவம் கடந்தவளென்பதை முதலிற் கூறினான் ;

" முலைமுகஞ் செய்தன முள்ளெயி றிலங்கின
தலைமுடி சான்ற தண்டழை யுடையை
... ...
பேதை யல்லை மேதையங் குறுமகள் 7 : 1-7.)
பெதும்பைப் பருவத் தொதுங்கினை புறத்தென " (அகநா.

கிழக்கு - கீழ் (குறள், 488.) பல் செறிந்திருத்தல் அழகு பயப் பது ; " செறியெயிற் றரிவை " (குறுந் 2 : 4) என்று முன் வந்தது காண்க. பறிமுறை - விழுந்தெழுந்த முறைமை (கலி. 93 : 19, உ) அணங்குதற்கு யான் தன அறிவலென்றது, யான் அவளது அழகு முதலியவற்றை அறிந்த காரணத்தாலே அணங் கினளென்றபடி ; இதனால் யான் அறியாது வாளா சென்றே னெனின் அணங்கப்படேனென்பதும் போதரும். அணங்குதற்கு - அணங்குதலாலென உருபுமயக்கமாக்குதலும் ஒன்று.

பல்லும், சுணங்கும் : உம் இறந்தது தழீஇயது.

(மேற்.) 2. கிழக்கென்பது கீழென்னும் பொருளில் வந்தது (தொல். உவம. 5, பேர்.)

5. பின்னின்ற தலைமகன் கூறியதனால், தன்கட் டோன்றிய வருத்தம் பற்றிய இளிவரலென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 6, பேர் ; இ. வி. 578.)

5-7. தலைமகள் கட்டுரையாதிருத்தலின் தலைமகன் தமரின் எய்தல் வேண்டினமையின் கட்டுரையின்மையின் வரைவு கடாதலாயிற்று (தொல். மெய்ப், 23, பேர்.)

மு. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் வரைதல் வேண்டிக் கூறியது (தொல். களவு. 11, இளம்.); புணர்தல் நிமித்தம் வந்தது (தொல். அகத். 14, ந.); இறையோன் இறைவி தன்மை இயம்பியது (நம்பி. 144.)

(ஒப்பு.) 1. முகிழ் முகிழ்த்தல்: 'அம்பலென்பது முகிழ் முகிழ்த்தல்' (இறை. 22, உரை.)

3. பல் பரி முறை நிரம்புதல்: 'நறுமுல்லை தேர்முகை யொப்ப நிரைத்த, செறிமுறை பாராட்டி ஞெய்மற்றெம் பல்லின், பறிமுறை பாராட் டினையோ வையை" (கலி. 22 : 9-11.) 5. குறுந். 142 : 2-3.

6. யாங்காகுவள்: குறுந். 159 ; 5, ஒப்பு. (கூகஎ)

தோழி கூற்று

[தலைவனது பிரிவினால் வருந்திய தலைவியை நோக்கி, "தலைவன் வந்தான்" என்று துணிவுபற்றிக் கூறித் தோழி ஆற்றுவித்தது.]

கூகஅ. திரிமருப் பிரலை யண்ண னல்லே
றிரிமடப் பிணையோ டல்குநிழ லசைஇ
வீததை வியலரிற் றுஞ்சிப் பொழுதுசெலச்
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலைப்
5 பின்பனிக் கடைநாட் டண்பனி யச்சிரம்
வந்தன்று பெருவிற றேரே பணைத்தோள்
விளங்குநக ரடங்கிய கற்பின்
நலங்கே ழரிவை புலம்பச்சா விடவே.

எ - து. பிரிவிடைத் தோழி வற்புறுத்தது (பி - ம். வற்புறுத்தியது.)

பெருங்குன்றூர் கிழார்.

(பி - ம்.) 5 'யற்சிரம்' 8 'நலங்கொளரிவை'

(ப - ரை) பணை தோள் - மூங்கிலைப் போன்ற தோள்களையும், விளங்கு நகர் அடங்கிய கற்பின் - விளங்கிய இல்லின் கண்ணே அடங்கிய கற்பையுமுடைய, நலம் கேழ் - அழகு பொருந்திய, அரிவை - தலைவி, பெரு விறல் தேர் - மிக்க வெற்றியையுடைய தலைவனது தேர், புலம்பு அசாவிட - தனிமையால் உண்டான துன்பம் நீங்கும் வண்ணம், திரி மருப்பு இரலை - முறுக்கின கொம்பையுடைய இரலையாகிய, அண்ணல் நல் ஏறு - தலைமையையுடைய நல்ல ஆண்மான், அரி மடம் பிணையோடு - மென்மையையும் மடப்பத்தையுமுடைய பெண்மானோடு, அல்கு நிழல் அசைஇ-

தாம் தங்குதற்குரிய நிழலினிடத்தே தங்கி,வீ ததை வியல் அரில் - மலர்கள் நெருங்கிய அகன்ற பிணக்கத்தையுடைய தூற்றினிடத்தே, துஞ்சி - தூங்கி, பொழுது செல - பொழுது போனமையின், செழு பயறு கறிக்கும் - செழுவிய பயற்றம்பயிரைக் கறித்துத் தின்னும், புன்கண் மாலை - துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தினையும், பின்பனி கடை நாள் - பின்பனியையுடைய கடையாமத்தையும், தண்பனி - குளிர்ந்த பனியையுமுடைய, அச்சிரம் - அச்சிரக் காலத்தில், வந்தன்று - வந்தது.

(முடிபு) அரிவை, புலம்பு அசாவிடப் பெருவிறல் தேர் வந்தன்று.

(கருத்து) தலைவன் மீண்டு விரைவில் வருவான்.

(வி - ரை.) இது கற்புக் காலத்தது.

அல்கு நிழல் - மாலைக் காலத்தின் நிழலென்பதும் பொருந்தும் (நாலடி. 166.) இரலையும் பிணையும் துஞ்சிப் பயறு கறிக்கு மென்றது, நீயும் நின் தலைவனோடு இனிப் பிரிவின்றி இன்புறுதல் கூடுமென்ற குறிப்பையுணர்த்தியது.

அரில் - பிணங்கிய தூறு. அச்சிரம்: இங்கே பின்பனிக்கு வந்தது. பயறு அச்சிரக் காலத்தில் முதிர்வதாதலின் அதனை மான்கள் கறித்தன (குறுந். 68, வி - ரை.)

தலைவன் தேர் வந்திலதெனும் துணிவுபற்றி வந்தன்றென இறந்த காலத்தாற் கூறினள்.

அடங்கிய கற்பென்றது அறக்கற்பென்றும் ஆறிய கற்பென்றும் வழங்கும்; "ஆறிய கற்பி னடங்கிய சாயல்" (பதிற். 16 : 10.)

கெழுவென்பது கேழென நீண்டது (தொல். குற்றியலுகரப். 76, ந.) புலம்பு அசா - புலம்பையும் அசாவையுமென்பதும் பொருந்தும்.

(ஒப்பு.) 1. **நிரை மருப்பிரலை**: குறுந். 183 : 3-4. அகநா. 4 : 3-4, 34 : 4; பு. வெ. 277. **நிரை மருப்பு**: குறுந். 279 : 1.

1-2. **இரலை பிணையோடு இருந்தல்**: குறுந். 65 : 1-2, ஒப்பு.

3 **விலங்குகள் மலர் நிறைந்த இடத்திற் படுத்திருத்தல்**: "நறுவீ யடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்" (அகநா. 2 : 7.)

5. **தண்பனி யச்சிரம்**: குறுந். 68 : 3, 76 : 6, 82 : 6.

6. **பெருவிறல்**: குறிஞ்சிப். 199; மலைபடு. 493; கலி. 81 : 9.

8. **அசாவிட**: கலி. 132 : 3; அகநா. 162 : 16. (கூகஅ)

தோழி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் வருந்திய தலைவியை நோக்கி, "தலைவனோடு அளவளாவிய காலத்தில் அவ்

வொழுக்கம் நினக்கு இனிதாயிருந்தது; இப்பொழுது வருந்துதல் எவன்?" என்று தோழி கூறியது.]

நடக. நறையகில் வயங்கிய நளிபுன நறும்புகை
உறையறு மையிற் போகிச் சாரற்
குறவர் பாக்கத் திழிதரு நாடன்
மயங்குமலர்க் கோதை நன்மார்பு முயங்கல்
5. இனிதுமன் வாழி தோழி மாயிதழ்க்
குவளை யுண்கண் கலுழப்
பசலை யாகா வூங்கலங் கடையே.

எ - து. வரைவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி கடுஞ் சொற் சொல்லி வற்புறீஇயது.

பேயார்.

(பி - ம்.) 1 'னறும்புகை' 2 'உறையுறு மகளிர் மையிற்' 5 'நறுவிதழ்க்', 'நறுமாயிதழ்க்'

(ப - ரை.) தோழி—, நறை அகில் - வாசனையையுடைய அகிலினது, வயங்கிய நளி புனம் நறுபுகை - விளங்கிய செறிந்த புனத்தின்கண் எழுந்த நறிய புகையானது, உறை அறு மையின் போகி - துளிகள் அற்ற வெண்மேகத்தைப் போலச் சென்று, சாரல் குறவர் பாக்கத்து - மலைச்சாரலிலுள்ள குறவர்களுடைய ஊரில், இழி தரும் நாடன் - இறங்கும் நாட்டையுடைய தலைவன், மயங்கு மலர் கோதை - பலவகை மலர்கள் கலந்தமாலையை யணிந்த, நல் மார்பு முயங்கல் - நின் நல்ல மார்பைத் தழுவுதல், மா இதழ் - கரிய இதழையுடைய, குவளை உண் கண் கலுழ - குவளை மலரைப் போன்ற மையுண்ட கண்கள் அழும்படி., பசலை ஆகா ஊங்கலங்கடை - பசலை உண்டாகாததன் முன்பு, மன் இனிது - மிக இனியதாயிற்று.

(முடிபு) தோழி, பசலையாகா ஊங்கலங்கடை நாடன் மார்பு முயங்கல் இனிதுமன்.

(கருத்து) தலைவன் மணந்தக்கால் இன்புற்ற நீ அவன் நின் பொருட்டுப் பிரிந்தக்கால் துன்புறுதல் தக்கதன்று.

(வி - ரை.) தினை விதைக்கும்பொருட்டுப் புனத்திலுள்ள மரங்களை அகிலோடு சேர்த்துக் கானவர் சுடுதலின் புகை எழுந்தது. அகிலெரிதலின் நறும்புகையாயிற்று. அப்புகை வெண்ணிற முடையதாதலின் நீரற்ற வெண்மேகத்தை ஒத்தது.

பாக்கம் - பக்கத்திலுள்ள ஊர்கள். கோதை, தலைவி யணிந்தது. வாழி அசைநிலை. பசலையாகா ஊங்குக் கடை யென்க; அல்லும் அம்மும் வேண்டாவழிச் சாரியை.

தலைவன் பிரிந்ததனால் கண் கலுழ்ந்தன; பசலை மேனியில் உண்டாயிற்று. கண்ணில் பசலை உண்டாயதெனலும் ஆம்.

''தலைவன் வந்து நின்னை முயங்கிய காலத்து இனிதாக இருந்தது; இப்பொழுது நின் பொருட்டன்றே பிரிந்தான்? இதற்கு அழிவது என்ன அறிவின்மை!' என்பதுபடத் தோழி கூறி வற்புறுத்தினாள்.

(ஒப்பு.) 1. **நறும்புகை** : குறுந். 150 : 1.

2. **உறையறுமை** : நெடுநல். 19; பதிற். 55 : 14-5; அகநா. 217 : 1.

1-2. **புகைக்கு மேகம்** : "அகில்சுடு கானவ னுவல்சுடு கமழ்புகை, ஆடமழை மங்குலிள் மறைக்கும்" (நற். 282 : 7-8); "கறையில் கார்மழை பொங்கி யன்ன, நறையி னறும் புகை" (பரி. 14 : 19-20); "புகைபுரை யம்மஞ் சூர", "வெண் மழை கவைஇக், கலஞ்சுடு புகையிற்றோன்று நாட" (அகநா. 97 : 22, 308 : 5-6); "அகிலெழு கொழும் புகை மஞ்சி னுடவும்" (சூளா. நகரச். 6.)

3. **குறவர் பாக்கம்** : குறுந். 394 : 2; தொல். புறத். 3; பொருந. 210; மலைபடு. 162.

5. **வாழி தோழி** : குறுந். 260 : 4, ஒப்பு.

6-7. **கண்பசலை பூத்தல்** : நற். 35 : 12; ஐங். 16 : 4, 21 : 4; கலி. 16 : 1; அகநா. 146 : 11. (கூகூ)

தலைவி கூற்று

[தலைவன் இரவுக்குறிக்கண் வந்து அளவளாவுவானென்று உணர்த்திய தோழியை நோக்கி, "என் நெஞ்சம் அவர் திறத்து யாம் வருந்தும் போது உடனிருந்து வருந்தாநின்றது" என்று கூறும் வாயிலாகத் தலைவி இரவுக் குறி வருதலின் ஏதம் கருதித் தான் அஞ்சுதலைக் குறிப்பித்து அதனை மறுத்தது.]

கூசo. காமங் கடையிற் காதலர்ப் படர்ந்து
நாமவர்ப் புலம்பி னம்மோ டாகி
ஒருபாற் படுதல் செல்லா தாயிடை
அழுவ நின்ற வலர்வேய் கண்டல்
5. கழிபெயர் மருங்கி னெல்கி யோதம்
பெயர்தரப் பெயர்தந் தாங்கு
வருந்துந் தோழியவ ரிருந்தவென் னெஞ்சே.

எ - து. இரவுக்குறி உணர்த்திய தோழிக்குக் கிழத்தி மறுத்தது. அம்மூவன்.

(பி - ம்.) 2 'நாமவற்'; 'புலப்பின்' 4 'அழுவி', 'அழிவினின்ற'; 'வலர்வேர்க்கண்டல்" 7 'அவரருந்த', 'அவர் வருந்த'

(ப - ரை.) தோழி—, அவர் இருந்த என் நெஞ்சு - அத்தலைவர் இருந்த என் நெஞ்சம், காமம் கடையின் - காமமானது மிக்கதாயின், காதலர் படர்ந்து - தலைவரை நினைந்து சென்று, நாம் அவர் புலம்பின் - நாம் அவர் திறத்தே வருந்தினேமாயின், நம்மோடு ஆகி - நம்முடன் இருப்பதாகி, ஒரு பால் படுதல்செல்லாது - ஒரு கூற்றிலே அமையாமல், ஆயிடை - அவ்விரண்டினிடையிலும், அழுவம் நின்ற அலர் வேய் கண்டல் - கடற்கரைப்பரப்பிலே நின்ற மலரைப் பொருந்திய தாழை, கழி பெயர் மருங்கின் ஒல்கி - கழி பெயருகின்ற இடத்தில் தளர்ந்து, ஓதம் - வெள்ளம், பெயர் தர பெயர் தந்தாங்கு - பெயரும்பொழுது தானும் பெயர்ந்தது போல, வருந்தும் - வருந்தா நிற்கும்.

(முடிபு) தோழி, நெஞ்சு காமம் கடையிற் படர்ந்து, நாம் புலம்பின் நம்மோடு ஆகி, ஒரு பாற் படாதாகி வருந்தும்.

(கருத்து) தலைவன் இரவுக்குறிவரின் யான் வருந்துவேன்.

(வி - ரை.) காமம் கடைதல் - காமம் மிகுதிப் படுதல்;

"காதலாற் கடை நின்றது காமமே",

"காய்த்தியிட் டுள்ளம் வெம்பிக் கடைந்திடுகின்ற காமம்"

(சிவக. 1308, 2804.)

கடையின் - செலுத்தினெனலுமாம். காதலர்ப் படர்ந்தும், நம்மோடாகியுமென்னும் உம்மைகள் தொக்கன. அழுவம் - நீர்ப்பரப்பு (மலைபடு. 528.)

'தலைவர் பாற்காமம்மிகின் என் நெஞ்சம் அவர்பாற் சென்று அவரது வரவை விரும்புகின்றது. ஆயினும் அவர் வரும் வழியின் ஏதங் குறித்து நாம் வருந்தினேமாயின் அந் நெஞ்சமும் நம்முடன் சேர்ந்து வருந்துகின்றது. அவர் வருதலிலும் வாராமையிலும் விருப்பம் மாறி மாறிக் கொண்டது' என்றாள்.

தாழை கழியில் ஓதம் மிகும்பொழுது உயர்ந்தும் தாழ்ந்த பொழுது அவர்பாற் படர்ந்தும், மிகாதபொழுது அவர்க்கு வரும் ஏதம் நினைந்து வருந்தியும் கலங்குவதாயிற்றென உவமையை விரித்துக் கொள்க.

என் நெஞ்சு ஒரு பாற் படாது வருந்துமென்றமையால் இரவுக்குறி மறுத்தாளாயிற்று.

(ஒப்பு.) 3. ஆயிடை: குறுந். 43 : 3.

7. தலைவன் தலைவியின் நெஞ்சத்து இருத்தல் : குறுங். 36 : 3, ஒப்பு. (கசo)

தலைவி கூற்று

[தலைவன் கூறிச் சென்ற பருவம் வந்த காலத்து வருந்துவா ளெனக் கவன்ற தோழிக்கு, "அவர் தம் காரியத்தை முற்ற முடித்தபின் வருவரென்று துணிந்து ஆற்றினேன்" என்று தலைவி கூறியது.]

நசக. பல்வீ பட்ட பசுநனைக் குரவம் [அச்
பொரிப்பூம் புன்கொடு பொழிலணிக் கொளா
சினையினி தாகிய காலையுங் காதலர்
பேணு ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
5.கண்ணிய வாண்மை கடவ தன்றென
வலியா நெஞ்சம் வலிப்ப
வாழ்வேன் மருழியென் வன்க ணனே.

எ - து. பருவவரவின்கண் வேறுபடுமெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

மீனைகிழான் நல்வேட்டன்.

(பி - ம்.) 1 'பல்லி பய', 'பல்லி படீஇய', 'பல்லி படரிய' 5 'கண்ணிய லாண்மை' 6 'வலிய'

(ப - ரை.) தோழி—, பல்வீ பட்ட பசு நனை குரவம் - பல மலர்கள் தோன்றிய பசிய அரும்புகளையுடைய குராமரம், பொரி பூ புன்கொடு - நெற்பொரியைப் போன்ற பூக்களையுடைய புன் கமரத்தோடு, பொழில் அணிக்கொளாஅ - சோலையின்கண் அழகைக் கொண்டு, சினை இனிது ஆகிய - கிளை கண்ணுக்கு இனிதாகத் தோற்றிய, காலையும் - இப்பருவத்திலும், காதலர் பேணுர் ஆயினும் - தலைவர் நம்மை விரும்பிப்பாதுகாவாராயினும், பெரியோர் நெஞ்சத்து கண்ணிய ஆண்மை கடவது அன்று என - பெரியோர்கள் தம் நெஞ்சத்திலே நினைத்த மேற்கோள் செலுத்தப் படுவதன்றென்றெண்ணி, வலியாநெஞ்சம் - முன்னர்த் துணியாத என் நெஞ்சம், வலிப்ப - பின்னர்த் துணிந்தமையால், என் வன் கணன் - எனது தறுகண்மையால், வாழ்வேன் - உயிரோடு வாழ் வேனுயினேன்.

(முடிபு) தோழி, காதலர் பேணுராயினும் நெஞ்சம் வலிப்ப என் வன்கணன் வாழ்வேன்.

(கருத்து) தலைவர் தம் வினை முடித்து வருவரென்னும் துணி வினால் வாழ்வேனையினேன்.

(வி - ரை.) தலைவி முதலில், "நம்பால் அன்புடைய தலைவர் தாம் மேற்கொண்ட வினையை முற்றச் செலுத்தாவிடினும் வருவர்" என்று எண்ணினாள். அப்பால், "அவர் வினைமுடித்தே வருவர்; ஆதலின் நாம் ஆற்றியிருத்தல் வேண்டும்" என்று துணிந் தாள். துணியினும் தலைவன் பிரிவினை ஆற்றுதற்கு நெஞ்சத் திண்மை வேண்டுமாதலின், 'என் வன்கணன் வாழ்வேன்' என்றாள்.

மலரும் அரும்பும் குரவத்தில் நிறைந்தன. சினையென்றது குரவம், புன்கென்னும் இரண்டன் சினைகளையும். இனிது: சாதி யொருமை. காலையும்: உம்மை உயர்வு சிறப்பு. ஆண்மை என்றது இங்கே ஆள்வினையை. கடவது - செலுத்துவது: நிறை வேற்றுதல். வலியா நெஞ்சமென்றது, பெரியார் தாம் மேற்கொண்டதைச் செலுத்தாரென்று எண்ணிய துணிவின்மையையுடைய நெஞ்சமென்றபடி. கடவதெனவும் அன்றெனவும் துணியாத நெஞ்சமென்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும். வலிப்ப - பெரியோர் கண்ணிய ஆண்மை கடவதெ னத் துணிய. ஏ: அசைநிலை.

இஃது ஆற்றுவலென்பது பட நின்றது.

(ஒப்பு.) 2. புன்க மலருக்குப் பொரி: குறுந். 53: 2 - 4, ஒப்பு.

6. நெஞ்சம் வலித்தல்: "வல்லா நெஞ்சம் வலிப்ப" (அகநா. 53: 14.)

(கசக)

தோழி கூற்று

[தலைவி இற்செறிக்கப்பட்டதை அறிவித்தபோது தலைவன் பின்னும் களவொழுக்கத்தை விரும்பினானாக, "நீ வரையாது ஒழுகின் இவள் வருந்துவாள்; இனி நீ வரைதலே தக்கது" என்று தோழி கூறியது,]

கசஉ. கலிகை தொட்ட கமழ்சுனைப் பெரும்பழம்
காவன் மறந்த கானவன் ஞாங்கர்க்
கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்
குன்ற நாட தகுமோ பைஞ்சுனைக்

5. குவளைத் தண்டழை யிவளீண்டு வருந்த
நயந்தோர் புன்கண் டீர்க்கும்
பயந்தலைப் படாஅப் பண்பினை யெனினே.

எ - து. செறிப்பறிவுறுக்கப்பட்டான் வரைவின்கட் செல்லாது, பின்னும் வரவு வேண்டின தலைமகனைத் தோழி நெருங்கிச் சொல்லி வரைவு கடாயது.

காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரத்தனார்.

(பி - ம்.) 7 ' பணிவினையெனினே '

(ப - ரை.) கலை கைதொட்ட - ஆண்குரங்கு தன்கையால் தோண்டிய, கமழ் சுளைபெரு பழம் - மணம் கமழ்கின்ற சுளைகளையுடைய பெரிய பலாப்பழத்தை, காவல் மறந்த கானவன் - காத்தலை மறந்த வேடன், ஞாங்கர் - அதன்பின், கடியுடை மரந் தொறும் படுவலை மாட்டும் - பழத்தால் மணமுடைய மரந் தோறும் குரங்குகள் படுதற்குரிய வலையை மாட்டிவைக்கும், குன்றம் நாட - மலையையுடைய நாட, பசு சுணைகுவளை தண் தழை இவள் - பசிய சுனையினிடத்து மலர்ந்த குவளைமலர்களை இடையிட்டுக் கட்டிய தண்ணிய தழையுடையை அணிந்த இத்தலைவி, ஈண்டு வருந்த - இங்கே துன்புற, நயந்தோர் புன்கண் தீர்க்கும் பயம் - நின்னை விரும்பியவர்களது துன்பத்தைத் தீர்க்கும் நல்வினைப்பயனை, தலைப்படா - அடையாத, பண்பினை எனின் - இயல்புடையாயென்னின், தகுமோ - அவ்வியல்பு நினக்குத் தகுமோ?

(முடிபு) நாட, இவள் வருந்த, பண்பினையெனின் தகுமோ?

(கருத்து) நீ இனி இவளை வரைந்து கொள்ளவேண்டும்.

(வி - ரை.) கலை - ஆண் குரங்கு. சுளைப்பெரும் பழம் என்றமையின் பலாப்பழமாயிற்று. ' நயந்தோர் புன்கண்டீர்க்கும் பயம் ' என்று பன்மை வாசகம் படக் கூறினும் அவள் கருதியது தலைவியின் வருத்தத்தைத் தீர்க்கும் செயலையே; அச்செயலாவது வரைதல்.

கானவனது சோர்வறிந்து குரங்கு தொட்ட பழம் அவன் படுவலை மாட்டியபின் பெறுதற்கு அரிதாதலைப் போல, காப்போரில்லா நிலையில் நீ கண்டு அளவளாவிய தலைவி இற்செறிக்கப்பட்டபின் நின்னால் அணுகுதற்கு அரியவளாவாளென்பது குறிப்பு; இஃது இரவுக்குறி மறுத்த வாய்பாட்டால் வரைவு கடாயது.

' நயந்தோர் புன்கண் தீர்க்கும் பயந்தலைப் படாப் பண்பினை

யாதல் தகுமோ ?' என இடித்துரைத்தலின் நெருங்கிச் சொல்லிய தாயிற்று.

(ஒப்பு.) 1. கலை தொட்ட பழம்: (குறுங். 90: 4, 373: 4 - 6); "கலைதொடு பெரும்பழம்" (மலைபடு. 292); "கலையுணக் கிழிந்த முழவு மருள் பெரும்பழம்" (புறநா. 236: 1.)

1 - 3. பலாப்பழத்தைக் கானவன் காத்தல்: குறுங். 385: 1 - 2.

5. குவளைத் தழை: புறநா. 116: 1 - 2.

4 - 5. சுனைக் குவளை: குறுங். 69: 2 - 3, ஒப்பு.

6. நயந்தோர் புன்கண் தீர்த்தல்: "நயவர் பாணர் புன்கண் டீர்த்த மீன்" (சிறுபாண். 248); "தங்நயந் துறைவோர்த் தாங்கி" (அகநா. 151: 1.) (கசஉ)

பாலை

தோழி கூற்று

[தோழி தலைவியிடம், "நீ தலைவனுடன் செல்வதை விரும்பி மேற்கொள்வாயாக" என்றது.]

கசஙு. நினையாய் வாழி தோழி நனைகவுள்
அண்ணல் யானை அணிமுகம் பாய்ந்தென
மிகுவலி யிரும்புலிப் பகுவா யேற்றை
வெண்கோடுசெம்மறுக்கொளீஇ விடர்முகைக்
5. கோடை யொற்றிய கருங்கால் வேங்கை
வாடுபூஞ் சினையிற் கிடக்கும்
உயர்வரை நாடனெடு பெயருமாறே.

எ - து. தோழி, கிழத்தியை உடன்போக்கு நயப்பக் கூறியது. ஈழத்துப் பூதன்றேவன்.

(பி - ம்.) 2 'அண்ணலியானை'; 'பாய்ந்தே' 3 'மிகுவலிரும் புலி' 4 'கொளீஇய' 7 'பேருமாறே'

(ப - ரை) தோழி—, மிகுவலி இருபுலி பகுவாய் ஏற்றை - மிக்க வலியையுடைய பெரிய புலியினது பிளந்த வாயையுடைய ஆணினது, நனைகவுள் - மதத்தால் நனைந்த கவுளையுடைய, அண்ணல் யானை அணி முகம் பாய்ந்தென - தலைமையையுடைய யானையினது அழகிய முகத்தின் கண்ணே பாய்ந்ததாக, வெள்கோடு செம்மறு கொளீஇ - அவ்யானையின் வெள்ளிய கொம்பைத்தனது இரத்தத்தால் செவ்விய கறையைக் கொள்ளச்செய்து, விடர் முகை - பிளப்பையுடைய கன்முழையிலுள்ள, கோடை ஒற்றிய -

மேல் காற்று வீழ்த்திய, கருகால் வேங்கை - கரிய அடியையுடைய வேங்கை மரத்தினது, வாடு பூ சினையின் கிடக்கும் - வாடிய பூவை யுடைய கிளையைப் போல இறந்து கிடக்கும், உயர்வரை நாட னொடு - உயர்ந்த மலையையுடைய நாட்டையுடைய தலைவனுடன், பெயருமாறு - போகும் திறத்தை, நினையாய் - நீ எண்ணுவாயாக; வாழி - நீ வாழ்வாயாக.

(முடிபு) தோழி, நாடனொடு பெயருமாறு நினையாய்; வாழி!

(கருத்து) நீ தலைவனுடன் செல்லுதலே நன்று.

(வி - ரை.) உடன் போக்கு, தலைவியின் நெஞ்சிற்கு உவந்த தன்றுதலின் அதைக் கூறுதற்குமுன் வாழ்த்தினள். பகுவா யென்றது பாயும்பொழுது புலி யானையைக் கொல்வதற்குப் பிளந்தவாயை யுடையதாயிற்றென்றபடி. வெண்கோடு செம் மறுக் கொளீஇயென்றது யானையின் கொம்பினுற் குத்தப்பட்டு இறந்ததைப் புலப்படுத்தியது. புலி பாய்ந்ததனல் வெண்கோடு செம்மறுக் கொண்டதையன்றி அவ் யானைக்கு ஊறொன்றும் நேர்ந்திலது.

விடர்முகை வேங்கை, கோடையொற்றிய வேங்கையெனக் கூட்டுக. வேங்கையின்மலர் புலியின் வரியைப் போலத் தோற் றும் (குறுந். 47: 1-2); ஆதலின் இறந்து கிடந்த வேங்கைக்கு வேங்கை மரத்தின் பூஞ்சினை உவமையாயிற்று.

பாலியிற் சென்றுல் ஏதம் வருங்கொலோவென்று தலைவி அஞ்சாவாறு, "அவனது நாட்டிலுள்ள யானை தன்னை எதிர்த்த மிகுவலியையுடைய புலியைத் தான் எதிர்க்காமலே கொம்பினுல் வீழச் செய்தது" என்பதனுல் அவன் நாட்டிலுள்ளவற்றின் பெருவலியைப் புலப்படுத்தி அந்நாட்டுக் குரியவனுகிய தலைவனும் இடையூறுகளை எளிதில் வெல்லும் ஆற்றலுடையானென்பதை உய்த்துணர வைத்தாள்.

பெயருமாறே நினையாயென்றது பிறிது நினைத்தலாற் பயனில்லை யென்றபடி; ஏ : பிரிநிலை.

(ஒப்பு.) 1. **வாழி தோழி**: குறுந். 260: 4, ஒப்பு.

3. **புலியின் பகுவா யேற்றை**: "பொறிகிளர் சுழுவைப் பேழ்வா யேற்றை" (அகநா. 147: 6); "பேழ்வா யுழுவை" (புறநா. 152: 2.)

1-3. **யானையும் புலியும் பொருதல்**: குறுந். 88: 2-3, ஒப்பு.

4. **செம்மறுக் கொண்ட வெண்கோடு**: "கொன்முர ணிரும்புலி யரும் புழைத் தாக்கிச், செம்மறுக் கொண்ட வெண்கோட்டி யானை" (நற். 151: 2-3.) **விடர்முகை**: குறுந். 218: 1, ஒப்பு.

5. **கோடைஒற்றுதல்** : குறுந். 388 : 2. **ஒற்றுதல்** : அகநா. 18 : 4 ; புறநா. 237 : 16.

கருங்கால் வேங்கை : குறுந். 26 : 1, ஒப்பு ; 47 : 1, ஒப்பு.

4-5. **விடர் முகையில் கோடைக் காற்று அடித்தல்** : "கமஞ்சூழ் கோடை விடரக முகந்து, காலுறு கடலி னெலிக்குஞ் சும்மை" (மதுரைக். 308 - 9.)

3-6. **புலிக்குப் பூத்த வேங்கைச் சினை** : "கதழ்வாய் வேழம், இருங்கேழ் வயப்புலி வெரீஇ யயலது, கருங்கால் வேங்கை யூறுபட மறலிப், பெருஞ் சினந் தணியுங் குன்ற நாடன்", "கல்லயற் கலித்த கருங்கால் வேங்கை, அலங்கலந் தொடலை யன்ன குருளை, வயப்புனிற் றிரும்பிணப் பசித்தென வயப்புலி, புகர்முகஞ் சிதையத் தாக்கி" (நற். 217 : 2-5 ; 383 : 1-4.) ; "உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை", "வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்", "கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு, நெடு வரை மருங்கிற் றுஞ்சும் யானை, நனவிற்றன் செய்தது மனத்த தாகலிற் கனவிற் கண்டு கதுமென வெரீஇப், புதுவ தாக மலர்ந்த வேங்கையை அது வென வுணர்ந்தத னணிநல முருக்கி" (கலி. 38 : 6, 46 : 5, 49 : 1-6) ; "மலர்ந்த, வேங்கை வெறித்தழை வேறுவகுத் தன்ன, ஊன் பொதிய விழாக் கோட்டுகிர்க்குருளை", "புலிக் கேழ் வேங்கைப் பூஞ்சினை" (அகநா. 147: 1-3, 227 : 8.) (உசாஉ)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் வருந்திய தன்னை வற்புறுத்தும் தோழியை நோக்கி, "இக் காலத்தில் தம்மைப் பிரிந்து சென்ற தலைவர் வரப்பெறும் பேறுடைய மகளிர் தவஞ்செய்தாராவார் ; யான் அது பெற்றிலேன்" என்று தலைவி கூறியது.]

உசாஉ. நோற்றோர் மன்ற தோழி தண்ணென
தூற்றுந் துவலைப் பனிக்கடுந் திங்கட்
புலம்பயி ருருந்த வண்ண லேற்றெடு
நிலந்தூங் கணல வீங்குமூலைச் செருத்தல்
5. பால்வார்பு குழவி யுள்ளி நிரையிறந்
தூர்வயிற் பெயரும் புன்கண் மாலை
அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே.

எ - து. பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் கூறியது. குறுங்குடி மருதன்.

(பி - ம்.) 2 'திவலைப்' 3 'அண்ணனல்லேறெடு' 5 'பால்

வார்'; 'குழவியாளினிரையிறந்', 'யானிரையிறந்', 'யாநாளிறை யிறந்', 'யானினிரையிறந்'

(ப - ரை.) தோழி—, தண்ணென - குளிர்ச்சி உண்டாகும்படி, தூற்றும் துவலை பனி கடு திங்கள் - வீசுகின்ற துளிகளாகிய பனியையுடைய கடுமையாகிய மாதத்தில், புலம் பயிர் அருந்த அண்ணல் ஏற்றெழுடு - மேய்புலத்தின் கண்ணேயுள்ள பயிரை அருந்திய தலைமையையுடைய எருதோடு, நிலம் தூங்கு அணல - நிலத்தளவும் நாலுகின்ற அலைதாடியை யுடையனவாகிய, வீங்கு மூலை செருத்தல் - பால் நிரம்புதலாற் பருத்த மூலைக் காம்பை யுடைய மடியையுடைய பசுக்கள், பால் வார்பு - பாலை ஒழுகவிட்டு, குழவி உள்ளி - தம் கன்றுகளை நினைந்து, நிரை இறந்து - தம் மோடு ஒருங்கு மேயும் ஏனைய நிரைகளை நீங்கி, ஊர்வயின் - ஊரினிடத்தே, பெயரும் - மீண்டு வருகின்ற, புன்கண் மாலை - துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தில், அரு பெறல் பொருள் பிணி போகி - அரிதிற் பெறுகின்ற பொருள்மேற் சென்ற நெஞ்சப் பிணிப்பினை நிறைவேற்றச் சென்று, பிரிந்து உறை காதலர் - தம்மை முன் பிரிந்து உறைந்த தலைவர்கள், வர காண்போர் - மீண்டுவரக் காணும் மகளிர், மன்ற - நிச்சயமாக, நோற்றோர் - தவஞ் செய்தவராவர்.

(முடிபு) தோழி, மாலையில் காதலர் வரக்காண்போர் நோற்றோர் மன்ற.

(கருத்து) தலைவர் இப்பொழுது வந்திலராதலின் யான் வருந்துவேன்.

(வி - ரை.) தூற்றுந்துவலைப் பனிக்கடுந்திங்களென்றது பனிக்காலத்தைச் சுட்டியது. அணல் - அலைதாடி யென்பர் (பு. வெ. 12, உரை.) செருத்தல்: ஆகுபெயர். மாலைக்காலத்தில் பசுக்கள் தம்முடைய கன்றுகளை நினைந்து பிரிந்து வந்தன. பொருட்பிணி - பொருள் வேட்கை (இறை. 35, உரை.)

(ஒப்பு.) 1. நோற்றோர் மன்ற: புறநா. 26 : 16.

3-4. ஆனேறுடன் பசுக்கூட்டம் இருத்தல்: அகநா. 105 : 15, 213 : 6, 269 : 3, 291 : 3.

6. புன்கண் மாலை : குறுந். 46 : 6, 330 : 6.

4-6. மாலையில் கன்றை நினைந்து பசுக்கள் வருதல்: குறுந். 108 : 2, ஒப்பு. பசுக்கள் கன்றை நினைந்து பாலை வார்த்து வருதல்: "பதவுமேய லருந்து மதவுநடை நல்லான், வீங்குமாண் செருத்த நீம்பால் பிலிற்றக், கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரு, மாலை" (அகநா. 14 : 9-12);

"குவளை மேய்ந்த குடக்கட் சேதா, முலைபொழி தீம்பா லெழுதுக ளவிப்பக், கன்றுநினை குரல மன்றுவழிப் படர" (மணி. 5: 130-32.)

7. பொருட்பிணி: குறுந். 255: 7, ஒப்பு; இறை. சூ. 35, 39.

(சுசச)

தோழி கூற்று

[பகலில் வந்து தலைவியைக் கண்டு அளவளாவிச் செல்லும் வழக்கத்தையுடைய தலைவனை நோக்கி, "நீ இனி இரவில் வந்து இங்கே தங்கிச் செல்க" என்று தோழி கூறியது.]

சுசடு. இழையணிந் தியல்வருங்கொடுஞ்சிநெடுந்தேர்
வரைமரு ணெடுமணற் றவிர்த்துநின் றசை
தங்கினி ராயிற் றவறே தெய்ய [இத்
தழைதா ழல்கு லிவள்புலம் பகலத்
5. தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென வொலிக்கு மாங்கட்
பெருநீர் வேலியெஞ் சிறுநல் லூரே.

எ - து. பகல்வந்து ஒழுகுவானைத் தோழி இரா வாவென்றது. அண்டர்மகன் குறுவழுதி.

(பி - ம்.) 1 'கொடிஞ்சி' 2 'றவிர்த்த நிரையசைஇ', றவிர்த்தனரசைஇ' 3 'றவறேத்தகைய,' 'றவறேதைய,' 'றவ றேதைஇய'

(கு - பு.) இச்செய்யுளின் நாலாம் அடி ஒரு பிரதியில் இல்லை.

(ப - ரை) தாழை தைஇய - தாழை பொருந்திய, தயங்கு திரை கொடு கழி - விளங்கிய அலைகளையுடைய வளைந்த கழி யானது, இழுமென ஒலிக்கும் - இழுமென்று ஓரவாரம் செய்யும், ஆங்கண் - அவ்விடத்துள்ள, பெரு நீர் வேலி எம் சிறு நல் ஊர் - பெரிய கடலை வேலியாகவுடைய எமது சிறிய நல்லூரின்கண், இழை அணிந்து இயல் வரும் கொடுஞ்சி நெடு தேர் - பொற் படை களால் அணியப்பட்டு ஓடுகின்ற கொடுஞ்சியையுடைய நுமது உயர்ந்த தேரை, வரை மருள் நெடு மணல் தவிர்த்து - மலையை யொத்த உயர்ந்த மணல்மேட்டிலே நிறுத்திவிட்டு, நின்று அசைஇ - இங்கு இருந்து இளைப்பாறி, தழை தாழ் அல்குல் இவள் புலம்பு அகல - தழையுடை தாழ்ந்த அல்குலையுடைய இத்தலைவி

யினது தனிமை வருத்தம் நீங்கும்படி, தங்கினீர் ஆயின் - தங்குவீ ராஞல், தவறே - அது பிழையாகுமோ?

(முடிபு) தவிர்த்து நின்று அசைஇ, புலம்பு அகல நல்லூரில் தங்கினிராயின் தவறே?

(கருத்து) இனி நீர் இரவில் வந்து தலைவியோடு அளவளாவு வீராக.

(வி - ரை.) இழை - பொற்படை (புறநா. 123 : 4, உரை); அலங்காரப் பொருள்களுமாம். இரவுக்குறி இல்வரை இகவாத தாதலின் அங்கே தேரோடு வரின் ஊரினர் அறிவரென்றஞ்சி அதனை மணல் மேட்டில் நிறுத்தி வரும்படி உரைத்தாள். தவறே வென்ற வினை அங்ஙனம் செய்தல் வேண்டுமென்னும் கிடக்கை யினது. தெய்ய : அசைநிலை; தைஇய என்ற பாடத்திற்கு உடுத்த வென்று பொருள் கொள்க.

தாழையில் மோதும் அலைகள் ஒலித்தலின் கழி இழுமென்னும் ஓசையையுடையதாயிற்று.

பகற்குறியிடத்துக்கண் வந்த தலைவனுக்குக் கூறுதலின் தம் ஊருள்ள இடத்தை ஆங்கணைனச் சேய்மைச்சுட்டாற் குறிப்பித் தாள்.

(ஒப்பு.) 1. இழை யணிந்த தேர் : நற். 10 : 5; கலி. 99 : 7; அகநா. 238 : 12; புறநா. 123 : 4, 359 : 15.

கொடுஞ்சி நெடுந்தேர் : குறுந். 212 : 1, ஒப்பு.

வரைமருள் நெடுமணல் : குறுந். 236 : 3, ஒப்பு.

1-2 தேரைத் தனியே நிறுத்திவிட்டுத் தலைவன் வருதல் : "தேர்சே ணீக்கித் தமியன் வந்து" (அகநா. 381 : 1.)

4. தழை தாழல்குல் : குறுந். 125 : 3, ஒப்பு.

5. தாழை தைஇய கழி : குறுந். 340 : 4-6.

6. இழுமென ஒலித்தல் : குறுந். 351 : 3-4; முருகு. 316.

7, மு. அகநா. 310 : 17. (கூசசு)

தோழி கூற்று

(அறத்தொடு நிலை)

["தலைவன் மாலைப் பொழுதில் நம்மைப் பிரிந்து செல்ல வருந்துகின்றான்" என்று கூறும் வாயிலாக அவன் இரவுக்குறி விரும்புதலைத் தோழி தலைவிக்குக் கூறியது]

நூசசு. நாகுபிடி நயந்த முளைக்கோட் டிளங்களிறு
குன்ற நண்ணிக் குறவ ரார்ப்ப

மன்றம் போழு நாடன் ரூழி
சுனைப்பூங் குவளைத் தொடலை தந்தும்
5. தினைப்புன மருங்கிற் படுகிளி யோப்பியும்
காலை வந்து மாலைப் பொழுதில்
நல்லக நயந்துதா னுயங்கிச்
சொல்லவு மாகா தஃகி யோனே.

எ - து. தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது. வாயிலிளங் கண்ணன்.

(பி-ம்.) 1 'முனைக்கோட்' 7 'நயந்துதான் மயங்கிச்' 8 'செல்லவு'

(ப - ரை.) தோழி—, நாகு பிடி நயந்த - இளம்பிடியை விரும்பிய, மூலை கோடு இள களிறு - மூங்கில் முளையைப் போன்ற கொம்பையுடைய இளைய களிறு, குன்றம் நண்ணி - மலையிடத்தே பொருந்தி, குறவர் ஆர்ப்ப - அங்குள்ள குறவர் முழங்கியதனால், மன்றம் போழும்-ஊரிடத்துள்ள மன்றத்தைப் போழ்ந்து செல்லும், நாடன் - நாட்டையுடைய தலைவன், காலை வந்து - பகலில் வந்து, சுனை பூ குவளை தொடலை தந்தும் - சுனையில் மலர்ந்த குவளைமலர் மாலையை நினக்குத் தந்தும், தினை புனம் மருங்கில் - தினைக்கொல்லையினிடத்தில், படு கிளி ஓப்பியும் - வீழ்கின்ற கிளிகளை நம்மோடு ஓட்டியும், மாலை பொழுதில் - பிறகு வந்த மாலைக்காலத்தில், நல் அகம் நயந்து - நல்ல நெஞ்சத்தின் கண்ணே ஒன்றை விரும்பி, உயங்கி - வருந்தி, சொல்லவும் ஆகாது - அக்கருத்தை வெளிப்படச் சொல்லவும் எழுச்சிபெறுமல், அஃகியோன் - குறைவுற்றான்.

(முடிபு) தோழி, நாடன் காலைவந்து தந்தும் ஓப்பியும் மாலைப் பொழுதில் நயந்து உயங்கி அஃகியோன்.

(கருத்து) தலைவன் மாலைப்பொழுதின்கண்ணும் வரும் இரவுக் குறியை நயந்தான் ; அதனைக் குறிப்பினால் அறிந்தேன்.

(வி - ரை.) மன்றம் - குறவர் ஊர்களிலுள்ள பொது இடம்.

பிடியை நயந்த களிறு குன்றம் நண்ணுமென்றது நின்னை நயந்த தலைவன் ஊராருக்கு அஞ்சி மனையகத்தே இரவில் வருவானென்ற குறிப்பைஉணர்த்தியது.

நல்லகம் என்றலின் அவன் நயந்தது நன்மையையே பயக்கு மென்ற தன் உடம்பாட்டை உணர்த்தினுள்; இதனுல் தலைவியைத் தோழி இரவுக்குறி நயப்பித்தாளாயிற்று.

(மேற்.) மு. தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பித்தது (தொல். களவு. 23, ந)

(ஒப்பு.) 3. மன்றம் போற்றல்: குறுந். 301: 5.

4. சுனைப்பூங்குவளை: குறுந். 59: 2-3, ஒப்பு, 321: 2.

5. தலைவன் தலைவியோடு கிள்ளையோப்புதல்: "பைந்தாட் செந்கிணைக் கொடுங்குரல் வியன்புனம், செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்", "களிறணைந் தெய்தாக் கன்முகை யிதணத்துச், சிறுதினைப் படுகிளி யெம்மோ டோப்பி" (அகநா. 242: 5-6, 308: 9-10.)

4-5. சுனைப்பூவினுல் தொடலை கட்டுதலும் கிளியோப்புதலும்: குறுந்: 142: 1-2. 8. தலைவன் தன்கருத்தை வெளிப்படையாகச் சொல்லாமை: குறுந். 298: 2; கலி. 37: 1-5; தீருச்சிற், 82, 83. (நசசு)

தலைவன் கூற்று

[பொருள்வயிற் பிரிய எண்ணிய தன் நெஞ்சத்தை நோக்கி, "தலைவியும் உடன் வருவாளாயின் நாம் பிரிதல் கூடும்" என்று கூறித் தலைவன் செலவு தவிர்ந்தது].

நசள். மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதற்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியிற் ரூன்றும்
கான நீளிடைத் தானு நம்மொ
5 டொன்றுமணஞ் செய்தன ளிவளெனின்
நன்றே நெஞ்ச நயந்தநின் றுணிவே.

எ - து. பொருள்வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

[பொருள் வலிக்கும் நெஞ்சு - பொருள் பெறவேண்டுமென்று எண்ணி அதன்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்ல எண்ணிய நெஞ்சு. செலவு அழுங்கியது - செல்லுதலைத் தவிர்ந்தது; இங்ஙனம் அழுங்குதல் தலைவியை ஆற்றுவித்துப் பின்னர்ச் செல்லும் பொருட்டேயாகும்.]

காவிரிப்பூம்பட்டினத்துச் சேந்தங் கண்ணன்.

(பி - ம்.) 1 'மல்குசுனைப் புலந்த' 2 'கொல்லுடை நறுவீ,

(ப - ரை.) நெஞ்சம் - நெஞ்சே, மல்கு சுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல் - முன்பு நீர்மல்கிய சுனை பின்பு வற்றுதலினால் வறுமை யுற்ற பாலைநிலத்தில் வளர்ந்த, குமரி வாகை கோல் உடை நறு வீ - இளமையையுடைய வாகைமரத்தின் கொம்பின்கண் உள்ள நறிய மலர், மடம் மா தோகை குடுமியின் தோன்றும் - மடப்பத்தை யுடைய கரிய மயிலினது உச்சிக்கொண்டையைப் போலத் தோன்றுகின்ற, கானம் நீள் இடை - நீண்ட காட்டு வழியில், இவள் தானும் நம்மோடு ஒன்றும் மணஞ்செய்தனள் எனின் - இத்தலைவி தானும் நம்மொடு வந்து பொருந்தும் முயக்கத் தைச் செய்வாளெனின், நயந்த - பொருள் செய்தற்கு விரும் பிய, நின் துணிவு நன்றே - நினது துணிவு நன்மையுடையதே யாகும்.

(முடிபு) நெஞ்சம், நீளிடையில் இவள் தானும் மணஞ் செய் தனளெனின் நின் துணிவு நன்றே.

(கருத்து) தலைவியைப் பிரிந்து செல்லுதல் தக்கதன்று.

(வி - ரை.) மல்குசுனை - முன்பு நீர்மல்கிய சுனை. குமரி யென் றது இளமை குறித்து நின்றது. எனினென்பது அங்ஙனம் செய்த லரிதென்னும் நினைவிற்று. நன்றே : ஏ தேற்றம். துணிவே : ஏ அசைநிலை.

1. **(ஒப்பு.)** சுனை புலர்ந்த சுரம் : "அறுநீர்ப் பைஞ்சுனை யாமறப் புலர் தலின்" (அகநா. 1 : 12.)

2-3. வாகைமலர்க்கு மயிலின் உச்சிச் சூட்டு : "வாகை யொண்பூப் புரையு முச்சிய, தோகை" (பரி. 14 : 7 - 8.)

4-5. கானநீளிடை மணஞ் செய்தல் : "பயந்தபு கானம், எம்மொடு கழிந் தன ராயிற் கம்மென, வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப், படுசினை தாழ்ந்த பயிலிண ரெக்கர், மெய்புகு வன்ன கைகவர் முயக்கம், அவரும் பெறுகுவர் மன்னே" (அகநா. 11 : 6-11.)

6. நெஞ்சின் துணிவு : "சேய்வயிற் போந்தநெஞ் சேயஞ்சத் தக்கதுன் சிக்கனவே" (திருச்சிற். 343.) **(கூசௌ)**

தோழி கூற்று

[தலைவன் பிரிவானென்றறிந்து வருந்திய தலைவியை நோக்கி, "அவர் போவாராயின் நின் துன்பத்தைக் காணாது செல்வாரோ? செல்லார்" என்று தோழி கூறியது.]

நசஅ. தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த

சிறுவீ முல்லைக் கொம்பிற் ரூஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மறரெழிற்
5. பூணக வனமுலை நனைத்தலும்
காணுர் கொல்லோ மாணிழை நமரே.

எ - து. செலவுக்குறிப்பறிந்து வேறுபட்ட கிழத்தியைத் தோழி வற்புறீஇயது.

மாவளத்தன்.

(பி - ம்) 2 'பொலந்தேர்'

(ப- ரை.) மாண் இழை - மாட்சிமைப்பட்ட ஆபரணங்களை அணிந்தோய், நமர் - நம் தலைவர், தாமே செல்ப ஆயின் - நம்மை விட்டுத் தாம் மட்டும் பிரிந்து செல்வாராயின், கானத்து - காட்டினிடத்து, புலம் தேர் யானை கோட்டிடை ஒழிந்த -மேய்புலத்தைத் தேடிச் செல்லும் யானையினது கொம்பினிடத்தே முறிந்து தங்கிய, சிறு வீ முல்லை கொம்பின் - சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடியின் கொம்பைப்போல, இதழ் அழிந்து ஊறும் கண் பனி - இமையைக் கடந்து ஊறுகின்ற கண்ணீர்த்துளி, தாஅய் -பரவி, மதர் எழில் - மதர்த்த அழகையுடைய, பூண் அகம் வனம் முலை- அணிகலன்களைத் தன்னிடத்தே உடைய அழகையுடைய நின் நகில்களை, நனைத்தலும் காணுர்கொல் - நனைத்தலையும் காணுரோ !

(முடிபு) மாணிழை, நமர் தாமே செல்பவாயின், காணுர் கொல்லோ !

(கருத்து) தலைவர் நின் வருத்தத்தை யறிந்து போதலை யொழிவர்.

(வி - ரை.) தாமே செல்பவாயினென்றது சென்ருல் நின்னெடு செல்வாரென்ற நினைவிற்று ; தாமே : ஏ பிரிநிலை. புலம் - மேய்புலம் (குறுந். 344 : 3 ; மதுரைக். 303.) யானை கவளமாகக் கொண்ட பொழுது முல்லைக்கொடி ஒழிந்தது. யானைக்கோட்டிடைக்கொண்ட முல்லை எந்தக் கணத்தில் அதன் வாயுட் புகுமோ வென அறியாநிலையிலிருத்தலைப் போல இவள் எப்பொழுது உயிர் நீப்பாளோவென்ற நிலையில் இருப்பாளென்று உவமையை விரித்துக் கொள்க. யானைக் கொம்பினிடத்தே உதிர்ந்து வீழும் சிறிய பூக்களையுடைய முல்லைக் கொம்பைப் போலவென்று பொருள் செய்து, யானைக்கொம்பை நகிலுக்கும் முல்லைமலரைக் கண்ணீர்த்துளிக்கும் உவமையாக்குதலும் ஒன்று

இதழ் - இமை (குறிஞ்சிப். 247.)

காணூர் கொல்லோ வென்றது காண்பாராதலின் செல்லா ரென்ற நினைவிற்று; கொல்லோ : இரங்கற் பொருளில் வந்தது.

(ஒப்பு.) 3. சிறுவீ முல்லை : சிறுபாண். 89; நற். 248 : 1.

4. கண்பனி : குறுந். 86 :1, 365 : 2-6; நற். 197 : 3; கலி. 3 : 3, 10 : 13.

4-5- கண்ணீர் நகுலை நனைத்தல் : குறுந். 325 : 6; கலி. 77 : 4; புறநா. 143 : 13-5; சீவக. 2049. (கசஅ)

தலைவி கூற்று

[தலைமகன் பரத்தையரிடமிருந்து வந்த காலத்தில் தோழி "நம் நலந்தாவெனக் கேட்போம்" என்றவிடத்து, "ஒருவருக்குக் கொடுத்த பொருளைமீட்டுப் பெறுதலினும் உயிரிழத்தல் சிறந்தது" என்று தலைவி கூறியது.]

நசகூ. அடும்பவி ழணிமலர் சிதைஇமீ னருந்தும்
தடந்தா ணிரை யிருக்கு மெக்கர்த்
தண்ணந் துறைவற் றொடுத்து நந்நலம்
கொள்வா மென்றி தோழி கொள்வாம்
5. இடுக்க ணஞ்சி யிரந்தோர் வேண்டிய
கொடுத்தவை தாவென் சொல்லினும்
இன்ன தோநம் மின்னுயி ரிழப்பே.

எ - து. பரத்தைமாட்டுப் பிரிந்துவந்த தலைமகன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி கூறியது.

சாத்தன்.

(பி - ம்.) 1. 'அரும்பவி' 'சிதையமீன்' 6. 'தரவெனச்'; 'தாவெனக் கூறலின்', 'சொல்லலும்,' 'சொலலினும்,' 7. 'மின்னு யிரிழவே.'

(ப - ரை.) தோழி—, அடும்பு அவிழ் அணி மலர் - அடும்பின் கொடியினிடத்தே மலர்ந்த அழகிய மலரை, சிதைஇ - சிதைத்து, மீன் அருந்தும் தட தாள் நாரை - மீனை உண்ணுகின்ற வளைந்த காலையுடைய நாரை, இருக்கும் எக்கர் - தங்கியிருக்கின்ற மணல் மேட்டையுடைய, தண்ணந்துறைவன் தொடுத்து - தண்ணிய துறையையுடைய தலைவனை வளைத்து, நம் நலம் கொள்வாம் என்றி - நாம் இழந்த பெண்மைநலத்தைப் பெறுவேமென்று கூறுகின்றாய்; கொள்வாம் - அங்ஙனமே கொள்வேம்; ஆயினும்,

இடுக்கண் அஞ்சி - தாம் உற்ற வறுமைத்துன்பத்துக்கு அஞ்சி, இரந்தோர் வேண்டிய - யாசிப்பவர் விரும்பி இரந்தவற்றை, கொடுத்து அவை தா என் சொல்லினும் - கொடுத்துப் பிறகு அங்ஙனம் கொடுத்த அவற்றைத் தருக என்று சொல்லுதலைக் காட்டிலும், நம் இன் உயிர் இழப்பு - நமது இனிய உயிரை இழத்தல், இன்னுதோ - இன்னுமையை யுடையதோ? அன்று; ஆதலின் அது கருதிலேன்.

(முடிபு) தோழி, துறைவற்குடுத்து நலம் கொள்வா மென்றி; கொள்வாம்; கொடுத்தவை தாவென் சொல்லினும் நம் இன்னுயிரிழப்பு இன்னுதோ?

(கருத்து) தலைவனை நலந்தாவெனக்கேட்டல் தக்கதன்று.

(வி - ரை.) மலர்மீது நின்று மீனை அருந்தலின் அம்மலர் சிதைந்தது. தண்ணந்துறைவன்: அம் சாரியை. 'நம் நலம் தா' என்று தோழி கேட்டல் மரபு; "மாணலந் தாவென வகுத்தற் கண்ணும்" (தொல். கற்பு. 9) என்பதனாலும் இந்நூல் 236 - ஆம் செய்யுளாலும் இது விளங்கும்.

இடுக்கண் அஞ்சித் தாவென் சொல்லினுமெனக்கூட்டிப் பொருள் கொண்டு, நமக்கு இடுக்கண் ஒன்று வருவதாயினும் அதற்கு அஞ்சிக் கொடுத்ததை மீட்டும் பெறல் இன்னுதென்ற கருத்தைக் கொள்க.

தலைவன் விரும்ப நாம் உடம்பட்டுக்கொடுத்த நலத்தை மீட்டும் கேட்டலினும், உயிரிழத்தல் நன்றென்றமையின் தலைவனைக் கடியற்க வென்பதை உணர்த்தினாள்.

(மேற்.) மு. தோழி தலைவனைக் காய்தற்கண் தலைவி கூறியது; 'இது பிரித்தல்பற்றி வந்தது' (தொல். கற்பு. 6, இளம்.)

(ஒப்பு.) 2. எக்கரில் நாரை இருத்தல்: "இனநாரை.....எக்கர்மே லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப" (கலி. 126 : 3-5.)

1-2. மணல்மேட்டில் அடும்பங்கொடி படர்தல்: குறுந். 248 : 4-5.

2-3. எக்கர்த்துறை: குறுந். 53 : 5.

3-4. நலத்தைத் தாவென்றல்: குறுந். 236 : 2-6, ஒப்பு.

7. இன்னுயிர்: குறுந். 216 : 7, 334 : 5.

5-7. கொடுத்ததைத் திரும்பப் பெறுமை: "அலைகடல் கடையக்கண்டே னயனீன்து சிரமுங் கண்டேன், மலைபிரு சிறகு கண்டேன் வாரிகி னன்னீர் கண்டேன், சிலைமதன் வடிவு கண்டேன் சிவன்சுத்தக் கழுத்துக் கண்டேன், குலவரி யிருகண் கண்டேன் கொடுதீததை வாங்கக் காணேன்" (பழம் பாடல்.)

(உசாத)

தோழி கூற்று

[தலைவன் பிரிந்தபின் வேறுபட்ட தலைவியை நோக்கி, "நாம் அவர் செல்லும்பொழுது போகற்கவெனத் தடுத்தேமேல் அவர் செல்லார். அப்பொழுது உடம்பட்டு இப்பொழுது வருந்துதல் தக்கதன்று" என்று தோழி கூறியது.]

நூ0. அம்ம வாழி தோழி முன்னின்று
பனிக்கடுங் குரையஞ் செல்லா தீமெனச்
சொல்லின மாயிற் செல்வர் கொல்லோ
ஆற்றய லிருந்த விருந்தோட் டஞ்சிறை
5 நெடுங்காற் கணந்து ளாளறி வுறீஇ
ஆறுசெல் வம்பலர் படைதலை பெயர்க்கும்
மலையுடைக் கான நீந்தி
நிலையாப் பொருட்பிணிப் பிரிந்திசி னோரே.

எ - து. பிரிவுநேர்ந்த (பி - ம் சேர்ந்த) தலைமகள், அவனது நீக்கத்துக்கண் வேறுபட்டாளைத் தோழி வற்புறீஇயது.

ஆலத்தூர் கிழார்.

(பி - ம்.) 2 'பனிவெங் குன்றஞ்' 3 'செல்லார் கொல்லோ' 4 'விருங்கோட்டஞ்சிறை' 5 'கணத்து' 8 'நிலையார் பொருட்பிணி'

(ப - ரை.) தோழீ, அம்ம - ஒன்று கூறுவன் கேட்பாயாக: ஆறு அயல் இருந்த இரு தோடு - வழியின் அயலிலே இருந்த பெரிய தொகுதியாகிய, அம் சிறை நெடு கால் கணந்துள் - அழகிய சிறகுகளையும் நெடிய காலையும் உடைய கணந்துட் பறவைகள், ஆள் அறிவுறீஇ - தமக்கு ஊறு விளைக்கும் வேட்டுவ மக்களுண் மையை அறிவுறுத்தி, ஆறு செல் வம்பலர் - வழிப்போகும் பிர யாணிகளது, படை தலைபெயர்க்கும் - சேணைத்திரளை இடத்தி னின்று நீங்கச்செய்யும், மலையுடை கானம் நீந்தி - மலையையுடைய காட்டைக் கடந்து, நிலையா பொருள் பிணி பிரிந்திசினோர் - நிலை யில்லாத பொருள் வேட்கையினால் நம்மைப்பிரிந்து சென்றோர், முன் நின்று - அவர் பிரியுங்காலத்து அவர் முன்னே நின்று, பனி கடும் குரையம் - யாம் பனியினது கடுமையையுடையேம், செல்லா தீம் - ஆதலின் போதலை ஒழிமின், என சொல்லினம் ஆயின் - என்று கூறினேமாயின், செல்வர் கொல் - போவாரோ?

(மூடிபு) தோழி, முன்னின்று செல்லாதீமெனச் சொல்லின மாயின் பிரிந்திசினோர் செல்வர்கொல்?

(கருத்து) நாம் தலைவரை முன்பே தடுத்திருப்பின் செல்லார்.

(வி - ரை.) முன்னின்று - முன்னே நின்று வெளிப்படையாக. 'இனி வரும் பனிக்காலத்தின் கொடுமையை நும்பிரிவின் கண் பொறுத்தலாற்றேம்' என்னும் கருத்துப்பற்றி, 'பனிக் கடுங்குரையம்' என்றூன். குரை: அசைநிலை.

செல்லாதீம் - செல்லாதீர். கொல்லோ, ஓ அசைநிலை.

ஆறு செல் வம்பலரும் வீரராக இருத்தலின் அவர் கூட்டத்தைப் படையென்றூள் (அகநா. 89: 13.)

தோடு - தொகுதி. கணந்துட் பறவை ஆறலைகள்வர் வருவதை யறிந்து ஒலித்தலின் வம்பலர் பெயர்ந்தனர்.

மலையுடைக் கானம் - குறிஞ்சி திரிந்த பாலை நிலம்.

"தலைவர் பிரிந்த காலத்தில், நும் பிரிவினுல் யாம் வருந்துவேமாதலின் செல்லற்கவெனச் சொன்னேமாயின் அவர் நம் விருப்பத்திற்கு இணங்கிச் செலவு தவிர்ந்து ஈண்டிருப்பர். நாம் அப்பொழுது உடம்பட்டமையின் அவர் சென்றூர். ஆதலின் அவர் பாற் குறையில்லை. நாமே அன்று உடம்பட்டு இப்பொழுது வேறுபடுதல் நன்றன்று. நீ ஆற்றியிருத்தல் வேண்டும்" என்று தோழி தலைவியை வற்புறுத்தினுள்.

(ஒப்பு.) 1. அம்ம வாழிதோழி: குறுந். 77: 1, ஒப்பு.

வாழிதோழி: குறுந். 260: 4, ஒப்பு.

2. செல்லாதீம்: குறுந். 390: 2: நற். 229: 3: ஐங். 186: 5; அகநா. 300: 18. 5. நெடுங்கார் கணந்துள்: நற். 212: 2.

கணந்துட்பறவை: சிலப். 10: 117, அடியார்.

7. "கல்லுடை யதர கான நீந்தி" (அகநா. 295: 8.)

8. பொருட்பிணி: குறுந். 255: 7, ஒப்பு, 344: 7, ஒப்பு.

நிலையாப் பொருட்பிணி: நற். 46: 11, 71: 1, 126: 11, 241: 12; கலி. 8: 11, 14, 17; அகநா. 79: 17. (கூடும்)

தோழி கூற்று

[தலைமகன்தமர் தலைவியை மணம்பேசுதற்பொருட்டு வந்தாராக, "அவருக்கு நமர் உடம்படுவார்கொல்லோ?" என்று ஐயுற்ற தலைவியை நோக்கி, "நமர் உடம்பட்டனர்" என்று தோழி கூறியது.]

நடுக. வளையோ யுவந்திசின், விரைவுறு கொடுந்தாள்
அலைவா முலவன் கூருகிர் வரித்த
ஈர்மணன் மலிர்நெறி சிதைய விழுமென
உருமிசைப் புணரி யுடைதருந் துறைவர்க்
5. குரிமை செப்பினர் நமரே விரியலர்ப்
புன்னை யோங்கிய புலாலஞ் சேரி
இன்னகை யாயத் தாரோ
டின்னுமற் றூரிவ் வழுங்க லூரே.

எ - து. தலைமகன் தமர் வரைவொடு வந்தவழி, "நமர் அவர்க்கு வரைவு நேரார் கொல்லோ?" என்று அஞ்சிய தலைமகட்குத் தோழி வரைவு மலிந்தது.

அம்மூவன்.

(பி - ம்.) 1. 'வளையோய் வந்திசின்', 'விரவுங் கொடுந்தாள்' 3. 'ஈர்மண லீர்நெறி' 4-5. 'துறைவற்குரிய' 6-7 'சேரியினகை யாய்த்தாயத்தாரே'

(ப - ரை.) வளையோய் - வளையை அணிந்தோய், நமர் - நம் சுற்றத்தார், விரைவு உறு கொடு தாள் அலை வாழ் அலவன் - விரைதலையுடைய வளைந்த காலையுடைய வலையின்கண் வாழும் நண்டு, கூர்உகிர் வரித்த - தன் கூரிய நகத்தினால் கீறிய, ஈர் மணல் மலிர்நெறி சிதைய - ஈரமுள்ள மணலையுடைய நீருள்ள வழி சிதையும்படி, இழுமென - இழுமென்னும் ஓசையுண்டாக, உரும் இசை புணரி உடைதரும் துறைவர்க்கு - இடியினது முழக்கத்தை யுடைய அலைகள் உடையும் துறையையுடைய தலைவருக்கு, உரிமை செப்பினர் - நீ உரியாயென்றமையை உடம்பட்டுக்கூறினர்; உவந்திசின் - அதனை அறிந்து நான் மகிழ்ந்தேன்; விரி அலர் புன்னை - விரிந்த மலர்களையுடைய புன்னைமரங்கள், ஓங்கிய - உயர்ந்து வளர்ந்த, புலால்சேரி - புலால்நாற்றத்தையுடைய சேரி யிடத்துள்ள, இன நகை ஆயத்தாரோடு - இனிய நகையையுடைய மகளிர்கூட்டத்தினரோடு, இ அழுங்கல் ஊர் - இந்த ஆரவாரத்தை யுடைய ஊர், இன்னும் அற்றே - இனியும் அலர்கூறும் அத் தன்மையையுடையதோ?

(முடிபு) வளையோய், நமர் துறைவர்க்கு உரிமை செப்பினர்; உவந்திசின்; இவ்வூர் இன்னும் அற்றே?

(கருத்து) தலைவரது வரைவுக்கு நம் தமர் உடம்பட்டனர்.

(வி - ரை.) தலைவியின் ஐயத்தைப் போக்க எண்ணியவள் அவள் உவப்பையடையும்பொருட்டு முதலில், "யான் உவந்தேன்" என்று கூறினள்; அதனால் 'இவள் கூறப்புகுவது நற்செய்தி' என்று தலைவி துணிவாள்.

அலவன் வரித்த சிறுநெறி சிதைய அலை வீசுமென்பது, ஊரினர் கூறும் அலரெல்லாம் ஒழியத் தலைவன் மணந்து கொள்வானென்ற குறிப்பினது.

வரித்தல் - கோலஞ்செய்தல்; இங்கே கோடு கோடாகக் கீறுதலென்றுகொள்க. உடைதரும் - கரையின்மேல் மோதி உடையும். துறைவர்க்கு உரிமையென்றது அவருக்கே தலைவி உரியளென்றபடி; ஓர் ஆடவனுக்கு உரிய பொருள்கள் யாவற்றினும் சிறந்தமை பற்றி மனைவிக்கு 'உரிமை' என்னும் பெயர் அமைந்தமை இங்கே கருதற்குரியது (பெருங். 1. 38: 263-7.)

புலாலஞ்சேரி: அம் சாரியை. புன்னைமலரின் மணமும் புலாலின் நாற்றமும் ஒருங்கு வீசும் சேரியென்றது தலைவன் வரைவுக்கு உடம்படும் தமரும், வறிதே அலர்கூறும் ஆயமும் உடைய தென்ற நினைவிற்று.

(ஒப்பு.) 1. **கொடுந்தாளலவன்**: ஐங். ஐம். 42.

2-3. **அலவன் வரித்த நெறி**: "தண்சேறு கள்வன் வரிக்கும்" (ஐங். 28: 2.)

4. **உருமிசைப் புணரி உடைதருதல்**: அகநா. 310: 16.

3-4. **இழுமென ஒலித்தல்**: குறுந். 345: 6, ஒப்பு.

6. **புன்னையோங்கிய சேரி**: குறுந். 320: 7, ஒப்பு.

புலாலஞ் சேரி: குறுந். 320: 1-4; நற். 101: 1-5, 338: 8; அகநா. 270: 2.

7. **இன்னகையாயம்**: பொருந. 85; சிறுபாண். 220; ஐங். 397: 5; பெருங். 1. 36: 306, 48: 70; பு. வெ. 75. (கூடுக)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் தோழியை நோக்கி, "தலைவர் பிரிவினால் மாலைக்காலம் எனக்கு நோய் தருகின்றது" என்பது படத் தலைவி கூறியது.]

நெடுநீ ராம்ப லடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூருகிர்ப் பறவை
அகலிலைப் பலவின் சாரன் முன்னிப்
பகலுறை முதுமரம் புலம்பப் போகும்

5. சிறுபுன் மாலை யுண்மை
அறிவேன் றோழியவர்க் காணு வூங்கே.

எ - து. பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது.

கடியலூர் உருத்திரங் கண்ணனார். (பி - ம். கடியலூருத்தி ரனங்கண்ணன்.)

(ப - ரை.) தோழி—, நெடு நீர் ஆம்பல் - ஆழமாகிய நீரின்கண் வளர்ந்த ஆம்பலினது, அடை புறத்து அன்ன - இலையின்புறத்தைப் போன்ற, கொடு மெல் சிறைய - வளைந்த மெல்லிய சிறையை யுடையனவாகிய, கூர் உகிர் பறவை - கூரிய நகங்களையுடைய வெளவால்கள், அகல் இலை பலவின் சாரல் முன்னி - அகன்ற இலைகளையுடைய பலாமரங்களையுடைய மலைச்சாரலை நோக்கி, பகல் உறை முது மரம் - பகற்காலத்தில் தாம் உறைந்த பழைய மரம், புலம்ப - தனிக்கும்படி, போகும்—, சிறு புல் மாலை உண்மை - சிறிய புல்லிய மாலைக்காலம் உளதாதலை, அவர் காணு வூங்கு - அத்தலைவரைக் காணுத காலத்தில், அறிவேன் - உணர்வேன்.

(முடிபு) தோழி, அவர்க்காணுவூங்கு மாலையுண்மை அறி வேன்.

(கருத்து) தலைவன் பிரிந்தபின்னர் மாலைக்காலம் எனக்குத் துன்பத்தைத் தருகின்றது

(வி - ரை.) நெடுநீர்: நெடுமை, ஆழத்தின்மேற் சென்றது; "நெடும்புனலுள் வெல்லு முதலை" (குறள், 495) என்பதன் உரையைப் பார்க்க.

தலைவனைக் காணுவிடத்து மாலைக்காலத்தில் காமநோய் மிகுதலின், 'அவர்க்காணுவூங்கு மாலையுண்மை அறிவேன்' என்றாள். அவர்: நெஞ்சறிசுட்டு.

(ஒப்பு.) 2. கொடுஞ்சிறைப் பறவை: குறுந். 92: 2.

மென்சிறைக் கூருகிர்ப்பறவை: குறுந். 201: 3.

4. வெளவால் பகலிலுறை மரம்: திருச்சிற். 375.

1-4. வெளவால் மாலையில் தாம் இருந்த மரத்தை நீங்கி வேறிடம் செல்லுதல்: "பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன,.....மாச்சிறைப் பறவை, பகலுறை முதுமரம் புலம்பப் போகி" (அகநா. 244: 1-3.)

1-5. குறுந். 172: 1-2, ஒப்பு.

5-6. தலைவன் பிரிந்தகாலத்தில் தலைவி மாலைக்காலத்தை அறிதல்: (குறுந். 386: 2-4); "மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத, காலை யறிந்த திலேன்" (குறள், 1226.)

(கூடுஉ)

தோழி கூற்று

[பகற்குறி வந்தொழுகும் தலைவன், தலைவி இல்லினின்றும் வெளிப்போதலால் ஊரினர் அறிவரோவென அஞ்சி இரவுக்குறி விரும்பிச் சிறைப்புறத்தே நிற்பத் தலைவியை நோக்கிக் கூறுவாளாய், "நம் அன்னையின்காவல் இரவில் மிக்கது" என்று தோழி இரவுக்குறி மறுக்கும் வாயிலாக வரைவு கடாயது.]

ஆர்கலி வெற்பன் மார்புபுணை யாகக்
கோடுயர் நெடுவரைக் கவாஅற் பகலே
பாடின் னருவி யாடுத லினிதே
நிரையிதழ் பொருந்தாக் கண்ணே டிரவிற்
பஞ்சி வெண்டிரிச் செஞ்சுடர் நல்லிற்
பின்னுவீழ் சிறுபுறந் தழீஇ
அன்னை முயங்கத் துயிலின் னதே.

எ - து. பகற்குறி வந்து ஒழுகும் தலைமகன் வெளிப்பாடஞ்சி இரவுக்குறி நயந்தானது குறிப்பறிந்த தோழி, இரவின்கண் அன்னையது காவலறிந்து பின்னும் பகற்குறியே நன்று அவ்விரவுக் குறியினென்று பகற்குறியும் இரவுக்குறியும் மறுத்துத் தலைமகன் சிறைப்புறத்தானை வரைவு கடாயது.

உறையூர் முதுகூற்றன்

(பி - ம்) 4 'நிறையிதழ்'

(ப - ரை.) பகல் - பகற்காலத்தில், கோடு உயர் நெடு வரை கவான் - கொடுமுடிகள் உயர்ந்த நீண்ட மலையினது தாழ்வரையினிடத்தே, பாடு இன் அருவி - ஓசை இனிதாகிய அருவியில், ஆர் கலி வெற்பன் மார்பு புணை ஆக - நிறைந்த முழக்கத்தையுடைய மலையையுடைய தலைவனது மார்பு தெப்பமாக, ஆடுதல் இனிது - நீர்விளையாடல் இனியது; இரவில் - இராக்காலத்தில், பஞ்சி வெள் திரி செ சுடர் நல் இல் - பஞ்சாலாகிய வெள்ளிய திரியையுடைய செவ்விய விளக்கையுடைய நல்ல வீட்டின் கண்ணே, அன்னை - நம் தாய், பின்னு வீழ் சிறு புறம் தழீஇ - பின்னல் தாழ்கின்ற பிடரியைத் தழுவி, முயங்க - அணைப்ப, நிரை இதழ் பொருந்தா கண்ணோடு - வரிசையாகிய இமைகள் ஒன்றோடு ஒன்று பொருந்தாத விழிகளோடு, துயில் - நாம் துயிலுதல், இன்னது - இன்மையையுடையது.

(முடிபு) பகலில் அருவியாடுதல் இனிது; இரவில் அன்னை முயங்கத் துயில் இன்னாது.

(கருத்து) காப்புமிகுதியால் இரவுக்குறி பெறற்கு அரிது.

(வி - ரை.) ஆர்கலி - நிறைந்த ஆரவாரங்கள்; மலையிலுள்ள ஆரவாரங்களைப் பற்றிய செய்திகளை 'மலைபடுகடாம்' என்னும் நூலிற் காணலாம். பகலே, இனிதே: ஏ அசைகள்.

"பெருவரை மிசையது நெடுவெள் ளருவி
முதுவாய்க் கோடியர் முழவிற் றதும்பி" (குறுந். 78: 1-2)

என்று அருவியின் ஒலி சிறப்பிக்கப்படுதலின் அஃது இனிய தாயிற்று.

அன்னை முயங்கலென்றது அவளது காவன்மிகுதியை உணர்த்தியபடி; இதழ்பொருந்தாது துயிலுதலென்றது துயிலின் மையைக் குறித்தவாறு.

இதனால் இரவுக்குறி மறுத்தாளாயிற்று.

(மேற்.) மு. இரவுக்குறி நயந்த தலைவன் சிறைப்புறமாக, பகற்குறி நேர்வாள்போல் தோழி இரவுக் காப்புமிகுதி கூறியது; 'பாடின் னருவி யாடலென்னுள் அதன்கண் உதவினனென்பதுபற்றி; அல்லது களவிற்கு உடனுதல் இன்று' (தொல். களவு. 23 ந.)

(ஒப்பு.) 1. ஆர்கலி வெற்பன் மார்பு: நற். 104: 7.

2. வரைக் கவான்: குறுந். 262: 6, ஒப்பு.

3. பாடின்னருவி: "முழவின்னிசை மூரி முழங்கருவி" (சீவக. 1193.)

(கு - பு.) முழவினைப் போன்ற இனிய ஒலியையுடையவெனப் பொருள் கொள்க.

1-3. தலைவன் மார்பு புணையாக நீராடுதல்: "வவ்வுவல் லார்புணை யாகிய மார்பினை" (பரி. 6: 80); "கூடியார் புனலாடப் புணையாய மார்பினில்" (கலி. 72: 15); "ஒங்குவரை யிழிதரும் வீங்குபெய னீத்தம்...பெருமலை நாடன் மார்பு புணை யாக, ஆடுகம் வம்மோ" (அகநா. 312: 4-8.)

தலைவி தலைவனோடு நீராடுதல்: "பெருங்கலு டனைடு...பெருவரையடுக்கத் தருவி யாடி"[2], "அங்க ணறைய வகல்வாய்ப் பைஞ்சுனை...சார லுடனை டாடிய நாளே", "நாடனெடு, சூருடைச் சிலம்பி னருவி யாடி" (நற். 259: 8-5, 357: 7-10, 373: 4-5.)

5 சுடர்: குறுந். 398: 5. 6. பின்னு வீழ் புறம்: குறுந். 246: 6, ஒப்பு.

7. அன்னையின் முயக்கத்தைத் தலைவி வெறுத்தல்: குறுந். 84: 2.

6-7. சிறுபுறம் முயங்குதல்: அகநா. 19: 19, 49: 5-7. (கூடுக)

தோழி கூற்று

[பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனை நோக்கி, "நீ எம்மை விரும்பாயாயின் எம்மை எம் தந்தையின் வீட்டிற்கு அழைத்துச்

செல்வாயாக" என்று கூறும்வாயிலாகத் தோழி வாயில் மறுத்தது.]

நெடுஞ. நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
ஆர்ந்தோர் வாயிற் றேனும் புளிக்கும்
தணந்தனை யாயினெம் மில்லுய்த்துக்
கொடுமோ
அந்தண் பொய்கை யெந்தை யெம்மூர்க்
5. கடும்பாம்பு வழங்குந் தெருவில்
நடுங்களு ரெவ்வங் கூர்ந்த வெம்மே.

எ - து. பரத்தையிற் பிரிந்து வாயில் வேண்டி (பி - ம். வேண்ட)ச் சென்ற தலைமகற்குத் தோழி வாயில்மறுத்தது.

கயத்தூர் கிழான்.

(பி - ம்.) 3 'தணந்தனிராயின்', 'தணிந்தனையாயினெம் முய்த்துக் கொடுமோ'

(ப - ரை.) நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும் - நீரின்கண் நெடுநேரம் விளையாடினால் கண்களும் செந்நிறத்தை அடையும்; ஆர்ந்தோர் வாயில் - பன்முறை உண்டோரது வாயினிடத்தே, தேனும் புளிக்கும் - தேனும் புளிப்பையுடையதாகும்; ஆதலின், தணந்தனை ஆயின் - நீ எம்மைப் பிரிவையாயின், அம் தண் பொய்கை - அழகிய தண்ணிய பொய்கையையுடைய, எந்தை எம் ஊர் - எம் தந்தையினது எம் ஊரின்கண்ணே, கடு பாம்பு வழங்கும் தெருவில் - நஞ்சின் கடுமையையுடைய பாம்புகள் ஓடும் தெருவில், நடுங்கு அஞர் எவ்வம் கூர்ந்த எம் - நீ முன்பு நடுங்குதற்குரிய மிக்க துன்பத்தை நீக்கிய எம்மை, எம் இல் உய்த்துக் கொடுமோ - எம்முடைய வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவாயாக.

(முடிபு) நீர் நீடு ஆடின் கண்ணும் சிவக்கும்; தேனும் புளிக்கும்; தணந்தனையாயின் எம்மை எம் இல் உய்த்துக் கொடுமோ.

(கருத்து) எம்மை எம் தந்தையின் வீட்டிற்கு அழைத்துச் செல்வாயாக.

(வி - ரை.) தண்ணியதாய் ஆடுதற்கினியதாகியநீர் நெடு நேரம் ஆடியபின் கண்சிவத்தற்குக் காரணமாயினமையின் வெறுப்பைத் தருவதாயிற்று. தேன் முதலில் இனிதாகிப் பின்

நாட் செல்லச்செல்லப் புளிக்கும்; 'இனிதாய்ப் பின் தீங்கு விளைத்தலின் தேன் உவமம்' (சீவக 222) என்பர் நச்சினார்க்கினியர். இவ்விரண்டு உவமைகளும், 'யாம் உனக்கு இனியமாகியிருந்தும் நெடுங்காலம் பழகினமையின் நின்னால் வெறுத்தற்குரியே மாயினேம்' என்னுஞ் நினைவுபற்றிக் கூறப்பட்டன; 'பழகப் பழகப் பாலும் புளிக்குந்' என்னும் பழமொழி இங்கே நினைத்தற்குரியது.

'நீ முன்பு எம் அருர் களைந்தாய்' என்றது தலைவனது பழைய அன்பை நினைவுறுத்தியபடி.

கொடுமோ: மோ முன்னிலையசை. எம்மே: ஏ அசைநிலை.

(மேற்.) 2. தேன் முன் இனிதாய்ப் பின் தீங்கு விளைக்கும் இயல்பினது **(சீவக. 222, ந.)** 5. கடியென்னும் உரிச்சொல் அச்சப்பொருளில் வந்தது **(தொல். உரி.87, தெய்வச்.)**

மு. தலைவனைத் தலைவி நீங்கித் தனிமையுறுதல் பெரிதாகலின் ஆண்டு அலமரல் பெருகிய காமத்தின் மிகுதியின்கண் தலைவி கூறியது **(தொல். கற்பு. 6, இளம்.)**; பரத்தையிற் பிரிவால் தலைவர்க்கும் தலைவியர்க்கும் தோன்றிய வருத்தமிகுதியைத் தீர்க்கக்கருதித் தோழி கூற்று நிகழ்த்துங் காலத்து அவரது இல்வாழ்க்கை நிகழ்ச்சிக்கண்ணே தனக்கு வருத்தந் தோன்றிற்றுகக் கூறுதலும் உரித்து; 'இதனுள் இல்லறத்தினை நீ துறந்தாயின் எம்மை எம்மூர்க்கண்ணே விடுகவெனத் தனக்கு வருத்தந்தோன்றிற்றுகத் தோழி கூறியவாறு காண்க' **(தொல். பொருள். 32, ந)**

(ஒப்பு.) 1. நீராடிற் கண் சிவத்தல்: "அருவி தாஅய்...பனிபொரு மழைக்கண் சிவப்ப", "நீத்தம்...அரிமதர் மழைக்கண் சிவப்ப...ஆடுகம் வம்மோ" **(அகநா. 278: 7-11, 312: 4-8.)**

2. தேன் புளித்தல்: 'தேனுக்கு இன்சுவை நிகழ்ந்த காலத்தே புளிச் சுவை நிகழுமாறுபோல' **(சீவக. 2382, ந.)** 3-4. **பெருங். 2-16: 50-51.**

5. கடும்பாம்பு வழங்குந்தெரு: "அருவரை யுள்ளதாஞ் சீறூர் - வரு வரையுள், ஐவாய நாகம் புறமெல்லாம்" **(கிணைமா. 13.)** **(நூருசு)**

தோழி கூற்று

[மழை பெய்யும் நடுயாமத்தில் தலைவன் வந்தானுக, "இந்த இருளில் நீ எங்ஙனம் வழி தெரிந்து எம் ஊரைத்தேடி வந்தனை?" என்று அவனுக்குத் தோழி கூறியது.]

நூருரு. பெயல்கண்மறைத்தலின்விசும்புகாணலையே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலையே
எல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பாடட் கங்குல்

5. யாங்குவந் தனையோ வேங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே.

எ - து. இரவுக்குறி வந்த (பி - ம். நேர்ந்த) தலைமகற்குத் தோழி நொந்து (பி - ம். நேர்ந்து) கூறியது.

கபிலர். (பி - ம். பரணர்.)

(பி - ம்.) 1 'பெயல்கான்' 'விசும்பு காணலரே' 2 'னிலங் காணலரே' 'கமழுஞ் சிறுகுடி'

(ப - ரை.) ஓங்கல் வெற்ப - உயர்ச்சியையுடைய மலையையுடைய தலைவனே, பெயல்கண் மறைத்தலின் - மழை இடத்தை மறைப்பதனால், விசும்பு காணலை - வானத்தைக்காண்பாயல்லை; நீர் பரந்து ஒழுகலின் - அம்மழையின் நீர் எங்கும் பரந்து ஓடுதலினால், நிலம் காணலை - நிலத்தைக் காண்பாயல்லை; எல்லை சேறலின் - சூரியன் போனமையால், இருள் பெரிது பட்டன்று - இருள் மிக உண்டாயிற்று; இங்கிலையில், பல்லோர் துஞ்சும் - பலரும் தூயில்கின்ற, பால் நாள் கங்குல் - நள்ளிரவில், யாங்கு வந்தனை - எங்ஙனம் வந்தாய்? வேங்கை கமழும் - வேங்கைமரத்தின் மலர் மணம் வீசுகின்ற, எம் சிறு குடி - எமது சிற்றூரை, யாங்கு அறிந்தனை - எங்ஙனம் அறிந்தாய்? யான் நோகு - யான் வருந்துவேன்.

(மூடிபு) வெற்ப, விசும்பு காணலை; நிலங்காணலை; இருள் பட்டன்று; யாமத்து யாங்கு வந்தனை? எம் சிறு குடி யாங்கு அறிந்தனை? யான் நோகு.

(கருத்து) நீ இவ்விரவில் வருதல் குறித்து அஞ்சுகின்றேன்.

(வி - ரை.) விசும்பு காணுமையின் விண்மீனெளியும் இலதாயிற்று. நிலம் காணுமையின் வழி காணற்கு அரிதாயிற்று. தானும் தலைவியும் துஞ்சாமையின், யாவரும் துஞ்சும் கங்குலென்னது பல்லோர் துஞ்சும் கங்குலென்றாள். விசும்பு காணுமையின் திசையறிதலும், நீர் பரந்தொழுகலின் நிலமறிதலும், எல்லை சேறலின் நெறியறிதலும், ஊரினர் ஒலியின்றித் துஞ்சுதலின் ஊரிடமறிதலும் அரியவாயின. 'வேங்கை கமழும் எம் சிறுகுடி' என்றது, 'அவ்வேங்கை மலரின் மணத்தைத்கொண்டு எம் ஊரை அறிந்தனை போலும்!' என்ற கருத்தைக் குறித்து நின்றது.

வந்தனையோ, அறிந்தனையோ : ஓ, அசைநிலை. நோகோ : ஓ, இரங்கற்குறிப்பு. ஏகாரங்கள் : அசைநிலை.

இதனுல் இரவுக்குறி வருதல் அஞ்சுதற்கு உரியதென்று கூறி வரைவுகடாவினுள்.

(மேற்.) மு. தலைவி இடையீடின்றித் தலைவனை எதிர்ப்படப் பெற்ற ஞான்று புதுவது மலிந்தமையின் அவள் கூறியது (தொல். களவு. 21, இளம்.) ; இரவுக்குறி வந்த தலைவனை நோக்கித் தலைவி கூறியது (தொல். களவு. 20, ந.); தலைவி ஆற்றினது அருமை நினைந்து இரங்கியது (நம்பி. 158 ; இ. வி 517.)

(ஒப்பு.) 1. மழையால் விசும்பு மறைக்கப்படுதல் : (குறுந். 380 : 1-3); "தாழ்நீர் நனந்தலை யழுந்துபடப் பாஅய், மலையிமைப் பதுபோன் மின்னிச், சிலைவ லேற்றெடு செறிந்தவிம் மழைக்கே", "முழங்குகடன் முகந்த கமஞ் சூன் மாமழை, மாதிர நனந்தலை புதையப் பாஅய்" (நற். 112 : 7-9, 347 : 1-2.)

2. மழை நீரால் நிலம் மறைதல் : "தூஉ யன்ன துவலை துவற்றலின், தேனந் தேரைக் கடும்பரிக் கடும்பொடு" (மலைபடு. 363-4); "மாநிலந் தோன் றுமை மலிபெய றலினி" (பரி. திரட்டு, 2 : 1.)

4. பல்லோர் துஞ்சும் கங்குல் : குறுந். 6 : 1-3, ஒப்பு, 244 : 1, ஒப்பு.

பானன் : குறுந். 94 : 3, ஒப்பு. 5. ஓங்கல் வெற்ப : அகநா. 18 : 8.

5, மு. யா. வி. 95, மேற். "துணியிருஞ் பௌவம்."

6. வேங்கை மலர் கமழ்தல் : குறுந். 84 : 4 ; அகநா. 118 : 2, 218 : 21, 268 : 3-4, 365 : 13-4, 378 : 2-4, 388 : 6-7 ; புறநா. 265 : 2.

சிறுகுடி : குறுந். 184 : 2, ஒப்பு.

வேங்கை மரம் வீட்டினருகில் இருத்தல் : குறுந். 266 : 3. (கருரு)

செவிலித்தாய் கூற்று

[தலைவி தலைவனுடன் போயினபின், "என்மகள் எங்ஙனம பாலையிற் செல்லும் ஆற்றல் பெற்றுள்?" என்று செவிலி கூறி வருந்தியது.]

நருசு. நிழலான் றவிந்த நீரி லாரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
5. யாங்குவல் லுநள்கொ ருனே யேந்திய
செம்பொற் புனைகலத் தம்பொரிக் கலந்த
பாலும் பலவென வுண்ணுள்
கோலமை குறுந்தொடித் தளிரன் னேளே.

எ - து. மகட் போக்கிய செவிலித்தாய் உரைத்தது.

[மகட் போக்கிய - தலைமகள் தலைவனுடன் போதற்குக் காரணமாகிய.]

கயமன் (பி - ம். கயமனார்.)

(பி - ம்.) 1 நிழலான்று விரிந்த' 4 'வெவ்வங்', 'குடித்தி', குடித்திய' 7 'பரலும் பல'

(ப - ரை.) ஏந்திய செ பொன் புனை கலத்து - கையிலேந்திய செம்பொன்னாலாகிய புனைந்த பாத்திரத்தில் உள்ள, அம் பொரி கலந்த - அழகிய பொரியோடு கலந்த, பாலும் பல என - பாலையும் மிக்கன என்று கூறி, உண்ணுள் - உண்ணுளாகிய, கோல் அமை குறு தொடி - திரட்சியமைந்த குறிய வளையை யணிந்த, தளிர் அன்னுள் - தளிரை ஒத்த மென்மையை யுடைய என்மகள், நிழல் ஆன்று அவிந்த - நிழல் அடங்கி அற்றுப்போன, நீர் இல் அரு இடை - நீர் இல்லாத கடத்தற்கரிய பாலை நிலத்தினிடத்தே, கழலோன் காப்ப - வீரக் கழலையுடைய தலைவன் தன்னைப் பாது காப்ப, கடுகுபு போகி - விரைந்து சென்று, அறுசுனை மருங்கின் - நீர்வளமற்ற சுனையின் பக்கத்தில், மறுகுபு வெந்த - உலர்ந்து வெம்மையைக் கொண்ட, வெ வெ கலுழி - மிக்க வெப்பத்தை யுடைய கலங்கல் நீரை, தவ்வென - தவ்வென்னும் ஓசைபட, குடிக்கிய - குடிக்க, யாங்கு வல்லுநள் - எவ்வாறு வலியளானுள் ?

(முடிபு) உண்ணுளாகிய தளிரன்னுள், போகிக் குடிக்கிய யாங்கு வல்லுநள் ?

(கருத்து) என் மகள் எங்ஙனம் பாலை நிலத்திற் செல்லும் வன்மையையுடையளானுள் ?

(வி - ரை.) இது செவிலி தன் மகள் மென்மைத் தன்மைக்கு இரங்கியது.

பாலைநிலத் தலைவன் கழலுடையனதலை இந்நூல் 7 - ஆம் செய்யுளாலும் உணரலாகும்.

'செம்பொற் புனைகலத் தேந்திய பால்' என்றது தம் செல்வ நிலைமையைக் குறித்தபடி. 'இத்தகைய செல்வம் நிரம்பிய மனையில் இருந்தவள் பாலை நிலத்திற் செல்ல நேர்ந்ததே!' என்பது செவிலியின் நினைவு.

பலவென்றது அளவின் பெருமையைச் சுட்டி நின்றது; சிறிது நீரைச் சில நீரென்னும் வழக்குப் போன்றது. தளிரன்னுளென்றது தலைவியின் மென்மையை நினைந்தது.

(ஒப்பு.) 1. பாலை நிலத்தில் நிழல் அறுதல் : "நிழலுரு விழுந்த வேனிற் குன்றத்துப், பாலை சான்ற சுரஞ்சேர்ந் தொருசார்" (மதுரைக். 313-4); "நிழ

றேய்ந் தறைிய மரத்த...காடு", "நிழலறு நனந்தலை", "மரநிழ லற்ற வியவிற் சுரன்", "நிழன்மா யியவின்" (அகநா. 1 : 11-9, 103 : 1, 353 : 15, 395 : 7); "விடுசுடர் நடுவுநின் றடுதலி னிழலும், அடியகத் தொளிக்கு மாரழற் கானத்து" (திருவாரூர். மும்மணிக். 13.)

ஆன்றவிதல் : புறநா. 191 : 6.

3. அறுசுனை : குறுந். 347 : 1 ; கலி. 12 : 3 : அகநா. 1 : 12.

4. தவ்வெனை : நெடுநல். 185 ; நற். 319 : 2 ; குறள், 1144.

5-7. நற். 110 : 1-8 ; அகநா. 219 : 5-7.

8. கோலமை தொடி : குறுந். 233 : 7, ஒப்பு, 364 : 3.

குறுந்தொடி : 384 : 2.

தளிரன்னெள் : நெடுநல். 148 ; நற். 251 : 7 ; ஐங். 38 : 3, 176 : 4, 365 : 5 : கலி. 13 : 19.

5-8. அகநா. 89 : 19-22, 105 : 4-8. மு. அகநா. 207. (உரை)

தோழி கூற்று

[வரையாது வந்தொழுகும் தலைமகன் சிறைப்புறத்தே நிற்ப, தலைவியை நோக்கி, "நின் தோள்கள் தலைவனோடு நீ நட்புச் செய்யாததன்முன் நல்லனவாக இருந்தன" என்று தோழி கூறியது.]

நெய்தல். முனிபட ருழந்த பாடி லுண்கட் [தோள்
பனிகால் போழ்ந்து பணையெழின் ஞெகிழ்
மெல்லிய வாகலின் மேவரத் திரண்டு
நல்ல வென்னுஞ் சொல்லை மன்னிய
5. ஏனலுஞ் சிறுதினை காக்குஞ் சேணோன்
ஞெகிழியிற் பெயர்ந்த நெடுநல் யானை
மீன்படு சுடரொளி வெரூஉம்
வான்றோய் வெற்பன் மணவா வூங்கே.

எ - து. தோழி, கிழவன் கேட்கும் அண்மையனைக் கிழத்திக்குச் சொல்லியது.

கபிலர்.

(பி - ம்.) 5 'சிறுகினைக் காக்குஞ்' 7 'மின்படு'

(ப - ரை.) பணை எழில் ஞெகிழ் தோள் - மூங்கிலினது அழகு நெகிழ்ந்த நின் தோள்கள், முனி படர் உழந்த - வெறுக்கத்தக்க துன்பத்தால் வருந்திய, பாடு இல் உண் கண் பனி - துயிலுதலில்

லாத மையுண்ட கண்களில் உண்டாகும் துளி, கால் போழ்ந்து - குறுக்கே சென்று, மெல்லிய ஆகலின் - இப்பொழுது மெலிவை யுடையவாதலினால், ஏனல் அம் சிறு தினை காக்கும் - தினைச் சாதியுள் அழகிய சிறிய தினையைக் காக்கின்ற, சேணோன் - பரணின்மேலுள்ள குறவனது, ஞெகிழியின் - கொள்ளிக் கட்டையினால், பெயர்ந்த - அஞ்சிப்போன, நெடு நல் யானை - உயர்ந்த நல்ல யானையானது, மீன் படு சுடர் ஒளி - விண்மீன் வீழ்வதனால் உண்டாகிய மிக்க ஒளியை, வெரூஉம் - அஞ்சுகின்ற, வான் தோய் வெற்பன் - வானத்தை அளாவிய மலையையுடைய தலைவன், மணவா ஊங்கு - பொருந்துதற்கு முன்பு, மேவரத் திரண்டு - விரும்பும்படி பருத்து, நல்ல என்னும் சொல்லை மன்னிய - இவை நல்லன என்று கூறப்படும் சொற்களை அடைந் தன.

(முடிபு) தோள், வெற்பன் மணவாவூங்கு நல்லவென்னும் சொல்லை மன்னிய.

(கருத்து) தலைவன் வரையாது வந்தொழுகுதலின் தினைக்குத் துன்பு உண்டாகின்றது.

(வி - ரை) தலைவியின் வருத்தத்தையும் துயிலாது அழும் இயல்பையும் மெலிவையும் இதன் வாயிலாகத் தோழி தலைவன் அறியவைத்தாள்.

'இத்தோள்கள் எப்பொழுதும் நல்லன' என்னும் சொல்லைப் பெறுமல், 'முன்பு நல்லனவாக இருந்தன' என்னும் சொல்லைப் பெற்றன; அதற்குக்காரணம் தலைவி துயருழந்து அழுதலால் மெலிந்து போனமையேயென்றாள்.

முன்பு நல்லவென்னும் சொல்லை மன்னிய வென்றதனால் அங்ஙனம் கூறுவார் சிலருளரென்பதும், தலைவியின் மெலிவு புறத்தார்க்குப் புலனாயிற்றென்பதும் போதரும். அதுகேட்ட தலைவன் அம்மெலிவின் காரணத்தை ஆராயப் புகுந்து வரைந்து கோடல் இதன் பயன்.

யானை தீயைக் கண்டு அஞ்சுமாதலின் ஏனல் காக்கும் சேணோன் தினையையுண்ண வாராதபடி ஞெகிழியை மூட்டினான். சேணோன்: குறுந். 150, வி - ரை.

ஒருமுறை ஒருபொருளால் அச்சமுற்ற ஒருவர் அப்பொருளைப் போன்ற வேறொன்றைக் கண்டாலும் அஞ்சுதல் இயல்பு; 'கொள்ளிக் கட்டையால் அடிபட்ட பூனை மின்மினிப் பூச்சிக்குப் பயந்தது போல' என்பது ஒரு பழமொழி.

சேணோனது ஞெகிழிக்குப் பயந்து யானை, வீழும் வின் மீனைக் கண்டு அஞ்சும் இச்செய்தி,

"பெருவிற் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம் - இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று" (திவ். முதற்றிரு. 40)

என்பதிலும் காணப்படுகிறது.

(ஒப்பு.) 1. தலைவி துயிலாமை : குறுந் 6 : 4, ஒப்பு ; நற். 327 : 2. கண்பாடின்மை : குறுந். 5 : 5, ஒப்பு.

2. பணையெழில் ஞெகிழ்தோள் : "வேய்மருள் பணைத்தோ ணெகிழ" (அகநா. 1 : 8.) 1-2. தலைவன்பிரிவால் தலைவி அழுதல் : குறுந். 82 : 2, ஒப்பு. தலைவி துஞ்சாமையும் அழுதலும் : குறுந். 11 : 2, ஒப்பு. கண்ணும் தோளும் அழகிதல் : குறுந். 377 : 1-2, 381 : 1-3. 6. நெடுநல்யானை : குறுந். 77 : 4; புறநா. 57 : 11, 72 : 4. ஞெகிழியால் யானையை அச்சுறுத்தல் : கலி. 52 : 13 4

5-6. சேணோன் ஞெகிழி : குறுந். 150 : 1, ஒப்பு. யானை தினையை மேய்தல்: குறுந். 394 : 1-6 ; அகநா. 73 : 14-5.

6-7. ஞெகிழிக்கு விண்மீன் : குறுந். 150 : 1-2 ; நற். 393 : 4-7.

5-7. ஒரு பொருளால் உண்டாகிய அச்சம் அப்பொருளைப் போன்ற வேறு பொருளாலும் உண்டாதல் : பெரும்பாண் : 284-8 ; நற். 189 : 7-10, 211 : 4-8 ; பெருங். 1. 37 : 252-48, 8 : நற். 299 : 9. மு. குறுந். 226. (கூடுஎ)

தோழி கூற்று

[தலைவனது பிரிவின்கண் வருந்திய தலைவியை நோக்கி, "இதோ கார்ப்பருவம் வந்தது; அதனைத் தெரிவிக்கும் முல்லைக் கொடிகளும் அரும்பின ; இனி அவர் வருவர்" என்று தோழி கூறியது.]

நடுஅ. வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகட் பேதுற லாய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்சே ணீங்க
வருவே மென்ற பருவ முதுக்காண்
5. தனியோ ரிரங்கும் பனிகூர் மாலைப்
பல்லான் கோவலர் கண்ணிச்
சொல்லுப வன்ன முல்லைமென் முகையே.

எ - து. தலைமகன் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

கொற்றன்.

(பி - ம்.) 1 'விம்ம' 2 'பேதுறல் யாங்கோடிட்டு,' 'பேதுற வாய்'. 3 'வாயபற்று' 'வாஅயபற்று' 6 'கோவலர்க்' 7 'சொல்லுவ', 'சொல்லு'

(ப - ரை.) வீங்கு இழை நெகிழ-செறிந்திருந்த அணிகலன்கள் நெகிழும்படி, விம்மி - அழுது, ஈங்கு - இவ்வாறு, எறி கண் பேதுறல் - நீர்த்துளிகளை வெளிவிடும் கண்ணோடு மயங்கற்க; ஆய் கோடு இட்டு - ஆராய்கின்ற கோடுகளைக் கிழித்து, சுவர்வாய் பற்றுமை - சுவரினிடத்தைப் பற்றி நிற்கும், நின் படர் - நினது துன்பம், சேண் நீங்க வருவேம் - நெடுந்தூரம் போகும்படி மீண்டு வருவேம், என்ற - என்று தலைவர் கூறிய, பருவம் உதுக்காண் - பருவமானது இது பார்; முல்லை மெல் முகை - முல்லையினது மெல்லிய அரும்புகள், தனியோர் இரங்கும் பனி கூர்மாலை - தலை வரைப் பிரிந்த தனிமையையுடையோர் வருந்துதற்குக் காரண மாகிய குளிர்ச்சி மிக்க மாலைக்காலத்தில், பல் ஆன் கோவலர் - பல பசுக்களையுடைய இடையர்களது, கண்ணி - மாலையிடத்தே இருந்து, சொல்லுப அன்ன - இப்பருவத்தைச் சொல்லுவன வற்றைப் போன்றன.

(முடிபு) பேதுறல்; நின் படர் நீங்க வருவேமென்ற பருவம் உதுக்காண்; முல்லைமென்முகை சொல்லுபவன்ன.

(கருத்து.) தலைவர் கூறிச் சென்ற கார்ப்பருவம் வந்ததாதலின் அவர் விரைவில் வருவர்.

(வி - ரை.) பேதுற ஆய் கோடிட்டென்னும் பாடத்திற்குக் கண் மயங்கும்படி ஆராயும் கோடுகளை இட்டெனப் பொருள் கொள்க. தலைவர் வரும்நாளைச் சுவரிற் கோடிட்டுக் கணக்குப்பார்த் தல் மகளிர் இயல்பு;

> "வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
> நாளொற்றித் தேய்ந்த விரல்" (குறள், 1261.)

மாலையில் கோவலர் தம் வீட்டிற்குத் திரும்பி வருகையில் முல்லை யைக் கண்ணியாகக் கட்டி அணிந்து வந்தனர் (குறுந். 221 : 4-5)

(ஒப்பு) 1. இழைநெகிழ்தல் : குறுந். 188 : 3, ஒப்பு.

2-3. மகளிர் சுவரிற்கோடிட்டு நாட்கணக்குப் பார்த்தல் : "நாளிழை நெடுஞ்சுவர் நோக்கி நோயுழந், தாழல் வாழி தோழி", "சேணுறை புலம்பி ஞண்முறை யிழைத்த, திண்சுவர் நோக்கி நிலைந்து" (அகநா. 61 : 4-5, 289 : 9-10); "மெல்விரலின், நாள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொல்" (நாலடி. 394.) 4. உதுக்காண் : குறுந். 81 : 4, ஒப்பு, 191 : 1, ஒப்பு.

6. பல்லான் கோவலர் : "முல்லைக்கண்ணிப் பல்லான் கோவலர்" (பதிற். 21 : 20.)

6-7. முல்லை மலர்ந்து கார்காலத்தைத் தெரிவித்தல் : குறுந். 126 : 3-5, ஒப்பு. (கூரெ)

தோழி கூற்று

[வாயில் பெறுத தலைமகன் மைந்தனும் ஆற்றுமையும் வாயிலாகத் தானே புக்குப் பாயலிற் புதல்வனைத் தழுவிக்கொண்ட காலத்தில் தலைவி ஊடல்தணிந்ததைத் தோழி பாணனுக்குக் கூறியது.]

நடுகை. கண்டிசிற் பாண பண்புடைத் தம்ம
மாலை விரிந்த பசுவெண் ணிலவிற்
குறுங்காற் கட்டி னறும்பூஞ் சேக்கைப்
பள்ளி யானையி னுயிர்த்தன னசையிற்
5. புதல்வற் றழீஇயினன் விறலவன்
புதல்வன் ரூயவன் புறங்கவைஇ யினளே.

எ - து. பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகன் வாயில்வேண்டிப் பெருது தானேபுக்குக் கூடியது கண்டு தோழி பாணற்குச் சொல்லியது.

பேயன்.

(பி - ம்) 4 'னுயிரா வசைஇப்' 6 'புதல்வற் புல்லினன்'

(ப - ரை.) பாண—, விறலவன் - வெற்றியையுடைய தலைவன், மாலை விரிந்த பசு வெள் நிலவில் - மாலைக்காலத்திலே விரிந்த இளைய வெள்ளிய நிலாவொளியில், குறு கால் கட்டில் நறு பூ சேக்கை - குறிய கால்களையுடைய கட்டிலினிடத்தேயுள்ள நறிய மலர் பரப்பிய படுக்கையில், பள்ளி யானையின் உயிர்த்தனன் - படுத்தலையுடைய யானையைப்போலப் பெருமூச்சு விட்டானாகி, நசையின் - விருப்பத்தினால், புதல்வன் தழீஇயினன் - தன் பிள்ளையைத் தழுவினான்; புதல்வன் தாய் - அப்பிள்ளையின் தாயாகிய தலைவி, அவன் புறம் கவைஇயினள் - அத்தலைவனது புறத்தைத் தழுவினள்; கண்டிசின் - இதனைப் பார்ப்பாயாக; பண்பு உடைத்து - இச்செயல் அழகையுடையது!

(முடிபு) பாண, விறலவன் புதல்வற்றழீஇயினன்; தாய் அவன் புறங்கவைஇயினள்; கண்டிசின்; பண்புடைத்து!

(கருத்து) தலைவி புலவி தணிந்தாள்.

(வி - ரை.) பாணன் வாயிலாகப் புக்கவிடத்து மறுத்த தலைவி தலைவனே எதிர்ப்பட்டுப் பாயலிற் படுத்துப் புதல்வனைத் தழுவிய காலத்தில் தான் புலவி தீர்ந்து சென்று அவனைத் தழுவினாள்; இக் கருத்தை இச்செய்யுளின் ஆசிரியர்,

"புதல்வற் கவைஇயினன் றந்தை மென்மொழிப்
புதல்வன் ரூயோ விருவருங் கவைஇயினள்
இனிது மன்றவவர் கிடக்கை
நளியிரும் பரப்பினிவ் வுலகுட னுறுமே" (ஐங். 409)

என்று பிறிதோர் இடத்தும் அமைத்தனர்.

கண்டிசின் : சின் முன்னிலையசை. பண்பு - கற்புக் குண மெனலுமாம் ; தலைவனது பிழையை மறந்து புலவி நீங்கி அவனைத் தழுவிய இச்செயல் கற்புப்பண்பை உடையதெனக்கொள்க. அம்ம : வியப்பைப் புலப்படுத்தியது. பசு வெண்ணிலவு : பசுமை இளமையிற் சென்றது.

(மேற்.) மு. தலைவியின் மாண்புகளை அகம்புகல் மரபின் வாயில்கள் தம்முட் கூறியது (தொல். கற்பு. 11, இளம்.)

(ஒப்பு.) 2. பசுவெண்ணிலவு : குறுந் 129 : 4, ஒப்பு ; அகநா. 57 : 11. 3. கட்டிலும் சேக்கையும் : நெடுநல். 115-35 ; அகநா. 93 : 13-5. 4. தலைவன் யானையைப்போல உயிர்த்தல் : குறுந். 142 : 4, ஒப்பு. 5. தலைவன் புதல்வனைத் தழுவுதல் : "முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற, புதல்வற் புல்லிப் பொய்த்துயி றுஞ்சும்" (கலி. 75 : 24-5.)

6. புதல்வன்தாய் : குறுந். 8 : 6, ஒப்பு. மு. ஐங். 402. (கருகை)

தலைவி கூற்று

[தாய் வெறியெடுக்கவெண்ணியதைக் கூறி அஞ்சிய தோழிக்கு, "தலைவன் இங்கே வாராதொழியின் நன்றும்; அதனால் துன்பம் உண்டாயினும் பின் இனிதாக முடியும்" என்று தலைவி கூறியது.]

நசுஂ. வெறியென வுணர்ந்த வேல னேய்மருந்
தறியா ரூகுத லன்னை காணிய
அரும்பட ரெவ்வ மின்றுநா முழப்பினும்
வாரற்க தில்ல தோழி சாரற்
5. பிடிக்கை யன்ன பெருங்குர லேனல்
உண்கிளி கடியுங் கொடிச்சிகைக் குளிரே

சிலம்பிற் சிலம்புஞ் சோலை
இலங்குமலை நாட னிரவி னானே.

எ - து. தலைமகன் சிறைப்புறத்தானாக வெறியஞ்சிய தோழிக்குச் சொல்லுவாளாய்த் தலைவி சொல்லியது.

மதுரை சமுத்துப் பூதன் தேவன்.

(பி - ம்) 2 'காணி' 6 'ஒண்கிளி'

(ப - ரை.) தோழி—, அரு படர் எவ்வம் - பொறுத்தற்கரிய நினைவாலுண்டாகும் துன்பத்தை, இன்று நாம் உழப்பினும் - இன்று நாம் அடைந்தாலும், வெறி என உணர்ந்த வேலன் - எனது நோயைத் தீர்க்கும்வழி வெறியாடுதலென்று தெளிந்த வேலன், நோய் மருந்து அறியான் ஆகுதல் - அந்நோயைத் தீர்ப்பதற்குரிய பரிகாரத்தை அறியாதவன் ஆதலை, அன்னை காணிய - நம் தாய் காணும்பொருட்டு, சாரல் - மலைச்சாரலின்கண், பிடி கை அன்ன - பெண்யானையின் கையையொத்த, பெரு குரல் ஏனல் - பெரிய கதிர்க் கொத்திலுள்ள தினையை, உண் கிளி கடியும் - உண்ணுகின்ற கிளிகளை ஓட்டும், கொடிச்சி கை குளிர் - குறமகளின் கையிலுள்ள குளிரென்னும் கருவி, சிலம்பின் சிலம்பும் - சிலம்பைப் போல ஒலிக்கின்ற, சோலை இலங்குமலை நாடன் - சோலைகள் விளங்கும் மலைநாடனாகிய தலைவன், இரவினன் - இராக்காலத்தே, வாரற்க - இங்கே வாராதொழிக ; தில் - இஃது எனது விருப்பம்.

(முடிபு) தோழி, நாடன் இரவினன் வாரற்க.

(கருத்து) தலைவன் ஈண்டு வாராதொழிக.

(வி - ரை) தலைவன் இரவுக்குறி வந்தொழுகாநின்ற காலத்து, ஆற்றின் ஏதமும் காவன்மிகுதியும் அஞ்சித் தலைவி வேறுபட்டாள் ; அவ்வேறுபாடு எற்றினன் ஆயிற்றென்பதைத் தாய் ஆராயப்புகுந்து வெறியாட்டெடுக்க எண்ணியதையறிந்து தலைவி கூறியது இது. தலைவன் சிறைப்புறத்தானதலின் தலைவியின்கருத்தை உணர்வான்.

"தலைவன் வாராமையால் என் நோய் மிகும் ; வெறியாட்டெடுத்தவழியும், அந்நோய்மிகுதலை எண்ணித் தாய் வெறியாட்டு இதற்கு மருந்தன்றென்று அறிவாள்; அங்ஙனம் அவள் அறிதற்கு ஏதுவாதலின் தலைவன் வாராமை நமக்குத் துன்பத்தை இன்று தருவதாயினும், பின் நலம்பயக்கும்" என்று தலைவி கூறினள்.

தில்ல : விழைவின்கண் வந்த தில்லென்னும் இடைச்சொல் ஈறு திரிந்தது.

சிலம்பிற்சிலம்பும் - மலைப்பக்கங்களில் எதிரொலியுண்டாக்கு மெனினும் அமையும்.

(மேற்.) 1. 'மங்குல்ஞாயிறு - இருளைக் கெடுக்கும் ஞாயிறு; இதனை, நோய்மருந்தென்றூற் போலக் கொள்க' (பரி. 13 : 1, பரிமேல்.)

(ஒப்பு.) 1-2. வேலன் நோய் மருந்து அறியாமை : "தோற்ற மல்லது நோய்க்குமருந் தாகா, வேற்றுப்பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி" (குறுந். 263 : 3-4); "அறியா வேலற் றரீஇ யன்னை, வெறியயர் வியன் களம் பொலிய வேத்தி" (அகநா. 242 : 10-11.)

3. அரும்படர் : அகநா. 72 : 21.

4. வாரற்க தில்ல : குறுந். 198 : 8, ஒப்பு.

3-4. தலைவி வருந்தினலும் தலைவன் வாராமை நன்று : "ஆய்மலர் மழைக் கண் டெண்பனி யுறைப்பவும், வேய்மருள் பணைத்தோள் விறலிழை நெகிழ வும், அம்பன் மூதூ ரரவ மாயினும்.....வாரற்க தில்ல தோழி.....ஓங்குமலை நாடனின் னசையி னனே", "மென்றே ணெகிழ்ந்துகாம் வருந்தினு மின்றவர், வாரா ராயினே நன்றுமற் றில்ல" (கற். 85 : 1-11, 255 : 6-7.)

5. தினைக்கதிர்க்குப் பிடியின் கை : குறுந். 198 : 3-4, ஒப்பு.

5-6. தினையைக்கிளி உண்ணுதல் : குறுந் 133 : 1-2. தினையிற் கிளிகடிதல் : குறுந். 198 : 4-5, ஒப்பு. குளிரார் கிளிகடிதல் : குறுந். 291 : 1-2, ஒப்பு. (கூ0)

தலைவி கூற்று

[வரைவுக்குரிய முயற்சிகள் நிகழாநிற்ப, "இதுகாறும் நீ தலைவன் பிரிவை நன்கு ஆற்றினை" என்று கூறிப் பாராட்டிய தோழியை நோக்கி, "அவர் மலையிலிருந்து வந்த காந்தளை வளர்த்து ஆற்றினேன்" என்று தலைவி கூறியது.]

கூசூக. அம்ம வாழி தோழி யன்னைக்
குயர்நிலை யுலகமுஞ் சிறிதா லவர்மலை
மாலைப் பெய்த மண்ணங்கம ழுந்தியொடு
காலை வந்த காந்தண் முழுமுதல்
5. மெல்லிலை குழைய முயங்கலும்
இல்லுய்த்து நடுதலுங் கடியா தோளே.

எ - து. வரைவுமலிந்தவழித் தோழி "நன்காற்றினாய்" என் றூட்குக் கிழத்தி சொல்லியது.

கபிலர்.

(பி-ம்.) 2 'லவர் நாட்டு' 3 'மூத்தியொடு' 3-4 'மூந்தியேர்குலை நிவந்த' 4 'முழுமுதற் காந்தள்' 5 'மெல்விரல்' 6 'விடுதலுங்'; 'கடியா தோட்கே'

(ப - ரை.) தோழி—, அம்ம - ஒன்று கூறுவன் கேட்பாயாக: அவர் மலை - தலைவருடைய மலையிலே, மாலை பெய்த - மாலைக் காலத்திலே பெய்த மழையினால் உண்டாகிய, மணம் கமழ் உந்தியொடு - நறுமணம் கமழும் ஆற்றோடு, காலை வந்த காந்தள் முழு முதல் - காலையிலே இங்கே வந்த காந்தளினது, மெல் இலை குழைய முயங்கலும் - மெல்லிய இலையானது குழையும்படி தழுவுதலையும், இல் உய்த்து நடுதலும் - வீட்டிற் கொணர்ந்து அதன் கிழங்கை நான் நடுதலையும், கடியாதோள் - விலக்காதவளாகிய, அன்னைக்கு - தாய்க்கு, உயர் நிலை உலகமும் - உயர்ந்த நிலையாகிய தேவருலகும், சிறிது - கைம்மாறாகக் கருதுமிடத்துச் சிறிதாகும்.

(முடிபு) தோழி, உந்தியொடு வந்த காந்தண் முழுமுதலை முயங்கலும் நடுதலும் கடியாதோளாகிய அன்னைக்கு உயர்நிலை யுலகமும் சிறிது.

(கருத்து) தலைவன் மலையிலிருந்து வந்த காந்தளைக் கொண்டு ஆற்றியிருந்தேன்.

(வி - ரை.) உயர்நிலை யுலகம் - உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகம் (மதுரைக். 471, ந.) சிறிதால்: ஆல் அசை. அவர்: நெஞ்சறிசுட்டு.

மாலையிலே பெய்த மழையினால் உண்டாகிய அருவியை மாலைப்பெய்த உந்தியென்றாள்; பெய்த உந்தியென்பது, "குண்டுசுனை பூத்த...கண்ணி" (முருகு. 199) என்பது போலச் செயப்படு பொருண்மேல் நின்றது.

காந்தள் முதலியவற்றின் மலர்களை மேற்கொண்டு வருதலின் மணங்கமழ் உந்தியாயிற்று. மலையில் மாலையிற்பெய்த மழையினால் உண்டாகிய அருவியால் பெயர்க்கப்பட்ட காந்தள் மறுநாட் காலையில் தலைவியின் ஊரருகே வந்தது. தம் தலைவரோடு தொடர்புடைய பொருள்களைத் தழுவுதலும் பாராட்டிப் போற்றுதலும் மகளிர் இயல்பு; அநுமான் இராமபிரானது ஆழியைக் கொடுத்தவுடன் சீதையின்பால் நிகழ்ந்தவற்றை,

> "மோக்குமுலை வைத்துற முயங்குமொளிர் நன்னீர்
> நீக்கிநிறை கண்ணிணை ததும்பநெடு நீள
> நோக்குநுவ லக்கருது மொன்றுநுவல் இல்லாள்
> மேக்குநிமிர் விம்மலல் விழுங்கலுறு கின்றுள்"

(உருக்காட்டு. 67)

என்று கம்பர் கூறும் செய்யுளும், தலைவன் அளித்த கையுறையைத் தலைவி யேற்றமையைப் புலப்படுத்தும்.

"போயா னளித்தலுங் கைகுவித் தேற்றபின் போற்றியன்பாற்
சாயாத கொங்கையின் மேலணைத் தாடஞ்சை வாணன்வெற்பா
காயா மலரன்ன மேனிமெய் யாகநின் கையுறையை
நீயாக வல்லது மாந்தழை யாக நினைந்திலளே" (தஞ்சை. 129)

என்னும் செய்யுளும் இங்கே அறிதற்குரியன.

பலகால் முயங்கினமையின் இலை குழைந்தது.

"தலைவனது மலையிலிருந்து ஆற்றினால் அடித்துக் கொணரப் பட்ட காந்தட் கிழங்கை நட்டு வளர்த்துப் போற்றி அதைக் காணும் போதெல்லாம் தலைவனைக் காண்பதாக நினைந்து ஆற்றி னேன். அச்செயலை என்தாய் தடுத்திலள்" என்று தலைவி கூறினாள்.

(மேற்.) 2-6. அவன் தமர் உவத்தலென்னும் மெய்ப்பாடு வந்தது (தொல். மெய்ப். 22, பேர்.)

மு. தலைவனைப் பெற்றவழி மகிழ்ந்து தலைவி தோழிக்கு உரைத்தது (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. அம்மவாழி தோழி: குறுந். 77: 1, ஒப்பு.

1-2. தேவருலகத்தைப் பெறும்படி வாழ்த்துதல்: குறுந். 83: 1-2, ஒப்பு. 4. முழுமுதல்: குறுந். 214: 5, 255: 5; முருகு. 307.

மு. ஒருவாறு ஒப்பு: குறுந். 83. (கசுக)

தோழி கூற்று

[தலைவியின் நோய் முருகனால் வந்ததெனக் கருதித் தாய் வெறி யாட்டெடுத்தவிடத்துத் தோழி வெறியாடும் வேலனை நோக்கி, "தலைவியின் நோயைப் பரிகரிக்க எண்ணி இடும் இப்பலியை அந் நோய்க்குக் காரணமாகிய தலைவனது மார்புமீ உண்ணுமோ?" என்று கூறும் வாயிலாக அறத்தொடு நின்றது.]

நகூஉ. முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவ லோம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணிறுநுத னீவி
5. வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்பன்
ஒண்டா ரகலமு முண்ணுமோ பலியே.

எ - து. வெறிவிலக்கித் தோழி அறத்தொடு நின்றது.

வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன் (பி-ம். வேற்பற்றூர்க்கண்ணகன் கூத்தன்.)

(பி - ம்) 1 'வேலன்' 2 'வினவுதலுடையேன்' 3 'சில்லவி முடையொடு' 7 'தண்டாரகலமு'

(**ப - ரை.**) முருகு அயர்ந்து வந்த - முருகனே வழிபட்டு வந்த, முது வாய் வேல - அறிவு வாய்த்த வேலனே, சினவல் ஓம்புமதி - கோபித்தலைப் பாதுகாப்பாயாக; வினவுவது உடையேன் - நின்னைக் கேட்பது ஒன்று உடையேன்: பல்வேறு உருவின் - பல வாகிய வேறுபட்ட நிறத்தையுடைய, சில் அவிழ் மடையொடு - சில சோற்றையுடைய பலியோடு, சிறு மறி கொன்று - சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று, இவள் நறு நுதல் நீவி - இத்தலைவியினது நறிய நெற்றியைத் தடவி, வணங்கினை கொடுத்தியாயின் - முருகக் கடவுளை வணங்கிப் பலியாகக் கொடுப்பாயாயின், அணங்கிய - இவளைத் துன்புறுத்திய, விண்தோய் மா மலை சிலம்பன் - வானத்தை அளாவிய பெரிய மலைப்பக்கத்தையுடைய தலைவனது, ஒள் தார் அகலமும் - ஒள்ளிய மாலையை யணிந்த மார்பும், பலி உண்ணுமோ - நீ கொடுக்கும் பலியை உண்ணுமோ?

(**முடிபு**) வேல, சினவல் ஓம்புமதி; வினவுவது உடையேன்: மறிகொன்று, நுதல் நீவிக் கொடுத்தியாயின் சிலம்பன் அகலமும் பலி உண்ணுமோ?

(**கருத்து**) இவளுக்குற்ற நோய் ஒரு தலைவனால் வந்தது.

(**வி - ரை.**) முது வாய் வேலன் - முதுமை வாய்ந்த வேலனெனலும் பொருந்தும். பலவகை நிறங்களையுடைய சோற்றை வேலன் முருகனுக்குப் பலியாக இட்டான். சிறுமறி யென்றது இரங்கத் தக்க இளமையுடையதென்னும் குறிப்பு.

நுதனீவியென்று பொதுப்படக் கூறினும் மறியின் உதிரம் கலந்த மண்ணால் நுதல் நீவுதல் மரபென்பது,

> "..... வாணுதலின்
> மன்றி லரிந்த மறியின் குருதியின் மண்ணுமள்ளிச்
> சென்றெரு வேலர்கை நீண்டவென் செய்தது நீவினையே"
>
> (அம்பிகா. 267)

என்னும் செய்யுளால் தெரியவருகிறது. அச்சம் நீக்குவதற்குத் தடவுதலும் உண்டு. சிலம்பன்: இடுகுறி மாத்திரையாய் நின்றது (திருச்சிற். 128, பேர்.)

இந்நோய் தலைவனது மார்பால் வந்தது; அதனையன்றிப் பிறிது மருந்தில்லை யென்பாள் 'அகலமும் உண்ணுமோ பலியே' என்

ருள். அஃது உண்ணுதாதலின் இது செய்தும் பயனில்லையென்பது இதனாற் போந்தது.

இங்ஙனம் தோழி வெறிவிலக்கினமையின், தாய்க்கு 'அச் சிலம்பன் யார் ?' என்னும் ஆராய்ச்சி பிறக்கும்; அது வரைதற்கு ஏதுவாகும்.

(மேற்.) 1. கண்டோர் கேட்பத் தலைவி கூறியது (தொல். செய். 197, பேர்.); செவிலி கேட்பத் தலைவி கூறியது (தொல். செய். 196, ந.)

மு. வெறியாடுமிடத்து வேலற்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்வியது (இறை. 16); வேலனெடு கூறுதற்கண் தலைவி உசாவியது (தொல். களவு. 24, இளம்; பொருள். 13, ந,)

(ஒப்பு.) 1. முதுவாய் வேலன்: அகநா. 388 : 19.

3. சிலம்பில் மடை: "புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி" (புறநா. 360 : 18.)

4. நுதல் நீவுதல்: குறிஞ்சிப். 182; நற். 28 : 2, 316 : 6; கலி. 21 : 6; அகநா. 49 : 6, 165 : 9. 240 : 10; தமிழ்நெறி. மேற். 96. 1-4. வேலன்சிறுமறி கொல்லல்: "சிறுகுள கருந்துப் தாய்முலை பெருஅ, மறிகொலைப் படுத்தல் வேண்டி வெறிபுரி, ஏதில் வேலன்" (அகநா. 292 : 3-5.)

5-7. அணங்கிய அகலம்: "நாடன், மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல்" (அகநா. 22 : 2-3.)

மு. "தண்ணென் சாயலிவ ளுண்ணெய் தணிய
எண்ணிலை கொடுத்தி யாயின்
அண்ண லாகமு முண்ணுமோ பலியே"
(தமிழ்நெறி. மேற். 104);

"வண்டா ரிரும்பொழில் வல்லத்துத் தென்னற்கு மாறெதிர்ந்து
விண்டா ருடலின் மறியறுத் தூட்டி வெறியயர்ந்து
தண்டார் முருகற் றருகின்ற வேலந் றண்சிலம்பன்
ஒண்டா ரகலமு முண்ணுங் கொலோகின் னுறுபலியே'
(பாண்டிக்.);

"கோல மறியின் குருதியாற் கொய்ம்மலரால்
வேல னயரும் வெறியாட்டுச்—சால
மடமார் மயின்முருக னன்றியே யண்ணல்
தடமார்பு முண்ணுமோ தான்" (கிளவித்தெளிவு.) (கூஉ)

தோழி கூற்று

[தலைவனைப் பிரிவுணர்த்தப் பட்ட தோழி, "இனியளாகிய தலைவியைப் பிரிந்து செல்லுதல் இன்னுமையைத் தருவது" என்று அவனுக்குக் கூறியது.]

நகூந. கண்ணி மருப்பி னண்ண னல்லேற்று
செங்கோற் பதவின் வார்குரல் கறிக்கும்
மடக்கண் வரையா நோக்கி வெய்துற்றுப்
புல்லரை யுகாஅய் வரிநிழல் வதியும்
5 இன்ன வருஞ்சுர மிறத்தல்
இனிதோ பெரும வின்றுணைப் பிரிந்தே.

எ - து. பிரிவுணர்த்தப் பட்டதோழி கிழவற்குச் சொல்லியது. செல்லூர்க் கொற்றன் (பி - ம். சொல்லூர்க் கொற்றன்.)

(பி - ம்) 2 'புதவின்' 3 'யெய்துற்றுப்' 4 'வறுநிழல்' 6 'வின்றுனைப்'

(ப - ரை.) பெரும—, இன் துணை பிரிந்து - இனிய துணைவியைப் பிரிந்து, கண்ணி மருப்பின் அண்ணல் நல் ஏறு - கண்ணியைப் போன்று வளைந்த கொம்பையுடைய தலைமையையுடைய நல்ல மலை எருது, செ கோல் பதவின் வார் குரல் கறிக்கும் - செவ்விய தண்டுகளையுடைய அறுகினது நீண்ட கொத்தைக் கடித்துத்தின்னும், மடம் கண் வரை ஆ நோக்கி - மடப்பம் பொருந்திய கண்ணையுடைய மலைப்பசுவைப் பார்த்து, வெய்துற்று - பெருமூச்சுவிட்டு, புல் அரை உகாஅய் வரி நிழல் வதியும் - புல்லிய அடியையுடைய உகாஅய் மரத்தினது புள்ளிகளையுடைய நிழலின் கண்ணே தங்குகின்ற, இன்ன அரு சுரம் இறத்தல் இனிதோ - இன்னதை கடத்தற்கரிய சுரத்தைக் கடத்தல் இனிமையையுடையதோ?

(முடிபு) பெரும, துணைப்பிரிந்து சுரம் இறத்தல் இனிதோ?

(கருத்து) தலைவியைப் பிரிந்து செல்லுதல் இன்னாது.

(வி - ரை.) கண்ணி - ஒருவகை மாலை. கண்ணி மருப்பு - மாலையை அணிந்த மருப்பெனலுமாம். பதவு - அறுகு. உகாய் மரத்தின் அடி, "புன்கா லுகாஅய்" (குறுந். 274 : 1) என்று முன்னும் கூறப்பட்டது. தழைகளின் செறிவின்மையின் வரிநிழலை உடையதாயிற்று.

(ஒப்பு.) 1. மடக்கண் : குறுந். 64 : 3 ; அகநா. 238 : 6. 4. வரிநிழல் : சிறுபான். 12. 5-6. ஒருவாறு ஒப்பு : குறுந் 124 : 3-4. (நகூந)

இற்பரத்தை கூற்று

[வேறொரு பரத்தை தன்னைப் புறங்கூறினளெனக் கேட்ட இற்பரத்தை அப்பரத்தைக்குப் பாங்காயினர் கேட்ப, "மகளிர்

துணங்கையாடும் நாளும் மள்ளர் சேரிப்போர் செய்யும் நாளும் வந்தன ; இப்பொழுது தலைவன் வலிய என்பால் அன்பு கொள்ளு தலை அறியலாம்" என்று கூறியது.]

உசுச. அரிற்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாளிரை பெறூஉ மூரன்
பொற்கோ லவிர்தொடித் தற்கெழு தகுவி
எற்புறங் கூறு மென்ப தெற்றென
வணங்கிறைப் பணைத்தோ ளெல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன வவ்வரைக்
கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே.

எ - து. வேறொருபரத்தை தன்னைப் புறங்கூறினளெனக் கேட்ட இற்பரத்தை அவட்குப் பாங்காயினர் கேட்பக் கூறியது.

ஔவையார் (பி-ம். அவ்வையார்.)

(பி - ம்.) 1 'அரிப்பவர்' 3 'பொற்கோல் விற்கொடித்' 'லவிர் தொடிதற்கெழு' 4 'என்பதெற்றென்' 6 'வவரைக், 7 'கண்போன்'; 'கணவர்', 'களவர்' 8 'மண்கொணற்', 'மண் கொளற்', 'மண்கொணற்கு'; 'மன்னர்போரே'

(ப - ரை.) அரில் பவர் பிரம்பின் - பிணக்கையுடைய கொடிப் பிரம்புகளைப்போன்ற, வரி புறம் நீர் நாய் - கோடுகள் பொருந்திய புறத்தையுடைய நீர்நாயானது, வாளை நாள் இரை பெறூஉம் ஊரன் - வாளைமீனைகிய நாட்காலை உணவைப் பெறுகின்ற ஊருக்குத் தலைவனுடைய, பொன் கோல் அவிர் தொடி - பொன்னு லாகிய திரட்சியையுடைய விளங்குகின்ற வளையையணிந்த, தன் கெழு தகுவி - தனக்குப் பொருந்திய தகுதியுடைய பரத்தை, என் புறம் கூறும் என்ப - என்னைப் புறங்கூறுவளென்று கூறுவர் ; தெற்றென - அவள் கூறுவது உண்மையா அன்று என்பது விளங் கும்படி, வணங்கு இறை பணைதோள் எல் வளை மகளிர் - வளைந்த சந்தையுடைய மூங்கிலைப்போன்ற தோள்களில் விளக்கத்தை யுடைய வளையையணிந்த மகளிர்க்குரிய, துணங்கை நாளும் வந்தன - துணங்கைக் கூத்தாடும் நாட்களும் வந்தன ; அ வரை - அக்காலத்தில், கண் பொர - ஒருவர்கண் மற்றொருவர் கண்ணோடு மாறுபடும்படி, அதன்கண் - அத்துணங்கைக்கூத்தினிடத்து,

அவர் மணம் கொளற்கு - அம்மகளிரது மணத்தைக் கொள்ளும் பொருட்டு, மள்ளர் போர் - மள்ளர்களுடைய சேரிப்போரானது, இவரும் - விரும்பிக்கொள்ளப்படும்.

(முடிபு) ஊரன் தகுவி புறங்கூறுமென்ப ; தெற்றென நாளும் வந்தன ; அதன்கண் மள்ளர்போர் அவர் மணங்கொளற்கு இவரும்.

(கருத்து) என்னைத் தலைவனே விரும்பி அடைந்தான்.

(வி - ரை.) சேரிப்பரத்தையொருத்தி தன்னை, "இவள் தலைவனைப் புறம்போகாவாறு செய்தாள்" என்று புறங்கூறியதை யறிந்த இற்பரத்தை, "தலைவனே வலியவந்து என்னை விரும்பினன். இப்பொழுது வரும் விழாவில் வீரர் தம் அன்புக்குரியாரோடு ஒன்றுபட்டு விளையாடுவர். அக்காலத்தில் அவன் வலிய என்பால் அன்புடையனதலை யாவரும் அறியலாகும்" என்று கூறினள்.

பிரம்பின் தூற்றிலுள்ள நீர்நாயென்றலும் பொருந்தும் ;

"வாளை மேய்ந்த வள்ளையிற்று நீர்நாய்
முள்ளரைப் பிரம்பின் மூதரிற் செறியும்" (அகநா. 6 : 18-9.)

பொற்கோலவிர்தொடி யென்றது, 'தன்பாலுள்ள செல்வ மிகுதியால் என்னைப் புறங்கூறினள் போலும்!' என்னும் நினைவிற்று. தற்கெழு : தன்னென்றது தலைவனை. தெற்றென - யான் தலைவனை அகப்படுத்தலின்றி அவன் தானே வலிய என்பாற் படுதல் விளங்கும்படி.

துணங்கை - மகளிர் விளையாட்டில் ஒன்று ; இந்நூல் 31 - ஆம் செய்யுளைப்பார்க்க. அத்துணங்கையில் தலைவன் தலைக்கை தருவான்.

விழாவில் துணங்கையும் மள்ளர் போரும் ஒருங்கே நிகழும் (குறுந். 31 ; கலி. 27 : 19-20, 24, 30 : 13-4.)

(ஒப்பு.) 1. அரிற்பவர்ப் பிரம்பு : குறுந். 91 : 1.

1-2. நீர்நாய் வாளைநாளிரை பெறுதல் : "பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய், வாளை நாளிரை பெறூஉ மூர" (ஐங். 63 : 1-2) ; "நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய், வாளையொ டுழப்ப", "பொய்கை நீர்நாய்ப் புலவுநா றிரும்போத்து, வாளை நாளிரை தேரு மூர" (அகநா. 336 : 4-5, 386 : 1-2) ; "வாளை நீர்நாய் நாளிரை பெறூஉ" (புறநா. 283 : 2); பெரிய. 38 : 115 ; கம்ப. பம்பைப். 22.

3. கோல் அவிர்தொடி : குறுந். 356 : 8, ஒப்பு. தகுவி : அகநா. 196 : 13.

5. வணங்கிறைப் பணைத்தோள் : புறநா. 32 : 3. பணைத்தோள் : குறுந். 268 : 6, ஒப்பு. 5 - 6. மகளிர் துணங்கை : குறுந். 31 : 2, ஒப்பு.

5-8. தலைவன் பரத்தையரோடு துணங்கையயர்தல் : கற். 50 : 1-3 ; கலி. 66 : 17-8, 70 : 13-4, 73 : 16-7 ; அகநா. 176 : 15. மு. அகநா. 336.

தோழி கூற்று

[" யான் வரையுமவ்வளவும் தலைவி ஆற்றுவளோ?" என்று கேட்ட தலைவனை நோக்கித் தோழி, " இவள் ஆற்றாள் " என்பது படச் சொல்லியது.]

நகூடு. கோடு ரிலங்குவலை நெகிழ நாளும்
பாடில கலிழ்ந்து பனியா னுவே
துன்னரு நெடுவரைத் ததும்பிய வருவி
தண்ணென் முரசி னிமிழிசை காட்டும்
5. மருங்கிற் கொண்ட பலவிற்
பெருங்க ணடநீ நயந்தோள் கண்ணே.

எ - து. " யான் வரையுந்துணையும் ஆற்றவல்லளோ?" என்று வினைய கிழவற்குத் தோழி சொல்லியது.

மதுரை நல்வெள்ளி.

(பி - ம்.) 1 'நாடொறும்' 2 'கழிந்து', 'கலுழுந்துனி யானுவே' 3 'ததும்பியருவி' 4 'தண்ணென் முழவின்' 5 'ஞடனீ', 'ஞடநின்'

(ப - ரை.) துன் அரு நெடு வரை ததும்பிய அருவி - அணுகு தற்கரிய நெடிய மலைப்பக்கத்திலே ஒலித்த அருவியானது, தண் ணென் முரசின் - தண்ணென்ற ஒலியையுடைய முரசைப்போல, இமிழ் இசை காட்டும் - ஒலிக்கின்ற ஆரவாரத்தை வெளிப் படுத்தும், மருங்கில் கொண்ட பலவின் - பக்கத்திற்கொண்ட பலாமரங்களையுடைய, பெரு கல் நாட - பெரிய மலையையுடைய நாடனே, நீ நயந்தோள் கண் - நின்னால் விரும்பப்பட்ட தலைவியின் கண்கள், கோடு ஈர் இலங்கு வளை நெகிழ - சங்குகளை அறுத்துச் செய்த விளங்குகின்ற வளைகள் நெகிழாநிற்ப, நாளும் - நாள் தோறும், பாடு இல - துயிலுதல் இல்லாதனவாகி, கலிழ்ந்து - கலங்கி, பனி ஆனு - நீர்த்துளியை நீங்கா

(முடிபு) நாட, நீ நயந்தோள் கண் பாடில; கலிழ்ந்து பனிஆனு,

(கருத்து) இவள் நின்னைப் பிரிந்து ஆற்றியிராள்.

(வி - ரை.) வரைவிடை வைத்துப் பிரியக் கருதிய தலைவன். " என் பிரிவைத் தலைவி ஆற்றுவளோ?" என்று கேட்பக் கூறியது இது. வளை நெகிழவென்றது இவள் உடல் மெலிவா ளென்றபடி. கண்பாடிலவாகிக் கலிழுமென்றமையின் துயிலா மையும் துயர்மிகுதியும் உடையளாவளென்றபடி.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) மு. யான் வரையுந்துணையும் ஆற்றுவளோவென்ற தலைமகற்குத் தோழி ஆற்றுளென்று கூறியது (தொல். களவு. 23, ந.)

(ஒப்பு.) 1. கோடிலங்குவளை : குறுந். 11 : 1, ஒப்பு. வளைநெகிழ்தல் : குறுந். 11 : 1, ஒப்பு.

3-4. அருவிக்கு முரசு : "முரசருவி யார்க்கு மலைநாடற்கு" (கம்ப. பா); (கைந்நிலை, 5.) பி - ம். அருவிக்கு முழவு : குறுந். 78 : 1-2, ஒப்பு; நற் 176 : 9, 347 : 6-7; அகநா. 25 : 21-2, 138 : 8-9, 172 : 2-4, 318 : 5-6. தஞ்சை. 22. 2-6. கண் பாடிலை : குறுந். 5 : 5, ஒப்பு.

தலைவியதுயிலாமை. குறுந். 6 : 4, ஒப்பு. தலைவி அழுதல் : குறுந். 82 : 2, ஒப்பு. துயிலாமையும் கலிழ்தலும் : குறுந். 11 : 2, ஒப்பு. கண் பாடிலை, பனியான : குறுந். 357 : 1-2 கண்பனி : குறுந். 348 : 4, ஒப்பு; ஐங். 208 : 5; அகநா. 359 : 1. (கசுடு)

தோழி கூற்று

[காப்பு மிக்கதனால் வேறுபட்ட தலைவியின் நிலைகண்டு, "இஃது எக்காரணத்தால் உண்டாகியது?" என்று வினவிய செவிலிக்குத் தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நின்றது.]

கசுசு. பால்வரைந் தமைத்த லல்ல தவர்வயிற்
சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ
வெறியாள் கூறவு மமையா ளதன்றலைப்
பைங்கண் மாச்சுனைப் பல்பிணி யவிழ்ந்த
5. வள்ளிதழ் நீல நோக்கி யுள்ளகைபு
ஆழுத கண்ண ளாகிப்
பழுதன் றம்மவிவ் வாயிழை துணிவே.

எ - து. காவல்மிகுதிக்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு, "இவ்வேறுபாடு எற்றினையது?" என்று செவிலி வினவத் தோழி கூறியது.

பேரிசாத்தன் (பி - ம்.) பேரீசாத்தன், பெரிச்சாத்தன்.)

(பி - ம்.) 1 'பால்வரைத்' 6 'பொழுகுகண்ணள்'; 'ளாகிய' 7 'பழுதாலம்ம'

(ப - ரை.) இ ஆய் இழை - இந்த ஆய்ந்த அணிகலன்களை அணிந்த தலைவி. வெறியாள் கூறவும் அமையாள் - வெறியாடும் மகள் இந்நோய் முருகனாலாயது என்று சொல்லவும் அமைதி

பெருளாய், அதன் தலை - அதன்மேலும், பசு கண் மா சுனை பல் பிணி அவிழ்ந்த - பசிய இடத்தையுடைய கரிய சுனையினிடத்தே பல கட்டு அவிழ்ந்த, வள் இதழ் நீலம் நோக்கி - வளவிய இதழையுடைய நீலமலரைப் பார்த்து, உள் அகைபு - நெஞ்சுள்ளே வருந்தி, அழுத கண்ணள் ஆகி - அழுத கண்களையுடையவளாகி, துணிவு - துணிந்தது, பழுது அன்று - குற்றமற்றது; பால்வரைந்து அமைத்தல் அல்லது - பழவினையினுலே வரையறுத்துப் பொருத்தப்பட்டதன்றி, அவர் வயின் - அத்தலைவர் திறத்தில், சால்பு அளந்து அறிதற்கு - தகுதியை வரையறுத்து அறிவதற்கு, யாம் யார் - யாம் எத்தகுதியை உடையேம்?

(முடிபு) இவ்வாயிழை அமையாள், நீலம் நோக்கி அழுத கண்ணளாகித் துணிவு பழுதன்று.

(கருத்து) தலைவிக்கு நீலப்பூவைத் தந்து நட்புச்செய்த அன்பன் ஒருவன் உளன்.

(வி - ரை.) பால்வரைந்தமைத்தலினுலே கூடினரென்பது அறத்தொடு நிற்கும் வகையுள் ஒன்றாகிய தலைப்பாடு; 'தலைப்பாடு-இருவரும் தாமே எதிர்ப்பட்டார், யான் அறிந்திலேனெனக் கூறுதல்' (தொல். பொருள் 13, ந.); சால்பளந்தறிதற்கு யாம் யாரென்றது தலைவனை ஏத்தல்.

நீலநோக்கி அழுதனளென்றது அத்தகையதொரு நீலப்பூவைத் தனக்குத் தந்த தலைவனை நினைந்ததைக் குறித்தபடி; இஃது ஏதீடு. ஆகியென்ற எச்சம் துணிவென்னும் தொழிற்பெயரோடு முடிந்தது. அமையாள் நோக்கி ஆகித் துணிவு பழுதன்றென வினைமுடிவு செய்க.

ஓ, அம்ம, ஏ: அசைநிலைகள்.

(ஒப்பு.) 1-2. தலைவன் சால்பு அறியப்படாமை: குறுந். 377: 4.

3. அதன்றலை: குறுந். 302: 2.

4-5. பிணியவிழ்ந்த பூ: குறுந். 220: 4-5. (ஈஈஈ)

தோழி கூற்று

[தலைவன் வரைந்து கொள்வானென்பதைத் தலைவிக்கு உணர்த்திய தோழி அவள் உவகை மீதூராமலிருக்கும் பொருட்டு, "தலைவர் தண்ணளி செய்யாராயினும், அவர் மலையைக் கண்டு ஆற்றியிருப்பாயாக" என்று கூறியது.]

ஈஈஎ. கொடியோர் நல்கா ராயினும் யாழநின்
தொடிவிளங் கிறைய தோள்கவின் பெறீஇயர்

உவக்காண் டோழி யவ்வந் திசினே
தொய்யன் மாமழை தொடங்கலி னவர்நாட்டுப்
5. பூச லாயம் புகன்றிழி யருவியின்
மண்ணுறு மணியிற் ரோன்றும்
தண்ணறுந் துறுக லோங்கிய மலையே.

எ - து. (1) வரைவுணர்த்திய தோழி தலைமகட்குக் கழியுவகை மீதூராமை உணர்த்தியது.

(2) வரைவு நீட்டித்தவிடத்து ஆற்ருளாகிய தலைமகளைத் தோழி, ஆற்றும் வகையால் ஆற்றுவித்ததூஉமாம்.

மதுரை மருதன் இளநாகன்.

(பி - ம்) 2 'தொடிவழங்', 'பெறீஇ', 'பெறீஇய' 4 'துடங்கலின்' 5 'லாய'; 'யருவி'

(ப - ரை.) தோழி—, தொய்யல் மா மழை - நெகிழ்ச்சியையுடைய பெரிய மழை, தொடங்கலின் - பெய்யத் தொடங்குதலினால், அவர் நாட்டு - அத்தலைவருடைய நாட்டிலுள்ள, பூசல் ஆயம் - ஆரவாரத்தையுடைய மகளிர்திரள், புகன்று இழி அருவியின் - விரும்பி நீராடும்பொருட்டுப் புகுகின்ற அருவியினால், மண்ணுறு மணியின் தோன்றும் - கழுவப்பட்ட நீலமணியைப் போலத் தோன்றுகின்ற, தண் நறு துறு கல் - தண்ணிய நறிய குண்டுக்கற்கள், ஓங்கிய மலை - உயர்ந்த மலையை, கொடியோர் நல்காராயினும் - கொடுமையையுடைய தலைவர் தண்ணளி செய்யாராயினும், நின் தொடி விளங்கு இறைய தோள் கவின் பெறீஇயர் - வளைகள் விளங்கும் சந்துகளையுடைய நின் தோள்கள் அழகு பெறும் வண்ணம், அவ்வந்திசின் - அங்கே வந்தாயாகி, உவக்காண் - பார்ப்பாயாக.

(முடிபு) தோழி, கொடியோர் நல்காராயினும் நின் தோள் கவின் பெறீஇயர், மலையை அவ்வந்திசின்; உவக்காண்.

(கருத்து) நீ தலைவரது மலையைக் கண்டு ஆற்றியிருப்பாயாக.

(வி - ரை.) கொடியோர் நல்காராயினும் என்றது, "வரைவாரோ? வரையாரோ?" என்னும் ஐயத்தை நிகழ்த்திக் கழியுவகை மீதூராமற் செய்தது. யாழ: அசைநிலை. தொடி வழங்கிறைய என்னும் பாடத்திற்கு மெலிவினால் தொடிகளை நழுவவிடும் சந்துகளையுடைய என்று பொருள் கொள்க; "தொடிநிலை நெகிழச் சாஅய்" (தொல். களவு 20, ந. மேற்.) என்று வருதல் காண்க.

தம் தலைவரது மலையைக் கண்டு களித்தல் மகளிர் இயல்பு. உவக்காணென்பது ஓட்டிநின்ற இடைச்சொலென்பர் பரிமேலழகர் (குறள், 1185, உரை.) வந்திசின் : சின் முன்னிலை யசைச்சொல்.

தொய்யல் மாமழை - நிலத்தை நன்றாக நனைக்கும் பெரிய மழையெனலும் ஆம் (மலைபடு. 365, ந.) துடங்கலென்னும் பாடத்திற்குப் பொருந்தலென்றும் பொருள் கொள்க ; இச்சொல் துடக்க லென்பதன் தன்வினை. அருவியினற் கழுவப்பட்ட மலை மண்ணுறு மணியிற்றோன்றியது.

அருவி மண்ணுறுமணியிற்றோன்றும் என்ற பாடத்திற்கு, அருவியானது கழுவப்பட்ட பளிங்கைப் போலத் தோன்றுமென்று பொருள் கொள்க.

இரண்டாவது கருத்து : வரைவு நீட்டித்தவிடத்துத் தோழி, "அவர் தண்ணளி செய்யாராயினும் அவரது மலையை நோக்கி ஆற்றுவாயாக" என்று கூறி ஆற்றுவித்தது. இக்கருத்து சிறப்புடையதாகத் தோற்றுகின்றது.

(ஒப்பு.) 1. தலைவனைக் கொடியனென்றல் : குறுந். 26 : 8, ஒப்பு.

2. உவக்காண் : நற். 237 : 6, 242 : 6 ; ஐங். 206 : 1, 207 : 2; அகநா. 4 : 13 ; குறள், 1185.

5-6, பி - ம். அருவிக்குப் பளிங்கு : குறிஞ்சிப். 57 ; அகநா. 56 : 2 ; புறநா. 137 : 11, 150 : 27.

6-7. மலைக்கு மணி : (குறுந். 240 : 7) ; "மணியிற் றோன்று, மம்மலை கிழவோன்" (நற். 173 : 6 - 7) ; "மணிநிற மால்வரை", "மணிநிறங் கொண்ட மாமலை வெற்பில்" (ஐங். 208 : 4, 224 : 2) ; "மணிநிறங் கொண்ட மலை", "மணிபுரை மாமலை" (பரி. திரட்டு, 1 : 9, 74.)

2-7. தலைவி தலைவனது மலையைப் பார்த்து உவத்தல் : குறுந். 240 : 6-7, ஒப்பு. (நூசு)

தலைவி கூற்று

[வரைவுக்குரிய முயற்சிகள் மிகுதியாக நிகழ்தலைத் தோழியால் உணர்ந்த தலைவி, "இதுகாறும் மாமையை இழந்து துன்புற்றேன் ; இனி இடையீடின்றித் தலைவனோடு இன்புறுவேன்" என்று கூறியது.]

நூசுஅ. மெல்லிய லோயே மெல்லிய லோயே
நன்ன ணீத்த பழிதீர் மாமை
வன்பி னுற்றுத லல்லது செப்பிற்
சொல்ல கிற்ரு மெல்லிய லோயே

5. சிறியரும் பெரியரும் வாழூ மூர்க்கே
நாளிடைப் படாஅ நளிநீர் நீத்தத்
திண்கரைப் பெருமரம் போலத்
தீதி னிலமை முயங்குகம் பலவே.

எ - து. வரைவுமலிந்த தோழிக்குக் கிழத்தி கூறியது.
நக்கீரர்.

(பி - ம்.) 3 'வனப்பினுற்றுதல்' 7 'திகல்கரைப்'

(ப - ரை.) மெல் இயலோயே - மெல்லிய இயல்பையுடையாய், மெல் இயலோயே மெல் இயலோயே—, நல் நாள் நீத்த பழி தீர் மாமை - நல்ல நாளிலே நம்மை நீங்கிய குற்றமற்ற மாமையின் இயல்பை, வன்பின் ஆற்றுதல் அல்லது - நம் வலிய இயல்பினுற் பொறுத்திருத்தலையன்றி, செப்பின் - அங்ஙனம் நீங்குதற்கு ஏதுவாகிய துன்பத்தைச் சொற்களால், சொல்ல கிற்றும் - சொல்லுதற்கு ஆற்றல் இல்லேம்; சிறியரும் பெரியரும் வாழும் ஊர்க்கு - சிறியோரும் பெரியோரும் வாழ்கின்ற ஊரில், நாள் இடை படா நளி நீர் நீத்தம் - ஒருநாளேனும் இடையீடுபடாத செறிந்த நீரையுடைய வெள்ளத்தினது, திண் கரை பெரு மரம் போல - திண்ணிய கரையிலேயுள்ள பெரிய மரத்தைப்போல, தீது இல் நிலமை - தீங்கில்லாத நிலையிலிருந்து, பல முயங்குகம் - பலமுறை தலைவரைத் தழுவுவேமாக.

(முடிபு) மெல்லியலோயே, மாமை சொல்லகிற்றும்; ஊர்க்கு முயங்குகம்.

(கருத்து) இனி யாதொரு தீங்குமின்றித் தலைவரோடு கூடியிருப்பேன்.

(வி - ரை) நல் நாளென்றது, தலைவனைக் கண்டு அளவளாவிய நாளை மீண்டும் நம்பால் வந்தடையும் தன்மையதென்பது கருதிப் பழிதீர் மாமை யென்றுள். மாமை: ஆகுபெயர்; மாமையின் இயல்புக்காயிற்று. வன்பு - உள்ளத்தின் திண்மை.

வெள்ளத்தின் கரையிலுள்ள மரம் நீராற் குறைவின்றி வளம் பெறுவதுபோல, தலைவனோடு இடையீடின்றி வாழும் வாழ்க்கையால் யான் இழந்த மாமையைப்பெற்று விளங்குவே னென்று உவமையை விரித்துக்கொள்க.

தீதில் நிலைமை - அலர், மாமையை இழத்தல், ஆற்றாறஞ் சுதல் முதலிய தீங்குகள் இல்லாத நிலைமை.

(ஒப்பு.) 2. தலைவன் பிரிவினுல் மாமை அழிதல்: குறுந். 27 : 4-5, ஒப்பு. 6-7. குறுந். 388 : 1-2. (கூஅ)

தோழி கூற்று

[தலைவியை நோக்கி, "தலைவனுடன் செல்வாயாக" என்று தோழி கூறியது.]

நகூகூ. அத்த வாகை யமலை வானெற்
றரியார் சிலம்பி னரிசி யார்ப்பக்
கோடை தூக்குங் கானம்
செல்வாந் தோழி நல்கினர் நமரே.

எ - து. தோழி, கிழத்திக்கு உடன்போக்கு உணர்த்தியது. குடவாயிற் கீரத்தனர்.

(பி - ம்.) 3 'தூங்குங்'

(ப - ரை.) தோழி—. நமர் - நம் தலைவர், நல்கினர் - தண்ணளி செய்தனர்; ஆதலின், அத்தம் வாகை - அருவழியிலேயுள்ள வாகைமரத்தின், அமலை வால் நெற்று - ஒலியையுடைய வெள்ளிய நெற்றுக்களை, அரிசி - அவற்றின் விதை, அரி ஆர் சிலம்பின் ஆர்ப்ப - உள்ளிடு பரலையுடைய சிலம்பைப்போல ஆரவாரிக்க, கோடை தூக்கும் - மேல்காற்று அலைக்கின்ற, கானம் செல்வாம் - பாலை நிலத்திற் செல்வோமாக.

(முடிபு) தோழி, நமர் நல்கினர்; கானம் செல்வாம்.

(கருத்து) தலைவனுடன் போவேமாக.

(வி - ரை) பசுமையற்ற உலர்ந்ததாதலின் வெண்ணிற முடைய தாயிற்று அரிசியென்றது வித்தினை. நெற்றைக் கோடை தூக்குமென இயைக்க

"தலைவர் நின்னை உடனழைத்துச் சென்று தம்மூரில் மணப்பதாகக் கூறினர்; ஆதலின் பாலைநிலத்தின் வழியே அவரோடு யாம் செல்வேமாக" என்று தோழி கூறினள்.

(ஒப்பு.) 1. வாகையின் நெற்று வெண்ணிறமுடைமை: குறுந். 7 : 5.

3. காற்றுத் தூக்கல்: "செல்வளி தூக்கலின்", "கோடை தூக்கு தொறும்", "உறுகா றூக்க" (நற். 107 : 4, 162 : 10, 345 : 3); "உறுவளி தூக்கு முயர்சினை" (கலி. 84 : 1.)

1 - 3. கோடைக்காற்றால் வாகைநெற்று ஒலித்தல்: அகநா. 45 : 1 - 3. காற்றால் வாகைநெற்று ஒலித்தல்: குறுந். 7 : 4-5, ஒப்பு. (நகூகூ)

பரத்தை கூற்று

["பரத்தை தலைவனைப் புறம்போகாவாறு பிணித்துக் கொண்டாள்" என்று தலைவி கூறியதாக அறிந்த பரத்தை அவட்குப்

பாங்காயினர் கேட்ப, "தலைவன் ஈண்டு இருப்பின் அவனோடு பொருந்தியும் அவன் பிரியின் யாம் தனித்தும் இருப்பேம்" என்று கூறியது.]

நூஎ0. பொய்கை யாம்ப லணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்டுறை யூரனை
டிருப்பி னிருமருங் கினமே கிடப்பின்
வில்லக விரலிற் பொருந்தியவன்
5. நல்லகஞ் சேரி னொருமருங் கினமே.

எ - து. கிழத்தி தன்னைப் புறனுரைத்தாள் (பி-ம். புறத்துரைத்தாள்) என்பது கேட்டுப் பரத்தை, அவட்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது.

வில்லகவிரலினர்.

(பி - ம்) 5 'மருங்கிலமே'

(ப - ரை) பொய்கை ஆம்பல் - பொய்கையிலே உள்ள ஆம்பலினது, அணி நிறம் கொழு முகை - அழகிய நிறத்தையுடைய கொழுவிய அரும்பில், வண்டு வாய் திறக்கும் தண் துறை ஊரனொடு - வண்டுகள் இதழைத் திறக்கும் தண்ணிய நீர்த்துறைகளையுடைய ஊருக்கு உரியனாகிய தலைவனோடு, இருப்பின் - நாம் இருந்தால், இரு மருங்கினம் - இரண்டு உடலையுடையேம்; கிடப்பின் - அவரோடு துயின்றால், வில் அகம் விரலின் பொருந்தி - வில்லை அகப்படப்பிடித்த விரல்களைப் போலப் பொருந்தி, அவன் நல் அகம் சேரின் - அவன் தனது நல்ல அகத்தின் கண்ணே சேர்ந்தால், ஒரு மருங்கினம் - ஓர் உடலையுடையேம்.

(முடிபு) ஊரனொடு இருப்பின் இருமருங்கினம்; கிடப்பின் பொருந்தி, சேரின் ஒரு மருங்கினம்.

(கருத்து) தலைவன் தன்விருப்பத்திற்கேற்ப ஒழுகாநிற்ப, யாம் அவன் ஒழுகியவாறே ஒழுகுவேம்.

(வி - ரை.) "தலைவனோடு இருந்தக்கால் தனித்தனியே ஈருடம்பினேமாகியும், கிடப்பின் ஈருடலாயினும் ஒருடல்போல் ஒன்றியும், அவன் பிரிந்து தனது மனை சேரின் யாம் தனித்து எம் உடலாகிய ஒருடலினேமாகியும் இருப்பேம். இங்ஙனம் இருத்தல் அவனது ஒழுகலாற்றிற்கேற்ப அமைவதேயன்றி யாமாக வலிந்து மேற்கொள்வதன்று. தலைவனை எம்பால் இருத்திக்கொள்ளும் இயல்பிலேம்" என்று பரத்தை கூறினள். மருங்கு - இங்கே உடலைக் குறித்தது.

பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை (சீவக. 337, ந.) கொழு முகை - மலரும் பருவத்ததாகிய அரும்பு. ஆம்பற்போது மலருஞ் செவ்வியறிந்து வண்டு வாய்திறக்கும்; இது தலைவன் எம்மோடு இருக்குங்கால் அவன் எம் உள்ளக்கருத்துக்கு ஏற்ப ஒழுகுவா னென்ற குறிப்பினது (பெருங். 1. 35 : 211-4.)

வில்லைப்பிடித்த விரல்கள் ஒன்றோடொன்று மிகச் செறிந் திருக்கும்; அதனைக்கூறியது கவவுக்கை நெகிழாமல் அணைந்து நிற்றலை உணர்த்தியது;

"வீட்டிடந் தோறும் வில்லக விரல்போற்
பொருந்திநின் றொருங்கெதிர் கொள்கென்று" (சீவக. 2110)

என்று இவ்வுவமையைத் திருத்தக்கதேவரும் எடுத்தாண்டனர்.

ஏகாரங்கள்: அசைநிலை.

செறிவுக்கு வில்லகவிரலைக் கூறினமையின் இச் செய்யுளை இயற்றிய நல்லிசைப்புலவர் வில்லக விரலினர் என்னும் பெயர்பெற் றார்.

(மேற்.) 4. வில்லகவிரலென்பது வந்தது (சீவக. 2110, ந.)

4-5. விளைக்குறிப்புச் சிறுபான்மை ஆக்கமின்றி வரும் (தொல். எச்ச. 36, சே.); விளைக்குறிப்பு ஆக்கம் விரிந்தலது பொருளுணர்த்தாது (தொல். எச்ச. 36, ந.)

(ஒப்பு.) 1-2. வண்டு வாய்திறக்கப் போது மலர்தல்: குறுந். 265 : 1-5, ஒப்பு. (கோ)

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத்தில் வேறுபட்ட தலைவியை நோக்கி, "நீ வேறுபடாமல் ஆற்றல்வேண்டும்" என்ற தோழிக்கு, "யான் என்செய்கேன்! யான் ஆற்றியிருப்பினும் காமம் பெரிதாகலின் என் வரைத்தன்றி வேறுபாடு உண்டாயது" என்று தலைவி கூறியது.]

நகை. கைவளை நெகிழ்தலு மெய்பசப் பூர்தலும்
மைபடு சிலம்பி னோவனம் வித்தி
அருவியின் விளைக்கு நாடனெ டெ
மருவேன் றோழியது காமமோ பெரிதே.

எ - து. வரைவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உறையூர் முதுகூற்றன்.

(ப - ரை.) தோழி—, மை படு சிலம்பின்-மேகங்கள் பொருந்து கின்ற மலைப்பக்கத்தில், ஐவனம் வித்தி - மலைநெல்லை விதைத்து, அருவியின் விளைக்கும் நாடனொடு - அருவியினுலே விளைக்கின்ற நாட்டையுடைய தலைவனுல், கைவளை நெகிழ்தலும் - என்கைகளில் உள்ள வளைகள் நெகிழ்தலையும், மெய் பசப்பு ஊர்தலும் - மெய்யின் கண்ணே பசலை பரத்தலையும், மருவேன் - பெறேன்; ஆயினும், அது காமம் - அக்காமம், பெரிது—.

(முடிபு) தோழி, நாடனொடு வளை நெகிழ்தலும் பசப்பூர்த லும் மருவேன்; காமம் பெரிது.

(கருத்து) காமம் என்வரைத்தன்றி மிக்கது.

(வி - ரை.) தலைவி தலைவனது பிரிவினுல் மெலிந்தாள்; அதனுல் வளை நெகிழ்ந்தது; மெய்யிற் பசலை உண்டாயிற்று. அதுகண்ட தோழி, "நீ இங்ஙனம் ஆற்றுயாதல் தக்கதன்று. அவர் நின்பொருட்டன்றே பிரிந்தனர்?" என்றுள். அப்பொழுது, "இவ்வேறுபாடு தலைவனுல் உண்டாகவில்லை. எனக்கும் இவ் வேறுபாடு கொள்ளல் கருத்தன்று. ஆயினும் காமம் பெரிதாக லின் என்னளவில் நில்லாது இவை உண்டாகக் காரணமாயிற்று" என்று தலைவி கூறினுள்.

மைபடு சிலம்பு - மேகங்கள் தாழ்ந்து மழை பெய்யும் மலை. மை படுவதை நோக்கி ஐவனம் வித்தினர்; பின்னர் மழை பொழிய அதனுல் அருவி உண்டாக அதன் நீரால் ஐவனம் விளைந்தது. மேகம் பொழியுமென்னும் உறுதிபற்றி ஐவனத்தை வித்திப் பின் னர் விளைக்கும் நாடனென்றது, பின்னர் நலம் உண்டாகுமென்னும் உறுதி பற்றி இக்காமம் உண்டாயிற்றென்ற குறிப்பினது. நாட னொடு: ஒடுவுருபு ஆலுருபின் பொருளில் வந்தது. அது காம மென்றதில் அதுவென்றது அகரச்சுட்டின் பயத்ததாய் நின்றது.

காமமோ: ஓ அசைநிலை. பெரிதே: ஏ அசைநிலை; தேற்றமு மாம்.

(ஒப்பு) 1. வளை நெகிழ்தல்: குறுந். 11: 1, ஒப்பு. மெய் பசத்தல்: ஐங். 29: 5, 41: 3-4, 217: 4. 2. மைபடு சிலம்பு: கலி. 43: 6.
2-3. ஐவனம் வித்தி அருவியினுல் விளைத்தல்: குறுந். 100: 1, ஒப்பு.
4. காமம் பெரிது; குறுந். 18: 5, ஒப்பு. (கஎக)

தோழி கூற்று

[இரவுக்குறிவந்து ஒழுகாநின்ற தலைவன் சிறைப்புறத்தானுக, தலைவிக்குக் கூறுவாளாய், "இவ்வூரில் அலர் பெருகியது" என்று தோழி வரைவின் இன்றியமையாமையைப் புலப்படுத்தியது.]

ஈஎஉ. பனைத்தலைக், கருக்குடை நெடுமடல் குருத்
[தொடு மாயக்
கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பைக்
கணங்கொள் சிமைய வணங்குங் கானல்
ஆழிதலை வீசிய வயிர்ச்சேற் றருவிக்
5. கூழைபெ யெக்கர்க் குழீஇய பதுக்கை
புலர்பதங் கொள்ளா வளவை
அலரெழுந் தன்றிவ் வழுங்க லூரே.

எ - து. இரவுக்குறி வந்து ஒழுகாநின்ற தலைமகன் கேட்பத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.

வி்ற்றூற்று மூதெயினனூர் (பி - ம். வீற்றூளுத் தெயினர், வீற்றூறுத் தெயினன், வீற்றினுத் தேயினன்.)

(பி - ம்.) 1 'குருந்தொடு' 2 'நெடுவெளிக்' 3 'வணங்குங்' 6 'விரவை,', 'யுலர்பதங்கொள்ளா யிரவை'

(ப - ரை) பனை தலை - பனையின் உச்சியிலுள்ள, கருக்கு உடை நெடு மடல் குருத்தொடு மாய - கருக்கையுடைய நெடிய மடலானது குருத்தோடு மறைய, கடு வளி தொகுத்த - விரைவையுடைய காற்றுக் கூட்டிய, நெடு வெள் குப்பை - உயர்ந்த வெள்ளிய மணற்குவியலாகிய, கணம் கொள் சிமையம் - தொகுதியைக் கொண்ட சிகரத்தையுடைய, அணங்கும் கானல் - வருத்துகின்ற கடற்கரையில், ஆழி தலை வீசிய அயிர் சேறு அருவி - கடல் வீசிய கருமணற்சேற்றையுடைய அருவியால், கூழை பெய் எக்கர் குழீஇய பதுக்கை - கூந்தலினிடத்தே பெய்யப்படுகின்ற எக்கராகக் குவிக்கப்பட்ட குவியல், புலர்பதம் கொள்ளா அளவை - உலரும் செவ்வியை அடையாததற்குள், இ அழுங்கர் ஊர் - இந்த ஆரவாரத்தையுடைய ஊரில், அலர் எழுந்தன்று - பழிமொழி எழுந்தது.

(முடிபு) பதுக்கை புலர்பதங் கொள்ளாவளவை இவ்வூரில் அலர் எழுந்தன்று.

(கருத்து) இங்கே அலர் மிக்கது.

(வி - ரை.) கடுவளி - மிக்க காற்றுமாம். குப்பையாகிய சிமையம். தனித்தவரை முனிவு செய்யும் பொழிலுடையதாதலின் (புறநா. 33 : 19, உரை) அணங்குங் கானலென்றுள். சேறுடைய அருவியாதலின் தலைமயிரிற் பெய்தற்குரிய மண்ணையுடைய

தாயிற்று (குறுந். 113 : 5, வி - ரை.) பதுக்கை புலர்பதங் கொள்ளா அளவை யென்றது தலைவன் வந்து சென்ற சுவடு மறைவதற்குள் என்ற குறிப்பை யுடையது.

பனைத்தலை : சீர், பாவின் முதலிற் கூனுய் நின்றது.

ஏ : அசைநிலை.

(ஒப்பு.) 1. கருக்குடைய பனைமடல் : குறுந். 281 : 1.

2. காற்றல் மணற்குவியல் உண்டாதல் : குறுந். 248 : 4-5, ஒப்பு.

கடுவளி : குறுந். 39 : 1, ஒப்பு 2-3. மணற்சிமையம் : நற். 260 : 4 ; ஐங் 100 : 2 ; அகநா. 190 : 5-7.

1-3. பனைமடல் மணலால் மூடப்படுதல் : (குறுங். 248 : 4-5, 281 : 1-2) "தூங்க லோலை யோங்குமடற் பெண்ணை, மாவரை புதைத்த மணன்மலி முன்றில்", "ஓங்குமண லுடுத்த நெடுமாப் பெண்ணை" (நற். 135 : 1-2, 199 : 1.) (ந.எ.)

தோழி கூற்று

[அலர் மிக்கவிடத்து வருந்திய தலைவியை நோக்கி, "தலை வனது நட்பு என்றும் அழியாதது" என்று தோழி கூறியது.]

ந.எங. நிலம்புடை பெயரினு நீர்தீப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றி
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை யஞ்சிக்[னும்
கேடெவ னுடைத்தோ தோழி நீடுமயிர்க்
5. கடும்ப லாகக் கறைவிர லேற்றை
புடைத்தொடு புடை-இப் பூநாறு பலவுக்கனி
காந்தளஞ் சிறுகுடிக் கமழும்
ஓங்குமலை நாடனை டமைந்தநந் தொடர்பே.

எ - து. அலர் மிக்கவழித் (பி - ம். மிக்கவழி ஆற்றுளாகித்) தலை மகட்குத் தோழி சொல்லியது.

மதுரைக் கொல்லன் புல்லன். (பி - ம். மதுரைக் கொல்லம் புல்லன், மதுரைக் கோலம் புல்லன், மதுரைக் கொலம் புல்லன்.)

(பி - ம்.) 1 'நீர்திரிந்து பிறழினும்' 6 'புடையூ நாறு' 7 'காந்தள் சிறுகுடிக்' 8 'அமைந்த தொடர்பே'

(ப - ரை.) தோழி—, நீடு மயிர் - நீண்ட மயிரையும், கடுபல்-கூரிய பற்களையுமுடைய, ஊகம் கறை விரல் ஏற்றை - கருங் குரங்கினது கறுப்பையுடைய விரல்களையுடைய ஆணானது, புடை

தொடுபு - பக்கத்திலே தோண்டியதனால், உடைஇ - உடைந்து, பூ நாறு பலவு கனி - மலரின் மணத்தை வீசும் பலவினது பழம், காந்தள் அம் சிறு குடி கமழும் - காந்தளையுடைய அழகிய சிறிய ஊரினிடத்தே மணக்கின்ற, ஓங்கு மலைநாடனொடு - ஓங்கிய மலையையுடைய நாடனோடு, அமைந்த நம் தொடர்பு - பொருந்திய நமது நட்பானது, நிலம் புடை பெயரினும் - உலகம் இடம் மாறினாலும், நீர் தீ பிறழினும் - நீரும் தீயும் தம் இயற்கையினின்றும் மாறினாலும், இலங்குதிரை பெரு கடற்கு எல்லை தோன்றினும் - விளங்குகின்ற அலைகளையுடைய பெரிய கடலுக்கு எல்லை தோன்றினாலும், வெ வாய் பெண்டிர் கௌவை அஞ்சி - வெவ்விய வாயையுடைய மகளிரது பழிச்சொல்லை அஞ்சி, கேடு எவன் உடைத்து - கெடுதல் எவ்வாறு உடையதாகும்?

(முடிபு) தோழி, நிலம்பெயரினும் நீரும் தீயும் பிறழினும் எல்லை தோன்றினும் தொடர்பு கேடு எவன் உடைத்து?

(கருத்து) தலைவனோடு அமைந்த தொடர்பு என்றும் கெடாதது.

(வி - ரை.) எல்லை - வரம்பு; முடிவுமாம். வெவ்வாய் - அலர் கூறுதலால் வெம்மையையுடைய வாய்; அவர் கூறும் அலர் நெஞ்சைச் சுடுவதாதலின் இங்ஙனம் கூறினள். 'உலகு பிறழ்ந்தாலும் ஊழ்வசத்தால் அமைந்த தொடர்பு கெடாது' என்றாள். உடைத்தோ: ஓ அசைநிலை. தொடுபு: எச்சத்திரிபு; தொடவென்னும் பொருட்டு.

ஒற்றுமையால், நந்தொடர்பெனக் கூறினள்.

(ஒப்பு.) 1. நிலம் புடை பெயர்தல்: "பெருநிலங் கிளரினும்", "நிலம் புடை பெயர்வ தாயினும்" (நற். 201: 10, 289: 2); "நிலந்திறம் பெயருங் காலை யாயினும்" (பதிற். 63: 6); "நிலம்புடை பெயர்வ தாயினும்" (புறநா. 34: 5); "இருநிலம் பெயரினு மெம்மாட்டில" (பெருங். 1. 58: 92.)

2. கடற்கு முடிவு தோன்றுதல்: "அறந்திருந் துன்னரு ளும்பிறிதாயினுமறையின், திறந்திரிந் தார்கலி யும்முற்றும் வற்றுமிச் சேணிலத்தே" (திருச்சிற். 213.)

3. வெவ்வாய்ப்பெண்டிர் கௌவை: "வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்" (அகநா. 50: 3.)

5. கருவிரலையுடைய ஊகம்: "கருவிரன் மந்தி" (மலைபடு. 311; ஐங். 272: 1, 280: 1.)

4 - 5. ஊகத்தின் மயிர்: (குறுந். 90: 3 - 4); "குருமயிர்க் கடுவன்" (ஐங். 275: 1.) பூநாறு பலவுக்கனி: குறுந். 90: 4.

5 - 6. பலாப்பழத்தைக் குரங்கு தோண்டுதல் : குறுந். 342 : 1.
7. காந்தளஞ் சிறுகுடி : அகநா 312 : 5. சிறுகுடி : குறுந். 184 : 2, ஒப்பு. மு. குறுந். 170. (நஎந)

தோழி கூற்று

[தலைவன் வரைவொடு புக்க காலத்துத் தமர் அவனை ஏற்றுக் கொண்டாராக, "யான் அறத்தொடு நிற்றலின் இது நிகழ்ந்தது" என்று தோழி தலைவிக்குக் கூறியது.]

நஎ. எந்தையும் யாயு முணரக் காட்டி
ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்
மலைகெழு வெற்பன் றலைவந் திரப்ப
நன்றுபுரி கொள்கையி னென்று கின்றே
5. முடங்க லிறைய தூக்கணங் குரீஇ
நீடிரும் பெண்ணை தொடுத்த
கூடினு மயங்கிய மைய லூரே.

எ - து. அறத்தொடு நின்றமை தோழி கிழத்திக்கு உரைத்தது.

உறையூர்ப் பல்காயனர் (பி - ம். பலாகாயனர், பலார்காயனர், பராயனர்.)

(பி - ம்.) 4 'னென்றே வின்றே', 'னென்றுயின்றே' 7 'கூட்டினு'

(ப - ரை) எந்தையும் யாயும் - நம் தந்தையும் தாயும், உணரகாட்டி - உணரும்படி அறிவித்து, ஒளித்த செய்தி - நாம் இது காறும் மறைத்திருந்த களவொழுக்கத்தை, வெளிப்பட கிளந்த பின் - வெளிப்படும்படி யான் சொன்ன பிறகு, மலைகெழு வெற்பன் - மலைகள் பொருந்திய தலைவன், தலைவந்து இரப்ப - தம் மிடத்தே வந்து வரைவினை இரப்ப, நன்று புரி கொள்கையின் - நமர் நன்மையைச் செய்யும் கொள்கையினால், முடங்கல் இறைய - வளைவையுடைய சிறகை யுடையனவாகிய, தூக்கணங் குரீஇ - தூக்கணங் குருவி, நீடு இரு பெண்ணை தொடுத்த-உயர்ந்த பெரிய பனையினிடத்தே அமைத்த, கூடினும் - கூட்டைக் காட்டிலும், மயங்கிய - பலவகையாக மயக்கத்தை அடைந்திருந்த, இ மையல் ஊர் - இம்மயக்கத்தையுடைய ஊரானது, ஒன்று ஆகின்று - நம்மோடு ஒன்றுபட்டது.

(முடிபு) உணரக்காட்டிக் கிளந்தபின் வெற்பன் இரப்ப நன்றுபுரி கொள்கையின் ஊர் ஒன்முகின்று.

(கருத்து) யான் அறத்தொடு நின்றமையின் நமர் தலைவனது வரைவுக்கு உடம்பட்டனர்.

(வி - ரை.) வரைவு மலிந்தவிடத்து உள்ளமகிழ்ச்சியை யடையத் தலைவிக்குத் தோழி கூறியது இது. யாய் - எம் தாய்.

"உட்கரந் துறையு முய்யா வரும்படர்" (குறிஞ்சிப். 32) என்றலின் 'ஒளித்த செய்தி' என்முள்.

வெற்பன்: தலைவனென்னும் துணையாய் நின்றது. நன்று புரிதல் - வரைதலாகிய நன்மையைச் செய்தல். 'நமர் ஏற்றுக் கொண்டமையின் இதுகாறும் பலவாறு அலர் கூறிவந்த இவ்வூரி னர் இப்பொழுது தம்மோடு ஒன்றிய கருத்துடையராயினர்' என்றாள். கூட்டினும் என்பது எதுகைநோக்கிக் கூடினுமென நின்றது. மையல் ஊரென்றது இத்தன்மைத்து இதுவென்னும் துணையாயும், மயங்கிய வென்றது அதன் மிகுதியைப் புலப்படுத்தி யும் நின்றன (திருச்சிற், 102, பேர்.) ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) மு. அறத்தொடு நின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது (தொல். களவு. 23, ந.)

(ஒப்பு.) 2. ஒளித்த செய்தியை வெளிப்படுத்துதல்; குறுந். 333 : 6.

3. தலைவன் தலைவியின் தந்தையை இரத்தல் : அகநா. 280 : 4 - 14.

5 - 7. தூக்கணங்குருவியின் கூடு : புறநா. 225 : 11.

4 - 7. ஊரின் இயல்பு : புறநா. 83 : 5 - 6. (கூசச)

தோழி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தே நிற்ப, "காவலருடைய காவல் மிக்கது" என்று தலைவிக்குக் கூறும் வாயிலாகத் தோழி, வரைதல் வேண்டுமென்பதை அவனுக்கு உணர்த்தியது.]

கூஎடு. அம்ம வாழி தோழி யின்றவர்
வாரா ராயினே நன்றே சாரற்
சிறுதினை விளைந்த வியன்க ணிரும்புனத்
திரவரி வாரிற் றெண்டகச் சிறுபறை
5. பாளுள் யாமத்துங் கறங்கும்
யாமங் காவல ரவியா மாறே.

எ - து. இரவுக்குறிக்கண் சிறைப்புறமாகத் தோழி தலைமகட் குச் சொல்லுவாளாய் இருபொழுதும் மறுத்து வரைவுகடாயது.

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.]

(பி - ம்.) 4 'திரவரு' 5 'யாமத்துக்' 6 'ரவியன்மாரன்றே', 'ரவியன்மான்றே'

(ப - ரை) தோழி—, அம்ம - ஒன்று கூறுவன் கேட்பாயாக: சாரல் - மலைப்பக்கத்தில், சிறு தினை விளைந்த வியல் கண் இரு புனத்து - சிறிய தினை விளைந்த அகன்ற இடத்தையுடைய பெரிய கொல்லையில், இரவு அரிவாரின் - இராக்காலத்தே தினைக்கதிரை அரிபவர்களைப்போல, தொண்டகம் சிறு பறை - தொண்டக மாகிய சிறிய பறை, பால்நாள் யாமத்தும் - பாதியிரவிலும், யாமம் காவலர் - இராக் காவலாளிகள், அவியாமாறு - தூங்காமையினால், கறங்கும் - ஒலிக்கும்; இன்று—, அவர் - அத்தலைவர், வாராராயின் —, நன்று - நலமாகும்.

(முடிபு) காவலர் அவியாமாறு கறங்கும்; இன்று அவர் வாராராயின் நன்று.

(கருத்து) தலைவர் இரவில் வருதல் நன்றன்று.

(வி - ரை.) வாழி: அசை நிலை. அவர்: நெஞ்சறி சுட்டு. 'இன்று வாராராயின்' என்று கூறினும், என்றும் இராவருதல் நன்றன்றென்பதே தோழியின் நினைவு. தினைவிளைந்தமையின் அரிந்தனர். தினையின் மிகுதியினால் இரவிலும் அரிந்தனர்; இதனாற் பகலிலும் அரிந்தமை சொல்லாமே பெறப்பட்டது.

இரவில் விலங்குகள் அணுகாதிருத்தற்பொருட்டுத் தொண்ட கப் பறையை முழக்குவர் தொண்டகப்பறை குறிஞ்சி நிலத்திற்கு உரியது.

அவிதல் - தூங்குதல் (குறுந். 6: 1.) மாறு: ஏதுப் பொருள் தருவதோரிடைச் சொல். ஏகாரம் ஈற்றசை.

தினை விளைந்தமையை உவமை வாயிலாக நினைவுறுத்திப் பகற்குறியையும், காவலர் கடுகுதலைக் கூறி இரவுக்குறியையும் மறுத்து வரைவு கடாயினள்.

(ஒப்பு.) 1. அம்மவாழி தோழி: குறுந். 77: 1, ஒப்பு. 3. சிறுதினை: குறுந். 105: 1, 133: 1. 4. தொண்டகச் சிறுபறை: முருகு. 197; நற். 104: 4-6; அகநா. 118: 3. 5. பானல்: குறுந். 94: 3, ஒப்பு. 6. யாமம் காவலர்: புறநா. 37: 9. (உஎடு)

தலைவன் கூற்று

[பொருள்வயிற் பிரியக் கருதிய நெஞ்சை நோக்கித் தலைவி யின் நல்லியல்பு கூறித் தலைவன் செலவு தவிர்ந்தது.]

கூகூ. மன்னுயி ரறியாத் துன்னரும் பொதியிற்
சூருடை யடுக்கத் தாரங் கடுப்ப
வேனி லானே தண்ணியள் பனியே
வாங்குகதிர் தொகுப்பக் கூம்பி யையென
5. அலங்குவெயிற் பொதிந்த தாமரை
உள்ளகத் தன்ன சிறுவெம் மையளே.

எ - து. பொருள் வலிக்கும் நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லிச் செலவழுங்கியது.

படுமரத்து மோசிக் கொற்றன் (பி-ம். படுமாற்றூர் மோசிகீரன் கொற்றனர், படுமரத்து மோகிக் கொற்றன், படுமாத்து மோசிக் கொற்றன்.)

(பி-ம்) 2 'தாஅங்'; 5 'பொலிந்த'

(ப - ரை.) நெஞ்சே, மன் உயிர் அறியா - நிலைபெற்ற உயிர்த் தொகுதியினரால் முற்ற அறியப்படாத, துன் அரு பொதியில் - அணுகுதற்கரிய பொதியில்மலையிலுள்ள, சூர் உடை அடுக்கத்து - தெய்வங்களையுடைய பக்கத்தில் வளர்ந்த, ஆரம் கடுப்ப - சந்தனத்தைப்போல, வேனிலானே - வேனிற்காலத்தில், தண்ணியள் - இத்தலைவி குளிர்ச்சியை யுடையாள்; பனி - பனிக் காலத்தில், வாங்கு கதிர் - அடக்கிக்கொண்ட சூரியனுடைய கதிர்கள், தொகுப்ப - மறைய, கூம்பி - குவிந்து, ஐயென - அழகிதாக, அலங்கு வெயில் - அசைகின்ற வெயிலை, பொதிந்த தாமரை - உட்பொதிந்த தாமரை மலரின், உள் அகத்து அன்ன - உள்ளிடத்தைப்போன்ற, சிறு வெம்மையள் - சிறிய வெம்மையை உடையாள்.

(முடிபு) வேனிலானே தண்ணியள்; பனியில் சிறு வெம்மையள்.

(கருத்து) தலைவி பிரிதற்கரிய இயல்பினள்.

(வி - ரை.) அறிதற்கும் துன்னுதற்கும் அரிய பொதியிலென்றாள்;

"முயலுநர் முற்ற வேற்றரு நெடுஞ்சிமைப்
புகலரும் பொதியில்" (அகநா. 322 : 13-4.)

சூர் - முருகனும் வரையரமகளிரும். பொதியிற் சந்தனம் சிறப்புடைத்தாதலின் அதனைக் கூறினன். 'அடுக்கத்தாஅம்' என்ற பாடத்திற்கு, மலையிலுள்ள நீரென்றுபொருள் கொள்க; பொதியிற் சுனைநீர்,

"தென்றிசை யெல்லை விண்புகு பொதியிற்
சூருடை நெடுஞ்சுனை நீர்" (தொல். களவு. 43, ந. மேற்.)

என்று சிறப்பிக்கப்படும். வெயில் - வெம்மை.

வெம்மையையுடைய வேனிலில் தண்ணியளாகவும் குளிர் மிகுதியையுடைய பனிக்காலத்தில் சிறுவெம்மையளாகவும் தலைவியிருத்தலின், எக்காலத்தும் அணைதற்கு இனியளானுள்.

(ஒப்பு) 2. சூருடையடுக்கம்: நற். 359: 9; அகநா. 158: 8, 162: 25, 198: 14-7, 359: 11. 1-2. பொதியிற் சந்தனம்: அகநா. 13: 2-5; சிலப். 4: 38; பெருங். 1. 58: 30, 2. 4: 96. (நகசு)

தலைவி கூற்று

["தலைவன் பிரிந்தமையால் என் உடல் மெலியவும் அவனது இயல்பு நினைந்து யான் ஆற்றினேன்; நீ ஆற்றுயாதல் என்?" என்று தலைவி, வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கூறியது]

நகஎ. மலரே ருண்கண் மாணலந் தொலைய [யும்
வளையேர் மென்றோண் ஞெகிழ்ந்ததன் றலை
மாற்று கின்றே, தோழியாற் றலையே
அறிதற் கமையா நாடனெடு
5. செய்து கொண்டதோர் சிறுநன் னட்பே.

எ-து. வரைவிடை ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது.

மோசி கொற்றன் (பி-ம். மோசிற்றன்.)

(பி-ம்) 5 'சிறு நன்னடையே'

(ப-ரை) தோழி—, அறிதற்கு அமையா நாடனெடு - தன் இயல்பு முற்றும் அறிதற்குப் பொருந்தாத தலைவனெடு, செய்து கொண்டதோர் சிறு நல் நட்பு - யாம் செய்து கொண்ட ஒரு சிறிய நல்ல நட்பானது, மலர் ஏர் உண் கண் மாண் நலம் தொலைய - பூவினை யொத்த மையுண்ட கண்களின் மாட்சிமைப்பட்ட அழகு நீங்க, வளை ஏர் மெல் தோள் ஞெகிழ்ந்ததன் தலையும் - வளையையுடைய அழகிய மெல்லியதோள் நெகிழ்ந்ததன் மேலும், மாற்று ஆகின்று - பரிகாரமாக ஆகின்றது; அது கருதி யான் ஆற்றுகிற்பவும், ஆற்றலை - நீ ஆற்றினையல்லை.

(முடிபு) தோழி, நட்பு மாற்று ஆகின்று; ஆற்றலை.

(கருத்து) தலைவனது இயல்பை உணர்ந்து யான் ஆற்றி னேன்.

(வி - ரை.) தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்த காலத் தில் தலைவியினது வேறுபாடு கண்ட தோழி, "நின் அழகிய கண்கள் இயல்பழிந்தன. நின் தோள்கள் ஞெகிழ்ந்தன; இனி என் செய்வோம்!" என்று கவன்றவிடத்துத் தலைவி கூறியது இது.

மலரேருண்கண், மென்றோ ளென்பன பட்டாங்கு கூறின வாதலின் தற்புகழ்ச்சியாகா தலையும்: உம்மை இழிவுசிறப்பு.

மாற்று - பரிகாரம்; "மாற்றருங் கூற்றம்" (தொல். புறத். 24.)

தலைவனை அறிதற்கமையா நாடனென்றது அவனது நல் லியல்பை நீ அறிந்தாயல்லை யென்னும் நினைவிற்று. சில நாட் களிலே அமைந்தமையின் சிறுநட்பென்றும், நன்மை புயப்பதா தலின் நன்னட்பென்றும் கூறினள்.

என் உடல் மெலியவும் அவனது நட்பு எனக்குப் பரிகார மாகின்றதென்ற இக்கருத்து,

"குன்ற நாடன் கேண்மை
மென்றோள் சாய்த்துஞ் சால்பீன் றன்றே" (குறுந். 90 : 6-7)

என முன்னும் வேற்றுருவத்தில் வந்தது.

ஆற்றலையே: ஏ இரங்கற்பொருட்டு.

(ஒப்பு.) 1. மலரேருண்கண்: குறுந். 101: 4, ஒப்பு; நற். 325: 7. மாணலம்: குறுந். 74: 5, ஒப்பு. 4. அறிதற்கமையா நாடன்: "அவர்வயிற், சால்பளந் தறிதற் கியாஅம் யாரோ" (குறுங். 366: 1-2.) (உஎஎ)

செவிலித்தாய் கூற்று

[தலைவனுடன் தலைவி சென்றதை அறிந்த செவிலித்தாய், "என்மகள் போனவழி இன்பத்தைத் தருவதாக அமைக" என்று தெய்வத்தை வாழ்த்தியது.]

உஎஅ. ஞாயிறு காயாது மரநிழற் பட்டு
மலைமுதற் சிறுநெறி மணன்மிகத் தாஅய்த்
தண்மழை தலையின் றாக நந்நீத்துச் விரைச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
5. மடமா வரிவை போகிய சுரனே.

எ - து. மகட்போக்கிய செவிலி தெய்வத்திற்குப் பராயது. கயமனார்.

(பி - ம்.) 1 'காணுத மாணிழற் படீஇ' 3 'தண்ணளிச்', 'தண்மழை தலையலாரைக் குகந்த தீறித்துச்' 4 'சுடர்படு' 5 'மடவரலரிவை' 'போகியகானே'

(ப - ரை.) நம் நீத்து - நம்மைப் பிரிந்து, சுடர் வாய் நெடுவேல் காளையொடு- ஒளி பொருந்திய நெடிய வேலையுடைய தலைவனோடு, மடம் மா அரிவை-மடப்பத்தையும் மாமையையும் உடைய தலைவி, போகிய சுரன் - சென்ற பாலைநிலம், ஞாயிறு காயாது - சூரியன் வெயில்வீசாமல், மரம் நிழல் பட்டு - மரத்தின்நிழல் பொருந்தி, மலை முதல் சிறுநெறி - மலையினிடத்தேயுள்ள சிறிய வழியின்கண், மணல் மிக தாஅய் - மணல் மிகப் பரவப்பெற்று, தண்மழை தலையின்று ஆக - குளிர்ந்த மழை பெய்ததாகுக.

(முடிபு) சுரன் காயாது நிழற்பட்டுத் தாஅய்த் தலையின்றாக

(கருத்து) தலைவி சென்ற பாலைநிலம் இனியதாகுக.

(வி - ரை.) நிழல் வேண்டியது, கதிரோன் வெம்மையால் துன்புறுதலடி. மணல் பரவுதலால் தலைவியின் மெல்லடி நடத்தற்கு நெறி ஏற்றதாகும். மழை பெய்தலின் பாலையின் வெம்மை நீங்கும்.

அரிவை : தலைவியென்னும் துணையாய் நின்றது. இத்துறை 'சுரந்தணிவித்தல்' எனவும் வழங்கும்.

(மேற்.) மு. செவ்வி தெய்வம் வாழ்த்தியது (நம்பி. 184.)

(ஒப்பு.) 1. மரநிழலால் ஞாயிறு காயாத நிலை பெறுதல் : "மாநிழற்பட்ட மரம்பயி லிறும்பின், ஞாயிறு தெரூஅ மாக நனந்தலை" (மலைபடு. 271-2.)

3. தலையின்று : அகநா. 54 : 3. 4. நெடுவேல் : குறுந். கட. 4, 390 : 4.

5. பி - ம். மடவரலரிவை : குறுந். 321 : 4, ஒப்பு.

மு. "மள்ளர் கொட்டின் மஞ்ஞை யாலும்
உயர்நெடுங் குன்றம் படுமழை தலைஇச்
சுரநனி யினிய வாகுக தில்ல
அறநெறி யிதுவெனத் தெளிந்தவென்
பிறைநுதற் குறுமகள் போகிய சுரனே" (ஐங். 371);

"சூன்முகிர் கொண்மூ மின்னுப் பொழியக்
கானங் கடுமை நீங்குக
மானுண் கண்ணி போகிய சுரனே" (தமிழ்நெறி. மேற். 121.)

(கஎஅ)

தோழி கூற்று

[அயலார் தலைவியை வரையும்பொருட்டு வந்த காலத்துத் தலைவிக்குக் கூறுவாளாய்," முன்பு நின்பால்அன்பு பூண்ட தலைவன்

இப்பொழுது எங்குள்ளானே?" என்று தாய் முதலியோருக்குத் தோழி உண்மையை வெளிப்படுத்தியது.]

நெய்தல்

இன்றியாண் டையனே தோழி குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கினெடு
கண்ணகன் றூமணி பெறூஉ நாடன்
அறிவுகாழ்க் கொள்ளு மளவைச் செறிதொடி
எம்மில் வருகுவை நீயெனப்
பொம்ம லோதி நீவி யோனே.

எ - து. நொதுமலர் வரைவுழித் தோழி அறத்தொடு நின்றது.

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.]

(பி - ம்.) 2 'கிழங்கின்' 3 'கண்ணமைதுணி', 'கண்ணகன் மத்துணி' ஏர்கண்ணகன் மத்துளி' 4 'சிறு தொடி' 5 'எம்பின்', 'எம்மின்'

(ப - ரை.) தோழி—, குன்றத்து - குன்றினிடத்தே, பழ குழி அகழ்ந்த கானவன் - பழைய குழியைத் தோண்டிய வேட்டுவன், கிழங்கினெடு—, கண் அகல் தூ மணி பெறூஉம் நாடன்-இடம் அகன்ற தூய மணியைப் பெறும் நாட்டையுடையவனும், செறி தொடி - செறிந்த தொடியையுடையாய், அறிவு காழ்கொள்ளும் அளவை-நின் அறிவு முதிர்கின்ற பருவத்தில், நீ எம் இல் வருகுவை என - நீ எம்முடைய வீட்டுக்கு இல்லறம் நடத்த வருவாயென்று கூறி, பொம்மல் ஓதி - நெருக்கத்தையுடைய கூந்தலை, நீவியோன் - தடவியவனுமாகிய தலைவன், இன்று யாண்டையனே - இன்றளவில் விடத்தில் உள்ளானே?

(முடிபு) தோழி, நாடன் நீவியோன் இன்று யாண்டையனே?

(கருத்து) நின்பால் அன்புபூண்ட தலைவன் இப்பொழுது எங்கே உள்ளானே?

(வி - ரை.) யாண்டையனே : ஓகாரம் இரங்கற்பொருட்டு. கானவன் கிழங்கோடு விலைவரம்பறியா மணியையும் பெற்றூற் போல வேட்டைமேற் சென்ற தலைவன் அதனோடு தலைவியையும் பெற்றானென்பது குறிப்பு.

கானவன் உண்ணும்பொருட்டுக் கிழங்கை அகழ்ந்தான்.

இஃது உசாவுதல் வாயிலாக அறத்தொடு நின்றது.

(மேற்.) மு. செவிலி,கேட்பத் தலைவியொடு தோழி உசாவி அறத்தொடு நின்றது (தொல். களவு. 24, இளம்.); நொதுமலர் வரையக் கருதியவழி,

தோழி தாய் கேட்பத் தலைவிக்குக் கூறியது (தொல். களவு. 23, ந.) ; தொது மலர் வரைவுகூறி உசாவித் தோழி அறத்தொடு நின்றது (தொல். பொருள். 12, ந.)

(ஒப்பு.) 1-3. குன்றத்திற் கானவன் நிலத்தை அகழ்த்து மணி பெறுதல் : அகநா. 282 : 2-5.

6. பொம்மலோதி : குறுந். 191 : 6, ஒப்பு. ஓதி நீவுதல் : (குறுங். 190 : 1, ஒப்பு) ; " பொம்ம லோதி நீவிய காதலொடு " (அகநா. 311 ; 7.)

மு. " யாண்டுளன் கொல்லோ தானே மாண்குழை
மொய்யிருங் கூந்தன் முடியாப் பருவத்துப்
பெறுக நின்னை யானென
நறுநுத னீவிப் படர்தந் தோனே " (தமிழ்நெறி. மேற். 96.)

(உஎக)

தோழி கூற்று

[தலைவன் முன்பனிப் பருவத்தே வருவதாகக் கூறிச் சென்று ளனைக் கூதிர்ப்பருவத்தின் இறுதியில் தோழி தலைவியை நோக்கி, " இனி, முன்பனிப் பருவம் வரும் ; தலைவர் நம்மை நினைந்திலர் ; என் செய்வேம் !" என்று கூறியது.]

உஅ0 விசும்புகண் புதையப் பாஅய் வேந்தர்
வென்றெறி முரசி னன்பல முழங்கிப்,
பெயலா னீதி வானங்; காதலர்
நனிசேய் நாட்டர் நம்முன் னலரே;
5. யாங்குச்செய் வாங்கொ ரோழி, யீங்கைய
வண்ணத் தீய்ம்மல ருதிர
முன்னர்த் தோன்றும் பனிக்கடு நாளே.

எ - து. பனிப்பருவங் குறித்துப் பிரிந்தான் தலைமகன் ; பிரிய, பருவ வரவின்கண் வேறுபடுவாளாயினும் கதுமென ஆற்றுவிப்பது அரிதென்னும் கருத்தினளாய்க் கூதிர்ப்பருவத்துத் தலைமகள் கேட்பத் தனது ஆற்றுமை விளங்கத் தோழி சொல்லியது.

கருவூர்க் கதப்பிள்ளை.

(பி - ம்.) 1 ' புதைப்பாஅ ' 5 ' யீங்கையத்துத் துய்ம்மலர் ' 7 ' முன்னு தென்ப, முன்னர்த் தென்ப '

(ப - ரை.) தோழி—, விசும்பு கண் புதைய பாஅய் - வானம் மறையும்படி பரவி, வேந்தர் வென்று எறி முரசின் நல் பல

முழங்கி - வேந்தர்கள் பகைவர்களேவென்று அறைகின்ற முரசத்தைப் போல நன்மையையுடைய பலமுறை முழங்கி, வானம் - மேகம், பெயல் ஆனது - மழை பெய்தலே நீங்காது ; காதலர் நனி சேய் நாட்டர் - தலைவர் மிகச் சேயதாகிய நாட்டிலே உள்ளார் ; நம் முன்னலர் - அவர் நம்மை நினைத்தாரல்லர்; ஈங்கைய வண்ணம் துய் மலர் உதிர - ஈங்கையிலுள்ளனவாகிய நிறத்தையும் உளையையும் உடைய மலர்கள் உதிராநிற்ப, முன்னர் தோன்றும்-இனிமேல் தோன்றுதற்குரிய, பனி கடுநாள் - கடிய பனிப்பருவத்தில், யாங்கு செய்வாம் - என்ன செய்வாம் !

(முடிபு) தோழி, வானம் பெயல் ஆனது ; காதலர் நனிசேய் நாட்டர் ; நம் முன்னலர் ; பனிக்கடுநாளில் யாங்குச்செய்வாம் !

(கருத்து) தலைவர் தாம் குறித்த பருவத்தே வாராராயின் என் செய்வேம் !

(வி - ரை.) கொல் : அசைநிலை. "ஈங்கைமலர் இப்பொழுது உதிராநிற்ப, இனிப்பனிக்கடுநாள் தோன்றும்" என்றுள். ஈங்கை கூதிர்க்காலத்தில் மலர்ந்து உதிரும் இயல்புடையது (குறுந். 110.)

பனி நாள், கடுநாளென்க.

(ஒப்பு.) 2. **வென்றெறி முரசு** : புறநா. 112 : 4, 351 : 5.

1-3. **மேகமுழக்கத்திற்கு முரசின் ஒலி** : குறுந். 270 : 3, ஒப்பு ; **அகநா.** 175 : 12-3.

மழையால் விசும்பு மறைதல் : குறுந். 355 : 1, ஒப்பு ; **நற்.** 347 : 1-2. 4. **நனிசேய் நாட்டர்** : குறுந். 228 : 5 ; **நற்.** 115 : 8. 5. **யாங்குச்செய்வாம்** : குறுந். 217 : 3, ஒப்பு.

5-6. **ஈங்கைய வண்ணத் துய்ம்மலர்** : குறுந். 110 : 5-6. **ஈங்கையின் மலர் துய்யையுடையது** : குறுந். 110 : 5-6, ஒப்பு. **ஈங்கைமலர் கூதிர்ப்பருவத்தில் உதிர்தல்** : குறுந். 110 : 5: 7, ஒப்பு. (கஅ0)

தோழி கூற்று

[வரைவிடை ஆற்றாளாகிய தலைவியை நோக்கி, "தலைவனோடு அளவளாவியதன்பயன் இங்ஙனம் வருந்தியிருத்தல்கொல் ?" என்று தோழி கூறியது.]

நஅக. தொல்கவின் றொலைந்து தோணலஞ் சாஅய்
அல்ல னெஞ்சமோ டல்கலுந் துஞ்சாது
பசலை யாகி விளிவது கொல்லோ
வெண்குருகு நரலுந் தண்கமழ் கானற்

5. பூமலி பொதும்பர் நாண்மலர் மயக்கி
விலங்குதிரை யுடைதருந் துறைவனெ
டிலங்கெயிறு தோன்ற நக்கதன் பயனே.

எ - து. வரைவிடை ஆற்றுளாகிய (பி - ம். ஆற்றுளாய்த்) தலை மகளை ஆற்றுவிக்கலுறும் தோழி தலைமகனை இயற்பழித்தது.

[ஆசிரியர் பெயர் காணப்படவில்லை.]

(பி - ம்.) 3 'பகலெயாகி' 5 'நன்மலர்' 7 'னக்கதன்'

(ப - ரை.) வெள் குருகு - வெள்ளை நாரைகள், நரலும் - ஒலிக்கின்ற, தண் கமழ் கானல் - தண்ணியதாகக் கமழ்கின்ற கடற்கரையிலேயுள்ள, பூ மலி பொதும்பர் நாள் மலர் மயக்கி - மலர் நிறைந்த சோலையிலுள்ள செவ்வி மலர்களைக் கலக்கச்செய்து, விலங்கு திரை - குறுக்கிடும் அலைகள், உடைதரும் துறைவனெடு - உடைந்து செல்கின்ற துறையையுடைய தலைவனோடு, இலங்கு எயிறு தோன்ற நக்கதன் பயன் - விளங்குகின்ற பற்கள் வெளிப் படச் சிரித்து மகிழ்ந்ததனால் உண்டான பயன், தொல் கவின் தொலைந்து - பழைய அழகு அழிய, தோள் நலம் சாஅய் - தோளினது நலம் மெலிய, அல்லல் நெஞ்சமொடு - துன்பத்தை யுடைய நெஞ்சோடு, அல்கலும் - இரவுதோறும், துஞ்சாது - தூங்காமல், பசலை ஆகி - பசலை உண்டாக, விளிவதுகொல் - நாம் அழிவதுவோ?

(முடிபு) நக்கதன் பயன் விளிவதுகொல்?

(கருத்து) தலைவனோடு நட்புச் செய்ததற்கு நாம் அழிதலோ பயன்?

(வி - ரை.) தொலைந்து. சாஅய், ஆகி என்பன செயவென் எச்சங்கள் செய்தெனச்சமாகத் திரிந்து நின்றன.

புன்னை முதலிய மரம் நீரளவும் தாழ்ந்திருத்தலின் திரை மலரை மயக்கியது. நக்கது: இடக்கரடக்கல்.

"தலைவனோடு நக்கதன்பயன் இன்பந்தருவதாயிருத்தலை யன்றி நாம் அழிதல்கொல்?" என்றது அவனது பெருமைக்கு இழுக்குப் போலத் தோற்றுதலின் இயற்பழித்தாயிற்று.

(ஒப்பு.) 1. தொல்கவின் தொலைதல்: நற். 56: 8, 283: 4, 350: 5; கலி. 2: 28, 16: 5, 26: 10; அகநா. 147; 12, 177: 1, 235: 18, 270: 10. தோள் நலம் சாய்தல்: முத். 54, 55, 69. மு. நற். 14: 1.

2 கலவி துயிலாமை: குறுந். 6: 4, ஒப்பு.

1-3. **தோன்மெலிதலும் பசலை உண்டாதலும்:** "பெருந்தோ ணெகிழ வவ்வரி வாடச், சிறுமெல் லாகம் பெரும்பசப் பூர" (நற். 358 : 1-2.)

6 - 7. **தலைவனோடு நகுதல்:** குறுந். 401 : 5; அகநா. 156 : 12. (உஅக)

தோழி கூற்று

[தலைவன் கூறிச்சென்றபருவம் வந்தகாலத்து அவன் வாராமையால் வருந்திய தலைவியை நோக்கி, "இது கார்ப்பருவ மன்று; இப்பொழுது பெய்வது வம்பமழை" என்று தோழி கூறித் தெளிவித்தது.]

உஅ. *தண்டுளிக் கேற்ற பைங்கொடி முல்லை*
முகைதலை திறந்த நாற்றம் புதன்மிசைப்
பூமலி தளவமொடு தேங்கமழ்பு களைல
வம்புப் பெய்யுமான் மழையே; வம்பன்று
5. *காரிது பருவ மாயின்*
வாரா ரோநங் காத லோரே?

எ - து. பருவவரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி பருவமன்று, வம்பென்று வற்புறீஇயது.

குறுங்கீரன்.

(பி - ம்.) 1. 'கண்டிசிற் றோழி' 2 'முகைத்தலை' 3 'பூமலர்', 'பூமலர்பு'; 'தேங்கமழ்பூக்களைல்', 'தேங்கமழ் பூக்கால்' 4 'வம்பம் பெய்யுமார்'; 'வம்பழன்று'

(**ப - ரை.**) தண் துளிக்கு ஏற்ற பசு கொடி முல்லை - தண்ணிய துளியை எதிர்கொண்ட பசிய கொடியாகிய முல்லையின், முகை தலை திறந்த நாற்றம் - அரும்புமலர்ந்த மணம், புதல்மிசை - புதலினிடத்தே, பூ மலி தளவமொடு - மலர்மிக்க செம்முல்லையோடு, தேம் கமழ்பு களைல - தேன் மணக்கும் வண்ணம் நெருங்கித் தோன்றும்படி, மழை - மேகம், வம்பு பெய்யும் - காலமல்லாத காலத்துப்பெய்யும் மழையைப் பெய்யும்; இது வம்பு அன்று - இது வம்பன்றி, கார் பருவமாயின்-கார்காலமானால், நம் காதலோர்-நம் தலைவர், வாராரோ—; வருவார்.

(**முடிபு**) மழை வம்புப் பெய்யும்; இது கார்ப்பருவமாயின் நம் காதலோர் வாராரோ?

(**கருத்து**) இது கார்ப்பருவம் அன்று.

(வி - ரை.) முல்லை கார்காலத்தில் வளம்பெற்று அரும்பி மலரும். தேம் கமழ்பு - இடமெல்லாம் பரவியென்பதும் பொருந்தும். வாராரோவென்ற வினை வருவரென்னும் பொருளது.

"தலைவர் தாம் கூறிய சொற்பிழையாராதலின் அவர் வாராமையே இது கார்ப்பருவமன்றென்பதற்கு அடையாளம். ஆதலின் முல்லை, தளவம், மழையென்பன அடையாளமல்ல" என்பது தோழியின் கருத்து (குறுந். 21) கார்ப்பருவமேயாயினும் தலைவி ஆற்றுளென்பது கருதித் தோழி காரன்றென்றாள்;

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" (குறள், 292) ஆதலின்.

(ஒப்பு.) 1-2. முல்லை கார்காலத்தில் அரும்புதல்: குறுந். 126: 3-5, ஒப்பு. 1-3. தளவம் மழையை ஏற்று மலர்தல்: "கண்ணக னிருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற, தண்ணறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்" (கலி. 102: 1-2.) முல்லையும் தளவும்: பொருந. 199-200. (கஅஉ)

தோழி கூற்று.

[தலைவனுடன் செல்லத் தலைவி உடம்பட்டமை தெரிந்து அக்கருத்தைத் தலைவனுக்கு வெளியிட்டபின் அவன் வந்து நிற்ப, அப்பொழுது நாண் அழிதற்கு வருந்திய தலைவியை நோக்கி, "நின் உடம்பாட்டை யறிந்தே அவனை வரச்செய்தேன்; இப் பொழுது மறுப்பின் என்செய்வேன்!" என்று தோழி கூறியது.

நஅந. நீயுடம் படுதலின் யான்றர வந்து
குறிநின் றனனே குன்ற நாடன்
இன்றை யளவை சென்றைக் கென்றி
கையுங் காலு மோய்வன வழுங்கத்
5. தீயுறு தளிரி னடுங்கி
யாவது மிலையான் செயற்குரி யதுவே.

எ - து. உடன்போக (பி - ம். உடன்போக்கு நேர்வித்து வந்த தோழிக்கு நாணல்) வருந்துந் தலைமகளை நாணுக்கெட (பி-ம்.நாணுடைக் கேட்ப)ச் சொல்லியது.

படுமரத்து மோசிகீரன் (பி - ம். படுமாத்து மோசிகீரன்.)

(பி-ம்.) 3 'சென்றைக்கசென்றி' 4 'வொழுங்கித்', 'வொழுகத்', 'வொடுங்கித்' 7. யாதுமில்லையான்'

(ப-ரை.) நீ உடம்படுதலின் - நீ உடன்போக இயைந்தமை

யால், யான் தர - நான் கூற, குன்றம் நாடன் - தலைவன், குறி நின்றனன் - குறியிடத்தே வந்து நின்றான்; நீயோ—, இன்றை அளவை சென்றைக்க என்றி - இன்றையாகியபோது கழிக என்று கூறினாய்; கையும் காலும் ஓய்வன அழுங்க - கையும் காலும் ஓய்வனவாகி வருந்த, நீ உறு தளிரின் நடுங்கி - நெருப்பில் விழுந்த தளிரைப்போல நடுங்கி, யான் செயற்கு உரியது யாவதும்இலை - நான் செய்யத்தக்கது ஒன்றும் இல்லை.

(முடிபு) நாடன் நின்றனன்; சென்றைக்கென்றி; அழுங்க நடுங்கிச் செயற்குரியது இலை.

(கருத்து) நீ தலைவனுடன் இப்பொழுதே செல்லுதல் நலம்.

(வி - ரை.) தர - அழைப்பவெனலுமாம். குறி - குறித்த இடம். சென்றைக்க வென்பது வியங்கோட்பொருளில் வந்தது; "இன்பத்தின் பக்க மிருந்தைக்க" (நாலடி. 79), "ஆயமட மகளி செல்லீரங் கேட்டைக்க", "எழுதெழின் மலருண்க ணிருந்தைக்க" (சிலப். 18 : 49, 19 : 67) எனப் பிற சொற்களும் இங்ஙனம் வருதல் காண்க.

தலைவி நாணமிகுதியினால், "இன்று போக, நாளைச்செல் வேம்" என்றாள்.

(மேற்.) மு. வருத்தமிகுதியால் தலைவனை வழிபடுதலை மறுத்துக் கூறுமிடத்துத் தலைவிக்குக் கூற்று நிகழும்; 'இத்தோழி கூற்றே சென்றைக்க வென்றதனால் தலைவி மறுத்தமை பெற்றாம்' (தொல். களவு. 29, ந.)

(கு - பு.) இக்கருத்து சிறந்ததாகத் தோன்றுகிறது.

ஒப்பு. 5. தளிரைப்போல நடுங்குதல்: "கொல்புனற் றளிரி னடுங்கு வனள்" (பதிற். 52 : 21.) (கஅக)

தோழி கூற்று.

[பரத்தையரிடத்திருந்து வந்த தலைவனை நோக்கி, "நின்சூள் பொய்யுடையது" என்று கூறித் தோழி வாயில்மறுத்தது.]

நஅசு. உழுந்துடைக் கழுந்திற் கரும்புடைப் பணைத்தோள்
நெடும்பல் கூந்தற் குறுந்தொடி மகளிர்
நலனுண்டு துறத்தி யாயின்
மிகநன் றம்ம மகிழ்நநின் சூளே.

எ - து. "நின் பரத்தையர்க்கு நீ உற்ற சூளுறவு நன்றாயிருந்தது!" என்று நகையாடித் தோழி வாயில் மறுத்தது.

ஓரம்போகியார் (பி - ம். காம்போதியார்.)

(பி - ம்.) 1 'கழுத்திற்', 'கழுதின்' 4 'மகிழ்ந்தநின்'

(ப - ரை.) மகிழ்ந—தலைவ, உழுந்து உடை கழுந்தின் - உழுத் தங்காயை அடித்தற்கு உரிய கழுந்துள்ள தடியைப்போல உள்ள, கரும்பு உடை பணை தோள் - கரும்பெழுதிய தொய்யிலையுடைய பருத்த தோளையும், நெடு பல் கூந்தல் - நெடிய பலவாகிய கூந்தலை யும், குறு தொடி மகளிர் - குறிய வளைகளையும் உடைய பரத்தை யரது, நலன் உண்டு - பெண்மைநலத்தை நுகர்ந்து, துறத்தி ஆயின் - துறந்து ஈண்டு வருவாயாயின், நின் சூள் - நீ அவர் மாட்டுச் செய்த சூள், மிக நன்று - மிகநன்றாக இருந்தது!

(முடிபு) மகிழ்ந, மகளிர் நலன் உண்டு துறத்தியாயின், நின் சூள் மிக நன்று!

(கருத்து) நின்மொழியை மெய்யென்று எண்ணி மயங்கேம்.

(வி - ரை.) தலைவன், "அங்கவர் யாரையும் அறியேன்" என்று சூள் செய்தானாக, "நீ இங்ஙனமே பரத்தையர் மாட்டும் சூள் செய்து அவர் நலன் நுகர்ந்து இப்பொழுது பிரிந்தாய். அவ் வியல்பே ஈண்டும் நின்பால் உள்ளதாதலின் நின்சூள் ஏற்கத் தகுவதன்று" என்று தோழி கூறி வாயில் மறுத்தாள்.

உழுந்தை அடித்தற்குரிய தடியின் கழுந்து தேய்ந்து வழுவழுப் பாகவும் பருத்ததாகவும் இருத்தலின் அதனைத் தோட்கு உவமை கூறினாள். பரத்தையர் தோளுக்குக் கூறினமையின் பிற உயர்ந்த பொருள்களைக் கூறாது இதனைக் கூறினாள். காமனது வில்லாகிய கரும்பின் உருவத்தைக் குங்குமக் குழம்பால் மகளிர் தோளில் எழுதுதல் வழக்கம். தோளையுங் கூந்தலையும் சிறப்பித்துக் கூறி யது முயங்குதற்குரிய இயல்பினென்பது கருதி. மகளிரென்று பன்மை வாசகம் படக்கூறியது தலைவன் பலர்பால் அன்புடையா னென்பதை நினைந்து. இதுவே வாயின் மறுத்தற்கு ஏதுவாயிற்று.

அம்ம: வியப்புக் குறிப்பு. சூளே: ஏ ஈற்றசை.

(ஒப்பு.) 1. மகளிர்தோள்களில் கரும்பின் வடிவத்தை எழுதுதல்: "தோண்மேற், கரும்பெழுது தொய்யிற்கு", "கற்றே ளிழைத்த கரும் புக்கு", "தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய் தனைத் தற்கோ", "நடாஅக் கரும்பமன்ற தோளாரை", "அன்றுதா னீர்த்த கரும்பணி வாடவென், மென்றோண் ஞெகிழ்த்தான்", "நெடுமென்றோட், பெய்கரும் பீர்க்கவும் வல்லன்" (கலி. 63: 7-8, 64: 19, 76: 15, 112: 6, 131: 29-30, 143: 31-2); "கரும்பும் வல்லியும் பெருந்தோ ளெழுதி" (சிலப். 2: 29.)

குறுந்தொடி: குறுந். 267: 5, 356: 8.

3. நலனுண்டு துறத்தல்: "தோணல முண்டு துறக்கப் பட்டோர்" (கலி. 23: 8.)

4. தலைவனது சூள்: குறுந். 238: 5, ஒப்பு. (கஅசை)

தலைவி கூற்று

[தொதுமலர் வரைவொடு புகுந்தமையறிந்த தலைவி, "தலைவன் தன் அன்பிற் சிறிதும் குறையாதிருப்ப அதனை யறியாது இவ் வூரிற் புதியோர் சிலர் வந்தனர்" என்று கூறுவாளாய்த் தோழியை அறத்தொடு நின்று அவ்வரைவை மாற்றச் சொல்லியது.]

நஅடு. பலவிற் சேர்ந்த பழமா ரினக்கலை
சிலைவிற் கானவன் செந்தொடை வெரீஇச்
செருவுறு குதிரையிற் பொங்கிச் சாரல்
இருவெதிர் நீடுமை தயங்கப் பாயும்
5 பெருவரை யடுக்கத்துக் கிழவ னென்றும்
அன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மவிவ் வழுங்க லூரே.

எ - து. வேற்று வரைவு மாற்றியது.

["உயிர்செல, வேற்றுவரைவு வரினது மாற்றுதற் கண்ணும்" (தொல். களவு. 20)]

கபிலர்.

(பி-ம்.) 1 'பழமருந்தினக்கலை', 'பழந்தினினக்கலை' 2 'சிலையிற்' 7 'தாமிவ்'; 'இப்பழங்கேளூரே'

(ப - ரை.) பலவில் சேர்ந்த பழம் ஆர் இனம் கலை - பலாமரத்திற்பொருந்திய பழத்தை உண்ட திரளையுடைய ஆண்குரங்குகள், சிலைவில் கானவன் செ தொடை வெரீஇ - சிலைமரத்தாற் செய்த வில்லையுடைய வேட்டுவனது குறிபிழையாச் செம்மையையுடைய அம்புத் தொடைக்கு அஞ்சி, செரு உறு குதிரையின் பொங்கி - போர்க்களத்தே அடைந்த குதிரையைப் போல மேலெழுந்து, சாரல் இரு வெதிர் நீடு அமை தயங்க - சாரலிலுள்ள பெரிய மூங்கிலினது நீண்ட கோல் அசைய, பாயும் - பாய்கின்ற, பெரு வரை அடுக்கத்து கிழவன் - பெரிய மலைப்பக்கத்தையுடைய தலைவன், என்றும் அன்றை அன்ன நட்பினன் - எப்பொழுதும் அன்றிருந்ததைப் போன்று மாறுபாடின்றி இருக்கும் நட்பையுடையான்; அங்ஙனம் இருப்பவும், இ அழுங்கல் ஊர் - இந்த ஆரவாரத்தையுடைய ஊரானது, புதுவோர்த்து - என் மணங்குறித்து வந்த புதியவர்களை யுடையது.

(முடிபு) கிழவன் என்றும் அன்றையன்ன நட்பினன்; இவ் வூர் புதுவோர்த்து.

(கருத்து) நொதுமலர் வரையப்புகுந்தனர்.

(வி - ரை) சிலை - ஒருமரம் (கலி. 15 : 1, ந.); சிலைவில் - முழங்கும் வில்லெனலும் ஆம் கானவன் - பலாப்பழத்தைக் காக்கும் வேடன். செந்தொடை : செம்மை - நேர்மை; குறி பிழையாமையைக் கருதியது. போர்க்களத்துள்ள குதிரை மேலெழுதலை,

"விட்ட குதிரை விசைப்பினன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்" (குறுந். 74 : 1-2),

"வெடிவேய் கொள்வது போல வோடித்
தாவு புகளு மாவே" (புறநா. 302 : 1-2)

என்று கூறியவற்றாலும் அறிக. குதிரையிற் பொங்கி அமை தயங்கும்படி கலிலபாயுமென்று கூட்டிப் பொருள்செய்தலும்பொருந்தும்.

அன்றையனென்ற சுட்டு இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த நாளைக் குறித்தது. புதுவோர் - வரைவின்பொருட்டு வந்த புதியோர். பல நாட்பழகி நட்பு வலிபெற்ற தலைவன் ஒருவன் இருப்பவும் புதியராகி வந்தாரை இவ்வூர் இன்று உடையதாயிருத்தல் நகைத்தற் கிடமாயிற்றென்னுங் குறிப்பினால் அம்மவென்றாள்.

தோழிகேட்ப இங்ஙனங் கூறினமையின், வேற்றுவரைவினை மாற்றவேண்டுமென்ற தன் உள்ளக் கிடக்கையைத் தலைவி குறிப்பித்தாளாயிற்று.

(மேற்.) மு. இறந்துபாடு பயக்குமாற்றால் தன்கிறத்து நொதுமலர் வரையக் கருதிய ஞான்று அதனை மாற்றுதற்கண் தலைவி கூறியது (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. பலாப்பழத்தைக் குரங்கு உண்ணுதல் : குறுந். 342 : 1.

2. சிலைவில் : ஐங். 363 : 1; அகநா 69 : 15; பெரும். 3. 20 : 8 செந்தொடை : புறநா. 3 : 20.

3. போர்க்குதிரை பொங்குதல் : "தாங்கன்மின் றுங்கன்மின் றுனை விறன் மறவிர், ஓங்கள் மதிலு ளொருதனி மா - ஞாங்கர், மயிரணியப் பொங்கி மழைபோன்று மாற்றார், உயிருணிய வோடி வரும்" (பு. வெ. 90.)

6. அன்றையன்ன நட்பு : குறுந். 199 : 6; குறிஞ்சிப். 238; நற். 332 : 8; அகநா. 332 : 15; பெரும். 1. 35 : 34.

7. அழுங்கலூர் : குறுந். 12 : 6, 140 : 5, ஒப்பு, 276 : 8, 289 : 8.

(உ அடு)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றவேண்டுமென்று வற்புறுத்திய தோழியை நோக்கி, "மாலைக்காலத்தில் காமநோய் மிகுவதனால் துன்புறுகின்றேன்" என்று தலைவி கூறியது.]

ங.அசு. வெண்மணல் விரிந்த வீததை கானற்
றண்ணந் துறைவன் றணவா வூங்கே
வாலிழை மகளிர் விழவணி கூட்டும்
மாலையோ வறிவேன் மன்னே மாலை
5 நிலம்பரந் தன்ன புன்கணெடு
புலம்புடைத் தாகுத லறியேன் யானே.

எ - து. பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது (பி - ம். வன்பொறை யெதிரழிந்தது.)

வெள்ளிவீதியார்.

(பி - ம். 3 'விழவணிக்' 5 'புன்கணெடும்'

(ப - ரை.) தோழி, வெள் மணல் விரிந்த - வெள்ளிய மணல் பரவிய, வீ ததை கானல் - மலர்கள் செறிந்த சோலையையுடைய, தண்ணந் துறைவன் - தண்ணிய கடற்றுறையையுடைய தலைவன், தணவா ஊங்கு - என்னைப் பிரியாத முன்காலத்தில், யான்—, வால் இழை மகளிர் - தூய அணிகலன்களை யணிந்த மகளிர், விழவு அணி கூட்டும் - விழவுக்குரிய அலங்காரங்களைத் தொகுக்கின்ற, மாலையோ அறிவேன் - மாலைக்காலத்தையே அறிவேனையினேன்; மன் - இனி அது கழிந்தது! மாலை - அம்மாலைக்காலம், நிலம் பரந்தன்ன புன்கணெடு - பூமி பரந்தது போன்ற பெரிய துன்பத் தோடு, புலம்புடைத்து ஆகுதல் - தனிமையை உடையதாதலை, அறியேன் - அப்பொழுது அறியேன்.

(முடிபு) துறைவன் தணவாவூங்கு யான் மகளிர் அணி கூட்டும் மாலையோ அறிவேன்மன்! மாலை புலம்புடைத்தாகுதல் அறியேன்.

(கருத்து) தலைவரது பிரிவினால் மாலையில் என்பால் துன்பம் மிக்கது.

(வி - ரை.) தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்கினளாக, "முன்பெல்லாம் இதுகண்டு வருந்தினையல்லை" என்ற தோழிக்குக் கூறியது இது.

மகளிர் விழவணி கூட்டு மாலையென்றது யானும் அவரோடு விழவணி கூட்டி மகிழ்ந்திருந்தேனென்னும் நினைவினது. மாலை யோ: ஓ பிரிநிலை. மன் கழிவிரக்கப் பொருளது. யானே: ஏ அசை நிலை நிலம் பரந்தன்ன புன்கணென்றது அதன் பேரளவை யுணர்த்தியபடி; "நிலத்தினும் பெரிதே" (குறுந். 3: 1) என்று பெருமைக்கு நிலம் கூறப்படுதல் மரபு.

புன்கண் - காமநோய் மிகுவதனால் வரும் துன்பம். புலம்பு - தலைவனைப் பிரிந்த தனிமை. அப்பொழுது அறியேனென்றமையின், இப்பொழுது அறிந்தேனென்றுளாயிற்று.

(ஒப்பு.) 3. வாலிழை மகளிர்: குறுந். 45: 2; கலி. 119: 14.

3. பி - ம். விழவணிக் கூட்டும்: அகநா. 26: 3.

3-4. மாலையில் மகளிர் அலங்காரம் செய்து கொள்ளல்: "மாலை மணி விளக்கங் காட்டி யிரவிற்கோர், கோலங் கொடியிடையார் தாங்கொள்ள" (சிலப். 9: 3-4.) 2-4. குறுந். 352: 5-6, ஒப்பு. (கஅசு)

தலைவி கூற்று

[தலைவன் பிரிந்த காலத்தில், "நீ ஆற்றல் வேண்டும்" என்று வற்புறுத்திய தோழிக்கு, "மாலைக்காலமும் யாமமும் எனக்குத் துன்பத்தைத் தருவனவாயின" என்று தலைவி கூறியது.]

கஅஎ. எல்லை கழிய முல்லை மலரக்
கதிர்சினந் தணிந்த கையறு மாலையும்
இரவரம் பாக நீந்தின மாயின்
எவன்கொல் வாழி தோழி
5. கங்குல் வெள்ளங் கடலினும் பெரிதே.

எ - து. பிரிவிடை வற்புறுத்துந் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிரழிந்து கூறியது.

கங்குல் வெள்ளத்தார்.

(பி - ம்.) 2 'மாலை' 3 'நிறைவரம்பாக', 'உயிரைவரம்பாக' 5 'வெள்ளக்'

(ப - ரை) தோழி—, எல்லை கழிய - பகல் நீங்க, முல்லை மலர - முல்லைக் கொடிகள் மலர, கதிர் சினம் தணிந்த - சூரியனது வெப்பம் குறைந்த, கை அறு மாலையும் - செயலறுதற்குரிய மாலைக் காலத்தையும், இர வரம்பு ஆக - இராப்பொழுது எல்லையாக எண்ணி அது வருமட்டும், நீந்தினம் ஆயின் - கடந்தோமாயின், கங்குல் வெள்ளம் - அதன்மேல் வரும் அவ்விரவின் மிகுதி, கடலினும் பெரிது - கடலைக் காட்டிலும் பெரியது; எவன் - நாம் மாலையை நீந்துவதால் வரும் பயன் யாது?

(முடிபு) தோழி, மாலையும் நீந்தினமாயின் கங்குல் வெள்ளம் பெரிது; எவன்கொல்?

(கருத்து) மாலையும் யாமமும் தலைவரது பிரிவை நினைவுறுத்தித் துன்பம் செய்வனவாம்.

(வி - ரை.) முல்லை மாலையில் மலர்ந்தது. மாலையும்: உம்மை உயர்வுசிறப்பு. "செயலறுதற்குரிய மாலைக்காலத்தை நீந்தலே அரிது; அதனை நீந்தினும் பின்வரும் கங்குல் அதனினும் துன்பஞ் செய்வதிற் பெரிதாயிற்று" என்றுள். சிறுபுன் மாலையாதலின் நீந்தினே மாயினும் மேல் வருவது பெருங்கடலைப்போன்ற கங்கு லென்று வருந்தினாள்.

தலைவி இங்ஙனம் இவ்விரண்டு பொழுதிற்கும் வருந்துதல்,

"வந்தன்று வாழியோ மாலை
ஒருதா னன்றே கங்குலு முடைத்தே" (குறுந். 122: 3-4)

என்று முன்னும் வந்தது.

மாலையைக் கடலாகவும் அதன் பின்னர்த்தாகிய இராவை அதன் வரம்பாகவும் வைத்துக் கூறினாள்; ஒரு சிறுபொழுதை அடுத்து வரும் மற்றொரு சிறுபொழுதைக் கரையாகக் கூறும் இச் செய்யுளை நினைந்து பரிமேலழகர், 'கூடிய ஞான்று பிரிவரென்று அஞ்சப் பண்ணிய காலை, அஃது ஒழிந்து இஞ்ஞான்று கங்குல் வெள்ளத்திற்குக் கரையாய் வாரா நின்றது' (குறள், 1225) என்று உரை எழுதினர்;

"முழங்குகடற் பட்டோ ருழந்துபின் கண்ட
கரையெனக் காலை தோன்றலின்" (பெருங். 1. 33: 209.)

இராவென்பது செய்யுளில் இரவென நின்றது (தொல். உயிர்மயங்கு. 32.) இரவரம்பென்றமையின் மாலையும் கட லாயிற்று; இஃது ஏகதேச வுருவகம்.

எவன்கொல் - யாம் இனிச் செய்வது என் என்று பொரு ளுரைத்தலும் பொருந்தும்; கொல், வாழி, ஏ: அசைநிலைகள்; ஏ தேற்றமுமாம்.

(ஒப்பு.) 2. கதிர் சினந்தணிந்த மாலை: குறுந். 195: 1-2.
கதிரின்சினம்: குறுந். 195: 1, ஒப்பு.
கையறுமாலை: குறுந். 32: 1, ஒப்பு.
1-2. மாலையில் முல்லை மலர்தல்: குறுந். 108: 4-5, ஒப்பு.
4. வாழி தோழி: குறுந். 260: 4, ஒப்பு.

5. இரவுக்குக் கடல்: (குறுந். 240: 6-7); "நிறைபுணையா, யாம நெடுங்கட னீந்துவேன்", "இருண்மாலை வெள்ளத்துள்" (பு. வெ. 298, 328); "அல்லாழிக் கரைகண்டான்.....துயராழி நெடுங்கடலுட் டுயில்கின் றானே" (கம்ப. மிதிலைக். 154); "கங்கும் கடற்கெல்லை" (இராசராச. 199.) (கஅள)

தோழி கூற்று

[தலைமகள் தன்னுடன் வருதற்கு உடம்பட்டமையை உணர்ந்த தலைவன் பாலைநிலத்தின் இன்னுமையையும் அதில் நடக்க மாட்டாத தலைவியினது மென்மையையும் கருதிப் போதற்கு ஒருப்படானுக, "நும்மொடு வரின் தலைவிக்குப் பாலை இனியதாகும்" என்று தோழி கூறிச் செலவு உடம்படச் செய்தது]

நஅஅ. நீர்கால் யாத்த நிரையிதழ்க் குவளை
கோடை யொற்றினும் வாடா தாகும்
கவணையன்ன பூட்டுப்பொரு தசாஅ [தன்ன
உமணெருத் தொழுகைத் தோடுநிரைத்
5. முளிசினை பிளக்கு முன்பின் மையின்
யானை கைமடித் துயவும்
[கானமு மினியவா நும்மொடு வரினே.]

எ - து. தலைமகள் உடன்போக்கு நேர்ந்தமை யுணர்ந்த தலைமகன், சுரத்து வெம்மையும் தலைமகள் மென்மையும் குறித்துச் செலவு அழுங்கலுறுவானை (பி-ம். சொல வழுங்கலுறு வானை)த் தோழி அழுங்காமற் கூறியது.

[அழுங்கலுறுவானை - தவிர்தற்குத் தொடங்குபவனை]

ஔவையார் (பி-ம். அவ்வையார்.)

(பி-ம்) 1 'நீர்க்கால்' 2 'யெற்றினும்' 3 'தசாவது' 4 'உமணரொழுகை' 5 'முழுச்சினை'

(ப - ரை.) நீர்கால் யாத்த - நீரைத் தன்னுடைய அடியிலே கட்டப்பெற்ற, நிரை இதழ் குவளை - வரிசையாகிய இதழ்களை யுடைய குவளைமலரானது, கோடை ஒற்றினும் - மேல்காற்று வீசினாலும், வாடாதாகும் - வாடாததாகும்; கவணை அன்ன பூட்டு பொருது - கவணைப்போன்ற நுகத்தின் பிணிப்புப் பொருத மையால், அசா - வருந்துதலையுடைய, உமண் எருது ஒழுகை - உப்புவாணிகருடைய எருதுகள் பூட்டிய வண்டிகளின், தோடு நிரைத்தன்ன முளிசினை - தொகுதியை வரிசையாக வைத்தாற் போன்ற உலர்ந்த மரக் கிளைகளை, பிளக்கும் முன்பு இன்மையின் - பிளத்தற்குரிய வன்மை இல்லாமையால், யானை கை மடித்து உயவும் - யானை தன் துதிக்கையை மடித்து வருந்துகின்ற, கான

மும் - பாலைநிலங்களும், நும்மொடு வரின் - நும்மோடு வந்தால், இனிய ஆம் - தலைவிக்கு இனிமை யுடையனவாகும்.

(முடிபு) குவளை வாடாதாகும் ; நும்மொடு வரின் கானமும் இனிய ஆம்.

(கருத்து) தலைவி நும்மோடு வரின் பாலைநிலம் அவளுக்கு இனியதேயாகும்.

(வி - ரை.) கால்யாத்த - கால்வாயின் வழியே கட்டப்பெற்ற வென்பதும் பொருந்தும். கோடைக்காற்று நீரில்லாத மலர் வாடு தற்கு ஏதுவாகும். கவண் கவணை யெனவும் வழங்கும் : " கடு விசைக் கவணையிற் கல்கை விடுதலின் " (கலி. 41 : 10.) பொருது - பொர ; எச்சத்திரிபு அசாஅ : முதனிலைத் தொழிற்பெயர். உமணர் உப்புப்பார மேற்றிய வண்டி பாலைநில வழியே செல்லும்; பாலைநிலத்திலுள்ள மரச்சினைக்கு அந்நிலத்திற் காணப்படும் உமணர் ஒழுகையையே உவமை கூறினள் ;

" .....உமணர்
கொடுநுகம் பிணித்த செங்கயிற் றொழுகைப்
பகடசாக் கொள்ளும் வெம்முனைத் துகடொகுத்
தெறிவளி சுழற்று மத்தம் " (அகநா. 329 : 5-8.)

உமணரது வண்டிகளுக்கு மேற்கூடின்மையின் அவற்றை உலர்ந்த சினைகளுக்கு உவமை கூறினள். யானை பட்டையை உண்ணவேண்டிச் சினையைப் பிளந்தது ; அது முளிசினை யாதலின் உறுதியுடையதாகிப் பாலையின் வெம்மையால் ஓய்ந்த யானையாற் பிளப்பதற்கு அரிதாயிற்று.

கானமும் : உம்மை இழிவு சிறப்பு. நும்மொடுவரின் கான மும் இனியவாமென்றதனால் நும்மொடு வாராளாயின் வீடும் இன்னாததாகுமென்பதும் பெறப்படும் ; குறுந். 124 : 4.

இதனால், " தலைவியின் மென்மை தூறித்து அஞ்சாது உடன் கொண்டு செல்க " என்று அறிவுறுத்தினளாயிற்று.

இச்செய்யுள் எடுத்துக்காட்டு உவமையணி.

(மேற்.) மு. பாங்கி தலைமகனை உடன்படுத்தியது (நம்பி. 182.)

(ஒப்பு.) 1. நீர்க்குவளை : " தாழ்நீர்க் குவளையும் " (சிலப். 14 : 76.)
2. கோடை ஒற்றல் : குறுந். 343 : 5
1-2 ஒருவாறு ஒப்பு : குறுந். 368 : 6-8.
4. உமணருடைய வண்டிகள் : " நோன்பகட் டுமண றொழுகை " (சிறுபாண். 55); " பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச, சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப், பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி " (பெரும்பாண். 63-5); " உப்பொ யுமண ரருந்துறை போக்கும், ஒழுகை

நோன்பகடு", "தெண்கழி விளைந்த வெண்க லுப்பின், கொள்ளை சாற்றிய கொடுநுக வொழுகை, உரனுடைச் சுவல பகடுபல பரப்பி, உமணுயிர்த் திறந்த வொழிக லடுப்பின்", "வார்கயிற் றெழுகை நோன்சுவற் கொளீஇப், பகடுதுறை யேற்றத் துமண்ணிளி", "உப்பொ யுமண ரொழுகை" (அகநா. 30 : 5-6, 159 : 1-4, 173 : 9-10, 310 : 14); "உமணர், உப்பொ யொழுகை" (புறநா. 116 : 7-8.) 5 முளிசினை : குறுந். 396 : 3.

மு. "தீயினும் வெய்ய வென்குவை யாயின்
யாவது மினிய கானம்
சேயுயர் சிலம்ப நின்னெடு செலினே" (தமிழ்நெறி. மேற். 90);

"பிணையுங் கலையும்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையால்
அணையு முரம்பு நிரம்பிய வத்தமு மையமெய்யே
இணையு மளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேநின்னெ டேகினெம் பைந்தொடிக்கே"
(திருச்சிற். 202);

"மால்புரை யானை மணிமுடி மாறன்மண் பாய்நிழற்றும்
பால்புரை வெண்குடைத் தென்னன் பறந்தலைக் கோடிவென்ற
வேல்புரை வெம்மைய கான மெனினுமவ் வேந்தன்செய்ய
கோல்புரை தண்மைய வாநின்னெ டேகினெங் கொம்பினுக்கே"
(பாண்டிக்);

"மன்னெடு வேலினுய் மாழை மடநோக்கி
நின்னெடு செல்ல நெடுங்கானம் - கொன்னுனைய
வேலன்ன வெம்மைய வாயினும் வேந்தர்செங்
கோலென்ன லாகுங் குளிர்ந்து" (இளவிமாலை);

"தீய பெருவனமுஞ் செந்தறையு நந்தறையும்
தூய பெருவனமுஞ் சோலையுமாம் - ஆய
கலம்பா முலைமகட்குக் காமருபூங் கண்ணிச்
சிலம்பாநின் பின்னர்ச் செலின்" (இளவித்தெளிவு.)

(கஅஅ)

தோழி கூற்று

[தலைவன் வரைவுக்குரிய முயற்சிகளை மேற்கொண்டதனை அவனுடைய குற்றேவன்மகனால் அறிந்த தோழி அக்குற்றேவன் மகனை வாழ்த்தும் வாயிலாக அச்செய்தியைத் தலைவிக்கு உணர்த்தியது]

நஅசு. நெய்கனி குறும்பூழ் காய மாக
ஆர்பதம் பெறுக தோழி யத்தை

பெருங்க ணுடன் வரைந்தென வவனெதிர்
நன்ரே மகனே? யென்றனென்
நன்றே போலு மென்றுரைத் தோனே.

எ - து. தலைமகன் குற்றேவன்மகளல் வரைவுமலிந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

வேட்டகண்ணன்.

(பி - ம்.) 2 'யத்தைப்' 3 'வந்தெதிர்' 4 'யென்றலின்', 'யென்றனன்'

(ப - ரை.) தோழி—, பெரு கல் நாடன் வரைந்தென - பெரிய மலைநாட்டையுடைய தலைவன் வரைவுக்குரிய முயற்சிகளை மேற் கொண்டானாக, அவன் எதிர் - அவனுக்கு முன், மகனே நன்ரே என்றனென் - குற்றேவன்மகனே, நலமா என்று கேட்டேன்; நன்றே என்றுரைத்தோன் - நலமே என்று கூறிய அவன், நெய் கனி குறும்பூழ் - நெய் மிக ஊறிய குறும்பூழ், காயமாக - சம்பாரத் தோடு கூடிய கறியாக, ஆர்பதம் பெறுக - உண்ணுகின்ற உணவைப் பெறுவானாக!

(முடிபு) தோழி, நாடன் வரைந்தென நன்ரே என்றனென்; நன்றேபோலும் என்றுரைத்தோன் ஆர்பதம் பெறுக!

(கருத்து) தலைமகனுடைய குற்றேவன்மகனல் தலைவன் வரைவு மேற்கொண்டமையை யுணர்ந்தேன்.

(வி - ரை.) நெய்யிற் பொரிக்கப்படுதலின் நெய்கனிந்தது. குற்றேவன்மகனுக்கு ஏற்ற உணவு கூறினள்.

அத்தை: அசைநிலை. நன்றே: ஏ தேற்றம். போலும்: அசை நிலை. உரைத்தோனென்பதை முற்ரூக்கினும் பொருந்தும்.

(மேற்.) மு. தலைவன் குற்றேவனீமகனல் வரைவுமலிந்த தோழி தலை விக்கு உரைத்தது (தொல். களவு. 23, ந.)

(ஒப்பு.) 2. ஆர்பதம்: குறுந். 83: 1, ஒப்பு. 3. பெருங்கடல் நாடன்: சிறு பாண். 87. மு. நன்மை செய்தோரை வாழ்த்துதல்: குறுந். 83, 201. (கஅசு)

கண்டோர் கூற்று

[பாலைநிலவழியே சேர்ந்துபோகும் தலைவனையும் தலைவி யையும் கண்டோர், "பொழுது போயிற்று; ஆறலை கள்வரால் ஏதம் நிகழும்" என்று அறிவுறுத்தி மேற்செல்லுதலைத் தடுத்தது.]

நகo. எல்லு மெல்லின்று பாடுங் கேளாய்
செல்லா தீமோ சிறுபிடி துணையே

வேற்றுமுனை வெம்மையிற் சாத்துவந் திறுத்
வளையணி நெடுவே லேந்தி [தென
5. *மிளைவந்து பெயருந் தண்ணுமைக் குரலே.*

எ - து. புணர்ந்துடன் போயினரை இடைச்சுரத்துக் கண்டார் பொழுது (பி - ம். இப்பொழுது) செலவும் பகையுங் காட்டிச் செலவு விலக்கியது.

உறையூர் முதுகொற்றன்.

(பி - ம்.) 2 'சொல்லாதீமோ' 5 'இளைவந்து'

(ப - ரை.) சிறுபிடி துணையே - சிறிய பிடிபோன்றவளுக்குத் துணையாகியவனே, எல்லும் எல்லின்று - சூரியனும் விளக்கம் இலனானன்; சாத்து வந்து இறுத்தன - வணிகர்கூட்டம் வந்து அடைந்ததாக, வேற்று முனை வெம்மையின் - பகைப்புலத்தே கொள்ளும் பகைமையைப் போல, வளை அணி நெடுவேல் ஏந்தி - வளையை யணிந்த நெடிய வேலை ஏந்தி, மிளைவந்து - காவற்காட்டினிடத்தே வந்து, பெயரும் தண்ணுமை குரல் - பெயரும் ஆறலைப் போரது தண்ணுமையென்னும் வாத்தியத்தினுடைய முழக்கத்தினது, பாடும் கேளாய் - ஒலியையும் கேள்; ஆதலின், செல்லாதீம் - நீவிரிருவரும் போதலை ஒழிமின்.

(முடிபு) சிறுபிடி துணையே, எல்லும் எல்லின்று; குரலின் பாடும் கேளாய்; செல்லாதீம்.

(கருத்து) மேலே இந்நிலத்திற் செல்லுதலைத் தவிர்மின்.

(வி - ரை.) பாடும்; உம்மை இறந்தது தழீஇயது. ஓ அசை நிலை. தலைவன் வலியனாயினும் உடன்வருவாள் பொருட்டேனும் செலவு தவிர்தல் வேண்டுமென்பது கண்டோர் கருத்தாதலின் 'சிறுபிடி துணையே' என்றார்.

பாலைநிலத்திற் செல்லும் வணிகர்கூட்டத்தை எதிர்த்து அவரது பொருளைக் கைக்கொள்ளல் ஆறலைகள்வர்க்கு இயல்பு. ஆறலைகள்வர் தண்ணுமை யொலியைக் கேளாயென்றது, அவரால் நுமக்கு ஏதம் வருமென்பதை அறிவுறுத்தியபடி. குரலை: ஏ அசைநிலை. குரலினது பாடும் கேளாயென இயைக்க

(மேற்) மு. இடைச்சுரத்துக் கண்டோர் பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவினையிய குற்றம் காட்டியது (தொல். அகத். 40, ந.)

(ஒப்பு.) 1. எல்லும் எல்லின்று: குறுந். 161: 1, 179: 2, ஒப்பு.

2. செல்லாதீம்: குறுந். 350: 2, ஒப்பு.

3. வேற்றுமுனை: அகநா. 67: 11, 131: 12.

5. ஆறலைகள்வரின் தண்ணுமை: "வேட்டக் களவர் விசியுறு கடுங்கட்,

சேக்கோ ளறையுந் தண்ணுமை, கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே" (அகநா. 63 : 17-9.)

3-5. ஆறலை கள்வர் சாத்தெறிதல்: அகநா. 167 : 7-9, 245 : 6, 291 : 13-5 ; பெரும். 1. 52 : 26, 55 : 47-9. (கூகo)

தலைவி கூற்று

[பிரிவிடைப் பருவவரவின்கண் ஆற்றுளென வருந்திய தோழியை நோக்கி, "கார்காலம் வந்தது ; மயில்கள் கூவின ; அவை பேதைமையுடையன போலும்" என்று தலைவி கூறியது.]

நகூக. உவரி யொருதத லுழாது மடியப்
புகரி புழுங்கிய புயனீங்கு புறவிற்
கடிதிடி யுருமிற் பாம்புபை யவிய
இடியொடு மயங்கி யினிதுவீழ்ந் தன்றே
5. வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்
கையற வந்த பையுண் மாலைப்
பூஞ்சினை யிருந்த போழ்கண் மஞ்ஞை
தாநீர் நனந்தலை புலம்பக்
கூஉந் தோழி பெரும்பே தையவே.

எ - து. பிரிவிடைப் பருவவரவின்கண் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து சொல்லியது.

பொன்மணியார்.

(டி - ம்.) 1 'லுழாஅது' 3 'பாம்பு பையவிந்து' 5 'தழீஇயப்' 9 'கூவுந்தோழி'

(ப - ரை.) தோழி—, ஒருத்தல் உவரி - எருதானது வெறுத்து, உழாது மடிய - உழாமல் சோம்பிக்கிடக்கும்படி, புகரி புழுங்கிய - மான் வெம்மையோடு கிடந்த, புயல் நீங்கு புறவில் - மழை நீங்கிய முல்லை நிலத்தில், கடிது இடி உருமின் பாம்பு பை அவிய - விரைந்து இடிக்கும் உருமேற்றினால் பாம்புகளின் படம் அழிய, இடியொடு மயங்கி இனிது வீழ்ந்தன்று - இடியோடு கலந்து மழை இனியதாகப் பெய்தது ; வீழ்ந்த மா மழை தழீஇ - அங்ஙனம் பெய்த பெரிய மழையைப் பொருந்தி, பிரிந்தோர் கையற வந்த - தலைவரைப் பிரிந்த மகளிர் செயலறும்படி வந்த, பையுள் மாலை - துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தில், பூ சினை இருந்த போழ்

கண் மஞ்ஞை - மலரையுடைய கொம்பிலிருந்த போழ்ந்தாற் போன்ற கண்களையுடைய மயில்கள், தாம் நீர் நனந்தலை புலம்ப - பாய்கின்ற நீரையுடைய அகன்ற இடம் தனித்து வருந்த, கூஉம் - கூவாநின்றன ; பெரு பேதைய - அவை மிக்க பேதைமையையுடையன.

(முடிபு) தோழி, மழை ஒருத்தல் மடியப் பாம்பு பை அவிய மயங்கி வீழ்ந்தன்று ; மழை தழீஇ வந்த மாலை கூஉம் ; பெரும் பேதைய.

(கருத்து) கார்காலம் வந்தமையின் யான் வருந்துவேன்.

(வி - ரை.) உவரி - உவர்த்து ; வெறுத்து. புகரி - மான் ; புகர் - புள்ளி ; அதனையுடையது புகரி ;

"புகருழை யொருத்தல்" (அகநா. 219 : 13.)

என வருதல் காண்க.

"மழை பெய்தது ; அதுகண்டு மயில்கள் கூவின ; இவை கார் காலத்தைப் புலப்படுத்துகின்றன ; யான் எங்ஙனம் ஆற்றுவேன் !" என்று தலைவி கூறினாள். ஏ : அசைநிலை ; வினவுமாம்.

(ஒப்பு.) இடியார் பாம்பு வீழ்தல் : குறுந். 158 : 1-2, ஒப்பு.

6. பையுண்மாலை : குறுந். 172 : 2. கையறவந்த மாலை : குறுந். 32 : 1, 387 : 2.

7-9. மஞ்ஞை பேதைய : குறுந், 251 : 1. மஞ்ஞை கார்காலத்தில் கூவுதல் : குறுந். 194 : 3. (நகக)

தோழி கூற்று

[தலைவன் வரைவு நீட்டித்தானாக அவன் சிறைப்புறத்தே நிற்குங்கால் தோழி வண்டினை நோக்கிக் கூறுவாளாகி, "தலைவி இன்னும் தன் வீட்டிலேயே உறைகின்றாளென்று சொல்வாயாக" என்றது.]

நகஉ. அம்ம வாழியோ வணிச்சிறைத் தும்பி
நன்மொழிக் கச்ச மில்லை யவர்நாட்
டுண்ண னெடுவரைச் சேறி யாயிற்
கடமை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
5. துளரெறி நுண்டுகட் கிளைஞர் தங்கை
தமரிற் றீரா ளென்மோ வரசர்
நிரைசெல னுண்டோல் போலப்
பிரசந் தூங்கு மலைகிழ வோர்க்கே.

எ - து. வரைவிடைக் கிழத்தியது நிலைமை தும்பிக்குச் சொல்லுவாளாய்ச் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.

தும்பிசேர் கீரனார். (பி-ம். தும்பிசோகினார்.)

(பி - ம்.) 1 'மணிச்சிறைத்' 2 'யவர்நாட்டுத்தண்ணை' 4 'கடவை' 'துடவையை' 5 'துளிரெறி, 6 'தமராற்' 7 'நிரை சேர் நுண்டோர்போல' 8 'மலைகிழவோற்கே'

(ப - ரை.) அணி சிறை தும்பி - அழகிய சிறகுகளையுடைய தும்பியே, அம்ம - ஒன்று கூறுவன் கேட்பாயாக: நல் மொழிக்கு அச்சம் இல்லை - நல்ல மொழிகளை ஒருவர்பால் கூறுந்திறத்தில் அச்சம் இல்லை; அவர் நாடு - அத்தலைவருடைய நாட்டிலுள்ள, அண்ணல் நெடு வரை சேறி ஆயின் - தலைமையையுடைய உயர்ந்த மலைக்குச் செல்வாயாயின், அரசர் நிரை செலல் நுண் தோல் போல - அரசர்களது வரிசையாகச் செல்லுதலையுடைய நுண்ணிய கேடகங்களைப் போல, பிரசம் தூங்கும் மலைகிழவோர்க்கு - தேனடைகள் தொங்குகின்ற மலையையுடைய தலைவரிடத்தில், கடமை மிடைந்த-கடமை மான்கள் நெருங்கிய, துடவை அம் சிறு தினை - தோட்டத்திலுள்ள அழகிய சிறு தினையினிடத்தே, துளர் எறி நுண் துகள் களைஞர் தங்கை - களைக்கொட்டை எறிவதனால் உண்டாகிய நுண்ணிய புழுதியையுடைய களையெடுப்பாருடைய தங்கையாகிய தலைவி, தமரின் தீராள் - தன் சுற்றத்தாரிடத்தினின்றும் நீங்காளாயினள்; என்மோ - என்று கூறுவாயாக.

(மூடிபு) தும்பி, அச்சம் இல்லை; சேறியாயின் மலைகிழவோர்க்கு, களைஞர் தங்கை தீராளென்மோ.

(கருத்து) வண்டே, தலைவியினுடைய நிலையை நீ போய்த் தலைவனுக்குச் சொல்லுவாயாக.

(வி - ரை) தலைவன் வரைந்து கொள்வதாக உறுதி கூறியும் நீட்டித்த காலத்தில் தோழி கூறியது இது. வண்டை நோக்கிக் கூறினளாயினும், சிறைப்புறத்தானாகிய தலைவனுக்கு உணர்த்துவதே அவள் கருத்து.

வாழியோ: அசைநிலை; தும்பியால் மூடித்துக்கொள்ளும் குறையுடைமையின் அதனை வாழ்த்தியதுமாம். மணிச்சிறையென்னும் பாடத்திற்கு, நீலமணியைப் போன்ற சிறகென்று பொருள் கொள்க.

'நன்மொழிக்கு அச்சமில்லை' என்றது, தான் கூறப்புகுவது நன்மை பயப்பதென்னும் கருத்தை உண்டாக்கியது. துளரெறிந்தமையால் மண்ணின் துகள் மேனியிற் படிந்தது. துளர் - களைக்கொட்டு (மலைபடு. 122, உரை.)

தமரிற்றீராளென்றது, தலைவனுல் வரையப்பட்டுத் தலைவனே டிருந்து இல்லறம் நடத்தற்குரியவள் இன்னும் தமரோடு வாழும் வாழ்க்கையையே யுடையவளாயினுளென்னும் குறிப்பினது. மோ: முன்னிலையசை.

தமரின்தீராள் - தமர் செய்யும் கொடுமை உயிரை நீக்குமள வினதாயிருப்பவும், இன்னும் வாழ்வாளாயினுளென்று பொருள் கொள்ளுதலும் ஒன்று ; இக்கருத்து தமரது காப்புமிகுதி முதலிய கொடுமைகளைத் தலைவனுக்கு அறிவுறுத்துவது.

நுண்டோர்போலவென்ற பாடத்திற்கு நுண்ணிய கைத் தொழிலையுடைய தேரைப்போலவெனப் பொருள்கொள்க. ஏ : ஈற்றசை.

தும்பியை விளித்துக் கூறியதாக அமைத்தமையின் இச் செய்யுளைப் பாடிய புலவர் தும்பிசேர் கீரனுரென்னும் பெயர் பெற்றார் போலும்.

(ஒப்பு.) 1. அணிச்சிறைத் தும்பி : "அஞ்சிறைத்தும்பி" (குறுந். 2 : 1, ஒப்பு.) பி - ம். மணிச்சிறைத்தும்பி : கலி. 46 : 2.

3. அண்ணல் நெடுவரை : குறிஞ்சிப். 54 ; அகநா. 75 : 8.

8. பிரசந்தூங்குமலை : குறுந். 273 : 5, ஒப்பு.

7-8. தேனடைக்குக் கேடகம் : சீவக. 1561.

மு. வண்டுவிடு தூது : நற். 277. (கூகூ)

தோழி கூற்று

[தலைவன் சிறைப்புறத்தே நிற்ப, "தலைவன் நின்னேடு பழகிய காலம் சிறிதாயினும் அது குறித்து எழுந்த அலர் பெரிதாயிற்று" என்று தலைவிக்குக் கூறுவாளாய்த் தோழி வரைவின் இன்றியமை யாமையை உணர்த்தியது.]

நகூந. மயங்குமலர்க் கோதை குழைய மகிழ்நன்
முயங்கிய நாடவச் சிலவே யலரே
கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்
பசும்பூட் பாண்டியன் வினவ லதிகன்
5. களிறெருடு பட்ட ஞான்றை
ஒளிறுவாட் கொங்க ராரப்பினும் பெரிதே.

எ - து. தலைமகன் சிறைப்புறமாகத் தோழி அலர்மலிவுரைத்து வரைவுகடாயது.

பரணர்.

(பி - ம்) 5 'ஞான்றை'

(ப - ரை.) மகிழ்நன் - தலைவன், மயங்கு மலர் கோதை குழைய - விராவிய மலரையுடைய நின் மாலை குழையும்படி, முயங்கிய நாள் - அணைந்த நாட்கள், தவ சில - மிகச் சிலவாகும்; அலர் - பழிமொழியோ, கூகை கோழி-கோட்டானுகிய கோழியை யுடைய, வாகை பறந்தலை - வாகை யென்னுமிடத்துள்ள போர்க் களத்தில், பசு பூண் பாண்டியன் வினை வல் அதிகன் - பசிய பூணை யணிந்த பாண்டியனது ஏவலிலே வல்ல அதிகன், களிறொடு பட்ட ஞான்றை - தனது யானையோடு பட்ட காலத்தில், ஒளிறு வாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிது - விளங்குகின்ற வாட்படையை யுடைய கொங்கர்களுடைய வெற்றியாலுண்டாகிய ஆரவாரத் தினும் மிக்கது.

(முடிபு) மகிழ்நன் முயங்கிய நாள் சிலவே; அலர் ஆர்ப்பி னும் பெரிது

(கருத்து) அலர் மிக்கது.

(வி - ரை.) கோதை: தலைவி யணிந்தது. கோதை குழைய முயங்குதல் முயக்கத்தின் செறிவை உணர்த்தியது. சிலவே: ஏ பிரிநிலை. அலரே: ஏ அசைநிலை.

கோழியிருந்து கூவ வேண்டிய விடத்துக் கூகை கூவிற்று தலின் கூகைக் கோழி யென்றார்;

"கூகைக் கோழி யாஅத், தாழிய பெருங்காடு" (புறநா. 364: 12 - 3); கூகையொடு சேர்ந்த காட்டுக் கோழி யென்பதும் பொருந்தும்.

வாகைப் பறந்தலையை, "சூடா வாகைப் பறந்தலை" (அகநா. 125: 19). என்றுபிறவிடத்தும் இவ்வாசிரியரே கூறுவர். வாகை யென்பது ஓரூர்ப்பெயர் போலும்.

அதிகன் பசும்பூட் பாண்டியனுடைய அதிகாரிகளுள் ஒருவன்; இச்செய்தி பரணர் பாடிய, "கொளக்குறை படாஅ" (அகநா. 162) என்னும் பாட்டிற் குறிப்பிக்கப்பெறும்.

பசும்பூட் பாண்டியனுக்கும் கொங்கருக்கும் பகைமை யுண் டென்பதும் அவ்விருவரிடையே போர் நிகழ்ந்ததென்பதும்,

"வாடாப் பூவிற் கொங்க ரோட்டி
நாடுபல தந்த பசும்பூட் பாண்டியன்" (அகநா. 253: 4 - 5)

என்பதனால் வெளியாகும். கொங்கரால் அதிகன் போரிற் கொல்லப்பட்டபின்னர்ப் பாண்டியன் மிடல் கொண்டு கொங்க ரொடு பொருது அவரைத் தோல்வியுறச் செய்திருத்தல் கூடும்.

களிற்றெருடுபடுதல் களிற்றுடனிலே யென்னும் துறைப்பாற் படும். வென்ற வீரர் ஆர்த்தல் இயல்பு. பெரிதே: ஏ அசை நிலை; தேற்றமுமாம்.

(ஒப்பு.) 1-2. கோதை குழைய முயங்குதல்: கலி. 68 : 14, 91 : 11-2, 112 : 23; புறநா. 73 : 14; சீவக. 582, 2034.

5. களிற்றெருடுபடுதல்: "குன்றத் தன்ன களிற்றெரு பட்டோன்" (புறநா. 307 : 2.) 6. வென்றவீரர் ஆர்த்தல்: குறுந். 34 : 5, ஒப்பு.

2-6. அலர் ஆர்ப்பினும் பெரிது: குறுந். 328 : 4-8, ஒப்பு. (கஙஙக)

தோழி கூற்று

[வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த காலத்து ஆற்றாளாகிய தலைவியை நோக்கி, "தலைவன் முன்பு இனியனாகத் தோற்றி இப்பொழுது இன்னாமைக்கு ஏதுவானான்" என்று தோழி கூறியது.]

நகூசு. முழந்தா ளிரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறமக ளீன்ற
குறியிறைப் புதல்வரொடு மறுவந் தோடி
முன்னு ளினிய தாகிப் பின்னுள்
5. அவர்தினை மேய்தந் தாங்குப்
பகையா கின்றவர் நகைவிளை யாட்டே.

எ - து. வரைவிடை ஆற்றுளாகிய கிழத்தியை ஆற்றுவிக்கும் (பி - ம். ஆற்றுவிக்கலுறும்) தோழி தலைமகனை இயற்பழித்துக் கூறியது.

குறியிறையார் (பி - ம். குறையிறையார்.)

(பி - ம்.) 2 'யாகத்துக்' 3 'மறுவரவந்தோடி' 5 'வார் தினைப்', 'அவர் தினைப் புன மேய்ந்தாங்கு.' சில பிரதிகளில் நாலாம் அடிக்கு முன் 'கூரை முற்றுஞ் சார னுடன்' என்று ஓரடி காணப்படுகின்றது.

(ப - ரை) முழந்தாள் இரு பிடி - முழந்தாளையுடைய கரிய பிடியினது, கய தலை குழவி - மெல்லிய தலையையுடைய கன்று, நறவு மலி பாக்கத்து - கள்மிக்க மலைப்பக்கத்தூரில், குறமகள் ஈன்ற - குறத்தி பெற்ற, குறி இறை புதல்வரொடு மறுவந்து ஓடி - குறிய கைச்சந்தையுடைய பிள்ளைக்களோடு சுற்றி ஓடி, முன் நாள் இனியதாகி - முற்காலத்தில் இனிமையைத் தருவதாகி, பின் நாள்-

பிற்காலத்தில், அவர் தினை மேய்ந்தாங்கு - அவர்களுடைய தினையை மேய்ந்தாற் போல, அவர் நகை விளையாட்டு - தலைவர் நம்மோடு முன்பு நகைத்து விளையாடியது, பகையாகின்று - இப் போது பகைமையையுடையதாகின்றது.

(வி - ரை.) குறிய இறை குறியிறையென விகாரம்; சிறிய விலை, சிறியிலை (புறநா. 109 : 4) என்பது போல. "குறவர் குழந்தை களோடு விளையாடி மகிழ்ச்சியை விளைவித்த யானைக்கன்று பின் அவருக்குரிய தினையையுண்டு அவருக்குத் துன்பத்தை விளைத்தது போல முன்னுள் நின்னோடு அளவளாவி மகிழ்ந்ததலைவனது நட்பு அப்பொழுது இன்பத்தைப் பயந்து இப்பொழுது நின் அழகு கெடுதற்கு ஏதுவாயிற்று" என்று உவமையை விரித்துக் கொள்க;

" .....நன்மலை நாடன்
புணரிற் புணருமா ரெழிலே பிரியின்
மணிமிடை பொன்னின் மாமை சாயவென்
அணிநலஞ் சிதைக்குமார் பசலை யதனுல்
அசுணங் கொல்பவர் கைபோ னன்றும்
இன்பமுந் துன்பமு முடைத்தே
தண்கமழ் நறுந்தார் விறலோன் மார்பே" (நற். 304 : 4-10)

என்பதில் இக்கருத்து வேறு வகையாக அமைக்கப்பட்டுள்ளது.

நகைவிளையாட்டு : இடக்கரடக்கல்.

அவர் முன்பு இன்பத்தைத் தருபவர்போலத் தோற்றி விளை யாடிப் பின் துன்பத்தை விளைவித்து வஞ்சித்தாரென்பது படக் கூறினமையின் இஃது இயற்பழித்ததாயிற்று.

(ஒப்பு.) 1. முழந்தாள் இரும்பிடி : பெரும்பாண். 53; மலைபடு. 127; கலி. 50 : 2. கயந்தலை : நற். 171 : 3; கலி. 11 : 8.

2. நறவுமலிபாக்கம் : மதுரைக். 137.

1-3. குறச்சிறுமி யானைக்கன்றும் : "கருங்க ணெயிற்றி காதன் மகளெடு, கான விரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்" (புறநா. 181 : 2-3.)

6. நகை விளையாட்டு : குறுந். 304 : 8; 401 : 5. விளையாட்டுப் பகையா தல் : சீவக. 909. (கூகூச)

மு, குறுந். 381 : 3-7.

தலைவி கூற்று

[தலைவன் வரைவிடை வைத்துப் பிரிந்தகாலத்தில் ஆற்றுளா கிய தலைவி, "நாம் தலைவனிருக்கும் இடத்திற்குச் செல்வேமாக" என்று தோழிக்குக் கூறியது.]

நெஞ்சே நிறையொல் லாதே யவரே
அன்பின் மையி னருள்பொரு ளென்னர்;
வன்கண் கொண்டு வலித்துவல் லுநரே;
அரவுநுங்கு மதியினுக் கிவணேர் போலக்
கனையா ராயினுங் கண்ணினி தடுஇயர்
அஞ்ச லென்மரு மில்லை யந்தில்
அளிதோ தானே நாணே
ஆங்கவர் வதிவயி னீங்கப் படினே.

எ - து. வரைவிடை வைத்துப் பிரிய, ஆற்ருளாகிய கிழத்தி நாம் ஆண்டுச் சேறுமெனத் தோழிக்கு உரைத்தது.

[ஆசிரியர்பெயர் காணப்படவில்லை.]

(பி -ம்.) 4 'யாவது மதியிற்', 'அரவுறுமதியிற்'; 'மதியிற் கிவரேர்' 5 'கனையல', 'கண்ணின்றுபடூஇ'; 'படூஇ' 6 'அஞ் சேல்' 8 'யாங்காவாவதுவை', 'யாங்காவாவது'

(ப - ரை.) நெஞ்சு நிறை ஒல்லாது - என் நெஞ்சம் நிறுத் தலேச் செய்ய இயலாது; அவர் - அத்தலேவர், அன்பு இன்மையின் - என்பால் அன்பின்மை காரணமாக, அருள் பொருள் என்னர் - அருளேப் பொருளென்று கருதாராயினர்; வன்கண் கொண்டு வலித்து வல்லுநர் - வன்கண்மையை மேற்கொண்டு என்னே வற் புறுத்தி அவ்வற்புறுத்தலில் வன்மையைப் பெற்ருேர், அரவு நுங்கு மதியினுக்கு இவணேர் போல - அரவினுல் உண்ணப்படும் சந்திரன் திறத்தில் இவ்வுலகத்திலுள்ளோர் செயல் போல, கனை யார் ஆயினும் - எனது துன்பத்தை நீக்காராயினும், இனிது கண் படூஇயர் - இனிமையாகக் கண்படுகின்றனர்; அஞ்சல் என்மரும் இல்லை - அஞ்சற்க வென்று கூறி நம்மைத் தேற்றுவாரும் இங்கே இல்லை; ஆதலின், ஆங்கு அவர் வதி வயின் - அங்கே அத்தலேவர் தங்குமிடத்திற்கு, நீங்கப்படின் - நாம் நீங்கிச் சென்ருல், நாண் அளிது - நம் நாணம் இரங்கத்தக்கது; அஃது அழியும்.

(முடிபு) நெஞ்சு நிறை ஒல்லாது; அவர் அருள்பொருள் என்னர்; வலித்து வல்லுநர் கண் இனிது படூஇயர்; அஞ்சலென் மரும் இல்லை; நீங்கப்படின் நாண் அளிது.

(கருத்து) நாம் தலேவர் உள்ள இடத்திற்குச் செல்வேமாக.

(வி - ரை.) நிறை - நிறுத்தல்; காமத்தை ஆற்றி நிறுத்தல்; அங்ஙனம் நிறுத்தல் கூடுமெனின் தலேவி ஆற்றுவாள்; அது கூடா

மையின் ஆற்றுளாயினள். அவர் : நெஞ்சறி சுட்டு. அன்பு இன்மையின் அருளும் இலதாயிற்று ; அன்பு விரிந்து அருளுண்டாதல் இயல்பு (குறுந். 20 : 1.) 'அருளேயே பெறுதற்குரிய பொருளாகக் கருதினராயின் அவ்வருளைத் துறவாது என்பால் இரக்கம் பூண்டு ஈண்டே இருப்பர்' என்பது தலைவியின் நினைவு. வலித்து வல்லுரு என்றது தோழியை.

'சந்திர கிரகணம் வந்தகாலத்தில் அதைக்கண்டு பலபேசிப் பின் துயில்வாரைப் போலத் தோழி என் துயரைக் கண்டு பல கூறி வற்புறுத்திப் பின் இனிதே துயின்றாள்' என்பது பட உவமை நின்றது.

இவணென்றது இவ்வுலகத்தைக் குறித்தது (புறநா. 50 : 14)

'தலைவர் அருள் பொருளென்னாகித் துணிந்து என்னைப் பிரியும் வன்மை பெற்றார் ; ஈண்டுள்ளாரில் என் துயரத்தைக் களையாராயினும் யான் துயிலும்படியாவது அஞ்சலென்று கூறுவாரில்லை' என்று பொருள்கொள்ளுதலும் ஆம்.

தலைவன் உள்ளவிடத்துப் போவேமாகவென்று தலைவி கூறும் மரபு,

"காமக் கிழவ னுள்வழிப் படினும்
தாயி னன்மொழி கிழவி கிளப்பினும்" (தொல். களவு. 22)

என்னும் இலக்கணத்தாற் பெறப்படும். அங்ஙனம் போவதாயின் நாண் அழியும் ;

"பகலே பலருங் காண நாண்விட்
டகல்வயற் படப்பை யவனூர் வினவிச்
சென்மோ" (நற். 365 : 3-5, பி - ம்)

நீங்கப்படினென்றது, நீங்கும் விருப்பத்தையும் அது செய்தலருமையையும் புலப்படுத்தியது.

ஏகாரங்கள், ஓ, தான் : அசைநிலைகள்

(ஒப்பு.) 2. அருள் பொருளென்னார் : (குறுந். 20 : 1-2, ஒப்பு) ; "பொருள் வயிற் பிரிதல் வேண்டு மென்னும், அருளில் சொல்லு நீசொல் லினையே" (கலி. 21 : 4-5.)

3. வல்லுநர் : குறுந். 180 : 7.

2-3. தலைவன் அன்பும் அருளும் இன்றிப் பிரிதல் : குறுந். 21 : 1-2, ஒப்பு.

4. அரவு நுங்குமதி : "பாம்புசேர் மதிபோல" (கலி. 15 : 17) ; "அரவுநுங்கு மதியி னெனைய மறையும்", "அரவுநுங்கு மதியி னுதலொளி கரப்ப" (அகநா. 114 : 5, 313 : 7) ; "அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டென" (தொல். அகத். 3, ந. மேற்.) : "காளமாசுணங் கதிர்மதிக் குழவியைக், கோளிழைத் திருக்குங் கொள்கை போல" (திருவாரூர் மும். 25.)

7. அளிதோதானே : குறுந். 212 : 4, ஒப்பு.
மு. குறுந். 149 : 1.
8. தலைவி தலைவன் இருக்குமிடஞ் செல்ல நினைதல் : குறுந். 11.

(நகரு)

செவிலித்தாய் கூற்று

[தலைவனுடன் தலைவி சென்றபின் செவிலித்தாய் அவளது இளமைத் தன்மையையும் பாலையின் வெம்மையையும் நினைந்து வருந்திக் கூறியது.]

நகசு. பாலு முண்ணுள் பந்துடன் மேவாள்;
விளையா டாயமொ டயர்வோ ளினியே
எளிதென வுணர்ந்தனள் கொல்லோ முளி
ஓமை குத்திய வுயர்கோட் டொருத்தல்[சினை
5. வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவா அன்
மழைமுழங்கு கடுங்குர லோர்க்கும்
கழைதிரங் காரிடை யவணெடு செலவே.

எ - து. மகட்போக்கிய தாய் உரைத்தது.
கயமன்

(பி - ம்.) 3 'வுரைத்தனள்'; 'முறிசினை' 4 'ஓமைக்'; டொருத்தனல்' 5 'வெவ்வறைக்' 7 'செலலே'

(ப - ரை) பாலும் உண்ணுள் - பாலையும் உண்ணுளாகி, பந்துடன் மேவாள் - பந்தையும் விரும்பாளாகி, விளையாடு ஆயமொடு அயர்வோள் - முன்னர்த் தன்னோடு விளையாடும் மகளிர் கூட்டத்தோடு விளையாடிய தலைவி, இனி - இப்பொழுது, முளி சினை ஓமை குத்திய - உலர்ந்த கிளையையுடைய ஓமைமரத்தினைக் குத்திய, உயர் கோடு ஒருத்தல் - உயர்ந்த கொம்பையுடைய ஆண் யானை, வேனில் குன்றத்து வெ அரை கவா அன் - வேனிலின் தன்மையையுடைய மலையினிடத்துள்ள வெம்மையாகிய அடிவாரத்தில், மழை முழங்கு கடு குரல் ஓர்க்கும் - மேகம் முழங்குகின்ற கடிய முழக்கத்தைக் கூர்ந்து கேட்கும், கழை திரங்கு அரு இடை - மூங்கில்கள் உலர்ந்த செல்லுதற்கரிய இடத்திலே, அவணெடு செலவு - அத்தலைவனோடு செல்லுதல், எளிது என உணர்ந்தனள் கொல்லோ - எளிமையையுடையதென்று அறிந்தாளோ?

(முடிபு) உண்ணுள், மேவாள், அயர்வாள், இனி அவனெடு செலவு எளிதென உணர்ந்தனள்கொல்லோ?

(கருத்து) தலைவி தலைவனெடு செல்லுதல் எளிதென நினைத் தனளோ?

(வி - ரை.) 'பாலு முண்ணுது தனக்கு இனிய பந்தையும் விரும்பாது ஆயத்தோடு இடைவிடாது விளையாடும் இயல்புடை யாள் எங்ஙனம் ஆயத்தைப் பிரியத் துணிந்தாள்!' என்று செவிலி இரங்கினுள்; தலைவியின் இளமைத்தன்மைக்கு இரங்கிய படி.

பாலும்: உம்மை உயர்வு சிறப்பு. பந்துடன் - பந்தை; உருபு மயக்கம். கொல்: ஐயம்; ஓ: இரங்கற் குறிப்பு.

ஓமையின் பட்டையைக் குத்தி அதிலுள்ள நீரையுண்ண எண்ணிய யானை அஃது உலர்ந்திருந்தமையின் வருந்தி, இடியின் ஒலியைக் கேட்டு, 'மழை பெய்யும் போலும்' என்று அலந்து நின்றது. யானையின் நிலை, ஓமையின் சினை, கழைதிரங்கினமை ஆகிய யாவும் பாலையில் வேனிற்றன்மை நிலைபெற்றதை வெளிப் படுத்தின.

வேனிற் குன்றத்தென்று பாலையைக் கூறினள், குறிஞ்சி திரிந்த பாலையாதலின். வெவ்வறைக் கவாஅனென்ற பாடத்திற்கு வெம்மையையுடைய பாறைகளையுடைய மலைக்கவாஅனென்று பொருள்கொள்க.

அவன் - தலைவன்; நெஞ்சறி சுட்டு.

ஏகாரங்கள் அசைநிலைகள்.

இதனை நற்றாய் கூற்றாகவும் கொள்ளுதல் பொருந்தும்.

(ஒப்பு) 1. தலைவி பால் உண்ணுமை: அகநா. 48: 2, 89: 20. தலைவி பந்தினை விரும்புதல்: அகநா. 49: 1.

3-4. முளிசினை ஓமை: குறுந். 388: 5. யானையும் ஓமையும்: (குறுங். 79: 1-2, ஒப்பு); "கடும்பகட் டொருத்த னடுங்கக் குத்திப், போழ்புண் படுத்த பொரியரை யோமை" (அகநா. 397: 10-11.)

6. மழைக்குரல்: குறுந். 94: 7.

7. கழைதிரங்காரிடை: குறுந். 331: 1, ஒப்பு. (கஙசு)

தோழி கூற்று

[வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரியப்புக்க தலைவனை நோக்கி, "தலைவி நின் தண்ணளியால் வாழும் நிலையினள்; ஆதலின் விரைவில் மீண்டு வருவாயாக" என்பதுபடத் தோழி சொல்லியது.]

நகூஎ. நனைமுதிர் ஞாழற் சினைமரு டிரள்வீ
நெய்தன் மாமலர்ப் பெய்தல் போல
ஊதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப
தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
5 டன்ஞ வென்னுங் குழவி போல
இன்ஞ செயினு மினிதுதலை யளிப்பினும்
நின்வரைப் பினளென் றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ விலளே.

எ - து. வரைவிடை வைத்து நீங்கும் தலைமகற்குத் தோழி உரைத்தது.

அம்மூவன்.

(பி - ம்.) 1 'நனைமுது', 'நனைமரு'; 'றினைமருள்', 2 'பெய்த போல' 5 'டன்ஞ யென்னும்' 7 'நின்னல திலளென்' 8 'தன்னுடை யின்னல்'; 'விலரே'

(ப - ரை.) நனை முதிர் ஞாழல் சினை மருள் திரள் வீ - அரும்புகள் முதிர்ந்த ஞாழலினது முட்டையைப்போன்ற திரண்ட மலர்களை, நெய்தல் மா மலர் பெய்தல் போல - நெய்தலது கரிய மலரிலே பெய்வதைப்போல, ஊதை தூற்றும் - குளிர்காற்றுத் தூவுகின்ற, உரவு நீர் சேர்ப்ப - வன்மையையுடைய கடற் கரைக்குத் தலைவ, தாய் உடன்று அலைக்கும் காலையும் - தாய் மாறு பட்டு வருத்தியபொழுதும், வாய்விட்டு அன்ஞ என்னும் குழவி போல - வாய்திறந்து அன்னையே என்று அழும் குழந்தையைப் போல, என் தோழி - என் தோழியாகிய தலைவி, இன்ஞ செயினும் - நீ இன்னுதவற்றைச் செய்தாலும், இனிது தலையளிப்பினும் - இனிதாகத் தலையளி செய்தாலும், நின் வரைப்பினள் - நின்னுற் புரக்கப்படும் எல்லைக்கு உட்பட்டவள்; தன் உறு விழுமம் களைஞர் இலள் - நின்னையன்றித் தனது மிக்க துன்பத்தை நீக்குவாரைப் பெற்றிலள்.

(முடிபு) சேர்ப்ப, இன்ஞசெயினும் இனிது தலையளிப்பினும் என் தோழி நின்வரைப்பினள்; விழுமம் களைஞர் இலள்.

(கருத்து) நீ தலைவியினது துன்பங்கருதி விரைவில் வருவாயாக.

(வி - ரை.) ஞாழல்வீ, சினைமருள்வீ யென்று கூட்டுக. ஞாழலினது பூ ஐயவி போன்றதென்று கூறுதலாலும் (குறுந். 50 : 1), ஐயவிக்கு ஆரல் முட்டையை உவமை கூறுதலாலும் (புறநா.

342 : 9) இங்கே சினையென்றது ஆரன்மீன் முட்டையையென்று கொள்க. தினைமருளென்னும் பாடத்திற்குத் தினையை யொத்த வென்று பொருள் கொள்க.

ஞாழலிலுள்ள பூக்களை நெய்தல் மலர் நிறையும்படி உதிர்த்தமையின் 'பெய்தல் போல' என்றாள். உரவு நீர் - உலாவும் நீரென லுமாம்.

அன்னையென்பது விளியேற்று அன்னவென நின்றது (குறுந். 161 : 4); "ஆவன்ன வலந்தே னெழுந்திராய்" (பழம் பாடல்.)

'அன்னை அலைப்பினும், அணைப்பார் பிறரின்றி அவள் மாட்டே செல்லும் குழவிபோல, நீ அருளின்றிப் பிரியினும் நின் மாட்டே செல்லும் காதலுடையாள் தலைவி' என்று உவமையை விரித்துக் கொள்க.

ஓ, ஏ : அசைநிலைகள்.

இதனால், விரைவில் இவள் துன்பத்தைக் களைய வருதல் கடனென்பதைத் தோழி உணர்த்தினாள்.

(மேற்.) மு. தோழி தலைவியைத் தலைவனிடம் ஒம்படுத்துக் கூறியது (இறை. 23); தலைவற்குத் தோழி, தலைவியைப் பாதுகாத்துக்கொள்ளென்று கூறியது (தொல். களவு. 23, ந.); பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தது (நம்பி. 182.)

(குறிப்பு.) நச்சினார்க்கினியர் கருத்து சிறப்புடையது.

(ஒப்பு.) 3, மு. நற். 15 : 3.

4-5. தாய் அலைப்பினும் குழவி அவளையே நாடுதல் : "குழவி, அலைப்பினு மன்னேயென் றோடும்" (நான்மணி 25); "தருதயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணில்லை, விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே, அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவ டன், அருணினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே" (பெரு மாள். 5 : 1.)

6. தலைவன் இன்னு செய்தல் : குறுந். 288 : 3-4, 309 : 7.

7. பி - ற். நின்னலதிலள் : (குறுந். 115 : 6); "புன்னையம் பூங் கானற் சேர்ப்பனைத் தக்கதோ, நின்னல்ல தில்லென் றுரை" (ஐந். எழு. 58.) 8. விழுமங் களைதல் : நற். 216 : 3-4. (கஉள)

தலைவி கூற்று

[தலைவனது பிரிவைத் தலைவிக்கு உணர்த்திய தோழி, "உலகி லுள்ள மகளிர் தம் தலைவர் வினைமுடித்து வருமளவும் ஆற்றி யிருப்பார்" என்று உலகின்மேல் வைத்துக்கூறி, "நீ ஆற்றல் வேண்டும்" என்பதை அறிவுறுத்தினளாக, "நம்மை அறிவுறுத்து வாரையன்றி நம்துயரைப் போக்குவாரைக் கண்டிலேம்" என்று தலைவி கூறியது.]

நகூஅ. தேற்ரு மன்றே தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலைத் துயர்கூர் காலைக்
கயலே ருண்கட் கனங்குழை மகளிர்
கைபுணை யாக நெய்பெய்து மாட்டிய
5. சுடர்துய ரெடுப்பும் புன்கண் மாலை
அரும்பெறற் காதலர் வந்தென விருந்தயர்பு
மெய்ம்மலி யுவகையி னெழுதரு
கண்கலி ழுகுபனி யரக்கு வோரே.

எ - து. பிரிவுணர்த்திய தோழி, தலைமகன் பிரிந்து வினை முடித்து வருந்துணையும் ஆற்றியுளராவரென்று உலகின்மேல் (பி - ம். உலகியல்மேல்)வைத்து உரைத்தாட்குத் தலைமகள் ஆற்ருமை மீதூரச் சொல்லியது.

பாலைபாடிய பெருங் கடுங்கோ.

(பி - ம்.) 1 'செற்ருமன்றே' 2 'துற்றுந்', 'திவலைத்' 4 'கையுறை' 5 'சுடர்துயி லெடுப்பும்' .7 'மெய்வலி' 8 'கண்க லிழுங்குபனி'

(ப - ரை.) தோழி—, தண் என - குளிர்ச்சி உண்டாகும்படி, தூற்றும் துவலை - தூவுகின்ற மழைத் துளியையுடைய, துயர் கூர் காலை - துயரம் மிக்க பொழுதில், கயல் ஏர் உண் கண் - கயலை ஒத்த மையுண்ட கண்களையும், கனம் குழை மகளிர் - கனத்தை யுடைய குழையையுமுடைய மகளிர், கை புணை ஆக - தம் கையே கருவியாக, நெய்பெய்து மாட்டிய சுடர் - நெய்யை வார்த்து ஏற் றிய விளக்கு, துயர் எடுப்பும் - துயரத்தை எழுப்புகின்ற, மாலை - மாலைக்காலத்தில், அரு பெறல் காதலர் வந்தென - பெறுதற்கரிய தலைவர் வந்தாராக, விருந்து அயர்பு - விருந்து செய்து, மெய் மலி உவகையின் - உடம்பு பூரிக்கும் மகிழ்ச்சியோடு, எழுதரு - முன் எழுந்த, கண் கலிழ் உகுபனி - கண் கலங்கியதால் வீழ்கின்ற நீர்த்துளியை, அரக்குவோர் - துடைப்போரை, தேற்ரும் - அறியேம்.

(முடிபு) தோழி, மாலையில் காதலர் வந்தென அயர்பு பனி அரக்குவோரைத் தேற்ரும்.

(கருத்து) என் துன்பமறிந்து அதனைப் போக்குவாரைக் காணேன்.

(வி - ரை.) தேற்ரும் - அறியேம். 'பிரியுங்கால் துயர் பொறுத்தாற்றுவது உலகியல்' என்ருட்கு மாருக, 'பிரிந்து வருங்

கால் உவகை கொள்ளல் உலகியல் என்று தலைவி கூறியதாகக் கொள்க. இதனால் பிரிந்திருத்தலின் கொடுமை உணர்த்தப்பட்டது.

அன்று, ஏ : அசைநிலைகள். துவலைத்துயர்கூர்காலையென்றமையின் இங்கே குறிக்கப்பட்ட பருவம் கூதிராயிற்று.

கயலேருண்கண்ணும் கனங்குழையும் உடையாரென்றது இயற்கையழகும் செயற்கையழகும் பொருந்தினரென்றபடி. புணை - ஆதாரம்; இங்கே கருவி. மாட்டிய - கொளுத்திய. சுடர் துயரெடுப்புதலாவது மாலைக்காலத்தை அறிவுறுத்திக் காமநோய் மிகுதற்குக் காரணமாதல்.

மாலையில் மகளிர் விளக்கேற்றுதல் மரபு.

மெய்ம்மலியுவகை - உடம்பு பூரிக்கும் உவகை (புறநா. 45 : 9, உரை.) எழுதரு-முன்பு எழுந்த. அரக்குவோர் : தோழிமார். தலைவியர் மாலைக்காலத்தில் துயர் மிக்குக் கலிழ்ந்து நிற்ப, தோழியர் தலைவர் வந்ததறிந்து விருந்தயர்ந்து தலைவியர் கண்ணீரைத் துடைப்பர் அயர்பென்பதை எச்சத்திரிபாகக்கொண்டு விருந்தயரும்பொருட்டென்று பொருள்கூறலும் அமையும்.

தலைவர் வந்தாரென்று கூறி அழுதகண் துடைப்பாரையன்றி, ஆற்றியிருத்தல் வேண்டுமென்று அறங்கூறுவாரையே பெற்றேனென்று தலைவி இரங்கிக் கூறினள்.

கலிழுகுபனி : "வரிப்புணை பந்து" (முருகு. 68) என்பது போல நின்றது.

உவகையின் எழுதரு கண்பனியென்று கூட்டி உவகையினால் எழுந்த இன்பக் கண்ணீரென்று பொருள் கொள்ளுதலும் பொருந்தும் (சீவக. 1043)

(ஒப்பு.) 1-2. வாடை துயர்தருதல் : குறுந். 103 : 4, ஒப்பு.

3. கனங்குழை : குறள், 1081.

4-5. நெய் பெய்து மாட்டிய சுடர் : "நெய்சொரிந்து, பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி" (நெடுநல். 102-3.)

3-5. மகளிர் மாலையில் விளக்கேற்றுதல் : "மங்கையர், நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக், கையமை விளக்க நந்துதொறு மாட்ட" (மூல்லைப். 47-9); "மாலை...இனியோள், மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே" (நற். 3 : 6-9); "எல்வளை மகளிர் மணிவிளக் கெடுப்ப, மல்லன் மூதூர் மாலைவந் திறுத்தென", "மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர், கோலங் கொடியிடையார் தங்கொள்ள" (சிலப். 4 : 19-20, 9 : 3-4); "பைந்தொடி மகளிர் பலர்விளக் கெடுப்ப" (மணி, 5 : 134); "அகிலு றங்கை சிவப்ப நல்லோர், துகிலின் வெண்கிழித் துய்க்கடை நிமிடி, உள்ளிழு துறீஇய வொள்ளடர்ப் பாண்டிற், றிரிதலைக் கொளீஇ யெறிதரு மாலை" (பெருங். 1. 33 : 91-4.)

6. தலைவர் வந்தாரென்று தலைவியர் விருந்தயர்தல் : குறுந். 33, வி - ரை; 155 : 6, ஒப்பு.

7. மெய்ம்மலி யுவகை : நற். 43 : 7 ; கலி. 40 : 32 ; அகநா. 262 : 12-3, 272 : 12 : புறநா. 45 : 9.

8. கண்பனி அரக்குதல் : "பெருமதர் மழைக்கண் வருபனியரக்கி", "வடிவே லுண்கண் வருபனி யரக்கி" (பெருங். 1. 33 : 136, 36 : 99.)

(கூகூஅ)

தலைவி கூற்று

[வரைவு நீட்டித்த காலத்துத் தலைவி தோழியை நோக்கி, "தலைவர் உடனுறையின் நீங்கியும் பிரியின் ஒன்றியும் நிற்கின்றது பசலை" என்று கூறியது]

நகூகூ. ஊருண் கேணி யுண்டுறைத் தொக்க
பாசி யற்றே பசலை காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

எ - து. வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பரணர்.

(பி - ம்) 1 'யுண்டுறை தொக்க' 4 'விடுவுழி பரத்தலானே'

(ப - ரை.) தோழி, பசலை - பசலையானது, காதலர் - தலைவர், தொடுவுழி தொடுவுழி - நம்மைத் தீண்டுந்தோறும், நீங்கி - நம் உடலை விட்டு அகன்று, விடுவுழி விடுவுழி - பிரியுந்தோறும், பரத்தலான்-பரவுதலால், ஊர் உண் கேணி உண் துறை தொக்க - ஊரினரால் உண்ணப்படும் நீரையுடைய கிணற்றின் உண்ணுந் துறையினிடத்தே கூடிய, பாசி அற்று - பாசியைப் போன்றது.

(முடிபு) பசலை, நீங்கிப் பரத்தலான் பாசியற்று.

(கருத்து) பசலைநோய் மிக்கமையால் யான் வருந்துவேனுயினேன்.

(வி - ரை) ஊரால் உண்ணப்படும் நீரையுடைய கேணி ; கேணி : ஆகுபெயர், நீருக்காதலின். பாசி மக்கள் நீர் கொள்ளுங்கால் விலகியும் பின் கூடியும் நிற்றல்போலப் பசலை தலைவன் முயங்குங்கால் நீங்கியும் பிரியுங்கால் பரந்தும் நின்றதென்றாள். எப்பொழுதும் தலைவனோடுறையப் பெறுவேனேல், பசலை நோய் முற்றுமொழியுமென்பதும் இவ்வுவமையாற் போந்தது

தொடுதல் : இடக்கரக்கு. விடுவுழி விடுவுழியென்று பன்மை கூறியது வரையாது ஒழுகும் களவொழுக்கத்தில் அடுத்தடுத்துப் பிரிவு நேர்வது குறித்து.

ஏகாரங்கள் அசைநிலை.

(மேற்.) மு. "பட்டரை ஒரு தமிழன், 'கேட்டிரங்கி யென்னதே, கண்டிரங்கி யென்னப்பெறுமோ?' என்ன, 'அணைத்தகை நெகிழ்த்த வளவிலே

வெளுத்தபடி கண்டால் பிரியத்தகாதென்றிருக்க வேண்டாவோ? இப்படிக் கூடுமோ என்னில்:— புல்லி: இத்யாதி, காதலர் தொடுவுழி: இத்யாதி, உனக்கு இத்தமிழ் போதாதோ?' என்றார்" (திருவாய்மொழி, 1. 4 : 4, ஈடு.)

(ஒப்பு.) 2-4. **பசலை தலைவன் தொடுவுழி நீங்குதலும் விடுவுழிப் பரத்தலும்:** *"விடுவழி விடுவழிச் சென்றருங்கவர், தொடுவழித் தொடுவழி நீங்கின்றூற் பசப்பே"* (கலி. 130 : 20-21.)

பசலை தலைவன் விடுவுழிப் பரத்தல்: *"முயங்காக்காற் பாயும் பசலை"* (நாலடி. 391); *"விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன், முயக்கற்றம் பார்க்கும் பசப்பு", "புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வள வில், அள்ளிக்கொள் வற்றே பசப்பு"* (குறள், 1186, 1187.) (கூகூ)

தலைவன் கூற்று

[*தான் மேற்கொண்ட வினை நிறைவேறப் பெற்று மீண்டு வந்து தலைவியைக் கண்ட தலைவன் தேர்ப்பாகனை நோக்கி, "இன்று விரைவில் தேர்விட்டு இவனை இல்லின்கண் சேரச் செய்வோ மாயின் தலைவியின் காமநோயைக் களையா நிலையினே மாவேமென எண்ணி நன்று செய்தாய்! நீ தேரோடு தலைவியின் உயிரையும் தந்தாய்" என்று பாராட்டிக் கூறியது.*]

300. சேயாறு செல்லா மாயி னிடரின்று
கனைகலங் காமம் பெருந்தோட் கென்று
நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
முரம்புகண் ணுடைய வேகிக் கரம்பைப்
5. புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்
இன்று தந்தனை தேரோ
நோயுழந் துறைவியை நல்க லானே.

எ - து. வினைமுற்றி வந்த தலைமகன் தேர்ப்பாகனைத் தலையளித்தது.

[*வினைமுற்றுதல் - மேற்கொண்ட காரியம் நிறைவேறப் பெறுதல்.*]

பேயனார்.

(பி - ம்) 1 'செல்வாம்' 2 'கனைக காமம்', 'கனைஇக்காமம்' 4 'களரிக்கரம்பைப்' 6 'தேரே'

(**ப - ரை.**) *சேய் ஆறு செல்லாமாயின் - நெடுந்தூரமாகிய வழியைக் கடந்து செல்லேமாயின், இடர் இன்று - துன்பமின்றி, பெரு தோட்கு காமம் கனைகலம் என்று - பெரிய தோளையுடைய தலைவிக்குக் காமநோயைக் களையமாட்டேமென்று, நன்று புரிந்து எண்ணிய மனத்தை ஆகி - நன்மையை விரும்பி நினைத்த மனத்தை*

யுடையவளாகி, முரம்பு கண் உடைய ஏகி - பருக்கையையுடைய மேட்டு நிலத்திடம் விள்ளும்படிபோய், கரம்பை - கரம்பை நிலத்திலே, புது வழி படுத்த - புதிய வழியை உண்டாக்கிய, வலவோய் - தேர்ப்பாகனே, நோய் உழந்து உறைவியை-நோயினால் வருந்தி உறையும் தலைவியை, நல்கலான் - இறந்துபடாமல் தருதற் குக் காரணமாயினமையின், இன்று தேரோ தந்தீன - இன்றைக்கு நீ தேரையா தந்தீன ? தலைவியையே தந்தீன.

(முடிபு) வலவோய், உறைவியை நல்கலான், இன்று தேரோ தந்தீன ?

(கருத்து) உரிய காலத்தே விரைவில் தேரைச் செலுத்திய நின் திறமை பாராட்டற்குரியது.

(வி - ரை.) 'இன்று செல்லாமாயின் தலைவனை எதிர்நோக்கி நிற்கும் தலைவியின் உயிர் நீங்கும். ஆதலின் இன்றே தேரைச் செலுத்தல் வேண்டும்' என்பது பாகன் நினைவு. சேயாறுதலின் விரைவிற் செல்ல எண்ணினான்.

'செல்வாம், கலைக காமம்' என்ற பாடத்திற்கு, 'இன்று செல்வாமாயின் இடர் இல்லை; நாம் தலைவியின் காம நோயைக் களைவேமாக' என்று பொருள் கொள்க.

பெருந்தோள் : அன்மொழித்தொகை ; மகளிருக்குத் தோள் பெருத்தல் இலக்கணம்.

செல்வதற்குரிய வழி முரம்பில் இன்றியேயும் புதுவழியை யுண்டாக்கிச் சென்றனென்றது பாகனது ஆற்றலைக் கூறியபடி. பழைய வழியே செல்லின் நீட்டிக்குமென்று கருதிப் புதுவழிப் படுத்தலின் மதியுடை வலவோயென்றான்.

"நீ தலைவியின் உயிர் நீங்காது தருதற்குக் காரணமாயினமை யின், தேரைமட்டும் தந்தாயல்லை; அவள் உயிரையுந் தந்தாயா கின்றாய்" என்று தலைவன் பாராட்டினான்.

ஏ : அசைநிலை.

(ஒப்பு.) 1. சேயாறு செல்லுதல் : குறுந். 269 : 1.

2. பெருந்தோள் : குறுந். 335 : 7.

4-5. முரம்பு கண்ணுடைய ஏகி வழி உண்டாக்குதல் : "முரம்புகண் ணுடைந்த நடவை" (மலைபடு. 432); "முரம்புகண் ணுடையத் திரியுந் திகிரியொடு" (ஐங். 449 : 1.)

7. நோயுழந் துறைவி : குறுந். 65 : 5, ஒப்பு. நோய் : குறுந். 13 : 4, ஒப்பு. உறைவி : குறுந். 192 : 2, ஒப்பு. (சுஅ)

தலைவி கூற்று

[இற்செறிக்கப்பட்ட தலைவி, "நாம் தலைவனோடு மெய் தோய்ந்த நட்பு, பின்னர் அவனோடு விளையாடுதலையும் நீக்கியது" என்று கூறியது.]

சுஅ. அடும்பி னுய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்

ஓரை மகளி ரஞ்சி யீர்ஞெண்டு
கடலிற் பரிக்குந் துறைவனெ டொருநாள்
5. நக்குவிளை யாடலுங் கடிந்தன்
றறைதே கம்ம மெய்தோய் நட்பே.

எ - து. வேறுபாடு கண்டு இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

அம்மூவன்.

(பி - ம்.) 3 'ஞர்மலர்,' 4 'பரக்குங்' 5 'நக்குவளை' 'கடிதன்று' '6 'றைதெமக்கம்ம, றைதேய்கம்ம, றைதேயம்ம, றைதேகாமம்'

(ப - ரை.) அடும்பின் ஆய் மலர் விரை இ - அடும்பினது அழகிய மலரைக் கலந்து, நெய்தல் நெடு தொடை வேய்ந்த - நெய்தலாலாகிய நெடிய மாலையை யணிந்த, நீர் வார் கூந்தல் - நீர் ஒழுகிய கூந்தலையுடைய, ஓரை மகளிர் அஞ்சி - விளையாட்டு மகளிரை அஞ்சி, ஈர் ஞெண்டு - ஈரத்தையுடைய நண்டு, கடலில் பரிக்கும் துறைவனெடு - கடலுக்குள் ஓடும் துறையையுடைய தலைவனோடு, ஒரு நாள் நக்கு விளையாடலும் - ஒரு நாள் நகைத்து விளையாடுதலையும், மெய் தோய் நட்பு - அவனுடைய மெய்யைத் தோய்ந்த நட்பானது, கடிந்தன்று - நீக்கியது; ஐதேகம்ம - இது வியத்தற்குரியது.

(முடிபு) நட்பு கடிந்தன்று; ஐதேகம்ம.

(கருத்து) தலைவனோடு அளவளாவியதனால் உண்டான வேறுபாடு அவனைக் காணுமலிருக்கச் செய்தது.

(வி - ரை) பகற்குறியிடத்துத் தலைவனோடு மெய்யுறு புணர்ச்சி நிகழ்த்தினமையின் தலைவியின்பால் வேறுபாடுகள் உண்டாயின; அவற்றை நோக்கிய தாய் அவளை இற்செறித்தாளாக, அதுமுதல் பழம்படியே தலைவனோடு விளையாடுதலும் அரிதாயிற்று.

அடும்பு: கடற்கரையில் வளருங் கொடி (குறுந். 243: 1-4, 248: 3-5, 349: 1-3.)

கடனீராடி மாலை வேய்ந்தனராதலின் நீர்வார் கூந்தலுடைய ராயினர். மகளிர் நீராடிக் கூந்தலில் மாலைகளை அணியும் வழக்கம்,

" அவிர்தகில் புரையு மவ்வெள் ளருவித்
தவிர்வில் வேட்கையேந் தண்டா தாடிப்
.....
பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி
.....

பல்வே றுருவின் வனப்பமை கோதையெம்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி" (குறிஞ்சிப். 55-104)

என்பதனாலும் பெறப்படும்.

மகளிர் அலவனாட்டுவராதலின் அவருக்கு அஃது அஞ்சியது. விளையாடலும்: உம்மை இழிவு சிறப்பு.

ஐது - வியப்பைத் தருவது; ஏகு: அசைநிலை; அம்ம: வியப் பிடைச் சொல். நட்பே: ஏ அசைநிலை.

ஐதேகாமமென்னும் பாடத்திற்குக் காமம் வியக்கத்தக்க தென்று பொருள் கொள்க; காமம் - மெய்யுறுபுணர்ச்சி.

"மெய்தோய்ந்த நட்பு, கண்டு நகுதலையும் போக்கியது வியத்தற்குரியது" என்று கூறினாள்.

(மேற்.) மு. தன் தோற்றப்பொலிவாகிய வேறுபாடு கண்டு தமர் தன்னை இற்செறித்தமையத் தலைவி தன்னுள்ளே கூறியது (தொல். களவு. 20, ந.)

(ஒப்பு.) 1. அடும்பின் ஆய்மலர்: "ஆய்பூ வடும்பி னலர்" (கலி. 144: 30.) 2. நீர்வார் கூந்தல்: குறுந். 294: 1. 3. ஓரை மகளிர்: குறுந். 48: 3, ஒப்பு.

1-3. மகளிர் அடும்பின் மலரை அணிதல்: "மாக்கொடி யடும்பின் மாயித ழுலரி, கூந்தன் மகளிர் கோதைக் கூட்டும்" (நற். 145: 2-3); "அடும்பி னலர்கொண் டுதுக்காணெம், கோதை புனைந்த வழி" (கலி. 144: 30-31.)

மகளிர் நெய்தற்றொடை யணிதல்: "நெய்தற் பூவுட னெறிதரூஉத் தொடலை, தைஇ" (நற். 96: 7-8); "கடலாடு மகளிரும், நெய்தலம் பகைத்தழைப் பாவை புனையார், உடலகங் கொள்வோ ரின்மையிற், றொடலைக் குற்ற சிலபூ வினரே" (ஐங். 187: 2-5.)

6. ஐதேகம்ம: நற். 52: 11, 240: 1. மெய்தோய் நட்பு: குறுந். 61: 4, 247: 7. தகுவனது நட்பு: குறுந். 247: 6-7, ஒப்பு. (சுOக)

குறுந்தொகை முற்றும்

இத்தொகை முடித்தான் பூரிக்கோ.
இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்.
இத்தொகை நாலடிச் சிற்றெல்லையாகவும் *எட்டடிப்பேரெல்லை யாகவும் தொகுக்கப்பட்டது.

---

*307, 391-ஆம் செய்யுட்கள் மட்டும் ஒன்பதடிகளை யுடையனவாகக் காணப்படுகின்றன.

செய்யுள் முதற்குறிப்பகராதி

[எண் - செய்யுள் எண்]

அகவன் மகளே ... 23
அஞ்சிலோதியாய்வகீர ... 211
அஞ்சுவதறியாதமர் ... 237
அடும்பவிழணிமலர் ... 349
அடும்பிணையமலர் ... 401
அணிற்பல்லன்ன ... 49
அத்தவாகை யமலை ... 369
அதுகொறோழி ... 5
அதுவரலன்மை ... 248
அம்மவாழி தோழி காதலர் 104
அம்மவாழிதோழிகாதலரின் 247
அம்மவாழி தோழி கொண் 230
அம்மவாழி தோழி நம்மூர் 146
அம்மவாழி தோழிநம்மொடு 134
அம்மவாழி தோழி புன்னை 296
அம்மவாழி தோழி முன் ... 350
அம்மவாழி தோழி யன்னை 361
அம்மவாழி தோழியாவதும் 77
அம்மவாழி தோழியின் ... 375
அம்மவாழியோ ... 392
அமர்க்கணுமான் ... 322
அமிழ்தத்தன்ன ... 206
அமிழ்தமுண்க ... 201
அமிழ்துபொதி ... 14
அயிரைபரந்த ... 178
அரிற்பவர்...வரிப்புறநீர்... 364
அரிற்பவர்...வரிப்புற விளை 91
அரும்பற மலர்ந்த ... 26
அரும்பெறலமிழ்த ... 83
அருவிப்பரப்பினவனம் ... 100
அருவியன்ன பருவுறை ... 271
அருவிவேங்கைப் ... 96
அருளுமன்பு நீக்கி ... 20
அல்குறுபொழுதிற் ... 273
அலர்யாங்கொழிவ ... 311
அவ்விளிம்புரீஇய ... 297
அவரே, கேடில்விழுப்பொரு276
அவரோ வாரார் ... 221
அழியலாயிழை ... 143
அளிதோதானே நாணே ... 149
அறந்தலைப்பட்டநெல்லி ... 209
அறிகரிபொய்த்த ... 184
அன்னையிவணெறிள ... 33
ஆசிறைருவினையில் ... 277
ஆடமைபுரையும் ... 131
ஆம்பற்பூவின் ... 46
ஆய்வளை ஞெகிழவு ... 316
ஆர்கலியேற்றெழுது ... 186
ஆர்கலிவெற்பன் ... 353
ஆர்களிறுமிதித்த ... 52
இடிக்குங்கேளிர் ... 58
இதுமற்றெவனே...துனி 181
இதுமற்றெவனே...முது 299
இரண்டறிகள்விருங் ... 312
இருங்கண்ஞாலத் ... 267
இருடுணிந்தன்ன ... 123
இல்லோனின்பங் ... 120
இலங்குவளை நெகிழ ... 125
இலையிலஞ்சினை ... 254
இவளே, நின்சொற் ... 81
இவனிவளம்பால் ... 229
இழையணிந்தியல்வரு ... 345
இளமைபாராரர் ... 126
இன்றியாண்டையனே ... 379
இன்றேசென்று ... 189
இன்னளாயினணன்னுதல் 98
இனமயிலகவு ... 249
ஈங்கேவருவரீனைய ... 192
ஈதலுந்துய்த்தலு ... 63
உடுத்துந்தொடுத்தும் ... 295

உதுக்காண துவே ... 191
உமணர்சேர்ந்து ... 124
உரைத்திசிற்றேழி ... 302
உவரியொருத்த லுழாஅது 391
உழுந்துடைக்கழுந்திற் ... 384
உள்ளதுசிதைப்போ ... 283
உள்ளார்கொல்லோதோழிகள் 16
உள்ளார்...தோழிகிள் ... 67
உள்ளார்...தோழியுள் ... 232
உள்ளிக்காண் பென் ... 286
உள்ளினுள்ளம் ... 102
உள்ளினெனல்லெனே ... 99
உறுவளியுளரிய ... 278
உறைபதியன்றித் ... 145
ஊஉரலரெழ ... 262
ஊர்க்குமணித்தே ... 113
ஊருண்கேணி ... 399
எந்தையும்யாயும் ... 374
எம்மணங்கினவே ... 53
எல்லாமெவனே ... 323
எல்லுமெல்லின்று ... 390
எல்லே கழிய மூல்லே ... 387
எலுவசிறுஅரேமுறு ... 129
எவ்வியிழந்த ... 19
எழின்மிகவுடைய ... 247
எழுதருமதியங் ... 315
எற்றேவாழி ... 90
எறிசுறுக்கலித்த ... 318
எறும்பியலூயிற் ... 12
என்னெனப் படுங்கொ ... 194
ஐயவியன்ன சிறுவீ ... 50
ஒடுங்கீரோதி ... 70
ஒருநாள் வாரல ... 176
ஒலிவெள்ளருவி ... 88
ஒறுப்பவோவலர் ... 34
ஒன்றேனல்லே ... 208
ஒம்புமதி வாழியோ ... 235
ஓரூர் வாழினுஞ் ... 231
கடல்பாடவிந்து ... 177
கடலங்கானலாய ... 245
கடலுடனுடியுங் ... 294
கடும்புனறொருத்த ... 103
கண்டாரவந்த காம ... 305
கண்டிசிற்பாண ... 359
கண்ணிமருப்பின் ... 363
கணைக்கோட்டுவாளை ... 164
கருங்கட்டாக்கலை ... 69
கருங்கால் வேங்கை ... 47
கருங்கால்வேம்பி ... 24
கல்லென்கானத்துக் ... 179
கலிமழை கெழீஇய ... 264
கலைகைதொட்ட ... 342
கவலைகெண்டிய ... 233
கவலையாத்த ... 224
கவவுக்கடுங்குரையள் ... 132
கழனிமாத்து ... 8
கழிதேர்ந்தசைஇய ... 303
கழியகாவி குற்றுங் ... 144
கள்ளிற்கேளி ... 293
கறிவளரடுக்கத் ... 268
கன்றுதன் பயமுலை ... 225
கன்றுமுண்ணுது ... 27
காணினிவாழி ... 171
காதலருழையராக ... 41
காந்தள்வேலி ... 76
காந்தளங்கொழுமுகை ... 265
காமங்கடையிற் ... 340
காமங்காம...நீனைப்பின் ... 204
காமங்காம...நுணங்கி ... 136
காமந்தாங்குமதி ... 290
காமமொழிவதாயினு ... 42
கார்புறந்தந்த ... 162
காலேபரிதப்பினவே ... 44
காலையும் பகலுங் ... 32
காலையெழுந்து ... 45
கானங்கோழிக் ... 242
கானமஞ்ஞை ... 38
கானயானை தோனயந் ... 79
கானவிருப்பை ... 329
குக்கூவென்றது ... 157
குணகடற்றிரையது ... 128
குருகுகொளக்குளித்த ... 127
குருகுமிருவிசும் ... 260
குவளைநாறுங் ... 300
குவியிணர்த்தோன்றி ... 107
குறுந்தாட்கூதளி ... 60
குறும்படைப்பகழி ... 333
குன்றக்கூகை ... 153

கூந்தலாம்பன் ... 80
கூன்முண்முண்டகக் ... 51
கேட்டிசின்வாழி ... 30
கேளாராகுவர் ... 253
கேளிர்வாழியோ ... 280
கைவலே நெகிழ்தலு ... 371
கைவிணமாக்கடஞ் ... 309
கொங்குதேர் வாழ்க்கை ... 2
கொடியோர்நல்காராயினும் 367
கொடுங்கான் முதலை ... 324
கொண்கனூர்ந்த ... 212
கொல்வினைப்பொலிந்த ... 304
கொன்னூர் துஞ்சினு ... 138
கோடலெதிர்முகை ... 62
கோடுயர்லங்குவலை ...நாளும்365
கோடுயர்லங்குவலை ...நாடொ 11
கௌவையஞ்சிற் ... 112
சிறுவீ ஞாழல் ... 328
சிறுவெண்காக்கை ... 334
சிறுவெள்ளரவி ... 119
சிறைபனியுடைந்த ... 86
சுடர்சினந்தணிந்து ... 195
சுடர்செல்வானம் ... 234
சுடுபுனமருங்கிற் ... 291
சுரஞ்செல்யானைக் ... 169
சுனைப்பூக்குற்று ... 142
செங்களம்படக் ... 1
செப்பினஞ்செலினே ... 207
செல்வச்சிறுஅர் ... 148
செல்வாரல்லரென் ... 43
செவ்வரைச் சேக்கை ... 187
செவ்விகொள்வரகின் ... 282
செறுவர்க்குவகை ... 336
சென்றநாட்ட ... 183
சேணோன்மாட்டிய ... 150
சேயாறுசெல்லா ... 400
சேயாறுசென்று ... 269
சேயுயர்விசும்பி ... 314
சேரிசேரமெல்ல ... 298
சேறிரோவென ... 268
சேறுஞ்சேறு ... 325
சோலைவாழைச் ... 308
ஞாயிறுகாயாது ... 378
ஞாயிறுபட்ட ... 92
நச்சன்செய்த ... 61
தண்கடற்படு ... 166
தண்டுளிக்கேற்ற ... 382
தலைப்புணைக்கொளினே ... 222
தழையணியல்குருங்க ... 159
தாஅவுஞ்சிறை ... 172
தாதிற்செய்த ... 48
தாமரைபுரையுங் ... கட
தாமே செல்பவாயிற் ... 348
தாழிருடுமிய ... 270
தினேடோர்நள்ளி ... 210
திரிமருப்பிரலை ... 338
திரிமருப்பெருமை ... 279
தினைகிளிகடிகெனிற் ... 217
தீண்டலுமியைவது ... 272
துணைத்தகோதைப் ... 326
துறுகலயலது ... 36
தேற்றுமன்றே ... 398
தொடிஞெகிழ்ந்தனவே ... 239
தொல்கவின்ஞெலிந்து ... 381
நசைநன்குடையர் ... 213
நசைபெரிதுடையர் ... 37
நமக்கொன்றுரையா ... 266
நல்கின்வாழு ... 327
நல்லுரையிகந்து ... 29
நலத்தகைப் புலத்தி ... 330
நள்ளென்றன்றே ... 6
நறையகில் வயங்கிய ... 339
நன்னலந்தொலைய ... 93
நனைமுதிர்ஞாழற் ... 397
நாகுபிடிநயந்த ... 346
நாணிலமன்ற ... 35
நிரைவலைமுன்கை ... 335
நிலத்தினும்பெரிதே ... 3
நிலந்தொட்டுப் ... 130
நிலம்புடைபெயரினும் ... 373
நிழலான்றவிந்த ... 356
நினையாய்வாழி ... 343
நீகண்டனையோ ... 75
நீயுடம்படுதலின் ... 383
நீர்கால்யாத்த ... 388
நீர்நீடாடிற் ... 354
நீர்வார்கண்ணை ... 22
நுதல்பசப்பிவர்ந்து ... 185

நெஞ்சேநிறை ... 395
நெடிய திரண்டதோள் ... 252
நெடுங்கழை திரங்கிய ... 331
நெடுநீராம்பலடைப் ... 352
நெடுவரைமருங்கிற் ... 158
நெய்கனிகுறும்பூழ் ... 389
நெய்தற்பரப்பிற் ... 114
நெருப்பினன்ன ... 160
நெறியிருங்கதுப்பொடு ... 190
நோமென்னெஞ்சே...இமை 4
நோமென்னெஞ்சே...புன் 202
நோற்றோர்மன்ற ... 344
படரும்பைபயப் ... 215
பணைத்தோட்குறுமகள் ... 276
பதலைப்பாணிப் ... 59
பயப்பென்மேனி ... 219
பரலவற்படுநீர் ... 250
பருவத்தேனசைஇப் ... 175
பல்லாநெடுநெறிக் ... 64
பல்லோர்துஞ்சு நள்ளென் 244
பல்வீபட்ட ... 341
பலருங்கூறுக ... 170
பலவிற்சேர்ந்த ... 385
பழமழைக்கலித்த ... 220
பழமழை பொழிந்தென ... 261
பழூஉப்பல்லன்ன ... 180
பறைபடப்பணில ... 15
பனிப்புதலிவர்ந்த ... 240
பணைத்தலைக்கருக்குடை ... 372
பாசவலீடித்த ... 238
பார்ப்பனமகனே ... 156
பால்வரைந்தமைத்த ... 366
பாலுமுண்ணுள் ... 396
பாவடியுரல ... 89
புரிமடமரையான் ... 317
புல்வீழிற்றிக்கல்லிவர் ... 106
புள்ளும் புலம்பின ... 310
புள்ளுமாவும் ... 118
புறவுப்புறத்தன்ன ... 274
புனவன்றுடவைப்...கடி... 105
புனவன்றுடவைப் ... கிளி 133
பூண்வனைந்தன்ன ... 227
பூவிடைப்படினும் ... 57
பூவொடுபுரையுங் ... 226
பூவொத்தலமருங் ... 72
பூழ்க்காலன்ன ... 68
பெய்தகுன்றத்துப் ... 200
பெயர்த்தனென்முயங்க ... 84
பெயல்கண் மறைத்தலின் 355
பெயன்மழைதுறந்த ... 174
பெருங்கடற்...களிற் ... 246
பெருங்கடற்...மீத்து ... 313
பெருங்கடற்பரதவர் ... 320
பெருந்தண்மாரிப் ... 94
பெருநன்ருற்றிற் ... 115
பெருவரைமிசையது ... 78
பெறுவதியையா ... 199
பேரூர்கொண்டவார்கலி... 223
பைங்காற்கொக்கின் ... 122
பொத்தில்காழவத்த ... 255
பொய்கையாம்பலணி ... 370
பொருதயாஅன ... 284
பொழுதுமெல்லின்று ... 161
பொன்னேராவிரைப் ... 173
மகிழ்ந்ததன்றலையு ... 165
மகிழ்நன் மார்பே ... 73
மட்டம் பெய்த ... 193
மடவமன்ற ... 66
மடவவாழி ... 251
மண்ணியசென்ற ... 292
மணிவார்ந்தன்ன ... 256
மயங்குமலர்க் ... 393
மரங்கொல்கானவன் ... 214
மருந்தெனின்மருந்தே ... 71
மல்குசுனைபுலர்ந்த ... 347
மலரேருண்கண் ... 377
மலைச்செஞ்சாந்தி ... 321
மலையிடையிட்ட ... 203
மழைசேர்ந்தெழுதரு ... 259
மழைவிளையாடுங்குன்று... 108
மள்ளர்குழீஇய ... 31
மறிக்குரலறுத்து ... 263
மன்றமராஅத்த ... 87
மன்னுயிரறியா ... 376
மனையுறை கோழி ... 139
மாக்கழிமணிப்பூ ... 55
மாசறக்கழீஇய ... 13
மாரிப்பித்திகத்து ... 168

மாரியாம்பலன்ன ... 117
மால்வரையிழிதரு ... 95
மாவெனமடலு ... 17
மானடியன்ன ... 243
மானேறுமடப்பிணை ... 319
மின்னுச்செய்கருவி ... 205
முகைமுற்றினவே ... 188
முட்டுவேன் கொருக்கு ... 28
முடக்காலிறவின் ... 109
முதைப்புனங்கொன்ற ... 155
முருகயர்ந்துவந்த ... 362
முல்லையூர்ந்த ... 275
மூலையே முகிழ்முகிழ் ... 337
முழந்தாளிரும்பிடி ... 394
முழவுமுதலரைய ... 301
முளிதயிர்பிசைந்த ... 167
முனிபடருழந்த ... 357
மெய்யோவாழி ... 121
மெல்லியலரிவை ... 137
மெல்லியலோயே ... 368
மெல்லியவினிய ... 306
மென்றோணெகிழ்த்த ... 111
யாஅங்கொன்றமரஞ் ... 198
யாங்கறிந்தனர் ... 154
யாது செய்வா ... 197
யாமேகாமந்தாங்க ... 241
யாயாகியளேமாயோளே ... 9
யாயாகியளே விழவு ... 10
யாயுஞ்ஞாயும்யாரா ... 40
யாரணங்குற்றனை ... 163
யாரினுமினியன் ... 85
யாருமில்லித்தானே ... 25
யாவதுமறிகிலர் ... 152
யானயந்துறைவோ ... 116
யானே...ஆனை ... 97
யானே...யேனே ... 54
வங்காக்கடந்த ... 151
வண்டுபடத்ததைந்த ... 21
வந்தவாடை ... 332
வளர்பிறைபோல ... 289
வளையுடைத்தனைய ... 307
வளையோயுவந்திசின் ... 351
வளைவாய்ச்சிறுகிளி ... 141
வன்பரற்றெள்ளறல் ... 65
வாரலெஞ்சேரி ... 258
வாராராயினும் ... 110
வாருறுவணர்கதுப் ... 82
விசும்புகண்புதையப் ... 380
விட்டகுதிரை ... 74
விட்டெனவிடுக்கு ... 236
விடர்முகையடுக்கத்து ... 218
விரிதிரைப்பெருங் ... 101
வில்லோன்காலன ... 7
விழுத்தலைப்பெண்ணை ... 182
வினையேயாடவர் ... 135
வீங்கிழைநெகிழ ... 358
வீழ்தாழ்தாழை ... 228
வெண்மணல்விரிந்த ... 386
வெண்மணற்பொதுளிய ... 281
வெந்திறற்கடுவளி ... 39
வெறியெனவுணர்ந்த ... 360
வேட்டச்செந்நாய் ... 56
வேதினவெரிநிறைதி ... 140
வேம்பின்பைங்கா ... 196
வேரல்வேலி ... 18
வேருமுதலுங் ... 257
வேனிற்பாதிரிக் ... 147
வைகல்வைகல் ... 285

அரும்பத முதலியவற்றின் அகராதி

[எண் - செய்யுள் எண்]

அ - அழகு, 159
அஃகியோன், 346 [237, 259, 290
அஃது, 18, 80, 93, 97, 170, 175,
அகத்திணையிற் புறத்திணைக்கருப் பொருள் உவமமாக வருதல், 19
அகம் - உள்ளம், வீடு, 137, 346, 370 [359
அகம்புகன் மரபின் வாயில்கள்,
அகமகிழ்ச்சியை முகம் காட்டுதல்,
அகரச்சுட்டு, 371 [167
அகரச்சுட்டு மேலுள்ளதைக் குறித்தல், 297
அகல்வாய்ச் சிறுகுழி, 233
அகல்வாய்ச் சுனை, 59
அகல்வாய் வானம், 92
அகலம், 150, 362
அகலிரு விசும்பு, 44
அகலிலைப் பலவு, 352
அகவல் - அழைத்தல், 23
அகவன் மகள் தெய்வங்களை அழைத்துக் கூறுதல், தெய்வமேறிக்குறி கூறுதல், மலைவளம் பாடுதல், 23
அகவன் மகளிர் கோல் உடையராதல், யாழைப் பரிசில்பெறுதல், 298
அகவுதல், 23, 191, 249, 301
அகழ்தல், 379
அகன் - மனம், 29
அகன்றலை, 124
அகன்றிசினோர், 127
அகன்றுறை, 311
அகனுறத் தழுவுதல், 29
அகில், 339
அகில் நாறும் கூந்தல், 286
அகுதை யானை வழங்குதல், 298
அகைதல் - வருந்துதல், 366
அகைப்பு வண்ணம், 110
அங்கலுழ் மாமை, 147
அங்கலுழ் மேனி, 143
அங்காற் கள்ளி, 16
அங்குடிச் சிறார், 41, 79
அச்சம், 392 [362
அச்சம் நீக்குவதற்கு நூதல் நீவுதல்,
அச்சிரக்காலத்தில் அவரைபூத்தல்,
அச்சிரந் தீர்க்கும் மருந்து, 68 [82
அச்சிரம், 76, 82, 277, 338
அசாஅ, 388
அசாவாது, 269
அசாவிட, 338
அசைஇ, 287, 338, 345, 359
அசைஇய, 303
அசைதல்-தங்குதல், மெலிதல் 214,
அசைநடைப் பேதை, 182 [303
அசையியற் கொடிச்சி, 214
அசைவளி, 28, 195, 273
அசோகந்தழை, 214
அஞ்சலென்மார், 395
அஞ்சலென்ற சொல், 300
அஞ்சலே. 300
அஞ்சி, 91
அஞ்சில் : ஓரூர், 294
அஞ்சிலோதி, 211, 214, 280
அஞ்சிறை, 350
அஞ்சிறைத்தும்பி, 2
அஞ்சிறை நாரை, 296
அஞ்சிறை வாவல், 172
அஞ்சுடர் நெடுவேல், கட.
அஞ்சுதும், 302
அஞ்சுமன், 153
அஞ்சுவது, 237
அஞ்சுவரு பொழுது, 261
அஞ்சுவல், 217, 324
அஞ்செவ்வாய், 286
அஞ்செஃகு குழவி, 322 [354
அஞர்-துன்பம், 76, 103, 305,
அட்டமள்ளர் ஆர்த்தல், 34, 328,
அடங்கிய கற்பு, 333 [393
அடிக்குத் தாமரை, கட. [167
அடிசிற்றொழிலின்கண் மகிழ்ச்சி,

அடிப்பொலிந்த இண்கிணி, 148
அடிபொறித்தல், 207
அடிமுதற்கண் கூன்வருதல், 124,
அடிமோனை, 31 [216
அடியெதுகைச் செய்யுள், 18
அடுக்கத்துக் கழை, 179
அடுக்கத்துக் கிழவன், 385[288,376
அடுக்கம், 69, 90, 179, 218, 260,
அடுதல் - அழித்தல், கொல்லுதல், தொலைத்தல், 167, 173, 198,
அடுபோர், 198 [231
அடும்பங்கொடி, 248
அடும்பவிழுணிமலர், 349 [243
அடும்பின் இலைக்கு மானின் அடி,
அடும்பின் கவட்டிலை, 243
அடும்பின் பூவுக்குமணி, 243
அடும்பையும் நெய்தலையும் கலந்து மாலை கட்டுதல், 401
அடை - இலை, 9, 246, 352
அடைகரை, 171, 175, 236, 303,
அடைச்சி, 81 [316
அடைந்திசினோர், 268
அண்டர் - இடையர், 117, 210
அண்ணல் - தலைமை, 343, 392
அண்ணல் நல்லேறு, 338, 363
அண்ணல் நெடுவரை, 392
அண்ணல் யானை, 290, 343
அண்ணலேறு, 344
அண்ணுத்தல், 307
அண்மையன், 318, 327, 349,
அணங்கிய அகலம், 362 [357
அணங்கியோள், 119
அணங்கின, 53
அணங்கினள், 70
அணங்கு, 136, 204, 308
அணங்குங் கானல், 372
அணங்குடை அருந்தலை, 308
அணங்குதல், 119, 164, 337, 362
அணங்கும் பிணியும், 136, 204
அணங்குற்றனை, 163
அணல் - அலைதாடி, 344
அணவருதல், 64, 128
அணவுதல், 333
அணி - அலங்காரம், அழகு, 22, 138, 274, 341, 380, 392
அணிக்கொளாஅ, 341
அணிகொண்ட, 22
அணித்து, 113, 328
அணிந்தன்று, 50
அணிநிறக் கொழுமுகை, 370
அணிப்படுதல், 247
அணிமலர், 349
அணிமுகம், 343
அணிமுலை, 274
அணிமைக்கட் பிரிதல், 189
அணியர், 228
அணிலாடு முன்றில், 41
அணிற்பல், 49
அணை - படுக்கை, 238, 253
அணைஇய, 318
அணைமெல்லியள், 70
அணையில் கவின் தொலைதல், 253
அத்த ஓமை, 207
அத்த நீளிடை, 307
அத்தம் - அருவழி, சிவப்பு, பாலை நிலம், வழி, 66, 174, 207, 230, 307
அத்தம் நண்ணிய சீறூர், 41, 79
அத்த யா, 255
அத்த வாகை, 369
அத்த வேம்பு, 281
அத்தன், 93 [24
அத்திப்பழம் மென்மையுடையது,
அத்து : சாரியை, 214, 257
அத்தை, 129, 387
அதவம் - அத்தி, 24
அதற்கொண்டு, 246
அதற்பட்டு, 184
அதன்றலை, 302, 366
அதனினும் அஞ்சுதும், 302
அதனினும் இலம், 168
அதனெதிர், 157, 194, 251
அதிகன் களிறெடு பட்டது, 393
அதுகாமம் - அக்காமம், 371
அதுகொல், 5
அதுவரலன்மை, 248
அந்தண் பழனம், 178
அந்தண் பொய்கை, 354
அத்தணர் தெரு, 277 [277
அந்தணர்வீட்டுச் சோறும் நெய்யும்,
அந்தணருக்குக் கரகமும் முக்கோலும் உரியவை, 156
அந்தளிர் மா, 278
அந்தில், 395
அந்தீங்கிளவி, 206
அந்தோட்டு வேட்டை, 258

அங்காள், 318
அகந்தவாசி, 24
